ஸ்ரீகலா SRIKALA

கனவில் நனவாய் நீ

KANAVIL NANVAAI NEE

ஸ்ரீகலா SRIKALA

கனவில் நனவாய் நீ

KANAVIL NANVAAI NEE

தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...

TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER

Download

Contents

கனவு : 1
கனவு : 2
கனவு : 3
கனவு : 4
கனவு : 5
கனவு : 6
கனவு : 7
கனவு : 8
கனவு : 9
கனவு : 10
கனவு : 11
கனவு 12
கனவு : 13
கனவு : 14
கனவு : 15
கனவு : 16
கனவு : 17
கனவு : 18
கனவு - 19
கனவு : 20
கனவு : 21

கனவு : 22
கனவு : 23
ஸ்ரீகலாவின் “கனவில் நனவாய் நீ – 2”
கனவு : 24
கனவு : 25
கனவு : 26
கனவு : 27
கனவு : 28
கனவு : 29
கனவு : 30
கனவு : 31
கனவு : 32
கனவு : 33
கனவு : 34
கனவு : 35
கனவு : 36
கனவு : 37
கனவு : 38
கனவு : 39
கனவு : 40
கனவு : 41
கனவு : 42
ஸ்ரீகலாவின் “கனவில் நனவாய் நீ – 3”
கனவு : 43
கனவு : 44
கனவு : 45
கனவு : 46

கனவு : 47
கனவு : 48
கனவு : 49
கனவு : 50
கனவு : 51
கனவு : 52
கனவு : 53
கனவு : 54
கனவு : 55
கனவு : 56
கனவு : 57
கனவு : 58
கனவு : 59

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்"

இந்தப் பாடலில் வாமன அவதாரத்தைப் பாடுகிறாள் ஆண்டாள்... திருமாலின் பாதம் பட்டால் மோட்சம் நிச்சயம்... அதனால் அதை உத்தம அவதாரம் என்று வேறு போற்றுகிறாள்... பகவானை வணங்கினால் எல்லா வளமும் சித்திக்கும் என்கிறாள் ஆண்டாள்...

ஓங்கி உலகளந்த உத்தமன் புகழைப் பாடி நீராடி, பாவை நோன்பு இருந்து வழிபட்டால், தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பொழியும். அதாவது எந்த ஒரு சேதத்தையும் பயிர்களுக்கோ, மனிதர்களுக்கோ, இதர ஜீவராசிகளுக்கோ ஏற்படுத்தாதபடி அளவோடு மழை பெய்யுமாம்... அப்படி மழை வளத்தால் வயல்களில் செழித்து வளர்ந்திருக்கும் நெற்பயிர்களின் ஊடாகத் தேங்கி இருக்கும் நீரில் மீன்கள் துள்ளி நீந்தியபடி இருக்குமாம்...

தேன் நிறைந்த பூக்களில் எல்லாம் தேனைப் பருகுவதற்காகத் திரிந்துகொண்டிருக்குமாம்... வீடுகளில் கட்டப்பட்டு இருக்கும் பசுக்கள்கூட, தங்கள் கன்றுக்கு ஊட்டியது போக, கறப்பவர்களுக்கு அவர்களுடைய குடம் நிறையும்படி பாலமுதைப் பொழியும் என்கிறாள் ஆண்டாள்...

அது போன்றதொரு மனநிலையில் அந்த மார்கழி திங்களின் அதிகாலை பொழுதில் அரங்கனின் முன் கண்மூடி நின்று கைக்கூப்பிப் பக்தி பரவசத்துடன் தனது

PDF தமிழ் .com

இனிமையான குரலில் பாடி கொண்டிருந்தாள் பிரகதீஸ்வரி...

அவளது ஊர் மார்க்கண்டேயபுரமும் அது போன்றதொரு வளம் கொழிக்கும் அழகான ஊர்... மணிமுத்தாறு ஆற்றின் நீரை கொண்டு மூன்று போகம் நெல் விளையும் செழிப்பான பூமி இது... உலகமெங்கும் விஞ்ஞானம் வளர்ந்திருந்த போதும் இந்த ஊரில் மட்டும் இன்றும் இயற்கையை அடிப்படையாகக் கொண்டு இயற்கையுடன் ஒன்றி வாழ்கின்றனர்...

அவர்களின் ஜமீன்தார் நரசிம்மனின் வழிகாட்டுதலின் பேரில் இன்றும் அதை அப்படியே கடைப் பிடிக்கின்றனர்... அவர் சொல்லுக்கு எதிர் பேச்சு இங்கு எழுந்தது கிடையாது... இப்போது அவர் உயிரோடு இல்லை என்றாலும் அவர் விதித்துச் சென்ற கட்டுப்பாடுகள், விதிமுறைகள் இன்றும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறது...

"அம்மாடி... குழந்தே..." அர்ச்சகரின் குரலில் கண் திறந்தாள் பிரகதீஸ்வரி...

"இந்தாம்மா... சேவிச்சிக்கோ..." என்றபடி தீபாராதனை தட்டை அவள் முன் நீட்டினார் அவர்...

பயபக்தியுடன் தீபாராதனையைக் கண்களில் ஒற்றி கொண்டவளை வாஞ்சையுடன் பார்த்தவர் மார்கழி மாத சிறப்புப் பிரசாதத்தை எடுத்து வந்து அவள் கையில் கொடுத்தார்...

"நன்றி சாமி..." என்று சிரித்தபடி அதை வாங்கிக் கொண்டவளின் புன்னகை முகம் கண்டு அவருக்கு அத்தனை வருத்தமாக இருந்தது...

'எப்படி வாழ வேண்டிய பெண்...? இப்போது இப்படிக் கஷ்டப்படுகிறதே...' என்று... அவர் என்ன நினைத்து என்ன பயன்...? அவரால் அவளது வேதனையைத் துளியளவு கூடக் குறைக்க முடியாது...

மீண்டும் அரங்கனை சேவித்தவள் பின் அர்ச்சகரிடம், "வர்றேன் சாமி..." என்று விடைப்பெற்று வீடு நோக்கி நடந்தாள்...

அதிகாலை மார்கழி மாத குளிர் காற்று அவளது தளிர்மேனியை தீண்டி சென்றது சுகமாய்... அதில் அவளது உடலும், மனமும் சிலிர்த்தது... இப்படி அதிகாலையில் எழுந்து கோவிலுக்குச் செல்வதும் சுகமான அனுபவம் தான்...

வீட்டிற்குள் அவள் நுழைந்த போது அவளது அக்கா சந்தியா, அண்ணன் சரவணன் இருவரும் நடைப்பயிற்சிக்கு செல்ல தயாராகிக் கொண்டிருந்தனர்...

சந்தியா அவளது கையிலிருந்த பிரசாதத்தைக் கண்டதும், "ஐய்... இன்னைக்குச் சர்க்கரை பொங்கலா...? கொடு, கொடு..." என்று வாயில் எச்சிலூற பிரகதீஸ்வரி கையிலிருந்து அதைப் பறித்து உண்டாள்...

"நீ இப்படிச் சாப்பிட்டுட்டே இருந்தேன்னு வச்சிக்கோ அப்புறம் வாசக்கதவை இடிச்சு தான் கட்டணும்..." சரவணன் தங்கையிடம் கண்டிப்பாய்க் கூறினான்...

"போடா..." என்று சகோதரனுக்குப் பழிப்பு காட்டியபடி உண்டாள் சந்தியா...

"அண்ணா... உங்களுக்கு..." என்றபடி மீதமிருந்த சர்க்கரை பொங்கலை அண்ணனிடம் நீட்டினாள் பிரகதீஸ்வரி...

"அய்யோ... வேண்டாம்மா... இவ்வளவு நெய் உடம்புக்கு நல்லது இல்லை..." ஆரோக்கியத்தில் அக்கறை கொண்டவனாய் அவன் முகம் சுழித்தான்...

"அவனுக்கு வேண்டாட்டி போகட்டும்... அதை என் கிட்ட கொடு பிரகதி..." அதையும் சேர்த்து வாங்கி உண்டாள் சந்தியா...

பதினேழு வயது நிரம்பிய பிரகதீஸ்வரி இருபத்தியொரு வயது நிரம்பிய சந்தியாவைத் தாயின் வாஞ்சையுடன்

PDF தமிழ் .com

பார்த்து கொண்டிருந்தாள்...

"அம்மாடி பிரகதி... கோவிலுக்குப் போயிட்டு வந்திட்டியா...?" என்றபடி அங்கே வந்தார் விமலாராணி...

"ஆமாம்மா..." என்ற பிரகதியை பார்த்து அவர்,

"காலையில் எழுந்திருக்கும் போதே ஒரே தலைவலி... கொஞ்சம் காபி போட்டு கொடும்மா..."

"அம்மா... உங்களுக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்... அவள் ப்ளஸ்டூ படிக்கிறாள்... படிக்க நிறைய இருக்கும்... வேலை வாங்காதீங்கன்னு... ஏன் இப்படிப் பண்றீங்க...? வேலை செய்றவங்க எங்கே போனாங்க...?"

தங்கையை வேலை வாங்கிய அன்னையைக் கண்டு சரவணனுக்கு அப்படியொரு கோபம் வந்தது...

"காலங்கார்த்தால யாரும் வேலைக்கு வரலைடா..." தலையைப் பிடித்துக் கொண்டு அவர் சோபாவில் அமர்ந்தார்...

"ஏய் சந்தியா... நீ போய் அம்மாவுக்குக் காபி போட்டு கொண்டா..." என்று பெரிய தங்கையை விரட்டினான் அவன்...

"ஐயோ... அவளை ஏன்டா காபி போட சொல்ற...? உப்புக்கும், சர்க்கரைக்கும் வித்தியாசம் தெரியாதவள் அவள்... இரண்டையும் போட்டு கலந்து கொண்டு வந்து என்னைக் கொல்லுறதுக்கு அவளுக்கு வழி சொல்லுறியா...?" என்று விமலாராணி புலம்பத் துவங்கியதும்,

"இருக்கட்டும் அண்ணா... அம்மாவுக்கு நானே காபி போட்டு எடுத்துட்டு வர்றேன்... அப்படியே உங்க ரெண்டு பேருக்கும் சேர்த்துக் கொண்டு வர்றேன்..."

புன்னகையுடன் கூறிய பிரகதீஸ்வரி அங்கிருந்து சென்றதும் சரவணன் அன்னையை முறைத்துப் பார்த்தான்...

"அம்மா... நானும் பார்த்துட்டு தான் இருக்கேன்... நீங்க பண்றது கொஞ்சம் கூடச் சரியில்லை..."

"எதுடா சரியில்லை..." என்று கேட்ட விமலாராணியின் முகம் ஒரு மாதிரியாய் மாறியது... அகத்தின் அழகு முகத்தில் தெரிந்ததோ என்னவோ...

"எப்போ பார்த்தாலும் பிரகதியை வேலை வாங்குறது எனக்குப் பிடிக்கலை... இந்தக் குந்தாணி சாப்பிட்டு சாப்பிட்டு வீட்டில் சும்மா தானே இருக்கா... இவளை வேலை வாங்கினால் என்ன...?"

"எனக்கு மட்டும் பிரகதியை வேலை வாங்கணும்ன்னு என்ன தலையெழுத்தா...? நீங்க ரெண்டு பேரும் புத்தியோட இருந்தா நான் ஏன் அவளை வேலை வாங்க போறேன்..."

"நான் சந்தியாவைச் சொன்னால், நீங்க என்னைக் குறை சொல்றீங்களா...?" மகனுக்கு முணுக்கென்று மூக்கின் மேல் கோபம் வந்தது...

"உண்மையைச் சொன்னால் கோபம் வருதா... போடா தடியா..." சந்தியா சகோதரனை கண்டு பழிப்பு காட்டினாள்...

"நீங்க ரெண்டு பேருமே சரியில்லைன்னு சொல்றேன்... வீட்டில் வேலை பார்க்கிற அளவுக்குச் சந்தியாவுக்கு உடம்பு வளையறது இல்லை... வெளியில் நம் நிர்வாகத்தைப் பார்த்துக்கிற அளவுக்கு உனக்கு அறிவு இல்லை..." என்று இருவரையும் சாடியவர்,

"இனி நிர்வாகத்தையும் பிரகதி கையில் தான் கொடுக்கணுமோ என்னவோ..." என்று மகனுக்கு நன்கு உறைக்கும்படி கூறினார்...

அவனோ அதைக் கொஞ்சமும் சட்டை செய்யவில்லை...

"பெண் பிள்ளைகள் தொழிலுக்கு வருவது நல்லது தானே... நம் பிரகதி அதற்குப் பொருத்தமான ஆள் தான்..." என்றான் பெருமித குரலில்...

PDF தமிழ் .com

"ஆமாம்டா... பெண்கள் கையில் நிர்வாகத்தைக் கொடுத்துட்டு, ஆண் பிள்ளை நீ கோவில் மாடு மாதிரி ஊரை சுத்து..." அவர் மகனை திட்ட துவங்கும் போது பிரகதீஸ்வரி கையில் காபியுடன் அங்கு வந்தாள்...

"நல்லவேளை நீ வந்து என்னைக் காப்பாத்தினே..." என்ற சரவணன் தங்கை கையிலிருந்த காபியை எடுத்து ஒரே மடக்கில் குடித்தவன் அடுத்த நொடி வீட்டை விட்டு வெளியேறி இருந்தான்...

சந்தியாவும் காபி குடித்தவள், "போ பிரகதி... நீ பொங்கல் கொடுத்து எனக்குத் தூக்கத்தை வரவழைச்சிட்ட... நான் போய்த் தூங்க போகிறேன்..." என்றவள் தனது அறையை நோக்கி நடக்கத் துவங்கினாள்...

காலி தம்பளர்களை எடுத்துக் கொண்டு பிரகதீஸ்வரி நகர முற்பட்ட போது விமலாராணி அவளைத் தடுத்து நிறுத்தினார்...

"பிரகதி... இன்னைக்குக் காலையில் சமையலை கூடயிருந்து கவனிச்சிக்கோம்மா... இன்னைக்கு விருந்தாளி வர்றாங்க..." என்றவர் காலையில் தயாரிக்க வேண்டிய உணவை பட்டியலிட துவங்கினார்...

யார், எவர் என்கிற எதிர் கேள்வி கேட்காது அதை எல்லாம் தலையை ஆட்டி அமைதியாய் கேட்டவள் பின்பு சமையல்கட்டிற்குச் சென்றாள்... அதற்குள் சமையல் வேலை செய்யும் சோலையம்மாள் வந்துவிட்டாள்...

"நீ போய்ப் படி கண்ணு... எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன்..."

"இல்லை சோலை... படிக்க ஒண்ணுமில்லை... எல்லாம் படிச்சது தான்..." என்றவள் சமையலுக்கு வேண்டிய வேலைகளைச் செய்ய ஆரம்பித்தாள்...

பரபரவென்று வேலைகள் செய்யும் அந்தச் சின்னப் பெண்ணைக் கண்டு சோலையம்மாளுக்குப் பரிதாபமாக இருந்தது... நல்ல அழகு, அறிவு, வசதி என அனைத்தும்

இருந்தும் இந்தச் சின்னப் பெண்ணிற்கு ஏன் இத்தனை துன்பங்கள் என்று அவளுக்கு எண்ணத் தோன்றியது... ஆனால் அதை அவள் வாய்விட்டு கேட்க முடியாது... பெரிய வீடுகளில் நடக்கும் அநியாயங்களைத் தட்டி கேட்கும் அளவுக்கு அவள் தாட்டியமான ஆள் கிடையாது...

"சோலை... குக்கர் மூணு விசில் அடிச்சதும் இறக்கிடு... சட்னிக்கு எடுத்து வச்சிட்டேன்... அரைச்சு, தாளிச்சிடு... சாம்பாருக்கு காயை வேக போடு... இதோ பத்து நிமிஷத்தில் நான் வந்திர்றேன்..." என்றவள் கையில் வாளி, பெருக்குமாறு, கோலப் பொடியுடன் வெளிவாசலுக்கு விரைந்தாள்...

இன்னும் விடியவில்லை... அப்போது தான் லேசாக இருள் பிரிய ஆரம்பித்திருந்தது... நிம்மதியுடன் அவசர அவசரமாகக் கோலம் போட ஆரம்பித்தாள்... மற்ற மாதங்களை விட மார்கழி மாதம் மிகவும் முக்கியம் அல்லவா... எல்லா வீடுகளிலும் தெருவை அடைத்துக் கொண்டு கோலம் போடுவார்கள்... அது போல் அவளும் வீட்டின் வாசலை நிறைத்துக் கோலம் போட்டாள்... அவளது உதடுகள் நாச்சியார் திருமொழியை மெல்ல முணுமுணுத்தது...

வாரணம் ஆயிரம் சூழ வலம்செய்து
நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்
பூரணப் பொற்குடம் வைத்துப் புரமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி! நான்

(நாளை மணநாள் என நிச்சயம் செய்து, பாளையோடு கூடிய கமுகு (பாக்குமரம்) மரங்களால் அலங்காரம் செய்தனர்; இந்திரன் உள்ளிட்ட தேவர் கூட்டம் வந்திருந்து மணத்தை உறுதி செய்தனர்; மணப்புடவை உடுத்தி மணமாலை சூட்டினர்; நான்கு திசைகளில் இருந்தும் கொண்டு வந்த தீர்த்தத்தால் நீராட்டி, பார்ப்பனர்கள் மந்திரங்களைச் சொல்ல, புனிதனாகிய கண்ணனோடு என்னை இணைத்துக் காப்புக் கட்டினர்; பெண்கள் மங்கல விளக்கும் கலசமும் ஏந்தினர்.)

PDF தமிழ் .com

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழி! நான்

(பின் தீவலம் செய்தோம்; நாராயணன் தம் திருக்கையால் என் தாள் (பாதம்) பற்றி அம்மி மிதிக்கச் செய்தார், உடன் பிறந்தோர் தீயின் முன் நிறுத்தி, அச்சுதன் கையின் மேல் என் கையை வைத்தனர், குங்குமம் பூசி, சந்தனம் தடவ வந்தோம் எனத் தன் மணக்கனவு பற்றித் தோழியிடம் சொல்லுகிறாள் ஆண்டாள். அக்கனவு வாழ்வது போலவே உணர்ச்சி மேலிட்டுக் கற்பனை செய்து அருளியவை ஆகும்.)

ஆண்டாளின் கனவு அவளுள்ளும் விரிந்ததோ...! முகம் கொள்ளா புன்னகையுடன் கோலத்தின் நடுவே பசுஞ்சாணத்தில் பிள்ளையார் பிடித்து வைத்தவள், அதில் மஞ்சள் நிற பூசணிப்பூவை அழகுற சொருகி வைத்தாள்... பின் எழுந்து நின்று தான் போட்ட கோலத்தின் அழகினை ரசித்துக் கொண்டிருந்தவளின் ரசனையைக் கலைக்கும் பொருட்டுச் சரலென்று வேகமாய் அங்கு வந்து நின்றது ஒரு வெளிநாட்டுக் கார்...

அது சாதாரணமாக வந்து நின்றிருந்தால் கூடப் பிரகதீஸ்வரி அந்தளவுக்குக் கலங்கி போயிருக்க மாட்டாள்... அவள் போட்ட கோலத்தை அழித்தபடி வந்து நின்ற காரை கண்டு அவள் திடுக்கிட்டு போனாள்... அவள் அரும்பாடுபட்டு போட்ட கோலம் கலைந்தது கண்டு அவளது கண்களும் கலங்கி போனது...

கார் கதவை திறந்து கொண்டு கீழே இறங்கினான் அந்த நெடியவன்... அவன் இறங்கிய அடுத்த நொடி...

"ஓ... ஷிட்..." என்றபடி கையையும், காலையும் அவன் உதறிய அழகில் பிரகதீஸ்வரி வருத்தம் மறைந்து கலகலவெனச் சிரித்துவிட்டாள்...

அவள் கோலத்தின் நடுவில் வைத்திருந்த பசுஞ்சாணம் அவன் காலில் போட்டிருந்த ஷூவில் ஒட்டி கொண்டிருந்தது...

அவள் தன்னைக் கண்டு கேலியாகச் சிரிப்பதாய் எண்ணி கொண்டவனுக்குக் கோபம் தலைக்கேற அடுத்த நொடி அவளது கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான்...

"என்ன திமிர்... போயும் போயும் ஒரு வேலைக்கார பெண் என்னைப் பார்த்து கேலியாய் சிரிப்பதா... கொன்னுருவேன் கொன்னு..." கோபத்தோடு ஆள்காட்டி விரல் நீட்டி அவளைக் கடுமையாய் எச்சரித்தான் அவன்...

எதிர்பாரா விதமாக அவன் அடித்ததில் தனது கன்னத்தைப் பிடித்தபடி திக்பிரம்மை பிடித்தவாறு நின்றிருந்தாள் பிரகதீஸ்வரி...

"ஏய்..." அவள் முகத்தின் முன் சொடக்கு போட்டு அழைத்தவன் தனது ஷூக்களைக் கழட்டி அவள் முன் விட்டெறிந்தபடி,

"இதைக் கழுவி, காய வைத்துக் கொண்டு வந்து கொடு..." என்று அவளின் பதிலை எதிர்பாராது உள்ளே செல்ல முயன்றவன் பின் நின்று,

"என்னிடம்... என்ன புரிந்ததா...?" என்று அவளிடம் கூறிவிட்டு அங்கிருந்து அகன்றான்...

கண்களில் தளும்பிய கண்ணீரை உள்ளிழுத்தபடி குனிந்து அந்த ஷூக்களை எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்றாள் பின்பக்கமாய்...

ஷூவை கழுவி கொண்டிருந்தவளை கண்டு பதறி போன சோலையம்மாள், "ஐயோ இது என்ன கண்ணு கோலம்... முதல்ல அந்தக் கர்மத்தை தூக்கி தூர போடு..." என்று அந்த ஷூக்களைத் தட்டிவிட்டவள்,

"யாரோடது இது...? சரவணன் தம்பியோடதா...? தம்பி உன்னை இப்படி எல்லாம் வேலை ஏவாதே..."

PDF தமிழ் .com

"யாரோ புதுசா வந்திருக்காங்க சோலை... உனக்கு ஒண்ணு தெரியுமா...? அவங்க நான் கோலத்தில் வச்ச சாணியில் காலை மிதிச்சிட்டு தையாதக்கான்னு குதிச்சாங்க பாரு... செம காமெடி..." என்று கூறிவிட்டு சிரித்தவளை கண்டு சோலையம்மாளுக்குச் சிரிப்பு வரவில்லை... மாறாகக் கண்ணீர் வந்தது...

"கண்ணு... நான் சொல்றேன்னு வருத்தப்படாதே... இங்கே நடக்கிறது ஒண்ணும் சரியில்லைன்னு எனக்குத் தோணுது..."

அவளுக்கு மட்டும் அது புரியாமல் இருக்குமா என்ன...? எல்லாம் அவளுக்கும் புரியத்தான் செய்கிறது... ஆனால் அது என்னவென்று தான் தெளிவாகத் தெரியவில்லை... மிகவும் குழப்பமாக இருந்தது... ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டாள்...

"எதுவாக இருந்தாலும் என்னைக்காவது ஒரு நாள் வெளியில் வந்து தானே ஆகணும் சோலை... அப்போ அதைப் பார்த்துக்கலாம்... இப்போ நாம ஷூவை கழுவி வச்சிட்டு, சமையலை கவனிக்கப் போகலாம்... ஓகேவா..." என்றபடி ஷூவை கையில் எடுத்தவளின் கையிலிருந்து அதைப் பறித்த சோலையம்மாள்,

"இந்தக் கர்மத்தை நான் பார்த்துக்கிறேன்... நீ போய்ச் சமையலை கவனி கண்ணு..." என்க, அவள் சிரித்தபடி சமையலறைக்குள் நுழைந்தாள்...

"ம்ஹூம்... எப்படியிருக்க வேண்டிய பொண்ணை இப்படிச் சம்பளம் இல்லாத வேலைக்காரியா ஆக்கிட்டாங்களே..." ஆற்றாமையுடன் முணுமுணுத்தபடி வேலையைத் தொடர்ந்தாள் சோலையம்மாள்...

பிரகதீஸ்வரி வேக வைத்த காய்கறிகளோடு பருப்பு சேர்த்து சாம்பாருக்கு கொதிக்க வைத்துக் கொண்டிருந்த போது விமலாராணியின் குரல் ஓங்கி ஒலித்தது...

"பிரகதி... காபி கொண்டு வாம்மா..."

"இதோ வந்துட்டேன்ம்மா..." என்று பதில் குரல் கொடுத்தவள் அடுத்தச் சில நொடிகளில் காபி கலந்து கொண்டு அங்குச் சென்றாள்...

****

அங்கு வரவேற்பறையில் இருந்த சோபாவில் அந்த நெடியவன் கால் மேல் கால் போட்டுக் கொண்டு சட்டமாய் அமர்ந்திருந்தான்... அவளைக் கண்டதும் அவனது கண்களில் எரிச்சல் வந்தது... அவளின் விழிகளோ சற்று முன் நிகழ்ந்த நிகழ்வினை எண்ணி பார்த்துச் சிரித்தது... அதைக் கண்டு கொண்டவன் அவளை முறைத்துப் பார்த்தான்...

"காபியை கொடு..." விமலாராணி அவனைக் காட்டி சொன்னதும் அவள் அவனிடத்தில் காபி கோப்பையை நீட்ட, அவனோ அலட்சியமாய் அதை வாங்கினான் அவளிடம் இருந்து...

"அத்தை... உங்க வீட்டு வேலைக்காரங்க கிட்ட சொல்லி வைங்க... வீட்டு வாசலில் சாணியைப் போட்டு வைக்க வேண்டாம்ன்னு..." அவளைப் பார்த்தபடி அவன் கூற...

"என்னப்பா சொல்ற...? நம்ம வீட்டில் ஏது சாணி...?"

"இதோ இந்தப் பொண்ணு தான்... கோலத்துக்கு நடுவில் சாணி வச்சியிருந்தாள்..." அவன் அவளை நோக்கி கை காண்பித்தான்...

"ஓ... பிரகதியை சொல்லுறியா... இனி செய்யாதேன்னு சொன்னால் செய்யாமல் இருக்கப் போகிறாள்... என்ன பிரகதி புரிந்ததா...? இனி இது போல் செய்யாதே..."

அவன் கூறிய 'வேலைக்காரி' என்ற வார்த்தையை ஆட்சேபிக்காத அன்னையை வெறித்துப் பார்த்தாள் பிரகதீஸ்வரி... ஆனாலும் அவரின் வார்த்தைக்குச் சரியென்று தலையை ஆட்டினாள்...

PDF தமிழ் .com

அந்நேரம் தூங்கி எழுந்து வந்த சந்தியா அங்கு இருந்த ஆடவனைக் கண்டு புள்ளி மானாய் துள்ளி குதித்து ஓடி வந்தாள்..

"சித்து அத்தான்... எப்போ வந்தீங்க...?"

"நான் வந்து அரை மணி நேரமாகிறது... நீ இப்போது தான் தூங்கி எழுந்து வருகிறாயா...? நீ சரியான சோம்பேறிடி..." என்று அத்தை மகளைக் கண்டு அழகாய் சிரித்தான் சித்து என்றழைக்கப்படும் சித்தார்த்...

பிரகதீஸ்வரி இருவரையும் புரியாமல் மாறி மாறி பார்ப்பதை கண்டு சந்தியா அவளிடம், "பிரகதி... சித்து அத்தானை உனக்குத் தெரியலையா...?"

"ம்ஹூம்..." என்று உதட்டை பிதுக்கினாள் சின்னவள்...

"அவர் இங்கே வந்தப்போ நீ ரொம்பச் சின்னப் பொண்ணு... அதான் உனக்கு ஞாபகம் இல்லை... இப்போ ஐயா பெரிய பிசினஸ் மேக்னெட்... உலகம் சுற்றும் வாலிபன்... நம் வீட்டிற்கு எல்லாம் வந்து நிறைய வருசங்கள் ஆகுது... இவ்வளவு ஏன் நான் அவரைப் பார்த்தே வருசக்கணக்கா ஆகிவிட்டது... இல்லையா அத்தான்..."

பிரகதீஸ்வரிக்கு அவனை இங்குக் கண்டது போல் நினைவில்லை... ஆனாலும் அக்கா கூறியதற்குத் தலையை ஆட்டி வைத்து சமாளித்தாள்...

"அது இருக்கட்டும் சந்தியா... என்னைப் பற்றி இந்தளவுக்கு நீ விளக்கமாகச் சொல்லுமளவுக்கு அம்மணி என்ன பெரிய விஐபியா...?" என்ற சித்தார்த்தின் பார்வை பிரகதீஸ்வரியை தலையில் இருந்து கால் வரை அழுத்தமாய்ப் பார்வையிட்டது...

அந்த ஆடவனின் பார்வை சின்னவளின் அடிநெஞ்சை ஏனோ குறுகுறுக்கச் செய்தது... ஏனோ தெரியவில்லை அவளது மனது படபடத்தது இனிமையாய்... இமைகள் இரண்டும் பட்டாம்பூச்சியாய்ச் சிறகடித்தது அவளையும் அறியாமல்...

"என்ன அத்தான் இப்படிச் சொல்லிட்டீங்க...? அவள் எங்களோட சின்னத் தங்கை... இந்த வீட்டின் விஐபியாக்கும்..." என்றபடி அங்கு வந்தமர்ந்தான் சரவணன்...

"ஓ... விஐபியை தெரிந்து வைத்துக் கொள்ளும் அளவிற்கு நான் ஒண்ணும் பெரிய விவிஐபி இல்லை சரவணா..." என்றவன் அதற்கு மேல் அவளைப் பற்றிப் பேசாது வேறு பேச்சிற்குத் தாவினான்...

அவர்கள் எல்லாம் ஒரு குடும்பமாய் இருப்பது போல் அதில் தான் மட்டும் தனித்திருப்பது போன்றதொரு பிரம்மை பிரகதீஸ்வரி மனதிற்குத் தோன்ற, அவள் மெல்ல அங்கிருந்து நழுவினாள்...

"அம்மா... தாயி பிரகதீஸ்வரி..." என்று வாயிற்புறம் இருந்து ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்டது...

அதைக் கேட்டதும் பிரகதீஸ்வரி வேகமாய் அங்கு விரைந்தாள்... கையில் சிறு குழந்தையுடன் ஒரு இளம்பெண் நின்றிருந்தாள்...

"தாயி... நேத்து ராவில் இருந்து மூச்சுவிடாம அழுது தாயி... என்னன்னு பாரு தாயி..." என்றபடி கையிலிருந்த குழந்தையை அவளிடம் கொடுத்தாள்...

ஆறு மாத அந்தப் பெண் குழந்தை விடாமல் அழுது கொண்டிருந்தது... பிரகதீஸ்வரி அதைத் தனது கைகளில் வாங்கியவள் அதன் உடலை தொட்டுத் தடவி பார்த்து வயிற்றைத் தடவியவளுக்கு எதனால் குழந்தை அழுகிறது என்பது புரிந்து போனது...

"பிள்ளைக்கு ஜீரணமாகலை சாந்திக்கா... அதான் வயிறு வலியில் அழுது..." என்று குழந்தையைத் தாயின் கையில் கொடுத்தவள், "கொஞ்சம் இருங்க..." என்றபடி உள்ளே விரைந்தாள்...

சிறிது நேரம் கழித்துக் கையில் ஒரு பொட்டலத்துடன் அங்கு வந்தவள் அதைச் சாந்தியிடம் கொடுத்து,

தமிழ் நாவல்

"மூணு வேளையும் இதைக் கொடுங்க... சரியா போயிரும்..." என்றவள் தனது கையிலிருந்த விபூதியை எடுத்துக் கண்களை மூடி கடவுளை வேண்டியவள் பின் குழந்தையின் நெற்றியில் பூசிவிட்டாள்...

"குழந்தைக்கு மந்திரிச்சாச்சு... இனி ஒண்ணும் பயமில்லை..." பிரகதீஸ்வரி சொல்லும் போதே குழந்தை அவளைக் கண்டு சிரித்தது... அதைக் கண்டு அந்தத் தாயின் முகம் மலர்ந்தது...

"உன் கை பட்டாலே பூவும் பொன்னாகும் தாயி..." என்று கை கூப்பி விடைப்பெற்றாள் அவள்...

பிரகதீஸ்வரி உள்ளே செல்ல திரும்பிய போது அவள் மீது இடிப்பது போல் அங்கு வந்து நின்றான் சித்தார்த்...

"எல்லா நோயும் விபூதியில் குணமாகுவதாய் இருந்தால் எதற்கு இத்தனை ஹாஸ்பிட்டல், எதற்கு இத்தனை டாக்டர்கள்...?"

கேலி குரலில் கேட்டவனுக்குப் பதில் சொல்ல விருப்பமற்று அவள் செல்ல முயல, தனது கை கொண்டு அவளைத் தடுத்து நிறுத்தியவன்,

"இந்தக் கம்யூட்டர் காலத்தில் சாமி, சாஸ்தா எல்லாம் இருக்கிறதா... எல்லாம் ஏமாற்று வேலை... இனியும் நீ ஏமாற்ற, நான் விட மாட்டேன்..." என்றவனைத் தைரியமாக நிமிர்ந்து பார்த்தவள்,

"நம்மைச் சுற்றியிருக்கும் காற்றை நாம் பார்க்க முடியுமா...? இல்லையில்ல... அது போல் தான் கடவுளும்... கடவுளை பார்க்க முடியாது, உணரத்தான் முடியும்..." என்று அழுத்தமான குரலில் கூறியவள்,

"அப்படி உணர்வதற்குத் தூய்மையான மனம் வேண்டும்..." என்று கூறியவளின் பார்வை அவனைத் தீர்க்கமாய்ப் பயமில்லாது நோக்கியது...

அதில் அவன் தான் தனது பார்வையைத் திருப்பிக் கொள்ள வேண்டியதாய் போயிற்று... அது தான் சாக்கு என்று உடனே பிரகதீஸ்வரி உள்ளே சென்று விட்டாள்... சித்தார்த் அவளைப் பார்த்தபடி அங்கேயே நின்றிருந்தான்...

அப்போது அங்கு வந்த விமலாராணி சித்தார்த்திடம், "பார்த்தியா சித்து... இந்த ஊரே இவளோட பேச்சை தான் கேட்கிறது... இந்த ஊர் ஜமீன்தாரிணி என்று பெத்த பெயர் மட்டும் தான் எனக்கு... ஆனால் துளி மரியாதை எனக்குக் கிடையாது... எல்லாம் நான் வாங்கி வந்த வரம் அப்படி..." என்று மூக்கை சிந்தினார் அவர்...

"அதான் நான் வந்துட்டேன்ல அத்தை... இனி எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன்..." என்று அத்தையைச் சமாதானப்படுத்தியவன், வரவேற்பறையைத் தாண்டி சமையலறைக்குள் சென்று கொண்டிருந்த பிரகதீஸ்வரியை பார்த்தவாறு,

"அவளையும் சேர்த்து..." என்றான் அழுத்தமான குரலில்...

நினைத்ததைச் சாதித்துக் காட்டும் வெறியிருந்தது அவனது குரலில்...!!!

'எதிரியை வீழ்த்தி வெற்றி பெறுவது காலச் சரித்திரம்...
வீழ்த்த நினைப்பவன் எதிரியிடத்தில் வீழ்ந்து போவது காதல் காவியம்...
நீ காலச் சரித்திரத்தின் விஜயனாகப் போகிறாயா...?
இல்லை காதல் காவியத்தின் தலைவனாகப் போகிறாயா...?
விஜயனா...? தலைவனா...? இரண்டில் ஒன்றை
நீயே முடிவு செய்து கொள்...
வைரியான என் வைர நாயகனே...!!!'

தமிழ் நாவல்

"அத்தை... நீங்க இந்தக் குடும்பத்தின் தலைவி.. இந்த வீட்டின் மருமகள்... ஊர் பெரிய மனுசி... அப்படி இருக்கும் போது நேற்று பிறந்த சின்னப் பெண்ணுக்கு ஊரார் மத்தியில் உங்களை விட அதிக மதிப்பு இருக்கிறது என்றால்...?" பிரகதீஸ்வரி போவதை பார்த்துக் கொண்டிருந்த சித்தார்த் யோசனையாக நிறுத்தியவன்,

"அப்படி என்ன சம்திங் ஸ்பெசல் இருக்கிறது அவளிடத்தில்...?"

அப்படிக் கேட்டவன் முகத்தில் சற்றுக் குழப்பம் வந்து ஒட்டி கொண்டது... அதே சமயம் இங்கிருக்கும் சூழ்நிலை அவனுக்கு விசித்திரமாக இருந்தது...

அண்ணன் மகனின் கேள்வி விமலாராணி மனதில் அச்சத்தினை ஏற்படுத்தியது... சகோதரனை சமாளித்த அளவுக்கு அவரின் மகனை சமாளிப்பது அவ்வளவு எளிதல்ல என்றே அவருக்குத் தோன்றியது...

பின்னே இந்த இருபத்தியாறு வயதில் அவன் தொழிலில் படைத்த சாதனைகளை அளவிட முடியாது... படித்து முடித்துத் தனது இருபத்தியொராவது வயதில் தொழிலை கையில் எடுத்தவன் அதன் பின் தனது தந்தை நூறாய் பெருக்கி வைத்திருந்த சொத்துக்களை ஆயிரம் மடங்கு உயர்த்தி இருக்கிறான் என்றால் அது சாதாரண விசயமல்ல...

எதிரியின் பலம், பலவீனம் தெரிந்து அவர்களை வேரோடு சாய்க்கும் வித்தை அவன் கை வரப் பெற்றவன்... அதனால் தான் என்னவோ அவன் கடந்து வந்த பாதைகள் அனைத்திலும் வெற்றி என்பதே அவனது இலக்காக இருந்தது... இதுவரை தோல்வியை அவன் சந்தித்தது கிடையாது... அந்த வார்த்தை அவனது அகராதியிலும் கிடையாது... அந்தளவுக்குத் தன்னம்பிக்கை உடையவன் அவன்...

அவன் என்றுமே அறிவை மட்டுமே நம்புகிறவன்... அவன் மறந்தும் தனது மனதின் குரலை செவிமெடுத்து கேட்டது கிடையாது... மனசாட்சி பின் செல்லாது அறிவின் பின் சென்றால் மட்டுமே தொழிலில் வெற்றி பெற முடியும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவன்... அந்த நம்பிக்கையை எள்ளளவும் பிசகாது இன்றுவரை காப்பாற்றி வருகிறவன் அவன்...

"அதான் நீயே பார்க்கிறாயே சித்து... இதோ இப்போது செய்தது போல் மாயம், மந்திரம் செய்து இந்த அப்பாவி மக்களை ஏமாற்றி வைத்திருக்கிறாள்... எனக்கு இந்த வித்தை எல்லாம் தெரியாது சித்து... தெரிந்திருந்தால் என் நிலைமை ஏன் இப்படி மோசமாக இருக்கப் போகிறது..." என்று கூறிய விமலாராணி தன் கண்களில் வராத கண்ணீரை போலியாகத் துடைத்துக் கொண்டார்...

அதைக் கண்டு அவனது மனம் இளகி போனது... அவனின் வீட்டில் அவனது அத்தை மகாராணி அல்லவா...

"கவலைப்படாதீங்க அத்தை... நிச்சயம் உங்களது கௌரவத்தை, மரியாதையை நான் மீட்டெடுப்பேன்..." என்று அவன் உறுதி கூறினான்...

அதில் அத்தையம்மாள் நிம்மதியடைந்தார்... தனது பிள்ளைகளால் சாதிக்க முடியாததைத் தனது அண்ணன் மகன் சாதித்து விடுவான் என்கிற நம்பிக்கையில் தான் அவர் அவனை இங்கு வரவழைத்தது... பிரகதீஸ்வரி கையில் இருக்கும் ஊரின் ஒட்டு மொத்த அதிகாரமும் தனது கைக்கு வர வேண்டும் என்கிற பேராசை அவரது மனதினை போட்டு பேயாய் ஆட்டுவித்தது...

சில விசயங்கள் தானாகக் கொடுப்பது... அதை எல்லாம் கேட்டு வாங்க முடியாது என்பது அவருக்குப் புரியவில்லை... பணத்தால் மரியாதையை விலைக்கு வாங்க முடியாது... அன்பால் மட்டுமே மரியாதை, மதிப்பை வாங்க முடியும் என்று அந்த அறிவீலிக்கு தெரியவில்லை...

தமிழ் நாவல்

சமையலறைக்குள் நுழைந்த பிரகதீஸ்வரியின் கையில் அருகம்புல், எலுமிச்சை மற்றும் தேன் கலந்த சாறினை கொடுத்த சோலையம்மாள்,

"முதலில் இதைக் குடி கண்ணு... பிறகு வேலையைப் பார்க்கலாம்..."

"நன்றி சோலை..." என்று புன்னகையுடன் வாங்கியவள் அந்தச் சாறினை மிடறு, மிடறாக ரசித்துக் குடிப்பதை கண்டு தனது முகத்தை அஷ்டக்கோணாலாக்கினாள் சோலையம்மாள்...

"எப்படிக் கண்ணு இதைக் குடிக்கிற...?"

"இது உடம்புக்கு ரொம்ப நல்லது சோலை..."

"என்ன நல்லதோ... எனக்கு எல்லாம் காலையில் காபி குடிச்சா தான் பெட்ரோல் போட்ட வண்டி மாதிரி சுறுசுறுப்பா வேலை ஓடும்..." என்றவள் தனது கையிலிருந்த காபியை சுடச்சுட அப்படியே வாய்க்குள் ஊற்றினாள்...

"எல்லாம் அப்பா பழக்கப்படுத்தியது சோலை... இதை எல்லாம் நான் மறந்தால், என் அப்பாவை நான் மறந்தது போலாகிவிடும்..." என்றவளின் கண்கள் லேசாகக் கலங்கியது தந்தையின் நினைவில்...

கம்பீரமான தனது தந்தை நரசிம்மனின் தோற்றம் அவளது மனக்கண்ணில் வலம் வந்தது... அப்படிக் கம்பீரமாக இருந்த தந்தை திடீரென்று எதனால் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் விழுந்தார்...? இதுவரை அது அவளுக்குப் புரியாத புதிரான ஒன்று...

ஊருக்கே வைத்தியம் பார்க்கும் அளவுக்கு மருத்துவ அறிவு உடையவர் தனது உடல்நலனில் அக்கறை கொள்ளாதது ஏன்...? எத்தனையோ கேள்விகள் அவளது மனதில்...? ஒன்றுக்கும் விடை தெரியாது விழித்தாள் அந்தச் சின்னஞ்சிறு பேதையவள்...

'அப்பா... உங்க அன்பு, ஆறுதல், அரவணைப்பு எல்லாம் இப்போது எனக்கு வேண்டும் போலிருக்கிறது... திக்குத் தெரியாத காட்டில் மாட்டிக் கொண்டது போல் தவிப்பாய் இருக்கிறது எனக்கு... ரொம்பப் பயமாயிருக்கிறதுப்பா...' மனதுக்குள் புலம்பியவளின் மனதில் புதிதாய் வந்திருக்கும் சித்தார்த்தின் கடுமையான முகம் பெரும் அச்சத்தினைத் தோற்றுவித்தது...

"கண்ணு, கலங்காதே... எல்லாத்தையும் சமாளிக்கிற தைரியம், திறமை உனக்கு இருக்குது... உன் கூட இந்த ஊர் ஜனங்க நாங்க எப்போதும் துணையிருப்போம்..." கண் கலங்கி நிற்கும் சின்ன எஜமானியம்மாளை கண்டு சோலையம்மாளுக்கு மனம் தாளவில்லை...

"ம்... சரி சோலை..." என்றவள் சமையல் வேலையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள் தனது மனவருத்தத்தினை மறைக்க...

வேலை முடிந்ததும் எல்லாவற்றையும் சோலையம்மாளுடன் சேர்ந்து ஒழுங்குபடுத்தியவள், "இதை எல்லாம் டைனிங் டேபிளில் எடுத்து வச்சிரு சோலை... நான் ஸ்கூலுக்குக் கிளம்பறேன்..."

"நீ போய்க் கிளம்பு கண்ணு... இங்கே எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன்..."

சோலையம்மாள் கூறியதும் தனது அறைக்கு வந்தவள் வேக வேகமாய்க் கிளம்பினாள்... இன்று பள்ளியில் சிறப்பு வகுப்பு என்று சீக்கிரமாக வர சொல்லி இருந்தார்கள்...

புத்தகப் பையை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தவள் அங்கு அமர்ந்திருந்த விமலாராணியிடம், "போயிட்டு வர்றேன்ம்மா..." என்க...

"பிரகதி... அதுக்குள்ள ஸ்கூலுக்குக் கிளம்பிட்டியா...? சித்துவுக்குக் கொஞ்சம் சாப்பாடு எடுத்து வச்சிட்டு போயேன்... எனக்கு உடம்பு முடியலைம்மா..."

தமிழ் நாவல்

"எனக்கு ஸ்பெசல் கிளாஸ் இருக்கும்மா..." என்று தயங்கினாள் சின்னவள்...

"சரி நீ போயிட்டு வாம்மா... சித்துவுக்குத் தானாய் போட்டு சாப்பிட தெரியாது... நாம் பார்த்துப் பரிமாறினால் ஒரு கவளம் அதிகமாக உண்பான்... பாவம் பிள்ளை, இத்தனை நாள் வேலை வேலைன்னு ஹோட்டலில் சாப்பிட்டு உடம்பை கெடுத்துக்கிட்டான்... நம்ம வீட்டிலாவது நல்ல சாப்பாடு கொடுக்கலாம்ன்னு நினைத்தேன்..."

என்னவோ சித்தார்த் சிறு குழந்தை போல் எண்ணி அவர் பேச துவங்கினார்... அதைக் கேட்டதும் பெண்ணிற்கு உண்டான இயல்பான தாய்மை உணர்வு பிரகதீஸ்வரி மனதில் எழுந்தது...

"பரவாயில்லைம்மா... நான் பரிமாறிட்டே போகிறேன்..." என்றவள் புத்தகப்பையை அங்கு வைத்துவிட்டு உணவு மேசையை நோக்கி நடந்தாள்...

அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த விமலாராணி முகத்தில் ஒருவித திருப்தி புன்னகை எழுந்தது...

'நீ படிச்சு பெரியாளாக நான் விட்டு விடுவேனா என்ன...? அப்புறம் நீ எப்படி என் பேச்சை கேட்ப...? உன்னை ஸ்கூலுக்கு அனுப்பறதே வெறும் கண்துடைப்பு... இந்த முட்டாள் ஜனங்களை ஏமாத்துறதுக்குத் தான்...'

அவரது மனதில் அப்படியொரு குரோதம் எழுந்தது...

எல்லோரும் உணவு மேசையில் கூடுவதற்கு மேலும் பத்து நிமிடங்கள் பிடித்தது... அமைதியாய் எல்லோருக்கும் பரிமாறிய பிரகதீஸ்வரியை கண்டு சித்தார்த்திற்கு எரிச்சலாக வந்தது... ஏனோ தெரியவில்லை முதல் பார்வையிலேயே அவளைப் பிடிக்காமல் போய்விட்டது அவனுக்கு... ஏன், எதற்கு என்று எல்லாம் அவனுக்குத் தெரியவில்லை... ஆனால் அவளைக் கண்டால் மட்டும் அவனுக்கு அத்தனை வெறுப்பாக இருந்தது... ஒருவேளை

அத்தை அவளைப் பற்றிக் கூறிய விசயங்களால் கூட இருக்கலாம்...

"கண்ணு... நீயும் உட்காரு... உனக்கு ஸ்கூலுக்கு நேரமாயிருச்சு இல்லையா...?"

சோலையம்மாளின் பேச்சில் சித்தார்த் திடுக்கிட்டு நிமிர்ந்தான்... அப்போது தான் அவன் கவனித்தான் அவள் பள்ளிச்சீருடையில் இருப்பதை... அதிகாலையில் பாவாடை, தாவணியில் பார்த்த போது பெரிய பெண்ணாகத் தெரிந்தவள் இப்போது சுடிதாரில் சிறு பெண் போல் காட்சியளித்தாள்...

"வேண்டாம் சோலை... பசிக்கலை..." என்று சொன்னவளை வலுக்கட்டாயமாக அமர்த்தி அவளது தட்டில் இட்லியை வைத்து சாம்பாரை ஊற்றினாள் சோலையம்மாள்...

சித்தார்த் இன்னமும் தன்னைப் பார்த்து கொண்டிருப்பதைக் கண்டு சங்கடப்பட்டவளாய் தலையைக் குனிந்து கொண்டு சாப்பாட்டில் கவனத்தைச் செலுத்தினாள் பிரகதீஸ்வரி... அவனது ஊடுருவும் பார்வை அப்போது போல் இப்போதும் அவளது மனதை படபடக்கச் செய்தது... கூடவே கை, கால்களை நடுங்கச் செய்தது...

"தம்பி... இதைச் சாப்பிட்டு பாருங்க... ரொம்ப ருசியா இருக்கும்..." என்ற சோலையம்மாளின் குரலில் சித்தார்த் தனது பார்வையைத் தன் முன்னிருந்த தட்டின் மீது பதித்தான்...

அடர் அரக்கு நிறத்தில் இருந்த அந்த உணவு பதார்த்தத்தைப் பார்த்தவன், "என்ன இது...?"

"இது கேழ்வரகு அல்வா அத்தான்... ரொம்ப டேஸ்ட்டா இருக்கும்..." என்று அதைச் சப்பு கொட்டியபடி உண்டாள் சந்தியா...

"நீ செய்ததா சந்தியா..." என்று சிரித்தபடி கேட்டவன் அல்வாவை தனது கையில் எடுத்தான்...

தமிழ் நாவல்

"நல்லா கேட்டீங்க தம்பி... நம்ம சந்தியா பாப்பாவாவது சமையல் செய்றதாவது... எல்லாம் பிரகதி கண்ணு செஞ்சது தான்... கேழ்வரகு பால் எடுத்து, அதில் பனங்கருப்பட்டி போட்டு பக்குவமா நெய் விட்டு, ஏலக்காய் பொடி, வறுத்த முந்திரி எல்லாம் சேர்த்து அல்வா பதத்துக்குக் கிண்டி இறக்கணும்... இந்தப் பக்குவம் எல்லாம் சந்தியா பாப்பாவுக்குத் தெரியாது... கண்ணுக்கு தான் இது எல்லாம் நல்லா தெரியும்... நீங்க சாப்பிடுங்க தம்பி, உடம்புக்கு ரொம்ப நல்லது..."

அதைக் கேட்டதும் சித்தார்த் கையிலிருந்த அல்வா கை நழுவி கீழே விழுந்தது...

"அட என்ன தம்பி கீழே போட்டுட்டீங்க... சரி விடுங்க..." என்ற சோலையம்மாள் வேறு அல்வா எடுத்து வைக்க முயல,

"வேண்டாம்..." என்று அதைத் தடுத்தவன், "எனக்கு இனிப்பு பிடிக்காது..." என்று மறுத்தான் அழுத்தமான குரலில்...

அவனது அழுத்தமான குரலில் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்த பிரகதீஸ்வரி அவனது கண்களில் தெரிந்து வெறுப்பில் அவளது வாய்க்குள் சென்ற இட்லி துண்டு தொண்டைக்குழி விட்டு கீழே இறங்க மறுத்தது... அவசரமாய்த் தண்ணீர் அருந்தி இட்லியை உள்ளே தள்ளியவள் அதே வேகத்தில் அங்கிருந்து எழுந்தாள்...

"என்ன கண்ணு வர வர சரியாவே சாப்பிட மாட்டேங்கிற...? கொஞ்சம் இரு, பால் கொண்டு வர்றேன்..."

"வேண்டாம் சோலை..."

"மூச்..." வேலைக்காரி எஜமானியை செல்லமாக மிரட்டியபடி உள்ளே சென்றாள்...

"அத்தை... இன்னைக்கு நாம கம்பெனிக்கு போகலாமா...?"

தான் வந்த வேலையை முடித்துக் கொண்டு தனது ஊருக்குச் செல்லும் அவசரம் அவனுக்கு... அவனுடைய தொழிலை அப்படி அப்படியே போட்டுவிட்டு தந்தை

சொன்ன ஒரு காரணத்திற்காக இங்கே ஓடி வந்திருக்கிறான்...

"அது வந்து சித்து..." விமலாராணி பிரகதீஸ்வரி முகத்தைக் கேள்வியாய் பார்த்தார்...

அதைக் கண்டு அவன் யோசனையாய் புருவங்களை நெறித்தான்...

"பிரகதி அங்கு வந்து சொன்னால் மட்டுமே அங்கு வேலை பார்ப்பவர்கள் உன்னை ஏற்றுக் கொள்வார்கள் சித்து..."

அதைக் கேட்ட அடுத்த நொடி சித்தார்த் அமர்ந்திருந்த நாற்காலியில் இருந்து வேகமாய் எழுந்தான்...

"எத்தனை நாளா இப்படி என்னை அவமானப்படுத்தணும்ன்னு திட்டம் போட்டிருந்தீங்க... நான் யார், என்னோட ஸ்டேட்டஸ் என்னன்னு உங்களுக்குத் தெரியும் தானே...? அப்படிப்பட்ட என்னைப் போய் இவள் மற்றவர்களிடம் அறிமுகப்படுத்தணுமா...? த க்ரேட் சித்தார்த்க்கு யாருடைய அறிமுகமும் தேவையில்லை..."

அவனது வார்த்தைகளில் அனல் பறந்தது போல் அவனது முகத்திலும் கோபத்தின் தீச்சுவாலைகள் தகித்தது... ஒரு சிறு பெண் சொல்லித்தான் அவன் தொழில் நிர்வாகத்தைக் கவனிக்க வேண்டும் என்றால் அப்படிப்பட்ட நிர்வாகம் அவனுக்குத் தேவையில்லை... தனது திறமை மீது அந்தளவுக்குத் தற்பெருமை, தன்னகங்காரம் அவனுக்கு... அதன் விளைவு தான் அவனது இந்தக் கோபம்...

ஆதி மூட நித்திரை ஆணவம் தந்த
அதனால் உணர்வோன் அருங்கன்மம் முன்னித்
திதமான கேவலம் இத்திறம் சென்று
பரமாகா ஐயவத் தைப்படு வானே – திருமந்திரம்

நம் உயிரானது ஆணவ அழுக்கால் மூடமாகிய உறக்கம் உண்டாகும்... அதனால் அந்த உயிரானது அதன் நல்வினை மற்றும் தீவினைக்கு ஏற்ப நடக்கும்... அவ்வாறு நடப்பதால்

உயிரானது மேல்நிலை அடையாமல் கீழ்நிலையான ஐந்து அவத்தைகளை அடையும்.... ஐந்து அவத்தைகள் என்பது ஐம்புலன்களால் ஏற்படும் அவைத்தைகளாகப் பொருள் கொள்ளலாம்.

திருமூலர் திருமந்திரத்தில் கூறியவாறு ஆணவம் அவனது கண்களை மறைத்தது... அந்த ஆணவமானது அவனது உயிர், உடல் அனைத்தையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது அதே ஆணவத்தோடு...

'இவன் வேறு... இங்கு நடப்பது புரியாமல் கோபப்படுகிறான்... உன்னை மாதிரி தான் நானும் கோபப்பட்டு இப்போது அடக்கி வாசிக்கிறேன்...' மனதுக்குள் புலம்பிய விமலாராணி தலையில் கை வைத்தார்...

சித்தார்த்தின் கோபம் கண்டு அச்சத்துடன் இரண்டடி பின்னால் நகர்ந்தாள் பிரகதீஸ்வரி...

"அத்தான்... நீ இவ்வளவு கோபப்படும் அளவுக்கு இங்கு ஒன்றும் நடக்கலை..." சரவணன் தனது மாமன் மகனை சமாதானப்படுத்தியவன்,

"இந்த ஊர் உனக்குப் புதிது இல்லையா... அதனால் தான் அம்மா பிரகதியை உன் கூட அழைச்சிக்கிட்டுப் போகச் சொல்றாங்க..."

"சரி நான் தான் ஊருக்கு புதியவன்... ஆனால் நீ இங்குப் புதியவன் இல்லையே... அப்போ நீ என்னுடன் வரலாமே..."

சித்தார்த்தின் பேச்சு கேட்டு சரவணன் தயங்கினான்...

"அத்தான்... இவன் பேச்சை எங்க வீட்டு நாய்க்குட்டி கூடக் கேட்காது..." என்று சகோதரனை கேலி செய்து சிரித்தாள் சந்தியா...

“குந்தாணி... வாயை மூடுடி...” தங்கையிடம் பாய்ந்தான் சரவணன்...

"சித்து... அத்தைக்காகக் கொஞ்சம் கோபப்படாம இருப்பா..." பெரியவளின் வார்த்தை கேட்டு சித்தார்த் சற்று அமைதியானான்... ஆனாலும் அவனது கோபம் முற்றிலும் குறையவில்லை...

அதற்குள் சோலையம்மாள் பால் கொண்டு வந்து கொடுக்கப் பிரகதீஸ்வரி அதைக் குடித்துவிட்டு அங்கிருந்து கிளம்ப எத்தனித்தாள்... சித்தார்த்தின் கோபம் அவளுக்குப் பயத்தை உண்டு பண்ணியது...

"பிரகதி நில்லு... சித்துச் சொல்றதை கேட்ட தானே..." விமலாராணி அவளைத் தடுத்து நிறுத்தினார்...

"கேட்டேன்ம்மா... ஆனா இன்னைக்கு எனக்கு ஸ்பெசல் கிளாஸ் இருக்கே..." கைக்கடிகாரத்தைப் பார்த்தபடி அவள் கூற...

'பட்டிக்காட்டில் இருக்கும் இவள் எல்லாம் நேரத்தை பற்றிப் பேசுகிறாள்... ஆனால் காலில் சக்கரம் கட்டி கொண்டு உலகம் சுற்றும் நான் இவளின் தயவு வேண்டி காத்திருக்க வேண்டியிருக்கிறது... எல்லாம் என் நேரம்...' கோபத்துடன் பல்லை கடித்தான் சித்தார்த்...

"நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை போகலாமா...?"

அவள் கேட்டதும் தான் தாமதம் சித்தார்த் கோபத்துடன், "ஞாயிற்றுக்கிழமை உன் அப்பனா வந்து கம்பெனியை திறந்து வைத்திருப்பான்..." என்று சுள்ளென்று அவளிடம் எரிந்து விழுந்தான்...

“என் அப்பாவை அவன், இவன்னு மரியாதை இல்லாம பேச வேண்டாம்...” தந்தையைப் பற்றி அவன் மரியாதை குறைவாய் பேசியது கண்டு அவளுக்குக் கோபம் வந்தது...

"அப்போ நான் சொல்றதை நீ கேளு... இன்னைக்கு நீ என் கூட வர்ற... என்ன பேசணுமோ அதை இன்னைக்கே பேசிவிட்டு போகிற... நோ எக்ஸ்க்யூஸ்..." என்றான் அவன் தீர்மானமான குரலில்...

இது வேறா...? மனதிற்குள் நினைத்தவள் செய்வதறியாது கைகளைப் பிசைந்தவாறு நின்றிருந்தாள்...

அந்நேரம் வாயிலில், "சின்னம்மா..." என்ற குரல் கேட்டது... அவளுடன் படிக்கும் கதிரேசனின் குரல் அது...

பிரகதீஸ்வரி ஒரு முடிவெடுத்தவளாய், "சரி நான் உங்க கூட வர்றேன்..." அவனிடம் மேலும் வாதாடாமல் அவள் வாயிலுக்குச் சென்றாள்...

"சின்னம்மா... நேரமாச்சே ஸ்கூலுக்குக் கிளம்பலையா...?" என்று கேட்ட கதிரேசனை இடுப்பில் இரு கைகளை வைத்துக் கொண்டு போலியாக முறைத்தாள் அவள்...

"கதிர்... உனக்கு எத்தனை தடவை சொல்லியிருக்கேன் என்னைப் பிரகதின்னு கூப்பிட சொல்லி..."

"அது எப்படிச் சின்னம்மா...? நான் அப்படிக் கூப்பிட்டா எங்கப்பாரு கரண்டியை பழுக்கக் காய்ச்சி என் நாக்கில் சூடு போட்டுரும்..."

தாங்கள் தெய்வமாக வணங்கும் குடும்பத்தின் வீட்டுப் பெண்ணைப் பெயர் சொல்லி அழைப்பது அங்குத் தெய்வக் குற்றமாகக் கருதப்பட்டது...

"என்னமோ போ கதிர்... நீ இப்படி இருந்தா எப்படி நாம ரெண்டு பெரும் சேர்ந்து இந்த ஊருக்கு சேவை செய்ய முடியும்...?"

"அதெல்லாம் பண்ணலாம் சின்னம்மா... நீங்க கவலைப்படாதீங்க..." என்றான் கதிரேசன் அவசரமாய் இடையிட்டு...

"அதுக்கு நீங்க இப்ப ஸ்கூலுக்கு வரணும்... அது நினைவு இருக்குங்களா...?"

அவன் கேட்ட த்வனியில் அவளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது... கலகலவென்று வாய்விட்டு சிரித்தவள்,

"அதைப் பத்தி சொல்லத்தான் வந்தேன்... நான் இன்னைக்கு வரலை... லீவு சொல்லிடு..."

"இன்னைக்கு ஸ்பெசல் க்ளாஸ் இருக்கே..." அவன் கவலையாய் அவளைப் பார்த்தான்...

"அதுக்குத் தான் நீ இருக்கியே... எனக்காக நோட்ஸ் எடுத்துட்டு வந்து தர மாட்டியா...?"

"நோட்ஸ் என்ன நோட்ஸ் சின்னம்மா...? அந்த வாத்தியாரை கடத்திட்டு வந்து உங்களுக்குத் தனியா பாடம் சொல்லிக் கொடுக்க வச்சிர மாட்டேன்..." லேசாக அரும்பிய மீசையை வீரமாய் முறுக்கி விட்டபடி அவன் சவடாலாய்க் கூறினான்...

அதைக் கேட்டு மீண்டும் சிரித்த பிரகதீஸ்வரி, "உன் கூடப் பேசினாலே சிரிப்பு தான் வரும்... நேரம் கடத்தாம ஸ்கூலுக்குப் போ..."

"வர்றேன் சின்னம்மா..." என்றபடி கதிரேசன் விடைப்பெற்று செல்ல... அவனைப் பார்த்தபடி நின்றிருந்த பிரகதீஸ்வரியின் முகத்தில் இன்னமும் புன்னகை மிச்சமிருந்தது...

"ரெண்டு பேரும் சேவை மட்டும் தான் செய்யப் போறீங்களா...? இல்லை இதில் வேறு எதுவும் இருக்கிறதா...?" திடுமெனக் காதுக்கருகில் ஒலித்த குரலில் திடுக்கிட்டு திரும்பியவள் அங்குத் தனக்குப் பின்னே வெகு அருகில் நின்ற சித்தார்த்தை கண்டதும் அவளின் புன்னகை அப்படியே மறைந்தது...

"என்ன நான் சொன்னது சரி தானே...?" மீண்டும் அவன் கேட்டதும் அவளது முகம் மாறியது அவனின் பேச்சின் அர்த்தம் புரிந்து...

"அவன் என்னோட நண்பன்..." ஒவ்வொரு வார்த்தைக்கும் அழுத்தம் கொடுத்து நிதானமாய்க் கூறினாள்...

"பார்த்தால் அப்படித் தெரியலையே..." தாடையைத் தடவியபடி அவளது முகத்தை உற்று நோக்கினான்...

அதில் அவளது முகம் செவ்வானமாய்ச் சிவந்து போனது லஜ்ஜையினால்...

"காமாலை கண்ணோடு பார்ப்பவருக்கு அப்படித்தான் தெரியும்..." வரவழைத்துக் கொண்ட தைரியத்துடன் கூறியவளை பார்த்தவனின் பார்வை இன்னமும் கூர்மையானது...

அவனது பார்வையின் கூர்மையைத் தாங்க முடியாது அவள் அங்கிருந்து விலகி சென்றாள்... அவனை விட்டு தள்ளி வந்த பின்னும் அவனது பார்வை அவளது முதுகை துளைத்து எடுப்பது போன்றதொரு பிரம்மை அவளுள்...

வெளியில் செல்வதற்கு ஏற்றவாறு உடையை மாற்றிக் கொண்டு வந்த பிரகதீஸ்வரி அன்னையிடம் வந்தாள்...

"அங்கே போய் நான் என்ன சொல்லணும்மா...? சொல்லுங்க... அப்படியே சொல்லிட்டு வந்திடறேன்..." தன்மையுடன் கேட்டபடி அவர் அருகில் வந்தமர்ந்தாள்...

"நான் என்னத்தைச் சொல்ல சொல்வேன் பிரகதி... உங்கப்பா இறந்த பிறகு நமது தொழிலை பார்க்க ஆள் இல்லாம அப்படியே தேங்கி நிக்குது... சரவணனை போய்ப் பார்க்க சொன்னா போக மாட்டேங்கிறான்... இதை எல்லாம் சரி பண்ணத்தான் சித்துவை வரவழைச்சு இருக்கிறேன்... இனி சித்துத் தான் இதை எல்லாம் நிர்வாகம் பண்ணுவான்னு மட்டும் நீ சொல்லிட்டு வந்துட்டா போதும்... மத்ததை எல்லாம் சித்துப் பார்த்துக்குவான்... நீ சொன்னால் தான் இந்த ஊர் மக்கள் கேட்பாங்க..."

அது அவளுக்குமே தெரிந்த ஒன்று தான்... தந்தைக்குக் கொடுத்த மரியாதையை அவர்கள் தனக்கு மட்டும் கொடுப்பதை அவள் உணர்ந்தே தான் இருந்தாள்... அவர்கள் சரவணன், சந்தியாவைப் புறக்கணிப்பது அவளின் மனதிற்குமே சரியாகத் தோன்றவில்லை... அவளுக்குமே அந்த வருத்தம் நிறைய இருந்தது...

"சரிம்மா... நீங்க சொன்னபடி நான் சொல்லிட்டு வர்றேன்..." என்றவள் வெளியில் வந்தாள்...

சித்தார்த் ஏற்கெனவே வெளிவாயிலில் நின்றிருந்தான்... அந்நேரம் சரவணன் வெளியில் கிளம்பி செல்வதற்காக அங்கு வந்தான்...

"சரவணா... நீயும் என்னுடன் வா..." என்றான் சித்தார்த் கட்டளையிடும் குரலில்...

"நானா...?" தயங்கினான் சரவணன்...

"நீயே தான்... இன்னும் எத்தனை நாள் உன்னுடைய தொழிலை நான் பார்த்துக் கொள்ள முடியும்... எனக்கு என்னுடைய வேலைகள் இல்லையா...? இனி நீ தான் இதை எல்லாம் பொறுப்பெடுத்துக்க வேண்டும்... ஆண்பிள்ளையாய் லட்சணமாய்த் தொழிலையும் கவனித்து, வீட்டையும் கவனி சரவணா... இன்னும் நீ இப்படி விளையாட்டு பிள்ளை போல் இருந்தால் மிகவும் கஷ்டம்..." அவனது குரல் அத்தனை கடுமையாய் ஒலித்தது...

உலகத்தில் அனுபவிக்க வேண்டிய விசயங்கள் எத்தனையோ இருக்கிறது... அதை எல்லாம் விட்டு விட்டு தொழிலை கட்டி கொண்டு அழ சொல்லும் அத்தான் சித்தார்த் சரவணனின் கண்ணிற்கு எதிரியாகத் தெரிந்தான்... ஆனாலும் அவனை எதிர்த்து பேசி இவனுக்குப் பழக்கமில்லை...

"ம்... சரி அத்தான்..." சுரத்தில்லாது பதிலுரைத்தவனை முறைத்தபடி,

"வந்து காரிலேறு..." என்றுவிட்டு சித்தார்த் தனது காரை நோக்கி நடந்தான்...

பிரகதீஸ்வரியும் அவர்களைப் பின்தொடர்ந்து சென்று கார் அருகே நின்றாள்... அவள் அங்கு நிற்பது தெரிந்தும் கண்டும் காணாதவன் போல் காரை கிளப்பிக் கொண்டு சென்றுவிட்டான் சித்தார்த்... அவளைத் தனக்குச் சமதையாய் நினைக்க அவனுக்கு மனம் வரவில்லை...

ஏதோ யோசனையில் இருந்த சரவணனும் அவளைக் கவனிக்கவில்லை... இல்லையென்றால் அவன் இப்படித் தங்கையைத் தனியே விட்டு விட்டு வந்திருக்க மாட்டான்...

தனது முகத்தில் அடித்தார் போன்று காரை கிளப்பிக் கொண்டு சென்ற சித்தார்த்தை கண்டு செய்வதறியாது திகைத்து நின்றாள் அவள்... இதற்கு முன்னர் இது போன்றதொரு உதாசீனங்களை எல்லாம் அவள் அனுபவித்தது இல்லை... முதன்முறையாகச் சித்தார்த் இப்படி நடந்து கொண்டது கண்டு அவளுக்கு அழுகை வரும் போலிருந்தது...

"சின்னம்மா... நீங்க நம்ம காரில் வந்து ஏறுங்கம்மா..." அவள் முன் காரை நிறுத்திய ஓட்டுநர் மாரியப்பன் அவளுக்குக் கதவை திறந்து விட்டான் பணிவுடன்...

"ம்..." என்று தலையசைத்து அவனைப் பார்த்து புன்னகைத்தவள் காரிலேறி அமர்ந்தாள்... ஆனாலும் சித்தார்த்தின் புறக்கணிப்பு அவளது மனதிற்குள் அத்தனை வருத்தமாக இருந்தது...

****

பிரகதீஸ்வரிக்கு முன் அங்குச் சென்று இறங்கிய சித்தார்த் அந்தத் தொழிற்சாலையைப் பிரம்மிப்புடன் பார்த்தான்... அத்தனை பெரிய தொழிற்சாலையை அவன் சற்றும் எதிர்பார்க்கவில்லை... ஏதோ கிராமத்தில் இருக்கும் தொழில் நிறுவனம் தானே என்கிற அலட்சியத்துடன் வந்தவனுக்கு அதன் தோற்றம் பெரும் மலைப்பாக இருந்தது...

"சரவணா... இவ்வளவு பெரிய கம்பெனியாக இருக்கும்ன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கலை..."

"இது மோட்டார் வாகனத்தின் உதிரி பாகங்கள் தயாரிக்கிற கம்பெனி அத்தான்... இது போக நிறையக் கம்பெனி நமக்கு இருக்கு..." என்றான் சரவணன் பெருமையாக, உற்சாகமாக...

"பேச்சில் இருக்கும் இந்தப் பெருமை இதைக் கட்டி காப்பதில் இருக்கணும் சரவணா... ஏதோ வாழ்ந்தோம், செத்தோம்ன்னு இருக்கக் கூடாது... எதையாவது சாதிச்சிட்டு சாகணும்... என்ன புரிந்ததா...?"

சித்தார்த் சொல்லி கொண்டிருக்கும் போது பிரகதீஸ்வரியின் கார் உள்ளே நுழைந்தது... அந்தக் காரை கண்டதும் சித்தார்த்தின் புருவங்கள் உயர்ந்தது... ஏனெனில் அவனின் காரை விட அந்தக் கார் பல லட்சங்கள் அதிக விலை உயர்ந்ததாக இருக்கும்...

சித்தார்த் வியப்புடன் பார்ப்பதை உணர்ந்த சரவணன், "இது இம்போர்டட் கார் அத்தான்... பிரகதியோட பிறந்தநாளுக்கு அப்பா பரிசாகக் கொடுத்தது..." அவனது பேச்சில் இன்னமும் பெருமை குறையவில்லை...

சரவணனுக்கே இப்படி என்றால் அந்தக் காரில் வந்தவளுக்கு எந்தளவுக்குப் பெருமை இருக்கும்...? சித்தார்த் யோசனையுடன் தங்களை நோக்கி வந்து கொண்டிருந்த பிரகதீஸ்வரியை பார்த்துக் கொண்டிருந்தான்...

அது போன்றதொரு பெருமை எல்லாம் அவளுக்கு இல்லை போலும்... அவர்களின் அருகில் வந்தவள் இயல்பாய்,

"உள்ளே போகலாமா...?" என்று இருவரையும் பார்த்து கேட்டாள்...

சித்தார்த் ஆச்சிரியமாக அவளை உற்றுப் பார்த்தான்... அந்தப் பால் வடியும் கள்ளங்கபடமில்லா முகத்தில் புன்னகையைத் தவிர வேறு ஒன்றுமில்லை... அந்தப் புன்னகையே அவளுக்குப் பொன்னகையாய் மாறி அவளை மின்னும் தாரகையாய் ஜொலிக்கச் செய்தது...

"அத்தான் வாங்க..." சரவணன் அழைத்ததும் சித்தார்த் தன்னுணர்வு பெற்று உடன் நடந்தான்...

விமலாராணி புலம்பியது போல் அல்லாமல் அங்கே தொழிற்சாலையின் உள்ளே வேலைகள் அனைத்தும் தங்கு

தடையின்றிச் சீராக நடந்து கொண்டிருந்தது... யாரும் சோம்பி ஒரு இடத்தில் நிற்கவில்லை... அத்தனை சுறுசுறுப்பாக அனைத்தும் இயங்கி கொண்டிருந்தது... முதலாளி இல்லாமல் அந்தத் தொழிற்சாலை நடந்து கொண்டிருக்கிறது என்று சத்தியம் செய்து சொன்னால் கூட யாரும் நம்ப மாட்டார்கள்... அந்தளவுக்கு ஒரு ஒழுங்கு, கட்டுப்பாடு அங்கு இருந்தது...

சித்தார்த்திற்கு எல்லாமே ஆச்சிரியமாக இருந்தது... அவனுக்கு ஒன்று தெரியவில்லை... அவர்கள் எல்லோரும் கிராமத்து மனிதர்கள், அன்புக்கு மட்டுமே கட்டுப்பட்டவர்கள் என்று...

அவர்கள் சரவணனுக்குக் கொடுத்த மரியாதையை விடச் சின்னப் பெண் பிரகதீஸ்வரிக்கு கொடுத்த மரியாதை தான் அதிகமாய் இருந்தது... அது கண்டு சித்தார்த்திற்குத் தான் ஒரு மாதிரியாக இருந்தது... சரவணனோ அதைச் சிறிதும் கண்டு கொள்ளவில்லை... இயல்பு போல் சாதாரணமாய் அவர்களுடன் இணைந்து நடந்தான்...

'இப்படி இவன் வடிகட்டின முட்டாளாக இருந்தால் ஏமாற்றுபவர்கள் ஏமாற்றத்தான் செய்வார்கள்...' அத்தை மகனை நினைத்துக் கோபம் வந்தது அவனுக்கு...

அவர்களின் வரவினை உணர்ந்து மேலாளர் அங்கு விரைந்து வந்தார்...

"வணக்கம்மா... வணக்கம் சார்..." என்று வரவேற்றவர்,

"நீங்க ஆபிஸ் ரூமில் போய் இருங்க... நான் அதற்குள் எல்லோரையும் மீட்டிங் ஹாலிற்கு வர சொல்கிறேன்..." என்றுவிட்டு அவர் சென்றுவிட்டார்...

சித்தார்த்துடன் ஒரே அறையில் இருக்கச் சங்கடப்பட்டவளாய் பிரகதீஸ்வரி அண்ணனிடம், "அண்ணா... நீங்க போங்க... நான் வெளியில் சுற்றி பார்த்துவிட்டு வருகிறேன்..." என்றுவிட்டு அவனது பதிலை எதிர்பாராது ஓடிவிட்டாள்...

"இங்கே பின்னால் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு என்று பால்வாடி ஒன்று அமைத்துக் கொடுத்திருக்கிறோம் அத்தான்... பிரகதி இங்கு வந்தால் முதல் வேலையாக அங்குத் தான் செல்வாள்..." தங்கையை நினைத்துப் பெருமையாக அவன் கூற, சித்தார்த் ஒன்றும் பேசாது நடந்தான்...

அலுவலக அறைக்குள் நுழைந்ததும் சரவணன் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்து கணினியை நோண்ட ஆரம்பித்து விட, சித்தார்த் அந்த அறையைச் சுற்றி பார்த்தபடி அங்கிருந்த ஜன்னல் அருகே வந்து நின்றான்...

அப்போது பிரகதீஸ்வரி யாரிடமோ கோபமாய்ப் பேசும் சத்தம் கேட்டது... யாரிடம் அப்படிக் கோபமாய்ப் பேசுகிறாள் என்று எட்டிப்பார்த்தான் அவன்...

அவளது கையில் சிறு குழந்தை ஒன்று இருந்தது... அவள் முன்னே ஒரு பெண் தலைகுனிந்து நின்று கொண்டிருந்தாள்...

"இது சரும கரப்பான் நோய்ன்னு உனக்குத் தெரியாதா வள்ளி... இப்படித்தான் கவனிக்காம இருப்பியா... இப்போ பாரு உடம்பில் எல்லா இடத்திலும் பரவியிருக்கு... பாவம் குழந்தை... எத்தனை வேதனைப்படுகிறானோ..."

சித்தார்த்திற்கு அந்தக் குழந்தையின் வேதனை எல்லாம் பெரிதாகத் தெரியவில்லை... ஆனால் அதன் வேதனையைத் தன் வேதனையாக எண்ணி வேதனை அடைந்த பிரகதீஸ்வரியை கண்ணிமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான்...

"முகத்திற்கு மட்டுமல்ல மனதிற்கும் அரிதாரம் பூசி நடிக்கும் பெண்கள் பல கடந்து வந்தவன் நான்...
நுனிநாக்கு ஆங்கிலம் பேசும் அதிநவீன பெண்கள் பல கடந்து வந்தவன் நான்...
பெண்மை மிளிரும் அதிரூப அழகு சுந்தரிகள் பல கடந்து வந்தவன் நான்...

அப்படிப்பட்ட என்னைத் தாய்மை காட்டி தடுத்து நிறுத்தும் பெண்ணே...
உன்னிடத்தில் நான் வீழ்வேனென்று நினைத்தாயோ...?
நான் வீழ்வதற்கு வந்தவனல்ல...!
உன்னை வீழ்த்த வந்தவன்...!"

நனவாகும்...!!!

"குழந்தையைக் கொஞ்சம் பிடி வள்ளி..."

பிரகதீஸ்வரி தன் கையிலிருந்த குழந்தையை வள்ளியின் கையில் கொடுத்துவிட்டு எங்கோ வேகமாகச் சென்றாள்... அவள் செல்லும் வேகம் கண்டு சித்தார்த்திற்கு உள்ளுக்குள் ஆர்வம் பிறக்க தலையைப் பின்னுக்குச் சாய்த்து எட்டிப்பார்த்தான்... நிறுவனத்தின் சுற்றுச்சுவர் புறம் சென்றவள் அங்கு ஓங்கி வளர்ந்திருந்த செடிகளில் இருந்து எதையோ பிடுங்கி கொண்டு வந்தாள்... அதைக் கண்டு அவனது கண்கள் யோசனையாய் இடுங்கியது...

நேரே வள்ளியிடம் வந்த பிரகதீஸ்வரி அவளின் கையில் அந்தச் செடியை கொடுத்து, "இது ஆடுதீண்டாப்பாளை... இதோடு கொஞ்சம் சுக்கு, கஸ்தூரி மஞ்சள் சேர்த்து அரைச்சு, சின்னச் சின்ன உருண்டையாய் உருட்டி சாப்பாட்டுக்கு பின்பு கொடு... எல்லாம் சரியா போகும்... மேலுக்கு அரிப்பு வராம இருக்கிறதுக்கு நான் களிம்பு தர்றேன்... சாயங்காலம் போகும் போது வீட்டுக்கு வந்து வாங்கிட்டு போ..."

"ரொம்ப நன்றி சின்னம்மா..." வள்ளி இரு கை கூப்பி அவளை வணங்க...

"நன்றி எல்லாம் எதுக்கு வள்ளி...? இனிமேல் குழந்தையைக் கவனமா பார்த்துக்கோ... பெத்துக்கிறது முக்கியம் இல்லை வள்ளி... அதைப் பாதுகாத்து பேணி வளர்ப்பதில் தான் எல்லாம் இருக்கு..."

அதைக் கேட்டு வள்ளி குற்றவுணர்வில் தலை குனிந்தாள்... அவளது முகத்தை நிமிர்த்திய பிரகதீஸ்வரி, "இதுக்குத் தான் உங்கப்பாரு கிட்ட படிச்சு படிச்சு சொன்னேன் இப்படிச் சின்ன வயசில் வள்ளிக்குக் கல்யாணம் பண்ணி வைக்காதீங்கன்னு... அவர் கேட்கலை... நீயும் கொஞ்சம் மறுத்துப் பேசியிருக்கலாம்... நீ வாயை திறக்கவே பயந்த... இல்லைன்னா இப்போ நீயும் என் கூடப் படிக்க வந்திருக்கலாம்..."

பிரகதீஸ்வரி பேச்சில் ஆதங்கம் நிறைந்திருந்தது... தோழியின் படிப்பு வீணாய்ப் போனது மட்டுமில்லாது அவளது வாழ்க்கையும் அல்லவா வீணாகி விட்டது... பதினேழு வயது குழந்தை குமரியின் கையில் இன்னொரு குழந்தை... கொடுமையிலும் பெரிய கொடுமை இதுவல்லவா...

"நான் எதிர்த்து பேசினா எங்கப்பாரு என்னை உப்புக் கண்டம் போட்டுரும் சின்னம்மா..." என்றுரைத்த வள்ளியின் கண்களில் அச்சம் நிறைந்திருந்தது...

"சரி விடு... நடந்து முடிந்ததைப் பற்றிப் பேசி எந்தப் பிரயோஜனம் இல்லை..." என்ற பிரகதீஸ்வரி, "உன் புருசன் உன்னைச் சந்தோசமா பார்த்துக்கிறாங்க தானே...?"

கணவனைப் பற்றிக் கேட்டதும் அந்தக் கிராமத்து பெண்ணின் முகத்தில் அழையா விருந்தாளியாய் வெட்கம் வந்து ஒட்டி கொண்டது...

"ம்..." வெட்கத்துடன் சிரித்தாள் வள்ளி...

"அதான் புள்ளைய மறந்துட்ட போலிருக்கு..." என்றபடி பிரகதீஸ்வரி வள்ளியின் கைகளில் இருந்து குழந்தையை வாங்கியவள்,

"நீ போய் வேலையைப் பார் வள்ளி... நான் இவனைக் கொஞ்ச நேரம் வச்சியிருக்கிறேன்..."

"எதுக்குச் சின்னம்மா...?" என்று தயங்கினாள் வள்ளி...

"கொஞ்சம் நேரம் தான் வள்ளி..." என்றதும் அரை மனதாய் அங்கிருந்து நகர்ந்தாள் வள்ளி...

இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த சித்தார்த்திற்குப் பெரிய மனுசி போல் பேசும் பிரகதீஸ்வரியை கண்டு பெருத்த ஆச்சிரியமாக இருந்தது... அதே சமயம் அவள் மீது கோபமும் வந்தது... இது என்ன வயதுக்குத் தகுந்தார் போன்று பேசாது பெரிய மனுசி போல் பேசுகிறாள் என்று அவனுக்கு எரிச்சலாகவும் இருந்தது...

அது கிராமத்து பெண்களுக்கே உரித்தான இயல்பான குணம் என்று அவனுக்குத் தெரியவில்லை...

"என்ன கண்ணா... உடம்பு எல்லாம் அரிப்பு எடுக்குதா...? அத்தை கொடுத்த மருந்தை ஒழுங்கா சாப்பிட்டா எல்லாம் சரியா போயிரும்... அடம்பிடிக்காம சமத்தா சாப்பிடணும் என்ன சரியா...?"

சிறு குழந்தையுடன் பேசியவாறு அதன் பரட்டை தலையைத் தனது கை விரல்களால் கோதி ஒழுங்குபடுத்திய பிரகதீஸ்வரி அதன் முகத்தை நெட்டி முறித்து,

"இப்போ தான்டா அழகாயிருக்கே..." என்று அதன் கன்னத்தில் முத்தமிட்டாள்...

அதைக் கண்டு சித்தார்த் அருவருப்பில் முகத்தைச் சுளித்தான்... ஏனெனில் அந்தக் குழந்தை சற்று கருப்பாக, அழுக்காக இருந்தது... விரல் நுனியில் அழுக்குப் படாமல் வலம் வரும் அவனுக்கு அந்தக் குழந்தையின் தோற்றம் அறவே பிடிக்கவில்லை...

குழந்தையிடம் பேசியவாறு திரும்பிய பிரகதீஸ்வரி அலுவலக அறை ஜன்னலில் இருந்து தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த சித்தார்த்தை கண்டு திகைத்து நின்றாள்... அவள் தன்னைப் பார்ப்பதை கண்டு 'என்ன' என்பது போல் ஒற்றைப் புருவத்தை உயர்த்தி அவன் கேட்க, அதைக் கண்டு அவள் மனம் படபடக்க ஒன்றும் பேசாது அங்கிருந்து சென்றுவிட்டாள்...

தொழிலாளர்கள் எல்லாம் ஒன்று கூடிய செய்தி கேட்டதும் பிரகதீஸ்வரி அலுவலக அறைக்குச் செல்ல, அங்குச் சித்தார்த்தும், சரவணனும் அதற்காகத் தான் கிளம்பி கொண்டிருந்தனர்...

"வந்துட்டியா பிரகதி... வா போகலாம்..." என்றபடி சரவணன் அறைக்கதவை திறந்து கொண்டு செல்ல...

அவனைப் பின்தொடர்ந்து வெளியில் செல்ல முற்பட்டவளை கதவை அடைத்து தடுத்து நிறுத்திய

சித்தார்த்,

"முதலில் உன் கைகளைச் சோப் போட்டு கழுவு..." அவன் கூறியதை கேட்டு அவள் திகைப்பாய் அவனைப் பார்க்க...

"அத்தோடு உன் உதடுகளையும் சேர்த்து..." என்றவனது பார்வை அவளது இதழ்களின் மீது அழுத்தமாய்ப் படிந்தது...

அவனது வார்த்தைகளில் பெரிதும் அதிர்ந்தவளாய் அவள் பின்னால் நகர்ந்தாள்... மேலே செல்ல முடியாதபடி அறைக்கதவு தடுக்க அதன் மீது சாய்ந்து நின்றபடி அவள் அவனைப் பயத்துடன் பார்த்தாள்...

"அழுக்கான குழந்தையைத் தூக்கி கொஞ்ச உனக்கு அருவருப்பாக இல்லையா...?" கொஞ்சம் கடுமையுடன் வந்தது அவனது வார்த்தைகள்...

காலையிலும் அவளைக் கண்டு வேலைக்காரி என்றான்... இதோ இப்போதும் ஒரு சிறு குழந்தையைப் பார்த்து இகழ்ச்சியாகப் பேசுகிறான்... இவனை இப்படியே விட்டால் சரி வராது என்று எண்ணியவளாய் தனது பயத்தைக் கைவிட்டு விட்டு,

"அப்படி அழுக்கான தொழிலாளர்கள் உழைத்து கொடுக்கும் பணத்தை எல்லாம் தண்ணி கொண்டு கழுவி விட்டா பயன்படுத்துறீங்க...? இல்லை அந்தப் பணத்தை அருவருப்பில் தொட மறுத்துக் குப்பையில் போட்டு விடுவீங்களா...?"

அவளது கேள்விக்கணைகளில் அவன் தான் அசந்து நிற்க வேண்டியதாய் போயிற்று... அவன் அசந்து நின்ற அந்தக் கணத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அவள் கதவை திறந்து கொண்டு வெளியில் சென்றுவிட்டாள்... அவள் சென்றதை கண்டு அவனும் வெளியில் வந்தான்... அவனது மனதிற்குள் மீண்டும் அவள் மீது கோபம் வந்தமர்ந்து கொண்டது...

கூட்டம் நடக்கும் இடத்திற்கு மூவரும் சென்றனர்... பிரகதீஸ்வரியை கண்டதும் எல்லோரும்,

"வணக்கம் சின்னம்மா..." என்று முதலில் அவளுக்கு மரியாதை தந்த பிறகே சரவணனை கண்டு,

"வணக்கம் சின்னய்யா..." என்றனர்... அதை எல்லாம் குறித்துக் கொண்டே வந்தான் சித்தார்த்...

மைக் முன் சென்று பேசிய பிரகதீஸ்வரி முதலில் பெருந்திரளாய் கூடியிருந்தவர்களைக் கண்டு, "அண்ணா, அக்கா எல்லோரும் நல்லாயிருக்கீங்களா...?" என்று தொழிலாளர்களின் நலத்தை வீட்டாள் போன்று கேட்டு வைக்க...

சித்தார்த் தலையைப் பிடித்தான் எரிச்சலுடன்... எப்போதும் 'ஃபார்மலாக'ப் பேசியே கேட்டு பழக்கப்பட்டவனுக்கு அவளின் இத்தகையை எதார்த்தமான பேச்சு ரசிக்கவில்லை...

"சின்னப் பெண் என்பது சரியாகத் தான் இருக்கிறது..." என்று முணுமுணுத்தான் அவன்...

"நம்ம கம்பெனி பொறுப்பை இனி இவங்க தான் பார்த்துக்கப் போறாங்க... நீங்க எல்லாம் இவங்களுக்கு ஒத்துழைப்பை கொடுக்கணும்... இவங்க பெயர்..." என்றுவிட்டு அவள் சித்தார்த்தை திரும்பி பார்த்தாள்... ஏனெனில் எல்லோரும் அவனைச் சித்து என்று தான் அழைத்தனர்... அவனின் முழுப்பெயர் அவளுக்குத் தெரியவில்லை...

ஏற்கெனவே அவள் பேசியதில் கடுப்பாக இருந்தவன் தன்னை அடையாளப்படுத்தத் தெரியாமல் அவள் விழிப்பதை கண்டு அவனுக்குக் கடுங்கோபம் வந்தது... பார் போற்றும் ஒரு தொழிலதிபனை பற்றி அவளுக்குத் தெரியவில்லையே என்கிற ஆத்திரம் கட்டுக்கடுங்காமல் அவனுள் எழுந்தது...

'என்னைக் கேவலப்படுத்த வேண்டும் என்றே கங்கணம் கட்டியிருப்பாள் போலும்...' கோபத்துடன் எழுந்தவன்,

"என்னுடைய பெயர் சித்தார்த் மார்த்தாண்டம்... உங்க ஜமீன்தாரிணி விமலாராணியின் அண்ணன் மகன்... அவங்களுக்குப் பதிலாக நான் இங்குள்ளதை நிர்வாகம் பண்ண வந்திருக்கிறேன்..."

தன்னைத் தானே இப்படி அறிமுகப்படுத்திக் கொள்ளும் அவலநிலை அவனுக்கு வரும் என்று அவன் கனவிலும் நினைத்தது கிடையாது... இதுநாள் வரை அடுத்தவர்கள் அவனை அறிமுகம் செய்யச் சற்றும் குறையாத செருக்குடன் கம்பீரமாகத் தலையசைத்து தான் அவனுக்குப் பழக்கம்...

அவனது பழக்கத்தை இன்று அடியோடு மாற்றிவிட்டாள் இந்தப் பட்டிக்காட்டுப் பெண்...

அவன் பேசியதை கேட்டுத் தொழிலாளர்கள் இடையே லேசாகச் சலசலப்பு ஏற்பட்டது... அவர்களின் தலைவன் போலிருந்தவன் பிரகதீஸ்வரியிடம்,

"சின்னம்மா... உங்களுக்காகத் தான் நாங்க இங்கே வேலை பார்ப்பது... ஆனால் இவர் சொல்வதைப் பார்த்தால்...?" முழுவிபரம் கேட்க இயலாது தலையைச் சொறிந்தவன்,

"இவருக்குக் கீழே வேலை பார்ப்பதை பற்றி நாங்க யோசிக்க வேண்டியிருக்கிறது..." என்று தங்களது பிடித்தமின்மையைச் சுட்டிக்காட்டினான் அவன்...

அதைக் கேட்டு பல்லை கடித்தான் சித்தார்த்... எத்தகைய அவமானம் இது... இது தான் கூப்பிட்டு வைத்து மூக்கறுப்பது என்பதா... அவனது இரத்தம் கொதித்தது...

"சரவணா, நீ எதையாவது பேசுடா... உனக்காகத் தான் நான் பேசி கொண்டிருக்கிறேன்..." அத்தை மகனின் காதை கடித்தான் அவன்...

இவனது டென்சன் அவனுக்கு இல்லை போலும்... "கூல் அத்தான்... பிரகதி எல்லாம் பார்த்துக்குவாள்..." என்றான் பெருமையாக...

"அவள் வயது என்ன...?" என்று திடுமெனக் கேட்டான் சித்தார்த்...

சரவணன் திகைப்பாய் அவனைப் பார்த்தவன், "பதினேழு..."

"உன் வயது...?"

"இருபத்திமூன்று..."

"உன்னை விடச் சிறியவள் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வாள் என்று சொல்ல உனக்கு வெட்கமாக இல்லை... அதுவும் பெண்ணிடம் நிர்வாகப் பொறுப்பைக் கொடுத்துவிட்டு நீ இப்படிச் சோம்பேறியாக இருப்பதற்குப் பேசாமல் புடவையைக் கட்டி கொண்டு வீட்டில் இரு..." அடக்கப்பட்ட கோபத்தில் சித்தார்த் வார்த்தைகளைக் கடித்துத் துப்பினான்...

அதைக் கேட்டு சரவணனின் முகம் அவமானத்தில் சிறுத்து போயிற்று... தலையைக் குனிந்து கொண்டான்...

"யார் நிர்வாகம் பண்ணினால் என்ன முத்து அண்ணா...? உங்களுக்கு வேண்டிய நன்மைகள் எல்லாம் ஒன்று விடாமல் உங்களுக்கு வந்து சேரும்... இப்போதும் ஏதேனும் தயக்கம் இருக்கிறதா...?"

"எங்களுக்கு நன்மைகள் வந்து சேரும் என்கிற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது... இல்லை என்றால் நீங்க சும்மாயிருக்க மாட்டீங்கன்னும் எங்களுக்குத் தெரியும்... ஆனால்..." முத்து பேசும் முன் இடைமறித்தவள்,

"அப்புறம் என்ன முத்து அண்ணா... நீங்க எல்லோரும் இவருக்கு ஒத்துழைப்புக் கொடுங்கள்... எனக்கு அது போதும்..." என்று அவள் முடித்துக் கொண்டாள்...

அவளது குடும்ப விசயத்தை இப்படி அம்பலத்தில் வைத்து விவாவதிக்க அவளுக்கு விருப்பமில்லை...

அடுத்த நொடி ஒட்டு மொத்த கூட்டமும் அவளது பேச்சை அப்படியே ஏற்றுக் கொண்டதை கண்டு சித்தார்த்திற்கு

வியப்பாக இருந்த அதே சமயம் சற்று கோபமும் வந்தது... தனக்கே இப்படி என்றால் பெரியவளான அத்தை விமலாராணிக்கு எப்படியிருக்கும்...? என்று அத்தையின் மீது அவனது மனம் இரக்கம் கொண்டது...

தொழிலாளர்கள் கலைந்து சென்றதும் பிரகதீஸ்வரி தானும் கிளம்ப முயன்ற போது சித்தார்த் சரவணனிடம் கூறுவது போல்,

"இங்கு மட்டும் பேசினால் போதுமா...? மற்ற நிறுவனங்களில் பேச வேண்டாமா...?" என்று அவளிடம் கேட்டான்...

அதைக் கேட்டு அவள் களுக்கென்று சிரித்தாள்... 'என்ன சிரிப்பு வேண்டியிருக்கு..?' என்பது போல் சித்தார்த் அவளை முறைத்துப் பார்த்தான்...

"அண்ணா... அவரிடம் சொல்லுங்க... அவங்களும் வீடியோ கான்ஃப்ரன்ஸ் மூலம் என் பேச்சை கேட்டிருப்பாங்க... அதனால் அவரைக் கவலைப்படாமல் இருக்கச் சொல்லுங்க..."

அதைக் கூறும் போதே அவளுக்கு மீண்டும் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது...

கணினி நிறுவனமும், அலைப்பேசி நிறுவனமும் வைத்திருக்கும் அவனிடத்தில் இந்தச் சுண்டைக்காய் பெண் தொழில்நுட்பத்தைப் பற்றிப் பேசுகிறாளா...? என்று கோபத்தில் சித்தார்த் பல்லை கடித்தான்...

"நம்ம பண்ணையில் வேலை பார்ப்பவர்கள் முதற்கொண்டு எல்லோருக்கும் இந்நேரம் இந்த விசயம் தெரிந்திருக்கும்..." என்றவள், "வாட்ஸ் அப் மூலமா..." என்று சொல்லும் போதே அவளின் உதடுகளில் நமட்டுச் சிரிப்புத் தவழ்ந்தது...

தங்கை கூறியதை கேட்டு சரவணனுக்கும் சிரிப்பு வந்தது... ஏனெனில் தன்னை அவமானப்படுத்திய சித்தார்த்தை தங்கை அவமானப்படுத்திவிட்டாளே... அந்தச் சந்தோசம் அவனுக்கு...

"சரவணா... நீ ஆபிஸ் ரூமுக்கு போ..." என்றான் சித்தார்த் கட்டளையிடும் குரலில்...

சரவணனால் எதிர்த்து பேச முடியாத சூழ்நிலை... அதனால் பூம்பூம் மாடு போல் தலையாட்டியபடி அங்கிருந்து அகன்றான்...

அண்ணன் சென்றதும் தங்கையவளும் கிளம்ப ஆயத்தமானாள்... ஏனோ சித்தார்த்துடன் தனித்து நிற்க அவளுக்கு அத்தனை பயமாக இருந்தது...

"ஒரு நிமிசம்..." சொடக்கு போட்டு அவளைத் தடுத்து நிறுத்தினான் சித்தார்த்...

'என்ன' என்பது போல் அவனை ஏறிட்டவளை கண்டு சினம் கொப்பளிக்க அவன், "இன்னைக்கு உன் பேச்சை கேட்டு தலையாட்டும் இந்த ஆட்டு மந்தை கூட்டத்தைக் கூடிய சீக்கிரம் நான் பேசுவதைக் கேட்டு தலையாட்ட வைக்கலை என் பெயர் சித்தார்த் இல்லை..."

தன் ஊர் மக்களைப் பார்த்து சித்தார்த் ஆட்டு மந்தை என்று கூறியது அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை...

"அவர்கள் ஆட்டு மந்தை இல்லை... அன்புக்குக் கட்டுப்பட்டவர்கள்... நீங்கள் காரணம் இல்லாமல் என் கன்னத்தில் அடித்தும் நான் உங்களிடம் மரியாதையாகப் பேசி கொண்டிருப்பதற்குக் காரணமும் அதே அன்பு தான்..." பதிலுக்கு அவளது வார்த்தைகள் அவனது கன்னத்தில் அறைவது போல் வேகமாய் வந்தது...

"இந்த அன்பு எங்களது இரத்தத்தில் ஊறியது... அப்படிப்பட்ட அன்பானவர்களை முடிந்தால் உங்கள் பக்கம் திருப்பிப் பாருங்கள்..." என்று அவளும் அவனிடத்தில் சவால் விட்டாள்...

சாகும் வரை ஊர் தலைவராக இருந்து நேர்மையோடு வாழ்ந்து மறைந்தவரின் இரத்தம் அவளது உடலிலும் ஓடுகிறது அல்லவா... அந்த நிமிர்வு அவளை அவனிடத்தில் தைரியமாகப் பதில் பேச வைத்தது...

"எதற்கும் ஒரு விலை உண்டு பெண்ணே... விரைவில் அவர்களை என் வசம் திருப்புகிறேன்..." என்றான் அவனும் கர்வமாக...

அவன் கூறியதை கேட்டவளின் இதழில் எள்ளலாய் ஒரு புன்னகை தோன்றியது...

"என் மக்கள் எதற்கும் விலை போக மாட்டார்கள் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு..." அலட்சிய பாவத்துடன் கூறியவள் அவனைத் திரும்பியும் பாராது காரிலேறி சென்றுவிட்டாள்...

அவள் செல்வதைப் பார்த்து கொண்டிருந்தவனின் மனம் உலைக்களமாய்க் கொதித்தது...

சித்தார்த் நிர்வாகத்தினைப் பொறுப்பெடுத்துக் கொண்ட அடுத்தச் சில மணி நேரத்தில் நரசிம்மனின் வழக்கறிஞர் மற்றும் தணிக்கையாளர் இருவரும் அவனை நேரில் சந்திக்க வந்துவிட்டனர்... இருவரும் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு பேச ஆரம்பித்தனர்...

"ஐயம் அட்வகேட் குருமூர்த்தி, இவர் ஆடிட்டர் பஞ்சாபிகேசன்... எங்க இரண்டு பேர் கிட்டேயும் தான் நரசிம்மன் ஐயா இந்த நிர்வாகத்தை மேற்பார்வை பார்க்கும் முழுப்பொறுப்பையும் கொடுத்துட்டுப் போயிருக்கிறார்... நீங்க யார்...? இப்போது இந்த நிர்வாகத்தினைக் கையில் எடுக்கும் அதிகாரத்தை உங்களுக்கு யார் கொடுத்தது...?"

அடுத்தடுத்துக் குருமூர்த்திக் கேள்விகள் கேட்டு தான் ஒரு சிறந்த வழக்கறிஞர் என்பதை நிரூபித்தார்... சித்தார்த் அவருக்குப் பதில் சொல்லாமல் சரவணனை பார்த்தான்...

"அங்கிள்... எங்க சித்து அத்தானை தெரியாதா...? 'இன்ஃபினிட்டி' கம்பெனியோட எம்டி..."

சரவணன் கூறியதும் இருவரிடத்திலும் சிறிது மரியாதை வந்தது...

"உங்களைச் சந்தித்ததில் ரொம்பச் சந்தோசம் சார்..." இருவரும் அவனிடம் கைக்குலுக்கி நட்பு பாராட்டினர்... அதைக் கண்டு அவனிடத்தில் சிறு கர்வம் எட்டிப்பார்த்தது...

சிறிது நேரம் பொதுப்படையாகப் பேசி கொண்டிருந்தவர்கள் மீண்டும் தங்களது கருத்தில் வந்து நின்றனர்...

"இங்கே பாருங்க சார்... நான் என் அத்தைக்காகத் தான் இங்கு வந்தது... மத்தபடி எனக்கும் இந்த நிர்வாகத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை... சரவணன் நிர்வாகத்தைப் பழகியதும் நான் இங்கிருந்து சென்றுவிடுவேன்..."

சித்தார்த் கூறியதை கேட்டு இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்... மீண்டும் குருமூர்த்திப் பேசினார்...

"இது பத்தி பிரகதிம்மா என்ன சொல்றாங்க..."

"இதில் அவள் சொல்ல என்னயிருக்கு...?" புரியாமல் சித்தார்த் கேட்டான்...

"பிரகதி தான் இங்கே வந்து சித்து அத்தானுக்காகப் பேசியது அங்கிள்..." சரவணன் இடைமறித்தான்...

ஆனாலும் சரவணன் கூறியதை நம்பாது குருமூர்த்தி நேரே பிரகதீஸ்வரிக்கு அழைத்துப் பேசினார்... சரவணன் கூறியதை அவளும் ஒத்து கொண்டாள்...

"பிரகதிம்மா... இது சாதாரண விசயமல்ல... அத்தனை சொத்துக்களோட நிர்வாகப் பொறுப்பு..."

மறுமுனையில் அவள் என்ன கூறினாளோ உடனே அதை ஆமோதித்து ஏற்றுக் கொண்டார் குருமூர்த்தி...

"பிரகதிம்மா சரின்னு சொன்னதால நானும் சரின்னு சொல்றேன்..." என்று குருமூர்த்திச் சித்தார்த்தின் தலைமையை ஏற்றுக் கொண்டார்...

ஆனால் பஞ்சாபிகேசன் உடனே சம்மதிக்கவில்லை... சிறிது நேரம் யோசித்தவர், "சித்துச் சார்... நீங்க நிர்வாகம்

பண்ணுவது ஓகே தான்... ஆனால் வரவு செலவு எல்லாம் உடனுக்குடன் எங்களின் கண்பார்வைக்கு வந்துவிட வேண்டும்... அதிலிருந்து ஒரு பைசா குறைந்தால் கூட எங்களது நடவடிக்கை வேறு மாதிரியாக இருக்கும்..." என்று எச்சரித்தார் அவர்...

அதைக் கேட்டு சித்தார்த்தின் முகம் சிறுத்துப் போனது... அவனுக்கு மீண்டும் ஒரு அவமானம்... அத்தைக்காகவும், தந்தைக்காகவும் பொறுமை காத்தான் அவன்... அவனது மௌனத்தைச் சம்மதமாக எண்ணி கொண்டவர்கள்,

"லீகல் பார்மாலிட்டீஸ் எல்லாம் ரெடி பண்ணியதும் சொல்கிறோம்... வந்து சைன் பண்ணிட்டு போங்க..." என்றுரைத்து விட்டு அவர்கள் கிளம்பிச் சென்றனர்...

அவர்கள் சென்றதும் சித்தார்த் வெளியில் வந்தவன் முதல் வேலையாக அத்தை விமலாராணிக்கு அழைத்தான்...

வழக்கறிஞர், தணிக்கையாளர் கூறியதை அப்படியே அவரிடத்தில் கூறியவன், "இது உங்களோட சொத்து என்றால் அவர்கள் ஏன் இப்படிப் பேசுகிறார்கள்...? எனக்கு ஒண்ணும் புரியலை அத்தை... சொத்து எல்லாம் உங்களோடது... ஆனால் மதிப்பு, மரியாதை கிடைப்பது எல்லாம் அவளுக்கு... உண்மையில் இங்கு என்ன தான் நடக்கிறது...?"

பலதரப்பட்ட மனிதர்களைத் தினமும் சந்திப்பவன் அவன்... அதனால் இங்கு நடப்பது அவனுக்குச் சற்று வித்தியாசமாக, விசித்திரமாகத் தோன்றியது...

"நீ உடனே வீட்டுக்கு வா சித்து..." விமலாராணி அவனை உடனே அழைக்க...

அவரது பேச்சு கேட்டு அவனும், சரவணனும் உடனே வீட்டிற்குக் கிளம்பிச் சென்றனர்... வீட்டிற்குச் சென்று கார் நின்றதும் சரவணன் வேகமாக இறங்கி உள்ளே சென்றுவிட்டான்... சித்தார்த் நிதானமாக இறங்கியவன் வீட்டிற்குச் செல்ல முற்பட்ட போது ஏணியில் ஏறி

மல்லிகைப் பந்தலை சீரமைத்துக் கொண்டிருந்த பிரகதீஸ்வரியை கண்டான்...

அணிந்திருந்த தாவணி முந்தானையை இழுத்து சொருகி கொண்டு அவள் மும்முரமாக வேலையில் ஈடுபட்டு இருந்தாள்... கீழே நின்ற சித்தார்த்தை அவள் சிறிதும் கண்டு கொள்ளவில்லை... ஏனெனில் அவள் அவனைக் கவனிக்கவில்லை...

ஆனால் சித்தார்த்தின் கண்கள் அவளை அணு அணுவாய் கவனித்துப் பார்க்க தவறவில்லை... அதிலும் கருநீல நிற தாவணியின் ஊடே தெரிந்த அவளது வெண்ணிற இடை பளீரென்று பளிச்சிட்டு அவனது விழிகளை உறுத்தியது... ஒரு நொடி அவளது இடையில் தேங்கி மீண்டது அவனது பார்வை...

ஏதேச்சையாகத் திரும்பிய பிரகதீஸ்வரி சித்தார்த்தை கண்டதும் வரவேற்பாய் புன்னகைத்தாள்... அவளது புன்னகை முகம் நிதர்சனத்தை அவனிடத்தில் உரைக்க அவன் கோபமாய்த் தனது முகத்தைத் திருப்பிக் கொண்டான்... அதைக் கண்டு உதட்டை பிதுக்கியவள் தோளை குலுக்கியபடி தனது வேலையைத் தொடர்ந்தாள்...

சிறு பெண்ணிடம் தான் அடுத்தடுத்து தோற்று நிற்பது கண்டு அவனுக்கு அத்தனை அவமானமாக இருந்தது...

"இந்த ஊரே இவளது பேச்சுக் கேட்கிறது என்கிற திமிர்..." என்று கோபமாய் முணுமுணுத்துக் கொண்டு வீட்டினுள் சென்றான்...

அவன் வந்ததும் அத்தனை சொத்து பத்திரங்களையும் அவன் முன் தூக்கி போட்ட விமலாராணி, "எல்லாச் சொத்துக்களும் என் பெயரில் தான் இருக்கிறது சித்து... அதில் உனக்கு எந்தச் சந்தேகமும் வேண்டாம்... ஆனால் இந்த ஊரார் என்னைச் சிறிதும் மதிப்பது இல்லை... பிரகதி சொன்னால் மட்டுமே எல்லாக் காரியங்களும் நடக்கிறது... அது போல் தான் எந்தவொரு வருமானமும் என் கைகளுக்கு நேரே வருவதில்லை... எல்லாம் லாயர்,

ஆடிட்டர் கைகளுக்குப் போய்த் தான் எனக்கு வருகிறது... அதுவும் என் தேவைக்கு மட்டுமே... மாடிவீட்டு ஏழைன்னு கேள்விப்பட்டு இருக்கியா சித்து...? அது நான் தான்..." பட்டுப்புடவை தலைப்பால் போலி கண்ணீரை ஒற்றிக் கொண்டார்...

சித்தார்த் குழப்பத்துடன் நெற்றியை நீவி விட்டுக் கொண்டான்...

"இப்போது பிரகதி கைகளில் இருக்கும் நிர்வாகத்தை நீ எடுப்பது மட்டுமல்லாது, தொழிலாளர்களையும் உன் பக்கம் திருப்ப வேண்டும் சித்து... அப்படிச் செய்தால் மட்டுமே நம் சொத்துக்களை நாம் காப்பாற்ற முடியும்... இந்தச் சொத்துக்களை எல்லாம் உரிமை கொண்டாட அவள் யார்...?"

"அதைத் தான் நானும் கேட்கிறேன் அத்தை... அவள் யார்...?"

"இத்தனை சொத்துக்களை அனுபவிக்கக் கொஞ்சமும் அருகதையில்லாதவள்..." வெறுப்புடன் வந்தது அவரது வார்த்தைகள்...

நல்லவேளையாகச் சரவணன் அங்கு இல்லை... இதை மட்டும் அவன் கேட்டிருந்தால் அன்னையிடத்தில் பெரிய சண்டை போட்டிருப்பான்...

"சரி அத்தை... நீங்க சொன்னது போல் செய்கிறேன்... உங்க கௌரவத்தை, மரியாதையை நான் மீட்டெடுக்கிறேன்..." என்றான் சித்தார்த் உறுதியான குரலில்...

அதை அவன் தனது தந்தை மார்த்தாண்டத்திடம் கூறிய போது அவரும் தனது சகோதரியின் வார்த்தைகளை அப்படியே ஆமோதித்தார்...

"விமலா சொல்வதை அப்படியே நீ செய் சித்து... அவளின் சந்தோசம் தான் நமக்கு முக்கியம்..." என்றார் தங்கைக்காக...

"சரிப்பா..." என்று அவனும் தந்தை சொல்லை ஏற்றுக் கொண்டான்... அதிலெல்லாம் அவன் நல்ல பிள்ளை தான்...

அலைப்பேசியை அணைத்தவனின் நினைவில் தொழிற்சாலையில் வைத்துத் தன்னை அலட்சியப்படுத்திக் கொண்டு சென்ற பிரகதீஸ்வரியின் தோற்றம் எழுந்து அவனை ஆத்திரமடையச் செய்தது... அது மட்டுமா தொழிலாளர்கள் மற்றும் வழக்கறிஞர், தணிக்கையாளரிடம் அவன் அடைந்த அவமானம் எல்லாம் சேர்த்து அவனின் மனநிலையைப் புயலாய் சீற்றம் கொள்ளச் செய்தது...

அத்தைக்காகத் தான் அவன் இங்கு வந்தது... ஆனால் இப்போது அவன் அடைந்த அவமானம் அவனின் மனதினை வேறு திசையில் பயணிக்க வைத்தது... தோல்வியே அறியாதவன் தோல்வியை ருசிக்கும் போது அது ரசிக்காது அல்லவா... அத்தகைய ஒரு மனநிலையில் அவன் இருந்தான்...

அதிலும் பெண்ணான பிரகதீஸ்வரியின் அலட்சியம் அவனின் இரத்தத்தைக் கொதிக்கச் செய்தது... எந்தவொரு பெண்ணும் இது போல் அவனை அலட்சியப்படுத்தியது கிடையாது... முதன்முறையாக ஒரு சிறு பெண்ணிடத்தில் தான் தோற்று போவது போல் ஒரு தோற்றம் அவனுள்...

'த க்ரேட் சித்தாத்' போயும் போயும் ஒரு பெண்ணிடம் அதுவும் சிறு பெண்ணிடம் தோற்பதா...? என்கிற இயலாமை கோபமாய் உருமாறி அவனுள் எரிமலையாய்க் கனன்றது...

"நோ... நெவர்..." என்று கோபத்தோடு தரையை ஓங்கி உதைத்தான் கையாளாகாதவனாய்...

"நான் தோற்க மாட்டேன்டி... அதே சமயம் உன்னையும் ஜெயிக்க விட மாட்டேன்... உன்னை வென்று காட்டுகிறேன்... இந்த மக்களை மட்டுமல்ல... இந்த நிர்வாகத்தினையும் சேர்த்து என் கைகளில் எடுத்து காட்டுகிறேன்..." அவனது மனதில் வன்மம் எழுந்தது...

தனது தோல்வியை ஏற்றுக் கொள்ள மறுத்தவனாய் அத்தகைய தோல்வியைத் தனது எதிராளிக்கு பரிசளிக்க அவன் விரும்பினான்... அதற்காக எதையும் செய்ய விழைந்தான் ஒரு தொழிலதிபனாய்...

ஊரார் முன் அவளுக்கு இருக்கும் இந்த மதிப்பு, மரியாதை, செல்வாக்கை இழக்கச் செய்து அவளை அவமானப்படுத்த வேண்டும் என்கிற எண்ணம் விடாமல் உழன்று அவனுள் கொலைவெறியை கிளப்பியது...

ஊருஞ் சதமல்ல, உற்றார் சதமல்ல, உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல, பெண்டீர் சதமல்ல, பிள்ளைகளும்
சீருஞ் சதமல்ல, செல்வஞ் சதமல்ல, தேசத்திலே
யாருஞ் சதமல்ல, நின்தாள் சதங்கச்சி யேகம்பனே - திருவேகம்பமாலை...

இவ்வுலகில் எதுவும் நிலையில்லை என்று கூறிய பட்டினத்தாரின் கூற்றை அவனுக்கு எடுத்து கூறுவது யாரோ...!!!

"மாயை பிடித்தாட்டும் என் மாயவனே...
மாயை நீங்கி உண்மை உறைக்கும் போது
அதன் வேதனையை நீ அறிவாயோ...
புறக்கணிப்பின் வலியை நீ உணர்வாயோ...
கொண்ட வெற்றியை கொண்டாட முடியாது போகும்,
விரும்பியே மனம் தோல்வியை ஏற்க துடிக்கும்,
நீயே கதியென்று சரணாகதி அடைய சொல்லும்...
மாயை மறைந்து, மயக்கம் தெளிந்து நீ எழும் போது
உன்னை நீ இழந்திருப்பாய் ஆதி முதல் அந்தம் வரை...!!!"

நனவாகும்...!!!

"பிரகதி..."

தனது அறையில் இருந்து படித்துக் கொண்டிருந்த பிரகதீஸ்வரியின் காதுகளில் விமலாராணியின் வெண்கல

குரல் அந்த இரவின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு கணீரென்று ஒலித்தது... அறைக்கதவை திறந்து கொண்டு வெளியில் வந்தவள்,

"என்னம்மா...?"

"நீ இன்னும் தூங்கலையா...?"

"இல்லைம்மா... படிச்சிட்டு இருக்கேன்..."

"ரொம்ப நல்லதும்மா... அப்படின்னா ஒண்ணு செய்... இன்னும் சித்துவும், சரவணனும் வீட்டுக்கு வரலை... வந்தால் சாப்பாடு போட்டிரு... எனக்கு மாத்திரை போட்டதில் ஒரே தூக்கமா வருது பிரகதி..."

"இதுக்குத் தான்ம்மா சித்த வைத்தியம் எடுத்துக்கோங்கன்னு சொன்னேன்... நீங்க கேட்கலை..."

"ஐயோ... என்னால் பச்சிலை, கசாயம் எல்லாம் சாப்பிட முடியாது, குடிக்க முடியாது..." முகத்தைச் சுளித்தார் அவர்...

அறியாமையில் பேசும் பெரியவளை பார்க்க அவளுக்கு மிகவும் பாவமாக இருந்தது...

"சரிம்மா நான் பார்த்துக்கிறேன்... நீங்க போய்ப் படுங்க..."

தனது பொறுப்பைப் பள்ளியில் படிக்கும் சிறு பெண்ணிடம் தள்ளி விட்டு விட்டு அவர் உறங்க சென்றுவிட்டார்... இது அன்றாடம் நடக்கும் நிகழ்வு தான்... அதனால் பிரகதி அதைப் பெரிதுபடுத்தவும் இல்லை... அதற்காக வருந்தவும் இல்லை...

தனது பாடப்புத்தங்களை எடுத்துக் கொண்டு வரவேற்பறையில் வந்தமர்ந்தவள் படிக்கத் துவங்கினாள்...

இரவு பன்னிரெண்டு மணிக்கு சித்தார்த், சரவணன் இருவரும் வீட்டிற்கு வந்தனர்... அவர்களைக் கண்டதும் சோபாவில் இருந்து எழுந்த பிரகதீஸ்வரி,

"அண்ணா... சாப்பிட வாங்க..." என்றவள் சித்தார்த் பக்கம் திரும்பி தயக்கத்துடன்,

"நீங்களும் தான்..."

அவள் கூறியதை கண்டு கொள்ளாதவன் போல் சோபாவில் அமர்ந்த சித்தார்த் கண்களை மூடி அதில் சாய்ந்து கொண்டான்... அவனது முகத்தைப் பார்த்தாலே தெரிந்தது மிகவும் களைப்புடன் இருப்பது போல்...

"நீ எதுக்கு எங்களுக்காகக் காத்திட்டிருக்கப் பிரகதி... போய்ப் படிக்கும் வழியைப் பார்..." அவளைச் சத்தம் போட்ட சரவணன்,

"சந்தியா எங்கே போனாள்...? வீட்டில் சும்மா தானே இருக்கிறாள்..." என்று பெரிய தங்கையைப் பற்றிக் கேட்க...

"அக்கா தூங்க போயிட்டாங்க..."

"அது ஒண்ணை மட்டும் தான் அவள் நல்லா செய்கிறாள்..." என்று முணுமுணுத்த சரவணன்,

"வா பிரகதி... ரொம்பப் பசிக்குது..." என்க...

"அண்ணா... அவர் வரலையா...?" சித்தார்த்தை சுட்டிக்காட்டி அவள் கேட்க...

சித்தார்த்தை திரும்பி பார்த்த சரவணன், "அத்தான்... சாப்பிட வர்றீங்களா...?"

"எனக்கு வேண்டாம் சரவணா..." சித்தார்த் பேசும் விதமே வித்தியாசமாக இருந்தது...

"அவருக்கு வேண்டாமாம்... நீ என்னைக் கவனி பிரகதி..." சரவணன் அவளைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்றான்...

பிரகதீஸ்வரி சித்தார்த்தின் தோற்றத்தில் இருந்த வித்தியாசத்தைக் கண்டு யோசனையுடன் சென்றாள்...

அவனோ யாரையும் கவனிக்கும் நிலையில் இல்லை... தனக்குள் மூழ்கியவனாய் கண்மூடி அமர்ந்திருந்தான்...

பிரகதீஸ்வரி உணவு எடுத்து வைக்க வேக வேகமாய் உண்டான் சரவணன்...

"இவ்வளவு பசியை வச்சிக்கிட்டு இப்படிப் பட்டினியா கிடக்கணுமா...? சீக்கிரம் சாப்பிட வர வேண்டியது தானே அண்ணா..."

தோசையைப் பிட்டு வாயில் வைத்தபடி சரவணன், "நானா வர மாட்டேன்னு சொன்னேன்... அத்தான் தான் இதோ இதோன்னு நேரத்தை கடத்திவிட்டார்... சாயந்திரம் குடித்த டீ மட்டும் தான்..." பாவம் போல் அவன் சொன்னான்...

அவளின் நினைவில் அவளையும் அறியாமல் களைப்புடன் இருந்த சித்தார்த்தின் முகம் வந்தது... அவனுக்காக இரக்கம் கொண்டாள் அவள்...

சரவணன் சாப்பிட்டு விட்டு அவனது அறைக்குச் சென்றுவிட்டான்... எல்லாவற்றையும் ஒழுங்குப்படுத்த நினைத்தவளுக்கு மீண்டும் ஒரு முறை சித்தார்த்திடம் கேட்டு பார்த்தால் என்ன என்று எண்ணம் தோன்ற அவனிடம் விரைந்தாள்...

அங்கே சித்தார்த் மூச்சு விட மிகவும் சிரமப்பட்டுக் கொண்டு இருந்தான்... வேக வேகமாய் மூச்சு வாங்கியபடி, விடாது தும்மியபடி நெஞ்சில் கையை வைத்துக் கொண்டு அவனிருந்த தோற்றம் அவளைப் பதற்றம் அடையச் செய்தது... அவனை நோக்கி விரைந்து வந்தவள்,

"என்ன செய்யுது...?"

மூச்சிரைப்பும், தும்மலுமாய் அவளை நிமிர்ந்து பார்த்தவன் பதில் ஒன்றும் பேசவில்லை... அவனால் பேசவும் முடியவில்லை... அவனின் நிலையை உணர்ந்தவள் வேகமாய் உள்ளே சென்று அடுத்தப் பத்து நிமிடத்தில் கையில் தம்பளரில் எதையோ கொண்டு வந்தாள்...

"இதைக் குடிங்க சரியா போயிரும்..." என்று அந்தத் தம்பளரை அவனின் முன் நீட்டினாள்...

அவன் அதை வாங்காது அவளது முகத்தை இமைக்காது பார்த்தான்... அவன் கண்ட போது எல்லாம் சாந்தம் நிலவிய அந்தப் பூ முகத்தில் இப்போது தென்பட்ட பதற்றம், வாடாத புன்னகையுடன் இருக்கும் இதழ்களில் காணப்பட்ட தவிப்பு எல்லாவற்றையும் அவன் கவனித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்...

சித்தார்த் நல்ல நிறம்... விடாது தும்மியதில் அவனது மூக்கு நுனி கோவைப்பழம் போல் நன்றாகச் சிவந்திருந்தது... காலையில் கம்பீரமாகப் பார்த்தவனின் இந்த ஓய்ந்த தோற்றம் அவளுள் இரக்கத்தைச் சுரக்கச் செய்தது...

"முதல்ல இதைக் குடிங்க..." மீண்டும் வற்புறுத்தி சொன்னவளின் பேச்சை தட்டாது கேட்டான் அவன்...

அவள் கையிலிருந்த தம்பளரை வாங்கியவன் மீண்டும் அவளைப் பார்த்தான்... அவன் தன் சொல் பேச்சு கேட்டு அதை வாங்கியதும் அவளது முகத்தில் அப்படியொரு சந்தோசம் வந்தது... அந்தச் சந்தோசத்தையும் மீறி அவளது விழிகளில் சிறு கவலை எட்டிப்பார்த்தது...

அவள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே தம்பளரில் இருந்ததை அருகில் இருந்த பூச்சாடியில் அலட்சியமாய் அவன் ஊற்றினான்... அவனது அலட்சியமான செயல் கண்டு அவள் திகைத்து விழித்தாள்...

"என்ன... என்னை மயக்க பார்க்கிறியா...?" சரளமாகப் பேச முடியாது ஒவ்வொரு வார்த்தையையும் விட்டு விட்டு பேசியவனைக் கண்டு அவள் அதிர்ந்து போனாள்...

அதிர்ந்து திகைத்த அவளது விழிகள் அவனுள் பெருத்த திருப்தியை ஏற்படுத்தியது...

"நீ செய்யும் மாயம், மந்திரத்துக்கு எல்லாம் மயங்கி கிடக்கும் இந்த ஊர் மக்கள் போல் என்னை நினைச்சியா...? அப்படிப்பட்ட ஆள் நான் கிடையாது... நான் எதற்கும் மயங்க

மாட்டேன்... நான் சொன்னது போல் செய்து காட்டுவேன்... உன்னை இந்த ஊர் மக்களிடம் இருந்து பிரித்துக் காட்டுகிறேன்..." அவனது குரலில் இருந்த குரோதம் அவளது நெஞ்சை உறையச் செய்தது...

எதற்கு இத்தனை வன்மம் அவனது மனதில்... அவள் அப்படியென்ன தவறு செய்துவிட்டாள்... துன்பப்படுகிறவனுக்கு உதவியது அவளது தவறா...?

"நீ யார் எனக்கு உதவுவதற்கு... நான் உன்னிடம் உதவி கேட்டேன்னா...? பேசாம உன் வேலையைப் பார்த்துட்டு போடி..." என்றான் எரிச்சலுடன்... நோயின் தாக்கம் வேறு அவனை மேலும் எரிச்சலூட்டியது...

அவனது பேச்சில் கண்கள் கலங்கிய பிரகதீஸ்வரி அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை... ஒரே ஓட்டமாகத் தனது அறைக்கு ஓடி வந்துவிட்டாள்...

அவள் சென்றதும் மீண்டும் சோபாவில் சாய்ந்தமர்ந்த சித்தார்த் கண்களில் பூச்சாடியில் இருந்த சிவப்பு வண்ண ரோஜாக்கள் மீதிருந்து வழிந்து கொண்டிருந்த பச்சை நிற கசாயம் தென்பட்டது... அதைக் கண்டதும் அதற்கு மேல் அங்கிருக்கப் பிடிக்காது தனது அறைக்கு வந்தான்... வந்தவன் முதல் வேலையாக மூச்சிரைப்பு வரும் பொழுது பயன்படுத்தும் 'இன்ஹேலரை' தனது உடமைகளில் இருந்து தேடி எடுத்தான்...

அதைத் தனது வாயில் வைத்து அழுத்தி கொண்டவனுக்குக் கொஞ்ச நேரத்தில் மூச்சிரைப்பு சிறிது மட்டுப்பட்டது... அவனுக்குச் சிறுவயதில் இருந்து இந்த மூச்சிரைப்பு இருக்கிறது... இன்று அதிகாலையில் பனியில் பயணம் செய்தது, அதன் பின் தொடர்ந்த ஓயாத வேலைகளினால் பனியில் அலைந்தது, இதோ இப்போதும் பனியில் பயணம் செய்து வந்தது என்று எல்லாம் சேர்த்து அவனைப் படுத்தி எடுத்துவிட்டது...

மழைக் காலம், பனிக்காலம் இரண்டுமே அவனுக்கு மிகுந்த அலர்ஜி...

உடையை மாற்றிக் கொண்டு படுக்கையில் விழுந்தான் அவன்... கண்களை மூடினாலும் தூக்கம் வரவில்லை...

அதே நேரம் தனது அறைக்கு வந்த பிரகதீஸ்வரிக்கு அழுகை வரும் போலிருந்தது... சித்தார்த்தின் உதாசீனம் அவளை மிகவும் காயப்படுத்தியிருந்தது... ஏன் அவனுக்குத் தன்னைப் பிடிக்கவில்லை...? அதுவும் பார்த்த ஒருநாளில் ஒருவனால் இப்படி வெறுக்க முடியுமா...? அவளுக்கு மிகவும் வேதனையாக இருந்தது...

சுவற்றில் மாட்டி வைக்கப்பட்டிருந்த பெற்றோரின் புகைப்படத்தைக் கண்டதும் அடக்கி வைக்கப்பட்ட அழுகை பெரும் கேவலோடு வெடித்தது...

"அப்பா... ஏன்ப்பா என்னைத் தனியா விட்டுட்டு போனீங்க...?" வேதனை மிகுந்த அந்த நேரத்திலும் தாயை நாடாது தந்தையைத் தான் தேடியது அவளது மனம்...

அவள் எப்போதும் தாயை விடத் தந்தையைத் தான் அதிகம் நாடுவாள்... அவளது தந்தைக்கு அவள் மிகுந்த செல்லப்பெண்... தாயும் அன்பு காண்பிப்பார் தான்... ஆனால் அதில் சிறிது கண்டிப்பு கலந்து இருக்கும்... தந்தையின் அன்பு அப்படியில்லை... எந்தக் கண்டிப்பும் இல்லாது காட்டாற்று வெள்ளம் போன்று பொங்கி பிரவாகம் எடுக்கும்... அதனால் தான் அவள் எப்போதும் தந்தையிடத்தில் ஒட்டி கொண்டு திரிவாள்...

தாயின் பிரிவை தாங்கி கொண்ட பிரகதீஸ்வரியால் தந்தையின் பிரிவை தாங்கி கொள்ள முடியவில்லை...

தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று புரியாது, இதோ இப்போது வந்திருக்கும் சித்தார்த்தின் கோபத்திற்கான காரணம் புரியாது அறியா குழந்தை போல் அவள் மலங்க, மலங்க விழித்தாள்...

எவ்வளவு நேரம் அப்படியே அவள் விழித்திருந்தாளோ தெரியாது... அவளையும் அறியாது கண்கள் தூக்கத்தில் சொருகிய பொழுது அவளின் அறைக்கதவு படபடவெனத்

தட்டப்பட்டது... தட்டிய வேகத்தினைக் கண்டு பயந்து போனவளாய் அவசரமாய்ச் சென்று கதவை திறந்தாள்...

"பிரகதி... சீக்கிரம் வா... சித்துவுக்கு உடம்பு சரியில்லை..." விமலாராணி பதட்டத்தோடு அழைத்ததும் அவரது பதட்டம் அவளுக்கும் தொற்றிக் கொண்டது... அந்தக் கணம் சித்தார்த்தின் உதாசீனத்தை அவள் மறந்திருந்தாள்...

அங்குச் சென்று அவள் பார்த்த போது சித்தார்த்தின் மூச்சிரைப்பு மிகவும் மோசமாகி இருந்தது... இப்படி ஒரு நிலை வந்துவிடக் கூடாது என்று தானே அவள் கசாயம் தயாரித்துக் கொடுத்தது...

அதை அவன் பூச்சாடியில் கொட்டி கவிழ்த்த காட்சி அவளது மனக்கண்ணில் தோன்றியதும் அவளது முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது...

"பிரகதி... ஏதாவது செய்... இப்போது டவுனுக்குப் போய் டாக்டரை அழைத்து வர நேரமில்லை... உன்னால் முடிந்த வைத்தியத்தை நீ செய்து பாரும்மா..." விமலாராணி அண்ணன் மகன் படும் பாட்டைக் காண சகிக்காது மகளிடம் அப்படிக் கூறினார்...

"இதோ கொஞ்சம் இருங்க..." என்றவள் வெளியில் சென்றாள்...

அடுத்தச் சில நிமிடங்களில் அப்போது போன்று கசாயத்தைத் தயாரித்துக் கொண்டு வந்தவள் விமலாராணியிடம் நீட்டினாள்... ஏனெனில் தான் சித்தார்த்திடம் கொடுத்தால் அதை அவன் வாங்க மாட்டான் என்று அவளுக்குத் தெரியும்...

அதை வாங்கிய விமலாராணி சித்தார்த்திடம், "முதல்ல இதைக் குடிப்பா..." என்று வற்புறுத்த...

வேறுவழியின்றி அதை வாங்கிக் குடித்த சித்தார்த்தின் முகம் அவமானத்தில் கருத்துப் போனது... தான் புறக்கணித்த ஒன்றை தானே ஏற்றுக் கொள்ள வேண்டிய

அவலநிலையில் தான் இருப்பதைக் கண்டு அவனுக்கு அத்தனை அவமானமாக இருந்தது...

அவன் அதைக் குடித்து முடித்ததும் பிரகதீஸ்வரி முகத்தில் வருத்தத்தை மீறி சிறு நிம்மதி எட்டிப்பார்த்தது...

இன்னமும் அவன் மூச்சிரைத்தபடி இருப்பதைக் கண்டு மீண்டும் வெளியில் சென்ற பிரகதீஸ்வரி கையில் எதையோ கொண்டு வந்து விமலராணியிடம் நீட்டினாள்...

"ஐயோ... எனக்கு இந்த வாசம் அலர்ஜி ஆச்சே..." என்றபடி விமலாராணி அதை வாங்க மறுத்துவிட்டார்...

"இதை அவரோட நெஞ்சில் நீவி விட்டு, மூக்கில் தடவி கொண்டால் சீக்கிரம் சரியாகிரும்மா... ப்ளீஸ் தடவி விடுங்கம்மா..."

"நானா...?" அப்போதும் அவர் யோசித்தார்...

அதைக் கண்டு சித்தார்த், "என்னிடம் கொடுங்கத்தை... நானே தடவி கொள்கிறேன்..." என்று தனது கைகளில் அந்தக் களிம்பை வாங்கியவன் நெஞ்சில் தடவப் போனான்...

விடாது எழுந்த தும்மலாலும், மூச்சிரைப்பாலும் அவனால் அதைச் சரிவரச் செய்ய முடியவில்லை... அதைப் பார்த்துக் கொண்டிருந்த பிரகதீஸ்வரி அவன் அருகில் வந்து அந்தக் களிம்பை வாங்கி அவனது நெஞ்சில் தடவி நீவி விட்டாள்...

அவளது செயலில் அவன் தான் திகைத்துப் போனான்... உடல் கூச்சத்தில் நெளிய அவனுக்கு மிகவும் வெட்கமாகப் போய்விட்டது...

"ப்ளீஸ்... வேண்டாம்..." அவளது முகம் பார்க்காது வேறு எங்கோ பார்த்தபடி அவன் கூற...

அவளும் அவனது முகம் பார்க்காமல் தனது காரியத்தில் கண்ணாய் இருந்தவள், "மருத்துவர்களுக்கு ஆண், பெண் என்கிற பேதம் கிடையாது... நோயாளிகள் யாராக இருந்தாலும் அவர்களது நோக்கம் நோயை தீர்ப்பது மட்டும்

தான்... எனது நோக்கமும் அது தான்..." என்றவளின் பதிலில் அவன் வியப்புடன் அவளைப் பார்த்தான்...

தன் முகம் அருகில் இருந்த அவளது மதி முகத்தை இமைக்காது பார்த்தான் சித்தார்த்... சற்று முன் தான் அவளை அத்தனை அவமானப்படுத்திய போதும் அதைச் சிறிதும் கண்டு கொள்ளாது ஓடி வந்து உதவி செய்கிறவளை ஆச்சிரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்...

இருவரது இணக்கமான நிலை விமலாராணிக்கு ரசிக்கவில்லையோ என்னமோ...

"இப்போது எப்படியிருக்கிறது சித்து...? பரவாயில்லையாப்பா..." என்று வேண்டுமென்றே இடையிட்டு கேட்க...

அத்தை கேட்டதும் தான் சித்தார்த் அதை உணர்ந்தான்... இப்போது அவனது மூச்சிரைப்பும், தும்மலும் சிறிது மட்டுப்பட்டிருந்தது...

"இப்போது கொஞ்சம் பரவாயில்லை அத்தை..."

"அப்போ நீ படுத்து கொள் சித்து..." என்றவர் மகளிடம்,

"நீ வா பிரகதி..." என்றுவிட்டு முன்னால் நடந்தார்...

அவர் பேச்சு கேட்டு அமைதியாகச் சென்ற பிரகதீஸ்வரியை தடுத்து நிறுத்தி நன்றி சொல்ல வேண்டும் என்று சித்தார்த்தின் மனம் எண்ணினாலும் இடையில் இரும்பு திரையாய் ஈகோ எழுந்து அவனைத் தடுத்து நிறுத்தியது...

மறுநாள் காலையில் எழும் போது புத்துணர்ச்சியுடன் எழுந்தான் சித்தார்த்... நேற்றைய மூச்சிரைப்பு இன்று அவனிடத்தில் சுத்தமாக இல்லை... அதற்குக் காரணமானவளின் முகம் அவனது நினைவில் அவனையும் அறியாது எழுந்தது...

படுக்கையை விட்டு எழுந்தவன் ஜன்னல் அருகே வந்து கீழ்வானில் தெரிந்த சூரியனை ரசித்துப் பார்த்தான்...

சுட்டெரிக்கும் சூரியனை அவனுக்கு மிகவும் பிடிக்கும்... அந்தப் பகலவன் இல்லாது போனால் புவியினில் ஒரு அணுவும் அசையாது... அத்தகைய பெருமைக்குச் சொந்தக்காரன் அல்லவா இந்தச் சூரியன்... அது போல் தான் அவனும் இருக்க விரும்பினான்...

அவனில்லாது அவனது சாம்ராஜ்யத்தில் ஒரு அணுவும் அசையாது என்கிற கர்வம் அவனுள் எப்போதும் உண்டு...

புன்னகை முகத்துடன் அவன் தோட்டத்தைப் பார்த்த போது அங்கு நின்றிருந்த பிரகதீஸ்வரியை கண்டதும் அவனது புன்னகை அப்படியே உறைந்தது... எப்போதும் போல் அமைதியான முகத்தோடு, மலர்ந்த புன்னகையுடன் செடிகளில் இருந்து பூக்களைப் பறித்துக் கொண்டிருந்தவளை அவனது கண்கள் விடாது மொய்த்தது...

நேற்றைய நாளின் நினைவுகள் அவனது மனதில் எழுந்து அவனது வலதுகை தானாக நெஞ்சை நீவியது... நேற்று தடவிய களிம்பின் பிசுபிசுப்பு இன்றும் அவனது நெஞ்சில் இருந்தது... அந்தக் களிம்பு நாற்றமடிக்காது நல்ல நறுமணத்துடன் சுகந்தமாய் வாசம் வீசியது...

அந்த நறுமணம் நேற்று அருகாமையில் நின்றிருந்த பிரகதீஸ்வரியின் மேனியிலிருந்து வந்த நறுமணத்தை ஒத்திருந்ததை அவனது மனம் சிறு திடுக்கிடலோடு எண்ணிப் பார்த்தது... இப்போது அவனது பார்வை இன்னமும் அழுத்தமாய் அவள் மீது படிந்தது...

காலை உணவு வேளையின் போது சித்தார்த்தின் கண்கள் அவனையும் அறியாது பிரகதீஸ்வரியை தேடியது... அவளை எங்கும் காணவில்லை... எப்படி அவளைப் பற்றிக் கேட்பது என்று தெரியாது மனதிற்குள் எழுந்த கேள்வியைத் தன்னுள் புதைத்துக் கொண்டு அமைதியாக உணவை உண்டான்...

"ஏன்டி குந்தாணி... இப்படிச் சாப்பிட்டு சாப்பிட்டுத் தூங்குவதற்குப் பதிலாக நீயும் நம்ம பிரகதி கூடச் சேர்ந்து

தோட்டத்திற்குப் போயிருக்கலாம் இல்லையா...?"

உணவை ருசித்து நன்றாக மொக்கிக் கொண்டிருந்த தங்கையைப் பார்த்து சரவணன் கேட்டான்...

"தோட்டத்தில் போய் வேலை பார்க்கணும்ன்னு அவளுக்கு என்ன தலையெழுத்தா...?" மகளை முந்தி கொண்டு விமலாராணி மகனுக்குப் பதிலளித்தார்...

"அப்படிச் சொல்லுங்கம்மா... எப்பப்பாரு என்னைக் குறை சொல்றதே இவனுக்கு வேலையா போச்சு..." அன்னையிடம் ஆதரவு தேடினாள் சந்தியா...

"சந்தியா... சரவணன் சொல்வதைக் கேள்... இந்த வயதில் இப்படிக் குண்டாக இருப்பது நல்லதில்லை..." சித்தார்த் அத்தை மகளிடம் கூற...

அதைக் கேட்டு விமலாராணிக்கு உள்ளுக்குள் பக்கென்றது... அவர் மனதிற்குள் என்னவெல்லாமோ கற்பனை கோட்டை கட்டி வைத்திருக்கிறார்... அதை எல்லாம் மகள் கெடுத்து விடுவாள் போலிருக்கிறதே...

"சந்தியா... அத்தான் சொல்வதைக் கேளு கண்ணு..." மகளிடம் அன்பொழுக அவர் கூற...

"அம்மா... அத்தான் சொல்வது போல் நான் ஒண்ணும் அத்தனை குண்டாக இல்லை... சற்று பூசினார் போல் இருக்கிறேன் அவ்வளவு தான்..."

சீரோ சைஸ் உடலை கொண்ட பெண்களைப் பார்த்து வந்த சித்தார்த்திற்கு அவளின் பூசிய உடல்வாகே சற்று குண்டாக இருப்பது போல் தான் தோன்றியது...

"அத்தானை எதிர்த்து பேச கூடாது சந்தியா..." விமலாராணி எச்சரிக்கை செய்ய...

"போங்கம்மா... அத்தானுக்கு வேறு வேலையில்லை..." கை, காலை உதறியபடி அவள் எழுந்து சென்றுவிட்டாள்...

"சின்னப் பெண் இல்லையா..." விமலாராணி மகள் சார்பாகச் சித்தார்த்திடம் வழிந்தார்...

"இவளை விடச் சின்னப் பெண் தானே பிரகதி... அவள் எத்தனை பொறுப்பாக இருக்கிறாள்..." பட்டும் படாமல் கூறிய சித்தார்த்தை கண்டு மானசீகமாக நெஞ்சை பிடித்தார் விமலராணி...

நேற்று ஒரு நாள் இரவில் அண்ணன் மகன் இப்படி அடியோடு பிரகதீஸ்வரிடத்தில் கவிழ்ந்து விட்டானே என்று அவருக்குக் கவலையாக இருந்தது...

"அது ஒண்ணுமில்லை சித்து... ஊர் மக்கள் முன்னாடி அப்படி வேசம் போடுகிறாள்..."

"அம்மா... பிரகதியை பற்றித் தேவையில்லாமல் பேசாதீங்க..." சரவணன் தனது போர்க்கொடியை உயர்த்தினான்...

"சரிப்பா... அவளைப் பற்றி நான் ஒண்ணும் பேசலை..." அவர் சொன்னதும் அவன் அமைதியாக உண்டுவிட்டு சென்றுவிட்டான்...

"பிரகதியை நம்பாதே சித்து... அவள் இப்படித்தான் எல்லோரையும் கைக்குள் போட்டு கொள்கிறாள்..." என்ற அத்தையை வெறித்துப் பார்த்தான் சித்தார்த்...

"உன்னையே எடுத்துக்கோ... நேத்துவரை அவளை உனக்குப் பிடிக்காம இருந்தது... நேத்து ஒரு நாள் இரவில் நீ அப்படியே அவள் பக்கம் சாய்ந்துவிட்டாய் பார்த்தியா...? நீயே இப்படி என்றால், இந்தக் கிராமத்து மனிதர்களைப் பற்றிக் கேட்கவா வேண்டும்... இவளின் பசப்பு வார்த்தைகளில் மெய் மறந்து கிடக்கிறதுகள் இதுங்க எல்லோரும்..."

அத்தையின் வார்த்தைகளில் அவன் முகம் கருத்துப் போனான்... பிரகதீஸ்வரிக்கும் அவனுக்குமான பகையை அவன் எப்படி மறந்து போனான்... அதிலும் நேற்று மட்டும் அவன் அடைந்த அவமானங்கள் சொல்லில் அடங்காது...

அதை நினைத்து பார்த்தவனுக்கு இப்போதும் அத்தனை அவமானமாக இருந்தது... அவனது முகம் சிறுத்துப் போனது...

அந்தக் கணம் அவள் தனக்குச் செய்த பணிவிடையை அவன் மறந்து தான் போனான்...

"நான் யார் பக்கமும் சாயவில்லை அத்தை... அனைத்தும் என் ஞாபகத்தில் இருக்கிறது... நான் எதையும் மறக்க மாட்டேன்..." குரோதம் கொப்பளிக்கச் சொன்னவனைக் கண்டு விமலாராணிக்கு பெருத்த நிம்மதியாக இருந்தது...

சித்தார்த்தை நம்பித்தானே அவர் இந்தக் காரியத்தில் இறங்கி இருக்கிறார்... இதில் மட்டும் அவர் வெற்றிப் பெற்று விட்டால் இந்த உலகின் மகாராணி அவர் மட்டுமே...

****

காலை உணவு முடிந்து காலார வெளியில் நடந்து சென்றனர் சித்தார்த்தும், சரவணனும்... இயற்கை வளத்துடன் எங்குப் பார்த்தாலும் பசுமையுடன் காணப்பட்ட அந்தக் கிராமம் சித்தார்த்திற்குள் பெரும் வியப்பை ஏற்படுத்தியது...

"எப்படிச் சரவணா... உங்க ஊரில் மட்டும் எங்குப் பார்த்தாலும் இப்படிப் பசுமையாக இருக்கிறது...?"

"எல்லாம் அப்பா காண்பித்த வழி தான் அத்தான்... அவர் தான் இயற்கையோடு இணைந்து வாழ்வது எப்படி என்பது பற்றி எங்க எல்லோருக்கும் சொல்லி கொடுத்தது..."

"ஓ..." என்ற சித்தார்த் அமைதியாகிவிட்டான்...

இயற்கை காற்றைச் சுவாசித்தபடி நடந்தவனுக்கு அத்தனை புத்துணர்வாக இருந்தது... சுற்றிலும் பார்த்துக் கொண்டு வந்தவனுக்கு அங்குக் கொட்டி கிடந்த இயற்கை வளம் அவனுள் இருந்த தொழிலதிபனை தட்டி எழுப்பியது... அப்படித் தொழிலதிபனாய் அவனது கண்கள் சுற்றுப்புறத்தை உற்றுக் கவனித்துப் பார்த்துக் கொண்டு

வந்த போது அந்தக் குறிப்பிட்ட இடம் அவனது கவனத்தை வெகுவாய்க் கவர்ந்தது...

"சரவணா... அந்தப் பக்கம் போகலாம் வா..." என்று அவனை இழுத்தபடி வேகமாய் நடந்தான்...

சிறு மலைக் குன்று ஒன்று கம்பீரமாக வீற்றிருக்க அதன் ஓரமாய்ச் சிறு அருவி ஒன்று சலசலத்து விழுந்து ஆறாய் ஓடி கொண்டிருந்தது... அதன் மற்றொரு பக்கத்தில் பாறை மீது சிற்பங்கள் அழகுற செதுக்கப்பட்டிருந்தது... அதைப் பார்க்கும் போதே தெரிந்தது மிகவும் தொன்மை வாய்ந்தது என்று... அதே சமயம் அது விலைமதிப்பில்லாதது என்றும்...

"இது எல்லாம் அந்தக் காலத்துச் சிற்பங்கள் அத்தான்..." பெருமையாகச் சரவணன் கூறினான்...

அது எல்லாம் சித்தார்த்தின் காதுகளில் விழவில்லை... அவன் அந்தக் குன்றின் பாறைகளை உற்று நோக்கினான்... அவன் நினைத்தது சரியே... அத்தனையும் கிரானைட் கற்கள்... அத்தனையும் வெட்டி எடுத்து விற்றால் எத்தனை விலை பெறும்...?

தொழிலதிபனாய் அவனது மூளை வேக வேகமாய்க் கணக்கிட்டது... கிடைத்த விடையோ அவன் சிறிதும் எண்ணி பார்க்காதது... பெரும் பணக்காரனான அவனுக்கே மயக்கம் வரும் போலிருந்தது...

"இது எல்லாம் யாருடைய இடம்...?" அவசரமாய்ச் சரவணனிடம் அவன் கேட்க...

"எல்லாம் நம்ம இடம் தான் அத்தான்..." என்ற சரவணன் புரியாது அவனைப் பார்த்தான்...

"முதலில் நீ வீட்டுக்கு வா..."

சரவணனை அவசரப்படுத்தியவன் தானும் வேகமாய் நடந்தான்... வீட்டை அடைந்து அத்தையிடம் கேட்கும் வரை அவன் அவனாக இல்லை...

"அத்தை... உங்களுக்கு ஒண்ணு தெரியுமா... அந்த மலைக்குன்று முழுவதும் கிரானைட் கற்கள்... அத்தனையும் பல கோடிகள் மதிப்புடையது..." என்றவனது கண்களில் அத்தனை ஆசை மின்னியது...

பணம் வைத்திருப்பவர்களுக்கு எத்தனை பணம் கிடைத்தாலும் அதன் தாகம் அடங்காது போலும்...

"இது உனக்கு இப்போது தான் தெரியும் சித்து... எனக்கு முன்பே தெரியும்... இதற்காகத் தான் நான் உன்னை இங்கே வரவழைத்தது..."

"அதான் இப்போது நான் வந்துவிட்டேனே அத்தை... இனி எல்லாவற்றையும் நான் பார்த்து கொள்கிறேன்..."

"அது முடியாதுப்பா..." என்றார் அவர் சோகமாக...

"ஏன்...?"

"பிரகதி அதற்கு ஒத்துக் கொள்ள மாட்டாள் சித்து..."

"வாட்...? அவளுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது... கோடிக்கணக்கில் பணம் கிடைப்பதை வேண்டாம் என்று சொல்ல...?"

"அப்படிப்பட்ட ஒரு பைத்தியக்காரி தான் அவள்..." என்றவர் அங்கு வாயிற்புறம் வந்து கொண்டிருந்த பிரகதீஸ்வரியை சுட்டிக்காட்டி,

"நீயே அவளிடம் கேள்..."

சரவணன் ஒன்றும் புரியாது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்... இதுநாள் வரை அவன் வாழ்ந்து வந்த உலகமே வேறு...

"பிரகதி..." என்று விமலாராணி அவளை அழைத்தவர் சித்தார்த் கூறிய விசயத்தை அப்படியே அவளிடத்தில் சொன்னார்...

"நீ என்ன சொல்லுற பிரகதி..."

அவள் சித்தார்த்தை நிமிர்ந்து பார்த்தபடி, "எல்லாவற்றையும் பணத்தை அளவுகோலாகக் கொண்டு அளக்க முடியாதும்மா... அதையும் தாண்டி பல விசயங்கள் இருக்கு... இதற்கு என்னால் ஒத்துழைப்பு கொடுக்க முடியாது..."

அதைக் கேட்டுச் சித்தார்த்திற்குக் கோபம் வந்தது... நேற்று அவளிடத்தில் அவன் கொண்ட நன்றிக்கடன் இன்று அவனுக்குச் சுத்தமாக மறந்து போனது... பணக்காரர்கள் எப்போதும் அப்படித்தான் போலும்... தங்களின் தேவைக்கு ஏற்றார் போன்று மனதினை மாற்றிக் கொள்வதில்...

"நீ என்னடி ஒத்துழைப்பு கொடுக்கிறது...? இது என் அத்தையின் சொந்த நிலம்... அதை என்ன வேண்டுமானாலும் செய்ய எனக்கு முழு உரிமை இருக்கிறது..."

"அப்படியா...?" அழுத்தமாய் அவனைப் பார்த்தபடி கூறியவள், "அது போல் தான் என் ஊரை, என் மக்களைக் காப்பாற்ற வேண்டிய உரிமை, கடமை எனக்கு இருக்கிறது... உங்களால் முடிந்ததை நீங்கள் பார்த்து கொள்ளுங்கள்..."

ஒரு சின்னப் பெண்ணிற்கு இத்தனை அழுத்தமா...? என்று அவனுக்கு ஆத்திரம் வந்தது...

"எவ்வளவு பணம் தெரியுமா...? பட்டிக்காட்டில் இருக்கும் உனக்குப் பணத்தின் அருமை பற்றி என்ன தெரியும்...?" அவன் ஆத்திரத்தில் படபடத்தான்...

"பணம் மட்டுமே வாழ்க்கை இல்லை... பணத்தால் வாங்க முடியாத விசயங்கள் உலகத்தில் பல இருக்கிறது... அதனால் நீங்க செய்யப் போகும் இந்தக் காரியத்திற்கு என்னால் உறுதுணையாக இருக்க முடியாது..." என்று தீவிரமான குரலில் கூறியவளை உறுத்து விழித்தவனின் பார்வை எகத்தாளமாக அவள் மீது படிந்தது...

'உன் உறுதுணை எனக்கு அவசியமில்லை... உன் ஒத்துழைப்பு எனக்குத் தேவையுமில்லை...' என்பது

போல்...!!!

"பணமே பிரதானம் என்னும் மூடனே...!
பணத்தைக் கொண்டு அன்பை வாங்க முடியுமா...?
பணத்தைக் கொண்டு காருண்யத்தை வாங்க முடியுமா...?
பணத்தைக் கொண்டு பாசத்தை வாங்க முடியுமா...?
பணத்தைக் கொண்டு காற்றை வாங்க முடியுமா...?
பணமே பிரதானம் என்னும் மூடனே...!
நீ இறந்த பின் உன்னோடு வருவது பணமல்ல...
நீ இறந்த பின் உன்னைத் தூக்கி கொண்டு செல்வது பணமல்ல...
இடுகாட்டில் உன்னை எரித்தபின் நீ பிடி சாம்பலாகி போவதை போல்,
உன்னிடம் இருக்கும் பணமும் ஒருநாள் எரிந்து சாம்பலாகி மதிப்பில்லாது போகும்...
அப்போது நீயும் மதிப்பிழந்து போவாய்...
அந்தக் கணம் நிதர்சனம் முகத்தில் அறைந்து வெறுமை மனதினை தாக்கும்...
அன்பை சம்பாதித்து அன்பை சேமித்து வை...
அது பின்னாளில் நீ துன்பப்படும் போது உனக்கு வட்டியோடு உதவும்...
அன்பே சிவம் என்று வாழ்ந்து பார்...
உலகத்தில் மகிழ்ச்சியான மனிதன் நீ மட்டுமே...
என்ன புரியவில்லையா...?
மீண்டும் முதலில் இருந்து படித்துப் பார் புரியும் வாழ்க்கை சூத்திரம்...!!!"

நனவாகும்...!!!

இரு கைகளையும் பேண்ட் பாக்கெட்டில் விட்டுக் கொண்டு கால்களை அகற்றியபடி திமிராய் நின்றிருந்த சித்தார்த்தின் பார்வையில் அதைவிட அதிகளவு திமிரும், எள்ளலும் கலந்து இருந்தது... அவனது எகத்தாளம் புரிந்தாலும் அதைச் சிறிதும் கண்டு கொள்ளாது பதில் பார்வை தாங்கி நின்றாள் பிரகதீஸ்வரி...

அவள் சிறு பெண் தான்... ஆனாலும் தன் ஊர், தன் மக்கள் என்று வரும் போது அவர்களைக் காக்கும் சக்தியாய் அவள் விஸ்வரூபம் எடுத்து நின்றாள்... அத்தகையவளின் சக்தி உணராது அவன் அவளைக் கேலியாய் நோக்கி கொண்டிருந்தான்...

"பிரகதி... கோடிக்கணக்கில் பணம் வரும்ன்னு அத்தான் சொல்கிறாரே... பிறகு நீ ஏன் வேண்டாம் என்று சொல்கிறாய்...?" சிறுபிள்ளை போல் புரியாது கேட்டாள் சந்தியா...

உண்மையில் அவள் மனதளவில் சிறு பிள்ளை தான்... பிரகதீஸ்வரி அளவிற்குத் தெளிவான அறிவு அவளுக்குக் கிடையாது...

"அக்கா... உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை... அந்தக் குன்று வழியாக வரும் ஆற்றை நம்பித்தான் நம் ஊரின் ஒட்டுமொத்த விவசாயம், மக்களின் மற்ற தேவைகள் அனைத்தும் இருக்கிறது... அத்தோடு அதன் பக்கத்தில் இருக்கும் இடமெல்லாம் நாம் மற்றவர்களுக்குத் தானமாகக் கொடுத்த இடங்கள்... அதை எல்லாம் திருப்பிக் கேட்க முடியாது... அது அவர்களுக்கு வாழ்வாதார நிலங்கள்... விவசாயம் செய்து பிழைக்கும் அவர்களின் அடிவயிற்றில் நாம் அடிக்க வேண்டுமா...?"

"இவங்க கிரானைட் கற்களைத் தோண்டி எடுக்க ஆரம்பித்தால் ஆற்றின் போக்கை வேறு திசைக்கு மாற்றியமைக்க வேண்டும்... அப்போது நம் ஊருக்குத் தண்ணீர் கிடைக்காது... காவிரிக்கு கர்நாடக அரசை

எதிர்பார்த்து காத்திருக்கிற மாதிரி நாமளும் நம் தண்ணீர் தேவைக்குப் பக்கத்து ஊரை நம்பியிருக்க வேண்டும்... நம் தண்ணியைத் தாரைவார்த்து கொடுத்துவிட்டு இப்படிக் கையேந்தி நிற்கும் நிலைமை நமக்குத் தேவை தானா...?"

பிரகதீஸ்வரி பேச பேச சித்தார்த்தின் முகமும், விமலாராணி முகமும் இருண்டது என்றால், சரவணனும், சந்தியாவும் யோசிக்க ஆரம்பித்தார்கள்...

"இதை விட அந்தக் குன்றில் இருக்கும் சிற்பங்கள் எல்லாம் நம் முன்னோர்கள் நமக்கு அளித்த பொக்கிசங்கள்... அதைப் போற்றிப் பாதுகாப்பது நம் கடமை அல்லவா...?"

"ஏன் பிரகதி... நாம் தான் கிரானைட் விற்று பெரிய பணக்காரர்கள் ஆகிவிடுவோமே... அப்போது இந்தத் தண்ணீரை நாம் விலை கொடுத்து வாங்கிக் கொள்ளலாம் இல்லையா... நமக்கு மட்டுமல்ல இந்த ஊருக்கும் சேர்த்து..."

"அக்கா... நீங்க சொல்றது எப்படித் தெரியுமா இருக்கு...? கண்ணை விற்றுச் சித்திரம் வாங்குவது போல..." உறுதியாக மறுத்து கூறியவளை கண்டு சரவணன்,

"உனக்கு எத்தனை விசயங்கள் தெரிந்திருக்கிறது பிரகதி..." என்றான் பெருமையாக...

"எல்லாம் அப்பா சொல்லிக் கொடுத்தது தான் அண்ணா... அவர் பேசுவதைக் கேட்கும் பொறுமை உங்க ரெண்டு பேருக்கும் இல்லாது போயிற்று... நீங்களும் அவரின் பேச்சை கேட்டிருந்தால் இப்படிப் பேச மாட்டீங்க..." மிகுந்த வருத்தத்துடன் கூறியவளை கண்டு அவர்களுக்கு என்னவோ போலாகிவிட்டது...

"இனி இப்படிப் பேசவில்லை... நாங்க இரண்டு பேரும் உனக்குத் தான் சப்போர்ட்..." என்றனர் இருவரும் கோரசாக...

அதில் பிரகதீஸ்வரியின் முகம் மலர்ந்தது...

"தேங்க்ஸ்க்கா, தேங்க்ஸ்ண்ணா..."

அதைக் கேட்டு விமலாராணி பல்லை கடித்தார் கோபத்தில்... சித்தார்த்திற்கோ மனதில் ஆத்திரம் கனன்ற போதும் அதை வெளிக்காட்டி கொள்ளவில்லை... அவன் பிரகதீஸ்வரியை உறுத்து விழித்தபடி நின்றிருந்தான்...

அவளும் அவனைப் பார்த்தபடி உள்ளே சென்றுவிட்டாள்...

"சித்து..." விமலாராணி ஏதோ சொல்ல வருவதை உணர்ந்து சித்தார்த் கண்களால் சரவணன் மற்றும் சந்தியாவைச் சுட்டிக்காட்டியவன்,

"ஏதுவாக இருந்தாலும் பிறகு பேசலாம் அத்தை..." அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே கையில் சிறு பையுடன் வெளியில் வந்தாள் பிரகதீஸ்வரி...

"பிரகதி... தோட்டத்துக்கா போகிற..."

"ஆமாம்ண்ணா..." என்று சரவணனுக்குப் பதில் கொடுத்துவிட்டு அவள் சென்றுவிட்டாள்...

"அத்தான்... நீங்களும் தோட்டத்துக்கு வர்றீங்களா... செம ஜாலியா இருக்கும்..." சரவணன் சித்தார்த்தை அழைத்தான்...

"டேய்... மதியம் சாப்பிட்டுட்டு போங்க..." விமலாராணி சொன்னதை அலட்சியம் செய்தான் மகன்...

"அட போங்கம்மா... பிரகதி இதை விடச் சூப்பரா சமைச்சு தருவாள்..." என்றுவிட்டு சித்தார்த்தின் கைப்பிடித்து இழுத்தபடி,

"வாங்க அத்தான் போகலாம்..."

வீட்டில் அடைந்து கிடப்பதற்கு வெளியில் சென்று வரலாம் என்றெண்ணி சித்தார்த் அவனுடன் சென்றான்... பாதித் தூரம் செல்லும் வரை அமைதியாக எதையோ யோசித்துக் கொண்டு வந்தான் சித்தார்த்... பின்பு நினைவு வந்தவனாய் சரவணனிடத்தில்,

"வக்கீல் குருமூர்த்தி, ஆடிட்டர் பஞ்சாபிகேசன் இருவரும் எப்படி...? அவங்க பேமிலி எல்லாம் இப்போ எங்கே இருக்காங்க...?"

சித்தார்த் தனது தொழில் திறமையை அவர்கள் இருவரிடமிருந்து தொடங்கினான்... அதை அறியாத சரவணனோ வெகுளியாக அவனிடம்,

"எல்லோரும் இங்கே திருநெல்வேலியில் தான் இருக்காங்க... குருமூர்த்தி அங்கிளுக்கு இரண்டு பொண்ணுங்க... இரண்டு பேரும் வெளிநாட்டில் இருக்காங்க... பஞ்சாபிகேசன் அங்கிளுக்கு ஒரே ஒரு பையன்... அவரும் வெளிநாட்டில் வொர்க் பண்றாரு..."

"ஓ... இவங்க பிள்ளைங்க எல்லாருமே வெளிநாட்டிலா...? அப்போ இருவரும் தாங்கள் மட்டும் நாட்டுக்கு சேவை செஞ்சா போதும்ன்னு நினைச்சிட்டாங்க போலிருக்கு..."

"ஹா... ஹா... அத்தான்... உங்களை மாதிரி தான் தனா அண்ணாவும் சொல்வார்..." என்று கூறி சரவணன் சிரிக்கத் துவங்க...

"தனா அண்ணா...?" கேள்வியாய் அவனின் முகம் பார்த்தான் சித்தார்த்...

"தனஞ்செயன் அண்ணா... நம்ம வக்கீல் அங்கிள் கிட்ட ஜூனியரா இருக்கிறார்... அவரோட வலதுகை மாதிரி..."

"ஓ..."

"ஆமாம் அத்தான்... தனா அண்ணா இப்படித்தான் சொல்வார்... குருமூர்த்தி அங்கிள் அவரோட பிள்ளைகளை மட்டும் நன்றாகப் படிக்க வைத்து வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்துவிட்டார்... ஆனால் தன்னை மட்டும் இன்னமும் தனியா ஒரு வழக்கை எடுத்து விசாரிக்க விட மாட்டேங்கிறார் என்று அவருக்கு மிகுந்த வருத்தம்... 'என்னை முன்னேற விட மாட்டேங்கிறார்' என்று எப்போதும் என்னிடம் குறைப்பட்டுக் கொள்வார்..."

சித்தார்த் பரமபதம் விளையாட்டு விளையாட ஒரு பகடைக்காய் கிடைத்துவிட்ட திருப்தியில் சரவணனை பார்த்துப் புன்னகைத்தான்...

"தோட்டத்துக்கு இன்னமும் நிறையத் தூரம் போகணுமா...?" பேச்சை மாற்றினான் சித்தார்த்...

சரவணனும் வெகுளியாக அருகில் தெரிந்த தென்னந்தோப்பை சுட்டிக்காட்டி, "அது தான் நம்ம தோப்பு அத்தான்..."

"அப்போ பக்கத்தில் வந்துட்டோம் என்று சொல்லு..." இரு பொருள்படக் கூறியவனின் பொருள் விளங்காது வெள்ளந்தியாய் சிரித்து வைத்தான் சரவணன்...

"ஆமாம்... வாங்க போகலாம்..." என்று வேகமாக நடக்கத் துவங்கினான்...

சரவணனுடன் இணைந்து நடந்த சித்தார்த் மனதில் பலவித யோசனைகள்... அதை எல்லாம் விடப் பிரச்சினையின் நுனியை கண்டுபிடித்து விட்ட ஒரு திருப்தியான எண்ணம் அவனுள் எழுந்தது என்றால் மிகையில்லை... புரியாத புதிராய் விளங்கும் பிரகதீஸ்வரி பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆர்வத்தை விட இத்தனை செல்வத்தைக் கைவிட அவனுக்கு மனம் வரவில்லை என்று தான் சொல்ல வேண்டும்... அதனால் அதைப் பற்றித் தெளிவாக அறிய அவன் விரும்பினான்...

எங்கே அடித்தால் எதிரிகள் வீழ்வார்கள் என்று தொழிலதிபனான அவனுக்குத் தெரியாதா என்ன...? அவனது உதடுகளில் மந்தகாச புன்னகை ஒன்று தோன்றியது...

'பெண்ணே...! உன் பலவீனம் என்ன...?' அவனது மனம் கேள்விக் கேட்டது அவனது எதிரியான பிரகதீஸ்வரியிடத்தில்...

அதற்கு அவனுக்குக் கிடைத்த பதிலோ 'அன்பு'... ஆனால் அந்த அன்போ அவனிடத்தில் பெரும் பஞ்சமாய்... பணம்

என்றால் அள்ளி அள்ளி கொடுக்கலாம்... அவனிடத்தில் இல்லாத அன்பிற்கு அவன் எங்கே போவான்...? மீண்டும் பெரும் யோசனை வந்து ஒட்டி கொண்டது அவனிடத்தில்...

அவன் யோசித்துக் கொண்டே வந்ததில் அவர்களது தோப்பு வந்துவிட்டது... அவர்களுக்கு முன்பே அங்கு வந்துவிட்ட பிரகதீஸ்வரி சிறுவர், சிறுமியருடன் சேர்ந்து தோட்டத்திற்கு நீர் பாய்ச்சி கொண்டிருந்தாள்...

"அண்ணா... இங்கே வந்து பாருங்க... நாங்க வைத்த தக்காளி செடி... எப்படிக் காய்த்துக் குலுங்குகிறது என்று பாருங்கள்..."

சரவணனை கண்டதும் ஒரு சிறுவன் உற்சாகமாய்க் குரல் கொடுத்தான்...

"அப்படியா... இதோ வருகிறேன்..." என்று குரல் கொடுத்த சரவணன் சித்தார்த்திடம்,

"அங்கே இருக்கும் திண்ணையில் நீங்க உட்காருங்க அத்தான்... நான் இதோ வந்துவிடுகிறேன்..." என்று சிறு பிள்ளை போல் அங்கு ஓடினான்...

தோட்டத்தின் நடுவே இருந்த அந்தச் சிறு ஓட்டு வீட்டின் முன்னிருந்த திண்ணையில் சென்று அமர்ந்த சித்தார்த் சுற்றுப்புறத்தை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்...

சூரிய ஒளி படாதவாறு அடர்ந்திருந்த தென்னைமரங்கள் கண்களுக்கு மிகுந்த குளிர்ச்சியாக இருந்தது... தென்றல் காற்று மேனியை தழுவியதில் சுகமாக உறக்கம் வரும் போலிருந்தது அவனுக்கு... இதற்கு முன் இப்படிப்பட்ட இயற்கை காட்சியை அவன் கண்டதும் இல்லை... ரசித்ததும் இல்லை... தன் மனதிலிருந்த அழுத்தம் எல்லாம் முற்றிலும் அகன்று ரிலாக்சாக அவன் உணர்ந்தான்... அதன் விளைவு அவனது முகத்தில் கீற்றாய் சிறு புன்னகை தோன்றியது...

"பிரகதி... நீ போய்ச் சமைக்கும் வேலையைப் பார்... நான் இவர்களோடு சேர்ந்து தண்ணி பாய்ச்சி விட்டு வருகிறேன்..." என்று தங்கையை விரட்டினான் சரவணன்...

"சரிண்ணா... நான் போய்ச் சமைக்கும் வேலையைப் பார்க்கிறேன்... நீங்க இவர்களோடு சேர்ந்து சமையலுக்குத் தேவையான காய்கறிகளைப் பறித்துக் கொண்டு வாங்கண்ணா..." என்றபடி கைகளைக் கழுவி விட்டு வீட்டை நோக்கி நடந்தாள்...

தென்னைமர கீற்றில் அமர்ந்து கவி பாடிய குயில்களில் இன்னிசையில் மனதை பறிக்கொடுத்தவளாய் அதை அண்ணாந்து பார்த்துக் கொண்டு நடந்தாள் அவள்... காற்றில் சலசலத்த தென்னங்கீற்றின் ஒலி அதற்குப் பின்னணி இசையாய் அமைந்தது கண்டு பரவசமடைந்தவளாய் ரசித்தபடி வந்தாள்...

"கீழே பார்த்து நடந்தால் உனக்கு மட்டுமல்ல எதிரில் இருப்பவர்களுக்கும் நல்லது..." திடுமென ஒலித்த அமர்த்தலான குரலில் அவளது பரவசம் அப்படியே வற்றி போகத் திடுக்கிட்டு போனவளாய் குனிந்து பார்த்தவள் அங்குத் திண்ணையில் அமர்ந்திருந்த சித்தார்த்தை கண்டாள்...

அதை விடத் தான் அவன் மீது மோதி விடுவது போல் நெருங்கி நிற்பதை கண்டு அவசரமாய் இரண்டடி பின்னால் நகர்ந்தாள்... அதைக் கண்டு அவன் கண்கள் மெச்சுதலுடன் அவளைப் பார்த்தது...

"இப்படி எல்லா விசயத்திலும் என் சொல் பேச்சு கேட்டு நடந்தால் எல்லாம் நன்மைக்கே..."

அவன் கூறியதன் அர்த்தம் புரிந்து, "யாருக்கு நன்மை...?" என்றாள் வெடுக்கென்று...

"ஏன்...? நமக்குத் தான்..." என்றான் அவன் அவளுக்குப் புரியும்படி...

"உங்க கொள்ளையில் என்னைக் கூட்டு சேர்க்காதீங்க..."

"அடேங்கப்பா உன்னைக் கூட்டு சேர்த்து விட்டாலும்...?" இகழ்ச்சி போல் கூறியவன்,

"உன்னை மாதிரி முட்டாள்களுடன் கூட்டுச் சேர்வதற்கு நான் ஒன்றும் முட்டாளில்லை..." அழுத்தம் திருத்தமாய்க் கூறியவனைக் கண்டு அவளது முகம் சிறுத்துப் போனது அவமானத்தில்...

அதை அவன் திருப்தியுடன் பார்த்தான்... எப்போதும் பதிலுக்குப் பதில் வாயாடும் அவளை அவன் வாயடைக்க வைத்தது இமாலய சாதனை அல்லவா... அந்தக் கணம் அவனுக்கு அப்படித்தான் தோன்றியது...

"இந்த முட்டாள் ஓதும் வேதம் என்றாவது ஒருநாள் உங்களுக்குப் புரியும்... அப்போது உங்களுக்கு உண்பதற்கு உணவு இருக்காது, குடிப்பதற்கு நீர் இருக்காது..."

"ஆஹா... அப்படியா...? இந்த ஊரில் குப்பை கொட்ட வேண்டும் என்று எனக்கு எந்தத் தலையெழுத்தும் இல்லை... இங்கே இருக்கும் செல்வம் மட்டுமே எனது குறிக்கோள்... அதை எடுத்துக் கொண்டு நான் எனது ஊருக்கு சென்றுவிடுவேன்..."

"எந்த ஊருக்கு சென்றாலும் எங்களைப் போன்றவர்கள் உழைத்தால் தான் உங்களுக்குச் சோறு கிடைக்கும்... அதற்கு அடிப்படை வாழ்வாதாரமான நீர் தேவை..."

"ஹா... ஹா... முட்டாள் பெண்ணே... பணம் இருந்தால் எதையும் விலைக்கு வாங்க முடியும்... இந்த ஊர் இல்லை என்றால் வெளிநாட்டிற்குப் போவேன்... அங்கேயும் நீ தான் விவசாயம் செய்து எனக்கு உணவு அனுப்ப வேண்டும் என்று மட்டும் சொல்லிவிடாதே தாயே... இன்றைக்கு இந்த ஜோக் போதும்..." பொங்கி வந்த சிரிப்பை அடக்கியபடி கூறியவனைக் கண்டு அவளுக்கு அத்தனை வெறுப்பாய் இருந்தது...

அன்பு மனம் கொண்டவளையும் அவன் வெறுக்க வைத்தான் தனது குணத்தால்...

"உங்களிடம் பேசி எந்தப் பிரயோஜனமும் இல்லை..." என்றவள் அந்த ஓட்டு வீட்டினுள் சென்றாள்...

"அதையே தான் நானும் சொல்கிறேன்... என்னிடம் வீணாக மோதி உன்னை வதைத்து கொள்ளாதே என்று... இறுதியில் சேதாரம் உனக்குத் தான்..." என்று கூறிக் கொண்டே அவளின் பின்னே அவனும் வீட்டினுள் நுழைந்தான்...

அங்கிருந்த சிறிய சமையலறையில் இருந்து குடத்தை எடுத்து இடுப்பில் வைத்தபடி திரும்பிய பிரகதீஸ்வரி தனக்கு மிக அருகில் நின்றிருந்த சித்தார்த்தை கண்டு பயந்து போனவளாய் விழிகளை அகல விரித்துப் பின்னால் நகர்ந்தவள்,

"நீங்க எப்படி உள்ளே வந்தீங்க...?"

"வாசல் வழியாகத் தான்..." குறும்பு குரலில் திறந்திருந்த கதவுகளைச் சுட்டிக் காட்டினான் அவன்...

"தயவுசெய்து வெளியில் போங்க... யாராவது பார்த்தால் தப்பா நினைக்கப் போறாங்க..."

பயத்தில் சுற்றும் முற்றும் பார்த்தபடி கூறியவளை கண்டு அவன் என்ன நினைத்தானோ அவளது வழியை விட்டு விலகி நின்றவன் 'போ' என்பது போல் தனது கைகளைக் காட்டினான்... அவன் சொன்னதும் தான் தாமதம் வில்லில் இருந்து புறப்படும் அம்பு போல் அவள் வெளியில் ஓடி வந்துவிட்டாள்...

அவன் யோசனையுடன் வெளியில் வந்தான்... ஆனால் அவனது பார்வை முழுவதும் அவள் மீதே இருந்தது...

மீண்டும் திண்ணையில் வந்தமர்ந்தவன் பார்வை முழுவதும் அருகில் இருந்த கிணற்றில் நீரிறைத்துக் கொண்டிருந்த பிரகதீஸ்வரி மீதே இருந்தது... அவள் அவனைக் கவனிக்கவில்லை... தனது வேலையில் கவனமாக இருந்தாள்...

அப்போது தான் சித்தார்த் அதைக் கவனித்தான்... அங்கு வரப்பு வழியாக நடந்து வந்து கொண்டிருந்த ஒருவன் பிரகதீஸ்வரி நீரிறைப்பதை இமைக்காது பார்த்து கொண்டிருப்பதை... அந்தக் கயவனின் பார்வை அவள்

நீரிறைக்கும் போது இலைமறை காயாய் வெளிப்பட்ட அவளது இளமை அழகை விடாது மொய்த்து ரசித்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் சித்தார்த்திற்கு அப்படியொரு கோபம் வந்தது...

ஆத்திரத்துடன் வேகமாய் எழுந்தவன் நேரே பிரகதீஸ்வரி அருகில் வந்து அவள் பிடித்திருந்த கயிறை தனது கைகளில் வாங்கியபடி,

"பொது இடத்தில் வேலை செய்யும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும்... இப்படித்தான் என்னைப் பார், என் அழகை பார் என்று நின்று கொண்டு போஸ் கொடுப்பாயா...?"

அவன் கை அவளது கையைப் பிடித்ததில் பாவையவள் அதிர்ச்சியில் உறைந்து நின்றாள் என்றால், அவன் கோபமாய்த் திட்டியதில் அவளது கண்களில் கண்ணீர் தளும்பியது... அதையும் மீறி அவளுக்குக் கோபம் வந்தது...

"நான் ஒண்ணும் அப்படிப்பட்ட பெண் இல்லை... முதலில் நீங்க உங்க கைகளை எடுங்க..."

அவள் கூறியதும் தான் அவன் தனது கைகளைக் கவனித்துப் பார்த்தான்... அவளது தளிர் கரத்தின் மீது அவனது கை அழுத்தமாய்ப் படிந்திருந்தது...

"ஓ... சாரி..." என்று வேகமாய்த் தனது கைகளை எடுத்தவன் பின் தணிந்த குரலில்,

"கயிறை என்னிடம் கொடு..."

"கொடுக்க முடியாது..." என்று விடாது போர் முழக்கம் கொட்டியவள், "என்னை ஏன் அப்படிப் பேசினீங்க...?" அவன் பேசிய வார்த்தைகள் அவளது மனதினை அந்தளவுக்குக் காயப்படுத்தி இருந்தது...

"அதோ அங்கே பார்... ஒருத்தன் உன்னைச் சைட் அடித்துக் கொண்டு இருப்பதை... உன் மக்கள், உன் மக்கள்னு சொல்றியே... அவங்களோட லட்சணத்தை நீயே பார்..."

சித்தார்த் அப்படிக் கூறியதும் அவள் திரும்பி பார்த்தாள்... அங்கே நின்று கொண்டிருந்தவன் அவர்களது ஊர்க்காரன் இல்லை... வெளியூரில் இருந்து வந்து இங்குத் தங்கி வேலை பார்ப்பவன்...

"அவன் ஒண்ணும் எங்க ஊர்க்காரன் இல்லை... உங்களைப் போல் வெளியூரில் இருந்து வந்தவன்..."

"அப்போ அவனைப் போல் நானும் பொறுக்கி என்று சொல்கிறாயா...?" அடக்கப்பட்ட கோபத்தில் அவன் உறுமினான்...

சித்தார்த் கேள்வியில் அவனை நிமிர்ந்து பார்த்தாள் பிரகதீஸ்வரி... அவன் வந்த ஒரு நாளிலேயே தெரிந்து போனது அவனது நேர் கொண்ட பார்வையும், கண்ணியமிக்க அவனது நடத்தையும்... அதுவே சொல்லாமல் சொல்லியது அவன் நல்லவன் என்று... அவன் அவளிடம் கோபம் கொண்டு கத்தினான் தான்... ஆனால் அவளைத் தவறாக ஒரு பார்வை பார்த்தது இல்லை... இவ்வளவு ஏன் அத்தை மகளான சந்தியாவைக் கூடத் தவறான பார்வை அவன் பார்க்கவில்லை...

"நான் அப்படிச் சொல்லவில்லையே..." என்றாள் வருந்தும் குரலில்...

அவளது குரலில் தெரிந்த வருத்தத்தில் அவனது கோபம் அப்படியே தணிந்தது...

"சரி நீ தள்ளி போ... நான் நீரிறைத்து தருகிறேன்..." என்றான் தன்மையாக...

"அவனுக்குப் பயந்து நான் என் வேலையை ஏன் செய்யாமல் இருக்க வேண்டும்... இப்படி வீட்டுக்குள் பெண்கள் அடைந்து கிடந்தால் மட்டும் இவர்கள் திருந்திவிடப் போகிறார்களா என்ன...? அதற்கு நீங்க அவனை ரெண்டு தட்டு தட்டி நியாயம் கேட்டு இருந்தாலாவது நாளை இது போன்ற தவறு அவன்

செய்யாமல் இருப்பான் இல்லையா... அதை விட்டு விட்டு நீங்க என்னைக் குறை சொல்வது மிகவும் தவறு..."

அவளது வார்த்தையில் இருந்த உண்மையில் அவன் அந்தக் கயவனைத் துவம்சம் செய்யும் நோக்கில் ஆவேசமாய் நகர முற்பட்டான்... அவள் அவனது கைப்பிடித்துத் தடுத்து,

"வேண்டாம் விடுங்க... என்னைக்காவது ஒருநாள் அவன் என்னிடம் மாட்டாமலா போவான்... அன்னைக்கு இருக்கிறது அவனுக்கு..." என்றாள் ஒருவித தீவிரத்துடன்...

அவள் பேசிய வார்த்தைகளை அவன் கவனிக்கவில்லை... மாறாகத் தனது கையைப் பற்றியிருந்த அவளது கையைப் பார்த்தான்...

"தயவுசெய்து கையை விடு... யாராவது பார்த்தால் தப்பா நினைக்கப் போறாங்க..."

அவளைப் போன்று சொல்லி காட்டியவனின் குரலில் இருந்த கேலியில் பட்டென்று அவனது கையை விட்டவளின் முகம் சிவந்து போயிற்று...

"சாரி... சாரி..."

"பரவாயில்லை விடு..." என்றவன் அவளது கையிலிருந்த கயிறை வாங்கி நீரை சேகரிக்க ஆரம்பித்தான்...

லாவகமாய் நீரிறைக்கும் அவனைப் பார்த்தவளுக்கு வியப்பாக இருந்தது... சற்று நேரத்திற்கு முன் தகிக்கும் சூரியனாய் சுட்டெரித்தவன் இப்போது தண்மதியாய்க் குளிர்விப்பது கண்டு அவளுக்குப் பெருத்த ஆச்சிரியமாக இருந்தது...

இவனின் உண்மையான முகம் எது என்று தெரியாது விழித்தாள் அந்தப் பேதை பெண்...

"குடம் நிரம்பிவிட்டது..." என்று அவன் சொன்னதும் தன்னுணர்வு பெற்றவள் குனிந்து குடத்தை எடுத்து தனது இடுப்பில் வைத்தாள்...

ஒடிந்துவிடுமோ என்று எண்ணும்படி இருந்த அவளது சிறுத்த இடையின் மீது அவனையும் அறியாது அவனது பார்வை சென்றது... அன்று பார்த்த அவளது வெண்ணிற இடை இன்றும் அவனது கண்களுக்கு விருந்தாகக் காட்சியளித்தது...

'அடேய், என்னடா பண்ணிக் கொண்டு இருக்கிறாய்...? அந்தப் பொறுக்கிக்கும் உனக்கும் என்னடா வித்தியாசம் இருக்கிறது...' என்று அவனது மனசாட்சி அவனைக் காறி உமிழ... அவன் தனது பார்வையை வேகமாய்த் திருப்பிக் கொண்டான்...

"உன்னால் முடியாது... என்னிடம் கொடு... நான் கொண்டு வருகிறேன்..." என்று வலுக்கட்டாயமாக அவளது கைகளில் இருந்து குடத்தைப் பறித்தவன் அதை எடுத்துக் கொண்டு முன்னால் நடந்தான்...

அவளும் அவனின் முரண்பாடான குணத்தை எண்ணியபடி பின்னால் சென்றாள்...

தண்ணி குடத்தைத் திண்ணை மீது வைத்தவன் உள்ளே வராது அங்கேயே அமர்ந்து கொண்டான்...

"இப்போது மட்டும் என்னால் தூக்க முடியுமா...?" என்று கேலியாய் கேட்டபடி அவள் குடத்தைத் தூக்கி இடுப்பில் வைத்தாள்...

"நீ தான் உள்ளே வர கூடாது என்று சொன்னாய்... அப்போ சரி... நீயே சொல்லி விட்டாய் நான் உள்ளே வருகிறேன்..." என்றபடி எழுந்தவன் உள்ளே செல்வது போல் தனது காலை வீட்டினுள் வைக்க முயல...

"ஐயோ வேண்டாம்..." என்று அலறியபடி அவள் உள்ளே ஓடினாள்...

அவன் சிரித்தபடி மீண்டும் திண்ணையில் அமர்ந்தான்...

அந்நேரம் சரவணன் வாண்டுகள் பட்டாளத்துடன் காய்கறிகளைப் பறித்துக் கொண்டு அங்கு வந்து

சேர்ந்தான்...

"பிரகதி... எல்லாக் காய்களும் பறிச்சாச்சு... சீக்கிரம் சமையலை முடிக்கும் வழியைப் பார்..." என்று அவன் அவளை அவசரப்படுத்தினான்...

"அண்ணா... இது கேஸ் அடுப்பு இல்லை... விறகு அடுப்பு... கொஞ்சம் லேட்டாகும்... உங்களுக்குப் பசிக்கிறது என்றால் நீரா இறக்கி குடிங்க..."

"ஐய்... ஜாலி..." என்று கத்தியப்படி சிறுவர்களுடன் சிறுவனாய் வெளியில் ஓடினான் சரவணன்...

"அது என்ன நீரா...?"

அடுப்பை பற்ற வைத்து உலையைக் கொதிக்க வைத்துக் கொண்டிருந்த பிரகதீஸ்வரி சித்தார்த்தின் கேள்வியில் திரும்பி பார்த்தாள்... அவள் பார்வையில் படும்படியாய் அவன் திண்ணையின் மீது அமர்ந்து அவளைப் பார்த்திருந்தான்...

"அது தென்னம்பாளையில் இருந்து வடியும் பால்..."

"ஓ... கள்ளா...?" முகத்தைச் சுளித்தான் சித்தார்த்...

"இல்லை... கள் போதை தரும்... ஆனால் இந்த நீரா உடம்புக்கு குளிர்ச்சியைத் தரும்... உடலுக்கு மிகவும் நல்லது..."

"இரண்டுமே தென்னம்பாளையில் இருந்து தானே வருகிறது... கள் கெட்டது, நீரா நல்லதா..."

"பாளையிலிருந்து வடியும் பால் புளித்துப் போனால் அது கள்... நீரா அப்படியில்லை... ஐஸ்கட்டிகள் நிரப்பப்பட்ட கலனில் பிடித்து வைத்து 4 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் பதப்படுத்தி வைக்க வேண்டும்... அதன் பிறகு ஃப்ரிஜில் வைத்து மூணு மாசம் பயன்படுத்தலாம்..."

"ஓ... அப்போ நீரா உடம்புக்கு நல்லதுன்னு சொல்ல வர்ற..." என்று யோசித்தவன்,

"இதைப் பாக்கெட் போட்டு விற்றால் நல்ல லாபம் கிடைக்கும் இல்லையா...?" உடனே தொழிலதிபனாய் அவன் யோசித்தான்...

"நீங்க திருந்தவே மாட்டீங்களா...?"

"நான் ஏன் திருந்த வேண்டும்...? பணமில்லாது இந்த உலகில் ஒரு அணுவும் அசையாது..." என்றான் அவன் உறுதியான குரலில்...

"வேண்டாம் இந்தப் பேச்சு... பணம் பற்றிய பேச்சு வந்தால் பழையபடி நம்மிடையே மோதல் வெடிக்கும்... இனிமையான இந்தப் பொழுதை கசப்பாக மாற்றும் எண்ணம் எனக்கில்லை..."

"நீ சொல்வது சரி தான்... இருவருக்குமே கொள்கைகள் வேறு வேறு தான்... ஆனால் ஒன்று என்றாவது ஒருநாள் நீ என் கொள்கைகளை ஏற்றுக் கொள்வாய் பார்..."

அப்படிச் சொன்னவனை நிமிர்ந்து பார்த்தவள், "இதே இது நானும் சொன்னால்...?" இரு புருவத்தை உயர்த்தியபடி மிதப்பாய் கூறியவளை அவன் உற்று நோக்கினான்...

"அது ஒரு போதும் நடக்காது... இந்தச் சித்தார்த் வழி தனிவழி... அதில் நீ வேண்டுமானால் பயணிக்கலாம்... ஆனால் நான் மற்றவர்களைப் பின்பற்றி நடப்பது என்பது ஒருபோதும் நடவாத காரியம்..."

அவன் கூறியது கேட்டு மேற்கொண்டு எதுவும் பேசாது அவள் தோளை குலுக்கியபடி காய்கறிகளை நீர் ஊற்றி கழுவ ஆரம்பித்தாள்... அவளின் மௌனத்தை அவன் தனது வெற்றியாக எண்ணி கொண்டு அவளை மிதப்பாகப் பார்த்து வைத்தான்...

சற்று நேரத்தில் நீரா இறக்கிக் கொண்டு வந்த சரவணன் அதை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து தானும் குடிக்க ஆரம்பித்தான்... சித்தார்த்தும் அது போல் அதைக் குடிக்க முயலுகையில் பிரகதீஸ்வரி அவனைத் தடுத்தாள்...

"வேண்டாம்... உங்களுக்கு ஏற்கெனவே வீசிங் இருக்கிறது அல்லவா..."

அவளது அக்கறையில் அவனது கண்களில் மின்னல் ஒன்று வந்து போனது...

"வீசிங் இருந்தால் என்ன...? உன் கசாயத்தால் அதைக் குணமாக்கி விட மாட்டாயா என்ன...?" என்று கேட்டவனின் கைகள் அவனையும் அறியாது அவனது நெஞ்சை நீவி விட்டது...

"இப்போது நான் இதைக் குடிக்கவா...? வேண்டாமா...?"

அவனின் குரலில் ஏறிட்டு பார்த்தவள், "வேண்டாமே..." என்றாள் இறைஞ்சுதலுடன்...

அதில் கையிலிருந்த நீராவை அருகிலிருந்த சிறுவனிடம் கொடுத்த சித்தார்த், "இப்போது ஓகேவா...?" என்று தலை சரித்தபடி அவளிடம் புன்னகையுடன் கேட்க...

அவனது பாவனையில் அவளது தலை தானாகச் சரியென்று ஆடியது... அதைக் கண்டு அவனது கண்கள் மின்னியது மகிழ்ச்சியில்...

"அவளைப் பிடிக்காது... அவளது கொள்கைகள் பிடிக்காது... அவளது செயல் பிடிக்காது... அவளது எண்ணம் பிடிக்காது...
இப்படி எதுவுமே உனக்கு அவளிடத்தில் பிடிக்காது...
ஆனாலும் அவளுக்காகத் துடிக்கிறாய்... அவளுக்காகத் தவிக்கிறாய்...
அவளுக்காகக் கோபம் கொள்கிறாய்... அவளுக்காக விட்டுக் கொடுக்கிறாய்...
அவளது மகிழ்ச்சியில் நீ மகிழ்கின்றாய்...
அவளது சிரிப்பில் நீ சிரிக்கின்றாய்...
இத்தனை நீ செய்தும் அவள் உனது எதிரி என்கிறாய்...
உனக்கும் அவளுக்கும் பகை என்கிறாய்...
விருப்புக்கும் வெறுப்புக்கும் இடைவெளி நூலிழை அளவு...
என்று நீ அதைத் தாண்ட போகிறாய் மன்னவனே...???"

நனவாகும்...!!!

"சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
சாயக்கிளியே சாய்ந்தாடு
அன்னக்கிளியே சாய்ந்தாடு
ஆவாரம்பூவே சாய்ந்தாடு
குத்துவிளக்கே சாய்ந்தாடு
கோயில் புறாவே சாய்ந்தாடு
மயிலே குயிலே சாய்ந்தாடு
மாடப்புறாவே சாய்ந்தாடு"

முதுகில் சாய்ந்திருந்த மூன்று வயது சிறுமி திவ்யாவை மெல்ல ஆட்டியபடி மெல்லிய குரலில் பாடி கொண்டிருந்த பிரகதீஸ்வரியை நாள் முழுவதும் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல் தோன்றியது சித்தார்த்திற்கு... அந்தக் காட்சி அத்தனை கவிதையாக, அழகாக இருந்தது... மனதிற்கு அத்தனை இதத்தை அளித்தது...

ஒற்றை அறை கொண்ட ஓட்டு வீட்டில் அந்தச் சிறிய சமையலறையில் உலகை வென்ற மகிழ்வோடு தனி உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த இருவரையும் காண காண தெவிட்டவில்லை அவனுக்கு... அவர்களது உலகம் மிகவும் சிறியது என்று அந்தக் கணம் அவனுக்குத் தோன்றியது...

அதனால் தான் என்னவோ அவளுக்குப் பணத்தின் அருமை தெரியவில்லையோ... இருக்கும் யார் கண்டது...? என்றாவது ஒருநாள் பட்டணத்து பகட்டின் நிழல் அவள் மீது படியும் போது அவளும் மாறுவாள் என்றே அவனுக்கு நினைக்கத் தோன்றியது...

ஒன்றை பார்க்காத வரை, அனுபவிக்காத வரை அதன் தாக்கம் நம்மிடையே பெரிதாக இருக்காது... ஆனால் ஒரு தடவை சொகுசை மனதும், உடலும் அனுபவித்து விட்டால் அதன் பின் அதை விட மனம் வராது...

'உன்னை மாற்றிக் காட்டுகிறேன் பெண்ணே...!!!' என்று மனதில் சபதம் எடுத்து கொண்டவனாய் அங்கிருந்த

தூணில் சாய்ந்து கால்களை நீட்டியபடி அவர்களைப் பார்த்தவாறு அமர்ந்தான்...

"அக்கா... தேனுக்கா... தேனுக்கா..." என்று சின்னவள் பெரியவளின் தாடையைப் பற்றிக் கொஞ்சி கெஞ்சி கேட்க...

"பாப்பாவுக்குப் பசிக்குதா...?"

"ஆமா..." என்று பாவம் போல் கூறியது அந்தச் சின்னச் சிட்டு...

அருகில் இருந்த மண் ஜாடியில் இருந்து தேனில் ஊற வைத்த பெரிய நெல்லிக்கனியை எடுத்து சின்னவளுக்கு ஊட்டிவிட்டாள் பிரகதீஸ்வரி...

"அக்கா... நானு..." என்றபடி சின்னவள் பெரியவளுக்கு ஊட்டிவிட்டாள்...

இருவரது அன்பை கண்ட சித்தார்த்தின் முகத்தில் புன்னகை நிறைந்தது...

"பாப்பா... ஒழுங்கா சாப்பிடக் கூடாதா...?" என்று கடிந்தபடி சின்னவள் வாயோரம் ஒழுகிய தேன் துளியை பிரகதீஸ்வரி துடைத்து விட...

"அய்யே... உனக்கும் தான் ஒழுகியிருக்கு..." திவ்யா வாய் பொத்தி நமட்டுச் சிரிப்பு சிரிக்க...

தனது இதழோரம் வழிந்த தேன் துளியை நாக்கை வெளியில் நீட்டி வழித்துத் துடைத்துச் சப்பு கொட்டிய பிரகதீஸ்வரி,

"நானும் உன்னைப் போல் சின்னப் பொண்ணு தான்டி..." என்று கொஞ்சல் குரலில் கூற...

இருவரையும் மாறி மாறி பார்த்த சித்தார்த்திற்குப் பிரகதீஸ்வரி கூற்றை அப்படியே ஒத்துக் கொள்ள வேண்டும் என்றே தோன்றியது... ஏனெனில் சின்னவளுக்கு இணையாகப் பெரியவளும் இதழோரம்

தேன் ஒழுக ஒழுக நெல்லிக்கனியை உண்டு கொண்டிருந்தாள்... இப்போது பார்ப்பதற்குப் பிரகதீஸ்வரி சின்னஞ்சிறு சிறுமி போல் கள்ளங்கபடமற்ற மனதுடன் காட்சியளித்தாள்...

அவனது பார்வை பிரகதீஸ்வரியை உறுத்தியதோ என்னவோ பக்கவாட்டில் திரும்பி அவனைப் பார்த்தாள்... அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது கண்டு,

"எதுவும் வேணுமா...?"

திடுமென அவள் அப்படிக் கேட்டதும் அவன் என்ன பதில் சொல்வது என்று தெரியாது தடுமாறினான்...

"உனக்கு எதுவும் உதவி வேண்டுமா...?" எதையோ கூறி சமாளித்து வைத்தான் அவன்...

"உங்க உதவி எனக்கு வேண்டும் தான்..." என்று பதில் கூறியவள்,

"இந்தக் காய்களை நறுக்கி கொடுக்க வேண்டும்... தேங்காய் துருவி மசாலா அரைக்க வேண்டும்..." என்று அவள் உதவிகளை அடுக்கி கொண்டே போக...

அவனோ திருதிருவென விழித்தான்... பிறந்ததில் இருந்து சமையலறை பக்கம் எட்டி பார்க்காதவன் அவன்... உணவு மேசையில் இருக்கும் உணவை உண்ண மட்டும் தான் தெரியும்... அதுவும் ருசி பார்க்காது பசிக்காக மட்டுமே... அப்படிப்பட்டவனிடத்தில் அவள் உதவி கேட்டால் அவனுக்கு என்ன தெரியும்...

ஆனாலும் தெரியாது என்று சொல்லி தனது கெத்தை விட்டு கொடுக்க விரும்பாது அவன் அவளிடம்,

"இதை எல்லாம் நான் செய்யத் தயார் தான்... ஆனால் அதற்கு நான் அங்கு வர வேண்டுமே..." வீட்டின் உட்புறத்தை சுட்டிக்காட்டியவன்,

"உள்ளே வரவா...?" நமட்டுச் சிரிப்புடன் கேட்டான்...

"ஐயோ வேண்டாம்..." கண்களில் பயம் காட்டியவளை கண்டு திருப்தி புன்னகை புரிந்தவன்,

"அது... அந்தப் பயம் இருக்கணும்..." ஒற்றை விரல் நீட்டி அவளைப் போலியாய் மிரட்டினான்...

"சரிங்க சாமி..." வாய் பொத்தி பணிந்தவளை கண்டு சிறுமி சிரிக்கத் துவங்கியதும் சித்தார்த்தும் உடன் சேர்ந்து சிரித்தான்...

இருவரும் சிரிப்பது கண்டு பிரகதீஸ்வரி முகத்திலும் புன்னகை தோன்றியது... அதன் பின் அவன் அவளுடன் இலகுவாக உரையாடி கொண்டிருக்க அவளது வாய் அவனிடத்தில் பேசினாலும் கைகள் லாவகமாக வேலைகளைச் செய்து கொண்டிருந்தது...

அவள் சமைத்து முடிக்கவும் சரவணன் படை பட்டாளத்துடன் வந்து சேரவும் சரியாக இருந்தது...

"பிரகதி செம பசி... சோத்தை போடு..." என்று கூறியவாறு சித்தார்த்தின் அருகில் அமர்ந்தான் அவன்...

எல்லோரும் வரிசையாகத் திண்ணையில் அமர, எல்லோரின் முன்பும் தலை வாழையிலை போடப்பட்டுச் சிவப்பு நிறம் கலந்த பச்சை நிற காய் ஒரு துண்டும், விரல் நீளத்தில் காபி பொடி நிறத்தில் பொரிக்கப்பட்ட ஒரு வஸ்துவையும் கொண்டு வைத்த பிரகதீஸ்வரியை பார்த்து சித்தார்த்,

"இது என்ன...?" இரண்டையும் சுட்டிக்காட்டி கேட்டான்...

"இது நார்த்தங்காய் ஊறுகாய்..." சிவப்பாய் இருந்ததைச் சுட்டிக்காட்டி கூறியவள்,

"இது வாழைப்பூ வத்தல்..." என்றாள் விரல் நீளத்தில் காபி பொடி நிறத்தில் இருந்ததைக் காட்டி...

"ஓ..." இதெல்லாம் அவன் கேள்விப்பட்டது கூடக் கிடையாது...

அவன் வாழைப்பூ வற்றலை எடுத்து வாயில் போட்ட போது அது அப்படியே வாயில் கரைந்தது... லேசாகத் துவர்ப்பு இருந்த போதும் அது அவ்வளவு ருசியாக இருந்தது...

அடுத்துக் கொஞ்சம் சர்க்கரை பொங்கல், பிறகு கூட்டாஞ்சோறு என்றழைக்கப்படும் காய்கறிகள் கலந்த கதம்பச் சாதம் இரண்டும் இலையில் பரிமாறப்பட்டது... அதன் வாசனையே அவனுள் உண்ணும் ஆர்வத்தைத் தூண்ட ஆவலுடன் அதை எடுத்து உண்டான்...

வாழையிலையின் நறுமணத்துடன், பசும் நெய் வாசத்துடன், சூடாய் இருந்த அந்த உணவு அமிர்தமாய் அவனது தொண்டையில் இறங்கியது... அவன் சுற்றி வந்த வெளிநாடுகளில் எத்தனையோ நட்சத்திர விடுதிகளில் பல வகை உணவுகளை உண்டிருக்கிறான் தான்... ஆனால் அது எல்லாம் இது போல் நாக்கிற்குச் சுவையாக இருந்தது இல்லை... உணவை ருசித்து ரசித்து உண்ண தெரியாதவன் இன்று உண்மையில் உணவை ரசித்து உண்டான்...

எல்லோரிடமும் பேசி மகிழ்ந்து கொண்டு உண்டதில் வழக்கத்திற்கு மாறாக அவன் சற்று அதிகமாகவே உண்டு விட்டான்...

"சரவணா... இப்படியே உட்கார்ந்திருந்தால் வயிறு வெடித்து விடும்... வா, நாம் அப்படியே நடந்துவிட்டு வருவோம்..." என்று சரவணனை அழைத்தான்...

"சரி அத்தான்..." என்றபடி எழுந்த சரவணன் தங்கையிடம்,

"நாங்க அப்படியே வீட்டுக்குப் போகிறோம்... நீயும் எங்க கூட வருகிறாயா...?"

"இல்லை நீங்க போங்க... நான் இவங்களை எல்லாம் வீட்டில் விட்டுட்டு வர்றேன்..."

"சரி பிரகதி..." என்ற சரவணன் முன்னால் செல்ல...

அங்கேயே நின்ற சித்தார்த் பிரகதீஸ்வரியிடம், "தேங்க்ஸ்..." என்று நன்றியுரைக்க...

அதில் அவளது விழிகள் வியப்பில் விரிந்தது... அவளது அகன்ற விழிகள் அவனுக்கு ஆழ்கடலை நினைவுப்படுத்தியது... ஒரு நொடி ஆழ்ந்து பார்த்தவன் பின்பு சட்டென்று கிளம்பி சென்று விட்டான்...

இன்னமும் வியப்பு மாறாமல் நின்றிருந்தாள் பிரகதீஸ்வரி... வந்த முதல் நாள் கன்னத்தில் அடித்துக் கோபம் கொண்ட சித்தார்த்தா இவன் என்று அவளுக்குப் பெருத்த ஆச்சிரியமாக இருந்தது... அதை விடக் காலையில் அவளிடம் கோபம் கொண்டு கத்தியவன் இப்போது நன்றியுரைத்து விட்டுச் சென்றது அவளுக்கு அதிசயமாக இருந்தது...

ஆனாலும் அவனது இந்த மாற்றம் அவளுக்குப் பிடித்துத் தான் இருந்தது...

"இப்படிச் சிரித்த முகத்துடன் இருந்தால் நல்லாத்தான் இருக்காங்க..." என்று முணுமுணுத்து கொண்டவள் எல்லாவற்றையும் ஒதுங்க வைக்கத் துவங்கினாள்...

சிறுவர், சிறுமியர்களும் ஆளுக்கொரு வேலை செய்து உதவ அவள் விரைவில் வேலையை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டாள்... அவள் வரும் வரை சித்தார்த்தும், சரவணனும் வீடு வந்து சேரவில்லை...

"சித்துவும், சரவணனும் எங்கே...?" என்று அவளை வாசலிலேயே பிடித்துக் கொண்டார் விமலாராணி...

"காலாற நடந்துட்டு வர்றேன் போனாங்க..."

"இந்த வெயிலிலா...?" என்று முகத்தைச் சுளித்தபடி விமலாராணி வெளிவாசலை பார்த்தார்...

பிரகதீஸ்வரி ஒன்றும் பேசாது உள்ளே சென்றுவிட்டாள்...

சிறிது நேரம் கழித்து வீட்டிற்கு வந்தனர் சரவணனும், சித்தார்த்தும்... வந்தவுடனேயே சரவணன் தோட்டத்தில்

நடந்ததை எல்லாம் மகிழ்வுடன் கூற, அதைக் கேட்டு விமலாராணி முகம் செத்துப் போனது... மகன் சென்றதும் மெல்ல சித்தார்த்திடம்,

"என்ன சித்து இப்படிப் பண்ணிட்ட...?"

"என்ன பண்ணினேன்...?" அலைப்பேசியை எடுத்து நோண்டி கொண்டே அவன் ஒன்றும் அறியாதது போன்று கேட்க...

அதைக் கண்டு பல்லை கடித்தார் அவர்... ஆனால் அண்ணன் மகனிடத்தில் கோபம் கொண்டால் காரியம் ஆகாது என்று தெரிந்தவராதலால் உடனே சற்று தழைந்து போனார்...

"நாம அவள் கிட்ட இருந்து அதிகாரத்தைக் கைப்பற்றணும் நினைச்சா, நீ அவள் கூடப் போய் ஒட்டி உறவாடிட்டு வந்திருக்க...?"

அதில் அவரை நிமிர்ந்து பார்த்தவன், "உறவாடி கெடு என்பதைப் பற்றி நீங்க கேள்விப்பட்டது இல்லையா அத்தை...?" என்று அழுத்தம் திருத்தமாய்க் கூற...

அதைக் கேட்டு அவர் அகமகிழ்ந்து போனார்...

"ஓ... நீ அப்படிச் சொல்லுறியா...? நான் என்னவோ வேறு மாதிரி நினைச்சேன்..."

"நீங்க என்ன நினைச்சீங்க...?" அவரைத் துளைத்தெடுப்பது போல் கூர்மையாய் பார்த்தான் அவன்...

'நீயும் இந்த ஊர் மக்கள் போல் அவளிடம் மயங்கிவிட்டாயா...?' என்று அவனிடத்தில் கேட்டுத் தனக்குத் தானே ஆப்பு வைத்துக் கொள்ள அவர் தயாராக இல்லை...

"நான் நினைக்கிறது இருக்கட்டும்... இந்த வருச பொங்கலுக்காவது அண்ணா, அண்ணியை இங்கே வர சொல்லு சித்து... நான் சொன்னால் உன் அம்மா கேட்க மாட்டாள்... நீ சொன்னால் தான் கேட்பாள்..."

சகோதரனை வரவழைத்து அப்படியே சித்தார்த்திற்கும், சந்தியாவிற்கும் திருமணப் பேச்சு வார்த்தையைச் சுபமாக ஆரம்பித்து விட வேண்டும் என்று அவர் பகல் கனவு கண்டார்...

"எந்த வருசம் வரலைன்னாலும் இந்த வருசம் அவங்க கண்டிப்பா வருவாங்க அத்தை... ஏன்னா அன்னைக்குத் தான் ஒரு விஐபியோட பிறந்தநாள் வருது..." என்றான் அவன் புன்னகையுடன்...

"சித்து... உனக்கா பிறந்தநாள் வருது..."

அதை அவன் ஆமோதித்துச் சிரித்தான்...

"அப்போ இந்தப் பொங்கல் விழாவை எல்லோரும் சேர்ந்து நல்லா சிறப்பா கொண்டாடிடுவோம்..."

"நிச்சயமாய்..." என்றபடி எழுந்தான் அவன்...

"அண்ணாவுக்கு நானும் பேசறேன்... நீயும் பேசி சொல்லிரு சித்து..."

"கண்டிப்பா..." என்றபடி அவன் சென்றுவிட்டான்...

சித்தார்த் சட்டென்று ஒத்து கொண்டதே விமலாராணிக்குத் திருப்தியாக இருந்தது... இனி எல்லாம் அவர் வசம்...

****

அன்றிரவு மடிகணினியில் அமர்ந்து வெகுநேரம் வேலை செய்த சித்தார்த்திற்குக் கால்கள் மரத்துப் போனது போல், கழுத்து வலிப்பது போல் தோன்ற படுக்கையில் இருந்து எழுந்து அறையை விட்டு வெளியில் வந்தான்... அங்கு வரவேற்பறையில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்த பிரகதீஸ்வரியை கண்டு ஆச்சிரியமாய்ப் பார்த்தவன் கடிகாரத்தை நோக்கினான்... அதிகாலை ஒன்றாகி இருந்தது...

மீண்டும் அவளைப் பார்த்தவனுக்கு அவள் அமர்ந்திருந்த தோரணை கண்டு சிரிப்பு வந்தது... தரையில் அமர்ந்து கீழே

விரித்திருந்த புத்தகத்தை நோக்கி குனிந்து மும்முரமாகப் படித்துக் கொண்டிருந்தாள்... அப்படிப் பார்க்கும் போது தரையோடு தலையை முட்டி கொண்டு படிப்பது போல் அவனுக்குத் தோன்றியது...

'இதைத் தான் முட்டி முட்டி படிப்பது என்று சொல்வார்களோ...?' கேலியாய் நினைத்துக் கொண்டு அங்கு வந்தவன் அவள் அருகே வந்து,

"இந்த நேரத்தில் தூங்காம என்ன பண்ணுகிறாய்...?"

திடுமென ஒலித்த குரலில் திடுக்கிட்டு நிமிர்ந்தவள் அங்குச் சித்தார்த்தை கண்டதும் விழிகளில் சிறு நிம்மதி படர,

"பார்த்தால் தெரியலையா...? படிச்சிட்டு இருக்கேன்..."

"அது தெரிகிறது..." என்று அவள் முன்னிருந்த சோபாவில் அமர்ந்தவன்,

"இந்நேரம் தூங்காம என்ன படிப்பு வேண்டியிருக்கு...?" என்றான் சற்று அதட்டலாக...

"எக்ஸாம் நெருங்குது இல்லையா அதுக்குத் தான்..."

"ஓ..." என்றவன்,

"புத்தகத்தோட சண்டை போட்டுப் படிக்கிறவங்களைத் தான் நான் பார்த்திருக்கிறேன்... அது என்ன நீ வித்தியாசமா தரையோடு சண்டை போட்டுக்கிட்டு படிக்கிற...?" என்றவனது குரலில் கேலி இல்லாது குறும்பு இருந்தது...

"பார்த்துட்டீங்களா..." வெட்கத்தில் முகம் சிவந்தவள்,

"அது... இது புரியலை... அதான்..." பாட புத்தகத்தைச் சுட்டிக்காட்டினாள் அவள்...

"எங்கே கொடு பார்க்கலாம்...?" என்றவன் அவளது பாட புத்தகத்தை வாங்க கை நீட்டினான்...

அவள் மண்டியிட்ட வாக்கில் அவன் அருகே நகர்ந்து வந்து அவனது கைகளில் புத்தகத்தைக் கொடுத்தவள்,

"உங்களுக்கு இது தெரியுமா...?"

"நானும் ப்ளஸ்டூ படிச்சியிருக்கேன்..." என்றவனின் கவனம் பாட புத்தகத்தில் இருந்தது...

அவளும் அவனது கவனத்தைச் சிதைக்காதவாறு அவனது அருகில் கீழே அமர்ந்தாள்... முழுவதும் படித்து முடித்தவன் அதைப் பற்றி விளக்கமாக, தெளிவாக எடுத்துரைக்க வியப்புடன் அதைக் கேட்டு கொண்டவள் இறுதியில்,

"நீங்க என்ன படிச்சிருக்கீங்க...?"

"கம்யூட்டர் இன்ஜினியரிங்..."

"ஓ... அப்போ ஐடி கம்பெனிக்கு வேலைக்குப் போகலையா...?"

அறியாமையுடன் கேட்டவளை உற்று நோக்கினான்... வார்த்தைக்கு வார்த்தை 'த க்ரேட் சித்தார்த்' என்று அவன் தன்னைப் பற்றிச் சொல்லும் போதே அவனது உயரம் அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டாமோ... ஆனாலும் அவளது இந்த அறியாமை ஏனோ அவனுக்குப் பிடிக்கத்தான் செய்தது...

"என்ன செய்ய... என் வீட்டில் வேலைக்குப் போக வேண்டாம்ன்னு சொல்லிட்டாங்களே..." என்று சோகமாய்ச் சொன்னவனின் கண்கள் சிரித்தது குறும்பாய்...

அதில் சுதாரித்துக் கொண்டாள் அவள்...

"பொய் சொல்றீங்க... நீங்க பெரிய பணக்காரர்... அதான் உங்க வீட்டில் வேலைக்கு அனுப்பலையோ என்னவோ..."

"கண்டுபிடித்து விட்டாயே... கெட்டிக்காரி தான்..." என்று அவன் அவளைப் போலியாய் மெச்சினான்...

அவனது கேலியில் மீண்டும் நாணம் கொண்டு முகம் சிவந்தவள், "ஏதோ தெரியாம கேட்டுட்டேன்... அதுக்காக இப்படித்தான் கிண்டல் பண்ணுவீங்களா...?"

"சரி அதை விடு... நீ படித்து என்னவாகப் போகிறாய்...?" சாதாரணமாகக் கேட்பது போல் அவளை ஆழம் பார்த்தான் அவன்...

"சித்த மருத்துவம் படித்து இந்த ஊர் மக்களுக்குச் சேவை செய்யப் போறேன்..." நொடிப்பொழுது கூடத் தாமதியாது அவள் கூறினாள்...

"அப்போ இத்தனை சொத்துக்கள்... இதில் எல்லாம் உனக்கு விருப்பம் இல்லையா..."

"இல்லை..." காது தொங்கட்டான் ஆட பலமாகத் தலையாட்டி மறுத்தவள்,

"நான் அப்பா மாதிரி எளிமையாகத் தான் இருக்க விரும்புகிறேன்... இது எல்லாம் எனக்குத் தேவையில்லை... இருக்க ஆறடி நிலம், உண்ண கொஞ்சம் உணவு இது போதாதா எனக்கு..."

சித்தர்கள் போல் வேதாந்தம் பேசிய அந்தச் சிறு பெண் அவனுள் பல யோசனைகளை விதைத்தாள்... அவன் யோசனையாய் அவளைப் பார்த்திருந்தான்...

"நல்ல எண்ணம்..." என்று மெச்சுதலாய் கூறியவன்,

"இப்போதாவது போய்ப் படுக்கலாமே..." என்று கூற...

"ஆமாம் தூங்க போகிறேன்... நாளைக்கு ஸ்கூலுக்குப் போகணும்..." என்று பாட புத்தகங்களை அள்ளி பையில் போட்டவள் அறைக்குக் கிளம்பினாள்...

"அன்று வந்தானே உன் பிரெண்ட்..."

"கதிர், கதிரேசன்..."

"அவனும் டாக்டராக விரும்புகிறானோ...?"

"ஆமாம்..." என்று உற்சாகமாகப் பதிலளித்தவளின் நினைவில் அன்று சித்தார்த் பேசிய வார்த்தைகள் வந்து அவளது முகத்தை வாட செய்தது...

அதை அவனும் உணர்ந்து கொண்டானோ... எழுந்து அவள் அருகில் வந்தவன், "அது ஏதோ தெரியாம பேசியது... சாரி..."

"பரவாயில்லை விடுங்க... ஆனால் வார்த்தைகளைப் பேசும் முன் சற்று யோசித்துப் பேசுங்கள்... கொட்டிய வார்த்தைகளைத் திரும்ப அள்ள முடியாது..." என்றவள் அங்கிருந்து சென்றுவிட்டாள்...

அவள் கூறி சென்ற வார்த்தைகள் அவனுக்குச் சுளீரென்று உறைத்தது... அவள் சென்ற திசையைப் பார்த்துக் கொண்டு வெகுநேரம் அவன் நின்றிருந்தான்...

மறுநாள் காலையில் எழுந்து சித்தார்த் வெளியில் வந்த போது பிரகதீஸ்வரி அவனின் முன் கசாயம் அடங்கிய தம்பளரை நீட்டினாள்... பள்ளி செல்வதற்கு ஏற்றவாறு சீருடை அணிந்து புத்தம் புது மலர் போன்று மலர்ச்சியாய் நின்றிருந்தவளை கண்டு அவனுக்கும் மகிழ்ச்சி தொற்றிக் கொண்டது...

ஆனால் அவள் கையிலிருந்த கசாயத்தைக் கண்டு முகத்தைச் சுளித்தவனாய், "காலையிலேவா...?"

"காலையில் தான் குடிக்கணும்... அப்போ தான் வீசிங் சரியாகும்..."

"கொடுமைப்படுத்துகிறாய்..." என்று முனங்கியபடி அதை வாங்கிக் குடித்தான் அவன்...

கசப்பாய் இருந்ததைத் துயரத்தோடு விழுங்கியவனின் முகம் அஷ்டகோணலானது... அதைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது... வாயை பொத்தி கொண்டு சிரித்தவளை கண்டு,

"என் பிழைப்பு உனக்குச் சிரிப்பாய் இருக்கிறதா...?" என்று போலியாக அவன் கோபம் கொள்ள...

"அச்சோ... நான் கிண்டல் எல்லாம் பண்ணலை..." என்றவளுக்குக் கண்களில் கண்ணீர் தளும்பியது...

அதைக் கண்டு சற்று நிதானித்தவன், "பயந்துட்டியா...? சும்மா சொன்னேன்..." என்று கூறி சிரித்தவனைக் கண்டு அவள் நிம்மதி மூச்சுவிட்டாள்...

"வர்றேன்..." என்றுரைத்து விட்டு கிளம்பியவளை பார்த்தபடி அவன் நின்றிருந்தான்...

****

அன்றே சித்தார்த் தனியே தனஞ்செயனை சென்று சந்தித்தான்... சந்தித்தவன் வளவளவென்று வெட்டி கதைகள் பேசாமல் நேரே விசயத்திற்கு வந்தான்...

"எனக்கு ஜமீன்தார் குடும்பச் சம்பந்தப்பட்ட எல்லா விசயங்களும் தெரிய வேண்டும்..."

"இதைக் கேட்க நீங்க யார்...? அப்படி எல்லாம் வெளியாட்களிடம் சொல்ல முடியாது..." என்று தனஞ்செயன் முரண்டு பிடித்தான்...

"ஒழுங்கு மரியாதையாகச் சொன்னாயானால் சந்தோசத்தை அனுபவிப்பாய்... இல்லை என்றால் நரகம் எப்படி இருக்கும் என்பதை நான் உனக்குக் காட்ட வேண்டி வரும்..."

தன் முன் விஸ்வரூபம் எடுத்து நின்று திமிராய் பேசிய சித்தார்த்தை கண்டு தனஞ்செயன் பயந்து தான் போனான்... அவனுக்கு இருப்பது ஒரே ஒரு உயிர்... அதைச் சந்தோசமாக வாழ வைப்பதற்குத் தானே அவன் இத்தனை பாடு படுகிறான்... யார் எப்படிப் போனால் என்ன...? அவன் தான் மட்டும் நன்றாக வாழ்ந்தால் போதும் என்றே நினைத்தான்...

"அவரைப் பற்றி உங்களுக்கு என்ன சார் தெரியணும்...?"

"அவரோட உயில் பற்றி உனக்கு ஏதாவது தெரியுமா...?"

"ம்ஹூம்... அது எல்லாம் எங்க சீனியர் தான் கையாளுகிறார்... என்னிடம் கொடுப்பது கிடையாது..."

என்று சோகமாய்ச் சொன்னவன்,

"ஆனால் அதைத் தேடி கண்டுபிடித்து அதில் என்னயிருக்கிறது என்பது பற்றி நான் உங்க கிட்ட சொல்லி விடுகிறேன்... டோன்ட் வொர்ரி..." என்று முப்பத்திரண்டு பற்களையும் ஈயென்று காட்டி இளித்தான் அவன்...

"குட்..." என்று மெச்சிய சித்தார்த் இருக்கையில் இருந்து எழுந்தான்...

"சார்... அந்தச் சந்தோசம்..." தலையைச் சொறிந்தான் தனஞ்செயன்...

"இந்தச் சித்தார்த் சொன்ன சொல் தவற மாட்டான்... உனக்கு வேண்டிய சந்தோசங்கள் உன்னை வந்து சேரும்..." அலட்சியமாய்க் கூறியவன் அங்கிருந்து கிளம்பி வந்துவிட்டான்...

அதற்கு அடுத்து வந்த நாட்களில் அவன் பிரகதீஸ்வரியை காண முடியவில்லை... அவன் எழும் முன்பே அவள் பள்ளிக்கு சென்றிருந்தாள்...

'அவ்வளவு சீக்கிரம் போய் அங்கே என்ன செய்வாள் அவள்...' என்று நினைத்தபடி அமர்ந்தவனிடம் சோலையம்மாள் கசாயத்தைக் கொடுத்தாள்...

அதை அவன் வாங்காது, "எனக்கு வேண்டாம்..." என்று விட்டு எழுந்து சென்று விட்டான்...

ஏனோ பிரகதீஸ்வரி கொடுக்காது கசாயம் அவனது தொண்டையை விட்டு இறங்க மறுத்தது...

மறுநாள் பிரகதீஸ்வரி சோலையம்மாளிடம் சித்தார்த்திடம் கசாயத்தைக் கொடுக்கச் சொல்லிவிட்டு பள்ளிக்கு கிளம்ப ஆயத்தமானாள்...

"கண்ணு... அந்தத் தம்பி குடிக்க மாட்டேங்குது... நீ எதுக்கு வீணா கஷ்டப்பட்டுட்டு இருக்க..." என்க...

அதில் அவளுக்குத் தான் கஷ்டமாகி போனது... ஏன் இப்படிச் செய்கிறான் என்று நினைத்தவளுக்கு அன்று மூச்சிரைத்தபடி கஷ்டப்பட்ட சித்தார்த்தின் நிலை தோன்றி மனதினை வருத்தச் செய்ய அவள் அவனுக்காகக் காத்திருந்தாள்... அவன் எழுந்து வந்ததும் கசாயத்தை எடுத்துக் கொண்டு அவனிடம் சென்றவள்,

"இந்தாங்க..." என்க...

செய்தித்தாளில் மூழ்கியிருந்தவன் அவளது குரலில் வியந்து போய் நிமிர்ந்து பார்த்தான்... எதிர்பாராது அங்கு அவளைக் கண்டதும் அவனது முகம் மலர்ந்தது... அந்நேரம் அவனுக்கு அருகில் இருந்த தொலைப்பேசி அழைத்தது... அதை எடுத்துக் காதில் வைத்தவன் யாரென்று கேட்கும் முன் மறுபக்கம் இருந்து கம்பீரமான ஒரு ஆண் குரல் ஒலித்தது...

"அம்மு இருக்கிறாளா...?"

"அம்முவா...?" என்று சித்தார்த் யோசித்தான்...

"ஐய்... ஹரி அத்தான்..." கூவியபடி அவன் கையிலிருந்த ரீசிவரை பறித்தவள் அத்தானிடம் பேசும் ஆவலில் சித்தார்த்தை உரசி கொண்டு ஒட்டியபடி அமர்ந்தாள் பிரகதீஸ்வரி...

"அத்தான் எப்படி இருக்கீங்க...? எப்போ ஊருக்கு வர்றீங்க...? உங்களை எல்லாம் பார்க்கணும் போலிருக்கு..." என்று கிள்ளை மொழியில் கொஞ்சி பேசியவளை இடுங்கிய கண்களுடன் கூர்ந்து பார்த்தான் சித்தார்த்...

அவள் எவனையோ கொஞ்சி பேசியது அவனது மனதில் அனலை மூட்டியது என்றால், அவளது மென்மையான மேனி உரசியதில் அவனது வலிய தேகமோ தீப்பற்றி எரிந்தது...

மனதின் வெம்மையைத் தேகம் பிரதிபலித்ததோ...

தளிர் கொடி உரசி ஓங்கி வளர்ந்த தேக்கு மரம் திகுதிகுவெனப் பற்றியெரியும் முரணான, விந்தையான காட்சி அங்கு அரங்கேறியது...!!!

"அவளோ பால் மணம் மாறா பிள்ளை மனம் கொண்டவள்...
நீயோ அந்தப் பாலும் திரிந்து போகும் நஞ்சுடையவன்...
அவளோ பட்டாம்பூச்சியின் பின் பறந்து திரிபவள்...
நீயோ பகட்டின் பின்னால் சுற்றித் திரிபவன்...
உனக்குக் காதலுக்கும், காமத்திற்கும் வித்தியாசம் தெரியும்...
அவளுக்குக் காதலும் தெரியாது, காமமும் தெரியாது...
அவளுக்குத் தெரிந்தது எல்லாம் ஒன்றே ஒன்று, அது...
அன்பு அன்பு அன்பு மட்டுமே...
அன்பு கஞ்சமாய்ப் பஞ்சமாய்ப் போன உன்னிடத்தில்...
அந்த அன்பு எங்ஙனம் குடியிருக்கும்...???
நீயோ வட துருவம், அவளோ தென் துருவம்...
எதிர் எதிர் துருவங்கள் ஒன்றை ஒன்று ஈர்க்குமாம்...
அங்ஙனம் ஈர்ப்பு விசை வேலை செய்யும் போது
சேதாரம் உனக்கில்லை, அவளுக்குத் தான்...
விட்டு விடு சின்னஞ்சிறு சிட்டை...
சிறகடித்துப் பறக்கட்டும் சுதந்திர வானில்...!!!"

நனவாகும்...!!!

"அம்மு... ஒரே நேரத்தில் எத்தனை கேள்விகள்...? கொஞ்சம் மூச்சு விடு குட்டிம்மா...?" என்று கூறிய ஹரிப்ரசாத் வாய்விட்டுச் சிரித்தான்...

"அத்தான்... என்னை நீங்க கிண்டல் பண்றீங்களா...?" என்று பிரகதீஸ்வரி சிறு பிள்ளையாய் சிணுங்கினாள்...

அவளின் சிணுங்கலை மனச்சிணுங்கலுடன் பார்த்துக் கொண்டிருந்தான் சித்தார்த்... அவனும் இங்கு வந்த இத்தனை நாட்களாக அவளைப் பார்த்துக் கொண்டு தான் இருக்கின்றான்... அவள் எப்போதுமே பெரிய மனுசி தோரணையுடன் பக்குவமாக நடந்து கொள்வதைத் தான் இதுவரை அவன் பார்த்திருக்கிறான்... இப்படி உரிமையுடன் சிணுங்கியபடி அவள் பேசுவது கண்டு அவனுக்கு ஆச்சிரியமாய் இருந்த போதும் மனதிற்குள் எதுவோ ஒன்று புகைந்தது...

ஒருவித எரிச்சலுடன் அவளைப் பார்த்தவன் கண்ணில் அவளது மற்றொரு கையிலிருந்த கசாயம் அடங்கிய தம்பளர் விழுந்தது... அது அவன் மீதான அவளது அக்கறையை அவனுக்கு உணர்த்திய போதும் அவளது மறுகையில் இருந்த தொலைப்பேசி ரிசீவர் அவளது புறக்கணிப்பை நன்கு பறைச்சாற்றியதில் அவனுக்கு வந்த கோபத்தில் அந்தத் தம்பளரை வாங்கி முன்னிருந்த மேசை மீது 'நங்'கென்று சத்தத்துடன் வைத்தான்...

அதில் அவனைத் திரும்பி பார்த்த பிரகதீஸ்வரி நன்றியுடன் புன்னகைத்தாள்... 'யாருக்கு வேண்டும் இவளது நன்றி...?' என்று மனதுக்குள் முணுமுணுத்தவன் அவளை உறுத்து விழித்தான்...

"இதில் சந்தேகம் வேறா அம்முவுக்கு...? சாட்சாத் கிண்டலே தான்ம்மா..."

சித்தார்த்தின் விழி உறுத்தலை கண்டு முகம் சுருங்கிய பாவையவளை மனம் மலர செய்தான் ஹரிப்ரசாத் தனது

கேலி பேச்சால்...

"அத்தான்..." மீண்டும் அவள் சிணுங்க...

மீண்டும் சித்தார்த்தின் மனம் சுணக்கம் கொண்டது... இத்தனை களேபரத்திலும் அவன் அவளை விட்டு தள்ளி அமரவில்லை... இன்னமும் அவளது அருகாமையில் ஒட்டி கொண்டு தான் அமர்ந்திருந்தான்...

"எதற்கு இத்தனை அத்தான்...? இந்த முறையும் நான் வரும் போது உனக்காக நான் கண்டெடுத்த அரிய வகை மூலிகைகளைக் கொண்டு வந்து கொடுக்கிறேன்... அதற்காக எல்லாம் இப்படி ஐஸ் வைக்காதேம்மா... இங்கே கௌகாத்தியில் நல்ல குளிர்... ஏற்கெனவே குளிரில் விறைத்து போயிருக்கிறேன்..."

"அதுக்காக எல்லாம் நான் ஐஸ் வைக்கலை... என் அத்தான் நான் அப்படித்தான் அத்தான், அத்தான்னு கூப்பிடுவேன்... உங்களுக்கு என்ன வந்தது அத்தான்ன்ன்..." வார்த்தைக்கு வார்த்தை அவள் அத்தான் போட்டாள்...

அதைக் கேட்ட சித்தார்த்தின் இரத்த அழுத்தம் ஏகத்துக்கும் அதிகரித்தது...

"அம்மு கிட்ட பேசி ஜெயிக்க முடியுமா...?"

"அது..." இல்லாத காலரை தூக்கி விட்டு கொண்டவள்,

"அப்புறம் அத்தை எப்படி இருக்காங்க...? இரண்டு பேரும் எப்போது ஊருக்கு வர போறீங்க...? பார்த்து ரொம்ப நாளாச்சு அத்தான்..."

அவள் பேசியது கேட்டு ஹரிப்ரசாத் அப்படியே உருகி போய்விட்டான்...

"அம்மா நல்லா இருக்காங்கடா... உனக்காக எல்லா விடுமுறையும் சேர்த்து வச்சு எடுத்து இந்தத் தடவை பொங்கலுக்கு அங்கு வரலாம்ன்னு இருக்கிறேன்..."

"ஓ... சூப்பர் அத்தான்..." என்று அவள் குதூகலிக்க...

அப்படி இவள் சந்தோசப்படும் அளவுக்கு மறுமுனையில் அந்த அத்தான் என்ன சொல்லியிருப்பான் என்று மிகத் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தான் சித்தார்த்...

"அம்மு... நீ சந்தோசமா இருக்கியாடா...? உன் குரலில் ஏதோ ஒரு வித்தியாசம் தெரிகிறதே..."

மிகச் சரியாக அவளின் மனதினை கணித்து விட்டான் ஹரிப்ரசாத்... அதில் பிரகதீஸ்வரி திடுக்கிட்டு போனாள்...

ஹரிப்ரசாத் அவளது அன்னை கார்த்திகாயினியின் அண்ணன் மகன்... தந்தையை இழந்து தாயுடன் வசித்து வந்த அவனுக்குத் தந்தை ஸ்தானத்தில் இருந்து படிக்க வைத்து ஆளாக்கியவர் அவளது தந்தை நரசிம்மன்... அவனும் வீட்டுக் கஷ்டம் உணர்ந்து நன்கு படித்து இதோ இப்போது நல்ல வேலையில் இருக்கிறான்... அவன் பெரும்பாலும் வருடத்திற்கு ஒரு முறை தான் இங்கு வருவான்...

தொலை தூரத்தில் இருக்கும் அவனிடத்தில் தனது மனக்கஷ்டத்தைக் கூறாது தனக்குள் பூட்டி வைத்தவள்,

"அத்தான் உங்களுக்கு நல்ல கற்பனை திறன்... பேசாம நீங்க கதை எழுத போகலாம்..." சொல்லும் போதே அவளுக்குக் கண்கள் கரித்தது...

அவள் அப்படிச் சொன்னதும் அவனது மனம் லேசானது...

"உண்மை தான் அம்மு... விமலா அத்தை உன்னை நல்லா பார்த்துக்குவாங்கன்னு தெரிஞ்சும் நான் அப்படிக் கேட்டது தப்பு தான்..."

அதைக் கேட்டு அவள் மௌனம் காத்தாள்...

"சரி அம்மு... கடமை என்னை அழைக்கிறது..." என்றவன் பின் குறும்பு குரலில்,

"அத்தை மகளே... மஞ்ச தண்ணி கரைச்சி வச்சு தயாராயிரு... மாமன் ஆன் தி வே..." வேண்டுமென்றே அவன் வம்பிழுத்தான் அவன்...

"அத்தான்.. மஞ்ச தண்ணி என்ன, மலர் மாலையோடு காத்திருக்கிறேன்... ஆனால் இந்தத் தடவையாவது நீங்க ஜல்லிக்கட்டில் அட்லீஸ்ட் பத்து காளைகளையாவது அடக்கி காட்ட வேண்டும்..." அவளும் பதிலுக்கு அவனை வம்பிழுத்தாள்...

"நிச்சயமாய்... இந்த முறை அடக்கி காட்டுகிறேன் அத்தை மகளே..." வீர சபதம் பூண்டவன் அழைப்பை துண்டிக்க...

அவளும் சிரித்தபடி தொலைப்பேசியை வைத்தாள்... இதழில் புன்னகை மலர சோபாவில் இருந்து எழுந்தவளை சித்தார்த்தின் குரல் தடுத்து நிறுத்தியது...

"யாரவன்...?" கொஞ்சம் கடுமையுடன் வந்ததோ அவனது வார்த்தைகள்...

"அவர் என்னோட மாமா மகன் ஹரிப்ரசாத்..."

அவளுக்கு இருந்த மகிழ்ச்சியில் அவனது கடுமையைக் கவனிக்கவில்லை...

‘மாமன் மகன் என்றால் இப்படிப் பல்லை காட்ட வேண்டும் என்று எதுவும் சட்டம் இருக்கிறதா என்ன...?' கடுப்புடன் நினைத்தவன்,

"என்ன பண்ணுகிறான்...?"

"அவங்க ஃபாரஸ்ட்ல..."

அவள் கூறும் முன், "ஏன் குரங்கு பிடிக்கிறானா...? குரங்காட்டிக்காரனோ...?"

அதில் அவளுக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்தது...

"ஹரி அத்தானை பத்தி தப்பா பேசாதீங்க... அவங்க ஐஎஃப்எஸ் பாஸ் பண்ணி ஃபாரெஸ்ட் ஆபிசரா இருக்காங்க..."

"அடேங்கப்பா..." என்றவனுக்கு உள்ளுக்குள் புகைந்தது... அந்தக் கணம் ஹரிப்ரசாத்தின் கம்பீரமான குரல் வேறு

அவனது காதில் அபஸ்வரமாக ஒலித்து அவனை மிகவும் கடுப்பேற்றியது...

"ஏன் இந்த ஐஏஎஸ், ஐபிஎஸ் எல்லாம் படிக்கவில்லையா உங்கத்தான்...? அது படித்திருந்தால் இன்னமும் க்ரேடு கூடியிருக்குமே..." நக்கலாய் கேட்டவனின் நக்கல் அவளது காதில் ஏறினாலும் மனதில் ஏறவில்லை...

"அத்தானுக்கு இயற்கை வளங்களைப் பாதுகாக்கிறதுன்னா ரொம்பப் பிடிக்கும்... அதனால் தான் ஐஎஃப்எஸ் தேர்ந்தெடுத்தாங்க... உண்மையில் அவங்க ஐஏஎஸ் தான் பாஸ் பண்ணினாங்க..."

சித்தார்த் கிண்டல் அடிப்பதற்கு வாய்ப்புக் கொடுக்காமல் அதற்கும் ஆப்பு வைத்தான் ஹரிப்ரசாத் தனது திறமையால்...

"ஓ..." உதட்டை ஒருமாதிரியாகச் சுழித்தவன்,

"உன்னைப் போல் ஒரு பைத்தியக்காரன் என்று சொல்..."

சித்தார்த்தின் கிண்டலான இந்த வார்த்தைகள் அவளைப் பெரிதும் சீண்டிவிட்டது...

"இயற்கை வளங்களை எல்லாம் அழித்து விட்டு நீங்க செயற்கையாக வாழ்ந்து செயற்கை பொருளை சாப்பிடும் போது தெரியும் இயற்கையின் அருமை... ஏற்கெனவே ப்ளாஷ்டிக் அரிசி, முட்டை, போலி காய்கறி எல்லாம் சந்தைக்கு வந்துவிட்டது... இனியும் வரும்... நீங்க அதை வாங்கிச் சமைத்து சாப்பிட்டு நோயை விலைக்கு வாங்கிக்கோங்க... எங்களுக்கு என்ன வந்தது..."

அவள் ஆற்றாமையில் படபடவெனப் பொரிய துவங்கியதும் சட்டென்று சோபாவில் இருந்து எழுந்த சித்தார்த்,

"போதும் உன் ஒன்றுக்கும் உதவாத வேதாந்தம்..." எரிச்சலுடன் மொழிந்தவன் அங்கிருந்து செல்ல முயன்றான்...

அப்போது மேசை மீதிருந்த கசாயத்தைக் கண்டவள் அதை எடுத்து அவனிடம் நீட்டியபடி, "இதை நீங்க குடிக்கவே இல்லையே..." என்று அக்கறையுடன் கேட்க...

அவளை இமைக்காது பார்த்தபடி வாங்கியவன் அடுத்த நொடி அதை அருகிலிருந்த பூச்சாடியில் ஊற்றினான்..

"இனி இது எனக்குத் தேவைப்படாது..." என்று அலட்சியத்துடன் கூறியவனின் முகம் கடுமையாய் மாறியிருந்தது...

அவனது செயல் கண்டு விக்கித்து நின்றவள், அவனது தோற்றத்தில் உள்ளுக்குள் உறைந்தாள்... ஏனெனில் அவன் வந்த புதிதில் இருந்த சித்தார்த்தாய் உணர்ச்சிகளைத் துடைத்த முகத்துடன் கல்லாய் மாறிருந்தான்... அவனின் மன மாற்றத்திற்குக் காரணம் தெரியாமல் பேதையவள் விழித்தாள்...

திகைத்து விழித்து நின்றவளின் தோற்றம் ஏனோ அவனது மனதிற்கு ஒருவித திருப்தியை தர அவன் அங்கிருந்து சென்று விட்டான்...

எவ்வளவு நேரம் அப்படியே நின்றிருந்தாளோ சோலையம்மாள் வந்து உலுக்கவும் தான் நிகழ்காலத்திற்கு வந்தாள் பிரகதீஸ்வரி...

"கண்ணு... கதிர் வந்துட்டான் போலிருக்கு... ரொம்ப நேரமா சைக்கிள் மணியடிச்சிட்டு இருக்கான்..."

"இதோ கிளம்பிட்டேன் சோலை..."

விழிகளில் துருத்திய விழிநீரை உள்ளிழுத்து கொண்டவள் பள்ளிக்கு கிளம்பினாள்...

அவள் தனது மிதிவண்டியை எடுத்துக் கொண்டு கதிரேசனோடு சேர்ந்து பள்ளிக்கு செல்வதற்காகக் கிளம்பிய போது சித்தார்த்தின் கார் மிக வேகமாக இவர்களைக் கடந்து சென்றது... அதன் வேகத்தில் பறந்த புழுதி அவளது விழிகளில் விழுந்து கலங்க செய்தது...

ஏனோ தெரியவில்லை கண்களை மூடி தூசியைத் தடுத்த போதும் மீண்டும் மீண்டும் அவளது விழிகள் கலங்கியது...

எல்லோரும் அன்பு காட்டி தான் ஒருவரது மனதில் நீங்கா இடம் பிடிப்பார்கள்... ஆனால் சித்தார்த் மட்டும் பிரகதீஸ்வரியை புறக்கணித்து, உதாசீனம் காட்டி அவளது நினைவில் தன்னை நீங்காது இருக்கச் செய்தான்... அதுவே அவனுக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி தான்...

அன்பு காட்டாது அவனுக்குத் தெரிந்த ஆணவத்தை அவளிடத்தில் காட்டி அவளை அடக்கினான்...

"சின்னம்மா... போகலாமா...?" கதிரேசன் கேட்கவும் தனது மிதிவண்டியை மிதித்தாள் பிரகதீஸ்வரி...

பள்ளி வந்து சேரும் வரை அவளது மனதுக்குள் சித்தார்த்தின் நினைவுகளே... பள்ளி வந்ததும் பாடத்தில் கவனம் செலுத்தியவளுக்குச் சித்தார்த்தின் நினைவுகள் பின்னுக்குத் தள்ளப்பட்டது...

அவளைப் போல் அல்லாது அலுவலகம் வந்தும் சித்தார்த்தின் நினைவுகளில் பிரகதீஸ்வரியே நிறைந்திருந்தாள்... ஏன் என்று சொல்ல முடியாத ஒருவித கோபம், எரிச்சல் எல்லாம் சேர்ந்து அவனது மனதினை போட்டு குழப்பியது... எதற்கு என்று சொல்ல முடியாத ஆத்திரம்...

அலுவலகம் வந்தும் நாற்காலியில் அமராமல் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து அறையின் நீள அகலத்தை அளந்து கொண்டிருந்தான்... பொதுவாக அவனது இயல்பு இது கிடையாது... ஆனாலும் இன்று அவனது மனம் அவனது கட்டுப்பாட்டை மீறி சென்று கொண்டிருந்தது...

அந்தக் கணம் சரவணன் விசிலடித்தபடி சாவகாசமாக அறைக்குள் நுழைந்தான்... அதைக் கண்டதும் சித்தார்த்திற்குக் கோபம் எரிமலையாய் வெடித்துச் சிதறிவிட்டது...

"உன்னைக் கிளையண்ட்டை பார்க்க போகச் சொன்னேனே... அதைப் பண்ணாம நீ இங்கே என்ன பண்ற...?"

அதைச் சரவணன் சுத்தமாய் மறந்து போயிருந்தான்... தலையைச் சொரிந்து கொண்டே,

"இல்லை அத்தான்..."

அதைக் கேட்டதும் சித்தார்த் வெகுண்டு விட்டான்...

"இங்கே பார்... நான் உனக்காக இங்கே வந்து உட்கார்ந்து இருந்தால் நீ இப்படித்தான் பொறுப்பில்லாமல் நடத்து கொள்வாயா...? உன்னை எல்லாம்..." கோபத்தில் அவனைப் பிடித்துத் தாறுமாறாகத் திட்டிவிட, சரவணன் முகத்தைத் தொங்க போட்டுக் கொண்டு வெளியில் சென்றுவிட்டான்...

சரவணன் சென்றதும் சித்தார்த் தலையைப் பிடித்துக் கொண்டு நாற்காலியில் அமர்ந்துவிட்டான்... அந்நேரம் அவனது அலைப்பேசி அழைத்தது... அவனது அன்னை பிரபாவதி தான் அழைத்திருந்தார்...

அதை உயிர்ப்பித்தவன், "சொல்லுங்கம்மா..." என்றான் அதே எரிச்சலுடன்...

"சித்து... என்னடாச்சு...? எப்பவும் இப்படி டென்சனாக மாட்டியே...? இன்னைக்கு என்ன ஆச்சு...?"

"நத்திங்ம்மா... நீங்க சொல்லுங்க...?" தன் மனதினை மறைத்தபடி, வலிய வரவழைத்துக் கொண்ட நிதானத்துடன் அவன் பதில் கூறினான்...

"ஊருக்கு எப்போ வர்ற சித்து...?"

"இப்போதைக்கு இல்லைம்மா..." என்றவனது குரல் தீவிரமாய் ஒலித்தது...

"சித்து... உன் அத்தைக்காரியின் பேச்சை நம்பாதே... மாய்மாலக்காரி... பேசியே வசியம் பண்ணிருவாள்...

உங்கப்பா மாதிரி நீயும் அவள் சொல்வதை எல்லாம் நம்பாதே..."

அன்னையின் பேச்சு கேட்டு அவனது முகத்தில் புன்னகை தோன்றியது... தனக்குள் சிரித்துக் கொண்டான்...

"அப்படி எல்லாம் எதுவும் இல்லைம்மா... சரவணன் கொஞ்சம் வேலையைப் பழகியதும் நான் அங்கு வந்துவிடுவேன்..."

"என்னமோ சித்து... நீ அங்கே இருக்கிறது எனக்குக் கொஞ்சமும் சரியாப்படலை... உன் பிறந்தநாளுக்கு நீ இங்கே நம் வீட்டிற்கு வந்துவிடு..."

அன்னை கூறியதும் தான் அவனுக்கு அத்தை கூறியது நினைவில் வந்தது...

"அம்மா... இப்போதைக்கு என்னால் அங்கு வர முடியாது... அதனால் நீங்க எல்லோரும் இங்கே கிளம்பி வந்திருங்களேன்..."

"ஏன் உன் அத்தை இப்படிச் சொல்ல சொன்னாளாக்கும்..." நொடித்துக் கொண்டு அவர் கேட்க...

அன்னையின் புத்திசாலிசனத்தை மனதுக்குள் வியந்தபடி, "ஆமாம்மா... அத்தையும் சொல்ல சொன்னாங்க..."

மறுபக்கம் இருந்த பிரபாவதியின் மனம் வேக வேகமாய்க் கணக்கிட்டது... சோழியன் குடுமி சும்மா ஆடாது... விமலாராணி இப்படிச் சொல்கிறாள் என்றால் இதற்குப் பின்னால் ஏதோ பெரிய சதி திட்டம் இருக்க வேண்டும் என்று அவரால் ஊகிக்க முடிந்தது...

"சித்து... உன்னோட கல்யாணம்..." அன்னை கூறும் போதே இடைமறித்தவன்,

"இப்போ அதுக்கு என்ன அவசரம்மா... எனக்கு இப்போது தான் இருபத்தியாறு வயதாகிறது... கல்யாணம் பண்ணுவதற்குக் குறைந்த பட்சம் முப்பது வயதாவது ஆகணும்மா..."

"அப்படின்னு யார் சொன்னது...? எங்களுக்கு இருக்கும் ஒரே மகன் நீ... உனக்குக் கல்யாணம் பண்ணி பார்க்கணும்ன்னு நாங்க ஆசைப்பட மாட்டோமா..."

"முதல்ல நீங்க இங்கே கிளம்பி வாங்க... பிறகு கல்யாணத்தைப் பத்தி பேசலாம்..." என்றதோடு அவன் முடித்துக் கொண்டான்...

பிரபாவதியால் அவனைப் போல் இந்த விசயத்தைச் சாதாரணமாக விட முடியவில்லை... அவரது மனம் வேகமாய்க் கணக்கு போட்டது... அதன் விளைவு மார்க்கண்டேயபுரத்திற்கு உடனே கிளம்ப ஆயத்தமானார்...

அவருக்குச் சந்தியாவைத் தன் மருமகளாக்கி கொள்வதை விடத் தனது தம்பி மகள் சங்கமித்ராவை தன்னுடைய மருமகளாக்கி கொள்ள வேண்டும் என்று வெகுநாள் ஆசை... சங்கமித்ரா அழகு, அறிவு, குணம் என்று அனைத்தும் நிறைந்த பெண்... சித்தார்த்திற்கு அவள் வெகு பொருத்தமாக இருப்பாள் என்பது அவருடைய எண்ணம்...

****

அன்றிரவு சித்தார்த் வேலை முடித்து வந்த போது பிரகதீஸ்வரி வரவேற்பறையில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தாள்... அன்று சரவணன் சீக்கிரமே வீடு திரும்பி விட்டான்...

உள்ளே வந்த சித்தார்த் அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான்... அங்கிருந்தவளை அவன் சிறிதும் கண்டு கொள்ளவில்லை... அவள் தான் அவனைக் கண்டதும் அவசரமாய் எழுந்து நின்றவள் அவன் தன்னிடம் ஏதாவது பேசுவானா என்று ஆவலுடன் அவனின் முகத்தைப் பார்த்தாள்...

சித்தார்த் இருக்கையில் சாய்ந்து தலையைப் பின்னால் சாய்த்தவன் அடிக்கண்ணால் அவளைப் பார்த்தான்... பார்ப்பதற்கு அவன் கண்களை மூடியிருப்பது போல்

தோன்றும்... ஆனால் அவன் அவளைத் தான் விடாது பார்த்துக் கொண்டிருந்தான்...

அவள் கைகளைப் பிசைந்து கொண்டு தவிப்புடன் தன்னைப் பார்த்துக் கொண்டிருப்பது கண்டு அவனுக்கு வெகு திருப்தியாக இருந்தது... சற்று நேரம் முன்பு வரை மனதை போட்டு பாடாய் படுத்திக் கொண்டிருந்த அலைப்புறுதல் இப்போது சுத்தமாய்க் காணாமல் போயிருந்தது அவனிடத்தில் இருந்து...

கண்களை மூடி கொண்டிருந்தவனை எப்படி அழைப்பது என்று தெரியாது அவள் விழித்தாள்... அத்தான் என்றா அல்லது பெயர் சொல்லியா எப்படி அழைப்பது என்று அவளுக்குத் தெரியவில்லை...

"க்கும்..." என்று தொண்டையைக் கனைத்து பார்த்தாள்...

ம்ஹூம் அவன் அசையும் வழி தெரியவில்லை...

"என்னங்க..."

ம்ஹூம் அதற்கும் அவன் அசையவில்லை... அதனால் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவன் அருகில் சென்றவள் அங்கிருந்த செய்தித்தாள் கொண்டு அவனது கையைத் தொட்டு,

"என்னங்க..." என்றழைக்க...

அதில் அவன் கண் திறந்து 'என்ன' என்பது போல் பார்த்தான்... திடுமென அவன் அப்படிப் பார்த்து வைத்ததில் ஒரு கணம் தடுமாறியவள்,

"ஏன் என் மேல் கோபம்...?" என்று கேட்டவளை உற்று கவனித்தவன்,

"நான் இங்கு வந்த நாளில் இருந்து உனக்கும் எனக்கும் எப்போதும் சண்டை தான்... இதில் நீ எந்தக் கோபத்தைப் பற்றிக் கேட்கிறாய்...?" என்று அமர்த்தலான குரலில் கேட்டவனைக் கண்டு அவள் அயர்ந்து போய் நின்றாள்...

இடையில் கடந்து சென்ற இனிமையான நாட்களை இவன் மறந்து விட்டானோ... அவள் என்ன பதில் கூறுவது என்று தெரியாது மலைத்து நின்றாள்...

அந்நேரம் அவனுக்குச் சிறிது மூச்சிரைத்தது... அதைக் கண்டு பதறி போனவளாய்,

"நான் மருந்து கொண்டு வரவா...?"

"வேண்டாம்..." என்று தடுத்தபடி எழுந்தவன்,

"என் உயிர் போகும் நிலை வந்தாலும் உன் கையால் எனக்கு எதுவும் தேவையில்லை..." என்றவன் தனது அறைக்கு விறுவிறுவெனச் சென்று விட்டான்...

அவனது வார்த்தையில் அவள் விக்கித்துப் போய் நின்றாள்... தான் என்ன தவறு செய்தோம் என்று அவளுக்கு விளங்கவில்லை... புரியாத புதிராய் சித்தார்த் இருந்தான்...

அதன் பின்னர்ப் பிரகதீஸ்வரி அவனிடத்தில் இருந்து சற்று விலகியே இருந்தாள்... தேவையில்லாமல் அவனிடத்தில் பேசி அவனைக் கோபப்படுத்த வேண்டாம் என்று... அதற்கும் அவனது மனம் அவளிடத்தில் கோபம் கொண்டது... அதனால் அவளை எப்போதும் முறைத்துக் கொண்டே திரிந்தான்...

****

அன்று காலையில் எழுந்த சித்தார்த்திற்குச் சற்று அளவுக்கு அதிகமாக உற்சாகம் பொங்கி வழிந்தது... ஏனெனில் அவனது பெற்றோர், அவனது அன்பு தங்கை ஸ்வேதா எல்லோரும் இன்று இங்கு வருகின்றனர்...

அவனுடன் பிறந்தவர்கள் ஒரு அக்கா, ஒரு தங்கை மட்டுமே... அக்கா ஸ்வர்ணா திருமணமாகி வெளிநாட்டில் வசித்து வருகிறாள்... தங்கை ஸ்வேதா கல்லூரி பிடித்துக் கொண்டிருக்கும் இருபது வயது இளம்பெண்...

அவன் அறையை விட்டு வெளியில் வந்த போது அத்தை வீடு அவனது பெற்றோரை வரவேற்க பரபரப்பாகத் தயாராகிக் கொண்டு இருந்தது... அதைக் கண்டு அவனுக்கு வெகு திருப்தி...

"அத்தான்... ஸ்வேதா இப்போது நன்றாக வளர்ந்திருப்பாள் இல்லையா...?"

அவனிடத்தில் ஆர்வமாய்க் கேட்டாள் சந்தியா...

"ஆம்... என்னில் முக்கால்வாசி உயரம் இருப்பாள்..." என்றான் தங்கையை நினைத்து பெருமையுடன்...

"அவ்வளவு பெரியதாக வளர்ந்து விட்டாளா..." அதிசயப்பட்டாள் சந்தியா...

அந்த வழியாக அவர்களைக் கடந்து சென்ற பிரகதீஸ்வரியை கண்டதும் சித்தார்த்தின் விழிகள் அவளையே பின்தொடர்ந்தது... அவனது கவனம் சந்தியாவின் பேச்சில் இல்லை..

"பத்து மணின்னு தானே சொன்னாங்க சித்து...? மணி பத்தாச்சே... இன்னும் அண்ணா, அண்ணியைக் காணவில்லையே..." கடிகாரத்தைப் பார்த்தபடி விமலாராணி கேட்க...

"வந்து விடுவாங்க அத்தை..." அவன் சொல்லி முடிக்கும் முன் வீட்டின் வாயிலில் கார் வந்து நின்றது...

காரிலிருந்து முதலில் கம்பீரமாக மார்த்தாண்டம் இறங்கினார்... அவரைத் தொடர்ந்து அலட்டலாய் பிரபாவதியும், ஸ்வேதாவும் இறங்கினர்...

"அண்ணா, அண்ணி வாங்க... வாங்க..." என்று பெரியவர்களை வரவேற்ற விமலாராணி ஸ்வேதாவை கண்டு,

"வாடியம்மா என் மருமகளே..." என்று வரவேற்க...

அதைக் கேட்டு சின்னவள் முகத்தைச் சுளித்தாள்...

"அத்தை... எதுக்கு என்னை மருமகள்ன்னு கூப்பிடுறீங்க...? ஸ்வேதான்னு பெயர் சொல்லி கூப்பிடுங்க..."

"அது எப்படிக் கூப்பிட முடியும்...? எப்படி இருந்தாலும் நீ என் மருமகள் தானே..." என்று கூறி விமலாராணி சிரிக்க...

அந்நேரம், "என்னை எல்லாம் வரவேற்க மாட்டீங்களா சித்தி...?" என்று கேட்டபடி காரிலிருந்து இறங்கினாள் சங்கமித்ரா...

அழகு தேவதையாய் அவளைக் கண்டதும் விமலாராணியின் முகம் கறுத்துப் போனது... அதைக் கண்ட பிரபாவதியின் முகத்தில் ஒருவித திருப்தியான புன்னகை தோன்றியது... இது தானே அவருக்கு வேண்டும்...

"அடடே நம்ம சங்கமித்ராவா இது...? பார்த்து ரொம்ப நாளாச்சு இல்லையா... அதான் அடையாளம் தெரியலை..." என்று கூறி சமாளித்தார் விமலாராணி...

அதைச் சிரித்தபடி ஆமோதித்து ஏற்றுக் கொண்டாள் சங்கமித்ரா...

"எங்கே என்னோட அத்தான்...? ரொம்ப நாளாக உங்க ஊரில் பிடிச்சு வைச்சிருந்தால் அங்கே எனக்கு எப்படிப் பொழுது போகும்..." என்று கேட்டபடி சங்கமித்ரா சித்தார்த்தை விழிகளால் தேடினாள்...

அலைப்பேசியில் முக்கியமான அழைப்பு வந்துவிட்டதால் அதைப் பேசிவிட்டு அப்போது தான் சித்தார்த் அங்கு வந்து சேர்ந்தான்...

பெற்றோரை பார்த்து வரவேற்பாய் புன்னகைத்தவன் தங்கையைச் செல்லமாய் அணைத்தபடி, "செமஸ்டர் எல்லாம் எப்படிப் பண்ணியிருக்க...?" என்று விசாரித்தவன் அப்போது தான் சங்கமித்ராவை கண்டான்...

"ஹேய் மங்கி... நீ எப்படி இங்க...?"

"பாருங்கத்தை... அத்தான் என்னை மங்கின்னு சொல்றாரு..." சங்கமித்ரா அத்தையிடம் புகார் வாசித்தாள்...

"சித்து... பாவம்டா என் மருமகள்..." என்று கூறி பிரபாவதி விமலாராணியின் வயிற்றில் புளியை கரைத்தார்...

அண்ணி ஏதோ திட்டத்தோடு தான் சங்கமித்ராவை இங்கு அழைத்து வந்திருப்பதாய் அவர் எண்ணினார்... அந்தத் திட்டம் பலிக்கக் கூடாது என்று உடனே மனதுக்குள் ஆண்டவனிடத்தில் வேண்டுகோள் விடுத்தார்...

"சரி மங்கின்னு சொல்லலை... சொங்கின்னு கூப்பிடவா..." என்று கேலியாய் கூறிய சித்தார்த்தை அவள் அடிக்க முயன்றாள்...

அவளிடம் இருந்து தப்பிப்பதற்காக வீட்டிற்குள் ஓடினான் சித்தார்த்... புன்னகை முகமாய் வந்த சித்தார்த்தை பார்த்தபடி அங்கு நின்றிருந்தாள் பிரகதீஸ்வரி... தன்னைப் பார்த்து ஒரு புன்னகைக்குப் பஞ்சமானது போல் சிடுசிடுவென்று இருப்பவனின் புன்னகை முகம் அவளைப் பெரிதும் பாதித்தது... அவனின் பின்னால் ஓடி வந்த அழகான யுவதியை கண்டு யோசனையாய் புருவத்தைச் சுருக்கினாள் பிரகதீஸ்வரி...

சித்தார்த்தும் பிரகதீஸ்வரியை பார்த்ததும் அப்படியே நின்றுவிட்டான்...

"அத்தான்... வசமா மாட்டிக்கிட்டீங்களா...?" என்று கூறியபடி அவனது முதுகில் அடிக்கப் போனாள் சங்கமித்ரா...

சட்டென்று சுதாரித்த சித்தார்த் அவளது கையைப் பிடித்து வளைத்து அவளைத் தன்னோடு இறுக்கி கொண்டான்...

"என்னை அடிக்கும் அளவுக்கு உனக்குத் தைரியம் வந்து விட்டதா...?"

"ஐயோ அத்தான்... இனி நான் அடிக்கலை... கையை விடுங்க... வலிக்குது..." என்று அவள் அலறினாள்...

இயல்பாய் அவர்கள் பேசி சிரித்தது கண்டு வியப்பாய் பார்த்தபடி நின்றிருந்தாள் பிரகதீஸ்வரி...

"சின்னப் பெண் என்பதால் பிழைத்து போ என்று விடுகிறேன்..." என்று கூறி அவன் அவளை விடுவித்தான்...

அவன் கையை விட்டதும் கையை உதறிய சங்கமித்ரா, "போங்க அத்தான்... பிடித்தால் உடும்பு பிடி தான்... எப்படி வலிக்குது பாருங்க..." என்று அவனிடத்தில் முறையிட்டவள் அப்போது தான் பிரகதீஸ்வரியை கவனித்தாள்...

"யார் இவங்க...?"

"அறிமுகப்படுத்தி வைக்கும் அளவிற்கு அவள் ஒன்றும் பெரிய விஐபி இல்லை..."

சித்தார்த்தின் சிடுசிடுப்பில் பிரகதீஸ்வரியின் முகம் வாடி போனது... மலர் போன்ற மென்மையான மனதுடைய பெண்ணின் முகம் வாட செய்ததில் சித்தார்த்தின் அகமும், முகம் ஒருசேர மலர்ந்தது...

"அன்பு கொண்டு மனதில் இடம் பிடித்தவர் பூமிதனில் பலர் உண்டு...
வெறுப்புக் கொண்டு மனதில் தன்னை நிலைக்கச் செய்தவன் நீ ஒருவனே...
எதிலும் முரணாய் விளங்கும் புதுக் கவிதையோ நீ...
இல்லை புரியாத புதிரான நவீன ஓவியமோ நீ...
ஆகாயத்திற்கு அப்பால் இருக்கும் இனம் விளங்கா மாயையோ நீ...
உன் மனதினுள் ஒளிந்திருக்கும் மர்மம் தான் என்னவோ...???
மாயமும், மர்மமும் அகன்று மாதவியின் மனதில்
மன்னவன் நிலை கொள்ளும் நாள் கனவோ, நனவோ...???"

நனவாகும்...!!!

சங்கமித்ரா சித்தார்த்தின் சிடுசிடுப்பில் தனது இரு புருவங்களையும் யோசனையாய் சுருக்கினாள்... அவளுக்குச் சிறுவயது முதலே அவனைப் பற்றி நன்கு தெரியும்... அவனுக்கு ஒருவரை பிடிக்கவில்லை என்றால் இது போல் தான் கோபம் கொண்டு எடுத்தெறிந்து பேசுவான்... ஆனால் போயும் போயும் ஒரு சிறு பெண்ணிடம் கோபம் கொண்டு சித்தார்த் இப்படிப் பேசுவது கண்டு அவளுக்கு வியப்பாக இருந்தது... எதிரியாக இருந்தாலும் அவனுக்குச் சரிக்குச் சமமாக இருந்தால் தான் ஒருவனை எதிரியாகக் கருத்தில் கொள்வான் இந்தச் சித்தார்த்...

சங்கமித்ரா பிரகதீஸ்வரியை நன்கு உற்றுக் கவனித்துப் பார்த்தாள்... பாவாடை, தாவணியில் மிகவும் எளிமையாக இருந்த கள்ளங்கபடமில்லா அந்தச் சிறுபெண் எந்தவிதத்தில் அவனுக்கு எதிரியானாள்... அது அவளுக்கு மிகுந்த ஆச்சிரியத்தை அளித்தது...

மஞ்சள் பூசிய முகத்தில், நெற்றியில் வட்ட வடிவ அரக்கு நிற பொட்டு வைத்து அதன் மேல் திருநீறு, கீழே குங்குமம் இரண்டையும் சிறு தீற்றலாக வைத்து, நீண்ட முடியை தளர பின்னி அதில் பூச்சூடி பெண்மை மிளிர நின்றிருந்த பிரகதீஸ்வரி, சங்கமித்ராவை வெகுவாய் ஈர்த்தாள்... அவளது பால் வடியும் முகத்தைப் பார்க்கும் போது தனிப்பாசம் பொங்கியது சங்கமித்ராவினுள்...

"நீங்க அறிமுகப்படுத்தி வைக்கலைன்னா என்ன அத்தான்... என்னை நானே அறிமுகப்படுத்திக்கிறேன்..." என்று சிரித்தபடி சித்தார்த்திடம் கூறியவள் பிரகதீஸ்வரி முன் வந்தாள்...

"ஹாய்... நான் சங்கமித்ரா..." என்று புன்னகை முகமாய்க் கூறியவள் நட்புடன் தனது கரத்தை பிரகதீஸ்வரி முன் நீட்டினாள்...

சித்தார்த்தின் உதாசீனத்தில் முகம் வாடி நின்றிருந்த பிரகதீஸ்வரியின் முகம் சங்கமித்ராவின் செயலில் அப்படியே மலர்ந்து விட்டது... அன்போடு பெரியவளின் கையைப் பிடித்துக் கொண்டவள்,

"என் பெயர் பிரகதீஸ்வரி..."

"அழகான பெயர்... அது போல் உனது குரலும் குயில் பாடுவது போல் ரொம்ப இனிமையாய் இருக்குது..."

"ஐயோ... என்ன அக்கா இது...?" சங்கமித்ராவின் புகழ்ச்சியில் லஜ்ஜையுற்றவளாய் முகம் சிவந்தாள் பிரகதீஸ்வரி...

"உண்மையைத் தான் சொன்னேன்..." என்று கூறியவள் சித்தார்த்திடம், "அப்படித்தானே அத்தான்..." என்று கேட்க வேறு செய்தாள்...

"எனக்கு ஒன்றும் அப்படித் தோன்றவில்லை..." அசால்ட்டாய் தோளை குலுக்கியபடி பேண்ட் பாக்கெட்டில் கையை விட்டுக் கொண்டு அலட்சியமாய் நின்றவனின் பார்வை முழுவதும் பிரகதீஸ்வரி மீது தான்...

அவனது தீர்க்கமான பார்வையைச் சந்திக்க முடியாமல் பிரகதீஸ்வரி தலையைக் குனிந்தாள்... மனதிற்குள் ஏதோ ஒன்று பெரிதாய் அதிர்ந்தது... அது பயமா இல்லை வேறு எதுவுமா என்று பிரித்தறிய முடியவில்லை அந்தச் சிறு பெண்ணால்...

"என்ன படிக்கிற பிரகதி...?" சங்கமித்ரா மென்மையாய் கேட்கவும் அதில் தலை நிமிர்ந்தவள்,

"ப்ளஸ்டூ..."

"ஓ... இன்னும் ஸ்கூல் முடிக்கலையா... அதான் ரொம்பச் சின்னப் பொண்ணா தெரியற..."

"நீங்க அக்கா...?"

"நான் டாக்டர்... சைல்ட் ஸ்பெசலிஸ்ட்..."

சங்கமித்ரா தான் ஒரு மருத்துவர் என்று கூறியதும் பிரகதீஸ்வரிக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது...

"அப்படியாக்கா... எனக்கும் டாக்டருக்கு படிக்கணும்ன்னு ஆசை..."

"குட்..." என்று பெரியவள் அவளை மெச்சும் போது சித்தார்த்தின் பெற்றோர்கள் வீட்டினுள் நுழைந்தனர்...

அவர்களைக் கண்டதும் பிரகதீஸ்வரி மரியாதையின் பொருட்டு, "வாங்க மாமா, வாங்க அத்தை..." என்று வரவேற்றாள்...

அவனது பெற்றோரை சில சமயங்களில் அவள் பார்த்திருக்கிறாள்... அவர்களை அவள் கடைசியாகப் பார்த்தது தனது தந்தையின் மரண வீட்டில்... அதனால் அவர்களை அவளுக்கு நன்கு தெரிந்திருந்தது...

"எப்படிம்மா இருக்க...? நல்லாயிருக்கிறியா..." என்று சம்பிரதாயமாகக் கேட்ட பிரபாவதிக்கு அவளின் பதிலை கேட்கும் அளவுக்குப் பொறுமை இல்லை...

அவளைக் கண்டு கொள்ளாது விமலாராணியிடம் திரும்பியவர், "சின்னப் பொண்ணு வாங்கன்னு கேட்கிறாள்... ஆனால் அவளை விடப் பெரியவளான சந்தியா எங்களைப் பார்த்து வாங்கன்னு ஒரு வார்த்தை கேட்கலை... இது எல்லாம் சொல்லி கொடுத்து வளர்க்கணும் மதினி... இல்லைன்னா புகுந்த வீட்டில் நம்மைத் தான் குறை சொல்வாங்க..."

அவர் கூறியதை கேட்டு விமலாராணியின் முகம் செத்துப் போனது... சந்தியாவின் முகம் கூம்பி போனது...

"பிரபா..." மார்த்தாண்டம் மனைவியை அதட்டினார்...

"நான் தப்பா எதுவும் சொல்லலைங்க... சந்தியாவும் நம்ம பொண்ணு மாதிரி தான்... அதனால் தான் தப்பை சரி செய்யச் சொன்னேன்..."

இரு பக்கமும் அழகாய் கோல் அடித்துச் சமாளித்தார் பிரபாவதி... ஆனானப்பட்ட விமலாராணியைச் சமாளிக்கும் வல்லமை படைத்தவருக்குக் கணவனைச் சமாளிக்கத் தெரியாதா என்ன...?

அதற்கு மேல் மார்த்தாண்டம் ஏன் வாயை திறக்க போகிறார்... அமைதியாகச் சென்று சோபாவில் அமர்ந்தார்... அவரைத் தொடர்ந்து எல்லோரும் சோபாவில் அமர்ந்தனர்... பிரகதீஸ்வரி மட்டும் தனித்து நின்றாள்...

"பிரகதி... குடிக்க ஏதாவது கொண்டு வாம்மா..." விமலாராணி மகளை ஏவினார்...

"இதோ..." என்று உள்ளே செல்ல முயன்றவளை தடுத்த சங்கமித்ரா,

"சாப்பிடுகிற நேரமாச்சு... அதனால் நேரே காலை உணவிற்குப் போய் விடலாம்... என்ன அத்தை உங்களுக்கு ஓகே தானே..."

எந்தப் பக்கம் பந்து போட்டால் விக்கெட் விழும் என்று தெரிந்து சங்கமித்ரா செயல்பட்டாள்... மருமகள் கூறி அதை மறுக்கப் பிரபாவதியால் முடியுமா என்ன...?

"நீ சொன்னா சரியா தான் இருக்கும் மித்ரா..." என்று அவளின் கூற்றை ஆமோதித்தார் அவர்...

"நானும் உன் கூட வர்றேன் பிரகதி..." என்று பிரகதீஸ்வரியிடம் கூறியவள் சந்தியாவிடம் திரும்பி,

"நீயும் எங்க கூட வா சந்தியா..." என்று அவளை அழைத்துக் கொண்டு சென்றாள்...

சந்தியா அங்கிருந்தால் தனது அத்தை அவளை மேலும் வம்பிழுக்கக் கூடும் என்று அவளுக்கு நன்கு தெரியும்...

அவர்கள் மூவரும் உள்ளே சென்றுவிட, சித்தார்த் அலைப்பேசியில் மூழ்கிவிட, பெரியவர்கள் ஊர் கதைகளைப் பேசி கொண்டிருக்க, சரவணன் ஸ்வேதாவின்

கருத்தை கவர முயற்சித்துக் கொண்டிருந்தான்... அவனது வயதிற்குரிய ஆர்வத்தில் அவளைக் கவர முயன்றான்...

அவளோ அலைப்பேசியில் யாரிடமோ பேசி கொண்டிருந்தவள் அவனைக் கொஞ்சமும் கண்டு கொள்ளவில்லை... அதில் முகம் சோர்ந்தவனாய் அமர்ந்திருந்தான் அவன்...

சிறிது நேரத்தில் அங்கு வந்த சங்கமித்ரா, "எல்லாம் ரெடி... வாங்க... வாங்க..." என்று கூறியதும் அனைவரும் உணவு உண்ண எழுந்து சென்றனர்...

எல்லோரும் அமர்ந்ததும் பிரகதீஸ்வரியும், சோலையம்மாளும் பரிமாற ஆரம்பித்தனர்... சங்கமித்ரா அவளைத் தங்களுடன் உண்ண அழைத்ததற்கு அவள் மறுத்துவிட்டாள்...

"நீங்க விருந்தாளிங்க... நான் உங்களைக் கவனிக்கிறது தான் முறை... அதுவுமில்லாம நீங்க ட்ராவல் பண்ணி டயர்டா இருப்பீங்க... முதல்ல நீங்க சாப்பிடுங்கக்கா..." என்று கூறி மறுத்துவிட்டாள்...

அது போல் சித்தார்த்தும் சாப்பிடாது அவனது அன்னையின் அருகில் அமர்ந்திருந்தான்...

"சித்து... நீயும் சாப்பிட உட்காருடா..."

"இல்லைம்மா... ஒரு முக்கியமான ஃபோன் கால்க்காக வெய்ட்டிங்..."

அன்னையாக இருந்தாலும் அவனது விசயத்தில் தலையிட்டால் அவனுக்குப் பிடிக்காது... அதனால் பிரபாவதி அமைதியாகி விட்டார்...

"பொங்கல் வரைக்கும் இங்கே தானே இருப்பீங்க அண்ணா...?"

விமலாராணி நேரே தன் சகோதரனிடம் கேட்டார்... ஏனெனில் அண்ணியிடம் கேட்டால் அதற்கும் ஏதாவது காரணம் சொல்லி முன்கூட்டியே கிளம்பி விடுவார்...

அதனால் தான் தனது சாமர்த்தியத்தை அண்ணனிடம் காட்டினார்...

"ஆமாம் விமலா..." என்றதோடு அவர் முடித்துக் கொள்ள...

அந்தப் பதிலில் விமலராணி மனதிற்குள் சந்தோசப்பட்டுக் கொண்டார்... சித்தார்த்துடனான தனது மகளின் திருமணத்தைப் பற்றி அண்ணனிடம் நிதானமாகப் பேசி கொள்ளலாம் என்று நினைத்துக் கொண்டார்...

"இது என்ன பொங்கல்...? ரொம்ப நல்லாயிருக்கே..." பிரபாவதி புதுமையாய் சமைக்கப்பட்டு இருந்த பொங்கலை ருசித்துச் சாப்பிட்டபடி கேட்டார்...

"சாமை அரிசி பொங்கல் அத்தை..." என்று பதில் கூறிய பிரகதீஸ்வரியை வியப்பாய் பார்த்த பிரபாவதி,

"நீயாம்மா செஞ்ச...?"

"ஆமாம்..."

"அதானே... பார்த்தேன்... இங்கே யாருக்கும் இந்தளவுக்கு ருசியா சமைக்கத் தெரியாதே..." என்று விமலாராணியைக் குத்தி காண்பித்தவர்,

"அப்படியே உன் அம்மாவின் கைப்பக்குவம் உனக்கும் இருக்கு..." என்று சிலாகித்துப் பாராட்டினார்...

அதைக் கேட்டு விமலாராணியின் முகம் ஒரு மாதிரியாய் மாறியது... அதை மார்த்தண்டம் கவனித்து விட்டார்... தங்கை முகம் வாடுவது கண்டு அவரால் மனம் பொறுக்க முடியவில்லை...

"பிரபா..." என்று மனைவியைக் கடிய முயன்ற போது,

"நல்லது யார் செஞ்சாலும் பாராட்டுறது தப்பில்லையேப்பா..." என்று இடைப்புகுந்தான் சித்தார்த்...

"சித்து..." என்று மார்த்தாண்டம் எதையோ சொல்ல வரும் போது அவனின் அலைப்பேசி ஒலித்தது...

அவன் அதை உயிர்ப்பித்தபடி வெளியில் சென்றுவிட்டான்... அதற்கு மேல் அவனை எப்படிக் கண்டிக்க...? மார்த்தாண்டம் கையாலாகாதவராய் தங்கையைப் பார்த்தார்... ஏனெனில் இப்போது அவரால் மனைவியிடம் எதுவும் பேச முடியாது... ஏனென்றால் மகனின் ஆதரவு மனைவிக்கு இருக்கிறது...

அப்போது, "அம்மா ரொம்ப நல்லா சமைப்பாங்க..." என்ற சந்தியாவைக் கண்டு முகம் மலர்ந்தார் விமலாராணி...

"உனக்காவது என் அருமை தெரிஞ்சதே..." என்று மகளை அவர் அணைத்துக் கொள்ள... அவளோ அன்னையின் கைகளைத் தட்டி விட்டு விட்டு,

"ஐய்யே... நான் உங்களைச் சொல்லலைம்மா... கார்த்திகா அம்மாவை சொன்னேன்..." என்றாளே பார்க்கலாம்...

அதைக் கேட்டு பிரபாவதிக்குச் சிரிப்பு பீறிட்டது... ஆனாலும் கணவனுக்குப் பயந்து வாயை மூடி கொண்டார்... மகன் இல்லாது தனித்துக் கணவனிடம் மாட்டி கொள்ள அவர் தயாராக இல்லை...

விமலாராணி சடுதியில் தன் முகபாவத்தை மாற்றிக் கொண்டார்...

"ஆமாம்... அக்கா மாதிரி யாராலையும் சமைக்க முடியாது... அவங்க கைப்பக்குவமே தனித் தான்..." என்று ஒப்புக்கு சொல்லி வைத்தார்...

எல்லோரும் உண்டு விட்டு எழுந்து சென்று விட்டனர்... சங்கமித்ரா ஞாபகமாய்ப் பிரகதீஸ்வரியை அமர்த்தி அவள் முன் தட்டு எடுத்து வைத்து உணவை பரிமாறினாள்...

"அக்கா... போதும்க்கா..." என்று சொல்லி தடுத்த பிரகதீஸ்வரி உண்ண ஆரம்பித்தாள்...

அந்நேரம் சங்கமித்ராவின் அலைப்பேசி அழைத்தது...

"நீ சாப்பிடு பிரகதி... நான் ஃபோன் பேசிட்டு வர்றேன்..." என்றுரைத்த சங்கமித்ரா அங்கிருந்து சென்றாள்...

பிரகதீஸ்வரி தனியே உண்டு கொண்டிருந்த போது அங்கு வந்தமர்ந்தான் சித்தார்த்... அவனைக் கண்டதும் கண்களில் பயத்தைத் தேக்கியபடி அவள் எழுந்து நின்றாள்... உணவு உண்ட எச்சில் கையோடு எழுந்து நின்றவளை அமரும்படி சைகை செய்தவன்,

"உனக்கு மட்டும் தான் பசிக்குமா...? எனக்கு எல்லாம் பசிக்காதா...?" என்று கேட்க...

"ம்... பசிக்கும் தான்..." என்று உடனே ஒத்து கொண்டாள் அவள்...

காது ஜிமிக்கி இடமும் வலமுமாட, அதற்குப் போட்டியாய் அவளது கருவிழிகள் இரண்டும் அழகாய் நர்த்தனம் ஆடியது... அவளையே பார்த்து கொண்டிருந்தவன்,

"அப்போ எனக்கு யார் சாப்பாடு எடுத்து வைப்பாங்க...?" என்று ஒற்றைப் புருவத்தைக் கேள்வியாய் உயர்த்தினான் அவன்...

"வேணும்ன்னா நான் வைக்கவா...?"

அவன் ஆமோதிப்பாய் தலையசைத்ததில் வேகமாய்ச் சென்று கையைக் கழுவி கொண்டு வந்தவள் அவனுக்குப் பரிமாற ஆரம்பித்தாள்... அவன் இந்தளவுக்கு இணக்கமாகப் பேசுவதே அவளுக்குப் போதுமானதாக இருந்தது... அதனால் அவன் மேலுள்ள வருத்தத்தை இழுத்துப் பிடித்துக் கொண்டு தொங்க அவளுக்கு விருப்பமில்லை...

சித்தார்த் அமைதியாக உண்ண, அவளும் தன் இடத்தில் அமர்ந்து உண்டாள்... மறந்தும் அவள் அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை...

அவளுக்கு முன் உண்டு விட்டு எழுந்த சித்தார்த் அவளது தட்டில் சில உணவு பதார்த்தங்களை எடுத்து வைத்தான்... அவள் புரியாது அவனைக் கண்டு பேய் முழி முழித்தாள்... அந்தளவுக்கு அவளது தட்டில் உணவு நிரம்பி வழிந்தது...

"நீ இப்படிக் கொஞ்சமா சாப்பிட்டா எனக்கு வயிறு வலிக்கும்..." என்றுரைத்து விட்டு அவன் கை கழுவ சென்றுவிட்டான்...

'நான் கொஞ்சமா சாப்பிட்டா இவங்களுக்கு எதுக்கு வயிறு வலிக்குது...?' என்று குழம்பி போனவளாய் அவள் தட்டை பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்...

சித்தார்த் கை கழுவி கொண்டே கண்ணாடி வழியே அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்... அவள் முழித்துக் கொண்டு அமர்ந்திருப்பதை அவனது கண்கள் கூர்ந்து கவனித்தது... கை கழுவிவிட்டுத் துண்டில் துடைத்தபடி அவளருகே வந்தவன்,

"எனக்கு மட்டும் அள்ளி அள்ளி வச்சு வயிறு முட்ட சாப்பிட வச்சயில்ல... நானும் அதை எல்லாம் ஒழுங்கா சாப்பிட்டேன் இல்லையா.. ஒருவேளை அதைப் பார்த்து நீ கண்ணு வச்சியிருந்தேன்னா... அதுக்குத் தான் சொன்னேன்..."

அவள் 'ங்' என்று விழித்ததைக் கண்டு அவனது பார்வை அழுத்தமாய் அவள் மீது படிந்தது...

"ஒண்ணு விடாம சாப்பிட்டு இருக்கணும்... சாப்பாட்டை வேஸ்ட் பண்ண கூடாதுன்னு உனக்குத் தெரியும் தானே..."

'தெரியும்' என்பது போல் அவள் தலையாட்டினாள்...

"தட்ஸ் குட்..." என்றவன் அங்கேயே அமர்ந்து கொண்டான்...

அவன் அங்கே அமர்வதைக் கண்டு அவளது விழிகள் விரிந்தது பயத்தில்...

"உன் உணவில் பங்கு கேட்க மாட்டேன்..." என்று அமர்த்தலான குரலில் கூறியவன் தனது அலைப்பேசியில் எதையோ பார்க்க ஆரம்பித்தான்...

அவன் தனது வேலையைப் பார்ப்பதை உணர்ந்து அவள் உணவில் கவனத்தைச் செலுத்தினாள்... அனைத்தையும் அவளால் உண்ண முடியவில்லை... எப்போதும் அவள்

உண்ணும் அளவை விட இது மிகவும் அதிகம்... ஆனாலும் உணவை வீண் செய்ய அவளுக்கு மனம் வரவில்லை...

அவளது ஒவ்வொரு செய்கையையும் அவன் ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தான்... ஆனால் அவளிடம் எதுவும் பேசவில்லை...

அவள் சாப்பிட்டு முடித்து எழும் போது கூடவே எழுந்தவன் அலைப்பேசியைக் காதில் வைத்தபடி, "சொல்லுங்க..." என்று கூறியபடி அங்கிருந்து சென்றுவிட்டான்...

அவனின் செயல்களின் அர்த்தம் புரியாது விழித்தாள் அந்தப் பேதை பெண்...

மதிய உணவிற்கான வேலையில் பிரகதீஸ்வரி சோலையம்மாளுடன் சேர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கச் சங்கமித்ரா அவளுடன் இணைந்து கொண்டாள்... அவளது எண்ணங்களுக்கு ஏற்றவாறு சங்கமித்ராவின் எண்ணங்களும் இருந்தது கண்டு அவளுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது... அதனால் சங்கமித்ராவுடன் பேசுவது அவளுக்கு அத்தனை விருப்பமாக இருந்தது...

"உனக்குச் சித்த வைத்தியம் எல்லாம் தெரியுமா...?"

"எல்லாம்ன்னு சொல்ல முடியாது... அப்பா கிட்ட இருந்து கொஞ்சம் கொஞ்சம் கத்துக்கிட்டேன்..."

"இஸிட்..." என்று ஆச்சிரியப்பட்டவளாய் சங்கமித்ரா அவள் கூறியதை கேட்டு கொண்டாள்...

அந்த நேரம் ஒரு பெண் கைக்குழந்தையுடன் வந்து பிரகதீஸ்வரியிடம், "நாலு நாளா காய்ச்சல் விடாது அடிக்குது சின்னம்மா..." என்று கவலையுடன் கூற...

பிரகதீஸ்வரி அந்தச் சிறுகுழந்தையின் நாடியை தொட்டு பார்த்தவள் பிறகு அதன் கண்களையும், வாயையும் பரிசோதித்துப் பார்த்தாள்... பின் உள்ளே சென்று மருந்து கொண்டு வந்து அந்தப் பெண்ணிடம் கொடுத்தவள்,

"இதை மூணு நேரம் கொடுங்க... சரியாய் போயிரும்..." என்க...

"சின்னம்மா... அப்படியே திருநீறு பூசி விட்டிருங்க..." என்று அந்தப் பெண் கூற...

சிரித்தபடி உள்ளே சென்றவள் திருநீறு எடுத்து வந்து மந்திரித்துக் குழந்தையின் நெற்றியில் பூசிவிட்டாள்...

அந்தப் பெண் விடைப்பெற்றுச் சென்றதும் சங்கமித்ரா அவளின் அருகில் வந்தாள்... அவளது விழிகளில் வியப்புத் தெரிந்தது...

"ஸ்டெதஸ்கோப் இல்லை... தெர்மாமீட்டர் இல்லை... எப்படி நோய் கண்டுபிடித்து மருந்து கொடுக்கிற...?"

"அவள் தான் ஊரை ஏமாற்றுகிறாள் என்றால், நீயும் அதை நம்புகிறாயே மித்ரா..." அழுத்தி உரைத்தபடி அங்கு வந்த சித்தார்த்தின் பார்வை பிரகதீஸ்வரியை அழுத்தமாய்ப் பார்த்து வைத்தது...

அவனது பேச்சில் அவளுக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்தது...

"நான் ஒண்ணும் ஊரை ஏமாத்தலைக்கா... ஒவ்வொரு நாடித்துடிப்புக்கும் ஒரு அர்த்தம் இருக்கு... அதை உணர்ந்தாலே நாம் எல்லா நோய்களையும் குணப்படுத்தி விடலாம்... அதை வைத்து தான் இப்போ வந்த குழந்தையைப் பரிசோதிச்சேன்... அவர் சொல்கிற மாதிரி ஊரை ஏமாத்தலை..."

அதைக் கேட்டு அவன் ஒன்றும் அயர்ந்து விடவில்லை... வெகுசாதாரணமாக அவளைப் பார்த்து வைத்தான்...

"நீ சொல்றது சரி தான் பிரகதி... நான் ஒத்துக்கிறேன்..." என்ற சங்கமித்ரா,

"நீ கொடுத்த மருந்தில் என்னவெல்லாம் கலந்திருக்கு...?"

அதில் அடங்கியிருந்த பொருள்களை அவள் சொல்ல சொல்ல சங்கமித்ராவின் முகம் மலர்ந்தது...

"ஃபென்டாஸ்ட்டிக் பிரகதி... இதைத் தான் ஆங்கில மருத்துவத்தில் வேதியியல் மாற்றம் செய்து செயற்கையா கொடுக்கிறாங்க... சில சமயம் அது சைடு எஃபெக்ட்டை கொடுக்கிறது... ஆனால் நீ சொல்லும் மருந்தில் அந்த அபாயம் இல்லை... நான் ஊருக்கு போகும் போது எனக்கும் இந்த மருந்துகளை எல்லாம் கொஞ்சம் எழுதி கொடு... என் கிட்ட வர்ற பேஷண்ட் கிட்ட இதைப் பரிந்துரை செய்து பார்க்கிறேன்..."

"கண்டிப்பாக்கா... நிச்சயம் நல்ல பலன் தரும்..." என்று முகம் மலர கூறினாள் பிரகதீஸ்வரி...

பின்னாளில் இது அவளது வாழ்க்கையில் முக்கியப் பிரச்சினையாக மாறப் போவதை அந்தக் கணம் அவள் அறிந்து இருக்கவில்லை... அறிந்திருந்தால், தெரிந்திருந்தால் ஆரம்பத்திலேயே அதைத் தடுத்திருந்து இருப்பாளோ... விதி வேறு ஒன்று வைத்து காத்திருப்பதை அறியாது போனாள் அந்த அப்பாவி சிறு பெண்...

"எல்லாம் சரி தான் மித்ரா... இந்த மந்திரித்துத் திருநீறு பூசி விடுவது எல்லாம் காதில் பூ சுற்றும் வேலையா, இல்லையா...? நீயே சொல்லு... இந்த அம்மையாருக்கு ஏதோ சக்தி இருப்பதை நான் நம்பணுமாக்கும்..."

அப்போதும் அவளை மட்டம் தட்டி பேசுவதில் தான் அவன் கூறியாக இருந்தான்...

"அக்கா... எனக்கு எந்தச் சக்தியும் கிடையாது... நான் சாதாரணப் பெண் தான்..."

"ரொம்பவும் சாதாரணம் என்று சொல்..." இடையிட்டான் சித்தார்த்...

"ஆமாம்..." என்று ஆமோதித்து ஒத்து கொண்டவள்,

"வைத்தியத்திற்கு நம்பிக்கை அவசியம் அக்கா... அந்த நம்பிக்கை தான் நம்மை நோயிலிருந்து காப்பாற்றுகிறது... அந்த நம்பிக்கையைத் துளி திருநீறு கொடுக்கிறது என்றால் நாம் ஏன் அதைத் தடுக்க வேண்டும்... அப்படிப்பட்ட நம்பிக்கையைத் தான் அவர்களுக்கு நான் கொடுக்கிறேன்... என் வைத்தியத்தின் மீது நம்பிக்கை இல்லை என்றாலும் நான் வைக்கும் திருநீறு மீது அவர்களுக்கு அந்தளவுக்கு நம்பிக்கை இருக்கிறது..."

பிரகதீஸ்வரி பேசியது கேட்டு சித்தார்த்தின் கண்களில் மெச்சுதல் தோன்றியது... ஆனாலும் அதை மறைத்தவனாய்,

"அது என்னவோ உண்மை தான்... உன் மீது நம்பிக்கை அவங்களுக்கு மட்டுமல்ல எனக்கும் கிடையாது தான்..." என்று திமிராய் உரைத்தவன் அங்கிருந்து சென்றுவிட்டான்...

"அத்தான் எப்போதும் இப்படித்தான் பிரகதி... நீ ஒன்றும் மனசில் வச்சுக்காதே..." என்று கூறிய சங்கமித்ராவிடம்,

"அவங்க இப்படித்தான்னு எனக்குத் தெரியும்க்கா... நான் எதையும் மனசில் வச்சிக்கிறது இல்லை..." என்றவள் தனது வேலையில் கவனமானாள்...

பெற்றோர் வந்திருந்த போதும் சித்தார்த் தனது அலுவலக வேலையை விடவில்லை... சிறிது நேரம் அங்கிருந்தவன் உடனே கிளம்பிவிட்டான்... சரவணன் உடன் செல்லவில்லை... அழகான மாமன் மகளை விட்டு விட்டு செல்ல மனம் இடம் கொடுக்காததால் ஏதேதோ சாக்குபோக்கு சொல்லி வீட்டில் இருந்துவிட்டான்...

****

அலுவலகம் வந்த சித்தார்த்தை தனஞ்செயன் வந்து சந்தித்தான்... கையில் உயிலின் நகலோடு... அதை வாங்கிப் படித்த சித்தார்த்தின் முகம் சீற்றமாய் மாறியது... தனஞ்செயனிடம் அதைக் காட்டாது மறைத்தவன்,

"இந்த விசயம் பற்றி யாரிடமும் நீ சொல்லவில்லையே...?"

"இல்லை சார்..."

"குட்... இனியும் நீ அதைக் காப்பாற்ற வேண்டும்... காப்பாற்றினால் உன் உயிர் காப்பாற்றப்படும்... இல்லை என்றால்...?"

"சார் நீங்க இதைச் சொல்லவும் வேணுமா...? நான் யார் கிட்டேயும் சொல்ல மாட்டேன் சார்... நீங்க கவலையே பட வேண்டாம்..."

"அட தனஞ்செயன், நான் எதுக்குக் கவலைப்படணும்... நீ தான் அதைப் பத்தி கவலைப்படணும்..." என்று கேலியாக உரைத்தவன்,

"உணர்ந்து நடந்து கொண்டால் உனக்கு நல்லது..." என்று தீர்க்கமாய்த் தீர்மானம் போல் உரைத்தவனின் குரலில் இருந்த தீவிரத்தில் தனஞ்செயனின் நெஞ்சு உலர்ந்தது பயத்தில்...

"சரிங்க சார்..." என்று பணிவுடன் கூறிய தனஞ்செயன் விடைப்பெற்று சென்றுவிட,

சித்தார்த் வெகுநேரம் அந்த உயிலை பார்த்தபடி அமர்ந்திருந்தான்... அடுத்து என்ன செய்வது என்று தெரியாது அவனது மனம் மிகுந்த குழப்பத்தில் ஆழ்ந்தது... வேலை செய்ய மனமில்லாதவனாய் அவன் மீண்டும் வீட்டிற்குத் திரும்பி வந்தான்... மனதிலோ பெரும் புயலடித்துக் கொண்டிருந்தது...

காரை நிறுத்திவிட்டு வீட்டினுள் செல்ல முயன்றவன் அங்கிருந்த ஏணியைக் கவனிக்காது அதைத் தட்டி விட்டு செல்ல முயன்றான்...

"ஐயோ அம்மா..." என்ற அலறலில் அண்ணாந்து பார்த்தவன் ஏணி மேலிருந்து கீழே சரிந்து கொண்டிருந்த பிரகதீஸ்வரியை அப்போது தான் கவனித்தான்...

சட்டென்று ஆபத்பாந்தவனாய் அவளைத் தனது கரங்களில் தாங்கி கொண்டான்... அவளோ பயத்தில் அவனது கழுத்தில் தனது கரங்களை மாலையாகக் கோர்த்துக் கண்களை இறுக மூடியபடி அவனது கைகளில் புது மலராய் மலர்ந்திருந்தாள்...

பூங்கொத்து போல் மென்மையாக, மிருதுவாக, பாரமற்று இருந்தவளை தாங்கி கொண்டவனின் மனதில் பெரும் பாரமேறியது... எதையோ நினைத்தவனின் கைகள் அவளின் வதனத்தை அழுத்தி பிடித்தது... அதில் மேனி வலிக்க,

"ஷ்..." என்று முனங்கியபடி கண் திறந்த பிரகதீஸ்வரி தான் சித்தார்த் கைகளில் தவழ்வதைக் கண்டு நம்ப முடியாது அவனை நோக்கியவளின் விழிகள் அவனது விழிகளோடு அப்படியே உறைந்து போனது...

இருவரின் பார்வையும் ஒன்றுடன் ஒன்று கலந்தது... இருவருக்குமே பார்வையை விலக்க வேண்டும் என்று தோன்றவில்லை... அதே சமயம் அருகாமையை விலக்கவும் தோன்றவில்லை... முதலில் சுதாரித்தது பிரகதீஸ்வரி தான்...

"கீழே இறக்கி விடுங்க..." என்று இறங்க முயற்சித்துக் கொண்டே அவள் கூற...

அவளது முயற்சியைத் தடை செய்வது போல் இருந்தது அவனது இறுகிய பிடி... அதில் திகைத்து போனவளாய் அவனை ஏறிட்டவள்,

"ப்ளீஸ் யாராவது பார்த்தா தப்பா நினைக்கப் போறாங்க..."

அவளது வார்த்தைகளில் அவன் சட்டென்று தனது கைகளை விடுவித்தான்... அவன் விட்டதும் புள்ளி மானாய் துள்ளி கொண்டு வீட்டினுள் ஓடியவளின் சிவந்த முகம் அவனுள் பெரும் யோசனையை விதைத்தது...

அன்று முழுவதும் அவனது மனதில் உயிலை பற்றிய யோசனை தான்... முடிவில் அவனுக்கு வேறு ஒரு

யோசனை தோன்றியது... ஒரு கல்லில் பல மாங்காய்களை அடித்து வீழ்த்தும் அந்த யோசனை அவனுக்கு மிகவும் பிடித்துப் போனது அவளின் துரதிர்ஷ்டம்...

அவனது எதிரியின் பலவீனம் அன்பு... அந்த அன்பை வைத்து தான் அவன் தன் எதிரியை வீழ்த்த வேண்டும்... ஆனால் அந்த அன்பு அவனிடத்தில் இல்லையே... ஆனாலும் அவன் தன் முடிவில் இருந்து மாறவில்லை...

அந்தக் கணம் பிரகதீஸ்வரியின் வெட்கம் நிறைந்த சிவந்த முகம் அவனது மனக்கண்ணில் மின்னி மறைந்தது...

அன்பு அவனிடத்தில் இல்லாது போனால் என்ன...? அன்பு என்னும் ஆயுதம் ஏந்தி எதிரியை வீழ்த்தும் நாடகக் கலை அவனுக்குக் கைவந்த கலையாயிற்றே... இனி இந்தச் சித்தார்த்திற்கு எல்லாமே சித்தி தான் என்று இறுமாப்பாய் நினைத்தான் அவன்...

அதற்குப் பெயர் துரோகம் என்பது அந்தக் கணம் அவனுக்குப் புரியாமல் போனது அந்தோ பரிதாபம்...!!!

"எல்லாம் கற்ற வித்தகனே... எல்லோரையும் ஆட்டி படைக்கும் சித்தனே...
அன்பு என்னும் ஆயுதம் கொண்டு பாவையவளை குற்றுயிராக்கி...
துரோகம் என்னும் பரிசளித்து அவளை முற்றிலும் வதைத்து கொன்று...
பணம் என்னும் மதிப்பில்லா காகிதத்தை அடைய நினைக்கும் சித்தார்த்தனே...
அதே அன்பு என்னும் ஆயுதம் உன்னைத் திருப்பித் தாக்கும் போது,
அதே துரோகம் என்னும் பரிசு உனக்குத் திருப்பிக் கிடைக்கும் போது,
நீ உயிரோடு மரித்துப் போகப் போவதை நீ அறிவாயோ...
வருங்காலம் கண்முன் கடந்திருந்தால் நிகழ்காலத்தில்
நீ சற்று அடக்கி வாசித்திருப்பாயோ...!!!"

நனவாகும்...!!!

அந்த நள்ளிரவு பொழுதில் பிரகதீஸ்வரி தனது அறையில் நடந்து கொண்டே படித்துக் கொண்டிருந்தாள்... இப்போது புது வருட பிறப்பிற்காகப் பள்ளியில் மூன்று நாட்கள் விடுமுறை அளித்திருந்தனர்... அதன் பிறகு மீண்டும் பள்ளி திறந்துவிடும்... மீண்டும் பரீட்சை ஆரம்பித்துவிடும்...

இன்று உறவினர்கள் வருகையால் காலையில் இருந்து அவளால் சரிவரப் படிக்க முடியவில்லை... அதனால் அமைதியான இந்த நள்ளிரவில் படித்துக் கொண்டிருந்தாள்... புத்தகத்தின் பக்கங்களைப் படித்தபடி திருப்பிக் கொண்டு வந்தவள் அந்தக் குறிப்பிட்ட பக்கத்தில் அப்படியே தேங்கி நின்றாள்... அது சித்தார்த் அவளுக்கு விளக்கி சொல்லி கொடுத்த பாடம்...

அதைக் கண்டதும் அவளுள் அவனின் நினைவுகள்... அவளைப் பொருத்தவரை அவன் ஒரு புரியாத புதிர்... திடீரென்று நன்றாகச் சிரித்துப் பேசினான்... இதோ இப்போது முகத்தை உம்மென்று தூக்கி வைத்துக் கொண்டு கோபமாய் அலைகிறான்... அவளால் அவனைச் சரிவரக் கணிக்க முடியவில்லை...

'ஏன் என் கிட்ட மட்டும் இப்படி நடந்துக்கிறாங்க...? சந்தியாக்கா, மித்ராக்கா கிட்ட எல்லாம் நல்லா தானே பேசுறாங்க... ஒருவேளை என்னை அவங்களுக்குப் பிடிக்கலையோ...?'

அப்படியொரு நினைவு வந்ததுமே அவளது முகம் கூம்பி போனது... ஏனெனில் பிறந்ததிலிருந்து அன்பு சாம்ராஜ்யத்தின் இளவரசியாக வளர்ந்து வந்தவள் அவள்... இதுவரை யாரும் அவளை வெறுத்தது கிடையாது... அது போல் கோபம் கொண்டதும் கிடையாது...

புதிதாய் வந்த ஒருவன் தன்னை வெறுக்கிறான் என்றால் தவறு தன்னிடம் தானோ என்று அந்தச் சின்னப் பெண் மனதுக்குள் மருகினாள்... அதற்கு மேல் அவளால் அவனைப் பற்றி யோசிக்க முடியவில்லை...

மனதிற்கு ஏதோ பாரமாய்த் தோன்ற ஜன்னல் அருகே வந்து தோட்டத்தைப் பார்த்தாள்... பரந்து விரிந்திருந்த தோட்டம் அந்த நள்ளிரவிலும் மின்விளக்கின் துணையுடன் கண்களுக்கு அழகாய்த் தெரிந்தது... அவளுக்கு இருக்கும் ஒரே ஒரு ஆறுதல் இந்த இயற்கை மட்டும் தான்...

சுற்றிலும் பார்த்துக் கொண்டு வந்தவளின் விழிகள் ஓரிடத்தில் நிலைக்குத்தி நின்றது... ஏனெனில் அங்கிருந்த கல்மேடை ஒன்றில் சித்தார்த் அமர்ந்திருந்தான்... கால்களை நீட்டியபடி, கைகளைப் பின்னால் கொண்டு சென்று கல்மேடையில் தாங்கி சாய்ந்தமர்ந்தவனின் முகம் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தது...

மின்விளக்கின் உதவியால் அவனின் தோற்றம் தெள்ளத்தெளிவாக அவளது கண்களுக்குத் தெரிந்தது... அவனது முகத்தில் தெரிந்த வேதனையில் அவளது மனதில் இன்னமும் பாரமேறியது...

கௌதம சித்தார்த்தனை போன்று எல்லாம் கை வரப் பெற்றவனுக்கு அப்படி என்ன வேதனை இருக்கக் கூடும்...?

'பெரிய பணக்காரங்க... எல்லோரையும் விரல் நுனியில் ஆட்டுவிக்கிறவங்க... அவங்களுக்கு அப்படி என்ன கஷ்டம் இருக்கும்...?'

அவளது சிந்தனை முழுவதும் அவன் தான்... அவளது விழிகளும் அவன் மீது தான்...

ஏதோ ஒன்று மனதினை உறுத்த சித்தார்த் சுற்றிலும் விழிகளை ஓட்டினான்... அவன் நினைத்தது போல் பிரகதீஸ்வரி தன்னைப் பார்ப்பது தெரிந்தது... ஜன்னலில் வழியே எட்டிப்பார்த்த அவளது நட்சத்திர கருவிழிகளைக் கண்டு அவனது கண்கள் பளபளத்தது...

சித்தார்த் தன்னைப் பார்ப்பதை உணர்ந்து பிரகதீஸ்வரி சட்டென்று தன்னை மறைத்து கொண்டாள்...

'லூசு... உன்னைப் பத்தி என்ன நினைச்சிருப்பாங்க...? இப்படியா அவங்களை ஆன்னு பார்த்து வைப்ப...?'

தன்னைத் தானே திட்டி கொண்டவள் தலையில் அடித்துக் கொண்டாள்...

மீண்டும் ஜன்னல் வழியே மெல்ல எட்டிப்பார்த்தாள் அவள்... அப்போதும் சித்தார்த் ஜன்னலை பார்த்துக் கொண்டிருப்பது கண்டு படக்கென்று தலையை உள்ளிழுத்து கொண்டாள்... சில நிமிடங்கள் கழித்து 'அவன் போய் விட்டானா...?' என்று அவள் மீண்டும் எட்டிப்பார்த்த போது நிஜமாகவே அவனை அங்குக் காணவில்லை...

'அப்பாடா... போயிட்டாங்க போல...' என்று நிம்மதி பெருமூச்சு விட்டவளின் முன் திடுமென வந்து நின்றான் சித்தார்த்...

ஜன்னலுக்கு அப்பால் வந்து நின்ற அவனது உருவத்தைக் கண்டு பயந்து போனவளாய், "அடியாத்தி..." என்று கத்தியவள் நெஞ்சில் கையை வைத்துக் கொண்டு அவனைக் கலவரமாகப் பார்த்தாள்... அவளது இதயம் படபடவென அடித்துக் கொண்டது அச்சத்தில்...

"ஏய்... நான் என்ன பேயா...? இப்படிப் பயந்து போய்ச் சத்தம் போடுவதற்கு...? நானும் மனுசன் தான்..."

இதைச் சொல்லும் போது அவனது வார்த்தைகளை விட அவனது பார்வை அவளைக் கூர்மையாய்த் துளைத்தெடுத்தது...

அவன் கோபம் கொண்டு பேசுகிறானோ என்று எண்ணியவளாய், "அப்படியில்லை... நீங்க இப்படித் திடீர்ன்னு வந்து நின்னதும் பயந்து போயிட்டேன்..."

"அப்போ என் கிட்ட உனக்குப் பயமில்லை..."

"இல்லை..." என்று முதலில் சொன்னவள் அவனது அழுத்தமான பார்வையில்,

"கொஞ்சம்..."

வலதுகை கட்டை விரலையும், ஆள்காட்டி விரலையும் சேர்த்து, கண்களைச் சுருக்கி கொண்டு, இதழ்களைக்

குவித்து அவள் கூறிய பாவனையில் அவன் வாய்விட்டு சிரித்து விட்டான்...

"அச்சோ... எதுக்கு இப்படிச் சிரிக்கிறீங்க...? நடுராத்திரியில் இடி மாதிரி கேட்குது... ரொம்பப் பயமாயிருக்கு..."

காதுகளைப் பொத்தியபடி சுற்றிலும் கண்களை ஓட்டியபடி கூறியவளை கண்டு அவனது சிரிப்பு அப்படியே அடங்கிப் போனது...

"சரி சிரிக்கலை..." என்று அவளது கூற்றை உடனே ஏற்றுக் கொண்டவன் இரு கைகளையும் கட்டி கொண்டு அமர்த்தலான குரலில்,

"உண்மையைச் சொல்லு... கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நீ என்னைத் தானே பார்த்துக்கிட்டு இருந்த...?"

திடுமென அவன் அப்படிக் கேட்டதும் அவளுக்கு என்ன பதில் கூறுவது என்று தெரியவில்லை... பொய் கூறி அறியாதவள் அவள்... அதனால் திருதிருவென முழித்தாள்... அவளது முழியே அவளைக் காட்டி கொடுத்தது அவனிடத்தில்...

"அது வந்து..." திணறியவளை கண்டு அவனுக்குச் சுவாரசியமாக இருந்ததோ என்னவோ...

"நீ பதில் சொல்லலைன்னா நான் இங்கிருந்து போக மாட்டேன்... அது எவ்வளவு நேரமானாலும் சரி..."

"ஆங்..." திகைத்து விழித்தவளை கண்டு,

"அப்படித்தான்..." என்றான் உறுதியாய்...

"ஆமாம்..." வேறுவழியின்றி உண்மையை ஒத்து கொண்டாள் அவள்...

"குட்..." என்று அவளை மெச்சியவன்,

"நான் என்ன அந்தளவுக்கு அழகா இருக்கேன்னா...?" என்று அவளிடத்தில் கேட்டவனின் குரலில் சிறு ஆர்வம்

எட்டிப்பார்த்ததோ...

"இப்படிக் கேட்டீங்கன்னா எப்படி...? இந்த நேரத்தில் தனியா உட்கார்ந்து இருக்கீங்களேன்னு பார்த்தேன்... அவ்வளவு தான்... மற்றபடி வேறு ஒண்ணும் இல்லை..."

"நான் கேட்டதுக்கு இது பதில் இல்லையே..."

ஒற்றைப் புருவத்தை உயர்த்தியபடி தன்னைப் பார்த்து சொன்னவனைக் கண்டு அவளுக்கு உள்ளுக்குள் குளிரெடுத்தது... 'இது ஏதுடா வம்பா போச்சு...' என்று மானசீகமாகத் தலையில் கை வைத்தாள்...

"அப்போ நான் பார்க்க அசிங்கமா இருக்கேன்... அப்படித்தானே...?"

அவன் சொன்னது கேட்டு அவள் நொடி நேரம் கூடத் தாமதியாது, "ஐயோ அப்படி எல்லாம் இல்லை... நீங்க ரொம்ப அழகாயிருக்கீங்க..." என்று அவசரமாய் அவள் கூற...

அதைக் கேட்டு அவனது கண்கள் பளபளத்தது...

"இதுநாள் வரை என்னை எத்தனையோ பேர் அழகா இருக்கீங்கன்னு சொல்லியிருக்காங்க... அப்போ எல்லாம் நான் அதைப் பெரிதாய் கண்டு கொண்டது கிடையாது... ஆனால் இப்போ நீ சொன்னது எனக்குச் சம்திங் ஸ்பெசலானது... எப்போதுமே..." என்றவனது குரல் கரகரத்து ஒலித்தது...

அவன் கூறியதன் அர்த்தம் பற்றி அவள் யோசிக்கும் முன் அவன் அங்கிருந்து சென்றுவிட்டான்... ஏன் அப்படிக் கூறினான் என்று அவளுக்குச் சுத்தமாகப் புரியவில்லை... ஆனால் தான் அவனுக்குச் 'சம்திங் ஸ்பெசல்' என்று அவன் கூறியது மட்டும் மிகுந்த சந்தோசத்தைக் கொடுத்தது அந்தச் சிறு பெண்ணிற்கு...

வெறுக்கும் ஒருவன், கோபம் கொள்ளும் ஒருவன் தன்னை அவனுக்கு முக்கியம் என்று கூறினால் வருமே ஒரு

மகிழ்ச்சி, அது போன்றதொரு மகிழ்ச்சி தான் அவளுடையது... அவனைப் பற்றியோ, அவனது கூற்றைப் பற்றியோ அவள் ஆழ்ந்து சிந்திக்கவில்லை...

அதற்கு நேர்மாறாய் இருந்தது சித்தார்த்தின் நிலைமை... அவளுடன் பேசிய ஒவ்வொரு வார்த்தைகளும் அவனது காதில் அசரீரியாய் ஒலித்துக் கொண்டிருந்தது... அது மட்டுமா அவளைச் சந்தித்தில் இருந்து இன்று வரை நடந்தது எல்லாம் படமாய் அவன் கண் முன் விரிந்தது...

எல்லாவற்றையும் நினைத்து பார்த்தவனுக்குக் கோபம் மட்டுமே மிஞ்சியது... இயலாமையில் வந்த கோபமா, இல்லை அவன் மீதே அவனுக்குக் கோபமா...? எதுவென்று இனம் காண முடியாத கோபம் அவனுள்...

இதுநாள் வரை அவன் நினைத்ததைச் சாதித்து இருக்கிறான்... எத்தனையோ தொழில் ஜாம்பவான்களை வீழ்த்தி வெற்றிக் கொண்டிருக்கிறான்... ஆனால் அவனால் ஒரு சிறு பெண்ணை வீழ்த்த முடியவில்லை... மிகுந்த அவமானமாக இருந்த அதே சமயம் ஆத்திரமும் வந்தது...

"இல்லை இந்தச் சித்தார்த்துக்கு ஜெயித்துத் தான் பழக்கம்... எதிலும் எப்போதும் தோற்க மாட்டான்... தோற்க மாட்டான்..."

ஆக்ரோசமாய்ச் சொல்லி கொண்டவன் தனது கையைப் பலம் கொண்ட மட்டும் படுக்கையில் குத்தினான் ஆத்திரத்தோடு... நல்லவேளை அது பஞ்சினாலான மென்மையான மெத்தை... அதனால் அவனது கை தப்பித்தது...

தொழில் என்பது வேறு... வாழ்க்கை என்பது வேறு என்று அவன் பிரித்து யோசிக்கவில்லை... இரண்டையும் கலந்து அவன் யோசித்தான்... அதில் தான் அவன் சற்று சறுக்கி போனான்...

****

"வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்

செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத்துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோர் எம்பாவாய்"

பாவை நோன்பு நோற்பவர்களுக்கு இரண்டாம் பாசுரத்தில் ஆண்டாள் சில கோட்பாடுகளை விதிக்கிறாள். நோன்பில் ஈடுப்பட்டவர்கள் செய்ய வேண்டிய நான்கு விஷயங்களையும், தவிர்க்க வேண்டிய ஆறு விஷயங்களையும் தெரிவிக்கிறாள்.

கண்ணன் பிறந்த இந்தப் பூமியில் பிறந்து வாழ்பவர்களே, திருப்பாற்கடலில் துயிலும் அந்தப் பகவானின் நாம சங்கீர்த்தனங்களை அன்புடன் பாடி, நெய் உண்ணாது, பால் பருகாது, அதிகாலையில் நீராடி, கண்களுக்கு மை இடாமல், மலர்களை நாம் சூடாமல், செய்யக் கூடாதவற்றைச் செய்யாமல், பொய் பேசாது, அடுத்தவர்களைப் பற்றிப் புறம் பேசாது பெரியோர்களுக்கும், ஏழைகளுக்கும் தம்மால் இயன்ற அளவு வழங்கி, நாம் உய்யும் வகையை நாடி, மகிழ்ந்து, நாம் நோன்பு நோற்கவேண்டும் என்கிறார் ஆண்டாள் நாட்சியார்.

மெல்லிய குரலில் திருப்பாவையைப் பாடியபடி கோலமிட்டு கொண்டிருந்தாள் பிரகதீஸ்வரி... அதிகாலை பொழுது அவ்வளவாகப் புலர்ந்து இருக்கவில்லை... பூமியில் இன்னமும் இருள் பிரியாது பனிப்போர்வை அடர்த்தியாய்ப் போர்த்தியிருந்தது...

"வாவ்... பென்டாஸ்டிக் வாய்ஸ் பிரகதி..."

சங்கமித்ராவின் குரல் கேட்டு திரும்பி பார்த்தவள் அவளைக் கண்டு புன்னகைத்தாள்...

"என்னக்கா... அதுக்குள்ள எழுந்திருச்சிட்டீங்க...?"

"நீ மட்டும் இந்த நேரத்தில் எழுந்து கோலம் எல்லாம் போடுற...?" என்று பதில் கேள்வி கேட்டாள் சங்கமித்ரா...

"இது நான் வழக்கமா எழுகிற நேரம் தான்க்கா..."

"ஓ..." என்றபடி அங்கிருந்த கருங்கல்லில் அமர்ந்த சங்கமித்ரா,

"நானும் உன்னை மாதிரி தான் பிரகதி... எர்லி மார்னிங் எழுந்துடுவேன்... அப்போ தான் என்னோட வேலைக்குப் போக நேரம் சரியாயிருக்கும்..."

"ம்... அதுவும் சரி தான்க்கா... அதிகாலையில் எழுந்தா தான் அன்னைக்கு முழுவதும் சுறுசுறுப்பா இருக்க முடியும்..."

"ஆனாலும் நீ ஓவர் சுறுசுறுப்பு பிரகதி..." என்று கூறி சிரித்தாள் சங்கமித்ரா...

"காலங்கார்த்தால இப்படித் தலைக்குக் குளிச்சியிருக்கியே... சளி பிடிச்சுக்காதா...?" ஒரு மருத்துவராய் அக்கறையுடன் கேட்டாள் பெரியவள்...

"பழகி போச்சுக்கா... விட முடியலை..."

"பிரகதி... எனக்கும் கோலம் போட சொல்லி கொடேன்..." என்றபடி அவள் அருகே வந்தமர்ந்தாள் சங்கமித்ரா...

"உங்களுக்குக் கோலம் போட தெரியாதா...?"

"ம்ஹூம்... சிட்டியில் எங்கே கோலம் போடுறாங்க பிரகதி..."

"சரி நான் சொல்லி தர்றேன்..." என்றவள் கோலப்பொடி டப்பாவை சங்கமித்ராவிடம் கொடுத்து,

"இப்படி மெல்லிசா கம்பி மாதிரி கோடு இழுங்கக்கா..."

அவள் கூறியது போல் செய்து பார்த்த சங்கமித்ரா அதை மிகச் சரியாகப் போட்டு விட்டாள்...

"அய்... சூப்பர்... எனக்கும் கோலம் போட வருது பாரேன்..."

சிறு பிள்ளை போல் குதூகலிக்கும் பெரியவளின் சந்தோசத்தில் சின்னவளின் முகமும் மலர்ந்து போனது...

"உங்களுக்குள்ள நிறையத் திறமைகள் இருக்குக்கா..." என்று சின்னவள் பெரியவளை பாராட்ட, அதில் பெரியவளின் முகம் உயரிய விருது வாங்கியது போல் மலர்ந்து போனது...

இருவரும் கோலம் போட்டு முடித்ததும் எழுந்த பிரகதீஸ்வரி, "அக்கா... நான் கோவிலுக்குப் போகப் போறேன்... உங்களுக்குக் காபி வேணும்ன்னா போட்டு கொடுத்துட்டு போகவா...?"

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்... ஒரு டென் மினிட்ஸ் வெய்ட் பண்ணு... நானும் உன் கூடக் கோவிலுக்கு வர்றேன்..."

"சரிக்கா..." என்று பிரகதீஸ்வரி சொன்னதும் சங்கமித்ரா வீட்டினுள் விரைந்து சென்றாள் கோவிலுக்குக் கிளம்புவதற்காக...

சொன்னது போல் பத்து நிமிடத்தில் வந்து சேர்ந்த சங்கமித்ராவுடன் பிரகதீஸ்வரி கோவிலுக்குச் சென்றாள்... அங்குச் சென்று கடவுளை வணங்கிய போது என்றுமில்லாத ஒரு மன நிறைவு, அமைதி ஏற்பட்டது சங்கமித்ராவினுள்...

கடவுளை சேவித்து விட்டு இருவரும் வெளியில் வந்த போது பொழுது மெல்ல புலர ஆரம்பித்தது... எங்கும் பசுமையாய் இருந்த அந்த ஊரை சங்கமித்ராவுக்கு மிகவும் பிடித்துப் போனது...

"பேசாம இங்கே வந்து செட்டிலாகிடலாம் போலிருக்கு பிரகதி... அருமையான ஊர்..."

குளிருக்கு இதமாய்க் கைகளை இறுக கட்டி கொண்டு சுற்றிலும் பார்வையை ஓட்டியபடி சொன்ன சங்கமித்ராவை பிரகதீஸ்வரிக்கு மிகவும் பிடித்துப் போனது...

"எங்க அத்தானும் உங்களை மாதிரி தான் சொல்வார்..." என்று கூறி வெகுளியாய் சிரித்தாள் அவள்...

"உன் அத்தானா...?" என்று அவளைக் கேள்வியாய் பார்த்தாள் சங்கமித்ரா...

"ம்... எங்க ஹரி அத்தான்... அவருக்கும் இப்படி இயற்கையோடு இயற்கையா வாழ்வது தான் ரொம்பப் பிடிக்கும்... அவரோட வேலையும் அப்படித்தான்... ஃபாரஸ்ட் ஆபிசரா இருக்கார்..." என்றாள் தனது மாமன் மகனை பற்றிப் பெருமையாக...

"எனக்கு இப்படி ஒரு அத்தான் இல்லாம போயிட்டாரே..." என்று கூறி சங்கமித்ரா சிரிக்க...

"உங்களுக்குத் தான் அவர் இருக்காரே..."

"எவர்..." என்று புருவத்தைச் சுருக்கி யோசித்த சங்கமித்ரா,

"சித்து அத்தானை சொல்கிறாயா...?"

"ம்... ம்..." என்று ஆமோதித்தவள்,

"ஆனாலும் என் ஹரி அத்தான் மாதிரி இவர் வர மாட்டார்... ஹரி அத்தானை நேரில் பார்த்தால் நீங்களும் இதைத் தான் சொல்வீங்க... எப்போதும் சிரிச்ச முகத்தோட, எல்லோரையும் சிரிக்க வைப்பார் தனது பேச்சால்..." என்றவளின் குரலில் அப்படியொரு பெருமிதம் நிரம்பி வழிந்தது...

"சித்து அத்தானும் நல்லா தான் பேசுவார் பிரகதி..."

"இல்லைக்கா... நீங்க என் அத்தானை பார்த்தது இல்லை... அதனால் அப்படிச் சொல்றீங்க... அவரைப் பார்த்தால் இவர் கிட்ட இருக்கிற வித்தியாசம் உங்களுக்குப் புரியும்..."

இருவரும் பேசி கொண்டு வந்ததில் வீடு வந்து விட்டது... வாயிலில் நின்றிருந்த சித்தார்த் இருவரையும் வரவேற்றான்... அவனைக் கண்டதும் பிரகதீஸ்வரி

சங்கமித்ரா பின் பம்மினாள்... அதை அவனது விழிகள் கூர்மையாய் கண்டு கொண்டது...

"காலையில் எங்கே போயிட்டு வர்றீங்க...?"

சித்தார்த்தின் கேள்வி சங்கமித்ராவிடம் இருந்தாலும் பார்வை முழுவதும் பிரகதீஸ்வரி மேல் தான் இருந்தது...

"கோவிலுக்கு அத்தான்..." சங்கமித்ரா தான் அவனுக்குப் பதிலளித்தாள்...

"ஓ..." என்றவன் மேலே பேசாது அமைதியாக இருக்க...

"பிரகதி... உன் கிட்ட பிரசாதம் இருக்கா...?"

"ம்... இருக்குக்கா..."

ஒரு கையில் குங்குமத்தையும், ஒரு கையில் கோவிலில் கொடுத்த சர்க்கரை பொங்கலையும் வைத்திருந்தாள் அவள்... அதை அப்படியே பெரியவளிடம் நீட்டினாள் அவள்...

"நெத்தியை காண்பிங்க அத்தான்..." என்று கூறிய சங்கமித்ரா உரிமையுடன் சித்தார்த்தின் நெற்றியில் குங்குமத்தை வைத்துவிட்டாள்...

அந்தக் கணம் கூட அவனது விழிகள் பிரகதீஸ்வரியை தான் பார்த்துக் கொண்டிருந்தது... அவளோ அவனைக் கவனியாது சங்கமித்ராவை பார்த்து கொண்டிருந்தாள்... அவளும் இப்படித்தான் ஹரிப்ரசாத்திடம் இது போன்று உரிமையாக நடந்து கொள்வாள்...

அந்த நொடி அவளது மனது உரிமையான, உண்மையான, பாசாங்கு இல்லாத பாசத்திற்கு ஏங்கியது... ஹரிப்ரசாத்தை காண வேண்டும் என்கிற ஏக்கம் அவளது மனதினுள் எழுந்தது... அவனிடம் பேசியதில் இருந்து இப்போது எல்லாம் அவளுள் இந்த எண்ணம் அதிகமாய்த் தோன்றுகிறது...

"பொங்கல் பிரசாதத்தை நீங்களே எடுத்துக்கோங்க அத்தான்... என் கை எல்லாம் பிசுபிசுன்னு ஆகிரும்..."

சங்கமித்ரா இவ்வாறு சொன்னதும் சித்தார்த் பிரகதீஸ்வரியை பார்த்தான்... அவளும் தனது கையை அவன் முன் நீட்டியபடி,

"எடுத்துக்கோங்க..." என்றாள்...

"நீ சொல்லி கேட்காம இருப்பேனா..." என்றவனின் குரலில் திடுக்கிட்டுப் போய்ப் பிரகதீஸ்வரி அவனை நிமிர்ந்து பார்க்க... அவனோ சங்கமித்ராவை பார்த்துக் கொண்டிருந்தான்...

அவனது ஆழ்ந்த குரல் அவளது மனதில் பயத்தை ஏற்படுத்தி மத்தளம் வாசித்தது சத்தமாய்...

"மித்ரா இங்கே வாம்மா... தம்பி ஃபோன்ல பேசறான்..." பிரபாவதி வீட்டின் வாயிலில் இருந்து சங்கமித்ராவை அழைத்தார்...

"அப்பாவா...? இதோ வர்றேன் அத்தை..." தந்தையிடம் பேசும் ஆவலில் சங்கமித்ரா வீட்டை நோக்கி ஓடினாள்...

அவளைத் தொடர்ந்து பிரகதீஸ்வரியும் நகர முற்பட அவளது கைப்பிடித்துத் தடுத்தான் சித்தார்த்... அதில் அவளது உடல் தூக்கிவாரி போட அவனை ஏறிட்டு பார்த்தாள்... அவளது வழிகளில் பிரதிபலித்த அச்சத்தில் அவளது கையை விடுவித்தவன்,

"பயப்படாதே... உன்னைத் தடுத்து நிறுத்தத்தான் கையைப் பிடிச்சேன்... வேறு எந்தத் தவறான எண்ணமும் எனக்கு இல்லை..."

அப்போதும் அவள் அவனைப் பயத்துடன் பார்த்து வைத்தாள்... அதைக் கண்டு அவனது விழிகள் வேதனையையும், கோபத்தையும் ஒருங்கே பிரதிபலித்தது...

"பிரசாதம் கொடுக்கும் எண்ணம் இல்லையா...?" அவளது கையிலிருந்த சர்க்கரை பொங்கலை சுட்டிக்காட்டி அவன் கேட்டான்...

அதில் அவளது விழிகள் நிம்மதியை பிரதிபலித்தது... தனது கையை அவன் முன் நீட்டி,

"சாரி... மறந்துட்டேன்..." என்றவளை ஒரு மாதிரியாய் பார்த்தபடி பிரசாதத்தை எடுத்து வாயில் போட்டவன்,

"மித்ரா மாதிரி நீயும் செய்ய மாட்டியா...?"

"ஆங்... என்ன செய்யணும்..." என்று திணறியபடி கேட்டவளை கண்டு அவனது விழிகளில் சுவாரசியம் பிறந்தது...

"அவள் என் நெற்றியில் குங்குமம் வைத்தது விட்டது போல் நீயும் பிரசாதத்தை எனக்கு ஊட்டி விட்டிருக்கலாமே..." என்று கூறியவனின் குரலில் மட்டுமல்ல அவனது விழிகளிலும் குறும்பு நிரம்பி வழிந்தது...

"அது ரொம்பத் தப்பு..." என்றாள் அவள் பட்டென்று...

"ஏன்...?" அவனது விழிகள் யோசனையாய் இடுங்கியது...

"அவங்க உங்க மாமா பொண்ணு... சொந்தக்காரங்க... நான் அப்படி இல்லையே..."

"ஏன் நீயும் என் சொந்தம் தானே... அதாவது நீயும் என்னோட அத்தை பொண்ணு தானே..."

"ம்ஹூம்... அது அப்படியில்லை..." என்று மறுத்தவள்,

"நான் உங்களுக்குத் தூரத்துச் சொந்தம்... ஆனால் நீங்களும் மித்ராக்காவும் அப்படியில்லை... நானும் என் ஹரி அத்தானும் மாதிரி..."

இருவரின் சொந்தத்தை ஒப்பிட்டு சொன்னவளின் வார்த்தையில் சித்தார்த்தின் இரத்த அழுத்தம் ஏகத்துக்கும் எகிறியது...

"ஓ... உன் அத்தானை உனக்கு ரொம்பப் பிடிக்குமா...?"

"ம்... ரொம்ப ரொம்பப் பிடிக்குமே..."

சிறுபிள்ளையின் உற்சாகத்தோடு குதூகலமாய்க் கூறியவளின் புன்னகையில் நியாயத்திற்கு அவனது முகமும் சேர்ந்து மலர்ந்திருக்க வேண்டும்... ஏனோ தெரியவில்லை அவனது முகம் செந்தணலாய் ஜொலித்தது...

"அப்போ உனக்கு என்னைப் பிடிக்காது அப்படித்தானே...?"

அவனது கேள்வியில் அவளது மகிழ்ச்சி அப்படியே வடிந்தது...

"நான் அப்படிச் சொல்லலையே..." அவளது குரல் சுருதி இறங்கி ஒலித்தது...

"எங்க இரண்டு பேரில் யாராவது ஒருத்தரை தான் பிடிக்கும்ன்னு சொல்ல சொன்னால் நீ யாரை சொல்வாய்...?" கோபத்துடன் உறுமியவனைக் கண்டு அவள் பயத்தில் இரண்டடி பின்னடைந்தாள்...

அவனின் கேள்விக்குப் பதில் கூற இயலாது அவள் அமைதி காத்தாள்...

"சொல்லுடி..."

அவன் தனது குரலை உயர்த்தவில்லை... ஆனாலும் அவன் அழுத்தி சொன்ன விதத்தில் அதில் அப்படியொரு கோபம் தெரிந்தது...

"இதுக்கு நான் பதில் சொன்னா நீங்க கோபப்படுவீங்க..." பயத்துடன் அவனைப் பார்த்தாள் அவள்...

"சரி கோபப்படலை... பதில் சொல்லு..." என்றான் சட்டென்று தன்மையாக...

"எனக்கு ஹரி அத்தானை தான் பிடிக்கும்..."

அவனது விழி பார்த்து கூறியவளுக்கு அவனது விழிகளில் வந்து போன உணர்வை படிக்கத் தெரியவில்லை... ஆனாலும் அவனது பார்வை அவளது மனதினை ஏதோ செய்தது என்னவோ உண்மை...

"உங்களையும் பிடிக்கும் தான்..." என்றாள் உடனே அவள்...

"ஆனால் என்னை விட அவனைத் தான் உனக்கு அதிகம் பிடிக்கும் இல்லையா..."

இப்போது அவனது கூற்றை ஆமோதித்துப் பேசி அவனிடம் திட்டு வாங்குவதோ இல்லை பொய்யாய் மறுத்து உரைத்து அவனை மகிழ்விப்பதா என்று தெரியாது அவள் அமைதியாக நின்றிருந்தாள்...

"உனக்கு ஏன் என்னைப் பிடிக்கலை...?" என்று கேட்டவனின் குரலில் இருந்த ஏதோ ஒன்று அவளை நிமிர்ந்து பார்க்க வைத்தது அவனது முகத்தினை நோக்கி...

"இல்லையே, அப்படி எல்லாம் நான் சொல்லலை..." என்று மறுத்து கூறியவளை கை நீட்டி தடுத்தவன்,

"உண்மையைச் சொல்..." என்றான் உறுதியாய், இறுதியாய்...

"நீங்க... நீங்க..." அப்போதும் அவளுக்கு அவனிடத்தில் உள்ளதை உள்ளபடி உரைக்க அப்படியொரு பயமாக, தயக்கமாக இருந்தது...

"நான்..." அவன் ஊக்குவிக்க...

"நீங்க கோபப்படாம, அன்பா பேசினால் போதும்..."

"அப்போ உனக்கு என்னோட அன்பு மட்டும் போதும்ன்னு சொல்லுறியா...?" என்று அழுத்தி கேட்டவனின் உள்குத்தை அவள் உணரவில்லை...

"ஆமாம்..." அவள் சிறிதும் யோசிக்கவில்லை அதைச் சொல்வதற்கு...

ஏனெனில் அன்பை அளிப்பதற்கும், பெறுவதற்கும் எல்லை இருக்கிறதா என்ன...!

"இது என்றைக்கும் மாறக் கூடாது..."

"ம்ஹூம்... நிச்சயமா மாறாது..." வெகுளியாய் தலையாட்டினாள் பிரகதீஸ்வரி...

"இன்றிலிருந்து நான் உன்னிடம் கோபப்பட மாட்டேன்..." என்றவனை அதிசயமாய் விழி விரித்துப் பார்த்தாள் அவள்...

"உன் கிட்ட அன்பா நடந்துக்கிறேன்..." என்றுரைத்தவன்,

"இப்போ சொல்லு, உனக்கு என்னைப் பிடிக்குமா...?"

அவனது வார்த்தைகள் மட்டுமல்ல அவனுமே அவளுக்கு அதிசயமாகத் தோன்றினான்...

"அப்படின்னா பிடிக்கும்..."

"உன் ஹரி அத்தானை விடவா...?"

அவன் கேட்டதற்குச் சிறிது யோசித்தவள், "தெரியலை... ஆனா பிடிச்சியிருக்கு போதுமா...?"

"போதாதே..." என்று முனங்கியவனின் வார்த்தைகள் நல்லவேளையாக அவளது காதில் விழவில்லை...

"என்ன சொன்னீங்க...?"

"ஒண்ணும் இல்லை..." என்று சுதாரித்துக் கொண்டவன் அங்கிருந்த ரோஜா செடியில் இருந்து சிகப்பு ரோஜாவை பறித்து அவளிடம் நீட்டினான்...

"புதிதாய் மலர்ந்த நம் உறவுக்காக..." என்று அவன் கூற...

"அன்பிற்காகன்னு சொல்லுங்க..." என்று வெகுளியாய் கூறியவள் அந்த ரோஜாவை வாங்கிக் கொண்டாள்...

"அன்பை சொல்வதற்காக நீங்க இதைப் பறித்திருக்க வேண்டாம்... செடியிலேயே இருந்தால் அழகாக இருந்திருக்கும்..."

"இந்த ரோஜா செடியில் இருப்பதை விட உன் கையில் இருப்பது தான் இன்னமும் அழகாக இருக்கிறது..."

அவனது கூற்று அவளுக்குப் புரிந்தும் புரியாமலும் இருக்க அவள் அவனைப் பார்த்து விழித்தாள்...

"தலையில் வைத்து கொள்..." என்று அவன் சொல்லியது கேட்டு ரோஜாவை தலையில் வைத்தவளின் மனதில் பெரும் யோசனையாய் அவனது வார்த்தைகள்...

சித்தார்த் தனது கையை நீட்டி அவள் காதோரமாய்ச் சொருகியிருந்த ரோஜா பூவை மிருதுவாய் வருடி கொடுத்தவன்,

"இப்போது இன்னமும் அழகாக இருக்கிறது..."

அவனது குரலா அல்லது அவளது காது மடலை உராய்ந்த அவனது கைவிரலின் மெல்லிய தீண்டலா ஏதோ ஒன்று அவளது மனதினை வெகுவாய்த் தாக்கியது..

"என்னை எல்லாம் அத்தான்னு கூப்பிட மாட்டியா ரதி பேபி..."

அவனது குரலில் தெரிந்த குழைவில் அவளுக்கு உள்ளுக்குள் திக்கென்று இருந்தது... அவன் சாதாரணமாகக் கேட்டிருந்தால் கூடக் கூப்பிட்டிருப்பாளோ என்னவோ... ஆனால் அவனது இந்தக் குரல்... ம்ஹூம் ஏதோ சரியில்லை என்றது அவளது உள்ளுணர்வு...

"வேலையிருக்கிறது... நான் வர்றேன்..." என்று முணுமுணுத்தபடி அவள் வேகமாக அங்கிருந்து நகர்ந்தாள்...

பிரகதீஸ்வரி செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த சித்தார்த் தான் எடுத்த முடிவில் உறுதியாய், தீவிரமாய் இருந்தான்... அதற்காக அவன் எதையும் செய்யத் தயாராக இருந்தான்...

தனது முடிவினால் பாதிக்கப்படப் போவது அவள் மட்டும் தான் என்று தெரிந்த போதும் தனது பரமபத விளையாட்டில் அவளைப் பகடைக்காயாக்க அவன் எண்ணினான்...

சில சமயங்களில் பகடைக்காய் நமது சொல் பேச்சு கேட்காது போகக் கூடும் என்பது அந்த அறிவாளிக்குத் தெரியாமல் போனது அந்தோ பரிதாபம்...!!!

அந்தக் கணம் மகாபாரதத்தில் தர்மருக்கு ஏற்பட்ட பரிதாப நிலையைப் பற்றி அவன் அறிந்திருக்கவில்லை...!!!

"அவனது கோபம் உன்னைப் பாதிக்கிறது...
அவனது வெறுப்பு உன்னை வெறுக்க வைக்கிறது...
அவனது வேதனை உன்னை வேதனை கொள்ளச் செய்கிறது...
அவனது துன்பம் உன்னைத் துன்பப்பட வைக்கிறது...
அவன் முகம் மலர்ந்தால், நீயும் முகம் மலர்கிறாய்...
அவன் மகிழ்ந்தால், நீயும் மகிழ்கிறாய்...
அவனுக்காக நீ துடிப்பதும், தவிப்பதும் எதற்காகப் பெண்ணே...
இதற்கு எல்லாம் என்ன அர்த்தம் என்று
நீ அறிவாயோ பெண்ணே...
அர்த்தம் புரியும் போது உன்னை
நீயே வெறுக்கப் போவது உறுதி...
பதின்வயதில் வரும் ஈர்ப்பு,
நரை தோன்றி மூப்பு அடைந்தாலும் மறவாதே
இந்தப் பாழாய் போன மனது...
அத்தகைய கொடிய தண்டனை உனக்கு வேண்டுமா...?
காதல் நோய் தாக்கும் முன்
உன் கள்வனிடம் இருந்து நீ தப்பிப் பிழைத்துக் கொள்
என் சின்னக் கண்மணியே...!!!"

நனவாகும்...!!!

சித்தார்த்தின் செயலில் மனம் தடதடக்க வீட்டிற்குள் நுழைந்த பிரகதீஸ்வரி அங்கு வரவேற்பறையில் இருந்தவர்களைக் கூடக் கண்டு கொள்ளாது அவர்களைத் தாண்டி செல்ல முற்பட்ட போது, சந்தியா அவளைக் கண்டு,

"பிரகதி..." என்று கீறிச்சிட்டு கத்தினாள்...

அதில் தன்னுணர்வு பெற்ற பிரகதி பெரியவள் பக்கம் திரும்பினாள்...

"என்னக்கா...?"

"இங்கே வா..."

சந்தியா கூப்பிட்டதும் அவளை நோக்கி சென்றாள் பிரகதீஸ்வரி... சந்தியா தன்னருகில் வந்த பிரகதீஸ்வரியின் கையிலிருந்த சர்க்கரை பொங்கல் முழுவதையும் வழித்து எடுத்துக் கொண்டு,

"இதுக்குத் தான் கூப்பிட்டேன்..." என்று வாயெல்லாம் பல்லாகக் கூறியவள் அடுத்த நொடி பொங்கலை தனது வாயில் போட்டு கொண்டாள்...

விமலாராணி மகளது செயலை கண்டு மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்டார்... வெளியில் தெரியும்படி அந்தக் காரியத்தைச் செய்தால் பிரபாவதி அவரைக் கேவலமாகப் பார்ப்பார்... அதனால் தான் அவர் அடக்கி வாசித்தார்... அவர் நினைத்தது போல் பிரபாவதி இளக்காரமாகப் பார்த்து வைத்தார்...

மார்த்தாண்டத்திற்குக் கூடத் தங்கை மகள் இப்படி நடந்து கொண்டது கொஞ்சமும் பிடிக்கவில்லை... இது என்ன சிறு பிள்ளை போன்று என்று அவரும் நினைத்தார்...

பிரகதீஸ்வரி எப்போதும் போல் சகோதரியின் செயலை கண்டு சிரித்தபடி தனது கையிலிருந்த குங்குத்தை எடுத்து

சந்தியாவின் நெற்றியில் பூசிவிட்டாள்... அந்நேரம் அதைப் பார்த்தபடி அங்கு வந்து சேர்ந்தான் சித்தார்த்...

பிரகதீஸ்வரி நிமிர்ந்த போது அவளது பார்வையும், அவனது பார்வையையும் ஒரே நேர்க்கோட்டில் சந்தித்துக் கொண்டது... சித்தார்த்தை கண்டதும் பிரகதீஸ்வரியின் மனம் மீண்டும் மத்தளம் வாசிக்க ஆரம்பித்தது... அவனோ அவளைப் பார்த்தபடி தனது தந்தையின் அருகில் சென்று அமர்ந்தான்...

"இங்கே வாம்மா..." என்று மார்த்தாண்டம் அவளை அழைத்தார்...

அவர் அழைத்துப் போகாமல் இருக்க அவளால் முடியவில்லை... அதே சமயம் அவரது மகன் அருகில் செல்லவும் அவளுக்கு நடுக்கமாக இருந்தது...

"எனக்கு எல்லாம் குங்குமம் இல்லையாம்மா...?" என்று அவர் சிரித்தபடி கேட்க...

"உங்களுக்கு இல்லாததா...? எடுத்துக்கோங்க மாமா..." என்று அவள் தனது கையை அவர் முன் நீட்டினாள்...

அருகிலிருந்த அவரது மகனை அவள் ஏறிட்டும் பார்க்கவில்லை... அவனுக்கு அதைப் பற்றி ஒன்றும் இல்லை போலும்... எந்தவித லஜ்ஜையும் இல்லாது அவளை இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான்...

அடுத்து பிரபாவதிக்கும் குங்குமத்தை கொடுத்தவள் அடுத்த நொடி அங்கிருந்து ஓடி சென்றுவிட்டாள்... ஏனோ சித்தார்த்தின் பார்வை அவளைத் தொடர்வது போல் ஒரு பிரம்மை... சமையலறைக்குள் நுழைந்தவளை சோலையம்மாள் இன்முகத்துடன் வரவேற்றார்...

"வா கண்ணு..." என்றவர் அவள் அருந்துவதற்காக அருகம்புல் சாறை கொடுத்தவர்,

"கண்ணு... கொஞ்சம் அடுப்பை பார்த்துக்கோ... நான் போய்ப் பத்துப் பாத்திரத்தை கழுவி வச்சிட்டு

வந்திர்றேன்..."

விருந்தினர் வந்திருப்பதால் அவருக்கும் வேலைகள் அதிகமாக இருந்தது... அதனால் சரியென்று தலையசைத்தவள் அடுப்பில் வெந்து கொண்டிருந்த காய்களைப் பார்த்தவாறு நின்றிருந்தவளின் மனதில் சித்தார்த்தின் நினைவுகளே...

அவனது செயல், பேசிய வார்த்தைகள் எல்லாம் அவளுள் பெரும் பூகம்பத்தைக் கிளப்பி இருந்தது... ஏன் இப்படிப் பேசினான், எதற்காக இப்படி நடந்து கொண்டான்...? என்று விடை தெரியாது குழம்பி போய் நின்றிருந்தாள்...

"ரதி..." அவளது காதுக்கருகில் ஒலித்த சித்தார்த்தின் குரலில் அவளுக்குத் தூக்கிவாரி போட்டது...

பயந்து போனவளாய் அவள் திரும்பி பார்த்தாள்... அவளுக்கு மிக அருகில் சித்தார்த் நின்று கொண்டிருந்தான் புன்னகை முகமாய்...

"என்ன பண்ணிக்கிட்டு இருக்க...?"

"சமையல்..." என்று கூறியவளுக்கு நெற்றியில் வியர்வை அரும்புகள் அரும்ப ஆரம்பித்தது...

அவளது பயம் அவனுக்கும் புரிந்து தான் இருந்தது... ஆனாலும் அதைக் கண்டு கொள்ளாது அவன் பேச்சை வளர்த்தான்...

"இன்னைக்கு என்ன மெனு...?"

'எதுக்கு இதை எல்லாம் கேட்கிறாங்க...?' என்று புரியாது விழித்தவள்,

"அடை தோசை, அவியல், வெல்லம், வெண்ணெய்..."

"இவ்வளவு தானா... இன்னும் ஏதேனும் இருக்கிறதா...?" அவள் சொல்லி கொண்டு இருக்கும் போதே அவன் இடைமறித்துக் கேட்டான்...

"ஏன் உங்களுக்கு இது எல்லாம் பிடிக்காதா...? உங்களுக்கு என்ன பிடிக்கும்...?"

சற்றுப் பயம் தெளிந்து தன்னைப் பார்த்து கேட்டவளை கண்டு அவனது கண்கள் பளபளத்தது...

"எனக்கு என்ன பிடிக்கும்ன்னு இப்போ நான் உன் கிட்ட சொல்ல முடியாது... ஆனால் சொல்ல வேண்டிய நேரத்தில் கண்டிப்பா உன் கிட்ட நான் சொல்வேன்..."

அவனது பூடகமான பேச்சில் மீண்டும் அவளது மனம் அரண்டு போனது... கண்களில் மிரட்சியைத் தேக்கியபடி தன்னைப் பார்த்தவளை கண்டு அவன் என்ன நினைத்தானோ...

"என்னைப் பார்த்து நீ ஏன் பயப்படுற ரதி...? நான் உனக்குக் கெடுதல் செய்ய நினைப்பேனா பேபி..."

மீண்டும் அவனது குரலில் இருந்த ஏதோ ஒன்று அவளது மனதை ஏதோ செய்தது... என்னவென்று பிரித்தறிய முடியாத ஒரு உணர்வு அது...

"அப்படி... எல்லாம்... இல்லை..." என்றவளது வார்த்தைகள் தந்தியடித்தது...

"அப்படி என்றால் என்னிடம் சாதாரணமாகப் பேசு... ஏன் இப்படிப் பயந்து நடுங்கிற...?"

அதற்குப் பதில் அளிக்காது அவள் அவனைப் பார்த்தபடி நின்றிருந்தாள்...

"ஒரு கப் காபி கிடைக்குமா...?"

அவளிடம் இருந்து பதில் வராது என்று தெரிந்து பேச்சை மாற்ற எண்ணியவனாய் அவன் அப்படிக் கேட்டான்... அவனது தந்திரம் வேலை செய்தது...

"இதோ..." என்றவள் பாலை சூடு பண்ணுவதற்காக அடுப்பில் வைத்தாள்...

"கொஞ்சம் ஸ்ட்ராங்கா..." என்று அவளிடத்தில் கூறியவன் இரு கைகளையும் கட்டியபடி அங்கிருந்த மேடை மீது சாய்ந்து நின்றான்...

"அதிகம் காபி குடிக்கிறது நல்லது இல்லை..."

உண்மையான அக்கறையுடன் கூறியவளை கண்டு அவனது கண்களில் கனிவு வந்தது...

"ம்... சொல்வது நீயாக இருப்பதால்..." என்று நிறுத்தியவனை அவள் பொருள் விளங்காது ஏறிட்டு பார்த்தாள்...

"குறைச்சிக்கிறேன்..." என்று கூறியபடி வசீகரமாகச் சிரித்தவனைக் கண்டு உள்ளம் தடதடக்க வேகமாய்த் தனது பார்வையை அடுப்பை நோக்கி திருப்பிக் கொண்டாள்...

காபி கலந்து அவனிடம் கொடுத்தவள் அதன் பின் அவன் அங்கிருந்து சென்று விடுவான் என்று எண்ணியிருக்க, அவனோ அசையாது அங்கிருந்தபடி காபியை மெல்ல ருசித்துப் பருகினான்...

"அடைக்குத் தக்காளி சட்னி இருந்தால் நல்லாயிருக்கும் இல்லையா..."

என்றோ பாட்டி வீட்டில் உண்ட உணவின் ருசியில் அவன் அவளிடம் கேட்க, அதில் முகம் மலர்ந்தவளாய் அவனைப் பார்த்தவள்,

"எனக்கும் அடைக்குத் தக்காளி சட்னி, தக்காளி குழம்பு தான் பிடிக்கும்... அம்மா இருந்த வரை எனக்குச் செஞ்சு கொடுப்பாங்க..."

சிறுபிள்ளை போன்று குதூகலகமாய்க் கூறியவளின் மலர்ந்த முகத்தை உற்று பார்த்து கொண்டிருந்தவனின் மனதில் வேதனை எழுந்தது... அந்த நொடி நேர வேதனையை ஏனோ அவனால் மறைக்க முடியவில்லை... சட்டென்று அவனது முகம் அதைப் பிரதிபலித்து விட்டது...

அவனது முக மாறுதலை அவள் கூர்ந்து அவதானித்து விட்டாள்... இத்தனை நேரம் சந்தோசமாய் இருந்தவனுக்கு இப்போது என்னவாயிற்று...

"என்னாச்சு...?"

அவளது குரலில் தன்னுணர்வு அடைந்தவன் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்...

"என்னவானது...?" என்று புரியாது கேட்டான் அவன்...

"ஏன் ஒரு மாதிரியா ஆகிட்டீங்க...?"

"ஒரு மாதிரியான்னா...?"

"கஷ்டப்படுகிற மாதிரி..."

அவள் கூறியதை கேட்டு அவனது கண்கள் பளிச்சிட்டது... ஆனாலும் தனது மனதினை மறைத்துக் கொண்டு,

"தொழில் பற்றி நினைத்தேன்... அவ்வளவு தான்..." என்று மழுப்பி விட்டான்...

"ஓ..." என்று அவளும் அமைதியாகி விட்டாள்...

அந்நேரம் பிரபாவதி அங்கு வந்தார்... சித்தார்த் சமையலறையில் இருப்பதைக் கண்டு ஆச்சிரியம் அடைந்தவராய்,

"சித்து... கிச்சன்ல உனக்கு என்னடா வேலை...?"

பிரபாவதியை கண்டதும் பிரகதீஸ்வரி பயத்துடன் சித்தார்த்தை பார்த்தாள்... அவன் தன்னுடன் பேசி கொண்டிருப்பதைக் கண்டு அவர் தவறாக நினைத்து விடுவாரா என்று... அவளது பயத்தை உணர்ந்தவனாய் அவன் இடது கரத்தால் அவளது கையை அழுத்தி பிடித்து ஆறுதல் படுத்தியவன், வலதுகையில் இருந்த காபி கோப்பையை அன்னை முன் நீட்டி,

"காபி குடிக்கலாம்ன்னு வந்தேன்ம்மா..."

"காபி வேணும்ன்னா கேட்டிருக்க வேண்டியது தானே சித்து... இது என்ன புதுப் பழக்கம்...?" என்றவரது பார்வை மகன் அருகில் நின்றிருந்த பிரகதீஸ்வரியை ஒரு மாதிரியாகப் பார்த்து வைத்தது...

அவனின் பின்னால் அவள் பாதியாக மறைந்திருந்ததால் மகன் அவளது கையைப் பிடித்துக் கொண்டிருந்தது அவரது கண்களுக்குத் தெரியவில்லை...

"இனிமேல் பழகிக்க வேண்டியது தானேம்மா..." என்றவனது பதிலில் அந்தத் தாயின் முகம் மலர்ந்து விட்டது... மறைமுகமாக மகன் திருமணத்திற்குச் சம்மதம் தெரிவிக்கிறானோ என்று...

உடனே இந்த நல்ல விசயத்தை அவரது தம்பியிடம் பகிர்ந்து கொள்ளவில்லை என்றால் அவரது தலை வெடித்துவிடும்... அதனால்,

"ரொம்ப நல்லது சித்து..." என்றுரைத்தபடி அவர் சென்றுவிட்டார்...

"உன் அத்தையே சொன்ன பிறகு இன்னமும் என்ன பயம்...?"

இன்னமும் பயந்து நடுங்கி கொண்டிருந்த பிரகதீஸ்வரியை பார்த்து அவன் கேட்டான்... அவளோ பிரபாவதியின் நினைவில் இருந்தவள் முதலில் அவன் கூறியதை கவனிக்கவில்லை... பின்பு கவனித்தவளாய்,

"அத்தையா...?" என்றாள் வாயை பிளந்து...

"ஆமாம் அத்தையே தான்..." என்று அழுத்தி சொன்னவன்,

"சந்தியாவுக்கு என் அம்மா அத்தை என்றால், உனக்கும் அவங்க அத்தை தான்... அவங்க மகன் நான் உனக்கும் அத்தான் தான்..."

"ஓ... நீங்க அப்படிச் சொல்றீங்களா...?" மீண்டும் வெகுளியாய் சிரித்தவளை கண்டு அவனது மனம் பாரமாகிப் போனது...

"இதை நீ என்றும் மறக்கக் கூடாது..."

மீண்டும் பூடகமாக, இலைமறை காயாகப் பேசியவனைக் கண்டு அவள் புரியாது பார்த்துக் கொண்டிருக்கும் போது அங்குச் சோலையம்மாள் வந்து சேர, அவரைக் கண்டதும் சித்தார்த் ஒன்றும் பேசாது சென்றுவிட்டான்...

காலை உணவு உண்ண எல்லோரும் அமர்ந்தனர்... பிரகதீஸ்வரி வைத்த தக்காளி சட்னி அவர்களுக்குப் பிடித்துப் போக எல்லோரும் முதலில் அதைத் தான் காலி செய்தனர்...

"அடைக்கு இது தான் நல்லாயிருக்கும்மா..."

எப்போதும் உடல்நலன் பேணும் சரவணன் கூட இன்று இன்னும் ஒரு அடை தோசையை எடுத்து தனது தட்டில் வைத்துக் கொண்டான்...

சித்தார்த் ஒன்று பேசவில்லை அமைதியாக உண்டு கொண்டிருந்தான்... பிரகதீஸ்வரி எப்போதும் போல் பரிமாறி கொண்டிருந்தாள்... எல்லோரும் உண்டு முடித்துச் சென்ற பின்னர்ப் பிரகதீஸ்வரி உண்ண அமர்ந்த போது அவள் வைத்த தக்காளி சட்னி வெறும் சட்டியாய் அவளைப் பார்த்து வரவேற்றது...

இருப்பதைத் தட்டில் எடுத்து வைத்துக் கொண்டு உண்ண அமர்ந்தவள் முன் தக்காளி சட்னி அடங்கிய சிறு கிண்ணம் நீட்டப்பட்டது... யார் என்று ஏறிட்டு பார்த்தவளுக்கு அங்குச் சித்தார்த் நின்றிருப்பதைக் கண்டு முகம் பூவாய் மலர்ந்து போனது...

"இது ஏது...?"

"எனக்கு வைத்தது..."

"நீங்க சாப்பிடலையா...?" என்று கேட்டவளின் குரலில் கவலை நிரம்பி வழிந்தது... அவனுக்குப் பிடிக்கும் என்று கூறினானே...

அவளது கவலையை இனம் கண்டு கொண்டவனது முகம் மகிழ்ச்சியைப் பிரதிபலித்தது...

"நான் சாப்பிட்டு விட்டேன்... ரொம்ப டேஸ்ட்டா இருந்தது... உன் கைப்பக்குவம் ரொம்ப நல்லாயிருக்கு..."

அவனின் பாராட்டில் அவளது முகத்தில் சந்தோசத்தின் சாயல்...

"நீ சாப்பிடு..." என்றவன் அந்தச் சட்னியை அவளது தட்டில் ஊற்றினான்... அவனது அக்கறையில் அவளது கண்கள் கரித்தது...

அவளது தந்தை மறைவுக்குப் பின் இவ்வளவு அக்கறையாய் அவளைக் கவனித்துக் கொண்டது சித்தார்த் ஒருவனே... அவளது மனதில் இனம் புரியாத சஞ்சலம்...

"சாப்பிடாம இங்கே என்ன பார்வை...? இன்னும் கொஞ்சம் வைக்கவா...?" என்று தோசையை எடுக்கப் போனவனின் கையைப் பிடித்துத் தடுத்தவள்,

"ஐயோ வேண்டாம்... இதுவே அதிகம்..." என்று கூற...

தன் கை மீதிருந்த அவளது கையைப் பார்த்தவன், "நீ இப்படித் தடுப்பதாக இருந்தால் நான் வைத்துக் கொண்டே இருப்பேன்..." என்று நமுட்டுச் சிரிப்புடன் கூறியவனைக் கண்டு அவள் பட்டென்று தனது கையை விலக்கி கொண்டாள்...

சித்தார்த் சிரித்தபடி அங்கிருந்து சென்றுவிட்டான்... அப்பாடா என்று நிம்மதி பெருமூச்சு விட்டபடி தலை நிமிர்ந்தவளின் பார்வை வட்டத்தில் வரவேற்பறையில் அமர்ந்திருந்த சித்தார்த் தென்பட்டான்...

'ஒழுங்கா சாப்பிடு...' என்பது போல் சைகை செய்தவனைக் கண்டு மீண்டும் தலையைக் குனிந்து கொண்டாள் அவள்...

அவள் சாப்பிட்டு முடிக்கும் போது சங்கமித்ரா அங்கு வந்து சேர்ந்தாள்... அவள் வேலை பார்க்கும் மருத்துவமனையில்

இருந்து முக்கியமான அழைப்பு வந்திருந்தது... அதைப் பேசுவதற்காகத் தான் அவள் சென்றிருந்தாள்...

"பிரகதி... போர் அடிக்குது... ஏதாவது செய்யலாமா...?" என்று கேட்க...

"இங்கே என்னக்கா செய்றது...?"

"ஏதாவது விளையாடலாமா...?"

"நான் பல்லாங்குழி, தாயம், தட்டாங்கல் இது தான் விளையாடுவேன்..."

சங்கமித்ரா மற்ற இரு விளையாட்டுகள் பற்றிக் கேள்விப்பட்டு இருக்கிறாள்... தட்டாங்கல் அவளுக்குக் கேள்விப்பட்ட பெயராகத் தெரியவில்லை...

"அது என்ன தட்டாங்கல்...? எனக்கும் கொஞ்சம் சொல்லி கொடு..." என்று அவள் கேட்க...

பிரகதீஸ்வரி கையில் சிறு கற்களுடன் வந்தாள்... இருவரும் சேர்ந்து வரவேற்பறைக்கு வந்தனர்... பெரியவர்கள் அங்கில்லை... சிறியவர்கள் மட்டுமே அங்கிருந்தனர்... சந்தியா, ஸ்வேதா இருவரும் அலைப்பேசியில் எதையோ பார்த்துக் கொண்டு தங்களுக்குள் சிரித்துக் கொண்டிருந்தனர்... சரவணன் தனது கையிலிருந்த அலைப்பேசியைப் பார்ப்பது போல் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான்... சித்தார்த் தனது மடிகணினியில் வேலை பார்த்துக் கொண்டிருந்தான்...

"ஏய் பிரகதி... சூப்பரா கேட்ச் பிடிக்கிற... எங்கே இன்னொரு தடவை செய் பார்க்கலாம்..." என்று உற்சாகக் குரல் எழுப்பிய சங்கமித்ராவை கண்டு சித்தார்த் தனது பார்வையை மடிகணினியில் இருந்து பிரகதீஸ்வரி மீது திருப்பினான்...

மேலே ஒரு கல்லை தூக்கி போட்ட பிரகதீஸ்வரி அதைப் பார்த்தவாறு கீழேயிருந்த ஒரு கல்லை எடுத்து தனது இடது கையில் வைத்து கொண்டவள் கீழே வந்து கொண்டிருந்த

கல்லை வேகமாய்த் தனது வலதுகையில் பிடித்தாள்... நிச்சயம் இதற்கு நல்ல பயிற்சி இருக்க வேண்டும்... அது இருந்தால் மட்டுமே இது சாத்தியம்...

ஆனால் சித்தார்த்தோ வேறு ஒன்றை பற்றி யோசித்துக் கொண்டிருந்தான்... அதையே பிரகதீஸ்வரியும் பிரதிபலித்தாள்...

"அக்கா... இந்த விளையாட்டில் நமது புத்தி இரு பக்கமும் நிலை கொண்டிருக்க வேண்டும்... ஒன்று கீழே இருக்கும் கல்... மற்றொன்று மேலே செல்லும் கல்... அதாவது ஒரே நேரத்தில் இரு விசயங்களில் கவனம் செலுத்த வேண்டும்... இந்த விளையாட்டு நமது ஐக்யூவை வளர்க்க உதவும்..."

அவள் கூறியதை கேட்டு அவன் மனதுக்குள் சிரித்துக் கொண்டான்... அவனும் அதைப் பற்றித் தான் யோசித்துக் கொண்டிருந்தான்... அதாவது பிரகதீஸ்வரியின் புத்திக்கூர்மை மற்றும் அதன் வேகமான செயல்பாடு... அதை அறிந்தவனுக்கோ முதன்முறையாக யோசனை எழுந்தது மனதில்...

சிறிது நேரம் அதை விளையாடி பார்த்த சங்கமித்ரா அடுத்து பல்லாங்குழி ஆட தயாரானாள்... அதைப் பற்றிய விளக்கமும் பிரகதீஸ்வரியிடம் இருந்தது...

"இதுவும் சின்னப் பிள்ளைங்களுக்கு மனக்கணக்கை வளர்ப்பதற்கு உதவும் ஒரு விளையாட்டு... அத்தோடு கணக்கு போட்டு விளையாண்டு ஆட்டத்தில் வெற்றி பெறும் சூட்சமத்தையும் சொல்லி கொடுக்கிறது... அதாவது ஒரே நேரத்தில் நிதானத்தையும், புத்திக்கூர்மையையும் இந்த விளையாட்டு வளர்க்கிறது..."

அவள் கூறியதை கேட்டு சித்தார்த்தின் புருவங்கள் மேலேறியது...

"அண்ணா... ரொம்பப் போர் அடிக்குது... எங்கேயாவது போயிட்டு வரலாமா...?"

எவ்வளவு நேரம் தான் அலைப்பேசியுடன் பொழுதை கழிப்பது... அதனால் ஸ்வேதா தனது சகோதரனிடம் அப்படிக் கேட்டாள்...

"எங்கே போகணும்ன்னு சொல்லு...? போகலாம்..." என்றான் சித்தார்த்தும் பாசம் குறையாத அண்ணனாய்...

நாளை வருடப் பிறப்பு என்பதால் அவனும் இன்று ஓய்வில் இருந்தான்...

"சும்மா ஒரு டிரைவ் போயிட்டு வரலாம்..." என்று அவள் சொல்ல...

"நம்ம தோப்புக்கு கூட்டிட்டு போங்கண்ணா..." என்றாள் பிரகதீஸ்வரி தனது சகோதரனை பார்த்து...

கரும்பு தின்ன கூலி வேண்டுமா என்ன...?

"வாங்க போகலாம்..." என்றபடி உடனே சரவணன் தயாரானான்...

எல்லோரும் அதை ஆமோதித்து உடை மாற்ற சென்றனர்... பிரகதீஸ்வரி மட்டும் செல்லாமல் அங்கிருந்த பொருட்களை அடுக்கி வைத்து கொண்டிருந்தாள்... அதைக் கண்டு கேள்வியாய் அவளைப் பார்த்த சித்தார்த்,

"நீ வரலையா...?"

"இல்லை..." 'படிக்க வேண்டியிருக்கிறது...' என்று அவள் கூறும் முன் அவன் விருட்டென்று நாற்காலியிலிருந்து எழுந்து வெளியில் சென்றுவிட்டான்...

நாற்காலியை தள்ளி கொண்டு அவன் எழுந்த வேகத்திலேயே தெரிந்தது அவனது கோபத்தின் அளவு... ஏனோ தெரியவில்லை அவனது கோபம் அவளை மிகவும் பாதித்தது... அதனால் அவன் பின்னேயே சென்றாள்...

வராண்டாவில் அமர்ந்தபடி எங்கோ வெறித்துப் பார்த்து கொண்டிருந்தவனை எப்படி அழைப்பது என்று தெரியாது விழித்தவள் மெல்லமாய்,

"நானும் வர்றேன்..."

அவள் கூறியதும் அவளைத் திரும்பி பார்த்தவன் நிதானமாக, "இதை ஏன் என்னிடம் சொல்கிறாய்...?"

அவன் கூறியதை கேட்டு அவள் 'ங்கே' என்று விழித்தாள்... ஒருவேளை தான் தான் தவறாக நினைத்து கொண்டோமோ என்று...

"அதுக்காகத் தான் கோபப்பட்டு வந்தீங்களோன்னு நினைச்சேன்..."

அதில் முகம் மலர்ந்தவன், "அப்போ நான் கோபம் கொண்டது உனக்குப் புரியுது... என்னோட கோபம் உன்னைப் பாதிக்கிறது... அப்படித்தானே...?"

இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாது தலைகுனிந்து நின்றபடி அமைதி காத்தாள் அவள்...

"ஏன் ரதி பேபி...?"

அவன் கேட்ட விதத்தில் அவளது நெஞ்சில் இரயில் தடதடவென ஓடியது...

"ஏன்னு சொல்லு...?" விடாப்பிடியாய் நின்றவனிடம் உண்மையைக் கூறாது,

"அது வந்து..." என்று அவள் இழுக்க...

"எதுவாக இருந்தாலும் சொல்..." என்று அவன் ஊக்குவிக்க...

"நான் சொன்னதைக் கேட்டு நீங்க கோபப்பட மாட்டீங்களே..."

"இதற்கான பதிலை நான் ஏற்கெனவே உன்னிடம் சொன்னதாய் எனக்கு நினைவு..." என்றான் அவன் அமர்த்தலான குரலில்...

"நீங்க கோபப்பட்டால் உங்க முகத்தைப் பார்க்க சகிக்கலை... அதனால் தான் போனால் போகுதுன்னு உடன்

வர சம்மதிச்சிட்டேன்..." என்று கேலியாய் உரைத்தவள் அவன் மேலே பேசும் முன் அங்கிருந்து ஓடிவிட்டாள்...

முதலில் அவள் கூறியதை கேட்டு விழித்தவன் பின் புரிந்தவனாய் பெருங்குரலெடுத்து சிரிக்க ஆரம்பித்தான்... அவனது சிரிப்பு அவளைப் பின்தொடர்ந்து சென்றது...

பிரகதீஸ்வரி சென்றதும் கால்களை முன்னிருந்த மேசை மீது வைத்து, கைகளைத் தலைக்குப் பின்னால் கோர்த்தபடி நாற்காலியில் சாய்ந்தமர்ந்த சித்தார்த்தின் மனதில் எல்லையில்லா மகிழ்ச்சி நிலவியது... அந்த வானத்தை வசப்படுத்தியது போன்று ஒரு சந்தோசம்... அந்த உணர்வினை எப்படிச் சொல்வது என்று அவனுக்குத் தெரியவில்லை... ஆனால் மனதுக்கு மிகவும் பிடித்திருந்தது அது மட்டும் உறுதி...

****

எல்லோரும் காரில் தோட்டத்திற்குக் கிளம்பினர்... ஸ்வேதா நடக்க முடியாது என்று கூறியதால் இந்த ஏற்பாடு... காரில் ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்திருந்த சித்தார்த் தனக்குப் பின்னால் அமர்ந்திருந்த பிரகதீஸ்வரியை முன்னால் இருந்த கண்ணாடி வழியே அவ்வப்போது பார்த்துக் கொண்டு வந்தான்...

அவனது பார்வையை உணராதவளாய் தற்செயலாய் ஏறிட்டு பார்த்த பிரகதீஸ்வரி அவன் தன்னைப் பார்த்து கொண்டிருப்பதைக் கண்டு விதிர்த்து போனவளாய் தலையைக் குனிந்து கொண்டாள்... அதைக் கண்டு அவனது உதட்டில் நமட்டுச் சிரிப்பு ஒன்று வந்தமர்ந்தது... இது எதையும் உணராத சங்கமித்ரா எப்போதும் போல் பிரகதீஸ்வரியிடம் வளவளத்துக் கொண்டு வந்தாள்...

அதே தோப்பு, அதே தோப்பு வீடு... சித்தார்த், பிரகதீஸ்வரி இருவரின் நெஞ்சிலும் அன்றைய நாளின் நினைவுகள் இனிமையாய்...

எல்லோருமே நகரத்தில் இருந்து புதிதாய் வந்திருப்பதால் மாங்காய், கொடுக்காப்புளி, புளியங்காய், பனம் பழம் என்று விதவிதமாய்க் கொண்டு வந்து கொடுத்தான் சரவணன்... அதாவது ஸ்வேதா முன் தன்னை நாயகனாகக் காட்டி கொள்ள அவன் விரும்பினான்...

பனம் பழத்தை சுட்டு எல்லோரும் உண்ண, சித்தார்த் அதை வேண்டாம் என்று மறுத்து விட்டு அங்கிருந்த மரத்தின் மீது சாய்ந்து நின்றான்... ஒற்றைக் காலை தரையில் ஊன்றி, மறுகாலை மரத்தில் ஊன்றியபடி, பேண்ட் பாக்கெட்டில் இரு கைகளையும் விட்டுக் கொண்டு அவன் நின்றிருந்த கோலம் அத்தனை வசீகரமாய் இருந்தது...

அதைப் பிரகதீஸ்வரியும் உணர்ந்தே இருந்தாள்... ஏனோ தெரியவில்லை அவனது புன்னகை முகமான இந்தத் தோற்றம் அவளது மனதில் அழியா சித்திரமாய் ஆழப் பதிந்தது... பனம் பழத்தை உண்டபடி ஓரக்கண்ணால் அவனைப் பார்த்து கொண்டிருந்தாள் அவள்...

அவளின் திருட்டுத்தனத்தைக் கண்டு கொண்டவனின் புன்னகை இன்னமும் அதிகமானது...

சிறிது நேரத்தில் மீண்டும் எல்லோருக்கும் பொழுது போகவில்லை... அதனால் கண்ணாமூச்சி ஆட்டம் விளையாட முடிவு செய்தனர்... அதைப் பரிந்துரை செய்தது ஸ்வேதா... அதனால் யாரும் அதை மறுக்கவில்லை... நகரத்தில் பிறந்து வளர்ந்தவளை இந்தச் சூழ்நிலை சற்று இலகுவாக்கி இருந்தது...

சரவணன் தானாகக் கண்களை மூடி கொள்ளச் சம்மதித்தான்... வலிய வந்து மாட்டி கொண்டவனை விட்டு விடுவார்களா பெண்கள்... அவனைக் களத்தில் இறக்கி விட்டு விட்டுப் பெண்கள் எல்லோரும் ஆளுக்கொரு திசையில் பறந்து சென்றனர்...

அங்கிருந்த மோட்டார் அறையின் பின்பக்கம் சென்று பிரகதீஸ்வரி ஒளிந்து கொண்டாள்... சகோதரன் வருகிறானா என்று அவள் எட்டிப்பார்த்த போது,

"ரதி பேபி..." என்றழைப்பில் திடுக்கிட்டு திரும்பியவள் அங்கு அருகில் நின்றிருந்த சித்தார்த்தை கண்டதும் அவளது விழிகள் விரிந்தது...

"இது என்ன...?" அவளது கையிலிருந்ததைச் சுட்டிக்காட்டி அவன் கேட்க...

அது புளியங்காய்... அவள் கடித்துவிட்டு மீதியை கையில் வைத்திருந்தாள்...

"புளியங்காய்..."

"ஓ... அப்படியா...?" என்றவன் எதிர்பார்க்காத நேரத்தில் அதை அவளிடம் இருந்து பிடுங்கி கொண்டான்...

"ம்ஹூம், வேண்டாம்... ரொம்பப் புளிக்கும்..."

"அதையும் பார்க்கலாமே..." என்று கூறியவன் அதை வாயில் போட்டு சுவைத்தபடி,

"ரொம்ப ஸ்வீட்டா இருக்கு... உன்னைப் போல்..." என்றான் அவளது விழிகளை நோக்கியபடி...

"ஆங்..." என்றபடி ஆவென வாயை பிளந்தவள் அவனைக் கண்டு பேய் முழி முழித்தாள்...

அவளது தோற்றத்தினைக் கண்டு அவன் நமட்டுச் சிரிப்பு சிரித்தபடி என்ன என்பது போல் புருவங்களை உயர்த்தினான்...

அதற்குள் அங்குச் சரவணன் தேடி வருவது கண்டு சித்தார்த் தன் இரு கை கொண்டு பிரகதீஸ்வரியை உள்ளுக்குள் இழுத்துக் கொண்டான்...

அவளது இடையை அவனது கைகள் தழுவியிருக்க, அவளது முகம் அவனது நெஞ்சில் மோதி நிற்க, அதில் விதிர்த்து போனவளாய் அவள் அவனை அண்ணாந்து பார்த்தாள்... அவனோ அவளைப் பார்க்காது சரவணன் வருகிறானா என்று பார்த்துக் கொண்டிருந்தான்...

சித்தார்த்தின் அருகாமையில், அவனிடத்தில் இருந்து வந்த அவனது பிரத்யேக நறுமணத்தில் பாவையவளின் மனதில் புதிதாய் மெல்லிய சலனம் எட்டிப்பார்த்தது... அவனது கைகள் அவளது தளிர் மேனியை உரசியதில் அவளது தேகத்தில் வெப்பமேற, அந்த வெப்பத்தின் வெம்மையைத் தாங்காது அவளது உயிரில் ஏதோ ஒன்று உருகியது...!!!

"தாயின் அரவணைப்பில்
பாசத்தினை உணர்ந்தேன்...
தந்தையின் தலை கோதலில்
பாதுகாப்பினை உணர்ந்தேன்...
சகோதரியின் செல்லச் சண்டையில்
நேசத்தினை உணர்ந்தேன்...
சகோதரனின் மென்மையான கண்டிப்பில்
அக்கறையை உணர்ந்தேன்...
என் அத்தானின் நல்வழிகாட்டுதலில்
மெய்யன்பினை உணர்ந்தேன்...
ஆனால் உன் அன்பு எத்தகையது என்று
தெரியாது தவிக்கின்றேன் நான்...
நீயும் புதிது... உன் உறவும் புதிது...
நீ கொடுக்கும் இந்த உணர்வும் புதிது...
யாரிடத்திலும் நான் இது போல்
உணர்ந்ததில்லை...
இதன் அர்த்தம் தான் என்ன...???
விடை தெரியாது துடிக்கின்றேன் நான்...
ஆதலால் நானே இதற்கு ஒரு பெயர்
சூட்டிக் கொண்டேன்... அது...
"சித்தார்த்"
உனது பெயரை சொல்லும் போதே
தித்திக்கிறதடா...
உன்னைப் போல்..."

நனவாகும்...!!!

"ஹப்படா... நல்லவேளையாகச் சரவணன் இங்கு வரவில்லை... அந்தப் பக்கமாகப் போய் விட்டான்..." என்று நிம்மதி பெருமூச்சு விட்ட சித்தார்த் அப்போது தான் கவனித்தான் பிரகதீஸ்வரி எதுவும் பேசாததை...

'என்னவாயிற்று இவளுக்கு...?' என்று நினைத்தபடி அவளைத் திரும்பி பார்த்தவன் அவள் இருந்த கோலத்தில் அப்படியே உறைந்தான்...

இமைக்காது தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த அவளின் விழிகளில் இருந்து அவனால் தனது விழிகளை வேறு எங்கும் திருப்ப முடியவில்லை... அந்தளவுக்கு அவளது விழிகள் காந்தம் போல் அவனைக் கட்டி இழுத்தது... அதில் அவனும் கண்ணிமைக்க மறந்தான்...

பாவையவள் விழி வீச்சில் நிலைக்குலைந்த காளையவன் தேகத்தில் மட்டுமன்றி மனதிலும் தீ மூண்டது...

கயல் விழியாளின் கருவிழிகள் இரண்டும் தனது இயக்கத்தினை நிறுத்தி இருந்ததாலோ என்னவோ பாவையவளின் செவ்விதழ்கள் மூச்சடைத்தது போல் தவித்துத் துடித்தது...

அந்தக் கணம் தன் இதழ்கள் மூலம் உயிர்மூச்சு அளித்து மங்கையவளின் இதழ்களுக்கு வாழ்வு கொடுக்கச் சொல்லி அவனது மனம் துடித்தது... தன்னையும் அறியாது அவளது முகம் நோக்கி அவன் குனிய, அவளோ பயத்திலும், மயக்கத்திலும் தனது விழிகளை இறுக மூடி கொண்டாள்...

சித்தார்த்தை பொருத்தவரை அவன் முழுமையான ஆண்மகன்... அவனுக்குக் காதலும் தெரியும்... அந்தக் காதலை கடந்த காமமும் தெரியும்... ஆனால் அவள் அப்படியில்லையே... பதின்வயதில் உள்ள பருவச்சிட்டு... இப்போது தான் சுதந்திர வானில் பறக்க பழகும் சின்னஞ்சிறு சிட்டு... பறக்க துடிக்கும் சிறு குருவியின் இறக்கையைப் பறிப்பது நல்ல ஆண்மகனுக்கு அழகா...?

அந்த நொடி அவனது உணர்வுகள் எல்லாம் அப்படியே வடிய அவன் அவளை விட்டு விலகி நின்றான்... இரு சகோதரிகளுடன் அவன் பிறந்து வளர்ந்த விதம் அவனை அவளிடத்தில் இருந்து தள்ளி நிற்க வைத்தது...

தன்னை நினைத்து, தன் மனம் போகும் திசையைக் குறித்து அவனுக்கு அத்தனை கோபம் வந்தது... அதே சமயம் அத்தனை அவமானமாக இருந்தது...

"ஷிட்..." என்று காற்றில் கையை ஓங்கி வீசி தனது இயலாமையை வெளிப்படுத்தியவன், காலால் தரையை ஓங்கி உதைத்து தனது கோபத்தினை வெளிக்காட்டினான்...

தலையைக் கோதியபடி சற்று தள்ளி தெரிந்த வயல்வெளியை சிறிது நேரம் பார்த்து கொண்டிருந்தவனுக்கு மனம் சிறிது சமன்பட்டது...

அதன் பின்னரே அவன் பிரகதீஸ்வரியை திரும்பி பார்த்தான்...

கண்களை மூடி சுவற்றில் சாய்ந்தபடி எழிலோவியமாய் நின்றிருந்தவளின் தோற்றம் அவனுள் ஆழப்பதிந்தது... ஒடிசலான தேகத்துடன், நல்ல உயரமாய்ப் பெரிய பெண்ணாய் அவளது தோற்றம் இருந்த போதும் அவளது முகத்தில் பால் மணம் மாறா குழந்தைத்தனம் இன்னமும் அப்படியே இருந்தது...

பச்சை பட்டுப்பாவாடை, ரவிக்கை அணிந்து, ஆரஞ்சு வண்ண தாவணி உடுத்தியிருந்த அந்தப் பட்டிக்காட்டு தேவதையின் பேரழகு முன் பட்டணத்து பெண்களின் அழகு கூடச் சற்று மங்கித்தான் போனது...

'இவள் பேரழகி தான்...' அவனது மனம் அவளுக்கு நற்சான்றிதழ் அளித்தது... அவனது கண்களோ அவளை அளவிடுவதை நிறுத்தவில்லை...

அவளது நீண்ட கூந்தலும், அதில் அவள் சூடியிருந்த கனகாம்பரம் மற்றும் ஜாதிப்பூ கலந்து கட்டிய மலர்சரம் அவளது தோள் இருமங்கிலும் வழிந்தோடியது...

அதைக் கண்டவனுக்குச் சற்று முன் அவள் அருகாமையில் அந்த மலரின் நறுமணத்தைச் சுவாசித்த நினைவுகள் இனிமையாய்...

அதை எல்லாம் விட அவளிடத்தில் அவனைப் பெரிதாய் ஈர்த்த ஒன்று அவளது வலது நாசியில் அணிந்திருந்த ஒற்றைச் சிவப்புக்கல் மூக்குத்தி தான்... அவன் கடந்து வந்த பெண்கள் யாரும் இது போன்றதொரு வித்தியாசமான அணிகலன் அணிந்து அவன் பார்த்ததில்லை... அதனால் தானோ என்னமோ அவளது மூக்குத்தி அவனை மிகவும் ஈர்த்தது... அவளது எடுப்பான கூர்மூக்கிற்கு ஏற்றார் போன்று அது வெகுபாந்தமாய் அழகுற பொருந்தியிருந்தது...

தாவணி முந்தானையைத் திருகியபடி கண்மூடி இருந்தவளின் தோற்றம் அவனது மனதினை மயக்கிய அதே சமயம் வேதனையையும் அளிக்கத் தவறவில்லை...

அவள் அருகில் வந்து அவள் முன் நின்றவன், "ரதி..." என்று மெல்ல அழைத்தான்...

அவனுக்கே அவனது குரல் புதிதாக இருந்தது... வார்த்தைக்கு வலிக்குமோ என்பது போல் மென்மையாக உச்சரித்த அவளது பெயர் மிகவும் குழைவுடன் ஒலித்தது...

அவனது அழைப்பில் மெல்ல விழிகளை மலர்த்தியவளின் பார்வையில் அப்பட்டமாய்த் தெரிந்த மயக்கம், அந்த மயக்கத்தையும் மீறி சிறிதளவு எட்டிப்பார்த்த ஒருவித அச்சம் எல்லாவற்றையும் கண்டவனுக்கு மனதில் வேதனை மட்டுமே...

"ஐயம் சாரி..."

அவனது வருத்தத்தில், வேதனையில் அவளது மயக்கம், அச்சம் எல்லாம் நொடியில் காணாமல் போனது...

"இதில் உங்க தவறு எதுவும் இல்லையே..."

அவனது வேதனை கண்டு அவளது உள்ளமும் வேதனை கொண்டது...

"நான் வேணும்ன்னு செய்யலை..."

"தெரியும்... அண்ணா பார்த்துடக் கூடாதுன்னு தான் அப்படிச் செஞ்சீங்க..."

அவனது தொடுகையில் தன் மனதில் தோன்றிய சலனத்தை மறைத்துக் கொண்டு அவள் அவனை ஆறுதல்படுத்தினாள்...

"என்னைப் புரிஞ்சிக்கிட்டதுக்குத் தேங்க்ஸ்..." என்றவனின் முகத்தில் வேதனை மறைந்து புன்னகை தோன்றியது...

அவனது புன்னகையில் அவளது முகமும் மலர்ந்தது...

"ஏய் சந்தியா... நீ அவுட்..." என்று சரவணனின் உற்சாகக் குரலில் இருவரும் அங்கே திரும்பி பார்த்தனர்...

"முதலில் நீ போ... நான் பிறகு வருகிறேன்..."

அவன் கூறியதும் அவள் சரியென்று தலையசைத்தபடி அங்கிருந்து சென்று விட்டாள்... அவள் அனைவருடன் சென்று ஐக்கியமாகிய பின் ஐந்து நிமிடங்கள் கழித்தே அவன் அந்த இடத்தை விட்டு அகன்றான்...

தோப்பு வீட்டின் திண்ணையில் அன்று போல் அமர்ந்தவன் அங்கிருந்தபடி விளையாடி கொண்டிருந்த பிரகதீஸ்வரியை பார்த்துக் கொண்டிருந்தான்... ஏனோ தெரியவில்லை அவனது கண்களுக்கு அவளைத் தவிர வேறு யாரும் தெரியவில்லை...

பாவாடையை லேசாகத் தூக்கி சொருகி கொண்டு புள்ளிமான் போன்று உற்சாகமாய் அங்குமிங்கும் ஓடி திரிந்தவளை ரசித்துப் பார்த்து கொண்டிருந்தவனின் ரசனையில் எந்தவித விகல்பமும் இல்லை... மாறாகச் சேயின் விளையாட்டை ரசித்துப் பார்க்கும் தாயின் மனநிலையில் இருந்தது அவனது மனம்...

அதிலும் அவளது வாழைத்தண்டு கால்களில் அணிந்திருந்த கொலுசொலி இனிமையான சங்கீதமாக ஒலித்தது அவனது காதில்... மற்ற பெண்கள் யாரும் கொலுசு அணியவில்லை... அவள் மட்டுமே அணிந்திருந்தாள்...

'பாட்டி காலத்துப் பழக்கவழக்கங்களை இன்னமும் விடாமல் பிடித்துத் தொங்கி கொண்டிருக்கிறாள்... அதனால் தான் இன்னமும் உலகம் தெரியாமல் இருக்கிறாள்...' என்று நினைத்து கொண்டவன்,

"நீ இன்னமும் வளரணும் ரதி பேபி..." என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான் அவன்...

ஏனோ அந்தக் கணம் அவளது கால்களில் தங்க கொலுசு அணிவித்துப் பார்க்க ஆசை கொண்டது அவனது மனம்... அதை நினைத்து பார்த்தவன் முகத்தில் அவனையும் மீறி புன்னகை தோன்றியது...

மதிய உணவை தோட்டத்திற்கு வரவழைத்து விட்டார்கள்... எப்போதும் போல் எல்லோரும் அமர்ந்ததும் பரிமாறத் தயாரான பிரகதீஸ்வரியை தடுத்த சித்தார்த் அவளைத் தன்னருகில் அமர்த்தியபடி,

"இருக்கிறது ஆறு பேர்... நமக்கு நாமே பரிமாறிக்கலாம்... நீ பேசாம உட்கார்ந்து சாப்பிடு..." என்று அவன் அதிகார தோரணையில் கூறினாலும் அதில் அவள் மீதான அக்கறை அதிகளவு இருந்தது...

"ஆமாம்... பிரகதி..." என்று ஆமோதித்தாள் அவளுக்கு மறுபக்கம் அமர்ந்திருந்த சங்கமித்ரா...

"இல்லை..." என்று இழுத்தவளை கண்டு சித்தார்த் வாயில் விரல் வைத்து,

"மூச்... பேசாம சாப்பிடணும்..." என்று அதட்டினான்...

அதில் பிரகதீஸ்வரி சட்டென்று அமைதியாகி விட்டாள்... அதைக் கண்டு அவன் புன்னகைத்துக் கொண்டான்...

"நீ சாப்பிடறதை பார்த்து மத்தவங்க யாரும் கண் வைக்கக் கூடாதுன்னு தானே நீ தனியா உட்கார்ந்து சாப்பிடுற..."

அவளுக்கு மட்டும் கேட்கும்படி மெல்லிய குரலில் கிண்டலாய் கூறியவனைக் கண்டு பதறி போய்ப் பார்த்தவள்,

"ஐயோ... அப்படி எல்லாம் இல்லை..." என்று அவள் மறுத்தாள்...

"உண்மையாவா...?"

"சத்தியமா..."

"அப்படியா..." என்றவன் இன்னமும் சோற்றை அள்ளி அவளது தட்டில் வைத்துக் குழம்பை ஊற்றினான்...

அதைக் கண்டு அவள் திருதிருவென விழித்தாள்...

"யாரும் கண் வைக்க மாட்டாங்க அதனால் நீ தைரியமா சாப்பிடு..."

'ஏன் இப்படிப் பண்றாங்க...?' என்று அவள் மற்ற நால்வரையும் பார்க்க, அவர்கள் நால்வரும் விளையாண்டதில் ஏற்பட்ட பசியில் சுற்றத்தை மறந்து உணவில் லயித்திருந்தனர்...

"இப்படி ஒடிந்து விழுவது போல் நீ ஒல்லியாய் இருப்பது கொஞ்சமும் நல்லாயில்லை பேபி... இன்னும் கொஞ்சம் சதை போட்டால் இன்னமும் அழகாயிருப்ப..."

அவன் கூறியதை கேட்டு அவள் விழியகல திகைத்து போய் அவனைப் பார்க்க அவனோ அவளது திகைப்பை கண்டு கொள்ளாது,

"நீ எப்போ வளர்ந்து பெரிய பெண்ணாகுவது...?" என்றுரைத்தவன் எதையோ நினைத்து பெருமூச்சுவிட்டபடி,

"எனக்காகச் சீக்கிரம் வளர்ந்து வா பேபி..."

அவன் கூறியதன் அர்த்தம் முழுவதுமாய் அவளுள் பதியும் முன் அவன் கை கழுவ எழுந்து சென்றிருந்தான்...

சித்தார்த்தின் பேச்சு, பார்வை அவளின் மனதினை குறுகுறுக்கச் செய்தது... அவனது வார்த்தைகளை அசை போட்டபடி சாப்பிட்டு முடித்தவள் தானும் கை கழுவ எழுந்தாள்...

சித்தார்த்தும் அங்கே தான் நின்றிருந்தான்... ஒற்றைக் கையால் தாவணி முந்தானையைச் சொருகியபடி, அணிந்திருந்த பாவாடையைச் சிறிது தூக்கி கொண்டு அவள் கை கழுவ ஆயத்தமானதை கண்டு அவன் வாய் விட்டுச் சிரித்தான்...

"நீ கை கழுவ தயாராகுவதைப் பார்க்கும் போது ஏதோ போருக்கு தயாராவது போலிருக்கிறது... தள்ளு, நான் தண்ணீர் ஊற்றுகிறேன்..." என்றவன் அங்கிருந்த தொட்டியில் இருந்து தண்ணீரை எடுத்து அவளது கைகளில் ஊற்றினான்...

கை கழுவி கொண்டு தாவணி முந்தானையில் கை துடைத்தவளை கண்டு சித்தார்த்,

"எனக்கும் கை துடைக்க உன் தாவணி கிடைக்குமா...?" என்று விசம சிரிப்புடன் கேட்டவனைக் கண்டு அவள் விதிர்த்துப் போய்ப் பார்த்தாள்...

"சரி, சரி... எப்போ பார் இப்படியே திருதிருன்னு முழிக்காதே... நான் தாவணி எல்லாம் போடுறது இல்லை... உன் தாவணியை நீயே வைச்சுக்கோ..."

அவன் கூறியதை கேட்டு அவளது முகத்தில் புன்னகை படர்ந்தது...

"என்ன, நான் சொன்னதைக் கற்பனை பண்ணி பார்க்கிறியா...?" என்றவனது குரலில் அவளுக்கு உள்ளுக்குள் தூக்கிவாரி போட்டது... ஏனெனில் அதைத் தான் அவள் செய்து கொண்டிருந்தாள்...

"ரொம்ப மோசமா இருந்தேனோ...?"

அவன் கேட்ட பாவனையில் அவளது புன்னகை விரிந்தது...

"ரொம்ப..." என்று கூறியவள் கலகலவென வாய்விட்டு சிரித்தபடி அங்கிருந்து ஓடி விட்டாள்...

அவள் மனதினை மாற்ற வேண்டியே அவன் அப்படிப் பேசினான்... அவன் நினைத்தது போல் அவளது முகத்தில் புன்னகையை வரவழைத்து விட்டான்... அது குறித்து அவனது முகத்தில் திருப்தியான புன்னகையே...

"கொஞ்ச நேரம் நடந்துட்டு வரலாமா..." என்று கேட்ட ஸ்வேதாவின் கூற்றைச் சங்கமித்ரா ஆமோதிக்க, வேறுவழியின்றிச் சந்தியாவும் உடன் கிளம்பினாள்...

சரவணன் சொல்லவே வேண்டாம்... முதல் ஆளாய் கிளம்பிவிட்டான்... பிரகதீஸ்வரி அங்கிருந்த பாத்திரங்களைக் கழுவுவதற்காக எடுத்து வைத்து கொண்டிருந்தாள்...

"பிரகதி... நீயும் வா, போகலாம்..." என்று சங்கமித்ரா அவளை அழைத்தாள்...

"அக்கா... எல்லாம் நான் பார்த்த இடங்கள் தான்... நீங்க போயிட்டு வாங்க..." என்று அவர்களை அனுப்பிட்டுக் கிணற்றடியில் கொண்டு வந்து பாத்திரங்களைக் கழுவ போட்டாள்...

"எங்குப் போனாலும் வேலையை விடுவதாய் இல்லை..." என்று கேட்டபடி அங்கு வந்து நின்ற சித்தார்த்தை கண்டு அவளது முகம் புன்னகையைத் தத்தெடுத்துக் கொண்டது...

"என்னைச் சொல்றது இருக்கட்டும்... நீங்க என்ன இங்கேயே சுத்திக்கிட்டு இருக்கீங்க...?" ஒற்றைப் புருவத்தை உயர்த்தியபடி கேட்டவளை கண்டு அவனது உதட்டிலும் புன்னகை விரிந்தது...

"ஏன் உன் பின்னாடி சுத்திக்கிட்டு இருக்கேன்னு நேரடியா கேட்க வேண்டியது தானே..."

அவன் கூறியதை கேட்டுத் தவறு செய்துவிட்ட குழந்தை போல் அவள் நாக்கை கடித்தபடி அவனைப் பார்த்தாள்... ஏனெனில் அவள் அதை நினைத்து தான் அப்படிக் கேட்டது...

"ஐயோ பாவம் சின்னப் பெண் தனியே கஷ்டப்படுகிறாளே... கிணற்றில் இருந்து நீர் இறைத்து கொடுத்து உதவலாமேன்னு வந்தேன்..."

"இல்லை வேண்டாம்... தொட்டியில் தண்ணி இருக்கு..." என்றவள் பாத்திரங்களைக் கழுவ ஆரம்பித்தாள்...

கழுவி வைத்த பாத்திரங்களை அங்கேயே மண் நிறைந்த சிமெண்ட் தரையில் வைக்க மனமில்லாது என்ன செய்வது என்று தெரியாது அவள் விழித்துக் கொண்டிருக்க...

"என்னிடம் கொடு..." என்று சித்தார்த் தனது கையை நீட்டினான்...

"நீங்க எப்படி...?"

அவனது கம்பீரமான தோற்றத்தை யோசனையாய் பார்த்தபடி அவள் கேட்டாள்...

"இதில் என்னயிருக்கு...? கொடு..." என்று அவளிடம் இருந்து பாத்திரத்தை வாங்கியவன் கிணற்றுச் சுவரில் சாய்ந்து நின்றான்...

அவனைக் கண்டால் மரியாதையுடன் எழுந்து நின்று வணக்கம் சொல்லும் உலகத்தில் இதுநாள் வரை வாழ்ந்து வந்தவனுக்கு, இப்போது இந்தச் சிறு பெண்ணிடம் இப்படிக் கை கட்டி நிற்பதும் கூடப் பிடித்துத் தான் இருந்தது... விந்தையான தனது மனநிலையைக் குறித்து அவனுக்கே புதுமையாக இருந்தது...

பிரகதீஸ்வரி வேலையை முடிக்கும் போது மற்ற நால்வரும் அங்கு வந்து சேர்ந்தனர்...

அடுத்து எல்லோரும் அருவிக்குச் செல்ல திட்டமிட்டனர்... பச்சை பசேலென்று இருந்த வயல்வெளிகளைக் கடந்து

தான் அங்குச் செல்ல வேண்டும்... ஒற்றை வரப்புப் பாதையில் ஒருவர் பின் ஒருவராக நடந்து சென்றனர்...

கடைசியாகப் பிரகதீஸ்வரி பின்னே சித்தார்த் நடந்து வந்து கொண்டிருந்தான்... நீண்ட பின்னல் சடை அங்குமிங்கும் துள்ளி குதித்தாட அவள் நடந்து சென்ற அழகை பார்த்தபடி அவன் வந்து கொண்டிருந்தான்... மிதமான தட்பவெப்ப நிலை வேறு அவனது மனதிற்கு இதமாக, ரம்மியமாக இருந்தது...

அந்நேரம் வேகமாகக் காற்று வீச அதில் பிரகதீஸ்வரியின் தாவணி காற்றில் பறந்து வந்து அவனது முகத்தின் மீது படர்ந்து படபடத்தது... அவளது அருகாமையில் அவன் சுவாசித்த அவளது பிரத்யேக நறுமணம் அந்தத் தாவணியில் இருந்து வந்தது...

அவளைத் தீண்டுவதற்குத் தான் அவன் தனது மனதிற்குக் கட்டுப்பாட்டை விதித்திருக்கின்றான்... ஆனால் அவளது தாவணிக்கு அந்தத் தடை உத்தரவு செல்லாதே... தாவணியில் கமழ்ந்த நறுமணத்தை மூச்சை இழுத்து ஆழமாய்ச் சுவாசித்தவனுக்கு அவளையே தன்னுள் நிரப்பிக் கொண்டது போல் ஒரு உணர்வு...

அந்தக் கணம் அவள் வேண்டுமென்றே அவனது உடலின் ஒவ்வொரு அணுவும் துடித்தது... அவன் ஒன்றும் முற்றும் துறந்த முனிவன் அல்ல... அவனுக்கும் உணர்வுகள் உண்டு... அந்த வயதிற்கே உரிய இளமை தாபங்கள் உண்டு...

'வெண்ணெய் திரண்டு வரும் வேளையில் தாழி உடைந்த கதை போல், இப்போது எதையும் செய்து காரியத்தைக் கெடுத்து விடாதே மடையா... உனக்கான காலம் இன்னமும் வரவில்லை... அதுவரை பொறுமையாய் காத்திரு... அவள் உனக்குத் தான்... உனக்கு மட்டும் தான்...' என்று அவனது மனம் அவனைக் கடுமையாக எச்சரித்தது...

அதில் சற்று தெளிந்தவன் படபடத்த தாவணியைக் கையில் பிடித்து, "ரதி..." என்று அவளை அழைத்தவன் அவள்

திரும்பி பார்த்ததும் அதை அவளிடத்தில் நீட்டினான்...

"காத்துல பறந்திருச்சு போல... சாரி..." என்று தாவணி முந்தியை வாங்கியவள் அதைச் சுருட்டி கையில் பிடித்தபடி முன்னே நடக்க அவன் பின்தொடர்ந்தான்...

அருவி இருந்த இடம் அந்தக் கிரானைட் கற்கள் இருந்த அந்தச் சிறு மலைக்குன்று... சிறிய அருவியாக இருந்த போதும் அது பார்ப்பவர் கண்களைக் கவர்வது போல் அத்தனை அழகாக இருந்தது...

"அந்த மலைக்கு மேல என்ன இருக்கிறது...?"

அண்ணாந்து மலையைப் பார்த்தபடி சங்கமித்ரா கேட்டாள்... அவளது குரலில் அத்தனை ஆர்வம் நிரம்பி வழிந்தது...

"மேலேறி பார்த்தால் பெரிய சமவெளியாக இருக்கும்... அதற்கு அப்பால் பல கிராமங்கள் இருக்கு... இது மேற்கு தொடர்ச்சி மலையடிவாரம் அக்கா... அதனால் இது போன்ற குன்றுகள் இங்கு அதிகம் உண்டு..."

பிரகதீஸ்வரி விளக்கம் கூற... அதைக் கேட்டு சங்கமித்ராவுக்கு அதைப் பார்க்கும் ஆவல் தொற்றிக் கொண்டது...

"மேலே போய்ப் பார்க்கலாமா...?"

அவளின் ஆர்வத்தைக் கண்டு மற்றவர்களும் சம்மதிக்க எல்லோரும் மேலேறினர்... பிரகதீஸ்வரியும் மலையேற முயன்ற போது குன்றின் பக்கவாட்டுக் கல்லிலிருந்த சிற்பங்கள் அவளது கண்களில் விழுந்தது... அத்தோடு சித்தார்த் அன்று கூறிய வார்த்தைகளும் அவளது நினைவில் எழுந்தது...

மெல்ல அவளது கை உயர்ந்து அந்தச் சிற்பங்களைத் தடவி கொடுத்தது...

"இலை, தழைகளைத் தான் ரசிக்கிறாய் என்றால், இப்போது கல்லையும் ரசிக்கிறாயா...?"

புரியாத பாவனையில் கேலியாய் கேட்டபடி அங்கு வந்து நின்றான் சித்தார்த்...

"இது உங்களுக்குக் கல்லா...? நல்லா கண்களைத் திறந்து பாருங்கள்... எல்லாமே சிற்பங்கள்... விலை மதிப்பில்லாத சிற்பங்கள்..."

"எனக்கு அப்படி ஒன்றும் பெரிதாய் தெரியவில்லை..."

அந்தச் சிற்பங்களை உற்று நோக்கிய சித்தார்த் அலட்சியமாய்த் தோள்களைக் குலுக்கினான்...

"இவ்வளவு சின்னப் பாறையில் கைவிரல் நகம் முதற்கொண்டு நுணுக்கமாய்ச் செதுக்கிய நமது ஆதிகாலச் சிற்பக்கலை உங்களது கண்களுக்குத் தெரியவில்லையா..." என்றவளது குரலில் சற்றுக் கோபம் அதிகரித்திருந்தது...

அவளுள் அத்தனை நேரமிருந்த சின்னப் பெண் பிரகதீஸ்வரி மறைந்து பக்குவமான பெரிய மனுசி பிரகதீஸ்வரி எட்டிப்பார்த்தாள்...

"உனது ஊர் என்றதும் உனக்கு இத்தனை கோபம் வருகிறது... ம்..." அவளது கோபத்தினை மனதினில் குறித்துக் கொண்டவன்,

"எனக்கு இந்தச் சிற்பத்தின் மதிப்புத் தெரியாது... ஆனால் இந்தச் சிற்பத்தின் உள்ளே இருக்கும் கல்லின் மதிப்பு தெரியும்..." என்றவனது கண்கள் அதன் மதிப்பு அறிந்து ஆசையுடன் பளபளத்தது...

"உங்களை மாதிரி பணக்காரர்களே இப்படித்தானோ... இருக்கும் பணம் போதாது என்று இன்னமும் வேண்டும், வேண்டும் ஆவலாய் பறப்பார்களோ...?"

"பணத்தோடு எவ்வளவு பணம் சேர்ந்தாலும் அதன் மதிப்பு ஏறத்தான் செய்யும்... ஒரு போதும் அது குறையாது... இது எல்லாம் உனக்குத் தெரியாது பேபி... நீ ரொம்பச் சின்னப்

பெண்... அதனால் இதைப் பத்தி நீ பேசவும் வேண்டாம்... யோசிக்கவும் வேண்டாம்..."

"அது எப்படி நான் பேசாமல், யோசிக்காமல் இருக்க முடியும்...? இப்படி இயற்கை அன்னையை விற்றுப் பணம் சம்பாதிப்பதில் குறியாக இருக்கிறீங்களே... அப்படி என்றால் என்னையும் விற்றால் நிறையப் பணம் கிடைக்கும் என்று யாராவது சொன்னால், நீங்க என்னையும் பெரும் பணத்துக்கு விற்று விடுவீங்களா...?"

அவள் கூறியதை கேட்ட மறுநொடி அவன் நரசிம்மமூர்த்தியாய் மாறிவிட்டான்...

"என்னடி சொன்ன...?" என்று கர்ஜித்தபடி அவளை அடிப்பதற்காகத் தனது கையை ஓங்கி விட்டான்...

அதற்கு எல்லாம் பயப்படாது அவள் தனது கைகளைக் கட்டி கொண்டு அமைதியாக அவனைப் பார்த்து கொண்டிருந்தாள்...

அவனோ ருத்ரமூர்த்தியாக உள்ளுக்குள் கொதித்துக் கொண்டிருக்க, அவளோ அருள்பாலிக்கும் அம்மனாய் சாந்தத்துடன் அவனைப் பார்த்து கொண்டிருந்தாள்...

சுட்டெரிக்கும் சூரியனும், குளிர் நிலவும் நேரடியாய் மோதி கொண்டது தங்களது கொள்கை வேறுபாட்டால்...!!!

"மங்கையவளின் விழி வீச்சில் மன்னவன் மனம் மயங்கிட...
மன்னவனின் சிறு தீண்டலில் மங்கையவள் உயிர் உருகிட...
அவளின் மயக்கம் அவனைத் தயக்கம் கொள்ளச் செய்ய...
மன்னவன் தயக்கத்தில் அவனுள் தாயுமானவன் பிரசவிக்க...
தாயுமானவனின் அக்கறை பேதையவளின் மனதில் நீங்கா இடம் பிடிக்க...
பதின்வயது சேயாய் நினைவினில் பதிந்தவள் பருவ மங்கையாய்
மனதில் பதிந்த மாயம் அறியாது மன்னவன் தவிக்க...

இருவரின் தவிப்பிற்கும், மயக்கத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்தது அவரவர் எண்ணங்களே...
நீரும் நெருப்புமுமாய் எதிரெதிர் அணியில்
இணையாது தனித்து நின்றனர் இருவரும்...
மன்னவனின் தவிப்பு என்று தீருமோ...?
மங்கையவளின் மயக்கம் என்றும் நீளுமோ...?
விடை தெரிந்தோர் விடை பகிருங்களேன்...!!!"

நனவாகும்...!!!

பிரகதீஸ்வரி விழிகளில் வழிந்த காருண்யத்தில், சாந்தத்தில் சித்தார்த் ஒரு நொடி மனம் தடுமாறியவனாய்,

"ச்சே..." என்ற ஒற்றைச் சொல்லோடு கையைக் கீழே இறக்கினான்...

அவளது வார்த்தைகளில் அவனது மனம் எரிமலையாய் குமுறிக் கொண்டிருந்தது... இன்னமும் அவனால் அவள் கூறியதை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை... மீண்டும் அவளைப் பார்த்தான்...

அவளது அமைதியான முகம் அவனது கோபத்தைக் குறைப்பதற்குப் பதிலாக அதை அதிகரிக்கச் செய்தது... ஆவேசத்துடன் அவள் அருகே வந்தவன் அவளது தலைமுடியை கொத்தாகப் பற்றியபடி அவளது முகத்தை நிமிர்த்தியவன்,

"கல்லும் நீயும் ஒன்றாடி...?" ஆக்ரோசத்துடன் கேட்டவனின் வார்த்தைகள் அவளுள் சிலீரென்று ஊடுருவி பாய்ந்து சென்று மனதை இதமாய் வருடி சென்றது... அது ஏனென்று அவளுக்குப் புரியவில்லை...

"சொல்லுடி..." என்று கேட்டுக் கொண்டே மேலும் அவளது முடியை அவன் இறுக்கி பற்றியதில் அவளுக்கு மிகவும் வலியெடுத்தது...

ஆனாலும் தனது வலியை அவள் முகத்தில் காட்டி கொள்ளவில்லை... பணம் என்னும் மாயவலையில் சிக்கியிருக்கும் அவனுக்கு மனிதத்தின் மேன்மையை உணர்த்திட நினைத்தாள்... அவனை மனிதனாக மாற்ற விரும்பினாள்...

"என்னை அந்தளவுக்குக் கேவலமா நினைச்சிட்ட இல்லை...? ஒரு பெண்ணை விற்றுப் பணம் சம்பாதிக்க நினைக்கும் அளவுக்கு நான் பணத்தாசை பிடித்தவன்னு நீ முடிவு பண்ணிட்ட அப்படித்தானே...?" கண்கள்

செந்தணலாய் ஜொலிக்க ஆத்திரத்துடன் கேட்டவனைக் கண்டு அவளது மனதிற்குள் குளிரெடுக்கத்தான் செய்தது...

"நான் அந்த அர்த்தத்தில் சொல்லலை...?"

"பின்னே எந்த அர்த்தத்தில் சொன்னடி...?" கர்ஜனையாய் கேட்டவன் அவள் பதில் சொல்லியே ஆக வேண்டும் என்பது போல் அவளைக் கோபமாய் உறுத்து விழித்தான்...

"நானும் ஒரு பெண்... இயற்கை அன்னையும் ஒரு பெண்... அதனால் தான் அப்படிச் சொன்னேன்..." என்றாள் அவசரமாய் அவனுக்குப் புரிய வைத்துவிடும் நோக்கில்...

"உயிரில்லாத இந்தப் பாறையும், உயிருள்ள நீயும் ஒண்ணா...? வாய் இருப்பதற்காக எதையும் பேசிவிடக் கூடாது... நீ பேசிய வார்த்தைகள் என்னை எந்தளவுக்குக் கீழ்த்தரமாய்ச் சித்தரித்துக் காட்டுகிறது என்பதை நீ கொஞ்சமும் யோசிக்கவில்லை... இதுவரை என்னை யாரும் இந்தளவுக்குக் கேவலமாய்ப் பேசியதில்லை... நீ தான் இப்படிப் பேசியிருக்கிறாய்..." என்று ஆள்காட்டி விரல் நீட்டி அவளைக் குற்றம் சாட்டியவன்,

"அது போல் இதுநாள் வரை என்னை யாரும் எதிர்த்து பேசியதில்லை... என் பெற்றோர் உட்பட... முதன்முறையாய் என்னை எதிர்த்து பேசுபவள் நீ மட்டுமே..."

"உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள் என்று நான் சொல்வது தவறா...?"

ஏனோ தெரியவில்லை அவனுக்கு இயற்கையின் மகத்துவத்தை உணர்த்திட வேண்டும்... அவனையும் தன்னைப் போல் இயற்கை காவலனாக மாற்றிவிட வேண்டும் என்று அவளது மனம் துடித்தது... அந்தத் துடிப்பு எதனால் என்று அவள் கொஞ்சமும் யோசிக்கவில்லை...

அந்தளவுக்கு அவனது கோபம் அவளைப் பாதித்தது... அதே சமயம் தன்னுடைய நிலையில் இருந்தும் அவள் இறங்கவில்லை...

"என்ன உண்மையைப் புரிந்து கொள்ளச் சொல்கிறாய்...? உன்னைப் போல் நானும் இந்தக் கல்லை கையெடுத்து கும்பிட வேண்டும் என்று சொல்கிறாயா...? நான் கடவுள் கிடையாது என்கிற கொள்கை உடையவன்... என்னிடத்தில் வந்து இப்படி முட்டாள்த்தனமாய் உளறிக் கொண்டு இருக்காதே..."

சித்தார்த்திற்குப் பிரகதீஸ்வரி மீது ஏற்பட்ட கோபம் இன்னமும் குறையவில்லை...

"அத்தான், பிரகதி... கீழே என்ன பண்றீங்க...?" சங்கமித்ரா குரலில் சித்தார்த் தனது கையைத் தளர்த்தியவன் பிரகதீஸ்வரியை விட்டு விலகி நின்றான்...

"அக்கா... இங்கே இருந்த பிள்ளையாரை கும்பிட்டுக் கொண்டு இருந்தோம்... இதோ வருகிறோம்..." என்று பிரகதீஸ்வரி பதில் குரல் கொடுத்தாள்...

"சரி, சரி... கும்பிட்டுட்டு வாங்க..." என்று சங்கமித்ராவின் குரல் தேய்ந்ததில் அவள் சென்று விட்டதை உணர்ந்து பிரகதீஸ்வரியின் சுவாசம் சற்று சீரானது...

"ஹப்பாடா..." வாய்விட்டு சொல்லியபடி நிம்மதி பெருமூச்சு விட்டவளை உறுத்து விழித்துக் கொண்டிருந்தான் சித்தார்த்...

'நாம் என்ன தவறா செய்து கொண்டிருந்தோம்...? நீ இப்படிப் பயப்படுவதற்கு...?' என்று சுள்ளென்று அவளிடம் கேட்க நினைத்தவன் அவளின் வயதினை கருத்தில் கொண்டு அமைதி காத்தான்...

அவளோ அதை வேறு விதமாக எண்ணி கொண்டாள்...

"நான் பொய் சொல்லலை... உண்மையில் இங்கே கோவில் இருக்கிறது..." என்றவள் அருகில் இருந்த கல்லில் செதுக்கப்பட்டிருந்த பிள்ளையாரை சுட்டிக்காட்டினாள்...

"நீ பொய் சொல்லுகிறாய் என்று நான் கூறவில்லையே..."

"நீங்க பார்க்கிற பார்வை அப்படித்தான் இருக்கிறது..." என்று முணுமுணுத்தவள் பிள்ளையார் முன் சென்று கை கூப்பி வணங்கினாள்...

அவன் சிலையென அசையாது நிற்பதை கண்டு திரும்பி பார்த்தவள், "ரொம்ப சக்தி வாய்ந்த பிள்ளையார்... நீங்க என்ன வேண்டினாலும் அது அப்படியே நடக்கும்..."

அவள் கூறியதை கேட்டு அவனது விழிகளில் சிறு ஆர்வம் தோன்றியது...

"உண்மையாகவா...?"

"சத்தியமா..." விழி விரித்து அவள் கூறிய பாவனையில் அவனது கோபம் கூடச் சிறிது குறைந்து போனது...

அவள் கூறியதை கேட்டு அவளருகே வந்தவன் நல்ல பிள்ளையாய் கண் மூடி, கை கூப்பி வணங்கினான்... கடவுள் நம்பிக்கை கிடையாது என்று கூறியவன் அவள் கூறிய வார்த்தையில் நம்பிக்கை கொண்டு வணங்கினான்...

களுக்கென்று ஒலித்த நகையொலியில் அவன் கண் திறந்து பார்த்தான்... பிரகதீஸ்வரி தான் வாயை மூடி கொண்டு அவனைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தாள்...

அவளது புன்னகை கண்டு அவனது முகத்திலும் புன்னகை தோன்றியது...

"எதுக்கு இந்தச் சிரிப்புன்னு நான் தெரிஞ்சிக்கலாமா...?" ஒற்றைப் புருவத்தைத் தூக்கியபடி அவன் வினவிய பாவனையில் அவளது சிரிப்பு 'ஸ்விட்ச்' போட்டார் போன்று நின்றது...

"அது..."

"அது...?"

"நீங்க கல்லை கையெடுத்து கும்பிட மாட்டேன்னு சொன்னீங்களே... இப்போ நீங்க கும்பிட்டதைப் பார்த்து..."

"சிரிப்பு பொத்துக்கிட்டு வந்திருச்சாக்கும்..." என்றவனது வார்த்தையில் கோபமில்லை... மாறாக மகிழ்ச்சியே நிலை கொண்டிருந்தது...

"நான் கல்லை கும்பிட மாட்டேன் தான்... ஆனால் சொல்வது நீயாக இருந்தால் கல் என்ன, மண்ணைக் கூட வணங்குவேன்..."

அவனது வார்த்தைகள் அவளது மனதினை மயிலிறகாய் வருடி சென்றது... மனம் படபடக்க அவனை நேர்ப்பார்வையாய் நோக்க முடியாது மறுபக்கம் திரும்பி பிள்ளையார் முன்னிருந்த திருநீறை எடுத்து தனது நெற்றியில் வைத்து கொண்டாள்...

"எனக்கு எல்லாம் திருநீறு கிடையாதா...?"

காதருகில் ஒலித்த சித்தார்த்தின் குரல் அவளது மனதினை மட்டுமல்லாது தேகத்தையும் சிலிர்க்க செய்தது... அவளுள் ஏதோ ஒருவித மாயஜாலத்தைத் தோற்றுவித்தது...

அவள் திரும்பி அவனைப் பார்க்க... அவனோ தனது நெற்றியில் சிலுப்பிக் கொண்டு கவர்ச்சியாய் விழுந்திருந்த முன்னுச்சி முடியை கையால் பின்னுக்குத் தள்ளியபடி தனது நெற்றியை அவளிடத்தில் காட்டினான்... அந்தக் கணம் அவனது முகத்தில் அப்படியொரு புன்னகை நிறைந்திருந்தது...

அவனது செயலில் அவளது இதயம் தடதடத்த போதும் திருநீறை எடுத்து அவனது நெற்றியில் பூசிவிட அவள் சிறிதும் தயங்கவில்லை... ஏனோ அந்த நொடி அவனை அவளால் அந்நியமாய் நினைக்க முடியவில்லை...

அவன் தனக்கு என்ன உறவு என்பதையும் அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை... தனது மனதில் தோன்றும் உணர்வுகளையும் அவளால் உணர்ந்து கொள்ள முடியவில்லை... அந்தளவுக்கு ஏனென்று தெரியாமல்

சித்தார்த் முழுமையாய் அவளது மனதினை ஆக்கிரமித்து இருந்தான்...

"தேங்க்ஸ்..." என்றவனது வார்த்தை அவளது நெஞ்சில் பனிக்கட்டியாய் சிலீரென்று ஊடுருவி சென்றது...

அமைதியாய் தலைகுனிந்து நின்றவளை கண்டு அவனது முகத்தில் அத்தனை பெருமிதம்... எதையோ வென்றுவிட்ட கர்வம் அவனுள்...

"போகலாமா...?"

அவன் கேட்டதும் சரியென்று தலையசைத்தபடி அவள் நடக்க, அவனும் அவளுடன் இணைந்து நடந்தான்...

சிறிது தூரம் மௌனமாய் இருவரும் நடந்து வந்தனர்... அவனது அமைதி அவளுக்கு ஒரு மாதிரியாய், குற்றவுணர்வாய் இருந்தது...

"என்னிடம் கோபம் இல்லையே...?" என்று தவிப்பாய் கேட்டவளை கண்டு கோபம் கொள்ள அவன் என்ன மடையனா...?

"இல்லை..." என்று வசீகரமாகச் சிரித்தவன்,

"ஆனால் உன் முட்டாள்த்தனமான கொள்கைகள் மீது கோபமிருக்கிறது..."

ஒரே நேரத்தில் அவளைக் குளிர்விக்கவும் செய்தான்... அவளுக்குக் குட்டு வைக்கவும் செய்தான்... இருவேறுபட்ட குணங்கள் கொண்டவன் தானே அவன்... அதை உணர்ந்தவளாய் அவளும் அமைதியாக வந்தாள்...

இருவரும் மேலேறி வந்த போது மற்ற நால்வரும் அங்கிருந்தபடி இயற்கை அழகை ரசித்துக் கொண்டிருந்தனர்...

பரந்து விரிந்த ஆறு, அதற்கு அப்பால் ஓங்கி உயர்ந்த மலைகள் என்று அந்த இயற்கை காட்சியைக் காண காண

தெவிட்டவில்லை... அதோடு அந்தி நேர வானம் பார்ப்பதற்கு அத்தனை அழகாய் இருந்தது...

அந்த இயற்கை காட்சிகளைச் சித்தார்த் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்... ஏனோ தெரியவில்லை அந்தக் காட்சிகள் அவனது மனதிற்கு இதமாக இருந்தது... அதற்காகச் சும்மா இயற்கையை ரசித்துக் கொண்டிருந்தால் பசித்த வயிறு நிரம்பி விடுமா...? மனம் நிறைந்து விடுவதால் நமது தேவைகள் குறைந்து விடுமா...?

அவனுக்கு ஏனோ பிரகதீஸ்வரியின் கொள்கைகள் எல்லாம் சுத்த பைத்தியக்காரத்தனமாய்த் தோன்றியது... சுற்றிலும் கண்களை ஓட்டி கொண்டு வந்தவனின் பார்வை வட்டத்தில் அந்தப் பைத்தியக்காரியின் உருவம் விழுந்தது...

பைத்தியக்காரியின் எழிலான பேரழகு தோற்றத்தில் அவன் முற்றிலும் தன்வசம் இழந்து அவள் மீது பைத்தியக்காரனானான்...

பச்சை பசேலென்று சுற்றிலும் இருந்த மரங்களுக்கு இணையாய் பச்சை பாவாடை உடுத்தி, அந்திவானத்திற்குப் பொருத்தமாய் ஆரஞ்சு வண்ண தாவணி அணிந்திருந்தவளின் எளிமையான அழகு அவனை மிகவும் வசீகரித்தது...

அவளது ஒற்றைச் சிவப்புக்கல் மூக்குத்தி, அவளது முகத்திற்கு அப்பால் பளபளத்த பகலவனின் ஒளியில் தீச்சுடராய் ஒளி வீசியது... உலகில் உள்ள ஒட்டுமொத்த அழகையும் தன்பால் கொண்டிருந்தவளின் அழகு அவனை மயக்க தவறவில்லை...

தனது அலைப்பேசியை எடுத்து இயற்கை காட்சியைப் படமெடுப்பது போல் அவளைப் படமெடுத்துப் பத்திரப்படுத்திக் கொண்டான்...

அலைப்பேசியில் தான் எடுத்த அவளது பிம்பங்களை அவன் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த போது பிரகதீஸ்வரி

அவனைக் கண்டாள்... அந்த நேரம் கூட இயற்கை அழகை ரசிக்காது அலைப்பேசியுடன் குடும்பம் நடத்தும் அவனைக் கண்டு அவளுள் மெல்லியதாய் கோபம் எட்டிப்பார்த்தது...

அவள் கோபத்தில் தாவணி முந்தியை திருகியபடி அவனை உறுத்து விழித்துக் கொண்டிருந்தாள்... மனதின் கோபத்தினை வெளிப்படுத்தும் அளவிற்கு அவனிடத்தில் அவளுக்கு நெருக்கமான பழக்கம் இல்லையே...

சங்கமித்ரா ஆற்றின் நீரை அள்ளி குடித்தவள், "ரொம்ப ஸ்வீட்டா இருக்கு..." என்று மகிழ்வோடு கூற...

அதைக் கேட்டு அனைவரும் அதை அள்ளி குடித்தனர்... பிரகதீஸ்வரி மனசுணக்கத்தினால் தள்ளியே நின்று கொண்டிருந்தாள்...

சித்தார்த்தும் நீரை அள்ளி பருகியவன், "நீ சொன்ன மாதிரி ஸ்வீட்டா தான் இருக்கு மித்ரா... மினரல் வாட்டராக மாற்றிப் பாட்டிலில் அடைத்து விற்றால் சூப்பரா பிசினஸ் போகும்..." என்று அவன் சிலாகித்துப் பேச...

அதில் திடுக்கிட்டுப் போய்த் திரும்பி பார்த்த பிரகதீஸ்வரியின் முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது... சித்தார்த்தின் வார்த்தைகளில் அவளுக்கு இத்தனை நேரம் அழகாய் தோன்றிய இயற்கை அழகு இப்போது களையிழந்து காணப்பட்டது...

அவனது கொள்கை வேறுபாட்டால் அவளது மனம் ஏன் இவ்வளவு தவிக்கிறது என்று அவளுக்குத் தெரியவில்லை... தந்தை இறந்த பின் இன்று தான் மிகவும் துன்பமாக உணர்ந்தாள்...

எல்லோரிடமும் இருந்து சற்று தள்ளி வந்து நின்று கொண்டவள் தொடுவானத்தை வெறித்துப் பார்த்து கொண்டிருந்தாள்... ஏனோ அவளுக்குக் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது... ஓவென்று கத்தி அழ வேண்டும் போலிருந்தது அவளுக்கு... மனதிற்கு அத்தனை பாரமாக இருந்தது...

"அங்கே என்ன பார்த்துக்கிட்டிருக்க...?"

காதோரம் ஒலித்த அவனது குரலில் அவள் திரும்பி பார்க்கவில்லை... மனதில் ஒருவித வெறுமை சூழ்ந்து கொள்ள அவள் பதில் பேசாது அமைதி காத்தாள்...

சித்தார்த்திற்கு அவளது மனநிலை நன்கு புரிந்து கொள்வதாய்... அவளிடம் இருந்து அவன் கொள்கையில் தான் வேறுபட்டு இருந்தான்... அவளை மனம் வருந்த செய்வதில் அவனுக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை... அவளது மனநிலையை மாற்றிடவே அவனும் துடித்தான்...

அடுத்த நொடி தாமதியாது அவனது கைகள் அவளது தோள்களைத் தழுவியது... அதில் திடுக்கிட்டு போய் அவள் அவனைத் திரும்பி பார்த்தாள்... அவனோ அவளைக் கவனியாது அவளை மறுபக்கம் திருப்பி நிறுத்தியவன் அவள் காதுக்கருகில் குனிந்து,

"அங்கே பார்... எவ்வளவு அழகாக இருக்கிறது..."

அவனது அருகாமையில், அவனது குரலில் இருந்த வசீகரத்தில் மயங்கியவளுக்கு அந்தக் கணம் உலகமே வண்ணமயமானது போல் ஒரு தோற்றம்...

"அழகாயிருக்கிறதா...?"

மீண்டும் ஒலித்த அவனது குரலில் முடுக்கிவிட்ட பொம்மை போல் அவள் தலையசைத்தாள் ஆமென்று... அவளது மனமோ வானில் பறந்து திரியும் பறவையைப் போல் மகிழ்ச்சியில் திளைத்திருந்தது... ஏன் என்று புரியாது, எதற்கு என்று தெரியாது அவளது மனம் சந்தோசத்தில் துள்ளி குதித்துக் கொண்டிருந்தது...

"நீ எப்போதும் சந்தோசமா இருக்கணும்... இப்படி உம்முன்னு மூஞ்சை தூக்கி வைச்சிக்கிட்டு இருந்தா பார்க்க சகிக்கலை..."

சீண்டலாய் ஒலித்த அவனது குரலில் அவளது மனம் செல்லமாய்ச் சிணுங்கியது...

"அப்போ நான் அசிங்கமா இருக்கேனா...?" என்று கேட்டவளின் குரலில் அவளையும் அறியாது அவளது மனச்சிணுங்கல் வெளிப்பட்டது...

"கண் இல்லாதவன் கூட அப்படிச் சொல்ல மாட்டான் ரதி பேபி... இந்த உலகத்தில் அழகான பெண் என்று சொன்னால் அது நீ ஒருத்தி மட்டும் தான்..." என்றவனது குரலிலும் மயக்கம் இருந்ததோ...

"பொய் சொல்லாதீங்க... என்னை விட எத்தனையோ பேர் அழகாயிருக்காங்க... நான் அழகு தான்... ஆனால் நான் மட்டும் தான் அழகுன்னு நீங்க சொல்றது ரொம்பத் தப்பு... பொய்யும் கூட..."

"என் கண்களுக்கு நீ மட்டும் தான்டி அழகாய் தெரிகிறாய்..."

அவனது வார்த்தைகள் அவளுக்குத் திகைப்பை கொடுத்தாலும் அதையும் மீறி அவளது மனதினை சிலிர்க்க செய்தது என்றால் மிகையில்லை... திடுக்கிட்டவளாய் அவள் அவனைத் திரும்பி பார்த்த போது அவன் புன்னகையுடன் அவளை விட்டு விலகியிருந்தான்...

அப்போது தான் அவளுக்குச் சுற்றுப்புறம் உறைத்தது... மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்த்தாள்... எல்லோரும் ஒருவர் மீது ஒருவர் நீரை வாரியிறைத்துக் கொண்டு உற்சாகமாய் விளையாண்டு கொண்டிருந்தனர்...

பிரகதீஸ்வரியால் இன்னமும் சித்தார்த் கூறிய வார்த்தைகளில் இருந்து வெளியில் வர முடியவில்லை... அவளது மனம் அவனையே சுற்றி சுற்றி வந்தது... சித்தார்த் அவளை வேடிக்கை பார்த்தபடி தள்ளி நின்றான்...

சிறிது நேரம் கழித்து எல்லோரும் கீழே இறங்கினர்... ஒவ்வொருவராகச் செல்ல கடைசியாக யோசித்தபடி பிரகதீஸ்வரி வந்து கொண்டிருந்தாள்... சித்தார்த் அவளின் மனநிலையை உணர்ந்தவனாய் அவளோடு இணைந்து வந்து கொண்டிருந்தான்... அவன் உடன் வருவது கூட அவளது புத்தியில் உறைக்கவில்லை...

தனக்குள் ஏற்பட்ட மாற்றத்தை யோசித்தபடி வந்தவளின் கால்களை இடறி விட்டது வழியிலிருந்த கூழாங்கற்கள்...

"பார்த்து வர மாட்டியா...?"

சித்தார்த் அக்கறையோடு அதட்டியபடி அவளைத் தனது கைகளில் தாங்கி கொண்டான்... தனது இடையைத் தழுவிய அவனது கரத்தின் தொடுகையில் மனம் விதிர்த்தவளாய் அவனிடம் இருந்து விலகி நின்றவள்,

"ஏதோ நினைவில் வந்துட்டேன்... இனி நான் பார்த்து வருகிறேன்..." என்று கூறியவளை கூர்ந்து பார்த்தவன் முன்னால் சென்று கொண்டிருந்த சங்கமித்ராவை அழைத்துப் பிரகதீஸ்வரியை பத்திரமாக அழைத்து வர சொன்னான்...

சித்தார்த் சொன்னதைக் கேட்டு சங்கமித்ராவின் புருவங்கள் உயர்ந்தது ஆச்சிரியத்தில்... அவள் அறிந்த சித்தார்த் இது போல் கிடையாது... அவனது நடவடிக்கை அவளுக்குச் சற்று வித்தியாசமாக இருந்தது...

"வாங்கக்கா..." பிரகதீஸ்வரி அழைக்கவும் அவளுடன் இணைந்து நடந்தாள் சங்கமித்ரா...

கீழே வந்ததும் அருவியைக் கண்டதும் சந்தியா துள்ளி குதித்தாள்...

"ஸ்வேதா... அருவியில் குளித்திருக்கிறாயா...? சூப்பரா இருக்கும்..." என்று கூற...

"இல்லையே... நாம் குளிக்கலாமா...?" என்று ஆர்வத்துடன் ஸ்வேதாவும் கேட்டாள்...

அவர்கள் இருவரின் ஆர்வம் கண்டு பிரகதீஸ்வரி, சங்கமித்ரா இருவருக்கும் ஆர்வம் தொற்றிக் கொண்டது...

"போகலாம்..." என்றபடி அவர்களும் சேர்ந்து கொண்டனர்...

"யார் முதலில் அருவி கிட்ட போறாங்கன்னு பார்க்கலாமா...?" சந்தியா பந்தயம் கட்ட, எல்லோரும்

சரியென்று அதற்குச் சம்மதித்தனர்...

பெண்கள் எல்லோரும் ஓட துவங்க, அந்தக் கணம் பிரகதீஸ்வரி சித்தார்த்தை மறந்தவளாய் தானும் அருவியை நோக்கி ஓடினாள்...

"ஏய் பிரகதி... நில்லுடி..." என்றபடி சந்தியா அவளைத் துரத்தி கொண்டு வர...

"முடிந்தால் என்னைப் பிடி பார்க்கலாம்..." என்று பழிப்பு காட்டியபடி பிரகதீஸ்வரி முன்னே ஓடினாள்...

பிரகதீஸ்வரியின் குழந்தைத்தனமான நடவடிக்கையைப் பார்த்து தனக்குள் சிரித்தபடி அங்கேயே தேங்கி நின்றான் சித்தார்த்... அவனுடன் சரவணனும் இருந்தான்... பெண்கள் எல்லோரும் குளிக்கச் செல்வதால் அவன் தயக்கத்துடன் தேங்கி விட்டான்...

அப்போது தான் அந்த அசம்பாவிதம் நிகழ்ந்தது... முன்னே செல்லும் ஆர்வத்தில் சந்தியா பிரகதீஸ்வரியின் தாவணியைப் பற்றி இழுத்ததில் இரவிக்கையோடு இணைக்கப்பட்டு இருந்த தாவணி கிழிந்து கையோடு வந்தது...

வேகமாய்த் தாவணி கழன்றதில் நிலைத்தடுமாறிய பிரகதீஸ்வரி அடுத்த நொடி அருகில் சுழித்து ஓடி கொண்டிருந்த ஆற்றில் நிலைக்குலைந்து விழுந்தாள்...

மழை நேரம் என்பதால் நீரின் போக்குவரத்து சற்று அதிகமாக இருந்தது... நீச்சல் தெரிந்திருந்த போதும் நீரின் வேகத்தில் அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை... அதை விடத் தாவணி கழன்று விழுந்த அதிர்ச்சியில் அவளது மூளை செயல்பட மறுத்திருந்தது...

அடுத்த நொடி அவளைக் காப்பாற்றும் பொருட்டுச் சித்தார்த் வேகமாய் நீருக்குள் பாய்ந்தான்...

"உனக்குக் கொஞ்சமும் அறிவில்லை சந்தியா... எது எதுக்குப் போட்டி போடுவதுன்னு விவஸ்தை இல்லையா...?"

சரவணன் தங்கையிடம் கோபமாய்ச் சீறினான்... சந்தியா பயத்தில் உறைந்து போய் நின்றிருந்தாள்... மற்ற இரு பெண்களும் செய்வதறியாது நின்றிருந்தனர்...

நீருக்குள் பாய்ந்த சித்தார்த்தின் மனமோ அவன் வசம் இல்லை... இதுநாள் வரை அச்சம் என்பதே அறியாதவன் இன்று முதல் முறையாய் அச்சம் கொண்டான்... நீருக்கடியில் பிரகதீஸ்வரியை தேடி துளாவியவனுக்கு ஏமாற்றமே மிஞ்சியது... எங்குத் தேடியும் அவளைக் காணாதது கண்டு அவனது கண்கள் அவனையும் அறியாது கலங்கியது...

ஆனாலும் மனதினை தளர விடாது அவன் அவளைத் தேடினான்... சற்றுத் தொலைவில் நீரின் போக்கில் அடித்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்த பிரகதீஸ்வரியை கண்டு மனநிம்மதி அடைந்தவனாய் அவளை நோக்கி வேகமாய் முன்னேறினான்...

சில நொடிகளில் அவளை எட்டிப்பிடித்து விட்டான் அவன்... கை, கால்களை உதைத்தபடி உயிர் காத்து கொள்வதற்காக அவள் போராடி கொண்டிருப்பதைக் கண்டு சித்தார்த்தின் இதயம் ஒரு நொடி நின்று துடித்தது... வேகமாய் அவள் அருகில் சென்றவன் அவளைத் தனது கைகளில் அள்ளி கொண்டான்...

அச்சத்தில் அவனது பிடியில் இருந்து விடுபடத் திமிறியவள் காதில், "ஹேய் பேபி... நான் தான்..." என்றவனின் குரல் மெல்லிசையாய் தீண்டி செல்ல, அதில் அவள் தனது திமிறலை கைவிட்டவளாய் அவனை ஏறிட்டு பார்த்தாள்...

சித்தார்த் அவளைக் கவனிக்கவில்லை... அவளை எப்படிக் கரை சேர்ப்பது என்பது மட்டுமே அவனது ஒரே நோக்கமாக இருந்தது...

ஒற்றைக் கையால் அவளை இடையோடு அணைத்து பிடித்திருந்தவன், மறுகையால் நீரில் நீந்தி முன்னேறினான்... வேகமான நீர் போக்குவரத்தில் அவனுக்கு அது சற்றுச் சிரமமாகத் தான் இருந்தது...

ஆனாலும் மனதில் எழுந்த உத்வேகம் அவனை உந்தி தள்ளியது... அதற்கு அவளைக் காப்பாற்றியாக வேண்டும் என்கிற அவனது நோக்கமே முக்கியக் காரணமாக இருந்தது...

கரையை நெருங்கியவன் முதலில் அவளைக் கரையேற்றி விட்டு அதன் பின்னரே அவன் கரையேறினான்... அதன் பிறகே அவனுக்கு நிம்மதியாக இருந்தது... தலைமுடியை பின்னால் கோதி நீரை வடித்தவன் சந்தோசத்துடன் பிரகதீஸ்வரியை திரும்பி பார்த்தான்...

அப்போது தான் அவனுக்கு அவளது நிலை புத்தியில் உறைத்தது... முழங்காலை கட்டி கொண்டு அதில் முகம் புதைத்து அமர்ந்திருந்தவளின் நிலை அவனுக்குப் புரிவதாய்... சட்டென்று தனது சட்டையைக் கழற்றி நீரை பிழிந்தவன்,

"ரதி..." என்று அவளை மெல்ல அழைத்தான்...

அவள் தனது தலையை மட்டும் திருப்பி 'என்ன' என்பது போல் அவனைப் பார்த்தாள்...

"இதைப் போட்டுக்கோ..."

தயக்கமாய்த் தன்னைப் பார்த்தவளை கண்டு, "ஆபத்துக்குப் பாவமில்லை..." என்று அவன் கூற, உடனே தாமதியாது அவனது சட்டையை வாங்கி அணிந்து கொண்டாள்...

அவள் அதை அணிந்த போது அவன் அவளைப் பார்க்காது மறுபக்கம் திரும்பி நின்று கொண்டான்... அவனது கண்ணியமான இந்தச் செயலில் அவளது இதயம் விரும்பியே அவனிடத்தில் தஞ்சமடைந்தது...

அதே நேரம் அவளது மேனியை தழுவியிருந்த அவனது சட்டையில் இருந்து வந்த அவனது பிரத்யேக நறுமணமும், வாசனை திரவியத்தின் சுகந்தமும் சேர்ந்து அவளது நாசியில் நுழைந்து அவளது நெஞ்சில் இனிமையாய் பரவியது...

இத்தனை நேரம் விடை தெரியாது தவித்துக் கொண்டிருந்த அவளது ஆழ்மனதின் கேள்விகளுக்கு அந்தக் கணம் அவள் விடை அறிந்தாள்... அறிந்த விடையோ அவளைச் சிறகில்லாமல் பறக்க செய்தது... அவளுள் நாணத்தின் முகவரியை தேடி கண்டுபிடித்து அவளது முகத்தினைச் செவ்வானமாய்ச் சிவக்க செய்தது...

இறுதியில் அவளையும் காதல் நோய் தாக்கிவிட்டது... அந்தக் கணம் சித்தார்த் அவளுள் அழுத்தமாய்த் தனது காலடியை எடுத்து வைத்து நுழைந்தான்...

மனதில் எழுந்த பரவசத்துடன் பிரகதீஸ்வரி சித்தார்த்தை இமைக்காது பார்த்து கொண்டிருந்தாள்...!!!

"ஆடை கொடுத்து அகம் நுழைந்த என் அகமுடையானே...
உன் கொள்கை வேறு, என் கொள்கை வேறு...
உன் சிந்தனை வேறு, என் சிந்தனை வேறு...
உன் உடல் வேறு, என் உடல் வேறு...
ஆனால் உன் மனம் எனதன்றோ...
உன்னுயிர் என்னுயிரன்றோ...
நீயில்லையேல் நானில்லையே...
காற்று நுழையா இடத்திலும்
உறையும் கடவுள் போன்று
என்னுள் நீ உறைந்தாயடா...
செம்புலப் பெயல் நீர் போல,
நீயும், நானும் நாமாகினோமே...!!!"

நனவாகும்...!!!

இத்தனை நாளாய் கவனித்துப் பார்க்காத சித்தார்த்தின் தோற்றத்தை இன்று தான் பிரகதீஸ்வரி கவனித்துப் பார்த்தாள்...

நெடுநெடுவென்று நல்ல உயரம்... உயரத்திற்கேற்ப அளவான உடற்கட்டு... ஆண்கள் இத்தனை நிறமாய் இருப்பார்களா என்று வியக்கும் அளவுக்கு இருந்தது அவனது சிவந்த நிறம்... களையான முகம், கூர்மையான நாசி, அதற்குக் கீழே அளவாய், அழகாய் கத்தரித்து விடப்பட்ட மீசை, அவனது சிவந்த அதரங்கள் சொல்லாமல் சொல்லியது அவனுக்குப் புகை பிடிக்கும் பழக்கம் இல்லை என்பதை...

ஆண்மைக்கு இலக்கணமாய்க் கம்பீரமான அழகுடன் இருந்தவனின் தோற்றம் முதன்முறையாய் பிரகதீஸ்வரியின் நெஞ்சில் ஆழமாய்ப் பதிந்தது...

'என் கண்களுக்கு நீ மட்டும் தான்டி அழகாய்த் தெரிகிறாய்...' என்று மென்மையாய் கூறிய சித்தார்த்தின் குரல் இன்னமும் அவளது காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது...

'உங்களை விடவா நான் அழகு...? என் கண்களுக்கு நீங்க மட்டும் தான் அழகு...' என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டவள், அழையா விருந்தாளியாய் மனதில் புகுந்த காதலின் தாக்கத்தினைத் தாங்க முடியாது தனது முகத்தினை முழங்காலில் புதைத்துக் கொண்டாள்...

அவளது மனம் முழுவதும் பரவசத்தில் பறந்து கொண்டிருந்தது...

அவளுக்கு நேர்மாறான மனநிலையில் சித்தார்த் நின்று கொண்டிருந்தான்... அவளைக் காப்பாற்றியதில் அவனுக்குச் சந்தோசம் தான், நிம்மதி தான்...

ஆனால் அவள் நீருக்குள் உயிர் போராட்டம் போராடியதை கண்டு அவனது உயிர் அல்லவா துடித்துப் போனது... அவள் உயிர்மூச்சு காற்றிற்காகத் தவித்த போது அவனது உயிர்மூச்சும் சேர்ந்து அல்லவா தவித்தது...

இதோ இப்போதும் அந்தத் தவிப்பை, துடிப்பை உணர்ந்தவனாய் தாங்க முடியாத துயரத்துடன் அவன் தனது நெஞ்சினை நீவி விட்டுக் கொண்டான்...

"பிரகதி..." என்ற பதற்றமான குரல்களில் நினைவு கலைந்தவன் திரும்பி பார்த்தான்...

சங்கமித்ரா, சந்தியா, ஸ்வேதா, சரவணன் நால்வரும் ஆற்றின் அக்கரையில் இருந்து இக்கரைக்குப் பாலத்தின் வழியே வந்திருந்தனர்... சந்தியாவைக் கண்டதும் அவனது கோபம் அதிகரித்தது...

விறுவிறுவென அவள் அருகில் விரைந்து வந்தவன் அடுத்த நொடி அவளது கன்னத்தில் ஓங்கி அறைந்தான்...

"அண்ணா...", "அத்தான்..."

எல்லோரும் அதிர்ந்து போய்க் கூவினர்... ஸ்வேதா அண்ணனின் கோபம் கண்டு திகைத்து நின்றாள்... இதுநாள் வரை அவள் சித்தார்த்தின் இத்தகைய கோபத்தைக் கண்டதில்லை... சங்கமித்ராவும் அது போல் தான்... சரவணனோ ஒன்றும் பேசாது அமைதியாக இருந்தான்... ஏனெனில் சந்தியாவின் செயல் அவனுக்கே தவறாகத் தோன்றியது...

கன்னத்தைப் பிடித்தபடி அதிர்ந்து போய் விழித்தாள் சந்தியா...

கீழே அமர்ந்திருந்த பிரகதீஸ்வரி எழுந்து வருவதற்குள் அத்தனையும் நடந்து முடிந்திருந்தது... அவனது கோபம் கண்டு அவளுமே பயந்து போய் நின்றாள்...

"நீ என்ன சின்னப் பெண்ணா...? இது மாதிரி நடந்து கொள்வதற்கு...? நீ செய்த காரியம் எவ்வளவு பெரிய

விபரீதத்தில் முடிந்திருக்கிறது பார்த்தியா...? உன்னால் அவளுக்கு ஏதேனும் ஒன்றாகியிருந்தால்..."

இதைச் சொல்லும் போதே அவனது வலிமையான தேக்குத் தேகத்தில் சிறு நடுக்கம் தோன்றியது...

"இனியாவது உன் விளையாட்டு புத்தியை குறைத்துக் கொண்டு பெரிய பெண்ணாய் லட்சணமாய் நடந்து கொள்..." என்று ஆள்காட்டி விரல் நீட்டி சந்தியாவை அவன் எச்சரித்தான்...

கண்ணீர் மல்க சரியென்று தலையசைத்த சந்தியா குற்ற மனப்பான்மையில் தலைகுனிந்து நின்றாள்...

சங்கமித்ரா சந்தியா கையிலிருந்த பிரகதீஸ்வரியின் தாவணியை வாங்கி,

"இதை உடுத்தி கொள்..." என்று பிரகதீஸ்வரியிடம் நீட்டினாள்...

அதை வாங்கிக் கொண்டு நகர்ந்த பிரகதீஸ்வரியை கை நீட்டி தடுத்து நிறுத்திய சித்தார்த், "இப்படி வெட்ட வெளியில் நின்று கொண்டு உடை மாற்ற வேண்டுமா...? அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்... வீட்டிற்குப் போய் மாற்றிக் கொள்..."

அவள் மீதான அக்கறையைக் கூட அவன் கடுமையுடன் தான் கூறினான்... அவன் கூறியதை அவள் அமைதியாய் தலையசைத்து ஏற்றுக் கொண்டாள்...

"இன்னும் ஏன் இங்கேயே நின்று கொண்டு இருக்கீங்க...? வீட்டிற்குக் கிளம்புங்க..."

சித்தார்த்தின் கட்டளையை மீற முடியாமல் அனைவரும் வீட்டிற்குக் கிளம்பினர்...

சரவணனை காரை ஓட்ட பணித்து விட்டு சித்தார்த் மறுபக்கம் வந்தமர்ந்தான்... அவனுக்கு இருக்கும் மனநிலையில் அவனால் கவனமாய்க் காரை ஓட்டி கொண்டு செல்ல முடியாது...

வரும் போது அமர்ந்தது போல் இப்போதும் அவனுக்குப் பின்னால் அமர்ந்திருந்த பிரகதீஸ்வரி பக்கவாட்டுக் கண்ணாடியில் தெரிந்த அவனது பிம்பத்தை உள்வாங்கியபடி வந்தாள்... மாலை நேர தென்றல் காற்று சுகமாய் அவனது முன்னுச்சி முடியை கலைத்து விளையாட அழகாய் இருந்தவனின் முகம் இறுக்கமாய் இருந்தது கண்டு அவளது மனம் சுணங்கியது... ஆனால் அதையும் மீறி அவள் அவனை ரசித்தாள்...

அந்த இறுகிய முகமும் அவனுக்குச் செதுக்கி வைத்த சிலை போன்று கம்பீரமான அழகை வாரி வழங்கியதில் சின்னப்பெண் வசமாகச் சிக்கி கொண்டாள் அவனிடத்தில்... தான் அணிந்திருந்த அவனது சட்டையை இறுக பற்றிக் கொண்டவள் மனதில் ஒருவித பரவசமான உணர்வு எழுந்தது...

அந்தி நேர வானத்துச் சிவப்பு அழையா விருந்தாளியாய் அவளது முகத்தில் வந்து ஒட்டி கொண்டது...

வீடு வந்து சேர்ந்ததும் எல்லோரும் இறங்கி உள்ளே போனார்கள்... அங்கு வரவேற்பறையில் அமர்ந்திருந்த பெரியவர்களின் முகம் சிறியவர்களின் சுரத்தில்லா முகத்தினைக் கண்டு குழப்பத்தைத் தத்தெடுத்தது...

பிரகதீஸ்வரி அணிந்து வந்த சித்தார்த்தின் சட்டையைக் கண்டு விமலாராணிக்கு உள்ளுக்குள் பகீரென்றானது...

பிரகதீஸ்வரி ஈர உடையுடன் இருந்ததால் அவள் நேரே தனது அறைக்குச் சென்றுவிட்டாள்... சித்தார்த்தும் அது போல் அவனது அறைக்குச் சென்று விட்டான்...

மற்றவர்கள் மூலம் விசயத்தை அறிந்து கொண்ட மார்த்தாண்டம், பிரபாவதி அதைப் பெரிதாக எண்ணாது விட்டு விட்டனர்... ஆனால் விமலாராணியால் அதை அவ்வளவு சாதாரணமாக விட முடியவில்லை... அவரது குறுக்குப்புத்தி பலவாறு யோசிக்கத் துவங்கியது...

சித்தார்த் உடை மாற்றி விட்டு வரவேற்பறையில் வந்தமர்ந்தான்... அந்நேரம் அவன் முன் கசாயம் நீட்டப்பட்டது... ஆர்வமாய்த் தலை நிமிர்ந்தவன் அங்குப் பிரகதீஸ்வரி இல்லாது சோலையம்மாள் நின்று கொண்டிருந்ததைக் கண்டு அவனுள் ஏமாற்றம் பரவியது... தம்பளரை எடுக்காது அவன் அதை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்...

"நான் சொன்னேன்ல கண்ணு... தம்பி குடிக்க மாட்டாருன்னு..." என்று உரத்த குரலில் சோலையம்மாள் சொல்ல...

அதில் சித்தார்த்தின் விழிகள் அவளை ஆர்வமாய்த் தேடியது... வரவேற்பறையின் கதவு அருகே நின்றிருந்த பிரகதீஸ்வரியை கண்டதும் அவனுள் மகிழ்ச்சி பொங்கியது... அதைக் காட்டிலும் இறைஞ்சுதலாய் தன்னைப் பார்த்தவளை கண்டு அவனது கண்களில் மின்னல் வந்தது...

அடுத்த நொடி அவனது கை கசாயம் அடங்கிய தம்பளரை கைப்பற்றி இருந்தது... அதைக் கண்ட பிரகதீஸ்வரியின் முகத்தில் திருப்தி புன்னகை எழுந்தது...

'உனக்கு...?' என்பது போல் பார்வையால் தம்பளரை சுட்டிக்காட்டிய சித்தார்த்திடம், 'நீங்க குடிங்க...' என்பது போல் அவள் சைகை செய்தாள்...

"பிரகதி... இந்தக் கிளைமேட்க்கு சூடா பக்கோடா சாப்பிட்டால் நல்லாயிருக்கும்..." என்று கூறிய விமலாராணியின் குரலில் நிகழ்காலம் உறைக்க,

"இதோ செஞ்சு தர்றேன்ம்மா..." என்றபடி அவள் சட்டென்று உள்ளே சென்றுவிட்டாள்...

"இரு பிரகதி... நானும் வர்றேன்..." என்று சங்கமித்ராவும் அவளுடன் சென்றாள்...

சித்தார்த்தோ எதையோ யோசித்தபடி கையிலிருந்த தம்பளரை பார்த்துக் கொண்டிருந்தான்... அந்தக் கணம்

அவனது முகம் உணர்ச்சிகளைத் துடைத்திருந்தது...

சிறிது நேரம் கழித்து அவன் சமையலறைக்குள் சென்று பார்த்த போது பிரகதீஸ்வரியும், சங்கமித்ராவும் சேர்ந்து பக்கோடா தயாரித்துக் கொண்டிருந்தனர்...

"வாவ்... சூப்பரா வந்திருக்கு..."

நன்றாகச் சிவந்து மொறுமொறுவென வந்திருந்த பக்கோடாக்களைத் தட்டில் எடுத்து வைத்தாள் சங்கமித்ரா...

"நீங்க போய்க் கொடுத்துட்டு வாங்கக்கா..." என்று பிரகதீஸ்வரி அதை அழகாய் ஒரு தட்டில் அடுக்கி வைத்து கொடுத்தாள்...

"நானே செஞ்சதுன்னு எல்லோர் கிட்டேயும் சொல்ல போறேன்..."

"தாராளமா சொல்லுங்க..." என்று புன்னகையுடன் கூறியவளை பார்த்த சித்தார்த்திற்கு மனம் இதமாக இருந்த அதே சமயம், வேதனையாகவும் இருந்தது...

"அத்தான்... இந்தாங்க... எடுத்துக்கோங்க..."

சித்தார்த்தை அங்கே கண்டதும் சங்கமித்ரா தட்டை அவனிடம் நீட்டினாள்...

"நான் பிறகு சாப்பிடறேன்... நீ மத்தவங்களுக்குக் கொண்டு போய்க் கொடு..." என்று அவளை அனுப்பியவன் நேரே பிரகதீஸ்வரி அருகில் வந்து நின்றான்...

அவனது வரவு உணர்ந்து திரும்பி பார்த்தவள் அவனது பார்வையில் அப்படியே உறைந்தாள்... ஆளை உருக்கும் அவனது பார்வை அவளைப் பாகாய் உருகச் செய்தது... கள்ளத்தனமாய் மனதில் முளைத்த காதலை மறைக்கத் தெரியாது தடுமாறினாள் அந்தப் பேதை பெண்...

நெற்றியில் வியர்வை பூக்கள் அரும்பியிருக்க அவள் நின்ற தோற்றம் கண்டு அவனது மனம் துன்பம் கொண்டது...

மேலும் தனது அருகில் நெருங்கி வந்தவனைக் கண்டு மிரண்டு போனவளாய் அவள் பின்னால் செல்ல, அவனோ அவளது மிரட்சியைப் பொருட்படுத்தாது தனது கைக்குட்டையால் அவளது நெற்றி வியர்வையைத் துடைத்து விட்டவன்,

"நீ ஏன் இந்த வேலை எல்லாம் செய்யற...?"

அவனது குரலிலிருந்த வருத்தம் அவளுக்கும் புரிந்ததோ என்னவோ... பயம் அகன்றவளாய் அவனைப் பார்த்து புன்னகைத்தவள்,

"நம்ம வீட்டு வேலைகளை நாம செய்யாம வேறு யார் செய்வாங்க..."

இயல்பாய் அவனிடம் உரைத்தபடி வாணலியில் எண்ணெயில் பொரிந்து கொண்டிருந்த பக்கோடாக்களைக் கரண்டியால் திருப்பிப் போட்டாள்...

"நீ சொல்றது சரி தான்... அதற்காக எந்நேரமும் வேலைக்காரி போல் அடுப்படியில் வெந்துக்கிட்டு இருக்கணும்ன்னு எந்த அவசியமும் இல்லையே..."

அவனது பேச்சு கேட்டு திரும்பி பார்த்தவள் விழிகள் வியப்பில் விரிந்தது... அன்று அவளை வேலைக்காரி என்று கோபத்தில் கடிந்தவன் இன்று இப்படிப் பேசுவது கண்டு அவளுக்குப் பெருத்த ஆச்சிரியமாக இருந்தது...

"இதை நீங்க சொல்வது உண்மையில் அதிசயம் தான்ங்க..."

மனதிலிருந்ததை அவனிடத்தில் மறைக்காது உரைத்தவள் வெந்த பக்கோடாக்களைத் தட்டில் எடுத்து வைத்து விட்டு, பிசைந்து வைத்திருந்த மாவை பக்கோடாவாய் உருட்டி எண்ணையில் போட ஆரம்பித்தாள்... அதைப் போட்டு முடித்ததும் கையைக் கழுவி விட்டு சூடாய் இருந்த பக்கோடாவை எடுத்துத் தட்டில் வைத்து அவன் முன் நீட்டினாள்...

அதை வாங்காது அவளையே அவன் பார்த்துக் கொண்டிருந்தான்...

"வாங்கிக்கோங்க..." என்று அவள் கூற...

"அன்று இருந்த சித்தார்த் இன்று இல்லை என்று சொன்னால் நீ நம்புவாயா பேபி..."

அவனது இந்தக் குரலில் அவளது உள்ளம் தடதடத்தது... அவளுக்குமே தெரிந்து தான் இருந்தது.... இதோ அவள் முன் நின்று கொண்டிருக்கும் இந்தச் சித்தார்த் 'புதியவன்' என்று...

தன்னுடைய பதிலுக்காக ஆர்வத்துடன் காத்துக் கொண்டிருக்கும் அவனது விழிகளோடு விழி கலந்தவளாய் அவள் 'ஆம்' என்று தலையசைத்தாள்...

"இதை எப்போதும் நீ மறந்து விடாதே..."

அவன் சொல்லி கொண்டிருக்கும் போது சங்கமித்ரா அங்கே வந்து சேர்ந்தாள்...

"அத்தான்... நான் கொடுத்த போது வேண்டாம்ன்னு சொன்னீங்க... இப்போ பிரகதி கொடுத்ததும் சாப்பிடறீங்க..." என்று அவள் அவனிடத்தில் செல்ல சண்டை போட்டாள்...

"நீ சமைக்கும் அழகு தான் எனக்குத் தெரியுமே... இதே இது பிரகதி என்றால் பயப்படாமல் சாப்பிடலாம்..." என்று கேலி குரலில் கூறியவன் சிரித்தபடி அங்கிருந்து அகன்று விட்டான்...

அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த சங்கமித்ரா, "சித்து அத்தான் இப்படி அடங்கி ஒரு இடத்தில் இருந்து நான் பார்த்ததில்லை... எங்கேயாவது வெளிநாடு, வெளியூர் என்று சுற்றிக் கொண்டே தான் இருப்பார்... வீட்டில் அவர் இருப்பது மிகவும் அபூர்வம்... இங்கே என்னடா என்றால் தொடர்ந்து இத்தனை நாட்கள் தங்கி இருக்கிறார்... அதிசயம் தான்..."

சங்கமித்ராவின் வார்த்தையில் பிரகதீஸ்வரியின் உள்ளம் படபடத்தது... சித்தார்த்தின் நடவடிக்கைக்கான காரணம் தான் தானோ என்று நினைத்தவளின் மனமோ சந்தோச வானில் உல்லாசமாய்ப் பறந்து திரிந்தது...

சித்தார்த்தின் பேச்சு, செயல்கள் எல்லாமே அவனது மனதினை அப்பட்டமாய் அவளுக்கு எடுத்துரைத்தது...

காதல் கொண்ட மனம் எல்லாவற்றையும் தனக்குச் சாதகமாக எண்ணி பார்த்து மகிழ்ந்து போனது... ஆனாலும் அவனிடத்தில் காதலை சொல்ல அவளுக்குப் பெரும் தயக்கமாக இருந்தது... என்றாவது ஒரு நாள் அவன் தன் மனதினை அவளிடத்தில் திறக்கும் போது அவளும் தனது மனதினை அவனிடத்தில் திறப்பாள்...

அந்த நல்ல நாளுக்காக இப்போதிருந்தே அவள் காத்திருக்க ஆரம்பித்தாள்...

அன்றைய இரவு எப்போதும் போல் படித்துக் கொண்டிருந்த பிரகதீஸ்வரி ஜன்னல் வழியே வெளியே எட்டிப்பார்த்த போது அன்றொரு நாள் போல் இன்றும் சித்தார்த் கல்மேடையில் அமர்ந்து வானத்தை ஆராய்ந்து கொண்டிருந்தான்...

அன்று கண்டதை விட இன்று அதிக வேதனை அவனது முகத்தில் தெரிந்தது... அன்றே அவனுக்காக அப்படித் தவித்தவள் இன்று மனதில் காதல் வந்த பின்பு இன்னமும் அதிகமாய்ப் பரிதவித்துப் போனாள்...

அதற்கு மேல் படிக்கப் பிடிக்காமல் புத்தகத்தை மூடி வைத்தவள் தோட்டத்திற்கு விரைந்தாள்...

தன் முன்னே வந்து நின்ற பிரகதீஸ்வரியை கண்டு சித்தார்த் வரவேற்பாய் புன்னகைத்தான்...

"இன்னுமா நீ தூங்கலை..."

"இல்லை... படிச்சிட்டு இருந்தேன்..."

"ஓ..." என்றவன் தனக்குப் பக்கத்து இடத்தைச் சுட்டிக்காட்டி,

"உட்கார்..." என்க...

அந்தச் சிறிய கல்மேடையில் இருவர் அமரும் அளவுக்கு இடம் இருந்த போதும் ஒருவரோடு ஒருவர் உரசி கொண்டு தான் அமர வேண்டும்... அதனால் அவள் அவனுக்கு எதிராகக் கீழே புல் தரையில் அமர்ந்தாள்...

"ஏய்... கீழே எதுக்கு உட்கார்ற...இங்கே வந்து உட்கார்..." அவளது செயலில் பதறியவனாய் அவன் கூற...

"இருக்கட்டும்... எனக்குக் கீழே உட்கார்ந்து பழக்கம் தான்..." என்று புன்னகையுடன் கூறியவளை அவன் இமைக்காது பார்த்தான்...

தனது காலடியில் சரணடைவது போல் அமர்ந்திருந்த அந்தச் சிறு பெண் தனது சின்னச் சின்னச் செய்கையால் அவனது இதயத்தில் அழுத்தமாய்ச் சிம்மாசனமிட்டு அமர்ந்தாள்...

அந்தக் கணம் ஆற்றில் உயிருக்கு போராடிய அவளது தோற்றம் அவனின் நினைவில் எழுந்தது... அதை நினைத்து பார்த்த இந்த நொடி கூட அவனது இதயம் தன் துடிப்பை நிறுத்தியது போல் அவனுள் ஒரு தோற்றம்... அப்போதும் இப்படித்தானே அவன் உணர்ந்தான்...

"தேங்க்ஸ்..." திடுமென ஒலித்த பிரகதீஸ்வரியின் குரலில் அவன் யோசனையாய் புருவத்தைச் சுருக்கினான்...

"எதற்கு...?"

"என்னைக் காப்பாற்றியதற்கு..." அவள் புன்னகையுடன் கூறினாள்...

"உனக்கு நீயே நன்றி சொல்லி கொள்வாயா ரதி..."

ஆளை மயக்கும் குரலில் அவன் கூறிய போது அவளும் மயங்கித்தான் போனாள்... அவன் கூறியதன் அர்த்தம் அவளது சித்தத்தைப் பேதலிக்கச் செய்தது...

'அப்போ அவங்களும் நானும் ஒண்ணா...?'

அந்த நினைவே அவளுக்கு அத்தனை தித்திப்பாய் இருந்தது...

தனக்குள் யோசித்தபடி தலைக்குனிந்து அமர்ந்திருந்தவளை சிறிது நேரம் ரசித்துப் பார்த்த சித்தார்த்,

"ரதி..." என்று அவளை அழைக்க...

"ம்..." என்றபடி நிமிர்ந்தவளை கண்டு,

"இனிமேல் நீ இந்த மாதிரி தாவணி எல்லாம் போடாதே... சுடிதார் போடு..."

திடீரென்று அவன் இப்படிக் கூறியதை கேட்டு அவள் திகைத்து விழித்தாள்...

"என்ன நான் சொல்றது புரிந்ததா...? உடை நமக்குப் பாதுகாப்பை கொடுக்க வேண்டும்... ஆனால் நீ அணிந்திருக்கும் தாவணி உனக்கான பாதுகாப்பை கொடுப்பதாய் எனக்குத் தெரியவில்லை..."

"அது வந்து..." அவனது கூற்றை ஏற்றுக் கொள்வதற்கு அவள் மிகவும் தயங்கினாள்...

இது அவளது தந்தையின் விருப்பம்... பெண் என்பவள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று அவர் கூறிய வழியில் செல்பவள் அவள்... உடை விசயத்தில் அவர் விதித்த கட்டுப்பாட்டை அவள் இதுவரை மீறியது இல்லை...

"என்ன வந்து, போயின்னு இழுத்துக்கிட்டு... சொன்னதைச் செய்..." என்றவனது குரலும், முகமும் இறுகி போனது...

"அப்பாவுக்கு மாடர்ன் ட்ரெஸ் எல்லாம் பிடிக்காது... அதனால்..."

"உடை உடுத்த போவது நீ... உன் அப்பா இல்லை... இன்று உனக்கு நேர்ந்த கதியை உன் அப்பா நேரில் பார்த்திருந்தால் அவரும் நான் சொன்னதைத் தான் சொல்லியிருப்பார்..."

அவனை விட்டு அந்தப் பயங்கரம் இன்னமும் நீங்கவில்லை என்பது அவனது குரலில் இருந்த நடுக்கத்தில் தெரிந்தது...

"இனி மேல் நான் கவனமா நடந்துக்கிறேன்..." என்றவளது வார்த்தையில் அவன் சமாதானமாகவில்லை என்பது அவனது இறுகிய முகத்தில் இருந்து தெரிந்தது...

"கோபமா...?"

அவள் கேட்டதும் குனிந்து பார்த்தவனின் பார்வையின் பொருள் என்ன என்பதை அறியாது தவித்தது பேதையின் மனம்... அவளது விழிகளில் தென்பட்ட தவிப்பில் அவனது கோபம் சிறிது குறைந்ததோ என்னமோ தனது கைக்கடிகாரத்தைத் திருப்பிப் பார்த்தவன்,

"நேரமாகி விட்டது... நீ உன் ரூமுக்கு போ..." என்றான் மொட்டையாக...

அவன் 'போ' என்று சொன்ன பிறகும் போகாமல் அங்கேயே இருக்க இயலாது அவள் மெல்ல எழுந்தாள்... அவனோ அசையாது அமர்ந்திருந்தான்... அவள் மீது பதித்திருந்த பார்வையையும் அவன் திருப்பிக் கொள்ளவில்லை...

வேறுவழியின்றி அங்கிருந்து கிளம்பியவள் சிறிது தூரம் நடந்து சென்றுவிட்டு பின்பு அவனை நோக்கி ஓடி வந்தாள்... அவன் அவளைக் கேள்வியாய் பார்த்தான்...

"இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்..." என்று முகம் மலர கூறியவளை கண்டு அவனது முகமும் சேர்ந்து மலர்ந்தது...

"தேங்க்ஸ்... விஷ் யு த சேம்..."

அவனது புன்னகை முகத்தைப் பார்த்தவளுக்கு இப்போது வெகு திருப்தியாய் இருந்தது...

"இது போல் நீங்க எப்போதும் சந்தோசமா இருக்கணும்..." என்றவளை ஆழ்ந்து பார்த்தவன்,

"நீ இருக்கும் போது என் சந்தோசத்திற்கு என்ன குறைச்சல் பேபி..."

ஆழ்ந்து ஒலித்த அவனது குரலில் அவளது உள்ளம் தடுமாறிப் போனது... வெட்கத்தில் முகம் சிவந்தவளாய்,

"நான் வர்றேன்..." என்று முணுமுணுத்தவள் அங்கிருந்து ஓடிவிட்டாள்...

அவள் செல்வதைப் பார்த்து கொண்டிருந்தவனுக்கு அத்தனை மகிழ்ச்சியாய் இருந்தது... இதுநாள் வரை எத்தனையோ வருட பிறப்புகளைப் பல வெளிநாடுகளில் கொண்டாடி இருக்கிறான்... அதற்கான பல ஆடம்பர விருந்துக்களில் கலந்து கொண்டு இருக்கிறான்... ஆனால் அப்போது எல்லாம் உணராத சந்தோசத்தை இப்போது அவன் உணர்ந்தான்...

அவனது அலைப்பேசியில் வரிசையாக வாழ்த்து செய்தி வந்ததற்காக ஒலி கேட்க அதில் நினைவு கலைந்து குறுஞ்செய்தியை திறந்து பார்த்தவன் அதைப் படித்தபடி உள்ளே சென்றான்...

வரவேற்பறையில் கூடியிருந்த சிறியவர்கள் புத்தாண்டு வாழ்த்து சொல்லி அவனைப் பிடித்துக் கொண்டனர்... எல்லோருக்கும் புத்தாண்டு வாழ்த்து சொல்லிவிட்டு அவன் அறைக்குள் வருவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது... மனதின் மகிழ்ச்சியைத் தனியே அசை போடுவதற்காக அவன் தனிமை தேடி ஓடி வந்துவிட்டான்...

****

மறுநாள் காலையில் சீக்கிரமே எழுந்துவிட்டான் சித்தார்த்... அதிகாலை ஒரு மணிக்கு தான் படுத்தான்... ஆனாலும் மனம் சந்தோசமாக இருந்ததாலோ என்னமோ அவனுக்கு நேரமே விழிப்புத் தட்டிவிட்டது... ஜன்னல் வழியே வெளியில் வேடிக்கை பார்த்தவன் கண்ணில் வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்த பிரகதீஸ்வரி தென்பட்டாள்...

அவன் உற்சாகமாய் அவளைத் தேடி சென்றான்...

"கொம்மை முலைக ளிடர்தீரக்

கோவிந் தற்கோர் குற்றேவல்
இம்மைப் பிறவி செய்யாதே
இனிப்போய்ச் செய்யும் தவந்தானென்
செம்மை யுடைய திருமார்வில்
சேர்த்தா னேலும் ஒருஞான்று
மெய்ம்மை சொல்லி முகம்நோக்கி
விடைதான் தருமேல் மிகநன்றே"

'திரண்டு பருத்த முலைகள் துன்பம் தீர கோவிந்தனுக்கு ஓர் சிறு தொண்டு இந்தப் பிறவியில் செய்யாமல் இனி வேறொரு பிறவியில் செய்ய அதுவரை தவம் செய்ய வேண்டுமெனில் அப்படி ஒரு தவம் எதற்கு?'

பிரகதீஸ்வரி நாச்சியார் திருமொழியை முணுமுணுத்தபடி கோலமிட்டு கொண்டிருந்தாள்...

தலையில் ஈர துண்டுடன், பாவாடை, தாவணியில் அம்சமாய் இருந்தவளின் அழகினை காண காண அவனுக்குத் தெவிட்டவில்லை... அவனுள் இருந்த கலாரசிகன் மெல்ல உயிர்த்தெழுந்தான்... தன் முன் உயிர் பெற்றிருந்த ரவிவர்மாவின் அழகு ஓவியத்தை அணு அணுவாய் ரசித்துப் பார்த்தான்...

அவள் குனிந்து கோலம் போடும் போது லேசாகத் தெரிந்த அவளது வெண்ணிற இடை அவனைச் சித்தம் கலங்கச் செய்தது... அவளது இடையில் சரணாகதி அடைய சொல்லி அவனது மனம் ஆசை கொண்டு அடம்பிடித்தது...

அவனது வரவு கண்டு நிமிர்ந்து பார்த்த பிரகதீஸ்வரி அவனைக் கண்டு புன்னகைத்தாள்...

"அதுக்குள்ள எழுந்திருச்சிட்டீங்களா...?"

கேள்வி அவனிடம் கேட்டாலும் அவளது பார்வை கோலத்தின் மீதே இருந்தது... அவளது பேச்சில் அவன் தனது மயக்கத்தில் இருந்து வெளியில் வந்தவன் உடனே தனது முகபாவனையை மாற்றிக் கொண்டான்...

"தூக்கம் வரலை..." என்றவன்,

"நீ பாடிக்கிட்டு இருக்கும் பாட்டுக்கு என்ன அர்த்தம்...?" என்று கேட்க...

அவன் அப்படிக் கேட்டதும் பிரகதீஸ்வரி ஆண்டாளை பற்றி எடுத்து சொல்லி இந்தப் பாடலுக்கு அர்த்தமும் சேர்த்து சொல்ல... அதை நிதானமாய்க் கேட்டவன்,

"ஆண்டாள் போல் நீ யாருக்காகத் தவமிருக்கிற...?"

ஆளை ஊடுருவும் பார்வையோடு கேட்டவனின் வார்த்தையில் அவள் விதிர்த்து போய் அவனைப் பார்த்தாள்... அதை விடத் தனது மனதினை வெளிப்படுத்தும் வகையறியாது அவள் அவனைப் பார்த்து விழித்தாள்... அதில் அவன் யோசனையானான்...

அவள் சுதாரித்துக் கொண்டு கோலத்தைப் போட்டு முடித்தவள் வேகமாய் எழுந்தாள்... அதில் தனது யோசனையைத் தள்ளி வைத்தவன்,

"அன்னைக்கு மாதிரி சாணியில் பூ சொருகி வைக்கலையா...?" சீண்டலாய் கேட்டான் அவன்...

அதில் அவளது முகத்தில் புன்னகை அரும்பியது...

"ஏன் திரும்ப நீங்க என்னை அடிக்கிறதுக்கா...?"

அன்றைய நாளின் நினைவில் அவனது முகம் கன்றிப் போனது...

"சாரி..." என்றவனை ஏறிட்டவள்,

"என் மேலும் தவறு இருக்கிறது... நானும் உங்களைப் பார்த்து அப்படிக் கேலியாய்ச் சிரித்திருக்கக் கூடாது..."

முழுத் தவறும் அவனுடையது தான் என்றாலும் அவனது தவறில் பாதியை அவள் தனதாக்கிக் கொண்டாள்... அதை உணர்ந்தவனின் மனம் மயிலிறகு போல் லேசானது...

அன்று காலையில் உணவு முடித்து வெளியில் கிளம்பி சென்ற சித்தார்த் திரும்பி வரும் போது மதியமாகி

இருந்தது... அன்று புத்தாண்டு என்பதால் அவன் எல்லோருக்கும் பரிசு பொருட்கள் வாங்கி வந்திருந்தான்...

பிரகதீஸ்வரியும் அவனது பரிசுக்காக ஆவலுடன் காத்திருந்தாள்... அந்தோ பரிதாபம் அவன் அவளைச் சிறிதும் கண்டு கொள்ளவில்லை... அதில் அவளது முகம் வாடி போனது...

என்ன தான் பெரிய பெண் போல் அவள் நடந்து கொண்டாலும் மனதளவில் அவள் சிறிய பெண் தானே... அதிலும் அன்பு கொண்டவனிடத்தில் அவள் அன்பான பரிசை எதிர்பார்ப்பதில் எந்தத் தவறும் இல்லையே...

சித்தார்த்தின் இந்தப் புறக்கணிப்பு அவளது இதயத்தில் ஊசியாய் இறங்கி மிகவும் வலிக்கச் செய்தது...

அன்று மாலை எல்லோரும் வெளியில் கிளம்பிய போதும் அவள் படிப்பை காரணம் காட்டி உடன் செல்ல மறுத்து விட்டாள்... அதற்கு மேல் யாரும் அவளை வற்புறுத்தாமல் கிளம்பி சென்று விட்டனர்...

தனியே இருந்த அவளது மனம் சித்தார்த்திடம் மையம் கொண்டிருந்தது... இப்படியே இருந்தால் வேலைக்காகாது என்று எண்ணியவள் பாட புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தாள்... புத்தகத்தில் எழுத்து இருந்த இடத்தில் எல்லாம் சித்தார்த்தின் முகமே வந்து நின்று அவளைப் பெரிதும் இம்சித்தது...

"புத்தகத்தைத் திறந்து வைத்துக் கொண்டு அப்படி என்ன யோசனை...?"

அவளது எண்ணத்தின் நாயகனே அவளின் கண் முன் வந்து நின்றான்... அவனைக் கண்டதும் முகம் மலர பார்த்தவள்,

"நீங்க அவங்க கூடப் போகலையா...?"

அதற்கு அவன் பதிலளிக்காது, "இரவு சமையலுக்கு என்ன செய்யலாம்ன்னு யோசித்துக் கொண்டு இருந்தியா...?"

அவள் அவனைப் பற்றி அல்லவா யோசித்துக் கொண்டிருந்தாள்... அதை அவனிடத்தில் எப்படி உரைப்பது...? அதனால்,

"ஹி... ஹி... ஆமாம்... சமையலை பற்றித் தான் யோசித்துக் கொண்டிருந்தேன்..."

நம்பாத பாவனையுடன் அவள் அருகே அமர்ந்தவன் வலிக்காது அவளது தலையில் குட்டினான்...

"படிக்கும் போது தேவையில்லாத சிந்தனைகள் மனதில் எழ கூடாது... படிப்பு மட்டும் தான் உன்னுடைய ஒரே எண்ணமாக இருக்க வேண்டும்..." என்றவன்,

"எங்கே உன் புத்தகத்தைக் கொடு..." என்று அவளிடம் புத்தகத்தைக் கேட்டு வாங்கி அவளுக்குப் படிப்பிக்க ஆரம்பித்தான்...

அவன் நல்லாசிரியராய் மாறியதும், அவளும் நல்ல மாணவியாய் சமத்தாய் பாடத்தைக் கற்று கொண்டாள்... சற்று முன் ஏற்பட்ட மனச்சுணக்கம் கூட அவளிடம் இருந்து காணாமல் போயிருந்தது...

"இப்போது புரிந்ததா...?" என்று அவன் கேட்ட போது,

"புரிந்தது..." என்று உற்சாகமாய் அவள் தலையாட்டினாள்...

அவள் படித்து முடிந்ததும் தனது புத்தகங்களை எடுத்துக் கொண்டு கிளம்ப ஆயத்தமான போது சித்தார்த் அவளை அழைத்தான்...

"ரதி..."

'என்ன' என்பது போல் அவள் கேள்வியாய் அவனைப் பார்த்தாள்...

சித்தார்த் தனது சட்டை பையில் இருந்து ஒரு பொருளை எடுத்து அதைப் பிரித்து அவள் முன்னே நீட்டினான்...

ஒற்றை உயர்வகை வைரக் கல்லோடு அழகாய் ஜொலித்தது அதனுள் இருந்த மூக்குத்தி... வைரம் பலவித வர்ண ஜாலத்தை வெளிப்படுத்தியது போல் அவளது மனதிலும் பலவித வர்ண ஜாலங்கள் எழுந்தது...

"தேங்க்ஸ்..." என்று ஒலித்த அவளது குரலில் தெரிந்த உணர்ச்சி பெருக்கில் அவன் அவளைக் கூர்ந்து பார்த்தான்...

மூக்குத்தியில் இருந்த வைரத்தின் பளபளப்பிற்கு இணையாக அவளது விழிகளில் கோர்த்திருந்த இரு கண்ணீர் துளிகள் வைரமாய்ப் பளபளத்து ஜொலித்தது...

பிரகதீஸ்வரியின் கண்களில் தெரிந்த ஏக்கத்தில், எதிர்பார்ப்பில் 'தி க்ரேட்' சித்தார்த் வாயடைத்து போனான்...!!!

"நவநாகரீக உடைகளை வெறுத்தவன் இன்று
உன்னை நாகரீக உடை அணிய சொல்வது ஏனோ...
மற்றவரின் வியர்வை துளிக்கு அர்த்தம் தெரியாதவன்
உன் நெற்றி வியர்வை கண்டு துடிப்பது ஏனோ...
உன் கண்ணீர் வைரமாய் மாறி
என் நெஞ்சை அறுப்பதேனோ...
உனது ஏக்கமும், எதிர்பார்ப்பும் நானாவேனோ...???
உனது காதலும், கனவும் நானாவேனோ...???
காதல் கனவே! எந்தன் கை சேரும்
திருநாள் எந்நாளோ...!!!"

நனவாகும்...!!!

எத்தனை வீராப்பான ஆண்மகனையும் பெண்ணின் ஒற்றைக் கண்ணீர் துளி வீழ்த்தி சாய்த்துவிடும் என்பது எவ்வளவு சத்தியமான உண்மை... அத்தகைய வல்லமை உடையதாய் இருந்தது பிரகதீஸ்வரியின் விழிநீர்...

சித்தார்த் என்னும் ஆண்மகனின் தன்னகங்கார நெருப்பைப் பிரகதீஸ்வரி என்னும் சிறு பெண்ணின் விழிநீர் அப்படியே அணைத்து விட்டது...

தங்களது காரியம் கை கூடக் கண்ணீரை ஆயுதமாகக் கையில் எடுக்கும் பல பெண்களை அவன் பார்த்து இருக்கிறான்... ஆனால் இவளது இந்தக் கண்ணீர், ஏக்கம் மற்றும் எதிர்பார்ப்பின் வெளிப்பாடு அல்லவா...

அவளது ஏக்கம் மற்றும் எதிர்பார்ப்பின் பின்னே இருப்பது அவன் மீதான அன்பா...? காதலா...? எதுவென்று அவனுக்குத் தெரியவில்லை... அது எதுவாக இருந்த போதும் அதில் அவன் முற்றிலும் நிலைக்குலைந்து போனது என்னவோ உண்மை...

உணர்ச்சிவசப்பட்டு இருந்த சித்தார்த் வார்த்தைகள் வசம் வராது தடுமாறினான்...

பிரகதீஸ்வரியும் உணர்ச்சி பெருக்கில் பேச முடியாது மனதிற்குள் தத்தளித்துக் கொண்டிருந்தாள்... எதிர்பாராத நேரத்தில் கிடைத்த எதிர்பார்க்காத பரிசு... ஆனால் அவளது மனம் மிகவும் ஆசையுடன் எதிர்பார்த்த பரிசு... சந்தோசத்துடன் அந்தச் சிறிய நகைப்பெட்டியை நெஞ்சோடு அணைத்து கொண்டாள் அவள்...

அவளுக்கு ஏற்பட்ட உணர்வை 'உவகை' என்கிற ஒற்றை வார்த்தையில் அடக்கிவிட முடியாது... அந்த உணர்வு வானம் போல் பரந்து விரிந்திருந்தது...

சித்தார்த் தான் முதலில் தன்னைச் சுதாரித்துக் கொண்டான்... எத்தனையோ சூழ்நிலைகளை எளிதாகக்

கையாண்டு பழக்கப்பட்டவன் ஆதலால் அவன் இதையும் எளிதாகக் கையாண்டான்...

"பிடிச்சியிருக்கா...?"

மிகவும் மென்மையுடன், குழைந்து ஒலித்த குரல் தனது குரல் தானா என்று அவனுக்கே சந்தேகமாக இருந்தது...

"ம்... ரொம்ப... ரொம்ப..." என்று புன்னகையுடன் தலையாட்டினாள் அவள்... தனது மனவுணர்களைக் கூட அவளால் மறைத்து வைக்க முடியவில்லை... அந்தளவுக்கு அவளது மனம் அவனது அன்பில் நெகிழ்ந்து போயிருந்தது...

அவள் சொன்னது கேட்டு அவனுக்குமே மகிழ்வாய் இருந்தது...

"எனக்காகப் போட்டு காண்பிக்கிறியா...?"

எப்போதும் அதிகாரம் காட்டியே பேசி பழக்கப்பட்டவன் இப்போது அந்தச் சிறு பெண்ணிடத்தில் வேண்டி நின்றான்...

"ப்ளீஸ்..." அவனது கெஞ்சல் குரலில் அவள் உடனே அவன் சொன்னதைச் செய்தாள்...

அவளது நாசியில் ஒய்யாரமாய் ஒற்றைச் சுடரொளி போன்று அழகுற ஜொலித்தது அந்த வைர மூக்குத்தி... அவள் அணிந்திருப்பதால் அந்த வைரத்திற்கே தனி மதிப்பு வந்தது போல் அவனுள் ஒரு தோற்றம்...

"நல்லாயிருக்கா...?" என்று ஆர்வத்துடன் தலையாட்டியபடி அவனது கருத்தை அவள் கேட்ட போது அந்த வைரக்கல்லும் அசைந்து வர்ணஜாலத்தை நாலாப்புறமும் வாரியிறைத்து அவளது முகத்தை மேலும் அழகாக்கியது...

"ம்... ரொம்ப..." என்றவனது குரல் உணர்ச்சிவசப்பட்டதில் கரகரத்து ஒலித்தது...

அவள் அவனிடம் கேட்ட அழகில் அவளது நாசியில் வீற்றிருந்த மூக்குத்தியின் மீது இதழ் பதிக்க வேண்டும் என்கிற ஆசை பேராசையாக எழுந்ததில் அவன் அவனையும் அறியாது அவளது அருகில் சென்று விட்டான்...

அவன் அருகில் வந்தாலே எப்போதும் அச்சத்துடன் நோக்குபவளின் விழியில் இப்போது வழிந்த நேசத்தினைக் கண்டதும் அவன் அப்படியே உறைந்து போய் நின்றான்...

அவளது இமைக்காத விழிகளும், துடிக்கும் இதழ்களும் அவனிடம் பல்வேறு கதைகளைப் பேசியது... அவனும் தனது இதழ் கொண்டு அவளிடம் பல கதைகள் பேசிட விருப்பம் கொண்டவனாய் அவளது முகம் நோக்கி குனிந்தவன் கண்ணில் அருகில் மேசை மீதிருந்த அவளது பாட புத்தகங்கள் விழுந்து அவனைச் சற்று நிதானிக்க வைத்தது...

அடுத்தக் கணம் அவன் அவளிடம் இருந்து விலகி இருந்தான்... அவன் விலகிய தருணம் அவளது விழிகளில் ஏமாற்றம் கவிழ்ந்தது... அவனிடம் இருந்து அவள் என்ன எதிர்பார்த்தாள் என்று அவளுக்குத் தெரியவில்லை... ஆனாலும் அவனது விலகல் அவளது மனதினை மிகவும் வருத்தப்பட வைத்தது... அந்தக் கணம் அவனின் அன்பு வேண்டி தாயிடம் சரண் புகும் சேயாய் அவள் மனதுக்குள் ஏங்கி தவித்தாள்...

அவளது ஏமாற்றத்தினை அவனும் உணர்ந்தான் போலும், அதனால் அங்கேயே தேங்கி நின்றான்... அவளது முகம் பார்த்து நின்றவன் தனது கையை மெல்ல உயர்த்தி அவள் அணிந்திருந்த மூக்குத்தியை மெல்ல வருடியவாறு,

"இது உனக்கு ரொம்ப அழகாயிருக்கு..."

அவனது விரல் நுனி அவளைத் தீண்டவில்லை... அவன் தனது இதழ் கொண்டு மாயஜாலம் புரிந்து அவளது உணர்வுகளைத் தூண்டி விட்டு அவளைத் தன்வசம் கவர்ந்து இழுக்கவில்லை... ஆனாலும் அவனது இந்தச்

செயலில் பாவையவள் ஊனும், உயிரும் உருக மெய் மறந்து நின்றாள் என்றால் மிகையில்லை...

"இதைக் கழட்டாமல் எப்போதும் போட்டிருப்பியா பேபி..."

அவனது விருப்பத்திற்காக அதை அப்படியே செய்யவிழைந்தது அவளது காதல் கொண்ட மனம்... ஆனால் விமலாராணியை நினைத்து சற்று பயமாகவும் இருந்தது...

"அம்மா பார்த்து இது ஏதுன்னு கேட்பாங்களே..."

அவள் கூறியது கேட்டு அவனது இத்தனை நேர மயக்கம் சடுதியில் மறைந்தது...

"அப்போ வேண்டாம்..." என்று நொடி நேரம் கூட யோசிக்காது சட்டென்று அவன் பதில் கூறினான்...

"ம்... சரி..." என்றவளை ஒன்றும் பேசாது பார்த்தவன்,

"வெளியில் போயிட்டு வர்றேன்..." என்றபடி அங்கிருந்து வெளியேறி விட்டான்...

அவளோ மனதில் சந்தோசம் பொங்க அவனையே பார்த்திருந்தாள்... அவளது நாசியில் அவன் பரிசாகக் கொடுத்த மூக்குத்தி பளபளத்தது...

மரணம் தழுவும் மனிதனின் முகத்தில் ஒளிரும் சுடர் போன்று அந்த வைரம் சுடர் விட்டுப் பிரகாசித்தது... ஏனெனில் இனிமேல் அவளது நாசியில் வீற்றிருக்கும் பாக்கியம் அதற்குக் கிடைக்கப் போவதில்லையே... வருங்காலத்தை அது உணர்ந்தே இருந்தது...

அன்றைய இரவு புத்தாண்டு கொண்டாட்டங்கள் ஓய்ந்து பெரியவர்கள் மூவரும் ஓய்வாகத் தோட்டத்தில் அமர்ந்திருந்தனர்... இது தான் சரியான சந்தர்ப்பம் என்று எண்ணிய விமலாராணி தன்னுடைய சகோதரனிடத்தில் தனது ஆசையைக் கூறினார்...

"அண்ணா... நம்ம சித்துவுக்குச் சந்தியாவைக் கொடுக்கலாம்ன்னு நினைக்கிறேன்... என்னைப் பத்தி உங்களுக்கே நல்லா தெரியும்... கணவனை இழந்து இரண்டு பிள்ளைகளை வைத்துக் கொண்டு ரொம்பக் கஷ்டப்படுகிறேன் என்று... இத்தனை சொத்துக்களையும் ஒற்றை ஆளாய் கட்டி காப்பது என்பது என்னால் முடியாத காரியம்... நம்ம சரவணனுக்கு இன்னும் பொறுப்பு வரலை... வர போகும் மருமகனிடத்தில் தான் அத்தனை பொறுப்பையும் ஒப்படைக்க வேண்டும்... அது நம்ம சித்துவாக இருந்தால் எனக்கு ரொம்பச் சந்தோசம்... என் அண்ணன் மகன், என்னுடைய மருமகன் என் சொத்தை ஆள்வதில் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை..."

சொத்து என்கிற தூண்டில் போட்டு சகோதரன் என்னும் திமிங்கலத்தைப் பிடிக்கப் பேராசை கொண்டார் அவர்...

விமலாராணி கூறியது கேட்டு பிரபாவதி மனதிற்குள் பொருமி தள்ளிவிட்டார்...

'அடிப்பாவி, எப்படி எல்லாம் ஆசை காட்டி அண்ணனை வளைக்கிறாள்... பாவி மனுசன் சொத்துக்கு ஆசைப்பட்டு என் மகன் வாழ்க்கையைப் பாழாக்கி விடக்கூடாதே... எனக்கு இருக்கிறது ஒரே ஒரு மகன்... அவனுக்கு நான் விரும்பும் பெண்ணைக் கல்யாணம் பண்ணி வைக்கக் கூட எனக்கு உரிமையில்லையா...'

மனம் பதைபதைக்கப் பிரபாவதி கணவரின் முகத்தைத் திகிலுடன் பார்த்தார்... மார்த்தாண்டமோ உடனே பதில் பேசாது தனக்குள் யோசித்தபடி அமர்ந்திருந்தார்...

"என்ன அண்ணா... பதில் சொல்லாம இருக்கீங்க...?"

"நீ சொன்னதைத் தான்ம்மா யோசிச்சிக்கிட்டு இருக்கேன்... உன் பொண்ணை என் மகனுக்குக் கட்டி வைப்பதில் எனக்கு முழுச் சம்மதம் தான்..."

அதைக் கேட்டு பிரபாவதி அதிர்ச்சியில் நெஞ்சை பிடித்தார் என்றால், விமலாராணி மகிழ்ச்சியில் நெஞ்சை பிடித்தார்...

"ரொம்பச் சந்தோசம்ண்ணா..."

"இரு விமலா... நான் முழுவதும் சொல்லி முடித்த பின்பு பேசு..."

இப்போது கணவர் கூறியதை கேட்டு சற்று நிம்மதி அடைந்தார் பிரபாவதி...

"நாம முடிவு பண்ணினா மட்டும் போதாது... நம்ம பிள்ளைங்களுக்கும் இதில் விருப்பம் இருக்கணும்..."

இப்போது இன்னமும் நிம்மதி அடைந்தவராய் பிரபாவதி நன்றாக நாற்காலியில் சாய்ந்தமர்ந்து கொண்டு விமலாராணியைத் தெனாவெட்டாகப் பார்த்து வைத்தார்...

"பிள்ளைங்க விருப்பம் எதுக்கு அண்ணா...? நாம அவங்களுக்கு நல்லதை தான் செய்வோம்..."

'உனக்கு நல்லதுன்னு சொல்லு... அதை விட்டுட்டு ஏன் சுத்தி வளைச்சு பேசிக்கிட்டு இருக்க...' என்று மனதிற்குள் கடுகடுத்தபடி வெளியில் நாத்தனாரை பார்த்து போலியாய் சிரித்து வைத்தார் பிரபாவதி...

"எங்க சந்தியா நான் கிழிச்ச கோட்டை தாண்ட மாட்டாள்..." என்றார் விமலாராணி மகளை நினைத்துப் பெருமையாக...

'அதைத் தாண்டுறதுக்குக் கூட உன் மகளுக்கு அத்தனை சோம்பேறித்தனம்...' நக்கலாய் நினைத்தார் பிரபாவதி...

"ஆனா நான் போட்ட கோட்டை என் மகன் தாண்டுவானே விமலா... நான் போட்ட கோட்டை அழிச்சிட்டுப் புதுக் கோடு போடவும் அவன் தயங்க மாட்டான்..." என்றார் மார்த்தாண்டம் மகனை பற்றி நன்கு அறிந்தவராய்...

'சூப்பர் அத்தான்... என்னம்மா பேசுறீங்க...?' மானசீகமாகக் கணவருக்குப் பறக்கும் முத்தத்தை அனுப்பி வைத்தார் பிரபாவதி... வெகு வருடங்களுக்குப் பிறகு இன்று தான் தான் புது மணப்பெண்ணானது போல் ஒரு தோற்றம் அவருள்...

"அதனால் சித்துக் கல்யாணத்தில் அவனது விருப்பம் தான் எனக்கு மிகவும் முக்கியம்... அவன் கை காட்டுற பெண் தான் எங்க வீட்டு மருமகள்... ஒவ்வொரு பசங்களைப் போல் அவன் வீணே ஊர் சுற்றியது இல்லை... பொறுப்பில்லாமல் இருந்தது கிடையாது... அப்பனுக்கே பாடம் சொன்ன சுப்பன் அவன்... அதனால் அவன் விருப்பம் தான் எங்களது விருப்பம்..." என்று தங்கையிடம் கூறியவர் மனைவியைப் பார்த்து,

"என்ன பிரபா... நான் சொல்றது சரி தானே..."

"நூறு சதவீதம் சரி தான்ங்க..." என்றுரைத்த பிரபாவதியின் மனதில் சங்கமித்ராவை திருமணம் செய்யச் சித்தார்த் சம்மதம் தெரிவித்து விடுவான் என்கிற நம்பிக்கை மலையளவு இருந்தது...

சகோதரன் பேச்சு கேட்டு விமலாராணியின் முகம் தொங்கி போனது... அதை மார்த்தாண்டம் கவனித்து விட்டார்...

"நான் ஒண்ணும் சந்தியாவை வேண்டாம்ன்னு சொல்லலையே விமலா... சித்துவோட சாய்ஸ் சந்தியாவாக இருந்தால் எங்களுக்கும் சம்மதமே... அப்படி அவன் சம்மதம் தெரிவிக்கலைன்னாலும் நீ கவலைப்படாதே... சந்தியாவுக்கு நல்ல வரனா பார்த்து முடிச்சு வைக்கிறது என்னோட கடமை..."

அண்ணன் ஆறுதல் கூறியதும் தான் விமலாராணியின் முகம் சற்றுத் தெளிந்தது...

'ஹ... என் பையனாவது சந்தியாவைச் செலக்ட் பண்றதாவது... அவன் யாரு...? என்னோட மகனாச்சே...' என்று நினைத்த பிரபாவதியின் மனதில் கர்வம் அளவுக்கதிகமாய் எழுந்தது...

மார்த்தாண்டம் அந்த விசயத்தை அத்துடன் முடித்துக் கொண்டார்... ஆனால் பிரபாவதியால் அப்படி இருக்க முடியவில்லை... நேரே மகனிடம் சென்று நின்றார்...

ஏதோ கோப்பில் கணக்குகளைச் சரி பார்த்து கொண்டிருந்தவன் அன்னையின் வருகையை உணர்ந்து நிமிர்ந்தான்...

"இன்னும் தூங்க போகலையாம்மா...?" அன்னையிடம் கேட்டபடி கோப்பை மூடி வைத்தான் அவன்...

"எங்கே சித்துத் தூக்கம் வருது...? சிலர் பேசுறதை நினைத்தால் வரவிருந்த தூக்கம் கூடத் தூர ஓடி போயிரும் போலிருக்கு..."

அன்னையின் வார்த்தையில் அவனது புருவங்கள் யோசனையாய்ச் சுருங்கியது...

"என்னம்மா சொல்றீங்க...?"

"ஆமாம் சித்து... உன் அத்தைக்காரிக்கு அவளோட மகளை உன் தலையில் கட்டணும்னு எண்ணம் இருக்கு..."

அன்னை கூறியது கேட்டு மனதிற்குள் அதிர்ந்தாலும் வெளியில் அதைக் காட்டி கொள்ளாது கூலாக இருந்தான் சித்தார்த்...

"கல்யாண வயசில் பையன்ங்க இருந்தா நாலு பேர் இப்படிக் கேட்கிறது சகஜம் தானேம்மா..."

அப்படிக் கூறிய மகனை திகைத்துப் போய்ப் பார்த்த பிரபாவதி, "டேய் சித்து... உனக்கு அப்படியொரு எண்ணம் இருக்காடா...?"

"நாளை என்ன நடக்கும்னு யாருக்கும்மா தெரியும்...?" என்றான் குறும்பும், கேலியும் கலந்த குரலில்...

"அப்போ சந்தியா தான் உன் மனைவின்னு நீ முடிவு பண்ணிட்டியா...?" அதிர்ச்சியான குரலில் வினவிய தாயை கொஞ்சமும் அதிராது பார்த்தவன்,

"இப்போதைக்கு முடிவா சொல்ல முடியாது..." என்று அசால்ட்டாகத் தோளை குலுக்கினான்...

"டேய் சித்து... அப்போ உன் தாய்மாமாவுக்கு நான் என்னடா பதில் சொல்றது...?"

'இது என்ன புதுக்கதை...?' என்பது போல் தாயை பார்த்தான் அவன்...

"உங்க அத்தையை விட என் தம்பி கிட்டேயும் அதிகயளவு சொத்துகள் இருக்கு... சங்கமித்ரா சந்தியாவை விட எந்த விதத்திலும் குறைந்தவள் இல்லை... சொல்ல போனால் எல்லா விதத்திலும் மித்ரா தான் அதிகத் திறமை வாய்ந்தவள்... அவளை விட்டு விட்டு இந்தத் தத்தி சந்தியாவைக் கல்யாணம் பண்ண போறேன்னு சொல்றியே... உனக்கும் உன் அப்பனை போல் மூளை இல்லாம போச்சு..."

மகனோடு சேர்த்து கணவரையும் திட்டி தீர்த்தார் பிரபாவதி... அவருக்கு என்று வாய்த்த இரண்டு ஆண்மகன்களும் சரியில்லையே... பாவம், அவர் என்ன செய்வார்...

புலம்பும் தாயை பார்த்தவன் ஆறுதலாய் அவரின் இரு தோள் மீது கை வைத்து, "எனக்கு வர போகும் மனைவி எல்லா விதத்திலும் எனக்கு ஏற்றவளாகத் தான் இருப்பாள்... அப்படி இல்லை என்றாலும் அவளை எனக்கு ஏற்றவளாக மாற்ற வேண்டியது என் பொறுப்பு..."

"அந்தக் கஷ்டம் உனக்கு எதுக்குடா...? கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்த கதையாக இருக்கிறது... நீ சொல்வது..."

"எப்போதுமே நம் வீட்டு வெண்ணெயை விட அடுத்த வீட்டு வெண்ணெய் தான்ம்மா ருசியாக இருக்கும்..." என்று சிரியாமல் சொன்ன மகனை கொலைவெறியோடு பார்த்தார் பிரபாவதி...

"என்ன ருசியோ...? கர்மம், கர்மம்..." தலையில் அடித்துக் கொண்டவர் கண்களை மூடி மானசீகமாகச் சித்தார்த்திற்கு

ஜோடியாகச் சந்தியாவை நினைத்து பார்த்தார்... அடுத்த நொடி,

"உவ்வே..." என்று அருவருப்புடன் உமட்டியபடி கண்களைத் திறந்தார் அவர்...

"என்னம்மா...?"

"நினைவே கசக்கிறதுன்னு இதுவரை எல்லோரும் சொல்லி கேள்விப்பட்டு இருக்கேன்... ஆனா இன்னைக்குத் தான்டா நான் அதை அனுபவிக்கிறேன்... அம்மா சொல்றதை நல்ல பிள்ளையா கேளு சித்து... சந்தியா உனக்கு வேண்டாம்டா... உன் கம்பீரம் எங்கே...? பெருச்சாளி அவள் எங்கே...? தயவுசெய்து அவள் வேண்டாம்டா..." என்று மகனிடம் அவர் கெஞ்சினார்...

அவருள் கற்பனை விரிந்தது போல் அவனுள்ளும் கற்பனை விரிந்ததோ... அவனது முகத்தில் மந்தகாச புன்னகை தோன்றியது...

"என் வாழ்க்கையை நான் தீர்மானித்து வெகுநாட்கள் ஆகிவிட்டதும்மா... இனி அதைப் பத்தி பேசி எந்தப் பிரயோஜனமும் இல்லை..." என்று அவன் புன்னகையுடன் கூறினாலும் அதில் ஒருவித தீவிரம் இருந்தது...

"யானை தன் தலையில் மண்ணை அள்ளி போட்டுக்கிற மாதிரி... நீ உன் தலையில் மண்ணை அள்ளி போட்டதும் இல்லாமல், நீயே தேடி போய்ப் பாழும் கிணற்றில் விழுகிறாயே... எல்லாம் என் தலையெழுத்து..." என்று முனங்கி கொண்டே அவர் எழுந்து சென்று விட்டார்...

அன்னை கூறியதை எண்ணி பார்த்தவனுக்குச் சிரிப்பு பீறிட்டது... அடுத்த நொடி "ஹா... ஹா..." என்று வாய்விட்டுச் சிரித்தான்...

****

அன்று காலையில் பள்ளிக்கு மிதிவண்டியில் சென்று கொண்டிருந்தாள் பிரகதீஸ்வரி... உடன் கதிரேசனும் வந்து

கொண்டிருந்தான்...

"சின்னம்மா... இப்போ எல்லாம் நீங்க சூப்பரா படிக்கிற மாதிரி இருக்கு..."

கதிரேசன் கூறியதும் அவளது மனக்கண்ணில் சித்தார்த்தின் முகம் மின்னி மறைந்தது...

அன்று மூக்குத்தியை பரிசாகக் கொடுத்துவிட்டு சென்றவன் அடுத்த நாளே அவளிடம் வந்து நின்றான்... மனம் படபடக்க அவனை ஆர்வமாய்ப் பார்த்தவளை கண்டு,

"இன்னும் இரண்டு மாசத்தில் பரீட்சை தொடங்குகிறது அல்லவா... அதனால் உன் கவனம் முழுவதும் படிப்பில் தான் இருக்க வேண்டும்..." என்று கண்டிப்புடன் கூறியவனைக் கொண்டு அவளது ஆர்வமும், படபடப்பும் அப்படியே வடிந்து போனது...

"ம்... சரி..." என்று அவள் கூற...

"படிப்பு தான் உன் கூடவே வரும்... மற்றது எதுவும் உன்னுடன் வராது... என்ன புரிஞ்சதா...?"

"புரிஞ்சது..."

அன்று அவளைப் பார்த்து பேசியவன் தான் அதன் பின்னர் அவள் அவனைக் காணவில்லை... காலையில் அவள் பள்ளிக்குச் செல்லும் முன் அவன் கிளம்பி சென்று விடுகிறான்... அது போல் இரவிலும் வெகுநேரம் கழித்தே வீட்டிற்கு வருகிறான்... அவனைப் பார்க்காது இருப்பது முதலில் அவளுக்குக் கஷ்டமாக இருந்தது... பின் மெதுவே அதுவும் பழகி போனது...

இப்போது அவளது முழுக்கவனமும் படிப்பில் மட்டுமே இருந்தது...

இதற்கிடையில் சங்கமித்ரா ஊருக்கு கிளம்பிச் சென்றுவிட்டாள்... பொங்கலுக்கு மீண்டும் வருவதாக உறுதியளித்து விட்டு சென்றாள்... அவளுடன் ஸ்வேதாவும் கிளம்பிச் சென்றுவிட்டாள்... அவளுக்கும் கல்லூரி

இருந்தது... அவளும் பொங்கல் விடுமுறைக்கு வருவதாகக் கூறிவிட்டாள்...

இப்போது கதிரேசன் கேட்டதும் பிரகதீஸ்வரி மனதில் சித்தார்த்தின் நினைவுகள் பூஞ்சிதறலாய்...

"பரீட்சை நெருங்கிறது இல்லையா கதிர்... அதனால் தான்... நீ மட்டும் என்ன...? நீயும் தான் சூப்பரா படிக்கிற...?"

"ஆமாம் சின்னம்மா... படிப்பு தான் எங்களை மாதிரி ஆளுங்களுக்கு மிகப் பெரிய சொத்து... நான் படிச்சு தான் என் குடும்பத்தைக் காப்பாத்தணும்... அத்தோடு இந்த ஊரையும் சேர்த்து..." வீட்டின் தலைமகனாய் அவன் பொறுப்போடு கூறினான்...

"நீ செய்வேன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு கதிர்..."

இருவரும் பேசி கொண்டு செல்லும் போது தொழிற்சாலையில் வேலை பார்க்கும் முத்து எதிரில் வந்தான்... பிரகதீஸ்வரியை கண்டதும்,

"வணக்கம் சின்னம்மா..." என்க...

அவனைக் கண்டதும் அவள் தனது சைக்கிளை நிறுத்தி விட்டு கீழே இறங்கினாள்...

"நல்லா இருக்கீங்களா அண்ணே..."

"நீங்க இருக்கும் போது எனக்கு என்ன குறைச்சல் சின்னம்மா..." என்றவன்,

"நீங்க சொன்னது போல் அந்த ஐயாவும் ரொம்ப நல்ல மாதிரிங்க... எங்களுக்கு எல்லாம் பல நல்லது செய்றாரு... வீடு கட்ட, பிள்ளைங்க படிப்பு, கல்யாணம்ன்னு யார் போய் உதவி கேட்டாலும் மறுக்காம செய்றாரு... ரொம்ப நல்ல மனுசன்... அது தெரியாம அன்னைக்கு அவரை எதிர்த்துப் பேசிட்டேன்... அவர் கிட்ட நான் மன்னிப்புக் கேட்டதா சொல்லிருங்கம்மா..." என்றவர் விடைப்பெற்று செல்ல...

பிரகதீஸ்வரி மனதில் லட்சம் மத்தப்புக்கள் ஒருசேர ஒளிர்ந்தது... சித்தார்த்தை நினைத்து மிகவும் பெருமையாக உணர்ந்தாள்..

"நானும் கேள்விப்பட்டேன் சின்னம்மா... அவர் நிறைய உதவி பண்றதா ஊருக்குள்ள பேசிக்கிறாங்க..."

கதிரேசனும் அதையே சொன்னதும் அவளது முகம் பூவாய் மலர்ந்து போனது... சித்தார்த் இந்த ஊருக்கு வந்து ஒரு மாதம் கூட ஆகவில்லை... அதற்குள் அவன் இந்தளவுக்கு நல்ல பெயர் எடுத்திருக்கிறான் என்றால்...? உண்மையில் அவன் நல்லவன் தானோ...?

'இதில் இன்னும் உனக்குச் சந்தேகம் வேறா... அவங்க ரொம்ப நல்லவங்க தான்... ஆனால் என்ன கோபம் மட்டும் கொஞ்சம் அதிகமா வருது... ஹப்பா, என்ன அடி...'

தன்னையும், சந்தியாவையும் அவன் அடித்ததை நினைத்து பார்த்தவளுக்கு இப்போதும் அவனது கோபத்தில் மெய் சிலிர்த்தது...

ஏனோ அந்தக் கணம் அவளது மனம் அவனைக் காண வேண்டும் என்று ஏங்கியது...

பள்ளி வந்ததும் தனது மனதின் ஏக்கத்தை ஒதுக்கி வைத்து விட்டு வகுப்பறைக்குள் நுழைந்தாள்... முதல் வகுப்பு முடிந்து இரண்டாம் வகுப்பு ஆரம்பமானது... அங்கு வந்த ஆசிரியை அவளிடம்,

"ஸ்டாஃப் ரூமில் நோட் புக்ஸ் இருக்கு... எடுத்துட்டு வா..." என்று சொல்ல...

அவள் எழுந்து ஆசிரியரின் அறையை நோக்கி சென்றாள்... ஏதோ யோசனையில் தலை குனிந்து சென்று கொண்டு இருந்தவளை ஒரு குரல் தடுத்து நிறுத்தியது...

"கரஸ்பாண்டென்ட்டை பார்த்தால் விஷ் பண்ணுகிற நல்ல பழக்கம் எல்லாம் உங்க ஊரில் கிடையாதா...?"

சீண்டலாக ஒலித்த குரலில் அவள் முகம் மலர நிமிர்ந்து பார்த்தாள்... அங்கே பேண்ட் பாக்கெட்டில் இரு கைகளையும் விட்டுக் கொண்டு கம்பீரமாக நின்று கொண்டிருந்தான் சித்தார்த்...

காண கிடைக்காத புதையலை கண்டது போல் அவனை இமைக்காது பார்த்தவளின் மனநிலையைச் சந்தோசம் என்கிற வரையறைக்குள் அடக்கிவிட முடியாது...

"இன்னும் விஷ் பண்ணும் உத்தேசம் இல்லையா...?" சற்று கடுமையுடன் ஒலித்ததோ அவனது குரல்...

அதில் திடுக்கிட்டவளாய் அவனைப் பார்த்தவள் அடுத்த நொடி, "குட்மார்னிங் சார்..." என்று கூறியபடி விறைப்பாய் வணக்கம் வைத்தாள்...

அவளது செயலில் அவனது உதடுகளில் புன்னகை மலர்ந்தது... அதை அவளுக்குக் காட்டாதபடி மறைத்தவன்,

"குட்..." என்று அவளை மெச்சியபடி அவளைக் கடந்து சென்றான்...

அதில் அவளுள் ஏமாற்றம் கவிழ்ந்தது... அவனின் முதுகை திரும்பி திரும்பி பார்த்தபடி அவள் சென்றாள்... அவள் தன்னைப் பார்ப்பது தெரிந்திருந்தும் அவன் திரும்பி பாராது சென்றான்...அவனது உதடுகளில் விசமப் புன்னகை தவழ்ந்தது...

மாலை வீட்டிற்கு வரும் போது சித்தார்த் மிகுந்த எதிர்பார்ப்புடன் வந்தான்... இன்று அவன் பள்ளியில் நடந்து கொண்ட முறைக்குப் பிரகதீஸ்வரி நிச்சயம் வருத்தம் அடைந்திருப்பாள் என்று அவனுக்கு நன்கு தெரியும்... அதனால் அவளுக்குப் பிடித்த பரிசு பொருளை வாங்கிக் கொண்டு அவளுக்காகச் சீக்கிரமே வீட்டிற்கு ஓடி வந்தான்...

அவன் நினைத்தது போல் அவள், "அத்தான்..." என்று கூவலுடன் வீட்டினுள் இருந்து வெளியில் ஓடி வந்தாள்...

அவள் முகத்தில் தெரிந்த சந்தோசம், பரபரப்பு எல்லாம் கண்ட சித்தார்த்திற்கு அப்படியொரு சந்தோசமாக இருந்தது... அவளுக்காக அவன் புன்னகையுடன் காத்திருக்க, அவளோ அவனைக் கண்டு கொள்ளாது வேகமாய்க் கடந்து சென்றாள்...

சித்தார்த் அவளது செய்கையின் அர்த்தம் புரியாது குழம்பி போனவனாய் திரும்பி பார்த்த போது அங்குக் கண்ட காட்சியில் தீச்சுட்டார் போன்று திகைத்து நின்றான்...

ஏனெனில் பிரகதீஸ்வரி வாயிலில் நின்று கொண்டிருந்த ஒரு இளைஞனின் நெஞ்சில் சாய்ந்து கண்ணீர் வடித்துக் கொண்டு இருந்தாள்... அதை விட அந்த இளைஞன் அவளது ஆறுதலாக அணைத்து,

"அதான் நான் வந்துவிட்டேனே அம்மு... இன்னும் ஏன் அழுகிறாய்...?" என்று அவளது தலையை வருடி கொடுத்துச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தான்...

பூகம்பமே வந்தாலும் அசராத நெஞ்சுரம் படைத்த சித்தார்த் அந்தக் காட்சியில் பூகம்பம் வந்த பூமி போன்று பிரளயமாகி கலவரமாய்க் கலங்கி நின்றான்...!!!

"விழிவீச்சில் உயிர் உறைபவளே...
ஸ்பரிசத்தில் ஊன் உருகுபவளே...
அருகாமையில் அல்லி மலராய் மலருபவளே...
விலகலில் அன்னிச்சை மலராய் வாடுபவளே...
உன்னுள் கவிழும் ஏமாற்றம் கண்டு
என்னுள் வந்ததே மாற்றம்...
மாற்றம் என்னில் விதைத்ததோ
பெரும் தடுமாற்றம்...
தடுமாறிய நெஞ்சம் தாங்குமோ...
என்தன் பச்சைக் கிளி வேறொருவன்
தோள் தொற்றும் போது...
பொறாமையில் தகிக்கும் நெஞ்சம்
உன் பதின்வயது வேகத்தடையைத் தாண்டிட
சொல்லித் தூபம் போடுகிறதே...
கண்ணியம் காத்த என்னையும்

கட்டுப்பாட்டினை மீற சொல்கிறதே...
அதீத வேகம் இனிய விபத்தாகத் தொடருமோ...
இல்லை கோர விபத்தாக முற்று பெறுமோ...
காலத்தின் கைகளில் விட்டு விடவா...
இல்லை உனது கைகளில் விட்டு விடவா...
என்னைச் சிலையாகச் சமைவதும்,
வெற்று மண்ணாகக் கழிப்பதும்,
நீ கூறும் ஒற்றை வார்த்தையில்
இருக்கிறதடி பெண்ணே...
விடை காண காத்திருக்கிறேன்...
வா அன்பே... நல்ல பதிலோடு...
இப்படிக்கு,
இராவணனாகிய இராமன்,
உன் சித்தார்த்தன்...

நனவாகும்...!!!

சித்தார்த்தின் மனதிற்குள் பெரும் பூகம்பம் வெடித்துச் சிதறிக் கொண்டிருந்தது... இதற்கு முன் இப்படி ஒரு உணர்வை அவன் உணர்ந்தது இல்லை... கலக்கம், கலவரம், ஆத்திரம் என்று எல்லாம் கலந்த கலவையாக அவன் கொதித்துப் போய் நின்றிருந்தான்...

தனக்கு உரிமையான ஒன்றை இழப்பது போல் அவன் மனதில் அப்படியொரு வேதனை... அந்த வேதனையையும் அடுத்த நொடியில் புறந்தள்ளினான் அந்த அஞ்சா நெஞ்சன்... இயலாமை என்பது கோழையின் வேத வாக்கு... வீரனுக்கு எல்லாமே ஜெயம் தான்... அத்தகைய வெற்றியை அடைய துடித்தது அவனது நெஞ்சம்...

'ஹ... இந்தச் சித்தார்த்திற்கு இணையாவன் இந்த வையகத்தில் உண்டோ...?' என்கிற கர்வம் அவனை நெஞ்சை நிமிர்த்தி அகங்காரமாய் நிற்க செய்தது...

சித்தார்த் என்றொரு மனிதன் அங்கு நிற்பதை பிரகதீஸ்வரியும் சரி, ஹரிப்ரசாத்தும் சரி இருவரும் கண்டு கொள்ளவில்லை... அவர்கள் தங்களது பாச உலகில் தனியே சஞ்சரித்துக் கொண்டு இருந்தனர்...

"அம்மு... நீ இப்போ அழுகையை நிப்பாட்ட போகிறாயா...? இல்லை நான் இப்படியே ஊருக்கு கிளம்பி சென்று விடவா...?"

ஹரிப்ரசாத் சற்று அதட்டலுடன் கூறியதும் தான் பிரகதீஸ்வரியின் அழுகை சற்று அடங்கியது... ஆனாலும் அவளின் விசும்பல் குறையவில்லை...

"என்னடா... இங்கே இருக்க உனக்குக் கஷ்டமாயிருக்கா...? பேசாம என்னுடன் வந்து விடுகிறாயா...?"

அதில் பிரகதீஸ்வரியின் விசும்பல் சட்டென்று நின்று போனது... ஹரிப்ரசாத்திற்குப் பாரமாய்த் தான் இருக்கக் கூடாது என்கிற எண்ணம் அவளுக்கு எப்போதுமே உண்டு...

அதனால் தான் அவள் அவனிடம் எதைப் பற்றியும் மூச்சு விடுவதில்லை... அதே போல் இப்போதும் தனது துக்கத்தினைத் தனக்குள் புதைத்தவளாய் கண்ணீரை துடைத்துக் கொண்டு அவனைப் பார்த்து புன்னகைத்தாள்...

"ரொம்ப நாள் கழிச்சு உங்களைப் பார்க்கவும் என்னையும் அறியாமல் அழுதுட்டேன் அத்தான்..."

அவள் கூறியதை கேட்டு அவனுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது... அவனும் அவளை அருகில் இருந்து கவனித்துக் கொள்ள வேண்டும் என்று தான் நினைக்கிறான்... ஆனால் அவனது வேலை அதற்கு ஒத்துழைப்பது இல்லை... பணி நிமித்தமாக ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருக்கும் அவனுக்கு அவளை உடன் அழைத்துச் செல்ல விருப்பமில்லை என்பதை விட அதனால் அவளது படிப்புப் பாழாகிவிடக் கூடாது என்றே நினைத்தான்...

"அத்தை வரலையா...?" அவனுக்குப் பின் விழிகளை ஓட்டியபடி கேட்டவளிடம்,

"அம்மாவுக்கு மூட்டு வலி... அதனால் பிரயாணம் ஒத்து வராதுன்னு வரலை..."

"அங்கே தனியா இருப்பாங்களே..." என்று அத்தையை நினைத்து அவள் கவலையுடன் கேட்க...

"அங்கே பக்கத்தில் இருப்பவர்கள் பார்த்துக் கொள்வதாகச் சொன்னதால் தான் நான் மட்டும் வந்தேன்... அம்மாவும் 'நீ மட்டும் போய் அம்முவை பார்த்துட்டு வா'ன்னு என்னை அனுப்பி வச்சாங்க..." என்றவன்,

"என்ன அம்மு, அத்தானை இப்படி வாயிலில் வைத்து பேசி இப்படியே திருப்பி அனுப்பி விடுவதாய் ஏதேனும் உத்தேசம் இருக்கிறதா..." என்று கிண்டலாய் கூறி சிரித்தான்...

"ஐயோ அத்தான்... அப்படி எல்லாம் இல்லை... உள்ளே வாங்க..." என்று கூறியபடி அவள் அவனது கையைப் பிடித்துக் கொண்டு உள்ளே அழைத்து வர...

இவை அனைத்தையும் இடுங்கிய கண்களுடன் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான் சித்தார்த்... ஹரிப்ரசாத்தின் 'அம்மு' என்ற விளிப்பிலும், பிரகதீஸ்வரியின் 'அத்தான்' என்றழைப்பிலும் வந்திருப்பவன் யார் என்பதை அவன் நொடியில் ஊகித்து விட்டான்...

பிரகதீஸ்வரி 'அத்தான், அத்தான்' என்று ஹரிப்ரசாத்தை ஒவ்வொரு தடவை அழைக்கும் போதும் அவனது நெஞ்சில் பொறாமை தீ திகுதிகுவெனப் பற்றி எரிந்தது... அவனது இத்தனை நாள் ஒட்டுமொத்த கர்வத்தையும் அழிய செய்தது அந்தப் பொறாமை...

அப்போது தான் பிரகதீஸ்வரி அங்கே நின்று கொண்டிருந்த சித்தார்த்தை கவனித்தாள்... அவனைக் கண்டதும் அவளது முகம் பூவாய் மலர்ந்தது என்றால், அவனோ ஹரிப்ரசாத்தின் கரத்துடன் கோர்த்திருந்த அவளது கரத்தினை உறுத்து விழித்துக் கொண்டிருந்தான்...

ஹரிப்ரசாத் சித்தார்த்தை கண்டதும் புன்னகை முகத்துடன் அவனை நோக்கி வந்தான்...

"ஹாய் சித்தார்த்... உங்களைப் பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டு இருக்கேன்... ஆனால் நேரில் பார்த்தது இல்லை... இன்று தான் பார்க்கிறேன்..." என்று மகிழ்ச்சியுடன் கூறியவன் தனது கையைச் சித்தார்த் புறம் நீட்டினான் கை குலுக்குவதற்காக...

"அத்தான்... உங்களுக்கு இவரை முன்பே தெரியுமா...?" அறியாமையுடன் கேட்டாள் பிரகதீஸ்வரி...

"என்ன அம்மு, இப்படிக் கேட்டுட்ட...? இவர் நம் உறவினரா இருந்தாலும் நம்மால் எட்ட முடியாத உயரத்தில் இருப்பவர்... அவ்வளவு பெரிய பணக்காரர்... தொழில் உலகில் இவர் ஒரு சிங்கம் போல்... பிசினஸ் மேகசின் பலவற்றில் இவரது இன்டர்வியூ வந்திருக்கிறது..."

"அப்படியா...?" என்று வியப்புடன் ஹரிப்ரசாத்திடம் வாய்விட்டு கேட்டவள் அதே கேள்வியைச் சித்தார்த்திடம்

தனது விழிகளால் கேட்டாள்...

அந்தக் கணம் சித்தார்த்தின் கண்கள் அவளை அளவிடுவது போல் பார்த்து வைத்தது... அவளது அறியாமை கண்டு அவனது மனதில் ஒரு நிறைவு, நிம்மதி தோன்றியதை அவனே உணர்ந்தான்... ஆனாலும் அதையும் மீறி ஒருவித தன்னகங்காரம் அவனுள் எட்டிப்பார்த்தது...

"என்னைப் பற்றிய அறிமுகம் இருக்கட்டும்... நீங்க யார்ன்னு இன்னமும் சொல்லலையே...?"

ஹரிப்ரசாத்திடம் அமர்த்தலான குரலில் கேள்வி கேட்ட சித்தார்த் தனது கையை அவன் புறம் நீட்டாது பேண்ட் பாக்கெட் விட்டபடி ஸ்டைலாக நின்றான்... 'நீயெல்லாம் எனக்கு ஈடு இணையா...?' என்கிற மாதிரியான அகந்தை அவனது செயலில் அப்பட்டமாய்த் தெரிந்தது... பேச்சு வாக்கில் ஹரிப்ரசாத் தான் நீட்டிய கையை மடக்கி இருந்தான்...

"இவங்க என்னோட ஹரி அத்தான்... ஏற்கெனவே நான் உங்க கிட்ட சொல்லி இருக்கேனே..."

ஹரிப்ரசாத்தை முந்தி கொண்டு அவனைச் சித்தார்த்திற்கு அறிமுகம் செய்து வைத்தாள் பிரகதீஸ்வரி... அதைக் கண்டு சித்தார்த்தின் விழிகளில் கோபத்தின் சாயல் படர்ந்தது...

"ஓஹோ... என்னைப் பற்றி அவரிடம் பேசும் அளவுக்கு உனக்கு அவரைத் தெரியுமா...? அப்போ அவரைப் பற்றி உனக்கு நான் கூற தேவையில்லை என்று சொல்..."

ஹரிப்ரசாத் கேலியாய்ச் சொன்னதும் பிரகதீஸ்வரியின் முகத்தில் நாணம் வந்து எட்டிப்பார்த்ததில் சித்தார்த்தின் விழிகளில் படர்ந்த கோபம் பகலவனைக் கண்ட பனித்துளி போல் சொல்லாமல் கொள்ளாமல் ஓடி போனது...

"அத்தான்... வாங்க உள்ளே போகலாம்... நீங்க ட்ராவல் பண்ணி ரொம்ப டயர்டா வந்திருப்பீங்க...?"

பிரகதீஸ்வரி ஹரிப்ரசாத்தை அழைத்ததில் அவன் சித்தார்த்திடம் விடைப்பெற்றவன் பின்பு சிரித்தபடி அத்தை மகளுடன் இணைந்து நடந்தான்...

முதன்முறையாய் தன்னைக் கண்டு கொள்ளாது செல்லும் பிரகதீஸ்வரியை கண்டு சித்தார்த்தின் மனம் கோபத்தில் கொதிக்கவும் செய்தது, செல்லமாய்ச் சிணுங்கவும் செய்தது...

'நான் மட்டும் டயர்டா இல்லையா...? ஓய்வே இல்லாமல் உழைத்துக் கொண்டிருக்கும் நான் உன் கண்ணில் படவில்லையா...? உனக்காகத் தானே நான் ஓடி கொண்டிருக்கிறேன் அதுவும் உனக்குத் தெரியவில்லையா...?'

மனதிற்குள் அவளிடம் கேள்விகள் கேட்டபடி நின்றிருந்தான் சித்தார்த்... அவனையும் அறியாது அவனது கண்கள் தனது காரினை பார்த்தது... அவளுக்கு என்று கொடுப்பதற்காக அவன் தருவித்திருந்த பிரத்யேக பரிசு அவனைக் கண்டு சிரிப்பது போல் ஒரு தோற்றம்...

"என்னங்க..." திடுமென ஒலித்த பிரகதீஸ்வரியின் குரலில் அவனையும் அறியாது அவன் திரும்பி பார்த்தான்...

அவன் நினைத்தது போல் அவள் அவனைத் தான்அழைத்தாள்...

'அவனை மட்டும் ஆயிரம் அத்தான் போட்டு அழைக்கும் உன் வாய், என்னை அத்தான் என்று அழைக்காதோ...?' அவனது மனம் கோபமாய் அவளிடம் சண்டை போட்டது...

"நீங்களும் வாங்க..." அவள் அழைத்தும் ஒன்றும் பேசாது அவளைப் பார்த்தவன் அடுத்த நொடி வேகமாய் அவர்கள் இருவரையும் கடந்து வீட்டினுள் சென்றான்...

"ஐய்... ஹரி அத்தான்..."

சந்தியா ஹரிப்ரசாத்தை கண்டதும் உற்சாகக் குரல் எழுப்பினாள்... அதைத் தொடர்ந்து சரவணனும்...

"வாப்பா ஹரி... எப்படி இருக்கப்பா...?"

எல்லோரிடமும் திமிர் காட்டும் விமலாராணி கூட அவனிடம் இன்முகம் காட்டினார்... ஏனெனில் அவர் மீதான அவனது அக்கறை அப்படி...

"நான் நல்லா இருக்கேன் அத்தை... நீங்க எப்படி இருக்கீங்க...?" என்று அவரிடம் நலம் விசாரித்தவன் அவரது காலில் விழுந்து வணங்கினான்...

அடுத்து சித்தார்த்தின் பெற்றோரை பார்த்தவன், "பெரியப்பா, பெரியம்மா... நீங்களும் இங்கே தான் இருக்கீங்களா...?" என்று கேட்டபடி அவர்களது காலிலும் விழுந்து வணங்கினான் அவன்...

"அம்மா நல்லாயிருக்காங்களா...?"

அவர்கள் இருவரும் அவனின் அன்னையைப் பற்றி நலம் விசாரிக்க அதற்குப் பதில் கூறிக் கொண்டிருந்தான் ஹரிப்ரசாத்...

இதை எல்லாம் எரிச்சலுடன் பார்த்துக் கொண்டிருந்தான் சித்தார்த்... அவனது பெற்றோர்களே ஆனாலும் இதுநாள் வரை அவன் அவர்களது காலில் எல்லாம் விழுந்து வணங்கியது இல்லை... வந்தவுடனேயே ஹரிப்ரசாத் எல்லோரின் கால்களிலும் விழுவது போல் நடித்து எல்லோரையும் ஏமாற்றித் தனது கைக்குள் போட்டுக் கொள்வதாக எண்ணியவனாய் எரிச்சலுடன் அமர்ந்திருந்தான் அவன்...

"அத்தை... உங்களுக்கு அடிக்கடி தலைவலி வரும் இல்லையா...? உங்களுக்காகத் தலைவலி தைலம் வாங்கிட்டு வந்திருக்கேன்..." என்று ஹரிப்ரசாத் தனது பையில் இருந்து சிறு புட்டியை எடுத்து விமலாராணியிடம் நீட்டினான்...

"ஆமாம்ப்பா... ரொம்ப நல்லது செய்தாய்..." என்று வாயெல்லாம் பல்லாக அதை வாங்கிக் கொண்டார் விமலாராணி...

"அத்தான் எனக்கு ஒன்றும் வாங்கிட்டு வரலையா...?"

சிறுபிள்ளை போன்று ஆர்வத்துடன் கேட்ட சந்தியாவைக் கண்டு புன்னகை புரிந்தவன், "உனக்கு இல்லாததா சந்து குட்டி... உனக்கும் தான்..." என்றவன் தான் வாங்கி வந்திருந்த அஸ்ஸாம் மாநிலத்தின் பிரத்யேக இனிப்பு வகைகளை அவளிடம் நீட்டினான்...

அதில் இருந்தவற்றுள் ஒன்றை எடுத்து பிரித்து வாயில் போட்ட சந்தியா, "அத்தான் இது நம்ம ஊர் அதிரசம் போலிருக்கிறது..." என்று சப்பு கொட்டி கொண்டு சாப்பிட...

அதைக் கண்டு மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்டான் சித்தார்த்... போயும் போயும் இப்படி ஒரு தின்னிப்பண்டாரமா அவனது அத்தை மகளாக வந்து வாய்த்திருக்க வேண்டும்... அதில் கூட ஹரிப்ரசாத் கொடுத்து வைத்தவன் என்று சித்தார்த்திற்கு அவன் மீது பொறாமை எழுந்தது... பின்னே பிரகதீஸ்வரி போன்று ஒரு அழகான, குணமான பெண் ஹரிப்ரசாத்திற்கு மட்டும் அத்தை மகளாக வந்து வாய்த்திருக்கிறாளே...

"ஆம் சந்து... இதன் பெயர் ஹிலா பிதா (ghila pitha)... நீ சொல்வது போல் நம்ம ஊர் அதிரசமே தான்... என்ன ஒன்று அரிசி மட்டுமே வேறுபடும்..." என்று அவளுக்கு விளக்கி கூறிய ஹரிப்ரசாத்,

"இங்கே இத்தனை பேர் கூடியிருக்கும் போது நீ மட்டும் இப்படித் தனியே சாப்பிடுவது நன்றாகவா இருக்கிறது... சமையலறைக்குச் சென்று இதை எல்லாம் ஒரு தட்டில் வைத்து எடுத்துக் கொண்டு வந்து எல்லோருக்கும் கொடு..." என்றவன்,

"உனக்கு மட்டும் தனியே ஒரு தட்டு எடுத்து கொள்..." என்றான் புன்னகையுடன்...

"ஹரி அத்தான்... இந்த டீல் எனக்கு ரொம்பப் பிடிச்சியிருக்கு..." என்று சந்தோசமாய்ச் சொன்ன சந்தியா குதூகலமாய்ச் சமையலறை நோக்கி சென்றாள்...

சந்தியாவின் சிறுபிள்ளைத்தனத்தை அழகாய் சமாளித்த ஹரிப்ரசாத்தை கண்டு எல்லோரும் ஆச்சிரியப்பட்டனர்... சித்தார்த்திற்குமே ஹரியின் பொறுமை வியப்பாய் இருந்தது...

"சந்துவை சின்ன வயசில் இருந்து தெரியும்... நல்ல பெண்... எடுத்துச் சொன்னால் கேட்டு கொள்வாள்..." என்றான் ஹரி மற்றவர்களின் ஆச்சிரியமான பார்வைக்கு விடையாய்...

"அவளா நல்ல பெண்...? அட போங்க அத்தான்... ஏதோ சொல்றது நீங்க என்பதால் என்னால் மறுத்து பேச முடியவில்லை..." என்று அலுத்துக் கொண்டான் சரவணன்...

"அவளைக் குறை சொல்வது இருக்கட்டும்... நீ உன் எதிர்காலத்தைப் பற்றி ஏதாவது யோசித்தாயா...?"

ஹரி திடுமென இப்படிக் கேட்டதும் சரவணன் திருதிருவென விழித்தான்... அவனுக்கு என்று தனியே எதிர்காலம் என்று ஒன்று கிடையாது... இருந்தால் தானே அதைப் பற்றிச் சொல்வதற்கு... ஏதோ பெயருக்குக் கல்லூரியில் படித்துப் பட்டம் வாங்கினான்... அதன் பிறகு இப்போது உடற்பயிற்சி கூடம், அளவான, ஆரோக்கியமான உணவு என்று தனது உடலை பேணி காப்பதிலும், ஊரை சுற்றி வருவதிலும் தான் அவனது பொழுது சுகமாய்ப் போய்க் கொண்டிருக்கிறது...

"இனி தான் யோசிக்கணும் அத்தான்..." என்று சொல்லும் போதே சரவணனின் குரல் உள்ளே சென்றிருந்தது...

அதைக் கண்டு விமலாராணிக்கு முணுமுணுவென்று இருந்தது... தனது அண்ணியின் முன் தலை நிமிர்ந்து நிற்கும் அளவுக்குத் தனது மகன் இல்லையே என்று அவருக்குப் பெருத்த கவலையாக இருந்தது...

"வேலைக்குப் போகப் போகிறாயா...? இல்லை இங்குள்ள தொழிலை பார்க்க போகிறாயா...?"

ஹரி கேட்ட இரண்டு கேள்விகளுக்கும் அவனது தலை மறுப்பாய் அசைந்தது...

"அப்போ என்ன தான் செய்யப் போகிறாய்...?"

"தெரியலை அத்தான்..."

"ஆண் பிள்ளை நீயே இப்படிச் சொன்னால் எப்படி...? உன்னைப் பார்த்து தான் உன் தங்கைகள் தங்களது எதிர்காலத்தைத் தீர்மானிப்பார்கள்... உனக்கு இது எல்லாம் விருப்பம் இல்லை என்றால், உனக்குப் பிடித்தமானவற்றில் உன் விருப்பத்தைச் செலுத்து... அதில் நீ முன்னேறு..."

சித்தார்த் ஹரியை பார்த்தபடி அமைதியாக அமர்ந்திருந்தான்... அவன் கூறிய அதே விசயத்தைத் தான் ஹரியும் கூறிக் கொண்டிருந்தான்... ஆனால் கூறிய விதத்தில் தான் இரண்டிற்கும் பெருத்த வேறுபாடு இருந்தது... சித்தார்த் அதைக் கடுமையுடன் கூறினான் என்றால், ஹரி அதைப் பொறுமையுடன் கூறுகிறான்... அது தான் இங்கே பெருத்த வித்தியாசம்...

"அவனுக்கு ஜிம்முக்கு போய் எக்ஸர்சைஸ் பண்ண தெரியும்... அது ஒண்ணு மட்டும் தான் அவனுக்கு நல்லா தெரியும் அத்தான்..."

சகோதரனை கிண்டலடித்தபடி சந்தியா அங்கு வந்து சேர்ந்தாள்... உடன் பிரகதீஸ்வரியும் டீ கோப்பைகள் அடங்கிய தட்டுடன் வந்தாள்...

"பின்னே உன்னை மாதிரி சாப்பிட்டு சாப்பிட்டு சும்மா உட்கார்ந்திட்டு இருக்கச் சொல்லுறியா...?" தங்கையிடம் எகிறினான் சரவணன்...

"ஹேய் சரவணா... இதுவே உனது விருப்பமா மாத்திக்க வேண்டியது தானே..."

பிரகதீஸ்வரி கொடுத்த டீயை வாங்கியபடி ஹரி சொல்ல, சரவணன் கண்களில் ஆர்வம் மின்ன அவனைப் பார்த்தான்...

"என்ன அத்தான் சொல்றீங்க...?"

"நீ ஏன் மிஸ்டர். தமிழ்நாடு, மிஸ்டர். இந்தியா இது மாதிரியான அழகு போட்டிகளில் கலந்துக்கக் கூடாது...? இல்லைன்னா இருக்கவே இருக்கு மாடலிங்... நம்ம சித்தார்த்தோட கம்பெனி மாடலா கூட நீ போகலாம்... என்ன சித்தார்த் நம்ம சரவணனை மாடலா ஏத்துக்க மாட்டீங்களா...?"

ஹரியின் கேள்வியில் சித்தார்த் சரவணனை கூர்ந்து கவனித்தான்... கச்சிதமான, முறுக்கேறிய உடற்கட்டுடன் சரவணன் ஆணழகனாகத் தான் இருந்தான்... அதனால் சித்தார்த் சம்மதமாய்த் தலையசைக்க... அதைக் கண்டு எல்லோரின் முகமும் மலர்ந்தது...

"தேங்க்ஸ் அத்தான்... இத்தனை நாள் என்ன செய்றதுன்னு தெரியாம குழம்பிட்டு இருந்தேன்... வந்தவுடன் என் குழப்பத்தை நொடியில் தீர்த்து வச்சிட்டீங்க... நீங்க தெய்வம் அத்தான்..." என்று மகிழ்வோடு சரவணன் ஹரியை அணைத்துக் கொண்டான்...

மகனுக்கு நல்வழி காட்டிய ஹரி விமலராணி கண்களுக்கும் தெய்வமாகத் தான் தெரிந்தான்...

அதைக் கண்டும் சித்தார்த்தின் மனதில் பொறாமை எழுந்தது... மொத்தத்தில் ஹரியின் குணம் சுட்டுப் போட்டாலும் சித்தார்த்திற்கு வராது...

வந்தவுடன் எல்லோர் மனதினையும் அழகாய் கொள்ளை கொண்ட ஹரிப்ரசாத்தின் புன்னகை முகம் அவனுள் ஆவேசத்தினை விதைத்தது இருந்தது...

"டீ எடுத்துக்கோங்க..." என்ற பிரகதீஸ்வரி குரலில் அவளை ஏறிட்டு பார்த்தவன் உணர்வில்லாத குரலில்,

"எனக்கு டீ பிடிக்காது..."

"ஓ... மறந்துட்டேன்..." என்றவளை பார்த்தவனின் பார்வை, 'அதை மட்டுமா நீ மறந்தாய்... என்னையும் சேர்த்து தான் நீ

மறந்துவிட்டாய்...' என்பது போல் அவளைக் குற்றம் சாட்டியது...

அவனது பார்வைக்கான அர்த்தம் புரியாதவளாய் அவள், "சாரி... கொஞ்சம் இருங்க... காபி எடுத்துட்டு வர்றேன்..." என்றபடி உள்ளே செல்ல...

அவனோ அவளை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தான்... அவனது மனதில் சிறு போராட்டம் எழ ஆரம்பித்தது...

இரவு உணவின் போதும் சித்தார்த்தின் மனதில் இந்தப் போராட்டம் இருந்து கொண்டே இருந்தது... அதற்குத் தூபம் போட்டது ஹரிப்ரசாத் மற்றும் பிரகதீஸ்வரி இருவரின் நடவடிக்கை...

"அத்தான்... உங்களுக்குப் பிடிச்ச இடியாப்பம், சொதி தான் செய்திருக்கிறேன்... சாப்பிட்டு பார்த்துட்டு சொல்லுங்க..." என்று கூறியபடி ஹரிப்ரசாத்தின் தட்டில் இடியாப்பம் எடுத்து வைத்து சொதி ஊற்றினாள் பிரகதீஸ்வரி...

"நான் சாப்பிடுவது இருக்கட்டும்... முதலில் நீயும் எங்களுடன் சேர்ந்து சாப்பிடு..." என்ற ஹரி உள்ளே திரும்பி,

"சோலை... ரதிக்கு ஒரு நாற்காலியை கொண்டு வந்து போடு..."

ஹரியின் 'ரதி' என்ற விளிப்பில் திடுக்கிட்டு போய் நிமிர்ந்தான் சித்தார்த்... மனதிற்குள் அரும்பிய மொட்டு ஒன்று வாடும் உணர்வு அவனுள்...

"முதல்ல நீங்க சாப்பிட்டு பார்த்து சொல்லுங்க அத்தான்..."

பிரகதீஸ்வரி சொல்லவும் ஒரு வாய் சாப்பிட்டு பார்த்தவன், "ரொம்ப நல்லாயிருக்கு ரதி... அத்தையின் கைப்பக்குவம் உனக்கு அப்படியே வந்திருக்கு..." என்று அவளை மனதார பாராட்டினான்...

ஏனோ இந்தப் பாராட்டைச் சித்தார்த்தால் மறுக்கத் தோன்றவில்லை... ஏனெனில் பிரகதீஸ்வரியின் கைப்பக்குவத்தை இங்கிருந்த இத்தனை நாளில் அவனும் நன்றாகத் தெரிந்து வைத்திருந்தான்...

அதற்குள் சோலையம்மாள் நாற்காலி கொண்டு வந்து அங்குப் போட்டார்... அவர் தனது வேலை முடிந்தும் அங்கிருந்து போகாமல் ஹரியை பார்த்தபடி தயங்கி நின்றார்...

"ஏதாவது சொல்லணுமா சோலை...?" அவரது தயக்கத்தினை உணர்ந்தவனாய் அவன் கேட்க...

அதைக் கண்ட விமலாராணிக்கு சட்டென்று புரையேறியது...

"சோலை... அத்தைக்குத் தண்ணி எடுத்து கொடு..." ஹரிப்ரசாத் கூறியதும் சோலையம்மாள் தண்ணீர் ஜக்குடன் விமலாராணியை நோக்கி விரைந்தார்...

தம்பளரில் நீரை ஊற்றிய சோலையம்மாளை முறைத்து பார்த்த விமலாராணி அடிக்குரலில், "என்ன பயம் விட்டு போச்சா...?" என்று கோபத்தில் உறும...

அதற்கு மேல் சோலையம்மாள் அங்கு நிற்கவில்லை... உள்ளே ஓடி ஒளிந்து கொண்டார்...

இது ஏதும் அறியாத ஹரி பிரகதீஸ்வரியின் கைப்பிடித்து, "நீ உட்கார்..." என்று நாற்காலியில் அமர வைத்தவன்,

"நீயும் சாப்பிட்டு பார்த்து சொல்லு..." என்று தனது தட்டில் இருந்த இடியாப்பத்தை எடுத்து அவளுக்கு ஊட்டிவிட்டான்...

ஹரியின் செயலில் சித்தார்த்தின் மனதில் சிறிதாய் இருந்த போராட்டம் பெரிதாய் வெடித்துச் சிதறியது... அதற்கு மேல் அங்கு அமர்ந்திருக்கப் பிடிக்காதவனாய் நாற்காலியில் இருந்து எழுந்துவிட்டான் சித்தார்த்...

"சித்து... சாப்பிடலையாப்பா..." பிரபாவதியின் குரலில் தான் அவனுக்கு நிகழ்காலம் உறைத்தது...

"முக்கியமான ஃகால் பண்ண வேண்டியிருக்கிறதும்மா..." என்று அலைப்பேசியைக் காட்டி உரைத்தவன் யாரையும் பார்க்க பிடிக்காது வெளியேறி விட்டான்...

வெகுநேரம் கழித்தும் அவன் வரவில்லை... யாரும் அதைப் பொருட்படுத்தியதாகவும் தெரியவில்லை... ஆனால் பிரகதீஸ்வரியின் காதல் கொண்ட மனதோ அவனுக்காக ஏங்கி தவித்தது... மெல்ல அங்கிருந்து நழுவியவள் சித்தார்த்தை தேடி முன்பக்கம் வந்தாள்...

வரந்தாவில் நின்று கொண்டு அலைப்பேசியில் பேசி கொண்டிருந்த சித்தார்த்தை கண்டதும் அவளது நடை தயங்கியது... அந்நேரம் தனது பேச்சை முடித்துக் கொண்டு திரும்பிய சித்தார்த் அவளைப் பார்த்தாலும் ஒன்றும் பேசாது அங்கிருந்து நகர முற்பட்டான்...

"சாப்பிட வாங்க..."

அவளது குரலில் இருந்த அக்கறை அவனது மனதினை தொட்ட போதும் ஏதோ ஒன்று அவனை அவளிடத்தில் மேலும் அடம்பிடிக்க வைத்தது... அவளிடம் இருந்து விலகி போக வைத்தது... அடுத்த நொடி அவளைச் சிறிதும் கண்டு கொள்ளாது வெளியேறியவன் காரிலேறி சென்றுவிட்டான்...

பிரகதீஸ்வரி கண்களில் நீர் துளிர்க்க அவன் சென்ற திசையைப் பார்த்து கொண்டிருந்தாள்... அவள் என்ன தவறு செய்தாள் என்று அவளுக்கே தெரியவில்லை... இப்போது எல்லாம் அவனைக் கண்ணில் காண்பதும் அரிதாகி போனது... அவனது புன்னகையும் அரிதாகி போனது... ஏன் என்கிற கேள்வியே அவளுள் பெரிதாக வியாபித்திருந்தது...

இரவு எல்லோரும் உறங்க சென்றதும் வரவேற்பறையில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்த பிரகதீஸ்வரியை தேடி ஹரிப்ரசாத் வந்தான்... அவனது கையில் பெரிய பை ஒன்று இருந்தது...

"இது என்ன அத்தான்...?"

"எல்லாம் உனக்காகத் தான்... அங்குக் கிடைத்த அரிய வகை மூலிகை செடிகளை உனக்காகக் கொண்டு வந்தேன்..." என்று அவன் அவளிடம் கொடுத்தான்... ஏதோ புதையல் கிடைத்தது போல் அதை ஆவலோடு வாங்கிக் கொண்டாள் அவள்...

"தேங்க்ஸ் அத்தான்...."

"தேங்க்ஸ் சொல்லும் அளவுக்குப் பெரிய பெண்ணாகி விட்டாயோ..." என்று அவளது தலையில் செல்லமாய்த் தட்டியவன் அவள் முன்னிருந்த சோபாவில் அமர்ந்தான்...

"நீ சந்தோசமா இருக்கியா அம்மு...?"

ஹரிப்ரசாத்தின் குரலில் திடுக்கிட்டு அவனைப் பார்த்தவள் முயன்று தன்னைச் சமாளித்துக் கொண்டு, "எனக்கு என்ன அத்தான் நான் சந்தோசமாக இருக்கிறேன்..."

"அத்தை, மாமா போனதுக்கு அப்புறம் நான் உன் கூட வந்து இருக்கணும்ன்னு தான் பார்க்கிறேன்... ஆனால் முடியவில்லை... நார்த் இண்டியா பக்கம் தான் ட்ரான்ஸ்பர் அதிகம் வருது... கூடிய சீக்கிரம் நான் நம்ம ஊர் பக்கம் மாற்றி வந்துவிடுவேன்... அதுக்கு அப்புறம் நானும், அம்மாவும் உன் கூடவே இருப்போம்..."

"ம்... சரி அத்தான்... நீங்க என்னைப் பத்தி கவலைப்படத் தேவையில்லை... நான் பெரிய பெண்ணாக்கும்... என்னை நானே பார்த்து கொள்வேன்..." என்று பெரிய மனுசி தோரணையுடன் கூறியவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"படிப்பு எல்லாம் எப்படிப் போகுது...?"

"ம்... நல்லா போகுது..." என்று வேகமாய்த் தலையாட்டியவளை கண்டு அவனது சிரிப்பு இன்னமும் அதிகமாகியது...

"நல்லா படிக்கணும்... என்ன சரியா...?"

"ம்... ம்..." என்று அதற்கும் தலையாட்டியவளை கண்டு அவனுக்கு நிம்மதியாய், நிறைவாய் இருந்தது...

"சரி நீ படி... நான் தூங்க போறேன்... செம டயர்டா இருக்கு..." என்று சோம்பல் முறித்தபடி அவன் கூற...

"நீங்க போய்ப் படுங்க அத்தான்... குட் நைட்..."

அவனும் பதிலுக்கு இரவு வணக்கம் கூறியவன் தனது அறைக்கு எழுந்து சென்றான்...

சிறிது நேரம் படிப்பில் ஆழ்ந்திருந்தவள் திடீரெனக் கடிகாரத்தைப் பார்த்தாள்... மணியைப் பார்த்தவளுக்குப் பகீரென்றது... ஏனெனில் மணி பன்னிரண்டரை ஆகியிருந்தது... சித்தார்த் இன்னும் வீடு வந்து சேரவில்லை... உள்ளுக்குள் தவித்தபடி அவள் அவனுக்காகக் காத்திருந்தாள்...

மேலும் அரை மணி நேரம் அவளைத் தவிக்க விட்டவன் சரியாக ஒரு மணிக்கு வீடு வந்து சேர்ந்தான்... வரவேற்பறையில் அமர்ந்திருந்தவளை சிறிதும் கண்டு கொள்ளாது அவன் தனது அறைக்குச் சென்றான்...

அவளுக்குத் தான் மனம் கேட்கவில்லை... பாலை சூடு பண்ணி எடுத்துக் கொண்டு அவனது அறை முன் வந்து நின்றவள் மெதுவே கதவினை தட்டினாள்... திடுமென யாராவது எழுந்து வந்து கேள்வி கேட்டால் என்ன பதில் கூறிச் சமாளிப்பது என்று அவளுக்கு அச்சமாக இருந்தது... அதே சமயம் அவன் வெறும் வயிற்றோடு இருப்பது கண்டு அவளுக்குத் தவிப்பாகவும் இருந்தது...

தைரியமாக அவனைத் தேடி வந்துவிட்டாலும் அவள் மனதிற்குள் பயந்து கொண்டு தான் இருந்தாள்... சித்தார்த் வார்த்தைகளால் தன்னைக் காயப்படுத்தி விடுவானோ... இல்லை கதவை திறக்காமல் தன்னைப் புறக்கணிப்பானோ என்று... அவனது புறக்கணிப்பை அவளால் சிறிதும் தாங்கி கொள்ள முடியாது...

என்னே அதிசயம்... அவள் தட்டிய மறுநொடி சித்தார்த் அறைக் கதவை திறந்திருந்தான்...

"பால்..." என்று அவள் அவன் முன் பால் தம்பளரை நீட்டினாள்...

"எதுக்கு..." கையைக் கட்டி கொண்டு அமர்த்தலாக அவளைப் பார்த்து கேட்டான் அவன்...

"நீங்க சாப்பிடலையேன்னு..." என்று தயங்கியபடி இழுத்தவளை கண்டு அவனது கண்கள் மின்னியது...

"நான் சாப்பிடலைன்னா உனக்கு என்ன வந்தது...?"

ஏனோ அந்நேரம் அவளது பதில் அவனுக்கு மிகவும் தேவையாக இருந்தது... அதாவது காயம் அடைந்த மனதிற்கு மருந்து போல்...

"அது வந்து... நைட் சாப்பிடாம இருக்கக் கூடாது... தூக்கம் வராது..."

"எனக்குச் சாப்பிடாம இருந்து பழக்கம் தான்... எனக்கு நல்லா தூக்கமும் வரும்... என் தூக்கம் பற்றிய கவலை உனக்குத் தேவையில்லை... இப்போது நீ போகலாம்..."

அவன் கூறியது கேட்டு அவளது முகம் வாடி போனது... ஆனாலும் அவள் அங்கிருந்து செல்லவில்லை... மனதில் துடிப்பையும், முகத்தில் தவிப்பையும் தேக்கியபடி தன்னைப் பார்த்து கொண்டிருந்தவளை கண்டு அவனது மனம் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சாந்தமானது... சற்று நேரத்திற்கு முன்பு மனதில் வாடிய ஏதோ ஒன்று மீண்டும் மொட்டு விட்டு மலர்ந்தது...

அதில் அவனது முகம் மென்மையானது... அவளைக் கனிவோடு பார்த்தவன்,

"நீ சாப்பிட்டியா...?"

அவன் கேட்டதும் திடுக்கிட்டவளாய் அவள் அவனைப் பார்த்தாள்... ஆனாலும் அவனது அக்கறை அவளது

நெஞ்சினை தொட்டது என்னவோ உண்மை...

"இல்லை..."

ஒருவர் பட்டினி கிடப்பது கண்டு இரக்கம் தான் வரும்... ஆனால் இங்குச் சித்தார்த்திற்கோ மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது... அவளது இந்தப் பட்டினியும் கூட அவனுக்காகத் தானே என்று அவனது மனம் உற்சாகக் கும்மாளமிட்டது...

"ஏன்...? உன் ஹரி அத்தான் தான் உனக்கு ஊட்டி விட்டாரே..."

என்ன முயன்றும் அவனது குரலில் பொறாமை எட்டிப்பார்ப்பதை அவனால் தவிர்க்க முடியவில்லை...

"நீங்க சாப்பிடாம போயிட்டீங்களே..." வருத்தமும், கவலையுமாய்ச் சொன்னவளை கண்டு அவனது மனம் சிறகில்லாமல் பறந்தது...

"நான் சாப்பிடலைன்னா உன்னை யார் பட்டினி கிடக்கச் சொன்னது...?"

அவனது கேள்விக்கு அவளிடம் பதிலில்லை... ஆனால் அவளது விழி வழியே கசிந்த நேசம் அதற்கான பதிலை சொல்லாமல் சொல்லியது அவனிடத்தில்... அதில் அவன் சற்று அமைதியடைந்தான்...

"இப்போ பசிக்கிற மாதிரியிருக்கே..."

வயிற்றைத் தடவியபடி சொன்னவனைக் கண்டு அவள் பதறி போனவளாய், "இப்போ என்ன பண்றது...? வேணும்ன்னா தோசை சுட்டு தரவா...?" என்றவளை இமைக்காது பார்த்தவன்,

"சரி..." என்றான் சம்மதமாய்...

"வாங்க..." என்றபடி அவள் முன்னே நடக்க... அவன் அவளைப் பின்தொடர்ந்தான்...

சமையலறை சென்றவள் அடுப்பை பற்ற வைத்து தோசைக்கல்லை போட்டு அது சூடானதும் மாவை கரண்டியில் எடுத்துத் தோசை ஊற்றினாள்... அதைப் பார்த்தபடி அங்கிருந்த மேடை மீது ஏறியமர்ந்தான் சித்தார்த்...

"தோசை ரொம்ப அழகா ஊத்தியிருக்க..."

அவன் கூறியதும் அவள் களுக்கென்று சிரித்தாள்... அவன் புரியாது அவளைப் பார்த்தான்...

"தோசை சுடுவதற்கு யுனிவர்சிட்டியில் போயா ட்ரெயினிங் எடுத்துட்டு வரணும்...?"

அவளது கேலி கேட்டு அவனது உதடுகளில் புன்னகை மலர்ந்தது...

"தோசையை வட்டமாக ஊற்றுவதற்குக் கட்டாயம் ட்ரெயினிங் எடுத்துட்டு தான் வரணும்... நீ என் அக்கா, தங்கை இருவரும் சுட்ட தோசையைப் பார்த்தது இல்லையே... பார்த்திருந்தால் இப்படி ஒரு பதில் சொல்லியிருக்க மாட்ட..."

"ஏன்...?"

"அவங்க சுடுற தோசை எல்லாம் சிலசமயம் சதுரமா இருக்கும்... சிலசமயம் என்ன வடிவம்ன்னே நம்மளால கண்டுபிடிக்க முடியாது... அப்படி ஒரு வடிவத்தில் கோணலாய் இருக்கும்..."

அவன் சொன்னது கேட்டு அவளுக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது... புன்னகையுடன் தோசையை எடுத்து ஒரு தட்டில் வைத்து கூடவே இட்லி பொடியும் வைத்து அவனிடம் நீட்டினாள்...

அதை வாங்கியவனிடத்தில், "உங்களுக்குப் பிடிக்கும்ன்னு சப்பாத்தியும், பன்னீர் குருமாவும் பண்ணியிருந்தேன்... நீங்க தான் சாப்பிடாம போயிட்டீங்க..." மனத்தாங்கலுடன்

சொன்னவளை கண்டு அவனது கண்கள் மின்னியது... மனம் நிறைந்தது...

"சரி இப்போ கொடு சாப்பிடறேன்..."

"இப்போ இல்லையே..." இரு கைகளையும் விரித்து அவள் கூறிய பாவனையில் அவனது மனம் சொக்கித்தான் போனது அவளிடத்தில்...

"பரவாயில்லை விடு... இன்னொரு நாள் நீ செஞ்சு கொடு... நான் கொஞ்சமும் மிச்சம் வைக்காம சாப்பிடறேன்..."

அவன் கூறியதை கேட்டு அவளது தவித்த காதல் மனது இப்போது சற்று அடங்கியது...

"பேபி..."

அடுத்தத் தோசையைத் திருப்பிப் போட்டு கொண்டிருந்தவள் அவன் அழைத்ததும் என்னவென்று திரும்பி பார்த்தாள்...

"இங்கே வா..." என்று அருகில் அழைத்தவனைக் கண்டு அவளது முகத்தில் அழையா விருந்தாளியாய் நாணம் வந்து குடி கொண்டது...

"வான்னு சொல்றேன்ல பேபி..."

மகுடிக்குக் கட்டுப்படும் பாம்பு போன்று அவனது குரலில் மயங்கியவள் அவன் அருகே சென்றாள்...

"இந்தா சாப்பிடு..." என்று அவன் தோசையைப் பிட்டு அவளது வாய் அருகே கொண்டு சென்றான்...

அவனது செயலில் திகைப்பாய் விழித்தவளை கண்டு கனிவு பொங்க பார்த்தவன், "ம்... சாப்பிடு..." என்று ஊக்குவிக்க...

அதில் நாணமுற்றாலும் தனது இதழ் மலர தயங்கவில்லை அவள்... அந்தக் கணம் இமாலய சாதனை நிகழ்த்தியது போல் மகிழ்ந்து போனது சித்தார்த்தின் மனம்...

ஒரு வாய் வாங்கியவள் அங்கிருந்து அகல முயல, அவனது கரம் அவளைத் தடுத்து நிறுத்தியது...

"எங்கே போகிற...?"

"தோசை..."

அடுப்பில் வெந்து கொண்டிருந்த தோசையை அவள் சுட்டிக்காட்டியதும் அவன் சிரித்தபடி அவளது கரத்தினை விடுவித்தான்...

அதன் பிறகு கடந்த மணித்துளிகளில் இருவரும் பேசி கொண்டே தங்களது உணவினை முடித்தனர்... யாருமில்லா தனிமையில் இப்படி ஒரு சூழ்நிலையில் தனித்து இருப்பது இருவருக்குமே மிகவும் பிடித்திருந்தது... இருவருக்கும் இடையில் ஒருவித மயக்க நிலை தொடர்ந்தது... அவனது அகமும் முகமும் மலர்ந்திருந்தது அவளது இணக்கமான நிலை கண்டு...

உண்டு முடிந்ததும் அவன் கையைக் கழுவ செல்ல, அவள் அடுப்பை சுத்தம் செய்து கொண்டிருந்தாள்...

"வேலை முடிந்ததா...?"

"ம்... முடிந்தது..." என்று திரும்பியவள் அவன் ஈரக்கையுடன் நிற்பதை கண்டு,

"இருங்க துண்டு எடுத்துட்டு வர்றேன்..." என்று நகர முற்பட,

கை நீட்டி அவளைத் தடுத்தவன் அவளது தாவணி முந்தானையை எடுத்து அதில் தனது கையைத் துடைக்க, அவனது செய்கையில் அவள் விதிர்த்து போய் அவனைப் பார்த்தாள்...

அவளது முழிக்கும் பாவனையில் அவனுக்குச் சிரிப்பு வந்தது... 'என்ன' என்பது போல் இரு புருவம் உயர்த்தி அவன் கேட்டதும் அவள் வெட்கச் சிவப்புடன் முகம் குனிந்தாள்...

அவளது வெட்கம் அவனுள் பலவித கதைகள் பேச... அவள் அருகில் நெருங்கி நின்றவன்,

"இப்போது சொல்லு பேபி... உனக்கு என்னைப் பிடிக்குமா...? இல்லை அவனைப் பிடிக்குமா...? உன் அத்தான் நானா...? அவனா...?"

அன்று போல் இன்று அவனது குரலில் கோபம் இல்லை... மாறாக அவளது மனதினை அறிந்து கொண்டதன் விளைவால் விளைந்த கர்வமே அதிகயளவு இருந்தது...

அவனது கேள்வியில் அவளது மயக்கம் அப்படியே வடிந்தது... அவனுக்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாது விழித்தாள் அவள்...

ஒன்று உறவால் வந்த சொந்தம்... இன்னொன்று உயிராய் மாறி போனதால் வந்த சொந்தம்... அவளைப் பொருத்தவரையில் இரண்டுமே அவளுக்கு வேண்டும்... ஒன்று மட்டுமே வேண்டும் என்று அவளால் உறுதியாய் சொல்ல முடியவில்லை...

அப்படி அறுதியிட்டு சொல்ல முடியாமல் அவள் தவிப்பதற்கு முக்கியக் காரணமாக அவளது பதின்வயது இருந்தது... ஏனெனில் 'நீ மட்டுமே எனது உறவு, நீ மட்டுமே எனது உயிர்' என்று சரணாகதி அடைவது தான் காதல் என்பது அந்த முட்டாள் பெண்ணிற்குத் தெரியவில்லை... அதற்கான வயதும், பக்குவமும் அவளுக்கு இல்லை...

அந்தக் கணம் அவள் பாசமும் வேண்டும்... நேசமும் வேண்டும் என்று பேராசை கொண்டாள்...

அவளது திகைப்பான முகம் சித்தார்த்தினுள் ஆத்திரத்தை விதைத்தது... அத்தனை நேர அவளது இணக்க நிலையை அவன் நொடியில் மறந்து போனான்... அவன் தனது உரிமையை அவளிடத்தில் நிலைநாட்டிட வேண்டும் என்று ஆவேசம் கொண்டான்... அதை விட ஹரியை காட்டிலும் அவன் தனது காலடி தடத்தை அவளுள் அழுத்தமாய்ப் பதிய நினைத்தான்...

அதுவும் இன்னும் மூன்று மாதங்களில் இந்தச் சம்பவம் நடந்தாக வேண்டும்... இந்த மூன்று மாதங்கள் கழித்துப் பிரகதீஸ்வரி அவனவள் ஆகியிருக்க வேண்டும்... அவனுக்குச் சொந்தமாக, அவன் மட்டுமே அவளது உயிராக மாறியிருக்க வேண்டும்...

தொழிலில் வெற்றியடைய எந்தக் குறுக்கு வழியையாவது பின்பற்றி வெற்றியடைய முயலும் சித்தார்த்தின் தொழில் மூளை, அவளை அடைவதிலும் தனது குறுக்கு வழியைப் பின்பற்ற நினைத்தது...

அதன் விளைவு அவளின் பதின்வயது அவனது கவனத்தில் பதியவில்லை... அவனது வெற்றி மட்டுமே அவனது ஒரே இலக்காய் இருந்தது...

அடுத்தக் கணம் சிறிதும் யோசனை செய்யாது சித்தார்த்தின் இதழ்கள் பிரகதீஸ்வரியின் இதழ்கள் மீது அழுத்தமாய்ப் பதிந்திருந்தது... இதழ் முத்தத்தின் மூலம் அவளது மனதில் அழுத்தமாய்ப் பதிய நினைத்தான் அவன்... இதழ் வழியே அவளது உயிரை உறிஞ்சுவதன் மூலம் அவன் தனது உயிரை அவளுள் நிரப்ப முயன்று அவளுள் ஓருயிராய் கலக்க எண்ணினான்...

மொத்ததில் அவன் அவளாய், அவள் அவனாய் மாறிவிடத் துடித்தான்...

ஏற்கெனவே மனதில் நிலைத்து விட்டவனின் செயலில் முதலில் திகைத்து உடல் விறைப்புற்றவள், பின் மெல்ல மெல்ல ஊனும், உயிரும் உருக பரவசமடைந்தவளாய் அவனது செயலுக்கு இசைந்தபடி தன்வசம் இழந்து அவள் நின்றிருந்தாள்...

மெல்லினத்தை வெற்றிக் கொள்ள நினைத்த வல்லினம் மெல்ல மெல்ல மெல்லினத்திடம் தோற்றுப் போய்க் கொண்டிருந்தது...

வன்மையாளன் தோற்பதும், மென்மையானவள் வெற்றிக் கொள்வதும் காதலில் மட்டுமே சாத்தியம்...!!!

"இடையினத்தில் இடறி விழுந்த வல்லினம்...
வல்லினத்தில் மதி மயங்கிய மெல்லினம்...
வல்லினம் மெல்லினம் இரண்டும்
இணைந்து இசைக்கும் காதல் பண்...
அபஸ்வரமாகுமோ...? லயம் தவறுமோ...?
மாறாய் ஸ்ருதிலயத்துடன் இசைந்து கலி
போற்றும் காதல் காவியமாகுமோ...???"

நனவாகும்...!!!

"இதழோடு இதழ் சேர்த்து
உயிரோடு உயிர் கோர்த்து வாழவா..."

சித்தார்த்தின் இதழ் ஆலிங்கனத்தில் பிரகதீஸ்வரி மனம் உருகி கொண்டிருந்தாள் என்றால், சித்தார்த்தோ பெண்ணவளின் மென்மையில் கொஞ்சம் கொஞ்சமாய்த் தன்னை இழந்து கொண்டிருந்தான்...

தொழிலில் மிகப் பெரிய உயரத்தை எட்டிப் பிடித்த சித்தார்த்தின் மனதில் இதுவரை எந்தப் பெண்ணும் இடம் பிடித்ததில்லை... தொழிலில் கவனம் செலுத்தியவனின் கடைக்கண் பார்வை கூடக் கன்னியர் மீது படிந்தது இல்லை... அதற்கு முக்கியக் காரணம் அவனுள் இருக்கும் தான் என்கிற அகங்காரம் தான்... தனக்கு இணையான பெண் உலகில் இல்லை என்பது போன்ற ஒரு அகந்தை அவனுள்...

அவனது கர்வமே அவனை ஸ்ரீராமனாக ஒழுக்கமாக வாழ செய்தது என்றால் அது கொஞ்சமும் மிகையில்லை... ஒருவனின் கர்வம் அவனை ஒழுக்கம் பிறழாமல் வாழ செய்கிறது என்றால் அந்தக் கர்வம் கூட அழகு தான்... சித்தார்த்தின் இந்தக் கர்வம் கூட அவனுக்குத் தனிச் சோபையைக் கொடுத்தது...

அப்படிப்பட்ட கர்வம் கொண்ட சித்தார்த் பதினேழு வயது பட்டிக்காட்டுப் பெண்ணிடம் மெய் மறந்து இழைந்து கொண்டிருந்தான்... அவன் தொட்ட, உணர்ந்த முதல் பெண் அவள்... அவளைக் கண்டால் மட்டுமே அவனது இளமை உணர்வுகள் சுனாமியாய் ஆர்ப்பரித்து அவனைச் சுகமாய் மூழ்கடித்து, ஆணாய் கர்வம் கொள்ளச் செய்தது...

ஒரு ஆணாய் பெண்ணிடத்தில் மயக்கம் கொள்வதைக் கூட அவன் கர்வமாகத் தான் நினைத்தான்...

முதன்முறையாக ஒரு பெண்ணிற்குக் கொடுக்கும் இதழ் முத்தம் அவனைச் சித்தம் கலங்க செய்தது... மொத்தத்தில்

அந்தச் சிறு பெண்ணிடம் அவன் பைத்தியமாகிப் போனான்...

அவர்களுக்கு இடையே இருந்த வயது வித்தியாசம் அவனுக்கு மறந்து போனது... அவள் சிறுபெண் என்பதும் அவனுக்கு மறந்து போனது... அவனுக்கு நினைவில் இருந்தது எல்லாம் அவன் ஒரு ஆண், அவள் ஒரு பெண் என்பது மட்டுமே...

அவனால் அவ்வளவு எளிதில் அவளை விட்டு விட முடியவில்லை... விலகவும் முடியவில்லை... அவன் மனதில் அலைக்கடலாய் விடாது எழுந்த தாபமானது இன்னமும் அவளுள் மூழ்கி முத்தெடுக்கத் தூண்டியது... மெய்மறந்து இருந்தவனின் கைகள் திடுமெனப் பாரமானது போல் ஒரு உணர்வு... அதில் அவளை விட்டு விலகியவன் அவளைப் பார்த்தான்...

ஊனும், உயிரும் பாகாய் உருகியதில் அவள் அவனது கைகளில் துணியாய் தொய்ந்து வழிந்தாள்... கண்களை மூடி ஒருவித பரவசநிலையில் ஆழ்ந்திருந்தவளின் இதழ்கள் மட்டும் அவளது இதயம் போல் படபடவெனத் துடித்துக் கொண்டிருந்தது... அவளது உடலில் இருந்த ஒட்டுமொத்த இரத்தமும் முகத்தில் வந்து பாய்ந்தது போல் அவளது முகம் அத்தனை சிவப்பாய் மாறியிருந்தது... அதாவது அவள் அணிந்திருந்த சிவப்புக்கல் மூக்குத்தியின் நிறத்தை ஒத்தார் போன்று...

அவளிடத்தில் அவனைப் பெரிதும் கவர்ந்த மூக்குத்தி இப்போதும் அவனை மிகவும் கவர்ந்து ஈர்த்தது... மெல்ல குனிந்து அதன் மீது மென்மையாய் ஒரு முத்தத்தினை அவன் சத்தமின்றிப் பதிக்க, அதில் பாவையவள் மெல்ல விழி திறந்தாள்...

அருகாமையில் தெரிந்த மன்னவன் முகம் மேலும் அவளுக்கு மயக்கத்தை அளித்தது... விழிகளில் காதல் வழிய பார்த்தவளின் விழி வீச்சில் சிக்குண்டு தவித்த சித்தார்த் தாங்க மாட்டாது அவளது விழிகள் மீதும் இதழ்

பதித்தான்... அதில் அவளது விழிகள் தாமாக மூடி கொண்டது...

அவளது உணர்வுகளை உணர்ந்தவனின் முகத்தில் வெற்றி புன்னகை தோன்றியது... அடுத்தக் கணம் அவளை இறுக்கமாய் அணைத்துக் கொண்டான்... அவளும் அவனோடு ஒன்றி கொண்டாள்... படபடக்கும் தனது மனதினை அவனின் அணைப்பில் அவள் ஆறுதல் படுத்த நினைத்தாள்...

"பேபி..."

"ம்..." அவனது அழைப்பை உணர்ந்தாலும் அவளால் சரளமாகப் பேச முடியவில்லை...

"என்னை உனக்குப் பிடிக்குமா...?"

அவளின் மனம் அறிந்தவனாய் இப்போது அவன் தன்னை ஹரியுடன் ஒப்பிடாது தனித்துக் கேட்டான்... அதில் அவனை ஏறிட்டு பார்த்தவள்,

"பிடிக்கும்..." என்று வெட்கத்துடன் தலையாட்ட...

"எவ்வளவு பிடிக்கும்...?" ஒற்றைப் புருவத்தை உயர்த்திக் குறும்பாய் கேட்டவனின் குறும்பே சொல்லாமல் சொல்லியது 'உன் மனதினை நான் அறிவேன்...' என்று...

"ரொம்ப..." என்று முகம் சிவக்க நீட்டி இழுத்து சொன்னவளின் பாவனையில் தெரிந்தது அவளின் பிடித்ததின் ஆழம்...

அதில் அவனது மனம் பெரிதும் ஆறுதல் அடைந்தது விந்தையிலும் விந்தை...

அவனின் அணைப்பில் இருந்த அந்தக் கணம் கூட அவனிடத்தில் 'உங்களுக்கு என்னைப் பிடிக்குமா...?' என்று கேள்விக் கேட்கவில்லை அந்தப் பேதை பெண்... அவனது ஆழமான இதழொற்றலிலும், அவனது இறுகிய அணைப்பிலும் பெருத்த ஆறுதல் அடைந்தது அவளது காதல் மனது... அதை விட அவள் அவனை மனதார

காதலிக்கிறாள்... அது மட்டும் அவளுக்குப் போதுமானதாய் இருந்தது... எம்பெருமான் மீது காதல் கொண்ட ஆண்டாளின் மனநிலையில் அவள் இருந்தாள்...

பெண்ணவளிடத்தில் மன்னவன் போன்று எந்தவித எதிர்பார்ப்பும் இல்லையோ என்னவோ... இல்லை எதையும் அலசி ஆராய்ந்து பார்க்கும் வயது இல்லையோ... மொத்தத்தில் அவனது அருகாமையில் அவள் தன்னை மறந்து நின்றிருந்தாள்...

"ஆனா நீங்க ரொம்பக் கோபப்படுறீங்க... அது தான் கொஞ்சம் பயமாயிருக்கு..."

அவனது கோபத்தினால் விளைந்த அச்சம் அவளது கண்களில் அப்பட்டமாய்த் தெரிந்தது...

"என் சொல் பேச்சு கேட்டு நீ நடந்தால் நான் எதுக்குக் கோபப்படப் போகிறேன்..."

"உங்களை எதிர்த்து நானும் நடந்து கொள்ளவில்லையே..."

அவனது கையணைவில் இருந்து கொண்டு அவனையே வார்த்தைகளால் மடக்கும் அவளிடம் அவனது மனம் மேலும் மேலும் வீழ்ந்து கொண்டிருந்தது... அந்தக் கணம் சித்தார்த்தை சித்தார்த்தாக மட்டுமே நோக்கும் அவளை அவனுக்கு நிரம்பப் பிடித்துப் போனது...

"நேற்று மாலை உனக்காக நான் சீக்கிரம் வீடு வந்தால் நீ என்னைக் கொஞ்சமும் கண்டு கொள்ளவில்லை..."

அப்போது அவன் கொண்ட மனத்தாங்கல் இப்போது வார்த்தைகளில் வெளிப்பட்டது... அவன் ஹரியை பற்றிப் பேசுவதைச் சாமர்த்தியமாகத் தவிர்த்து விட்டான்...

அவன் சொன்னதும் தான் அவளுக்குமே ஞாபகம் வந்தது... சித்தார்த் வந்த நேரமும் ஹரிப்ரசாத் வந்த நேரமும் ஒன்று என்று... சித்தார்த்தின் கார் ஒலி கேட்டு அவனைக் காணத்தான் அவள் ஆவலாக வெளியில் ஓடி வந்தது... ஆனால் அங்கு எதிர்பாராத விதமாக ஹரியை கண்டதும்

அவள் சித்தார்த்தை மறந்தவளாய் ஹரியை நோக்கி சென்றுவிட்டாள்...

"சாரி..." அவள் செய்த தவறு அவளுக்கே புரிந்தது போலும்...

"மன்னிப்பு கேட்டா மட்டும் எல்லாம் சரியா போச்சா..." என்று மனச்சிணுக்கத்துடன் கூறியவனின் முகத்திலும் அந்தச் சிணுக்கம் அப்படியே இருந்தது...

"நான் உங்களைப் பார்க்கத்தான் ஓடி வந்தேன்..."

அவள் கூறியதை கேட்டு அவன் நம்பாத பாவனையுடன் அவளைப் பார்த்தான்...

"சத்தியமா... உங்க கார் சத்தம் கேட்டு தான் நான் வெளியில் வந்தது..."

அவளது வார்த்தையில் இருந்த சத்தியத்தை அவளது விழிகளில் கண்டவனின் மனம் இப்போது அமைதியடைந்தது... அதுவரை இருந்த அவனது மனச்சுணக்கம் சடுதியில் மறைந்து போனது...

"ம்ஹூம்... ஏனாம்...?"

"நீங்க இப்போ கொஞ்ச நாளா என் மேல் கோபமா இருந்தீங்க... அதுக்கு அப்புறம் நேத்து ஸ்கூலில் பார்த்தப்ப கூட நீங்க முறைச்சுக்கிட்டு இருந்தீங்களா... எனக்கு மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருந்துச்சு..."

அவள் கூறியது கேட்டு அவன் உல்லாசமாய் விசிலடித்தான்...

"அச்சோ... விசிலடிக்காதீங்க... யாராவது சத்தம் கேட்டு வர போறாங்க..." என்று அவள் பயத்துடன் கூற...

"சரி விசிலடிக்கலை... ஆனால் இப்படி இருக்கலாம் இல்லையா...?" என்று கூறியபடி அவளை அணைத்திருந்த இடையில் இன்னமும் அழுத்தம் கொடுத்து அவளைத் தன்னருகில் நெருக்கமாய் இழுத்தான் அந்தக் கள்வன்...

அப்போது தான் அவளுக்குச் சற்று முன் நடந்த சம்பவங்கள் மூளையில் உறைத்தது... பாவையவளை நாணம் ஆட்கொள்ள மெல்ல அவனிடம் இருந்து அவள் விலக நினைக்க, அவனோ உடும்பு பிடியாய் அவளைப் பிடித்திருந்தான்...

அதில் திகைத்து அவனை நிமிர்ந்து பார்த்தவள், "ப்ளீஸ்..." என்று கெஞ்சியதில் 'போனால் போகிறது' என்று அவளை விடுவித்தான் அவன்...

அவனிடம் இருந்து விலகியவள் சமையலறை மேடை மீது சாய்ந்து நின்று கொண்டு அவன் முகம் காண நாணியவளாய் தலைகுனிந்து நின்றாள்... அவளை ஒட்டியபடி வந்து நின்றவன்,

"நேத்து நான் ஏன் உன் ஸ்கூலுக்கு வந்தேன் தெரியுமா...?" என்று நிறுத்தியவனை அவள் ஆர்வமாய் ஏறிட்டு பார்க்க,

"ஒரு சிட்டு என்னைத் தேடுறதா பட்சி வந்து சொல்லிச்சு..." என்று அவன் கண் சிமிட்டி சிரித்த அழகில் அவளது இதயம் தாளம் தப்பி ஒலித்தது...

"நேத்து நீ என்னைத் தேடினது உண்மை தானே..."

அவன் கேட்டதும் வெட்கம் கொண்டு தலைகுனிந்தவள் ஆம் என்பது போல் தலையாட்டினாள்...

"அதனால் தான் வந்தேன்..."

"என்னைப் பார்க்க வந்துட்டு நீங்க என் கூடப் பேசவே இல்லை... அது கூடப் பரவாயில்லை... சின்னச் சிரிப்புக்கு கூடப் பஞ்சமா போச்சு..." அவளது மனவருத்தம் அப்பட்டமாய் அவளது வார்த்தைகளில் தெரிந்தது...

"அது ஏன்னு உனக்குத் தெரியணுமா...?" என்று கேட்டவனை அவள் ஏறிட்டு பார்க்க...

"பாவம் படிக்கிற சின்னப் பிள்ளையைத் தொந்திரவு பண்ண வேண்டாமேன்னு நினைத்தேன்... அதனால் தான் ஒதுங்கி போனேன்..." என்றவன்,

"நான் ஒதுங்கி போக நினைத்தாலும் நீ என்னைக் காந்தம் போல் கவர்ந்திழுக்கிறாய்... அதனால் தான் நேத்து உன்னைப் பார்க்க ஓடி வந்தேன்... அதுவும் உனக்குப் பிடிச்ச பரிசோடு..."

அவளுக்காக அவன் தனது வேலைகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு வந்திருக்கிறான்... அதைப் புரிந்து கொள்ளாமல் தான் மடத்தனமாய் நடந்து கொண்டதை நினைத்து அவளுக்கு வருத்தமாக இருந்தது...

"சாரி..."

"உன்னோட சாரி எனக்கு வேண்டாம்... இப்போது என்னோடு வா... அது என்ன பரிசுன்னு உனக்குக் காட்டுகிறேன்..."

சித்தார்த் அவளை வெளிவாயிலுக்கு அழைத்துச் சென்றான்... அவளும் ஆர்வமாய் அவனுடன் இணைந்து நடந்தாள்... அவன் தனது கார் டிக்கியின் கதவை திறந்ததும் அவளது கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தது...

"எத்தனை செடிகள்...?" கன்னங்களில் இரு கைகளை வைத்தபடி விழிகளை அகல திறந்து வியப்புடன் நின்றிருந்தவளின் தோற்றத்தில் அவன் மனம் மயங்கி நின்றான்...

டிக்கி முழுவதும் நிரப்பப்பட்டு இருந்த எண்ணிலடங்கா செடிகளைக் கண்டு அவளுக்கு மலைப்பாக இருந்தது...

"ஆம்... எல்லாமே மூலிகை செடிகள்... எனக்குத் தெரிந்தவரின் நண்பர் ஒருவர் மூலிகை தோட்டம் வைத்திருக்கிறார்... அவரிடம் இருந்து தருவித்தது தான் இது எல்லாம்... உனக்குப் பிடித்திருக்கிறதா...?"

அவளுக்குப் பின்னால் நின்று கொண்டு அவளது காதுக்கருகில் குனிந்து மென்மையான குரலில் வினவியனை கண்டு அவளது மனம் மயங்கி போனது...

அவனைத் திரும்பி பார்த்து, "ரொம்ப, ரொம்பப் பிடித்திருக்கிறது..." என்று மிகவும் மகிழ்வாய் கூறியவளை கண்டு அவனது மனமும் மகிழ்ந்தது...

அன்று வைர மூக்குத்தி கொடுத்த போது கூட அவளது முகத்தில் நெகிழ்வினை தான் அவன் கண்டான்... ஆனால் இன்றோ அவளின் முகத்தில் எல்லையில்லா சந்தோசத்தைக் கண்டான்... மதிப்பில்லாத பொருளின் மதிப்பினை அவளது மகிழ்வில் அவன் கண்டான்...

"இது எல்லாம் என்ன வகைச் செடி என்று உனக்குத் தெரியுமா...?"

பிரகதீஸ்வரிக்கு மூலிகை செடிகள் பற்றி ஓரளவிற்குத் தெரியும் தான்... ஆனால் சிறு செடியாய் சின்ன, சின்ன இலைகளுடன் இருக்கும் அவைகளை அவளால் இனம் காண முடியவில்லை...

"தெரியலையே..."

சற்று முன் சமையலறையில் அவளது பாவனையில் மனம் சொக்கியது போல் இப்போதும் இரு கைகளை விரித்த அவளது பாவனையிலும் அவனது மனம் சொக்கித்தான் போனது...

"நானே உனக்கு விளக்கி சொல்கிறேன்..." என்றவன், "இங்கே வா..." என்று அவளை அழைத்து ஒவ்வொரு செடியின் பெயரையும் தனித்தனியே குறிப்பிட்டு அவற்றின் மருத்துவக் குணத்தையும் அழகாக விளக்கி கூறினான்...

அவன் கூறியதை உன்னிப்பாய் கவனித்துக் கேட்டவள் பிறகு அவனிடம், "இத்தனையும் நீங்க எப்படி ஞாபகம் வச்சியிருந்தீங்க...?"

"மனதுக்கு ஒன்று பிடித்துவிட்டால் ஞாபகம் வைத்திருப்பதில் எந்தக் கஷ்டமும் இல்லை..." என்று அமர்த்தலாகக் கூறியவனை அந்தக் கணம் அவளுக்கு நிரம்பப் பிடித்துப் போனது...

"உனக்குப் பிடித்தது எல்லாம் எனக்கும் பிடிக்கும்..."

அதாவது அவனும் அவளும் ஒன்று என்று அவன் கூறினான்... அதில் அவளது முகம் மலர்ந்து போனது...

"உங்களுக்கும் என்னைப் போல் செடிகளைப் பிடித்துப் போய் விட்டதா...?"

அதற்கு அவன் பதில் கூறாது, "அது போல் எனக்குப் பிடித்தது எல்லாம் உனக்கும் பிடிக்குமா...?"

இந்தக் கேள்வியை அவன் கேட்கும் போது அவனது கண்களில் பலத்த எதிர்பார்ப்பு எழுந்தது... ஏனெனில் அவள் நேசிப்பதை அழித்துத் தானே அவன் தனது நேசத்தினை வளர்க்க போகிறான்...

"இது என்ன அபத்தமான கேள்வி...? உங்களுக்குப் பிடித்தது எல்லாம் எனக்கும் பிடிக்கும்..."

அவனின் மனம் அறியாது வெகுளியாய் கூறியவளை கண்டு அவன் வெற்றிக் களிப்போடு புன்னகைத்தான்... அவனது அழகிய புன்னகையில் அவள் மெய் மறந்து நின்றிருந்தாள்... அந்தக் கணம் அவனின் அருகாமையில் அவள் தனது ஊரை மறந்தாள், ஊர் மக்களை மறந்தாள்... இவ்வளவு ஏன் அவள் தன்னையே மறந்து போனாள்...

தெருவில் சென்று கொண்டிருந்த மிதிவண்டியின் மணி சத்தத்தில் இருவரும் நிகழ்காலத்திற்கு வந்தனர்... அவன் தனது கைக்கடிகாரத்தில் மணி பார்த்தான்... அதிகாலை நான்கு மணி ஆகியிருந்தது...

"ரொம்ப நேரமாகிவிட்டது இல்லையா...? இன்று உனக்கு ஸ்கூல் இருக்கிறது தானே...?" அவன் ஞாபகம் வந்தவனாய் கவலையாய் கேட்டான்...

"இல்லை... இன்று போகி பண்டிகை... இன்று முதல் பொங்கல் விடுமுறை ஆரம்பம்..."

பிரகதீஸ்வரி கூறியதும் தான் அவனுக்குமே அது ஞாபகம் வந்தது... இன்று சங்கமித்ராவும், ஸ்வேதாவும் இங்கு

வருவது...

"நல்லவேளை ஞாபகப்படுத்தினாய்... இன்று மித்ராவும், ஸ்வேதாவும் வர்றாங்க... அவங்களை அழைக்க வேறு போக வேண்டும்..."

"மித்ராக்கா வர்றாங்களா...?" சந்தோசத்துடன் ஆர்வமாய்க் கேட்டவளை கண்ணிமைக்காது பார்த்தான் அவன்...

அவனது அன்னை சங்கமித்ராவை தனக்கு மணம் முடிக்க நினைப்பதை இவள் அறிந்தால் மனம் தாங்குவாளா என்று... நிச்சயம் தாங்க மாட்டாள் என்றே தோன்றியது அவனுக்கு...

"என்ன...?" அவனது பார்வையின் அர்த்தம் புரியாது கேட்டவளை கண்டு அவன் புன்னகையைப் பதிலாகத் தந்தான்...

"சரி நீ உன் ரூமுக்கு போ..." என்று அவளைக் கிளப்பிவிட்டான்...

"நீங்க...?"

"நான் பிறகு வருகிறேன்..."

அவன் சொன்னதும் அவள் வீட்டினுள் சென்றாள்... இத்தனை நேரம் இல்லாத பயம் இப்போது அவளுள் முளைவிட்டது... சுற்றிலும் பார்வையைச் சுழற்றியபடி பூனை போல் பதுங்கி பதுங்கி மெல்ல நடந்து தனது அறையை அடைந்தவள் அதன் பிறகே நிம்மதியானாள்... காதல் வந்தால் கள்ளத்தனமும் சேர்ந்து வந்துவிடும் போலும்...

அறையின் தனிமையில் அவளுள் அவனது ஞாபகம்... அதிலும் அவன் கொடுத்த இதழ் முத்தம் அவளுள் நாணத்தை விதைத்தது... அவள் வெட்கம் கொண்டவளாய் முகத்தை மூடி கொண்டாள்... மனம் மகிழ்ச்சியில் பொங்கியது...

சித்தார்த்தின் சிறு சிறு செய்கையிலும் காதல் இருப்பதை அவள் உணர்ந்தே இருந்தாள்... மனம் பரவசத்தில் திளைத்திருக்க அவள் ஜன்னல் பக்கம் வந்து நின்றாள்... அங்கே அவள் கண்ட காட்சியில் மெய் உறைந்து போனாள்...

கம்பீரமாக, ஆண்மை செருக்குடன் வலம் வரும் 'தி க்ரேட்' சித்தார்த் தன்னவளுக்காகக் காரின் டிக்கியில் இருந்து செடிகளை எடுத்து வெளியில் வைத்துக் கொண்டிருந்தான்... அதைக் கண்டு பாவையவளுக்கு மனம் தாங்கவில்லை... உடனே வெளியில் ஓடி வந்தாள்...

மூச்சு வாங்க தன் முன் வந்து நின்றவளை கண்டு சித்தார்த், "கொஞ்ச நேரம் தூங்கி ரெஸ்ட் எடுத்தால் என்ன...? இங்கே வந்து நின்னு என்ன பண்ணிக்கிட்டு இருக்க...?" என்று செல்லமாய்க் கடிய...

"நீங்க என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க...?" என்றவளின் விழிகள் கலங்கி சிவந்து போனது... வார்த்தைகள் தேம்பலாய் ஒலித்தது...

அதில் அவளை உற்று நோக்கியவன், "பார்த்தால் தெரியலையா...?"

"தெரியுது... தெரிஞ்சதால் தான் கேட்கிறேன்... நீங்க எதுக்கு இதை எல்லாம் செய்றீங்க...?" என்றவள் அவன் கைகளில் இருந்த செடியை வாங்க முன்வந்தாள்...

அதைத் தடுத்தவன், "ஏன் செய்தால் தான் என்ன...? ஊருக்கே ராஜாவானாலும் பொண்டாட்டிக்குக் கூஜா தூக்கி தானாக வேண்டும்மம்மா..." என்று கிண்டலாய் உரைத்தவனின் நகைச்சுவையில் அவளது முகம் அந்தி வானம் போல் சிவந்து விட்டது... மனம் கலக்கத்தைக் கைவிட்டது...

அவன் அழகாய் தனது மனதினை அவளுக்கு உணர்த்திவிட்டான்... அதை உணர்ந்தவளும் சந்தோச வானில் சிறகடித்துப் பறந்தாள்...

"உங்க கை எல்லாம் அழுக்காயிருச்சே..." என்று கவலையுடன் கேட்டவளை கண்டு,

"கழுவினால் அழுக்கு போய் விடப் போகிறது... இதற்கு எல்லாமா கவலைப்படுவது..." என்று கூறியவன் அவளை அனுப்பி வைத்தான்...

அவளது அன்பு கண்டு அவனது மனம் மகிழ்ச்சியில் திளைத்தது...

அடுத்தச் சில மணி நேரங்களில் சித்தார்த் அலுவலகம் கிளம்பினான்... அவன் காரிலேறுவதைப் பார்த்தபடி அங்கு வந்த ஹரி தோட்டத்தில் செடி நட்டுக் கொண்டிருந்த பிரகதியிடம்,

"சித்தார்த் இந்தக் காலை வேளையில் எங்கே போகிறார்...?"

"நம்ம நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்வதற்கு அத்தான்..."

"ஓ... நிர்வாகத்தில் எதுவும் குளறுபடியா...?"

"தெரியலை அத்தான்... அம்மா தான் அவரை வரவழைச்சிருக்காங்க..."

அதன் பிறகு ஹரி சித்தார்த்தை பற்றி எதுவும் கேட்கவில்லை... பிரகதீஸ்வரியிடம் திரும்பியவன்,

"இது என்ன நிறையச் செடிகள் இருக்கிறது...? நான் கொண்டு வந்தது இவ்வளவு கிடையாதே..."

"இது அவங்க கொடுத்தது அத்தான்..."

"அவங்கன்னா...?"

"சித்தார்த்..." குனிந்து செடியை பதியன் போட்டபடி கூறிய பாவையவளின் வெட்கத்தினை அந்த மாமன் மகன் அறியாது போனது விதி செய்த சதி என்பதைத் தவிர வேறு என்ன கூறுவது...

"அடப்பாவமே... அவர் எவ்வளவு பெரிய மனிதர்... அவரையும் இப்படிச் செடி, கொடி பொறுக்க வைத்து விட்டாயே அம்மு... இது நியாயமா...? இது தர்மமா...? இது அடுக்குமா...? சொல் என் அத்தை மகளே..." என்று அவன் நீட்டி முழக்கி ராகம் இழுத்தான்...

"அத்தான்..." என்று சிணுங்கினாள் அவள்...

"எல்லோரையும் உன் வசம் இழுத்துவிடுவாயே... அப்படியொரு அன்பான குணம் உனக்கு இருக்கிறது அம்மு..." என்று அத்தை மகளைச் சிலாகித்தபடி அவனும் அவளுக்கு உதவி செய்ய ஆரம்பித்தான்...

ஹரி கூறிய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவளது காதில் ஒலித்தது...

****

மதியம் வீட்டிற்கு வந்த சித்தார்த் சரவணனை அழைத்து, "மித்ரா, ஸ்வேதா இருவரும் இன்று இங்கு வருகிறார்கள்... நீ ஏர்போர்ட் போய் அழைச்சிட்டு வந்திரு..." என்க...

ஸ்வேதாவை காணும் ஆர்வத்தில் சரவணனும் கனவில் மிதந்தபடி சரியென்று தலையசைத்தான்... அவனிடம் விமானம் வந்து சேரும் நேரத்தையும், அவன் வீட்டிலிருந்து புறப்படும் நேரத்தையும் சொல்லி அவனை அனுப்பி வைத்த சித்தார்த் முக்கியமான வேலை ஒன்றிற்காக அவசரமாக வெளியில் கிளம்பினான்...

அப்போது சித்தார்த் எதிரில் வந்து நின்றாள் பிரகதீஸ்வரி... அவளைக் கண்டதும் அவன் தனது வேலையை மறந்தவனாய் உல்லாசம் பொங்க அவளைப் பார்த்தான்...

விழிகளால் என்னவென்று கேள்வி கேட்டு புன்னகைத்த தன்னவனைக் கண்டு நாணம் கொண்டவள், "தேங்க்ஸ்..." என்க...

"எதற்கு...? காலையில் நடந்த நிகழ்விற்கா...?" குறும்பாய் கேட்டவனின் கண்கள் அவளின் இதழ்களை அழுத்தமாய்ப்

பார்த்து வைத்ததில் அவள் லஜ்ஜை அடைந்தாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"அதற்கு இல்லை... செடி வாங்கி வந்ததற்காக... ஹரி அத்தான் சொன்னார்... நீங்க ரொம்பப் பெரிய ஆள்... நீங்க எனக்காகச் செடிகள் வாங்கி வந்தது பெரிய விசயம் என்று..."

அவளது வார்த்தையில் அவளருகே வந்தவன், "இது பெரிய விசயமல்ல ரதி பேபி... இன்னமும் நிறைய இருக்கிறது..." என்றவனைப் புரியாது அவள் பார்த்தாள்...

"நான் கொடுத்து, நீ பெற வேண்டிய விசயங்கள் இன்னும் நிறைய இருக்கிறது என்று சொன்னேன்..."

"ஓ..." என்றவளை விசித்திரமாய்ப் பார்த்தவன்,

"நாளை என்ன தினம் என்று உனக்குத் தெரியுமா...?"

அதில் அவளது முகம் ஒரு மாதிரியாய் மாறியது... பின் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"நாளை பொங்கல்..."

"பொங்கல் மட்டுமல்ல... வேறு ஒரு விசேசமான தினமும் கூட..."

"அப்படியா...? எனக்குத் தெரியாதே..."

"எல்லாவற்றையும் நாளை நீ தெரிந்து கொள்வாய்..." என்று புதிராய் கூறியவன் அங்கிருந்து சென்றுவிட அவள் யோசனையுடன் நின்றிருந்தாள்...

விமானநிலையத்தில் சரவணன் பரபரப்பாய் தன்னவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தான்... ஸ்வேதா மீதான இந்த உணர்வு ஈர்ப்பா, காதலா என்று அவனுக்குத் தெரியவில்லை... ஆனால் அவளைக் காண வேண்டும் என்கிற பரபரப்பும், ஆர்வமும் அவனிடத்தில் அளவுக்கு அதிகமாய் இருந்தது...

அவனை அதிக நேரம் காக்க வைக்காமல் அவனது தேவதை பெண் வெள்ளை சுடிதாரில் அழகாய் தரிசனம் கொடுத்தாள்... அவள் அருகில் வந்த சங்கமித்ரா அவனின் கண்களுக்குத் தெரியவில்லை...

"சரவணா... எப்படியிருக்க...?"

சங்கமித்ரா கேட்ட கேள்விக்குக் கூட அவன் ஸ்வேதாவை பார்த்தபடி பதில் கூறினான்... ஸ்வேதாவோ அவனை ஒரு பொருட்டாய் கூட மதிக்கவில்லை... அதில் அவனது முகம் வாடிப் போனது...

ஒன்றும் பேசாது அவர்கள் கொண்டு வந்திருந்த பயணப் பொதிகளைக் காரில் எடுத்து வைத்தவன் தானும் காரிலேறினான்... அப்போது தான் அவன் கவனித்தான் ஸ்வேதா மட்டும் தனித்துக் காரில் அமர்ந்திருப்பதை... சங்கமித்ரா வெளியில் நின்றபடி அலைப்பேசியில் பேசி கொண்டிருந்தாள்...

அதனால் சரவணன் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "ஸ்வேதா... நல்லாயிருக்கியா...?"

அவன் என்னமோ அன்போடு, அக்கறையோடு தான் கேட்டான்... ஆனால் அவளோ அவனைச் சிறிதும் கண்டு கொள்ளாது ஹெட்ஃபோனை எடுத்துக் காதில் மாட்டி கொண்டு கண் மூடி இருக்கையில் சாய்ந்து கொண்டாள்...

அவளது உதாசீனத்தில் சரவணனின் தன்மானம் சீண்டப்பட்டது... அவனது கை கோபத்துடன் ஸ்டீயரிங் வீலை அழுத்தமாய்ப் பற்றியது... சங்கமித்ரா காரிலேறியதும் அவன் வேகமாய்க் காரை கிளப்பினான்... அதில் அவனது கோபம் அப்பட்டமாய்த் தெரிந்தது... அதற்கு எல்லாம் அஞ்சாதவளாய் ஸ்வேதா மூடிய தனது விழிகளைத் திறக்கவே இல்லை...

வீடு வந்ததும் காரில் இருந்து இறங்கிய சங்கமித்ராவை ஓடி வந்து அணைத்து கொண்டாள் பிரகதீஸ்வரி...

"அக்கா... எப்படி இருக்கீங்க...?"

"நான் நல்லாயிருக்கேன்... நீ எப்படியிருக்க...?"

பரஸ்பர நலம் விசாரித்தபடி அவர்கள் நடந்து வந்த போது ஹரிப்ரசாத் வீட்டினுள் இருந்து வெளியில் வந்தான்...

"அக்கா... அவர் தான் என்னோட ஹரி அத்தான்... நான் சொன்னது போல் இருக்கிறார் தானே..."

சங்கமித்ரா காதில் ரகசியம் போல் வினவினாள் பிரகதீஸ்வரி... அவள் கூறியதும் சங்கமித்ரா ஆர்வம் பொங்க ஹரியை பார்த்தாள்...

முகமறியா பெண்ணின் ஆர்வப் பார்வையில் மனம் குழம்பியவனாய் அவளை அறியாப் பார்வை பார்த்து வைத்தான் ஹரிப்ரசாத்...

பிரகதீஸ்வரி முகம் கொள்ளா புன்னகையுடன் ஹரியை பார்த்து கொண்டிருப்பதை வழக்கம் போல் எரிச்சலுடன் பார்த்தான் சித்தார்த்...

அதே போல் தன்னைப் புறக்கணிக்கும் ஸ்வேதாவை உறுத்து விழித்தபடி கோபமாய் நின்றிருந்தான் சரவணன்...

ஆண்கள் மூவரின் பரமபத விளையாட்டில் பகடைக்காயாய் உருளப் போவது கன்னியரின் கன்னி மனது என்பதினை அவர்கள் அறிவார்களா...!!!

"காதல் என்பது அழகு,
காதல் என்பது வானவில்,
காதல் என்பது கவிதை,
காதல் என்பது வசந்தம்,
காதல் என்பது சந்தோசம்,
காதல் என்பது இனிய கனவு,
காதல் அழகாக மாறப் பெண்ணவள்
அழகாக இருக்க வேண்டும்,
காதல் வானவில்லாய் மாறப் பெண்ணவள்
வர்ணஜாலம் படைக்க வேண்டும்,
காதல் கவிதையாய் மாறப் பெண்ணவள்
இதழ் எழுதுகோலாக மாற வேண்டும்,

காதல் வசந்தமாக மாறப் பெண்ணவள்
தென்றலாய் குளிர்விக்க வேண்டும்,
காதல் சந்தோசமாக மாறப் பெண்ணவள்
தனது சந்தோசத்தினைத் துறக்க வேண்டும்,
காதல் இனிய கனவாக மாறப் பெண்ணவள்
தனது கனவினை நசுக்க வேண்டும்,
இறுதியில் காதல் வெற்றி பெற ஆணின்
கையால் பெண்ணவள் தாலி வாங்கி
கட்டி கொள்ள வேண்டுமாம்...
பெண்ணவள் மனம் காதலுக்கு
தேவையில்லை போலும்...
உன்னை இழந்து, உன் உரிமை இழந்து,
உன் தனித்தன்மையைத் தொலைக்கும் காதல்
உனக்குத் தேவை தானா பெண்ணே...!!!
காதல் என்பது ஆணாதிக்க உலகம்...
ஆணாதிக்கக் காதல் உலகில் தனியே
மாட்டி தவிக்காதே பெண்ணே...
வரும் முன் காப்பது போல்
பெண்களே காதலை தவிர்ப்பீர்...
தலை நிமிர்ந்து நின்றிடுவீர்...!!!"

நனவாகும்...!!!

"உங்க அத்தானை விட எங்க அத்தான் எப்படி இருக்கிறார்...?"

சங்கமித்ரா காதில் ரகசியமாய்க் கிசுகிசுத்தாள் பிரகதீஸ்வரி... அதில் சங்கமித்ராவின் விழிகள் ஹரிப்ரசாத்தை உற்றுக் கவனித்துப் பார்த்தது... ஆறடி உயரத்தில், கம்பீரமான ஆண்மகனாய் நின்றிருந்த ஹரிப்ரசாத், சித்தார்த்தை விட எந்த விதத்திலும் குறைந்தவனாக இல்லை... இவ்வளவு ஏன் அவனிடம் இல்லாத ஒரு வசீகரம் இவனிடத்தில் இருந்தது...

என்ன அது...? என்று யோசித்துக் கொண்டே பார்த்தவளுக்கு ஹரிப்ரசாத்தின் புன்னகை முகம் விடையாகக் கிடைத்தது... ஆம், சித்தார்த் முகம் எப்போதும் கடுகடுவென்று கடுவன் பூனை போல் இருக்கும்... ஆனால் ஹரியின் முகத்தில் சாந்தமும், புன்னகையும் கூடப்பிறந்த இரட்டை பிறவிகள் போன்று இரண்டுமே ஒன்று சேர்ந்து காணப்பட்டது... அதுவும் ஆணிற்கு இப்படி அமைவது வெகு அபூர்வம்...

"அத்தான்... இவங்க தான் மித்ராக்கா..." என்று பிரகதீஸ்வரி சங்கமித்ராவை ஹரிக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள்...

"மித்ரா...?" என்று கேட்டுக் கொண்டே யோசனையுடன் அவன் சங்கமித்ராவை பார்த்து வைத்தான்...

"என்னிடம் உன் அத்தானை பற்றி அவ்வளவு சொன்னவள் என்னைப் பற்றி உன் அத்தானிடம் ஒன்றுமே சொல்லவில்லையா...?" என்று ஏமாற்றமாகப் பிரகதீஸ்வரி காதில் முணுமுணுத்தாள் சங்கமித்ரா...

"மறந்துட்டேன்... சாரிக்கா..."

பிரகதீஸ்வரி குற்றவுணர்வில் தலை கவிழ்ந்தாள்... ஏனெனில் இப்போது கொஞ்ச நாட்களாக அவள் அவளாக இல்லையே... அந்தளவுக்கு அவளது மனதினை முழுதாய்

ஆக்கிரமித்து இருந்தான் சித்தார்த்... சித்தார்த்தின் நினைவு வந்ததும் அவளது தலை நிமிர்ந்து விழிகள் தன்னிச்சையாய் அவனைத் தேடியது... அப்போது அவனும் தன்னைப் பார்த்து கொண்டிருப்பதைக் கண்டு அவளது அகமும், முகமும் சூரியனை கண்டு மலரும் தாமரை போன்று மலர்ந்தது...

இவ்வளவு நேரம் அவளை முறைத்துக் கொண்டு மனதிற்குள் அவளைத் தாளித்துக் கொண்டிருந்த சித்தார்த், அவளின் மலர்ந்த முகத்தினைக் கண்டதும் அத்தனை நேரம் அலைப்பாய்ந்த அவனது மனது அப்படியே சாந்தமடைந்தது...

பிரகதீஸ்வரியை நம்பினால் சரிவராது என்றெண்ணிய சங்கமித்ரா தானே நேரடியாகக் களத்தில் இறங்கினாள்...

"ஹாய்... ஐயம் சங்கமித்ரா..." என்று தனது கையை ஹரியின் முன் நீட்டினாள்...

ஆனால் ஹரி அவளது கையைப் பற்றிக் குலுக்காமல் தனது இரு கைகளையும் குவித்துப் புன்சிரிப்புடன், "வணக்கம்..." என்றான்...

அவனது அந்தப் பண்பிலேயே சங்கமித்ரா ஒட்டுமொத்தமாய் அவனிடத்தில் சரணடைந்தாள்... இதுநாள் வரை பிரகதீஸ்வரி அவனைப் பற்றிச் சொல்லி, சொல்லி அவளது மனதில் ஹரி ஒரு நாயகன் போல் ஆழமாய்ப் பதிந்து போனான்... இப்போது அதை விட இன்னமும் ஆழமாய்ப் பதிந்து போனான் அவளது மனதில்...

"அத்தான்... அக்கா டாக்டரா இருக்காங்க..." என்று பெருமையுடன் பிரகதீஸ்வரி சங்கமித்ராவை பற்றிக் கூற...

"அப்படியா...?" என்று சங்கமித்ராவிடம் கேட்டவன் வசீகரமாக அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்...

'அச்சோ... இப்படிச் சிரிச்சு சிரிச்சே மனுசனை கொல்லுறானே...' என்று அவளது மனம் பதின்வயது பருவ

மங்கையாய் அவனிடத்தில் மயங்கியது...

"சரி அம்மு, நான் திருநெல்வேலி வரை போகிறேன்... உனக்கு எதுவும் வாங்கிட்டு வரணுமா...?" என்று ஹரி கேட்டதும்...

"அத்தான்... எனக்கு இருட்டுக் கடை அல்வா வேண்டும்..." என்று சந்தியா குறுக்கிட்டு கத்தினாள்...

"நிச்சயமாய் வாங்கிட்டு வர்றேன்... சந்து குட்டிக்கு இல்லாத அல்வாவா...?"

ஹரியின் 'சந்து குட்டி' என்றழைப்பில் சங்கமித்ராவின் முகம் வாடி போனது... மனதில் ஏதோ ஒன்று பொங்கி கொண்டு வந்தது... கோபமா இல்லை பொறாமையா என்று அந்த உணர்வை பிரித்தறிய அவளால் முடியவில்லை...

"எப்பப்பாரு தீனி தானா...? இன்னும் கொஞ்ச நாளில் நீ வெடிக்கத்தான் போகிற பார்..." ஸ்வேதா மீதிருந்த ஆத்திரத்தை சரவணன் தங்கையிடம் காட்டினான்...

"போடா..." என்று சந்தியா சிணுங்க...

"சரவணா... அவளை ஏன் அப்படிச் சொல்கிறாய்...? அவள் அப்படி ஒன்றும் குண்டாக இல்லை... நல்ல ஆரோக்கியமாகத் தான் இருக்கிறாள்... இந்த வயதில் பெண்கள் நன்றாகச் சாப்பிட்டால் தான் திருமணத்திற்குப் பிறகு அவங்களால் ஆரோக்கியமாக இருக்க முடியும்..." என்று சரவணனிடம் கூறியவன் சங்கமித்ராவிடம்,

"மேடம், நீங்க டாக்டர் தானே... நான் சொல்வது சரியா...?"

தன்னை மதித்து அவன் கேள்வி கேட்டதும் சங்கமித்ரா முகம் மலர்ந்தவளாய், "நீங்க சொல்றது நூற்றுக்கு இருநூறு சதவீதம் சரியே..." என்று ஆமோதித்தாள்...

"நீயும் கேட்டுக் கொள் அம்மு... நன்றாகச் சாப்பிட்டு உடம்பை கவனமாகப் பார்த்து கொள்..."

ஹரிப்ரசாத் பிரகதீஸ்வரிக்கு அறிவுரை கூற, அப்போது தான் சித்தார்த்தின் கண்களில் பிரகதீஸ்வரியின் மெலிந்த தோற்றம் தென்பட்டது... 'ஜீரோ சைஸ்' உடல் தான் அழகு என்று நினைத்தவன் இப்போது தன்னவளின் ஆரோக்கியம் என்று வந்ததும் அவளின் மெலிவான உடல்வாகு அவனுக்குக் கவலையை அளித்தது...

'என் ரதி பேபி இன்னமும் கொஞ்சம் சதை போட்டால் அழகாக இருப்பாள்... அவள் எப்படி இருந்தாலும் அழகு தான்...' என்று அவனது மனம் தன்னவளின் அழகை கொஞ்சி மெச்சி கொண்டது...

"ஹரி...திருநெல்வேலிக்கு தானே போகிறாய்... அப்படியே இந்த லிஸ்ட்டில் இருக்கும் சாமான்களை வாங்கிட்டு வந்துடுப்பா..." என்றபடி பெரிய பட்டியலை அவனிடத்தில் நீட்டினார் விமலாராணி...

நாளை சித்தார்த்தின் பிறந்தநாளை 'சர்ப்ரைசாக'க் கொண்டாட நினைத்தவர் அதைப் பற்றி யாரிடமும் மூச்சு விடவில்லை...

"சரி அத்தை..." என்று அதை வாங்கிய ஹரி கிளம்பினான்...

வீட்டில் இருக்கப் பிடிக்காதவனாய் சரவணனும், "அத்தான், நானும் உங்களுடன் வருகிறேன்..." என்றபடி ஹரியுடன் சென்றான்...

எல்லோரும் வீட்டினுள் நுழைந்தனர்... சங்கமித்ரா பிரகதீஸ்வரியின் கைகளைப் பற்றிக் கொண்டு,

"நீ கொடுத்த மருந்துகளை என்னிடம் வரும் குழந்தைகளுக்குப் பரிந்துரை செய்தேன்... அதை அவர்கள் எடுத்துக் கொண்டதும் நல்ல முன்னேற்றம் தெரிந்தது... எல்லோரும் என்னை ஒரே பாராட்டு மழையால் நனைத்து விட்டார்கள்... நான் எல்லோரிடமும் சொல்லிவிட்டேன்... இதற்குக் காரணம் நான் அல்ல... எனது குட்டி தங்கை தான் என்று... நான் சொன்னது சரி தானே பிரகதி..."

சந்தோசத்துடன் சொன்ன சங்கமித்ராவை கண்டு வாஞ்சையுடன் புன்னகைத்த பிரகதீஸ்வரி, "நீங்க அவங்க கிட்ட அந்த மருந்தை கொடுத்திருக்கா விட்டால் என் மருந்தோ, நானோ எதுவுமே அவங்களுக்குத் தெரிஞ்சிருக்காதுக்கா... அதனால் இந்தப் பாராட்டு முழுவதும் உங்களைத் தான் சேரணும்..."

பெருந்தன்மையுடன் கூறிய சின்னவளை அன்போடு அணைத்து கொண்டாள் சங்கமித்ரா...

"அத்தான்... பிரகதியின் சித்த மருத்துவத்தைப் பற்றி அன்று அப்படிக் கேலியாய் சொன்னீங்களே... உங்க ப்ரெண்ட் நீலேஷோட அண்ணன் மகள் தீப்புண் காயத்தோடு என்னிடம் வந்தாள்..."

"ஐயோ... அவள் ரொம்பச் சின்னக் குழந்தை அல்லவா..." என்ற சித்தார்த்தின் குரலில் பதற்றம் தெரிந்தது...

ஏனெனில் நீலேஷின் அண்ணன் மகளுக்கு ஒரு வயது தான் ஆகிறது...

"ஆமாம் அத்தான்... கரண்ட் போயிருச்சுன்னு மெழுகுவர்த்தி ஏத்தியிருக்காங்க... ஜெனரேட்டரை போட்ட பிறகாவது அதை அணைத்திருக்க வேண்டும்... அதை மறந்து விட்டார்கள் போலும்... இந்தச் சின்னக் குட்டி தவழ்ந்து போய் அதில் கையை வைத்து விட்டாள்... கொஞ்சம் பெரிய தீக்காயம் தான்... அதற்கு நான் ட்ரீட்மெண்ட் கொடுத்த போதும், அந்தப் புண் ஆறுவதற்குப் பிரகதி கொடுத்த களிம்பை தான் அவர்களிடம் கொடுத்தேன்... இப்போது குழந்தையின் கையில் தீப்புண் இருந்ததற்கான தழும்பு இல்லவே இல்லை... அந்தளவுக்கு அந்த மருந்து நன்றாக வேலை செய்திருக்கிறது..."

"அப்போ ஊருக்கு கிளம்பும் முன் எல்லாவற்றையும் பேக் பண்ணிட்டு தான் போனியா மித்ரா..." என்று கேட்டு சித்தார்த் சிரித்தான்...

"இப்போதும் ஊருக்கு கிளம்பும் போதும் அதே வேலையைத் தான் செய்யப் போகிறேன் அத்தான்..." என்று கூறி பதிலுக்குச் சிரித்தாள் சங்கமித்ரா...

சித்தார்த் சங்கமித்ராவிடம் பேசிய போதும் அவனது பார்வை பிரகதீஸ்வரியிடமே நிலை கொண்டிருந்தது... பாவையவளும் அவனது பார்வையில் முகம் சிவந்த போதும் பதிலுக்கு அவனைப் பார்க்க தவறவில்லை... அதைக் கண்டு அவனது உதடுகளில் புன்னகை அரும்பியது...

அந்நேரம் சித்தார்த்தின் அலைப்பேசி அழைத்தது... எடுத்து பார்த்தவன் புன்னகையுடன்,

"நீலேஷ் தான் அழைக்கிறான்..." என்று கூறியபடி அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்...

பரஸ்பர நலன் விசாரிப்புக்கு பிறகு மறுபக்கம் நீலேஷ் என்ன கூறினானோ அதைக் கேட்டதும் சித்தார்த்தின் முகம் யோசனையைத் தத்தெடுத்தது... அதே யோசனையுடன் அலைப்பேசியை அணைத்தவன் குழப்பத்துடன் பிரகதீஸ்வரியை பார்த்தான்... அவளோ அவனைக் கண்டு கொள்ளாது சங்கமித்ராவுடன் ஆர்வமாய்ப் பேசி கொண்டிருந்தாள்...

சிறிது நேரம் குழப்பத்துடன் அமர்ந்திருந்த சித்தார்த் பிறகு தெளிவான மனநிலையுடன் நிமிர்ந்து அமர்ந்தான்... அவனின் எண்ணப் போக்கு அறியாது பிரகதீஸ்வரி வெள்ளை மனதுடன் சிரித்துப் பேசி கொண்டிருந்தாள்... அவனது விழிகள் தன்னவளை இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தது...

அன்றிரவு பன்னிரெண்டு மணிக்குச் சித்தார்த்திற்கு இனிய அதிர்ச்சி கொடுப்பதற்காக எல்லோரும் அவனின் அறை முன் கூடி தூங்க சென்றவனை வெளியில் அழைத்து,

"ஹேப்பிப் பேர்த்டே..." என்று எல்லோரும் ஒருமித்த குரலில் கோரசாகக் கத்தினர்... அதைக் கேட்டு அவனது முகத்தில் புன்னகை அரும்பியது...

"தேங்க்ஸ்..." என்று பொதுவாக உரைத்தவனின் கண்கள் தன்னவளை தான் விடாது மொய்த்துக் கொண்டிருந்தது...

அந்நேரம் பிரகதீஸ்வரியும் அவனைத் தான் பார்த்து கொண்டிருந்தாள்... சிறிது நேரத்திற்கு முன் சங்கமித்ரா கூறியதும் தான் அவளுக்குமே சித்தார்த்தின் பிறந்தநாள் பற்றித் தெரியும்... கூட்டத்தோடு கூட்டமாய் வாழ்த்து கூறியவளை அவனின் விழிகள் ஏக்கத்துடன் பார்த்தது... அதன் அர்த்தம் புரியாது அவள் விழித்தாள்...

எல்லோரும் உறங்க சென்ற பின் அவளும் உறங்க சென்றவள் சித்தார்த்தை திரும்பி திரும்பி பார்த்தபடி சென்றாள்... அவனும் விடாது அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்...

பிரகதீஸ்வரி அறைக்குச் சென்ற பத்து நிமிடத்தில் அவளது அறைக் கதவு தட்டப்பட்டது... கதவை திறந்தவள் அங்கு நின்றிருந்தவனைக் கண்டு ஆச்சிரியத்தில் விழிகள் அகல பார்த்தாள்... ஆம், அங்குச் சித்தார்த் தான் புன்னகையுடன் நின்றிருந்தான்... யார் என்ன நினைத்தாலும் பரவாயில்லை என்று தைரியமாக அவன் அவளை அவளது அறையில் தனியே சந்திக்க வந்தான்...

"என்னை விஷ் பண்ண மாட்டியா...?"

'இப்போது தானே வாழ்த்தி விட்டு வந்தேன்...' என்று குழப்பத்துடன் தன்னைப் பார்த்தவளை கண்டு,

"அது கூட்டத்தோடு கோவிந்தா போட்டது... இப்போது எனக்கே எனக்கு மட்டுமேயான உன்னுடைய ஸ்பெசல் விஷ் வேண்டும்..." என்று குறும்பு குரலில் கூறினாலும் அதில் அவனது ஏக்கம், ஆசை அப்பட்டமாய்த் தெரிந்தது...

அதை அறிந்த பின்னரும் சும்மாயிருக்க அவளது காதல் மனதால் முடியுமா...

"இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்..." என்று உடனே அவள் அவனை வாழ்த்தினாள்...

"தேங்க்ஸ்..." என்றவன் தனது கைகளில் இருந்த கவரை அவளிடம் நீட்டினான்...

"என்னது...?"

"என்னுடைய பிறந்தநாளுக்கு உனக்கு என்னுடைய பரிசு..."

அவன் கொடுத்ததை நன்றி கூறி வாங்கிக் கொண்டவளின் மலர்ந்த முகம் அடுத்த நொடி வாடி போனது...

"இன்று உங்களுக்குப் பிறந்தநாள்ன்னு எனக்குத் தெரியாது... தெரிந்திருந்தால் ஏதாவது பரிசு வாங்கி வைத்திருப்பேன்..." என்று வருத்தத்துடன் கூறியவளிடம்,

"நீ நினைத்தால் இப்போது கூட உன்னால் எனக்குப் பரிசு கொடுக்க முடியும்..." என்றவனின் விழிகள் தாபத்துடன் தன்னவளின் இதழ்களைப் பார்த்தது...

அவளோ அவன் கூறியதை வேறு மாதிரியாக நினைத்துக் கொண்டு தனது அறையில் இருந்த பொருட்கள் மீது விழிகளை ஓட்டினாள்... அதைக் கண்டவன் 'தத்தி, தத்தி' என்று மனதிற்குள் அவளைச் செல்லமாக வைதான்...

களிமண்ணாலான புத்தர் சிலையைக் கண்டதும் அதை எடுத்து வந்து அவனிடத்தில் கொடுத்தவள், "இதோ உங்களுக்கான எனது பரிசு... இது நானே செஞ்சு, வர்ணம் பூசியது..."

மிகவும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டு இருந்த கௌத புத்தனை கையில் வாங்கிய சித்தார்த் அவளின் கைவண்ணத்தைக் கண்டு வியந்தான்...

"எந்தவொரு கலையையும் விட்டு வைப்பது இல்லை போலும்..." என்று கூறியவனின் குரலில் அத்தனை பெருமை நிரம்பி வழிந்தது...

"ரொம்ப அழகாயிருக்கு... உன்னைப் போல்..." என்றவன்,

"சித்தார்த்தனுக்கே சித்தார்த்தன் பரிசா...?" என்று கேலி குரலில் அவளிடத்தில் கேட்டான்...

"இந்தச் சித்தார்த்தன் போல் நீங்களும் கோபப்படாமல் அமைதியாக இருக்க வேண்டும் என்று எண்ணி தான் கொடுக்கிறேன்..."

"என்னைப் பற்றி என்னிடமே குறை கூறுகிறாயா...? எவ்வளவு தைரியம்..."

அவனது கடின குரலில் திடுக்கிட்டு போய் அவனைப் பார்த்தவள் அவனது விழிகளில் தெரிந்த குறும்பை கண்டதும் மனம் அமைதியுற்றவளாய் அவனைக் கண்டு புன்னகைத்தாள்... அதில் ஜீவனில்லாது இருப்பதைக் கண்டு சித்தார்த் மனம் பதறியவனாய் அவளது நெற்றியில் கை வைத்து பார்த்து,

"உடம்பு எதுவும் சரியில்லையா ரதி..." என்று கவலை குரலில் அவன் கேட்க...

அதில் அவளது கண்கள் கரித்தது... அவனது நெஞ்சில் சாய்ந்து ஓவென்று அழ வேண்டும் என்கிற எண்ணம் அவளுள் மேலோங்கியது... பிறந்தநாள் அதுவுமாக அவனிடத்தில் தன்னுடைய துக்கத்தினைச் சொல்லி புலம்ப அவளுக்கு மனம் வரவில்லை... அதனால் முயன்று புன்னகைத்தவள்,

"அப்படி எல்லாம் ஒன்றுமில்லை..."

"இல்லை ஏதோ சரியில்லை... நேற்றில் இருந்து நானும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறேன்... எல்லோருக்காகவும் ஏதோ பேசி சிரிக்கிறாய்... ஆனால் அதில் உயிர்ப்பு இல்லையே... எப்போதும் பூவாய் மலரும் உன் புன்னகை இன்று ஏதோ கடமையாக உள்ளது... இதோ இப்போது கூட உன் கண்கள் பெரும் சோகத்தினைப் பிரதிபலிக்கிறது... அப்படி என்ன கவலை உனக்கு...?" என்று கேட்டவன் அவளது கையைப் பிடித்து மென்மையாய் வருடியபடி,

"என்னிடம் சொல்லக் கூடாதா பேபி..."

அவனது வார்த்தையில் இருந்த அக்கறை, அன்பு எல்லாம் அவளை அவனிடத்தில் தன் மனதினை கொட்டிவிடச் சொல்லி துடித்தது... ஆனால் அவளால் அது முடியவில்லை... இன்றைய நாள் அவனுடைய நாள்... தான் அவனுக்குச் சந்தோசத்தை மட்டுமே கொடுக்க வேண்டும்... மாறாகத் துன்பத்தைக் கொடுக்கக் கூடாது என்று எண்ணியவளாய் தனது துக்கத்தினை விழுங்கி கொண்டு,

"உங்க கிட்ட சொல்லாமல் வேறு யார் கிட்ட சொல்ல போகிறேன்... ஆனால் நீங்க நினைப்பது போல் ஒன்றுமில்லை... கொஞ்சம் உடம்பு சரியில்லை..."

"டேப்லெட் போட்டியா..." என்று அக்கறையுடன் கேட்டவனிடத்தில்,

"மருந்து குடித்து விட்டேன்..." என்று அவள் கூற...

"உன் மருந்து மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது... போய் நிம்மதியாய் படுத்து தூங்கு..." என்றவன் தனது அறைக்குக் கிளம்பி சென்றான்...

அவன் கொடுத்த பரிசோடு அறைக் கதவை சாத்தியவள் அது என்னவென்று கூடப் பிரித்துப் பார்க்காது அதை மேசை மீது வைத்து விட்டு தனது பெற்றோரின் புகைப்படம் முன் வந்து நின்றாள்... மனதில் சொல்லொண்ணா துக்கம் எழுந்தது... கண்களில் கண்ணீர் வழிய அப்படியே தரையில் அமர்ந்தாள்...

****

மறுநாள் பொங்கல் திருவிழா கோலாகலத்துடன் விடிந்தது... வாசலை அடைத்து பெரிய கோலம் போடப்பட்டு, அதன் பக்கத்தில் மூன்று கல் வைத்து அடுப்பு உருவாக்கி அதில் பானையை வைத்து பால் கொதித்துக் கொண்டிருந்தது...

எல்லோரும் புது உடை உடுத்தி கொண்டு அங்கே போடப்பட்டு இருந்த நாற்காலியில் அமர்ந்திருக்க, பிரகதீஸ்வரி மட்டும் வீட்டிற்கும் வாயிலுக்கும் ஓயாது இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருந்தாள்... அவளுக்குக் கூடமாட ஒத்தாசைக்கு ஹரியும், சோலையம்மாளும் உடன் இருந்தனர்...

பிரகதீஸ்வரி எப்போதுமே வேலையைக் கண்டு அஞ்சுபவள் கிடையாது... ஆனால் இன்று ஏனோ மனம் பாரமாய் இருந்த காரணத்தாலோ என்னமோ அவளால் முழு ஈடுபாட்டுடன் வேலை செய்ய முடியவில்லை... ஆனாலும் மற்றவர்களுக்காக இன்முகத்துடன் நடமாடி கொண்டிருந்தாள்...

சங்கமித்ராவுக்கு இது எல்லாம் புதிது என்பதால் அவள் வேடிக்கை பார்த்து கொண்டிருந்தாள்... அதை விட வேட்டி, சட்டையில் கம்பீரமாக இருந்த ஹரிப்ரசாத்தை அவள் விழிகளால் கபளீகரம் செய்து கொண்டிருந்தாள்...

ஹரியை அவள் ஆசையுடன் பார்த்து கொண்டிருந்தாள் என்றால், சித்தார்த்தோ பொறாமையாகப் பார்த்துக் கொண்டிருந்தான்...

ஏனெனில் அவனுக்கு வேட்டி கட்ட வராது... ஏனோ அது அவனது இடுப்பில் நிற்காது நழுவுவது போல் எந்நேரமும் பயந்து கொண்டிருப்பது போல் அவனுக்குத் தோன்றும்... அதனால் இதுவரை அவன் வேட்டி கட்டியது இல்லை... இதுநாள் வரை அதைப் பற்றி அவன் சிந்தித்துப் பார்த்ததும் கிடையாது... இப்போது முதன்முறையாக வேட்டி கட்டி பழகாததற்கு அவன் மிகுந்த வருத்தப்பட்டான்... அவன் கவலை அவனுக்கு...

என்று இல்லாத வண்ணமாக இன்று புடவை உடுத்தியிருந்த ஸ்வேதாவை கண்டு சரவணனின் மனம் அவளிடத்தில் அலைப்பாய்ந்தது... அவளின் உதாசீனத்தை மீறி அவனது கண்கள் அவளை ரசித்துப் பார்த்தது... முதன்முதலாய் பெண்ணவள் அவனுள் உணர்த்திய உணர்வில் அவன் சற்று நிலைத்தடுமாறி தான் போனான்...

இதுநாள் வரை அவள் அழகாய் இருக்கிறாள், மாமன் மகள் என்று ஒருவித ஈர்ப்பினால் பார்த்து கொண்டிருந்தவன் மனதில் இன்று அந்த ஈர்ப்பையும் தாண்டிய வேறு ஒரு உணர்வு தோன்றி அவனைப் பரவசத்தில் ஆழ்த்தியது... வழக்கம் போல் ஸ்வேதா அவனைச் சிறிதும் கண்டு கொள்ளவில்லை... அதைக் கண்டு அவனது மனம் சிறிது சுணங்கியது...

எல்லோருக்குமே கிராமத்து பொங்கல் சற்று வித்தியாசமான அனுபவமாக இருந்தது... பால் பொங்கி வந்ததும் சோலையம்மாள் குலவை ஒலி எழுப்ப, பிரகதீஸ்வரி அதில் அரிசியைப் போட்டு வேக வைக்கும் போது சந்தியா அங்கு வந்து நின்றாள்...

"பிரகதி... நானும் பொங்கல் வைக்கவா...?"

"உப்புக்கும், சர்க்கரைக்கும் வித்தியாசம் தெரியாத பிரகஸ்பதி நீயெல்லாம் சர்க்கரை பொங்கல் செய்தால் அது சர்க்கரை பொங்கலாக இருக்காது... உப்பு பொங்கலாகத் தான் இருக்கும்..." என்று சரவணன் தங்கையைக் கிண்டலடித்தான்...

"சரவணா... சும்மா அவளை இப்படிக் கேலி பண்ணாதே... எதையும் அவளைச் செய்யச் சொல்லி பார்த்தால் தானே தெரியும்... அவள் செய்வதற்கு முன் அவளை இப்படிக் கிண்டல் பண்ணினால் எப்படி...? பிறகு அவளைப் பொறுப்பில்லை என்று திட்டுவது..." என்று சரவணனை கடிந்த ஹரி,

"நீ போய்ப் பொங்கலை கவனி..." என்று சந்தியாவிடம் சொல்ல அவள் மகிழ்வுடன் பிரகதீஸ்வரியுடன் இணைந்து கொண்டாள்...

ஹரி சந்தியாவிடம் காட்டும் அன்பு சங்கமித்ரா மனதில் அனலை மூட்டியது... தனது வயது, தான் ஒரு மருத்துவர் என்பதை எல்லாம் மறந்து ஒரு பெண்ணாய் அவளது மனதில் கடும் பொறாமை எழுந்தது...

பொங்கல் தயாரானதும் அனைவருக்கும் எடுத்துக் கொடுத்த போது சங்கமித்ரா முதல் ஆளாகப் பொங்கலை எடுத்துக் கொண்டு ஹரியிடம் வந்தாள்...

"எடுத்துக்கோங்க..." இன்முகமாய்க் கூறியவளை ஏறிட்டு பார்த்தவன்,

"இல்லை... எனக்கு வேண்டாம்..." என்று மறுத்து கூற, அதில் அவளது முகம் வாடி போனது...

"நான் எல்லாம் கொடுத்தால் வாங்குவீங்களா...? அவள் கொடுத்தால் தானே சர்க்கரை பொங்கலும் இனிக்கும்..." என்று கூறியவள் கழுத்தை நொடித்துக் கொண்டு சென்று விட்டாள்...

சங்கமித்ரா கூறியதன் அர்த்தம் புரியாமல் விழித்தான் ஹரிப்ரசாத்... அவன் சர்க்கரை பொங்கலை வேண்டாம் என்று சொன்னதற்கான காரணம் வேறு...

எல்லோருக்கும் ருசிக்கப் பொங்கல் எடுத்து கொடுத்த பிரகதீஸ்வரி அதை ஒரு வாய் கூட உண்ணவில்லை... அதைச் சித்தார்த் கவனித்துக் கொண்டே இருந்தவன் அவளது அருகில் வந்து தனது கையிலிருந்த பொங்கலை அவளின் முன் நீட்டினான்...

"சாப்பிடு..."

அன்போடு அவன் கொடுப்பதை அவளால் மறுக்கவும் முடியவில்லை... அதே சமயம் அதை ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை... அவனையே பார்த்து கொண்டிருந்தாள் அவள்... அவளின் களைப்பு அவளின் முகத்தில் அப்பட்டமாய்த் தெரிந்தது...

"உனக்கு எத்தனை தடவை சொல்லி இருக்கேன்... இப்படி வேலையை இழுத்து போட்டுக் கொண்டு செய்யாதே என்று..." என்று அவளைக் கடிந்தவன் அவளிடம் மீண்டும் பொங்கலை நீட்டினான்...

"எடுத்துக்கோ ரதி..."

"அம்மு... இங்கே வாம்மா..."

அதற்குள் ஹரிப்ரசாத் அவளை அழைக்கவும் அவள் சித்தார்த்திடம், "நான் வருகிறேன்..." என்று கூறியவள் அவனின் பதிலை எதிர்பாராது அங்கிருந்து ஓடிவிட்டாள்...

தன்னைக் கண்டு கொள்ளாது செல்லும் அவளைப் பார்த்தபடி நின்றிருந்தான் சித்தார்த்... சற்று முன் சுவைத்த சர்க்கரை பொங்கல் சற்றே கசந்தது போல் தோன்றியது அவனுக்கு... அவளின் பின்னேயே செல்ல துடித்த தனது கால்களை முயன்று அடக்கியபடி தனது வீட்டாரை நோக்கி நடந்தான் அவன்...

சுமார் இரண்டு மணி நேரம் கழித்து வீட்டிற்கு வந்த பிரகதீஸ்வரியின் கண்கள் அழுது அழுது சிவந்திருந்தது... அதை விட ஹரி அவளது தோளில் ஆறுதலாய் கை போட்டு அணைத்து அவளிடம் மெல்லிய குரலில் ஏதோ சொல்லி கொண்டு வந்தது கண்டு சித்தார்த்தின் மனம் மட்டுமல்லாது உடலும் சேர்ந்து பற்றியெரிந்தது...

தன்னவளிடம் ஓடி சென்று அவளை அணைத்திருந்த ஹரியின் கையை விலக்கி விட்டு 'அவள் எனக்கு மட்டுமே சொந்தமானவள்... அவளுக்கு ஆறுதல் அளிக்க நானிருக்கிறேன்... நீ உன் வேலையைப் பார்த்துட்டு போடா...' என்று கத்த வேண்டும் போல் ஒரு வெறி அவனுள் எழுந்தது...

அப்படி எல்லாம் வெளிப்படையாய் தன்னுடைய எண்ணத்தினை வெளிப்படுத்திப் பழக்கம் இல்லாததால் அவன் அமைதி காத்தான்... வெளியில் அப்படிக் காட்டி கொண்டான்... ஆனால் அவனது மனமோ எரிமலையாய் குமுறிக் கொண்டிருந்தது...

பிரகதீஸ்வரி சித்தார்த்தின் மனதினை உணர்ந்து கொள்ளாமல் அவனைத் தாண்டி வீட்டினுள் சென்றாள்... கோபம் கொப்பளிக்கும் விழிகளுடன் அவளைப் பார்த்தபடி அவன் நின்றிருந்தான்...

"கண்ணு... ஜூஸ் ஏதாவது குடிக்கிறியா...?"

அக்கறையோடு கேட்ட சோலையம்மாளை கண்டு விழிகளில் நீர் தேங்கி நிற்க அவள் மறுப்பாய் தலையசைத்தாள்...

"காலையில் இருந்து பல்லில் பச்சை தண்ணி கூடப் படாம இருக்கியே கண்ணு..." என்று கவலையுடன் கேட்டவரை கண்டு பதில் பேசாது கீழே அமர்ந்தவள் சுவற்றில் சாய்ந்து கண்களை மூடி கொண்டாள்...

அவளின் மனநிலையை உணர்ந்தவராய் சோலையம்மாள் அமைதியாக விலகி சென்றார்...

"பேபி..."

தன்னவனின் குரலில் அவள் மெல்ல விழிகளைத் திறந்தாள்... அவளுக்கு அருகில் தரையில் மண்டியிட்டபடி அவளையே பார்த்திருந்தான் சித்தார்த்... தன்னவனைக் கண்டதும் அவளது விழிகளில் தவிப்பும், ஏக்கமும் ஒரு சேர எழுந்தது... அதை உணர்ந்தவனின் கோபம் பஞ்சாய் பறந்து போனதில் அவனது கைகள் அவளது கைகளை ஆறுதலாய் பற்றிக் கொண்டது...

"எதற்காக நீ இப்படி அழுகிறாய்...?"

கலங்கியிருந்த அவளது விழிகளை உற்று நோக்கியபடி கேட்டவனைக் கண்டு தனது துயரம் முழுவதையும் கொட்டிவிடத் தயாரானது அவளது காதல் மனம்... ஆனால் இன்று பிறந்தநாள் அதுவுமாய் அவனின் மகிழ்ச்சியைக் குலைக்க அவளால் முடியவில்லை... அதனால் முயன்று அவனைக் கண்டு புன்னகைத்தவள்,

"விறகு அடுப்பின் முன் ரொம்ப நேரமாக இருந்தேன் இல்லையா அதான் கண்கள் கலங்கியிருக்கிறது..."

"நீ பொய் கூடச் சொல்வாயா பேபி...?"

அவளை ஆழ்ந்து பார்த்துக் கொண்டு கேட்டவனின் குரலும் ஆழ்ந்து ஒலித்தது... அவனது கண்களைச் சந்திக்க

முடியாமல் தனது விழிகளைத் தாழ்த்தி கொண்டாள் அவள்...

"எதுவும் பிரச்சினையா...? என்னிடம் சொல்ல கூடியதாக இருந்தால் சொல்... நான் தீர்த்து வைக்கிறேன்..."

தன்னவளின் பிரச்சினையைத் தன் பிரச்சினையாக எண்ணி அதை உடனே தீர்த்து வைக்க வேண்டும் என்று அவன் உறுதியாக எண்ணினான்... அதைத் தான் அவன் வார்த்தைகளிலும் கேட்டான்...

"பிரச்சினை இருந்தால் தானே சொல்வதற்கு... ஒன்றுமில்லை..." என்று புன்னகைத்தவளை கண்டு அவளது கன்னம் தட்டி,

"இல்லை என்றால் சந்தோசம்..." என்றவன் மேலே பேசும் முன் ஆள் வரும் அரவம் கேட்க... அதில் அவன் எழுந்தபடி,

"நான் கொடுத்த பரிசு உனக்குப் பிடித்திருந்ததா...?"

அவன் கேட்டதும் தான் அவளுக்கு அவனது பரிசு ஞாபகம் வந்தது... அதை அவள் பிரித்துக் கூடப் பார்க்கவில்லை... அதைச் சொன்னால் கோபப்படுவானோ என்று பயந்தவளாய்,

"ரொம்ப ரொம்பப் பிடிச்சியிருந்தது..." என்று கூறியவளை கண்டு அவனது முகம் மலர்ந்தது... மேலே ஏதோ சொல்ல போனவன் அங்கு வந்து நின்ற சோலையம்மாளை கண்டதும் ஒன்றும் பேசாது சென்று விட்டான்...

அன்று மதியம் பிரகதீஸ்வரி வீட்டில் தான் ஊர் மக்கள் அனைவருக்கும் உணவிற்கு ஏற்பாடாகி இருந்தது... இதை மட்டும் விமலாராணி மேற்பார்வை பார்த்து தான் தான் எல்லாம் செய்வதாக ஊர் மக்கள் முன் காட்டி கொண்டார்... ஆனால் அவர்களுக்குத் தெரியும் இந்தப் பழக்கம் இந்த வீட்டிற்கு அவர் மருமகளாய் வருவதற்கு முன்பிருந்தே இருக்கும் ஒரு வழக்கம் என்று... அதனால் யாரும் அவரைச் சிறிதும் கண்டு கொள்ளவில்லை...

அந்த ஊருக்கு எப்போதேனும் வருகை தரும் ஹரிப்ரசாத்திற்குக் கொடுக்கும் மரியாதையைக் கூட அவர்கள் விமலாராணிக்கு கொடுக்கவில்லை என்பது தான் அந்தோ பரிதாபம்...

மாலையில் சித்தார்த்தின் பிறந்தநாள் விழாவிற்கான ஏற்பாடுகள் தடபுடலாக நடந்தது... வீட்டு உறுப்பினர்களோடு சேர்த்து முக்கியமாக ஒரு பத்து பேரை மட்டும் அவன் அழைத்திருந்தான்...

இளஞ்சிவப்பு பருத்தி சட்டையும், பழுப்பு வண்ண பேண்ட்டுமாகச் சித்தார்த் தயாராகி வந்த போது பிரகதீஸ்வரி தனது மனவருத்தத்தையும் மறந்தவளாய் அவனை ஆவென்று விழி விரித்துப் பார்த்தபடி நின்றாள்... கம்பீரமான அவனது அழகு சொட்டு சொட்டாய் அவளது மனதின் உள்ளே ஆழமாய் இறங்கியது...

அதைக் கண்டு கொண்டவனின் விழிகள் மின்னியது... காலையில் இருந்து அவனிடத்தில் இருந்து வந்த மனவருத்தம் இப்போது நொடியில் காணாமல் போனது... கண்கள் மின்ன அவள் அருகே நெருங்கி வந்தவன் அப்போது தான் கவனித்தான் அவளது உடையை...

"பார்ட்டிக்கு நேரமாகிவிட்டது... போய்ப் புது ட்ரெஸ் போட்டுக்கிட்டு வா..." என்று அவளைத் துரிதப்படுத்த...

"கொஞ்சம் வேலையிருக்கிறது... முடிச்சிட்டு போகிறேன்..." என்றவள் அங்கிருந்து நைசாக நழுவினாள்...

வீட்டினர், நண்பர்கள் எல்லோரும் சுற்றிச் சூழ்ந்திருக்கக் கேக்கை வெட்டியவனின் கண்கள் தன்னவளை தான் முதலில் தேடியது... இதுநாள் வரை அவன் கேக் மட்டுமே வெட்டுவான்... ஆனால் யாருக்கும் ஊட்டி விட்டது எல்லாம் கிடையாது... அதே சமயம் யாரையும் அவனுக்கு ஊட்டி விடவும் அவன் அனுமதித்தது கிடையாது... அது அவனது அன்னையே என்றாலும் கூடத் தவிர்த்து விடுவான்... ஆனால் இந்தக் கணம் தன்னவள் தனக்கு ஊட்டி விட

வேண்டும், அதே போல் தானும் அவளுக்கு ஊட்டி விட வேண்டும் என்று அவன் பேராசை கொண்டான்...

அங்கு ஓரமாகச் சாதாரண உடையில் ஏனோ தானோவென்று நின்றிருந்த பிரகதீஸ்வரியை கண்டு அவனது மனதில் அப்படியொரு கோபம் எழுந்தது... ஆனாலும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அமைதி காத்தான்... அப்படியிருந்தும் கிடைத்த தனிமையில் அவளிடம் ஒரு கேக் துண்டை எடுத்து வந்து கொடுப்பது போல்,

"என் சொல் பேச்சு கேட்க கூடாது என்று எதுவும் சபதம் எடுத்து இருக்கிறாயா...?" என்று அடக்கப்பட்ட கோபத்தில் வார்த்தைகளைக் கடித்துத் துப்பியவனைக் கண்டு அவள் அரண்டு போனாள்...

மானின் மிரட்சியுடன் தன்னை நோக்கிய அவளது விழிகளைக் கண்டதும் அவன் தன்னை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டான்...

"சரி போனது போகட்டும்... இதையாவது சாப்பிடு..." என்றபடி கையிலிருந்த கேக்கை அவளிடம் நீட்ட...

அவனது கோபம் கண்டு மறுத்து பேசாது அதை வாங்கியவளை கண்டு அவனது மனம் சிறிது சமாதானமாகியது... அவனது விழிகள் எதிர்பார்ப்புடன் அவளை நோக்கியது... அவளோ அவனது விழிகளைப் பார்க்காது கைகளில் இருந்த கேக்கை பார்த்தபடி சரியென்று தலையசைத்தாள்...

அதைக் கண்டு அவனது விழிகளில் ஏமாற்றம் படர்ந்தது... அதற்குள் யாரோ அவனை அழைக்க அதில் அவன் அவளை விட்டு விலகி சென்றான்...

அன்றிரவு நீண்ட நேரம் சித்தார்த் மட்டும் அங்கு வருகை தந்திருந்த நண்பர்களுடன் பேசி கொண்டிருந்தான்... வீட்டினர் எல்லோரும் நண்பர்களுக்குத் தனிமை கொடுத்து விட்டுப் படுக்கச் சென்றுவிட்டனர்... வெகுநேரம்

நண்பர்களுடன் பேசி கொண்டிருந்து விட்டு வீட்டினுள் வந்த சித்தார்த்தின் கண்களில் முதலில் விழுந்தது அந்தக் கேக் துண்டு...

அது அவன் பிரகதீஸ்வரிக்காகப் பிரத்யேகமாகக் கொண்டு வந்து கொடுத்தது... ஏனெனில் கேக்கின் மீதிருந்த இதய வடிவ வேலைப்பாடை தனியே வெட்டி அவளுக்காக அவன் கொண்டு வந்து கொடுத்திருந்தான்... அதுவும் மாடிப்படி அருகே ஒதுங்கி நின்றியிருந்தவள் அதை அப்படியே மாடிப்படியின் கீழே வைத்து விட்டு சென்றிருக்கிறாள்... அறையைச் சுத்தம் செய்தவர்கள் அதைக் கவனிக்கவில்லை போலும்...

ஆத்திரத்தோடு அதைக் கையில் எடுத்தவன் நேரே அவளது அறையை நோக்கி சென்றான்... தனது கோபத்தால் அவள் காயமடைவாள் என்று அவனுக்குத் தெரிந்த போதும் அவன் அவளைத் தேடி சென்றான்... ஏனெனில் அவளின் உதாசீனம் அவனுக்கு அந்தளவுக்கு வலிக்கச் செய்தது...

அவன் கதவை தட்டியதும் உடனே அவள் திறந்ததை வைத்து அவள் இன்னமும் உறங்கவில்லை என்று அவனுக்கு நன்கு தெரிந்தது...

"என்ன இது...?" என்று கேக்கை அவளின் முன் நீட்டி கேட்டவனைக் கண்டு அவளது மனம் குற்றவுணர்ச்சியில் தவித்தது... அடுத்த நொடி அவள் கை நீட்டி அதை வாங்கிக் கொண்டாள்...

"சாரி..."

மெய்யான வருத்தத்துடன் கூறியவளின் வருத்தம் அவனுக்கும் புரிவதாய்... ஆனாலும் காயம் கொண்ட அவனது மனம் அவளைக் காயமடையச் செய்வதில் முனைப்பாய் இருந்தது...

"உன் சாரியை தூக்கி குப்பையில் போடு... நான் எடுத்து கொடுத்த ட்ரெஸ் தான் போட பிடிக்கவில்லை என்றால் நான் கொடுத்த கேக் கூடவா உனக்குச் சாப்பிட

பிடிக்கவில்லை... அப்படி என்றால் என்னையும் உனக்குப் பிடிக்கவில்லை அப்படித்தானே..." என்று ஆத்திரத்துடன் கேட்டவன் அவளின் பதிலை எதிர்பாராது சென்றுவிட்டான்...

அவன் பேசியது கேட்டு வேதனை அடைந்தவளாய் அவள் வேகமாய் அவனின் பின்னே சென்றாள்... என்ன வேகமாக வந்தும் அவளுக்கு முன்னே அவன் மொட்டை மாடிக்கு சென்று தஞ்சமடைந்து இருந்தான்...

"நான்..."

அவள் மேலே பேசும் முன் அவள் முகம் பார்க்காது கையை மட்டும் உயர்த்தியவன்,

"எதுவும் பேச தேவையில்லை... நீ போகலாம்..." என்று உரைத்தவன் அண்ணாந்து பார்த்து இருண்ட வானில் நட்சத்திரத்தை தேடினான்...

அவனது இந்தக் கோபம் அவன் சொன்னதைச் செய்தாலன்றிக் குறையாது என்று நினைத்தவள் நேரே தனது அறைக்கு வந்து அவன் கொடுத்த பரிசை பிரித்துப் பார்த்தாள்... அழகான இளஞ்சிவப்பு நிறத்தில், அதே நிற கற்கள் பதிக்கப்பட்டிருந்த விலையுயர்ந்த சுடிதார் ஒன்று அதனுள் இருந்தது... அதன் அழகு மனதினை மயக்கிய போதும் அவளுக்கு இருந்த மனநிலையில் அதை ரசிக்க முடியவில்லை...

ஆனாலும் அவனுக்காக அதை எடுத்து அணிந்து கொண்டாள்... பின்பு அவளது விழிகள் அவளையும் அறியாது பெற்றோரின் புகைப்படத்தைப் பார்த்தது... பின்பு கைகளில் கேக் துண்டை எடுத்துக் கொண்டு சித்தார்த்தை தேடி சென்றாள்...

பிரகதீஸ்வரியின் வருகையை அவளது மெல்லிய கொலுசொலி அவனிடத்தில் காட்டி கொடுத்தது... ஆனாலும் அவன் திரும்பவில்லை... அவன் கோபத்தை இழுத்துப் பிடித்துக் கொண்டு அமைதியாக

நின்றிருந்தான்... அவன் அருகே வந்தவள் அவனின் கையைத் தொட்டு,

"ட்ரெஸ் நல்லாயிருக்கா...?" என்று கேட்டதில் அவனது கோபம் அப்படியே பறந்தோடியது...

திரும்பி பார்த்தவன் அப்படியே பிரமித்துப் போனான்... சுடிதாரில் அவளது சிக்கென்ற இடை சிறுத்து போய், அவளது மேனி நளினம் அழகாய் தெரிந்ததில் அவன் அப்படியே தலை சுற்றிப் போனான்...

அவளது இடையில் கை வைத்து அவளைத் தன் புறம் இழுத்தவன், "இப்போ பார்க்கிறதுக்கு எப்படி இருக்கத் தெரியுமா...? அப்படியே அப்சரஸ் போல் அழகாயிருக்க... இதைப் போடவா நீ இவ்வளவு தயங்கின...? இனிமேல் நீ சுடிதாரே போடு... தாவணியை விட இது தான் உனக்கு ரொம்ப அழகாயிருக்கு..." என்றவன் மேலும் அவளை அணைக்க அருகில் வந்த போது அவளது கையிலிருந்த கேக் அதற்குத் தடையாக இருந்தது...

"நீ கேக் ஊட்டணும் தான் நான் இன்னும் கேக் சாப்பிடலை... நீ எனக்கு ஊட்டி விடுவாயா பேபி...?" குழைந்த குரலில் கேட்டவனின் வார்த்தையைத் தட்ட முடியாது மறுபேச்சின்றி அவள் அவனுக்கு ஊட்டி விட,

"தேங்க்ஸ் பேபி..." என்றபடி ஊட்டிவிட்ட அவளது கைக்கு முத்தம் ஒன்றை வைத்தவன் தானும் அவளுக்கு ஊட்டிவிட எண்ணி கேக் துண்டை எடுத்து அவளது வாயருகில் கொண்டு சென்றான்...

அவனது மனம் வருத்தப்படக் கூடாது என்று எண்ணி அதை வாங்கிக் கொண்டவளுக்கு அதை உண்ணத்தான் முடியவில்லை... தொண்டையில் எதுவோ அடைத்தார் போன்றதொரு உணர்வு... அடுத்த நொடி அவனது நெஞ்சில் சாய்ந்து ஓவென்று கதறியழுது விட்டாள்...

"ஹேய் பேபி... எதற்காக அழுகிறாய்...?"

அவளது அழுகை கண்டு என்ன காரணம் என்று அறியாது அவனுமே பதறித்தான் போனான்... அவன் கேட்டதற்கு அவள் எந்தப் பதிலும் சொல்லவில்லை... அழுகையையும் நிறுத்தவில்லை...

அவளது அழுகையை நிறுத்தும் வழியறியாது ஒரு நொடி திகைத்தவன், அடுத்த நொடி அவளை இறுக அணைத்து ஆறுதல் படுத்தினான்... இப்போதைக்கு அவனால் செய்ய முடிந்த ஒரே காரியம் இது ஒன்று தான்... மெல்ல அழுகை குறைந்து தேம்பி கொண்டிருந்தவளை கண்டு அவன் மென்மையாகக் கேட்டான்...

"எதற்காக இந்த அழுகை பேபி...?"

அதில் அவனது நெஞ்சில் சாய்ந்திருந்தபடி அண்ணாந்து அவனை நிமிர்ந்து பார்த்தவள், "இன்று... இன்று..." என்று கூறி அவள் தேம்ப...

"இன்றைக்கு என்னடா...?"

அவளது நெற்றியில் விழுந்த முடிக்கற்றையை மென்மையாய் ஒதுக்கி விட்டபடி கனிவுடன் கேட்டவனின் விழிகள் அவளைக் கருணையுடன் பார்த்துக் கொண்டிருந்தது...

"இன்று என் அம்மாவின் நினைவு தினம்..."

அதற்கு மேல் பேச முடியாது அவள் அவனது மார்பில் முகம் புதைத்து மீண்டும் அழ தொடங்கினாள்... முதலில் அவள் கூறியது அவனது மூளையில் ஏறவில்லை... பிறகு அது உறைத்ததும் அடுத்த நொடி,

"பேபி..." என்கிற கதறலோடு அவன் அவளை அணைத்துக் கொண்டான்...

"உனக்கு நானிருக்கிறேன் பேபி..." என்று அவனது உதடுகள் அவளிடத்தில் விடாது முணுமுணுத்து ஆறுதல் அளித்தது...

அந்தக் கணம் அவன் முடிவு செய்தான்... அவளது துக்கத்தில் தானும் பங்கு போட எண்ணியவனாய் தனது பிறந்தநாளை இனிவரும் காலங்களில் ஒரு போதும் கொண்டாட போவதில்லை என்று மனதிற்குள் உறுதி எடுத்துக் கொண்டான்...

தன்னவளை ஒரு சேயாய் தனது நெஞ்சில் தாங்கி கொண்டான் அந்தத் தாயுமானவன்...

அவனின் காதல் மனம் அறியாத அந்தப் பேதை பெண் அவனது அணைப்பில் தன்னை மறந்து அழுகையில் மூழ்கி தனது சோகத்தினை மெல்ல மெல்ல கரைத்து கொண்டிருந்தாள்...

"விழி தீண்டலில் காதலனாய் உறைய செய்தாய்...
ஊன் தீண்டலில் கணவனாய் சிலிர்க்கச் செய்தாய்...
விழியும் தீண்டாது, ஊனும் தீண்டாது உன் விழிநீர்
என்னைத் தீண்டியதில் காதலையும், காமத்தையும்
கடந்து என்னுள் ஏதோ ஒன்று மொட்டவிழ்கிறதே...
காதலை தாண்டி காமத்தை வெல்லும் உணர்வு
அது தாய்மையில் மட்டுமே சாத்தியம்...
காதலனாய் வாழாது, கணவனாய்க் கூடாது
தாயுமானவனானேன் உனக்கு...
நீ என்றுமே எனக்குச் சேயாவாய்...!!!"

நனவாகும்...!!!

சித்தார்த் என்னும் கருங்கல் தன்னவளின் கண்ணீர் துளிகளில் களிமண்ணாய் கரைந்து கொண்டிருந்தது... இதுநாள் வரை அவன் எந்தவொரு உணர்ச்சிகளுக்கும் ஆட்படாதவன்... பூகம்பமே வந்தாலும் அசராது நின்று அதை அசால்ட்டாய் எதிர் கொள்ளும் அஞ்சா நெஞ்சன்... வாழ்க்கையிலும் சரி, தொழிலிலும் சரி பல இக்கட்டான நேரங்களைத் தனது புத்தி சாதூர்யத்தால் மாற்றியமைத்து அதை வெற்றிகரமாகக் கடந்து வந்தவன்... அப்படிப்பட்டவன் பிரகதீஸ்வரியின் துயரம் கண்டு அதைத் தன்னுடைய துயராய் எண்ணி மனம் கலங்கி நின்றான்... அவனது விழிகளும் லேசாகக் கலங்கியதோ...

வெகுநேரம் அழுது கொண்டிருந்தவளின் அழுகை ஒரு கட்டத்தில் தேம்பலுடன் முடிவுக்கு வந்தது... ஆனால் அவனின் துக்கம் இன்னமும் முடிவுக்கு வராமல் அவளுக்காகத் தவித்துத் துடித்தது...

தனது துக்கத்தை அவனிடத்தில் இறக்கி வைத்ததாலோ என்னவோ அவள் தன்னைச் சிறிது சிறிதாக மீட்டு கொண்டாள்... அழுத விழிகளைத் துடைத்துக் கொண்டு அவனிடம் இருந்து விலகியவள்,

"சாரி..." என்றாள்...

அவளது வேதனை சுமந்திருந்த முகத்தினைக் கண்டு தானும் மனம் கசங்கியவனாய் அவளது மதி முகத்தைத் தனது கைகளில் ஏந்தியவன் அவளது விழிகளோடு தனது விழிகளைக் கலக்க விட்டான்... இங்குமங்கும் அலைப்பாய்ந்து பரிதவிக்கும் அவளது விழிகள் சொல்லாமல் சொல்லியது அவளது மனதின் அலைப்புறுதலை...

"உனக்கு யாரும் இல்லைன்னு நீ கவலைப்படக் கூடாது... உனக்கு நானிருக்கிறேன் பேபி... உன் அம்மாவா, உன் அப்பாவா உன்னைப் பத்திரமா நான் பார்த்துக்கிறேன்...

இனி வரும் காலங்களில் உனக்கு எல்லாமுமாக நானிருப்பேன்..."

அவனது வார்த்தைகள் அவளுக்கு எந்தளவுக்கு ஆறுதலை அளித்தது என்பதினை அவளால் வார்த்தைகளில் கூற முடியவில்லை... ஆனால் அவனது ஆறுதலை அவள் முழுமையாக உணர்ந்தாள்... அதில் அவள் சுகமாய்க் கரைந்தாள் என்பது தான் உண்மை...

விழிகளில் நீர் தேங்க 'ஆம்' என்பது போல் தலையசைத்தவளை கண்டு உள்ளம் நெகிழ அவளது நெற்றியில் முத்தமிட்டவன் அடுத்த நொடி அவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்...

இந்தச் சிறிய வயதில் அவளுக்கு இத்தகையைத் துன்பத்தைக் கடவுள் கொடுத்திருக்க வேண்டாம் என்றே அவனுக்குத் தோன்றியது... ஒரு போதும் கடவுளை நினைத்திராதவன் இப்போது அவளது துன்பத்தினைக் கண்டு கடவுளை நிந்தித்தான்...

அதிலும் மற்றவர்களின் சந்தோசத்திற்காகத் தனது துக்கத்தினை மறைத்துக் கொண்டு வெளியில் சாதாரணமாய் நடமாடிய பிரகதீஸ்வரியின் பெருந்தன்மையான குணம் கண்டு அவனுக்கு வியப்பாக இருந்த அதே சமயம் வேதனையாகவும் இருந்தது... அப்படி மகிழ்ச்சியாக இருப்பது போல் எல்லோரிடமும் காட்டி கொள்வதற்காக அவள் மனதளவில் எத்துணைக் கஷ்டப்பட்டு இருக்க வேண்டும் என்று...

அந்தக் கணம் அவனுக்கு அவனது அத்தை விமலாராணி மீது பெரும் கோபம் வந்தது... ஒரு சின்னப் பெண்ணைத் துயரில் துவள விட்டு விட்டு அவர்கள் மட்டும் மகிழ்ச்சியாய் பொங்கலை கொண்டாடி இருக்கிறார்களே என்று... அவள் தான் தன்னால் யாரும் வருத்தப்படக் கூடாது என்று தன் மனதை மறைத்து நடந்து கொண்டாள் என்றால், பெரியவரான விமலாராணிக்கு புத்தி எங்கே போனது...?

அதை அவன் தன்னவளிடம் வாய் விட்டும் கேட்டு விட்டான்... அவன் சொன்னது கேட்டு அவனை நிமிர்ந்து பார்த்தவள்,

"அம்மா மேல் எந்தத் தவறும் இல்லை... அவங்க ஒண்ணும் சொன்னது இல்லை... அப்பா தான் 'நம்ம துக்கம் நம்மோடு' என்று சொல்லிவிட்டார்..."

"அதான் ஏன்...?" அவனுக்கு அது புரியவில்லை...

"இந்த ஊரில் விவசாயம் தான் பிரதான தொழில்... பொங்கல் என்பது உழவர்களின் திருநாள்... பொங்கலை மட்டுமே இந்த ஊர் மக்கள் திருவிழா போல் கோலாகலமாகக் கொண்டாடுவார்கள்... அறுவடை செய்து வரும் புது அரிசி போட்டு பொங்கல் வைத்து சூரிய பகவானுக்கு நன்றி சொல்லி படைக்கும் இந்தச் சந்தோசத்தை நாம் நமது துக்கத்தால் கெடுக்க வேண்டுமா...?"

அவள் கூறியதை கேட்டு அவன் ஆச்சிரியமாக அவளைப் பார்த்தான்... அவன் எல்லாம் முதலில் பார்ப்பது அவனது நலன் மட்டுமே... யார் எப்படிப் போனாலும் அவனுக்கு அவனது நலன் மட்டுமே முக்கியம்... அதாவது பொதுநலத்தை விடச் சுயநலமே அவனை எப்போதும் ஆட்சி செய்யும்...

இங்கு என்னடா என்றால் அவனவள் ஊர் மக்களுக்காகத் தனது துக்கத்தினை மறைத்துக் கொண்டு சந்தோசமாக நடமாடி கொண்டு இருக்கிறாளே... அவளைக் கண்டு வியப்பதா இல்லை முட்டாள் என்று பரிகசிப்பதா என்று அவனுக்குத் தெரியவில்லை...

இவளை போன்று யாரும் தங்களது துயரை அடுத்தவர்களுக்காக மறைக்க மாட்டார்கள்... அவள் மேல் பெரிதும் மரியாதை வைத்திருக்கும் இந்த ஊர் மக்கள் கூட நாளை அவளுக்காக என்றாலும் தங்களது சந்தோசத்தையோ, துக்கத்தையோ இது போல் மறைக்க மட்டார்கள்...

இந்த உலகமே சுயநலத்தால் ஆனது... அதில் நாமும் அது போல் வேடம் தரித்தால் மட்டுமே தப்ப முடியும் என்று அந்தச் சின்னப் பெண்ணிற்கு எப்படி எடுத்துரைப்பது என்று தெரியாது விழித்தான் அவன்... அப்படியே அவன் சொன்னாலும் அதை அவள் புரிந்து கொள்வாளா என்று அவனுக்குப் பெருத்த யோசனையாக இருந்தது...

அதையே தான் அவளும் சொன்னாள்...

"அம்மா இறந்த முதல் வருசம் ஊர் மக்கள் யாரும் பொங்கல் விழாவை கொண்டாட முடியாதுன்னு சொல்லி மறுத்துட்டாங்க... ஆனா அப்பா அப்படிச் செய்ய விடலை... நமக்கு வாரி வழங்கும் பூமி தாய்க்கு நாம் செய்யும் மரியாதை இந்த விழா... கண்டிப்பாக இதை நாம் கொண்டாடி தானாக வேண்டும்ன்னு உறுதியா சொல்லிட்டாங்க... அதை இந்த மக்களாலும் மறுக்க முடியவில்லை... இதோ அப்பா போன பின்பும் அவரது வார்த்தைக்குக் கட்டுப்பட்டுக் கொண்டாடிக்கிட்டு இருக்காங்க..."

'உங்கப்பா சொன்னதுக்காக இல்லை பெண்ணே... அவங்க சந்தோசத்துக்காக அவங்க கொண்டாடுகிறார்கள்...' என்று நுனிநாக்கு வரை வந்த வார்த்தைகளை அவன் மென்று கஷ்டப்பட்டு உள்ளே தள்ளினான்...

இந்நேரம் அவன் அதைச் சொன்னால் அவன் தான் அவளுக்குப் பைத்தியக்காரனாகத் தோன்றுவான்... அதனால் அவள் போக்கிலே சென்று தான் அவளைச் சரி செய்ய வேண்டும் என்று எண்ணி அமைதியானான்...

அவளைக் காணும் முன் மனதில் நினைத்ததைப் பட்டென்று முகத்தில் அடித்தார் போன்று ஆணித்தரமாய்ப் பேசிய சித்தார்த் இப்போது இல்லை... அவளது அன்பு அவனைப் பெரிதும் மாற்றியிருந்தது...

"அதுவே எனக்குப் பழக்கமாகி விட்டது... எனது துக்கம் என்னோடு என்று நானும் அதை எனக்குள் புதைத்து

கொண்டேன்..." என்றவளை சித்தார்த் ஆதூரத்துடன் பார்த்தான்...

அவனது நெஞ்சில் முகம் புதைத்து அழுததில் அவளது முடிகள் அங்காங்கே சிலுப்பிக் கொண்டு கலைந்திருந்தது... அதை எல்லாம் ஒதுக்கி விட்டு அவளது கண்ணீரை துடைத்து விட்டவன் அவளது பால்நிலா போன்ற மாசுமருவில்லாத முகத்தைப் பார்த்தபடி,

"யாரிடமும் நீ சொல்ல தேவையில்லை... ஆனால் என்னிடம் நீ சொல்லியிருக்கலாமே..."

"உங்க பிறந்தநாள் அதுவுமா உங்களைக் கஷ்டப்படுத்த வேண்டாம்ன்னு..."

"அப்போ நீயும் நானும் வேறு வேறா...?" ஆழ்ந்து ஒலித்த அவனது குரலில் அவனைப் பார்த்தவள் அவனது ஆழ்ந்த பார்வையில் அவனுள் சுகமாய் மூழ்கி போனாள்...

'இல்லை' என்பது போல் அவளது தலை தானாய் மறுப்பாய் அசைந்தது...

"பிறகு ஏன் நீ சொல்லலை...? இதை முன்னமே சொல்லியிருந்தால் நான் உன்னிடம் கோபப்பட்டிருக்க மாட்டேனே... உன்னை வார்த்தைகளால் கஷ்டப்படுத்தியும் இருந்திருக்க மாட்டேன்..."

வேதனையுடன் சொன்னவனைக் கண்டு அவளது இதழ்களில் புன்னகை பூத்தது...

"ஆனாலும் உங்களுக்கு ரொம்பக் கோபம் வருது... என்ன ஏதென்று ஆராயாமல், யோசிக்காமல் அது என்ன அப்படி ஒரு கோபம்...? உம்...?"

இதுவரை சேயாய் ஆறுதல் தேடி தன்னிடத்தில் அடைக்கலமாகி இருந்தவள் இப்போது தாயாய் மாறி தன்னை அதட்டுவதைக் கண்டு அவனும் தனது வருத்தத்தை மறந்து புன்னகைத்தான்...

"கோபப்படவில்லை என்றால் அது சித்தார்த் இல்லையே..."

அவளது கூர்மூக்கை பிடித்து ஆட்டியபடி அவன் அவளைக் கொஞ்சி பேசினான்... அவனது கொஞ்சலில் அவளது வருத்தம் பனித்துளியாய் கரைந்து போனது...

"நீ என் சொல் பேச்சு கேட்டால் நான் ஏன் கோபப்படப் போகிறேன்...?" இரு புருவம் தூக்கி அவன் அவளைக் கேள்வி கேட்க... அதில் பாவையவள் மனம் உருகிய போதும் முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு,

"நீங்க யோசிக்காது கோபம் கொள்வது போல், என்னாலும் யோசிக்காது உங்க பேச்சு எல்லாவற்றையும் சரியென்று கேட்க முடியாது... ஆராயாமல் என்னால் தலையாட்டவும் முடியாது..."

பிரகதீஸ்வரியின் விழிகளில் அத்தனை காதல் வழிந்த போதும் அவள் ஆணித்தரமாகப் பேசியது கேட்டு அவன் வியப்பாய் தனது புருவங்களை உயர்த்தினான்...

"அதற்கும் ஒரு காலம் வரும்... அப்போது என்ன ஏதென்று ஆராயாமல் என் பேச்சினை நீ கேட்க தான் போகிறாய்... நான் கூறுவதை நீ ஆமோதித்து ஏற்றுக் கொள்ளத்தான் போகிறாய்... அதே போல் நான் காட்டும் வழியில் பின்பற்றி நடக்கத்தான் போகிறாய்..." என்று அவனும் விட்டு கொடுக்காது உறுதியாய்க் கூறினான்...

அதில் அவளது மனம் நெகிழ்ந்து போனது...

"நிச்சயம் நீங்க காட்டும் வழியில் நடக்கத்தான் நான் ஆசைப்படுகிறேன்... உங்க பேச்சு கேட்டு நடக்கத்தான் எனக்குமே விருப்பம்..." என்றாள் அவள் உளமார...

அதைக் கேட்டு அவனுக்கு அந்த விண்ணை வசப்படுத்திய ஒரு உணர்வு...

"இப்போதாவது என்னைப் புரிந்து கொண்டாயே..."

"புரியாமல் தான் இந்நேரம் உங்களைச் சந்திக்க வந்தேனா...?" என்று கூறியவளின் முகத்தில் மெல்லிய நாணம் படர்ந்தது...

சூழ்ந்திருந்த இருள் அவளது சிவந்த முகத்தைக் காணும் பாக்கியத்தை அவனுக்கு அளிக்கவில்லை என்றாலும், அவனாக ஊகித்துக் கொண்டு மனக்கண்ணில் அவளின் சிவந்த முகத்தை ரசித்துப் பார்த்தான்...

"அதான் ஏன்...?" என்று கேட்டவனின் குரலில் குறும்பு கூத்தாடியது...

அதில் அவனை உற்று நோக்கியவளின் விழிகளில் பளபளத்த விழிநீர் அவளது மனதினை அவனுக்கு நன்கு எடுத்துரைக்க,

"ப்ச்... திரும்பவும் எதற்கு...?" என்று அவன் அவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்...

"உங்க கோபம் என்னை ரொம்பவும் பாதிக்கிறது... என்னால் ஒரு வேலையும் செய்ய முடியவில்லை... உங்களது கோபம் கண்டு நான் என்னுடைய சிந்திக்கும் திறனை இழந்து, என்னை முற்றிலும் மறந்து போகிறேன்... அந்தக் கணம் நான் நானாக இல்லை... எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு... இனிமேல் நீங்க கோபப்படாதீங்க..."

சிறு குழந்தையாய் தேம்பியவளை ஆறுதலாய் அவன் அணைத்துக் கொண்ட போதும் ஒரு காதலனாய் அவனிடத்தில் தனிச் செருக்கு எட்டிப் பார்த்தது என்னவோ உண்மை... அவளின் ஒட்டுமொத்த பலவீனம் அவனாக இருப்பதில் அப்படியொரு கர்வம் அவனுக்கு...

வருங்காலத்தில் தன்னவளின் பலவீனத்தைக் கொண்டு தான் அவளைச் சூறாவளியாய் சுழற்றியடிக்கப் போகிறோம் என்பதை அவன் கனவிலும் நினைத்திருக்க மாட்டான்...

நிகழ்காலத்தில் நினையாததை வருங்காலத்தில் நடத்தி காட்டுவது தான் எதிர்காலம் என்பதினை அந்தக் கணம் இருவருமே உணரவில்லை...

இருவரிடையே இருந்த காதல் அவர்களது கண்களை மறைத்தது மட்டுமல்லாமல் அவர்களது தனித் தனிக்

கொள்கைகள் கொண்ட பாதைகளையும் சேர்த்து மறைத்தது...

இணைகோடுகள் என்றுமே இணைய முடியாது என்பது சபிக்கப்பட்ட விதி... விதி கொடூரமாய்த் தங்களது தலைவிதியை எழுதியது தெரியாமல் இருவரும் காதலில் கசிந்துருகி கொண்டிருந்தனர்...

இன்னமும் இருவரும் வாய் விட்டு தங்களது காதலை சொல்லி கொள்ளவில்லை... ஆனால் அந்தக் காதலை தங்களது இணைக்கு ஒவ்வொரு நொடியும் உணர்த்திக் கொண்டிருந்தனர்...

"நிச்சயம் நீ சொல்வது போல் எல்லாம் என்னால் கோபப்படாமல் இருக்க முடியாது..." என்றவனை அவள் தவிப்புடன் பார்த்தாள்... அவளது தவிப்பினை அவளது விழி வழியே படித்தவன் அதன் மீது மென்மையாய் முத்தமிட்டு,

"ஆனால் உனக்காக எனது கோபத்தினைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைத்து கொள்கிறேன்..."

அவன் அப்படிக் கூறியதும் தான் அவள் நிம்மதி அடைந்தாள்...

"சரி நேரமாகிவிட்டது... நாம் போகலாமா..." என்று அவன் கேட்டதும் தான் அவளுக்குச் சுற்றுப்புறம் உறைத்தது...

"ஆமாம்... நேரமாகிவிட்டது..." என்று கூறியவள் தானும் எழுந்தாள்...

இருவரும் கீழே வரும் போது அவள் பூனை போல் பதுங்கி பதுங்கி வந்தது கண்டு அவனது கண்கள் யோசனையாய் இடுங்கியது...

"எதற்கு இந்தப் பயம்...?"

கோபப்பட மாட்டேன் என்று கூறியவனின் வார்த்தையில் லேசாகக் கோபம் எட்டி பார்த்தது...

"அது வந்து... யாராவது பார்த்து விட்டால்...?" சுற்றிலும் கண்களை ஓட்டியபடி கூறியவளை கண்டு,

"பார்த்தால் பார்த்துவிட்டு போகட்டும்... அப்படியாவது உன்னை எனக்குக் கல்யாணம் பண்ணி கொடுக்கிறாங்களான்னு பார்ப்போம்... இப்படித் தவிப்போடு காத்திருக்க முடியலைடி பேபி..." என்று அவன் அவஸ்தையாய் முணுமுணுத்தான்...

"என்ன சொன்னீங்க...?" சுற்றுப்புறத்தில் தனது கவனத்தை வைத்திருந்தவள் அவனது முணுமுணுப்பை கவனிக்கவில்லை...

"நீ இப்படிப் பயப்படும் அளவுக்கு நீயும், நானும் திருட்டுத்தனம் பண்ணலை..." அவனது அழுத்தமான குரலில் அவனைக் கலவரமாய்ப் பார்த்தவள்,

"இப்படி யாருக்கும் தெரியாமல் மொட்டை மாடியில் தனியே சந்திப்பது தவறு இல்லையா...?"

அறியா பிள்ளையாய் முழித்தவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"தவறு தான்... ஆனால் அதே சமயம் சரியும் கூட..." என்றான் அவன் புரியாத புதிராய்...

"நீங்க பேசுறது, செய்றது எதுவுமே எனக்குப் புரிய மாட்டேங்குது..."

"இந்தச் சித்தார்த்தை புரிந்து கொள்வது அவ்வளவு எளிதல்ல பேபி... ஆனால் வருங்காலத்தில் என்னைப் பற்றி முழுதாய் புரிந்து கொள்ளப் போகும் ஒரே ஜீவன் நீ மட்டும் தான்..."

"இதோ இப்போதும் நீங்க புரியாத மாதிரி தான் பேசுறீங்க..."

அவள் கூறிய பாவனையில் அவன் வாய் விட்டு சிரித்து விட்டான்...

"நிச்சயம் ஒரு நாள் உனக்குப் புரியும்படி நான் பேசுவேன்... கவலைப்படாதே..."

இருவரும் பேசி கொண்டே தங்களது அறை பக்கம் வந்திருந்தனர்... அவளது அறை முன் நின்று அவளை வழியனுப்பி வைக்கும் போது அவன்,

"எனக்காக உனது வருத்தத்தை ஒதுக்கி நான் கொடுத்த ட்ரெசை போட்டதற்குத் தேங்க்ஸ் பேபி..."

சுடிதாரில் எழிலுற நின்றிருந்தவளின் அழகு அவனது மனதினை மயக்கிய போதும் அவளின் மனம் அறிந்தவனாய் தனக்குள் கட்டுப்பாட்டை விதித்துக் கொண்டு அமைதியாக நின்றிருந்தான்...

"உங்க கோபத்தைப் போக்க எனக்கு வேறுவழி தெரியலை... அதனால் தான்..." என்று மெதுவே முணுமுணுத்தவளை கண்டு அவனது மனம் இரங்கியது...

"சாரி பேபி... ரொம்பக் கஷ்டப்படுத்துகிறேனோ..." அவனது உண்மையான வருத்தத்தைக் கண்டு தனது வருத்தத்தினை ஒதுக்கி வைத்தவள்,

"இல்லை இல்லை... எனது அம்மா இறந்த நாளில் எனக்கு இன்னொரு அம்மாவாய் நீங்க கிடைச்சு இருக்கீங்க... உண்மையில் இன்று நான் ரொம்பச் சந்தோசமாக இருக்கிறேன்..."

பளிச்சென்று புன்னகையுடன் கூறியவளை அவன் இமைக்காது பார்த்தான்... தாய் ஸ்தானத்திற்குத் தன்னை உயர்த்தி மரியாதை செய்த தன்னவளை கண்டு அவனது மனம் நெகிழ்ந்தது...

"இதை நீ ஒரு போதும் மறவாதே..." என்றவனின் குரல் கரகரத்து ஒலித்தது...

சரியென்பது போல் தலையசைத்தவளை கண்டு அவனும் பேச முடியாது தலையசைத்து விடைப்பெற்றுச் சென்றான்... இருவரின் மனமும் அந்தளவிற்கு நெகிழ்ந்திருந்தது...

நாளை பற்றி யோசியாது இருவருமே இன்றைய நிகழ்வின் நினைவில் சுகமாய் உறங்கி போயினர்...

மறுநாள் காலையில் சித்தார்த் குளித்து முடித்துக் கிளம்பியவன் நேரே வந்து நின்றது தனது தந்தையின் முன் தான்...

"அப்பா..." தயக்கத்துடன் நின்றிருந்த மகனை ஆச்சிரியத்துடன் பார்த்தார் மார்த்தாண்டம்...

சிறு வயதில் தன்னிடம் தயக்கம் கொண்டு பேசும் சிறுவனாக அவன் அவரது கண்ணிற்குத் தோன்றினான்...

"என்ன சித்து...?"

"எனக்கு... எனக்கு வேஷ்டி கட்டணும் போலிருக்கிறது..."

அதைத் தந்தையிடத்தில் சொல்வதற்குள் அவனது முகம் சிவந்து போனது...

"அதுக்கு என்னப்பா நான் சொல்லி கொடுக்கிறேன்..." என்றவர்,

தன்னுடையை வேட்டிகளில் புதியதாய் இருந்த ஒன்றை எடுத்து மகனுக்கு அதைக் கட்டும் முறையைச் சொல்லி கொடுக்க ஆரம்பித்தார்...

"நீ முதலிலேயே சொல்லியிருந்தால் ரெடிமேட் வேஷ்டி வாங்கியிருக்கலாம்... அது கட்டுவதற்கு ரொம்ப ஈசி..."

"ரெடிமேட் வேஷ்டி இருக்கிறதா என்ன...?"

சித்தார்த்திற்கு ஆச்சிரியமாக இருந்தது... அவனுக்கு அது தெரியாதே... தெரிந்திருந்தால் வாங்கிக் குவித்திருக்க மாட்டானா...? இப்போதும் ஒன்றும் கெட்டு போகவில்லை... பொங்கல் விடுமுறை முடிந்ததும் வேட்டிகளை வாங்கிக் குவிப்பது தான் அவனது முதல் வேலை...

தந்தையின் உதவியுடன் சித்தார்த் வேட்டி கட்டி முடித்து வெளியில் வந்தவனின் கண்கள் தன்னவளை தான்

முதலில் தேடியது...

அவனது மனம் அறியாத பிரகதீஸ்வரியோ கையில் மஞ்சள் தண்ணீர் அடங்கிய சொம்புடன் தனது மாமன் மகனை துரத்தி கொண்டிருந்தாள்...

"அத்தான்... இந்தத் தடவையாவது நீங்களே வந்து மாட்டிக்கோங்க... இல்லைன்னா நடக்கிறதே வேறு..." என்று செல்லமாக ஹரிப்ரசாத்தை மிரட்டியபடி அவனைத் துரத்தினாள்...

"இதையே தான் வருசா வருசம் சொல்கிறாய் என் அத்தை மகளே... ஒரு நாளாவது நீ என் மேல் மஞ்ச தண்ணி ஊத்தியிருக்கியா...? அது இந்த ஜென்மத்தில் உன்னால் முடியாது..." என்று சவால் விட்டபடி ஹரி வீட்டை சுற்றி ஓடி கொண்டிருந்தான்...

வீட்டை ஒரு சுற்று சுற்றி விட்டு வாயிலின் முன் வந்து நின்ற ஹரி மீது பிரகதீஸ்வரி நீரை ஊற்ற முயன்ற போது அந்நேரம் சரியாகச் சித்தார்த் அவளைத் தேடி அங்கு வருகை தந்தான்... அடுத்த நொடி அவனோடு சேர்த்து அவன் கட்டியிருந்த புது வேட்டியும் மஞ்சள் நீரால் அபிசேகமானது...

திடுமென அவள் செய்த வேலையால் சித்தார்த் திகைத்து விழிக்க, ஹரியோ கேலியாய் சிரித்தான் தனது அத்தை மகளை நோக்கி...

"இந்தத் தடவையும் கோட்டை விட்டுட்டியே அம்மு..."

அத்தான் மீது கோபம் வந்த போதும் சித்தார்த் மீது மஞ்சள் நீரை ஊற்றியதில் பாவையவளின் முகம் அந்தி வானமாய்ச் சிவந்து போனது...

"அடுத்தத் தடவையாவது முயற்சி செய் அம்மு..." என்று கிண்டலாய் உரைத்தபடி ஹரி அங்கிருந்து நகர்ந்து சென்று விட்டான்...

"என்ன பேபி இது...? இப்படிப் பண்ணிட்டியே...? நான் முதன்முறையாக வேஷ்டி கட்டியதை உன்னிடம் காட்ட வந்தால்... த்ச்சு..." என்று சலித்தபடி தன் மீதிருந்து வழிந்த நீரை அவன் கைகளால் வடித்தெடுத்தான்...

அவனின் வருத்தம் கண்டு அவள் களுக்கென்று சிரித்தாள்... அதில் அவனது வருத்தம் மறைந்து அவனது முகத்திலும் புன்னகை தோன்றியது...

"என்னோட கவலை உனக்குச் சிரிப்பா இருக்கிறதா...?"

கோபம் போல் கூற வேண்டிய வார்த்தைகளை அவன் சிரித்தபடி கூற, அதைக் கண்டு அவளது புன்னகை மேலும் விரிந்தது...

"இதுக்கு நீங்க கவலைப்படவே வேண்டாம் மிஸ்டர். சித்தார்த்..."

"அடிங்... என்னையவே பெயர் சொல்லி கூப்பிடுறியா..." என்றவன் அவள் அடுத்து கூறிய வார்த்தையில் சிறகில்லாமல் ஆகாயத்தில் பறந்தான்...

"கட்டிக்கிற முறையுள்ள முறைமாமன் மீது தான் எங்க கிராமத்து பொண்ணுங்க மஞ்சள் தண்ணி ஊத்துவோம்..."

"அப்போ நான் உன்னைக் கட்டிக்கிற முறையுள்ள முறைமாமன் என்பதை நீ ஒத்துக்கிறியா...?" கண்கள் பளபளக்க தன்னருகில் வர முயன்றவனைப் பார்த்து,

"ஒத்துக் கொள்ளாமல் தான் நேற்றிரவு நீங்க வாங்கிக் கொடுத்த ட்ரெசை போட்டுக் கொண்டு உங்களைப் பார்க்க வந்தேனா...?"

அவளது வார்த்தையில் மனம் மகிழ்ந்தவனாய், "பேபி..." என்றபடி அவளைத் தொடுவதற்காக அவன் கையை நீட்ட...

அவனின் கையில் அகப்படாமல் சிரித்தபடி அவள் நழுவி ஓடி விட்டாள்...

"ச்சே..." அவளைத் தவற விட்ட இயலாமையில் தனது தலையைக் கோதி கொண்ட சித்தார்த்தின் விழிகளில் வருங்காலக் கனவு மின்னியது... அதில் அவனும், அவளும் மட்டுமே...

பிரகதீஸ்வரியிடம் இருந்து தப்பித்து வந்த ஹரிப்ரசாத் சங்கமித்ராவிடம் மாட்டி கொண்டான்... பிரகதீஸ்வரி அவனைத் துரத்தி கொண்டு சென்ற போதே அவள் கைகளில் மஞ்சள் தண்ணீருடன் அவனை எதிர்கொள்ளத் தயாராகி விட்டாள்... சமயம் பார்த்து காத்திருந்தவள் அவன் தனியே வருவதைக் கண்டு மகிழ்ச்சி பொங்க அவன் மீது மஞ்சள் தண்ணியை ஊற்றி விட்டாள்...

பிரகதீஸ்வரி வருகிறாளா என்று பின்னால் திரும்பி பார்த்துக் கொண்டு வந்த ஹரி சங்கமித்ராவை கவனிக்கவில்லை... அவளின் செயலில் முதலில் திகைத்தவன் பின் சிரித்துக் கொண்டே,

"என்னங்க நீங்க டாக்டரா இருந்துட்டு இப்படிச் சின்னப் பிள்ளை மாதிரி விளையாண்டுக்கிட்டு...?"

அவன் அவளைக் கடிய எல்லாம் செய்யவில்லை... மாறாகச் சிறு பிள்ளை போல் நடந்து கொள்ளும் மருத்துவரான அவளைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு தான் வந்தது...

"டாக்டரா இருந்தா அவங்களுக்கும் மனசு இருக்கக் கூடாதா...?"

அவளது கூர்மையான வார்த்தையில் அவனது விழிகள் கூர்மையாய் அவளைப் பார்த்தது...

"என்ன சொல்ல வர்றீங்க...?"

"நான் என்ன சொல்ல வர்றேன்னா..." என்றபடி அவள் அவன் அருகே நெருங்க... அவனோ யோசனையாய் பார்த்தபடி பின்னால் நகர்ந்தான்...

சுவரோரமாய் அவனைச் சாய்த்தவள் அவன் அருகில் நெருங்கி நின்று, "இந்த டாக்டர் பொண்ணோட இதயம்

உங்களுக்காகத் துடிக்குதுன்னு சொல்ல வர்றேன்... இன்னும் சொல்ல போனால் உங்களுக்காக மட்டுமே துடிக்கும்..."

அவள் கூறியதன் அர்த்தம் புரியாமல் இருக்க அவன் ஒன்றும் சிறுவன் இல்லையே...

"ஆனால் என்னோட இதயம் உங்களுக்காகத் துடிக்கலைங்க... அது மட்டும் என்னால் உறுதியா சொல்ல முடியும்..." என்றவன் அவளை விட்டு விலகி நடந்தான்...

"இதுக்கு என்ன அர்த்தம்...?" அடக்கப்பட்ட அழுகையுடன் ஒலித்தது சங்கமித்ராவின் குரல்...

காதலை முதலில் சொல்லும் பெண்ணிற்கு மட்டும் ஏன் எப்போதுமே தோல்வி ஏற்படுகிறது...? ஒரு பெண்ணின் காதல் நிறைவேற வேண்டுமானால் அதற்கும் அந்த ஆண் தான் மனம் வைக்க வேண்டுமா...? அவளது உள்ளம் குமுறிக் கொண்டு வந்தது...

"ஒரே அர்த்தம் தான்... எனது இதயத் துடிப்பு வேறு ஒருத்திக்கு சொந்தமானது..." என்றுரைத்தவன் அவளின் பதிலை எதிர்பாராது சென்று விட்டான்...

சங்கமித்ரா மனதின் வலியை தாங்க முடியாது சுவற்றின் மீது சாய்ந்து நின்றாள்... அவளது கண்களில் கண்ணீர் வழிந்தது... தனது காதல் மொட்டிலேயே கருகி போனதை நினைத்து அவளுக்கு அத்தனை வேதனையாக இருந்தது...

தன்னை அழகாக அலங்கரித்துக் கொண்டு வெளி வாயிலுக்கு வந்த ஸ்வேதா அங்கு நடப்பதை வேடிக்கை பார்த்து கொண்டிருந்தாள்... கிராமத்து இளம் பெண்கள் கையில் மஞ்சள் நீர் அடங்கிய சொம்புடன் தங்களது மனம் கவர்ந்த மாமன்களைத் துரத்தி கொண்டு ஓடினர்... இது எல்லாம் அவளுக்குப் புதிதாக இருந்தது... அவர்களது வீட்டின் முன்னும் மஞ்சள் நீர் அடங்கிய பெரிய அண்டா இருந்தது...

அதைக் கண்டவள் சும்மா அதில் கையை அலைய விட்டு விளையாடி கொண்டு இருந்தாள்...

"மஞ்சள் தண்ணி பார்த்ததும் உன் அத்தான் என் நினைவு உனக்கு வரலையா ஸ்வேதா...?" என்று திடுமென ஒலித்த குரலில் திடுக்கிட்டு நிமிர்ந்தாள் ஸ்வேதா...

அங்குச் சரவணன் புன்னகையுடன் நின்றிருந்தான்... ஏனோ அவனைக் கண்டாலே அவளுக்குப் பிடிக்கவில்லை... ஒருவேளை உதவாக்கரை என்கிற அடைமொழியுடன் அவன் அடையாளம் காணப்பட்டதால் அவனை அவளுக்குப் பிடிக்காமல் போய்விட்டதா... இல்லை அவனது வெறிக்கும் பார்வை பெண்ணவள் மனதினில் எரிச்சலை தோற்றுவித்ததா... எதுவென்று அவளுக்குச் சரியாகச் சொல்லத் தெரியவில்லை... அவனைக் கண்டாலே அவளுக்கு ஆத்திரமாக வந்தது... அது மட்டும் உண்மை...

"உன் நினைவு எனக்கு எதுக்கு வரணும்...?" என்று அவள் முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு கேட்டாள்...

அதில் அவனது முகமும், மனமும் சோர்ந்து போனது... அவளது சுபாவம் தான் அவனுக்குத் தெரியுமே... அதனால் மனம் தளராது அவளிடம் பேச்சை வளர்த்தான்...

"என்ன ஸ்வேதா இப்படிக் கேட்டுட்ட...? உன் முறைமாமன் நான் தானே..."

அவன் கூறியதை கேட்டு அவளது ஆத்திரம் அதிகரிக்க, "உன்னை மாதிரி ஒருத்தனை என் முறைமாமன் என்று நான் வெளியில் சொன்னால் அது எனக்குத் தான் கேவலம்..."

என்று படபடவெனப் பொரிந்தவள் அண்டாவில் இருந்த மஞ்சள் நீரை சொம்பில் எடுத்துத் தெருவில் படுத்து கிடந்த நாய் மீது ஊற்றினாள்... அது அலறிக் கொண்டு ஓடியது...

"அந்த நாயை கூட என் முறைமாமன் என்று சொல்வேன்... ஆனால் உன்னை...?" என்று அவனை ஆங்காரத்துடன் முறைத்து பார்த்தவள்,

"அதற்கான அருகதை உனக்கு இல்லை..." என்று வெறுப்புடன் கூறினாள்...

"என்னடி சொன்ன...?" என்று ஆத்திரத்துடன் சரவணன் அவளது கையைப் பிடித்து முறுக்கியபடி உறுமினான்...

ஆண்பிள்ளை அவனுக்கு அவளது உதாசீனத்தைக் கண்டு கடுங்கோபம் வந்தது...

பிறந்ததில் இருந்து சுதந்திரமாக வளர்க்கப்பட்ட ஸ்வேதாவிற்கு அவனது இந்த அடக்குமுறை பிடிக்கவில்லை போலும்... அதிலும் அவன் 'டி' போட்டு அழைத்தது அவளுள் பெரும் கோபத்தினை ஏற்படுத்தி இருந்தது...

அடுத்த நொடி தாமதியாது அவனது கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டாள்... சரவணன் போன்ற ஒருவன் தன்னை அடக்குவதா...? அவள் சித்தார்த்தின் தங்கை அல்லவா... அதனால் அவனைப் போன்று சீறிவிட்டாள்...

"உன்னைப் பத்தி என் அண்ணா கிட்ட சொன்னேன் வை... முதலில் உன்னைக் கொன்னு போட்டுட்டு தான் மறுவேலை பார்ப்பார்..."

ஆத்திரத்துடன் வார்த்தைகளைக் கடித்துத் துப்பியவள் அடுத்தக் கணம் அங்கிருந்து விரைந்து சென்று விட்டாள்...

அவள் அடித்த கன்னத்தைப் பற்றியபடி அப்படியே அதிர்ச்சியில் உறைந்து நின்றான் சரவணன்... அவளது செயலில் அவனது மனம் உலைக்களமாய்க் கொதித்த போதும், சித்தார்த் என்ற பெயரில் அவனது கோபம் அத்தனையும் அப்படியே அடங்கிப் போனது... சித்தார்த்தை எதிர்ப்பது என்பது அவனால் சாத்தியமில்லாத ஒன்று... ஆனாலும் அவனது மனதில் அவள் ஏற்படுத்திய காயம் ஆறாத ரணமாய் மாறி அவனை வேதனைப்படுத்தி வலிக்கச் செய்தது...

விரும்பும் பெண் தன்னை அவமானப்படுத்தும் போது ஆத்திரம் வாராது வலி எழுவது காதலில் மட்டுமே

சாத்தியம்... அத்தகையைக் காதலின் வலியை அவன் உணர்ந்தான்... விளையாட்டு பிள்ளையாய் இருந்தவனையும் இந்தப் பாழாய் போன காதல் நோய் தாக்கி விட்டது...

****

அன்று மாட்டு பொங்கல் என்பதால் பிரகதீஸ்வரி வீட்டிலிருந்த காளைகள் அனைத்தும் ஜல்லிக்கட்டு போட்டிக்கு தயாராகி நின்று கொண்டிருந்தது...

மாட்டின் இரண்டு கொம்புகளுக்கும் வர்ணம் பூசி, கழுத்தில் மாலை அணிவிக்கப்பட்டு வரிசையாக, அழகாக நின்று கொண்டிருந்தது... அதற்குப் பூஜை செய்து வணங்கியதும் ஊரார் வந்து அவற்றை வாடிவாசலுக்கு அழைத்துச் சென்றனர்...

"அத்தான்... இந்தத் தடவையாவது எங்க வீரையனை அடக்கி காட்ட முடியுமா...?" என்று பிரகதீஸ்வரி ஹரியிடத்தில் சவால் விட்டாள்...

அதைக் கேட்டு அவனும் தனது புஜங்களைப் பெருமையாகத் தட்டி கொடுத்தபடி, "இந்தத் தடவை அடக்கி காட்டுகிறேன் என் அத்தை மகளே... நீ மலர் மாலையோடு காத்திரு..." என்று புன்சிரிப்புடன் கூறினான்...

"இதோ இப்போதே மலர் மாலையுடன் காத்திருக்கிறேன்..." என்றவள் அங்கிருந்த மலர் மாலையைக் கைகளில் தூக்கி பிடித்து அவனிடம் காட்டி கேலி பேசி சிரித்தாள்...

அதைக் கண்டு ஒருவரது நெஞ்சம் கொதித்தது என்றால், மற்றொருவர் நெஞ்சம் தவித்தது... சித்தார்த் கொதித்தான்... சங்கமித்ரா தவித்தாள்...

'இவன் ஏன் இவளை சுத்தி சுத்தி வருகிறான்... ஒருவேளை ஹரியின் மனதில் நம் பேபி மீது காதல் இருக்குமோ... ச்சேச்சே அப்படி எல்லாம் இருக்காது... அப்படியே இருந்தாலும் அவள் மனதில் நான் தான் இருக்கிறேன்..."

என்று தீர்க்கமாக நினைத்த சித்தார்த்தின் இன்னொரு மனம்,

'அப்படி அவன் அவளைக் காதலித்தால் அவளிடத்தில் உனக்கான இடம் என்ன...?' இந்தக் கேள்வியில் சித்தார்த்தின் நம்பிக்கை ஆட்டம் கண்டது...

பெண்ணவள் ஒருவனைத் தனது மனதில் வரித்து விட்டால் அது காலத்தால் அழியாத கல்லில் செதுக்கிய கல்வெட்டுப் போன்றது என்பதை அந்த மூடன் உணரவில்லை...

ஹரியா...? தானா...? என்று வரும் போது ஹரிக்கு தான் வாய்ப்புப் பிரகாசமாக இருக்கிறது என்பது அவனுக்கு உறைத்தது... ஏதாவது செய்து அவளைத் தன்னிடம் தக்க வைத்துக் கொள்ளச் சொல்லி அவனது மனம் துடித்தது...

எதையும் அலசி ஆராய்ந்து அறிவோடு செயல்படும் சித்தார்த் அந்தக் கணம் மறைந்து காணாமல் போனான்... காதலில் திளைத்திருந்த இந்தச் சித்தார்த்தின் மனம் பூவை போன்று மென்மையாக மாறியிருந்தது... அதனால் தான் தன்னவளின் பேச்சில் அது அன்னிச்சை மலர் போன்று வாடி போனது...

கிராமங்களில் இது போன்ற விளையாட்டுப் பேச்சுகள் சகஜம் என்பதினை பட்டணத்தில் வளர்ந்த இரண்டு முட்டாள்களும் தெரிந்து வைத்திருக்கவில்லை...

சிறிது நேரம் கழித்துக் குடும்பம் மொத்தமும் உற்சாகமாக வாடிவாசலுக்குச் சென்றது... சித்தார்த், சங்கமித்ரா, சரவணன் இவர்கள் மூவரை தவிர...

பிரகதீஸ்வரி தங்கள் வீட்டு காளையான வீரையனின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்து கொண்டிருந்தாள்... இதுவரை யாரும் வீரையனை அடக்கியதாய் சரித்திரம் இல்லை...

ஹரிப்ரசாத் கூடப் பல முறை வீரையனை அடக்க முயன்று தோற்றுப் போயிருக்கிறான்...

இதோ இப்போதும் கம்பீரமாக வீரையன் களத்தில் இறங்கி விட்டான்... சுற்றியிருந்த கூட்டம் ஆர்ப்பரித்துக் கத்தி அவனை உற்சாகப்படுத்தியது... அதில் வீரையன் சந்தோசம் கொண்டு ஓடினானா இல்லை மிரண்டு போய் ஓடினானா என்று கண்டுபிடிக்க முடியாதபடி அவன் அங்குமிங்கும் துள்ளி கொண்டு ஓடினான்...

ஹரிப்ரசாத் வீரையனை அடக்க முற்பட்ட போது ஒரே தள்ளலில் அது அவனை வீழ்த்தி சாய்த்து விட்டது...

"அச்சோ அத்தான்..."

அதுவரை உற்சாகக் குரல் கொடுத்துக் கொண்டிருந்த பிரகதீஸ்வரி சோகமாய்த் தலையில் கை வைத்தாள்...

அப்போது எதிர்பாராத விதமாகச் சித்தார்த் களம் இறங்கவும் அவள் அப்படியே கலங்கி போனாள்... ஏனெனில் வீரையனின் வீரம் பற்றி அவளுக்கு நன்கு தெரியும்... ஹரிப்ரசாத்திற்கு இதில் நன்கு பயிற்சி இருந்தது... ஆனால் சித்தார்த்திற்கு இதன் அரிச்சுவடியே தெரியாதே...

கன்னியர் கடைக்கண் பார்வை பட்டால் கட்டிளம் காளையருக்கு வீரம் தன்னால் வந்துவிடும் என்பதை அவள் அறிந்திருக்கவில்லை போலும்...

குடும்பத்தினர் அனைவரும் 'சித்து' என்று கூவியபடி அதிர்ச்சியில் உறைந்தனர்...

அதற்குள் சித்தார்த் வீரையனை மடக்கி பிடித்திருந்தான்... பல வருடங்கள் பழகிய ஹரியையே தூக்கி போட்டு பந்தாடிய வீரையன் சித்தார்த்தை மட்டும் விட்டு வைப்பானா என்ன...?

ஒரே முட்டலில் சித்தார்த்தை தூக்கி எறிந்துவிட்டு அவன் உற்சாகமாய் ஓடினான்...

கீழே விழுந்த சித்தார்த்தின் கைப்பற்றித் தூக்கி விட்ட ஹரி, "சித்தார்த்... இது உங்களுக்குப் பழக்கம் இல்லாத

விளையாட்டு... நீங்க கலந்துக்க வேண்டாம்..." என்று அவனை எச்சரித்த போதும் சித்தார்த் பின்வாங்கவில்லை...

அவனின் நினைவில் நின்றது எல்லாம் தன்னவளின் தாமரை முகம் ஒன்றே... அவளைக் கைப்பிடிப்பதற்காக அவன் எதையும் செய்யச் சித்தமாக இருந்தான்...

மீண்டும் தன்னை நெருங்கிய சித்தார்த்தின் வயிற்றுப் பகுதியில் வீரையனின் கூர்மையான கொம்புகள் இரண்டும் ஆழப்பதிந்தது... அடுத்தக் கணம் சித்தார்த்தின் வயிற்றில் இருந்து இரத்தம் பீறிட்டது...

அதைக் கண்டு பிரகதீஸ்வரி அதிர்ச்சியில் உறைந்து நின்றாள்... இரத்தம் சொட்டியபடி நின்றவனைக் கண்டு அவள் பதறி போய்த் துடித்தாள்...

தனது வலியை கூடப் பொருட்படுத்தாது வீரையனை அடக்குவது ஒன்றே தனது லட்சியமாகக் கொண்டு செயல்பட்ட சித்தார்த்தை களத்தில் இருந்து அப்புறப்படுத்த யாராலும் முடியவில்லை...

அடுத்தச் சில நிமிடங்களில் வீரையனை அடக்கியவன் வெற்றிக் களிப்புடன் தன்னவளை பார்த்தான்... அவளது விழிகளில் தெரிந்த தவிப்பில் அலைப்புற்றிருந்த அவனது மனம் மெதுவே சமாதானமாகியது...

அவ்வளவு நேரம் உணராத உடல் வலியை அப்போது தான் அவன் உணர்ந்தான்... அவனுக்குக் கண்கள் இருட்டி கொண்டு மயக்கம் வருவது போலிருந்தது...

மயங்கி கீழே விழும் போதும் அவனது விழிகள் தன்னவளை தான் பார்த்துக் கொண்டிருந்தது...

'இந்த வெற்றி உனக்காகத் தான் பெண்ணே...' என்பது போல் சைகையில் கூறியவன் அடுத்த நொடி மயங்கி கீழே சரிந்தான்...

தொழில் சாம்ராஜ்யத்தின் முடிசூடா மன்னனையும் காதல் சாதாரண மனிதனாக மாற்றி இருந்தது...!!!

"உலகில் எதற்கும் விலை
உண்டடி பெண்ணே...
தாயன்பிற்கு ஒரு விலை,
தாய்ப்பாலிற்கு ஒரு விலை...
நீதிக்கு ஒரு விலை,
நேர்மைக்கு ஒரு விலை...
பதவிக்கு ஒரு விலை,
பந்தத்திற்கு ஒரு விலை...
அத்தனைக்கும் விலை
நிர்ணயித்த நான்...
மதிப்பிட முடியாது திணறுவது
உந்தன் காதலிலன்றோ...
அதையும் தீர்மானித்து விட்டேன்
எந்தன் உயிரை கொடுத்து...
உந்தன் காதலை கைப்பற்றிய
களிப்போடு எந்தன் உயிர் பிரியும்
கவலையில்லை எனக்கு...
உன் காதல் எனக்கு மட்டுமே
என்கிற கர்வம் என்னுள்...
மரித்த பின்னும் என்னவள்
என்கிற அகந்தை என்னுயிரோடு...
செருக்கோடு வாழ்ந்து செருக்கோடு
மடிந்தவனாகிறான் உன் சித்தார்த்தன்...!!!"

நனவாகும்...!!!

சித்தார்த் வேரொடிந்த மரமாய் மண்ணில் சாய்ந்த கணம் பிரகதீஸ்வரி உயிர் உறைந்து போய் மரணித்த நிலையை அடைந்தாள்... சித்தார்த்தின் நிலையைக் கண்டு எல்லோரும் பதறி போய் அவனை நோக்கி ஓடினர்... அவளோ மூளை மரத்துப் போய்ச் சிலையாய் சமைந்து நின்றாள்...

சித்தார்த்தின் நிலையைக் கண்டு ஹரிப்ரசாத் அவனைக் கைகளில் தூக்க முனைந்த போது வேறு சில ஆண்களும் அவனுக்கு உதவிக்கு வந்தனர்... குடும்பத்தினர் அங்கு விரைந்து வருவதற்குள் அவனை அங்கு நின்று கொண்டிருந்த ஆம்புலன்சில் ஏற்றி விட்டிருந்தனர்...

ஹரிப்ரசாத்தும் உடன் ஏறிக் கொண்டான்... மருத்துவர் என்பதால் சங்கமித்ராவும், மகனுக்காக மார்த்தாண்டமும் ஆம்புலன்சில் உடன் ஏறி சென்றனர்...

மற்றவர்களைச் சரவணன் காரில் அழைத்துச் சென்றான்... எல்லோருக்கும் இருந்த பதட்டத்தில் பிரகதீஸ்வரியை மறந்து போயினர்... அவளோ தன்னை மறந்த நிலையில் உறைந்து போய் அசையாது நின்றிருந்தாள்...

"கண்ணு..." சோலையம்மாள் வந்து அவளை உலுக்கவும் தான் அவள் தன்னுணர்வு பெற்றாள்...

"அவர்... அவர்..." வார்த்தை வராது திக்கியவளை கண்டு,

"அந்தத் தம்பியை ஹாஸ்பிட்டலுக்குக் கூட்டிட்டு போயிட்டாங்க... ஒண்ணுமாகாது கண்ணு... நீ வா..." என்று மிகச் சாதாரணமாகக் கூறியவர் அவளை வீட்டிற்கு அழைத்தார்...

அவரைப் போன்று யாரோ போல் இந்த நிகழ்வை அவளால் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியவில்லை... அங்கு உயிருக்கு போராடி கொண்டிருப்பது அவளது உயிர் அல்லவா... மனம் துடிக்க வாய் விட்டு அதைக் கூற

முயன்றவள் அடுத்த நொடி அந்த வார்த்தைகளை அப்படியே விழுங்கி கொண்டாள்...

எந்த உரிமையில் அவன் மீதான அவளது உரிமையை அவள் சோலையம்மாளிடம் கூறுவாள்... அப்போது தான் கவனித்தாள் குடும்பத்தினர் யாரும் அங்கு இல்லாததை...

"எல்லோரும் எங்கே சோலை...?"

"எல்லாரும் ஹாஸ்பிட்டலுக்குப் போயிருக்காங்க..."

அதைக் கேட்டவளுக்குத் தானும் மருத்துவமனைக்குச் சென்று அவனைப் பார்க்க வேண்டும் போலிருந்தது... ஆனால் என்ன சொல்லி கொண்டு அவனைச் சென்று பார்ப்பது... அவனுடன் சென்றவர்கள் அனைவரும் அவனுக்கு ஏதோ ஒரு விதத்தில் இரத்த சம்பந்தம் உடையவர்களாக இருந்தனர்...

அவள் அவனுக்கு இரத்த சம்பந்தத்தையும் மீறிய ஒரு உறவு என்பது அவளுக்குத் தெரியும்... அவனது உயிர் தான் தான் என்பதும் அவளுக்குத் தெரியும்... ஆனால் அதை வெளிக்காட்டி கொள்ள முடியாத அளவுக்கு அவளின் நிலை பயங்கரமானதாக இருந்தது...

என்றுமே உரிமை இல்லாத உறவு கொச்சைப்படுத்தப் படும் என்பதினை உணர்ந்தவளாய் அவள் தனது வாயை இறுக மூடி கொண்டாள்...

அவளுக்கு இருந்த துக்கத்தில் வாய் விட்டு ஓவென்று கதறியழ வேண்டும் போலிருந்தது... ஆனால் அவளால் பொதுவெளியில் அதைச் செயல்படுத்த முடியவில்லை...

அவளது உயிர் சித்தார்த்திடம் இருக்க வெறும் கூடாய் வீட்டிற்கு நுழைந்தவள் முதல் வேலையாகத் தனது அறையை நோக்கி சென்றாள்... அறைக்குள் அழுதாலும் சத்தம் வெளியில் கேட்கும் என்று எண்ணியவள் விம்மலை அடக்கி கொண்டு குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்...

குளியலறை கதவை சாத்தி விட்டு அதன் மீது சாய்ந்து நின்றவள் அடுத்த நொடி வெடித்துக் கதறினாள்... பெரும் குரலெடுத்து அழுதவளை தேற்றுவதற்கு அங்கு யாருமில்லை... சிறிது நேரத்திற்கு மேல் நிற்க முடியாது கால்கள் துவள அப்படியே சரிந்து கீழே அமர்ந்தவள் விடாது அழுது கரைந்தாள்... குளியலறை தரையில் இருந்த ஈரம் கூட அவளுக்கு உறைக்கவில்லை... அந்தளவுக்கு அவளது மனம் வேதனையில் துடித்தது...

சித்தார்த்திற்கு ஒன்றுமாகி விடக் கூடாது என்று அவளது உள்ளம் விடாது கடவுளை வேண்டி கொண்டது... பூஜையறையில் அமர்ந்து தெய்வத்தின் திருவுருவை பார்த்தபடி பிரார்த்தனை செய்ய வேண்டியவள் இப்படிக் கழிவறையில் அமர்ந்து கொண்டு யாருக்கும் தெரியாமல் அவனுக்காகப் பிரார்த்தித்தாள்...

அந்தக் கணம் தனது நிலை மிகவும் பயங்கரமாய் இருப்பதை அவள் உணர்ந்தாள்... அதிபயங்கர விலங்குகள் வாழும் அடர்காட்டில் தனித்து மாட்டி கொண்டு தவிப்பது போல் அவளது மனம் பாதுகாப்பவர் யாருமின்றித் தனியே தவித்தது... அவளைத் தேற்ற கூடிய உரிமையுள்ளவனோ நினைவிழந்து மருத்துவமனையில் படுத்து இருந்தான்...

பெற்றோரை இழந்த போது கூட உணராத தனிமையை இந்தக் கணம் அவள் உணர்ந்தாள்...

எவ்வளவு நேரம் அப்படியே அமர்ந்திருந்தாளோ தெரியாது... பிறகு கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தவள் குளித்து உடை மாற்றிக் கொண்டு நேரே பூஜையறைக்குச் சென்றாள்... விளக்கேற்றி விட்டு அங்கிருந்த திருமாலின் திருவுருவத்தை இமைக்காது பார்த்தவளின் விழிகள் கலங்கியது... இதழ்கள் எதையோ சொல்ல வருவது போல் துடித்தது... ஆனால் அவளால் வாய் விட்டு அழவும் முடியவில்லை, சொல்லவும் முடியவில்லை...

"என்ன கண்ணு இப்ப எதுக்குத் தலைக்குக் குளிச்சிருக்க...?"

அவள் நினைத்தது போல் சோலையம்மாள் கேள்வி கேட்டபடி அங்கு வந்தார்...

"கசகசன்னு ஒரே வியர்வையா இருந்தது சோலை... அதான்..." என்றவள் பூஜையறையில் இருந்து வெளியேறினாள்... இதற்கு மேல் அங்கு நின்று கொண்டிருந்தால் அதற்கும் கேள்வி வரும்...

மனதின் துயரத்தை வெளிப்படுத்துவதற்கும் சில கொடுப்பினைகள் வேண்டும் போலும்...

நேரே வரவேற்பறைக்கு வந்தவள் பூஜையறை கண்ணில் படும்படி அமர்ந்து கொண்டு கடவுளை இடைவிடாது வேண்டி கொண்டிருந்தாள்...

அங்குச் சிகிச்சை நடந்து கொண்டிருந்த சித்தார்த்தின் மனம் பெருத்த நிம்மதியில் ஆழ்ந்திருந்தது... தனக்கான தன்னவளின் தவிப்பை அவன் கண்ட நொடி அவனுள் உலகை வென்ற உவகை எழுந்தது... அது போதும் அவனுக்கு... அதன் பிறகு அவனது உடலில் நிகழ்ந்த மாற்றம் பற்றி அவனுக்குக் கவலை இல்லை...

இதோ இப்போதும் அவனது வயிற்றுக் காயத்தைச் சுத்தப்படுத்தி அறுவை சிகிச்சை செய்து கொண்டிருந்த போதும் அவனது நிம்மதி குறையவில்லை... அவனுக்கு அதன் வலி தெரியவில்லை... ஏனெனில் அவனது உயிர் இங்கில்லை... அது தன்னவளோடு உறைந்து போனது...

தன்னுணர்வற்ற அந்த நிலையிலும் அவனது புன்னகை முகம் மாறவில்லை... எதையோ சாதித்த கர்வம் அவனது முகத்தில் நிறைந்திருந்தது...

மருத்துவமனை வராந்தாவில் அமர்ந்து இருந்தவர்களின் முகம் பெரும் சோகத்தினை அப்பிக் கொண்டிருந்தது... ஒவ்வொருவரும் ஒவ்வொரு மனநிலையில் இருந்தனர்... சங்கமித்ரா மட்டும் மற்ற மருத்துவர்களுடன் சேர்ந்து சித்தார்த்திற்கு மருத்துவம் பார்த்து கொண்டிருந்தாள்...

இடிந்து போய் அமர்ந்திருந்த மார்த்தாண்டம் அருகில் சென்றமர்ந்த சரவணன் மெல்லிய குரலில் அவரைத் தேற்றினான்...

"மாமா... ஆண்மகன் நீங்களே இப்படி இடிஞ்சு போய் உட்கார்ந்திருந்தால் எப்படி...? அங்கே பாருங்க அத்தை எப்படி அழுறாங்கன்னு...? நீங்க அவங்களுக்கு ஆறுதல் சொல்லணும்... அதை விட்டுட்டு நீங்க இப்படிக் கவலையா இருந்தா எப்படி மாமா...?"

அவனது வார்த்தைகள் அவரிடத்தில் வேலை செய்தது... அவர் திரும்பி மனைவியைப் பார்த்தார்... கண்ணீரில் கரைந்து கொண்டிருந்த பிரபாவதியை கண்டு அவரது மனம் இரங்கியது... மகனின் இந்த நிலை தன்னை விட மனைவியைத் தான் அதிகம் பாதிக்கும் என்பதை உணர்ந்தவராய் மனைவி அருகில் சென்று அமர்ந்து அவருக்கு ஆறுதல் கூற ஆரம்பித்தார்...

கணவனின் ஆறுதலில் பிரபாவதி அவரின் தோளில் சாய்ந்து அழ, அதைக் கண்டு விமலாராணிக்கு பற்றிக் கொண்டு வந்தது... தான் அருகில் இருக்கும் போது அண்ணன் இப்படி மனைவியிடம் நடந்து கொள்வது கண்டு அவருக்கு எரிச்சலாக இருந்தது...

சரவணன் தன் தந்தையிடத்தில் பேசியதையும் அதன் பின் அவர் அன்னைக்கு ஆதரவாக இருந்ததையும் ஸ்வேதா பார்த்துக் கொண்டு தான் இருந்தாள்... முதன்முறையாக அவன் மீது அவளுக்கு நல்ல அபிப்ராயம் எழுந்தது...

உதவாக்கரையாக அவன் இருந்த போதும் மனிதர்களின் மனதினை படித்தவனாக அவன் இருப்பது கண்டு அவளுள் சிறு வியப்பு தோன்றியது... அதை விடச் சகோதரனின் ஆபத்தான நிலை அவளின் மனதினை வாட்ட அவளின் கவனம் சரவணனிடம் இருந்து சகோதரனிடம் சென்றது...

ஹரிப்ரசாத் இன்று ஊருக்கு கிளம்ப வேண்டும்... சித்தார்த்திற்கு இப்படியானதில் அவனுக்கு மிகவும் கவலையாக இருந்தது... அவனின் நலம் தெரிந்த பின்பே

வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்று எண்ணி அவன் அங்கேயே அமர்ந்து விட்டான்...

நேரம் கடந்து கொண்டிருந்தது ஆனால் மருத்துவர்கள் எதுவும் உறுதியாகக் கூறவில்லை... அதனால் எல்லோரும் கவலையுடன் காத்திருந்தனர்...

சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு சரவணன் எல்லோருக்கும் காபி வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தான்... மனதின் உணர்வுகள் மரத்து போனாலும் வயிற்றின் பசி மரத்து போகாதே...

எல்லோருக்கும் கொடுத்தவன் கடைசியாக ஸ்வேதாவிடம் வந்தான்... அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்... அவனோ அவளைப் பார்க்காது கையிலிருந்த காபியை பக்கத்து நாற்காலியில் வைத்து விட்டு சென்று விட்டான்...

அவளும் ரோசத்தில் அந்தக் காபியை தொட்டு கூடப் பார்க்கவில்லை... அதைக் கண்டு சரவணனின் கோபம் அதிகரித்தது...

'திமிர்... சரியான திமிர்... உன் திமிரை எல்லாம் அடக்க வேண்டும்... அப்போது தான் நீ சரிப்பட்டு வருவ...' மனதில் கோபமாய் நினைத்தபடி அமர்ந்திருந்தான் அவன்...

பல மணி நேரம் கழித்துச் சித்தார்த்திற்கு எந்தவித ஆபத்தும் இல்லை என்று மருத்துவர்கள் கூறிய பிறகு தான் அனைவருக்கும் நிம்மதியாக இருந்தது...

சித்தார்த்தின் நலன் அறிந்ததும் ஹரிப்ரசாத் வீட்டிற்குக் கிளம்பினான்... அவனைக் கொண்டு விடுவதற்காக எழுந்த சரவணன் சந்தியாவைத் தன்னுடன் வரும்படி பணித்தான்...

"நீ இங்கே இருந்து என்ன செய்யப் போற...?" என்று அவன் சந்தியாவைக் கிளப்பி விட்டான்...

"நானும் வர்றேன்..." என்றபடி மகளை முந்தி கொண்டு விமலராணி கிளம்பினார்... அவருக்கு மருத்துவமனை சூழ்நிலை சிறிதும் பிடிக்கவில்லை...

ஸ்வேதா அசையாமல் அமர்ந்திருப்பதைக் கண்டு சரவணன் தங்கையிடமும் சொல்வது போல், "அவங்களையும் கிளம்பி வர சொல்..." என்றவன் திரும்பி பாராது செல்ல...

"ஸ்வேதா வா போகலாம்..." சந்தியா அழைத்ததும் வேறுவழியின்றி ஸ்வேதா உடன் சென்றாள்...

மார்த்தாண்டம், பிரபாவதி மட்டுமே அங்கிருந்தனர்... சங்கமித்ரா அவர்களுக்கு ஆறுதலாக உடன் இருந்தாள்...

வீட்டிற்குள் நுழைந்த ஹரிப்ரசாத், சரவணனை கண்டு பிரகதீஸ்வரி பரபரப்போடு எழுந்து வந்து அவர்களை ஆவலுடன் பார்த்தாள்... எப்படி அவர்களிடம் வாய் விட்டு கேட்பது என்று அவளுக்குத் தெரியவில்லை... கேட்டால் தவறாக எடுத்து கொள்வார்களோ என்று அவளுக்குப் பயமாக இருந்தது...

வந்தவர்கள் எதுவும் பேசாது நேரே தங்களது அறைக்குச் செல்ல அவளது மனம் சோர்ந்து போனது... வேறுவழியின்றிச் சந்தியாவிடம் சித்தார்த்தின் உடல்நலத்தைப் பற்றி விசாரித்தாள்...

"இனி பயமில்லைன்னு சொல்லிட்டாங்க..." வெகுளிப் பெண்ணான சந்தியா உண்மையை அப்படியே உரைத்தாள்...

அதைக் கேட்டதும் தான் பிரகதீஸ்வரிக்கு அத்தனை நிம்மதியாக இருந்தது... நேரே பூஜையறைக்குச் சென்று கடவுளுக்கு நன்றி தெரிவித்தாள்...

அறையை விட்டு வெளியில் வந்த போது ஹரிப்ரசாத் ஊருக்கு செல்ல வேண்டி தனது உடமைகளோடு வந்தான்...

"அம்மு... நான் ஊருக்கு கிளம்பறேன்..."

சித்தார்த்தின் நினைவில் அவள் சோகமாக இருந்ததைக் கண்டு அவன் தான் செல்வதை நினைத்து அவள்

சோகமாக இருக்கிறாள் என்று தவறாக நினைத்துக் கொண்டான்...

"அம்மு... கஷ்டமாயிருந்தா என்னோடு வருகிறாயா...?"

"ஆங்... அப்படி எல்லாம் இல்லை அத்தான்..." என்று பதிலளித்தவளுக்கு ஒரே குற்றவுணர்வாகப் போயிற்று...

"நல்லா சாப்பிட்டு உடம்பை பார்த்துக்கோ... படிப்பு பத்தி நான் பேச மாட்டேன்... ஏன்னா நீ நல்லா படிக்கிறவள்ன்னு எனக்குத் தெரியும்..." என்றவனைக் கண்டு அவள் புன்னகைத்தாள்...

"நான் அடிக்கடி ஃபோன் பண்றேன்..."

"அடுத்து எப்போ வருவீங்க அத்தான்...?"

"லீவு கிடைக்கிறதை பொறுத்து வருவேன்.... இல்லைன்னா அடுத்தப் பொங்கல் தான்..."

"ம்... சரி அத்தான்... நீங்க உங்க உடம்பை பார்த்துக்கோங்க... அத்தையைக் கேட்டதா சொல்லுங்க... ஒரு நிமிசம் அத்தான்..." என்றவள் உள்ளே சென்று சிறு புட்டியை கையில் கொண்டு வந்தாள்...

"அத்தையோட மூட்டு வலிக்கான மருந்து... இதைத் தடவி பார்க்க சொல்லுங்க... வலி கேட்கும்..."

"சரி கொடு..." என்றபடி அதை வாங்கி வைத்துக் கொண்டான் ஹரிப்ரசாத்...

எல்லோரிடமும் விடைப்பெற்ற ஹரிப்ரசாத் தனக்காக ஒருத்தி தவித்துக் கொண்டிருக்கிறாள் என்கிற நினைப்பு சிறிதும் இல்லாது ஊருக்கு கிளம்பி சென்றான்...

****

அடுத்து வந்த நாட்களில் பிரகதீஸ்வரி சித்தார்த்தை நேரில் சென்று சந்திக்க முடியாமல் தவித்தாள்... இதில் அவளுக்குப் பள்ளி வேறு திறந்து விட்டது... பாடத்தில்

கவனம் செலுத்த முடியாது அவள் எந்நேரமும் தன்னவனின் நினைவில் மனம் வாடி கவலையுற்றாள்... அவனுடன் இருந்து அவனைக் கவனித்துக் கொள்ள முடியவில்லையே என்கிற கவலை அவளைப் பெரிதாக அரித்துக் கொன்றது...

அதே நேரம் சித்தார்த்தும் பிரகதீஸ்வரியை பற்றித் தான் நினைத்துக் கொண்டிருந்தான்... அவன் கண் விழித்து முழுதாய் ஒரு நாளாகிருந்தது... அவனது உடல் வலி கூட அவனுக்குப் பெரிதாகத் தெரியவில்லை... தன்னவளின் மனவலி தான் அவனுக்குப் பெரிதாகத் தெரிந்தது...

அவனது நிலை குறித்து அவள் தன்னைத் தானே வருத்தி கொள்வாள் என்று அவனுக்கு உறுதியாகத் தெரியும்... அதனால் தந்தையிடம்,

"அப்பா... என் ஃபோனை எடுத்து தர்றீங்களா...?"

"சித்து... உனக்குப் பேசவே சிரமமா இருக்கும் போது எதுக்கு ஃபோன்...?" என்று அவர் மகனை கடிய...

"ஏதாவது முக்கியமான ஃகால் வந்தால்...?"

"அதை எல்லாம் நான் பார்த்துக்கிறேன்... நீ ரெஸ்ட் எடு..."

"ப்ளீஸ்ப்பா..."

என்றும் கெஞ்சாத மகன் இன்று கெஞ்சவும் அவராலும் மறுக்க முடியவில்லை... அதனால் அவனது அலைப்பேசியை எடுத்து கொடுத்தார்... ஆனால் அதை வாங்கிய மகன் எதுவும் பேசாது பக்கத்தில் வைத்து கொண்டதை கண்டு வியந்த போதும் அவர் ஒன்றும் கேட்கவில்லை...

நள்ளிரவில் தனக்குத் துணையிருந்த அன்னை உறங்கியதும் அவன் பிரகதீஸ்வரிக்கு அழைத்தான்... அவனுக்குத் தெரியும் இந்த நேரம் பிரகதீஸ்வரி வரவேற்பறையில் அமர்ந்து தனியே படித்துக் கொண்டிருப்பாள் என்று...

அவன் நினைத்தது போல் மறுபக்கம் அவள் தான் எடுத்தாள்... அவளது 'ஹலோ' என்ற ஒற்றை வார்த்தையில் அவனது மனதில் ஆயிரம் மலர்கள் ஒரு சேர பூத்தது...

"ரதி பேபி..."

தனது ஒட்டுமொத்த காதலையும் வார்த்தைகளில் கரைத்து கூறியவனின் குரல் அவளது காதில் இன்ப தேனாக வந்து பாய்ந்தது... அடுத்த நொடி அவள் உணர்ச்சிப்பெருக்கில் கதறி விட்டாள்...

"பேபி... ப்ளீஸ்..."

மறுமுனையில் இருந்தவன் அவளைச் சமாதானப்படுத்தும் வழியறியாது தவித்துப் போனான்... அவனுக்குமே இதுவரை இப்படி யாரையும் சமாதானப்படுத்திப் பழக்கமில்லை... அதனால் வார்த்தைகள் வராது தடுமாறினான்...

"ஏன் இப்படிப் பண்ணினீங்க...?"

இந்தக் கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்டு கதறியவளை கண்டு அவனது நெஞ்சம் இரத்த கண்ணீர் வடித்தது... இதுநாள் வரை தனக்குச் சரியென்று தோன்றியதை மட்டுமே செய்து பழக்கப்பட்ட சித்தார்த் இந்தக் கணம் தன்னவளை பற்றியும் சிறிது யோசிக்க ஆரம்பித்தான்...

"நீங்க மயங்கி விழுந்ததைப் பார்த்து நான் துடிச்சுப் போயிட்டேன்... உங்களுக்கு மட்டும் ஏதாவது ஒண்ணு ஆகியிருந்தா அடுத்த நொடி நானும் செத்து போயிருப்பேன்..."

தன்னவள் வார்த்தையில் சித்தார்த்தின் காதலின் உயிர்ப்பு இன்னமும் அதிகமானது... நேசத்தின் ஆழம் இன்னமும் அதிகரித்தது...

"த்ச்சு... இது என்ன பேச்சு...? அதான் எனக்கு ஒண்ணும் ஆகலையே..."

"ஆகியிருந்தால்...?" அவள் அதிலேயே நின்றாள்...

அவள் மனதிற்குள் பயந்து செத்தது அவளுக்கு மட்டும் தானே தெரியும்...

"இப்போ இந்த நொடி நிஜம்... அதை மட்டும் அனுபவிக்கப் பழகு பேபி... உனக்காக நான் என் வலியை பொறுத்துக் கொண்டு பேசிக்கிட்டு இருக்கேன்... எனக்காகவாவது அழாதே பேபி... ப்ளீஸ்..." என்று கெஞ்சியவனைக் கண்டு அவள் கண்களைத் துடைத்தபடி,

"ம்... ம்..." என்று அரைகுறையாகத் தலையாட்டினாள்...

"போதும் தலையாட்டியது... நான் சொல்வதைக் கவனமாகக் கேள்... நான் ஒண்ணும் சின்னப் பையன் இல்லை... என்னைப் பார்த்துக் கொள்ள எனக்குத் தெரியும்... அது போல் நீயும் நல்லா சாப்பிட்டு உன் உடம்பை பார்த்துக்கோ... அதே போல் உன் படிப்பிலும் கவனத்தைச் செலுத்து..."

"நானும் சின்னப் பெண் இல்லை... என்னைப் பார்த்துக் கொள்ள எனக்கும் தெரியும்..." என்று அவளும் பதிலுக்கு வீம்பாகக் கூற...

"நீ உன்னைப் பார்த்துக் கொள்ளும் லட்சணத்தை நான் சொல்லவா...? ஏதோ பேருக்குச் சாப்பாட்டை அணில் மாதிரி கொறித்துக் கொண்டு, மடியில் புத்தகத்தை விரித்தபடி என்னை நினைச்சுக் கனவு கண்டுக்கிட்டிருப்ப... என்ன நான் சொல்வது சரி தானே...?"

தனது நிலை குறித்து அப்படியே எடுத்துரைத்தவனைக் கண்டு அவள் வாயடைத்து போனாள்...

"என்ன பதிலை காணோம்...? அப்போ நான் சொன்னது சரி தானா...?"

சீண்டும் குரலில் கூறியவனைக் கண்டு அவளது முகம் சிவந்து போனது...

"ம்... ம்..." என்றாள் வார்த்தைகள் வராது...

"உன்னைப் பத்தி எனக்குத் தெரியாதா பேபி... உனக்காக நான் சீக்கிரம் வீடு திரும்பி விடுவேன்... அதுவரை உன்னை நீ பார்த்துக் கொள்ள வேண்டும்..."

அவன் கூறியதற்கு எல்லாம் மகிழ்ச்சியாய் சரி சரியென்று உரைத்தவள் மனம் தொலைப்பேசியை வைத்த போது எல்லையில்லா நிம்மதியில் ஆழ்ந்திருந்தது...

அதன் பின்னர்க் கடந்து சென்ற நாட்களில் தன்னவனை நினைத்து அவளுக்கு நரகமாக இருந்த போதும் அவனது வார்த்தைகளின் விளைவால் அதை அமைதியாகக் கடக்கப் பழகியிருந்தாள்...

அன்று சித்தார்த் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்புகிறான்... பிரகதீஸ்வரி அவனின் வருகைக்காக வழி மீது விழி வைத்து ஆவலுடன் காத்திருந்தாள்...

கார் வந்து நின்ற சத்தம் கேட்டு அவளை விட அவளது மனம் தன்னவனைத் தேடி விரைவாக வாயிலுக்குச் சென்றது... வீட்டினர் முன்பு தன்னை வெளிப்படுத்த முடியாமல் சமையலறைக்கும், வரவேற்பறைக்கும் இடையில் இருந்த கதவு பக்கமாய் நின்று கொண்டு வெளியே எட்டி எட்டி பார்த்து கொண்டிருந்தாள்...

தன்னுடைய இந்த நிலையைக் கண்டு அவளுக்கு அழுகை வரும் போலிருந்தது... கண்ணீரை உள்ளிழுத்துக் கொண்டு காத்து கொண்டிருந்தவளை ரொம்பவும் சோதிக்காமல் சித்தார்த் வீட்டினுள் வந்தான்...

மார்த்தாண்டமும், சரவணனும் அவனை இருபக்கமும் தாங்கி பிடித்தபடி அழைத்து வந்தனர்... நேரே அவனது அறைக்கு அழைத்துச் சென்று அவனைக் கட்டிலில் படுக்க வைத்தனர்...

விமலாராணி, சந்தியா, ஸ்வேதா மூவரும் அவனைச் சுற்றி நின்று கொண்டு அவனின் நலம் விசாரிக்க, அவனது கண்களோ அறை வாயிலில் கதவை பிடித்துக் கொண்டு

தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த தன்னவளை தான் இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தது...

உடலால் அவள் விலகியிருந்த போதும் மனதால் அவள் அவனுக்கு மட்டுமே நெருக்கமானவள் ஆயிற்றே...

மற்றவர்களைப் போல் பிரகதீஸ்வரியால் அவனிடம் வாய் விட்டு நலம் விசாரிக்க முடியவில்லை... ஆனால் அவளின் விழி வழியே அவளின் மனதின் தவிப்பினை உணர்ந்து கொண்டவனாய் அவன் தனது இடது கை கட்டை விரலை மெல்ல உயர்த்தித் தனது நலத்தை அவளுக்கு உறுதி செய்தான்...

அதைக் கண்டு அவளும் கண்களில் கண்ணீர் மல்க சரியென்பது போல் புன்னகையுடன் தலையசைத்தாள்...

சித்தார்த் வீட்டிற்கு வந்த இரு நாட்களில் சங்கமித்ரா ஊருக்கு கிளம்பினாள்... உடன் ஸ்வேதாவும்... அவள் வீட்டிற்கு வந்த போது தான் தெரிந்தது... ஹரிப்ரசாத் ஊருக்கு கிளம்பி சென்றது... அவனது புறக்கணிப்பில் அவளது மனம் மிகவும் வேதனையுற்றது... முயன்று தன்னைச் சமாளித்துக் கொண்டவள் தனது கடமையில் காதலை மறக்க முடிவு செய்தாள்...

பக்குவமான பெண்ணான தன்னையும் காதல் நோய் சூறாவளியாய் தாக்கக்கூடும என்று அவள் கனவிலும் நினைத்து பார்க்கவில்லை...

"அப்பா... அம்மாவை அழைச்சிக்கிட்டு நீங்களும் ஊருக்கு கிளம்புங்க... நான் என்னைப் பார்த்துக்கிறேன்..."

சித்தார்த் தந்தையை ஊருக்குக் கிளம்பச் சொன்னான்...

"உன்னை இப்படி விட்டுட்டு எப்படிப்பா...?" என்று தந்தையும்,

"உன்னை விட்டுட்டு நான் போக மாட்டேன்..." என்று தாயும் தயங்கி மறுத்தனர்...

"பிசினஸ் எல்லாம் போட்டது போட்டபடி அப்படியே கிடக்கிறது... நானும் இல்லாமல் நீங்களும் இல்லைன்னா

தொழில் முடங்கிப் போயிரும்..." என்று தொழிலதிபனாய் தந்தைக்கு எடுத்து சொல்லி அவரைக் கிளம்பச் செய்தான்...

"அப்படி என்றால் நீயும் எங்களுடன் வா..." என்று பிடிவாதம் பிடித்தார் பிரபாவதி...

"அம்மா... அதான் தினமும் வீட்டுக்கு டாக்டர் செக்கப் பண்ண வருகிறாரே... அப்புறம் பயம் எதற்கு...? இன்னமும் ரெண்டு மாதம் தான்ம்மா... அப்புறம் நான் மொத்தமாக அங்கு வந்து விடுவேன்..." என்று உறுதியாகக் கூறிய மகனை நம்பி அந்தத் தாய் ஊருக்கு கிளம்பி சென்றார்...

எல்லோரும் கிளம்பி சென்றதும் வீடு வழமைக்குத் திரும்பியது... அன்றிரவு எல்லோரும் தூங்கிய பிறகு மெதுவாய் பிரகதீஸ்வரி சித்தார்த்தின் அறைக்குள் நுழைந்தாள்...

மருந்தின் விளைவால் அவன் அயர்ந்து உறங்கி கொண்டிருந்தான்... அவனைக் கண்டதும் அத்தனை நாள் அடக்கி வைக்கப்பட்டிருந்த அவளது துயர் அனைத்தும் பீறிட்டுக் கொண்டு வெளிவந்தது...

கட்டில் அருகே தரையில் மண்டியிட்டு அமர்ந்தவள் அவனது கரத்தில் முகம் புதைத்து தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தாள்... அவளது கண்ணீரில் அவனது கரம் முழுவதுமாய் நனைந்தது...

அவளது கண்ணீரின் ஈரத்தில் எழாதவன் அவளின் துயர் அவனின் மனதினை வருத்தியதில் மெல்ல கண் விழித்தான்...

கண் விழித்தவன் முதலில் கேட்டது அவளின் அழுகை ஒலி தான்... அவன் மெல்ல தலையைத் திருப்பிப் பார்த்தான்... தனது கரத்தில் முகம் புதைத்து அழுது கொண்டிருந்தவளை கண்டு அவனுக்குமே வேதனையாக இருந்தது...

மெல்ல அவனது கரம் உயர்ந்து அவளது தலையை ஆறுதலாய் வருடி கொடுத்தது... அதில் அவனை நிமிர்ந்து

பார்த்தவளின் மனம் துடித்தது... அவளது விழிகள் தவிப்புடன் அவனைப் பார்த்தது...

"என்ன பேபி...?" என்று கேட்டபடி அவனது கை அவளது கன்னத்தை வாஞ்சையுடன் வருடியது...

வருடிய அவனது கையைத் தனது கன்னத்தோடு சேர்த்து அழுத்தி பிடித்துக் கொண்டவள் அவனை இமைக்காது பார்த்தபடி அந்த வார்த்தைகளைக் கூறினாள்... அதில் அவனது கண்கள் மின்னியது மகிழ்ச்சியில்...

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறீங்களா...?"

"தாயை இழந்த போது உறவாய்
தந்தை இருந்தார்...
தந்தையை இழந்த போது உறவாய்
தன்னம்பிக்கை இருந்தது...
உன்னை இழந்த கணம் நான்,
என் நம்பிக்கை இழந்து,
என்னை இழந்து முற்றிலும்
கோழையாய் மாறி போனேன்...
கோதையை ஆட்கொண்ட
எம்பெருமான் போன்று நீ
என்னை ஆட்கொள்வது எப்போது...?
கோதையைப் போல் என்னை ஏங்க
வைத்து விடாதே என் சித்தார்த்தனே...!
கோதையைப் போல் நெஞ்சுரம்
எனக்கில்லை... நீயில்லையேல்
பிரிந்துவிடும் எனதாவியே...!!!"

நனவாகும்...!!!

இத்தனை நாளாய் தனது மனதினை வாட்டி கொண்டிருந்த விசயத்திற்கு ஒரு நொடியில் தீர்வு சொன்ன தன்னவளை இமைக்க மறந்து பார்த்திருந்தான் சித்தார்த்... அந்தக் கணம் அவனது மனம் எந்த மாதிரியாக உணர்ந்தது என்பதை அவனால் கூற முடியவில்லை... உணர்ச்சிப்பெருக்கில் தனது கையை அழுத்தி பிடித்துக் கொண்டிருந்த பிரகதீஸ்வரியின் கையை இறுக பற்றிக் கொண்டான்...

அவள் வாய் வார்த்தையாய் கேட்ட கேள்விக்கு அவன் தனது அழுத்தமான பிடியால் உறுதி கூறியதை அந்தப் பேதை பெண் உணரவில்லை...

"நீங்க அடிப்பட்டுக் கிடந்தப்போ உங்க பக்கத்தில் இருந்து உங்களுக்கு உதவி செய்ய என்னால் முடியலை... இதோ இப்போது நீங்க வீட்டுக்கு வந்த பிறகும் உங்க கிட்ட வந்து பேசவோ, உங்களுக்குப் பணிவிடை செய்யவோ என்னால் இயலவில்லை... இந்த மாதிரியான ஒரு நிலைமை எவ்வளவு பெரிய கொடுமை தெரியுமா...? அதை அனுபவித்துப் பார்த்தால் தான் உங்களுக்குப் புரியும்..."

அவளின் உணர்வுகள் அவனுக்குப் புரியாமல் இல்லை... புரியாமல் இருந்தால் அவன் மனிதனே இல்லை...

அவளின் தூய்மையான அன்பு அவனது அன்பில்லா வறண்ட மனதில் சொட்டு சொட்டாக இறங்கி அவனின் மனதிலும் ஈரத்தை ஆழமாய்ப் பதிய செய்தது... கல்லிலும் ஈரம் கசிந்தது...

இன்னமும் அவன் தன் காதலினை அவளிடத்தில் சொல்லவில்லை... ஆனாலும் அவள் அவனிடத்தில் மணம் புரிய கேட்கிறாள் என்றால் அவள் அவன் மீது எத்தனை நம்பிக்கை வைத்திருக்க வேண்டும்...

இந்தக் காலத்தில் அவளைப் போன்று உயிராய் நேசிக்கும் பெண் கிடைப்பது அரிது... பணத்தையும், பகட்டையும்

நாடும் பெண்களே இங்கு அதிகம்... இவ்வளவு ஏன் அவன் கூட அப்படித்தானே... தன்னைப் பற்றிய யோசனையில் அவனது நெற்றியில் சிந்தனை கோடுகள் விழுந்தது...

"ரொம்ப வலிக்கிறதா...?"

அவன் முகம் சுளித்ததைக் கண்டு அவள் மனம் பதறி போனாள்... அவளின் பதற்றம் கண்டு அவனது முகத்தில் புன்னகை அரும்பியது...

"முதலில் இங்கே வந்து உட்காரு..." என்று படுக்கையில் தனக்கு அருகில் இருந்த இடத்தை அவன் சுட்டிக்காட்ட...

சிறிதும் தயக்கமின்றி அவன் அருகில் அமர்ந்தவளை கண்டு அவனது மனம் நிறைந்தது... அவளது இந்த நம்பிக்கையை அவனது ஆயள் வரை காப்பாற்ற வேண்டும் என்கிற உறுதி அந்தக் கணம் அவனுள் பிறந்தது...

விடிவிளக்கு ஒளியில் தேவதையாய் அமர்ந்திருந்தவளை அவன் வைத்த கண் வாங்காது பார்த்தான்... அழுதழுது அவளது முகம் எல்லாம் சிவந்து போயிருந்தது... நலுங்கிய தோற்றத்திலும் தன் மனதினை கவர்ந்தவளை கண்டு அவனது மனம் சொக்கித்தான் போனது...

'இப்போ இந்தக் காயம் மட்டும் இல்லை என்றால்... என் பேபியை...' அதற்கு மேல் அவனது கற்பனை குதிரை தறிக்கெட்டு பாய்ந்ததில் அவன் பயந்து போய் அவசரமாய் அதற்குத் தடா போட்டான்...

"வலிக்கிறதா...?" என்று மீண்டும் கேட்டவளை கண்டு சிரித்தவன் கோவைப்பழமாய்ச் சிவந்திருந்த அவளது மூக்கு நுனியை பிடித்து ஆட்டியபடி,

"நீ இப்படிப் பக்கத்தில் வந்து உட்கார்ந்தால் எனக்கு அப்படியே குளுகுளுன்னு இருக்கிறது..."

அவன் சொன்னது கேட்டு அவளது முகத்தில் வெட்கத்தின் சாயல் எட்டிப்பார்த்தது...

"என்னை ரொம்ப மிஸ் பண்ணினியா பேபி..." என்று கேட்டவனுக்கு ஆம்மென்று அவள் தலையசைக்கும் போதே அவளது கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் அவன் மீது பட்டுத் தெறித்தது...

"த்ச்சு... இப்போ எதுக்கு இந்தக் கண்ணீர்...?" என்று கடிந்தபடி அவளது கண்ணீரை அவன் துடைத்து விட்டான்...

"நீங்க ஏன் இப்படிப் பண்ணினீங்க...? ஜல்லிக்கட்டு பத்தி உங்களுக்கு என்ன தெரியும்...? அதிலும் வீரையன் ரொம்ப ஆபத்தானவன்..."

அவள் கூறியதை கேட்டு அவன் அவளை ஆழ்ந்து பார்த்தான்... மயங்கி விழும் முன் 'இந்த வெற்றி உனக்காகத் தான் பெண்ணே...' என்று தான் செய்த சைகையை அவள் புரிந்து கொள்ளவில்லையோ...? அவனுக்கு யோசனையாக இருந்தது... அதற்கான பதிலை அவளே கூறினாள்...

"உங்க இரத்தத்தைப் பார்த்ததும் அப்படியே அதிர்ந்து உறைந்து போயிட்டேன்..." என்றவளின் மனநிலை அவனுக்குப் புரிவதாய்...

"அந்த அடங்காத வீரையனையும் இந்தச் சித்தார்த் அடக்கி காட்டினேனா இல்லையா...?"

"ம்... ம்..." என்று தலையசைத்தவளின் முகத்தில் பெருமிதம் வழிந்தது...

அதைக் கண்டு அவனுக்கு அத்தனை மகிழ்ச்சியாய் இருந்தது... அந்தச் சமயமாவது அவன் அவளிடத்தில் கூறியிருக்கலாம்... அவளுக்காகத் தான் இந்தச் செயலை தான் செய்ததாக... அப்படிக் கூறியிருந்தால் அவனது நேசத்தின் ஆழத்தை அவளும் புரிந்து கொண்டு இருப்பாள்...

தனது காதலை அவன் வார்த்தையிலும் சொல்லவில்லை... செயலிலும் உணர்த்தவில்லை...

"இனியும் நீ இங்கே இருந்தால் ஆபத்து... யாராவது பார்த்தால் தவறாக நினைக்கக் கூடும்... நீ கிளம்பு..."

சரியென்றபடி எழுந்தவள், "உங்களுக்கு எதுவும் உதவி வேண்டுமா...?"

"இல்லை வேண்டாம்... நல்ல தூக்கம் தான் வருகிறது..."

அவனுக்குக் கொடுக்கப்பட்ட மருந்துகளின் வீரியம் அப்படிப்பட்டது...

"ஐயோ சாரி... நீங்க தூங்குங்க..."

அவளின் கையைப் பிடித்துத் தடுத்து நிறுத்தியவன், "என் தூக்கத்தை டிஸ்டர்ப் பண்ணுவதற்கு உனக்கு மட்டும் தான் உரிமை இருக்கிறது பேபி..." என்று கண்சிமிட்டி சிரித்தவனைக் கண்டு புரியாது பார்த்தவள்,

"உடம்பு சரியில்லாதவங்களை நான் என்று இல்லை யாராக இருந்தாலும் தொந்திரவு செய்யக் கூடாது..." என்று பெரிய மனுசி தோரணை போல் கூறியவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

வாய் விட்டு சிரிக்க முயன்றவன் அது முடியாமல் வலியில், "அம்மா..." என்று முனங்கினான்...

"என்னாச்சு...?" என்று பதறியவளை கண்டு தனது வலியை மறைத்து இதமாய்ப் புன்னகைத்தவன்,

"ஒண்ணும் இல்லை... நீ உன் ரூமுக்கு போ..."

அவன் சொன்னதை நம்பாது அவனைத் திரும்பி திரும்பி பார்த்தபடி அவள் சென்றாள்...

கதவை சாத்திவிட்டு சென்றவளை பார்த்து கொண்டிருந்தவனின் முகத்தில் புன்னகை நிலைத்திருந்தது... அடுத்த நொடி தூக்கம் வந்து அவனை ஆக்கிரமித்துக் கொண்டது...

சித்தார்த்திடம் பேசி விட்டு வந்த பிரகதீஸ்வரிக்கு ஒரு பக்கம் நிம்மதி, ஒரு பக்கம் கவலை என்று அவனைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தவள் ஒன்றை மட்டும் யோசிக்க மறந்து விட்டாள்... அது அவன் கடைசி வரை திருமணத்திற்குச் சம்மதம் சொல்லாததை... அவனின் வலியில் அவள் தனது கவலையை மறந்து போனாள்...

அடுத்து வந்த நாட்களில் பிரகதீஸ்வரி பள்ளிக்கு சென்றாலும் சித்தார்த்திற்குப் பத்திய உணவு கொடுப்பது மற்றும் அவனது காயத்திற்கு மருந்திடுவது என்று அவனுக்குச் சிறு சிறு பணிவிடைகள் செய்து சந்தோசப்பட்டுக் கொண்டாள்...

பிரபாவதி கூட அவளிடம் தனது மகனின் உடல்நலனை விசாரிக்கும் அளவிற்கு அவள் பொறுப்பாக அவனைக் கவனித்துக் கொண்டாள்... ஏனெனில் விமலாராணி மற்றும் சந்தியாவிற்கு அந்தளவுக்குப் பொறுப்பும், பொறுமையும், பக்குவமும் கிடையாது... அதனால் பிரபாவதி எப்போதுமே பிரகதீஸ்வரி மூலம் மகனை பற்றி அறிந்து கொள்வார்...

இன்றும் அது போல் அவனது காயத்திற்கு மருந்து போட்டு கொண்டிருந்தாள் பிரகதீஸ்வரி... அவளின் செயலை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த சித்தார்த்திற்குப் பெருத்த ஆச்சிரியம் என்னவென்றால் இத்தனை குறுகிய நாட்களில் அவனின் காயம் ஓரளவிற்கு முழுமையாகக் குணமாகி இருந்தது... இன்னும் சிறிது நாட்களில் காயம் இருந்ததற்கான தழும்பு இல்லாது முழுமையாகக் குணமாகி விடும் என்றே அவனுக்குத் தோன்றியது...

"உன் கையில் ஏதோ மேஜிக் இருக்கு பேபி..." என்று அவன் அவளைச் சிலாகித்துப் பாராட்டினான்...

"என் கையில் இல்லை... நம் சித்த வைத்தியத்தின் மகிமை இது..." என்று சிரித்தபடி கூறியவள் கட்டு போட்டு விட்டு நிமிர்ந்தாள்...

"இருக்கலாம்... ஆனால் எனக்கு என்னமோ எனக்கான மருந்து உனது கைகளில் இருப்பதாய் எனக்குத் தெரிகிறது..."

அவன் கூறியதை கேட்டு அவளது முகம் செவ்வானமாய்ச் சிவந்தது...

"பேபி... இந்த மருத்துவக் குறிப்புகள் எல்லாம் எப்படி ஞாபகம் வைத்திருக்கிறாய்...? உன் அப்பா சொல்லி கொடுத்தது அந்தளவுக்கு உன் நினைவில் இருக்கிறதா...?"

"இல்லை... அப்பா எழுதிய மருத்துவக் குறிப்புகள் அடங்கிய புத்தகங்கள் என்னிடம் இருக்கிறது..."

"அதை நான் பார்க்கலாமா...?" ஆவலுடன் கேட்டவனின் ஆர்வம் பற்றி அறியாது பேதையவள் சரியென்று தலையசைக்க...

"இப்பவே பார்க்கலாமா...? ப்ளீஸ்..."

"இதுக்கு எல்லாமா ப்ளீஸ் போடுவது... இதோ கொண்டு வருகிறேன்..."

அறையை விட்டு வெளியேறியவளை கண்டு அவனது முகத்தில் வெற்றி புன்னகை நிறைந்தது...

பிரகதீஸ்வரி திரும்பி வரும் போது கை நிறையத் தடிமனான புத்தகங்களை எடுத்துக் கொண்டு வந்தாள்...

"இவ்வளவு புத்தகங்களா...?" என்று அவன் ஆச்சிரியத்துடன் பார்க்கவும் அவள்,

"இது கொஞ்சம் தான்... இன்னமும் இருக்கிறது..." என்று கூறி புன்னகைத்தவள் கட்டிலுக்கு அருகில் இருந்த மேசை மீது அந்தப் புத்தகங்களை வைத்தவள்,

"இப்போ நீங்க ரெஸ்ட் எடுங்க... பிறகு பார்க்கலாம்..." என்று சொல்ல...

"சரி பிறகு பார்க்கிறேன்... தீப்புண் காயம் ஆறுவதற்கான மருந்து எந்தப் புத்தகத்தில் இருக்கிறது... அன்று மித்ரா சொன்னாளே அந்த மருந்து... அது போல் இப்போது என்னோட காயத்திற்குப் போட்ட மருந்தும் எங்கே இருக்கிறது என்று சொல்லு..."

ஏன், எதற்கு என்று கேட்காது அவன் கேட்ட மருந்து குறிப்புகள் அடங்கிய புத்தகத்தை எடுத்து தனியே வைத்தவள்,

"இதில் நீங்க கேட்டது எல்லாம் இருக்கிறது..." என்று வெகுளியாகப் பதில் கூறினாள்...

"சரி நீ ஸ்கூலுக்குக் கிளம்பு..."

அவள் விடைப்பெற்றுச் சென்றதும் அவன் வேகமாக அந்தப் புத்தகத்தினை எடுத்துப் பார்த்தான்... அவனுக்குச் சிரமம் வைக்காது அவன் தேடிய குறிப்புகள் உடனே கிடைத்தது... அதைக் கண்டவன் முகம் மலர்ந்தவனாய் அலைப்பேசியில் தனது நண்பன் நீலேஷை அழைத்தான்...

மறுமுனையில் அவன் தொடர்பு கொண்டதும், "நான் இன்னும் ஒரு மாதத்தில் சென்னை வருகிறேன்... அப்போது லீக்ல் பார்மாலிட்டீஸ் எல்லாம் பார்த்து கொள்ளலாம்..."

மறுமுனையில் நீலேஷ் என்ன கூறினானோ அதை மறுத்த சித்தார்த்,

"ம்ஹூம்... அது சரி வராதுடா... ஏற்கெனவே நான் சொன்னது போல் செய்... எனக்கு முழுமையாய் நம்பிக்கை இருக்கிறது..." என்று கூறியவனின் முகத்தில் எதையோ சாதித்த உணர்வு தோன்றியது...

அலைப்பேசியை அணைத்த சித்தார்த்திற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது... எதையோ நினைத்தவனாய் அவனது இதழ்களில் புன்னகை விரிந்தது... தனது தலையணையின் அடியில் இருந்து எதையோ தேடி எடுத்தான்...

அதைத் திறந்து பார்த்தவனின் மனதில் பல கனவுகள் விரிந்தது... மெல்ல மயிலிறகை வருடுவது போல் அதை வருடி கொடுத்தான்... வரும் காதலர் தினத்திற்காகத் தன்னவளுக்காக அவன் வாங்கி வைத்திருந்த பரிசு அது... இப்போது அவனால் அதை அவளிடம் கொடுக்க முடியாது... ஆனால் இதைக் கொடுக்கும் சந்தர்ப்பம் ஒரு நாள் அவனுக்கும் கிடைக்கும்... அன்று அவன் இதை அவளிடம் அளிக்கும் முறையே வேறு மாதிரியாக இருக்கும்...

அதை நினைத்து பார்த்தவன் மனக்கண்ணில் அந்தக் காட்சி அப்படியே படமாய் விரிந்து அவனது விழிகளில் கனவாய் மலர்ந்தது...

என்றாவது ஒரு நாள் அவனது கனவு நனவாகும்...!!!

நாட்கள் அது பாட்டிற்கு வேகமாகச் சென்றதில் பிரகதீஸ்வரியின் முழு ஆண்டுத் தேர்வு வந்தே விட்டது... இப்போது சித்தார்த்தின் உடல்நலம் நன்றாகத் தேறி அவன் தனது அலுவல்களைப் பார்க்க துவங்கி இருந்தான்...

அன்று அவள் மும்முரமாகத் தேர்வுக்குப் படித்துக் கொண்டிருந்தாள்... நள்ளிரவு தாண்டிய அந்த வேளையில் அவள் மட்டும் தனியே அமர்ந்து படித்துக் கொண்டிருந்தாள்... அவளின் முன் ஆவி பறக்க தேநீர் கோப்பை நீட்டப்பட்டது...

யாரது என்று நிமிர்ந்து பார்த்தவள் அங்கு நின்றிருந்த சித்தார்த்தை கண்டதும் இனிய அதிர்ச்சியுடன் கூடிய திகைப்புடன் அவனைப் பார்த்தாள்...

"ம்... குடி..." என்றுரைத்தபடி உரிமையுடன் அவளது கைப்பற்றி அந்தக் கோப்பையைத் திணித்தான்... அதில் அவளது முகம் மலர்ந்தது...

"நம்பி குடிக்கலாமா...?" என்று நகை குரலில் கேட்டவளை கண்டு அவனது புன்னகை விரிந்தது...

"உனக்காக நெட்டில் பார்த்து டீ போட்டு எடுத்துட்டு வந்திருக்கேன்... அதுவும் எனக்குப் பிடிக்காத டீயை..."

"எனக்கும் டீ பிடிக்காதே..."

அவள் சொன்னது கேட்டு அவனது முகம் சின்னதாகிப் போனது...

"சரி பரவாயில்லை விடு... குடிக்க வேண்டாம்..." என்றான் இறங்கி போன குரலில்...

"எனக்கு டீ மட்டுமில்லை... காபியும் பிடிக்காது... இரண்டையும் நான் குடிப்பது இல்லை..." என்றவள் அவனின் முகத்தைத் தவிப்புடன் பார்த்தாள்... பின்பு,

"உங்களுக்காக நான் இதைக் குடிக்கிறேன்..."

அவள் கூறியதும் அவனது முகம் மலர்ந்தது... தனக்காகத் தனது பழக்கவழக்கங்களை மாற்றியமைத்துக் கொள்ளும் அவளைக் கண்டு அவனது மனம் நெகிழ்ந்து போனது...

"நல்லாயிருக்கா...?" ஒரு மிடறு குடித்தவளிடம் அவன் ஆர்வத்துடன் கேட்க...

"ரொம்ப நல்லாயிருக்கு..." என்றவள் மடமடவென்று மிச்சம் வைக்காது குடித்து முடித்தாள்...

அவளின் வேகத்தைப் பார்த்து சந்தேகப்பட்டவனாய் அவளின் கையிலிருந்த கோப்பையைப் பறித்து மிச்சம் இருந்த தேநீர் துளிகளை ருசித்தவன் முகம் அடுத்த நொடி அஷ்டகோணாலாகியது...

"கொஞ்சம் திக்னெஸ் அதிகமாகிருச்சோ..." என்று அசடு வழிந்தவனைக் காண காண அவளுக்குத் தெவிட்டவில்லை...

கம்பீரம் மட்டுமே ஒரு ஆணுக்கு அழகல்ல... மனதிற்கு நெருக்கமானவர்களிடம் மட்டும் அசடு வழியும் ஆணின் அசட்டுத்தனமும் ஒரு அழகு தான்...

"பரவாயில்லை விடுங்க... அடுத்தத் தடவை சூப்பரா ட்ரை பண்ணலாம்..."

"நாளைய டீக்கு இன்னைக்கே ரிசர்வேசனா...?" என்று கிண்டலுடன் கூறியவனைக் கண்டு,

"ஆமாம்..." என்று கூறியபடி பெரியதாகத் தலையாட்டி சிரித்தவளை கண்டு அவனுக்குமே சிரிப்பு வந்தது...

"சரியான வாலு..." என்று வலிக்காது அவளின் தலையில் கொட்டியவன்,

"நாளைக்கு என்ன எக்சாம்...?" என்று கேட்டபடி அவளின் பாட புத்தகத்தைக் கையில் வாங்கினான்...

"இங்கிலீஷ்..." என்று கூறியவளிடம்,

"நான் சொல்லித் தரவா...?" என்று ஆர்வத்துடன் கேட்டவனைக் கண்டு அவளும் மகிழ்ச்சியாகத் தலையாட்டினாள்...

அவளுக்குப் புரியும்படி எளிமையாக அவன் சொல்லி கொடுக்க அவளும் அதில் ஆழ்ந்து போனாள்... அந்த நள்ளிரவு நேரத்தில் யாருமில்லா தனிமையைக் காமம் அல்லாது கடமையோடு கடக்க இருவரது தூய்மையான காதல் உதவியது என்றால் மிகையில்லை...

அடுத்து வந்த நாட்களிலும் அவன் அவளுக்குப் பாடம் சொல்லி கொடுக்க ஆரம்பித்தான்... சரவணன், சந்தியா இதைத் தவறாக எண்ணவில்லை... ஆனால் விமலாராணி கண்ணிற்கு இது பெரிதாக உறுத்தியது... சித்தார்த்திடம் அவரால் நேரிடையாகப் பேச முடியாது... அதனால் அவர் பிரகதீஸ்வரியை மறைமுகமாகத் தாக்க எண்ணினார்...

அவள் படிக்க அமரும் போதும் தான் அவருக்கு வேண்டும் என்றே தலைவலி வரும்... வேண்டுமென்றே காபி கேட்பார், தைலம் தடவி விடச் சொல்வார்... ஒரு நாள் இதைப் பார்த்துக் கொண்டிருந்த சித்தார்த் அங்கு அமர்ந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த சந்தியாவிடம்,

"சந்தியா... உன்னோட அம்மாவுக்குத் தலைவலியாம்... காபி போட்டுக் கொண்டு வந்து கொடு... அப்படியே தலையையும்

பிடிச்சு விடு..." என்று கூறியவன் பிரகதீஸ்வரியை எழ விடாமல் கண்களால் அவளை அமர சொல்லி சைகை செய்தான்...

மகளின் கையால் காபி குடிக்கப் பயந்த விமலாராணிக்கு அதன் பிறகு தலைவலி வரவில்லை... பிரகதீஸ்வரிக்கு பெருத்த ஆச்சிரியமாக இருக்க அதைச் சித்தார்த்திடம் கேட்க வேறு செய்தாள்...

"அது எல்லாம் அப்படித்தான்..." என்றவன் அவளைப் படிக்குமாறு கூறினான்...

ஒரு வழியாகப் பிரகதீஸ்வரி எல்லாப் பரீட்சைகளையும் எழுதி முடித்து மகிழ்ச்சியாக வீட்டிற்கு வந்த போது சித்தார்த் கையில் பெட்டியோடு சென்னை கிளம்புவதற்காகத் தயாராக நின்று கொண்டிருந்தான்... அதைக் கண்டு அவளது முகம் சோகமாய்ச் சுருங்கியது...

அவனும் அவளின் முக மாறுதலை இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான்...

"அத்தை... சென்னை போயிட்டு இரண்டு நாட்களில் திரும்ப வந்து விடுவேன்..."

பிரகதீஸ்வரி முகத்தைப் பார்த்துக் கொண்டு அத்தையிடம் கூறிய சித்தார்த் எல்லோரிடமும் விடைப்பெற்றான்... தன்னவளிடம் மட்டும் சிறு தலையசைப்புடன் அவன் விடைப்பெற்றான்...

'சென்னை போகிறேன்னு ஏன் முதலிலேயே சொல்லலை...? நேத்து கூட என் கிட்ட நல்லா தானே பேசிக்கிட்டு இருந்தாங்க... இவ்வளவு ஏன் காலையில் ஸ்கூலுக்குப் போகும் போது கூட ஒண்ணும் சொல்லலையே...' மனதிற்குள் மருகியவளாய் அவள் சமையலறையில் நின்றிருந்தாள்...

திடுமென அவன் கிளம்பியது அவளுக்கு வருத்தமாக இருந்த போதும், அவனைப் பார்க்காது தான் எப்படி

இருக்கப் போகிறோம் என்று அவளுக்கு உள்ளுக்குள் ஒரே தவிப்பாக இருந்தது...

தன்னவனின் நினைவில் மூழ்கியிருந்தவளை பின்னால் இருந்து இரு கரம் அழுத்தமாய் அணைத்தது... திடுக்கிட்டுப் போய்க் கத்த போனவளின் காதில்,

"என் மேல் கோபமா பேபி...?" என்று கொஞ்சலாய் ஒலித்த சித்தார்த்தின் குரலில் வியப்புடன் திரும்பி பார்த்தாள் அவள்...

"என்ன கோபம் தானா...?"

ஒற்றைப் புருவத்தைத் தூக்கி வசீகரமாய்க் கேட்டவனின் அழகில் அவளின் மனவருத்தம் சடுதியில் காணாமல் போனது...

"கோபம் இல்லை... வருத்தம் தான்..." என்றாள் தனது மனதினை மறைக்காது...

"காலையில் சொல்லியிருந்தால் நீ ரொம்பக் கவலைப்பட்டிருப்ப... உன் எக்ஸாம்ல கான்சர்ன்ட்ரேட் பண்ணியிருக்க முடியாது... இது எல்லாம் தேவையா சொல்லு... அதான் இப்போது சொன்னேன்..."

"ம்... ம்..." என்று அவன் சொன்னதைக் கேட்டு கொண்டவளின் மதி முகம் அவளது வருத்தத்தினை அப்படியே காட்டி கொடுத்தது...

"நான் வருகிறேன்... ரொம்ப நேரம் இங்கே இருக்க முடியாது..."

என்றுரைத்தபடி கிளம்புவதற்கு ஆயத்தமானவன் அவளது விழிகளில் தெரிந்த பரிதவிப்பில் தன்னை மறந்தவனாய் வலது கை கொண்டு அவளது கன்னத்தை வருடியவன்,

"நான் சென்னைக்குப் போவதே நமக்காகத் தான் பேபி..." என்று கூறியவனின் செயலை விட அவனின் வார்த்தைகளில் அவளது மனம் உருகியது...

"நமக்காகன்னா...?" பெரும் எதிர்பார்ப்புடன் கேட்ட அவளது கேள்வியில் அவனது முகம் மலர்ந்தது...

"அது சஸ்பென்ஸ்..." என்றான் புதிரான புன்னகையுடன்...

"கத்திரிக்காய் முத்தினால் கடைத் தெருவுக்கு வந்து தானே ஆக வேண்டும்..."

அவள் கூறியதை கேட்டு வெடிச் சிரிப்பு சிரித்தவன் அதே மலர்ச்சியுடன் அவளிடம் விடைப்பெற்றுச் சென்றான்... தன் மீதான அவனின் தனிப்பட்ட அக்கறை பாவை மனதினை சிறகில்லாமல் பறக்க செய்தது...

சென்னை செல்லும் அவனுடன் தந்தையின் மருத்துவக் குறிப்புகளும் உடன் சேர்ந்து பயணம் செய்கிறது என்று அவள் அறிந்தால் அவளது இந்தச் சந்தோசம் நிலைத்து இருக்குமா...?

****

சென்னை வந்த சித்தார்த் செய்த முதல் வேலை நீலேஷை சந்தித்தது தான்... வீட்டிற்குக் கூடச் செல்லாமல் நேரே தனது கடற்கரை பங்களாவிற்குச் சென்றவன் அங்கு நீலேஷை வர சொன்னான்... குறித்த நேரத்திற்கு வந்த நீலேஷிடம் அவன் வியாபாரம் பேச ஆரம்பித்தான்...

"சித்து... நாம் இருவரும் பிஃப்டி பிஃப்டி பார்ட்னர்ஷிப்பில் இந்தத் தொழிலை செய்யலாமே...?"

"இல்லை நீலேஷ்... அது சரி வராது... மருத்துவக் குறிப்புகள் எல்லாம் என்னோடது என்னும் போது இதில் என்னுடைய பங்கு எழுபத்தைந்து சதவீதம் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்... மீதி இருபத்தியைந்து விழுக்காடுகள் உனக்கு... இந்தத் தொழிலை என்னால் தனியாக ஆரம்பிக்க முடியும்... ஆனால் இருக்கும் தொழிலை பார்ப்பதற்கே எனக்கு நேரமில்லை... அதனால் தான் இந்தத் தொழிலில் நான் உன்னைப் பார்ட்னராகச் சேர்த்துக் கொள்ளச் சம்மதித்து இருக்கிறேன்... ஏனென்றால் மருந்துகள் தயாரிப்பில் உங்களது நிறுவனம்

தான் இந்தியாவிலேயே தலை சிறந்த நிறுவனம்... அதனால் தான் இந்த முடிவு..."

தொழிலதிபனாய் கறாராய் பேசிய சித்தார்த்தை எதிர்த்து நீலேஷால் எதுவும் பேச முடியவில்லை... முதலில் காரியம் ஆகட்டும் அதன் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று அவன் அமைதியாகத் தலையாட்டினான்...

"அது போல் உனது நிறுவனத்தின் தயாரிப்பின் கீழ் இந்த மருந்து வந்தாலும் இதற்கு என்று தனிப் பெயர் இருக்க வேண்டும்... என்னுடையது யாரையும் சார்ந்திருக்கக் கூடாது..." என்று உறுதியாய் கூறியவன் தனது நிறுவனத்திற்கான தனிப்பட்ட பெயரை குறிப்பிட்டான்...

"இதற்கான லீகல் ஃபார்மாலிட்டீஸ் எல்லாம் ரெடி பண்ண சொல்லிட்டேன்... நாளை காலையில் நீ சைன் பண்ண வந்தால் போதும்..."

"அப்போ அந்த மருத்துவக் குறிப்புகள்..."

"இப்போதைக்கு அது என்னிடம் இருக்கட்டும்..." என்று அமர்த்தலான குரலில் கூறி பேச்சுவார்த்தையை முடித்துக் கொண்ட சித்தார்த்திடம் அதற்கு மேல் எதுவும் பேச முடியாது நீலேஷ் கிளம்பி சென்று விட்டான்...

தொழிலில் சித்தார்த் அவ்வளவு எளிதில் யாரையும் நம்பிவிட மாட்டான்... யாரையும் நம்பி எந்தக் காரியத்திலும் இறங்கவும் மாட்டான்... அவனுக்கு என்று தனிவழி... தனிக் கொள்கைகள் இருந்தது... அதில் குறுக்கீடு செய்வதற்கு யாருக்கும் அனுமதி கிடையாது...

தொழில் பேச்சு வெற்றிகரமாக முடிந்ததில் அவன் சந்தோசத்துடன் வீட்டிற்குக் கிளம்பி சென்றான்... இப்போதைக்கு வர மாட்டேன் என்று சொன்ன மகன் அதிசயமாய் வந்தது கண்டு பிரபாவதிக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது...

"சித்து... உனக்குத் தான் ஜல்லிக்கட்டு பத்தி எதுவும் தெரியாதே... அப்படி இருக்கும் போது அன்று ஏன்

அப்படியொரு முட்டாள்த்தனமான காரியத்தை நீ செய்த... நாங்க எல்லாம் ரொம்பவும் பதறி போயிட்டோம்டா..."

அதைச் சொல்லும் போதே அவரது கண்கள் கலங்கியது...

"நாங்கன்னு சொல்லாதே... நீ தான் ரொம்பப் பதறி போயிட்ட பிரபா..." மார்த்தாண்டம் மனைவியைப் பார்த்து கூற...

"பின்னே பதறாம என்ன செய்வாங்க...? எனக்கு இருக்கிறது ஒரே ஒரு மகன்... அவனும் உயிருக்கு போராடிக்கிட்டு இருக்கிறதை பார்க்கும் போது எவ்வளவு வேதனையாக இருந்தது தெரியுமா...?"

"அம்மா எனக்குத் தான் ஒண்ணும் ஆகலையே... அதை விட உங்க மகன் காளையை அடக்கிவிட்டு ஒரு வீரனா தான் மயங்கி விழுந்தான்... ஒரு வீரனை பெத்ததுக்கு நீங்க பெருமைப்படணும்மா..."

"நீ காளையை அடக்கலைன்னாலும் உன்னைக் கண்டு எனக்குப் பெருமை தான்டா... உலகம் போற்றும் தொழிலதிபன் என் மகன் அல்லவா..." என்று பெருமையாய் கூறிய அன்னையைப் பார்த்து புன்னகைத்தவன்,

"அப்படிப்பட்ட மகனுக்குத் தெரியாத ஒன்று உலகத்தில் இருக்கலாமோ...? அது ஜல்லிக்கட்டாக இருந்தாலும் கூட..." என்று புருவத்தை உயர்த்திக் கேட்டவனைக் கண்டு பெருமிதமாய்ப் புன்னகைத்தார்கள் அவனது பெற்றோர்...

"அப்பா, அம்மா... நான் கல்யாணம் பண்ணிக்கலாம்ன்னு முடிவு பண்ணியிருக்கேன்..."

திடுமென அப்படிக் கூறிய மகனை கண்டு பிரபாவதியின் முகம் மகிழ்ச்சியில் மலர்ந்தது...

"இப்பத்தான் சித்து ரொம்பச் சந்தோசமாக இருக்கு... நான் இப்பவே பொண்ணு தேட ஆரம்பிக்கிறேன்..." என்றவரை கையமர்த்தித் தடுத்தவன்,

"ஏற்கெனவே பொண்ணு பார்த்தாச்சும்மா..." என்ற மகனை கலவரமாய்ப் பார்த்தார் பிரபாவதி...

அன்று சொன்னது போல் அவன் சந்தியாவைத் தான் சொல்கிறானோ... அவருக்குத் தலை சுற்றி மயக்கம் வருவது போலிருந்தது... கணவன் முன்னிலையில் தனது சந்தேகத்தை அவரால் வாய் விட்டு மகனிடத்தில் கேட்க முடியவில்லை...

மனைவியின் பதற்றம் மார்த்தாண்டத்துக்கு இல்லை போலும்... அவருக்கு மகன் மீது நம்பிக்கை இருந்தது...

"பொண்ணு யாருப்பா...?" என்று அவர் நிதானமாகக் கேட்டார்...

"பிரகதீஸ்வரி..."

அவரை விட நிதானமாக அவன் பதில் கூறினான்... அதைக் கேட்டு இருவருமே திகைத்து போய்,

"அந்தச் சின்னப் பெண்ணா...?" என்று வாய் விட்டுக் கூவி விட்டனர்...

அதைக் கேட்டு அவனது முகம் ஒரு மாதிரியாய் மாறியது... இருந்தாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டான்...

"எனக்கு அவள் தான் வேண்டும்..." என்றான் உறுதியாய்...

"உனக்கும் அவளுக்கும் ஒன்பது வயசு வித்தியாசம் சித்து..." என்று பதறினார் பிரபாவதி...

"அது கூடப் பரவாயில்லை சித்து... ஆனால் அந்தப் பெண் மைனர்... அவளைப் போய் எப்படி உனக்குத் திருமணம் முடிப்பது...?" என்று கவலையாய் கேட்டார் மார்த்தாண்டம்...

"ஒன்பது வயசு ஒண்ணும் பெரிய வித்தியாசம் இல்லைம்மா... எங்களை விட அதிக வயசு வித்தியாசத்தில் கல்யாணம் பண்ணினவங்க எல்லாம் சந்தோசமாகத் தான் இருக்கிறார்கள்..." என்று அன்னையிடம் கூறியவன்,

"நான் சொன்ன தேதியில் கல்யாணத்தை வைங்கப்பா... அப்போது அவள் மேஜரான பெண்... அப்படியே யாராவது குறுக்குக் கேள்வி கேட்டால் என்ன பதில் சொல்லணும்ன்னு எனக்குத் தெரியும்..." என்று தந்தையிடம் உறுதியான குரலில் அவன் பதிலளித்தான்...

சித்தார்த்தின் உறுதி கண்டு அவர்கள் இருவரும் அயர்ந்து போயினர்...

"நீ விலை பேசியது மருத்துவத்தை அல்ல...
அவளது கனவை... அவளது ஆசையை...
அவளது அன்பை... அவளது காதலை...
அவளது உயிர் ஊர் சேவை...
சேவையைத் தேவைக்கு விற்பது,
பணத்துக்காக ஊனை விற்பது போலல்லவா...
மனைவியாக உரிமை கொள்பவளை
ஊரறிந்த பரத்தையாக்கி விட்டாயே...
நின் செயலை அறியும் போது அவள்
அப்படித்தான் துடிதுடிக்கப் போகிறாள்...
அவள் துடிப்பில் நீ துடிப்பாயா...?
இல்லை துச்சமாக எண்ணி
அவளைத் தூக்கி எறிவாயா...???"

நனவாகும்...!!!

"பிரகதி..."

விமலாராணி கத்திய காட்டுக் கத்தலில் பயந்து போனவளாய் பிரகதீஸ்வரி உடனே அங்கு ஓடி வந்தாள்...

"என்னம்மா...?" என்றவளை பார்த்தவரின் பார்வையில் அத்தனை வெறுப்பு மண்டியிருந்தது...

இத்தனை நாளாய் மனதிற்குள் அடக்கி வைக்கப்பட்டு இருந்த வெறுப்பானது இன்று அவரது முகத்தில் அப்பட்டமாய் வெளிப்பட்டது...

"வயக்காட்டில் வேலை இருக்குன்னு உனக்குத் தெரியுமா...? தெரியாதா...? நீ என்னடான்னா இங்கே சொகுசா உட்கார்ந்திட்டு காலை ஆட்டிக்கிட்டு இருக்க... முதலில் அங்கே போய் வேலையைக் கவனி..."

கொஞ்சமும் மனசாட்சி இல்லாது கூறியவரை அவள் வெறுமையாய் பார்த்தாள்... இவ்வளவு நேரம் அவள் அடுப்படியில் வெந்து கொண்டிருந்ததை அவர் மறந்து போனதை நினைத்து அந்தப் பிஞ்சு மனம் வெம்பியது...

இன்று பார்த்து சோலையம்மாள் வேறு உடல்நலம் சரி இல்லாததால் வேலைக்கு வரவில்லை... அதிகாலை எழுந்ததில் இருந்து நிற்க கூட நேரமில்லாது அவள் ஓடி கொண்டு இருக்கிறாள்... அவளைப் பார்த்து இரக்கம் இல்லாது கூறியவரின் வார்த்தையில் அவளது விழிகளில் நீர் நிறைந்தது...

"அங்கேயும் போய்ச் சும்மா நின்று கொண்டு வேடிக்கை பார்க்காமல் நீயும் களத்தில் இறங்கி வேலை செய்... கொண்டவன் இருந்து பார்த்தால் தான் நல்லது... இல்லை என்றால் திருட்டுகள் அதிகரித்து விடும்..."

"சரிம்மா..." என்றவள் உடனே வயலுக்குக் கிளம்ப ஆயத்தமானாள்...

"போகிறதுக்கு முன்னாடி இங்கே இருக்கிற வேலை எல்லாத்தையும் முடிச்சிட்டு போ..." என்று கூறிய விமலாராணியின் குரலில் அத்தனை அதிகாரம் இருந்தது...

விமலாராணிக்கு ஏனோ தன்னைப் பிடிக்கவில்லை என்று தந்தை இறந்த கொஞ்ச நாட்களிலேயே அவளுக்குத் தெரிந்து போனது... அதனால் தான் அவர் என்ன கூறிய போதும் அவள் எதிர்த்து பேசியது இல்லை... சரி, சரியென்று அமைதியாகச் சென்று விடுவாள்... இன்றும் அப்படி எண்ணி அமைதியாக நடந்து கொண்டவளின் மனம் அவரது அதிகாரத்தில் பெரும் காயம் அடைந்தது...

"சரிம்மா..." என்றபடி சமையலறையை நோக்கி நடந்தாள்...

ஏற்கெனவே மதிய உணவு வேலையை முடித்து விட்டாள்... இன்னமும் காலை உணவு மட்டுமே பாக்கி இருந்தது... விமலாராணி, சரவணன், சந்தியா மூவருக்கும் மூன்று விதத்தில் உணவு வேண்டும்... விமலாராணிக்கு இட்லி, பொங்கல், சரவணனுக்குத் தனியே ராகிக் கஞ்சி, அவித்த முளை கட்டிய பயறு வகைகள், வேக வைத்த முட்டைகள், சந்தியாவிற்குச் சப்பாத்தி, பூரி என்று தனித்தனியே விதவிதமாய்ச் செய்ய வேண்டும்...

அடுத்த ஒரு மணி நேரத்தில் எல்லாவற்றையும் அரக்கபரக்க வேகமாய்ச் செய்து முடித்தவள் களத்து மேட்டிற்குக் கிளம்பி சென்றாள்... அங்குச் சென்று பார்த்தவள் சோம்பி கொண்டு ஒரு இடத்தில் இருக்கப் பிடிக்காது தானும் வயலில் இறங்கி வேலை செய்ய ஆரம்பித்தாள்...

இந்த வேலை ஒன்றும் அவளுக்குப் புதிது அல்ல... சிறு வயது முதல் அவளுக்கு நேரம் கிடைக்கும் போது எல்லாம் தந்தையுடன் வயலுக்கு வந்து சின்னச் சின்ன வேலைகளைப் பார்ப்பாள்... அவருடன் சுவாரஸ்யமாகக் கதை பேசியபடி வேலை செய்வது என்றால் அவளுக்கு அத்தனை விருப்பம்...

ஜமீன்தார் என்கிற அகந்தையுடன் விரல் நுனியில் அழுக்குப் படாமல் சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பவர் அல்ல அவர்... அதுவும் அவர் நேசிக்கும் இயற்கை அன்னையைப் பூஜிக்க அவர் நேரே களத்தில் இறங்கி விடுவார்...

இப்போதும் தந்தை நினைவில் அவளது விழிகள் கலங்கியது... அதைக் கண்ட உடன் வேலை செய்யும் பெண்மணி,

"சின்னம்மா... நீங்க ஓய்வு எடுங்க... நாங்க மதியத்துக்குள்ள இந்த வேலையை முடிச்சிடுவோம்..." என்று கூற...

"நீங்க மட்டும் வேலை செய்து சிக்கென்று உடல்வாகுடன் இருக்க வேண்டும்... நான் மட்டும் சோம்பி கிடந்து குண்டாக வேண்டுமா...? எவ்வளவு நல்ல எண்ணம் உங்களுக்கு...?"

பொய்யாய் கோபம் கொண்ட தங்களது சின்ன ஜமீன்தாரிணியைக் கண்டு அந்தப் பெண்மணிக்கு மகிழ்ச்சியில் சிரிப்பு வந்தது... அவரைத் தொடர்ந்து மற்றவர்களும் சிரித்து விட்டனர்...

"இதே போல் நாம் சந்தோசமாய்ச் சேர்ந்து வேலை செய்தால் சீக்கிரம் வேலையை முடித்து விடலாம்..." என்றவள் வேலையைச் செய்ய ஆரம்பிக்க... மற்றவர்களும் வேலையைச் செய்ய ஆரம்பித்தனர்...

அதே நேரம் விமலாராணி தனது அண்ணன் மகனுக்காக ஆத்திரத்துடன் காத்துக் கொண்டிருந்தார்... சித்தார்த் வரும் நேரத்தை கணக்கிட்டு தான் அவர் பிரகதீஸ்வரியை இங்கிருந்து அப்புறப்படுத்தி இருந்தார்... அவள் இருந்தால் அவரால் அவனிடம் பேச முடியாது... பேச முடியாது என்பதை விடச் சண்டையிட முடியாது... அது தான் உண்மை...

குறித்த நேரத்தில் வந்திறங்கிய சித்தார்த்தை கண்டதும் அவரது முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது... ஏனெனில் அவர் கேள்விப்பட்ட விசயம் அப்படி...

வீட்டிற்குள் நுழைந்த சித்தார்த்தும் அவரது கடுகடு முகத்தினைப் பார்த்தபடி தான் வந்தான்... அதைக் கண்டு அவன் பெரிதாக அலட்டி கொள்ளவில்லை... என்றாவது ஒரு நாள் அவரை எதிர் கொண்டு தான் ஆக வேண்டும்... அது இன்று என்றே அவன் நினைத்தான்...

அவன் வந்ததும் வராததுமாய் அவர், "சித்து... நீ இப்படிப் பண்ணுவன்னு நான் கொஞ்சமும் நினைச்சு கூடப் பார்க்கலை..."

அதில் அவரைக் கூர்மையாய் பார்த்தவன், "எல்லாவற்றையும் இங்கே ஹாலில் வைத்தே பேசியாக வேண்டுமா...?"

அதைக் கேட்டதும் அவர் அமைதியாக அங்கிருந்த அலுவலக அறையை நோக்கி சென்றார்... அவரைப் பின்தொடர்ந்து அவனும் சென்றான்... அவன் மனதிற்குள் அவரிடம் எப்படிப் பேச வேண்டும் என்று ஒத்திகை பார்த்துக் கொண்டே சென்றான்...

அறைக்குள் நுழைந்தும் சித்தார்த் எதுவும் பேசாது பேண்ட் பாக்கெட்டில் கை விட்டபடி தன்னை அலட்சியமாய்ப் பார்த்தபடி நின்று கொண்டிருந்ததைக் கண்டு விமலாராணிக்கு பற்றிக் கொண்டு வந்தது... ஆனால் அதை அவனிடத்தில் நேரே காட்ட முடியாது தன்னை அடக்கி கொண்டவரின் வார்த்தையில் அந்த ஆத்திரம் அப்படியே வெளிப்பட்டது...

"சித்து... நீ கல்யாணம் பண்ணுவதற்குப் போயும் போயும் அவள் தான் உனக்குக் கிடைத்தாளா...?" என்று முகத்தை அருவருப்பாய் சுளித்தவரை கண்டு சுள்ளென்று காட்டமாய்ப் பதில் கூற போனவன் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்...

"உங்க சொத்துக்கள் என்று நினைக்கும் இது எல்லாம் உங்க சொத்து தானா அத்தை...?"

சித்தார்த் நிதானமாகக் கேட்க அதைக் கேட்டு அவரது முகம் விகாரமாய் மாறியது... ஆனாலும் உடனே தனது முகபாவனையை மாற்றிக் கொண்டவர்,

"அன்று தானே அத்தனை ஆதாரங்களையும் உன்னிடம் காண்பித்தேன்... எல்லாவற்றையும் நீ பார்த்தாய் தானே... கண்ணால் கண்ட பிறகும் எதற்கு உனக்கு இந்தச் சந்தேகம்...?"

"கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய்... தீர விசாரிப்பதே மெய்... அது போல் நான் எல்லாவற்றையும் தீர விசாரித்து விட்டேன்..."

அவன் தான் கண்டுபிடித்த மெய்யை அவரிடத்தில் பகிர்ந்து கொள்ள அதைக் கேட்டவரது முகம் பேயறைந்தது போலானது...

"சித்து... நீ சொல்வது உண்மையா...?"

"நீங்க என் அத்தை... நான் எதற்கு உங்களிடம் பொய் கூற வேண்டும்...?"

"அப்போ அந்தக் கிழவன் என்னை ஏமாற்றி விட்டானா...?" என்றவரை வெறித்துப் பார்த்தவன் தோளை குலுக்கியபடி,

"இருக்கலாம்... யார் கண்டது...? என் தந்தையுடன் பிறந்த தங்கையான உங்களை ஏமாற்ற எனக்கு மனமில்லை... உங்களது உரிமை உங்களுக்கு வேண்டுமா இல்லையா...?"

"வேண்டும் தான்..."

"அதற்குத் தான் இந்தத் திருமணம்..."

"அப்போ என் மகள் சந்தியாவின் கதி..."

என்னமோ அவன் சந்தியாவிற்கு ஆசை வார்த்தை காட்டி ஏமாற்றியது போல் விமலராணி கூறியது கண்டு அவன் பல்லை கடித்தான்... அவரது முகத்திற்கு நேரே தனது ஆத்திரத்தை காட்ட முடியாத நிலையில் அவன் இருந்தான்...

ஏனெனில் பிரகதீஸ்வரியை திருமணம் செய்ய அவரது சம்மதம் அவனுக்குத் தேவையாக இருந்தது... ஏனெனில் அவர் சம்மதம் இல்லாது வெகுளிப் பெண் பிரகதீஸ்வரி அவனைத் திருமணம் செய்யச் சம்மதிக்க மாட்டாள்... விமலாராணி மறுத்து ஒரு வார்த்தை சொன்னாலும் அதை எதிர்த்து பேசும் தைரியம் இல்லாதவள் அவள்... அதை விட அன்புக்கும், உறவுக்கும் முன்னுரிமை கொடுக்கும் குணவதி அவள்... அந்த ஒரு காரணத்திற்காக அவனும் அமைதியை கடைப்பிடித்தான்... இல்லை என்றால் சித்தார்த் பேசும் முறையே வேறு மாதிரியாக இருந்திருக்கும்...

யாருக்கும் அதிகச் சேதாரம் விளைவிக்காமல் தன்னுடைய திருமணத்தை நடத்திட அவன் நினைத்தான்... அவனுக்கு வேண்டியது அவள் மட்டுமே...

"நான் சந்தியாவைத் திருமணம் செய்வது முக்கியமா...? இல்லை உங்களுக்கு உங்க சொத்துக்கள் முக்கியமா...?"

அவனது இந்தக் கேள்வியில் 'கிரிமினல்' புத்தி கொண்ட விமலாராணி சுதாரித்துக் கொண்டார்... சித்தார்த் நினைத்தால் எதையும் சாதித்து விட முடியும் என்பதை அவர் நன்கு அறிவார்... அவன் பிரகதீஸ்வரியை திருமணம் செய்யாது அந்தச் சொத்துக்களைப் பறித்து அவரிடம் கொடுக்கும் வல்லமை அவனிடத்தில் உண்டு என்றும் அவருக்குத் தெரியும்...

அப்படிப்பட்ட சித்தார்த் இப்படிப் பேசுவது கண்டு அவருள் யோசனை எழுந்தது... அதனால் அவர் சற்று நிதானித்தார்...

"எனக்குக் கொஞ்சம் யோசிக்க அவகாசம் கொடு... என்னுடைய கனவு கோட்டை நொடியில் இடிந்து விழுந்ததை ஜீரணிக்க எனக்குக் கொஞ்ச நாட்கள் அவகாசம் தேவைப்படும்..." என்றவரை கண்டு அவனுக்கும் பாவமாக இருந்ததோ...

என்ன இருந்தாலும் தந்தையின் தங்கை அல்லவா... அதே சமயம் பிரகதீஸ்வரியையும் விட்டு விட அவனால்

முடியவில்லை...

"இதில் யோசிக்க ஒன்றும் இல்லை அத்தை... இருந்தாலும் நான் கூறுவதை நன்றாக யோசித்துப் பதில் சொல்லுங்கள்... நல்ல பதிலாக..." என்று அழுத்தி கூறியவன் அவரிடம் இருந்து விடைப்பெற்றுச் சென்றான்...

'எனக்கேவா சித்து...? என் அனுபவம் உன் வயது... என்னிடமே உன் தொழில் புத்தியை காட்டுகிறாயே... என் சொத்துக்களை எப்படி என்னிடம் வரவழைப்பது என்றும் எனக்குத் தெரியும்... அதே சமயம் என் மகள் சந்தியா கழுத்தில் உன்னை மூணு முடிச்சு போட வைப்பதும் எப்படின்னு எனக்குத் தெரியும்... நீ வல்லவன் என்றால், நான் வல்லவனுக்கு வல்லவனடா... உனக்கு வில்லியடா இந்த அத்தை...'

சித்தார்த்தின் பலத்தைத் தனது மதியுகத்தால் வென்றிட அவர் நினைத்தார்... அதன் விளைவு சித்தார்த்தின் ஒவ்வொரு அசைவையும் கவனிக்க முடிவு செய்தார்...

அறையை விட்டு வெளியில் வந்த சித்தார்த் முதலில் தேடியது பிரகதீஸ்வரியை தான்... எப்போதும் போல் சமையலறையில் இருப்பாளோ என்று கணித்தவனாய் அவன் நேரே அங்கே சென்று அவளைத் தேட அங்கு அவள் இல்லாதது கண்டு ஏமாற்றம் அடைந்தான்... பிறகு அவளது அறைக்குச் சென்றான்... திறந்திருந்த கதவு வழியே பார்த்த போதே அவனுக்குத் தெரிந்தது அவள் அங்கு இல்லாதது...

வீடு, தோட்டம் என்று எல்லா இடமும் தேடியவன் இறுதியில் வேறுவழியின்றி விமலாராணியிடம் வந்து நின்றான்...

"அத்தை... பிரகதி எங்கே...?"

படபடப்பும், பரபரப்பும், ஆவலுமாய்க் கேட்ட சித்தார்த்தை உற்று கவனித்தவர் முகம் மாறியது... சித்தார்த் அவ்வளவு எளிதில் தனது உணர்வுகளை வெளிப்படுத்தி விட மாட்டான்... அப்படிப்பட்டவனிடத்தில் இத்தனை உணர்வுகள்

வெளிப்பட்டதில் அவரது கண்கள் யோசனையாய் இடுங்கியது...

"நம்ம வயக்காடு வரை போயிருக்கிறாள்... என்ன விசயம் சித்து...?"

அவர் அப்படிக் கேட்டதும் நிதானத்தை வரவழைத்து கொண்டவனாய் அவன், "சும்மா தான் கேட்டேன்..." என்று சமாளித்தவன் அடுத்த நொடி வீட்டை விட்டு வெளியேறி இருந்தான்...

அவனது அதிகப்படியான ஆர்வம் அவருள்ளும் ஆர்வத்தை விதைக்க அவரும் அவனைப் பின்தொடர்ந்தார்... வேகமாக நடந்து செல்லும் அவனைப் பின்தொடர்ந்து செல்ல தடையாக அவரது பருத்த தேகம் இருந்ததில் அவருக்குப் பெருத்த சலிப்பாக இருந்தது... இருந்தாலும் மனதில் இருந்த துப்பறியும் குணம் அவருக்குப் புது உத்வேகத்தைக் கொடுத்தது...

பசுமை நிறைந்த வயல்வெளியில் வந்து தனது நடையை நிறுத்தியவன் தன்னவள் எங்கே என்று கண்களால் தேடி துளாவினான்... மரங்கள் அடர்ந்த நிழல் பக்கமாய் அவளைத் தேடி சலித்தவன் பின்பு தோப்பு வீட்டை கண்டதும் அங்கு அவளைத் தேடி ஓடினான்...

விமலாராணியும் அவனைப் பின்தொடர்ந்து சென்றார்...

அங்கும் அவள் இல்லாது கண்டு அவனுள் பெருத்த ஏமாற்றம் எழுந்தது... அப்போது அங்கு வேலை செய்து கொண்டிருந்த பெண் ஒருத்தி நிமிர்ந்து பார்த்தவள் சித்தார்த்தை கண்டதும்,

"இந்த ஐயா இங்கன என்ன பண்றாக...?" என்று மோவாயில் கை வைத்து அதிசயிக்க...

அவளது குரலில் பிரகதீஸ்வரி ஆவல் பொங்க நிமிர்ந்தாள்... ஆம், அவள் நினைத்தது போல் அங்கு நின்று இருந்தது சித்தார்த் தான்... அவள் நிமிர்ந்ததும்

அடையாளம் கண்டு கொண்டவனாய் மகிழ்ச்சி பொங்க அவன் அவளை நோக்கி வந்தான்...

அருகில் வந்ததும் தான் அவளது களைத்த தோற்றம் அவனது மனதினை மிகவும் வருத்தியது... வெயிலில் வெகுநேரம் நின்று வேலை செய்ததால் வியர்வை வடிய, சோர்ந்து போய் நின்றிருந்தவளின் கையை உரிமையுடன் பற்றியவன்,

"இங்கே உனக்கு என்ன வேலை...? வா இப்படி..."

திடுமென அவன் இப்படிச் செய்ததில் அவளும் திகைத்தவளாய் அவன் இழுத்த இழுப்பிற்கு உடன்பட்டாள்... மற்ற பெண்மணிகளும் அவனது உரிமையைக் கண்டு யோசனையாய்ப் பார்த்தாலும் அவர்களின் விழிகளில் பெருமளவு வியப்புத் தெரிந்தது... மரத்தின் பின்னால் நின்று கொண்டிருந்த விமலராணியும் அதைக் கண்டு எரிச்சலுடன் நின்றிருந்தார்...

"கையை விடுங்க... பார்க்கிறவங்க தப்பா நினைச்சுக்கப் போறாங்க..." என்றவளை கண்டு கொள்ளாது தள்ளி அழைத்து வந்தவன் அவளை ஆழ்ந்து பார்த்தான்...

"உன்னைக் கைப்பிடிக்கப் போகிறவன்னு நினைப்பாங்க... இதில் தப்பா நினைக்க ஒன்றும் இல்லை..."

அவன் கூறிய வார்த்தைகள் கேட்டு அவளது முகம் பூவாய் மலர்ந்தது... அவள் ஏதோ கேட்கும் முன் அவனது குரல் அவளை அதட்டியது...

"உனக்கு எத்தனை தடவை சொல்வது...? இப்படி வேலையை இழுத்து போட்டுக்கிட்டு மாங்கு மாங்குன்னு செய்யாதே என்று..."

அவனது கரிசனையில் அவளுக்குக் கண்கள் கரித்தது... இருந்தாலும் சமாளித்துக் கொண்டாள்...

"நம் வீட்டு வேலைகளை நாம் பார்ப்பதில் என்ன தவறு இருக்கிறது...?"

"நான் எப்போது கேட்டாலும் இப்படி ஒரு ரெடிமேட் பதில் வைத்திரு..." என்று அவளைக் கடிந்தபடி தனது கைக்குட்டையால் அவளது வியர்வை துளிகளை ஒற்றி எடுத்தான்...

அதைக் கண்டு விமலாராணியின் மனம் பற்றி எரிந்தது... சித்தார்த்தின் இந்தக் கரிசனம் அவருக்குப் புதிதாய் இருந்தது... அவர் அறிந்த சித்தார்த் வேறு அல்லவா...

"அன்று நீ என்னிடம் ஒரு கேள்வி கேட்டாயே... அதற்கு இப்போது நான் பதில் சொல்கிறேன்..." என்றவனை அவள் புரியாது பார்த்தாள்...

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியா பேபி..."

தனது உள்ளத்து ஒட்டுமொத்த காதலையும் வார்த்தைகளில் கொட்டி அவளிடத்தில் அவன் கேட்டான்... அவனது கேள்வியில் மகிழ்ச்சியில் அவள் பனிக்கட்டியாய் உறைந்தாள்...

"சம்மதமா பேபி..."

'அடேய் சித்து... உனக்கு இப்படி எல்லாம் உருகி உருகி காதலிக்கத் தெரியுமா...' மீண்டும் பிரகதீஸ்வரியிடம் உருகியவனைக் கண்டு விமலாராணி பல்லை கடித்தார்...

"ம்... ம்..." என்று விழிகளில் ஆனந்த கண்ணீர் மல்க தலையாட்டிவளை கண்டு விமலாராணிக்கு அப்படி ஒரு கோபம் வந்தது...

'என்னிடம் சம்மதம் கேட்க வேண்டும் என்கிற கவலை இந்தக் கழுதைக்கு இருக்கிறதா...? கொஞ்சமும் பெரியவங்க என்கிற மரியாதை இல்லாத கழுதை...' மனதிற்குள் அவளை வசைப்பாடினார்...

"இது போதும் பேபி..." என்றவனது கைகள் அவளது கைகளை இறுக பிடித்துக் கொண்டது...

இருவரது காதலையும் நேரில் கண்ட விமலாராணியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை... அதுவும்

பிரகதீஸ்வரிக்கு சித்தார்த் மாதிரியான ஒருவன் காதல் கணவனாக அமைவதா என்று அவருக்கு அத்தனை பொறாமையாக இருந்தது... அந்தக் கணம் பிரகதீஸ்வரியை சித்தார்த்தின் வாழ்க்கையில் இருந்து அப்புறப்படுத்த அவர் நினைத்தார்...

உடனே அவளைக் கொன்று விடும் ஆத்திரம் அவருள் எழுந்த போதும் இதை நிதானமாகக் கையாள எண்ணினார்... ஆனானப்பட்ட ஜமீன்தார் நரசிம்மனையே மிரட்டி காரியம் சாதிக்க முடிந்த அவரால் சின்னப் பெண் பிரகதீஸ்வரியை ஏமாற்றிக் காரியம் சாதிக்க முடியாதா என்ன என்று இறுமாப்பாய் நினைத்துக் கொண்டார்...

இதில் தனது மகளது வாழ்வும் அடங்கி உள்ளது என்பதினை உணர்ந்தவராய் சற்று அடக்கி வாசிக்க முடிவு செய்தார்... அதன் விளைவு நன்கு யோசித்தவராய் மறுநாளே சித்தார்த்தின் முன் வந்து நின்றார்...

"சித்து... நீ பிரகதியை கல்யாணம் பண்ணுவது சொத்திற்காகத் தானே...?"

"ஆமாம் அத்தை... இதில் உங்களுக்கு ஏன் இவ்வளவு சந்தேகம்...?" அவரது குணம் அறிந்து அவனும் வெகு ஜாக்கிரதையாகப் பேசினான்...

"அப்படி என்றால் ஒன்று செய்வோம்... முதலில் நீ பிரகதியை கல்யாணம் பண்ணி கொள்... பிறகு சொத்துக்களை உன் பெயருக்கு மாற்றி விட்டு அந்தக் கழுதையை எங்காவது அடித்து விரட்டி விடு... அதன் பிறகு நீ சந்தியாவைக் கல்யாணம் பண்ணி கொள்..." என்று கொஞ்சமும் மனசாட்சி இல்லாது பேசியவரை உணர்விலாது பார்த்தவன்,

"முதலில் எங்க கல்யாணம் நடக்கட்டும் அத்தை... பிறகு சந்தியாவைப் பற்றி யோசிக்கலாம்..." என்றவன் அத்தோடு முடித்துக் கொண்டான்...

பாம்பின் கால் பாம்பு அறியும்... இருவருமே பெரிய கிரிமினல்கள்... அவன் தொழிலில் என்றால், அவர் குடும்பத்தில்... அதனால் இரண்டு பேருமே ஒருத்தருக்கு ஒருத்தர் சளைக்காது, விட்டு கொடுக்காது அவரவர் நிலையில் அழுத்தமாய் நின்றனர்...

அவனது பிடி அவரிடத்தில்... அவரது பிடி அவனிடத்தில்...

'பிரகதிக்கும் உனக்கும் கல்யாணம் நடந்தால் தானே...' என்று மனதிற்குள் கறுவியபடி விமலாராணி அங்கிருந்து சென்று விட்டார்...

****

அதன் பிறகு நடந்த விசயங்கள் எல்லாம் ஜெட் வேகம் தான்... சித்தார்த்தின் வேகத்தினை அப்போது தான் முதன்முதலாகப் பிரகதீஸ்வரி காண்கிறாள்... குறுகிய காலத்தில் மளமளவென்று திருமண ஏற்பாடுகளைச் செய்தவனைக் கண்டு அவளுக்கு மலைப்பாக இருந்தது...

அதுவும் அவளது பிறந்தநாளில் அவன் திருமணத்தை வைக்க நினைத்துச் செயல்பட்டது அவளை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது... அதை அவனிடத்தில் சொல்லவும் செய்தாள்... அதற்கு அவன்,

"உனது பிறந்தநாள், நமது திருமண நாள் இரண்டுமே எனக்கு மறக்க முடியாத நாட்கள்... அது இரண்டும் சேர்ந்து வருவது எனக்கு நல்லது தானே..." என்றவனைக் கண்டு அவளது காதல் பன்மடங்காகப் பெருகியது...

காதல், திருமணம் இதில் மனதினை செலுத்தியவளுக்குத் தனது மேற்படிப்பில் கவனத்தைச் செலுத்த மறந்து போனாள்...

"ஹரி அத்தானிடம் சொன்னீங்களா...?"

ஆர்வமாய்த் தன்னிடம் கேட்டவளை கண்டு அவனது முகம் மாறியது...

"நீயே உன் அத்தானிடம் சொல்ல வேண்டியது தானே..." கேலி போல் அவன் கேட்க...

"எனக்கு வெட்கமாக இருக்கிறது..." என்றவளின் முகம் வெட்கத்தில் சிவந்து போனது...

அவளது வெட்கத்தினைப் பார்த்தவன் முகத்தில் மீண்டும் புன்னகை குடி கொண்டது...

"சரி... நானே உன் அத்தானிடம் விசயத்தைச் சொல்கிறேன்... மேடம், என் பக்கத்தில் இருங்க..." என்று ஒரு கையில் தனது அலைப்பேசியை எடுத்தவன் மறுகையில் அவளை வளைத்துப் பிடித்துக் கொண்டான்... அவனது செயலில் லஜ்ஜையுற்றாலும் அவள் விலகவில்லை...

மறுமுனையில் ஹரிப்ரசாத் எடுத்ததும் சித்தார்த் தங்களது திருமண விசயத்தைக் கூற... ஒரு நொடி ஹரியிடம் இருந்து எந்தச் சத்தமும் வரவில்லை...

"ஹரி... லைனில் இருக்கீங்களா...?" என்று சந்தேகத்துடன் சித்தார்த் கேட்டான்...

"இருக்கேன் சித்தார்த்... நீங்க முதலில் அம்முவிடம் ஃபோனை கொடுங்கள்..."

திருமண விசயம் கேள்விப்பட்டு ஒரு வாழ்த்து கூடச் சொல்லாது ஹரி இப்படிப் பேசியது கேட்டு அவனது மனம் சுணங்கியது... ஆனாலும் தன்னை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருக்கும் தன்னவளுக்காக முகத்தில் புன்னகையை நிலைக்க விட்டவன் அவளது கைகளில் அலைப்பேசியைத் திணித்தான்...

"உன் அத்தானுக்கு உன் கிட்ட பேசணுமாம்..." என்றவன் அங்கிருந்து செல்ல முயல... அதைத் தடுத்தவள் அவன் அருகில் நின்றபடி பேச துவங்கினாள்...

"அத்தான்... நல்லாயிருக்கீங்களா...? அத்தை எப்படி இருக்காங்க...?"

அதற்குப் பதில் அளிக்காது ஹரிப்ரசாத், "எங்க கிட்ட சொல்லாம கல்யாணம் பண்ணிக்கிற அளவுக்கு நீ பெரியாளாகிட்டியா...?" என்றவனது குரலில் அடக்கப்பட்ட கோபம் இருந்தது...

"அது வந்து அத்தான்..." என்று மேலே பேச முடியாது விழித்தவளை கூர்ந்து நோக்கி கொண்டிருந்தான் சித்தார்த்...

"இப்போ உனக்கு என்ன வயசாகிருச்சுன்னு இப்படிக் கல்யாணத்துக்கு அவசரப்படுற... நீ அவசரப்படுறியா...? இல்லை உன்னை யாரும் கட்டாயப்படுத்தினாங்களா..."

ஹரிப்ரசாத்தின் கேள்விகளில் அவளுக்கு அழுகை வந்தது... அடுத்த நொடி அவள் ஓவென்று அழ துவங்க, அவளின் அழுகை கண்டு அருகில் இருந்த சித்தார்த் மிகவும் பதறிப் போனான்...

"ஹேய் பேபி..." என்று அவளை அணைத்து அவன் ஆறுதல் படுத்தினான்...

"இங்கே பார் பேபி... அழ கூடாது... அப்படி என்ன கேள்வி கேட்டார் உன் அத்தான்...?" என்று கோபமாகக் கேட்ட சித்தார்த் நொடியில் அவளது கையிலிருந்த அலைப்பேசியைப் பறித்து,

"மிஸ்டர். ஹரி... பேபி அழும் அளவுக்கு அப்படி என்ன கேட்டீங்க...?" அவனது குரலில் அப்படி ஒரு அடக்கப்பட்ட கோபம் இருந்தது...

சித்தார்த்தின் பதற்றம், உரிமை, கோபம் எல்லாம் சொல்லாமல் சொல்லியது பிரகதீஸ்வரி மீதான அவனது காதலை... அதைக் கண்டு ஹரிக்குச் சந்தோசமாக இருந்தது... சித்தார்த் பற்றி அவன் கேள்விப்பட்ட வரையில் எந்தக் கெட்டப் பழக்கமும் இல்லாத நல்ல பையன்... புத்திசாலி இளைஞன்... உலகம் போற்றும் இளம் தொழிலதிபன்...

ஆனாலும் சின்னவளான அத்தை மகளின் வயது மற்றும் படிப்பு எல்லாம் அவனை அவர்களது திருமணத்திற்குச் சம்மதம் சொல்லாது தடை போட்டது...

"நீங்க அம்முவை ரொம்பவும் காதலிக்கிறீங்களோ சித்தார்த்..."

ஹரியின் பேச்சில் சித்தார்த் திகைத்துப் போனான்... ஒரு நொடியில் சமாளித்துக் கொண்டு,

"ஆமாம்..." என்றான் மொட்டையாக...

"காதல் தவறில்லை தான்... ஆனால் அவளின் வயது திருமணத்திற்கான வயது இல்லையே... அது இல்லாமல் அவளின் படிப்பு வேறு இருக்கிறது... அப்படி இருக்கும் போது இந்தத் திருமணம் இப்போது அவசியம் இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது... முதலில் அவள் படித்து முடிக்கட்டும்... அதற்குப் பிறகு கல்யாணம் பற்றிப் பேசலாம்..."

ஹரியின் பேச்சு கேட்டு சித்தார்த்தின் குறைந்திருந்த கோபம் மெல்ல திரும்பலானது...

"எங்க கல்யாணம் பற்றிய அறிவிப்பு பற்றித் தான் நான் உங்களுக்குத் தெரிவித்து இருக்கிறேன்... உங்களது அனுமதியை நான் கேட்கவில்லை..."

"அதை அம்மு சொல்லட்டும்..." என்று அமர்த்தலான குரலில் ஹரி கூற...

அதைக் கேட்டு சித்தார்த் பல்லை கடித்தான்...

"பேபி... உனக்கு நான் முக்கியமா...? இல்லை உன் அத்தான் முக்கியமா...? என் பேச்சுக் கேட்பதாக இருந்தால் நம் கல்யாணம் நடக்கும்... இல்லை என்றால் உன் அத்தான் பேச்சுக் கேட்பதாக இருந்தால் அவனுடைய பேச்சு கேட்டு நம்மைக் கல்யாணத்தை நீயே நிறுத்தி கொள்..."

கொஞ்சமும் இளக்கம் காட்டாது கடினமான முகபாவத்துடன் கடுமையாய் பேசிய சித்தார்த்தை கண்டு அவள் தவித்துப்

போனாள்...

"நீங்க கோபப்படாதீங்க... அத்தான் கிட்ட நான் பேசுறேன்..." என்றவள் அலைப்பேசியை வாங்கி ஹரியிடம் பேசியவள் தனது காதலை, தவிப்பை, அவன் காயம் பட்டு மருத்துவமனையில் இருந்த போது அவனைப் பார்க்க இயலாது தான் துடித்ததை எல்லாம் ஹரியிடம் சொல்லி அழுதவள்,

"இனி அவரைப் பிரிஞ்சி என்னால் இருக்க முடியாது... நான் தான் அவரிடத்தில் கல்யாணத்திற்குச் சம்மதம் கேட்டேன்... அவரில்லை... எனக்காகத் தான் இந்தத் திருமணம்... ப்ளீஸ் அத்தான், அவரை நான் கல்யாணம் பண்ண சம்மதம் சொல்லுங்க..." என்று அழுதவளை கண்டு ஹரிக்கும் இரக்கமாக இருந்தது...

"அம்மு... இங்கே பார்... நான் உன் காதலுக்கோ, கல்யாணத்துக்கோ தடை சொல்லவில்லை... இப்போது வேண்டாம்ன்னு தான் சொல்கிறேன்... அவர் தான் புரிந்து கொள்ள மாட்டேங்கிறார் என்றால் நீயும் அவரைப் போல் பேசி வைக்கிறாயே..." என்று கேட்டவனின் குரலில் அத்தனை வருத்தம் இருந்தது...

"அவருக்கு என்னவாகுமோன்னு நான் செத்துப் பிழைத்தது எனக்குத் தான் தெரியும் அத்தான்... அதற்கு வாழ்வோ சாவோ நான் அவர் கூடவே வாழ்ந்து பார்த்து விடுகிறேனே..."

பிரகதீஸ்வரி வார்த்தையில் சித்தார்த்தின் கோபம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது... தன்னவளின் காதல் இருக்கும் வரை ஹரிப்ரசாத் என்ன, வேறு யார் வந்தாலும் தங்களைப் பிரிக்க முடியாது என்று எண்ணியவனின் மனதில் கர்வமே ஓங்கியிருந்தது...

அதே போல் அவளின் வார்த்தையில் ஹரி தனது முடிவை மாற்றிக் கொள்ள வேண்டியதாய் போயிற்று...

"சரி அம்மு... அழாதே... உன் கல்யாணத்திற்கு நான் மனப்பூர்வமாகச் சம்மதிக்கிறேன்... எனக்காக ஒண்ணே ஒண்ணு செய்ய வேண்டும்..."

"என்ன அத்தான்...?"

"எந்தக் காரணம் கொண்டும் உன் படிப்பை விட்டு விடாதே..."

"நிச்சயம் அத்தான்... விட்டு விட மாட்டேன்..." என்று அவள் நம்பிக்கையாய் கூற...

அதைக் கேட்டு சித்தார்த் 'என்னைத் தானே சொல்கிறாய்...?' என்று குறும்பாய் சைகை செய்ய... அதில் அவளது முகத்தில் நாணம் படர்ந்தது...

அவளிடம் பேசிய ஹரிப்ரசாத் சித்தார்த்திடமும் திருமணத்திற்கு வாழ்த்தினைச் சொல்ல, சித்தார்த் அரைகுறை மனதாக உம் கொட்டி விட்டு அலைப்பேசியை அணைத்தான்...

"பேபி... உனக்கு... உனக்கு... என்னைக் கல்யாணம் பண்ணுவதற்கு முழுச் சம்மதம் தானே..."

ஏனோ தெரியவில்லை சித்தார்த்திற்கு மனதில் பெரும் தவிப்பாக இருந்தது...

"ஏன் இப்படி எல்லாம் கேட்கிறீங்க...?" என்று அவளும் தவிப்போடு கண்களில் கண்ணீரோடு அவனைப் பார்த்தாள்...

"பதில் சொல்லு பேபி..." என்றவனிடத்தில் தன்னை எப்படிப் புரிய வைப்பது என்று தெரியாமல் விழித்தவள் அடுத்த நொடி யோசியாது அவனின் உயரத்திற்கு எம்பி அவனது கன்னத்தில் அழுத்தமாய்த் தனது இதழை பதித்து,

"சம்மதம்... முழுமனதுடன் சம்மதிக்கிறேன்..." என்றவளை மறு நொடி அவன் இறுக அணைத்திருந்தான்...

அதில் காதலோ, காமமோ இல்லை... தாய் மடி தேடும் கன்றின் தேடல் மற்றும் தவிப்பு மட்டுமே இருந்தது... அவனின் தவிப்பு உணர்ந்தவளாய் அவளும் அவனை ஆறுதலாய் அணைத்து கொண்டாள்...

அன்றே ஹரிப்ரசாத் தனது அன்னை பானுமதியிடம் பிரகதீஸ்வரி திருமணத்தைப் பற்றிப் பேசினான்...

"பிரபாவதி பையன் நல்ல மாதிரி என்று நானும் கேள்விப்பட்டு இருக்கிறேன் ஹரி... குடும்பமும் நல்ல குடும்பம் தான்... கண்ணை மூடிக்கிட்டு நம்ம ரதியை அந்தப் பையனுக்குக் கொடுக்கலாம் தப்பே இல்லை..." என்று சந்தோசமாகச் சொன்னவர் திடீரென்று சோகமாகி,

"உனக்கு ரதி மீது எதுவும் ஆசை இருக்கிறதா ஹரி...?"

அன்னையின் வார்த்தைகளில் அவன் அதிர்ந்து போய் அவரைப் பார்த்தான்...!!!

"வல்லூறுவின் வலையில் மாட்டி தவிக்கும் சின்னப் புறாவே...
வேடவன் வலையில் மாட்டி தவிக்கும் இளம் மானே...
சிலந்தி வலையில் மாட்டி தவிக்கும் சிறு பூச்சியே...
விளக்கின் ஒளி வலையில் மாட்டி தவிக்கும் விட்டில் பூச்சியே...
உன்னைச் சுற்றிப் பின்னப்படும் சதி வலையில்
வீழ்ந்து மாண்டு போகாது,
வலை அறுத்து சுதந்திரமாய் வா...
அப்படியே சிக்கி வீழ்ந்தாலும் வீறு கொண்டு
ஃபீனிக்ஸ் பறவையாய் மீண்டு வா..."

நனவாகும்...!!!

"அம்மா... ஏன் திடீர்ன்னு இப்படி ஒரு கேள்வி கேட்கிறீங்க...?"

அன்னை கேட்டது ஹரிப்ரசாத்திற்குச் சற்று அதிர்ச்சியாக இருந்தது...

"அத்தை மகள் என்று அவள் மீது ஏதேனும்..." என்று தயங்கிய அன்னையைப் பார்த்து புன்னகைத்தவன்,

"அப்படி ஒரு எண்ணம் எனக்கு ஒரு போதும் இருந்தது இல்லை... ஆனால்..." என்று யோசித்தவனைக் கண்டு பானுமதி,

"ஆனால்... என்னப்பா...?"

"மாமா இறப்பதற்கு முன் இறுதியாக அவரை நான் சந்தித்த போது அவர் என்னோட கைகளைப் பிடித்துக் கொண்டு 'அம்முவை பத்திரமாகப் பார்த்து கொள்...' என்று உறுதி வாங்கியது ஏன் என்று இப்போ வரை எனக்குத் தெரியலைம்மா... அது தான் எனக்குச் சற்றுக் குழப்பமாக இருக்கிறது... அந்தக் கவலை தான் இதுநாள் வரை என் நெஞ்சை உறுத்தி கொண்டு இருக்கிறது... அதனால் தான் அவளுக்கு ஒரு நல்லது செய்யாமல் நான் என் வாழ்க்கையைப் பற்றி யோசிக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன்ம்மா..."

"மத்தபடி நம் அம்முவை போய் நான் அப்படி நினைப்பேனா... இப்போது சித்தார்த்தை அவள் கல்யாணம் பண்ணுவது குறித்து எனக்கு ரொம்பச் சந்தோசம்மா... இப்போது தான் என் மனதில் இருந்த பெரும் பாரம் இறங்கி இருக்கிறது... இதுவரை மனதில் இருந்த உறுத்தல் எல்லாம் நீங்கி நிம்மதியாக இருக்கிறது... அம்மு நல்ல இடத்தில் வாழ போவது எனக்கு ரொம்பச் சந்தோசமாக இருக்கிறது..."

"ஆமாம்ப்பா..." என்று அவரும் அதை ஆமோதித்தார்...

"ஒரே ஒரு குறை தான்ம்மா... அவள் படித்து முடித்த பின் திருமணம் செய்து இருக்கலாம்... அவசரப்படுகிறாளோ என்று எனக்குச் சிறு வருத்தம் இருக்கிறது..."

"பெற்றோர் இல்லாது தனிமையில் இருப்பவளுக்கு இந்தக் கல்யாணம் மூலம் கணவன் என்கிற நெருங்கிய சொந்தம் வருவது நல்லது தான் ஹரி... இனி அவளது சந்தோசத்திலும், துக்கத்திலும் பங்கு எடுக்க ஒருத்தன் இருக்கிறான் என்கிற நிம்மதி நமக்கும் இருக்கும் அல்லவா... அவளை நினைத்து தினமும் நாம் கவலைப்பட வேண்டிய தேவையில்லை..."

"நீங்க சொல்றதும் சரி தான்ம்மா... என்ன தான் நாம் அன்பு பாராட்டினாலும் தள்ளி நின்று தான் காண்பிக்க வேண்டி இருக்கிறது... இதே இது கணவனாக இருந்தால் அருகில் இருந்து பார்த்து கொள்வான் இல்லையா..."

"அம்மு விசயம் இருக்கட்டும்... நீ உன் திருமணத்தைப் பற்றி எப்போது யோசிக்கப் போகிறாய்...? காலாகாலத்தில் உனக்குக் கல்யாணம் பண்ணி பார்த்துவிட்டால் எனக்கு நிம்மதி..."

அன்னை கூறியதும் ஹரிப்ரசாத் மனக்கண்ணில் புன்னகை முகமாய்ச் சங்கமித்ரா மின்னி மறைந்தாள்... தலையை அழுந்த கோதி கொண்டவன்,

"இப்போ எனக்கு என்ன அவசரம்மா...? பிறகு பார்க்கலாம்..." என்று பிடி கொடுக்காது பேசியவன் அங்கிருந்து நழுவி ஓடி விட்டான்...

அவனைக் கண்டு சிரித்தபடி பானுமதி தனது வேலையைப் பார்க்க சென்றார்...

வாயிலுக்கு வந்த ஹரிப்ரசாத்தின் அலைப்பேசி அழைத்தது... உயிர்ப்பித்துக் காதில் வைத்தவன்,

"ஹலோ..." என்க...

"ஹரி தம்பிங்களா...?"

"ஆமாம்..."

"நான் உங்க மாமாவோட அட்வகேட் குருமூர்த்திப் பேசறேன்... நாம நேரில் சந்திச்சது கிடையாது... ஆனா உங்களைப் பத்தி உங்க மாமா என்னிடம் நிறையச் சொல்லியிருக்கிறார்...."

"ஓ... அப்படியா சார்... ரொம்பச் சந்தோசம்..." என்றவனின் புன்னகை முகம் மறுமுனையில் அவர் சொன்னது கேட்டு யோசனையில் ஆழ்ந்தது...

"இந்த விசயம் நமக்குள்ளேயே இருக்கட்டும் சார்... முக்கியமா ரதி கிட்ட சொல்ல வேண்டாம்..."

"அது எப்படி முடியும் தம்பி...?" என்று தயக்கமாய் இழுத்தார் குருமூர்த்தி...

"முடியணும் சார்... எந்தக் காலத்திலும் இதை நீங்க அவளிடம் சொல்லி அவளை மனக்கஷ்டத்தில் ஆழ்த்தி விடாதீங்க... அவள் இதைக் கேள்விப்பட்டால் காலம் முழுவதும் குற்றவுணர்வோடு வாழ நேரிடும்... நம்ம இரண்டு பேருக்குமே அவளோட நலன் தான் முக்கியம்... அப்படி இருக்கும் போது அவள் சந்தோசத்தை நாமளே கெடுக்கக் கூடாது இல்லையா சார்..."

அவனின் கூற்று சரியென்றே அவருக்கும் தோன்றியது...

"அந்தப் பையன் எந்த மாதிரி...? விமலாராணி அம்மாவின் அண்ணன் மகன் என்று கேள்விப்பட்டேன்..."

"சித்தார்த் ரொம்ப நல்ல மாதிரி... கண்ணை மூடிட்டு நம்ம வீட்டுப் பெண்ணை அவருக்குக் கொடுக்கலாம்..."

அதில் திருப்தி அடைந்தாலும் குருமூர்த்தி அவனிடத்தில், "எதற்கும் யோசித்துப் பார்ப்பது நல்லது இல்லையா..." என்று தனது எண்ணத்தைத் தெரிவித்தார்...

"நீங்க கவலைப்படும்படி ஒன்றும் இல்லை சார்... சித்தார்த் புகழ் வாய்ந்த நாடறிந்த தொழிலதிபன்..."

"அது எனக்கும் தெரியும் தம்பி... நானும் அவரை நேரில் சந்தித்துப் பேசி இருக்கிறேன்... நல்ல மனிதர் தான்... இருந்தாலும் தொழில் வேறு, வாழ்க்கை வேறு அல்லவா தம்பி... பிரகதிம்மா சின்னப் பெண்... அதனால் நாம் தான் நாலையும் யோசித்துப் பார்த்து நிதானமாய்ச் செயல்பட வேண்டும்..."

"நீங்க ரதியை நேரில் சந்தித்துப் பேசி ஒரு முடிவுக்கு வாங்க... ஆனால் எந்தக் காரணம் கொண்டும் என்னிடம் பேசிய விசயத்தை அவளிடம் பேச வேண்டாம்..."

அவரும் அவன் கூறியதை ஏற்றுக் கொண்டு அழைப்பை துண்டித்தார்...

குருமூர்த்திக் கூறிய விசயத்திற்கும் சித்தார்த்தின் இந்த அவசர திருமணத்திற்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்குமா என்று ஹரிப்ரசாத் கொஞ்சமும் நினைத்து பார்க்கவில்லை... பிரகதீஸ்வரி சொன்னதற்காகச் சித்தார்த் அவளைத் திருமணம் செய்ய நினைக்கிறான் என்றே அவன் நினைத்தான்...

இந்த இடத்தில் அவன் சிறிது யோசித்திருந்தாலும் அத்தை மகளைச் சித்தார்த்திடம் இருந்து காப்பாற்றி இருக்க முடியும்... அவனின் செயல்களுக்குப் பின்னால் இருக்கும் சுயநலத்தைக் கண்டுபிடித்திருக்க முடியும்... நல்லவனான ஹரி சித்தார்த்தை பற்றியும் நல்லவிதமாகவே எண்ணினான்...

மறுநாளே குருமூர்த்திப் பிரகதீஸ்வரியை நேரில் சந்திக்க வந்தார்... அவர் அங்குச் சென்ற போது சித்தார்த்தும் அவளுடன் இருந்தான்...

"பிரகதிம்மா... இந்தத் திருமணத்திற்கு உனக்குச் சம்மதம் தானே...?"

"அவள் சம்மதம் இல்லாமலா திருமணத் தேதியை உறுதி பண்ணுவாங்க... அவளுக்கு முழுச் சம்மதமே..." அவளுக்குப் பதிலாகச் சித்தார்த் பதிலளித்தான்...

குருமூர்த்தி அவனைச் சிறிதும் கண்டு கொள்ளாது பிரகதீஸ்வரியை தான் பார்த்துக் கொண்டிருந்தார்... அவளின் பதில் தான் அவருக்கு மிகவும் முக்கியம் என்பது போல்...

அவளோ அவரைக் கண்டு கொள்ளாது சித்தார்த்தின் இடுப்பில் முழங்கையால் இடித்தபடி, "பெரியவங்க கிட்ட இப்படித்தான் பேசுவாங்களா...? ரொம்பத் தப்பு..." என்று இரு விழிகளையும் உருட்டி கொண்டு அவனை மிரட்டினாள்...

அவளது மிரட்டல் கண்டு போலியாய் பயந்தவன் போல் கை கட்டி வாய் பொத்தியபடி பணிவு காட்டினான் அந்தக் கள்ளன்... அவனது கண்கள் குறும்பை பிரதிபலித்தது...

அதைக் கண்ட குருமூர்த்திப் பிரகதீஸ்வரி மனதில் சித்தார்த் இருக்கிறான் என்பதை உறுதி செய்து கொண்டார்... அவருக்குச் சித்தார்த்தை பற்றிப் பெரிதாகத் தெரியாது... ஆனால் பிரகதீஸ்வரியை சிறு வயதில் இருந்து தெரியும்... அதனால் அவருக்குச் சற்று நிம்மதியாக இருந்தது...

"இவரைக் கல்யாணம் பண்ணி கொள்வதில் எனக்கு முழுச் சம்மதம் அங்கிள்... இதில் எந்தவித மாற்று கருத்தும் இல்லை..."

ஆணித்தரமாய் உறுதியாய் கூறியவளை கண்டு அவருக்குமே சந்தோசமாக இருந்தது...

"உனது சந்தோசம் இவர் தான் என்றால் எனக்கு ரொம்பச் சந்தோசம் மா..." என்று அவளிடம் கூறியவர் சித்தார்த்திடம்,

"அவளது படிப்பை மட்டும் தொடர விடுங்கள்..." என்று வேண்டுகோளாய் கேட்டுக் கொண்டார்...

"அது என் கவலை... நீங்க ஒன்றும் கவலைப்பட வேண்டாம்..." என்று முகத்தில் அடித்தார் போன்று கூறிய சித்தார்த்தை கண்டு அவர் புன்னகை முகத்துடனே விடைப்பெற்றார்...

அவனைப் போன்ற பெரிய ஆட்கள் இந்தளவுக்கு இறங்கி வந்து தன்னை மதித்துப் பேசுவதே அதிகம்... இதில் தான் வேறு இப்படிப் பேசியது நிச்சயம் அவனுக்குக் கோபத்தினை அதிகரித்து இருக்கும் என்று அவர் எண்ணினார்... ஆனால் பிரகதீஸ்வரிக்காக அவர் அந்த வார்த்தைகளைப் பேசும்படி ஆகிவிட்டது... அவள் பொருட்டு அவனின் இந்த உதாசீனத்தை அவர் தாங்கி கொண்டார்...

இங்கு வருவதற்கு முன் சித்தார்த்தின் பெற்றோரிடம் பேசி விட்டு தான் வந்திருந்தார்... அவர்கள் தங்களது மருமகளின் வருகையைப் பெரிதும் எதிர்பார்த்து காத்து கொண்டிருப்பதை அவர்களது குரலில் இருந்த ஆர்வத்தை வைத்து தெரிந்து கொண்டார்...

எல்லா விதத்திலும் அவருக்குச் சித்தார்த், பிரகதீஸ்வரி திருமணம் திருப்தி அளித்தது...

அவர்களது திருமணச் செய்தி கேட்டு எப்போதும் அவளிடம் தோழமை கொள்ளும் சந்தியா முதன்முறையாக அவள் முதலாவதாகத் திருமணம் செய்து கொள்வது கண்டு கோபம் கொண்டாள்...

"மூத்தவள் நானிருக்கும் போது உனக்கு எப்படிக் கல்யாணம் நடத்தலாம்... நீ கொஞ்சமும் என்னைப் பற்றி யோசிக்கவில்லை..." என்று அழுது கொண்டே அவளிடத்தில் சண்டையிட்டாள்...

அதைக் கேட்டு பிரகதீஸ்வரிக்கு மிகுந்த குற்றவுணர்வாகப் போயிற்று... சித்தார்த்தை மட்டுமே எண்ணியவள் சுயநலமாய்த் தனது சகோதரியை பற்றி எண்ணாது போய்விட்டாள்...

"அக்கா... அப்படி எல்லாம் இல்லை... என் நிலையை நான் எப்படிக் கூறுவேன்...?"

அக்காவிடம் தன் மனதினை எப்படி எடுத்துரைப்பது என்பது பற்றித் தெரியாது அவள் தனது கைகளைப் பிசைந்து

கொண்டிருந்தாள்... அந்நேரம் அங்கு வந்த சித்தார்த் அதைக் கேட்டு விட்டான்...

"சந்தியா... உன் திருமணம் என்னுடைய பொறுப்பு... அதை நான் பார்த்து கொள்கிறேன்..." என்று அவன் அவளைச் சமாதானம் செய்ய...

"அத்தான்..." என்றழைத்துக் கொண்டே அவள் அவன் நெஞ்சில் சாய்ந்து அழ ஆரம்பித்தாள்...

அதைக் கண்டு பிரகதீஸ்வரிக்கு ஒரு மாதிரியாகப் போய் விட்டது... சந்தியா வெகுளி பெண் தான்... இருந்தாலும் தன்னவன் என்று வரும் போது எல்லாப் பெண்களுக்கும் வரும் உரிமை உணர்வு அவளுள்ளும் தலை தூக்கியது... அதை வாய் விட்டு சொல்ல முடியாதவளாய் அவள் தவிப்புடன் சித்தார்த்தை பார்த்தாள்...

அவனோ சந்தியாவை விலக்கி விட முடியாது சங்கடத்துடன் குனிந்து அவளைப் பார்த்தபடி நின்றிருந்தான்...

"சித்து அத்தான் இருக்கும் போது நீ இப்படிக் கவலைப்படலாமா சந்தியா...? அவன் உனக்காக எதையும் செய்வான்..." என்றபடி அங்கே வந்த விமலாராணி மகளின் அழுகைக்குத் தூபம் போட்டார்...

"என்ன சித்து நான் சொல்வது சரி தானே..." என்றவரை நினைத்து மனதிற்குள் எரிச்சல் கிளம்பினாலும் வெளியில் வாயெல்லாம் பல்லாக இளித்து வைத்தான் அவன்...

அதைக் கண்டு பிரகதீஸ்வரிக்கு தான் மட்டும் தனியானது போல் ஒரு உணர்வு... ஏற்கெனவே குற்றவுணர்வில் இருந்தவளுக்குத் தனிமை உணர்வும் சேர்ந்து கொள்ள வழக்கம் போல் சமையலறைக்குள் சென்று அடைக்கலமானாள்...

"கழுதை கெட்டால் குட்டிச் சுவர் என்பது போல் சந்தோசமோ, துக்கமோ நீ அடைக்கலமாவது இங்கே தான் போலும்..."

சித்தார்த்தின் கிண்டல் குரலில் நிமிர்ந்தவள் விழிகளில் தெரிந்த தவிப்பில் அவனது மனம் பாகாய் உருகி போனது...

"என்னடா...?"

"சந்தியா அக்காவுக்கு முன் கல்யாணம் பண்றது மனசுக்கு கஷ்டமாயிருக்கு..." என்றவளை கண்டு 'போச்சுடா' என்று மானசீகமாகத் தலையில் கை வைத்தான் அவன்...

"வேணும்ன்னா ஒண்ணு செய்வோமோ வள்ளி, தெய்வானை போல் உங்க இரண்டு பேரையும் நானே திருமணம் செய்து கொள்ளவா...? உன் பிரச்சனையும் தீர்ந்தது... அவளது பிரச்சினையும் தீர்ந்தது... ஒரே கல்லில் இரண்டு மாங்காய்..." என்றவனைக் கண்டு ஆத்திரம் மிகுந்தவளாய் அருகில் வந்து அவனது சட்டையைக் கொத்தாக பற்றி,

"ஓஹோ... அப்படி ஒரு எண்ணம் இருக்கிறதோ... கொன்னுருவேன் கொன்னு..." என்று மிரட்டியவளை கண்டு அவனது கண்கள் சிரித்தது...

"அப்படித்தான் வச்சுக்கோயேன்..." என்று கண்சிமிட்டியபடி சிரித்தவன் அவளது இடையைப் பற்றித் தன் அருகில் இழுத்தான்...

"சின்னப் பொண்ணு தானே என்ன செய்வாளோன்னு நீங்க தப்பா நினைக்காதீங்க... கொன்னு குடலை உருவிருவேன்... உருவி..."

"அம்மணிக்குப் பொறாமை எல்லாம் வருது... இதுல அவளுக்கு முன்னாடி கல்யாணம் பண்ணிக்கப் போறோம்ன்னு கவலை வேற..." நமட்டு சிரிப்புடன் கூறியவனை முறைத்து பார்த்தவள்,

"அந்தக் கவலை வேற... இந்தப் பொறாமை வேற... இரண்டுக்கும் சம்பந்தமில்லை..."

"நான் தான் இரண்டு பிரச்சினைக்கும் ஒரு தீர்வு கூறுகிறேனே... பிறகு என்ன..." என்று விடாது கேலியாய்

பேசியவனை அவள் அடிக்கக் கையை ஓங்க...

"இன்னும் கழுத்தில் தாலி ஏறலை... அதுக்குள்ள என் பொண்டாட்டி என்னை அடிக்க வர்றாளே..." என்று சிறுவனாய் கத்தியபடி சித்தார்த் வெளியில் ஓட...

"அடி என்ன இனி இடியே விழும்..." என்று தனது கவலையை மறந்தவளாய் அவள் அவனைத் துரத்தி கொண்டு ஓடினாள்...

இருவரின் விளையாட்டையும் கண்டு விமலாராணி பொறாமையில் வயிறு எரிந்தார்...

****

இதோ அதோ என்றிருந்த திருமண நாளும் நாளை என்றளவில் நெருங்கி இருந்தது... ஹரிப்ரசாத்தால் திருமணத்திற்கு வர முடியவில்லை... அவன் பொறுப்பில் இருக்கும் காட்டுப் பகுதியில் மாவோயிஸ்டுகள் பதுங்கி இருப்பதாகத் தகவல் வந்ததால் காவல்துறையினருக்கு காட்டிலகா அதிகாரியான அவனின் ஒத்துழைப்புப் பெருமளவு தேவைப்பட்டது... அதனால் அவனால் எங்கும் நகர முடியவில்லை... முழு நேரமும் அலுவலகத்திலேயே குடியிருந்தான்...

அதனால் அவனது அன்னை பானுமதி மட்டும் திருமணத்திற்கு வந்திருந்தார்...

சித்தார்த்தை திருமணம் செய்வது பிரகதீஸ்வரிக்கு மகிழ்ச்சி தான் என்றாலும் மனம் விட்டு மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதற்கு ஆள் இல்லாததால் அவள் மிகவும் தனிமையாக உணர்ந்தாள்... அதனால் தாய் வீட்டு சொந்தமான பானுமதியை கண்டதும் அவருடன் ஒட்டி கொண்டாள்...

அவளது தந்தையின் விருப்பம் என்று குருமூர்த்திக் கூறியதால் அவளது வீட்டை ஒட்டியிருந்த அவர்களது இடத்தில் திருமண ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தது...

சித்தார்த்திற்குப் பழக்கமுள்ள தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள் என முக்கியப் பிரமுகர்கள் எல்லாம் வருகை தருவதால் பாதுகாப்பு பலப்படுத்தியதோடு மட்டுமில்லாமல், மார்க்கண்டேயபுரமே திருவிழா கோலம் பூண்டிருந்தது...

திருமணத்திற்கு முதல் நாள் இரவு தனிமையில் திருமணக் கனவில் கையில் வைத்திருந்த மருதாணி சிவப்பை ரசித்துப் பார்த்து கொண்டிருந்தாள் பிரகதீஸ்வரி... இன்னும் சற்று நேரத்தில் அவளுக்குப் பிறந்தநாள் பிறக்க போகிறது... அந்தச் சந்தோசம் வேறு...

தன்னவன் தனக்கு என்ன பரிசு கொடுத்துத் தன்னை இனிய அதிர்ச்சியில் ஆழ்த்த போகிறான் என்று அவளது மனம் ஆவலோடு காத்திருந்தது... நாளைய பொழுது அவளுக்கு என்ன வைத்துக் காத்திருக்கிறது என்பதை அறியாது பேதை மனம் உவகையில் திளைத்திருந்தது...

அவள் மகிழ்ச்சியோடு ஜன்னல் வழியே தோட்டத்தைப் பார்த்த போது அங்குத் தோட்டத்தில் அமர்ந்திருந்த சித்தார்த் அவளது விழிகளில் தென்பட்டான்... தனக்காகத் தான் அவன் விழித்திருக்கிறானோ என்று பாவையவள் மனம் துள்ள அவனைக் காண அறையை விட்டு வெளியில் வந்தாள்...

சித்தார்த் இரவின் தனிமையில் அந்த ஏகாந்த வேளையை அனுபவித்தபடி அமர்ந்திருந்தான்... திருமணப் பரபரப்பில் இருந்து விடுபட்டுத் தனிமை வேண்டி தோட்டத்தில் வந்து அமர்ந்து கொண்டான்... அன்று பிரகதீஸ்வரி அவனிடம் வந்து பேசிய அதே கல்மேடை... தனக்கு நேரே இருந்த புல் தரையைப் பார்த்தவன் மனக்கண்ணில் அன்று தன்னவள் அமர்ந்து இருந்த எளிமையான தோற்றம் தோன்றி அவனின் முகத்தில் புன்னகையை நிலைக்கச் செய்தது...

அதே புன்னகையுடன் வானத்தை அண்ணாந்து பார்த்தவன் வானில் தெரிந்த மதியில் தன்னவளின் மதி முகத்தைத் தேடினான்...

"சித்து..."

என்று விமலாராணி அவனைத் தேனொழுக அழைத்தபடி அங்கு வந்து நின்றார்... அந்நேரம் தன்னைக் காண வந்த அத்தையம்மாளை கண்டு அவனது விழிகளில் யோசனை வந்தது...

'என்ன' என்பது போல் அவன் கேள்வியாய் அவரைப் பார்த்து வைத்தான்... அதைக் கண்டு அவர் மனதிற்குள் எரிச்சல் கொண்டாலும் வெளிக்காட்டி கொள்ளாது,

"சித்து... எப்படியும் நாளை பிரகதியோட சொத்துக்களை எழுதி வாங்கி விடுவாய் அல்லவா..." என்று கேட்டவரை கண்டு அவனுக்குச் சலிப்பாக இருந்தது...

அதைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சிக்குள்ளானாள் பிரகதீஸ்வரி... அப்போது தான் அவள் சித்தார்த்தை தேடி அங்கு வந்தாள்... வந்ததும் கேட்க கூடாததைக் கேட்டு விட்டவளாய் வேகமாய் அருகிலிருந்த மரத்தின் பின்னால் தன்னை மறைத்து கொண்டாள்... விமலாராணி பேச்சு அவளுள் பெரும் படபடப்பை ஏற்படுத்தி இருந்தது...

அதற்குச் சித்தார்த்தின் பதில் என்னவாக இருக்கும் என்று பதைபதைக்கும் மனதுடன் அவள் தன்னவனைப் பார்த்திருந்தாள்... அவன் மேல் அவளுக்கு அத்தனை நம்பிக்கை இருந்தது...

"ம்... ம்... ம்..." என்று அவன் பதில் பேசாது முணுமணுத்தான்...

"என்ன சொன்னப்பா...? அத்தைக்கு வயசாகிருச்சு இல்லையா... காது சரியா கேட்க மாட்டேங்குது..."

அவர் சொன்னது கேட்டு எரிச்சலுடன் நிமிர்ந்து அமர்ந்தவன், "நாளைக்குத் தான் அவளுக்குப் பதினெட்டு வயசு பிறக்குது... நாளை தான் அவளோட சொத்து அவளது பெயருக்கு வரும்... அதன் பிறகு அவளிடத்தில் இருந்து சொத்துக்களை எழுதி வாங்குவது ரொம்பச் சுலபம்... அதனால் நாளை வரை பொறுத்திருங்கள்..."

தன்னவன் பேசிய வார்த்தைகள் கேட்டு அதிர்ந்து போனாள் பிரகதீஸ்வரி... அவளுக்கு இந்தச் சொத்துக்களைப் பற்றி எல்லாம் ஒண்ணும் தெரியாது... அவளுக்குத் தெரிந்தது எல்லாம் சித்தார்த்தின் அன்பு மட்டுமே... அந்த அன்பு பொய்த்துப் போனதில் அவளது மனம் பெரிதாக அதிர்ந்தது... மனதில் இருந்த அதிர்ச்சி கேவலாக உருவெடுக்க வாயை மூடி கொண்டு தனது அழுகையை அடக்கி கொண்டாள்...

தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று அவளுக்குத் தெரியவில்லை... உணர்வற்ற நிலையில் அவள் தன்னவனை நம்ப முடியாது வெறித்துப் பார்த்திருந்தாள்...

"எனக்கு என்னமோ சந்தேகமாக இருக்கு சித்து... கணவன், மனைவி உறவு வேறு... இந்தச் சொத்துக்கள் வேறு இல்லையா..."

"அவளுக்கு நான் தான் எல்லாமே... எனக்காக அவள் அவளையே தரும் போது அவளது சொத்துக்களைத் தர மாட்டாளா...?" என்றவனது குரலில் அத்தனை கர்வம்...

காதலியை பற்றி முழுதாக அறிந்து வைத்திருந்த காதலனின் நம்பிக்கை அவனது... அவளோ அவநம்பிக்கையுடன் அவனைப் பார்த்து கொண்டிருந்தாள்...

"அப்படி என்றால் சரி சித்து..." என்று திருப்தியுடன் தலையாட்டியவர்,

"சந்தியாவைப் பற்றி நீ யோசித்தாயா...?"

விமலராணி அடுத்தப் பிட்டை போட்டதும் பிரகதீஸ்வரி இன்னமும் அதிர்ந்து போய்ப் பார்த்தாள்... இது என்ன புதுக் கதை என்பது போல்...

"அவளுக்கு என்ன...?"

புரியாதவன் போல் கேட்டவனைக் கண்டு அவர் பல்லை கடித்தார்...

"நீ சந்தியாவைத் திருமணம் செய்வது பற்றி..."

விமலாராணி இப்படி அவனிடத்தில் கேட்பார் என்று அவள் கனவிலும் நினைத்து பார்க்கவில்லை... உறவு பொய்த்து போனதை கண்டு அவள் விக்கித்து நின்றாள்...

அவர் கூறியதை கேட்டு கூர்ந்து பார்த்த சித்தார்த்,

"இதற்கு நான் முன்னமே பதில் சொன்னதாய் எனக்கு நினைவு... முதலில் எங்களது திருமணம் முடியட்டும்... அதற்குப் பிறகு சந்தியா திருமணம் பற்றிப் பார்க்கலாம்..."

அவனின் பதிலில் பிரகதீஸ்வரியின் காதல் கொண்ட இதயம் சுக்கு நூறாய் உடைந்து சிதறியது... அவளால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை... சத்தம் செய்யாது வாயை மூடி கொண்டு அழுதவள் கண்களில் கண்ணீர் மழை... அந்நேரம் அன்று சித்தார்த் கூறிய 'வள்ளி, தெய்வானை' கதை அசந்தர்ப்பமாய் அவளது காதுகளில் ஒலித்தது... அவளால் அவனது துரோகத்தைத் தாங்கி கொள்ள முடியவில்லை... நிற்க முடியாது தள்ளாடியவள் மரத்தின் மீது சாய்ந்து நின்றாள்...

"இது போதும் சித்து..." என்றவர் போலியான நிம்மதியுடன் அங்கிருந்து அகன்றார்...

'நாளை என் மகளுடன் தான் உன் திருமணம்... அதே போல் இந்தச் சொத்துக்கள் முழுவதும் எனக்கு மட்டும் தான்... நீ ஏதோ நினைத்து காய் நகர்த்துகிறாய் சித்து... ஆனால் நான் அதற்கு விட மாட்டேன்...' என்று அவர் மனதிற்குள் கறுவி கொண்டார்...

விமலாராணி சென்றதும் சித்தார்த் நிம்மதி பெருமூச்சு விட்டான்... தொழிலில் எத்தனையோ பேரை சமாளித்தவனுக்கு அத்தையம்மாளை சமாளிப்பது அவ்வளவு எளிதாக இல்லை... அவரின் சதி திட்டத்தையும் தாண்டி அவன் வெற்றி பெற வேண்டியிருந்தது...

அவரின் இந்த ஆட்டம் எல்லாம் நாளை தன்னவள் கழுத்தில் அவன் தாலி கட்டும் வரை தான்... அதன் பின் இந்தச்

சித்தார்த்தை அசைத்து பார்க்க இனி ஒருவன் பிறந்து தான் வர வேண்டும்... மனதில் பல யோசனைகள் ஓட அவன் அப்படியே அமர்ந்திருந்தான்...

பிரகதீஸ்வரி எப்படி அறைக்கு வந்தாள் என்று தெரியாது... நேரே படுக்கையில் விழுந்து கவிழ்ந்து படுத்தவளுக்கு அழுகை அழுகையாக வந்தது... தான் எந்தளவுக்கு ஏமாற்றப்பட்டு இருக்கிறோம் என்று நினைத்து நினைத்துக் கண்ணீர் பொங்கியது... தான் வலிய சென்று ஏமாறப் போய்த் தானே தன்னை ஏமாற்றி இருக்கிறார்கள் என்கிற கழிவிரக்கத்தில் அழுகையில் கரைந்தாள்...

சித்தார்த்தை பற்றி யாரோ குறை கூறியிருந்தால் கூட அவள் நம்பியிருக்க மாட்டாள்... ஆனால் அவள் கண்ணால் பார்த்தது, காதால் கேட்டது அத்தனையும் மெய் அல்லவா... அந்த மெய் அவளை உயிரோடு கொன்றது...

சொத்துக்களை இழப்பது கூட அவளுக்குப் பெரிதாகத் தெரியவில்லை... அதை எதிர்பார்த்து அவள் வாழ்ந்ததும் இல்லை...

ஆனால் சித்தார்த் விசயம் அப்படி இல்லையே... அவளின் எதிர்பார்ப்பு, எதிர்காலம் எல்லாம் அவனாகத் தானே இருந்தான்... எத்தனை காதலாக அவளிடத்தில் நடந்து கொண்டான்... அத்தனையும் பொய்யா... என்று யோசித்தவளுக்கு அவனது ஒவ்வொரு செயலிலும் ஏதோ உள்ளர்த்தம் இருந்ததாய் இப்போது அவளுக்குத் தோன்றியது...

அன்பில்லாது அதற்கு ஏங்கி போயிருந்த தன்னைப் போலியான அன்பு காட்டி சித்தார்த் ஏமாற்றி விட்டான் என்றே அவள் நினைத்தாள்... அவன் எங்கே ஏமாற்றினான்... அவள் தானே ஏமாந்து போய் நிற்கிறாள்...

'அவங்க அவங்க அளவில் சரியாகத் தான் இருந்திருக்காங்க... ஆனால் நான் தான் மதி கெட்டுப் போய்க் காதல் என்று நினைத்து மயங்கி போய் விட்டேன்... அப்போது என்னை என்ன மாதிரியான பெண் என்று

நினைத்து இருப்பார்... கடவுளே...' என்று நினைத்தவளுக்கு உடலும், உள்ளமும் கூசி போனது...

ஆனால் அதையும் மீறி அவன் அவளிடத்தில் காதலாய் நடந்து கொண்ட நினைவுகள் அழியா கல்வெட்டாய் அவளது மனதில் ஆழப்பதிந்து மீண்டும் மீண்டும் அவனை அவளிடத்தில் ஞாபகப்படுத்தியது... அவனது காதல் பொய்யாக இருந்த போதும் அவளது காதல் மெய்யன்றோ...

அந்தக் காதல் தோல்வியுற்றதில் அவளது மனதில் பெரிதாக வலி எழுந்தது... தாங்கொண்ணா வலி அது...

"அப்பா... அம்மா...." என்று நெஞ்சு வெடித்து விடும் போல் கதறியவளை தேற்றுவதற்கு அங்கு யாருமில்லை...

சரியாகப் பன்னிரெண்டு மணிக்கு சித்தார்த் அவளுக்குப் பிறந்தநாள் வாழ்த்து சொல்வதற்காக அவளது அறைக்கு வந்தான்... கதவில் கை வைத்தவன் அது தானாகத் திறந்து கொண்டதும் ஆச்சிரியமாகப் பார்த்தபடி உள்ளே நுழைந்தான்...

"பேபி..."

அழுது கொண்டிருந்தவள் அவனது அழைப்பு கேட்டதும் விம்மலை அடக்கி கொண்டு கண்மூடி தூங்குவது போல் படுத்திருந்தாள்... அவள் அருகில் வந்தவன் அவள் உறங்குவதாக நினைத்துக் கொண்டான்...

"அதுக்குள்ள தூங்கிட்டியா...?" என்றவனது குரலில் ஏமாற்றம் நிரம்பி இருந்தது...

"ஹேப்பிப் பேர்த்டே பேபி..."

அவனின் வாழ்த்து அவளுக்கு அத்தனை கசப்பாக இருந்தது... அவன் குனிந்து அவளது நெற்றியில் இதழ் பதித்தான்... அவனது உதடு பட்ட இடம் அவளுக்குத் தீயாய்க் காந்தியது...

அந்தக் கணம் அவனது சட்டையைப் பிடித்து நாக்கை பிடுங்கி கொள்ளும்படி கேள்விகள் கேட்க வேண்டும்

என்கிற ஆவேசம் எழுந்தது அவளுள்... ஆனால் அதை அவளால் செயல்படுத்த முடியவில்லை... நொறுங்கி போன இதயம் அப்படிச் செய்ய இயலாது தவித்தது...

ஒருவேளை அவள் அப்படிக் கேட்டு சித்தார்த் மனதில் இருக்கும் பல அழுக்குகள் தெரிய வந்தால் சத்தியமாய் அவளால் தாங்க இயலாது... அதனால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அமைதியாகப் படுத்திருந்தாள்...

"உனக்குக் கிப்ட் கொடுக்கணும்ன்னு நினைச்சேன்... ஆனால் அதை நாளை கொடுத்தால் நன்றாக இருக்கும்ன்னு இன்னைக்குக் கொடுக்கலை... நாளைக்கு உனக்குப் பிடிச்ச கிப்ட் கொடுக்கப் போகிறேன்... நாளைய விடியலுக்காக நான் ஆவலா காத்துக்கிட்டு இருக்கேன்..."

அவன் கூறிய ஒவ்வொரு வார்த்தைக்கும் அவள் வேறு வேறு அர்த்தம் கண்டுபிடித்து மனதிற்குள் புழுங்கினாள்... சிறிது நேரம் நின்று அவளைப் பார்த்தவன் பெருமூச்சு விட்டபடி அறையை விட்டு வெளியில் வந்தான்...

அவன் சென்ற பிறகே அவளது சுவாசம் சீரானது... ஆனால் அதற்கு நேர்மாறாய் அவளது மனம் அலைப்பாய்ந்தது...

உறவில் வந்த துரோகத்தைக் கூடத் தாங்கி கொண்டவளால் காதல் துரோகத்தைத் தாங்கி கொள்ள முடியவில்லை... ஆரம்பத்தில் அவளை வெறுத்து ஒதுக்கிய சித்தார்த் இப்போது அவளது மனதில் விஸ்வரூபம் எடுக்கத் துவங்கினான்... அவளது மனதில் இருந்த காதலன் சித்தார்த் மெல்ல மெல்ல மறையலானான்...

சொத்துக்காகத் தன்னைத் திருமணம் செய்ய நினைக்கும் அவனின் தேவை என்ன என்பது இப்போது அவளுக்குத் தெளிவாகப் புரிந்து போனது... அன்று கிரானைட் பற்றிப் பேசும் போது கண்கள் பளபளக்க நின்ற சித்தார்த், நீராவை தொழிலாக மாற்ற நினைத்த சித்தார்த், ஆற்று நீரை விற்றுப் பணம் பார்க்க நினைத்த சித்தார்த் என்று அவளின் நினைவில் தொழிலதிபன் சித்தார்த் மலையளவு ஓங்கி

வளர்ந்து கொண்டே போனான்... அதில் காதலன் சித்தார்த்தின் வளர்ச்சி கடுகாய் சிறுத்துப் போனது...

மொத்தத்தில் அவளது ஊரின் இயற்கை வளத்தை அழிக்க அவன் முடிவு செய்து விட்டதை நினைத்து அவளுக்குக் கசப்பாக இருந்தது... அதைத் தன்னை வைத்து சாதிக்க நினைத்த அவனது சாமார்த்தியத்தை நினைத்து அவளுக்கு அத்தனை வெறுப்பாக இருந்தது...

கேவலம் சொத்துக்காக ஒருவன் தன்னைத் திருமணம் செய்து கொள்வதா...? அந்தளவுக்கா இந்தப் பிரகதீஸ்வரி தரம் தாழ்ந்து போனாள்...?

மனதில் இருந்த காதல் மெல்ல மறைய ஆரம்பிக்க அவளுள் பழைய பிரகதீஸ்வரி திரும்பலானாள்...

அவ்வளவு நேரம் அழுகையில் கரைந்தவள் பின் ஒரு முடிவுடன் எழுந்தமர்ந்து அழுத விழிகளைத் துடைத்து கொண்டாள்... அடுத்தவர் கைப்பாவையாகத் தான் மாறி விடக் கூடாது என்பதில் அவள் தீர்மானமாக இருந்தாள்... அவளது மனதில் காதல், அன்பு எல்லாம் உண்டு... ஆனால் அதை வைத்துத் தன்னை ஏமாற்றியவர்களுக்குத் தக்க தண்டனை கொடுக்க வேண்டும் என்று அவள் உறுதியாய் நினைத்தாள்...

அவள் சிறு பெண் தான்... அன்பு மனம் கொண்ட பேதை பெண் தான்... அதற்காக அவள் தைரியம் இல்லாத கோழையல்ல... அதனால் எதிர்காலத்தைத் தைரியமாக எதிர் கொள்ளத் துணிந்தாள்... அதற்கு முன் தன்னை ஏமாற்றிய சித்தார்த்திற்கு நல்ல பாடம் கற்பிக்க நினைத்தாள்...

அதற்கான பொழுதாக நாளைய திருமண நாளை கையில் எடுக்க நினைத்தாள்...

'என்னை அவ்வளவு லேசாக நினைச்சிட்டீங்க மிஸ்டர். சித்தார்த்... சின்னப் பெண் தானே... இவளுக்கு என்ன தெரியும்... எளிதாக இவளை ஏமாற்றி விடலாம்ன்னு தப்பு

கணக்கு போட்டுட்டீங்க இல்ல... ஆனால் நான் அப்படி இல்லை... இனி என் வாழ்க்கையை எப்படிக் கொண்டு போகணும்ன்னு எனக்குத் தெரியும்... நாளை நீங்க எனக்குப் பாடம் கற்பிக்கும் முன் நான் உங்களுக்குப் பாடம் கற்பிக்கிறேன்...'

மனதில் எழுந்த உறுதியுடன் பொழுது புலர்வதற்காக அவள் காத்திருந்தாள்...

"வேங்கை மீது காதல் கொண்டது
மானின் தவறு...
வேங்கையின் வேட்டை குணம்
மானை குற்றுயிராக்கும்...
குத்தி குதறிடுமோ வேங்கை...
தப்பிப் பிழைத்திடுமோ மான்...
வேங்கையை எதிர்க்கும்
வேகம் மானிற்கு உண்டோ,
விவேகம் இருந்த போதும்...
கொண்ட கொள்கை வேங்கையை
எதிர்க்க சொல்லும்...
மனதின் காதல் வேங்கையிடம்
மண்டியிட சொல்லும்...
காதலா? சாதலா...?
இனி வாழ்க்கையே
பெரும் போராட்டம் தான்..!!!"

நனவாகும்...!!!

மறுநாள் மணமேடையில் அமர்ந்து அய்யர் சொன்ன மந்திரங்களைக் கர்ம சிரத்தையுடன் சித்தார்த் உச்சரித்துக் கொண்டிருந்தான்... பட்டு வேட்டி, சட்டையில் கம்பீரமாக அமர்ந்திருந்தவனின் முகத்தில் தான் விரும்பியது போல் மனம் கவர்ந்தவளை திருமணம் செய்யப் போகும் மகிழ்ச்சி அப்பட்டமாய்த் தெரிந்தது...

"பொண்ணை அழைச்சிக்கிட்டு வாங்கோ..." என்று அய்யர் கூறியதும் அவனது விழிகள் தன்னவளை காண்பதற்காக அவள் வரும் வழியை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருந்தது...

அவனின் எதிர்பார்ப்பை ஏமாற்றாது பிரகதீஸ்வரியும் அங்கு வந்தாள்... ஆனால் அவன் நினைத்தது போல் மணக்கோலத்தில் அல்லாது வீட்டில் இருப்பது போல் சாதாரணமாய் வந்து நின்றவளை கண்டு திகைத்து போனவனாய் அவன் தனது கழுத்தில் கிடந்த மாலையைக் கழட்டி விட்டு எழுந்து விட்டான்...

பிரகதீஸ்வரி பின்னால் வந்த விமலாராணிக்கு சித்தார்த்தின் திகைத்த தோற்றம் வெகு திருப்தியை கொடுத்தது... இன்று காலையில் பிரகதீஸ்வரியை சந்தித்துச் சித்தார்த்தின் உண்மை முகத்தை அவளுக்கு உணர்த்திட நினைத்து தனது அலைப்பேசியில் அவனுடன் தான் பேசியதை பதிந்து வைத்திருந்ததை எடுத்துக் கொண்டு அவளைக் காண சென்றார்...

ஆனால் அங்கு அவருக்குச் சிறிதும் வேலை கொடுக்காது பிரகதீஸ்வரி அலங்காரம் எதுவும் செய்யாது வெறித்த பார்வையுடன் அமர்ந்திருந்ததைக் கண்டு அவரது மனம் மகிழ்ச்சியில் கும்மாளமிட்டது... அவள் அருகில் கைகளைப் பிசைந்து கொண்டு செய்வது அறியாது நின்று கொண்டிருந்த பானுமதியிடம் போலியான கவலை குரலில்,

"அண்ணி... பிரகதி ஏன் இப்படி இருக்கிறாள்...? முகூர்த்த நேரம் நெருங்கி கொண்டு இருக்கிறதே..."

"அது தான் அண்ணி எனக்கும் தெரியலை... கேட்டால் வாய் திறந்து பதில் சொல்ல மாட்டேங்கிறாள்..."

இருவரும் அவளிடம் பேச முயற்சித்த முயற்சிகள் எல்லாம் தோற்றுப் போனது... இறுதியில் அய்யர் அழைக்கவும் அவள் அப்படியே மணமேடையை நோக்கி வந்து விட்டாள்...

விமலாராணிக்கு ஒன்று மட்டும் புரிந்தது இந்தத் திருமணம் நடக்காது என்பது... அவருக்கு அது தானே வேண்டும்...

நேரே பிரகதீஸ்வரி முன் வந்து நின்ற சித்தார்த், "இது என்ன கோலம் பேபி...? போய்ப் பட்டுப்புடவையைக் கட்டிக்கிட்டு வா..."

"எதற்கு...?"

அவனை நிமிர்ந்து பார்த்து விழியோடு விழி நோக்கியபடி கேட்டவளின் நிமிர்வில் அவனது கண்கள் யோசனையாய் இடுங்கியது...

"என்ன விளையாடுகிறியா...? வேறு எதற்குச் சொல்வேன் நாம கல்யாணம் பண்ணிக்கத் தான்..."

"அது தான் நானும் கேட்கிறேன்... நாம ஏன் கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு...?"

அவளது முட்டாள்த்தனமான கேள்வியில் அவனது பொறுமையும் கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்து கொண்டிருந்தது...

"ஏய்... நீ இப்படிச் சின்னப் பிள்ளை போல் விளையாடுவதற்கு இத்தனை விஐபிக்கள் கூடியிருக்கிற இந்தச் சபை தான் கிடைத்ததா...? அத்தனை பேர் முன்னாடியும் என்னை அசிங்கப்படுத்தி விடாதே... உனக்கு என்ன கேள்விகள் கேட்கணும் என்றாலும் நம் கல்யாணம் முடிஞ்ச பிறகு தனியே கேள்... நான் பதில் சொல்ல

கடமைப்பட்டு இருக்கிறேன்... ஆனால் அதற்கான இடம் இதுவல்ல..."

பல்லை கடித்துக் கொண்டு ஆத்திரத்தில் முகம் ஜிவுஜிவெனச் சிவக்க நின்றவனின் தோற்றம் அவளை ஒன்றும் அசைக்கவில்லை...

"இந்தக் கல்யாணம் நடக்காது..." உறுதியான குரலில் கூறியவளை கண்டு அதிர்ந்து போன சித்தார்த்,

"வாட்...? நீ அறிவோடு தான் பேசுகிறாயா...? உன்னை மாதிரி அரைவேக்காடை எல்லாம் கல்யாணம் பண்ண நினைச்ச என் புத்தியை செருப்பால அடிக்கணும்..." என்றபடி அவன் இயலாமையோடு தனது தலையில் கை வைத்தான்...

நிலைமை விபரீதமாகப் போவதை உணர்ந்து பிரபாவதியும், மார்த்தாண்டமும் அவர்கள் அருகில் வந்தனர்... தனது பெற்றோருடன் அன்று காலையில் தான் சங்கமித்ரா திருமணத்திற்கு வந்திருந்தாள்... ஹரிப்ரசாத்தை தவிர்ப்பதற்காகத் தான் அவள் நேரமே திருமணத்திற்கு வரவில்லை... இப்போது அவளும் நிலைமை கண்டு அங்கு ஓடி வந்தாள்...

பானுமதிக்கு என்ன நடக்கிறது என்றே புரியவில்லை... சரவணன், சந்தியா சிறியவர்கள் என்பதால் ஒதுங்கி நின்றனர்...

பிரகதீஸ்வரியின் வயதினை முன்னிட்டு முயன்று வரவழைத்துக் கொண்ட பொறுமையுடன் சித்தார்த் அவளைப் பார்த்து,

"என்ன பிரச்சினை பேபி...?"

"நீங்க தான்..."

"நானா...?" என்றவனது முகத்தில் கடுமை குடியேறியது...

"ஆமாம்... நீங்களே தான்... சொத்துக்காக என்னைக் கல்யாணம் பண்ண நினைக்கும் உங்களை நான் எப்படிக்

கல்யாணம் பண்ண முடியும்...? உயிரற்ற சொத்துக்கள் மதிப்புப் பெருசா தெரிஞ்ச உங்களுக்கு உயிருள்ள இந்தப் பிரகதி மதிப்பில்லாமல் போய் விட்டாள் இல்லையா...?"

தன்னிடம் எதிரில் நின்று பேச பயப்படுவர்கள் மத்தியில் சிறிதும் பயமில்லாது அவள் அத்தனை பேர் முன்னிலையில் தன்னை எதிர்த்து பேசியது கண்டு அவனுள் ஆத்திரம் அதிகரித்தது... அவளது தைரியத்தில் அவனது ஆண் என்கிற ஈகோ பெரிதாய் அடி வாங்கியது...

"உண்மையைச் சொல்லுங்க... சொத்துக்காகத் தானே நீங்க என்னைக் கல்யாணம் பண்ண நினைச்சீங்க...?"

"இங்கே பாரும்மா... எங்க கிட்டேயும் நிறையச் சொத்துக்கள் இருக்கு... போயும் போயும் சொத்துக்காக உன்னைக் கல்யாணம் பண்ணணும்ங்கிற நிர்பந்தம் என் மகனுக்கு இல்லை..."

அவள் மகனை பேசியது கண்டு மனம் தாங்காது பிரபாவதி பேசினார்...

"அம்மா... இது அவளுக்கும் எனக்குமான பிரச்சினை... நீங்க யாரும் இதில் தலையிட வேண்டாம்..." என்ற சித்தார்த் பிரகதீஸ்வரியை பார்த்து தெனாவெட்டாய்,

"ஆமாம் அப்படித்தான் வச்சுக்கோ... இப்ப என்ன பண்ணும்ங்கிற...?"

"தம்பி... நீங்க பேசுறது ரொம்பத் தப்பு... பிரகதி இப்போது மேஜரான பெண்... அவளோட சொத்துக்களைக் காப்பாற்ற அவளுக்கு உரிமை இருக்கிறது..." என்று இடையிட்ட குருமூர்த்தியை நக்கலாய் பார்த்தனர் சித்தார்த் மற்றும் விமலாராணி...

இருவரின் பார்வைக்கும் அர்த்தம் ஒன்றே... இனி அவள் எப்படித் தனது சொத்துக்களைக் காப்பாற்ற போகிறாள் என்பதே... ஆனால் எண்ணம் பயணிக்கும் திசை தான் வேறு வேறு...

"எங்கம்மாவுக்குச் சொன்னது தான் உங்களுக்கும்..." என்று அவரிடம் கடுமையாய் எச்சரித்த சித்தார்த் தன்னவளை திமிராய் பார்த்தான்... 'பதில் சொல்லுடி' என்பது போல்...

சித்தார்த்தை பகைக்க நினைத்தால் அவன் அவர்களிடம் காட்டும் முகமே வேறு... இதுநாள் வரை காதலை காண்பித்த சித்தார்த் இவனில்லை... எதிராளியை வேட்டையாடும் வேடுவன் இவன்...

"ஓஹோ... அப்படியா...? ஆனால் அதற்கான ஆள் நானில்லை... இனியும் உங்களிடம் ஏமாற நான் தயாராக இல்லை..." என்று உறுதியுடன், நிமிர்வுடன் கூறியவளை கண்டு அவனது கண்கள் இடுங்கியது...

"அண்ணா... இந்தக் கழுதை இப்படிப் பண்ணும்ன்னு நான் கொஞ்சமும் நினைத்து பார்க்கவில்லை... நீங்க இப்படி அவமானப்படும்படி ஆகிவிட்டதே... இதற்கு முழுப் பொறுப்பும் நான் ஏற்றுக் கொள்கிறேன் அண்ணா... பிரகதி பண்ணிய தவறுக்குப் பிராயசித்தமாக நான் என் மகள் சந்தியாவைச் சித்துவுக்குக் கல்யாணம் பண்ணி தர மனப்பூர்வமாகச் சம்மதிக்கிறேன்..."

கண்களில் வராத போலி கண்ணீரை துடைத்தபடி பேசிய விமலாராணியைக் கண்டு பிரபாவதிக்கு திக்கென்று இருந்தது... சந்தியா தனது தாயின் பேச்சினை ரசிக்கவில்லை என்பது அவள் முகத்தைச் சுளித்த விதத்திலேயே தெரிந்தது...

"ஏன் என் அண்ணன் மகள் மித்ரா இல்லையா...? அவளை விடவா சித்துவுக்குப் பொருத்தமான பெண் உலகத்தில் இருந்து விட முடியும்..."

அத்தையின் பேச்சு கேட்டு சங்கமித்ரா அதிர்ந்தாள்...

பெரியவர்கள் இருவரின் வார்த்தைகளும் பிரகதீஸ்வரி காதல் மனதில் பெருத்த காயத்தை உண்டாக்கியது... தான் அவனுக்குப் பொருத்தம் இல்லை என்பதை எல்லோரும் சொல்லாமல் சொல்லியதை துயரத்துடன் கேட்டு

கொண்டாள்... அத்தனை துயரத்தையும் கசப்பு மருந்து போல் எளிதாக விழுங்கி கொண்டவள் அங்கிருந்து விலகி செல்ல போனாள்...

ஆனால் அவள் செல்ல முடியாதபடி அவளது கையை இறுக பற்றி இருந்தான் சித்தார்த்... திடுக்கிட்டவளாய் அவனது முகத்தைத் திரும்பி பார்த்தவள் பயத்தில் உறைந்தாள்... ஏனெனில் அந்தளவுக்கு அவனது முகம் கடுமையாக மாறியிருந்தது...

விறுவிறுவென அவளை மணவறை நோக்கி இழுத்து சென்றவன் சற்றும் தாமதியாது அங்கிருந்த மங்கள நாணை எடுத்து அவளது கழுத்தருகே கொண்டு சென்றவன் அடுத்த நொடி மூன்று முடிச்சிட்டு அவளைத் தன்னில் சரிபாதியாக்கி ஆக்கி கொண்டான்... கண்ணிமைக்கும் நேரத்தில் அவன் திருமணத்தை நடத்தி முடித்து இருந்தான்... அதிர்ந்து போய் நின்றவளை வெறுப்புடன் பார்த்தவன்,

"இந்தச் சித்தார்த்தை அவ்வளவு எளிதாக எண்ணி கொண்டாய் இல்லையா...? யாருக்காக என்னைத் தூக்கி எறிய நினைச்சியோ அவங்களை வச்சே உன்னை என் காலடியில் விழ வைக்கிறேன்டி..." என்று பல்லை கடித்தபடி வார்த்தைகளைக் கடித்துத் துப்பியவன்,

"போ போய் அநாதையா நின்னு எனக்கு எதிராய் போராடு... அதுவும் தாலி கட்டிய கணவனுக்கு எதிராகப் போராடும் உன்னை இந்த ஊர் மக்கள் தலையில் தூக்கி வச்சு கொண்டாடுவாங்க..." என்று கேலியாய் கூறியவன்,

"இப்படி ஊரார் முன்னிலையில் என்னை அவமானப்படுத்தியதற்கு நீ பதில் சொல்லும் வரை நான் உன்னை விட மாட்டேன்டி... என்னுடைய அவமானத்துக்கான பரிசு என்ன என்பதைப் போகப் போக நீயே தெரிந்து கொள்வாய்... இனி தான் இந்தச் சித்தார்த்தின் இன்னொரு முகத்தை நீ பார்ப்பாய்..." என்று ஆத்திரமாய் உரைத்தவன் அங்கிருந்து வேகமாய் வெளியேறி விட்டான்...

சித்தார்த் பிரகதீஸ்வரியை திருமணம் செய்தது ஒரு பக்கம் அதிர்ச்சி என்றால், அவளை அப்படியே விட்டு விட்டுச் சென்றது பெரிய அதிர்ச்சியாக இருந்தது எல்லோருக்கும்...

வந்திருந்த கூட்டம் மெல்ல கலைய ஆரம்பித்தது... இரு குடும்பம் மட்டும் செய்வதறியாது கைகளைப் பிசைந்து கொண்டு நின்றிருந்தது...

பிரகதீஸ்வரியோ தனது கழுத்தில் தொங்கிய புத்தம் புதுத் தாலியை கண்டு அழுவதா, மகிழ்வதா என்று புரியாத ஒரு உணர்வில் நின்று கொண்டிருந்தாள்... அந்த நிலையிலும் தாலியை கழட்டி ஏறிய அவளால் முடியவில்லை... அதன் புனிதம் தடுத்ததா...? இல்லை மனதில் இருந்த காதல் தடுத்ததா...? எதுவென்று தெரியாது அவள் மாங்கல்யத்தைப் பார்த்தபடி கண்ணீர் உகுத்தாள்...

தான் கேட்ட அத்தனை கேள்விகளையும் மறுத்து அவன் ஏதாவது கூறுவான் என்று அவளது காதல் மனம் ஆசைப்பட்டது... ஆனால் அந்த ஆசையை 'ஆம்' என்ற ஒற்றைச் சொல்லில் நிராசையாக்கி விட்டு சென்று விட்டானே அவளது கணவன்...

பேதையவள் துக்கத்தைக் கண்ணீரில் கரைக்க அவள் அருகில் ஆறுதலாகப் பானுமதியும், சோலையம்மாளும் இரு பக்கம் வந்து நின்று கொண்டனர்...

"அம்மு... அழாதேடா..." பானுமதி அவளை ஆறுதல்படுத்த...

"படிக்கும் வயசில் காதல், கல்யாணம்ன்னு ஆசைப்பட்டது எவ்வளவு தவறுன்னு இப்போது தான் அத்தை எனக்குப் புரிகிறது... அத்தான் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை... நான் இப்படி ஏமாந்து போயிட்டேன் அத்தை... அவர் கொஞ்சம் கூட என்னைக் காதலிக்கவில்லை... சொத்துக்காக என்னை..."

மேலே பேச முடியாது தேம்பியவளை தன்னோடு ஆதரவாய் அணைத்துக் கொண்டார் பானுமதி...

"பிரகதி... உன்னோடு நான் தனியே பேசணும்..." என்ற விமலாராணியைக் கண்டு அவள் பதறி போனாள்...

கணவன் கட்டிய தாலியை திரும்பக் கேட்டு வந்திருக்கிறாரோ என்று பயத்துடன் அவள் தாலியை இறுக பற்றிக் கொண்டாள்... அவனை எதிர்த்தவளால் அவனைக் காதலித்த தனது மனதினை எதிர்த்து ஒன்றும் செய்ய முடியவில்லை...

"அது எதற்கு எனக்கு...? நான் பேச வேண்டிய விசயமே வேறு..." என்றவர் அவளை இழுத்துக் கொண்டு தங்களது வீடு நோக்கி சென்றார்... பலியாடு போல் அவரைத் தொடர்ந்து சென்றாள் அவள்...

அவரது அறைக்கு வந்து கதவை சாத்தி தாள் போட்டவர், "இப்பவாவது சித்துவோட லட்சணத்தைப் பார்த்து கொண்டாயா...?" என்று கேலி குரலில் கேட்டவரின் கேலியில் அவள் மிகவும் நொறுங்கி போனாள்...

"அம்மா... நானே மிகவும் நொந்து போயிருக்கேன்... இதில் நீங்க வேறு எதுவும் பேசாதீங்க..." மனச்சோர்வுடன் பேசியவளை ஆங்காரமாய்ப் பார்த்தவர்,

"ச்சீ... யாருக்கு யார் அம்மா...? அநாதை கழுதை உனக்கு நான் அம்மாவா...? என் வம்ச பின்னணி என்ன.. என் குலப் பெருமை என்ன... என் கால் தூசி பெறுவாயா நீ...? குலம், கோத்திரம் தெரியாத அநாதை நாய் நீ... நீ என்னைப் பார்த்து அம்மா என்று அழைப்பதா...?" என்று கூறியவரை கண்டு உள்ளுக்குள் நொறுங்கி போனவளாய் அவள் கதறினாள்...

"அம்மா... அப்படிச் சொல்லாதீங்க... அப்பா, அம்மா உயிரோட இல்லாததால் நான் அநாதையா...? நான் உங்களைத் தானே என் அம்மாவா நினைச்சிருந்தேன்..."

"ஆனா நான் உன்னை என் மகளா நினைச்சது இல்லையே... அப்பா, அம்மா இறந்ததால் மட்டும் நீ அநாதை இல்லை... உண்மையாகவே நீ அநாதை கழுதை தான்..."

கொடிய விசம் கொண்ட கரும்நாகமாய்ச் சீறியவரை கண்டு அவள் அதிர்ந்து போய்ப் பார்த்தாள்... ஒரே நாளில் அவள் எத்தனை அதிர்ச்சிகளைத் தான் தாங்குவாள்... இந்தக் கணம் தனது இதயம் துடிப்பை நிறுத்தி விடக் கூடாதா என்று பரிதவித்துப் போனாள்...

தான் காதால் கேட்ட செய்தி உண்மை தானா என்று நம்ப முடியாது அவள் நின்றிருந்தாள்... ஆனாலும் தன்னை மகளாய் நினைத்துப் பாசத்தைக் காட்டிய பெற்றோரின் அன்பு முன் விமலாராணியின் வார்த்தைகள் அவளுக்குப் பொய்யாகவே தோன்றியது... தனது பெற்றோர் நரசிம்மன், கார்த்திகாயினி என்றே அவள் உறுதியாய் நம்பினாள்...

"இந்த ஊர் மக்களுக்காக நான் உன்னைப் பொறுத்துக்கிட்டு போனேன்... இனி இந்த ஊர் மக்கள் தயவு எனக்குத் தேவையில்லை... அது போல் உன் தயவும்... ஏனென்றால் இனி என் மருமகன் சித்து எல்லாவற்றையும் பார்த்து கொள்வான்... என்ன பார்க்கிற...? சந்தியாவைச் சித்துவுக்கு இரண்டாம் தாரமாகக் கட்டி வைத்து விடுவேன்... இந்தச் சொத்துக்களைக் காட்டினால் அவனும் மயங்கி போய்ச் சந்தியாவைக் கல்யாணம் பண்ணிக்குவான்..." என்று ஆங்காரமாய்ப் பேசியவரின் பேச்சில் அவள் வாயடைத்து போனாள்... ஏனெனில் சித்தார்த் சொத்துக்காக எதையும் செய்யக் கூடியவன் தான்...

அவளின் முன் சில காகிதங்களைத் தூக்கி போட்டவர், "சத்தம் போடாது இதில் கையெழுத்து போட்டு விட்டு இங்கிருந்து ஓடி போய் விடு... உன் சொத்துக்களும் எனக்கு வரும்... என்னோட மகளுக்கும் திருமணமாகும்... ஒரே கல்லில் இரண்டு மாங்காய்..." என்று கொக்கரித்தவரை கண்டு அவள் அயர்ந்து போய் நின்றாள்...

எல்லாம் ஒரு கணம் தான் தன்னைச் சமாளித்துக் கொண்டு நிமிர்ந்து நின்றாள்... அழுத விழிகளைத் துடைத்துக் கொண்டு அவரைத் தீர்க்கமாய் அவள் பார்த்தாள்... ஏனெனில் அன்பு கொண்ட தந்தை காப்பதில் விஷ்ணுவாக

இருந்தாலும், தவறு செய்பவர்களைத் தண்டிப்பதில் அவர் ஒரு கருப்பண்ண சாமி... அந்தளவுக்கு அவரது தண்டனைகள் கடுமையாக இருக்கும்... அவரது இரத்தம் அவளது உடலிலும் ஓடுகிறது இல்லையா... அதனால் தலைநிமிர்ந்து அவள் நின்றாள்...

"என்ன என்னை மிரட்டுகிறீங்களாம்மா... இதில் நான் கையெழுத்து போடவில்லை என்றால்...?"

அவளின் நிமிர்வு விமலாராணியை உறுத்தியதோ என்னவோ... அவளின் நிமிர்வை முளையிலேயே நசுக்கா விட்டால் அவரின் வயதிற்கும், அனுபவத்திற்கும் அழகா... இல்லவே இல்லையே... அவளை விட நிமிர்வாய் தெனாவெட்டாய் அவளைப் பார்த்தவர்,

"உன் அப்பனுக்குக் கொடுத்த அதிர்ச்சி வைத்தியம் போல் உனக்கும் கொடுத்தால் தான் நீ சரிப்பட்டு வருவாய்..." என்று வில்லி சிரிப்பு சிரித்தவரை கண்டு அவளுக்கு மனதிற்குள் குளிரெடுத்தது...

அந்த அநாதரவான நிலையில் அவளின் மனம் தன்னையும் அறியாது தன்னவனின் அருகாமையை விரும்பியது... அடுத்த நொடி அவனது துரோகம் மனதில் உறைக்க அவள் நம்பிக்கை இழந்து, பலம் இழந்து மனதளவில் கோழையாகி போனாள்... மனதில் கழிவிரக்கம் எட்டிப்பார்த்தது...

"நல்லா இருந்த உன் அப்பன் திடீரென்று படுக்கையில் விழும் போதே உனக்குச் சந்தேகம் வந்திருக்க வேண்டாமா...?" என்றவரை கண்டு அவளது இதயம் நின்று துடித்தது...

"அவரை என்ன பண்ணினீங்க...?" என்று கேட்கும் போதே அவளது குரல் நடுங்கியது...

"ஒரு பொய்யை உண்மையாய் எல்லோரிடமும் சொல்வேன்னு சொன்னேன்... அதைக் கேட்டு மனுசன் சொத்துக்களை என் பெயரில் எழுதி கொடுத்துட்டுப் படுத்த

படுக்கையா விழுந்துட்டான்... அப்படித்தான் நான் நினைச்சிட்டு இருந்தேன்... ஆனா அந்தக் கிழட்டு நாய்..."

"அப்பாவை அப்படிச் சொல்லாதீங்கம்மா..." என்று பதறியவளை துச்சமாய்ப் பார்த்தவர்,

"அவன் நாய் தான்... பின்னே படுக்கையில் விழுந்த பிறகும் அவனது கொழுப்பு அடங்கவில்லையே... எனக்குத் தெரியாம வக்கீலை வச்சு எல்லாச் சொத்துக்களையும் உன் பெயருக்கு எழுதி வச்சிட்டு போயிருக்கான்னா எவ்வளவு தைரியம் இருக்கணும்... எனக்கு, என் பிள்ளைங்களுக்குச் சொத்துக் கிடையாது... ஆனால் உனக்கு மட்டும் மொத்த சொத்து கேட்குதா... அப்படி ஒண்ணு நடக்கத்தான் நான் விட்டு விடுவேனா...?"

விமலாராணி குரலில் அப்படி ஒரு அகம்பாவம் இருந்தது...

"சரவணன், சந்தியா என்னோட அக்கா, அண்ணா..."

"அந்த நினைப்பு உன் அப்பனுக்கு இல்லையே..." என்று ஆங்காரத்துடன் சொன்னவர்,

"இப்போதும் அந்தப் பொய்யை உண்மைன்னு இந்த ஊர் ஜனங்க முன்னாடி சொல்ல போகிறேன்... அதுக்கு அப்புறம் உங்கப்பனை கொண்டாடும் ஊர் ஜனங்க அவனை மட்டுமில்லாது உன் மூஞ்சிலும் காறி துப்புவாங்க..." என்றவர் அந்தப் பொய்யை அப்படியே உண்மை போல் காட்சியாய் விவரிக்க...

"போதும்... போதும்... இதுக்கு மேல சொல்லாதீங்க..." என்றபடி அவள் தனது இரு காதுகளையும் பொத்தி கொண்டாள்...

அவர் கூறியதை கேட்டு பிரகதீஸ்வரி வெலவெலத்து போனாள்... எத்தனை கொடூரம்... இதைக் கேட்ட பின்பும் மானம், அவமானம் பார்க்கும் தந்தை எப்படி உயிரோடு இருந்தார்...

"இப்போது கையெழுத்து போட்டு கொடுப்பாய் அல்லவா..." விசமத்துடன் கேட்டவரை வெறித்துப் பார்த்தவள் மறுநொடி யோசிக்காது அவர் கொடுத்த காகிதங்களில் கையெழுத்து போட்டு கொடுத்தாள்...

தந்தையின் மானம் காக்க அவள் தனது சொத்துக்களை இழந்தாள்... அழியும் சொத்துக்களை எப்போது வேண்டுமானாலும் சம்பாதித்துக் கொள்ளலாம்... ஆனால் மானத்தை ஒரு முறை இழந்தால் மீண்டும் அதைச் சம்பாதிப்பது என்பது இயலாத காரியம்... இறுதி வரை கவரி மானாக வாழ்ந்து மடிய நினைத்தாள் அந்தப் பேதையவள்...

அவள் கையெழுத்து போட்ட காகிதங்களைக் கையில் எடுத்தபடி, "இதே போல் இந்த வீட்டை விட்டும் ஓடி போய் விடு... இனி நீ இங்கே இருக்க உனக்கு உரிமை இல்லை..." என்றார் கொஞ்சமும் ஈவு இரக்கமில்லாது...

பிரகதீஸ்வரி பேசும் திராணியற்று அறையில் இருந்து வெளியில் வந்த போது அங்கு வரவேற்பறையில் எல்லோரும் கூடி இருந்தனர்... மற்றவர்கள் அவளை வேடிக்கை பார்க்க பானுமதியும், சோலையம்மாளும் அவளை நோக்கி ஓடி வந்தனர்...

"சோலை... உன் வீட்டில் எனக்கு ஒரு இடம் தருவியா...?"

"அய்யோ... என்ன கண்ணு இப்படிக் கேட்டுட்ட... உனக்கு இல்லாத வீடா...? இனி அது என் வீடில்லை... உன் வீடு கண்ணு... ஏன்னா அது உங்கப்பாரு எனக்குப் போட்ட பிச்சை..." என்று அவளைக் கட்டி கொண்டு அழுதார் அவர்...

குருமூர்த்தியும் அவரது மனைவியும் அவள் அருகில் வந்தனர்...

"பிரகதிம்மா... இது உன்னோட சொத்துக்கள்ம்மா..." என்று அவர் கூற...

"அது அவங்களுக்கு எழுதி கொடுத்து ஐந்து நிமிடங்களாயிற்று அங்கிள்..." என்றவளை திகைப்புடன்

பார்த்தவர்,

"மிரட்டி கையெழுத்து வாங்குவது சட்டப்படி தப்பும்மா... கோர்ட்ல கேஸ் போட்டா அப்புறம் இவங்க தான் ஜெயிலுக்குப் போகணும்..." என்றவரை பார்த்துக் கண்ணீர் மல்க கையெடுத்து கும்பிட்டவள்,

"வேண்டாம் அங்கிள்... என் அப்பாவை என்னால் அசிங்கப்படுத்த முடியாது..." என்றவளை கண்டு புரியாது விழித்தார் அவர்...

"ஆனாலும் பிரகதிம்மா..."

"எதுவும் சொல்ல வேண்டாம் அங்கிள்... சட்டப்படி அவங்க பெயருக்கு எல்லாவற்றையும் மாற்றிக் கொடுத்து விடுங்கள்..." என்றவள் அங்கிருந்து கிளம்பினாள்...

அவள் செல்வதைத் துயரத்துடன் பார்த்தபடி நின்றிருந்தார் குருமூர்த்தி...

சந்தியா செய்வதறியாது முழித்துக் கொண்டிருந்தாள்... ஏதோ பேச வந்த சங்கமித்ராவை அவளது பெற்றோர் அடக்கி விட்டனர்... சித்தார்த்தை பகைத்துக் கொள்ள அவளது தந்தை விரும்பவில்லை...

சொகுசாய் வாழ்ந்த சரவணன் எந்தப் பக்கம் செல்வது என்று தெரியாது அல்லாடினான்... சட்டென்று ஆண்மகனாய் அவனால் ஒரு முடிவு எடுக்க முடியவில்லை...

பிரகதீஸ்வரியும் யாரையும் எதிர்பார்க்காது பானுமதி மற்றும் சோலையம்மாளுடன் வீட்டை விட்டு வெளியேறினாள்... அவள் வெளியில் வரும் போது சித்தார்த் உள்ளே நுழைந்தான்... ஜீவனற்று போனவளாய் தன்னைக் கடந்தவளை கூர்ந்து அளவிட்டவனின் உதடுகளில் கேலி சிரிப்பு வந்தமர்ந்தது...

"இது நடக்கும் என்று நினைத்தேன்... நடந்தே விட்டது..." என்றவனது குரல் ஒரு மாதிரியாக ஒலித்தது...

அதைக் கேட்டுத் தைரியத்தை மீட்டு கொண்டவளாய் அவனைப் பார்த்தவள், "இதைத் தானே நீங்களும் விரும்புனீங்க... இனி உங்களுக்குச் சந்தியாவைத் திருமணம் பண்ணுவதில் எந்தத் தடையும் இல்லை... ஏன்னா சொத்துக்கள் அனைத்தும் அம்மா பெயருக்கு மாற்றியாகி விட்டது..." என்றவளை கண்டு அவனது கண்கள் இடுங்கியது...

"நீ இருக்கிறியே தடையாக..." என்றவனை வெறித்துப் பார்த்தவள்,

"நிச்சயம் நான் தடையாக இருக்க மாட்டேன்... நீங்க எத்தனை திருமணம் செய்தாலும் எனக்குக் கொஞ்சமும் கவலை, வருத்தம் இல்லை..."

அவள் கூறியதை கேட்டு அவனது முகம் இறுகி போனது...

"ரொம்பச் சந்தோசம்..." என்றான் நக்கலான குரலில்...

"ரொம்பச் சந்தோசப்பட்டுக்காதீங்க மிஸ்டர். சித்தார்த்... களம் அவங்களோடதா இருக்கலாம்... ஆட்டம் உங்களோடதா இருக்கலாம்... ஆனால் நிச்சயம் வெற்றி எனக்கு மட்டும் தான்..." என்று நிமிர்வுடன் கூறியவளை கண்டு அலட்சியமாய்த் தோளை குலுக்கியவன்,

"அதையும் பார்க்கலாம்..." என்றான் அசால்ட்டாக...

அவனின் அலட்சியம் கண்டு மனம் நொறுங்கினாலும் அதை முகத்தில் காட்டாது அவள் அமைதியாக அந்த இடத்தை விட்டு வெளியேறினாள்...

தோற்று போன உணர்வுடன் தளர்ந்த நடையுடன் செல்லமாய் வாழ்ந்து வந்த வீட்டை விட்டு உடுத்திய உடையுடன் வெளியேறினாள் அந்தச் செல்ல சின்னச் சீமாட்டி...

கண்ணில் இருந்து அவள் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்த சித்தார்த்தின் முகத்தில் கோபத்தைத் தவிர வேறில்லை...

"நீ எங்கே போனாலும் உன்னை விட மாட்டேன்டி..." என்று அவனது உதடுகள் முணுமுணுத்தது...

சித்தார்த்தின் வார்த்தைகளில் அடக்கப்பட்ட ஆத்திரம், வன்மம், குரோதம், பழிவாங்கும் வெறி அதிகம் இருந்தது...!!!

"என்னுள் காதலும் உண்டு...
என்னுள் காமமும் உண்டு...
என்னுள் மனிதமும் உண்டு...
என்னுள் மிருகமும் உண்டு...
என்னுள் கற்பாறையும் உண்டு...
அதில் கசியும் ஈரமும் உண்டு...
குழந்தை மனமும் உண்டு...
கொடூர மனமும் உண்டு...
இத்தகைய முரண்பாட்டிலும்
என்னுள் கவிதையாய் நீ...
என் கனவாய் நீ...
என் நனவாய் நீ...
என் கனவில் நனவாய்
நீ மட்டுமே...!!!"

முதல் பாகம் முற்றும்...!!!

"தரும மறியாக் குறும்பனைத்
தங்கை சார்ங்க மதுவே போல்
புருவ வட்ட மழகிய பொருத்த
மிலியைக் கண்டீரே உருவு
கரிதாய் முகம் செய்தாய்
உதயப் பருப்ப தத்தின் மேல்
விரியும் கதிரே போல் வானை
விருந்தா வனத்தே கண்டோமே"

'தருமம் அறியா குறும்பன்... நியாயம் என்பதே இவனிடம் கிடையாது... இரக்கமற்றவன் பயங்கரக் குறும்பன்... ஏன் இவனிடம் நியாயம் இல்லை என்கிறாள்... பின்னே? ஒரு பெண் இவ்வளவு கதறுகிறாள் அவனுக்காக... ஆனால் அவன் வரவே இல்லையே... அவள் காதலை ஏற்றுக் கொள்ளாமல் எங்கே சென்றான் அவன்? நியாயமாக இது போன்ற பெண் கிடைக்க அவனல்லவா கொடுத்து வைத்திருக்க வேண்டும்...

எவ்வளவு காதல் எவ்வளவு ஆசை... இப்படி வெளிப்படையாக ஆசையைச் சொல்லி முழு மொத்தமும் அணு அணுவாகக் காதலிப்பவள் கிடைக்க எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும்... ஆனால் அவன் வரவே இல்லையே சேரவே இல்லையே... இவளைப் புரிந்து கொள்ளாதவன் இரக்கமற்றவன் தானே... நியாயம் அற்றவன் என்று அவள் சொல்வதில் என்ன தவறு ? குறும்புத்தனங்களால் தானே அவள் மனதைக் கொள்ளை கொண்டான்...'

நாச்சியார் திருமொழியை முணுமுணுத்துக் கொண்டே கோலத்தின் நடுவே பசுஞ்சாணத்தில் பிள்ளையார் பிடித்து அதில் பூவை சொருகிய பிரகதீஸ்வரியின் விழிகள்

அவளையும் அறியாது கலங்கியது... இதே மாதிரி ஒரு மார்கழி மாத நாளின் அதிகாலையில் தான் அவள் அவனைச் சந்தித்தாள்...

சந்தித்த நாளில் இருந்து இதோ இன்று வரை அவனை மட்டுமே சிந்திக்க வைத்து விட்டான்... கோதையை ஏமாற்றிய எம்பெருமான் போன்று அவனும் அவளை ஏமாற்றி விட்டான்... எத்தனை காதல் அவன் மீது... அத்தனையையும் அவன் ஒன்றும் இல்லாது செய்து விட்டான்... அவனைப் பற்றி நினைத்தவள் மனதில் பாரமேறியது...

அவனைப் பற்றி நினைத்தாலே அவளது மனம் இப்படித்தான் உணர்கிறது... அவனை மறக்கத்தான் நினைக்கிறாள் ஆனால் அவளால் அது முடியவில்லை...

"கண்ணு... இன்னுமா கோலம் போட்டு முடிக்கலை..." சோலையம்மாளின் குரலில் தன்னுணர்வு பெற்றவள் கலங்கிய விழிகளைத் துடைத்துக் கொண்டு வீட்டினுள் சென்றாள்...

"இந்தா கண்ணு..."

எப்போதும் அவள் அருந்தும் அருகம்புல் சாறு அடங்கிய தம்பளரை அவளது கையில் கொடுத்த சோலையம்மாள் அங்கிருந்த பானுமதியிடம் காபியை கொடுத்தார்...

தம்பளரை வாங்கிக் கொண்டு வீட்டின் பின்புறம் இருந்த சிறிய தோட்டத்தில் வந்தமர்ந்தாள் பிரகதீஸ்வரி...

அவளது திருமணம் நேற்று நடந்தது போலிருக்கிறது... ஆனால் இந்த ஏப்ரல் மாதம் வந்தால் முழுதாய் மூன்று வருடங்கள் முடிய போகிறது... இந்த மூன்று வருடத்தில் அவளது வாழ்க்கையில் மட்டுமா மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கிறது... இந்த ஊரிலும் தான் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கிறது...

எல்லா மாற்றங்களுக்கும் காரணம் அவன் தான் என்றால் அது மிகையில்லை... அவன் தான் அவளது கணவன்

சித்தார்த்... சொன்னது போல் ஊர் மக்களைத் தன் கையில் போட்டுக் கொண்டு அவளுக்கு எதிராகத் திருப்பி விட்டு விட்டான்... சொன்ன வாக்கை இந்த விசயத்தில் மட்டுமே அவன் காப்பாற்றி இருக்கிறான்...

அதாவது அவளை உயிரோடு அழிக்கும் விசயத்தில்... அன்று அவளைக் காதலிப்பதாய் சொல்லி ஏமாற்றியவன்... இன்று இந்த ஊரை நேசிப்பதாய் சொல்லி இந்த மக்களை ஏமாற்றி இந்த ஊரை கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறான்...

அவனுக்கு எதிராக அவளும் இந்த மூன்று வருடங்களாக விடாது போராடி வருகிறாள்... ஆள் பலம், பணபலம் பொருந்திய அவனை எதிர்ப்பது என்பது அவ்வளவு எளிதல்ல என்பது அவனுடன் மோதும் போது தான் அவளுக்குத் தெரிந்தது... அவள் எட்ட முடியாத உயரத்தில் அவன் இருக்கிறான் என்று... ஆனாலும் அவள் நம்பிக்கை இழக்காது போராடுகிறாள்...

அப்படிப் போராடுவதால் அவளுக்குக் கிடைத்த பட்டம் 'முட்டாள்'... அதையும் அவள் புன்சிரிப்புடன் தாங்கி கொண்டு வாழ்ந்து வருகிறாள்...

'பேசாம புருசன் கூடச் சேர்ந்து வாழ்றதை விட்டுட்டு உனக்கு எதுக்கும்மா இந்த வேண்டாத வேலை...?'

'அந்தத் தம்பி நல்ல தம்பி தான்... ஆனா இந்தப் பொண்ணு தான் திமிர் பிடிச்சு போய் அவர் கூட வாழாம இருக்கு... ஆனாலும் ஒரு பொண்ணுக்கு இத்தனை அகம்பாவம் இருக்கக் கூடாது...'

'இங்கே பாரும்மா... ஆயிரம் தப்பு பண்ணி இருந்தாலும் புருசனை விட்டுட்டு வந்து இப்படித் தனியா இருக்கலாமா...? ஆம்பிளை அப்படித்தான் இருப்பாங்க... நீ தான் அனுசரிச்சு போகணும்...'

இப்படி விதவிதமான அறிவுரைகள், இளக்கார பேச்சுக்கள் எனப் பலவற்றை இந்த மூன்றாண்டுகளில் அவள் கடந்து

வந்து விட்டாள்...

கடைசியில் தவறு செய்யும் அவன் நல்லவனாகி போனான்... நல்லது செய்ய நினைக்கும் தான் கெட்டவளாகி போனதை நினைத்து விரக்தி சிரிப்பு வந்தது அவளுக்கு... பணம் பத்தும் செய்யும் என்பதற்கிணங்க... இங்கே பணம் பலவற்றையும் சாதித்துக் காட்டி இருந்தது...

பறவையின் சத்தத்தில் தன் நினைவுகளில் இருந்து வெளியில் வந்தவள் இன்று செய்ய வேண்டிய வேலைகளை மனதிற்குள் பட்டியல் போட்டபடி உள்ளே சென்றாள்...

அதே நேரம் சித்தார்த்தும் படுக்கையில் இருந்து எழுந்தவன் நேரே ஜன்னல் அருகே வந்து வெளிப்புறத்தை பார்த்தான்... மார்கழி மாத பனியில் தோட்டம் முழுவதும் நனைந்திருந்தது... அதே தோட்டம், அதே செடியில் பூத்திருந்த அதே மலர்கள்... ஆனால் அவள் மட்டும் அங்கில்லை...

அவனது மனம் ஏனோ வெறுமையாக உணர்ந்தது... ஜன்னலை விட்டு விலகி வந்து கட்டிலில் அமர்ந்தான்... நேற்று நள்ளிரவு வரை வேலை செய்ததாலோ என்னமோ அவனுக்கு லேசாக மூச்சிரைத்தது...

பனியும், மழையும் தான் அவனுக்கு எதிரிகள் ஆயிற்றே... அதனால் தான் குளிர் மதியான அவளும் அவனுக்கு எதிரியாய் மாறி போனாளோ...!

அவனையும் அறியாது அன்று தனக்குச் சேவகம் செய்த அவளது அன்பு முகம் அவனது மனக்கண்ணில் தோன்றியது... அவள் அவனுக்கு எதிரியா...? அப்படித்தான் அவன் வெளியில் காட்டி கொள்கிறான்... ஆனால் மனதிற்குள்...???

ஏதேதோ வேண்டாத எண்ணங்கள் அவனை ஆக்கிரமிக்க முயன்றதை தலையைக் குலுக்கி தடுத்தவன் குளியலறைக்குள் புகுந்து கொண்டான்...

இப்போதைக்கு அவனது அந்த எண்ணங்கள் வேண்டாத எண்ணங்கள் தான்... அவனுக்குத் தேவையில்லாத எண்ணங்கள் தான்... அவனை உயிரோடு உருக்கி கொல்லும் ஆட்கொல்லி நோய் தான் அந்த எண்ணங்கள்...

அலுவலகத்திற்குக் கிளம்பி வந்தவனைப் பிரபாவதி எதிர் கொண்டார்... அவன் அவரைக் கண்டு கொள்ளாது உணவு மேசையை நோக்கி சென்றான்...

"சித்து..."

தட்டு எடுத்து வைத்து அதில் தோசையை வைத்துக் கொண்டே அவரை ஏறிட்டுப் பார்த்தான் 'என்ன' என்பது போல்...

அவனின் முன்னிருந்த நாற்காலியில் அமர்ந்த பிரபாவதி, "நம்ம ஜெகன்நாதன் இருக்கார்ல..."

"அவருக்கு என்ன...?"

"அவருக்கு என்ன நல்லா தான் இருக்காரு... இங்கே நான் தான் நல்லாயில்லை..." என்று சலித்துக் கொண்டவர்,

"அவருக்கு ஒரே ஒரு பொண்ணுடா... வெளிநாட்டில் படிச்சிருக்கிறாள்... நல்ல வசதி, நல்ல அழகும் கூட..." என்றவரை அவன் நிமிர்ந்து ஒரு பார்வை பார்த்தான்...

அதில் அவருக்குக் குளிரெடுத்த போதும் தான் நினைத்ததை மகனிடத்தில் பேச விரும்பினார்...

"உனக்கு அப்படி என்னடா வயசாகி போச்சு... இந்தத் தை பிறந்தால் முப்பது முடிய போகுது... அவ்வளவு தான்... இந்த வயசில் கல்யாணம் பண்ணாம வேறு எந்த வயசில் கல்யாணம் பண்ணுவாங்க... இந்த வயசில் நீ இப்படிச் சாமியார் மாதிரி வாழணும்ன்னு உனக்கு என்ன தலையெழுத்தா...?"

"நீங்க எனக்குக் கல்யாணம் ஆனதை மறந்துட்டு பேசுறீங்க..." என்றவன் கை கழுவ எழுந்தான்...

"அதை எப்படி மறக்க முடியும்...? மறக்க கூடிய காரியத்தையா அவள் பண்ணி வச்சிருக்கிறாள்..."

கை கழுவி கொண்டே அன்னையைத் திரும்பி பார்த்தவன், "உங்க மகனை பேசுறதுக்கு உங்களுக்கு உரிமை இருக்கு... ஆனால் அடுத்தவங்களைப் பேச உங்களுக்கு உரிமை இல்லை..."

"இந்தா பார்த்தியா நீயே சொல்லிட்ட அவள் அடுத்தவள்ன்னு... பேசாம அவளைக் கழட்டி விட்டுட்டு வேற கல்யாணம் பண்ணும் வழியைப் பார்... உனக்குக் கல்யாணமாகி மூணு வருசமாகப் போகுது... நீ இங்கே... அவள் அங்கேன்னு இப்படிப் பிரிஞ்சி வாழ்றதுக்கு எதுக்குக் கல்யாணம்...? பேசாம அவளை அத்துவிட்டிரு..." என்றவரை உணர்வில்லாது பார்த்தவன் மேலே ஒன்றும் பேசவில்லை...

"இப்போ ஜெகன்நாதனுக்கு நான் என்ன பதில் சொல்ல...? லட்டு போல் பொண்ணு கிடைச்சிருக்கு... மிஸ் பண்ணிடாதேடா... பிறகு வருத்தப்படுவ..."

"இந்தப் பேச்சை இத்தோடு விடுங்கம்மா..." என்றபடி அலுவலகத்திற்குக் கிளம்பியவனைத் தடுத்து நிறுத்தியவர்,

"என்னத்தைடா விடச் சொல்ற... உங்க இஷ்டத்துக்கு விடப் போய்த் தான் நீ இங்கே தனியா நிற்கிற... நீ நிற்கிறது பத்தாதுன்னு உன் தங்கச்சி வேற தனிமரமா அங்கே மும்பையில் உட்கார்ந்துட்டு இருக்கிறாள்... உங்க ரெண்டு பேர் மனசிலேயும் அப்படி என்ன தான் இருக்கு..."

அதற்குப் பதில் பேசாது நின்றவனைக் கண்டு அவரது ஆத்திரம் அதிகரித்தது...

"உங்களோட சேர்ந்து மித்ராவும் கெட்டு போயிட்டாள்... அவளும் கல்யாணம் வேண்டாம்ன்னு கிராமம் கிராமமா போய்ச் சர்வீஸ் பண்ணிக்கிட்டு இருக்கா... உங்க எல்லோர் மனதிலும் என்ன இருக்குன்னு எனக்குத் தெரியலை...

ஆனா நீங்க எல்லாம் பெத்தவங்களை நல்லா கஷ்டப்படுத்துறீங்க... அது மட்டும் நல்லா புரியுது..."

"நீங்க மட்டுமா கஷ்டப்படுறீங்க... நாங்களும் தான்..." என்றவன் அவரது பதிலை எதிர்பாராது சென்று விட்டான்...

மகனது பதில் கேட்டு அவர் தான் விழித்தார்...

"அத்தை... கலெக்டரை பார்க்க திருநெல்வேலி வரை போகிறேன்... உங்களுக்கு எதுவும் வாங்கிட்டு வரணுமா...?"

தன்னிடம் கேட்ட பிரகதீஸ்வரியை வாஞ்சையுடன் பார்த்த பானுமதி, "ஒண்ணும் வேண்டாமா..." என்றவர்,

"கட்டாயம் கலெக்டரை சந்தித்துத் தான் ஆகவேண்டுமா...?"

"ஆமாம் அத்தை..."

"இந்த மூணு வருசத்தில் நீயும் பெட்டிசன் மேல் பெட்டிசன் போடுற... அது எதுக்கும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கக் காணோம்... எதுக்கும்மா இந்த வேண்டாத வேலை... இதனால் உனக்கு ஏதாவது நல்ல பெயர் கிடைக்குதா...? அதுவும் இல்லை... எதற்காக நீ இப்படிக் கஷ்டப்பட்டுப் போராடணும்..."

அவரது வார்த்தையில் அவள் மீதான உண்மையான அக்கறை தெரிந்தது...

"என்றாவது ஒரு நாள் நிச்சயம் பலன் கிடைக்கும் அத்தை... மனம் தளராம போராடணும்..." என்று புன்னகையுடன் கூறியவளை கண்டு அவருக்கு வேதனையாக இருந்தது...

"வேறு யாரையோ எதிர்த்து நீ போராடினேன்னா நான் உன் சார்பா பேசுவேன்... ஆனா நீ எதிர்ப்பது உன் கணவனை... இதில் அதிகம் வருத்தப்படுவது நீ தான்..."

அவர் கூறியதை கேட்டு அவள் மௌனமாய் உதட்டை கடித்தாள்...

"சுயநலத்தை விடப் பொதுநலம் முக்கியம் இல்லையா அத்தை... நீங்க வீணே மனசை போட்டு உழட்டிக்காதீங்க... நடப்பது தான் நடக்கும்..." என்றவள் அவரிடம் விடைப்பெற்று வெளியில் வந்தாள்...

அவள் பேருந்து நிலையம் வந்த போது அங்குக் கதிரேசன் கல்லூரி செல்லும் பேருந்திற்காகக் காத்திருந்தான்... அவன் நினைத்தது போல் அவனுக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்து விட்டது... தோழியைக் கண்டதும் அவன் மகிழ்ச்சியாய் புன்னகைத்தான்...

"கதிர்... படிப்பு எல்லாம் எப்படிப் போகுது...?"

"நல்லா போகுது சின்னம்மா..." என்று பதிலளித்தவன்,

"நீங்க சித்த மருத்துவம் படிக்காதது தான் எனக்கு வருத்தமாக இருக்கிறது..." என்றவனைக் கண்டு அவளது முகம் ஒரு மாதிரியாய் மாறியது... சமாளித்துக் கொண்டு அவனைப் பார்த்து புன்னகைத்தவள்,

"சித்த மருத்துவம் படிக்கலைன்னா என்ன...? பிஏ படிக்கிறேன் இல்லையா..."

"அதுவும் தபால் மூலமா..." என்றுரைத்தவன் குரலில் வருத்தமே இருந்தது...

"எப்படிப் படிச்சா என்ன...? படிக்கிறேனா இல்லையா..." என்று அவள் சிரித்தாள்...

"எல்லா வருத்தத்தையும் நீங்க இப்படிச் சிரிச்சே மழுப்பிடுங்க..."

"அதை விடு... உன் தங்கை இந்த வருசம் ப்ளஸ்டூ இல்லையா...? மேற்கொண்டு என்ன படிக்கப் போகிறாள்..." என்று கேட்டு அவள் பேச்சை மாற்ற, அவனும் தனது தங்கையைப் பற்றிப் பேச ஆரம்பித்தான்...

அப்போது சித்தார்த்தின் கார் அவர்களைக் கடந்து சென்றது... முதலில் அவள் அதைக் கவனிக்கவில்லை... கடந்து சென்ற பின்பே அதை அவள் கவனித்தாள்...

மீண்டும் அவளது மனதில் பாரமேறியது... ஆனாலும் நொடியில் தன்னைச் சமாளித்துக் கொண்டாள்...

சித்தார்த்தின் மனதிலும் அவளின் நினைவு தான்... அவன் காரை ஓட்டி கொண்டு வந்த வேகத்திற்கு அவளை அவன் கண்டது நொடிக்கும் குறைவான நேரமே... அந்த நொடி நேரத்திலும் அவளது தோற்றம் அப்படியே அவனது மனதில் பதிந்தது...

எளிமையான அந்தத் தோற்றத்திலும் அழகாய் புத்தம் புது மலராய் நின்றிருந்தவளை கண்டு அவனது மனம் அலைப்பாயத் தான் செய்தது... அலைப்பாயும் மனதினை அடக்க இயலாது அதைக் காரிடம் காட்டி அதன் வேகத்தினை அதிகப்படுத்தினான்...

திருநெல்வேலி ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்த பிறகும் பிரகதீஸ்வரி மனதில் கணவனது நினைவுகளே... கழிவிரக்கத்தில் கதறி துடித்த மனதினை முயன்று அடக்கி கொண்டு தான் வந்த வேலையைப் பார்க்கலானாள்...

"கொஞ்ச நேரம் காத்திருங்கம்மா... உங்களுக்கு முன்னாடி எத்தனை பேர் காத்திருக்காங்க..." என்று அங்கு வேலை செய்யும் ப்யூன் அவளது வருகையை உதாசீனப்படுத்த, அதைப் பொருட்படுத்தாது அவள் வெளியில் வந்து நின்றாள்...

இப்போது எல்லாம் இது போன்ற உதாசீனங்கள் அவளுக்குப் பழக்கப்பட்டுப் போய் விட்டது... எதையும் புன்னகை முகத்துடன் கடக்கப் பழகி இருந்தாள்...

****

ஹரிப்ரசாத் இன்று அலுவலகத்திற்கு விரைவாகச் செல்ல வேண்டும்... இன்று அமைச்சர் ஒருவர் அவனது அலுவலகத்திற்கு வருகை தருகிறார்... அதனால் அவன் அங்கு நேரத்தோடு செல்ல வேண்டும்... படுக்கையில் இருந்து வேகமாய் எழுந்தவன் அப்போது தான்

கவனித்தான் தனது மனைவி இன்னமும் எழாமல் இருப்பதை...

அவள் அருகில் சென்றவன் அவளது நெற்றியில் கை வைத்துப் பார்த்தான்... அவளது உடல் வெப்பம் சாதாரணமாக இருந்தது... அவனது தொடுகையை உணர்ந்த அவனது மனைவியவள் படுக்கையில் இருந்து நகர்ந்து அவனது மடியில் தலை வைத்து படுத்து கொண்டாள்... அவளது செயலில் அவனது முகத்தில் சிரிப்பு வந்தது... அவளது தலையைக் கோதி கொடுத்தவன்,

"சந்து குட்டி... என்ன பண்ணுதுடா...?"

"என்னன்னு தெரியலை அத்தான்... எழுந்திரிக்க முடியலை... தலை எல்லாம் சுத்தது... வாமிட் வர்ற மாதிரி இருக்கு..." என்ற சந்தியாவைக் கண்டு அவனது கண்கள் மின்னியது...

குனிந்து அவளது வயிற்றில் முத்தமிட்டவன், "குட்டி சந்தியா வர போறாங்களா இருக்கும்..." என்றவனது வார்த்தையில் அத்தனை மகிழ்ச்சி...

"ஏன் குட்டி ஹரியா இருக்கக் கூடாதா...?" என்று அவனிடம் சண்டை போட்டபடி எழுந்து அமர்ந்தவளுக்கு அப்போது தான் கணவன் கூறிய விசயம் புரிந்தது...

"அத்தான்... அதுவாக இருக்குமோ...?"

"அதே தான்... இதில் உனக்குச் சந்தேகம் வேறா..." என்று கூறியபடி அவளை அவன் அணைத்துக் கொண்டான்...

அவனது நெஞ்சில் சுகமாய்ச் சாய்ந்தவள் மனதில் மட்டற்ற மகிழ்ச்சி பொங்கியது... சில மாதங்களாக வராத இயற்கை கூட அதை உறுதி செய்ததில் அவள் மிகுந்த சந்தோசமானாள்... பின்னே மூன்று ஆண்டுகள் கழித்து இப்போது தான் முதன்முறையாக அவள் கர்ப்பம் தரித்து இருக்கிறாள்...

"ரொம்பச் சந்தோசமா இருக்கு அத்தான்..."

"எனக்கும் தான்டா..." என்றவன்,

"ஈவினிங் வந்து ஹாஸ்பிட்டல் கூட்டிட்டுப் போகிறேன்... இப்போ வேலை இருக்குடா குட்டி..."

"ம் சரி..." என்றபடி படுக்கையை விட்டு எழுந்தாள்...

"எங்கே போகிற...? கொஞ்சம் நேரம் படு..." என்று அவளை அவன் தடுத்து நிறுத்தினான்...

"உங்களுக்குச் சாப்பிட ஏதாவது செய்ய வேண்டாமா...?"

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம்... நீ ரெஸ்ட் எடு..."

"நீங்க வெளியிலும் சாப்பிட மாட்டீங்க... காபி போட்டு, தோசை ஊத்த எவ்வளவு நேரமாகப் போகுது..." என்றபடி அவள் அறையை விட்டு வெளியேறினாள்...

ஆரம்பத்தில் அவன் கண்ட சோம்பேறி சந்தியாவா இது என்று ஆச்சிரியப்படும் அளவிற்கு அவளிடத்தில் மாற்றம் காணப்பட்டது... திருமணத்திற்குப் பின் அவள் பெரிதும் மாறியிருந்தாள்... திருமணம் என்றதும் அவனுள் அவனையும் அறியாது சங்கமித்ராவின் நினைவு எழுந்தது...

இன்னமும் அவள் திருமணம் செய்யாமல் இருப்பது குறித்து அவனுக்கு வருத்தமாக இருந்தது... முன்பு அவனுக்குமே அவள் மீது ஈர்ப்பு இருக்கத்தான் செய்தது... முதன்முதலில் தன்னிடம் வந்து காதலை சொன்ன பெண் என்கிற ரீதியில் சிறு ஈர்ப்பு இருந்தது நிஜமே...

ஆனால் அதற்காக அவளைப் போல் அவள் தான் வேண்டும் என்று அவன் பிடிவாதம் பிடிக்கவில்லை... அவனது அன்னை சந்தியாவின் கழுத்தில் தாலி கட்ட சொன்ன போது மறுத்து பேசாது அவளது கழுத்தில் தாலியை கட்டி அவளைத் தனது மனைவியாக்கி கொண்டான்... அந்தக் கணம் அவன் சங்கமித்ராவை நினைக்கக் கூட இல்லை... இதோ இப்போதும் அவளை நினைத்து வருத்தம்

இருக்கிறது... ஆனால் அதில் காதல் கடுகளவு கூடக் கிடையாது...

அவனது அத்தனை காதலுக்கும் சொந்தக்காரி அவனது மனைவி சந்தியா மட்டும் தான்... அவள் அவனை இந்தளவிற்குக் காதலிப்பாள் என்று அவன் கனவிலும் நினைத்துப் பார்த்தது இல்லை...

திருமணம் முடிந்து அவளை அங்கு விட்டு விட்டு அவன் மட்டும் இங்கு வந்து விட்டான்... அங்கே இருந்த கொஞ்ச நாட்களில் அவனுக்கு ஏற்ற மனைவியாகத் தன்னை மாற்றிக் கொண்டவள் அவனுடன் தனியே இங்கு வந்த போது ஹரிப்ரசாத்தின் மனைவியாய் முழமையாய் வாழ பழகி கொண்டாள்...

வீட்டை பராமரிப்பது, சமைப்பது என்று தேர்ந்த குடும்பத் தலைவியாய் மாறியவளை கண்டு அவனுக்கு இன்னமும் பிடித்துப் போனது... முதலிலேயே அவளை அவனுக்குப் பிடிக்கும் தான்... அந்தப் பிடித்தம் என்பது வேறு... இப்போது காதல் மனைவியாய் அவளை மிகவும் பிடித்துப் போனது...

அன்று ஆரம்பித்த நேசம் இதோ இந்த நொடி வரை குறையாது இன்னமும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது...

அலுவலகத்திற்குக் கிளம்பிய ஹரிப்ரசாத் போகும் முன் அவளிடம், "இப்பவே ஊருக்கு ஃபோன் போட்டு சொல்ல வேண்டாம்... ஈவினிங் கன்ஃபார்ம் ஆனதுக்கு அப்புறம் சொல்லலாம்..." என்க...

"சரி..." என்றவள் அவனை வழியனுப்பி விட்டு வீட்டினுள் வந்தாள்...

தனது வயிற்றினைத் தடவி பார்த்தவளுக்கு அவளையும் அறியாது அவளது அன்னையின் ஞாபகம்... அவர் எங்கே இருக்கிறாரோ... அவளுக்குத் தெரியாது... உயிரோடு இருக்கிறாரா என்று கூட அவளுக்குத் தெரியாது...

அன்று சரவணன் செய்து வைத்த காரியத்தால் மார்த்தாண்டத்தால் அவமானப்படுத்தப்பட்டு வீட்டை விட்டு வெளியேறியவர் எங்கே சென்றார் என்று அவளுக்குத் தெரியவில்லை... எத்தனை தவறுகள் செய்த போதும் அவர் அவளது அன்னை அல்லவா... அந்தப் பாசம் இன்னமும் அவள் மனதில் இருக்கிறது... ஹரிப்ரசாத்திற்கு அவரைப் பிடிக்காததால் அவரைப் பற்றி அவனிடத்தில் பேச மாட்டாள்... ஆனால் அவரைக் காண வேண்டும் என்று அவளது மனதிற்குள் ஏக்கமாக இருந்தது...

மூன்று வருடங்களாக வராதவர் இனி எங்கே வர போகிறார்...? என்று தனது மனதினை தேற்றி கொண்டாள் அவள்...

வரவேற்பறையில் இருந்த அவர்களது திருமணப் புகைப்படத்தைப் பார்த்தும் அவளது நினைவு கணவனிடம் சென்றது... எதிர்பாராத திருமணம் தான் என்றாலும் அவர்களிடையே தினம் வளர்பிறையாய் வளரும் காதல் உண்மையே...

கணவனது காதலில் அவளது முகத்தில் அழையா விருந்தாளியாய் வெட்கச் சிவப்பு எட்டிப்பார்த்தது...

****

மதிய பொழுதாகியும் மாவட்ட ஆட்சியர் பிரகதீஸ்வரியை அழைக்கும் வழியைக் காணோம்... அவள் என்றில்லை... ஏராளமானோர் அங்குக் காத்திருந்தனர்...

ஆட்சியர் என்ன செய்கிறார் என்று கேட்டால் 'மீட்டிங்கில் இருக்கிறார்', 'ஃபோன் பேசுகிறார்' ஃபைல் பார்க்கிறார்' இப்படி அலைக்கழிப்பான பதில்கள் தான் வந்தது... பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு அவள் அங்கு அமர்ந்திருந்தாள்...

அந்நேரம் சித்தார்த் அங்கு வந்தான்... அவளைப் போன்று எந்தக் கட்டுப்பாடும் அவனுக்கு இல்லை போலும்... அவளைக் கடந்து அலுவலகத்திற்குள் நுழைந்தவன் நேரே

ஆட்சியர் அறைக் கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றான்...

"வாடா பிசினஸ் மேக்னெட்... திருநெல்வேலி பக்கம் நீ மையம் கொண்டு விட்டதாக நான் கேள்விப்பட்டேன்..." என்றபடி அட்டகாசமான சிரிப்புடன் சித்தார்த்தை வரவேற்றான் அவனது நண்பனும், ஆட்சியருமான வரதன்...

"இங்கே இருக்கும் ஒன்று இந்த மேக்னெட்டை ஈர்க்கிறதே... அதனால் தான் இங்கேயே மையம் கொண்டு இருக்கிறேன்..." கண்சிமிட்டி சிரித்த சித்தார்த்தை கண்டு வரதனுக்கும் சிரிப்பு வந்தது...

சிறிது நேரம் அவனுடன் தொழில் ரீதியாய் பேசி கொண்டிருந்த சித்தார்த் விடைப்பெற்றுச் செல்லும் முன், "என் மனைவியை ஏன்டா இவ்வளவு நேரம் காத்திருக்க வச்சியிருக்க...?"

"உன் மனைவியா...? எங்கே...?" பதறிக் கொண்டு எழுந்தான் வரதன்...

"உட்கார்டா..."

வரதன் அமர்ந்ததும் சித்தார்த், "கையில் பெட்டிசனோடு உன்னைப் பார்க்க வந்திருக்கிறாள்... வந்து ரொம்ப நேரமாகி இருக்கும் என்று நினைக்கிறேன்..." என்றவனது மனதில் அவளது களைத்த தோற்றம் தோன்றியது...

"உன் மனைவின்னு சொல்லியிருந்தால் நான் முதலிலேயே சந்தித்து இருப்பேனேடா..."

"என் மீது பெட்டிசன் போட வந்திருப்பவள் எப்படி என்னை அவளது கணவன் என்று சொல்வாள்...?" என்று ஒற்றைப் புருவத்தைத் தூக்கியபடி புதிராய் சொன்னவனைத் திகைப்பாய் பார்த்தான் வரதன்...

"கணவன் மீது பெட்டிசனா...? உங்களுக்குள் ஏதேனும் பிரச்சினையா சித்து...?"

அதற்குப் பதிலளிக்க விரும்பாதவனாய் நண்பனை பார்த்த சித்தார்த்,

"என்னை ஒன்று ஈர்க்கிறது என்று சொன்னேனே... அந்த ஒன்று இவள் தான்... இந்தக் காந்தத்தை ஈர்க்கும் இரும்பு பாவையவள்..." என்றான் புன்சிரிப்புடன்...

அதைச் சொல்லும் போது சித்தார்த்தின் வார்த்தையில் மட்டுமல்லாது விழிகளிலும் அத்தனை காதல் வழிந்தது...!!!

"பாலைவன பூமியாய் நான்...
மழை மேகமாய் நீ...
உயிரற்ற இதயமாய் நான்...
உயிர் துடிப்பாய் நீ...
உயிர் மீட்க வருவாயோ...?
என்னுயிர் காப்பாயோ...?
உன்னைக் காணாது
ஏங்கும் விழிகள்...
உன்னை நினைத்து
ஏங்கும் நெஞ்சம்...
ஏக்கம் தீர, ஆசை தீர
என்னை ஆட்கொள்ள வா...
எந்தன் ரதி பேபி...!!!"

நனவாகும்...!!!

"ஞாபகப் பறவை ஓடுகள் உடைந்து
வெளியே தாவிப் பறக்கிறதே
நீயும் நானும் ஒன்றாய்த் திரிந்த
நாட்கள் நெஞ்சில் மிதக்கிறதே"

தன்னவளின் வருகையைக் கணித்து ஆட்சியர் வரதனின் அலுவலக அறையில் இருந்து வெளியில் வந்தான் சித்தார்த்... அந்த நீண்ட வராந்தாவின் மறுகோடியில் நடந்து வந்து கொண்டிருந்த பிரகதீஸ்வரியை கண்டதும் அவனது கண்களில் மின்னல் வந்தது... எப்போதுமே வேகமாய் நடந்து பழகியவனின் நடை இன்று மனைவிக்காகச் சற்று நிதானத்தைக் கடைப்பிடித்தது...

அவனது விழிகள் அவளைத் தலையில் இருந்து கால் வரை அணு அணுவாய் ரசித்துப் பார்த்தது... அவளது பதின் வயதிலேயே அவள் மீது பைத்தியமாகி காதல் கொண்டவன் அவன்... இதோ இப்போது இருபத்தியொரு வயது இளம் மங்கையாய் வனப்பு மிகுந்து இருந்தவளை கண்டு பித்தானது அவனது மனம்...

வான் நிற சாதாரணப் பருத்தி சேலையில் கழுத்திலும், காதிலும் செயற்கை அணிகலன்களும், கைகளில் கண்ணாடி வளையல்கள் அணிந்து அந்த எளிமையிலும் இனிமையாய் அவனது உள்ளத்தை நிறைத்தாள் அவனவள்...

அவனைப் போன்று தான் பிரகதீஸ்வரியின் நிலைமையும் இருந்தது... அவள் சித்தார்த்தை இங்கே சற்றும் எதிர்பார்க்க வில்லை... அவனை எதிர்பார்த்து வந்திருந்தால் அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டிருப்பாள்... திடுமென அவனைக் கண்டதும் அவளது காதல் மனம் நிலைக்குலைந்து போனது...

முன்பே கணவன் அழகன் தான்... இப்போது வயது ஏற ஏற இன்னும் பேரழகனாய் மாறியிருந்தான்... ஆணுக்கு வயது அதிகரித்தால் தான் அழகு கூடும் போலும்... வெள்ளை

முழுக்கை சட்டையை லேசாக மடித்து விட்டு, கருப்பு நிற பேண்ட் அணிந்து கம்பீரமாய் நடந்து வந்தவனின் நடையில் இவளது இதயம் வேகமாய் அதிர்ந்தது...

அவனது அகன்ற நெஞ்சத்தைப் பார்க்கும் போது தனது அத்தனை கொள்கைகளையும் உதறி விட்டு அவனது நெஞ்சில் முகம் புதைத்து மனம் பாரம் குறையும் மட்டும் அழ வேண்டும் போல் அவளது மனம் துடித்தது...

எத்தனை நாள் அவள் அவனது நெஞ்சில் தஞ்சமடைந்து இருந்திருப்பாள்... அப்போது எல்லாம் அவனது வலிய நீண்ட கைகள் அவளை ஆறுதலாய் அணைத்திருக்கும்... அந்த நேரம் கணவன் பேசிய ஆறுதல் வார்த்தைகளும், அவனது ஆதரவான செய்கைகளும் இப்போது அவளது நினைவில் எழுந்து கண்களைக் கலங்க செய்தது...

அத்தனை அன்பும் எந்தப் புள்ளியில் பொய்த்துப் போனது என்று அவளுக்குத் தெரியவில்லை... அவனே பொய்த்து போன பின்பு அவனது அன்பு பொய்த்து போகாதா என்ன? என்று விரக்தி எழுந்தது அவளுள்...

கானல் நீராய் மாறி போன கணவனது காதலுக்கு ஏங்கி தவித்தது அவளது பாலைவன நெஞ்சம்...

என்ன நிதானமாய் நடந்து வந்த போதும் எதிர் எதிர் துருவங்கள் இரண்டும் அருகருகே வந்து விட்டது... ஒன்றை ஒன்று ஈர்த்து நின்றது...

சித்தார்த்தை எப்போதும் மயக்கும் அவளது நாசியில் சுடர் விடும் சிவப்புக்கல் மூக்குத்தி இன்றும் அவனை மயக்கி 'என்னை முத்தமிட வா வா...' என்று அவனை அழைத்தது... விட்டால் அந்த இடத்திலேயே அவளை அணைத்து... அதற்கு மேல் கட்டுக்கடங்காமல் பறந்த மனக்குதிரையைக் கடிவாளமிட்டு தடுத்தவன் தனது கைகளைப் பேண்ட் பாக்கெட்டில் விட்டபடி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவளைக் கடந்து சென்றான்...

'என்ன இருந்தாலும் அவர் உன் கணவன் தானே... உன் ஈகோவை உதறி தள்ளிவிட்டு அவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழு... அவர் உன்னை வேண்டாம் என்று உதறி தள்ளி விடுவாரா என்ன...? உனக்கு அவர் வேண்டுமல்லவா... போ போய் அவரது காலடியில் விழு... அவர் உன்னை ஏற்றுக் கொள்வார்...'

அவளது காதல் கொண்ட மனம் அவளிடத்தில் கதறியது... ஆனால் கொண்ட கொள்கைகள் கணவன் வேண்டாம் என்றே அவனைத் தூக்கி எறிந்தது... அதனால் அவனைக் கண்டு கொள்ளாது அவள் கடந்து சென்றாள்...

அவளிடம் இருந்து வரும் அவளுக்கு மட்டுமே உரித்தான பிரத்யேக நறுமணத்தில் சித்தார்த் ஒரு நொடி தடுமாறி தான் போனான்... அது போல் தான் அவளும்... அவனிடம் கமழும் பிரத்யேக நறுமணம் அவனது அருகாமையை ஞாபகப்படுத்தியதில் பேதையவளும் நிலைத்தடுமாறி போனாள்...

மனம் நிறையக் காதல் இருந்த போதும் பயணிக்கும் பாதை வேறு வேறு என்பதால் இருவரும் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவரவர் பாதையில் தனித்தனியே பிரிந்து சென்றனர்...

சித்தார்த் காரில் ஊரை நோக்கி சென்று கொண்டிருக்கும் போது அவனது அலைப்பேசி அழைத்தது... வரதன் தான் அழைத்திருந்தான்... மனைவியவள் வெற்றிகரமாகத் தன் மீது புகார் கொடுத்து விட்டு சென்று விட்டாள் என்பதை உணர்ந்தவன் முகத்தில் புன்னகை தவழ்ந்தது...

அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தவன் அதே புன்னகையுடன், "என்னடா... என்னருமை பொண்டாட்டி என் மீது நீண்ட புகார் கொடுத்து இருக்கிறாளா...?" என்று கேட்க...

"ஆமாம்டா... எப்படிடா உன்னால் இப்படிச் சிரிச்சிக்கிட்டே இதைக் கேட்க முடியுது...?" என்று வியந்தான் வரதன்...

"அது எல்லாம் அப்படித்தான்... அதில் இருப்பதை நீ சொல்லு..."

"பழங்காலப் பொக்கிசத்தை அழித்துக் கிரானைட் கற்களாக மாற்றி விற்பனை செய்கிறாயாம்... ஆற்று நீரின் பாதையை மாற்றி அமைத்ததோடு மட்டும் இல்லாது அதை உறிஞ்சி பாட்டிலில் அடைத்து 'மினரல் வாட்டராக' அதிக விற்பனைக்கு விற்கிறாயாம்..."

"ம்... மேலே சொல்..." என்று சித்தார்த் புன்னகையுடன் வரதனை ஊக்குவித்தான்...

"வயல்வெளி, விளைநிலங்களை அழித்துப் பேக்டரி, குடியிருப்புகள் கட்டுகிறாயாம்... பனை மரங்களை எல்லாம் வெட்டி விட்டு அங்கிருக்கும் மணல்களைக் கொள்ளை அடிக்கிறியாம்... மொத்தத்தில் இயற்கை வளங்களை நீ நாசம் செய்கிறாய் என்று உன் மீது கம்ப்ளையிண்ட் கொடுத்து இருக்காங்க..."

அதைக் கேட்டு சித்தார்த் வாய் விட்டு சிரித்தவன், "எல்லாமே முறைப்படி அனுமதி வாங்கிச் சட்டப்படி தான் நான் செய்கிறேன்... எல்லாவற்றிற்கும் பக்காவாக ஃபைல் இருக்கிறது... இதில் எங்கே இருந்து என் மீது நீ நடவடிக்கை எடுக்கப் போகிறாய்...?"

மாவட்ட ஆட்சியரை பார்த்து அவன் சவாலாய் கேட்டான்...

"எல்லாமே முறைப்படி இருக்கலாம் சித்து... ஆனால் உனக்கு எதிராக ஒரு சின்ன ஆதாரம் கிடைத்தாலும் கூட உன் மீது நடவடிக்கை எடுத்துருவாங்க... ஏன் அது நானாகக் கூட இருக்கலாம்... பதவி வேறு... நட்பு வேறு சித்து..."

"எஸ் வரதா... ஐ நோ இட்... ஆனா என் மீது அப்படி நீ நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் அடுத்த நொடி நீ வேறு ஊருக்கு மாற்றிப் போயிருப்பாய்..." என்று சித்தார்த் அசராது வரதனை அசரடித்தான்...

"அடேய் நான் ஒரு கலெக்டர்டா... என் கிட்டேயே இப்படிப் பேசி வைக்கிறியே..."

"யாராக இருந்தாலும் இந்தச் சித்தார்த் இப்படித்தான்... நட்பாகக் கை குலுக்கினால் நட்பு பாராட்டுவேன்... என்னை வெட்ட நினைத்தால் எதிராளியை வேரோடு வெட்டி சாய்க்காது ஓய மாட்டேன்..." என்றவனது குரலில் கடுமை ஏறியிருந்தது...

"புரியுது சித்து... ஆனாலும் இது உண்மையாக இருக்கும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்..."

"அப்படி ஒன்று நடக்கும் போது பார்த்து கொள்ளலாம்..." என்று கொஞ்சமும் தழைந்து போகாது திமிராய் பேசியபடி அலைப்பேசியை அணைத்தான் சித்தார்த்...

அவனது கைகள் காரை ஓட்டிய போதும் மனதில் மனைவியவளின் நினைவுகளே... அடுத்தவர் இது போல் அவனை எதிர்த்து இருந்தால் அவனின் நடவடிக்கையே வேறு... ஏனோ மனைவியிடத்தில் அவனால் அது போல் நடந்து கொள்ள முடியவில்லை...

ஒருவேளை அவள் அகிம்சையாய் போராடுவதால் விட்டு பிடிக்கிறானா...? அது அவனுக்கே தெரியவில்லை... போராடி தோற்று இறுதியில் அவள் ஆயுதத்தைக் கையில் எடுத்தால் அவனின் எதிர் வினை எப்படிப்பட்டதாக இருக்கும்... மற்ற எதிரிகளுக்குக் காட்டுவது போல் மரணப் பயத்தை அவளது கண்களில் காட்டுவானா...? அவளுக்கு மரணத்தைப் பரிசாக அளிப்பானா...?

அதை நினைத்த நொடி அதிர்ச்சியில் அவனது கார் சாலையின் மத்தியில் கிறீச்சிட்டு நின்றது... நல்லவேளையாக அந்தச் சாலையில் அவ்வளவாக ஆட்கள் நடமாட்டம் இல்லை... அதிர்ந்த மனதினை அடக்கி கொண்டு காரை கிளப்பியவன் இடது கையால் காரை ஓட்டியபடி, வலது கை முழங்கையை ஜன்னலில் வைத்தபடி விரல்களால் அவஸ்தையாய் தனது தலையைக் கோதி கொண்டான்...

மற்ற எதிரியும் மனைவியும் ஒன்றா... மற்றவர்களுக்குக் கொடுக்கும் மரணத் தண்டனையை அவளுக்குக்

கொடுக்கும் அளவுக்கு அவன் கொடூர மனம் படைத்தவன் அல்ல... மாறாகக் காதல் மனம் கொண்டவன்... அப்படி ஒரு நாள் அவனது வாழ்நாளில் வந்தால் 'என்னைக் கொன்று விடு' என்று நிராயுதபாணியாய் அவள் முன் மண்டியிடுவான் அவன்...

இப்படி உயிர் போகும் அவஸ்தையோடு வாழ்வதை விட இறப்பது மேல் என்றே அவனுக்குத் தோன்றியது... அவனுக்கு நன்கு தெரியும்... அவனைக் கொன்று விட்டு அவள் மட்டும் நிம்மதியாய் இருந்து விட மாட்டாள் என்று... அடுத்தக் கணம் அவனுக்காக அவள் உயிர் துறப்பாள் என்று அவனுக்கு நிச்சயமாகத் தெரியும்... ஏனெனில் அவன் மீதான அவளது அளவற்ற காதல் அவனுக்கு நன்றாகத் தெரியும்...

பூலோகத்தில் வாழ கிடைக்காத காதல் வாழ்க்கையைச் சொர்க்கத்தில் போய் அவளுடன் வாழ்ந்து கொள்ளலாம் என்றே அவனுக்குத் தோன்றியது... இந்த மூன்று ஆண்டுகளில் அந்தளவிற்கு அவன் வாழ்க்கை வெறுத்துப் போயிருந்தான்...

இத்தனை அவஸ்தைப் படுவதற்கு அவன் அவளிடத்தில் சரணடைந்து விடலாமே... அதற்கு அவனது ஈகோ தடுத்தது...

'என்னை வேண்டாம் என்று தூக்கி எறிந்து விட்டுச் சென்றவளிடம் நானாகச் செல்ல மாட்டேன்... அவளாகத் தான் என்னைத் தேடி வர வேண்டும்... என் காதலை உணர்ந்து வர வேண்டும்... இந்த உலகில் யாரும் நிரந்தரம் இல்லை... இந்தச் சித்தார்த் மட்டுமே அவளது நிரந்தரம் என்று அவள் புரிந்து வர வேண்டும்... அது வரை எனது இந்தப் போராட்டம் தொடரும்...' என்று அவனது ஒரு மனம் கோபமாக நினைத்தது...

'அவள் என்னைத் தேடி வருவாளா...?' என்று அவனது இன்னொரு மனது தன்னவளுக்காகத் தவித்து ஏங்கியது... முதன்முதலில் அவனுள் காதலையும், காமத்தையும் ஒருங்கே தோற்றுவித்த பெண் அவள் அல்லவா... அந்தப்

பெண்ணவளை அவனால் மரணிக்கும் தறுவாயிலும் மறக்க முடியாது என்றே அவனுக்குத் தோன்றியது...

ஆண் அவனே காதல் கொண்டு இந்தளவிற்குத் தவிக்கும் போது, பெண்ணவளின் மெல்லிய மனம் எந்தளவிற்குத் தவிக்கும் என்பதினை அவன் உணர்ந்தே இருந்தான்...

'அவள் என்னைத் தேடி வரும் நாள் வெகு தொலைவில் இல்லை...' என்றே அவனுக்குத் தோன்றியது...

"ஐ லவ் யூ ரதி பேபி"

இதுவரை அவளிடத்தில் வாய் விட்டு சொல்லாத காதலை இப்போது காற்றிடத்தில் அவனது உதடுகள் முணுமுணுத்தது...

****

பார்ப்பதற்குக் கண்ணுக்கு குளிர்ச்சியான அழகான மலை கிராமம்... பார்ப்பதற்கு மட்டுமே அது மிகவும் அழகு... ஆனால் எல்லாவற்றிலும் அது மிகவும் பின்தங்கிய கிராமம்...

அங்கிருந்த சிறிய ஓட்டு வீட்டின் திண்ணையில் அமர்ந்து இருந்த சங்கமித்ரா அந்த வீட்டில் இருந்த இளம் தாய்க்கு சொட்டு மருந்து மற்றும் தடுப்பூசிகளின் முக்கியத்துவத்தை விளக்கி கொண்டு இருந்தாள்... ஊசி போடுவது சாமி குத்தம் என்று கூறும் மக்களிடம் இந்த ஓராண்டு காலமாக மெது மெதுவே மாற்றத்தை கொண்டு வந்து கொண்டு இருக்கிறாள் அவள்...

அந்த வீட்டின் முன்னிருந்த வேப்ப மரத்தின் மீது சாய்ந்து நின்றபடி அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான் அர்ஜூன்... அவனும் ஒரு மருத்துவன் தான்... இதய நோய் அறுவை சிகிச்சை நிபுணன்... கல்லூரியில் அவளுக்குச் சீனியர்... அவளது தந்தையின் நண்பரின் மகன் வேறு...

பெரிய தொழிலதிபருக்கு இரண்டாவது மகனாய் பிறந்த அர்ஜூனுக்கு ஏனோ குடும்பத் தொழில் மீது

நாட்டமில்லை... அதனால் அவன் தனக்குப் பிடித்த மருத்துவத்தைத் தேர்ந்தெடுத்துப் படித்தான்... அதற்கு அவனது வீட்டாரும் எந்த முட்டுக்கட்டையும் போடவில்லை...

இதோ சங்கமித்ரா பின்பு இத்தனை ஆண்டுகளாகச் சுற்றி வருகிறான்... அதற்கும் அவர்கள் தடை சொல்லவில்லை...

'வயது முப்பத்திரண்டு ஆகிவிட்டது... நீ ஏன் இன்னமும் கல்யாணத்திற்குச் சம்மதம் சொல்ல மாட்டேங்கிறாய்...' என்று அவனைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டது கிடையாது...

அர்ஜூன் எது செய்தாலும் சரியாகத் தான் இருக்கும் என்றே அவனது குடும்பத்தினர் நினைத்தனர்... அந்தளவிற்கு அவன் புத்திசாலி... அதே சமயம் நல்ல குணவானும் கூட...

"போகலாமா அர்ஜூன்...?" என்று அவனிடம் கேட்டபடி சங்கமித்ரா வந்தாள்...

"ம்..." என்றவன் அவளுடன் இணைந்து மௌனமாக நடந்தான்...

தனது மனதில் இருப்பதை எப்படி அவளிடத்தில் சொல்வது என்று ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தான் அவன்... மெல்ல திரும்பி அவளைப் பார்த்தான்... தூரத்தில் எதையோ வெறித்தபடி நடந்து வந்தவளின் முகத்தில் ஏதோ ஒரு சோகம் கவ்வி இருப்பதை அவன் கவலையாய் உணர்ந்தான்...

அழகு, படிப்பு, குணம் என்று எல்லாம் நிறைந்த பெண் சங்கமித்ரா... அவளுக்கு அப்படி என்ன சோகம் இருந்துவிடக் கூடும்... ஒருவேளை காதல் தோல்வியோ...

'ச்சேச்சே... அப்படி எல்லாம் இருக்காது...' என்று அவன் தனது மனதினை சமாதானப்படுத்திக் கொண்டான்... ஏனெனில் அவளைச் சிறு வயதில் இருந்து அவனுக்குத் தெரியும்... அவளது குணம் அதில்லை என்பது...

அங்கிருந்த மேட்டில் முதலில் ஏறியவன் அவள் பிடித்து ஏறுவதற்கு வாகாகத் தனது கையை நீட்டினான்... புன்னகையுடன் அதைப் பற்றியபடி அவள் மேலேறினாள்... அவள் ஏறிய பிறகும் அர்ஜூன் தனது பிடியை தளர்த்தவில்லை... இறுக்கமாய் அவளது கையைப் பிடித்துக் கொண்டான்...

"அர்ஜூன்..." சங்கமித்ரா திகைப்பாய் அவனைப் பார்த்தவள் தனது கையை உருவி கொள்ளப் போராடினாள்...

யாருமில்லா அந்தத் தனிமையில் தனது மனதினை வெளிப்படுத்த நினைத்தவன் அவளது கையை மேலே உயர்த்தி அதில் தனது உதடுகளை அழுந்த பதித்து,

"ஐ லவ் யூ மித்து..." என்றான் காதலாக...

பெண்ணவள் அவனது செயலில், வார்த்தையில் உறைந்து நின்றாள்...

"மித்து... வில் யூ மேரி மீ...?"

அவன் கேட்டதும் தனது உறை நிலையில் இருந்து வெளியில் வந்தவள் அவனைக் கோபமாய் ஏறிட்டாள்... அவளுக்கு வந்த ஆத்திரத்தில் அவனை அடிக்க வேண்டும் போல் தோன்றியது... ஆனால் அவள் அறிந்த அர்ஜூன் இது போல் கிடையாது... அதனால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவள்,

"சாரி அர்ஜூன்... என் இதயம் எனக்குச் சொந்தமானது இல்லை... அது வேறு ஒருத்தருக்கு சொந்தமானது..." என்றவள் அவனைத் திரும்பியும் பாராது செல்ல...

அவள் கூறியதன் அர்த்தம் புரிந்த அர்ஜூனால் இன்னமும் அதை நம்ப முடியவில்லை... அவன் யோசனையாய் அவளைப் பார்த்தபடி நின்றிருந்தான்... இனி என்ன செய்வது என்று அவனுக்குப் பெரும் குழப்பமாய் இருந்தது...

****

பரபரப்பான மும்பை நகரில் இருந்த அந்த நட்சத்திர விடுதி மிகவும் பரபரப்பாக இருந்தது... பிரபலங்கள் பலர் பங்கு பெரும் பேசன் ஷோ அங்கு நடைபெற இருக்கிறது... அதற்கு ஆடை வடிவமைத்துக் கொடுப்பவர் பிரபல பேசன் டிசைனர் ஜாஸ்மின்...

அவரிடம் தான் ஸ்வேதா உதவியாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறாள்... அவளுக்கு இருக்கும் வசதிக்கு அவளே தனித்து இயங்கலாம் தான்... ஆனால் அவள் தான் அது வேண்டாம் என்று தொழில் படிப்பதற்காக ஜாஸ்மினிடம் சேர்ந்து விட்டாள்...

சித்தார்த் இதற்காகப் பெரிய இடத்துச் சிபாரிசை தேடி பிடித்து அவளைச் சேர்த்து விட்டான்... படிப்பு முடிந்த கையோடு அவள் மும்பை வந்து விட்டாள்... இடையில் நடந்த சில வேண்டாத நினைவுகளால் அவள் ஊர் பக்கம் செல்வது இல்லை... பெற்றோராக இருந்தாலும் சரி, சகோதரனாக இருந்தாலும் சரி அவர்கள் தான் மும்பைக்கு வந்து இவளை பார்த்து விட்டு சென்றனர்...

அந்த வேண்டாத நினைவுகளை அவள் மறக்க நினைத்தாலும் அவளால் மறக்க முடியவில்லை... மனதில் ஆத்திரம் இருந்த போதும் அந்த முகத்தை அவளால் மறக்க இயலவில்லை... ஏனென்று விடை தெரியாத கேள்விகள் அவளுள்...

"ஸ்வே... என்ன யோசனை...? இந்த மாடலிங் ஷோ நல்லபடியாக முடியும் வரை நமக்கு எந்த யோசனையும் இருக்கக் கூடாது... நமது முழுக் கவனமும் வேலையில் தான் இருக்க வேண்டும்..." என்ற ஜாஸ்மினின் குரலில் நிகழ்காலம் உறைக்க,

"சாரி மேம்..." என்றவள் தனது வேலையில் கவனமானாள்...

"நோ சாரி பேபி..." என்று அவளது தலையை வாஞ்சையுடன் தடவி கொடுத்தபடி ஜாஸ்மின் நகர்ந்தார்...

அவரிடம் பிடித்த அம்சமே இது தான்... உதவியாளர் தானே என்கிற அலட்சியம் காட்ட மாட்டார்... யாராக இருந்தாலும் அதற்குரிய மரியாதையை அவர் கொடுப்பார்... இந்த மின்மினி பகட்டு உலகில் இப்படி ஒரு ஆள் இருப்பது அதிசயத்திலும் அதிசயம் தான்...

"ஸ்வே... அப்புறம் ஒரு விசயம்... நீ டிசைன் பண்ணின சௌத் இண்டியன் சில்க் சேரியை நீ தான் கட்டிக்கிட்டு மாடலிங் பண்ணணும்..."

"மேம்... நானா...?" என்று அவள் பெரிதும் தயங்கினாள்...

அவள் கண்ணாடி பார்த்து அலங்காரம் செய்து மூன்று வருடங்கள் ஆகிறது... ஏதோ வாழ்கிறாள் என்பது போல் ஒரு தவ வாழ்க்கையை அவள் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்... யாருக்காக இந்தத் தவம் என்று தான் அவளுக்குத் தெரியவில்லை...

"நீயே தான்... உன்னோடு இன்னும் பலர் சேர்ந்து வருவாங்க..." என்று அவளிடம் உரைத்தவர்,

"பாபி... ஸ்வேக்கு சௌத் இண்டியன் ப்ரைடல் போல் மேக்கப் பண்ணி விடு..." என்று அலங்காரம் செய்யும் பெண்ணிடம் சொல்லிவிட்டு அவர் சென்று விட்டார்...

ஜாஸ்மின் பேச்சை தட்ட முடியாதவளாய் தன்னை அலங்காரம் செய்து கொண்டவள் இறுதியில் தன் உருவத்தைக் கண்ணாடி பார்த்த போது அவளால் நம்ப முடியவில்லை... இது தான் தானா என்று... அத்தனை அழகாய் இருந்தாள் அவள்...

அரக்கு நிற பட்டுப்புடவையில் மணப்பெண் போன்று தான் இருப்பதைக் கண்டவளுக்குக் கண்கள் கரித்தது... அலங்காரம் கலைந்து விடக் கூடாதே என்று அவள் கண்ணீரை உள்ளிழுத்து கொண்டாள்...

இறுதி நிகழ்ச்சியாக ஸ்வேதா மேடையேற உடன் இன்னும் சில பெண்கள் வேறு மாநில மணப்பெண் உடையோடு மேடையேறினர்... அதே போல் ஆண்களும் மணமகன்

போன்று உடை அணிந்து மேடைக்கு வந்தனர்... அவரவர் தத்தம் ஜோடியுடன் இணைய அவளது ஜோடியாக வந்து நின்ற தென்னிந்திய மணமகனை ஏறிட்டு பார்த்தவள் ஆயிரம் தேள்கள் ஒரே நேரத்தில் கொட்டியது போல் அதிர்ந்து நின்றாள்...

ஆம், சரவணன் தான் அங்குத் தென்னிந்திய மணமகன் போன்று உடை அணிந்து நின்று கொண்டிருந்தான்... அவன் அணிந்திருந்த உடை அவள் வடிவமைத்த உடை... வேட்டி போலும் இல்லாது, பஞ்சகச்சம் போலும் இல்லாது இரண்டும் கலந்து வடிவமைத்திருந்த கீழுடையும், அடர் அரக்கு நிறத்தில் தேவையான இடத்தில் மட்டும் கற்கள் பதிக்கப்பட்ட பட்டுச்சட்டையும் அணிந்து கம்பீரமாய் நின்றிருந்தவனை வெறுப்புடன் பார்த்தது அவளது விழிகள்...

பாம்பு கூட அழகு தான்... அது போல் தான் இவனும் என்று வெறுப்புடன் அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்... அவளைப் போன்றதொரு வெறுப்பு அவனுக்கு இல்லை போலும்... சற்றும் தயங்காமல் அவளை நோக்கி தனது கையை அவன் நீட்ட, மேடையில் தனது வெறுப்பினை காட்ட இயலாது வேறுவழியின்றித் தனது கரத்தினை அவனை நோக்கி நீட்டினாள்...

சரவணன் அவளது கரத்தினைக் கர்வத்துடன் பற்றியபடி மேடை நுனி வரை நடந்து சென்றவன் இறுதி பகுதி வந்ததும் அவளது இடையில் கரம் கோர்த்து அணைத்துக் கூடியிருந்தவர்களைக் கண்டு புன்னகைக்க... அவனது கரம் அவளது வெற்றிடையில் தவழ்ந்ததில் அவளது மேனியில் கம்பளிபூச்சிகள் ஊர்ந்தது போல் அத்தனை அருவருப்பாக இருந்தது அவளுக்கு... தனியிடமாக இருந்தால் அவளது கரம் அவனது கன்னத்தினைப் பதம் பார்த்து இருக்கும்... இது மேடை என்பதால் அமைதி காத்து செயற்கையாய் சிரித்து வைத்தாள்...

அவளது போலி புன்னகையை விசித்திரமாய்ப் பார்த்து வைத்தான் சரவணன்...

எப்போதடா மேடையை விட்டு இறங்குவோம் என்று காத்திருந்த ஸ்வேதா நிகழ்ச்சி முடிந்ததும் விறுவிறுவென மேடையை விட்டு கீழிறங்கி செல்ல அவளைப் பின்தொடர்ந்து ஓடி வந்தான் சரவணன்...

"ஸ்வேதா... நில்லு..."

அவன் அழைக்கவும் நின்றவள் திரும்பி பார்த்து, "ச்சீ... என் பெயர் சொல்லி கூப்பிடாதே..." என்று ஆத்திரத்துடன் சீறினாள்...

அதைக் கண்டு கொள்ளாது அவன், "எப்படி இருக்க...?"

"நீ பண்ணி வச்ச வேலைக்கு இன்னமும் சாகாம இருக்கேனேன்னு சந்தோசப்படு..." என்று அவள் வெறுப்புடன் கூறினாள்...

"ஏன் இப்படி எல்லாம் பேசுற...?" என்றவனின் குரலில் வேதனை எட்டிப் பார்த்ததோ...

"பின்னே எப்படிப் பேச சொல்ற...?" என்று எரிந்து விழுந்தவளை கண்டு அவன் அமைதியானான்...

"ஆமாம்... நீ எப்படி மாடலிங்கில்...?" என்று அவள் அவனைச் சந்தேகமாய்ப் பார்த்தாள்...

"இந்தத் தொழிலிலும் நேர்மையானவர்கள் இருக்கிறார்கள்... உன் அண்ணனின் பேச்சை கேட்காதவர்களும் இருக்கிறார்கள்..."

"ஓ... நீ நேர்மையானவன் என்கிறாயா...? அப்போ நீ பண்ணிய வேலையும் நேர்மையானதா...?"

அவளது கேள்வி அவனைக் கூர்மையாகத் தாக்கியதில் அவன் மௌனமாக இருந்தான்... அவனின் மௌனமே அவனின் தவறின் அளவை எடுத்துரைக்க அவனை வெறுப்புடன் பார்த்த ஸ்வேதா வேகமாய் அங்கிருந்து வெளியேறினாள்...

அவளைச் சமாதானப்படுத்தும் வழி தெரியாது அவன் விழித்துக் கொண்டு நின்றிருந்தான்...

****

"அத்தை... அல்வா பத்து கிலோ, தேன்குழல் முறுக்கு ஐந்து கிலோவும், தட்டை ஐந்து கிலோ, சீயம், சீடை ஐந்து கிலோ என்று எல்லாத்திலும் அதிகம் கேட்டு இருக்காங்க... நம்மளால செய்ய முடியுமா...?" என்று கவலையுடன் கேட்ட பிரகதீஸ்வரியை தைரியமூட்டும் வகையில் புன்னகை புரிந்த பானுமதி,

"நிச்சயம் நம்மளால முடியும்... கூட மூன்று பேரை வேலைக்கு வச்சுக்குவோம்... ஒரே நாளில் செஞ்சு முடிச்சிரலாம்..."

"ம்... சரி அத்தை..." என்றவளுக்கு அப்போது தான் நிம்மதியாய் இருந்தது...

பிரகதீஸ்வரியின் கைப்பக்குவம் தான் இப்போது அவளது ஜீவனத்திற்கு வழிவகுக்கிறது... ஹரிப்ரசாத் அவளுக்காக எதுவும் செய்யத் தயாராக இருந்த போதும் அவள் அவனிடம் இருந்து எதையும் எதிர்பார்க்கவில்லை... நேர்மையான அவனது சம்பளம் அவனது குடும்பத்திற்கு மட்டுமே போதுமானதாக இருக்கும்... இதில் இடைச்சொருகலாகத் தான் இருப்பதற்கு அவளுக்கு மனம் வரவில்லை...

இப்போது அவளது கைப்பக்குவம் கடல் தாண்டி செல்லும் அளவிற்குப் பிரபலமாகி விட்டது... அத்தோடு திருமண வீடுகளில் சீர் செய்வதற்கும் அவளது பலகாரங்களைக் கேட்டு வாங்கும் அளவுக்கு அவள் பிரபலமடைந்து விட்டாள்... இப்போது பொருளாதார ரீதியாக எந்தவித கஷ்டமும் இல்லை...

ஆனால் மனரீதியாக...? அதை நினைத்தவளுக்கு ஒரு பெருமூச்சு எழுந்தது... இப்படியே பழசை நினைத்து கொண்டிருந்தால் வேலைக்கு ஆகாது என்று நினைத்தவள்,

"அத்தை... நான் ஆத்துக்குப் போய்த் துணியைத் துவைச்சிட்டு வர்றேன்..."

"நீ எதுக்குப் போகிறம்மா...?" பானுமதி அவளைத் தடுக்க...

"கண்ணு... நான் போறேன்... நீ இரு..." என்று சோலையம்மாளும் தடுத்தார்...

"எனக்கும் ஒரே வியர்வையாய் கசகசன்னு இருக்கு... துணியைத் துவைச்சிட்டு அப்படியே குளிச்சிட்டு வர்றேன்..." என்றவள் வாளியில் துணிகளை எடுத்து வைத்துக் கொண்டு அவர்களிடம் விடைப்பெற்று சென்றாள்...

அவள் துணி துவைத்து, குளித்து முடிக்கும் போது அந்தி மாலை பொழுது மெல்ல மங்கி கொண்டிருந்தது... மழை வருவது போல் வானம் இருள ஆரம்பித்தது... அவசரமாய்த் துணிகளை அள்ளி வாளியில் போட்டுக் கொண்டு கரையேறியவள் அப்போது தான் கவனித்தாள் சித்தார்த் அங்குக் காரை நிறுத்தி விட்டு நின்று கொண்டு இருப்பதை...

'இப்போது தான் வந்தாரா...? இல்லை நான் குளிக்கும் போதே வந்து விட்டாரா...?' என்று நினைத்தவளுக்கு உடல் எல்லாம் கூசி போனது...

அவனைப் பார்த்தபடி கரையேறி வந்தவள் மனதில் அன்றொரு நாள் சித்தார்த் வெள்ளத்தில் இருந்து தன்னைக் காப்பாற்றிய நினைவு எழுந்தது... அன்று அவள் உணர்ந்த காதலும் சேர்த்து... அந்த உண்மையான காதலுக்குச் சற்றும் பொருத்தம் இல்லாதவன் அவன்... அவனிடத்தில் போய்த் தான் ஏன் மயங்கினோம் என்று இன்று அவள் மருகினாள்...

அவனுக்கும் அதே நினைவு தான் போலும்... இரு கைகளைக் கட்டி கொண்டு அவளை இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான்...

அவன் அருகே வந்தவள் அவனைத் தாண்டி எப்படிச் செல்வது என்று தெரியாது விழித்தாள்... அந்தச் சிறிய

பாதையை அவனது கார் ஒரு பக்கம் அடைத்துக் கொண்டிருந்தது என்றால், அவன் மறு பக்கம் நின்று கொண்டிருந்தான்...

அவனைக் கடந்து செல்ல வேண்டுமானால் அவனை உரசி கொண்டு தான் செல்ல வேண்டும்... என்ன செய்வது என்று தெரியாது அவள் முழித்தாள்...

அவளைப் பார்த்து கொண்டிருந்தவன் பார்வை அழுத்தமாய் அவளது கழுத்தினைப் பார்த்தது... அவளது கழுத்தில் கிடந்த மஞ்சள் கயிற்றில் ஊஞ்சலாடிய தாலி அவனுக்கும் அவளுக்குமான உறவை பறை சாற்றியது... அதை மட்டுமா அது பறை சாற்றியது... அது தவழ்ந்த இடத்திற்கான உரிமையும் சேர்த்து அல்லவா அது பறை சாற்றியது...

"ச்சீ... நீங்க இந்தளவுக்குக் கேவலமானவர் என்று நான் நினைக்கவில்லை..." அவனது வெறித்த பார்வையைக் கண்டு அவள் ஆத்திரமாய்ச் சீறினாள்...

அவளது சீறல் கண்டு அவனது உதடுகளில் புன்னகை தவழ்ந்தது...

"நான் நல்லவன்னு எப்போம்மா உன் கிட்ட சொன்னேன்..." அவனது திமிர் கொஞ்சமும் குறையாது அவனது வார்த்தையிலும் எதிரொலித்தது...

"அது தான் உங்க பார்வையைப் பார்த்தாலே தெரிகிறதே..." என்று அவள் சிடுசிடுத்தாள்...

"எனக்குச் சொந்தமானதை நான் பார்ப்பதில் என்ன தவறு இருக்கிறது...?"

அவனது பேச்சில் விதிர்த்து போய் அவள் விழி விரித்து நிற்க, அதைக் கண்டு அவனது புன்னகை இன்னமும் அதிகமானது...

"நான் உன் கழுத்தில் கிடக்கும் தாலியை சொன்னேன்... நீ என்ன நினைச்ச...?" என்றவனது குரலில் விசமம்

வழிந்தது...

அவன் கூறியதும் திகைத்து போனவளாய் குனிந்து பார்த்தவள் அவசரமாய்த் தனது நெஞ்சில் தவழ்ந்த தாலியை எடுத்து சேலை மாராப்பிற்குள் மறைத்து கொண்டாள்... அவள் குனிந்து துணிகளை அள்ளி வாளியில் போட்ட போது தாலி வெளிவந்து இருக்கிறது... அதை அவள் கவனிக்காததில் தான் இத்தனை பிரச்சினையும்...

அவளது செய்கையில் அவனுக்குக் கோபம் வந்தது...

"நீ என்ன தான் மறைத்தாலும் உன் தாலிக்கு நான் தான் சொந்தக்காரன் என்பதை நீ மறந்து விடாதே..."

"அந்தத் தாலிக்கு உண்மையானவராக நீங்க நடந்து கொள்ளவில்லை... அதனால் நீங்க அதைப் பற்றிப் பேசாமல் இருப்பது நல்லது..."

"என்னடி சொன்ன....?"

அவளது முழங்கையைப் பற்றித் தன்னருகே அவன் இழுத்ததில் அவளுக்கு வலியெடுத்தது...

"ஷ்..." மெல்லியதாய் முனங்கியபடி அவள் தனது கையை உருவி கொள்ள முயன்றாள்...

அவனது வலிய இரும்பு பிடியின் முன் அவளது மென்மை எடுபடுமோ...?

வலியை விடக் கணவனது அருகாமை அவளுக்கு மிகவும் கொடியதாக இருந்தது... அவனது அருகாமையில் உருகும் மனதினை அடக்க இயலாது அவள் தவித்தாள்... விழிகளில் நீர் கோர்க்க தன்னைப் பாவமாக ஏறிட்டு பார்த்தவளை கண்டு அவன் தனது பிடியை தளர்த்தினான்...

அவனுக்குத் தெரியும் அவளது விழிநீருக்கான காரணம் எது என்று... அவளைப் போன்றதொரு தகிப்பு அவனுள்ளும் இருக்கிறதே... அதன் தகிப்பை தாங்க முடியாது தான் அவனும் தனது பிடியை தளர்த்தினான்...

வேறுவழியின்றி அவனை உரசி கொண்டு கடந்து சென்றவளை இழுத்து அணைத்துக் கொள்ளச் சொல்லி அடம்பிடித்தது அவனது காதல் நெஞ்சம்... ஆனாலும் ஆண் என்கிற ஈகோ அவனைக் கீழிறங்க செய்யாது தடுத்தது...

அவளுக்குமே அப்படித்தான் இருந்தது... ஆனாலும் இன்னொரு முறை அவனை நம்பி ஏமாற அவள் தயாராக இல்லை...

இருவரது தவிப்பான மனநிலையைப் புரிந்தார் போன்று வானம் அழுததோ... மழை தூவானமாய்த் தூவ ஆரம்பித்தது...

'ஐயோ... வீடு வரை மழையில் நனைந்து செல்வாளே...' என்று கவலையுடன் அவன் அவளைப் பார்த்திருந்தான்...

'ஐயோ... அவருக்கு வீசிங் இருக்கே... இதில் மழையில் நனைந்தால் இன்னமும் நிலைமை மோசமாகுமே...' என்று மனதிற்குள் பரிதவித்தவளாய் அவள் அவனைத் திரும்பி திரும்பி பார்த்தபடி சென்றாள்...

இரு நெஞ்சமும் காதலாய்த் துடித்தது தங்களது இணைக்காக...!!!

"நலம் நாடும் இரு இதயம்...
தன்னலம் நாடும் ஒரு இதயம்...
பொதுநலம் நாடும் மறு இதயம்...
இதயம் இணைக்காகத் துடிக்க...
விழிகள் மோதி கொள்ள...
பார்வைகள் பற்றிக் கொள்ள...
காதல் வெம்மைத் தாளாது
உள்ளங்கள் உருகுவது ஏனோ...?
வலி கொண்ட நெஞ்சங்கள்
வலு பெற நேசம் கொண்டு
வந்தணைப்பது என்றோ..?"

நனவாகும்...!!!

மழையில் நனைந்தபடி ஈரம் சொட்ட சொட்ட வீட்டினுள் நுழைந்த பிரகதீஸ்வரியை கண்டு சோலையம்மாள் பதறியடித்துக் கொண்டு வந்தார்...

"என்ன கண்ணு...? இப்படி மழையில் நனைய தான் ஆத்துக்குக் குளிக்கப் போனியா...? பாரு நீயும் நனைஞ்சு, துவைச்ச துணிகளும் நனைஞ்சு போச்சு..." என்று உரிமையாய் அவளைக் கடிந்து கொண்டே அவள் கையிலிருந்த வாளியை வாங்கினார்...

"ரதிம்மா... இங்கே வா..." என்றபடி கையில் துண்டுடன் அவளை நோக்கி வந்தார் பானுமதி...

"நான் துவட்டிக்கிறேன் அத்தை..."

அவள் துண்டை வாங்க முயன்ற போது அவளைத் தடுத்த பானுமதி துண்டை அவளது தலையில் கட்டி கொண்டை போட்டு விட்டபடி,

"முதல்ல ஈர துணியை மாத்திக்கிட்டு வா..." என்று கூற...

அவள் அங்கிருந்த ஒற்றை அறைக்குள் நுழைந்தாள்... ஈர துணிகளைக் களைந்து வேறு உடையை மாற்றிக் கொண்டு அறையை விட்டு வெளியில் வந்தவளிடம் சூடாய் சுக்கு காபியை நீட்டினார் சோலையம்மாள்...

பானுமதி அவளது ஈர முடியை உலர்த்த ஆரம்பித்தார்... அவளுக்குச் சேவகம் செய்யும் இருவரையும் கண்டு அவளது கண்கள் கரித்தது... ஒரு கதவு மூடினால் இன்னொரு கதவு திறக்கும் என்பது இது தானோ... யாரை மலை போல் நம்பி இருந்தாளோ அவன் பொய்த்துப் போனான்... செய்வதறியாது திகைத்து நின்றவளை அன்போடு அரவணைத்துக் கொண்டார்கள் இவ்விருவரும்...

அந்நேரம் அவளது அலைப்பேசி அழைத்தது... அழைப்பு ஹரிப்ரசாத்திடம் இருந்து என்றதும்,

"அத்தை... அத்தான் பேசுகிறார்..." என்று உற்சாகமாய்க் கத்தியவள் அலைப்பேசியை உயிர்ப்பித்துக் காதில் வைத்தாள்...

மறுமுனையில் கூறிய செய்தி கேட்டு அவளது உற்சாகம் பல மடங்கு அதிகரித்தது...

"அத்தை... நம் வீட்டிற்குச் சீக்கிரமே ஒரு புது வரவு வர போகிறது... குவ்வா, குவ்வா..." என்று சைகை செய்த பிரகதீஸ்வரி அலைப்பேசியை அத்தையிடம் கொடுத்தாள்...

அவரும் தனது சந்தோசத்தை மகன், மருமகளிடம் பகிர்ந்து கொண்டவர் இருவருக்கும் அறிவுரை கூறினார்... அதிலும் கர்ப்பமாய் இருக்கும் சந்தியாவிற்குத் தனியாக அறிவுரை வழங்கினார்...

"ரதிம்மா... சந்தியா உன்னிடம் பேசணுமாம்..."

அலைப்பேசியை வாங்கிக் காதில் வைத்தவள், "சொல்லுங்கக்கா..." என்று சந்தோசமாய்க் கேட்க...

பிரகதீஸ்வரியின் சந்தோசம் கண்டு மறுமுனையில் இருந்த சந்தியா அழுது விட்டாள்...

"அக்கா... என்னாச்சு...? ஏன் அழுறீங்க...?"

"நான் கண் வைத்ததால் தான் உன் வாழ்க்கை இப்படி ஆகிருச்சு பிரகதி... உன் திருமணம் விசயம் கேள்விப்பட்டுப் பொறாமை பட்டு அழுதேன் இல்லையா... அதனால் தான் உனக்கு அழுகை மட்டுமே மிச்சமாகி போயிற்று... எல்லாவற்றிற்கும் நான் தான் காரணம்..." என்று கூறி அழுதவளை ஹரி அணைத்து ஆறுதல் படுத்த...

மறு முனையில் இருந்த பிரகதீஸ்வரி வார்த்தைகளால் அவளை ஆறுதல் படுத்தினாள்...

"என் வாழ்க்கை இப்படியானதில் முழுக்க முழுக்க என்னுடைய தவறு தான் காரணம்... தகுதி இல்லாதவங்க மேல் காதல் வைத்தது என் தவறு... இதில் நீங்க வருத்தப்படுறதுக்கு ஒன்றும் இல்லைக்கா... இந்த மாதிரி

நேரத்தில் நீங்க சந்தோசமாய் இருக்கணும்... இப்படி எதையாவது நினைச்சுக் கவலைப்படக் கூடாது..."

கண்டிப்பாய் கூறிய தங்கையின் வார்த்தையில் சந்தியா கண்களைத் துடைத்து கொண்டாள்... பின் சாதாரணமாகப் பேசிவிட்டு அழைப்பை துண்டித்த பிரகதீஸ்வரி அத்தையிடம்,

"இன்னும் ஒன்பது மாதங்களில் நம் வீட்டில் ஒரு குட்டி பாப்பா வந்துவிடும் இல்லையா அத்தை... குட்டி பாப்பாவை நாமே வளர்க்கலாம் அத்தை... வேணும்ன்னா அக்காவை இன்னொரு குழந்தை பெத்துக் கொள்ளச் சொல்லிக்கலாம்..." என்று உற்சாக மிகுதியில் கூறிக் கொண்டே சென்ற பிரகதீஸ்வரி அத்தையும், சோலையம்மாளும் தன்னையே வைத்த கண் வாங்காது பார்ப்பது கண்டு பேச்சை நிறுத்தி விட்டு 'என்ன' என்பது போல் பார்த்தாள்...

"உன் வாழ்க்கையும் நன்றாக இருந்திருந்தால் இந்நேரம் உனக்கும் ஒரு குழந்தை இருந்திருக்கும்..." என்று பானுமதி கூறியதும் அவளது அத்தனை நேர உற்சாகம் அப்படியே வடிந்தது...

இத்தனை நாளில் அவள் குழந்தையைப் பற்றி எல்லாம் சிந்தித்தது கிடையாது... இவ்வளவு ஏன் கணவனுடன் என்ன மாதிரியான வாழ்க்கை வாழ போகிறோம் என்று கூட அவள் சிந்தித்தது கிடையாது... அவள் நினைத்தது, கனவு கண்டது எல்லாம் தன் மீது அன்பை பொழியும் கணவன், ஆறுதலாய் இருக்கும் கணவன், தனக்கே தனக்கு என்று சொந்தமாய் இருக்கும் ஒருவன் என்று அப்படித்தான் நினைத்தாள்...

ஏனெனில் அப்போது மண வாழ்க்கையைப் பற்றிக் கனவு காணும் வயது அவளுக்கு இல்லை... அதனால் அவளது கனவுகளும் ஒரு வரம்பிற்குள் அடங்கி இருந்தது... ஆனால் இப்போது எல்லாம் அறிந்த வயது... கணவனுடன் காதலோடு வாழ்ந்து அவனது உயிரை வயிற்றில் சுமந்து

அவனைப் போன்று ஒரு மகவை பெற்றெடுக்க வேண்டும் என்று இந்தக் கணம் அவளுள் பெரும் கனவு விரிந்தது...

அவளது இந்தக் கனவு வெறும் கனவு மட்டுமே... அது நனவாவது என்றுமே நடவாத ஒரு காரியம்... அதை நினைத்தவளுக்குப் பெருமூச்சு எழுந்தது... மௌனமாய் அறைக்குச் சென்று விட்டாள்...

ஜன்னல் வழியே மழையை வெறித்துக் கொண்டிருந்தவள் நாசியில் நுழைந்த மண் வாசம் போல் அவளவன் வாசம் அவளது நெஞ்சம் முழுவதும்... இன்று இரு முறை அவனைப் பார்த்ததன் விளைவு அவளது மனம் மிகவும் தடுமாறிப் போயிருந்தது...

அதே சமயம் கணவன் மீது கோபமும் வந்தது... செய்வது எல்லாம் செய்து விட்டு எவ்வளவு தைரியம் இருந்தால் 'உன் தாலிக்கு சொந்தக்காரன் நான் தான்' என்பான்... இதுநாள் வரை அந்தத் தாலிக்கு மதிப்பு கொடுத்து நடந்து கொண்டானா...? இல்லையே... ஏதோ விரோதி போல் அல்லவா அவளை விரக்தியின் விளிம்பு வரை தள்ளி விட்டுக் கொண்டு இருக்கிறான்...

எது எப்படி இருந்த போதும் கட்டிய கணவனை எதிர்த்து அவள் போராடுவாள்... அவளது உடம்பில் உயிர் தங்கி இருக்கும் வரை...

பச்சை பசுமையாய் இருந்த அவளது ஊர் இந்த மூன்று வருடங்களில் கொஞ்சம் கொஞ்சமாகப் பசுமை மறைந்து வறண்டு கொண்டிருக்கிறது... கரை புரண்டு ஓடும் ஆறு சிற்றோடை போல் சிறுத்து போய் விட்டது... மரங்களை அழித்து எங்கும் கான்கிரீட் கட்டிடங்களும், மணல் கொள்ளைகளும் நடைப்பெறுவதால் மண்ணில் இருந்த ஈரப்பதம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து வருகிறது... இப்படியே சென்றால் இன்னும் சில வருடங்களில் அவளது ஊர் பாலைவனமாக மாறி விடும் அபாயம் இருக்கிறது...

அந்த அபாயத்தைக் கொஞ்சமும் உணராது இந்த ஊர் மக்கள் சித்தார்த் அள்ளி அள்ளி கொடுக்கும் பணத்திற்கு

விலை போய்க் கொண்டிருக்கின்றனர்... ஊர் மக்கள் யார் உதவி என்று அவனிடம் கேட்டாலும் மறுக்காது உதவி செய்கிறான், அவர்களுக்குப் பெருமளவு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறான்... அதனால் அவர்களைப் பொருத்தவரையில் அவன் தெய்வமாகப் பார்க்கப்பட்டான்...

கிராமமாக இருந்த அவளது ஊர் இப்போது நகரம் போன்றதொரு வளர்ச்சியை நோக்கி பயணித்துக் கொண்டிருந்தது... பகட்டான செயற்கை வளர்ச்சி முன் இயற்கையைப் பற்றிப் பேசும் பிரகதீஸ்வரி முட்டாளாகி போனாள்...

அதே நேரம் சித்தார்த்தும் திறந்திருந்த ஜன்னல் வழியே மழையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்... யாருமில்லாத தனிமை மிகவும் கொடியதாக இருந்தது... அன்னை அவனிடத்தில் கோபித்துக் கொண்டு சென்னை சென்று விட்டார்... தந்தையோ சொல்லவே வேண்டாம் அவன் மீது அத்தனை கோபத்தில் இருக்கிறார்...

அவனால் தான் ஸ்வேதாவின் வாழ்க்கை பாழாகி விட்டதாய் அவருக்கு ஒரு எண்ணம்... அது தான் உண்மையும் கூட... அதற்காக அந்த மூன்றாம் தர சரவணனும் அவனும் ஒன்றா...? அப்படி ஒப்பிட்டுப் பேசிய தந்தையிடம் அவன் இதுவரை பேசவில்லை... அவ்வளவு கோபம் அவனுக்கு அவர் மீது...

யாருமில்லா இந்தக் கணம் மனைவியின் சிருஷ்டியைகளை வேண்டி அவனது மனம் ஏங்கியது... ஆண் உலகம் முழுவதும் சுற்றி வந்தாலும் வீட்டில் அவனுக்காகக் காதலுடன் காத்திருக்கும் பெண்ணவளின் காதலில் தானே அவனது ஒட்டுமொத்த உலகமும் சுழல்கிறது...

அவனது பெண்ணவள் காதல் எங்கே போனது...? அவன் மீதான அவளது நம்பிக்கை ஏன் பொய்த்து போனது...?

தன்னைப் புரிந்து கொள்ளாமல் சென்றவளை உதறி தள்ளி விட முடியாமல் அவனது மனம் அவளுக்காகத் தவித்துத் துடித்தது...

லேசாக மூச்சிரைக்கவும் ஜன்னலை சாத்தி விட்டுக் கட்டிலில் அமர்ந்தவன் தனது அலைப்பேசியை எடுத்துப் பார்த்தான்... அன்றொரு நாள் குன்றின் மீது நின்றிருந்த பிரகதீஸ்வரியை சூரிய ஒளியின் பின்னணியில் தான் எடுத்த புகைப்படங்களை அவன் எடுத்துப் பார்த்தான்...

கள்ளம் கபடம் இல்லாதிருந்த அவளது மதி முகத்தைப் பார்த்து கொண்டிருந்தவன் நேரம் சென்று கொண்டிருப்பது கூடத் தெரியாது மனைவியவளின் நினைவுகளில் சுகமாய் மூழ்கி போனான்...

பேஷன் ஷோ முடிந்து தனது இருப்பிடத்திற்கு வந்த ஸ்வேதா உணவை கூட மறந்தவளாய் கட்டிலில் போய்த் தொப்பென்று விழுந்தாள்... மென்மையான பஞ்சணை முள்ளாக மாறி அவளை உறுத்தியது... வேண்டாம் என்று இத்தனை நாட்களாய் அவள் ஒதுக்கி வைத்திருந்த நிகழ்வுகள் அவளது மனதில் படையெடுத்தது...

அது போல் தான் சரவணனுக்கும்... ஸ்வேதாவை கண்ணில் கண்ட பின்பு அவளது வெறுப்பான பார்வையில் தான் செய்த காரியம் எவ்வளவு பெரிய தவறு என்று இப்போது அவனுக்குப் புரிந்தது... அன்று மதி கெட்டு போய் அவன் செய்த தவறு இன்று பூதாகரமாக அவன் முன் நின்று அவனது காதலை கேள்விக்குறி ஆக்கியது...

****

மூன்று வருடங்களுக்கு முன் சித்தார்த், பிரகதீஸ்வரி திருமணம் நடந்த அன்று...

பிரகதீஸ்வரி கழுத்தில் சித்தார்த் வலுக்கட்டாயமாகத் தாலி கட்டியது, இதோ இப்போது அவள் வீட்டை விட்டுப் போனது என்று எதையும் எதிர்த்துக் கேள்வி கேட்க முடியாதபடி மூளை மரத்து போய் நின்றிருந்தான் சரவணன்...

இரண்டும் கெட்டான் வயது என்பதால் அவனால் தெளிவாக முடிவு எடுக்க முடியவில்லை... அதிலும் சித்தார்த்தை எதிர்த்து நின்று கேள்வி கேட்கும் பழக்கம்

அவனுக்கு இல்லை... அதனால் நேரே தனது அன்னையிடம் போய் நின்றான்...

"ஏம்மா... பிரகதியை நம்ம வீட்டை விட்டு வெளியில் அனுப்பினீங்க...?"

"இது அவள் வீடில்லை... இது நம் வீடு என்பதால் அவளை வெளியில் அனுப்பினேன்..." என்று அலட்சியமாய்ப் பதில் கூறிய விமலாராணி தனது கைகளில் இருந்த பத்திரங்களை ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தார்...

எத்தனை மதிப்பு மிக்கச் சொத்துக்கள் இவை... எத்தனையோ தலைமுறைகளாய் அள்ளாது குறையாது அப்படியே பல கைகள் கடந்து வந்த சொத்துக்கள்... பாரம்பரியமிக்க அந்தச் சொத்துக்களுக்காகத் தானே அவர் இத்தனை வருடங்களாய்த் தவமிருந்தது...

பணத்தாசை அவரது விழிகளில் மின்னியது...

"அம்மா..." என்று கத்திய சரவணனை பார்த்து,

"எதுக்குடா இப்படிக் கத்துகிறாய்...?"

"ஏன் இப்படிச் செஞ்சீங்க...?"

"ம்... நீ அப்பா என்றழைக்கும் பிரகஸ்பதி எல்லாச் சொத்துக்களையும் பிரகதி பெயரில் எழுதி வைத்து விட்டு செத்து போய் விட்டான்... எல்லாம் அவளுக்கு என்றால் நீயும், சந்தியாவும் நடுத்தெருவில் நிற்க வேண்டுமா...? அதனால் தான் அவனுடைய மகளை நான் நடுத்தெருவில் நிற்க வைத்து விட்டேன்..." என்றார் சிறிதும் இளக்கம் காட்டாது...

"ஏன் பிரகதிக்குக் கொடுத்தால் என்ன...? அப்படியே அவளுக்குக் கொடுத்தாலும் நிச்சயம் அவள் எங்களுக்குக் கொடுக்காமல் இருக்க மாட்டாள்... அவள் மிகவும் நல்லவள்..." என்று தங்கைக்கு ஆதரவாகப் பேசினான் சரவணன்...

"யாருக்கு யாருடா பிச்சை போடுறது... அந்த அநாதை நாய் ஜமீன் வாரிசான நமக்குப் பிச்சை போடணுமா...?" என்று வெகுண்டார் விமலாராணி...

"என்னால் உங்களையோ, சித்து அத்தானையோ எதிர்த்து ஒன்றும் செய்ய முடியாது... ஆனால் பிரகதிக்கு பாதுகாப்பாய் அவள் கூட இருக்க என்னால் முடியும்... நான் அவள் கூடவே போகிறேன்..."

"போனால் போ... 'ஐயோ மகனே போகாதே' என்று நான் கெஞ்சுவேன்னு நீ எதிர்பார்த்தாயா...? போடா போ... அவள் கூடச் சேர்ந்து கஷ்டப்பட்டுப் பார்... அப்போது புரியும் கஷ்டம் என்றால் என்ன என்று..."

விமலராணிக்கு இத்தனை சொத்துக்களின் மதிப்பின் முன் மகனும் துச்சமாகத் தெரிந்தான்...

"போகிறேன்... ஆனால் இனி வர மாட்டேன்..." என்றபடி அறையை விட்டு வெளியில் வந்த சரவணன் வரவேற்பறையைத் தாண்டி செல்லும் போது அலங்கார தேவதையாக நின்று கொண்டிருந்த ஸ்வேதாவை பார்த்தபடி சென்றான்...

அவனது மனதின் ஓரம் ஏதோ ஒரு ஏமாற்றம் கவிழ்ந்தது...

வீட்டின் வாயிலுக்கு அவன் வந்த போது எதிரில் சித்தார்த் வந்து கொண்டிருந்தான்... சரவணன் வீட்டை விட்டு செல்வதைக் கண்டு வியப்பாய் ஒற்றைப் புருவத்தைத் தூக்கியபடி சித்தார்த் அவனைப் பார்த்தான்... அவனோ கோபமாய்ப் பார்த்தபடி சித்தார்த்தை கடந்து சென்றான்...

அவன் செல்வதைக் கண்டு அலட்சியமாய்த் தோளை குலுக்கி கொண்ட சித்தார்த் வீட்டினுள் நுழைந்தான்...

அந்நேரம் வழக்கறிஞர் குருமூர்த்தித் தனது மனைவியுடன் கிளம்ப ஆயத்தமாகி கொண்டிருந்தார்... அவரைக் கண்டதும் சித்தார்த்,

"கொஞ்சம் இருங்க குருமூர்த்திச் சார்... இன்னும் உங்க வேலை முடியலை..." என்றவன் அத்தையின் அறைக்குள் நுழைந்தான்...

நடக்கும் கொடுமைகளைக் கண்டு என்ன செய்வது என்று தெரியாது அமர்ந்து விட்டார் மார்த்தாண்டம்... ஒரு சின்னப் பெண்ணின் கழுத்தில் வம்படியாகத் தாலி கட்டிய மகனது தவறை அவரால் தட்டி கேட்க முடியவில்லை... இதுநாள் வரை அவனை அப்படி எதிர்த்துக் கேள்வி கேட்டது கிடையாது... எதையும் சரியாகச் செய்பவன் அவன்...

அதே போல் தான் அவரது தங்கையும்... நரசிம்மன் எல்லாச் சொத்துக்களையும் எப்படிப் பிரகதீஸ்வரி பெயரில் எழுதலாம் என்று அவருக்கு ஆத்திரமாக வந்தது... அப்படி என்றால் அவரது தங்கை மற்றும் தங்கை பிள்ளைகளின் கதி என்னாவது என்று அவருக்குக் கவலையாக இருந்தது... அதனால் தங்கை சொத்துக்களை எழுதி வாங்கிக் கொண்டது சரியே என்று அவருக்குத் தோன்றியது...

யாரோ ஒரு பெண்ணா...? இல்லை தங்கையா என்று வரும் போது தங்கை பக்கமே அவரது தராசு தட்டுத் தாழ்ந்தது... அந்தப் பெண்ணை ஒன்றும் இல்லாமல் அவர்கள் யாரும் விரட்டி விடப் போவது இல்லையே... இப்போது அவள் சம்மதித்தாலும் கூட அவர்களது மருமகளாய், மகனது மனைவியாய் அவளைத் தங்களுடன் அழைத்துச் செல்ல அவர் தயாராக இருந்தார்... ஆனால் மகனை வேண்டாம் என்று தூக்கி எறிந்து விட்டுப் போனவளிடம் கெஞ்சி அழைப்பதற்கு அவரது மனம் இடம் கொடுக்கவில்லை...

பிரபாவதிக்கு பிரகதீஸ்வரி மீது தான் பெரும் கோபம் வந்தது... அத்தனை பேர் முன்னிலையில் அவரது மகனை அவள் அவமானப்படுத்தியது அவருக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை...

சங்கமித்ரா தவிப்புடன் தனது பெற்றோருடன் அமர்ந்திருந்தாள்... அவளைப் பிரகதீஸ்வரியிடம் பேச கூட அவளது தந்தை அனுமதிக்கவில்லை...

சந்தியாவோ சிறு பிள்ளை போன்று அழுது கொண்டு அமர்ந்திருந்தாள்...

"என்ன அத்தை... சொத்துக்கள் அனைத்தும் உங்க பெயருக்கு மாற்றி எழுதி விட்டீங்க போலிருக்கு..." என்று கேட்டபடி உள்ளே வந்த அண்ணன் மகனை பார்த்ததும் விமலராணியின் முகத்தில் இருந்த புன்னகை மறைந்தது...

"பின்னே உன்னை நம்பினால் எனக்குப் பட்டை நாமம் தான் கிடைக்கும் என்பது எனக்குத் தெரியாதா...? தன் கையே தனக்கு உதவி..." என்று அவர் வில்லி பார்வை பார்த்தார்...

"ம்ஹூம்... நல்ல முடிவு... ஆனால் இந்தச் சொத்துக்கள் யாருக்கு போகணும்ன்னு நீங்க தீர்மானிக்க முடியாது அத்தை... அதை நான் தான் தீர்மானிக்கணும்..." என்றான் அலட்சியமாய், உறுதியாய் அவனும்...

"இப்போது சொத்து என் கைகளில்..." என்றார் அவரும் திமிராய்...

"அப்படியா... இந்தச் சொத்துக்கள் யாருக்கு என்று நான் கூறும் கதையைக் கேட்ட பின்பு நீங்களே முடிவு செய்ங்க..." என்றவனைக் கூர்ந்து பார்த்தார் அவர்...

"அதாவது என் மனைவி பிரகதீஸ்வரியின் பிறப்பின் ரகசிய கதையைச் சொல்ல போகிறேன்..." என்றவனைக் கண்டு அவரது கண்கள் யோசனையாய் இடுங்கியது...

அத்தையம்மாளை இகழ்ச்சியாய் பார்த்தபடி சித்தார்த் கதை கூற ஆரம்பித்தான்... அந்தக் கதையைக் கேட்டதும் விமலாராணியின் முகம் வெளிறிப் போனது...

"இது எப்படி உனக்குத் தெரியும்...? நீ பொய் சொல்கிறாய்... இதை நான் நம்ப மாட்டேன்..." அதிர்ச்சியில் பேச முடியாது அவரது நாக்குச் சதிராடியது...

"இந்தச் சித்தார்த்திற்குத் தெரியாத ரகசியம் இந்த உலகில் உண்டோ..." என்று அகந்தையுடன் முழங்கியவன்,

"இதில் நான் பொய் சொல்வதால் எனக்கு என்ன நன்மை...? இது உண்மை மட்டுமே... உண்மையைத் தவிர வேறில்லை..."

இரு கைகளையும் கட்டியபடி அகம்பாவமாய்க் கூறிய அண்ணன் மகனை கண்டு எச்சில் விழுங்கினார் விமலாராணி...

"இதை என் அப்பாவிடம் நான் கூறினால் அவரது மதிப்பில் இருந்து நீங்க பன்மடங்கு கீழே இறங்கி விடுவீங்க... இப்போ சொல்லுங்க... இதை நான் வெளியில் சொல்ல வேண்டுமா...? இல்லை...?" என்று இழுத்தவனைக் கண்டு அவர் அவசரமாய்,

"வேண்டாம்... வேண்டாம்..." என்று மறுத்தார்...

"அப்போ சொத்துக்களைத் திரும்ப ஒப்படைத்து விடுங்கள்..."

"ம்ஹூம்... அது முடியாது..." என்று அவர் சொத்துப் பத்திரங்களை நெஞ்சோடு அணைத்துக் கொண்டார்...

"அப்போ சரி... இதை வெளியில் சொல்லி விட வேண்டியது தான்..."

"சொன்னால் சொல்லி கொள் சித்து... எனக்கு இந்தச் சொத்துக்கள் போதும்... சொந்தங்கள் யாரும் வேண்டாம்..."

சொத்துக்களா, சொந்தங்களா என்று வரும் போது சொத்துக்கள் தான் அவருக்கு முதன்மையாகத் தெரிந்தது...

"என்னைப் பற்றித் தெரிந்திருந்தும் இப்படிப் பேசுறீங்களே அத்தை... நீங்களா சொத்துக்களைக் கொடுத்தால் உங்களுக்கு ஏதாவது பார்த்துச் செய்யலாம் என்று நினைத்திருந்தேன்... ஆனால் நீங்க இப்படிப் பேசுவதைப் பார்க்கும் போது ஒன்றுமே கொடுக்காது வெறும் கையோடு உங்களை விரட்ட வேண்டும் போலிருக்கிறதே..."

தாடையைத் தடவியபடி அலட்சியமாய் அவரைப் பார்த்து பேசியவனைக் கண்டு அவருக்கு அச்சமாக இருந்தது...

"உங்களை விட மோசமான பல மனிதர்களை நான் தினமும் தொழிலில் சமாளித்து வருகிறேன்... உங்களைச் சமாளிப்பது எனக்குப் பெரியா விசயம் இல்லை..." என்றவன்,

"நீங்களாக நான் சொன்னதைக் கேட்டு செய்தால் உங்களுக்கு நல்லது... இல்லை நரகம் என்றால் என்ன என்பதை உங்கள் கண் முன் நான் காண்பிப்பேன்..."

சித்தார்த்தின் உயரம் பற்றி அவருக்கு நன்கு தெரியும்... அதே சமயம் சொத்துகளை விடவும் அவருக்கு மனம் இல்லை... அவர் ஆசையுடன் தனது கைகளில் இருந்த பத்திரங்களைப் பார்த்தார்...

அதைக் கண்டவன் முகத்தில் கடினமேறியது...

"எனக்கு இந்தச் சொத்துக்கள் எல்லாம் வேண்டும்... அது நீங்களாகக் கொடுத்தால் உங்களுக்குத் தேவையானவற்றை நான் செய்து கொடுப்பேன்... அதே போல் சந்தியாவின் திருமணமும் என் பொறுப்பு... இல்லை என்று மறுத்தால் நாளை விபத்தில் நீங்கள் மரணமடைந்து இருப்பீங்க... அதன் பிறகு உங்க மகன் அந்தக் கோழை சரவணனிடம் இருந்து இந்தச் சொத்துக்களைக் கைப்பற்றுவது எனக்கு மிகவும் எளிது..." என்று கொஞ்சமும் இளக்கம் இல்லாது கூறியவன் அவரைப் பார்த்து,

"என்ன சொல்றீங்க...?" என்று கேட்டான் முடிவாய்...

"இவ்வளவு சொல்லும் நீ என் மகள் சந்தியாவைக் கல்யாணம் பண்ணி கொண்டு இந்தச் சொத்துக்களை எடுத்துக் கொள்ள வேண்டியது தானே..."

"இப்போது தான் எனது கல்யாணம் நடந்து முடிந்திருக்கிறது... அதை மறந்து விட்டு நீங்க பேச வேண்டாம்..."

"உனக்கு அவளை மறக்க முடியவில்லை என்று சொல்..." என்றவரை உணர்வில்லாது பார்த்தவன்,

"அப்படின்னு யார் சொன்னது...? எனக்கு வேண்டியது இந்தச் சொத்துக்கள்... இந்தச் சொத்துக்களுக்காக நான் எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன்..." என்றவனது குரலில் அத்தனை தீவிரம் இருந்தது...

அவனது தீவிரத்தில் அவர் பயந்து தான் போனார்...

"உயிரை விடப் போறீங்களா...? இல்லை..." என்று மிரட்டியவனைக் கண்டு மிரண்டு போனவராய்,

"சொத்துக்களை உன் பெயருக்கு மாற்றி விடுகிறேன்..." என்று அச்சத்துடன் சம்மதித்தவரை வெற்றி சிரிப்புடன் நோக்கினான் அவன்...

அடுத்தச் சில மணி துளிகளில் எல்லாச் சொத்துக்களையும் தனது பெயரில் மாற்றி அமைத்துக் கொண்ட சித்தார்த்தை தடுக்க அவனது தந்தையால் கூட முடியவில்லை...

"என் வழியில் குறுக்கிடாத வரை உங்களுக்கு நல்லது... இல்லை என்றால் மற்றவர்களுக்கு நேர்ந்த கதி தான் உங்களுக்கும் நேரிடும்..." என்று தந்தையையே அவன் எச்சரித்தான்...

அதனால் மார்த்தாண்டம் தங்கையிடம், "நீ கவலைப்படாதே விமலா... இந்தச் சொத்துக்களின் மதிப்பிற்கு ஈடான மதிப்புள்ள சொத்துக்களை உன் அண்ணன் நான் உனக்குக் கொடுக்கிறேன்..." என்று அவரைச் சமாதானம் செய்தார்...

மகன் செய்த தவறை அவர் நேர் செய்ய விரும்பினார்... இரத்த பந்தம் என்றதும் அவரது உயிர் துடித்தது... ஆனால் எந்தப் பந்தமும் இல்லாது அநாதையாய் சென்ற ஆதரவற்ற அந்தச் சிறு பெண்ணை அவர் கொஞ்சமும் நினைத்து பார்க்கவில்லை...

தன்னைத் தேடி சோலையம்மாள் வீட்டிற்கு வந்த சரவணனை கண்டு பிரகதீஸ்வரிக்குச் சந்தோசமாக இருந்த போதும்,

"நீங்க அம்மா கூடப் போய் இருங்கண்ணா..." என்று கூறினாள்...

யாருமற்ற அநாதையாய் நிற்கும் வலி அவளுக்குத் தானே தெரியும்...

"அங்கே போகவே எனக்குப் பிடிக்கலை..." என்றபடி அங்கிருந்த திண்ணையில் அமர்ந்து கொண்டான் அவன்...

"அண்ணா..."

"நீயும் என்னைத் துரத்தி விட்டால் நான் ஊரை விட்டு போவதை தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை..."

அவன் கூறியதும் அமைதி காத்தாள் அவள்...

"அம்மா ஏன் இப்படிப் பண்ணினாங்க பிரகதி...? என்னால் இன்னமும் நம்ப முடியலை..."

சரவணன் கூறியதை கேட்டு விரக்தியுடன் சிரித்துக் கொண்டாள் பிரகதீஸ்வரி... தன்னைக் காலம் முழுவதும் அன்போடு பார்த்து கொள்வான் என்று நம்பியவனே தனக்குத் துரோகம் இழைத்ததை எண்ணி அவளுக்கு அத்தனை வேதனையாக இருந்தது...

"போ போய் அநாதையா நின்னு எனக்கு எதிராய் போராடு... அதுவும் தாலி கட்டிய கணவனுக்கு எதிராகப் போராடும் உன்னை இந்த ஊர் மக்கள் தலையில் தூக்கி வச்சிக்கிட்டு கொண்டாடுவாங்க..."

கணவன் கூறிய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் அவளது காதில் ஒலித்து அவளது வேதனையை அதிகப்படுத்தியது... வாழ்நாள் இறுதி வரை உறவாக இருப்பான் என்று நம்பிக்கை கொண்டவன் வாயில் இருந்து 'அநாதை' என்ற வார்த்தை வந்தது கண்டு அவள் உள்ளுக்குள் நொறுங்கி போனாள்...

விசயம் கேள்விப்பட்ட ஹரியால் உடனே அங்கு வர இயலாது போனது... ஆனாலும் அவனது மனம் பிரகதீஸ்வரிக்காகப் பரிதவித்தது... வேலையைச் சீக்கிரம்

முடித்துக் கொண்டு ஊருக்கு செல்ல வேண்டும் என்று அவன் எண்ணினான்... அவன் எண்ணியதற்கு நேர்மாறாய் அவனது வேலை இழுத்துக் கொண்டே சென்றது...

ஊருக்குச் செல்வதற்கு முன் சங்கமித்ரா யாருக்கும் தெரியாமல் பிரகதீஸ்வரியை கண்டு ஆறுதல் சொல்லி விட்டு சென்றாள்... அவளால் அது மட்டுமே செய்ய முடிந்தது...

ஓயாது அழுது கரையும் தங்கையைக் கண்டு சரவணனுக்கு ஆற்றாமையாக இருந்தது... அதே சமயம் சித்தார்த் மீது பெரும் கோபம் வந்தது... தனது தாயிடம் இருந்து அவன் சொத்துக்களைக் கைப்பற்றி விட்டான் என்று தெரிந்ததும் அந்தக் கோபம் இன்னமும் அதிகரித்தது...

அமைதியாகப் போய்க் கொண்டிருந்த அவர்களது வாழ்க்கையில் புயலாய் சித்தார்த் வந்து அவர்களது குடும்பத்தை நிலைக்குலைய செய்து விட்டான் என்று அவன் மீது ஆத்திரம் வந்தது... சித்தார்த்தை பழிக்கு பழி வாங்கிட எண்ணினான்...

தனது தங்கைக்கு அவன் செய்த துரோகத்தை அவனுக்குத் திருப்பி அளிக்க முடிவு செய்தான் சரவணன்...

சரவணன் ஒரு முடிவுடன் அவர்களது வீட்டிற்குச் சென்றான்... அவனது நல்ல நேரமோ என்னவோ வரவேற்பறையில் ஸ்வேதா மட்டும் தனித்து அமர்ந்து தொலைக்காட்சி பார்த்து கொண்டிருந்தாள்... சித்தார்த் அலுவலகத்திற்குச் சென்றிருந்தான்... மற்றவர்கள் அறையில் இருந்தனர்...

எதிர்பாராது சரவணனை அங்குக் கண்ட ஸ்வேதா முதலில் திகைத்தவள் பின்பு அலட்சியமாய் அவனைக் கண்டு கொள்ளாது தொலைக்காட்சியைப் பார்த்தாள்... அதில் அவனது கோபம் அதிகரிக்க அவளது கையைப் பிடித்து எழுப்பியவன் அவளை இழுத்துக் கொண்டு பூஜையறைக்குச் சென்றான்...

"டேய் என்னை விடுடா..." என்று கத்தியபடி அவனை அடித்தவளை அவன் சிறிதும் கண்டு கொள்ளவில்லை...

பூஜையறை முன் அவளைக் கொண்டு வந்து நிறுத்தியவன் கண்ணிமைக்கும் நேரத்தில் அவளது கழுத்தில் தாலியை கட்டி விட்டான்... தாலி என்றால் பொன்னில் செய்தது அல்ல... வெறும் மஞ்சள் துண்டு கட்டப்பட்ட மஞ்சள் கயிறு...

அதை அதிர்ச்சியுடன் பார்த்த ஸ்வேதா அடுத்த நொடி ஆத்திரத்துடன் அதைக் கழற்றி அவனது முகத்தில் விட்டெறிந்தாள்...

அறையில் இருந்து பெரியவர்கள் வரும் முன் இத்தனையும் நடந்து முடிந்திருந்தது... ஸ்வேதாவின் அலறலில் வீட்டு வேலைக்காரர்களும் அங்குக் குழுமி விட்டனர்...

ஸ்வேதாவின் செயலில் சரவணன் திகைத்து விழித்தான்... விருப்பம் இல்லாது கட்டிய தாலி கயிற்றைச் சுமந்து கொண்டிருக்க ஸ்வேதா என்ன பிரகதீஸ்வரியா...?

"டேய் என்னடா பண்ணி வச்சியிருக்க...?" மார்த்தாண்டம் ஆவேசத்துடன் கேட்டபடி அவன் அருகில் வந்தவர் அவனை அடி பின்னி எடுத்து விட்டார்...

"அம்மா..." என்றபடி ஸ்வேதா பிரபாவதியிடம் ஓடி சென்று அவரது தோளில் சாய்ந்து அழ ஆரம்பித்தாள்...

விமலாராணி மகன் செய்த வேலையைக் கண்டு அதிர்ந்து போய் விட்டார்... அவரது ஒரே ஆதரவு அவரது அண்ணன் மட்டுமே... அந்த உறவுக்கும் பங்கம் வரும் அளவுக்கு இருந்தது அவரது மகனது செயல்...

"அண்ணா... அவனை அடிக்காதீங்க..." இருந்தாலும் பெற்ற மனம் பிள்ளைக்காகத் தவித்தது...

"ச்சீ... போ இங்கிருந்து... உன் மகன் செய்த காரியத்திற்கு அவனைக் கொல்ல வேண்டும்... முதலில் நீயும், உன் மகன், பெண் எல்லோரும் இந்த வீட்டை விட்டு போங்க... இனி என் முகத்தில் முழிக்காதீங்க..."

சிறிதும் தயவுதாட்சண்யம் பார்க்காது கூறிய மார்த்தாண்டம் தங்கையின் முகம் பார்க்காது முகத்தைத் திருப்பிக் கொண்டார்... மகள் என்று வரும் போது தங்கை பாசம் பின்னுக்குப் போய் விட்டது...

"அண்ணா... நீங்களும் இல்லை என்றால் நான் எங்கே போவேன்...? என் சொத்துக்களை எல்லாம் உங்க மகன் மிரட்டி எழுதி வாங்கிக் கொண்டான்..." என்று பரிதாபமாகக் கெஞ்சிய நாத்தனாரை துச்சமாகப் பார்த்த பிரபாவதி,

"தெருவில் போய்ப் பிச்சை எடு... என் மகன் மிரட்டி வாங்கினானா...? இது நல்ல கதையாக இருக்கிறதே... நீ அந்தப் பொண்ணை மிரட்டி எழுதி வாங்கியதை விடவா...?" என்று இகழ்ச்சியாய் கேட்டவர் மகளை அழைத்துக் கொண்டு அறைக்குச் சென்று விட்டார்...

தன்னை அடித்த மார்த்தாண்டத்தைத் தடுத்து நிறுத்திய சரவணன், "இதே செயலை தான் உங்க மகன் என் தங்கைக்குச் செய்திருக்கிறான்..." என்று வெறுப்புடன் கூற...

அதில் அவரது கை தானாக இறங்கியது...

"வாம்மா போகலாம்..." என்று அன்னையை அவன் அழைக்க...

"எங்கேடா...? என் நிம்மதியை குலைத்த உன்னுடன் நான் வர மாட்டேன்..." என்று விமலாராணி கூற...

"சந்தியா நீ என்னுடன் பிரகதி வீட்டிற்கு வருகிறாயா...?"

அண்ணன் அழைத்ததும் சந்தியா அழுது கொண்டே வர மறுத்தாள்...

"நான் அம்மா கூடவே இருக்கிறேன்..."

அதற்கு மேல் அங்கிருக்கப் பிடிக்காது சரவணன் வீட்டிற்குச் சென்று விட்டான்... அவன் வந்த வேலை முடிந்து விட்டது... தன் செயலால் பாதிக்கப்பட்ட பெண்ணைப் பற்றி அவன் கொஞ்சமும் யோசிக்கவில்லை...

விசயம் கேள்விப்பட்ட சித்தார்த் அடுத்தச் சில நிமிடங்களில் சோலையம்மாள் வீட்டிற்கு வந்தான்... அங்கு அமர்ந்திருந்த சரவணனை தெருவுக்கு இழுத்து வந்தவன் தனது ஆவேசம் முழுவதையும் அவனிடம் காட்டினான்...

"நீ என் தங்கைக்குப் பண்ணியதை தான் நான் உன் தங்கைக்குப் பண்ணினேன்... என்னைத் தட்டி கேட்க நீ யார்டா...? அப்படிப் பார்த்தால் இந்த அடிகளை எல்லாம் நான் உன்னைத் திருப்பி அடித்திருக்க வேண்டும்..." என்று அவன் கூறியதை கேட்டு சித்தார்த்தின் கைகள் அடிப்பதை நிறுத்தியது... அவனது கண்கள் அங்குப் பரிதவிப்புடன் நின்றிருந்த பிரகதீஸ்வரியை அழுத்தமாய்ப் பார்த்தது...

அதை விட அழுத்தமாய் அவனது பார்வை அவளது கழுத்தில் இருந்த மஞ்சள் கயிற்றைப் பார்த்தது... அதைக் காண காண அவனுள் துக்கம் பொங்கியது...

சித்தார்த்தின் விழிகள் தன் மனைவியைக் குற்றம் சாட்டியது... அவனது விழி மொழிக்கு அர்த்தம் தெரியாது அவனது மனைவியவள் பரிதாபமாய் விழித்தாள்...!!!

"நம்பிக்கையின்மையாய் நீ...
நம்பிக்கையாய் நான்...
வெறுப்பாய் நீ...
விருப்பாய் நான்...
நம்பிக்கையின்மை என் மீதா...?
என் காதல் மீதா...?
வெறுப்பு உன் மீதா...?
உன் காதல் மீதா...?
இரண்டிற்கும் விடையாக
உன் மீதான என் நேசம்...!!!"

நனவாகும்...!!!

சித்தார்த்திற்கு மனைவியைப் பார்க்க பார்க்க அத்தனை வேதனையாக இருந்தது... அவள் விரும்பாத திருமணம் தான்... ஆனாலும் அவள் அவன் கட்டிய தாலியை கழற்றி அவனது முகத்தில் வீசி எறியவில்லை... அவன் வேண்டாம் என்று புறந்தள்ளிவிட்டு சென்றவளுக்குக் கணவனான அவனைப் புறம் தள்ள விருப்பம் இல்லை... இதற்கு எல்லாம் ஒரே காரணம் அவள் அவன் மீது வைத்த காதல்... அந்தக் காதலை அவனும் உணர்ந்தே இருந்தான்...

'இத்தகைய காதலை என் மீது ஏன் வைத்தாய் பெண்ணே...?' என்று அவன் உள்ளம் மருக நின்றிருந்தான்...

"நான் செய்தது அயோக்கியத்தனம் என்றால், நீ செய்ததும் அயோக்கியத்தனம்... நான் செய்தது துரோகம் என்றால், நீ செய்ததும் துரோகம்... நான் செய்தது பழிவாங்கும் செயல் என்றால், நீ செய்ததும் பழிவாங்கும் செயல் தான்... இத்தனை அநியாயங்களை நீ செய்து விட்டு நீ எப்படி என்னைக் கேள்வி கேட்கலாம்...? அடிக்கலாம்...?"

அவ்வளவு நேரம் அடிவாங்கிய சரவணன் சித்தார்த்தின் அமைதியை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு அவனது சட்டையைப் பிடித்துக் கேள்வி கேட்டான்... சரவணனின் பேச்சில் சித்தார்த் வெகுண்டு விட்டான் வெகுண்டு...

"அதை நீ சொல்லாதே... இதோ இவள் சொல்லட்டும்... நான் செய்தது தவறு என்று..." என்று பிரகதீஸ்வரியை சுட்டி காட்டி கூறியவன் ஆத்திரத்தில் சரவணனை கன்னம் கன்னமாய் அறைந்து தள்ளி விட்டான்...

"ஐயோ... அண்ணாவை அடிக்காதீங்க..." என்று அண்ணனுக்கும், கணவனுக்கும் இடையில் வந்து நின்ற பிரகதீஸ்வரி கணவனைக் கண்டு இறைஞ்சுதலுடன் கை கூப்பி நின்றாள்...

அவளது கெஞ்சல் அந்த முரட்டு காளையை அசைத்து பார்த்ததில் சரவணனை பிடித்திருந்த அவனது கைகள் தானாகத் தளர்ந்தது... அவளது இறைஞ்சுதலை கண் கொண்டு காண சகிக்காதவனாய் சித்தார்த் வேறு புறம் திரும்பி கொண்டான்...

"அண்ணா இது எனக்கும் அவருக்கும் இடையில் உள்ள பிரச்சினை... இதில் நீங்க ஸ்வேதாவை இழுத்தது ரொம்பத் தப்பு... அதுவும் இப்படி வலுக்கட்டாயமாக அவங்க கழுத்தில் தாலி கட்டியது ரொம்ப ரொம்பத் தப்புண்ணா..."

"அதே செயலை தானே இவனும் உனக்குப் பண்ணினான்... அப்போ அது தப்பு இல்லையா...?" என்று சரவணனும் அடங்காது துள்ளினான்...

அண்ணன் கூறியதை கேட்டு உதட்டை கடித்தபடி அமைதியாக ஒரு நொடி இருந்தவள் பின், "அவர் தாலி கட்டினாலும், கட்டலைன்னாலும் என்னோட கணவர் அவர் தான் அண்ணா..."

மனைவியின் வார்த்தைகள் மனதை குளிர்விக்க முகம் மலர அவளைத் திரும்பி பார்த்தான் சித்தார்த்... இது போதும் அவனுக்கு... இந்த வார்த்தைகள் போதும் அவனது வாழ்நாள் முழுவதும்... இதற்காகத் தானே அவனின் ஒவ்வொரு அசைவும் இருக்கிறது...

"ஆனால் ஸ்வேதா அப்படி இல்லையே..." என்றாள் பிரகதீஸ்வரி வருத்தத்துடன்...

"ஆனால் நான்..."

தங்கையிடம் தனது காதலை கூற முடியாது சரவணன் விழித்தான்... ஏனெனில் அவனது செயல் அப்படிப்பட்டது... இப்போது அவன் தனது மனதினை கூறினால் அது கேலி பொருளாகி விடும்... அதனால் அவன் அமைதி காத்தான்...

"முதலில் உன் தங்கை கேட்பதற்குப் பதில் சொல்லுடா... ஏன் பதில் கூற வார்த்தைகள் இல்லையோ...?" என்று

இளக்காரமாய்க் கூறிய சித்தார்த் சரவணனை கண்டு ஆவேசத்துடன்,

"இதற்கான பலனை நீ அனுபவிப்பாய் பார்..." என்று அவனை எச்சரித்தான்...

"நீ என் தங்கைக்குச் செய்தது மட்டும்..."

சரவணன் மேலே பேசும் முன் கை நீட்டி தடுத்தவன், "எனக்கான தண்டனையை நீ முடிவு செய்யக் கூடாது... அதை முடிவு செய்ய வேண்டியது அவள்... நீயில்லை... அப்படி அவள் தண்டனை கொடுக்கும் போது பார்த்துக் கொள்ளலாம்... ஆனால் உன் விசயம் அப்படிக் கிடையாது சரவணன்... நீ செய்த காரியத்திற்கான விளைவுகளை நீ விரைவில் சந்திப்பாய்..." என்று ஆத்திரமாய்க் கர்ஜித்தவன் தனது காரிலேறி சென்று விட்டான்...

சித்தார்த் கூறியதன் அர்த்தம் அடுத்தச் சில நிமிடங்களில் தெரிந்து போனது... காவல்துறையில் அவன் சரவணன் மீது புகார் அளித்திருந்தான்... நல்லவேளையாக அதைக் கேள்விப்பட்ட மார்த்தாண்டம் கைது நடவடிக்கையை உடனடியாகத் தடுத்தவர் தனது மகனிடம்,

"உன்னால் உன் தங்கை வாழ்க்கை பாழானது வரை போதும்... இதற்கு மேல் கோர்ட், கேஸ் என்று அவளது வாழ்க்கையை நாசமாக்க நினைக்காதே... என் மகளுக்கு எப்படிப்பட்ட வாழ்க்கை அமைத்து தரணும்னு எனக்குத் தெரியும்..." என்று கோபமாய் மகனை சாடியவர் மகளை அழைத்துக் கொண்டு சென்னைக்குச் சென்று விட்டார்...

அதைக் கேள்விப்பட்ட சரவணனுக்கு வருத்தமாக இருந்தது... அவனது செயலுக்கு என்ன மாதிரியான எதிர் வினையை அவன் எதிர்பார்த்தான் என்று அவனுக்குத் தெரியவில்லை...

வீட்டை விட்டு வெளியேற்றப்பட்ட விமலாராணி போக்கிடம் இல்லாது தவித்தவர் மகளிடம், "நீ சரவணனுடன் போய் இரு..." என்க...

"நீங்கம்மா...?" என்று கேட்ட சந்தியாவிற்குப் பயமாக இருந்தது...

"எனக்கு மனசு சரியில்லை... நான் கோவிலுக்குப் போயிட்டு வந்து விடுகிறேன்..."

"நானும் உங்களுடன் வருகிறேன்ம்மா..." என்றவள் நாக்கை கடித்துக் கொண்டு,

"என்னால் வர முடியாது... நீங்க மட்டும் போயிட்டு வாங்கம்மா..." என்றவள் சோலையம்மாள் வீட்டிற்கு அண்ணன் மற்றும் தங்கையைத் தேடி சென்றாள்...

ஆனால் அன்று முழுவதும் விமலாராணி அங்கு வரவே இல்லை... மாலை மங்கி இருள் கவிழ ஆரம்பித்ததும் சந்தியா அழ துவங்கினாள்...

"அக்கா... அழாதீங்க... அண்ணா தேட போயிருக்காங்க... வரும் போது அம்மாவை அழைச்சிக்கிட்டு வருவாங்க..." என்று பிரகதீஸ்வரி அவளுக்கு ஆறுதல் கூறினாள்...

விமலாராணி அவளுக்குச் செய்த கொடுமைக்கு அவள் அவரை நினைத்தும் பார்க்க கூடாது... ஆனால் நல்ல மனம் கொண்ட அவள் யாரையும் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை... எல்லோரையும் அரவணைத்து செல்லவே அவள் விரும்பினாள்...

எங்குத் தேடியும் விமலாராணியைக் காணாது எல்லோரும் சோர்வுற்றனர்... அவர் எங்குச் சென்றார் என்று யாருக்கும் தெரியவில்லை...

நாட்கள் உருண்டோடியது... ஹரிப்ரசாத் விடுமுறை எடுத்துக் கொண்டு ஊருக்கு வந்தான்... வந்ததும் வராததுமாக அவன் சரவணனின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான்...

"என்ன காரியம் பண்ணிட்டு வந்திருக்க...? நீ பண்ணிய காரியத்தால் நம்ம வீட்டு பொண்ணுக்கு நாம நியாயம் கேட்க முடியாம போகும்ன்னு நீ ஏன் கொஞ்சமும் நினைத்து

பார்க்கலை...? என்ன இருந்தாலும் நீ பண்ணியது தப்பு சரவணா...?" என்று கண்டித்த ஹரியிடம் தனிமையில் சரவணன் தான் ஆண் பிள்ளை என்பதை மறந்தவனாய் ஓவென்று அழுது விட்டான்...

"பிரகதிக்கு சித்து அத்தான் பண்ணிய துரோகம் பார்த்து எனக்குக் கோபம் வந்தது என்னமோ உண்மை தான்... ஆனால் சத்தியமா அந்த ஒரு காரணத்துக்காக மட்டும் நான் ஸ்வேதா கழுத்தில் தாலி கட்டலை... அவள் மேல் கொண்ட காதலில் தான் தாலி கட்டினேன்... பிரகதி பிரச்சினையால் எங்கே ஸ்வேதா எனக்குக் கிடைக்காமல் போய் விடுவாளோ என்கிற பயத்தில் தான் நான் தாலி கட்டினேன்... இதற்கு முழுக்க முழுக்க என்னோட சுயநலம் தான் காரணம்..."

"ப்ச்சு... அதுக்காக இப்படியா பண்ணுவ...? உன் காதல் உனக்குப் பெருசா இருக்கலாம் சரவணா... ஆனால் அந்தப் பெண்ணிற்கு இந்தக் கல்யாணம் எத்தனை அவமானமாக இருந்திருக்கும்... இனி அவள் உன்னை ஏற்பாளா...?"

"அதான் தாலியை கழற்றி முகத்தில் விட்டெறிந்து விட்டாளே அத்தான்..." என்று விரக்தியுடன் கூறினான் அவன்...

"இருக்கும் சிக்கலை இன்னமும் அதிகமாக்கி கொண்டிருக்கிறாய் சரவணா..."

"இல்லை அத்தான்... ஸ்வேதாவை நான் காதலிப்பது உண்மை... என் மனைவி என்றால் அது அவள் மட்டுமே... அவளது மனதை மாற்றி அவளது கரம் பிடிப்பேன் அத்தான்... இது சத்தியம்..."

"சத்தியம் எல்லாம் இருக்கட்டும்... அதற்கு முன் ஆண் பிள்ளையாய் பொறுப்பாய் ஒரு வேலையைத் தேடி கொள்... நான் ஏற்கெனவே கூறியதை பற்றி என்ன முடிவு பண்ணி இருக்கிறாய்...?"

"நான் முடிவு பண்ணிட்டேன் அத்தான்... மாடலிங் தான் என்னோட சாய்ஸ்..."

"குட் சாய்ஸ்..." என்று அவனைத் தட்டி கொடுத்தான் ஹரிப்ரசாத்...

சரவணனிடம் பேசி கொண்டிருந்தாலும் ஹரியின் மனதில் பிரகதீஸ்வரியின் வாழ்க்கை பற்றிய அச்சம் இருந்து கொண்டே இருந்தது...

வந்த அன்றே ஹரி சித்தார்த்தை அவனது வீட்டில் சந்தித்தான்... ஹரியை கண்டதும் சித்தார்த்தின் புருவம் கேலியாய் ஏறி இறங்கியது... அதைக் கண்டு ஹரியின் ஆத்திரம் தலைக்கேறியது...

சித்தார்த்தின் சட்டையைக் கொத்தாய் பற்றியவன், "திட்டம் போட்டு ஒரு சின்னப் பெண்ணை ஏமாற்றி இருக்கிறாயே... உனக்கு வெட்கமாக இல்லை... ச்சீ, நீ எல்லாம் மனுசனை தானா...?"

"கேள்வி கேட்கும் உரிமை உள்ளவளை தவிரக் கண்டவங்களும் வந்து என்னைக் கேள்வி கேட்கிறாங்க... சித்து உன் நிலைமை இப்படியா ஆகணும்...?" என்று அலுத்துக் கொண்டே தனது சட்டையை ஹரியின் பிடியில் இருந்து விடுவித்தவன்,

"ஆமாம்... அப்படித்தான் வச்சுக்கோ... அதுக்கு இப்ப என்னாங்கிற...?" என்று திமிராய் கேட்ட சித்தார்த்தின் பார்வை ஹரியை இகழ்ச்சியாய் பார்த்து வைத்தது...

"அவளுக்காகப் பேச யாரும் இல்லைன்னு நினைச்சியா...? அவளுக்கு நான் இருக்கேன்டா... நீ தாலி கட்டிட்டா காலம் பூரா அவள் உன்னை நினைச்சிக்கிட்டு வாழணுமா...? நீ எந்தக் காலத்தில் இருக்கிற...? நீ கட்டிய தாலியை கழற்றி வீசி விட்டு அவளுக்கு வேறு கல்யாணம் பண்ணி வைக்கிறேனா இல்லையான்னு பாரு..."

ஹரி பேசி முடிக்கும் முன் அவனது சட்டையைச் சித்தார்த் கொத்தாய் பற்றி இருந்தான்...

"என்னடா சொன்ன...? நான் கட்டிய தாலி மேல் கை வைக்கும் அளவுக்கு உனக்குத் துணிச்சல் இருக்கிறதா...? அதற்கு முதலில் உன் கை உன்னிடத்தில் இருக்க வேண்டுமே..." என்று ஆக்ரோசத்துடன் கூறிய சித்தார்த்தின் விழிகள் ஆத்திரத்தில் சிவந்து போனது...

"நீ அவள் கழுத்தில் தாலி கட்ட ஆசைப்படுகிறியா...? உனக்கு அவள் மீது ஆசையா...? இல்லை அவளது சொத்துக்கள் மீது ஆசையா...?" என்று சித்தார்த் கேலியாய் கேட்டதும் ஹரி ஒரு நொடி விக்கித்து நின்று விட்டான்...

அதைக் கண்டு சிரித்தபடி, "எல்லாம் எனக்குத் தெரியும்... அதனால் தான் நான் அவளது கழுத்தில் தாலி கட்டினேன்..." என்றான் சித்தார்த் அமர்த்தலாக...

"ச்சீ... சொத்துக்காக அவளின் கழுத்தில் தாலி கட்டிய நீயும், அவளது நலனுக்காகத் துடிக்கும் நானும் ஒன்றா...? அப்படி ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டால் நீ கட்டிய தாலியை கழற்றி விட்டு நான் ரதி கழுத்தில் தாலி கட்டவும் தயங்க மாட்டேன்... எனக்கு அவளது வாழ்க்கை முக்கியம்... அவளது சந்தோசம் முக்கியம்..."

ஹரிப்ரசாத்தின் ஆணித்தரமான பேச்சில் சித்தார்த் அசந்து போய் விட்டான்... அவ்வளவு ஏன் உள்ளுக்குள் சற்று ஆடி தான் போய் விட்டான்... ஆனாலும் அதை வெளிக்காட்டி கொள்ளவில்லை...

"அது நடக்கும் போது பார்க்கலாம்..." என்றான் கெத்தாய்...

அவனது இந்தக் கர்வம் அவனவள் காதலின் மீதிருந்த நம்பிக்கையால் வந்தது என்று ஹரிப்ரசாத்திற்குத் தெரியவில்லை...

"நடத்தி காட்டுகிறேன்..." என்றான் ஹரி சவாலாக...

சவால் விட்ட ஹரிப்ரசாத்திற்குச் சித்தார்த்தின் மர்மமான புன்னகையே பதிலாகக் கிடைத்தது...

கோபத்துடன் வீட்டிற்கு வந்த ஹரிப்ரசாத் அன்னையிடம் புலம்பி தீர்த்து விட்டான்... பிரகதீஸ்வரி அவளது வாழ்க்கை போல் அவளது கழுத்தில் ஊஞ்சலாடி கொண்டிருந்த தாலியை பிடித்தபடி அப்படியே அமர்ந்து விட்டாள்...

"அவன் யார் அம்முவின் வாழ்க்கையைத் தீர்மானிப்பதற்கு...? அதான் அவளுக்கு நானிருக்கிறேன்னு முகத்தில் அடித்தார் போல் சொல்லிட்டு வந்து விட்டேன்..."

"அத்தான்..." பிரகதீஸ்வரியின் தீனமான குரலில் அவன் திரும்பி பார்த்தான்...

"என்ன அம்மு...?"

"அவங்க தான் அப்படிப் பேசினாங்கன்னா நீங்களும் ஏன் இப்படிப் பேசுறீங்க அத்தான்...?" என்று வருத்தத்துடன் கேட்ட அத்தை மகளைத் திகைப்பாய் பார்த்தான் அவன்...

"அம்மு..."

"அவங்க தான் என்னை உயிரோடு கொல்றாங்கன்னா... நீங்களும் இப்படிப் பேசி என்னை வதைக்காதீங்க..." என்று முகத்தை மூடி கொண்டு அழுதவளை கண்டு அவன் செய்வதறியாது திகைத்தான்...

"அவர் என்னை விரும்பா விட்டாலும் நான் அவரை உயிருக்கு உயிராய்க் காதலிக்கிறேன்... அவர் தான் என் வாழ்க்கை... அவர் தான் என் சந்தோசம்... இனி இது போன்றதொரு பேச்சு நீங்க பேசவே கூடாது..."

"ஹரி... ரதி சொல்றது சரி தான்... திருமணமான பெண்ணைப் பற்றி நீ இப்படிப் பேசுவதை விட்டு விடு..."

"அதற்காக அம்மா...?" என்று மேலே பேச போன மகனை தடுத்த பானுமதி,

"ரதி தான் தெளிவாகக் கூறுகிறாளே... அவள் மனதில் அவளது கணவனுக்கு மட்டுமே இடம் என்று... இனி இது போன்றதொரு அபத்தமான பேச்சு வேண்டாம்..." என்று

பானுமதி மகனின் பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்...

மறுநாள் பிரகதீஸ்வரி தனியே கோவிலுக்குச் சென்று விட்டு வந்து கொண்டிருந்த போது சித்தார்த் அவளைத் தனியே சந்தித்தான்... அவனது முகத்தில் அத்தனை கோபம் இருந்தது...

"உனக்கு வேணும்ன்னா நீ தான் நேரில் வந்து பேசணும்... உன் அத்தானை எதுக்குத் தூது அனுப்புற...?"

திடுமெனக் கணவன் அப்படிக் கேட்டதும் அவளால் உடனே பதில் சொல்ல முடியவில்லை... கண்ணீர் மல்க அவனைப் பார்த்தாள்...

"அவனைக் கண்டதும் அவனைக் கல்யாணம் பண்ணி இருந்திருக்கலாம்ன்னு உனக்குத் தோணுதோ...?" அவளது மனதினை குறி பார்த்து அடித்து வலிக்கச் செய்தான்...

குட்ட குட்ட குனிந்தால் அவன் மேலும் வலிக்கச் செய்வான் என்றெண்ணி அவள் கண்ணீரை உள்ளிழுத்துக் கொண்டு அவனைத் தைரியமாக ஏறிட்டாள்...

"அப்படித்தான் என்றால் என்ன செய்வதாக உத்தேசம்...?"

அவளது கேள்வியில் அவனது முகம் கன்றிப் போனது... ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"அப்படி என்றால் நான் சந்தேகப்பட்டது சரி தான் போலும்... உனக்கும் அவனுக்கும் அப்படி என்னம்மா உறவு...? மாமன் மகன், அத்தை மகள் உறவை தாண்டிய உறவா அது...?"

அதில் அவளது துக்கம் விம்மலாய் எழ அங்கிருக்க இயலாது அவள் ஓடி வந்து விட்டாள்...

அவள் செல்வதைச் சித்தார்த் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்... தனது மனைவியின் மனம் பற்றி அவனுக்கு நன்றாகத் தெரியும்... இருந்தும் ஹரியை பற்றி நினைத்தாலே அவனுக்கு பற்றிக் கொண்டு வருகிறதே...

அது ஏன் என்றும் அவனுக்குப் புரிந்து தான் இருந்தது... அதனால் தானே அவனது இத்தனை கோபமும்...

இயலாமையுடன் தரையில் கிடந்த கல்லை காலால் ஓங்கி உதைத்தான்... அது அங்குப் படுத்திருந்த நாய் மீது பட்டதில் நாய் அலறிக் கொண்டு ஓடியது...

"அத்தை... அவங்க எப்படி என்னையும், அத்தானையும் இணைச்சு வச்சுச் சந்தேகப்படலாம்... இப்போது என்று இல்லை எப்போதுமே அவங்களுக்கு அத்தானை பற்றிப் பேசினால் பிடிக்காது... அதற்காக என்னையும், அத்தானையும் சேர்த்து வைத்து பேசலாமா...? என் மனசில் அவங்க தானே இருக்காங்க... அது தெரியாம வாய்க்கு வந்ததைப் பேசுறாங்க..." என்று கதறியழுத பிரகதீஸ்வரியை பானுமதி ஆறுதலாக அணைத்துக் கொண்டார்...

பிரகதீஸ்வரி கூறியதில் இருந்து சித்தார்த்தின் கணவன் மனம் புரிவதாய்... அதற்குத் தனது மகனின் பேச்சுத் தூபம் போட்டிருக்கிறது என்பது அவருக்கு நன்றாகத் தெரிந்தது...

சித்தார்த், பிரகதீஸ்வரி இருவரின் மனமும் அவருக்குப் புரிவதாய்... ஆனால் இடையில் ஏன் இந்தப் பிரிவு...? அது தான் அவருக்குச் சுத்தமாகப் புரியவில்லை...

"ரதிம்மா... இனிமேல் உன் கணவன் இப்படி எல்லாம் பேச மாட்டார்..."

"எதை வைத்து சொல்றீங்க அத்தை...?"

"அத்தை மீது நம்பிக்கை இருக்கிறது அல்லவா...? அதை வைத்து சொல்கிறேன்..."

அதில் அவள் நம்பிக்கையுடன் தலையசைத்தாள்...

அன்றே பானுமதி மகனிடம் அவனது திருமணத்தைப் பற்றிப் பேசினார்... அதற்கு அவன்,

"இப்போது என்னம்மா அவசரம்...? கொஞ்ச நாட்கள் போகட்டும்..."

"அவசியம் வந்திருக்கிறது ஹரி..." என்றவரை அவன் புரியாது பார்த்தான்...

"உன்னால் ரதியின் வாழ்க்கையில் பிரச்சினை வந்து விடக் கூடாது..."

"இல்லை என்றாலும் அவள் வாழ்வில் பிரச்சினை இல்லையா...? எல்லாவற்றிற்கும் காரணம் அந்தச் சித்தார் தான்..." என்று பல்லை கடித்தான் அவன்...

"இப்போது இருப்பது சாதாரணப் பிரிவினை தான்... ஆனால் இதே இது சந்தேகம் என்று வந்து விட்டால் வாழ்க்கை விபரீதமாகப் போய் விடும்..."

"அம்மா..." என்று அதிர்வுடன் பார்த்தவனைக் கண்டு,

"அதற்கு உன் திருமணம் அவசியம்..."

அதற்கு மேல் ஹரிப்ரசாத் ஒன்றும் பேசவில்லை... பெண் என்று சந்தியாவை அவர் கை காட்டிய போதும் முழு மனதுடன் அவளைத் தன் மனைவியாய் ஏற்றுக் கொண்டான்... பிரகதீஸ்வரி பிரச்சினையை மனதில் நினைத்து கொண்டிருந்தவனுக்குச் சங்கமித்ரா அவனிடத்தில் காதல் சொன்னது சுத்தமாய் மறந்து போயிருந்தது...

ஹரிப்ரசாத், சந்தியா திருமணம் கோவிலில் வைத்து எளிமையாய் நடைப்பெற்றது... ஹரிப்ரசாத்தை திருமணம் செய்யச் சந்தியாவிற்குப் பிடித்துத் தான் இருந்தது... எப்போதுமே நேர்மறை கருத்துக்களைக் கொண்டு அவளை ஊக்குவிப்பவன் அவன் என்பதால் அவள் சிறிதும் சுணக்கம் இல்லாது முழு மனதாக அவனைக் கணவனாக ஏற்றுக் கொண்டாள்... அவளது ஒரே ஒரு குறை அவளது அன்னை உடன் இல்லாதது மட்டும் தான்...

ஹரிப்ரசாத்தின் திருமணம் கேள்வியுற்று சங்கமித்ரா மிகவும் மனம் உடைந்து போனாள்... வாழும் வாழ்க்கையில் விரக்தி எழுந்தது... முன்பே தனது பணியில் மூழ்கி

போனவள் இன்னமும் அதில் தன்னைத் தொலைத்து கொண்டாள்...

வீட்டில் திருமணம் பற்றிப் பேசிய போது அவள் திருமணத்தை முற்றிலும் மறுத்து விட்டாள்... எல்லோருக்கும் அதன் காரணம் காதல் தோல்வி என்று புரிந்தது... ஆனால் அது யார் என்று தான் தெரியவில்லை...

ஹரிப்ரசாத் விடுமுறை முடிந்து வேலைக்குச் செல்லும் முன் சரவணனிடம் தனது நண்பனின் முகவரியை கொடுத்து மும்பைக்கு அனுப்பி வைத்தான்... தானும் பெரிய ஆளாய் வந்து சாதித்துக் காட்ட வேண்டும் என்கிற நம்பிக்கையோடு சரவணன் மும்பைக்கு இரயில் ஏறினான்...

ஆனால் அவ்வளவு எளிதில் அதற்குச் சித்தார்த் விடவில்லை... ஏதோ ஒரு ரூபத்தில் அவனுக்குப் பல தடைகளைப் போட்டான்... அதையும் மீறி ஒரு நாள் சரவணன் வெற்றிக் கொண்டு மேடையில் தோன்றி தன்னவளின் கைப்பிடித்துக் கம்பீரமாய் வலம் வந்து விட்டான்... அதுவே அவனது வாழ்நாள் சாதனை தான்...

இதற்கு இடையில் பிரகதீஸ்வரியின் பரீட்சையின் முடிவு வெளிவந்தது... ஆயிரத்திற்கும் அதிகமான மதிப்பெண்கள் எடுத்து நன்றாகத் தேர்ச்சி அடைந்திருந்தாள்... அவளது கனவு படிப்பான சித்த மருத்துவம் படிக்க எண்ணினாள்... அதற்கான ஆயத்த வேலைகளில் அவள் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது தான் இடி என அந்தச் செய்தி அவளது காதுகளில் வந்து விழுந்தது...

ஆம், சித்தார்த் அவளது தந்தையின் சித்த வைத்தியத்தை அடிப்படையாகக் கொண்டு மருந்து தயாரிப்பது பற்றி அவளுக்குச் சங்கமித்ரா மூலம் தெரிய வந்தது... அவள் சிறு பெண் தான்... ஆனாலும் கணவன் செய்வது தவறு என்றே அவளுக்குத் தோன்றியது... அனைவருக்கும் இலவசமாக அளிக்க வேண்டும் என்று எண்ணியிருந்த மருந்து குறிப்புகளை இப்படி அவன் பணம் சம்பாதிக்கப் பயன்படுத்தியதை எண்ணி அவளுக்கு வெறுப்பு வந்தது...

குருமூர்த்தி உதவியுடன் கணவன் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தாள்... அதன் உரிமம் தனக்குத் தான் சொந்தம் என்று... தனி நீதிமன்றத்தில் அவளது வழக்கு பெரும் தோல்வியைச் சந்தித்தது... குருமூர்த்தித் திறமையாக வாதாடியும் எதுவும் செய்ய முடியவில்லை...

நீதிமன்ற வளாகத்தில் மனைவியைச் சந்தித்த சித்தார்த் கேலியாய் அவளை எதிர் கொண்டான்...

"ச்சீ... இது எல்லாம் ஒரு பிழைப்பா..." என்று சீறியவளை கண்டு அவன் நக்கலாய் சிரித்தான்...

"என் பிழைப்புக்கு என்ன...? அது பாட்டுக்கு நல்லா போய்க்கிட்டு இருக்கு... ச்சீன்னு சொல்றியே அந்தப் பணம் தான் இப்போது பாதாளம் வரை பாய்ந்து இருக்கிறது..." என்றவனை அவள் கூர்ந்து பார்த்தாள்...

"ஆமாம் என்னருமை பொண்டாட்டியே... நீதியை நிதி வென்று விட்டது..." என்று திமிராய் கூறியவன் வாய் விட்டுச் சிரித்தான்...

"நீங்க தவறு மேல் தவறு செய்றீங்க... இது எல்லாம் ஏழை எளிய மக்களுக்கு இலவசமாகக் கொடுப்பதற்காக அப்பா பாதுகாத்து வந்தது..." என்றவளை புரியாது ஒரு பார்வை பார்த்தவன்,

"எதையும் இலவசமாகக் கொடுத்து உதவினால் அதன் அருமை தெரியாது போய் விடும்..."

அவளுக்குப் புரியும் படி அவனது குரல் மென்மையாய், அமைதியாய், நிதானமாய் ஒலித்தது...

"ஓ..." என்றவள் கண்ணில் அடிப்பட்ட பாவனையுடன் அவனைப் பார்த்து,

"என்னைப் போல் என்று சொல்லுங்கள்..." என்றவளை கண்டு மனதிற்குள் திடுக்கிட்டவன் வெளியில் அவளை உணர்வில்லாது பார்த்தான்...

"வலிய உங்களிடம் பழகி, உங்களை உயிருக்கு உயிராய்க் காதலித்தேன் பாருங்க... அதனால் தான் என்னருமை உங்களுக்குத் தெரியாமல் போய் விட்டது..."

அவளது வார்த்தைகளில் அவனது மனம் ஊமையாய் கதறிய போதும் உதடுகளில் புன்னகையை நிலைக்க விட்டவன்,

"எக்ஸாக்ட்லி..." என்றான் அலட்சியமாய்...

அவனது அலட்சியம் அவளை உயிரோடு வதைக்க அவனை உணர்வில்லாது பார்த்தபடி சென்று விட்டாள்... அவள் செல்வதைப் பார்த்து கொண்டிருந்தவனின் முகத்தில் அத்தனை உணர்ச்சிகளின் வெளிப்பாடு... அந்தக் கணம் அவள் அவனைத் திரும்பி பார்த்திருந்தால் அவனது மனம் புரிந்திருக்கும்...

காதலை உணர்த்த அவனுக்கு விருப்பம் இல்லை... காதலை புரிந்து கொள்ள அவளுக்கு விருப்பம் இல்லை... பாழாய் போன காதல் இருவரிடையே படாத பாடு பட்டது...

அவனது பணத் திமிரை கண்ட அந்தக் கணம் தான் அவளது இலட்சியம், குறிக்கோள் எல்லாமே மாறிப் போனது... அவளது இலட்சியம், குறிக்கோள் மாறினாலும் அவளது இலக்கு அவனது கணவனுக்கு எதிராகத் தான் இருந்தது...

அதற்குப் பின் கடந்து சென்ற நாட்களில் சித்தார்த் அந்த ஊரில் விஸ்வரூபம் எடுத்த போது அவளால் ஒன்றுமே செய்ய முடியாமல் போனது... தீவிரவாதியான அவனின் செயல்கள் முன் மிதவாதியான அவளது செயல்கள் தோற்றுப் போனது... ஆனாலும் இன்றுவரை மனம் தளராது, எந்தப் பிரதிபலனும் பாராது அவள் விடாது போராடி கொண்டு இருக்கிறாள்...

காலங்கள் மட்டும் அது பாட்டிற்குக் கடகடவென உருண்டோடி சென்று விட்டது... ஆனால் இருவருக்கும் இடையில் எதுவுமே சரியாகவில்லை...

போராட்டமும் சரி, காதலும் சரி ஆரம்பப் புள்ளியில் அப்படியே இருந்தது...!!!

“உனை களிறு என்றெண்ணி கொண்டு
எனை அடக்க நினைக்கிறாய்...
தொடர் புள்ளி வடிவம் கொண்ட
சித்தெறும்பு பெரிய உருவம் கொண்ட
களிறை மதம் கொள்ளச் செய்யும்
என்பதை நீ அறிவாயோ...
அது போல் உனது அகந்தைக்கு
முற்று புள்ளி வைக்கப் போவது நானே...
பரமன் விளையாட்டைக் கையில்
எடுத்தாடும் சித்தனே...
எளிதில் வெற்றி கொள்ளலாம் என
இறுமாப்பு கொண்டாடும் ஜித்தனே...
இறுதியில் நீ காதல் வரம் வேண்டி
நிற்க போகிறாய் பித்தனாய்...!!!"

நனவாகும்...!!!

அதிகாலையில் எழும் போதே பிரகதீஸ்வரியின் விழிகள் இரண்டும் இரவில் உறக்கம் இல்லாததால் திகுதிகுவென எரிந்தது... உடலில் சூடு அதிகரித்துக் காணப்பட்டுக் காய்ச்சல் வருவது போலிருந்தது... இன்னும் சிறிது நேரம் படுக்க வேண்டும் என்று உடல் அசதியில் கெஞ்சியது... படுத்தாலும் தூக்கம் வர போவதில்லை என்பதை உணர்ந்தவளாய் அவள் எழுந்தாள்...

பானுமதி, சோலையம்மாள் இன்னமும் எழும்பவில்லை... அதனால் சத்தம் செய்யாது மெதுவே நடந்தவள் நேரே குளியலறைக்குள் சென்று புகுந்து கொண்டாள்... பனி விழும் அதிகாலை பொழுதில் குளிர் நீர் உடலில் பட்டதும் அவளிடம் இருந்த சோர்வு எல்லாம் விடை பெற்று சென்று விடப் புத்துணர்வோடு குளித்து முடித்து வெளியில் வந்தாள்...

பின்பு வழக்கம் போல் வாசல் தெளிப்பதற்காகத் தண்ணீர் நிரம்பிய வாளியுடன் அவள் வாயிலுக்கு வந்தாள்... சில நிமிடங்களில் அழகான பெரிய பூக்கோலத்தைப் போட்டு முடித்தவள் இறுதியாக அதன் நடுவில் பசுஞ்சாணத்தில் பிள்ளையார் பிடித்து வைத்து மஞ்சள் நிற பூசணி பூவை அதில் சொருகி வைத்தாள்... பின்பு எழுந்து நின்று தான் போட்ட கோலம் சரியாக வந்திருக்கிறதா என்று பார்த்தவளின் பார்வை கோலத்தை ரசித்துப் பார்த்தது...

"டக்... டக்... டக்..."

அந்நேரம் சீரான ஷூவின் ஒலி அவளது காதினை வந்தடைந்தது... அதைக் கேட்டதும் அவளது உடலில் அத்தனை அணுக்களும் ஒரு சேர பரபரத்தது...

"ஓராயிரம் பார்வையிலே
உன் பார்வையை நான் அறிவேன்
உன் காலடி ஓசையிலே
உன் காதலை நான் அறிவேன்"

அவளையும் அறியாது மனதிற்குள் அந்தப் பாடல் ஒலித்தது... அதன் அர்த்தம் புரிந்தவளின் விழிகளில் கண்ணீர் துளிர்த்தது... கணவனது பார்வையையும் அவள் அறிவாள்... அவனது காலடி ஓசையையும் அவள் அறிவாள்... ஆனால் அதில் காதல் இருக்கிறதா என்பது மட்டும் அவளுக்குத் தெரியவில்லை...

'தாலி கட்டின மனைவியை எதிரியை போல் பார்த்து வைக்கிறாங்க... இதில் காதல் எங்கே இருக்கப் போகிறது...?' என்று அவளது மனம் சோகமாக எண்ணியது... சொத்துக்காகத் தான் சித்தார் தன்னைத் திருமணம் செய்ததாக நினைத்து வெறுத்து ஒதுக்கியவள் இப்போது அவனது காதலுக்காக மனம் ஏங்கி நின்றாள்...

பிரகதீஸ்வரி மெல்ல விழியுயர்த்தி வீதியை பார்த்தாள்... அந்நேரம் சித்தார்த் ட்ராக் சூட் அணிந்து ஜாக்கிங் வந்து கொண்டிருந்தான்... மனைவி இருந்த வீட்டின் முன்பு வந்ததும் சித்தார்த்தின் கால்களின் வேகம் சற்று மட்டுப்பட்டது...

நேற்று மழையில் நனைந்ததன் தாக்கம் எதுவும் அவனிடத்தில் பிரதிபலிக்கிறதோ என்று அவள் அவனை உற்று நோக்கினாள்... சீரான சுவாசத்துடன் எப்போதும் போல் சாதாரணமாக இருந்தவனின் தோற்றம் அவளுள் பெருத்த நிம்மதியை அளித்தது... மூச்சிரைப்பு அவனைப் படுத்தவில்லை என்று தெரிந்ததும் அவளது விழிகள் தன்னவனின் தோற்றத்தை முழுதாய் விழுங்கி கொண்டது கிரகணம் போல்...

அதே நேரம் சித்தார்த்தின் விழிகளும் அவளை ஆராய்ச்சியாய்ப் பார்த்தது... 'நேற்று மழையில் நனைந்து சென்றாளே... உடல்நலம் எப்படி இருக்கிறதோ...?' என்று கவலையுடன் அவன் மனைவியைப் பார்த்தான்...

அவன் நினைத்தது போல் கண்கள் சிவந்து போய் ஓய்ந்து போன தோற்றத்துடன் அவள் இருந்ததைக் கண்டு அவனது மனம் வேதனையுற்றது... இமைகள் தடித்து, முகம் சிறிது

வீங்கி இருந்ததிலேயே அவனுக்குத் தெரிந்து போனது நேற்றிரவு அவள் அழுதிருக்கிறாள் என்று...

அவள் அருகில் சென்று இழுத்து அணைத்து, 'எதற்கடி இந்தச் சோகம்...? உனக்காக நான் இருக்கிறேன்...' என்று ஆறுதல் சொல்லவிழைந்தது அவனது காதல் மனம்...

"சொத்துக்காக என்னைக் கல்யாணம் பண்ண நினைக்கும் உங்களை நான் எப்படிக் கல்யாணம் பண்ண முடியும்...? உயிரற்ற சொத்துக்கள் மதிப்புப் பெருசா தெரிஞ்ச உங்களுக்கு உயிருள்ள இந்தப் பிரகதி மதிப்பில்லாமல் போய் விட்டாள் இல்லையா...?"

அன்று மனைவி கூறிய வார்த்தைகள் இன்றும் அவனது காதில் ஒலித்து அவனது மனதினையும், முகத்தினையும் ஒரு சேர இறுக செய்தது... அவன் தன் மனதினை கல்லாய் மாற்றிக் கொண்டு அவளைக் கடந்து சென்றான்...

'என்னைப் புரிந்து கொள்ளாதவள் எனக்குத் தேவையில்லை... அவளாய் என்னைப் புரிந்து கொண்டு என்னைத் தேடி வரட்டும்... நானாக அவளைத் தேடி போக மாட்டேன்...' என்று அவனது மனம் வறட்டுப் பிடிவாதம் பிடித்தது...

கணவன் கண்டு கொள்ளாது செல்வதைக் கண்ட பிரகதீஸ்வரி கண்ணீர் மல்க நின்றிருந்தாள்... எங்குத் தவறு நேர்ந்தது என்று தெரியாமல் அவள் தனது வாழ்க்கை கோலத்தைச் சிக்கலாக்கி கொண்டாள்... இதிலிருந்து விடுபடும் வழி தான் அவளுக்குத் தெரியவில்லை...

கணவனிடத்தில் சரணடைய மனம் துடித்த போதும் காதலில்லா ஒருவனிடத்தில், அதுவும் தவறான பாதையில் செல்லும் ஒருவனிடத்தில் காதல் யாசகம் பெற அவள் தயாராக இல்லை...

****

காலையில் எழுந்து காபியை கலக்கிய சங்கமித்ரா தனக்கு ஒரு கோப்பையும், அர்ஜூனுக்கு ஒரு கோப்பையும்

எடுத்துக் கொண்டு வெளியில் வந்தாள்... வெளியில் இருந்த கயிற்றுக் கட்டிலில் அமர்ந்து கொண்டு சுற்றியிருந்த இயற்கையை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த அர்ஜூனை கண்டதும் அவளது மனம் கனிந்தது... அந்தக் கணம் அவன் தன்னிடத்தில் காதலை சொன்னதை அவள் மறந்து போனாள்...

வசதியான வீட்டு பையனான அவன் தனக்காக இந்தக் குக்கிராமத்தில் இப்படிக் கொட்டும் பனியில் வெட்டவெளியில் படுத்து உறங்குவதைக் கண்டு அவளது மனம் அவன் பால் இரங்கியது... நேரே அவனின் முன் சென்று நின்றவள் அவனிடம் காபி கோப்பையை நீட்டினாள்...

"தேங்க்ஸ் மித்து..." என்று புன்னகையுடன் வாங்கிக் கொண்டவனின் முகத்தில் நேற்றையை வருத்தத்தின் சாயல் சிறிதும் இல்லை...

"இந்தக் குளிருக்கு சூடான காபி ரொம்ப இதமாயிருக்கு... அதுவும் உன்னோட காபி டேஸ்ட் பேஸ் பேஸ் ரொம்ப நன்னாயிருக்கு..." என்று அவளைச் சிலாகித்தபடி காபியை துளி துளியாய் ரசித்துப் பருகியவனைக் கண்டு அவளது முகத்தில் புன்னகை மலர்ந்தது...

காபியோடு சேர்ந்து அவளது புன்னகை முகத்தினைப் பருகி கொண்டிருந்தான் அந்தக் கள்ளன்... அதை உணராதவளாய் அவள் வேடிக்கை பார்த்து கொண்டிருந்தாள்...

"நீங்க எப்போ சென்னைக்குக் கிளம்பறீங்க...?"

"என்னைத் துரத்தி விடுவதில் அத்தனை சந்தோசமா...?" அவளுக்குப் பதிலளிக்காது அவன் பதில் கேள்வி கேட்டான்...

அவன் முகம் பார்க்க முடியாதவளாய் தலை குனிந்து கொண்டவள், "இன்னும் எத்தனை நாளைக்கு நீங்க இங்கே

இருந்து கஷ்டப்படப் போறீங்க...? அதனால் தான் அப்படிக் கேட்டேன்..."

தனக்காகத் தான் அவள் அப்படிக் கேட்டிருக்கிறாள் என்பதை உணர்ந்தவன் முகத்தில் நிம்மதி வந்தமர்ந்தது...

"இன்னைக்குக் கிளம்பலாம்ன்னு இருக்கேன்..."

"ஓ..." என்றவள் சற்று நேரம் எதுவும் பேசவில்லை... பின் மெதுவே,

"கூடிய சீக்கிரம் நீங்க கல்யாணம் பண்ணிக்கோங்க..." என்றவள் அவனை ஆவலுடன் ஏறிட்டு பார்த்தாள்...

அவனோ ஒன்றும் பேசாது ஒரு அழுத்தமான பார்வையை அவள் மேல் பதித்து விட்டு எழுந்து சென்றுவிட்டான்...

ஏமாற்றத்துடன் காலி கோப்பைகளை எடுத்துக் கொண்டு சங்கமித்ரா வீட்டிற்குள் வந்த போது அவளது அலைப்பேசி அலறியது... அவளது தந்தை தான் அழைக்கிறார்...

அலைப்பேசியை உயிர்ப்பித்து, "அப்பா..." என்று அவள் கூறியது தான் தாமதம் மறுமுனையில் அவளது தந்தை தாமோதரனின் குரல் பதற்றத்துடன் ஒலித்தது...

"மித்தும்மா... இங்கே உங்கம்மா நெஞ்சுவலின்னு படுத்து கிடக்கிறாள்... எனக்கு ரொம்பப் பயமாயிருக்கும்மா..."

அதைக் கேட்டு அவள் அதிர்ச்சியில் உறைந்தாள்... இருபத்தியெட்டு வயது வரை அவள் திருமணம் ஆகாமல் தனித்து இருப்பது அவளது அன்னைக்கு மிகுந்த வேதனையான விசயம் என்று அவளுக்குத் தெரியும்... ஆனால் அது இப்படி அவரது உடலை வருத்தும் அளவிற்குப் போகும் என்று அவள் சிறிதும் எதிர்பார்க்கவில்லை...

"அர்ஜூன் இன்னைக்குச் சென்னைக்குக் கிளம்பறார்... நானும் அவர் கூடவே வந்து விடுகிறேன்... நீங்க கவலைப்படாதீங்கப்பா... நான் மதியத்திற்குள் அங்கு வந்து விடுவேன்..." என்று தந்தைக்கு ஆறுதல் கூறிவிட்டு

அலைப்பேசியை அணைத்தவள் அடுத்த நொடி அர்ஜூனை தேடி சென்றாள்...

"அர்ஜூன்..."

அப்போது தான் குளிப்பதற்காக உடைகளை எடுத்துக் கொண்டு இருந்தவன் அவளது அழைப்பில் திரும்பி பார்த்தான்... கண்களில் கண்ணீர் மல்க கவலையுடன் அவள் நின்றிருந்த தோற்றம் அவனையும் கவலைக்கு உள்ளாக்கியது...

உதடு கடித்துத் தனக்குள் யோசனை செய்தபடி ஒரு நொடி நின்றவன் அடுத்த நொடி அவள் அருகில் வந்து அவளது தலையை வருடி கொடுத்தபடி, "என்னடா...?" என்று கேட்க... அதில் அவள் உடைந்து போனாள்...

"அம்மா..." என்று தேம்பியவளை கண்டு அவனுக்குப் பரிதாபமாய் இருக்க அவளை ஆறுதலுடன் அணைத்துக் கொண்டான்...

அவனது அணைப்பை கூட உணராதவளாய் அவனது நெஞ்சில் சாய்ந்து அழுதாள் அவள்...

"அத்தைக்கு என்னாச்சு மித்து...?"

தனது அன்னையை அவன் 'அத்தை' என்று விளித்தது கண்டு நிதர்சனம் அவளைச் சுட்டதில் அவள் பதறி போய் அவனை விட்டு விலகினாள்... அதை அவன் உணர்ந்தாலும் வெளிக்காட்டி கொள்ளாது அவளைக் கேள்வியோடு பார்த்தான்...

"அம்மாவுக்கு ஹார்ட் அட்டாக்காம்..."

"ஓ காட்... சீக்கிரம் கிளம்பு..." என்று அவளைத் துரிதமாகக் கிளம்பச் சொல்லியவன் தானும் அது போல் விரைவாகக் கிளம்பி வந்தான்...

அவர்கள் கிளம்பவும் கார் வந்து நிற்கவும் சரியாக இருந்தது... அவள் கேள்வியாக அவனைப் பார்த்தாள்...

"எனக்காக வரவழைச்ச கார்..."

அவன் கூறியதும் மறுபேச்சு பேசாது காரிலேறி அமர்ந்து கொண்டாள்...

"நான் போய் வீட்டு சாவியை ஊர் தலைவரிடம் கொடுத்துட்டு வர்றேன்..." என்றவன் இரு வீடு தள்ளியிருந்த ஊர் தலைவரின் வீட்டிற்குச் சென்றான்...

சுமார் பத்து நிமிடங்கள் கழித்து வந்தவனைக் கண்டு அவள், "அர்ஜூன் ரொம்ப லேட்டாகுது..." என்று படபடப்பாகக் கூற...

"இனி நீ எப்போ வருவியோ அதனால் விலாவாரியா எல்லாவற்றையும் விளக்கி சொல்லிவிட்டு வந்தேன்..."

அவள் யோசனையுடன் தன்னைப் பார்ப்பதை உணர்ந்தவன், "அத்தைக்கு உடம்பு எப்போ சரியாகுமோ... அதனால் தான் அப்படிச் சொன்னேன்..." என்று சமாளித்தவனைக் கண்டு எதிர் கேள்வி கேட்க திராணியற்றவளாய் அமைதியாய் இருக்கையில் சாய்ந்து கண்களை மூடி கொண்டாள்...

செல்லும் வழி எல்லாம் முன்பக்க இருக்கையில் இருந்து கொண்டு சங்கமித்ராவை திரும்பத் திரும்பி பார்த்தபடி வந்தான் அர்ஜூன்... அவளது கவலை தோய்ந்த முகம் கண்டு அவனுக்கும் பாவமாக இருந்தது... ஆனாலும் 'மயிலே மயிலே இறகு போடு என்றால் போடாது' என்பதை உணர்ந்தவனாய் மனதினை கடினப்படுத்திக் கொண்டு வெளியில் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்...

அவளை அழைத்துச் செல்வது பெரிதல்ல... இனி அவளை எப்படிச் சமாதானம் செய்யப் போகிறோம் என்பது பற்றித் தான் அவனுக்குப் பெருத்த யோசனையாக இருந்தது...

சொன்னது போல் மதியமே சென்னை வந்து சேர்ந்தனர்... அர்ஜூன் விமானப் பயணச் சீட்டுகளை எப்படி எடுத்தான்...? எப்படி எல்லாம் திட்டமிட்டு பக்காவாக நடந்தது என்பது பற்றி எல்லாம் அவள் சிறிதும் சிந்திக்கவில்லை...

வீட்டிற்குள் நுழைந்ததும், "அம்மா..." என்று கூக்குரலிட்டவாறு சென்றவளை அர்ஜூன் தான் சற்று நிதானப்படுத்தினான்...

சங்கமித்ராவின் பதற்றத்திற்கு நேர்மாறாய் அவளது அன்னை சரண்யா புன்னகை முகத்துடன் மகளையும், அர்ஜூனையும் வரவேற்றார்... அதைக் கண்டு சங்கமித்ரா பேந்த பேந்த விழித்தாள்...

"அம்மா... என்னம்மா நடக்குது...?" என்று கோபத்தில் கத்திய மகளை அசால்ட்டாய் பார்த்த சரண்யா,

"ஆங்... ஆடு நடக்குது, மாடு நடக்குது அப்புறம் உங்கப்பா நடக்கிறார்..." என்று கிண்டலாய் மொழிய...

அன்னையின் கிண்டலில் சங்கமித்ரா அவரைத் தீயாய் உறுத்து விழித்தாள்...

"அத்தை... நான் எஸ்கேப்..." என்றபடி அர்ஜூன் அங்கிருந்து மாயமானான்...

"அம்மா..." மீண்டும் அலறியவளை கண்டு 'என்ன?' என்பது போல் மிதப்பாகப் பார்த்து வைத்தார் சரண்யா...

"எதுக்கு இப்படி ஒரு பொய் சொல்லி என்னை வரவழைச்சிங்க...?" என்று அவள் கோபமாய்ச் சீறினாள்...

"உனக்கு நிச்சயம் பண்ணுவதற்காக..."

"என்னது...?" என்று அதிர்ந்து போய் விழித்தவளை கண்டு,

"எப்போதும் மாதிரி இந்தத் தடவையும் தற்கொலை பண்ணிப்பேன்னு சொல்லி எங்களைப் பயமுறுத்தாதே... இந்தத் தடவை நீ எங்க பேச்சு கேட்கலைன்னா நானும், உங்கப்பாவும் விசத்தைக் குடிச்சிட்டு செத்து போறோம்... அப்புறம் நீ மட்டும் தனியா நிம்மதியாயிரு..." என்று மூக்கை சிந்தினார் அவர்...

இத்தனை நாள் தான் கூறிய மிரட்டலை இன்று தனது பெற்றோர் கையில் எடுத்துத் தன்னை மிரட்டுவதைக்

கண்டு அவள் கையாலாகாதவளாய் பார்த்தபடி நின்றாள்... இதுநாள் வரை ஒற்றை மகளின் மீது பாசம் கொண்டு அவர்கள் இவளது மிரட்டலுக்கு அஞ்சி வாய் பேசாது இருந்தனர்...

இப்போது மட்டும் எப்படி இப்படித் தைரியம் வந்தது என்று யோசித்துப் பார்க்க கூட இயலாதவளாய் அவள் துயரத்துடன் நின்றிருந்தாள்... மகளின் துயரம் அந்த அன்னையைப் பாதித்ததோ என்னமோ... அவள் அருகில் வந்து அணைத்து கொண்டவர்,

"உன் மேல் கண்மூடித்தனமான பாசம் வச்சியிருக்கிற நாங்க உனக்குக் கெடுதல் செய்ய நினைப்போமாடா மித்தும்மா...?"

"ஆனால் அம்மா... இந்தக் கல்யாணம்..." மேலே பேச முடியாமல் அவளது விழிகளில் நீர் நிரம்பியது...

"இந்தக் கல்யாணம் உனக்கு நன்மையைக் கொடுக்கும் மித்து... நாங்க பார்த்து இருக்கிற மாப்பிள்ளை உன்னைக் கண்ணுக்குள் வச்சு பார்த்துப்பான்..."

"என்னால் முடியலைம்மா... அவங்களை மறக்க என்னால் முடியலைம்மா..." என்று அன்னையை அணைத்துக் கொண்டு கதறியவள் தனது மூன்று வருட துக்கத்தினை அழுகையில் கரைத்தாள்...

மகள் ஏன் திருமணத்தை மறுக்கிறாள் என்று காரணம் தெரியாது இந்த மூன்று வருடங்களாகத் தவித்துக் கொண்டிருந்தவருக்கு மகளது மனதில் இருந்த காதல் தெரிந்ததும் பரிதவித்துப் போனார்... செல்ல மகள் காதல் தோல்வியில் வாடியிருப்பதைக் கண்டு அவரது மனம் வருத்தமுற்றது...

"தகுதி இல்லாத ஒருத்தனுக்காக நீ ஏன்ம்மா கண்ணீர் விடுற...?"

"அவங்களுக்கு எல்லாத் தகுதியும் இருக்கிறதும்மா..." என்று மறுத்து பேசிய மகளின் காதலின் ஆழம் அவருக்குப்

புரிவதாய்...

"உன்னைப் போன்ற ஒருத்தியை வேண்டாம் என்று மறுத்ததிலேயே தெரியவில்லையா அவனது தகுதி... அதற்காக உன்னை நீ வருத்துவதாலேயோ இல்லை இப்படிக் கல்யாணம் பண்ணிக்காம இருப்பதாலோ எதுவும் மாறப் போகிறதா...? ஒருவேளை அவன் மனம் திருந்தி வந்து உன்னை ஏற்றுக் கொள்வான் என்று காத்துக்கிட்டு இருக்கிறியா...?"

"இல்லைம்மா... அவருக்கு ஏற்கெனவே கல்யாணம் ஆகிருச்சு..." துயரத்துடன் கூறிய மகளை,

"மித்தும்மா..." என்று கதறலுடன் அணைத்துக் கொண்டார் சரண்யா...

மகளின் வேதனை அவரையும் வேதனையில் ஆழ்த்தியது... தான் நேசித்தவன் வேறு ஒருத்தியின் கணவன் என்பது எத்தனை வேதனையான விசயம்... அதை இத்தனை வருடங்களாய் யாரிடமும் சொல்லாமல் தனக்குள் போட்டு புதைத்துக் கொண்டு நடமாடிய மகளின் மனவலி அவருக்குப் புரிவதாய்...

"இந்தச் சின்ன வயசில் இத்தனை வேதனை உனக்கு வந்திருக்க வேண்டாம் மித்து... அதற்காக நீ இப்படி உன்னை வருத்துவதில் எந்தப் பிரயோஜனமும் இல்லை... உனக்காக இல்லைன்னாலும் உன்னை நம்பி இருக்கும் எங்களுக்காக நீ கல்யாணம் பண்ணிக்கச் சம்மதம் சொல்லு... உன் வாரிசை எங்கள் கைகளில் எடுத்து கொஞ்ச வேண்டும் என்று எங்களுக்கு ஆசை இருக்காதா...? கொஞ்சம் எங்களையும் யோசித்துப் பார் மித்தும்மா... உன்னை விட்டால் எங்களுக்கு வேறு யார் இருக்கிறார்கள்...? கடைசிக் காலத்தில் எங்களுக்குச் சந்தோசத்தையும், நிம்மதியையும் நீ தர கூடாதா...?"

அன்னையின் கெஞ்சுதலான வேண்டுதல் சங்கமித்ராவின் மனதினை கரைத்தது... ஆனாலும் பதில் ஏதும் சொல்லாது மௌனமாய் அந்த இடத்தை விட்டு அகன்றாள்... அவளது

மௌனமே அந்த அன்னைக்குப் போதுமானதாக இருந்தது...

அந்தக் கணம் அவர் மனதிற்குள் அர்ஜூனுக்கு நன்றி கூறிக் கொண்டார்... ஒற்றை மகள் என்று அவளிடம் வாதாட விரும்பாது இருந்தவர்களை அவன் தான் இப்படி எல்லாம் பேச சொல்லி தூண்டியது... அதற்கான பலனை கை மேல் கண்ட போது காலம் தாழ்த்தி விட்டோமோ என்கிற பரிதவிப்பு அவருள் எழுந்தது உண்மையே... ஒரு தாயின் மனம் அப்படித்தான் அலைப்பாய்ந்தது...

அன்று அப்படிக் காலம் தாழ்த்தாது இருந்தால் இன்று அவர்களது மகள் சிறப்பான ஒரு வாழ்வு வாழ்ந்திருப்பாளோ என்று அவர் சஞ்சலம் அடைந்தார்...

அந்நேரம் அங்கு வந்த தாமோதரன் மனைவியை அணைத்து, "எல்லாம் பார்த்துக்கிட்டு தான் இருந்தேன்... இடையில் நான் வந்தால் என்னிடம் செல்லம் கொஞ்சி காரியத்தைச் சாதித்து விடுவாள்ன்னு தான் ஒதுங்கி இருந்தேன்... இனி சரியாகிருவாள்..." என்க...

"ம்... எனக்கும் அந்த நம்பிக்கை இருக்கு..." என்ற சரண்யாவின் மனதில் எல்லையில்லா நிம்மதி எழுந்தது...

அன்று மாலை மாப்பிள்ளை வீட்டார் வந்ததும் சங்கமித்ராவை அழைத்துச் செல்ல பிரபாவதி வந்தார்... நிச்சயத்திற்காக மார்த்தாண்டமும், அவரும் அங்கு வருகை தந்திருந்தனர்... அவரது மகனும், மகளும் நல்லபடியாக வாழ்ந்திருந்தால் அவர்களும் இங்கு வந்திருப்பார்கள்... மனதில் எழுந்த பெருமூச்சுடன் தம்பி மகளை அழைத்துக் கொண்டு சென்றார் அவர்...

வரவேற்பறையில் அமர்ந்திருந்த அர்ஜூனின் குடும்பத்தினரை கண்டதும் சங்கமித்ராவுக்கு எல்லாம் புரிந்து போனது... அவள் கோபமாய் அர்ஜூனை பார்த்தாள்... அவனோ அவளது முகம் பார்க்காது அருகில் இருந்த அண்ணன் மகனிடம் மிகத் தீவிரமாக எதையோ பேசி கொண்டிருந்தான்... ஐந்து வயது சிறுவனிடம்

தீவிரமாகப் பேசி கொண்டிருப்பது போல் பாவனைக் காண்பிக்கும் அவனைக் கண்டு அவளது இதழ்களில் லேசாகப் புன்னகை அரும்பியது...

'இவனை...? கூட வரும் போது கூட ஒண்ணும் சொல்லலை... எவ்வளவு தவிச்சு போனேன்... அப்போதும் வாய் திறந்து ஒரு வார்த்தை சொல்லலையே... கல்லூளிமங்கன்...' என்று மனதிற்குள் அவனைத் தாளித்தபடி அங்கு நின்றிருந்தாள்...

நிச்சயத்திற்கான சம்பிரதாயச் சடங்குகள் முடிந்ததும் சங்கமித்ரா அர்ஜூனிடம், "நான் உங்க கிட்ட பேசணும்..." என்று அவனது காதை கடிக்க...

அவனோ அவள் கூறியதை கண்டு கொள்ளாது அருகில் இருந்த தாமோதரனிடம் சுவாரஸ்யமாகப் பேசி கொண்டிருந்தான்...

அதைக் கண்டு கோபமுற்ற சங்கமித்ரா அவனது கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு அருகில் இருந்த அறையை நோக்கி செல்ல... அவனோ வியப்பாய் அவளைப் பார்த்தாலும் அவள் இழுத்த இழுப்பிற்குத் தயங்காது உடன் சென்றான்...

உரிமையுடன் தனது கையைப் பற்றியிருக்கும் அவளது கையை உவகையுடன் பார்த்தபடி அவன் நடந்தான்... அவனது மனதிற்கு அப்படி ஒரு சந்தோசமாக இருந்தது...

அந்தக் காட்சியைக் கண்ட இரு வீட்டு பெரியவர்களுக்கும் நிறைவாக இருந்தது... அதே சமயம் சிறியவர்களின் வாழ்க்கை இனி சரியாகி விடும் என்கிற நம்பிக்கையில் சந்தோசமாய் இருந்தனர்...

அறைக்குள் நுழைந்த பின்னரே சங்கமித்ரா அவனது கையை விடுவித்தாள்... கோபமாய் அவனிடம் ஏதோ பேச போனவள் அவனது செய்கையில் நா உலர்ந்து போய் அவனைப் பயத்துடன் பார்த்தாள்...

அர்ஜூன் எதுவும் நடவாதவன் போல் கதவை சாத்தி தாள் போட்டு விட்டு அவள் புறமாய்த் திரும்பி நின்றவன்

கைகளைக் கட்டி கொண்டு அவளைப் பார்த்து கேள்வியாய் ஒற்றைப் புருவத்தை உயர்த்தினான்... அதில் அவள் பயந்து போய்ப் பின்னால் நகர்ந்தாள்...

"நானே உன் கிட்ட பேசணும்ன்னு நினைச்சேன் மித்து... அதுக்கு அவசியம் இல்லாம நீயே என்னைக் கூட்டிட்டு வந்துட்ட... என்ன பேசணும் சொல்லு...?" என்றபடி அவளின் அருகில் அவன் வந்தான்...

அவள் பயத்துடன் பின்னால் நகர்ந்தாள்... இரண்டே எட்டில் அவளது கைகளைப் பிடித்துத் தடுத்தவன் அதை மென்மையாய் வருடியபடி,

"சொல்லும்மா..." என்று கனிவாகக் கேட்க...

அவனது கனிவிலா அல்லது அவனது கை வருடலிலா எதில் என்று தெரியாது அவளுக்குக் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது...

"இந்தக் கல்யாணம் அவசியம் தானா அர்ஜூன்...?"

இதைக் கேட்கும் போதே அவளது குரல் உள்ளடங்கிப் போய் ஒலித்தது...

"உனக்கு எப்படியோ அது எனக்குத் தெரியாது...? ஆனால் எனக்கு இந்தக் கல்யாணம் மிகவும் அவசியம்..."

"நான் வேறு ஒருத்தரை காதலித்தவள்..."

அவளது காதலை இறந்த காலத்தில் குறிப்பிட்டவளை கண்டு அவனது மனம் அமைதியுற்றது...

"இப்போ நீ என்னைக் காதலிக்கலாமே..."

"அர்ஜூன்..."

"பதில் சொல்லு மித்தும்மா..."

"இந்தக் கல்யாணத்தால் உங்க வாழ்க்கை தான் வீணாய் போகப் போகுது..." மேலே விளக்கி சொல்ல முடியாது அவள் தயக்கத்துடன் நிறுத்தினாள்...

அவளது விழிகளுக்குள் தனது விழி கலந்தபடி, "என்னுடைய பதினெட்டு வயசில் பார்பி டால் போல் அழகாயிருந்த ஒரு பொண்ணைப் பார்த்து மயங்கி போய்க் காதலிக்க ஆரம்பித்தேன்... இதோ பதினாலு வருசமா அவளோட காதலுக்காக நான் காத்திக்கிட்டு இருக்கேன்... ம்ஹூம்... அப்படிச் சொல்றது கூடச் சரியா வராது... தவமிருக்கேன்னு தான் சொல்லணும்..." என்றவனைப் பிரமிப்பாய் பார்த்தாள் அவள்...

"இத்தனை நாள் காத்துக்கிட்டு இருந்தவன் இனி கல்யாணம் பண்ணிக்கிட்டு காத்துக்கிட்டு இருக்கப் போகிறேன்... ஒருவேளை உன் மனசு மாறலைன்னாலும் பரவாயில்லை... நல்ல நண்பனா உன் கூடவே நான் இருப்பேன்..."

"அர்ஜூன்..."

சங்கமித்ராவின் இதயம் கசிந்ததில் அவளது விழிகளும் சேர்ந்து கசிந்து வழிந்தது...

"ச்சு... இப்போ எதுக்கு இந்தக் கண்ணீர்...?" என்று அவளது கண்ணீரை துடைத்து விட்டவன்,

"உன்னைப் போல் தான் நானும்... உன்னை மறக்க முடியாது வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்ய முடியாது தவிக்கிறேன்... இந்தத் திருமணம் மூலம் என் தவிப்பிற்கும், உனது பெற்றோரின் பரிதவிப்பிற்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடிகிறது என்றால் அதற்கு நீ சம்மதம் தெரிவிப்பதில் என்ன தடை இருக்கிறது மித்தும்மா..."

அர்ஜூன் கூறுவது சரியென்றே தோன்றியது... ஆனாலும்...? விழிகளில் தவிப்புடன் அவள் அவனை ஏறிட்டாள்...

"நம் திருமணத்தால் நமது வாழ்க்கையில் எதுவும் மாறப் போவதில்லை... நீ நீயாக இருக்கலாம்... அப்படியே மாற்றம் வந்தாலும் அது உன்னிடம் இருந்து தான் வர வேண்டும்...

நானாக உன்னை எந்தத் தொந்தரவும் செய்ய மாட்டேன்..." என்று அர்ஜூன் அவளுக்கு உறுதியளித்தான்...

அதில் நிம்மதியுற்றவளாய் அவள் சரியென்று சம்மதம் தெரிவித்தாள்... அவளை வாஞ்சையுடன் பார்த்தவன்,

"என்னுடனான உன் வாழ்க்கையில் சந்தோசம் மட்டுமே நிலைத்து இருக்கும்..." என்றவன் அவள் புறம் தனது வலக்கையை நீட்டினான்...

சிறிது தயங்கினாலும் அவள் தனது கையை அவன் கை மீது வைக்கத் தவறவில்லை... அதை இறுக்கமாய்ப் பிடித்துக் கொண்டவனின் இறுகிய பிடியே சொல்லாமல் சொல்லியது 'உன்னை என்றும் கைவிடேன்' என்று...

****

"ஸ்வே... என்னோட ரூமுக்குக் கொஞ்சம் வந்துட்டு போ..."

இன்டர்காமில் ஒலித்த ஜாஸ்மினின் கட்டளைக்கிணங்க ஸ்வேதா அவரது அறைக்குச் சென்றாள்... அவர் முன்னிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த ஆடவனைக் கண்டு கொள்ளாது ஜாஸ்மினை பார்த்து,

"சொல்லுங்க மேம்..."

"உனக்கு என்று தனியா ஒரு கிராபிக்ஸ் டிசைனரை அப்பாயிண்ட்மென்ட் பண்ணியிருக்கேன்... உன்னோட வேகமான டிசைனிங் வொர்க் பார்த்து தான் நான் இந்த முடிவுக்கு வந்தேன்..."

அவர் கூறுவதும் அவளுக்குச் சரியென்று தோன்றியது... அவள் வடிவமைக்கும் ஆடைகளுக்கு என்று கணினி தெரிந்த ஒருவர் உடன் இருப்பது நல்லது தான்... வேலையும் துரிதமாக முடியும்...

"ஓகே மேம்..." என்றாள் பணிவாக...

"ஹி இஸ் மிஸ்டர். சரண்..." என்று தன் முன் அமர்ந்திருந்த ஆடவனை அவளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்...

ஸ்வேதாவும் புன்னகையுடன் கை குலுக்குவதற்காக அந்த ஆடவன் முன் தன் கையை நீட்டியவள் அந்த ஆடவனை அடையாளம் கண்டதும் நெருப்புப் பட்டது போல் படக்கென்று தனது கையை இழுத்து கொண்டாள்... ஏனெனில் அங்கு அமர்ந்திருந்தது சரவணன்...

அவனைக் கண்டு அவள் திகைத்து நின்றது ஒரு நொடி தான்... மறுநொடி அவனைக் கோபமாய் முறைத்து பார்த்தாள் அவள்... அவனோ கூலாக அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்...

"ஸ்வே என்னாச்சு...?"

"ஒண்ணும் இல்லை மேம்..." என்றவள் தனது கரத்தினைக் குவித்து அவனுக்கு வணக்கம் தெரிவித்தாள்...

பதிலுக்குக் கரம் குவித்த சரவணன் தனது பார்வையைச் சிறிதும் மாற்றிக் கொள்ளவில்லை...

அதில் எரிச்சலுற்றவளாய், "மேம் நான் போகலாமா...?" என்று கேட்க...

"ஓகே... நீ போகலாம்... இன்னும் பைவ் மினிட்சில் சரண் உன்னோட கேபினுக்கு வருவார்..." என்று அவளை அனுப்பி வைத்து விட்டுச் சரவணனை கூர்ந்து பார்த்தார் அவர்...

"ரொம்ப ரொம்ப நன்றி மேம்..." என்றான் அவன் அழகான ஆங்கிலத்தில் நெகிழ்ச்சியாக...

"மிஸ்டர். சரண்... இதை நான் உங்களுக்காகச் செய்யலை... ஸ்வேக்காகத் தான் செய்கிறேன்... ரொம்ப டேலண்ட்டான பொண்ணு... சில சமயம் பித்துப் பிடிச்சவள் மாதிரி இருக்கிறதை பார்க்கும் போது பரிதாபமாக இருக்கும்... அவள் மனதில் என்ன இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை... அதில் நீங்க இருந்தால் எனக்கு ரொம்பச் சந்தோசம்... அப்படி இல்லை என்றால் நீங்க அவளை விட்டு விலகி சென்று விட வேண்டும்... அவளை மேலும் கஷ்டப்படுத்திப் பார்க்க என்னால் முடியாது..." என்று

அழுத்தம் திருத்தமாய்க் கூறியவரை கண்டு அவன் நன்றியுடன் கை கூப்பினான்...

"நீங்கள் சொன்னது போல் நான் நடந்து கொள்கிறேன்..." என்றவன் அவரிடம் விடைப்பெற்று ஸ்வேதாவின் அறைக்கு வந்தான்...

கதவை தட்டி விட்டு உள்ளே வந்தவன் முகத்தில் கையிலிருந்த கோப்பை விசிறியடித்த ஸ்வேதா, "சரணாம் சரண்... விளக்கமாத்துக்குப் பட்டுக் குஞ்சம் போல்..." என்று அவனைப் பார்த்துக் கோபமாய்ப் பல்லை கடித்தாள் அவள்...

கீழே விழுந்து சிதறிய காகிதங்களைப் பொறுக்கி எடுத்துக் கோப்பில் வைத்து மூடியவன் அதை அவளது மேசை மீது வைத்தான்...

"நான் எங்கே போனாலும் அங்கே எல்லாம் வந்து ஏன் என் உயிரை வாங்கிற...?"

அவனது அமைதி மேலும் அவளது கோபத்தினை அதிகப்படுத்தியது... அதற்கும் அவன் அமைதி காத்தான்...

"உண்மையில் உனக்குக் கிராபிக்ஸ் டிசைன் பண்ண தெரியுமா...? இல்லை அதுவும் பொய்யா...?"

"நான் படித்தது கம்ப்யூட்டர் இன்ஜினியரிங்... என்னோட பயோடேட்டா உங்க மெயிலில் இருக்கும்... பாருங்க..." என்று அதற்கு மட்டும் பதிலளித்தான்...

அதற்கும் அவனை முறைத்து பார்த்தவள் அறையின் மூலையிலிருந்த மேசையைச் சுட்டி காட்டி, "அங்கே போய் உட்கார்ந்து வேலையைப் பார்..." என்றவள் அதன் பின் மறந்தும் அவனை நிமிர்ந்து பார்க்கவில்லை...

அந்தளவுக்குத் தனது வேலையில் மூழ்கி போனாள்... அது போல் அவனுக்கு ஒரு வேலையும் கொடுக்கவும் இல்லை... அப்படி ஒருவன் அங்கிருப்பதை அவள் கண்டு கொண்டதாய் தெரியவில்லை...

ஆனால் சரவணன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்... சும்மாவே மாடலிங் பண்ணும் பெண்களைப் போன்று மெலிந்த உடல்வாகு உடையவள் அவள்... இப்போது இன்னமும் மெலிந்து போயிருந்தாள்... கண்களுக்குக் கீழிருந்த கருவளையங்கள் அவளது தூங்கா இரவுகளை அப்பட்டமாய்ப் பறைச்சாற்றியது...

அதைக் கண்டு அவனுக்கு அத்தனை வேதனையாக இருந்தது... அவளது கவலைகள் அனைத்திற்கும் அவன் அல்லவா காரணம்... மனதிற்குப் பாரமாக இருந்தது...

திடுமென அவள் ஏறிட்டுப் பார்த்ததும் அவன் தனது பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்...

"இடியட்..." என்று முணுமுணுத்துக் கொண்டே அவள் தனது வேலையைப் பார்க்கலானாள்...

சரவணன் வேறு வேலை இல்லாததால் மேசை மீதிருந்த காகிதத்தில் எதையோ கிறுக்க ஆரம்பித்தான்...

நேரம் சென்று கொண்டிருந்ததே தவிர ஸ்வேதா வேலையை முடிப்பதாய் தெரியவில்லை... அதனால் பொறுமை இழந்தவனாய் எழுந்தவன் நேரே அவள் முன் வந்து நின்றான்...

"என்ன...?" என்று எரிச்சலுடன் நிமிர்ந்தாள் அவள்...

"டைமாகிருச்சு..." என்று தயங்கியவனைப் பார்வையால் சுட்டெரித்தவள்,

"வேலை செஞ்சு ரொம்ப டயர்டாகிட்டீங்களோ...?" என்று நக்கலாய் கேட்டவள் வாயில் புறம் கை நீட்டி,

"ப்ளீஸ்... கெட் அவுட்..." என்று கூற...

அவமானத்தில் முகம் கருத்த போதும் அவன் மௌனமாக வெளியேறினான்... ஏனெனில் பெண்ணவள் மனதினை அதை விட அதிகமாய் அவன் காயப்படுத்தி இருக்கிறானே...

சரவணன் அறையை விட்டு வெளியேறியதும் நாற்காலியில் சாய்ந்து அமர்ந்த ஸ்வேதா மூலையில் அவன் அமர்ந்திருந்த இடத்தைப் பார்த்தாள்... எதையோ எழுதி கொண்டிருந்தது போன்று அவனது தோற்றம் அவளுள் மசமவென்று எழுந்தது... அவள் தனது வேலையில் மூழ்கி இருந்தாலும் அவளையும் அறியாது அவனைக் கண்காணித்து இருக்கிறாள்...

மனதில் ஆவல் உந்த அவள் மெல்ல எழுந்து அந்த மேசையை நோக்கி சென்றாள்... அங்கு இருந்த காகிதத்தைக் கையில் எடுத்து பார்த்தவள் அப்படியே திகைத்து நின்றாள்...

சரவணன் ஸ்வேதாவின் உருவத்தைத் தான் வரைந்திருந்தான்... புடவையில் அழகாய் இருந்த ஸ்வேதா தனது கைகளைத் தண்ணீரில் விட்டு விளையாடுவது போலிருந்தது அந்த ஓவியம்... புடவை, தண்ணீர் நிறைந்த அண்டா எல்லாம் அவளுக்கு எங்கோ பார்த்த ஞாபகம்... மூளையைக் கசக்கி யோசித்ததில் மூன்று வருடங்களுக்கு முன் வந்த அந்த மாட்டு பொங்கல் அவளது நினைவில் எழுந்தது...

புடவை வடிவமைப்பை கூடத் தெளிவாக வரைந்திருந்த சரவணனின் ஞாபகசக்தியை கண்டு அவள் உள்ளம் உறைந்தாள்...

அந்தக் கணம் அவள் இத்தனை நாள் தனக்குத் தானே போட்டிருந்த இரும்பு கவசத்தில் சிறு கீறல் உண்டானது...!!!

****

பேருந்து நிலையத்தில் நின்றிருந்த பிரகதீஸ்வரி நொடிக்கு ஒரு தரம் சாலையைப் பார்த்தாள் பின்பு மீண்டும் தனது கைக்கடிகாரத்தில் மணி பார்த்தாள்... அப்படி ஒன்றும் நேரமாகி விடவில்லை தான்... மாலை ஆறு மணிக்கே இரவு போல் வானம் இருட்டி கொண்டு வந்தது... மழை வரும் போலிருந்தது... அதனால் விரைவாகப் பேருந்து வந்தால் நன்றாக இருக்கும் என்று அவள் நினைத்தாள்...

"என்னம்மா பாப்பா... பஸ்சுக்கு காத்துக்கிட்டு இருக்கியா...?" என்ற வழிசலான குரலில் திரும்பி பார்த்தாள் அவள்...

அவளது ஊரில் தங்கியிருந்து வேலை பார்க்கும் அவனைக் கண்டு அவளது முகத்தில் எரிச்சல் படர்ந்தது... அன்று தண்ணீர் இறைக்கும் போது அவன் தன்னைத் தவறாகப் பார்த்ததாகச் சித்தார்த் கோபப்பட்டது அவளது நினைவில் என்றும் இருப்பதால் அவனிடம் அவள் சற்று ஜாக்கிரதையாகவே இருப்பாள்... ஆனால் இன்று அவள் அவனிடத்தில் தனியாக வசமாய் மாட்டி கொண்டாள்... இருந்தாலும் தைரியத்துடன் அவனை முறைத்து பார்த்தாள்...

"கேள்வி கேட்டுக்கிட்டே இருக்கேன்... நீ பதில் பேசாமல் இருந்தால் எப்படிப் பாப்பா...?"

ஈயென்று இளித்தபடி அவள் அருகில் நெருங்கி வந்தவன் அவளது கையைப் பிடிக்க, அவளோ செய்வதறியாது திகைத்து நின்றாள்... அந்நேரம் அந்த வழியாகச் சித்தார்த்தின் கார் சென்றது... அவள் நின்றிருந்த கோலம் கண்டு சிறிது தயங்கியதோ என்னமோ... அவள் அருகில் வந்ததும் அதன் வேகம் சற்று மட்டுப்பட்டது... ஆனால் சித்தார்த் கீழே இறங்கவில்லை...

அன்று அந்த ஆள் தவறாகப் பார்த்ததற்கே கோபப்பட்ட சித்தார்த், இன்று அவன் இப்படித் தனது கையைப் பிடித்துக் கொண்டிருப்பதைக் கண்டும் ஒன்றும் பேசாது காரில் இருந்து இறங்காது இருப்பதைக் கண்டு அவளது மனம் வெகுண்டது...

யார் தயவும் தனக்குத் தேவையில்லை என்று மனதிற்குள் சிலிர்த்து கொண்டவள் தனது காலில் இருந்த செருப்பைக் கழட்டி அவனை மூஞ்சி முகரை பார்க்காது அடி வெளுத்து விட்டாள்... அவள் அவனை அடிப்பதை கண்டு சாலையில் சென்ற சிலர் என்னவென்று கேட்டதில் அங்குச் சிறு கூட்டம் கூடி விடச் சித்தார்த்தின் கார் அதற்கு மேல் அங்கு இருக்காது வேகம் எடுத்தது...

அதை வெறுப்புடன் பார்த்து கொண்டிருந்தாள் பிரகதீஸ்வரி... தன்னைக் காப்பாற்ற வராத கணவன் மீது அவளுக்குப் பெரும் கோபம் வந்தது...

அந்த ஆள் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஓடி விட அவள் கனத்த மனதுடன் ஊர் திரும்பினாள்...

மறுநாள் சித்தார்த் காரில் நிறுவனத்திற்குச் சென்ற போது பிரகதீஸ்வரி அதனை வழிமறித்தார் போன்று வந்து நின்றாள்... மலர்ந்த முகத்துடன் காரை நிறுத்திய சித்தார்த் விரிந்த புன்னகையுடன் கீழே இறங்கினான்...

காரின் முன் புறம் வந்து நின்று அதன் மீது கைகளைப் பின்பக்கமாக ஊன்றி ஸ்டைலாகச் சாய்ந்து நின்றபடி மனைவியைப் பார்த்தவனின் புன்னகை இன்னமும் விரிந்தது... அவனது புன்னகையைக் கடுப்புடன் பார்த்து கொண்டிருந்தாள் அவள்...

அவனோ அவளை விருப்பமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான்...

"ஏன் இப்படிச் செஞ்சீங்க...?" அவள் உஷ்ணத்துடன் அவனைப் பார்த்து கேட்டாள்...

"நான் ஒண்ணும் பண்ணலையே..." என்றவனது பார்வை அவளது மேனியில் கண்டபடி ஊர்ந்து ஏதேதோ பண்ணியது...

"பொறுக்கி மாதிரி என்ன பார்வை வேண்டியிருக்கு..." என்று அவள் முணுமுணுத்தது அவனது காதில் விழுந்து விட்டது...

அவளது 'பொறுக்கி' என்ற வார்த்தையில் இன்னமும் தைரியம் வர பெற்றவனாய் அவனது பார்வை காதலையும், தாபத்தையும் தாண்டி காமத்தை அப்பட்டமாய்ப் பறைச்சாற்றியது... மூன்று வருடம் அடக்கப்பட்ட அவனது காதல் அவனது பார்வையில் காமமாய் வழிந்தோடியது...

அவளது இடையில் பல நிமிடங்கள் தேங்கி நின்ற அவனது பார்வையில் முகம் கருத்தவளாய் அவள் தனது புடவையை மேலேற்றி விட்டு கொண்டாள்... அதில் நிமிர்ந்தவனின் பார்வை பதிந்த இடத்தைக் கண்டு அவளது மனம் கூசி போனது... கணவனாக இருந்தாலும் அவனது அப்பட்டமான இந்தப் பார்வையைக் கண்டு அவள் முகத்தைச் சுளித்தாள்...

அவனோ அவளது சிணுக்கத்தைச் சிறிதும் கண்டு கொண்டதாய் தெரியவில்லை... புன்னகை முகம் மாறாது மனைவியை அணு அணுவாய் ரசித்துப் பார்த்தான்...

"நான் கேட்ட கேள்விக்கு நீங்க இன்னும் பதில் சொல்லலை...?"

"என்ன கேட்ட...?" மறந்தவன் போல் அவன் நடித்தான்...

"ஏன் இப்படிச் செஞ்சீங்கன்னு கேட்டேன்...?"

"இதேது வம்பாய் போச்சு... நீ அங்கு நிற்கிற... நான் இங்கே நிற்கிறேன்... இதில் நான் உன்னை என்னம்மா பண்ணினேன்...? கையைப் பிடிச்சு இழுத்தேனா...? இல்லை கட்டி அணைச்சு முத்தம் கொடுத்தேனா...? இதில் ஒண்ணையும் நான் பண்ணலையே... நீ இப்படி என்னை அநியாயமாகக் குற்றம் சாற்றுகிறாயே..." என்று கேள்விகளை அடுக்கியவனின் மனதில் அதை எல்லாம் செய்துவிடும் தாபம் வழிந்ததை அந்தப் பேதை பெண் அறியவில்லை...

"எப்படி உங்களால் இப்படி ஒன்றும் தெரியாதது போல் நடிக்க முடியுது...?" என்று கேட்டவளின் குரலில் துயரம் நிரம்பி வழிந்தது...

"அட உண்மையா சொல்றேன்... எனக்கு ஒன்றுமே தெரியாதும்மா..." என்றான் அவன் கள்ள சிரிப்புடன் இருபொருள்பட...

அவனை வெறுப்புடன் பார்த்தவள், "நீங்க அவனோட கையை வெட்டியது ரொம்பவும் பாவச்செயல்... பாவத்திற்கு

மேல் பாவமாய்ச் செய்து கொண்டே போறீங்க... இந்தப் பாவத்தை எல்லாம் எங்கே போய்த் தீர்க்க போறீங்களோ...? இதற்கு எல்லாம் பின்னாளில் நீங்க கஷ்டப்படப் போறீங்களோன்னு நினைக்கும் போது எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு..." என்று வேதனையுடன் கூறியவளை அவனும் வேதனையுடன் பார்த்தான்... ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"என்ன லூசு போல் உளருகிறாய்...? நான் யாருடைய கையை வெட்டினேன்...? எதற்காக வெட்டினேன்...? ஏன் வெட்ட வேண்டும்...?"

சரளமாய்ப் பொய்யாய் கேள்வி கேட்டவனை அவள் வெறித்துப் பார்த்தாள்...

"நேற்று என் கையைப் பிடித்து இழுத்தவனின் கையை வெட்டியது நீங்க தான்னு எனக்குத் தெரியும்..."

அவளது வார்த்தையில் அவனது விழிகள் மின்னியது...

'பேபி... உனக்காகத் தான் நான் இதைச் செய்தேன் என்று நீ புரிந்து கொண்டாயா...? இந்தச் செயலின் பின்னால் இருக்கும் உன் மீதான என் காதலை நீ உணர்ந்தாயா பேபி...?' மனதிற்குள் அவளிடம் கேள்வி கேட்டவன் அவளை இமைக்காது பார்த்தான்...

"எனக்கும் அவனுக்கும் என்ன வாய்க்கால் வரப்பு தகராறா...? இல்லை என்னிடம் எதையாவது திருடினானா, நான் அவன் கையை வெட்டுவதற்கு...? எதுவாக இருந்தாலும் யோசித்துப் பேசு..." என்றான் அழுத்தமான குரலில்...

"இதில் யோசிக்க என்ன இருக்கிறது...? என் கையைப் பிடித்து இழுத்ததற்கு அவனின் கையை வெட்டி இருக்கீங்க..."

"அது என்ன தேவைக்கு...? உனக்காக நான் ஏன் அதைச் செய்ய வேண்டும்...?" என்றான் அவனும் சிறிதும் விட்டு கொடுக்காது...

"உடல் தேவைக்கு..." என்றவளது பார்வை வெறுப்பாய் அவன் மீது படிந்தது...

முதலில் காதல் இல்லை என்றாள்... அதை அவன் பொறுத்துக் கொண்டான்... இதோ இப்போது காமம் மட்டுமே இருக்கிறது என்கிறாள்... அவனால் இதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை...

"என்னடி சொன்ன...?" என்று உறுமியபடி அவள் அருகில் வந்தவன் அவளது தாடையை இறுக பற்றியதில் அவளுக்கு வலி எடுத்த போதும் அவள் சளைக்காது அவனது பார்வையைத் தாங்கி நின்றாள்...

அதில் அவனது ஆத்திரம் இன்னமும் கிளர்ந்து எழுந்தது...

"ஆமாம்டி... நான் தான் அவன் கையை வெட்டினேன்... அதுக்கு இப்போ என்னங்கிற...? உன் கையைத் தொட்டதுக்குத் தான் அவன் கையை வெட்ட சொன்னேன்... உன்னோட இந்த உடல் எனக்கு மட்டுமே சொந்தமானது... வேறு எவனும் கை வைப்பதை பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க மாட்டான் இந்தச் சித்தார்த்... உன்னை ஒருத்தன் பார்த்தால் கூட அவனது கண்களை நோண்டி எடுத்து குருடனாக்கி விடுவேன்... அதே போல் உன்னை எவனாவது காதலிச்சான்னு வை... அடுத்த நொடி அவனோட உயிரை பறிக்கவும் நான் தயங்க மாட்டேன்... எனக்குச் சொந்தமானதை எவனுக்கோ தூக்கி கொடுக்க நான் என்ன கையாலாகாதவனா...? கொன்னுருவேன்டி கொன்னு... அது எவனாக இருந்தாலும் சரி... எந்தக் கொம்பனாக இருந்தாலும் சரி..." என்று சிங்கமாய்க் கர்ஜித்தான் அவன்...

சித்தார்த் கோபமாய்க் கூறிய அத்தனை வார்த்தைகளின் பின்னாலும் அவனது அதீத காதல் இருந்தது... அந்தக் காதலை அவனது கோபம் மறைத்தது... அதை உணர வேண்டியவளோ உணராது அவனை வெறுப்புடன் பார்த்தாள்...

அடுத்த நொடி அவளது கரம் அவனது கன்னத்தில் வேகமாய் இறங்கியது... அவளது இந்தச் செயலை சற்றும் எதிர்பார்க்காத சித்தார் திகைத்து போனவனாய் தனது கையை விலக்கி அவளை விட்டு தள்ளி நின்றான்...

"ச்சீ... இப்படி எல்லாம் பேச உங்களுக்கு வெட்கமாக இல்லை... நீங்க மனுசனே இல்லை... ராட்சசன்... கொலைக்காரன்... காமாந்தகன்..." என்று வெறுப்பும், அருவருப்புமாய் அவனைப் பார்த்து கூறியவள் அடுத்த நொடி அங்கிருந்து விரைந்து சென்று விட்டாள்...

மனைவி செல்வதைப் பார்த்துக் கொண்டிருந்த சித்தார்த்தின் முகத்தில் கோபத்திற்கான சாயல் சிறிதும் இல்லாது இருந்தது விந்தையிலும் விந்தை... அவள் அடித்த கன்னத்தைத் தடவி பார்த்தவனுக்கு அவளது தொடுகை தித்திப்பாய்த் தித்தித்தது... வெகு வருடங்களுக்குப் பின் அவளாய் வந்து அவனைத் தொட்டு இருக்கிறாள்...

அடிப்பதற்காகவது அவளது கை அவனைத் தீண்டியதை நினைத்து அவனது உதடுகளில் புன்னகை நெளிந்தது... மனதில் உல்லாசம் பொங்க அவள் சென்ற திசையைப் பார்த்தபடி அவன் நின்றிருந்தான்...

தன் காதலை மதிக்காத மனைவியிடத்தில் காதலை சொல்ல கூட ஈகோ பார்த்து அவளிடம் இருந்து விலகி நின்றவன் அவன்... இப்போது அவள் கொடுத்த அடியில் மகிழ்ந்து போய் அவன் நின்றிருப்பதிலேயே தெரிந்து போனது, அவனது ஈகோ பெருத்த அடி வாங்கியதை...

அதை அறியாத பாலகனாய் சித்தார்த் அறியாமையுடன் நின்றிருந்தான்...!!!

"நான் ராட்சசன் தான்...
உன்னை வதைப்பவர்களை
வதைப்பதால்...
நான் கொலைக்காரன் தான்...
உன் உயிரை என்னுள் ஊற்றி
கொள்ளத் துடிப்பதால்...

நான் காமாந்தகன் தான்...
நீ எனக்கு வேண்டுமாதலால்...
அது மனதளவில் என்றாலும் சரி...
உடலளவில் என்றாலும் சரி...
என்னுள் நீ உறைய வேண்டும்...
ராட்சசன், கொலைக்காரன், காமாந்தகன்
எத்தகைய பெயர் கொண்டு
என்னை நீ அழைத்தாலும்
கவலையில்லை எனக்கு...
எனக்கு நானே ஒரு பெயர்
சூட்டியிருக்கிறேன்... அது,
உன் காதலன் நான்
தான் என்று...
அதில் நறுமணமாய் மலரும்
எந்தன் உயிர் பூ...!!!"

நனவாகும்...!!!

மனைவியின் சிறு தொடுகையில் உண்டான உவகையினால் உள்ளம் துள்ளியதை உணர்ந்த சித்தார்த்திற்கு ஒன்று மட்டும் நன்கு புரிந்தது... இத்தனை வருடங்களில் அவன் எந்தளவிற்கு மனைவியைத் தேடி இருக்கிறான்... எந்தளவிற்கு அவளின் அருகாமையை விரும்பி இருக்கிறான் என்று...

முப்பத்தியொரு வயது ஆண்மகனின் உணர்வுகள் கட்டுக்குள் அடங்க மறுத்தது... அந்தக் கணம் மனைவி வேண்டுமென்றே அவனது ஒவ்வொரு அணுவும் அடம்பிடித்துத் துடித்தது...

தன்னவளை சந்திக்கும் வரை அவன் காதலை பற்றி அறியாதவன்... யாராலும் சாய்த்து வீழ்த்த முடியாத இரும்பு மனம் கொண்டவன் அவன்... அப்படிப்பட்டவனையும் தனது அன்பால் வீழ்த்தி சாய்த்தாள் அவனது மனைவி... அன்று பெருகிய அவனது காதல் இதோ இந்த நொடி வரை குறையவில்லை...

இத்தகைய காதல் இருந்தும் ஏன் இந்தப் பிரிவு...? என்று அவனது மனம் வேதனையில் உழன்றது... இருவரில் ஒருவர் வேறுபட்டு இருந்தாலும் அந்தக் காதல் தோல்வி அடைவதில் அர்த்தம் இருக்கிறது... ஆனால் இங்கு இருவரும் ஒத்த மனமுடையவர்கள்... இருந்தும் இந்த வலி, வேதனை ஏன்...?

இயலாமையுடன் தலையை அழுந்த கோதி கொண்டவனின் விழிகள் தொலைவில் தெரிந்த தொடுவானை வெறித்துப் பார்த்தது... இறுதியில் அவர்களது வாழ்க்கையும் தொடுவானம் போலாகி விட்டதை வெறுமையுடன் நினைத்துப் பார்த்தான்...

நேற்று அந்தப் பொறுக்கி மனைவியிடம் வம்பிழுத்ததைச் சித்தார்த் கண்ட போதே அந்த நொடி அவனைக் கொன்று விடும் ஆத்திரம் அவனுள் எழுந்தது... காரை நிறுத்தி விட்டு

இறங்க தான் அவன் நினைத்தான்... அந்தக் கணம் அன்று அவள் கூறிய வார்த்தைகள் அவனது காதில் ஒலித்தது...

"வேண்டாம் விடுங்க... என்னைக்காவது ஒருநாள் அவன் என்னிடம் மாட்டாமலா போவான்... அன்னைக்கு இருக்கிறது அவனுக்கு..."

அன்று அவளது வார்த்தையில், முகத்தில் தெரிந்த தீவிரத்தை இன்றும் உணர்ந்தவனின் ஆத்திரம் சற்று மட்டுப்பட்டது... அவனது மனைவியவள் ஒன்றும் பயந்த பெண் அல்ல... எதையும் தைரியத்துடன் எதிர் நோக்கும் மனதிடம் உடையவள்... அந்த மனதிடம் இருப்பதால் தானே கட்டிய கணவனான அவனுடனும் போராடி கொண்டிருக்கிறாள்... அதை நினைத்தவனுக்குப் புன்னகை மலர்ந்தது...

மனைவி மேல் இருந்த நம்பிக்கையில் அவன் காரிலிருந்து இறங்கவில்லை... அவனது நம்பிக்கையைப் பொய்க்காது அவனவள் அந்தப் பொறுக்கியை செருப்பால் அடித்து விட்டாள்... அந்தக் காட்சியைக் கண் குளிர கண்ட பிறகு தான் அவன் அங்கிருந்து கிளம்பி சென்றது...

ஆனாலும் பயமும், தவிப்புமாய் அவள் தனது வருகையை எதிர்பார்ப்புடன் பார்த்திருந்தது அவனது மனதில் பெரும் காயமாய்... அவளுக்கு ஓடி போய் உதவியிருக்க வேண்டுமோ என்று அவனது உள்ளம் துடித்தது... இன்று அவளுக்கு உதவ அவன் இருக்கிறான் சரி... நாளை அவன் இல்லாத நேரத்தில் இப்படி ஒரு அசம்பாவிதம் ஏற்படுமேயானால் அதை அவள் தானே தனியே சமாளிக்க வேண்டும்... அதனால் தான் அவளைச் செயல்படுத்த விட்டு விட்டு அவன் விலகி நின்றது...

பசித்தவனுக்கு மீனை உணவாகக் கொடுப்பதை விட, அந்த மீனை தூண்டில் போட்டுப் பிடிக்கக் கற்றுப் போடுப்பது தான் சாலச் சிறந்தது என்று நம்புகிறவன் அவன்... அவனது செய்கை அடுத்தவருக்குத் தவறாகத் தெரியலாம்... ஆனால் அவனைப் பொருத்தவரையில் அது சரியே...

ஆனாலும் அந்தப் பொறுக்கியை அப்படியே விட்டு விட அவனுக்கு விருப்பம் இல்லை... அன்று தன்னவளை பார்த்ததற்கே அவனுக்கு அப்படி ஒரு கோபம் வந்தது... இப்போது அவன் அவளது கையைப் பிடித்து இழுத்திருக்கிறான்... இழுத்த அவனது கைக்குத் தண்டனை கொடுக்காவிட்டால் சித்தார்த்தால் நிம்மதியாக இருக்க முடியாது...

சித்தார்த் நினைத்த மறு நொடியில் உடனே அதைச் செயலாற்றி விட்டான்... அவனது அகராதியில் எல்லாமே வெட்டு ஒன்று துண்டு இரண்டு தான்... அவனது நீதிமன்றத்தில் பாவப்படுவதற்கோ, மன்னிப்பதற்கோ இடம் கிடையாது...

மனைவியைத் தொட்ட அந்தப் பொறுக்கியின் கை வெட்டப்பட்டுக் கிடந்ததைக் கண்ட போது தான் அவனது மனம் சிறிது அமைதியுற்றது... அவள் அவனுடைய மனைவியாக இருந்த போதும் அவனே அவளைத் தொட தயங்கி தள்ளி நின்று கொண்டிருக்கும் போது இந்தப் பொறுக்கி இப்படி ஒரு காரியத்தைச் செய்யலாமா...?

அவனது எண்ணம் மீண்டும் மனைவியிடத்தில் வந்து நின்றது... அதிலும் அவள் அந்தப் பொறுக்கிக்காகத் தன்னிடத்தில் வந்து வக்காலத்து வாங்கியது அவனுக்குப் பெருத்த கோபத்தினை உண்டு பண்ணியது...

"ஆமாம், இவள் பெரிய அன்னை தெரசா... அவனுக்கு ஒன்று என்றதும் வரிந்து கட்டிக்கிட்டு சண்டைக்கு வந்தாகிறது... உனக்காகத் தான்டி அப்படிச் செய்தேன்... அதைக் கூடப் புரிஞ்சிக்க முடியாத அறிவாளியாடி நீ... தன்னோட பொண்டாட்டி கையை வேறொருத்தன் பிடிச்சு இழுத்தா எந்தப் புருசனுக்கும் என்னை மாதிரி தான் கோபம் வரும்... அப்படிப்பட்ட ஒரு கோபம் தான் எனக்கும் வந்தது... அதற்கு உனக்கு இத்தனை கோபம் வருகிறதா...? உன் உடம்புக்காகத் தான் நான் இதைச் செய்தேனா... குட் ஜோக்... ஆமாம்டி, உன் உடம்புக்காகத் தான் நான் இதைச் செய்தேன்... உடனே நீ என்னோடு வாழ வந்துருவியா...?

ஏதோ பேசணும்ன்னு வாய்க்கு வந்ததை நீ பேச கூடாது... என்னோட செயலுக்குப் பின் இருக்கும் என் காதலை உணரும் வழியைப் பார்... அதை விட்டு விட்டுத் தாம் தூம்ன்னு கோபத்தில் குதிச்சிக்கிட்டு..."

கோபத்துடன் முணுமுணுத்தவன் அதற்கு மேல் அங்கிருக்கப் பிடிக்காதவனாய் காரை கிளப்பிக் கொண்டு நிறுவனத்திற்குச் சென்றான்... அங்கு வரிசை கட்டி நின்ற வேலைகள் அவனை ஆக்டோபஸாய் ஆக்கிரமித்துக் கொண்டது... அதில் அவன் மனைவியை மறந்தவனாய் வேலையில் மூழ்கி போனான்...

அவன் தன் மனைவியைக் காதலித்தான் தான்... ஆனால் அதை விட அதிகமாய்த் தன்னை, தன் அடையாளத்தை மிகவும் நேசித்தான்... அதனால் தான் அவனால் தனது மனக் கவலையை ஒதுக்கி வைத்து விட்டுத் தொழிலில் கவனம் செலுத்தி வெற்றி பெற முடிகிறது...

'தி கிரேட் சித்தார்த்' வாழ்க்கையில் தோல்வியைச் சந்தித்தாலும், தொழிலில் தோல்வியடைய விரும்பவில்லை... பெண்ணவள் போன்று ஆணின் மனம் கிடையாது... அவர்களது உலகம் வேறு... அவர்களது குணம் வேறு...

அவர்களுக்கும் மனம் உண்டு... அதில் கடலளவு காதல் உண்டு... ஆனாலும் அதை விட வையகத்தை வெற்றிக் கொள்ளும் வெறி அந்த வானளவு உண்டு... இது மறுக்க முடியாத உண்மை...

இந்த ஒன்றில் தான் ஆணும், பெண்ணும் வேறுபடுகின்றனர்... இந்த ஒன்றை தாண்டி வர முடியாது சித்தார்த்தின் காதல் அதில் சிக்கி தவித்தது...

'சித்தார்த் மனைவி கூட வாழலலைன்னா என்ன...? அவரோட செல்வாக்குக்கு, பெர்சனாலிட்டிக்கு ஏராளமான பெண்கள் வரிசையில் நிற்கிறாங்க... அவருக்கு என்னப்பா வாழ்க்கையை அனுபவிக்கத் தெரிந்த மகாராசன்...'

இத்தகையை வார்த்தைகளைக் கேட்க தான் அவன் விரும்பினான்... யாருக்காகவும் அது மனைவியாக இருந்தாலும் கூட அவளுக்காக அவன் தலை குனிய விரும்பவில்லை... ஆனால் அவனது உள்மனதிற்குத் தெரியும் அவளுக்காக அவன் எவ்வளவு ஏங்கி போயிருக்கிறான் என்று...

ஈகோ இல்லாது இணையிடம் மண்டியிடுவது தான் காதலில் வெற்றி என்பது அந்த அறிவாளி மடையனுக்குத் தெரியவில்லை...

சித்தார்த்திடம் கோபமாய்ப் பேசி விட்டு வந்த போதும் பிரகதீஸ்வரியின் மனம் அடங்க மறுத்து உலைக்களமாய்க் கொதித்துக் கொண்டிருந்தது... மனம் கொதித்த போதும் கை அது பாட்டிற்கு முறுக்கை சுற்றியது... செய்யும் வேலையில் மனம் லயிக்காததால் முறுக்கு உடைந்து போனது... மீண்டும் அவள் அதைச் சுற்ற மீண்டும் அது உடைந்தது...

அவளது அந்த நிலையைக் கண்ட பானுமதி சோலையம்மாளிடம் அடுப்பை பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு அவளைத் தனியே அழைத்துக் கொண்டு வந்தார்...

"ரதிம்மா... ஏன் இப்படி இருக்க...? என்ன செய்யுது...?" என்று கேட்டபடி அவளது நெற்றியை தொட்டு பார்த்தார்...

அதில் அவள் உடைந்து போய் அழுதாள்... அழுது கரைந்தவளை மடி தாங்கி கொண்ட பானுமதி அவள் கூறியதை காது கொடுத்து கேட்டார்... அழுகையின் ஊடே அவள் நடந்ததை முழுவதுமாய்க் கூறி முடித்ததும்,

"இதுக்காக நீ ஏன் இவ்வளவு வருத்தப்படுற...?" என்றவரை கண்டு மடியில் இருந்து எழுந்தவள் திகைப்பாய் பார்த்தாள்...

"அத்தை... அவர் பண்ணியது பாவம் இல்லையா... அவன் பண்ணியது தப்பு தான்... அதுக்காக அவன் கையை

வெட்டியது எந்தளவுக்கு சரியா வரும்..." சொல்லும் போதே அவளுக்குக் கண்ணீர் வந்தது...

"அவரது பாவத்தில் மனைவியான எனக்கும் பங்கு இருக்கிறது இல்லையா..." என்றவளை கனிவுடன் பார்த்தார் அவர்...

"உன் கணவர் செய்தது சரின்னு நான் சொல்லலை... அது போல் அதைத் தப்புன்னும் என்னால் சொல்ல முடியாது..." என்றவரை அவள் புரியாது பார்த்தாள்...

"தன் மனைவியின் கையைப் பிடிச்சு யாராவது இழுப்பதைப் பார்த்தால் எந்தப் புருசனுக்கும் கோபம் வர தான் செய்யும்... அது தான் அவருக்கும் வந்திருக்கிறது..."

"கட்டிய தாலியை மதிக்காத மனுசன்... இதில் மனைவியை மதிக்கப் போகிறாரா..." என்று கூறியவளின் முகத்தில் விரக்தி எழுந்தது...

"எனக்கு என்னமோ உன் மேலுள்ள அக்கறையில் தான் அவர் இப்படிச் செய்திருக்கணும்ன்னு தோணுது..."

அவனது அக்கறை எப்படிப்பட்டது என்று நினைத்து பார்த்தவளுக்கு முகம் இறுகி போனது... அவனது மேய்ச்சல் பார்வை இப்போதும் நினைவில் எழுந்து அவளது மேனியை கூச செய்தது...

'அவங்களும் சரியில்லை... அவங்க பார்வையும் சரியில்லை...' என்று அவள் அவனைத் திட்ட துவங்க...

'சரியில்லாதவனைத் தானே நீ விழுந்து விழுந்து காதலிக்கிறாயடி முட்டாள் பெண்ணே...' அவளது மனசாட்சி அவளைக் காறித் துப்பியது...

அவனின் தேவை அவளிடத்தில் எதுவாக இருந்த போதும் அவளுடைய தேவை அவனிடத்தில் ஒன்றே ஒன்று தான்... அது அவனது காதல் மட்டுமே...

கானல் நீராய் போன அவனது காதலை நினைத்து அவளுக்கு வேதனையாக இருந்தது...

"அப்படி அக்கறை உள்ளவங்க அந்தப் பொறுக்கி என் கையைப் பிடிச்சு இழுத்தப்பவே வந்து சண்டை போட்டிருக்கணும் இல்லையா...? அதை விட்டுட்டு ஏன் இப்படிச் செய்யணும்...? மனசுக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு அத்தை..."

"அதை உன்னவரிடம் நீ தான் கேட்கணும்... ஆனா அவர் இப்படிச் செஞ்சதுக்கு உன் மேலுள்ள அக்கறை தான் காரணமாக இருக்க முடியும்... அது காதலாகக் கூட இருக்கலாம்..."

"அத்தை..." அவள் திகைப்பாய் அத்தையை நோக்கினாள்...

"ஆண்கள் சிலருக்கு மனதில் காதல் இருந்தாலும் அதை வெளிப்படுத்தத் தெரியாது... பெண்கள் நாம் தான் அதைப் புரிந்து நடந்து கொள்ள வேண்டும் ரதிம்மா... நீ ரொம்ப யோசிக்கிறியோன்னு எனக்குத் தோணுது... இன்று நாட்டில் பெண்களுக்கு எதிராக நடக்கும் வன்கொடுமைகளைப் பார்க்கும் போது உன் கணவர் செய்தது சரின்னு தான் நான் சொல்வேன்... சட்டங்கள் கடுமையானால் தான் இந்த மாதிரி கொடுமைகள் குறையும்... அவர் கையை வெட்டியது போல் கடும் தண்டனை கொடுத்திருந்தால் இன்று நிறையப் பெண்கள் பாலியல் பலாத்காரத்தில் இருந்து தப்பித்து இருப்பார்கள்... சட்டம் செய்யாததைத் தனி ஒரு மனிதனாய் அவர் செய்ததை நினைத்து நீ சந்தோசப்படணும்..." என்றவர்,

"நாணயத்திற்கு இரண்டு பக்கம் உண்டு ரதிம்மா... நீ புத்திசாலி... கொஞ்சம் யோசித்துப் பார்..."

அத்தை எழுந்து சென்றுவிடப் பிரகதீஸ்வரி தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டாள்... அத்தையின் பேச்சினாலோ என்னமோ அவளது மனம் முழுவதும் திருமணத்திற்கு முன் அவளிடம் அன்பாய் நடந்து கொண்ட சித்தார்த்தே வியாபித்திருந்தான்...

****

புத்தாண்டிற்கு முந்தைய நாளன்று ஜாஸ்மின் தனது அலுவலக ஊழியர்களுக்கு எல்லாம் நட்சத்திர விடுதியில் விருந்து அளிக்க முடிவு செய்து அவர்களை எல்லாம் அழைத்திருந்தார்... சரவணனும் அதில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தான்...

மேல்தட்டு மக்களின் அந்தக் கேளிக்கை விருந்தில் கலந்து கொள்வது என்பது அவனுக்கு ஒன்றும் புதிது இல்லை... அதனால் இயல்பாய் அதில் கலந்து கொண்டான்... நாகரீகமாகக் காட்டி கொள்வதற்காக அங்கு வந்த பேரரிடம் இருந்து மது கோப்பையைக் கையில் எடுத்து கொண்டவன் அதைப் பிடித்தபடி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்...

சற்று தள்ளி தோழிகளுடன் உரையாடி கொண்டிருந்த ஸ்வேதா அவனது விழிகளில் விழுந்தாள்... இளம் சிவப்பு நிற கையில்லாத, முட்டிங்கால் வரையிருந்த ஃப்ராக் அணிந்து ஒரு தேவதை போல் அவள் இருந்தாள்... நாகரீக உடை தான் ஆனால் அவள் அதை உடுத்தியிருந்த விதத்தில் எந்தவித ஆபாசமும் இல்லை... அதைக் கண்டு அவனது மனம் தன்னவளை மெச்சி கொண்டது...

அதே நேரம் ஸ்வேதாவும் சரவணனை பார்த்து விட்டாள்... அவளது விழிகளில் தீப்பொறிப் பறந்தது... உள்ளமோ எரிமலையாய் குமுறியது... அவனைப் பார்க்கும் போது எல்லாம் அவன் தனக்கு இழைத்த அநியாயம் தான் அவளது நினைவில் நின்றது... அந்த அநியாயத்தை மறக்க இயலாதவளாய் தவித்தவளுக்கு மது கோப்பையுடன் அங்கு வந்த பேரர் கடவுளாகத் தெரிந்தான்...

மது கோப்பையைக் கையில் எடுத்தவள் சரவணனை வெறுப்புடன் பார்த்துக் கொண்டே அதைத் தன் வாயில் ஊற்றினாள்... அவனோ அதிர்ச்சியுடன் அவளது செயலை பார்த்துக் கொண்டிருந்தான்... அவன் அறிந்த பெண்கள் யாருக்கும் இது போல் மது அருந்தும் பழக்கம் கிடையாது... அதனால் அவன் உறைந்து போய் நின்றான்...

அவனின் கண்களில் தெரிந்த அதிர்ச்சி அவளது காயமடைந்த மனதினை குளிர்வித்ததோ என்னமோ...

அவள் மேலும் மேலும் மதுவை உள்ளே தள்ளி கொண்டிருந்தாள் விடாது... ஒரு கட்டத்திற்கு மேல் பொறுக்க முடியாத சரவணன் நேரே அவள் அருகில் வந்து அவள் கையிலிருந்த மதுவை பிடுங்கி தள்ளி வைத்தான்...

"டேய்... என்னடா பண்ற...? எனக்கு அது வேண்டும்டா...?" கையைக் காலை உதைத்துக் கொண்டு அவள் கத்த ஆரம்பித்ததும் அவளை அணைத்து அடக்கியவன் அந்த இடத்தில் இருந்து அவளை அப்புறப்படுத்த நினைத்தான்...

"என்னை விடுடா... ஐயோ இவன் என்னைக் கடத்திட்டுப் போகப் பார்க்கிறான்..." என்று அவள் உரக்க கத்தியதில் அங்கிருந்தவர்கள் திரும்பி பார்த்தனர்...

ஜாஸ்மின் சரவணனிடம், "சரண்... அவளை அழைச்சிக்கிட்டு போங்க..." என்க...

சரவணன் நன்றியுடன் அவரைப் பார்த்தவன் ஸ்வேதாவை வலுக்கட்டாயமாக வெளியில் அழைத்து வந்தான்... உடன் செல்லாது திமிறியவளை மிக எளிதாக அடக்கி வெளியில் அழைத்து வந்து விட்டான்... வலிமை மிகுந்த அவனது தேகத்தின் முன் மெல்லிய தேகம் கொண்ட மெல்லியாள் பலமிழந்து அவனது கைகளில் சமத்தாய் அடங்கினாள்...

"டேய்... விடுடா..."

போதையில் முனங்கியபடி வந்தவளை கண்டு கொள்ளாது அவளது காரில் அவளை ஏற்றியவன் அதைத் தானே ஓட்டி கொண்டு சென்றான்... அடுக்கு மாடி குடியிருப்பு ஒன்றில் அவள் தங்கியிருந்தாள்... அங்கு அவளை அழைத்து வந்தவன் அவளது கைப்பையைத் துளாவி வீட்டு சாவியை எடுத்து கதவை திறந்து அவளைப் படுக்கையில் படுக்க வைத்த பிறகே நிம்மதி அடைந்தான்...

முட்டிங்கால் வரை இருந்த அவளது உடை இப்போது அவளது தொடை வரை ஏறி பளீரென்று கவர்ச்சியாய் அவனுக்குக் காட்சி கொடுத்த போதும் அது சிறிதும் அவனைச் சலனப்படுத்தவில்லை... அருகில் இருந்த

போர்வையை எடுத்து அவளுக்குப் போர்த்தி விட்டவன் அவள் அருகே குனிந்தான்...

"ஏன் ஸ்வேதா உன்னை நீயே வருத்திக்கிற...? தப்பு செஞ்சவன் நான்... எந்தத் தண்டனை கொடுப்பதாக இருந்தாலும் அதை எனக்குக் கொடு..." என்றான் வருத்தத்துடன்...

அவனது வருத்தத்தை உணராத அவளோ வேறு ஒரு தனி உலகத்தில் மிதந்து கொண்டிருந்தாள்... என்ன கனவு கண்டாளோ கண்கள் மூடியிருந்த அந்த நிலையிலும் அவளது முகத்தில் புன்னகை தவழ்ந்தது...

அடுத்த நொடி தன் அருகில் குனிந்திருந்த சரவணனை இறுக்கமாய் அணைத்து கொண்டாள்... அதில் நிலைத்தடுமாறி போன சரவணன் அவள் முகத்தோடு முகம் ஒன்றியபடி அவள் மீது சாய்ந்தான்... பெண்ணவளின் மென்மையில் அவன் சுகமாய்க் கரைந்து கொண்டிருந்தான்... அப்போது அவள் அவனது காதோரம் அந்த வார்த்தைகளை முணுமுணுத்தாள்...

"ஐ லவ் யூ கார்த்திக்..."

அடுத்த நொடி தீச்சுட்டார் போன்று அவளை உதறி விட்டு சரவணன் விலகி நின்றான்...

தன் மீதான அவளது வெறுப்பிற்குக் காரணம் தனது செயல் அல்ல... அவளது காதல் என்பதைக் காலத் தாமதமாக அவன் புரிந்து கொண்டான்... புரிந்து கொண்ட விசயமோ அவ்வளவு உவப்பானதாக இல்லை...

****

சித்தார்த்தின் கைகளில் அந்த வைர மூக்குத்தி பளபளவென்று தவழ்ந்தது... மூன்று ஆண்டுகளுக்கு முன்பாகத் தன்னவளுக்காக அவன் பரிசளித்தது அது... அவள் இந்த வீட்டை விட்டுப் போன போது எந்தவொரு உடமையையும் எடுத்துக் கொண்டு போகவில்லை...

அந்த மூக்குத்தியை மென்மையாக வருடி கொடுத்தவனுக்கு அன்று அது அவளது மூக்கில் இருந்த போது தான் வருடி கொடுத்த ஞாபகம்... அன்று விழி மூடி அவனது அருகாமையை ரசித்தவளின் நேசம் இன்றும் அவனுள் இனிமையாய்...

ஊரெல்லாம் புது வருட கொண்டாட்டத்தில் மகிழ்ந்திருக்கப் பிரகதீஸ்வரி மட்டும் சோகமாய்க் கணவனின் நினைவில் ஆழ்ந்திருந்தாள்... அத்தை எடுத்துச் சொன்னதில் இருந்து ஏனோ அவன் மீது கோபம் வர மறுக்கிறது... காதல் தான் இன்னமும் அதிகரித்தது...

பேசாமல் அவனிடம் சென்று விடுவோமா என்று அவள் நினைத்த போது அவன் செய்த துரோகம் நினைவுக்கு வந்தது... அதன் பின் இந்த ஊரை உருக்குலைத்த அவனது அநியாயங்களும் சேர்ந்து நினைவுக்கு வந்தது... அவளுக்கு அவன் என்ன காரண, காரியம் சொன்னாலும் இதற்கு அவன் என்ன காரண, காரியம் சொல்ல போகிறான்...

அவளுக்கோ, அவளது காதலுக்கோ அவன் துரோகம் செய்தால் கூடப் பொறுத்துப் போகலாம்... ஆனால் ஊருக்கு, இயற்கை வளத்திற்கு அவன் செய்யும் துரோகத்தை அவளால் பொறுத்து போக முடியவில்லை...

தன்னலத்தை விடப் பொதுநலனே அவளுக்கு முக்கியமாகப் பட்டது... அதில் கணவன் என்கிற உறவு பின்னுக்குத் தள்ளப்பட்டது...

அன்று பிரகதீஸ்வரிக்கு செமினார் வகுப்பு இருந்தது... அதனால் அவள் திருநெல்வேலிக்கு கிளம்பி கொண்டிருந்தாள்... அந்நேரம் சங்கமித்ரா அவளது வீட்டிற்குள் நுழைந்தாள்...

"அக்கா... வாங்க... வாங்க..." என்று சந்தோசத்துடன் அவளை வரவேற்றவள்,

"எப்படி இருக்கீங்கக்கா...? கல்யாண வேலைகள் எல்லாம் எப்படிப் போகுது...?"

"நான் நல்லா இருக்கேன்... அதற்காகத் தான் இங்கே வந்தேன்..." என்ற சங்கமித்ரா தனது திருமண அழைப்பிதழை எடுத்து அவளிடம் கொடுத்து,

"கல்யாணத்துக்கு நாலு நாள் முன்னாடி நீ வந்திரணும்... உன்னை நான் ரொம்ப எதிர்பார்த்துட்டு இருப்பேன்... எனக்குக் கூடப் பிறந்தவங்க யாரும் கிடையாது... அதனால் நீ தான் என் கூடவே இருக்கணும்..."

சந்தோசமாய் அதை வாங்கிக் கொண்ட பிரகதீஸ்வரி, "கட்டாயம் அக்கா... அதை விட எனக்கு வேறு வேலை என்ன இருக்கிறது...?" என்றவள் அழைப்பிதழை பிரித்துப் பார்த்து,

"அத்தான் பெயர் அர்ஜூனா...? சூப்பர்க்கா... ரொம்ப அழகாயிருக்கு..." என்று பிரகதீஸ்வரி சந்தோசப்பட...

அதைக் கேட்டு சங்கமித்ராவின் முகம் மென்மையானது...

"அவங்களும் அழகா தான் இருப்பாங்க..."

"அது சரி, இப்போ உங்க கண்ணுக்கு அத்தான் மட்டுமே அழகா தெரிவாங்க..." என்று பிரகதீஸ்வரி கிண்டல் செய்ய அதில் சங்கமித்ராவின் முகம் சிவந்து போனது...

"ரதிம்மா... ஹரி உன்னிடம் பேசணும்ன்னு சொன்னான்..." என்றபடி அங்கு வந்த பானுமதி சங்கமித்ராவை கண்டதும் புன்னகை முகமாய்,

"வாம்மா..." என்று வரவேற்று பேசி கொண்டிருக்க... அலைப்பேசியை வாங்கிய பிரகதீஸ்வரி ஹரியிடம் பேசி கொண்டிருந்தாள்...

ஹரியின் பெயரை கேட்டதும் சங்கமித்ராவின் முகம் வெளுத்துப் போனது... மனதின் சக்தி எல்லாம் வடிந்து போனது போல் ஒரு தோற்றம் அவளுள்...

"அக்கா... அத்தான் உங்க கிட்ட பேசணும்ன்னு சொல்றார்..."

பிரகதீஸ்வரி கொடுத்த அலைப்பேசியைப் பாரமான மனதுடன் வாங்கித் தனது காதில் வைத்தாள் சங்கமித்ரா...

"ஹலோ..." அவள் பேசியதை தொடர்ந்து ஹரியின் குரல் மறுமுனையில் சந்தோசத்துடன் ஒலித்தது...

"வாழ்த்துக்கள் சங்கமித்ரா... உங்க வருங்காலக் கணவரும் டாக்டராமே... இப்போ தான் அம்மு சொன்னாள்... ரொம்பச் சந்தோசமாயிருக்கு... நீங்க சந்தோசமா இருக்கணும்... அது தான்ங்க என்னோட ஒரே வேண்டுதல்... அது தான் எனக்கும் வேண்டும்... இத்தனை நாள் எனக்குள் இருந்த குற்றவுணர்ச்சி இப்போது தான் முழுதாய் நீங்கியிருக்கு..."

ஹரிப்ரசாத்தின் வார்த்தையில் சங்கமித்ரா என்ன மாதிரியாய் உணர்ந்தாள் என்று அவளுக்கே தெரியவில்லை... தன்னை மறந்து அவன் மகிழ்ச்சியாய் வேறு ஒருத்தியை திருமணம் செய்து வாழ்ந்து கொண்டிருக்கிறானே என்று மனத்தாங்கலுடன் இருந்தவளுக்கு அவனது குற்றவுணர்ச்சி கண்டு மனதிற்குப் பெருத்த ஆறுதலாக இருந்தது...

இங்கு யாரும் வில்லன் இல்லை... சந்தர்ப்பமும் சூழ்நிலையும் தான் தங்களது வாழ்க்கையைப் புரட்டி போட்டு விட்டது... பக்குவப்பட்ட பெண்ணாய் மனதினை சமாதானப்படுத்திக் கொண்டவள் அவனிடம்,

"தேங்க்ஸ்..." என்க...

அவள் பதில் பேசிவிட்டதில் அவனது மனம் சந்தோசம் அடைந்தது... பிறகு சந்தியாவிடம் ஒரு மருத்துவராய் ஆலோசனை வழங்கி விட்டு அலைப்பேசியை அணைத்தாள் சங்கமித்ரா...

பின்பு பிரகதீஸ்வரியிடம் பேசிய சங்கமித்ரா, "சித்து அத்தான் உன் மீது நிரம்பக் காதல் வைத்திருக்கிறார்... அவர் உன் கிட்ட அக்கறையாய் நடந்து கொண்ட மாதிரி வேறு யார் கிட்டேயும் நடந்து கொண்டது இல்லை... நீ கொஞ்சம் அவரைப் புரிந்து கொள்ள முயற்சி பண்ணு பிரகதி..." என்ற சங்கமித்ராவுக்குப் பதில் பேசாது சரியென்று தலையசைத்து வைத்தாள் பிரகதீஸ்வரி...

பிரகதீஸ்வரியிடம் திருமணத்திற்குக் கட்டாயம் வர வேண்டும் என்று கூறிவிட்டு விடைப்பெற்று சென்றாள் சங்கமித்ரா...

****

பொங்கல் அன்று காலை இனிதாக விடிந்தது... அன்று காலையில் எழுந்ததில் இருந்து பரபரப்பாக இருந்தது பிரகதீஸ்வரிக்கு... ஏனெனில் இன்று சித்தார்த்தின் பிறந்தநாளும் அல்லவா... அன்னை இறந்த தினம் கூட அவளுக்கு இறந்த காலமாகப் போய் விட, கணவன் பிறந்த தினம் அவளுக்கு எல்லாமுமாக மாறிவிட்டது...

"அத்தை... நான் கோவிலுக்குப் போயிட்டு வர்றேன்..." என்று கிளம்பிய பிரகதீஸ்வரியை கண் நிறையப் பார்த்து ரசித்தார் பானுமதி...

இளம் பச்சை நிறத்தில் புடவை அணிந்து, தலைமுடியை தளர பின்னி அதில் பூ சூடி அழகாய் இருந்தவளின் அழகு அவருக்குச் சந்தோசத்தைக் கொடுத்த போதும் அதுவே வருத்தத்தையும் அளித்தது...

'கண் நிறைஞ்ச புருசன் கிடைத்தும் இப்படி வாழும் வழி அறியாது தவிக்கிறாளே...' என்று அவளுக்காக அவர் தவித்தார்...

எப்போதும் போல் கோவிலுக்கு வந்த பிரகதீஸ்வரி சித்தார்த்தின் பெயருக்கு அர்ச்சனை செய்யச் சொல்லி விட்டுக் கண்களை மூடி அமைதியாகக் கடவுளிடத்தில் வேண்டி நின்றாள்... மனதில் கணவனின் நலம் தவிர வேறு ஒன்றும் இல்லை... சிறிது நேரம் சென்று எதிர்பார்ப்புடன் கண்களைத் திறந்தவளின் எதிர்பார்ப்பை ஏமாற்றாது அங்குச் சித்தார்த் தரிசனம் கொடுத்தான்...

வேட்டி, சட்டையில் கம்பீரமாய், அழகாய் இருந்தவனை அவள் பார்வையால் பருகி கொண்டிருந்தாள்... ஏனெனில் அவனும் கண்கள் மூடி வேண்டி கொண்டிருந்தான்... அவனுக்குத் தெரியும் மனைவியவள் தன்னைப் பார்த்துக்

கொண்டிருப்பது... இந்த மூன்று ஆண்டுகளாக நடக்கும் இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம் அவனுக்குமே பிடித்துத் தான் இருந்தது... அதனால் அவளின் ஆசைக்கு ஏற்ப அவனும் வளைந்து கொடுத்தான்... கடவுளை வணங்காதவன் அவளுக்காக வணங்கினான்...

அர்ச்சனை செய்து விட்டு அர்ச்சகர் அர்ச்சனை தட்டை கொண்டு வந்து அவளிடம் கொடுத்தார்... அதே போல் அவனுக்கும் குங்குமம் கொடுத்தார்... அதை வாங்கும் சாக்கில் அவனது விழிகள் மனைவி புறம் திரும்பி அவளது முகத்தினை அங்குலம் அங்குலமாய் அலசி ஆராய்ந்தது...

அவள் அழுததற்கான சுவடுகள் தென்படுகிறதா என்று அவன் அவளை உற்றுப் பார்த்தான்... அவன் நினைத்ததற்கு மாறாக அவள் முகம் மலர நின்றிருந்தாள்...

அவன் அப்படிப் பார்ப்பதற்கும் ஒரு அர்த்தம் இருந்தது... ஏனெனில் இன்று அவளது அன்னை இறந்த தினம்... மூன்று வருடங்களுக்கு முன் அவள் தனது நெஞ்சில் சாய்ந்து அழுத அவளது சோகம் இன்று அவளிடத்தில் இல்லை... கணவனது பிறந்தநாளை கொண்டாடும் மகிழ்ச்சி தான் அவளிடத்தில் இருந்தது...

அன்னை இறந்த சோகத்தை அவன் மீதான காதல் பின்னுக்குத் தள்ளிவிட்டதை எண்ணி அவன் மிகவும் சந்தோசம் அடைந்தான்... அந்தளவிற்குத் தான் அவளுக்கு முக்கியமானவனாய் இருக்கிறோம் என்பதை எண்ணி எண்ணி அவனுக்கு அத்தனை உவகையாய் இருந்தது... அவளது அன்பு கண்டு அவனது மனம் கனிந்தது...

பின்பு ஒன்றும் பேசாது அவன் விலகி சென்று விட்டான்... அவனைப் பின் தொடர்ந்து வந்தவள் அந்தத் தூண் பக்கம் வந்ததும் எப்போதும் போல் தயக்கத்துடன் நின்றாள்... சுற்றும் முற்றும் கள்ளத்தனமாய்ப் பார்த்துக் கொண்டே தூணின் ஓரம் எட்டி பார்த்தவளின் விழிகளில் ஏமாற்றம் கவிழ்ந்தது...

சித்தார்த் எப்போதும் தனது கைகளில் இருக்கும் மீதி குங்குமத்தை அந்தத் தூணில் தான் வைத்து விட்டு செல்வான்... அதை அவள் எடுத்து தனது நெற்றியில் வைத்து கொள்வாள்... கணவனைப் பிரிந்து இருந்த போதும் அவனுக்குச் சொந்தமான தாலியையும், குங்குமத்தையும் அவள் மறக்கவில்லை...

மனதில் எழுந்த ஏமாற்றம் விழிகளில் விழிநீராய் திரையிட்டது...

அந்தக் கணம் தூணின் மறுபக்கம் இருந்து சித்தார்த் வெளிப்பட்டான்... அவளது காதல் கண்டு மனம் நெகிழ்ந்தவனின் உதடுகளில் புன்னகை நெளிந்தது... திடுமெனக் கணவன் கண்முன் தோன்றியதும் திடுக்கிட்டு போனவளாய் பிரகதீஸ்வரி பேந்த பேந்த விழித்தாள்...

அவள் விழிப்பதை கண்டு கொள்ளாது அவன் தனது கையிலிருந்த குங்குமத்தை எடுத்து அவளது நெற்றியில் அழுந்த வைத்து விட்டான்... அதில் இன்னமும் அதிர்ந்தவளாய் அவள் விழி விரித்து நிற்க, அவனோ சிரித்தபடி அவளை விட்டு விலகி சென்று விட்டான்...

பிரகதீஸ்வரி ஓய்ந்து போனவளாய் அப்படியே தரையில் அமர்ந்து தூணில் சாய்ந்தாள்... மூடியிருந்த அவளது விழிகளில் இருந்து கண்ணீர் கரகரவென வழிந்து கொண்டிருந்தது... முதன்முறையாகக் கணவனிடம் இருந்து கணவன் என்கிற உறவுக்கான அங்கீகாரம் கிடைத்து இருக்கிறது... அதுவும் அவனது திருக்கரங்களால்...

அவனது இந்தச் சிறு தொடுகையைக் கூடத் தாங்க இயலாதவளாய் அவளது மேனி நடுங்கியது...

அப்போது ஆறுதல் சொல்வது போல் ஒரு கரம் அவளது தோளை அழுத்தமாய்ப் பற்றியது... கணவனது தொடுகையை உணராதவளா அவள்...? திடுக்கிட்டவளாய் அவள் கண் திறந்து பார்த்தாள்...

"உன்னைக் கூப்பிட்டாங்க... நீ கண் மூடி உட்கார்ந்து இருந்த... நானும் கூப்பிட்டுப் பார்த்தேன்... நீ அசையலை... அதான்..." என்று நிறுத்திவிட்டு அவளது முகத்தினை ஆராய்ச்சியாய்ப் பார்த்தது அவனது விழிகள்...

உண்மையில் அவளது பக்கத்து வீட்டு மாமி அவளை அழைத்திருந்தார்...

அவனுக்குத் தலையாட்டியபடி அங்கிருந்து அவள் எழுந்து சென்றாள்... செல்லும் அவளை யோசனையாய் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான் அவன்...

மறுநாள் மாட்டு பொங்கல்... அன்று நடைப்பெறும் ஜல்லிக்கட்டு போட்டியை பிரகதீஸ்வரியால் என்றும் மறக்க முடியாது... அது போல் தான் சித்தார்த்திற்கும்... அவளுக்காகவே அவன் வருடா வருடம் காளையை அடக்கினான்... அவன் மௌனமாய்த் தனது காதலை அவளுக்கு உணர்த்திக் கொண்டே தான் இருந்தான்...

ஆனால் அவளால் தான் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை... அவன் தனக்காகத் தான் அதைச் செய்கிறான் என்பதைக் கூட அறியாதவளாய் அதில் பங்கு பெறும் அவனைக் கண்டு பதைபதைப்புடன் பார்த்திருப்பாள்... பின்பு அவன் வெற்றிப் பெற்றதும் 'இவன் என் கணவன்' என்று பெருமையோடு அவனைப் பார்ப்பாள்... அது போல் தான் இன்றும் ஜல்லிக்கட்டில் வெற்றி பெற்றவனைப் பெருமை பொங்க பார்த்தாள்...

'யாருக்கு வேண்டும் இவளது பெருமை...? எனக்கு நீ தான் வேண்டும்டி...' என்று அவனது உதடுகள் ஆத்திரத்தோடு முணுமுணுத்தது...

இப்போது எல்லாம் அவள் வேண்டும் என்று தாபத்துடன் தவிக்கும் மனதினை அடக்க வழியில்லாது தவித்தான் அவன்...

இதோ அதோ என்றிருந்த சங்கமித்ராவின் திருமணம் இன்னும் மூன்று நாட்களில் என்ற நிலையில் பிரகதீஸ்வரி

சென்னைக்குக் கிளம்பலானாள்... அவளுக்காக இரயிலில் பயணச் சீட்டு முதற்கொண்டு எல்லாவற்றையும் அனுப்பி வைத்து விட்டாள் சங்கமித்ரா...

முதல் வகுப்பு ஏசி பெட்டியில் இதமான குளிர் பரவியிருந்தது... அதில் ஏறியமர்ந்தவளுக்கு அங்கு யாரையும் காணாது ஒருவித பயத்துடன் தனியே அமர்ந்திருந்தாள்... அந்நேரம் பெட்டியின் கதவு திறக்கும் ஒலியில் திடுக்கிட்டு திரும்பி பார்த்தவள் அங்கு நின்றிருந்த சித்தார்த்தை கண்டதும் இன்னமும் பயந்து போனாள்...

இரவின் தனிமையில் அவனுடனான பயணத்தை நினைத்து அச்சம் அடைந்தவளுக்கு அந்தக் குளிரிலும் வியர்க்க துவங்கியது... அவனோ அவளைக் கண்டு கொள்ளாமல் அவளுக்கு எதிர்புறம் வந்தமர்ந்தான்... அமர்ந்த உடனேயே பங்கு வர்த்தகத்தைப் பற்றிய புத்தகத்தைக் கையில் எடுத்தவன் அடுத்த நொடி அதில் மூழ்கி போனான்...

பிரகதீஸ்வரியின் பயமோ பங்கு வர்த்தகத்தைப் போன்று ஏறுவதும், இறங்குவதுமாய் இருந்தது... கட்டிய கணவன் தான் இருந்தாலும் அவளுக்கு நடுக்கமாக இருந்தது... அது அவனை நினைத்தா இல்லை தன்னை நினைத்தா என்று அவளுக்குத் தெரியவில்லை...

அவனோ கைகளில் இருந்த புத்தகத்தில் இருந்து விழிகளை எடுப்பதாய் இல்லை... அவளோ அவன் மீதிருந்து விழிகளை எடுப்பதாய் இல்லை... எவ்வளவு நேரம் பார்த்து கொண்டிருந்தாளோ அசதியில் அப்படியே இருக்கையில் படுத்து உறங்கி விட்டாள்...

அவள் உறங்கியது தெரிந்ததும் அவன் புத்தகத்தில் இருந்து தனது விழிகளை எடுத்தான்... புத்தகத்தைத் தூக்கி எறிந்தவன் மனைவியைக் கண்டபடி கைகளைத் தூக்கி சோம்பல் முறித்தான்...

"எவ்வளவு நேரம் தான்டி படிக்கிறது மாதிரி நடிக்கிறது...? ஆனாலும் நீ என்னை ரொம்பவே படுத்துற பேபி..." என்று கூறியவனின் விழிகள் அவளை ரசனையுடன் மொய்த்தது...

தனது இருக்கையில் இருந்து எழுந்து அவள் அருகில் வந்தவன் மண்டியிட்டுத் தரையில் அமர்ந்தபடி உறங்கும் அவளை ஆசை தீர பார்த்தான்... மதி போன்ற அவளது முகத்தைக் காண காண அவனுக்குத் தெவிட்டவில்லை...

ஊன், உறக்கம் இல்லாது மனைவின் முகத்தைப் பார்த்தபடி வாழ்க்கையைக் கழித்திட அவனது மனம் ஏங்கியது...

"இந்த நேரத்திற்காக நான் எத்தனை நாள் காத்திருந்தேன் தெரியுமா பேபி... உன் கூடப் பிரயாணம் செய்யணும்ன்னு திட்டம் போட்டு உன் கூட வந்திருக்கிறேன்..." என்றவனது வார்த்தையில், பார்வையில் நேசம் மட்டுமே வழிந்தது...

"ஐ லவ் யூ பேபி..."

அவன் அவளது தலையை வருடி அவளது நெற்றியில் மென்மையாக முத்தமிட்டான்...

அவனது தொடுகையை உணர்ந்தார் போன்று அவளது முகத்தில் மந்தகாச புன்னகை தோன்றியது... வருடிய அவனது கையை அணைத்துப் பிடித்துக் கொண்டு புரண்டு படுத்தவள்,

"மாமூ... கனவில் மட்டும் தான் நீங்க என்னை இப்படிக் கொஞ்சுறீங்க... நனவில் எப்போ என்னைக் கொஞ்ச போறீங்க...?" என்று சிணுங்கலாய் கேட்டவளின் வார்த்தையில் அவன் வியப்பும், திகைப்புமாய் அவளைப் பார்த்தான்...

அந்த நொடி அவனது சக்தி எல்லாம் வடிந்தார் போன்று தொப்பென்று தரையில் அமர்ந்தவன் பெட்டியின் பக்கவாட்டில் சரிந்தான்... அவனது விழிகள் இமைக்க மறந்து மனைவியைப் பார்த்திருந்தது...

நுனி விரலில் அழுக்குப் படாமல் வலம் வரும் சித்தார்த் மனைவியின் காதலில் உள்ளம் தடுமாறி போய்த் தரையில் அமர்ந்திருந்தான் தன்னிலை மறந்து...!!!

"மெய்ஞானம் உணரும் போது
விஞ்ஞானம் மரிக்கும்...
என் காதலை நீ
உணரும் போது
'நான்' மரிப்பேன்...!!!"

நனவாகும்...!!!

அதிகாலையில் எப்போதும் போல் விழிப்பு வந்த பிரகதீஸ்வரி மெல்ல விழி திறந்தாள்... எதிரே அமர்ந்திருந்த கணவனைக் கண்டதும் தூக்க கலக்கத்தில் அவனைக் கண்டு அவள் மந்தகாசமாய்ப் புன்னகை சிந்தினாள்... அதைக் கண்டு சித்தார்த் தனது இரு புருவத்தையும் தூக்கி 'என்ன' என்பது போல் பார்த்து வைக்க... அதில் பிரகதீஸ்வரி திடுக்கிட்டவளாய் வாரி சுருட்டி கொண்டு எழுந்தாள்...

ஏனெனில் கனவில் வரும் கணவன் புன்னகையுடன் அவளது நெற்றியில் முத்தமிடுவான்... ஆனால் இந்தச் சித்தார்த் புருவத்தை உயர்த்தியது அவளுக்கு எதையோ உணர்த்த அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்தமர்ந்தாள்...

அவள் நினைத்தது போல் அவளது எதிரில் கம்பீரமாகக் கால் மேல் போட்டுக் கொண்டு இமைக்காது அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான் அவளது அருமை கணவன்... அவன் எப்படி இங்கே...? என்று யோசித்தவளாய் அவள் சுற்றும் முற்றும் பார்க்க, அப்போது தான் தாங்கள் இருவரும் இரயிலில் பிரயாணம் செய்வது அவளது ஞாபகத்தில் வந்தது...

சித்தார்த் மனைவியின் முகத்தில் வந்து போகும் உணர்வுகளை நிதானமாகப் படித்தபடி அசையாது அமர்ந்திருந்தான்... 'மாமூ' என்ற ஒற்றை வார்த்தையில் அவனது உலகை வண்ணமயமாக்கி விட்டாள் அவள்... நேற்றிரவு முழுவதும் அணைத்திருந்த தனது கையை அவளது பிடிக்குள் கொடுத்தபடி அவளைக் காதலில் கசிந்துருகியபடி அவன் விடிய விடிய விழித்திருந்து பார்த்து வந்தது பற்றி அவளுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை...

அவளது அழைப்பில் எந்தளவிற்கு மனம் மகிழ்ந்தானோ அந்தளவிற்கு அவனுடன் அவள் கனவில் குடும்பம் நடத்துவதைக் கண்டு அவன் மிகவும் வேதனை அடைந்தான்... அந்தக் கணம் அவனும் உணர்ந்தான்

பெண்ணவளின் மனவேதனையை... ஏனெனில் தன்னை விட மெல்லிய மனம் கொண்டவளால் இந்த வலியை தாங்கி கொள்ள முடியாது என்று அவனுக்கு நன்கு தெரியும்...

ஏனெனில் அவனும் அது போன்றதொரு ஒரு வாழ்வினை தானே அவளுடன் கனவில் வாழ்ந்து வருகிறான்... அதற்கான தீர்வு என்ன என்று அவனுக்குத் தெரியவில்லை... தானாய் அவளிடம் வலிய சென்று மண்டியிடவும் அவனது ஈகோ தடுத்தது... அது ஏனென்றும் அவனுக்குப் புரியவில்லை...

'டேய் சித்து... ஆனாலும் உனக்குத் திமிர் அதிகம்டா...' என்று அவனது மனசாட்சி அவனைக் கண்டித்தது...

'இந்தத் திமிர் இல்லை என்றால் நான் வெறும் மண்...' என்று அவன் மனசாட்சியை அடக்கி வைத்தான்...

மௌனமாய் இருவரும் பார்வையால் பேசி கொண்டிருக்கும் போதே இரயில் சென்னை மாநகரத்தில் வந்து நின்றது... முதலில் இறங்கிய சித்தார்த் கையில் பையுடன் இறங்க தடுமாறிக் கொண்டிருந்த மனைவியை நோக்கி தனது வலக்கையை நீட்டினான்... சிறிது தயங்கினாலும் அவனது கரத்தின் மீது தனது கரத்தினை வைக்க அவள் தயங்கவில்லை...

அதைக் கண்டு அவன் சந்தோசத்துடன் அவளது கையை இறுக பிடித்துக் கீழே இறக்கி விட்டான்... அவள் இறங்கிய பின்னரும் அவன் பிடித்திருந்த தனது கரத்தினை விலக்கவில்லை... புது ஊர் என்பதால் அவளும் அவனது பிடியில் இருந்து கையை உருவி கொள்ள முயற்சிக்கவில்லை...

இதமான மனநிலையில் இருவரும் இரயில் நிலையத்தை விட்டு வெளியில் வந்தனர்... அவன் வந்து நின்ற அடுத்த நொடி அவனது கார் அவனது அருகில் வந்து நின்றது... ஆனால் அவளுக்கான கார் எதுவும் வரவில்லை...

"மித்ரா கார் அனுப்புவதாகக் கூறினாளா...?" என்று வெளியில் அவளிடம் கேட்டாலும் அவன் மனதிற்குள்,

'கடவுளே... கார் அனுப்ப அவள் மறந்து போயிருக்க வேண்டும்...' என்று உடனடி வேண்டுதல் வைத்தான்...

"ம்..." என்று பரிதாபமாகத் தலையாட்டிய மனையாளை அப்படியே கட்டி அணைத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது அவனுக்கு...

அறியாமையில் அத்தனை அழகாய் அவனது கண்களுக்குத் தெரிந்தாள் அவள்... எப்போதும் அடுத்தவர்களை 'கமான்ட்' பண்ணியே பழக்கப்பட்டவனுக்கு அறிவுஜீவியான மனைவியை விட, அறியாமையுடன் இருக்கும் இந்த வெகுளி மனைவியை நிரம்பப் பிடித்திருந்தது... எதற்கும் தன்னை நாடும் ஒரு சராசரியான மனைவியைத் தான் அவளிடமிருந்து அவன் எதிர்பார்த்தானோ...!!!

உடனே மித்ராவுக்கு அழைத்து அவன் கேட்க அவளோ, "நீங்க கூட வர்றேன்னு சொன்னதால நான் கார் அனுப்பலை அத்தான்... பிரகதியை நீங்களே அழைச்சிக்கிட்டு வந்திருங்களேன்..." என்று கூறிய மித்ராவின் பேச்சில் அத்தனை மகிழ்ச்சி இருந்தது... அவளது திட்டம் பலித்த மகிழ்ச்சி அது...

"சரி..." என்று சந்தோசத்துடன் கூறிவிட்டு அலைப்பேசியை அணைத்தவன் மனைவியின் புறம் திரும்பி,

"என்னோடு வா..." என்றான் அவன்...

அவள் திடுக்கிடலோடு அவனைப் பார்த்தாள்...

"இவ்வளவு பயம் அவசியம் இல்லை... உன்னை அழைத்து வரும்படி உன் மித்ராக்கா தான் சொன்னாள்..."

அதன் பின் பிரகதீஸ்வரியால் அவனது வார்த்தைகளை மறுக்க முடியவில்லை... அதற்குள் கார் ஓட்டுநர் வந்து சித்தார்த்தின் பெட்டியை வாங்கிக் காரின் பின்புறம்

வைத்துவிட்டு, பிரகதீஸ்வரியிடம் இருந்த பைக்காகத் தனது கையை நீட்டினான்... அதற்குள் சித்தார்த் அவளது பையை வாங்கித் தானே காரில் வைத்தான்...

அதை ஆச்சிரியத்துடன் பார்த்தான் அவனது ஓட்டுநர்... எல்லோரையும் அலட்சியப்படுத்தும் முதலாளி மனைவியிடம் அடங்கிப் போவதை நினைத்து அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்...

'எப்படி இருந்த மனுசன் இப்படியாகி விட்டாரே...?' என்று...

"நீ பஸ்சில் வா..." என்று ஓட்டுநரை கிளம்பச் செய்த சித்தார்த் காரின் முன்பக்க கதவை திறந்து விட்டபடி மனைவியைப் பார்த்தான்...

அவனது பார்வையின் அர்த்தம் புரிந்தவளாய் சட்டென்று சமத்தாய் காரில் ஏறி அமர்ந்தாள் அவள்... அதில் அவனது முகத்தில் புன்னகை எட்டி பார்த்தது... அடுத்து அவனும் உற்சாகமாகக் காரிலேறி அமர்ந்து அதைக் கிளப்பினான்...

கதவு ஓரமாய் ஒட்டியபடி அமர்ந்து கொண்டு வந்தவளை கண்டு ஒரு பார்வை பார்த்தவன், "யாரோ ஒரு டிரைவரை நம்பி காரில் வருவ... ஆனால் கட்டின புருசன் என்னை நம்பி காரில் வருவதற்கு இத்தனை பயமா...? என் மேல் அந்தளவுக்கு நம்பிக்கை...? ம்..."

அவனது 'நம்பிக்கை' என்ற வார்த்தையில் அவளது முகம் கருத்துப் போனது... அவன் மீது அவள் வைக்காத நம்பிக்கையா...? எந்தளவிற்கு அவனை நம்பினாள்...? ஆனால் அந்த நம்பிக்கை எல்லாம் அவன் காப்பாற்றினானா...? இல்லையே... காதலுக்குத் துரோகம் செய்தான்... பின் அவளது தந்தையின் மருத்துவத்தைக் களவாடி துரோகம் செய்தான்... இதோ இப்போதும் ஊரை அடித்து உலையில் போட்டு எல்லோருக்கும் துரோகம் செய்கிறான்...

தன் கணவன் ஏன் எல்லோரையும் போன்று நல்லவனாக இல்லாமல் போனான் என்று நினைத்தவளுக்கு அத்தனை

வேதனையாக இருந்தது... அதில் அவளுக்குக் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது...

பதில் சொல்லாது கண்கள் கலங்க சாலையை வெறித்துக் கொண்டு வந்த மனைவியவளை கண்டு அவனது உற்சாகம் குறைந்து முகம் இறுகி போனது...

'இவளுக்கு என் மீது எப்போது தான் நம்பிக்கை வரும்...?' என்று அவனுக்கு ஆயாசமாக இருந்தது...

அடுத்த ஒரு மணி நேரத்தில் சங்கமித்ராவின் வீட்டை வந்தடைந்தது அவர்களது கார்... முதலில் காரில் இருந்து இறங்கிய சித்தார்த் மறுபக்கம் வந்து மனைவியவளுக்குக் கார் கதவை திறந்து விட்டான்... புது இடத்திற்கு வந்ததில் ஏற்பட்ட மிரட்சியில் அவளையும் அறியாது அவளது கை கணவனது கையைப் பிடித்துக் கொண்டது...

விழிகள் மின்ன அவளது கையைப் பிடித்துக் கொண்ட சித்தார்த்தின் முகத்தில் வரும் போது இருந்த சுணக்கம் மறைந்து மகிழ்ச்சி மலர்ந்தது...

"பிரகதி வா... வா..." என்று உற்சாகமாய் ஓடி வந்து அவளை அணைத்து கொண்டாள் சங்கமித்ரா...

"உன் தங்கைக்குக் கொடுக்கும் வரவேற்பில் சிறிது அவளது பாவப்பட்ட கணவன் எனக்கும் கொடுக்கக் கூடாதா என் மாமன் மகளே..." என்று கேலி போல் கேட்ட சித்தார்த்தை கண்டு சங்கமித்ரா,

"லேடிஸ் ஃபர்ஸ்ட் அத்தான்..." என்றாள் மிடுக்காக...

"அது என்னவோ உண்மை தான்... என்னோட லேடி எப்பவும் ஃபர்ஸ்ட் தான்... பெஸ்ட் தான்..." என்றவனின் முகத்தில் அப்படி ஒரு பெருமிதம்...

கணவன் அப்படிப் பெருமிதம் கொள்ளும்படி தன்னிடத்தில் என்ன இருக்கிறது என்று பிரகதீஸ்வரிக்கு தெரியவில்லை... பேசி கொண்டே மூவரும் வீட்டின் முன் வந்து விட்டனர்...

"சித்து... அங்கேயே நில்லு..." என்று சரண்யாவின் அதட்டலான குரல் கேட்டது...

சித்தார்த் யோசனையுடன் நின்றான் என்றால் பிரகதீஸ்வரி பயத்துடன் கணவனின் பின் சென்று மறைந்து கொண்டாள்... அன்றொரு நாள் அவனது அன்னைக்குப் பயந்து இப்படித்தான் அவள் அவனின் பின் ஒளிந்து கொண்டாள்... இருவருள்ளும் அன்றைய நாளின் நினைவு இனிமையாய் எழுந்தது...

அந்த நினைவு வந்ததும் சித்தார்த் தனது கையைப் பின்னுக்குச் செலுத்தி அவளது கரத்தினை ஆறுதலாய் பிடித்தவன் அடுத்த நொடி அவளைத் தன்னருகில் இழுத்து அவளது தோள் மீது கை போட்டு ஆதரவாய் அணைத்துக் கொண்டான்...

அன்றைய நாளின் நினைவில் கணவனின் தொடுகையில் அவளது உடல் நெகிழ்ந்தது... நெகிழ்ச்சியிலா அல்லது பயத்திலா எதில் என்று தெரியாது அவளும் அவனோடு ஒட்டி கொண்டு நின்றாள்...

மகன் மனைவியுடன் சேர்ந்து வந்திருப்பதைக் கண்டு பிரபாவதி ஆனந்த அதிர்ச்சியுடன் அப்படியே உறைந்து போய் நின்றிருந்தார்... மருமகள் மீது அவருக்குத் தனிப்பட்ட கோபம் எதுவும் இல்லை... மகனை அவமதித்து விட்டாளே என்கிற ஆதங்கம் தான் அதிகம் இருந்தது... இதோ இப்போது இருவரையும் சேர்ந்து பார்த்ததில் அந்த ஆதங்கமும் சொல்லாமல் கொள்ளாமல் விடை பெற்றுப் போனது... இனியாவது மகனின் வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டும் என்று அவரது மனம் பிரார்த்தித்தது...

இந்த மூன்று வருடங்களாக அவரும் மகனை பார்த்துக் கொண்டு தானே இருக்கிறார்... எந்தவொரு பெண்ணையும் ஏறெடுத்து பார்க்காது தனது மனைவிக்காக அவன் தவம் இருப்பதை... இவ்வளவு ஏன் அவரே அவனுக்கு மறுமணம் செய்விக்க எத்தனை பெண்களின் புகைப்படத்தை அவனிடத்தில் காட்டி இருப்பார்...

எல்லாப் பெண்களையும் கல்லையும் மண்ணையும் போல் பார்த்து வைத்த மகன் இன்று அவனது மனைவியவளின் அருகாமையில் உயிர்ப்புடன் நின்றிருப்பதைக் கண்டு அவரது விழிகள் ஆனந்தத்தில் கலங்கியது... மனைவியின் நிலை அறிந்து மார்த்தாண்டம் அவரை ஆதரவாக அணைத்துக் கொண்டார்... அதைக் கண்டு பிரபாவதியின் உள்ளம் நிறைந்தது... ஆனாலும் அதை வெளிக்காட்டி கொள்ளாதவராய்,

"ம்க்கும்... என் மகனை பார்த்து காப்பி அடிக்கிறீங்களா...? என்ன இருந்தாலும் என் மகன் போல் உங்களால் இருக்க முடியாது..." என்று அவர் மகன் புராணம் பாட...

"அடி போடி பைத்தியக்காரி... அவனே என்னோட காப்பித் தான்..." என்று பதிலுக்கு மனைவியை அசராமல் அடித்து அவர் சித்தார்த்தின் தந்தை என்று நிரூபித்தார்...

அதில் பிரபாவதிக்கு நாணம் வந்தது...

"இந்தப் பெருமைக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை..." என்று முணுமுணுத்தவராய் மகன், மருமகளை நாடி அவர் சென்றார்...

"அத்தை... இப்போ எங்களை எதுக்கு நிற்க சொன்னீங்க...?" புரியாமல் அத்தையைப் பார்த்தான் சித்தார்த்...

"முதல் முறையா புருசனும், பொண்டாட்டியும் சேர்ந்து நம்ம வீட்டிற்கு வந்திருக்கீங்க... அதான் ஆரத்தி கரைச்சி வரவேற்கலாமே என்று..." என்று அவனிடம் உரைத்தவர் மகளிடத்தில்,

"மித்தும்மா... ஆரத்தி கரைச்சி எடுத்துட்டு வா..." என்க...

சங்கமித்ரா மகிழ்ச்சியுடன் உள்ளே சென்றாள்... அதற்குள் வாயிலுக்கு வந்த பிரபாவதி மகனிடம்,

"இப்போவாவது என் மருமகளைக் கூட்டிக்கிட்டு வரணும்ன்னு உனக்குத் தோணிச்சே..." என்று அவனைக் கடிந்தவர் மருமகளிடம்,

"அவன் மேல் ஆயிரம் தப்பு இருக்கட்டும்... நீ இப்படி அவனைப் பிரிஞ்சு இருக்கலாமா...?" என்று மருமகளைக் கடியவும் தவறவில்லை...

இவர்கள் அனைவரும் செய்த ஆர்ப்பாட்டத்தில் சித்தார்த்தும், பிரகதீஸ்வரியும் அதிர்ந்து போய் நின்றது தான் மிச்சம்... தாங்கள் சேர்ந்து வந்ததைக் கண்டு அனைவரும் தவறாக எண்ணி கொண்டதை கண்டு திகைத்த போதும் மகிழ்ச்சி மனதை மயிலிறகாய் வருடியதை அவர்களால் மறுக்க முடியவில்லை...

சரண்யா ஆரத்தி சுற்றியதும் தம்பதி சமேதராக இருவரும் வீட்டின் உள்ளே வந்தனர்... அங்குச் சரண்யாவின் அம்மா வயதான பெண்மணியிடம் இருவரையும் ஆசிர்வாதம் வாங்க வைத்தனர்... பழுத்த சுமங்கலி பெண்ணான அவர் இருவரையும் ஆசிர்வாதம் செய்த கையோடு சித்தார்த்திடம்,

"என்ன பேராண்டி... நீ எவ்வளவு பெரிய பணக்காரன்... அப்படிப்பட்ட பணக்காரன் பொஞ்சாதியை இப்படித்தான் நகைகள் ஒன்றும் இல்லாமல் வைத்திருப்பாயா...?" என்று கேட்க...

அந்தக் கணம் தான் சித்தார்த் மனைவியவளின் தோற்றத்தில் கவனத்தைச் செலுத்தினான்... எளிமையான பருத்தி சேலையில் கழுத்தில் மெல்லிய தங்க சங்கிலி, கைகளில் மெல்லிய தங்க வளையல்கள் அணிந்து எளிமையாக இருந்தாள்... எப்போதும் பாசிமணியும், கண்ணாடி வளையல்கள் அணிந்திருப்பவள் இப்போது திருமணத்திற்காகத் தங்கத்தை அணிந்திருந்தாள்...

அவள் எப்படி இருந்தாலும் அவனைப் பொருத்தவரையில் அவள் மட்டுமே அவனுக்கு உலக அழகி... ஆனால் உலகின் கண்முன் அவளது ஆர்ப்பாட்டம் இல்லாத அழகு தென்படவில்லை... ஆர்ப்பாட்டமுள்ள அந்தஸ்து தான் கண்ணில் படுகிறது போலும்... முதன்முறையாகத் தனது பொறுப்பற்ற தன்மையைக் கண்டு அவன் மனம் வருந்தினான்...

பாட்டியின் பேச்சில் மிரண்டு போனவளாய் பிரகதீஸ்வரி கணவனுடன் ஒன்றிக் கொள்ள, மனைவியவளின் செயலில் அவனின் மன வருத்தம் சடுதியில் மறைந்தது... அவளுக்குத் தான் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பட்டியல் போட ஆரம்பித்தான்...

அவன் நினைத்தது போன்றே பிரபாவதியும் நினைத்தார்... மருமகளுக்குத் தேவையானது என்ன என்ன என்று யோசிக்க ஆரம்பித்தார்...

"என்ன அத்தை இப்படிச் சொல்லிட்டீங்க... என் மகன் மருமகளுக்காக என்ன என்ன வாங்கி வச்சியிருக்கிறான்னு எங்க வீட்டில் வந்து பாருங்க... என் மருமகள் எப்போதும் எளிமையாய் இருக்க விரும்புகிறவள்... அவளுக்கு ஆடம்பரம் பிடிக்காது..."

மாமியாரின் பேச்சில் பிரகதீஸ்வரியின் கண்கள் கலங்கியது... அவளுக்கு அவரைப் பற்றி அதிகம் தெரியாது... அவளுக்குத் தெரிந்தது எல்லாம் கணவன் மட்டுமே... அவனை மட்டுமே நம்பி தான் அவர்களது திருமணத்திற்குச் சம்மதித்தது... அன்று பிரபாவதி பேசிய பேச்சில் அவள் அவரைக் கண்டு பயந்து தான் இருந்தாள்...

ஆனால் இப்போது அவரது உரிமையான பேச்சில் அந்தப் பயம் விலகி புதுச் சொந்தத்துடன் அவரைப் பார்த்தாள்... அவள் நல்ல மனைவியாகவும் நடந்து கொள்ளவில்லை... நல்ல மருமகளாகவும் நடந்து கொள்ளவில்லை... ஆனாலும் அவர்கள் யாரும் அவளை யாரிடத்திலும் விட்டு கொடுக்கவில்லை... அதை அவள் உணர்ந்தே இருந்தாள்...

"நீ வா பிரகதி..." என்று சங்கமித்ரா அவளைத் தனியே அழைத்துச் சென்றாள்...

அன்று மாலை சங்கமித்ராவின் கைகளில் மருதாணி போடும் விழா வட இந்திய பாணியில் நடைப்பெற்றது... பிரகதீஸ்வரிக்கு இது எல்லாம் புதுமையாக இருக்கச் சந்தோசத்துடன் கலந்து கொண்டாள்...

பிரபாவதி கொண்டு வந்து கொடுத்த டிசைனர் புடவை, நகையில் அவள் தேவதையாய் ஜொலித்தாள்... தள்ளி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சித்தார்த்தின் கண்கள் தன்னவளை தவிர்த்து வேறு எதையும் பார்க்கவில்லை... மணமகன் அர்ஜூன் மணமகள் சங்கமித்ராவை பார்த்ததை விட அதிகமாய் அவன் தன்னவளை சைட் அடித்துக் கொண்டிருந்தான்...

கணவனது பார்வையில் பிரகதீஸ்வரியின் முகம் செம்மையைப் பூசி கொண்டதில் அவளது தோற்றம் இன்னமும் அழகாய் மாறிப் போனது... இருவரும் தங்களது மன வேற்றுமைகளை மறந்து மனதில் இருந்த காதலில் மயங்கி தவித்துக் கொண்டிருந்தனர்... காதலின் ஜூவாலையில் மற்ற கருத்து வேறுபாடுகள் எரிந்து பொசுங்கி சாம்பலானது...

ஆடல் பாடல்களுடன் மருதாணி போடும் விழா இனிதாக முடிந்ததும் அர்ஜூனை அழைத்த அவனது உறவினர்கள் சங்கமித்ராவின் கைகளில் இருந்த மருதாணியில் ஒளிந்திருந்த அவனது பெயரை கண்டுபிடிக்கச் சொல்லி கலாட்டா செய்தனர்... அவனும் வெகுநேரம் எடுத்துக் கொண்டு ஒருவழியாய் கண்டுபிடித்து 'ஹூர்ரே' என்று வெற்றி களிப்பில் கூச்சலிட்டான்...

அதே போல் சங்கமித்ரா சித்தார்த்தை அழைத்துப் பிரகதீஸ்வரியின் கையிலிருந்த மருதாணியில் அவனது பெயரை தேட சொன்னாள்...

"நான் அவங்க பெயரை எழுத சொல்லலை..." என்று பிரகதீஸ்வரி மறுக்க...

"ஆனால் நான் எழுத சொன்னேன்..." என்று சங்கமித்ரா அவளை அடக்கி விட்டாள்...

ஏதுடா சாக்கு என்று காத்துக் கொண்டிருந்த சித்தார்த் சந்தோசத்துடன் மனைவியை ஒட்டி நெருங்கி அமர்ந்தவன் அவளது கையைப் பிடித்துக் கொண்டு தனது பெயரை தேட

துவங்கினான்... தேட துவங்கிய ஐந்து நிமிடங்களில் அவன் தனது பெயரை தேடி கண்டுபிடித்து விட்டான்...

ஆனால் மனைவியவளின் கையை விட முடியாது அதன் மென்மையில் தன்னைத் தொலைத்தவனாய் அவளது கையை வருடி கொண்டிருந்தான்... அவளோ கூச்சத்தில் நெளிந்தாள்...

"கையை விடுங்க..." என்றவளை நிமிர்ந்து பார்த்தவன் கண்களில் குறும்பு கூத்தாட,

"மாமூ கையை விடுங்கன்னு சொல்லு... நான் கையை விடறேன்..." என்று கூறி கலாட்டா செய்தான்...

அவனது வார்த்தையைக் கேட்டு அவள் ஆவென்று வாயை பிளந்தாள்...

"என்ன சொல்ல மாட்டியா...? அப்ப ஓகே... எனக்கு ஒண்ணும் பிரச்சினை இல்லை... காலம் முழுவதும் உன் கையைப் பிடிச்சிக்கிட்டு இப்படியே உட்கார்ந்து இருக்கணும்ன்னா அதுக்கும் நான் தயார் தான்..." என்று காதல் வசனம் பேசிய கணவன் அவளுக்குப் புதிதாகத் தெரிந்தான்...

"ப்ளீஸ்..." என்று கெஞ்சியவளின் பேச்சு அவனது காதில் விழவில்லை... அவளது கையை வருடுவதையும் அவன் விடவில்லை...

வேறுவழியின்றித் தயங்கிய குரலில், "மாமூ... கையை விடுங்க..." என்றவளை கண்டு வாய் கொள்ளா புன்னகையுடன் கையை விட்டவன் அவளது மருதாணியில் ஒளிந்திருந்த தனது பெயரை சுட்டி காட்டினான்...

"எப்படி...?" என்று வியப்பாய் கேட்ட மனையாளை கண்டு கண்சிமிட்டி சிரித்தவன்,

"அப்படி... அப்படித் தான்..." என்றான் குறும்பாய்...

"ஏற்கெனவே கண்டுபிடிச்சிட்டீங்களா...?" என்று சிணுங்கலாய் கேட்டவளை கண்டு வாரியணைக்கப்

பரபரத்தது அவனது கைகள்...

சூழ்நிலை கருதி அமைதி காத்தவனின் விழிகள் அமைதி காக்கவில்லை... கண்டபடி அவளது மேனியில் அலைப்பாய்ந்தது... பொறுக்கி பார்வையாய் கணவனது பார்வையைத் தூற்றியவள் இப்போது அவனது பார்வையில் மேனி சிவந்தாள்... அன்றும் இன்றும் பார்வை ஒன்று தான், ஆனால் மனதின் எண்ணம் தான் வேறாக இருந்தது... இப்போது மனம் ஒன்றுபட்டது போல் ஒரு உணர்வு...

இரவு உணவின் போதும் மனைவியுடனேயே இருந்தான் சித்தார்த்... அங்கு வருகை தந்திருந்த உறவினர்கள் அனைவருக்கும் அவர்கள் இருவரும் சேர்ந்து விட்டது போல் ஒரு தோற்றம் தோற்றுவிக்கப் பட்டது... அதனால் யாரும் அவர்களைத் தவறாக ஒரு வார்த்தை பேசவில்லை...

"ஏன் இவ்வளவு குறைவா சாப்பிடற...? இன்னும் கொஞ்சம் சாப்பிடு..." கணவன் அக்கறையாய் சொன்னதில் அவளது கண்கள் கரித்தது...

இத்தனை நாளாய் இந்த அக்கறை எங்கே போயிருந்தது...? மிகப் பெரிய கேள்வி அவளது மனதில் எழுந்தது... கேள்விகள் மட்டுமே அவளிடத்தில், விடைகள் அவனிடத்தில் அல்லவா...

அன்றிரவு கிளம்பும் போது பிரபாவதி அவளிடம் தனியே, "இன்னைக்கு நாள் நல்லாயில்லைம்மா... நாளைக்கு நான் உன்னை நம்ம வீட்டிற்கு அழைச்சிக்கிட்டு போகிறேன்..."

"அத்தை நான்..." என்று தயங்கியவளை பேச விடாது அவர்,

"இனியாவது நீயும், சித்துவும் சந்தோசமா இருக்கணும்மா..." என்க...

அவரது மகிழ்ச்சியைக் கெடுக்க விரும்பாதவளாய் அவள் அமைதியாக நின்றாள்... எல்லோரும் காரிலேறிய பின்னர்க் கடைசியாக ஏறிய சித்தார்த் மனைவியிடம் தலையசைத்து மௌனமாய் விடைப்பெற, அவளது

தலையும் தானாய் அசைந்து விடை கொடுத்தது அவளது சம்மதமின்றி...

அன்றிரவு முழுவதும் பிரகதீஸ்வரியால் தூங்க முடியவில்லை... மறுநாள் எப்போதும் போல் அதிகாலையில் விழித்தவள் குளித்து முடித்து வெளியில் வரும் போது பிரபாவதி பட்டுப்புடவை, நகைகளுடன் தயாராக இருந்தார்... அதைக் கண்டு அவள் திகைப்பாய் நின்றிருக்க, அவரோ சாதாரணமாக அவளிடம் பேசினார்...

"அம்மாடி பிரகதி... இது எல்லாத்தையும் போட்டுட்டு தயாராயிரு... முதல்ல நாம நம்ம வீட்டுக்கு போகலாம்..."

அன்று திருமணத்திற்காகச் சித்தார்த் வீட்டினர் வாங்கி வைத்திருந்த பட்டுப் புடவையும், நகைகளும் அங்கிருந்த கட்டிலில் வீற்றிருந்தது... அதைக் கண்டவள் மனதில் நடுக்கத்துடன் நின்றிருந்தாள்...

அப்போது அங்கே வந்த சங்கமித்ரா அத்தையிடம், "நான் பிரகதியை ரெடி பண்ணி கூட்டிட்டு வர்றேன்..." என்று அவரை அனுப்பி வைத்தவள் பிரகதியிடம்,

"நான் உனக்கு ஹெல் பண்றேன்..." என்றபடி புடவையைக் கையில் எடுத்தாள்...

"அக்கா... நான் அவர் கிட்ட பேசணும்..." என்று தயங்கிய பிரகதீஸ்வரியை அன்பாகப் பார்த்தவள்,

"முதல்ல நீ ரெடியாகு... அதுக்குப் பிறகு அத்தானை பார்க்க போகலாம்..."

ஏனெனில் சித்தார்த்தும் அவனது அன்னையின் முடிவை கேட்டு சற்று குழப்பத்துடன் அமர்ந்திருந்ததைக் கண்டு தான் அவள் அப்படிச் சொன்னது... இரண்டு குழப்பவாதிகளும் சேர்ந்து இன்னும் தங்களது வாழ்க்கையைப் பிரச்சினையாக்கி கொள்வார்கள் என்று தெரிந்து சங்கமித்ரா தடுத்து விட்டாள்...

வேறுவழியின்றிப் பிரகதீஸ்வரி அந்தப் பட்டுப்புடவையை உடலில் சுற்ற துவங்கினாள்... அத்தோடு சித்தார்த் தன்னை ஏமாற்றியதும் சேர்ந்து அவளது நினைவில் எழுந்தது... என்ன நினைத்தும் அவளால் அந்த ஏமாற்றத்தினைத் தாங்க முடியவில்லை... அவன் தன்னைக் காதலிப்பது போல் நடித்து ஏமாற்றியதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை...

ஏமாற்றம் தாங்காது அவளது விழிகள் கண்ணீரை சொரிந்தது... அதைக் கண்டு துடைத்து விட்ட சங்கமித்ரா,

"நீ கண்ணீர் விடும் அளவுக்குச் சித்து அத்தான் ஒண்ணும் கெட்டவர் இல்லை... எல்லோரும் பொறாமைப்படும் அளவிற்கு நல்ல உயர்ந்த இடத்தில் இருக்கும் அருமையான மனிதர்... அவர் உனக்குக் கணவனாகக் கிடைத்ததை நினைத்து நீ சந்தோசப்படணும்... எதுக்கும் நீ அத்தான் கிட்ட மனம் விட்டு பேசி பார் பிரகதி... எல்லாத்தையும் மனசுக்குள்ள போட்டு புதைச்சிக்கிட்டு உன் வாழ்க்கையை அழிச்சுக்காதே..." என்று அவள் அறிவுரை கூற...

அமைதியாக அதைக் கேட்டுக் கொண்ட பிரகதீஸ்வரி கணவனது ஒவ்வொரு செயலுக்கும் காரணம் தெரியாது பரிதாபமாய் விழித்தாள்... அதுவே அவளுக்குப் பெரிய ஏமாற்றத்தினைக் கொடுத்தது...

புடவை கட்டி, வைர நகைகள் அணிந்ததும் பிரகதீஸ்வரியின் தோற்றத்தில் அப்படி ஒரு பொலிவு வந்துவிட்டது... அவள் அவ்வளவு அழகாக இருந்தாள்...

"இப்போ தான் நீ ரொம்ப அழகாயிருக்க... அத்தான் உன்னைப் பார்த்ததும் ப்ளாட்டாகப் போறாரு..." என்று கூறி சங்கமித்ரா சிரித்தாள்...

"அக்கா... நீங்க தான் புதுப் பொண்ணு... நான் இல்லை..." என்று அவள் சிணுங்க...

"நீயும் புதுப் பொண்ணு தான்ம்மா..." என்று கண்சிமிட்டி சிரித்த சங்கமித்ராவை கண்டு அவளது முகம் வெட்கத்தில்

சிவந்தது...

வரவேற்பறையில் அலைப்பேசியைக் காதிற்குக் கொடுத்தபடி அமர்ந்திருந்த சித்தார்த் அங்கு வந்து நின்ற மனைவியவளின் அலங்காரம் கண்டு கண்ணிமைக்க மறந்தவனாய் அமர்ந்திருந்த சோபாவில் இருந்து எழுந்து நின்றான்... திருமண நாளன்று அவளது அலங்காரம் பற்றி அவன் கண்ட கனவு இன்று நனவாய் கண் முன் வந்து நின்றது கண்டு அவனது இதயம் தாளம் தப்பியது...

அவனது மனதிலிருந்த நேசம் விழிகளில் அப்பட்டமாய்ப் பிரதிபலித்தது...

பிரகதீஸ்வரி கணவனைக் கண்டதும் ஆவலுடன் அவன் புறம் நகர்ந்தவள் அவனின் பார்வையில் அப்படியே தயங்கி நின்றாள்... ஆளை விழுங்கி விடுவது போன்று பார்த்த அவனது பார்வையில் அவளது மனது டொம் டொம் என்று சத்தமாய் மத்தளம் வாசித்தது...

"வாம்மா நம்ம வீட்டுக்கு போகலாம்..." என்று மருமகளை அழைத்தவர் மகனிடம்,

"உனக்கு வேறு தனியா சொல்லணுமாடா..." என்று அழைக்க அவன் மந்திரித்து விட்டது போல் அவர்களை நோக்கி வந்தான்...

காரில் சென்ற போது அங்கு மௌனமே ஆட்சி செய்தது... அவரவர் அவரவர் யோசனையில் மூழ்கியிருந்தனர்... பிரகதீஸ்வரிக்கு இனி தான் என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லை... ஆனாலும் பெரியவர்களை எதிர்த்து பேச அவளால் முடியவில்லை...

அவர்களுக்கு முன் அங்கு வந்து சேர்ந்த சரண்யா அவர்களுக்கு ஆரத்தி சுற்ற, புதுமணத் தம்பதியாய் அவனது வீட்டினுள் நுழைந்தனர் இருவரும்...

பிரகதீஸ்வரியும் வசதியான வீட்டில் பிறந்து வளர்ந்தவள் தான்... ஆனால் கணவனது ஆடம்பரமான வீடு அவளை மிகவும் அச்சுறுத்தியது... அவளையும் அறியாது அவனது

கரத்தினைப் பிடித்துக் கொண்டு மருண்ட பார்வையுடன் அந்த வீட்டை பார்த்தாள்...

அதைக் கண்டு சித்தார்த்தின் முகம் மென்மையானது...

"எதுக்கு இவ்வளவு பயம் பேபி...? இது உன் வீடு தான்..."

கணவனது வார்த்தையில் சரேலென்று திரும்பி பார்த்தவள் அவனது விழிகளில் தெரிந்த கனிவு கண்டு பிரமித்துப் போய் நின்றாள்... திருமணத்திற்கு முன்பு பார்த்த அதே சித்தார்த்தாய் அன்பு பொங்க பார்த்தவனைக் கண்டு அவளது மனம் கொஞ்சம் கொஞ்சமாக அவன் புறம் சாயத் துவங்கியது...

"வாம்மா... வந்து விளக்கு ஏத்து..." என்று பிரபாவதி அவளை அழைக்க...

அவள் சித்தார்த்தை பாவமாகப் பார்த்தாள்... அவனோ தோளை குலுக்கியபடி,

"எனக்கு ஒன்றும் தெரியாது..." என்று பூஜையறையை நோக்கி கையைக் காட்டினான்...

வேறுவழியின்றி மாமியார் சொன்னதைச் செய்தவள் பின்பு கண் மூடி கடவுளிடம் வேண்டினாள்... அப்போதும் அவள் கணவனது வாழ்க்கைக்காக மட்டுமே வேண்டினாள்... அவனது வாழ்க்கையே அவள் தான் என்பதை அறியாத அறிவாளியாய்...

அவனது மனதிலும் அதே மாதிரியான வேண்டுதல் தான்...

"சித்து, பிரகதியை உன் ரூமுக்கு அழைச்சிட்டு போப்பா... ஈவ்னிங் தான் ரிசப்சன்... அதுவரை அவள் ரெஸ்ட் எடுக்கட்டும்..."

"இல்லை அத்தை... நான் உங்க கூடவே..." என்று சொல்லியபடி தனது கையைப் பற்றிய மருமகளை வாஞ்சையுடன் பார்த்த பிரபாவதி,

"இனி அத்தை கூடத் தானே இருக்கப் போகிற... உன் அத்தான் தான் நீ இல்லாமல் ரொம்பக் கஷ்டப்பட்டு விட்டான்... அதனால் நீ இப்போ அவன் கூடப் போய் இரு..." என்று அவர் அவளை மகனிடம் ஒப்படைத்து விட்டு விலகி சென்று விட்டார்...

"நான் ஒண்ணும் வில்லனில்லை... உன் கணவன்... அது உன் நினைவில் இருக்கட்டும்..."

அவள் தன்னுடன் வர தயங்கியதை கண்டு சித்தார்த்திற்குக் கோபம் வந்தது...

"ஆனால் உங்க பார்வைகள் அப்படிச் சொல்கிறதே..." மெல்லிய குரலில் தயக்கத்துடன் கூறியவளை கண்டு அவனது கோபம் மறைந்து மனதில் உல்லாசம் பொங்கியது...

"ஹா... ஹா..." என்று வாய் விட்டுச் சிரித்தான் அவன்...

சிரிக்கும் போது கூடுதல் அழகாய் இருந்தவனைக் கண்டு அவளது கண்கள் ரசித்துப் பார்த்தது... அவளது பார்வையில் அவனது சிரிப்பு நின்றது... அவன் ஒற்றைப் புருவத்தைக் கேள்வியாய்த் தூக்கினான்... அவனுக்குப் பதில் சொல்லாது நாணமுற்றவளாய் தனது பார்வையை அவள் வேறுபக்கம் திருப்பிக் கொண்டாள்...

"வா... நமது ரூமுக்கு போகலாம்..." என்று அவளைத் தங்களது அறைக்கு அழைத்துச் சென்றான்...

அவள் தயக்கத்துடன் அவனுடன் நடந்தாள் என்றால், அவனோ உற்சாகமாய் வந்தான்...

அறை கதவை திறந்து உள்ளே சென்றவன் அவள் புறம் திரும்பி, "வாங்க மிஸஸ். சித்தார்த்..." என்று குறும்பு புன்னகையுடன் அழைக்க...

அவனது குறும்பு புன்னகையில் மனம் மயங்கியவளாய் அவள் அறைக்குள் நுழைந்தாள்... நுழைந்ததும் அங்கிருந்த ஒரு பக்க முழுச் சுவற்றையும் அடைத்துக் கொண்டிருந்த

புகைப்படத்தைக் கண்டு இன்ப அதிர்ச்சியுடன் உறைந்தாள்...

ஏனெனில் அன்றொரு நாள் மலையுச்சியில் பச்சை வண்ண பாவாடை, சட்டையில், ஆரஞ்சு வண்ண தாவணி உடுத்தி சூரிய பின்னணியில் அவள் நின்றிருந்த புகைப்படம் தான் அது... அதை எடுத்திருந்த விதத்தில் அவள் அவ்வளவு அழகாய் தெரிந்தாள்... அவளது மூக்குத்தியின் பின்னே ஆதவன் தீச்சுடர் போல் பிரகாசித்தது மிகவும் அற்புதமாய் இருந்தது... அந்தளவிற்கு ரசனையுடன் எடுக்கப்பட்டு இருந்தது அந்தப் புகைப்படம்...

"இது யார் எடுத்தது...?" என்று நடுங்கும் குரலில் அவள் கேட்டாள்...

ஏனெனில் அன்று அவளுடன் வந்தது சித்தார்த், சங்கமித்ரா, சந்தியா, ஸ்வேதா மற்றும் சரவணன்... அவள் பார்க்கும் போது மற்ற நால்வரும் ஆற்று நீரில் விளையாடி கொண்டு இருந்தனர்... சித்தார்த் மட்டுமே அலைப்பேசியை நோண்டி கொண்டிருந்தான்... அதனால் அவளது மனம் படபடப்புடன் அவனது பதிலுக்காகக் காத்திருந்தது...

"ஏன்...? நான் தான்..." என்றவனது பார்வை புகைப்படத்தில் இருந்த தன்னவளை ரசனையுடன் வருடியது...

நனவை விடக் கனவு தானே அவனுக்கு இத்தனை நாளாய் கை கொடுக்கிறது... அதனால் நனவை நம்பாது கனவை நம்பினான் அவன்...

அவனது பதிலில் அவள் திகைப்பும், வியப்புமாய் அவனை ஏறிட்டு பார்த்தாள்... அன்று அவள் பார்க்கும் போது அவன் அலைப்பேசியை நோண்டி கொண்டிருந்தது அவன் எடுத்த அவளது புகைப்படத்தைப் பார்ப்பதற்குத் தானா... அப்படி என்றால்...???

அவளது விடைகள் ஒவ்வொன்றிற்கும் இனி விடை கிடைக்குமோ அவனிடமிருந்து...!!!

"ஒற்றைப் புகைப்படம் தானா என்
காதலை பறைச்சாற்ற வேண்டும்...
அந்த அனுமன் போல் எந்தன்
நெஞ்சை கிழித்துக் காண்பிக்கவா...?
என் தசையில் இரத்த நாளங்கள்
கொண்டு வடித்திருக்கும் உன்
அழகுருவை நான் காட்டவா...?
என் உயிர்மூச்சில் கலந்திருக்கும்
உன்னை நான் உணர்த்தவா...?
என்னை நீ உணர என்னுடன்
வாழவா என் பேபி...!!!"

நனவாகும்...!!!

"அப்போவே உங்களுக்கு என்னைப் பிடிக்குமா...?"

இதைக் கேட்கும் போதே பிரகதீஸ்வரியின் குரல் நடுங்கியது... ஏனென்று தெரியவில்லை அவளுக்கு அழ வேண்டும் போலிருந்தது...

'அப்போது மட்டும் இல்லையடி பெண்ணே... எப்போதுமே உன்னை மட்டுமே பிடிக்கும்...' என்று நினைத்த சித்தார்த்திற்குத் தன்னைப் புரிந்து கொள்ளாமல் கேள்வி கேட்கும் மனைவியைக் கண்டு அத்தனை வேதனையாக இருந்தது... அவளது கேள்விக்குப் பதில் அளிக்க விரும்பாது அவன் ஜன்னல் புறம் வந்து நின்றான்...

இதுவரை எதற்கும் கலங்காதவன் மனம் சிறிது கலங்கியது... இனி வாழ்க்கை என்ன வைத்துக் காத்திருக்கிறது என்பதை அறியாத ஒரு கலக்கம்... அதையும் மீறி ஒரு தைரியம்... தன்னை மீறி எதுவும் நடந்து விடப் போவதில்லை என்கிற திமிரில் வந்த தைரியம் அது...

கணவனின் அமைதி அவளது மனதினை வாள் கொண்டு அறுத்தது... அடுத்த நொடி பெரும் கேவலுடன்,

"மாமூ..." என்று கூவியபடி அவனின் முதுகு புறமாய் வந்து கட்டியணைத்து கொண்டாள்...

அவளின் அழைப்பில் அவனது உள்ளம் நெகிழ்ந்தது என்றால், அவளின் அணைப்பில் அவனது உடல் நெகிழ்ந்தது... அதுவரை விறைப்புற்றிருந்த அவனது தேகம் மெல்ல மெல்ல இலகுவானது... மறுகணம் அவள் புறம் திரும்பியவன் தன்னவளின் மதி முகத்தைத் தனது நெஞ்சில் தாங்கி நின்றான்... அவனது கைகள் அவளைக் காதலோடு அரவணைத்துக் கொண்டது...

அவளிடம் எத்தனை முரண் இருந்த போதும் அவளை வெறுத்து ஒதுக்க அவனால் முடியாதே...!

கணவனின் அணைப்பில் பாதுகாப்பாய் உணர்ந்தவளின் அழுகை கொஞ்சம் கொஞ்சமாய்க் குறையலானது... அவனை மெல்ல ஏறிட்டு பார்த்தவள்,

"ஏன் மாமூ அன்னைக்கு அம்மா கிட்ட அப்படிச் சொன்னீங்க...? என் சொத்துக்காகத் தான் என்னைக் கல்யாணம் பண்ண போறதா ஏன் சொன்னீங்க...? இதோ இந்த ஃபோட்டோ சொல்லுது உங்களுக்கு என்னைப் பிடிக்கும்ன்னு... ஆனால் நீங்க பேசி என் காதால் நான் கேட்ட வார்த்தைகளும் பொய்யில்லை... இதில் எது நிஜம் மாமூ...?" என்று கண்ணீர் மல்க கேட்டவளின் விழிகளோடு விழி கலந்தவனின் விழிகளும் சொல்லொண்ணா வலியை பிரதிபலித்தது...

'கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய்... தீர விசாரிப்பதே மெய்... அதை நீ கேள்விப்பட்டது இல்லையா பேபி...?' என்று அவன் மனதிற்குள் ஓலமிட்டது அவளது காதில் விழவில்லை...

"எங்க அம்மா நான் அநாதைன்னு சொன்னப்போ கூட நான் அதை நம்பலை... எனக்கு அவங்க மேல ஒரு போதும் நம்பிக்கை இருந்தது இல்லை... ஆனால் என்னோட ஒட்டு மொத்த நம்பிக்கையும் நீங்க தானே... நீங்க அப்படிச் சொல்லலாமா...?"

அவளது கூற்றில் அவனது உடலில் மீண்டும் விறைப்பு வந்தது... அது அவளது பிறப்பின் ரகசியம் தெரிந்ததினால் வந்த விறைப்பு... அதை நினைத்து பார்த்தவனுக்கு அப்படியொரு வேதனை மனதில் எழுந்தது... அதில் தன்னவளை நினைத்து மனம் அதிகம் வேதனையுற்றது...

"உங்களை நான் எந்தளவுக்கு நம்பினேன்...? ஆனால் நீங்க...?" என்று கண்ணீர் விட்டவளை கண்டு அவனது மனம் வருந்தியது...

'இவள் என்னைப் புரிந்து கொள்ளவே மாட்டாளா...?' என்று அவனுக்கு ஆயாசமாக இருந்தது...

அவளுக்கும் அவனுக்கும் கொள்கைகள் தான் வேறு வேறு... ஆனால் காதல் ஒன்று தான்... அவர்கள் ஒருமித்த மனமுடையவர்கள்... அவனின் காதலை அவன் நிரூபிக்க ஒரு நொடி போதும்... ஆனாலும் அதை நிரூபிக்க அவனுக்கு விருப்பம் இல்லை...

காதல் என்பது உணர்த்தப்பட வேண்டிய ஒன்றில்லை... உணரப்பட வேண்டிய ஒன்று... அவன் எப்படி அவள் தன்னைக் காதலிக்கிறாள் என்பதை உணர்ந்தானோ... அது போல் அவளும் தன் காதலை உணர வேண்டும் என்று அவன் பிடிவாதமாக எண்ணினான்... அது போன்று உணராது அவன் விளக்கி சொல்லி வரும் காதல் பிற்காலத்தில் மீண்டும் இதே பிரச்சினையைக் கொண்டு வரும் என்று நினைத்தவன் அவளை விலக்கி நிறுத்தி விட்டு அமைதியாக வெளியில் சென்று விட்டான்...

அதை விட அவன் யாரிடத்திலும் எதற்கும் விளக்கம் கொடுத்தது இல்லை... மற்றவர்கள் தான் அவனது செயலுக்கான விளக்கத்தைப் புரிந்து நடந்து கொள்ள வேண்டும்... தொழிலில் இருப்பது போல் வாழ்க்கையிலும் அவன் இருந்திட எண்ணினான்...

சொல்லாத காதல் செல்லாது என்பதை அவன் அப்போது அறிந்திருக்கவில்லை...

கணவன் அமைதியாக விலகி சென்றதை கண்டு அவளுக்கு மீண்டும் கண்கள் கரித்தது... ஒரு வார்த்தை, ஒரே ஒரு வார்த்தை அவனின் வாயிலிருந்து வர வேண்டும் என்று அவள் எதிர்பார்த்தாள்... அந்த வார்த்தையைத் தானும் அவனிடத்தில் இன்னமும் சொல்லவில்லை என்பதை உணராதவளாய்...

அப்போது அறை கதவு திறக்கும் ஒலி கேட்டது... மீண்டும் சித்தார்த் தான் உள்ளே வந்தான்... அவனது கையில் அவளது பை இருந்தது... அதைக் கட்டில் மீது வைத்தவன்,

"வா சாப்பிட போகலாம்..." என்றான் ஒன்றும் நடவாதவன் போல்...

பிரகதீஸ்வரியும் மறு பேச்சு பேசாது அவனுடன் சென்றாள்... உணவு மேசை வரும் வரை இருவரிடையே மௌனம் மட்டுமே ஆட்சி செய்தது... அங்கு யாரும் இல்லாததைக் கண்டு அவள்,

"மாமா, அத்தை எங்கே...?"

முதன்முறையாக மனைவி அவனது பெற்றோரை சொந்தத்துடன் அழைக்கிறாள்... அதைக் கேட்டு அவனது முகம் மென்மையானது...

"நமக்குப் பிரைவசி கொடுக்க நினைச்சி இருப்பாங்களா இருக்கும்..." என்று கண்சிமிட்டி சிரித்தவனைக் கண்டு அவளது மனது மயங்கி தவித்தது அவஸ்தையாய்...

"நீ உட்கார்..." என்று அவளை நாற்காலியில் அமர்த்தி அவன் வீட்டினனாய் அவளை உபசரித்தான்...

அவளுக்குப் பிடித்த இடியாப்பம், சொதி, அடை, தக்காளி சட்னி என்று அனைத்தும் இருந்தது... அதைக் கண்டு அவளது விழிகள் வியப்பில் விரிந்தது... அவளது வியப்பை பார்த்து ரசித்தவாறு சித்தார்த்,

"நான் தான் செய்யச் சொன்னேன்..." என்றபடி அவளது தட்டில் இடியாப்பம் வைத்து சொதியை ஊற்றியவன் அதை எடுத்து அவளுக்கு ஊட்ட முனைந்தான்...

"வேண்டாமே..." என்று அவள் சுற்றும் முற்றும் பார்த்தபடி வெட்கத்துடன் அவனது கையைத் தடுத்தாள்... அதில் அவனது முகம் இறுகியது...

"அவன் கொடுத்தால் மட்டும் வாங்கிக்கத் தெரியுது... நான் கொடுத்தால் மட்டும் வேண்டாமா...?" என்றவனது கோபக்குரலில் பயந்து போனவளாய் அவள் வாய் திறந்தாள்...

அதில் ஆனந்தம் அடைந்தவனாய் அவளுக்கு ஒரு வாய் ஊட்டி விட்டவன், "அவன் உனக்கு வெறும் அத்தான் தான் இல்லையா... ஆனால் நான் உனக்கு உன் மாமூ

அப்படித்தானே...? அப்போ நான் உனக்கு எப்போதுமே சம்திங் ஸ்பெசல் தானே..." என்று இமை சிமிட்டியவனைக் கண்டு கண்கள் கலங்க ஏறிட்டவள்,

"நீங்க எனக்கு எப்போதுமே ஸ்பெசல் தான்... அது மாதிரி நான் உங்களுக்கு ஸ்பெசல் இல்லையா...?" என்று தவிப்புடன் கேட்டவளை கண்டு அவன் உதடு கடித்து அமைதியானான்...

'நான் புரிந்து கொண்ட மாதிரி நீ ஏன்டி என்னைப் புரிஞ்சிக்க மாட்டேங்கிற...?' என்று அவனால் மனதிற்குள் புலம்ப மட்டுமே முடிந்தது...

ஏனோ தனது மனதின் காதலை சொல்லி அவளிடத்தில் மண்டியிட அவனால் முடியவில்லை... அதே சமயம் தவிப்புடன் இருக்கும் தன்னவளை அப்படியே விட்டு விடவும் அவனால் முடியவில்லை... ஆறுதலாக அவளது தலையைத் தடவி கொடுத்தவனைக் கண்டு உள்ளம் உடைந்தவளாய் அவள் அவனது இடுப்பை கட்டி பிடித்துக் கொண்டு அவனது வயிற்றில் முகம் புதைத்து தேம்பினாள்...

மனைவியின் தலையை வருடியபடி, 'நீ தான்டி எனக்கு எல்லாமே' என்று மனதிற்குள் கூறியவன் அதை வாய் விட்டு கூறவில்லை... அதற்கு அவனது ஈகோ தடுத்தது...

"சித்து..." என்ற பிரபாவதியின் அழைப்பில் இருவரும் அவசரமாக விலகினர்...

"நீலேஷும், நேத்ராவும் வந்திருக்காங்க..." என்று அவனிடம் உரைத்து விட்டு அவர் சென்று விட்டார்...

தன்னுடன் வருவதற்காக எழுந்த மனைவியைத் தடுத்து, "நீ சாப்பிட்டு விட்டு வா..." என்று அவன் அவளை அமர்த்த...

"நீங்க...?" என்று தயங்கியவளை கண்டு,

"நீ சாப்பிட்டால் நான் சாப்பிட்ட மாதிரி தான்..." என்று புன்னகையுடன் அவளது கன்னம் தட்டி சொன்னவன் வரவேற்பறைக்குச் சென்றான்...

அதிலேயே அவனது காதலை அவள் உணர்ந்திருக்க வேண்டாமோ... குழப்பமான மனநிலையில் இருந்தவளுக்கு உணவு உள்ளே செல்ல மறுத்தது... காதலை உணர்ந்து கொள்ள மனமும் மறுத்தது...

"சித்து..." என்று ஆர்ப்பாட்டமாய்க் கூவியபடி நேத்ரா அவனைக் கட்டி பிடிக்க அருகில் வந்தாள்...

அப்படிச் செய்ய முடியாது சட்டென்று விலகிய சித்தார்த் அவளைப் பார்த்து கண்டிப்புடன், "நேத்ரா... வெளிநாட்டில் படித்து விட்டு வந்தால் நம்ம நாட்டுக் கலாச்சாரத்தை மறந்து விடணும்ன்னு ஏதாவது வேண்டுதல் இருக்கா...?" என்று அவளிடம் எரிச்சலுடன் மொழிந்தவன் நண்பனிடம் திரும்பி,

"வா நீலேஷ்... என்ன விசயம்...?" என்று அவனை வரவேற்றான்...

சித்தார்த் அவனது சகோதரிகள் ஸ்வர்ணா, ஸ்வேதா மற்றும் மாமன் மகள் சங்கமித்ரா மூவரிடம் இயல்பாகப் பழகுவான்... ஆனால் அடுத்தப் பெண்களிடம் அப்படிக் கிடையாது... சற்று இடைவெளி விட்டே பழகுவான்... அதிகம் பழகியிராத அத்தை மகள் சந்தியாவிடம் கூட அவன் அப்படித்தான்...

தங்கையிடம் சித்தார்த் பேசிய விதம் நீலேஷை முகம் கருக்க வைத்தது... அவன் மனதிற்குள் பல திட்டங்கள் இருந்தது... ஆனால் சித்தார்த்தின் இந்தச் சிடுசிடுப்பு பார்க்கும் போது அது எல்லாம் நடக்காது போலவே...

'நோ நெவர்... நான் நினைத்ததை நடத்தியே முடிப்பேன்...' என்று அவன் மனதிற்குள் சபதம் எடுத்துக் கொண்டான்... அதனால் அவன் முகத்தை மலர்ச்சியாக வைத்துக் கொண்டான்...

நேத்ராவின் முகமும் சித்தார்த்தின் பேச்சில் விழுந்து விட்டது... ஆனாலும் அவனை அடைய வேண்டும் என்கிற அவளது ஆவல் அவனது உதாசீனத்தைப் புறம் தள்ளியது...

அப்போது பிரகதீஸ்வரி அங்கு வந்தாள்... மனைவியைக் கண்டதும் சித்தார்த்தின் முகத்தில் இருந்த சிடுசிடுப்பு மறைந்து மகிழ்ச்சி பொங்கியது...

"என்ன அங்கேயே நிற்கிற...? வா ரதிம்மா..."

நீலேஷை கண்டு தான் அவள் தயங்கி நின்றது... ஏனெனில் சித்த மருத்துவம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நடந்த போது அவள் இந்த நீலேஷை அடிக்கடி பார்த்திருக்கிறாள்... அப்படிப் பார்க்கும் போது எல்லாம் அவன் அவளை முறைத்துக் கொண்டு செல்வான்... அவளது கணவனே அமைதியாகச் செல்லும் போது நீலேஷின் பார்வை அவளை ஒரு மாதிரியாக இளக்காரமாகப் பார்க்கும்...

கணவன் அழைத்ததும் அவள் அங்கு வந்தாள்... மனைவி தோள் மீது கை போட்டு அணைத்துக் கொண்ட சித்தார்த்,

"இவள் தான் என் மனைவி பிரகதீஸ்வரி..." என்றான் பெருமையாக...

சித்தார்த் முகத்திலிருந்த பெருமிதத்திற்கு எதிர்ப்பதமாகப் பிரகதீஸ்வரியின் முகம் அழுது சிவந்திருந்தது அண்ணன், தங்கை இருவரது கண்களில் இருந்தும் தப்பவில்லை... இருவரும் அர்த்தம் பொதிந்த பார்வையைப் பரிமாறி கொண்டனர்...

சித்தார்த் அவர்களைக் கவனியாது மனைவியவளை பார்த்திருந்தான்... அவர்களைக் கவனித்திருந்தால் அவர்களது மன அழுக்கினை அவன் உணர்ந்திருப்பானோ...?

நீலேஷ் பிரகதீஸ்வரியை கண்டு வரவேற்பாய் வணக்கம் தெரிவிக்க, அண்ணனை போன்று அமைதியாக இருக்க முடியாது நேத்ரா சித்தார்த்திடம்,

"உங்க மனைவி கல்யாணம் பண்ணின அன்னைக்கே உங்களை விட்டுட்டு பிரிந்து போயிட்டாங்களே... அப்புறம் எப்படி...?"

நேத்ராவின் வார்த்தையில் சித்தார்த்தின் முகம் கருத்துப் போனது... பிரகதீஸ்வரிக்கு நேத்ரா பேசியது கூட வருத்தமாக இல்லை... ஆனால் கணவனின் முகம் அவமானத்தில் சுருங்கி போனது அவளுக்கு அத்தனை வருத்தமாக இருந்தது... என்ன செய்து அவனைத் தேற்றுவது என்று தெரியாது அவள் விழித்தாள்...

அன்று மணமேடையில் இதை விடத் தான் அதிகம் அவனை அவமானப்படுத்தியதை அந்தக் கணம் பேதையவள் மறந்தே போனாள்...

"இப்போ இந்த நொடி என் மனைவி என்னுடன் இருப்பது நிஜம்..." என்று முகம் இறுக பதிலளித்தவன் நீலேஷ் புறம் திரும்பி பேசலானான்...

அதில் நேத்ரா முகம் சுண்டைக்காய் போல் சுருங்கி போய்விட்டது... நேத்ரா பேசிய பேச்சு, நீலேஷின் வருகை எல்லாம் பிரகதீஸ்வரியினுள் பழைய நிகழ்வுகளைத் தட்டி எழுப்பியதில் அவள் முகமும், மனமும் வாட அமைதியாக அமர்ந்திருந்தாள்...

சிறிது நேரம் பேசி கொண்டிருந்து விட்டு நீலேஷும், நேத்ராவும் விடை பெற்று வெளியில் வந்தனர்...

"உனக்குக் கொஞ்சம் கூட அறிவில்லை நேத்ரா... இப்படியா சித்துக் கிட்ட பேசி வைப்ப..." என்று தங்கையைக் கடிந்தான் நீலேஷ்...

"அண்ணா... நான் சித்துவை பார்க்க எவ்வளவு ஆசையா வந்தேன்... இங்கே வந்து பார்த்தால் அவரோட மனைவி அவர் கூட இருக்கிறாள்... நீங்க என்ன சொன்னீங்க...? இங்கே என்ன நடக்குது...?" கோபமும், ஆதங்கமுமாய் அவள் படபடத்தாள்...

சித்தார்த் என்னும் எட்டாத கனியை எட்டி பிடித்துவிடும் ஆவல் அவளிடம்...

"எனக்கு என்ன தெரியும்...? இத்தனை நாள் அவன் மனைவியைப் பிரிந்து இருந்தது உண்மை தான்... ஆனால்

இப்போது திடீர்ன்னு அவள் எப்படி முளைத்தாள்ன்னு எனக்குத் தெரியலை..." என்று யோசித்தவன்,

"இருந்தாலும் நீ இப்படிப் பேசியது ரொம்பத் தப்பு..."

"நான் என்ன பொய்யா சொன்னேன்... உண்மையைத் தானே சொன்னேன்... அவள் அவரைப் பிரிந்து இருந்தது உண்மை தானே..."

"பிரிந்து இருந்தது என்னவோ உண்மை தான்... ஆனால் அவனுக்கு அவளைப் பிடிக்கும் என்பது உனக்குத் தெரியாது இல்லையா...?"

"அண்ணா..." என்று திகைப்பாய் பார்த்தாள் அவள்...

"ஆம் நேத்ரா... சித்து அவன் மனைவியை மிகவும் காதலிக்கிறான்..."

"யாராவது பிரிந்திருக்கும் மனைவியை, அவமானப்படுத்திய மனைவியைக் காதலிப்பாங்களா...? அப்படிக் காதலிப்பவன் மடையன்..."

"இந்த மடையன் காதலிக்கிறானே... என்ன செய்வது...? நான் சொல்வதைக் கேட்டால் உனக்கே அது புரியும்..." என்றவன் சித்தார்த்தின் மனைவி மீதான காதலை ஆதாரத்தோடு விளக்கி கூற அதைக் கேட்டு நேத்ரா வாயடைத்து போனாள்...

"அப்படி என்றால் சித்து எனக்கு எட்டாக்கனி தானா...?" என்று வருத்தத்துடன் கூறியவளை கண்டு வாய் விட்டுச் சிரித்தான் நீலேஷ்...

"முட்டாள் நேத்ரா... ஆனால் உன் அண்ணனான நான் உன்னளவுக்கு முட்டாள் இல்லை... சித்து எப்போதும் நம் வசம் தான்..." என்றவனைக் குழப்பமாய்ப் பார்த்தாள் நேத்ரா...

"சித்துவை வசப்படுத்த எவராலும் முடியாது... அவர் காற்றைப் போன்றவர் யாராலும் கட்டுப்படுத்த முடியாது..." என்றவளை கேலியாய் பார்த்தவன்,

"ஆனால் அவனது தங்கையை வசப்படுத்த முடியுமே... அதை வைத்து அவனைக் கட்டுப்படுத்த முடியுமே..." என்றவனைக் கண்டு அவளின் கண்கள் வியப்பாய் மலர்ந்தது...

"அண்ணா..."

"ஆம்... ஸ்வேதா என்னைக் காதலிக்கிறாள்..." தான் அவளைக் காதலிப்பதாக அவன் சொல்லவில்லை... ஏனெனில் அவன் அவளைக் காதலிக்கவில்லை... அது தான் உண்மையும் கூட...

"இது எப்போ அண்ணா நடந்தது...?"

"மூன்று வருடங்களுக்கு முன் அவளது அத்தை பையன் சரவணன் அவளது கழுத்தில் தாலி கட்டி விட்டான்..."

"அவள் அடுத்தவன் மனைவியா...?" என்று முகத்தைச் சுளித்த தங்கையை அடக்கிய நீலேஷ்,

"சொல்வதை முழுவதுமாகக் கேள்... அரைகுறையாகக் கேட்டுவிட்டு கொதிக்காதே..." என்றவன்,

"தாலி மட்டும் தான் அவன் கட்டினான்... அடுத்த நொடி அவள் அதைக் கழட்டி அவனது முகத்தில் வீசி எறிந்து விட்டாள்... அவனுடன் வாழவில்லை..."

"ஓ..." என்றவள் அமைதியாகி விட்டாள்...

"அதன் பிறகு அவள் வருத்தமாக இருந்த சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு நான் அவளது வாழ்க்கையில் நுழைந்தேன்... அவளைக் காதலிப்பதாகச் சொல்லி ஆறுதல் அளித்தேன்... என்னுடைய வார்த்தையில் அவளும் மயங்கி விட்டாள்... அவளும் என்னைக் காதலிக்கிறாள்... அது எனக்கு நன்றாகத் தெரியும்... ஆனால் அவள் இன்னமும் வாய் விட்டு சொல்ல மறுக்கிறாள்... அது தான் ஏன் என்று எனக்குப் புரியவில்லை..." என்று தாடையைத் தடவி கொண்டு யோசித்தான் அவன்...

"அப்படிப்பட்ட பெண் உனக்கு வேண்டுமா அண்ணா..."

"வேண்டும்... அவள் தான் வேண்டும்... அவளை வைத்து தான் இந்தச் சித்த மருத்துவத்தை என் கைவசம் நான் கொண்டு வர வேண்டும்... சித்துக் கையில் இருக்கும் வரை நான் நினைத்தது நடக்காது... அது என் கைகளில் வர வேண்டும்... அதன் பின் இந்த உலகின் ராஜா நானே..." என்றவனின் கண்களில் கனவு மிதந்தது...

"அந்தளவுக்கு அது மதிப்புடையதா அண்ணா..." என்றவளை அற்பப்பதர் போன்று பார்த்தவன்,

"அவை எல்லாம் விலை மதிப்பில்லாதவை... நம் நாட்டின் பொக்கிசம்... அது மட்டும் என் கைக்கு வரட்டும்... அதன் பின் இந்தச் சித்துவின் கண்களில் விரல் விட்டு ஆட்டுவேன்... அதுவரை நீயும், நானும் சித்துவிடம் சற்று அடக்கி வாசிப்பது நமக்கு நல்லது..."

“ம்... சரி...” என்று அவனது கூற்றை ஏற்றுக் கொண்டவள், "அதுக்கு நீ முதலில் ஸ்வேதாவை கல்யாணம் பண்ண வேண்டும்..."

"நிச்சயம் கல்யாணம் பண்ணுவேன்... என்னைத் தவிர வேறு யாரும் அவளைக் கல்யாணம் பண்ண நான் விட மாட்டேன்..."

'அதற்காக எந்த வழியையும் கடைப்பிடிக்க நான் தயாராக இருக்கிறேன்...' என்று மனதில் குரோதமாய் நினைத்தான் நீலேஷ் என்னும் நீலகண்டகார்த்திகேயன்...

நீலகண்டகார்த்திகேயன் என்பது அவனது தாத்தாவின் பெயர்... அது அவனுக்குப் பிடிக்காத காரணத்தால் நீலேஷ் என்று தனது பெயரை ஸ்டைலாக வைத்துக் கொண்டான்... இவனது பெயரை தான் ஸ்வேதா செல்லமாகச் சுருக்கி 'கார்த்திக்' என்று அழைத்தாள்...

சரவணன் மனதில் ஸ்வேதா... ஸ்வேதா மனதில் நீலகண்டகார்த்திகேயன் என்கிற நீலேஷ்... யாருக்கு யாரோ...!!!

ஏதோ யோசனையில் இருந்த மனைவியிடம் சித்தார்த், "ரதி... நீ போய் ரெஸ்ட் எடு... எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கு..." என்றுரைத்தவன் உடனே கிளம்பி சென்று விட்டான்...

அவனது வீட்டில் அவனது மனைவி அதுவும் அவனது கையருகில்... மனதில் எழும் தாபத்தினைக் கட்டுப்படுத்த முடியாது தான் அவன் வெளியில் கிளம்பி வந்தது... அங்கேயே இருந்தால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு அவன் பொறுப்புக் கிடையாது என்பதை உணர்ந்து பொறுப்புள்ளவனாக வெளியேறி விட்டான்...

பிரபாவதியும் மருமகளை ஓய்வு எடுக்கச் சொன்னார்... அவளுமே மனதை போட்டு உழட்டியதில் மிகவும் சோர்ந்து போயிருந்தாள்... அதனால் தங்களது அறைக்கு வந்தாள்...

முதன்முறை பார்த்த போது பிரமித்தது போன்று இப்போதும் அவள் தனது புகைப்படத்தைப் பார்த்து பிரமித்தாள்... சிறிது நேரம் அங்கேயே நின்று பார்த்து கொண்டிருந்தவள் பின்பு கால்கள் வலிக்கக் கட்டிலில் வந்தமர்ந்தாள்... அப்போது தான் அந்த அறையைச் சுற்றி தனது கண்களைச் சுழற்றினாள்...

அவளது புகைப்படத்தைத் தவிர அந்த அறையில் வேறு புகைப்படம் ஏதுமில்லை... அது போல் ஒரு ஆணின் அறை போன்று இல்லாது வெகு சுத்தமாக, நேர்த்தியாக அந்த அறை இருந்தது... அதில் எல்லாம் அவன் ஒழுங்கு தான் என்று நினைத்தவளின் மனம் மீண்டும் சோர்ந்து போனது...

மீண்டும் வேண்டாத நினைவுகள் அவளை வாட்டி வதைத்தில் தனக்குள் யோசித்தபடி இருந்தவள் அப்படியே படுத்து உறங்கி விட்டாள்... அவள் எழுந்த போது மணி மூன்றாகி இருந்தது... அவசரமாய் எழுந்து முகத்தைக் கழுவி விட்டு வந்தவள் காலையில் இருந்து தான் உடுத்தியிருந்த பட்டுப் புடவையைக் களைந்து விட்டுச் சாதாரணப் பருத்தி சேலையை உடுத்தி கொண்டு வெளியில் வந்தாள்...

அவளைக் கண்டதும் பிரபாவதி, "உன்னைச் சாப்பிட கூப்பிட வந்தேன்... நல்லா அசந்து தூங்கிட்டு இருந்த அதனால் எழுப்பலை..." என்றவர் மருமகளை அழைத்து வந்து தானே உணவு பரிமாறினார்...

"நீங்க சாப்பிட்டீங்களா அத்தை...?"

"அதெல்லாம் ஆச்சு... மாமாவும் நானும் சாப்பிட்டு விட்டோம்..."

"அவர்..." என்று தயக்கத்துடன் இழுத்தவளை கண்டு வாஞ்சையுடன் பார்த்தார் அவர்...

மருமகளின் முகத்தில் இருந்த கவலை உண்மையே... மகன் மீது இத்தனை பாசம் வைத்திருப்பவள் ஏன் அவனைப் பிரித்திருக்கிறாள் என்று அவருக்கு விளங்கவில்லை...

"அவன் பிசினஸ் லன்ச் இருக்குன்னு சொல்லிட்டான்... நீ சாப்பிடு... ஈவினிங் ரிசப்சனுக்கு வந்திருவான்..."

"ஓ..." என்றவள் சாப்பிட ஆரம்பித்தாள்...

"இன்னும் கொஞ்சம் போட்டுக்கம்மா..."

மகனை போன்று அன்னையும் அவளைப் பார்த்து பார்த்து கவனித்ததில் அவளுக்குக் கண்கள் கரித்தது...

முழுவதும் சாப்பிட்டு முடித்து எழுந்தவள் மாமியாருடன் வரவேற்பறையில் அமர்ந்து பேசி கொண்டிருந்தாள்... தங்களது குடும்ப உறுப்பினர்களைப் பற்றிச் சொல்லி கொண்டிருந்தவர்,

"ஸ்வர்ணா இந்தக் கல்யாணத்துக்கு வர்றதா இருந்தாள்... திடீர்ன்னு பேத்திக்கு உடம்பு சரியில்லாம போயிருச்சு... அதனால் வர முடியவில்லை... உங்க கல்யாணத்தில் அவளை நீ பார்த்திருப்பியே..."

திருமண நலுங்கு வைத்த போது பார்த்த ஸ்வர்ணாவின் உருவம் மசமசவென்று அவளது நினைவில் தோன்றியது...

"ஸ்வேதா... இங்கே வருவதே இல்லை..." என்று வருத்தத்துடன் கூறியவரை கண்டு,

"சாரி அத்தை..."

"உன் அண்ணன் செய்த தவறுக்கு நீ என்ன பண்ணுவ, விடு..." என்று அவர் அவளைத் தேற்றினார்...

தனது மகளுக்குத் துரோகம் இழைத்த குடும்பத்துப் பெண்ணைத் தங்கள் வீட்டு மருமகளாகச் சந்தோசமாய் வரவேற்க வேண்டும் என்றால் அவரது மனதில் மகனின் வாழ்க்கையைப் பற்றிய கவலை எந்தளவிற்கு இருக்க வேண்டும்...? மகளின் வாழ்க்கையைக் கூட அது பின்னுக்குத் தள்ளி விட்டதே...

அடுத்த நொடி பிரகதீஸ்வரி விழிகளில் கண்ணீர் வழிந்ததில் அவர் அவளை ஆதரவுடன் அணைத்துக் கொண்டார்...

"ஸ்வேதா வாழ்க்கை இன்னைக்கு இல்லைன்னாலும் என்னைக்காவது சரியாகும்... ஆனால் சித்து அப்படி இல்லைம்மா... அவன் ஒன்றை நினைத்தால் அதில் மட்டுமே நிலைத்து நிற்பவன்... அவனது சந்தோசம் நீ மட்டும் தான்..." என்றவரின் வார்த்தைகள் அவளுள் பனிச்சாரலாய்...

பேசி கொண்டிருந்ததில் நேரம் பறந்து சென்று விடப் பிரபாவதி அவளிடம், "நீ போய் ரிசப்சனுக்குத் தயாராகு..." என்றவர் அவளுடன் இணைந்து அவர்களது அறைக்கு வந்தார்...

அவள் ஆச்சிரியமாய் அவரைப் பார்க்கும் போதே அங்கிருந்த அலமாரியை திறந்தவர் அதை அவளிடத்தில் காட்டி,

"உனக்குப் பிடித்ததை எடுத்து கொள்..."

அங்கு இருந்தவைகளைக் கண்டு அவளது கண்கள் வியப்பில் விரிந்தது... ஏனெனில் அந்த முழு அலமாரியை

அடைத்துக் கொண்டு உடைகள், அலங்கார பொருட்கள் என்று ஒரு பெண்ணிற்குத் தேவையான அனைத்தும் அங்கிருந்தது...

"இது எல்லாம் உங்க பெண்களோடதா அத்தை...?"

"அது என்ன என் பெண்கள்...? அவங்க இரண்டு பேரும் உனக்கு மதினி... அதனால் மதினி என்று அழைத்துப் பழகு..." என்று அன்பாய் அவளைக் கண்டித்தவர்,

"இது எல்லாம் உன் புருசன் உனக்காகப் பார்த்து பார்த்து வாங்கியது... அவன் இதுவரைக்கும் யாருக்கும் இப்படி வாங்கியது இல்லை... உனக்கு மட்டுமே இப்படி வாங்கிக் குவித்திருக்கிறான்..."

அவர் 'என் மகன்' என்று கர்வமாக மகனை குறிப்பிடவில்லை... மாறாக 'உன் புருசன்' என்று கூறி அவளது மனதில் அந்தச் சொந்தத்தை ஆழ பதிக்க நினைத்தார்... அவர் வாழ்ந்து அனுபவித்தவர் அதனால் மகனின் வாழ்க்கையில் இருந்து சந்தோசமாய் விலகி கொண்டார்... இனி அவரது மகன் மருமகள் பொறுப்பு என்பது போல்...

அவர் கூறியதும் உண்மை தான்... திருமணம் பேசியதில் இருந்து சித்தார்த் அவளுக்காகத் தானே தேர்வு செய்து வாங்கிக் குவித்தது தான் இவைகள் எல்லாம்... அவனுடனான திருமணத்தை எதிர்பார்த்து இருந்த பிரகதீஸ்வரி மற்ற விசயங்களில் கவனம் செலுத்தவில்லை... அப்படி அவளுக்காகப் பார்த்து பார்த்துச் செய்வதற்கு யாருமில்லை... அதனால் அவளது பொறுப்பு முழுவதையும் அவன் தன் கையில் எடுத்துக் கொண்டான்... அவளுக்காக எல்லாவற்றையும் தனது வீடு தேடி வரவழைத்தான்...

அப்படி விலையுயர்ந்த பொருட்கள் எல்லாவற்றையும் மனைவிக்காக வீடு தேடி வரவழைத்தவனால் அவளை மட்டும் தன்னைத் தேடி வரவழைக்க முடியாமல் போனது அந்தோ பரிதாபம்...

அதில் இருந்த புடவைகளில் ஒன்றை பிரகதீஸ்வரி தேர்ந்தெடுக்க, பிரபாவதி அதற்கேற்ற நகையை எடுத்து கொடுத்தார்...

****

மாலை ஐந்து மணிக்கு அவள் தயாராகிய போது சித்தார்த் அலுவலகத்தில் இருந்து அப்போது தான் வீட்டினுள் நுழைந்தான்... வரவேற்பறையில் தனது பெற்றோருடன் அமர்ந்து பேசி கொண்டிருந்த மனைவியவளை கண்டு அவனது விழிகள் விரிந்தது...

அவன் தேர்ந்தெடுத்த புடவை, நகையில் அழகுற தேவதை போன்று இருந்தவளை சிறிதும் லஜ்ஜையின்றி அவனது கண்கள் வெறித்துப் பார்த்தது... தனது பெற்றோர் இருப்பதைக் கூட அவன் சிறிதும் பொருட்படுத்தவில்லை...

"சித்துவுக்கு டீ எடுத்துட்டு வாம்மா..." என்று பிரபாவதி அவளிடம் கூற...

"அவருக்கு டீ பிடிக்காது அத்தை..." என்றவளை கண்கள் மின்ன பார்த்தான் சித்தார்த்... அவனையும் மறக்கவில்லை... அவனுக்குப் பிடித்தவற்றையும் அவள் மறக்கவில்லை...

"எப்போதும் இது எனக்குக் குழப்பம் தான்ம்மா... உங்க மாமாவுக்கு டீ பிடிக்கும்... அவனுக்குக் காபி பிடிக்கும்... சில சமயங்களில் இருவருக்கும் மாத்தி கொடுத்து விட்டு திட்டு வாங்குவேன்..."

"பிரகதி... கிழவி அவளுக்கு ஞாபகமறதி இருப்பதை எவ்வளவு நாசுக்காகச் சொல்கிறாள் பார்..." என்று மார்த்தாண்டம் மனைவியைக் கேலி செய்து சிரிக்க... அங்கே சிரிப்பு அலை மோதியது...

வெகு வருடங்களுக்குப் பிறகு இன்று தான் அவர்களது வீட்டில் மகிழ்ச்சி திரும்பி இருக்கிறது... இது போல் ஸ்வேதா வாழ்க்கையும் சரியாகி விட்டால் நன்றாக இருக்கும் என்று கண்கள் பனிக்கப் பிரபாவதி நினைத்தார்...

மனைவி கொடுத்த காபியை குடித்து விட்டு அடுத்தப் பத்து நிமிடங்களில் சித்தார்த் கிளம்பி வந்தான்... கருநீல நிற கோட் சூட்டில் கதாநாயகன் போன்று கம்பீரமான அழகுடன் இருந்தவனைக் கண்டு அவள் இமைக்க மறந்து நின்றிருந்தாள்...

மனைவியின் மயக்கத்தை உணர்ந்து கொண்ட அந்தக் கள்வன் அவளைப் பார்த்து கண்சிமிட்டி நமட்டுச் சிரிப்புச் சிரித்தான்... அதில் நாணமுற்ற பாவையவள் தலை தாழ்ந்தாள்...

"சித்து... நீ பிரகதியை கூட்டிட்டு வா... நானும் அப்பாவும் தனியே போகிறோம்..." என்று சின்னவர்களுக்குத் தனிமை கொடுத்து பிரபாவதியும், மார்த்தாண்டமும் முன்னே சென்றனர்...

ஓட்டுநரை தவிர்த்து விட்டு தானே காரை எடுத்தான் சித்தார்த்... காரில் செல்லும் போது உற்சாக மனநிலையில் இருந்தான் அவன்... மனைவியுடன் இருந்த அந்த நொடியை அவன் அனுபவித்து மகிழ்ந்தான்...

வரவேற்பிற்கு வரும் வரை இந்த இணக்க நிலை நீடித்தது... அங்கிருந்த உறவினர்களில் பெரும்பாலோனோர் சித்தார்த்திற்குப் பயந்து பிரகதீஸ்வரியை ஒன்றும் கேள்வி கேட்கவில்லை... ஆனாலும் சிலர் வாயை வைத்துக் கொண்டு சும்மாயிருக்காமல் அவளிடம் வம்பு இழுத்தனர்...

"இது நிரந்தரமா...? இல்லை நீ மீண்டும் சித்துவை விட்டு பிரிந்து போய் விடுவாயா...?" என்று குசும்பாக ஒருவர் கேட்க...

அதைக் கேட்டு பிரகதீஸ்வரி பதில் சொல்ல தெரியாது திருதிருவென முழித்தாள்... அவள் விழிப்பதை கண்டு சித்தார்த்திற்குக் கோபம் வந்தது...

அவள் புறம் குனிந்து தாழ்ந்த குரலில், “வாயில் என்ன கொழுக்கட்டையா வைத்திருக்கிறாய்...? கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல தெரியாது...? இந்தச் சமூகத்தில் எனக்கு

என்று ஒரு மரியாதை இருக்கிறது... அதை நீ கெடுப்பதற்கு நான் அனுமதிக்க மாட்டேன்... இனியும் உன்னை இப்படியே விட்டு விடும் உத்தேசம் எனக்கு இல்லை... இனி நீ என்னுடன் தான் இருக்க வேண்டும்... அதுவும் ஒரே வீட்டில், ஒரே அறையில்...” என்றான் சீறலாய்...

கோபமாய் அவன் கூறிய வார்த்தைகளில் அத்தனை தீவிரம் இருந்தது... அத்தனை தீவிரத்திலும் அத்தனை காதல் இருந்தது...

அதைக் கேட்டு அவள் என்ன மாதிரி உணர்ந்தாள் என்று அவளுக்கே தெரியவில்லை... காட்டில், மேட்டில் அலைந்து திரிந்து களைத்து போனவளுக்குச் சொந்த வீடு வந்து சேர்ந்தது போல் ஒருவித நிம்மதி ஏற்பட்டது...

கணவன் செல்லும் வழி அவளுக்குப் பிடிக்கவில்லை தான்... ஆனாலும் கூட அவனின் பின்னே செல்ல தானே அவளது காதல் மனம் விழைகிறது...

முன்னுக்குப் பின் முரணான கொள்கைகள் கொண்ட போதும் அவன் மீதான காதல் அவனுடன் வாழ்ந்து பார்த்திட சொல்லி ஆசை கொண்டது...!!!

இதைத் தான் அன்றே அவனிடத்தில் அவளும் எதிர்பார்த்தாளோ...!!!

"உன்னிடத்தில் நான்
தேடும் காதல்...
என்னிடத்தில் கொட்டி
கிடைக்கிறது...
உன்னுடன் வாழ்ந்து
பார்க்க ஆசை
தூண்டுதே...
மனம் ஒன்றானதே...
உன் வசம்
என்றானதே...
முரண் தாண்டி
அரணாய் காத்து

நிற்பாயா என்
காவலனே...???"

நனவாகும்...!!!

சித்தார்த் கோபமாய்ப் பேசிய வார்த்தைகள் கேட்டு பிரகதீஸ்வரிக்குக் கோபம் வரவில்லை... மாறாக மனம் மகிழ்ச்சியில் துள்ளி குதித்தது... அப்படியே கணவனை அணைத்துக் கொண்டு அவனது நெஞ்சில் முகம் புதைத்துக் காலம் முழுவதும் அப்படியே அமிழ்ந்திட மாட்டோமா என்று மனதிற்குள் ஏங்கினாள்...

"இப்போ எதுக்கு இப்படிப் பேந்த பேந்த விழிக்கிற...? அதுக்கும் யாராவது கதை கட்ட போறாங்க...? நம்ம ரெண்டு பேரோட போராட்டங்கள் நாலு சுவத்துக்குள் இருக்க வேண்டும்... இப்படி அடுத்தவர்கள் பார்த்து சிரிக்கும்படி இருக்கக் கூடாது... அதனால் முகத்தைச் சிரித்தார் போன்று வைத்து கொள்..." என்று அவன் சிடுசிடுத்ததில் அவள் அவனை ஏறிட்டு பார்த்தாள்...

சித்தார்த் கோபத்தில் மனைவியிடத்தில் பொங்கிய போதும் அவனது உதடுகளில் இருந்த புன்னகை மறையவில்லை... உலைக்களமாய்க் கொதித்த உள்ளத்தின் கொதிப்பை அவன் புன்னகை என்கிற முகமூடி போட்டு மறைத்து இருந்தான்... இவ்வளவு ஏன் அவன் தனது விழிகளில் கூடக் கோபத்தினைப் பிரதிபலிக்காது சர்வ ஜாக்கிரதையாக இருந்தான்...

அவன் கூறியது எதுவும் அவளது மூளையில் ஏறவில்லை... அவனது கோபத்தினை எப்படிக் குறைப்பது என்று அவளுக்குத் தெரியவில்லை... அவனது முகத்தைப் பாவமாகப் பார்த்து கொண்டிருந்தாள்... அவனோ மணமக்கள் மீது பார்வை பதித்தபடி அமர்ந்திருந்தான்...

"சித்து, பிரகதி ரெண்டு பேரும் ஃபோட்டோ எடுக்க வாங்க..." என்று பிரபாவதி அழைக்க,

முதலில் எழுந்த சித்தார்த் தனது வலக்கையை மனைவியை நோக்கி நீட்ட, அதில் மனம் மகிழ்ந்தவளாய் பிரகதீஸ்வரி அவனது கரத்தோடு தனது கரத்தை

கோர்த்தாள்... அத்தகைய மகிழ்ச்சி எதுவும் அவனுக்கு இல்லை போலும்...

சித்தார்த் இயல்பு போல் மணமேடை சென்று மணமக்களுடன் இணைந்து புகைப்படம் எடுத்துக் கொண்டான்... அதிலும் மனைவியின் தோள் சேர்த்து அணைத்தார் போன்று வேறு... அதில் அவள் தான் திகைத்து போய் அவனைப் பார்த்தாள்... அனைத்தையும் இயல்பு போல் செய்தவனின் செயலில் இருந்தது என்னவோ இயந்திர தன்மை மட்டுமே...

வரவேற்பு நிகழ்ச்சி முடிந்து காரில் வரும் போது மௌனம் மட்டுமே அங்கு ஆட்சி செய்தது... என்ன செய்து கணவனது கோபத்தினைக் குறைப்பது என்று தெரியாது விழித்தவள் தவிப்புடன் அவனது முகத்தைப் பார்த்துக் கொண்டு வந்தாள்... அவனோ உணர்ச்சி துடைத்த முகத்துடன் சாலையில் கவனமாய் இருந்தான்... போகும் போது இருந்த சந்தோசம் இப்போது வரும் போது இருவரிடத்திலும் சுத்தமாய் இல்லை...

வீட்டிற்குள் நுழைந்ததும் சித்தார்த் நேரே தங்களது அறைக்குச் செல்ல அவளும் கணவனைப் பின்தொடர்ந்து சென்றாள்...

அறைக்குள் நுழைந்த சித்தார்த் தான் அணிந்திருந்த கோட்டையும், டையையும் கழட்டி கட்டிலின் மீது வீசி எறிந்தவன், பின்பு கட்டிலில் அமர்ந்து முழுக்கை சட்டையின் கையிலிருந்த பொத்தானை கழற்றி சட்டையை முழங்கை வரை தூக்கி விட்டவன் தன்னையே பார்த்துக் கொண்டிருந்த மனைவியைக் கொஞ்சமும் ஏறிட்டு பார்க்காது கட்டிலில் சாய்ந்து கண்களை மூடி கொண்டான்...

இதுவரை அவள் பார்த்த சித்தார்த் இவன் இல்லை... மூன்று ஆண்டுகள் அவள் அவனைப் பிரிந்திருந்த போது கூட அவன் அவளிடத்தில் இந்தளவிற்குக் கோபம் கொண்டு பேசியதில்லை... இந்தளவிற்குக் கடின பாறையாய் இறுகியது இல்லை... இவன் ஆரம்பத்தில் அவள் கண்ட

சித்தார்த்தை நினைவூட்டி அவளது மனதினை பெரிதும் அச்சுறுத்தினான்...

ஆனாலும் கணவன் மீதிருந்த காதல் மனதால் அவனது கோபத்தினைத் தாங்க முடியவில்லை... அவன் அருகில் வந்து அவன் தோளில் கை வைத்தவள்,

"இன்னமும் என் மேல் கோபமா மாமூ...?" என்று கேட்டதில் அவன் கோபத்தோடு விழிகளைத் திறந்தான்...

"ஆமாம்டி உன் மேல் நான் கடும் கோபத்தில் இருக்கிறேன்..." என்று ஆவேசமாக எழுந்தவன் அதே வேகத்துடன் அவளது தோள்களைப் பற்றி,

"மூன்று வருசமா என் மனசுக்குள்ள எரிஞ்சிக்கிட்டு இருக்கிற நெருப்புடி இது... இன்னைக்குப் பார்த்த இல்ல எத்தனை பேர் எத்தனை விதமான கேள்வி கேட்கிறாங்கன்னு... அது கேட்டு உனக்கு எவ்வளவு வருத்தமா இருக்கு... அதே வருத்தம், வேதனை எனக்கும் இருக்குடி... உன்னைய பார்த்தாவது 'நீ உன் புருசன் கூட இருப்பியா... இல்லை பிரிஞ்சி போயிருவியா'ன்னு தான் கேட்டாங்க... ஆனா என்னைப் பார்த்து..." கசப்புடன் எதையோ விழுங்கி கொண்டவன் போல் இறுகி நின்றவன் பின்பு,

"உனக்கு என்ன அன்னைக்கு ஈசியா என்னைக் கல்யாணம் பண்ண மாட்டேன்னு அவ்வளவு பெரிய சபையில் சொல்லிட்ட... ஆனால் அது எனக்கு எவ்வளவு பெரிய அவமானம் தெரியுமா... அந்த அவமானத்தை மறைக்கத் தான் நான் உன் கழுத்தில் தாலி கட்டியது... ஆனா அந்த அவமானம் அன்னையோடு முடிஞ்சு போகலை... இதோ இந்த நொடி வரை என்னைத் துரத்தி கிட்டு வருது..." என்று வேதனையுடன் இடை நிறுத்தியவன் ஒரு நொடி கண்களை இறுக மூடி திறந்து,

"என்னைப் பார்த்து முகத்துக்கு நேரே பேச பயப்படுகிறவங்க எல்லாம் அதுக்குப் பிறகு என் முகத்துக்கு

நேரே கை நீட்டி கேள்வி கேட்டாங்க... அதுவும் எப்படிப்பட்ட கேள்வி தெரியுமா... 'நீ ஆம்பளையான்னு...'ன்னு..."

அவன் சொன்னதைக் கேட்டு அவள் திகைத்து போனவளாய் அதிர்ச்சியுடன் வாயில் கை வைத்தாள்... அழகு, கம்பீரம், செல்வம், செல்வாக்கு என்று எல்லாமே எல்லோரையும் விடச் சற்று அதிகமாகக் கிடைக்கப் பெற்றவன் அவளது கணவன்... அவனைப் போய் இப்படி இகழ்ந்து பேச எப்படி வாய் வந்தது...? அவளுக்கு அத்தனை ஆற்றாமையாக இருந்தது... அதற்கு அவளும் காரணமாகி போனது அவளுக்கு அத்தனை துயரமாக இருந்தது...

"அந்த நொடி மனசுக்குள் அப்படி ஒரு கோபம் வரும்... 'நான் ஆம்பிளை தான்டா'ன்னு அவங்களுக்கு நிரூபிச்சு காட்டணும்ன்னு ஒரு வெறி எழும்... ஆனா அடுத்த நொடி என்னுடைய கோபம், வெறி எல்லாம் அப்படியே அடங்கிப் போயிரும்..." என்றவன் மனைவியின் விழிகளோடு விழி கலந்தவாறு,

"நான் ஆம்பிளைன்னு நிரூபிச்சு காட்ட நீ என் கூட இல்லையே... நான் உனக்கு மட்டுமேயான ஆம்பிளைன்னு அடுத்தவங்க கிட்ட நான் எப்படிச் சொல்வேன்...? நான் தொட்டால் என் மனைவியை மட்டும் தான் தொடுவேன்... எனக்குப் பெண் சுகம் வேணும்ன்னா நான் என் மனைவியை மட்டுமே தேடி போவேன்னு நான் எப்படி அவங்க கிட்ட சொல்வேன்...? என்னை வேண்டாம்ன்னு பிரிஞ்சு போன உன்னை நினைச்சிக்கிட்டு இருக்கிற என்னைப் பைத்தியக்காரன்னு தான் சொல்வாங்க... உன்னைக் கல்யாணம் பண்ணின பாவத்துக்கு அந்தப் பட்டத்தை வேறு நான் சுமக்கணுமா...?" என்று அவளைப் பிடித்து உலுக்கியவன் கோபமாய்ப் படுக்கையில் தள்ளி விட்டான்...

அவனது செய்கையில் அவள் நிலைக்குலைந்து போனாலும் அவனது வார்த்தைகளில் அவள் உயிர்த்து எழுந்தாள்... இதை விடவா ஒரு கணவன் மனைவியைக் காதலித்து விட முடியும்... இதை விடவா ஒரு கணவன்

மனைவிக்கு மரியாதை செய்து விட முடியும்... அவனை அவமானப்படுத்திய மனைவியையும் அவன் கௌரவப்படுத்தி விட்டான் தனது ஏகபத்தினி விரதத்தால்...

இது காதல் இல்லாது போயின் வேறு எது காதலாகும்... மனமும், விழிகளும் காதலில் கசிந்துருக அவள் அவனை இமைக்காது பார்த்தாள்...

"இனியும் இப்படி ஒரு அவமானம் நேர நான் விட மாட்டேன்... இனி நீ என் கூடத் தான் இருக்கணும்... நீ என் கூட வாழ்கிறாயோ இல்லை சண்டை போடுகிறாயோ...? எதுவாக இருந்தாலும் சரி, அது இந்த நாலு சுவத்துக்குள் இருக்க வேண்டும்... இதை நீ மீற நான் விட மாட்டேன்... இது தான் என் முடிவு..." என்று ஆத்திரத்தில் கத்தியவனின் வார்த்தையில் இருந்தது எல்லாம் காதல், காதல், காதல் மட்டுமே...

'ஐ லவ் யூ' என்று வார்த்தைகளில் காதலை சொல்லாவிட்டால் என்ன இதோ இப்போது அவனது கோபத்தில் சொல்கிறானே இந்த வார்த்தைகள் போதாதா அவனது காதல் மனதினை எடுத்துரைப்பதற்கு...

அவளுக்குத் தெரியும் அவன் சொடக்கு போட்டால் ஆயிரம் பெண்கள் அவனின் பின்னால் வருவார்கள் என்று... அப்படி ஏதாவது ஒரு பெண்ணின் பின்னால் செல்வான் என்று தான் அவளும் இத்தனை நாளாய் எண்ணி இருந்தாள்... அது அப்படி இல்லை என்று அவன் தனது வார்த்தைகளில் உணர்த்தி விட்டான்...

'அவன் இன்று தானா உனக்கு உணர்த்தினான்...? அன்றே சந்தியாவைத் திருமணம் செய்யாது தவிர்த்தானே அப்போது உனக்கு அது புரியவில்லையா...?' அவளது மனசாட்சி அவளது தவறினை சுட்டி காட்டியது...

'அன்று சந்தியாவைத் திருமணம் செய்தால் சொத்துக்கள் எளிதாக அவர் வசம் வந்திருக்குமே...? பின்னே என்ன செய்து அம்மாவிடம் இருந்து அதை வாங்கினார்...?' அவளது மனம் முழுவதும் குழப்பம்...

"சொல்லுடி... பதில் சொல்லுடி... நான் பட்ட இந்த அவமானத்திற்கு நீ என்ன பதில் சொல்ல போகிற...?" என்று அவன் அவளை உலுக்கவும் அவள் உடைந்து போனவளாய் அவனது இடுப்பை கட்டி கொண்டு,

"மாமூ..." என்று கதறியபடி அவனது வயிற்றில் முகம் புதைத்தாள்...

அவளும் அவனைப் பிரிந்து துன்பப்பட்டாள் தான் இல்லை என்பதற்கு இல்லை... எத்தனையோ கேலி பேச்சுக்கள், தகாத வார்த்தைகளைக் கேட்டு மனம் வருந்தினாள் தான்... இல்லை என்பதற்கு இல்லை... ஆனாலும் அவளை யாரும் இப்படி ஒரு தன்மானத்தை உரசி பார்க்கும் பேச்சினை பேசியது இல்லை...

அதிலும் 'நீ ஆண்மையற்றவனா...?' என்கிற கேள்வி எந்த ஆண்மகனின் தன்மானத்தையும் சீண்டி பார்க்கும்... அதுவும் சித்தார்த்தை போன்ற ஒருவன் இத்தகைய வார்த்தைகளைப் பொறுத்துப் போனது அதிசயத்திலும் அதிசயமே...

அதை நினைத்து நினைத்து அவளுக்கு அவன் மீது காதல் வந்து தொலைத்தது முன்னை விட அதிகமாக... அவன் அடுத்தவர்களுக்கு எப்படி வேண்டுமானாலும் இருந்து விட்டு போகட்டும்... கெட்டவனாக, கோபக்காரனாக, அசுரனாக இப்படி எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும்... இவ்வளவு ஏன் அவளுக்குக் கூட அவன் கெட்டவனாகத் தான் நடந்து கொண்டான்...

ஆனால் இத்தனை முரண்பாட்டையும் தாண்டி அவன் அவளை மட்டுமே நேசிக்கும் அந்த ஸ்ரீராமச்சந்திரமூர்த்திப் போன்றவன் என்பதில் சிறிதும் ஐயமில்லை... இராமன் போன்று கணவன் வேண்டும் என்று தானே எந்த ஒரு பெண்ணும் ஆசைப்படுவாள்... அப்படிப்பட்ட ஒருவன் கிடைத்தும் அவனைக் கொண்டாட தெரியாது அவள் தூக்கி எறிந்து விட்டாளே... தூக்கி எறிந்த பொக்கிசத்தின் மதிப்பு தெரிந்தவளாய், அவனது இழப்பின் அருமை

அறிந்தவளாய் இப்போது அவள் தன் தவறினை அழுகையில் கரைத்தாள்...

சித்தார்த்தின் கோபத் தீ மனைவியவளின் கண்ணீரில் கொஞ்சம் கொஞ்சமாய் அணைந்தது... மனதில் காதல் பெருக்கெடுக்க அவளது தலையை வருடி கொடுத்தான் அவன்... எத்தனை கோபம் இருந்த போதும் அவளை வெறுத்து ஒதுக்க அவனால் முடியாதே... வெகுநேரம் சென்றும் அவள் தனது அழுகையை நிறுத்தும் வழி தெரியாததால் அவள் அருகில் அமர்ந்து அவளை நெஞ்சில் தாங்கி கொண்டவன்,

"ப்ளீஸ் பேபி அழாதே..." என்று அவளது கன்னத்தில் வழிந்த கண்ணீரை துடைத்து விட்டபடி அவன் கூறினான்...

அவள் மீது தான் அவனுக்குக் கோபமும் வந்தது... காதலும் வந்தது... உரிமை இருக்கும் இடத்தில் தானே உணர்வுகளும் வெளிப்படும்...

"ப்ச்... சொன்னா கேட்கணும்..." என்று அன்னையாய் அவளை மடி தாங்கி அரவணைத்து கொண்டவனைக் கண்டு இன்னமும் அவளது கண்களில் கண்ணீர் பெருகியது...

மூன்று வருடங்களுக்கு முன்பு அவளது அன்னை இறந்த தினமும், அவனது பிறந்தநாளுமான அன்றும் இப்படித்தானே அவன் அவளை மடி தாங்கி அரவணைத்துக் கொண்டான்... அன்று அவள் அவனைப் பார்த்து கூறினாளே... 'அம்மா இறந்த இன்னைக்கு இன்னொரு அம்மாவா எனக்கு நீங்க கிடைச்சு இருக்கீங்க' என்று... அந்த வார்த்தையை அவள் எப்படி மறந்து போனாள்...

அம்மாவின் அன்பை சந்தேகிப்பது தவறு போல் கணவனது அன்பையும் தான் சந்தேகித்தது தவறோ... குற்றவுணர்வில் அவள் குமைந்து போனாள்... என்ன சொல்லியும் அழுகையை நிறுத்தாதவளை வேதனையுடன் பார்த்தவன்,

"சாரி பேபி... இனி இது போல் பேச மாட்டேன்..."

அவனது மன்னிப்பில் சரேலென நிமிர்ந்து அவனைப் பார்த்தவள் அடுத்தக் கணம் அவனது வாயை மூடினாள் தனது கை கொண்டு... யாரிடத்திலும் மன்னிப்பு கேட்காத கணவன் தன்னிடத்தில் மன்னிப்பு கேட்டது அவளது மனதினை அசைத்தது...

"தப்பு என் பேரிலும் இருக்கு..." என்று கண்ணீர் மல்க கூறியவளை கண்டு அவனது விழிகள் விரிந்தது வியப்பில்...

"அன்னைக்கு நானும் அவசரப்பட்டு இருக்கக் கூடாது... கொஞ்சம் யோசித்து இருக்கணும்... யோசிச்சு இருந்தா நீங்க இந்தளவுக்கு அவமானப்பட்டிருக்க வேண்டியது இல்லை... இனி உங்களை விட்டு நான் போக மாட்டேன்..."

நிச்சயம் அவளது பார்வையில் அவன் அவளுக்கு நிறையத் தீங்கு செய்திருக்கிறான்... ஆனால் அதை எல்லாம் மறந்து இதோ இப்போது தனக்காக மட்டுமே யோசிக்கும் மனைவியவளின் மாசற்ற காதல் கண்டு அவனுள்ளும் காதல் ஊற்றெடுத்தது... அடுத்த நொடி,

"பேபி..." என்று அவளை இறுக அணைத்துக் கொண்டான்...

மனைவியவளின் அருகாமையில் இத்தனை நாளாய் அவனுள் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்த தாப சுடர் இன்று தீப்பந்தமாய்த் திகுதிகுவெனப் பற்றி எரிய துவங்கியது... அது போன்று தான் அவளுக்கும் இருந்தது... இதற்கு முன் கணவன் அவளை அணைத்திருக்கிறான் தான்... ஆனால் அப்போது எல்லாம் தோன்றாத அவளது இளமை உணர்வுகள் இப்போது கிளர்ந்து எழுந்தது...

இருவருமே ஒருவருக்குள் ஒருவர் சுகமாய்த் தொலைந்து மூழ்கி போய் விட ஆசை கொண்டனர்... முதலில் சுதாரித்து விலகியது சித்தார்த் தான்... அவளை விட்டு விலகி எழுந்து அவளது கன்னத்தைத் தட்டியவன்,

"நீ ரொம்ப டயர்டா இருப்ப... தூங்கு பேபி..." என்க...

அவளோ மொழி தெரியாத மழலையாய் விழித்தாள்... இனிய கனவில் இருந்து விழித்தவள் போன்று அவள் திருதிருவென முழித்தாள்... அவளது மனம் அவனுக்கும் புரியத்தான் செய்தது... ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"என்ன புரியலையா...? தூங்குன்னு சொன்னேன்..." என்று அவன் அழுத்தி சொல்லவும் தான் அவளைப் புரிந்தார் போன்று தலையை ஆட்டினாள்...

அவன் புன்னகைத்தபடி அவளது நெற்றியில் முத்தமிட்டு, "குட் நைட்..." என்று கூறி விட்டு விலகியவன்,

"இங்கே ஆபிஸ் ரூமில் இருந்து தான் வேலை செய்கிறேன்... எதுவும் வேணும்ன்னா கூப்பிடு..." என்றவன் அறையை ஒட்டி இருந்த அலுவலக அறைக்குள் புகுந்து கொண்டான்...

கணவன் செல்வதைப் பார்த்து கொண்டிருந்தவள் பின் எழுந்து சென்று குளித்து விட்டு இலகுவான பருத்தி புடவையை அணிந்து கொண்டு படுத்து கொண்டாள்...

கணவன் அருகில் வந்து படுப்பானோ என்கிற டென்சனில் வெகு நேரம் முழித்திருந்தவள் பின் அசதியில் மெல்ல கண்ணயர்ந்தாள்...

மனைவியிடம் கோபத்தினைக் கொட்டிய பிறகு சித்தார்த்தின் மனம் இறகினை போன்று லேசாக இருந்தது... அங்கிருந்த சோபாவில் அமர்ந்து தலைக்குப் பின் இரு கைகளையும் கொண்டு சென்று இணைத்தபடி சாய்ந்தவன் மனதில் காதல் மட்டுமே கோலோச்சியது... பின்பு வேலைகள் நினைவுக்கு வர அவன் தனது மடிகணினியை உயிர்ப்பித்தான்...

குனிந்த போது அவனது வெளிர் நீல நிற சட்டையில் படிந்திருந்த மனைவியவளின் குங்குமம் கண்டு அவனது உதடுகளில் புன்னகை தவழ்ந்தது... அதற்குச் சொந்தக்காரன் அவன் மட்டுமே என்கிற கர்வத்தில்

அவனது புன்னகை மேலும் விரிந்தது... மனைவியவளின் காதல் மனதினை சுகமாய் நனைத்ததில் சிறு பையன் போல் உற்சாகத்தில் திளைத்தவன் அந்த மகிழ்வுடன் தனது வேலையில் மூழ்கி போனான்...

நடு இரவில் திடுமென விழித்து எழுந்த பிரகதீஸ்வரி அருகில் கணவன் இல்லாது கண்டு திகைத்தவளாய் அவனைத் தேடி அலுவலக அறைக்குள் வந்தாள்... அங்குக் கால்களைக் குறுக்கி கொண்டு சோபாவில் படுத்து அயர்ந்து உறங்கி கொண்டிருந்த கணவனைக் கண்டு அவளது மனம் அமைதி அடைந்தது... அதே சமயம் அவன் இப்படிக் கஷ்டப்பட்டுப் படுத்திருப்பதைக் கண்டு அவள் வருந்தினாள்...

நேரே அவன் அருகில் சென்று மண்டியிட்டு அமர்ந்தவள் உறங்கும் அவனது முகத்தைக் காதலாய் பார்த்தாள்... தூங்கும் போது சாந்தமாய், புன்னகையுடன் உறங்கும் கணவனது முகம் அவளைப் பெரிதும் ஈர்த்தது... அதிலும் அவனது அதீத அழகு அவளது மனதினை மயக்கியது...

அந்தக் கணம் அவன் கூறிய வார்த்தைகள் திரும்பத் திரும்ப அவளது காதுகளில் ஒலித்தது...

'நான் ஆம்பிளைன்னு நிரூபிச்சு காட்ட நீ என் கூட இல்லையே... நான் உனக்கு மட்டுமேயான ஆம்பிளைன்னு அடுத்தவங்க கிட்ட நான் எப்படிச் சொல்வேன்...? நான் தொட்டால் என் மனைவியை மட்டும் தான் தொடுவேன்... எனக்குப் பெண் சுகம் வேணும்ன்னா நான் என் மனைவியை மட்டுமே தேடி போவேன்னு நான் எப்படி அவங்க கிட்ட சொல்வேன்...?'

"மாமூ... நீங்க எனக்கு மட்டுமே சொந்தமானவங்க... எனக்கு மட்டுமே..." என்று அவனது தலையை வருடி கொடுத்து நெற்றியில் முத்தமிட்டவளின் விழிகளில் இருந்து வழிந்த விழிநீர் அவனது நெற்றியில் விழுந்தது...

அவன் எழுந்து விடுவானோ என்கிற பயத்தில் அவள் சட்டென்று அவனை விட்டு விலகினாள்... பின்பு புடவை

முந்தானையை எடுத்து அவனது நெற்றியை துடைத்து விட்டு தான் வந்த சுவடு தெரியாமல் விலகி சென்றாள்...

மனைவி சென்றதும் அந்தக் கள்வன் கண் விழித்துப் பார்த்தான்... ஏனெனில் அவன் அப்போது தான் தனது வேலையை முடித்துக் கொண்டு தூங்க போனான்... அலுவலக அறை கதவு திறக்கும் ஒலியில் அவன் மனைவியின் வருகையை உணர்ந்து ஆழ்ந்து தூங்குவது போல் நடித்தான்...

மனைவி வந்து விட்டு போன பிறகு அவனின் தூக்கம் சொல்லாமல் கொள்ளாமல் விடை பெற்றதில் எழுந்து அமர்ந்தான்... அவன் அப்படி ஒரு சந்தோசமான மனநிலையில் இருந்தான்... மனைவி தன் காதலை உணர்ந்து கொண்டதில் அவனது முகத்தில் அப்படி ஒரு பூரிப்பு எழுந்தது...

இதைத் தானே அவன் இத்தனை வருடங்களாய் அவளிடம் எதிர்பார்த்து வந்தது... அவள் அவனின் எதிர்பார்ப்பை நிறைவேற்றி வைத்ததில் எழுந்த மகிழ்ச்சியில் தனது தலைமுடியை அழுந்த கோதி கொண்டான்... அப்போது அவனின் கையில் நெற்றியில் இருந்த அவளது கண்ணீரின் ஈரம் தட்டுப்பட்டது... அவள் அவசரத்தில் அரைகுறையாய் துடைத்திருந்தாள்...

அதன் ஈரமானது காத்திருந்ததில் தவியாய் தவித்த அவனின் நெஞ்சின் வெம்மையை அப்படியே குளிர்வித்தது... அவனைத் தீப்பிழம்பாய் எரிய செய்யவும், குளிர் பனியாய் குளிர்விக்கச் செய்யவும் மனைவியால் மட்டுமே முடியும் என்பதை உணர்ந்தவன் உறக்கம் மறந்து அவளின் நினைவில் சுகமாய் மூழ்கி போனான்...

அதிகாலையில் பிரகதீஸ்வரி எழும் போது கணவனின் புன்னகை முகம் தரிசனமாகக் கிடைத்தது... தூக்க கலக்கத்தில் கனவு தானோ என்று தவிப்புடன் விழி விரித்துப் பார்த்தவளின் அருகில் வந்த சித்தார்த்,

"குட்மார்னிங் பேபி..." என்று அவளது நெற்றியில் முத்தமிட...

அதில் திகைத்து போனவளாய் அவள் தனது கரத்தை எடுத்து நெற்றியில் தொட்டு பார்த்து கொண்டாள்...

"கனவில்லையடி பெண்ணே... எல்லாம் நனவடி... இனி நனவு மட்டுமே நம் வாழ்க்கையாகும்..." என்று காதல் வசனம் பேசிய கணவன் அவளது கருத்தையும், கவனத்தையும் பெரிதும் கவர்ந்தான்...

பட்டு வேட்டி சட்டையில் ஜம்மென்று மணமகன் போல் கிளம்பி தயாராக இருந்தவனைக் கண்டு அவளது விழிகள் அப்பட்டமாய் மயக்கத்தைக் காட்டியது... அதை உணர்ந்தவன் அவளைப் பார்த்து கண்சிமிட்டியபடி,

"அப்படியே மாப்பிள்ளை மாதிரி இருக்கிறேனா...?" என்று குறும்பு குரலில் கேட்க...

"நமக்குக் கல்யாணமாகி மூணு வருசமாகப் போகுது... அதை நினைவில் வச்சுக்கோங்க..." என்றவள் படுக்கையை விட்டு எழுந்தாள்...

"எங்கே என்னை நல்லா பார்த்து சொல்லு...?"

அவளது கையைப் பிடித்து இழுத்து தன் புறம் திருப்பியபடி அவன் புன்சிரிப்புடன் கேட்க, அவனது புன்னகையில் மனம் மயங்கியவள் நாணத்தில் வார்த்தைகள் வாராது தலை குனிந்து அமைதியாக நின்றிருந்தாள்...

"நீ சொல்லலைன்னா பரவாயில்லை..." என்று கூறியவன் அவளது முகத்தை நிமிர்த்தி,

"எனக்கு நீ எப்போதும் மணப்பெண் தான்டி..." என்று கூற...

அதைக் கேட்டு இன்னமும் நாணமுற்றவளாய் அவனிடம் இருந்து விலகியவள் ஓடி சென்று குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்... அவனோ தனக்குள் சிரித்துக் கொண்டவன் மூடியிருந்த குளியலறை கதவை பார்த்து,

"நான் ஆபிஸ் ரூமில் இருக்கேன்... கிளம்பியதும் சொல்..." என்றுரைத்து விட்டு அலுவலக அறைக்குச் சென்றான்...

குளித்து முடித்து வெளியில் வந்த பிரகதீஸ்வரி கணவன் அங்கு இல்லாததை உணர்ந்து நிம்மதி உற்றவளாய் உடை மாற்ற போனாள்... ஆனால் அவளுக்குத் தேவையானவற்றைச் சித்தார்த் ஏற்கெனவே எடுத்து டிரெசிங் டேபிள் மீது வைத்திருந்தான்...

அடர் பச்சை நிறப் புடவையில் சன்ன சரிகை கொடி போல் படர்ந்து, முந்தானையில் அழகிய ரவி வர்மாவின் ஓவியத்தின் பிரதியை அழகுற நெய்திருந்தார்கள்... அத்தனை ரசனையுடன் இருந்தது அந்தப் பட்டு புடவை... அதைத் தனக்காக வாங்கி வைத்த கணவன் மீது எழுந்த வன்மையான காதலில் அவள் அந்தப் புடவையை மென்மையாய் வருடி கொடுத்தாள்...

பின்பு முகூர்த்ததிற்கு நேரமாகி விட்டதை உணர்ந்து அவசரமாகக் கிளம்ப ஆரம்பித்தாள்... மனதிற்குள் கணவன் எப்போது தூங்கி எழுந்து கிளம்பினான் என்கிற யோசனை ஓடி கொண்டிருந்தது...

அந்தக் கணம் அவளின் நினைவின் நாயகன் காதில் அலைப்பேசியைக் கொடுத்தபடி அலுவலக அறை கதவை திறந்து கொண்டு படுக்கை அறைக்குள் நுழைந்தான்... அவனைச் சற்றும் எதிர்பார்க்காத பிரகதீஸ்வரி புடவை முந்தானையை எடுத்து அவசரமாக மேலே போட்டு கொண்டாள்...

யாரிடமோ தொழில் விசயமாய்ப் பேசி கொண்டு வந்த சித்தார்த் மனைவி நின்றிருந்த கோலத்தினைச் சற்றும் எதிர்பார்க்காதவனாய் திகைத்து சிலையாய் நின்று விட்டான்... எப்போதும் போன்று பழைய ஞாபகத்தில் மனைவியை மறந்தவனாய் அவன் அறைக்குள் வந்துவிட்டான்... பின் தன்னைச் சுதாரித்துக் கொண்டு அவளது முகம் பாராது,

"சாரி..." என்றபடி வேகமாய் அறையை விட்டு வெளியேறினான்...

அந்த நொடி அவள் என்ன மாதிரி உணர்ந்தாள் என்று அவளுக்கே தெரியாது... நேற்று அவன் கட்டிலில் வந்து படுக்காது இருந்தது, இதோ இப்போதும் அவளது உணர்வுகளுக்கு மதிப்பு அளித்து விலகி சென்றது எல்லாம் கண்டு அவளது மனம் அவன் பால் நழுவி சென்றது விருப்பமாய்... இத்தகைய கண்ணியமானவனைத் தான் அன்று 'பொறுக்கி' என்று கூறியதை நினைத்து இப்போது அவளது விழிகள் கசிந்தது...

தனது உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு புடவையைக் கட்டியவள் மிதமான ஒப்பனைகளுடன் அறையை விட்டு வெளியில் வந்தாள்... வெளியில் இருந்த சிறிய வரவேற்பறையில் அவளுக்காகவே காத்திருந்த சித்தார்த்,

"போகலாமா...?" என்றபடி எழுந்தான்...

அவனது விழிகள் ரசனையுடன் மனைவியை ரசித்தது... அதில் நாணத்துடன் தலை கவிழ்ந்தவள் கணவன் புறம் மறந்தும் திரும்பவில்லை...

இருவரும் கீழே இருந்த வரவேற்பறைக்கு வந்த போது அவனது பெற்றோர் ஏற்கெனவே திருமணத்திற்குக் கிளம்பி சென்றிருந்தனர்... அதனால் இருவரும் தனியே கிளம்பினர்... காரில் செல்லும் போது அவள் அவனைப் பார்த்து,

"சாரி..." என்றாள்... அவன் வியப்பாய் அவளைத் திரும்பி பார்த்தான்...

"நான் உங்களைத் தப்பா நினைச்சதுக்கு..." என்றவளை கண்டு அவன் புருவங்களைச் சுருக்கி பார்த்தான் கேள்வியாய்...

"அன்னைக்கு உங்களைப் பொறுக்கின்னு திட்டினேன் இல்லையா... அதுக்குத் தான் இந்த மன்னிப்பு..." என்று

விளக்கம் கொடுத்தவளை கண்டு அவனது முகம் மென்மையானது...

"மனைவியே ஆனாலும் கண்ணியமாய் நடந்து கொள்ள வேண்டும்..." என்றவனை இப்போது அவள் வியப்பாய் பார்க்க...

"அதற்காக நீ என்னை ரொம்ப நல்லவன்னு நினைச்சுக்காதே... மனைவியிடத்தில் எல்லாக் கணவனும் பொறுக்கி தான்... அதற்கான இடம் வேறு..." என்று இமைச்சிமிட்டி நமட்டுச் சிரிப்பு சிரித்தவனைக் கண்டு வெட்கம் கொண்டவளாய் அவள் வெளிப்புறம் திரும்பி வேடிக்கை பார்க்கலானாள்...

அவளது வெட்கத்தில் சித்தார்த்தின் மனதில் உல்லாசம் பொங்கியது... உற்சாகமாக விசிலடித்தபடி அவன் காரை ஓட்டினான்... அதிகாலையில் ஆள் அரவமற்ற அந்தச் சாலையில் அவனது கார் வேகம் எடுத்தது...

முகமலர்ச்சியோடு வந்த மகனையும், மருமகனையும் கண்டு மார்த்தாண்டமும், பிரபாவதியும் அர்த்தம் பொதிந்த பார்வையைப் பகிர்ந்து கொண்டனர்... அவர்கள் இருவரையும் ஜோடியாய் வரவேற்பில் நிற்க வைத்து விட்டனர்...

"மித்ராக்கா என்னைத் தேடுவாங்க..." என்றவளிடம் பிரபாவதி,

"அவளிடம் நான் சொல்லி கொள்கிறேன்..." என்றுரைத்து விட... பிரகதீஸ்வரி கணவனுடன் இணைந்து நின்று திருமணத்திற்கு வருகை தந்தவர்களை வரவேற்க ஆரம்பித்தாள்...

"சித்து... உன்னை இப்படிப் பார்ப்பதற்கு ரொம்பச் சந்தோசமா இருக்குப்பா..." என்று அங்கு வந்த முதியவர் ஒருவர் அவனிடம் கூறினார்...

அவரிடம் இருந்து அவன் தொழிலில் கற்றுக் கொண்டது ஏராளம்... அவர் மீது அவனுக்குப் பெரும் மதிப்பு உண்டு...

அவரை மனைவிக்கு அறிமுகப்படுத்தியவன் அவர் சென்றதும் அவளின் காதருகே குனிந்து அவரைப் பற்றிய விசயங்களை அவளிடம் புன்னகையுடன் சொல்லி கொண்டிருந்தான்... அவளும் புன்னகையுடன் ஆர்வமாய்க் கேட்டு கொண்டிருந்தாள்... பார்ப்பவர்களுக்குக் கணவன் மனைவி ரகசியம் பேசி சிரித்துக் கொள்வது போல் தெரியும்...

அப்போது தான் நீலேஷ் அங்கு வந்தான்... தொழில் முறையில் தாமோதரன் அவனது தந்தைக்கு நன்கு பழக்கம்... அதனால் அவனை இந்தத் திருமணத்திற்குப் போகச் சொல்லி அவர் அனுப்பி வைத்திருந்தார்... அங்கு வந்தவனுக்குச் சித்தார்த், பிரகதீஸ்வரி இணக்க நிலை கண்டு மனம் திகுதிகுவெனப் பற்றி எரிந்தது... கூடிய சீக்கிரம் இவர்களைப் பிரிக்க வேண்டும்... பிரகதீஸ்வரி இருந்த இடத்தில் நேத்ராவை பொருத்த வேண்டும் என்று அவனது மனம் பேராசை கொண்டது...

எதற்கும் கட்டுப்படாத சித்தார்த் அவனது தங்கைக்கு மட்டும் எப்படிக் கட்டுப்படுவான் என்று யோசிக்கத் தவறினான் அவன்...

முகூர்த்த நேரத்தின் போது பிரபாவதி இருவரையும் மேடைக்கு அழைத்தார்...

****

அர்ஜூன் கையில் தாலியுடன் சங்கமித்ரா முகம் நோக்கி குனிந்த போது அவன் உலகத்தை வென்ற மகிழ்ச்சியில் இருந்தான்... அவனது இத்தனை வருட காத்திருந்த காதல் இந்தக் கணம் அர்த்தமானது போலிருந்தது அவனுக்கு... சங்கமித்ரா கலக்கத்துடன் அவனை ஏறிட்டு பார்த்தாள்... என்ன முயன்றும் மனதினை கட்டுப்படுத்த அவளால் முடியவில்லை... உதடுகள் கடித்துத் தனது அழுகையை அடக்க முற்பட்டாள்...

கையிலிருந்த தாலியை ஒற்றைக் கையில் பிடித்துக் கொண்டு அவளது இதழ்களை மென்மையாய் வருடி

விடுவித்த அர்ஜூன்,

"இன்னும் கலக்கம் எதற்கு மித்தும்மா...?"

அவனது வருடலில் இருந்த மென்மையிலா, இல்லை அவனது குரலில் இருந்த மென்மையிலா எதில் என்று தெரியவில்லை அவளது மனம் சற்றுச் சமாதானம் அடைந்தது... அவனைப் பார்த்து மெல்ல புன்னகை புரிந்தாள்...

"இது தான் என் மித்தும்மாவுக்கு அழகு..." என்று கூறியபடி அவளது விழிகளுக்குள் விழி கலந்து பார்வையால் அவளைத் தேற்றியபடி அவளது கழுத்தில் மங்கல நாணை பூட்டினான்...

திருமண வைபவத்தைக் கண்டு சித்தார்த், பிரகதீஸ்வரி இருவரின் முகமும் இறுகி போனது... அவனுக்கு அன்று மனைவியால் தான் அத்தனை பேர் முன் அவமானப்பட்டது நினைவில் நின்றது என்றால், அவளது நினைவில் திருமணத்திற்கு முந்தைய நாள் கணவன் பேசிய வார்த்தைகள் நினைவில் நின்று உயிரோடு வதைத்தது... ஆக மொத்தம் இருவரும் சொல்லொண்ணா வேதனையில் இருந்தனர்...

ஏதோ தோன்ற இருவரும் தங்களது இணையைத் திரும்பி பார்த்தனர் சொல்லி வைத்தார் போன்று ஒரே நேரத்தில்... அவளது முகத்தில் இருந்த வேதனையை அவன் கண்டு கொண்டான்... அவனது முகத்தில் இருந்த வேதனையை அவள் கண்டு கொண்டாள்...

அந்தக் கணம் அவரவர் தனிப்பட்ட தங்களது வேதனையை மறந்து மனம் கவர்ந்தவர்களின் வேதனையை நீக்க விரும்பினர்... சித்தார்த்தின் இடது கை நீண்டு தன்னவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டது என்றால், பிரகதீஸ்வரி அவனின் மனதினை சாந்தப்படுத்தும் பொருட்டு அவனது நெஞ்சில் சாய்ந்து நின்றாள்... இருவரின் செய்கையும் ஒரே நேரத்தில் நிகழ்ந்தது தான் இங்கு விந்தை...

அதை உணர்ந்தவர்களாய் இருவரும் மலர்ந்த புன்னகையுடன் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்... அதன் பின்பே அவர்களது நினைவில் திருமணம் நினைவுக்கு வர கையிலிருந்த அட்சதையை மணமக்களை நோக்கி தூவினர் தங்களது பார்வையை மாற்றிக் கொள்ளாது...

திருமணம் முடிந்து ஐந்து நிமிடங்கள் கழித்து அட்சதை தூவிய அத்தை மகனை கண்டு சங்கமித்ரா கேலி குரலில்,

"அத்தான்... உங்களுக்கு வேகம் பத்தாது... இன்னும் கொஞ்சம் அதிக வேகத்தினை எதிர்பார்க்கிறேன்..." என்று கூற...

அதைக் கேட்டு பிரகதீஸ்வரி வெட்கம் கொண்டு கணவனின் நெஞ்சில் முகம் புதைத்தாள்... முகம் கொள்ளா புன்னகையுடன் மனைவியை அணைத்து கொண்டவன்,

"அதை உன்னவரிடம் கூறும்மா..." என்று சளைக்காது பதிலடி கொடுத்தான் சித்தார்த்...

"அம்பேல்..." என்று இரு கைகளையும் தூக்கி சிரித்தான் அர்ஜூன்...

கணவன் கூறியது கேட்டு நாணம் கொண்டது சங்கமித்ராவின் முகம்... மனைவியின் நாணத்தை ரசித்தபடி அவளை இழுத்து அணைத்துக் கொண்டான் அர்ஜூன்...

சிறியவர்களின் மகிழ்ச்சியைப் பெரியவர்கள் சந்தோசத்துடன் பார்த்துக் கொண்டு இருந்தனர்...

இது தானே அவர்கள் எதிர்பார்த்தது... இந்தச் சந்தோசம் நீடித்திருக்க வேண்டும் என்று கடவுளிடம் மனமுருக வேண்டி கொண்டனர்...

****

"எங்கே அந்தச் சரண்...?" என்று இன்டர்காமில் பல்லை கடித்தாள் ஸ்வேதா...

மறுமுனையில் இருந்த அலுவலக ஊழியை, "இங்கே அவந்திகா சிஸ்டம் ஹேங் ஆகிருச்சு... அதைச் சரி பண்ணிக்கிட்டு இருக்கிறார்..." என்று கூறியவளிடம் ஒன்றும் பேசாது அழைப்பை துண்டித்தவள் மனம் கொதித்தது...

'இவன் எனக்கு வேலை பார்க்க வந்திருக்கிறானா...? இல்லை ஊர் உலகத்தில் உள்ள பெண்களுக்கு வேலை பார்க்க வந்திருக்கிறானா...?' மனதில் கடுகடுத்தபடி அவள் அமர்ந்திருந்தாள்...

சுமார் அரை மணி நேரம் பொறுத்து பார்த்தவளுக்கு அதற்கு மேல் பொறுத்திருக்க முடியவில்லை... பல்லை கடித்தபடி எழுந்தவள் அறையை விட்டு வெளியில் வந்து பார்த்தாள்...

அங்கே சரவணன் அலுவலகப் பெண்கள் எல்லோரும் சூழ்ந்திருக்கக் குழலூதும் மாயக் கண்ணன் போன்று மயக்கும் புன்னகையுடன் நின்றிருந்தான்... அதிலும் எல்லாப் பெண்களும் அவனைப் பார்த்து ஈயென்று பல்லை காட்டி இளித்துக் கொண்டு இருந்தது கண்டு ஸ்வேதாவின் கோபம் கொதிநிலையையும் தாண்டி உச்சபட்ச வெப்பநிலையை அடைந்தது...

மனைவியின் வருகையையும், அவளது கோபத்தினையும் ஓரக்கண்ணால் பார்த்தபடி கண்டும் காணாதவனாய் நின்றிருந்த சரவணனின் உதடுகளில் விசம புன்னகை தவழ்ந்தது...!!!

"காதலுக்கு நிறம் எதிரியல்ல
காதலுக்கு அழகு எதிரியல்ல
காதலுக்குச் சாதி எதிரியல்ல
காதலுக்கு மதம் எதிரியல்ல
காதலுக்குத் தேசம் எதிரியல்ல
காதலுக்கு எல்லை எதிரியல்ல
காதலுக்குக் காதலே எதிரி...
இங்கு எதிரியான காதலே
பக்கபலமாய்த் துணையிருப்பது

விந்தையிலும் விந்தை...
விந்தையான காதலே
காவியமாகும்...
காவிய காதலாக
தாங்க வேண்டும்
வேதனையும், வலியும்...
வேதனை, வலி தாங்க
காதலே சுமைதாங்கியாய்
மாறும் அதிசய காதல்
நம்முடையது...
காலம் தாண்டி
காவியமாய்
நிலைத்திருக்கும்
காதல் நம் காதல்...!!!"

நனவாகும்...!!!

ஸ்வேதா கோபமாய்ச் சரவணன் அருகில் வந்தவள் அவன் முகத்தின் முன் சொடக்கு போட்டு அழைத்தவளாய், "என்னோட கேபினுக்கு வா..." என்று விட்டு முன்னே சென்றாள்...

அங்குக் கூடியிருந்த பெண்கள் எவரது முகத்தினையும் பார்க்க அவள் விரும்பவில்லை... அந்தளவுக்கு அவளுக்கு எரிச்சலாக இருந்தது... ஏன் இந்த எரிச்சல் என்று அவளுக்குத் தெரியவில்லை...?

கதவு வரை வந்தவள் அப்போது தான் கவனித்தாள் சரவணன் தன்னுடன் வராததை... 'இவனை' என்று பல்லை கடித்தப்படி திரும்பி பார்த்தவள்,

"மிஸ்டர். சரண்... நான் உங்களைக் கூப்பிட்டது உங்க காதில் விழவில்லையா...?"

அவளது வார்த்தையில் சுற்றும் முற்றும் பார்த்தபடி அவன், "நீங்க என்னையவா கூப்பிட்டீங்க...? நீங்க ஏதோ நாயை கூப்பிட்டீங்கன்னு நான் நினைச்சேன்..." என்றான் கிண்டலாய்...

அவள் சொடக்கு போட்டு மரியாதை இல்லாது அழைத்ததை அவன் சுட்டி காட்டினான்...

"இப்போ இங்கே வர முடியுமா...? முடியாதா...?" என்று அவள் கோபமாகக் கேட்கும் போதே இரண்டு எட்டில் அவள் புறம் வந்தடைந்தவன்,

"நீ கூப்பிட்டால் நரகத்துக்கும் வர நான் தயார்... இங்கே வர மாட்டேனா ஸ்வீட்டி..." என்று முணுமுணுத்தவனைக் கண்டு அவள்,

"என்ன முணுமுணுப்பு வேண்டி கிடக்கு..." என்று அதற்கும் அவனிடம் காய்ந்தபடி அறையினுள் நுழைந்தவள் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தாள்...

"ஒழுங்கா ஒரு வேலையைப் பார்க்க துப்பில்லை... ஆனால் பெண்களோடு அரட்டை அடிக்க மட்டும் உனக்கு நேரம் இருக்கு..." என்று அவனிடம் கத்தியவள் அவனுக்கான வேலையைக் கொடுத்து விட்டு தனது வேலையில் ஆழ்ந்தாள்...

சரவணன் அவள் சொன்ன வேலைகளைக் குறித்த நேரத்திற்கு முன்பாகச் செய்து முடித்து விட்டு அவள் முன் வந்து நின்றான்...

"என்ன...?" என்று கோபம் கொண்டு கத்தியவளை அமைதியாகப் பார்த்தவன்,

"என் வேலைகளை முடித்து விட்டேன்..." என்றவனைக் கண்டு அவளது விழிகளில் சிறு மெச்சுதல் வந்து போனது... பின்பு கடினமாய்த் தனது பார்வையை மாற்றிக் கொண்டவள்,

"சரி நீ போகலாம்..." என்றபடி தனது வேலையைப் பார்க்க ஆரம்பித்தவளை கண்டு,

"யார் அந்தக் கார்த்திக்...?"

அவனது கேள்வியில் முகம் சுருங்கினாலும் அடுத்தக் கணம் அதைச் சரி செய்து கொண்டு அவனை நிமிர்ந்து பார்த்தவள்,

"என்னுடைய லவ்வர்..." என்றாள் கண்கள் மின்ன சந்தோசமாய்...

"ஓ..." என்று சிறிது இடைவெளி விட்டவன்,

"ரொம்பச் சந்தோசம் ஸ்வேதா... நீ இப்படியே பழசை எல்லாம் நினைச்சிட்டு உன் வாழ்க்கையைப் பாழாக்கி கொள்வாயோன்னு பயந்தேன்... இப்போ தான் எனக்கு நிம்மதியா இருக்கு..." என்று மகிழ்ச்சியோடு கூறியவனை வெறித்துப் பார்த்தாள் அவள்...

அந்தக் கணம் அவளது மனக்கண்ணில் அவன் தனக்குத் தாலி கட்டிய காட்சி தான் ஓடியது... அத்தோடு அவனது

வார்த்தைகளும் சேர்ந்து கொள்ள அந்தக் கணம் அவனைக் கொன்று விடும் ஆத்திரம் அவளுள் எழுந்தது...

"இவ்வளவு நாள் உன்னைப் பத்தின கவலையில் நான் என் வாழ்க்கையைப் பத்தி கூட யோசிக்காது இருந்து விட்டேன்... இனி நான் என் வாழ்க்கையைப் பத்தி யோசிக்க ஆரம்பிப்பேன்..." என்றவனைக் கேள்வியாய் பார்த்தாள் அவள்...

"பிரகதி கிட்ட சொல்லி பெண் பார்க்க ஏற்பாடு பண்ண சொல்ல வேண்டியது தான்..." என்றவனை வெறுமையாகப் பார்த்தவள்,

"ஏன் நம்ம ஆபிசில் இல்லாத பெண்களா...?" என்றவளின் பேச்சில் அப்படி ஒரு குத்தல் இருந்தது... அவளை ஆழ்ந்து பார்த்துக் கொண்டே அவன்,

"உண்மை தான் நம்ம ஆபிசில் இல்லாத பெண்களா...? நல்ல ஐடியா கொடுத்த ஸ்வேதா... நிச்சயம் எனக்கு ஏத்த பெண்ணைச் செலக்ட் பண்ணிட்டு வந்து முதலில் உன்னிடம் தான் காட்டுவேன்... நீ தான் ஓகே பண்ணணும்..." என்றவனைக் கண்டு மனதில் அலைக்கடலாய் உணர்வுகள் பொங்கிய போதும் வெளியில் அதைக் காட்டாது அமைதி காத்தாள் அவள்...

"உன் கல்யாணம் எப்போது ஸ்வேதா...? எனக்கு இன்விடேசன் கொடுப்பியா...? உன்னவர் என்ன பண்ணுகிறார்..." என்று கேட்டவனிடம்,

"உன்னை மாதிரி வெட்டியா இல்லை போதுமா...?" என்று அவள் வெடித்தாள்...

"அப்படி என்றால் ரொம்பச் சந்தோசம்... உனக்குப் பொருத்தமானவனைத் தான் நீ செலக்ட் பண்ணியிருப்ப... வாழ்த்துக்கள்..." என்று வாழ்த்தியபடி கை நீட்டியவனின் கையைப் பற்றிக் குலுக்காது,

"நிச்சயமா என் ஸ்டேட்டஸ்க்கு ஏத்தவனைத் தான் நான் செலக்ட் பண்ணியிருக்கேன்..." என்று கர்வமாகக்

கூறியவள்,

"உன் வாழ்த்து எனக்குத் தேவையில்லை... நீ என் வாழ்க்கையில் இருந்து விலகி இருந்தால் போதும்..."

"உன்னோட விருப்பம் அது தான் என்றால் என்னோட விருப்பமும் அது தான்..." என்றவன் அடுத்த நொடி அந்த அறையை விட்டு வெளியேறினான்...

சரவணன் சென்றதும் அவள் ஓய்ந்து போனவளாய் நாற்காலியில் சாய்ந்தாள்... அலைக்கடலாய் தத்தளித்துக் கொண்டிருந்த மனது இப்போது ஆழி பேரலையில் சிக்கி கொண்டது போல் தவித்தது... அந்தக் கணம் நீலேஷின் முகம் அவளது மனக்கண்ணில் தோன்றியது...

நீலேஷை அண்ணனின் நண்பனாகத் தான் அவளுக்குத் தெரியும்... எப்போதாவது அவனைப் பார்த்தால் ஒரு புன்சிரிப்போடு அவள் ஒதுங்கி போய் விடுவாள்... ஏனெனில் பிரபாவதி அதற்கு மேல் அந்நிய ஆணிடம் பேசி பழக அனுமதிக்க மாட்டார்...

கடந்த மூன்று ஆண்டுகளாக அவள் தவித்திருந்த போது நீலேஷ் அவளுக்கு ஆறுதலாக இருந்து அவளது மனதில் கொஞ்சம் கொஞ்சமாக இடம் பிடிக்க ஆரம்பித்தான்... அவன் தன்னைக் காதலிக்கிறான் என்பதை அவனது செயல்களின் மூலம் அவள் உணர்ந்தாள்... ஒரு நாள் அவன் தன்னைக் காதலிப்பதாக வாய் மொழியாகச் சொன்ன போது அவளால் அதற்கு உடனே பதில் கூற முடியவில்லை...

அவர்களது அந்தஸ்திற்குச் சமமான அந்தஸ்துடன் இருந்தவனை மறுக்கப் பெரிதாக எந்தவொரு காரணமும் அவளுக்கு இல்லை... அவளுக்கும் அவனிடம் பேசுவது, பழகுவது எல்லாமே பிடித்திருந்தது... ஆனாலும் 'ஐ லவ் யூ' என்கிற மூன்று வார்த்தையை அவளால் சொல்ல முடியவில்லை...

நேற்று வரை அவளுக்கு அது ஏனென்று புரியவில்லை... இதோ இப்போது இந்தக் கணம் அது ஏனென்று அவளுக்குப் புரிந்தது... புரிந்த விசயம் தான் அத்தனை உவப்பானதாக இல்லை... மஞ்சள் கயிறு 'மேஜிக் ' அவளின் மனதிலும் மாயாஜாலத்தை ஏற்படுத்தி இருந்தது... ஆனால் அதே சமயம் சரவணனை அவளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை... அவனது செயலை அவளால் ஜீரணிக்க முடியவில்லை...

அது போல் இந்த ஜென்மத்தில் அவன் தான் தனது கணவன் என்பதும் அவளது மனதிற்கு உறுதியாகத் தெரிந்தது... அவன் கட்டிய தாலிக்கு அவளால் மதிப்பு கொடுக்க முடிந்தது... ஆனால் அவனுக்கு மதிப்பு கொடுக்க அவளால் முடியவில்லை... ஏனெனில் அவளின் மனதின் காயம் அப்படிப்பட்டது...

ஸ்வேதாவின் விழியோரம் விழிநீர் துளிர்த்தது... கதவில் இருந்த சிறு கண்ணாடி வழியே அவளது வேதனையைக் கண்ட சரவணனின் நெஞ்சில் உதிரம் வழிந்தது...!!!

****

அழகான வெண்பட்டில் அழகுற தயாராகி இருந்த சங்கமித்ரா பிரகதீஸ்வரியின் கைகளைப் பிடித்துக் கொண்டு, "எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு பிரகதி..." என்றாள்...

தன்னை விடச் சிறு பெண்ணாக இருந்தாலும் அவள் முதலில் திருமணம் முடித்ததால் பெரிய பெண்ணாகக் கருதி அவளிடம் தனது மனதின் பயத்தினைப் பகிர்ந்து கொண்டாள்...

"அத்தான் ரொம்ப நல்லவருக்கா..." என்று சங்கமித்ராவை தேற்றிய பிரகதீஸ்வரிக்கு அதற்கு மேல் என்ன சொல்வது என்று தெரியவில்லை...

ஏனெனில் அவளுக்குமே எந்தவொரு அனுபவமும் இல்லை... அதனால் அவள் திருதிருவென விழித்தாள்...

"ஆமாம்... ஆமாம்..." என்று மனதை தேற்றிக் கொண்ட சங்கமித்ரா,

"நீ சந்தோசமா இருக்கிறியா பிரகதி...? சித்து அத்தான் உன்னை நல்லா பார்த்துக்கிறாரா...?"

"எனக்கு என்னக்கா குறை... உங்க அத்தான் என்னை நல்லா பார்த்துக்கிறார்... நீங்க சொன்னது போல் அவர் நல்லவர் தான்... நான் தான் அவரைப் புரிஞ்சிக்காம ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேன்..." என்ற பிரகதீஸ்வரியை கண்டு சங்கமித்ராவுக்கு நிம்மதி எழுந்தது...

அந்த நிம்மதியுடன் சங்கமித்ரா முதலிரவு அறைக்குச் சென்றாள்...

சங்கமித்ராவை அனுப்பி வைத்து விட்டு வந்த பிரகதீஸ்வரியை கண்டதும் வரவேற்பறையில் அமர்ந்திருந்த சித்தார்த் எழுந்தான்... சிறியவர்களான இவர்களை இங்கே விட்டு விட்டு பிரபாவதியும், மார்த்தாண்டமும் முன்பே வீட்டிற்குச் சென்று விட்டனர்...

"போகலாமா ரதி..." என்ற கணவனைக் காண்பதற்குப் புதிதாய் நாணம் வந்து அவளைத் தடுத்ததில் தலையைக் குனிந்து கொண்டே அவள் சரி என்றாள்...

அவளைப் புரியாது பார்த்தவன் அத்தை, மாமாவிடம் விடைப்பெற்று விட்டு தங்களது வீட்டிற்கு மனைவியுடன் கிளம்பினான்... காரில் வரும் போதும் கேட்டதற்கு ஒன்றிரண்டு வார்த்தைகள் மட்டுமே பதில் பேசி விட்டு தலை குனிந்தபடி வந்த மனைவியை விசித்திரமாய்ப் பார்த்தவன் ஏனென்று கேட்காது அமைதியாக வந்தான்...

சங்கமித்ரா அறைக்குள் நுழைந்து கதவை சாத்தி விட்டு திரும்பியவள் முதலில் கண்டது அர்ஜூனின் புன்னகை முகத்தைத் தான்... அதில் அவளது மனம் அமைதியுற்றது...

"வா மித்து..." என்று அவளை வரவேற்றுக் கட்டிலில் அமர வைத்தவன்,

"இந்த அலங்காரம் எல்லாம் வேண்டாம்ன்னு சொல்லத்தான் இருந்தேன்... ஆனால் அதைச் சொல்லி பெரியவங்க மனசு கஷ்டப்பட வேண்டாமேன்னு தான் விட்டு விட்டேன்... இதில் உனக்கு ஏதும் மன வருத்தம் என்றால்... ஐயம் சாரி..." என்று வந்ததும் வராததுமாய் மனைவியிடத்தில் அவன் மன்னிப்பு கேட்டான்...

யாருடைய மனதினையும் புண்படுத்தாமல் நடந்து கொள்ளும் கணவனைக் கண்டு அவளுக்குச் சந்தோசமாக இருந்தது... நிச்சயம் அவன் தன்னை மனம் வருந்த செய்ய மாட்டான் என்று அவள் நம்பிக்கை கொண்டாள்...

"அப்புறம் சொல்லு உன் காதல் கதையை..." என்று கேட்ட அர்ஜூனை திகைப்பாய் பார்த்தாள் அவள்...

"என்னடா முதலிரவு அன்னைக்குமா இப்படிக் கேட்கிறானேன்னு பார்க்கிறியா... இதுக்கு முன்னாடியே உன் கிட்ட கேட்கணும், உன் துயரத்தை போக்கணும்ன்னு நான் நினைச்சேன் தான்... ஆனால் அப்போ அதைத் தாங்கிக்கிற சக்தி எனக்கு இல்லை... இப்போ அதைத் தாங்கிக்கிற சக்தியை..." என்று நிறுத்தியவன் அவளது கழுத்தில் இருந்த மஞ்சள் கயிற்றைச் சுட்டி காட்டி,

"இந்தத் தாலி கொடுத்திருக்கிறது... நீ என்னவள்... எனக்கு மட்டுமே சொந்தமானவள் என்கிற நிம்மதி இப்போ தான் என்னுடைய இத்தனை நாள் காத்திருந்து, தவித்த காதல் மனதுக்குக் கிடைச்சிருக்கு... என்ன தான் நான் பெருந்தன்மையானவனா இருந்தாலும் நானும் கொஞ்சம் பொசசிவ்னஸ் உள்ளவன் தான்... உன் மேல் மட்டும்..." என்றவனை வியப்பாய் பார்த்தாள் சங்கமித்ரா...

அவனது இத்தனை வருட காதலின் தவிப்பு அவளுக்குமே புரிந்தது... அதனால் தன்னுடைய காதல் கதையை மெல்ல சொல்ல ஆரம்பித்தாள்... சொல்லி முடித்ததும் கணவனது முகத்தைத் தயக்கத்துடன் பார்த்தாள்... அவனோ அவளை இமைக்காது ஒரு நொடி பார்த்தவன் மறு நொடி வாய் விட்டு சிரிக்க ஆரம்பித்தான்...

"ஏன் சிரிக்கிறீங்க...? சொல்லிட்டு சிரிங்களேன்..." என்று சிணுங்கிய புது மனைவியைக் கண்டு அவனது காதல் மனம் மயங்கியது...

"இப்படிப் பேபியா இருக்கியே மித்தும்மா...? இதுக்குப் பெயரா காதல்...? இதுக்குப் பெயர் சலனம், ஒருவித ஈர்ப்பு... இப்படி ஏதாவது ஒண்ணைச் சொல்லலாம்..."

"அப்போ நீங்க வச்சதுக்குப் பெயர் மட்டும் காதலா...? பெண்கள் நாங்களா வலிய வந்து காதலை சொன்னால் உங்க ஆண் இனத்திற்கு எல்லாம் இப்படித்தான் தோணும்... எங்க உணர்வுகளைக் கொஞ்சமும் மதிக்கிறதே இல்லை... இப்ப கூடப் பாருங்க உங்க காதல் இத்தனை வருசம் கழிச்சுன்னாலும் நிறைவேறி இருக்கு... ஆனால் எனக்கு...? தோல்வி மட்டுமே..." என்று கோபமும் ஆதங்கமுமாய்ப் படபடத்தவளை கண்டு அவனுக்குப் பாவமாய் இருந்தது...

"கூல் மித்தும்மா... ஹரி மீது எந்தத் தவறும் இல்லை... அவங்கம்மா சந்தியா கழுத்தில் தாலி கட்டுன்னு சொன்னால் அவனும் என்ன செய்வான்... அவன் மனசில் வேற ஒரு பொண்ணு இருக்கிறதா அவன் ஏற்கெனவே உன் கிட்ட சொல்லியும் இருக்கிறான்... அப்படி இருந்தும் காதலை வளர்த்துக்கிட்டது உன் தப்பு..."

"ஒருவேளை நான் ஹரியை கல்யாணம் பண்ணியிருந்தால் உங்க ஸ்டேட்மெண்ட் இப்படியே தான் இருக்குமா...?"

தைரியமாகக் கேட்டவளை கண்டு மெச்சுதலாகப் பார்த்தவன், "நிச்சயம் வலிக்கத் தான் செய்யும் இல்லை என்பதற்கு இல்லை... அதுக்காக வருந்திக்கிட்டு இருக்க மாட்டேன்... எங்கிருந்தாலும் வாழ்கன்னு சொல்லிட்டு வேறு ஒரு நல்ல பொண்ணா பார்த்துக் கல்யாணம் பண்ணிக்குவேன்..." என்றவனை அதிர்ச்சியுடன் பார்த்தவள் மறுநொடி அவனைச் சராமாரியாக அடிக்கத் துவங்கினாள்...

"இவ்வளவு தானா உங்க காதல்... அப்போ நாளைக்கே எனக்கு ஏதாவது ஒண்ணுன்னா வேற கல்யாணம் பண்ணிக்குவீங்களா...?"

"நிச்சயமா மாட்டேன் மித்தும்மா... உனக்கு அப்புறம் எனக்கு வேறு ஒரு வாழ்க்கை கிடையாது..."

அர்ஜூன் அப்படிச் சொன்னதும் அடிப்பதை நிறுத்தி விட்டு அவனைச் சந்தேகமாய்ப் பார்த்தாள் சங்கமித்ரா...

"உண்மையா மித்து... ஒருவனுக்கு ஒருத்தி... அது போல் எனக்கு மனைவின்னா அது நீ மட்டும் தான்... உன்னை விட்டு விட்டு நான் எப்படி இருப்பேன்..."

"அப்போ ஏன் அப்படிச் சொன்னீங்க...?" என்று சிணுங்கியவளை கண்டு,

"காதலி வேறு... மனைவி வேறு மித்தும்மா... உன் கழுத்தில் நான் கட்டியிருக்கும் இந்தத் தாலி அதுக்குரிய மதிப்பை கொடுக்கிறது... என் உயிர் உள்ள வரைக்கும் நீ தான் எனக்கு மனைவி..." என்றவனின் வார்த்தைகள் மயிலிறகாய் அவளின் மனதினை வருடியது...

"அதுக்கு அப்புறம்..." என்று தலையைச் சிரித்துக் குறும்பாய் கேட்டவளை கண்டு அவன் தீவிரத்துடன்,

"அப்படி ஒரு நிலை வந்தால் உன்னைக் கொன்று என்னோடு அழைத்துக் கொண்டு போய் விடுவேன்..."

கணவனின் காதல் தீவிரத்தை கண்டு வாயடைத்து போனவளின் கண்கள் கலங்கியது...

"அர்ஜூன்..."

"உன் அர்ஜூன் தான்டி... உனக்காக மட்டுமே காத்திருக்கும் உன் அர்ஜூன் தான்... இனிமேல் இப்படி அபத்தமா பேசாதே..."

சற்று கோபத்துடன் பேசியவனின் கை மீது தனது கையை வைத்து, "சாரி அர்ஜூன்..." என்று அவள் கூற...

அவள் தானாகத் தன்னைத் தொட்டதைக் கண்டு முகம் மலர அவளைப் பார்த்தவன், "எதைப் பத்தியும் கவலைப்படாமல் படுத்து தூங்கு... எல்லாம் சரியாகும்..." என்றவனை நன்றியுடன் பார்த்தவள் படுக்க ஆயத்தமானாள்...

"மித்தும்மா, வாழ்க்கையை அதன் போக்கில் வாழ பழகிக்கணும்..."

"ம்..." என்றபடி படுத்தவளுக்கு மனதில் அப்படி ஒரு நிம்மதி...

அர்ஜூனின் மனநிலையும் அப்படித்தான் இருந்தது... காத்திருந்த அவனது காதல் அவன் கை அருகில்... அதுவே அவனுக்குப் போதுமானதாக இருந்தது... அந்த நிம்மதியுடன் விழிகளை மூடி தூங்க முற்பட்டான்...

****

பிரகதீஸ்வரி கணவனிடம் போய்ப் பேசலாமா? வேண்டாமா? என்று தனக்குள் 'ஒத்தையா, ரெட்டையா' போட்டுக் கொண்டு இருந்தாள்... வீட்டிற்கு வந்த சித்தார்த் அவளைத் தூங்க சொல்லிவிட்டு அலுவலக அறைக்குள் புகுந்து கொண்டான்...

தன்னைத் தாக்கிய உணர்வலைகள் அவனை ஏன் தாக்கவில்லை? என்று அவள் திகைத்து விழித்தது தான் மிச்சம்... ஆனாலும் அவனை அப்படியே விட்டு விட மனமில்லாமல் அவளே அவனைத் தேடி சென்றாள்...

அறை கதவு திறக்கும் ஒலியில் சித்தார்த் நிமிர்ந்து பார்த்தான்... மனைவியைக் கண்டதும் தான் வேலை செய்து கொண்டிருந்த மடிகணினியை அணைத்து தள்ளி வைத்தவன்,

"வா பேபி..." என்றான் முகமலர்ச்சியுடன்...

அவள் தயக்கத்துடன் அவன் அருகில் வந்து அவனது காலடியில் மண்டியிட்டு அமர்ந்தாள்...

"ஹேய்... இங்கே வந்து உட்கார்..." என்று தனது பக்கத்து இடத்தைச் சுட்டி காட்டிய சித்தார்த் அவளைத் தூக்கி விட முயன்றான்...

"ஊகூம் வேண்டாம்..." என்று மறுத்தவள் அடுத்த நொடி,

"மாமூ..." என்றழைத்தபடி அவனின் மடியில் முகம் புதைத்தாள்...

அவளின் செய்கையைப் புரியாது விழித்தவன் அவளது தலையை ஆறுதலாய் வருடி கொடுக்க மறக்கவில்லை...

"என்ன பேபி சொல்லு...?" என்று மென்மையாய் கேட்டவனுக்கு அவளது மௌனமே விடையாகக் கிடைத்தது...

சில நிமிடங்களில் மனைவியவளின் கண்களில் இருந்து வழிந்த கண்ணீரை அவன் உணர்ந்தான்... அதன் ஈரம் அவனது உடையைத் தாண்டி அவனது கால்களைத் தீண்டியது... அதில் பதறி போனவனாய்,

"இப்போ எதுக்கு இந்த அழுகை...?" என்று கேட்டபடி அவளது முகத்தினை நிமிர்த்த அவன் முயற்சிக்க... அவளோ பிடிவாதமாய்த் தனது முகத்தினை நிமிர்த்தாது இன்னமும் ஆழமாய் அவனது முடியில் முகம் புதைத்து கொண்டாள்...

"இங்கே பார் பேபி... நீ இப்படி அழுவதைப் பார்க்கும் போது எனக்கும் அழுகை வருதுடி... ப்ளீஸ் பேபி அழாதே..." கலங்கி ஒலித்த கணவனது குரலில் அவனை நிமிர்ந்து பார்த்தவளின் விழிகள் அழுததில் சிவந்திருந்தது...

கணவனது கண்களும் கலங்கி இருப்பதைக் கண்டு அவளுக்கு ஆச்சிரியமாக இருந்த அதே சமயம் காதலாகவும் இருந்தது... அவள் மீது எத்தனை காதல் இருந்தால் எதற்காகவும் கலங்காத அவன் அவளுக்காகக் கண் கலங்குவான்...

"மாமூ..."

"என்னடி...?" என்று கேட்டவனின் கை அவளது கன்னத்தில் படிந்திருந்த ஈரத்தை மென்மையாகத் துடைத்து விட்டது...

"என்னை உங்களுக்குப் பிடிக்கலையா...?" என்று கேட்டவளை கண்டு அவனது கலக்கம் அகன்று உதடுகளில் புன்னகை அரும்பியது...

"இன்னுமாடி உனக்கு இந்தச் சந்தேகம்...? இந்த உலகத்திலேயே எனக்குப் பிடிச்ச ஒரே ஆள் நீ மட்டும் தான்..." என்றான் காதலாக...

"அப்போ ஏன் என்னைத் தவிர்க்கிறீங்க...?" என்றவளை புரியாது பார்த்தவன்,

"நான் உன்னைத் தவிர்க்கிறேனா...? இது என்ன புதுக் கதை...?"

"நீங்க... நீங்க..."

"எனக்கு என்ன...?" இப்போதும் அவள் கூற வருவது அவனுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை...

"இன்னைக்கு மித்ராக்காவுக்கு..." என்று முகம் சிவக்க கணவனை ஏறிட்டவள் பின் வெட்கம் கொண்டு தலை குனிந்து கொண்டாள்...

'மித்ராவுக்கு என்ன...?' என்று யோசித்தவனுக்கு அப்போது தான் மூளையில் மின்னல் வெட்டியது... முகம் சிவக்க தலை குனிந்திருந்த மனையாளை காண காண அவனுள்ளும் உணர்களும் கட்டுப்பாடின்றித் தறிகெட்டு அலைப்பாய்ந்தது... அவளது ஏக்கம், காதல் எல்லாம் அவனுக்குப் புரியாமல் இல்லை... ஆனாலும்...???

"உன் மித்ராக்காவுக்கு என்ன...?"

அவனது வார்த்தையில் திகைத்து போய் நிமிர்ந்தவள் அவனது விழிகளில் தெரிந்த குறும்பில் தவிப்புடன் அவனைப் பார்த்தவள்,

"என்னை உங்களுக்குப் பிடிக்கலையா...?" மீண்டும் அதே பல்லவியை ஆரம்பித்தவளை கண்டு,

"எதற்கடி இத்தனை தவிப்பு...? உன் மீதான என்னோட பிடித்ததை நான் காட்ட ஆரம்பித்தால் நீ தாங்க மாட்டாய்... ஆனால் அதற்கான நேரம் இப்போது இல்லை... அதற்கான நேரம் வரும் போது உன் மாமூ உன் மீது எவ்வளவு பிடித்தம் வைத்திருக்கிறான் என்பதை நீ புரிந்து கொள்வாய்..."

"ஏன் மாமூ...?"

"அடி என் மக்கு பொண்டாட்டி... அரசாங்கமே பெண்ணுக்கு திருமண வயது இருபத்தியொன்று என்று தானே சொல்கிறது...?"

"அப்போ எதுக்குப் பதினெட்டு வயசு பொண்ணு கழுத்துல தாலி கட்டினீங்களாம்...?" என்று நமட்டு சிரிப்புடன் கூறிய மனையாளை ஆசையுடன் பார்த்தான் சித்தார்த்...

அன்று அவள் வேண்டும் என்று தானே திட்டம் போட்டு அவளது கழுத்தில் தாலி கட்டினான்... அது பற்றிச் சொன்னால் மனைவி தன்னை மன்னிப்பாளா...? அவனுக்கு மிகவும் பயமாக இருந்தது... அதையும் மீறி அவளது காதல் மீது நம்பிக்கை இருந்தது... அதனால் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவளைப் பார்த்தவன்,

"உன் மீது அத்தனை ஆசையடி பெண்ணே..." என்று கூறினான் காதலாக...

அவன் கூறிய காதல் வார்த்தைகளில் பிரகதீஸ்வரியின் விழிகளிலும் காதல் வழிந்தது... 'என்னை எடுத்து கொள்' என்கிற மறைமுகச் செய்தியும் அதில் சேர்ந்து வழிந்தது... அதை உணர்ந்தவனாய் சித்தார்த்,

"உன் படிப்பை முடிக்கும் ஆசை உனக்கு இல்லையா...?" என்று நமட்டு சிரிப்புடன் கேட்டவனைக் கண்டு அவள் 'ங்கே' என்று விழித்தாள்...

"ஹா... ஹா... நீ இப்போ பார்க்கிறதுக்கு அவ்வளவு அழகுடி..." என்றவன் குனிந்து அவளது நெற்றியில் முத்தமிட்டான்...

"நீ ஏன்டி சித்தா மெடிசின் எடுத்து படிக்கலை..."

அவன் அப்படிக் கேட்டதும் அவளது முகம் மாறிப் போனது... ஆனாலும் அவனுக்காகத் தன்னைத் தேற்றி கொண்டாள்... அவனின் காதலின் முன் அவளின் மன வருத்தம் எல்லாம் அடிப்பட்டுப் போனது...

"எத்தனை ட்ரஸ்ட் மூலம் உன்னைப் படிக்க வைக்க முயற்சி செய்தேன் தெரியுமா...?" என்றவனை அவள் விழி விரித்து வியப்பாய் பார்த்தாள்...

தனக்காகக் கணவன் இவ்வளவு யோசித்து இருக்கிறானா என்று அவளுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது... அவன் அவளை மறக்கவில்லை... அவளது குறிக்கோளை மறக்கவில்லை... அவன் எதையும் மறக்கவில்லை...

"எதையும் ஏற்காது நீ நிராகரிச்சிட்ட... உன்னோட குறிக்கோள் இப்போது குறி மாறி போய் விட்டதே பேபி..." என்று உண்மையாக வருத்தப்பட்டவனைக் கண்டு அவளுக்கும் வருத்தமாக இருந்தது...

"உன்னோட குறிக்கோள் குறி மாறி போனதற்குக் காரணம் எனக்குத் தெரியும் பேபி..." என்றவனைக் கண்டு அவளது உள்ளம் அதிர்ந்தது...

"என்னைக் குறி வைத்து தானே..."

இதைச் சொல்லும் போது அவனது கண்களில் வழிந்த காதலில் எந்தவித மாற்றமும் இல்லை... அதே போல் அவனது முகத்தில் எந்தவித கோபமும் இல்லை... அந்தக் கணம் அவனது நேசம் அவளைச் சுகமாய்த் தாக்கியது... எத்தனையோ முரண்பாடுகளின் குவியலாய் அவன் இருந்த போதும் அவள் மீதான அவனது நேசம் பொய்யில்லையே... அந்த ஒன்றிற்காகவே அவனோடு

காதலாய் வாழ்ந்து, மடிந்து வீழ நினைத்தது அவளது காதல் மனம்...

இதோ இந்தக் கணம் வரை அவளுக்கு அவன் செய்த துரோகத்திற்கு அவன் அவளிடத்தில் விடை பகிரவில்லை... ஆனாலும் அவனிடத்தில் தகுந்த விடை இருக்குமோ என்று அவளுக்குச் சந்தேகமாக இருந்தது... அவனுக்குத் தான் உண்மையாக இல்லையோ என்று மனதில் பெரும் உறுத்தலாக இருந்தது அவளுக்கு...

"சாரி... சாரி..." என்று மன்னிப்பு வேண்டியவளை வாரியணைத்துக் கொள்ள அவனது கைகள் பரபரத்தது... இருந்தாலும் அடக்கி கொண்டவன்,

"நமக்கு இடையில் இந்த மன்னிப்பு எல்லாம் அவசியம் தானா பேபி..." அவனது குரலில் இருந்த காதலில் அவள் உடைந்து போய் அழுதாள்...

"எதுக்கு மாமூ இப்படி ஒரு பிரிவு நமக்கு இடையில்...? நீங்க ஏன் மத்தவங்க மாதிரி நல்லவங்களா இல்லாம போயிட்டீங்க...? ஏன் இப்படிப் பணம் பின்னாடி ஓடுறீங்க...? எனக்கு உங்க கூட நூறு வருசம் சந்தோசமா வாழணும்... ஆனால் நம்ம ரெண்டு பேரோட கொள்கைகள் நம்மை வாழ விடாது..." என்று கதறியவளை வேதனையுடன் பார்த்தான் அவன்...

"உன் கொள்கைகளை விட்டு விட்டு வான்னு நான் உன்னைச் சொல்லலையே பேபி..." என்றவனை விழி விரித்துப் பார்த்தவளை கண்டு அவன்,

"நீ உன் நிலையில் நிலையாய் இரு... எதை, எப்படிச் சமாளிக்கிறதுன்னு எனக்குத் தெரியும்...?"

"உங்களுக்கு என் மீது கோபம் வராதா...?"

"உன் மீது எனக்குக் கோபம் வருமா பேபி... நான் உன்னைச் சும்மா வாய் வார்த்தையா பேபி, பேபின்னு கூப்பிடறேன்னு நினைச்சியா... உண்மையில் நீ எனக்குப் பேபி தான்... நீ என்ன செஞ்சாலும் எனக்குக் கோபம் வராது..." என்று

சிரித்தபடி அவளது மூக்கை பிடித்து ஆட்டியவனின் விரல் அவளிடத்தில் அவனுக்கு மிகவும் பிடித்த சிவப்புக்கல் மூக்குத்தியை மென்மையாய் வருடிவிட்டது...

"இயலாதவன் தான் கோபப்படுவான்... உன் மாமூவால் முடியாதது எதுவுமில்லை... அந்தளவுக்குத் திறமையானவன்..." என்று பதிலளித்தான் சிறு கர்வத்தோடு...

"ஏன் மாமூ இது எல்லாம் தப்பு இல்லையா...? இருக்க ஆறடி நிலமும், வயித்துக்குத் தேவையான உணவும் இருந்தால் போதாதா... எதுக்காக இந்த ஆவேசமான ஓட்டம்...?" என்று கேட்டவளை கண்டு அவனது முகம் இறுகி போனது...

"எனக்கு இது எல்லாம் போதாது பேபி... நான் இந்த உலகத்துக்கே ராஜா ஆகணும்... உன்னை ராணி மாதிரி வாழ வைக்கணும்... நமக்குப் பிறக்கும் குழந்தைகளையும் இளவரசி, இளவரசன் போல் வளர்க்க வேண்டும்... இப்படி ஏகப்பட்ட கனவு எனக்கு இருக்கு... இதுக்காகத் தான் நான் ஓடிக்கிட்டு இருக்கேன்... இது ஒரு ரேஸ் மாதிரி... வெற்றி பெறுகிறவனுக்கே இந்த உலகம்... இல்லைன்னா ஏறி மிதிச்சிக்கிட்டு போயிக்கிட்டே இருப்பாங்க..." என்றவனைப் பார்த்து அவள் சிறு குழந்தையாய் புரியாது விழித்தாள்...

மனைவியின் அறியாமையைக் கண்டு அவனது முகம் மென்மையானது... அவளது முகத்தினை வருடியபடி,

"உலகத்தோடு ஒட்டி வாழணும் பேபி... இல்லைன்னா நம்மளை பைத்தியக்காரன்னு சொல்லிருவாங்க... இது ஆண்களுக்கு என்றிருக்கும் தனி உலகம்... ஆண்களுக்கே என்று தனித்து இருக்கும் குணம் தான் இந்த ஈகோ... இது யார் கிட்டேயும் தன்னை விட்டு கொடுக்காது, தோல்வியும் அடைய விரும்பாது... எனக்கு என்னோட தொழில், இந்த ஸ்டேட்டஸ் எல்லாம் ரொம்ப முக்கியம்... இதை இழந்தால் சித்தார்த் என்கிற மனிதனே கிடையாது..."

அதனால் தான் கணவன் இத்தனை காதல் இருந்தும் தன்னைப் பிரிந்து இருந்தானா...? அவனுக்குத் தன்னை

விட அவனது அடையாளம் தான் முக்கியமா...? நேற்று கூட அப்படித்தானே ஏதோ கூறினான் என்று நினைத்தவளுக்குக் கண்கள் கலங்கி கண்ணீர் நிரம்பியது...

"ப்ச்... இப்போ எதுக்குத் திரும்பவும்...?" என்றவன் அவளது விழிகளைத் துடைத்து விட்டான்...

அதில் அவளது கண்களில் இன்னமும் கண்ணீர் பெருகியது...

"அப்போ உங்களுக்கு நான் முக்கியம் இல்லையா மாமு...?" என்று தவிப்புடன் கேட்டவளின் முன் அவனும் தவிப்புடன் மண்டியிட்டு அமர்ந்தவன்,

"எனக்கு நீ இந்த எல்லாத்தையும் விட முக்கியம்ன்னு சொன்னால் நீ நம்புவியா பேபி...? உன் இடத்தில் வேறு யாராக இருந்தாலும் அவர்களின் உயிரை எடுத்து இருப்பேன்... ஆனால் உன் உயிரை என்னால் அவ்வளவு எளிதில் எடுக்க முடியாது... அதற்குப் பதிலாக என் உயிரை எடுத்து விடுன்னு உன் முன்னாடி நான் மண்டியிட்டு விடுவேன்டி... உனக்காக என்றால் என் உயிரையும் சந்தோசமா கொடுப்பேன் பேபி..."

கணவனின் காதல் அவளைப் பிரமிக்க வைத்தது... அதிர்ச்சியும், வியப்புமாய் அவனைப் பார்த்தபடி அவள் அமர்ந்திருந்தாள்... அவனின் காதலில் பேச வார்த்தைகளற்று போனவளை ஒருவித மோனநிலை வந்து ஆட்கொண்டது...

சித்தார்த் மனைவியவளின் கைகளை எடுத்து மருதாணி பூசியதில் சிவந்திருந்த அவளது உள்ளங்கையை விரித்து அதில் அழுத்தமாய்த் தனது இதழ்களைப் பதித்தான்... அவளின் பிரத்யேக நறுமணத்துடன், மருதாணி வாசமும் சேர்ந்து அவனது மனதினை மயக்கியது... அவனது மீசை ரோமம் உள்ளங்கையில் உராய்ந்ததில் தேகம் எல்லாம் சிலிர்க்க பிரகதீஸ்வரி கண் மூடி கிறங்கி நின்றாள்...

அவளது உணர்வுகளை அவதானித்தபடி நிமிர்ந்த சித்தார்த்,

"ஐ லவ் யூ பேபி..." என்றான் தனது உள்ளத்தின் ஒட்டுமொத்த காதலையும் அந்த மூன்று வார்த்தைகளில் தேக்கியபடி...

மனைவியவளின் அத்தனை நேர உள்ளத்துத் தவிப்பை ஒரு நொடியில் தீர்த்து வைத்து விட்டான் அந்தக் காதல் கணவன், அவளின் மனதினை நன்கு அறிந்தவனாய்...!!!

"அக்கரையில் நீ,
இக்கரையில் நான்,
நம்மைப் பிரிக்கும்
நதியாய் நம்
கொள்கைள்...
உன் காதல்
உயிர்பிக்க,
உன் கொள்கை
உயிர் வாழ,
நான் என் காதலை
உயிரிழக்க செய்து,
உன் கொள்கையை
உயிர் வாழ செய்வேன்...!!!"

நனவாகும்...!!!

கணவனது காதலில் பிரகதீஸ்வரி மழைச் சாரலில் நனைந்தது போல் இல்லை இல்லை காட்டாற்று வெள்ளத்தில் மூழ்கியவளாய் மகிழ்ச்சியில் திளைத்துத் தத்தளித்துப் போனாள்... தனது மகிழ்ச்சியை, தனது காதலை வெளிப்படுத்தும் விதம் தெரியாமல் அடுத்த நொடி அவள் தனது கணவனின் கழுத்தை வளைத்து அவனது முகம் முழுவதும் முத்தமிட்டாள்...

அவளது வாய் மெதுவே முணுமுணுத்தது...

"ஐ லவ் யூ மாமூ..." என்று...

மனைவியின் இந்த அதிரடி செயலை சித்தார்த் சிறிதும் எதிர்பார்க்கவில்லை... கண்ணீரும், உமிழ்நீரும் கலந்த அவளது இதழொற்றல் அவனது மனதின் ரணத்திற்கு மருந்திட்டு அவனைச் சந்தோசத்தில் திக்குமுக்காட செய்தது... அவளது காதலில் சுகமாய்த் திளைத்தவனின் உடல் இறகை போல் லேசாகி பறப்பது போல் தோன்ற அப்படியே தரையில் மல்லாக்க சாய்ந்தான்... அவனோடு சேர்ந்து அவனவளும் அவன் மீது விழுந்தாள்...

அவள் அதை எல்லாம் உணரவில்லை... காதலை சொல்லிய கணவனுக்குத் தனது காதலை உணர்த்துவது ஒன்றே தனது குறிக்கோளாக எண்ணி அவள் செயல்பட்டாள்... அவனது முகம் முழுவதும் விடாது முத்தமிட்டவள் அவனது இதழில் முத்தமிட தயங்கி அவனை நிமிர்ந்து பார்த்தாள்... அந்தக் கணம் அவனும் புன்சிரிப்புடன் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்...

"என் உதடுகள் மட்டும் என்ன பாவம் செய்தது பேபி...?" அவளது விழிகளுக்குள் விழி ஊடுருவியபடி கேலியாய் கேட்டுக் கொண்டே அவளது தோள்களை வருடியவனைக் கண்டு நாணம் கொண்டவளாய் அவள் தலை குனிந்தாள்...

பெண்ணவளின் நாணத்தில் மன்னவனின் மனம் ஆணாய் கர்வம் கொள்ள நொடி பொழுது தாமதியாது அவளின் முகத்தைப் பற்றித் தன்னருகே இழுத்தவன் அடுத்தக் கணம் அவளது இதழை ஆவேசமாய் முற்றுகையிட்டான்... அவனின் மனக் கட்டுப்பாடு அவனிடம் இருந்து சொல்லாமல் கொள்ளாமல் விலகி சென்றது...

அன்றொரு நாள் சித்தார்த் பிரகதீஸ்வரியின் இதழில் முத்தமிட்டு இருக்கிறான் தான்... ஆனால் அது அவளைத் தன்னிடம் தக்க வைத்து கொள்வதற்காக மனம் முழுவதும் பயத்துடன், அவசரத்துடன் அவன் செயல்பட்டது... ஆனால் இன்று எந்தவொரு அவசரமும் இல்லாது முழு ஆண்மகனாய் இதழொற்றலின் மயக்கத்தை உணர்ந்து பூவிலிருந்து தேன் எடுக்கும் வண்டாய் அவளின் இதழ் பூவிலிருந்து தேன் எடுத்தான் வெகு நிதானமாய்... இதழ் பூவின் மென்மையில், தித்திப்பில் வண்டானது மதி மயங்கி போனது...

கட்டாந்தரையும் பஞ்சு மெத்தை போல் சுகமாய் இருந்தது அவனுக்கு... பிறந்ததில் இருந்து பஞ்சு மெத்தையில் வளர்ந்த கர்வம் பிடித்த சித்தார்த்தை காதல் கட்டாந்தரையில் படுக்கையிட செய்தது...

பிரகதீஸ்வரி ஆர்ப்பரிக்கும் கடல் அலையாய் உருமாறி போயிருந்தாள்... இதழொற்றல் மூலம் அவனது உயிரை உறிஞ்சி எடுத்தாளா, இல்லை தனது உயிரை அவனுள் ஊற்றினாளா என்று தெரியாத ஒரு நிலையில் உணர்ச்சி பிழம்பாய் அவள் மாறியிருந்தாள்... அவள் கண்களை மூடி மன்னவனது முத்தத்தை ரசித்து அந்தத் தித்திப்பான கணத்தைப் பத்திரமாகத் தனக்குள் சேமித்து வைத்து கொண்டிருந்தாள்...

நேரம் சென்று கொண்டிருந்த போதும் இருவருக்கும் பிரியும் ஆசை இல்லை... மூச்செடுப்பதற்குக் கூடப் பிரிய மனமில்லாது இருவரும் தங்களது இணைக்குத் தனது உயிர் மூச்சை அளித்து உயிர் கொடுத்து, முத்தத்தின் மூலம்

மற்றவர் உயிரை உறிஞ்சி தங்களுக்குள் அவர்களை ஊற்றி கொண்டிருந்தனர் காதலோடு...

காதலில் வன்மையும் சில நேரம் அழகு தான் போலும்...

காதலை தாண்டி காமத்தின் பிடிக்குள் செல்லும் முன் சித்தார்த் மனைவியை விட்டு விலகினான்... அவனைப் போல் அவளால் உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை போலும்... அவனது விலகலை தாபத்தோடு பார்த்த மனையாளின் கன்னம் தட்டி,

"இன்றைக்கு இது போதும் பேபி... கொஞ்சம் கொஞ்சமா பாடம் சொல்லி தர்றேன்..." என்று நமட்டுச் சிரிப்பு சிரித்தவனைக் கண்டு அவள் சிரிக்கவில்லை...

மாறாகக் கண்கள் கலங்க அவனைப் பார்த்தவள், "என்னால் தானே அத்தனை அசிங்கப்பட்டீங்க... அந்த அசிங்கத்தை எல்லாம் போக்கணும்ன்னு உங்களுக்குத் தோணலையா...?"

அதைக் கேட்டு அவனது முகம் மாறியது... சட்டென்று எழுந்து அமர்ந்தவனைக் கண்டு அவளும் விலகி அமர, அவளை விலக விடாது தனது மடியில் படுக்க வைத்து கொண்டவன் அவளது தலையை வருடி கொடுத்தான்... மனைவியின் மதி முகத்தில் தெரிந்த குளுமையில் அவனது மனம் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சாந்தம் கொண்டது...

ஆள்காட்டி விரல் கொண்டு அவளது முகவடிவை அளந்தவன், "எப்படிடி இவ்வளவு அழகாயிருக்க...?" என்றவனின் கண்களில் அப்பட்டமாய் மயக்கம் தெரிந்தது...

"உங்களை விடவா...?" என்று கேட்டவளின் விழிகள் தன்னவனின் கம்பீரமான தோற்றத்தை அளவிடத் தவறவில்லை... அவனை விட அவள் எந்த விதத்தில் அழகாய் இருக்கிறாள் என்று அவளுக்குத் தெரியவில்லை...

"என்னை விட நீ தான் அழகு... இவ்வளவு ஏன் இந்த உலகத்திலேயே நீ மட்டும் தான்டி அழகு..." என்று அவளது நெற்றியில் முத்தமிட்டு மையலுடன் கூறியவன்,

"உன்னை மாதிரி ஒரு பொண்ணை எனக்குப் பெத்து கொடுடி... அதுவும் பத்தே மாதங்களில்... என்னைக் கேவலமா பேசியவங்களோட முகத்துக்கு நேரா நான் சொல்லணும், நானும் ஆம்பிளை தான்டா என்று... என் மனைவிக்கு மட்டுமேயான ஆம்பிளைன்னு..." என்று நெகிழ்வும், கர்வமாய்க் கூறியவனை அவள் நெகிழ்ச்சியோடு தன்னுடன் அணைத்து கொண்டாள்...

அவன் கொஞ்சம் கீழிறங்கி அவளது வயிற்றை மறைத்திருந்த புடவையை விலக்கி அவளது வெற்று வயிற்றில் முத்தமிட, அதில் அவனது மீசை ரோமம் தனது வயிற்றில் ஏற்படுத்திய குறுகுறுப்பை உள்ளுக்குள் சிலிர்த்தபடி ரசித்தவளாய் அவள் அவனை நேசத்துடன் பார்த்திருந்தாள்... அவளது கை அவனது சிகையைக் காதலோடு வருடி கொடுத்தது...

இன்னமும் உதிக்காத மகவுக்கு அவன் மரியாதை செய்தான்... வருங்காலத்தில் தன்னால் இதைச் செய்ய முடியாது போகும் என்பதை உணர்ந்திருந்தானோ இந்தச் சித்தார்த்தன், முக்காலத்தையும் அறிந்த முனிவன் போல்...

"அதுக்குன்னு நீங்க இப்படித் தயிர் சாதமா இருக்கக் கூடாது மாமூ..."

மனைவியின் கேலியில் நிமிர்ந்து அவளைப் பார்த்தவன்,

"நான் சைவமா, அசைவமா என்பதைக் காலம், நேரம் வரும் போது நீ அறிந்து கொள்வாய் என் சகியே..." என்றபடி அவளது முன் நெற்றியில் முட்டி மோதி விளையாண்டவனின் கழுத்தில் கரம் கோர்த்து,

"அது தான் எப்போது...?"

"நீ உன் படிப்பை முடிக்கும் போது... அதாவது நமது மூன்றாவது திருமண நாளின் போது... இப்போது

மனதளவில் என் மனைவியாக இருக்கும் நீ அப்போது உடலளவிலும் மிஸஸ். சித்தார்த் ஆகியிருப்பாய்... அதற்கு இன்னும் இரண்டரை மாதங்கள் இருக்கிறது..." என்றவனை வியப்பாய் பார்த்தாள் அவள்...

அவளுக்காக அவன் என்னவெல்லாம் யோசிக்கிறான் என்று....

"அன்று மூன்று வருடத்திற்கு முன் உன்னைத் திருமணச் செய்யவும் இப்படித் தான் தவிப்பாய்க் காத்திருந்தேன் பேபி... இப்பவும் அது போல் தவிப்பாய்க் காத்திருக்கிறேன்... ஆனாலும் உனக்காக இப்படிக் காத்திருப்பதிலும் ஒரு சுகம் இருக்கிறதடி பெண்ணே..." என்று அவன் உருகினான்...

"உங்களுக்கு என் மேல் கோபமில்லையா...?"

ஏனெனில் பிரிந்திருந்த இத்தனை நாட்களில் அவன் ஒரு போதும் அவளை முறைத்து கொண்டோ, கோபம் கொண்டோ பார்த்தது இல்லை... அதனால் தான் அவள் இப்படிக் கேட்டாள்...

"ம்ஹூம்..." என்று தலையாட்டியவனைக் கண்டு,

"அன்னைக்கு மண்டபத்தில் அத்தனை பேர் முன்னாடி நான் கல்யாணம் வேண்டாம்ன்னு சொன்ன போது உங்களுக்கு என் மீது கோபம் வந்தது தானே...?"

அவள் கேட்டதைக் கண்டு அவன் வாய் விட்டுச் சிரித்தான்...

"அப்படின்னு யார் சொன்னது...?"

"நீங்க தான்... கோபமாய்த் தானே இதை என் கழுத்தில் கட்டினீங்க..." என்று தாலியை எடுத்து காண்பித்தவளை கண்டு அவன்,

"ஏன் மஞ்சள் கயிற்றில் தாலி கோர்த்துப் போட்டிருக்க... நாளைக்கே தங்க சங்கிலியில் கோர்த்து போடு..." என்க...

"இந்தக் கயிற்றில் இருக்கும் மஞ்சள் ஒரு கிருமி நாசினி... இது கழுத்தில் இருப்பதால் பெண்களுக்கு நிறைய நன்மைகள் இருக்கு... முக்கியமா மார்பக புற்றுநோய் வருவதைத் தடுக்கும்..."

"உனக்கு நன்மைன்னா எனக்கு ஓகே... நோ ப்ராப்ளம்..." என்றான் மனைவி கூறியதற்கு எதிர் பேச்சு பேசாது தணிந்தவனாய்...

"நான் கோபமா உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு நினைச்சியா...? ம்ஹூம் இல்லையடி என் மக்கு பொண்டாட்டியே... அத்தனை பேர் முன்னிலையில் நீ அப்படிப் பேசியது எனக்கு அவமானம் தான்... அதனால் விளைந்த பேச்சுக்களும் அவமானம் தான்... ஆனால் நான் உன் கழுத்தில் தாலி கட்டியது காதலில் தான் பேபி..." என்றவனை விழி விரிய பார்த்தாள் அவள்...

"ஆமாம்... நீ பாட்டுக்கு என்னை வேண்டாம்ன்னு சொல்லிட்ட... ஒரு பக்கம் சந்தியாவோடு அத்தை, மறுபக்கம் சங்கமித்ராவோடு அம்மா... அன்னைக்கு நான் உன் கழுத்தில் தாலி கட்டிலைன்னா அவங்க ரெண்டு பேரில் யாரையாவது ஒருத்தரை என் தலையில் கட்டி வச்சியிருப்பாங்க... அதுக்குப் பயந்து தான் நான் உன் கழுத்தில் தாலி கட்டியது..." என்றவனை இமைக்காது பார்த்தவளின் விழி மீது மென்மையாய் முத்தமிட்டவன்,

"அதை எல்லாம் விட மூன்று வருசத்துக்கு முன்னாடி ஒரு சின்னப் பெண் என்னிடம் வந்து 'என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறீங்களா...?'ன்னு கேட்டாள்... அன்னைக்கு அவளுக்குக் கொடுத்த வாக்கை காப்பாத்த தான் நான் அவள் கழுத்தில் மூணு முடிச்சு போட்டேன்..." என்று தான் கட்டிய தாலியை வருடியபடி சொன்னவன்,

"காலம் முழுவதும் என் கூட இருந்து பார்த்துக்குவேன்னு சொன்னியே பேபி... நீ ஏன் என் கூட இல்லாம போன...? உன்னைப் பிரிஞ்சு நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா...?"

"எனக்குப் புரிய வச்சிருக்கலாமே மாமூ...?" தவறு செய்து விட்டோமோ என்று அவளுக்குத் தவிப்பாய் இருந்தது...

"என்னை வேண்டாம்ன்னு சொல்லிட்டுப் போனவளிடம் என்னத்தைச் சொல்லி புரிய வைக்கிறது... அப்படியே புரிய வச்சாலும் உனக்குப் புரிந்திருக்குமா...?"

அன்றைய நிலையில் நிச்சயம் அவளுக்குப் புரிந்திருக்காது தான்...

"இப்பவும் நீயா என்னைத் தேடி வரலை... அதே போல் நானும் நானாய் உன்னைத் தேடி வரலை..." என்றவனைக் கண்டு அவள் தலை குனிந்தாள்...

"இதில் தலை குனியும் படி ஒன்றும் இல்லை... இரண்டு பேருமே சரி சமமான பலம் பொருந்தியவர்கள் என்பதைத் தான் இது காட்டுகிறது... உண்மையில் இது பெருமைப்படும் விசயம் தான்..." என்றான் கர்வ குரலில்...

"இந்த மூன்று வருசமா உன்னைக் கண்ணால் பார்ப்பது மட்டுமே எனக்கு இருந்த ஒரே ஆறுதல்..."

"ம்... எனக்கும் அப்படித்தான்..." என்று கூறியவள் அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த நிகழ்வை கூறியவள்,

"எல்லாத்தையும் மறந்துட்டு உங்க கூடவே வந்திரணும்ன்னு எனக்குத் தோணுச்சு..." என்றவளை காதலாகப் பார்த்தான் சித்தார்த்... ஏனெனில் அன்று அவனின் மனநிலையும் அப்படித்தானே இருந்தது...

"அதனால் தான் நீ ஆத்தங்கரையில் இருப்பதைப் பார்த்துக் காரில் போனவன் உனக்காக இறங்கி காத்திருந்தேன்..."

"அச்சச்சோ... நான் குளிக்கும் போதே வந்துட்டீங்களா...?"

"ம்ஹூம்... அதற்கான கொடுப்பினை எனக்குக் கிடைக்கலையே... நீ துணிகளை எடுத்து வாளியில் போடும் போது தான் நான் வந்தேன்..." என்றான் சோகமாய்...

"அதனால் தான் அன்று வார்த்தைகள் ஏறுக்குமாறாக வந்ததா..." என்றவளை கண்டு நமட்டு சிரிப்புடன்,

"அப்படி எல்லாம் இல்லை பேபி... அன்று நான் இந்தத் தாலியை மட்டுமே சொன்னேன்... வேறு எந்த அர்த்தத்திலும் பேசலை..." என்றவனின் விழிகள் சொல்லாமல் சொல்லியது அவனது கள்ளத்தனத்தை...

"உங்களை...?" என்று அவனைத் தள்ளி விட்டவள் எழுந்து அமர்ந்தபடி,

"சரியான வில்லன் நீங்க..."

அதைக் கேட்டு வாய் விட்டு சிரித்தவன் மீண்டும் அவளை மடியில் படுக்கச் செய்தபடி, "நான் வில்லன் இல்லைம்மா... உன் ஹீரோ..." என்க...

"ம்... ஹீரோ தான்..." என்று காதலுடன் சொன்னவள் புரண்டு படுத்து அவனது வயிற்றில் முகம் புதைத்து அவனது பிரத்யேக நறுமணத்தை நுகர்ந்தவள்,

"அதற்காக என் கையைப் பிடித்து இழுத்த ஒரே காரணத்துக்காக நீங்க அவனது கையை வெட்டி இருக்கக் கூடாது..."

"அந்தப் பொறுக்கி உன் கையைப் பிடிச்சு இழுப்பான்... அதை நான் வேடிக்கை பார்த்துட்டு இருக்கணுமாக்கும்..."

அன்று போல் இன்றும் கோபம் கொண்டவனைக் கண்டு அவளுக்குக் கோபம் வரவில்லை... மாறாகக் காதல் வந்தது...

"அதுக்கு அவன் என்னிடம் வம்பிழுத்த போதே வந்து தடுத்து இருக்கலாமே..."

"செய்திருக்கலாம் தான்..." என்று மனைவியின் கூற்றை ஆமோதித்தவன் அன்று அவள் கூறியதை எடுத்து கூறியவன்,

"நீ சொன்னதுக்காகவும், உனக்குத் தைரியம் வரணும்ன்னு தான் நான் விலகி நின்னேன்... நான் நினைத்த மாதிரி நீயும் அவனை அடிச்சிட்ட... அங்கே போய்க்கிட்டு இருந்தவங்களும் உனக்கு உதவிக்கு வருவதைப் பார்த்துட்டு தான் நான் விலகி போனேன்... ஆனால் அந்த நிமிசம் அவனோட தண்டனையை நான் நிச்சயித்து விட்டேன்..."

"அதுக்காக இப்படிச் செய்றது பாவம் இல்லையா...?" என்று காருண்யத்துடன் கேட்டவளை கண்டு அவனது விழிகளிலும் காருண்யம் வழிந்தது...

"அவன் உன்னிடம் மட்டுமல்ல... நம்ம கம்பெனியில் வேலை செய்யும் பல பெண்களிடம் வாலாட்டி இருக்கிறான்... அசிங்கமாகத் தொட்டுப் பேசியிருக்கிறான்... இதை எல்லாம் நான் ஏற்கெனவே கேள்விப்பட்டு இருந்தேன்... அதான் சமயம் சந்தர்ப்பம் சரியாக அமைந்ததும் ஒரே போடாகப் போட்டு விட்டேன்... இனி எந்தப் பெண்ணின் மீதும் கை வைக்க அவன் யோசிப்பான்..." என்றவனின் குரல் ஒருவித தீவிரத்துடன் ஒலித்தது...

பின் தனது முகபாவத்தை மாற்றிக் கொண்டு தனது கன்னத்தைத் தடவியபடி, "அன்னைக்கு அடிச்சியே ஒரு அடி... அப்பா, என்ன ஒரு வேகம்...?"

"ரொம்ப வலிச்சதா...?" என்று கணவனது கன்னத்தைத் தடவியபடி வருத்தத்துடன் கேட்டவளை கண்டு,

"அப்படியே குளுகுளுன்னு இருந்தது..." என்றான் அவளது கையைத் தனது கன்னத்தோடு சேர்த்து வைத்துக் கொண்டு...

அவள் திகைப்பாய் அவனைப் பார்த்தாள்... அவனோ அவளது கையை எடுத்து காதலாய் அதில் முத்தமிட்டு,

"மூன்று வருடங்களுக்குப் பிறகு என்னைத் தீண்டி இருக்கும் என் மனைவியின் கை தொடுகையை நினைத்து நான் ஏன் கோபம் பட வேண்டும்...? எனக்கு ரொம்பச்

சந்தோசமாக இருந்தது..." என்றான் சிறிதும் லஜ்ஜை இல்லாது...

அவனது வார்த்தைகள் கேட்டு நிம்மதியுற்றவளாய் சிரித்தவள், "அப்போ தினமும் அடி கொடுத்து விட வேண்டியது தான்..." என்றாள் கேலியாய்...

"ரொம்பச் சந்தோசம் பேபி... அது கைகளால் இல்லாமல் உனது உதடுகளால் என்றால் அடியேன் மிகவும் மகிழ்வேன்..." என்று கண்சிமிட்டி சிரித்தவனைக் கண்டு அவளது மனமும் மகிழ்ந்து போனது...

சிறிது நேரம் குடும்பத்தைப் பற்றிப் பேசி கொண்டிருந்தனர் இருவரும்... கவனமாய்த் திருமணத்திற்கு முன் நிகழ்ந்த நிகழ்வுகளைப் பற்றிப் பேசுவதை இருவரும் அழகாய் தவிர்த்து விட்டனர்... இருக்கும் இணக்க நிலையைக் கெடுத்துக் கொள்ள இருவருமே விரும்பவில்லை...

"இப்போ ஸ்வேதா எங்கே இருக்கிறாள்...?"

"மும்பையில்..."

சிறிது நேரம் மௌனமாய் இருந்தவள், "அண்ணா பண்ணியது தப்பு தான்... ஏதோ அவசரப்பட்டு அப்படிச் செய்துட்டாங்க..." என்றாள் சகோதரனுக்கு ஆதரவாக...

"ஸ்வேதா இவனைக் காதலித்து இருந்தால் இத்தனை பிரச்சினை இல்லை... ஆனால் தன்னைக் காதலிக்காத ஒரு பெண்ணின் கழுத்தில் தாலி கட்டுவது தவறு இல்லையா... கேட்டால், உன் கழுத்தில் நான் தாலி கட்டியதை சொல்கிறான்... அவனும், நானும் ஒண்ணா... இல்லை நீயும், ஸ்வேதாவும் ஒண்ணா... நாம் ரெண்டு பேரும் காதலிக்கிறோம்ன்னு அந்த முட்டாளுக்குத் தெரியவில்லை... அதனால் தான் இந்த விசயத்தைப் பயன்படுத்தி ஸ்வேதா கழுத்தில் தாலி கட்டி விட்டான் மடையன்... இவன் மனதில் மட்டும் காதல் இருந்தால் போதுமா... அவள் மனதில் என்ன இருக்கிறதுன்னு யோசிக்க வேண்டாமா...?"

"என்னது அண்ணா ஸ்வேதாவை காதலிக்கிறாங்களா...?" என்று திகைப்பாய் கேட்டவளை கண்டு அவன் ஆமென்பது போல் தலையசைத்தவன்,

"இப்போ சரவணன் மும்பையில் அவளுக்குக் கீழே தான் வேலை பார்க்கிறான்... ஸ்வேதா மனசிலும் ஏதோ இருக்கிறது... அதனால் தான் அவனைப் பற்றி என் கிட்ட கூடச் சொல்லாம இருக்கிறாள்... பார்க்கலாம் அவர்கள் இருவரும் என்ன முடிவுக்கு வருகிறார்கள் என்று..."

"எல்லாம் தெரிந்தும் எப்படி நீங்க அண்ணாவை விட்டு வச்சு இருக்கீங்க...?"

"எனக்கு என்னமோ நீலேஷ் ஸ்வேதா வாழ்க்கையில் வர முயல்வது போல் தோன்றுகிறது... நீலேஷ் என்னைப் பொருத்தவரை ஓகே தான்... ஆனால்...?"

கணவனைக் கண்கள் சுருங்க யோசனையாய் பார்த்தாள் அவள்...

"அவன் உனக்கு வேண்டிய மரியாதையைக் கொடுப்பது இல்லையே பேபி... என் மனைவிக்கு மரியாதை கொடுப்பவன் தான் என் தங்கை கணவனாக வர வேண்டும்... இதில் ஸ்வர்ணா கணவனைக் குறை சொல்ல முடியாது... அவர் அப்படி எல்லாம் பார்க்க மாட்டார்... ஆனால் நீலேஷ் எல்லாம் பார்ப்பான்..."

கணவன் கவனிக்கவில்லை என்று தான் நினைத்ததை அவன் கவனித்து இருப்பதைக் கண்டு அவளது மனம் நெகிழ்ந்தது... ஒன்றும் பேசாது அவனது மடியில் முகம் புதைத்து கொண்டாள்...

"அவன் எனக்குத் தெரியாதுன்னு நினைச்சு ஸ்வேதா கூடப் பழகியிருக்கிறான்... நான் திருநெல்வேலியில் இருந்தால் இவனைப் பார்க்க மாட்டேன்னு இவனுக்கு ஒரு நினைப்பு... அங்கு இருந்தபடி வெளிநாடுகளில் தொழில் நடத்தும் எனக்கு இவனைக் கண்காணிக்க முடியாதா...?"

"ஒருவேளை ஸ்வேதாவுக்குப் பிடித்திருந்தால்...?"

"நீலேஷ் தொழில் நடத்துவதற்கு மட்டுமே சரி வருவான்... அதை மீறி உறவினனாக வருவதற்குச் சரிப்பட்டு வர மாட்டான்..." என்றவன்,

"அதில் எல்லாம் என் தங்கை கெட்டி... அதாவது அவளது அண்ணனை போல்... எனக்கு உன்னைப் பிடித்திருப்பது போல் அவளுக்குச் சரவணனை தான் பிடித்திருக்கிறது என்று நினைக்கிறேன்... அதையும் மீறி அவளுக்கு அவன் மீது கோபம் இருக்கிறது... அவர்களாகப் பேசி சரியாகட்டும்..."

"ம்... அது தான் சரின்னு எனக்கும் தோணுகிறது..."

இருவரும் பேசி கொண்டிருந்ததில் நேரம் ஓடி சென்றுவிட்டது... அதிகாலை விடிந்ததில் திறந்திருந்த ஜன்னலின் வழியே கேட்ட குருவியின் ஓசையில் பிரகதீஸ்வரி சித்தார்த்தின் மடியில் இருந்து அடித்துப் பிடித்துக் கொண்டு எழுந்தாள்...

"விடிஞ்சிருச்சு..." என்று கூறியவளின் முகம் வெட்கத்தில் சிவந்து போனது...

"விடியட்டும்... விடிய வேண்டும் என்று தானே நாம் பேசி கொண்டு இருக்கிறோம்..." விடியலையும், தங்களது வாழ்க்கையையும் இணைத்து வைத்து பேசியவன்,

"சரி குளித்து விட்டுக் கிளம்பு... மித்ரா வீடு வரை போயிட்டு வரலாம்..."

கணவன் கூறியதற்குச் சரியென்று தலையசைத்தவள் காலையில் தான் ஊருக்கு செல்ல வேண்டும் என்பதை எப்படிச் சொல்வது என்று தெரியாது விழித்தாள்... சொன்னால் கோபம் கொள்வானோ என்று அவளுக்குப் பயமாக இருந்தது... அவளின் உணர்வினை படித்தவனாய் அவன்,

"மித்ரா வீட்டுக்கு போயிட்டு வந்து நாம ரெண்டு பேரும் சேர்ந்து தான் ஊருக்கு போறோம்... சேர்ந்து ஒரே வீட்டில்

வாழ போகிறோம்... இதில் எந்தவித மாற்றமும் இல்லை..." என்றான் அழுத்தம் திருத்தமாக...

அதற்கு மேல் அவள் பேசுவதற்கு ஒன்றுமில்லை... அமைதியாகப் படுக்கை அறைக்குள் நகர்ந்தவள் அணிவதற்குத் தேவையான உடையை எடுப்பதற்காக அங்கிருந்த அலமாரியை திறந்தாள்... எதை எடுப்பது, எதை விடுவது என்று தெரியாத அளவிற்கு மலை போல் குவிந்திருந்த உடைகளைக் கண்டு அவளுக்கு மலைப்பாக இருந்தது...

"பிடிச்சியிருக்கா...?"

சித்தார்த் பின்னால் இருந்து மனைவியை அணைத்து அவளது தோள் வளைவில் நாடியை பதித்தபடி கேட்டான்... அவனது செய்கையில் உள்ளத்தில் சிலிர்ப்பு ஓட பிரகதீஸ்வரி அவனது கன்னத்தின் மீது கை வைத்து வாஞ்சையுடன் பார்த்தவள் பின் குறும்பு தலை தூக்க,

"ரொம்பச் சீக்கிரம் கேட்டுட்டீங்க மாமூ..."

நேற்று முன் தினம் அவள் வீட்டிற்கு வந்தவுடன் அவன் அலுவலகத்திற்குச் சென்று விட்டதைச் சுட்டி காட்டியவளை கண்டு புன்னகைத்தவன்,

"உண்மையில் முந்தா நாள் எனக்கு வேலை இருந்தது பேபி... ரொம்ப நாள் கழித்து இங்கே வந்ததால் வேலை அதிகம்... அம்மா திடீர்ன்னு உன்னை வீட்டுக்கு அழைச்சிக்கிட்டு வரணும்ன்னு சொன்னாங்களா... உன்னை நினைத்து எனக்கு ரொம்பப் பயமா இருந்துச்சு... அதனால் தான் உன்னிடம் பேச கூடப் பயந்து ஓடி விட்டேன்..."

"அய்ய... ரொம்பப் பயந்தவர் தான் நீங்க...?" என்று கிண்டல் அடித்தவளை அணைத்து கொண்டவன்,

"உன்னிடம் எனக்குக் கொஞ்சம் பயம் தான் பேபி..." என்றான் எதையோ நினைத்து...

"ம்... நம்பிட்டேன்..." என்றவளை கண்டு,

"நம்பித்தான் ஆகணும் பேபி..." என்றவன் அலமாரியில் இருந்த இளஞ்சிவப்பு வண்ண மென்பட்டு புடவையை எடுத்து அவளிடம் கொடுத்தான்...

"இதைக் கட்டினால் நீ ரொம்ப அழகாயிருப்ப..." என்று கூறியவனின் விழிகளில் அவன் நித்தமும் காணும் கனவு விரிந்தது...

"நீ குளிச்சு தயாராகு..." என்றவன் அறையை விட்டு வெளியில் சென்று விட்டான்...

குளித்து முடித்து வந்து அந்தப் புடவையை அணிந்து மிதமாய் ஒப்பனை பண்ணியவளின் தோற்றம் முற்றிலும் மாறிப் போனது...

கொடி போன்ற அவளது இடையைத் தழுவியிருந்த வெள்ளி சரிகையிட்ட அந்தப் புடவையும், சங்கு கழுத்தில் அணிந்திருந்த வைர நகைகளும் சேர்ந்து அவள் அத்தனை அழகாய் இருந்தாள்... அந்நேரம் கதவு தட்டும் ஒலியில் திரும்பி பார்த்தவள் விரைந்து வந்து கதவை திறந்தாள்... அவளது கணவன் தான் நின்றிருந்தான்...

"நீங்க தானா...?" என்று நிம்மதியுடன் கூறியவள்,

"நீங்க எதுக்குக் கதவை தட்டுறீங்க...?"

"அப்போ பெர்மிசன் தேவையில்லைன்னு சொல்றியா..." என்று உல்லாச குரலில் கூறியவனின் விழிகள் மனையாளின் அழகினை கண்டு அகல விரிந்தது...

"நான் நித்தமும் கனவில் காணும் முகம்... இதோ இன்று நனவாய் என் முன்..." என்று காதல் பொங்க கூறியவன் அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டான்...

அதில் அவளது மனம் காதலாய் அமைதியுற்றது...

சித்தார்த்தும் குளித்து முடித்ததும் இருவரும் சேர்ந்து கீழே இறங்கி வந்தனர்... மருமகளின் மலர்ந்த முகமும், மகனின்

முகத்தில் இருந்த சந்தோசமும் பிரபாவதியை நிம்மதியுற செய்தது...

"வாம்மா... வந்து விளக்கேத்து..." அவர் கூறவும் பிரகதீஸ்வரி பூஜையறை நோக்கி நடந்தாள்...

பூஜையறையில் குனிந்து விளக்கேற்றிய மனைவியின் முகத்தை இமைக்காது பார்த்தான் சித்தார்த்... தீபத்தின் சுடரை விட அவளது நாசியில் இருந்த சிவப்புக்கல் மூக்குத்தி அதிகச் சுடரொளி வீசியது... அதைக் காண காண மனைவி மீதான அவனது தாபம் அதிகரித்தது...

விளக்கேற்றி விட்டு நிமிர்ந்த பிரகதீஸ்வரி கணவனின் பார்வையில் முகம் சிவந்தவளாய் தலை குனிந்தாள்...

"மாமா வீட்டுக்கு நீங்க ரெண்டு பேரும் முன்னாடி போங்க... நாங்க பின்னாடி வருகிறோம்..." என்று பிரபாவதி கூற...

"சரிம்மா..." என்ற சித்தார்த்,

"அம்மா... இன்னைக்கு மதியம் நாங்க ரெண்டு பேரும் ஊருக்கு கிளம்பறோம்..." என்றான் அறிவிப்பாய்...

"சித்து..." மனதில் திகிலுடன் பார்த்தார் பிரபாவதி...

அன்னையின் பார்வையினை உணர்ந்தவனாய் மனைவியின் தோள் மீது கை போட்டு அவளை அணைத்து கொண்டவன்,

"இனி நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து தான் இருக்கப் போகிறோம்..." என்றான் மகிழ்ச்சியாக...

அதைக் கேட்டுப் பெரியவர்கள் இருவருக்கும் சந்தோசமாக இருந்தது... சிறியவர்கள் சென்றதும் பிரபாவதி கணவனிடம்,

"இனி ஸ்வேதா வாழ்க்கை மட்டும் தான் இருக்கு..."

அதைக் கேட்டு மார்த்தாண்டம் அமைதியாகி விட்டார்... முன்பு சரவணன் மீதிருந்த கோபம் கூட இப்போது

அவருக்கு இல்லாது போனது... எப்படியோ மகள் வாழ்ந்தால் போதும் என்று எண்ணமே எஞ்சி இருந்தது... ஆனால் மகளோ எதற்கும் பிடி கொடுக்காது மௌனமாக இருக்கிறாள்...

"அதுவும் சரியாகும்..." என்று மனைவிக்கு ஆறுதல் அளித்து விட்டு மார்த்தாண்டம் உள்ளே சென்று விட்டார்...

****

சங்கமித்ராவின் வீட்டிற்குச் சென்ற போது அவளது புன்னகை முகமும், அவளின் முகம் பார்த்து குறிப்பறிந்து நடக்கும் அர்ஜூனும் இவர்கள் இருவரையும் புன்னகையுடன் வரவேற்றனர்... சிரிப்பும், கும்மாளமுமாய் நேரம் கடந்து சென்றது... அர்ஜூனுக்குச் சித்தார்த்தின் இந்தப் புதிய முகம் கண்டு பெருத்த ஆச்சிரியமாக இருந்தது...

"மித்தும்மா... உன் அத்தை மகனிடம் ஏதோ ஒரு மாற்றம் தெரிகிறதே...?"

"அந்த மாற்றத்திற்குக் காரணம் பிரகதி தான்..." என்றவளின் கண்கள் பிரகதீஸ்வரியை கனிவுடன் பார்த்தது...

"கடைசியில் அவனும் ஒரு பெண்ணிடம் வீழ்ந்து விட்டானா...? அவன் சரியான திமிர் பிடிச்சவன் இல்லையா...?" என்ற கணவனைக் கண்டு விழிகள் சுருங்கினாள் சங்கமித்ரா...

"அர்ஜூன்... உங்களுக்குச் சித்துவை பிடிக்காதோ...?" என்று சந்தேகமாய்க் கேட்டவளை கண்டு,

"லைட்டா..." என்று ஆமோதித்தவன் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்...

"ஏன்...?"

"உன்னை அவனுக்குப் பேசியிருந்ததால்..." கொஞ்சம் பொறாமையுடன் ஒலித்த அர்ஜூனின் குரலில் சங்கமித்ரா

அவனை வியப்பாய் பார்த்தாள்...

சித்தார்த்திற்கு எந்த விதத்திலும் அர்ஜூன் குறைந்தவன் கிடையாது... பின் ஏன் இந்தப் பொறாமை...? அதை அவள் அவனிடத்தில் கேட்கவும் செய்தாள்...

"அவனை மாதிரியான ஒரு பிசினஸ் மேக்னெட்டை, ஹண்ட்சம் மேனை எங்கேயும் பார்க்க முடியாது... அவனா, நானா என்று வரும் போது உன் சாய்ஸ் யாராக இருக்கும்ன்னு எனக்குக் கவலையாக இருக்கும்... இப்போ தான் எனக்கு நிம்மதி..." என்று கூறியவன் இயல்பு போல் அவளது தோளில் கை போட்டு அணைத்துக் கொண்டான்...

"காதலில் பொறாமை மிகவும் அவசியம் மித்தும்மா..." என்றவனைக் கொண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது...

மதியம் உணவு முடிந்து சித்தார்த், பிரகதீஸ்வரி புது மணத் தம்பதியினரிடம் வீட்டிற்கு வருமாறு அழைப்பு விடுத்து விட்டு, எல்லோரிடமும் விடை பெற்று ஊருக்கு கிளம்பினர்... எல்லோரும் சந்தோசமாய் அவர்களை வழியனுப்பி வைத்தனர்...

ஊருக்கு விமானத்தில் செல்வதற்கு வசதி, வாய்ப்பு இருந்தும் சித்தார்த் கார் பயணத்தையே தேர்வு செய்தான்... மனைவியுடன் இருக்கும் தனிமையான நேரத்தை அதிகரிக்கவே அவன் அப்படிச் செய்தது... ஓட்டுநரை தவிர்த்து விட்டு அவனே காரை எடுத்தான்... அவனும், அவளுமான தனிமையான கார் பயணம்... அவனின் மனதில் சந்தோசம் மட்டுமே ஆட்சி செய்தது... அந்தச் சந்தோசத்தில் அவனது கார் அந்தப் புறவழி சாலையில் காற்றாய்ப் பறந்தது...

"மித்ராக்கா ஏன் இவ்வளவு நாளா கல்யாணம் வேண்டாம்ன்னு சொன்னாங்க...?" என்று கேட்ட மனைவியைத் திரும்பி பார்த்த சித்தார்த்,

"காதல் தோல்வின்னு நினைக்கிறேன்..."

"அவங்களுக்கா...?" அவளுக்குப் பெருத்த ஆச்சிரியமாக இருந்தது...

"ம்... ம்... அப்படித்தான்னு நினைக்கிறேன்... ஆனால் உறுதியா தெரியாது..."

"எது எப்படியோ அர்ஜூன் அத்தான் அவங்களை நல்லா பார்த்துப்பார்... அவர் ரொம்ப நல்லவர் இல்லையா...?"

"அவனும் உனக்கு அத்தானா...?" என்று கோபமாய் முறைத்து பார்த்த கணவனின் மனம் உணர்ந்தவளாய் அவனது கை வளைவில் கை கோர்த்து அவனது தோளில் சாய்ந்தவள்,

"அவங்க எல்லாம் எனக்கு அத்தான் மட்டும் தான்... ஆனால் நீங்க மட்டும் தான் என் மனசுக்கு நெருக்கமான என் மாமூ... என்னோட ஹீரோ..." என்று கூறியவளின் வார்த்தைகளில், விழிகளில் அத்தனை நேசம் இருந்தது...

அதை அவனும் உணர்ந்தவனாய் அவளை உச்சி முகர்ந்து உச்சந்தலையில் இதழ் பதித்தவன், "நான் வில்லனா இருந்தாலும் உனக்கு ஹீரோ தான்டி..."

அதில் அவனை நிமிர்ந்து பார்த்தவள், "எனக்காக நீங்க மாறுவீங்க... எனக்கு நம்பிக்கை இருக்கு..." என்றவளை கண்டு மறுப்பாய் தலையசைத்தவன்,

"உன்னோட காதலுக்கு முன் நான் மண்டியிடுவேன்... ஆனால் எல்லாத்துக்கும் அப்படியே என்று எதிர்பார்க்காதே..."

விழிகளில் காதலும், உதடுகளில் மறுப்புமாய் முரண்பாடாய் கூறியவனைக் கண்டு முன்பு போல் அவளுக்குக் கோபம் வரவில்லை... மாறாகக் காதல் வந்தது... எக்கி கணவனது கன்னத்தில் முத்தமிட்டவளை கண்டு அவனது கண்களில் கள்வெறி தோன்றியது...

"ஹேய்..." என்று பரவசத்துடன் கூறியவன் காரை ஓரமாக நிறுத்தினான்...

"கன்னத்தில் முத்தமிட்டால் உள்ளந்தான்
கள்வெறி கொள்ளுதடி...
உன்னைத் தழுவிடிலோ கண்ணம்மா
உன்மத்தமாகுதடீ..."

என்று பாடியபடி அவள் புறம் திரும்பியவனைக் கண்டு அவள் களுக்கென்று சிரித்தாள்... அவன் புரியாது அவளைப் பார்த்தான்...

"இது நான் பாட வேண்டிய பாட்டு..." என்றாள் இன்னமும் சிரிப்பு மறையாது...

"ஆனால் என்ன செய்யப் பேபி... நீ என்னை முத்தமிட்டாலும், நான் உன்னை முத்தமிட்டாலும் எனக்குத் தான் கள்வெறி தோன்றுகிறது..." என்றவனின் விழிகள் ரசனையுடன் அவளது இதழ்களை மொய்த்தது...

"இது ரோடுங்கிற நினைப்பு இருக்கா...?"

கணவனது மையல் பார்வையில் மனம் மயங்கிய போதும் அதை வெளியில் காட்டாது அவள் மிடுக்காகக் கேட்டு வைத்தாள்...

"அப்படியா...?" என்று கேட்டபடி சித்தார்த் மனைவியின் முகம் நோக்கி குனிய அவளோ அவனது அருகாமையில் கண்களை மூடி கிறங்கி இருக்கையில் சாய்ந்தாள்...

"இப்போ இது நடு ரோடு இல்லையா பேபி...?"

கணவனது கேலி குரலில் கண் விழித்தவள் அவனது விழிகளில் தெரிந்த குறும்பில் நாணத்துடன் தலை குனிந்தாள்...

"நீ சொன்னதுக்காகத் தள்ளி நிற்கிறேன்..." என்று அவளது கன்னத்தில் தட்டியபடி அவன் காரை கிளப்பினான்...

"இல்லை என்றாலும்...?" அவள் போலியாக நொடிக்க...

"ஹா... ஹா..." என்று வாய் விட்டு சிரித்தவன்,

"ஒன்றும் பண்ண முடியாது... இரண்டரை மாதங்கள் பொறுத்து தான் ஆக வேண்டும்... அதற்குப் பிறகு இப்படி ஒரு கேள்வி கேட்டு பார்... அப்புறம் தெரியும் சங்கதி..." என்று கண்சிமிட்டி சிரித்தவனைக் கண்டு அவளது மனம் இன்பத்தில் ஆடியது...

இருவரும் பேசி கொண்டு வந்ததில் நேரம் சென்றது தெரியவில்லை... வழியில் இரவு உணவை முடித்துக் கொண்டு மீண்டும் காரில் ஏறியதும் பிரகதீஸ்வரி அசதியில் கண்ணயர்ந்து விட, அவளது தலையைத் தன் தோள் மீது சாய்த்துக் கொண்டு வண்டியை ஓட்டினான் சித்தார்த்... அந்தக் கணம் மனைவியின் அருகாமையில் அவனுக்கு உலகமே வண்ணமயமானது போலிருந்தது...

திடுமெனக் கார் நின்றதும் பிரகதீஸ்வரி கண் விழித்துப் பார்த்தவள் புரியாது கணவனைப் பார்க்க, அவன் அவளது கன்னத்தை மிருதுவாக வருடியபடி,

"நம்ம வீடு வந்திருச்சு..."

அவனின் வார்த்தையில் திகைத்து போனவளாய் வெளிப்புறம் பார்த்தவள் அசைவற்று போனாள்... ஏனெனில் அது அவளது தந்தையின் வீடு... அவளது சொந்த வீடு... அவள் இளவரசியாய் பிறந்து, வளர்ந்த வீடு... அதே போல் யாருமற்ற அநாதையாய் எல்லாம் துறந்து வெளியேறிய வீடு... அவளது சந்தோசத்தையும், துக்கத்தையும் மௌனமாய்க் கிரகித்துக் கொண்டு அது வெள்ளை யானை போல் நிலைக்குலையாது கம்பீரமாக நின்று கொண்டிருந்தது...

விழிகள் கலங்க காரில் இருந்து இறங்கியவளை ஆறுதலாய் தோளோடு அணைத்துக் கொண்டான் அவளது கணவன்...

"சாரி பேபி..." அவளது காதில் அவனது கலங்கிய குரல் முணுமுணுப்பாய் ஒலித்தது...

அவனது கலக்கத்தில் தனது கலக்கத்தைத் துடைத்து எறிந்தவள் அவனைப் பார்த்து ஆறுதலாய் புன்னகைத்து,

"இதற்கும் ஏதாவது காரணம் இருக்கும்ன்னு நம்புகிறேன்..." என்றவள்,

"என்னை விட உங்களை நான் அதிகம் நம்புகிறேன்..."

மனைவியின் வார்த்தையில் சித்தார்த்தின் கலக்கம் மறைந்து மீண்டும் அவனிடத்தில் பழைய கம்பீரம் திரும்பியது... மனைவியவளின் காதலில் கர்வமான சித்தார்த் உயிர்த்தெழுந்தான்...

இருவரும் வீட்டின் வாயிலுக்கு வந்த போது அங்குப் பானுமதி அம்மாவும், சோலையம்மாளும் அவர்களுக்காகக் காத்திருந்தனர்...

"அத்தை..."

அத்தையைக் கண்டதும் பிரகதீஸ்வரி ஓடி வந்து அவரை அணைத்து கொண்டாள்... கணவனுடன் தான் சேர்ந்த சந்தோசத்தினை அதுவரை அடக்கி வைத்திருந்தவள் தனது சொந்தத்தினைக் கண்டதும் அழுகையில் அதை வெளிப்படுத்தினாள்... அது போன்றதொரு நிலை தான் பானுமதிக்கும்... அவள் கணவனுடன் சேர்ந்தது அவருக்கு அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது...

"இப்பத்தான் சந்தோசமா இருக்கு ரதிம்மா..." என்று கண்கள் கலங்க கூறியபடி அவரும் அவளை அணைத்துக் கொண்டார்...

"கண்ணு இனி சந்தோசமா இருக்கும்..." என்று சோலையம்மாள் கலங்கிய தனது விழிகளைத் துடைத்துக் கொண்டு கூறினார்...

"சோலை..." நெகிழ்ச்சியுடன் அவரைப் பார்த்தாள் பிரகதீஸ்வரி...

அந்த நேரத்திலும் சம்பிராதயப்படி வீட்டு வேலை செய்யும் மற்றொரு சுமங்கலி பெண்ணை ஆரத்தி சுற்ற செய்து

இருவரும் ஒன்றாக வீட்டினுள் நுழைந்தனர்...

"அப்போ நாங்க கிளம்பறோம் தம்பி..." என்று கூறினார் பானுமதி...

"நேரமாகிருச்சே... இங்கேயே இருங்க..." என்று சித்தார்த் கூற, அதையே பிரகதீஸ்வரியும் வழி மொழிந்தாள்...

"இல்லை தம்பி... அது சரிப்பட்டு வராது... நாங்க கிளம்பறோம்..." என்று கூறியவர் கிளம்ப ஆயத்தமானார்...

"தம்பி... இனியாவது பிரகதி கண்ணைச் சந்தோசமா வச்சுக்கோங்க... உங்களைப் பிரிஞ்சு ரொம்பக் கஷ்டப்பட்டுப் போச்சு..." என்ற சோலையம்மாளிடம்,

"நிச்சயம் கண் கலங்க விட மாட்டேன்..." என்று உறுதியாகக் கூறியவன் மனைவியைக் குறும்பாகப் பார்த்துக் கொண்டு,

"உங்க கண்ணுவிடம் சொல்லுங்க... என்னைக் கண் கலங்காம பார்த்துக்கச் சொல்லி..."

அதைக் கேட்டு பிரகதீஸ்வரி போலியாகக் கணவனை முறைக்க அதில் அந்த மாயக் கண்ணன் கை கட்டி, வாய் பொத்தி பயந்தவன் போல் நடித்தான்... இந்தக் காட்சியைக் கண்டு பெரியவர்கள் மனதில் நிம்மதி எழுந்தது...

கிளம்பும் போது பானுமதி அவளிடம், "உன்னோட முடிவு கேட்டு ரொம்பச் சந்தோசமா இருக்கு ரதிம்மா... இனியாவது நீ உன் கணவனோடு சந்தோசமா வாழணும்... இடையில் நடந்த நிகழ்வுகளை நினைச்சு மனசை போட்டு வருத்திக்காதே..." என்று அறிவுரை கூறிவிட்டு சென்றார் அவர்...

அங்கிருந்த கார் ஓட்டுநரிடம் அவர்களை வீட்டில் விட்டு விட்டு வரும்படி பணித்த சித்தார்த் மனைவி புறம் திரும்பினான்...

"நீங்க தான் அத்தைக்குத் தகவல் சொல்லி அனுப்பியதா...?"

"ஆமாம்... உன்னை இத்தனை காலம் பத்திரமாகப் பார்த்துக்கிட்டாங்களே... அந்த நன்றி கடனுக்காக..."

"நான் மறந்திட்டேனே..." என்று தவிப்புடன் கைகளைப் பிசைந்தவளின் கைகளை ஆதுரத்துடன் பிரித்தவன்,

"நீ இப்படித் தான் இருக்க வேண்டும்... என்னை மட்டும் நினைத்துக் கொண்டு... நான் உன்னைப் பார்த்து கொள்வேன்..." என்றவனின் வார்த்தையில் அத்தனை நிம்மதி அடைந்தாள் அவள்...

அன்றிரவு அவளது அறையில் அவள் உறங்க முற்பட்ட போது சரியாக அந்த நேரம் பார்த்து சித்தார்த் அங்கு வந்து சேர்ந்தான்... அவள் விழி விரித்துக் கணவனைப் பார்த்தாள்...

"நான் உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன்... பயப்பட வேண்டாம்..."

"அய்ய... ரொம்பத்தான்..." என்றவளின் விழிகளில் விசமம் வழிந்தது...

"என்னடி... ரொம்பத்தான்னு இழுக்கிற..." என்று கேட்டபடி மனைவியை உரசி கொண்டு அமர்ந்தான் சித்தார்த்...

கணவனின் விழியோடு தனது விழிகளைக் கலந்தவள், "உங்களை நம்பாமல் தான் அன்று அர்த்த ராத்திரியில் மொட்டை மாடிக்கு வந்தேனாக்கும்..." என்றவளின் விழிகளில் அவன் மீதான நம்பிக்கை வழிந்தது...

"வரும்காலங்களிலும் இந்த நம்பிக்கை இருந்தால் சரி..." என்றவன் அவளது நெற்றியில் முத்தமிட்டு இரவு வணக்கம் கூறியவன்,

"கார் ஓட்டிக்கிட்டு வந்தது ரொம்ப டயர்டா இருக்கு பேபி... தூங்கலாமா...?"

கணவனின் அணைப்பில் படுத்தவளுக்கு அடுத்த நொடி சுகமாய் உறக்கம் தழுவி கொண்டது... சொந்த இடம் வந்து சேர்ந்த நிம்மதி அவளுள்... தூக்கம் வருகிறது என்று

கூறியவன் மனைவியின் முகத்தை வெகுநேரம் பார்த்துக் கொண்டிருந்தான்...

காலம் என்ன வைத்துக் காத்திருக்கிறது என்று அவனுக்குத் தெரியவில்லை... அவர்களது காதலுக்கு அவரவர் தனிப்பட்ட கொள்கைகளே இரும்பு திரையாக இடையில் மறித்து நிற்கிறது... இதையும் மீறி தானும், மனைவியும் ஒன்றாகச் சந்தோசமாகச் சேர்ந்து வாழ்வோமா என்று அவனது மனதிற்குள் தவிப்பாக இருந்தது...

எதற்கும் கலங்காத, தவிக்காத சித்தார்த் காதலுக்காகக் கலங்கி தவித்தான்...!

****

சித்தர்த்தின் கலக்கத்திற்கு வலு சேர்ப்பது போல் மறுநாள் பிரகதீஸ்வரி கொடுத்த புகாரின் பேரில் அவன் கிரானைட் எடுக்கும் கல் குவாரி மூடப்பட்டது... அது மட்டுமல்ல ஆற்று நீரில் நீர் எடுப்பது, மணல் அள்ளுவது என இயற்கையை நாசம் விளைவிக்கும் அவனது அத்தனை செயல்களும் ஒரே நேரத்தில் முடக்கப்பட்டது...

யுத்தகளத்தில் எதிரெதிர் அணியில் காதல் கொண்ட இரு நெஞ்சங்கள் அஞ்சாது நின்றது தங்களது காதல் கொடுத்த தன்னம்பிக்கையில்...!!!

"என் கனாவில் நீ, என் நினைவில் நீ
என் உணர்வில் நீ, என் உயிரில் நீ
என் உதயமும் நீ, என் அஸ்தமனமும் நீ
என் உயிர்ப்பும் நீ, என் இறப்பும் நீ
என்னுள் எல்லாமுமாய் நீ,
நான் நீயாய் மாறியது உன்னுள்
நான் அமிழ்ந்த நேரம்...
என்னுள் உன்னை ஊற்றிக் கொள்ள
துடித்த நேரம்...
உன்னைத் தேடி தவித்த என் ஆன்மாவின்
உயிர் துடிப்பை கண்ட கணம்...

என் காதலை நான் உணர்ந்த பொழுது...
கையில் நனவாய் நீ, காதலோடு நீ...
போதும் இந்த நிம்மதி...
இறையடி சேர்ந்த பேரமைதி...!!!"

நனவாகும்...!!!

அதிகாலையில் தலைக்குக் குளித்து வாசலில் கோலம் போட்டுக் கொண்டிருந்த பிரகதீஸ்வரியை தேடி சித்தார்த் கையில் குடையுடன் வந்தான்... ஜனவரி மாத இறுதியாக இருந்த போதும் பனி கொஞ்சமும் குறையவில்லை... சற்று அளவுக்கு அதிகமாகவே காணப்பட்டது...

நேரே அவளின் அருகே வந்தவன் அவளின் தலை மீது உயர்த்திக் குடையைப் பிடிக்க, அவனது வருகையில் தலை நிமிர்ந்தவள் அவனின் செயலில் குறும்புத்தனம் தலை தூக்க,

"நீங்க செய்கிற இந்த வேலை யாரோ அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பது போலிருக்கிறது... முதலில் குடையைக் கீழே இறக்குங்க..."

"பனியாய் இருக்கே..." என்று இழுத்தவனைக் கண்டு வாய் விட்டு சிரித்தவள்,

"மாமோய்... பனிக்கு காதை தான் மூடணும்... இப்படிக் குடை பிடிக்கக் கூடாது..." என்றவளை கண்டு அசடு வழிந்தபடி குடையை மடக்கி சுவற்றில் சாய்த்து வைத்து விட்டு அவள் அருகில் வந்து தனது இரு கைகள் கொண்டு அவளது காதுகளைப் பொத்தினான்...

"கிட்டே வர்றதுக்கு ஏதுடா சாக்குன்னு காத்துக்கிட்டு இருப்பீங்க போலிருக்கு...?"

"இல்லையா பின்னே...?" என்று அவளின் பின்னால் குனிந்தபடி அவளிடம் இருந்து வரும் பிரத்யேக நறுமணத்தையும், கூந்தலில் சொருகியிருந்த அடுக்கு நந்தியாவட்டை மலரின் வாசத்தையும் நுகர்ந்தபடி கூறியவனின் மனம் மனைவியிடத்தில் அப்படியே சொக்கி போனது...

"ச்சு... தள்ளி போங்க..." என்று சிணுங்கியபடி முழங்கையால் அவனது விலாவில் செல்லமாகக்

குத்தியவளை கண்டு சிரித்தபடி விலகியவன் அங்கிருந்த கல்லில் அமர்ந்து கொண்டு அவள் கோலம் போடும் அழகினை ரசிக்க ஆரம்பித்தான்...

அழகான பூக்கோலத்தைக் கை தேர்ந்த ஓவியன் போல் கோல பொடி கொண்டு வேகமாய் வரைந்த தன்னவளின் திறமையை மனதினுள் மெச்சியபடி அவன் அமர்ந்திருந்தான்...

இறுதியில் அவள் கோலத்தின் நடுவில் பசுஞ்சாணியில் பிள்ளையார் வைத்து பூ ஒன்றை சொருகும் போது இருவருள்ளும் அன்றைய நாளின் நினைவு படையெடுத்தது... அன்று அவளைத் தான் அடித்ததை எண்ணி இன்று அவன் வேதனை அடைந்தான்...

"அன்னைக்கு நான் வேணும்ன்னே உன்னை அடிக்கலை பேபி... அது வந்து..."

தனது மனதில் இருக்கும் உணர்வுகளை அவனால் வெளிப்படையாகச் சொல்ல முடியவில்லை... அதைச் சொன்னால் அவளின் மனம் வருத்தம் அடையும்... அதனால் அதைப் பாதியில் நிறுத்தி விட்டான்...

"சரி பரவாயில்லை விடுங்க... அன்னைக்கு நானும் அப்படிச் சிரிச்சியிருக்கக் கூடாது... என் மேலும் தப்பு தான்..." என்றவள் திடுமென நமட்டு சிரிப்புடன்,

"அன்னைக்கு நீங்க சாணியில் மிதிச்சுட்டு டான்ஸ் ஆடியது ரொம்பச் சூப்பரா இருந்தது..." என்க...

"அடிப்பாவி... நான் அருவருப்பில் எரிச்சலோடு காலை உதறினால் அது உனக்கு டான்ஸ் ஆடுவது போலிருந்ததா...? உன்னை..." என்றபடி அவன் கையைத் தூக்கி கொண்டு அவளை அடிக்க வந்தான்...

அவளோ அவனது கையில் அகப்படாது கலகலவெனச் சிரித்தபடி வீட்டினுள் ஓடினாள்... அவள் நேரே சென்ற இடம் சமையலறை... லேசாக மூச்சு வாங்க சமையலறை மேடை மீது சாய்ந்து நின்றவளின் அருகே வந்தவன்,

"இந்தச் சமையலறைக்கும் நமக்கும் ஏதோ பூர்வ ஜென்ம பந்தம் இருக்கும் போலிருக்கு..."

"ம்... அப்படித்தான் எனக்கும் தோன்றுகிறது..." என்றவள் அடுப்பில் பால் காய்ச்சுவதற்காகப் பாத்திரம் வைத்து அதில் பாலை ஊற்றினாள்...

சிறிது நேரம் கூட அவளைப் பிரிந்திருக்க முடியாது அவன் அவள் பின்னே வந்து அணைத்துக் கொண்டான்...

"ரொமான்ஸ் பண்ணுவதற்கு ஏற்ற இடம் சமையலறைன்னு நான் நினைக்கிறேன்... நீ என்ன நினைக்கிற...?" என்றவனைக் கண்டு நாண புன்னகை சிந்தியவள்,

"உண்மை தான்..." என்றாள் மறுக்காது...

அவனும், அவளுமாய்ச் சமையலறையில் தனித்து இருந்த கணங்கள் அவளது மனதில் இன்ப அலையாய் பரவியது... அவனுள்ளும் அதே எண்ணங்கள் தானோ... அது அவனின் அணைப்பு இறுகியதில் இருந்து தெரிந்தது...

கணவனது அணைப்பில் கட்டுண்டபடி பாலை காய்ச்சி காபி போட்டவள் அதை அவனது கையில் கொடுத்தாள்... அவனோ அதைத் தனது கையில் வாங்கிக் கொண்டு அவளின் இதழ் அருகே கொண்டு சென்றான்...

"நான் காபி குடிக்க மாட்டேனே..." என்று இதமாய் மறுத்தவளிடம்,

"ப்ளீஸ் பேபி..."

கணவனது சொல்லை தட்ட முடியாது அவள் காபியை ஒரு வாய் பருகினாள்...

"இது போதும்..." என்றபடி அதே காபியை அவன் பருகினான்...

"இப்போ தான்டி ரொம்ப ஸ்வீட்டா இருக்குது..." என்று கண்சிமிட்டியவனைக் கண்டு லஜ்ஜையுற்றவளாய் வேறு வேலை இருப்பது போல் திரும்பி நின்று கொண்டாள்...

காபியை குடித்து முடித்துத் தம்பளரை கழுவ போட்டவன், "என் கூட வா பேபி..." என்க...

"வேலை இருக்கிறதே..." என்று விழித்தவளை கண்டு அருகில் வந்தவன் அவளது கூர்மூக்கை பற்றி ஆட்டியபடி,

"அது எல்லாம் முதலில் தான்... இப்போ நீ இந்த வீட்டின் எஜமானி... என்னுடைய மகாராணி... அதனால் இனி எந்தவொரு வேலையும் நீ செய்ய நான் அனுமதிக்க மாட்டேன்..." என்றவனின் நேசம் அவளின் மனதினை தீண்டுவதாய்...

அதற்குள் சோலையம்மாள் அங்கு வந்து விட்டார்... பிரகதீஸ்வரிக்கு உதவுவதற்காகப் பானுமதி அவரை அனுப்பி வைத்திருந்தார்... அவரிடம் வேலைகளை ஒப்படைத்து விட்டு கணவனுடன் அறைக்கு வந்த பிரகதீஸ்வரி கையில் அவன் சிறு நகைப்பெட்டியை வைத்தான்... அதைப் பார்த்ததும் அவளுக்குத் தெரிந்து போனது அது என்னவென்று...

அவள் கண்கள் கலங்க அவனை ஏறிட்டு பார்த்தாள்... அவனும் அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான்...

"இதைப் போட்டு காண்பி..."

அவன் கூறியதை கேட்டு மறுக்காது போட்டு காண்பித்தாள் அவள்... அன்று அவன் பரிசாகக் கொடுத்த வைர மூக்குத்தி தான் அது... அவளது நாசியில் தீச்சுடர் போல் ஒளி வீசி பிரகாசித்த அந்த வைர மூக்குத்தி அவனை 'வா வா' என்றழைத்தது... ஆசையுடன் அவள் அருகில் வந்தவன் மூக்குத்தி மீது ஆசையோடு முத்தமிட்டு அன்று எதிர்பார்த்த அவளின் எதிர்பார்ப்பினை இன்று அவன் பூர்த்திச் செய்தான்...

அவனது அருகாமையில் கண்களை மூடி கொண்டவள் அவனது செயலில் வியப்பாய் கண்களைத் திறந்து பார்த்தாள்...

"அன்று நீ ஆசையுடன் எதிர்பார்த்துத் தவித்தது... உன் எதிர்பார்ப்பை நான் நிறைவேத்த முடியாமல் தவித்தது... இருவரின் தவிப்பும் இன்று தான் தீர்ந்திருக்கிறது... இப்போ உனக்குச் சந்தோசமா...?"

அவனது வார்த்தையில் கண்கள் கலங்க தலையாட்டியவளின் மனம் உருகி போனது அவனது காதலில்... அவன் தன்னைப் பற்றி எந்தளவிற்குப் புரிந்து வைத்திருக்கிறான்... தான் அவனை அந்தளவிற்குப் புரிந்து கொள்ளவில்லையே என்று அவள் மனதிற்குள் மருகி போனாள்...

அடுத்து கழிந்த நேரங்கள் முழுவதும் இருவருக்கும் சந்தோசமும் உற்சாகமுமாய்க் கழிந்தது... அதே சந்தோச மனநிலையில் கிரானைட் குவாரிக்கு கிளம்பி வந்தவன் அங்கு வாயிலில் குழுமியிருந்த தொழிலாளர்களைக் கண்டதும் யோசனையாய் விழிகளைச் சுருக்கினான்...

காரில் இருந்து இறங்கியவன் கூட்டத்தை விலக்கி சென்று பார்த்த போது தான் கிரானைட் குவாரி அரசாங்கத்தால் சீல் வைக்கப்பட்டு இருப்பதை அவன் அறிந்தான்... அதைக் கண்டதும் அவனது விழிகளில் கோபம் வந்தது... அப்போது அவன் அருகில் வந்த அவனது உதவியாளன்,

"இது மட்டும் இல்லை சார்... மினரல் வாட்டருக்காக ஆத்துத் தண்ணீர் எடுப்பதற்கும் தடை போட்டுட்டாங்க... மணல் எடுப்பதற்கு, அப்புறம் விவசாய நிலங்களை அபகரிச்சுப் பில்டிங் கட்டுறதா சொல்லி அந்த வேலைகளையும் தடை செய்துட்டாங்க..." என்று அவன் அடுக்கி கொண்டே போனான்...

ஒரு அடி என்றால் சமாளித்துக் கொண்டு எழலாம்... ஆனால் அடுத்தடுத்து அடி என்றால் அவனது கோபம் பெரும் ஆத்திரமாக உருவெடுக்க ஆரம்பித்தது...

"யார் இதற்குக் காரணம்...?"

சித்தார்த்தின் குரலில் அப்படியொரு கர்ஜனை இருந்தது... அதைக் கண்டு உதவியாளன் மனதிற்குள் நடுங்கினான்...

"கலெக்டர் வரதன்..."

உதவியாளன் கூறியதும் அடுத்த நொடி வரதனுக்கு அழைப்பு எடுத்தான் சித்தார்த்... மறுபுறம் அவன் அழைப்பை எடுக்கவில்லை... சித்தார்த்திற்கு வந்த ஆத்திரத்தில்,

"அவங்க வச்ச சீலை உடைச்சிட்டு போய் நீங்க வேலையைப் பாருங்க... யார் என்ன கேள்வி கேட்கிறாங்கன்னு நான் பார்க்கிறேன்..." என்று கோபத்துடன் உரைத்தவன் கிளம்பி சென்று விட்டான்...

அவனை எதிர்த்துக் கேள்வி கேட்க பலம் பொருந்திய ஆட்சியாளர்களுக்கே அதிகாரம் இல்லை எனும் போது வெறும் ஆட்சியரான வரதன் எண்ண செய்து விட முடியும் என்கிற தெனாவெட்டு அவனது பேச்சில் தெரிந்தது...

அடுத்து அவன் வந்து சேர்ந்த நிறுவனம் பிரகதீஸ்வரியின் தந்தையால் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனத்திற்கு... அது என்றும் போல் இன்றும் தடையற்ற இயந்திரம் போல் சீராக ஓடி கொண்டிருந்தது... அதனால் எந்தப் பிரச்சினையும் அங்கு இல்லை... அங்கு இருந்த கணக்கு வழக்குகளை ஆராய ஆரம்பித்தவன் நேரம் போவது தெரியாமல் அதில் மூழ்கி போனான்...

****

"சந்து குட்டி... சீக்கிரம் வா... ஒரு சந்தோசமான விசயம்..." ஹரிப்ரசாத் சமையலறையை நோக்கி கத்தினான்...

"இதோ வர்றேங்க..." என்று மனைவி உள்ளே இருந்து குரல் கொடுத்தாள்...

"டேய்... பிள்ளைத்தாய்ச்சி பெண்ணைப் பதற வைக்காதேடா..." என்று மறுமுனையில் இருந்த பானுமதி மகனை அதட்டினார்...

"என்னங்க..." என்று கேட்டுக் கொண்டே வந்த சந்தியாவிடம் அவன்,

"ரதிம்மா அவளுடைய கணவனோடு சேர்ந்து விட்டாளாம்..." என்று மகிழ்ச்சி பொங்க கூறினான் ஹரி...

"அப்படியா... இங்கே கொடுங்க..." என்று சந்தோசத்துடன் அலைப்பேசியை வாங்கியவள்,

"உண்மையாகவா அத்தை..." என்று செய்தியை உறுதிப்படுத்திக் கொண்டு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியவள்,

"நாளைக்கு நான் பிரகதி கிட்ட பேசறேன்..." என்று கூறி விட்டுக் கணவனிடம் அலைப்பேசியைக் கொடுத்தாள்...

"அம்மா... இப்பவாவது எங்க கூட வந்து இருக்கலாமே..." என்று ஹரி அன்னையிடம் கேட்டான்...

"ஆமாம் ஹரி... இங்கே தனியா இருந்து நான் என்ன செய்யப் போகிறேன்... உன் கூடவே வந்து விடுகிறேன்..." என்று அவர் கூற மகனுக்கு அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது...

****

மனைவி மதிய உணவிற்கு அழைக்கும் வரை சித்தார்த்தின் நினைவில் வேறு எந்தச் சிந்தனையும் இல்லை... அவனது கோபத்தினை வேலைகளில் காட்டி மனதினை அமைதி படுத்திக் கொண்டான்...

மதிய உணவிற்கு வீட்டிற்கு வந்தவன் மனைவியின் முகத்தைப் பார்த்ததும் அவனின் கோபம் சிறிது குறைந்தது... உணவு எடுத்து வைத்த மனைவியிடம்,

"நீயும் என்னோடு உட்கார்..." என்று கூறி அவளுக்குத் தானே பரிமாறியவன் அவளை உண்ண செய்த பின்னரே தானும் உணவு உண்டான்...

உயிர் போகும் பிரச்சினை ஓடி கொண்டிருக்கும் இந்த நேரத்திலும் மனைவியவளை கண்ணும் கருத்துமாக அவன் கவனித்துக் கொண்டான்...

"திருநெல்வேலிக்கு போகிற வேலை எதுவும் இருக்கிறதா...?" என்று சாப்பிட்டுக் கொண்டே அவன் கேட்க...

"இல்லை... நாளைக்குத் தான் செமினார் இருக்கு..."

"ஓகே... நாளைக்கு நானே உன்னைக் கூட்டிட்டு போறேன்..." என்றவனிடத்தில் அவள் அமைதியாகத் தலையாட்டினாள்...

கணவனின் முகத்தை வைத்தே புரிந்து கொண்டாள் ஏதோ ஒன்று சரியில்லை என்று... கேட்கலாமா? வேண்டாமா? என்று மனதிற்குள் ஒத்திகை பார்த்துக் கொண்டு தட்டில் கையை அலைந்து கொண்டிருந்தவளின் தோள் தொட்டு,

"சாப்பிடும் போது என்ன யோசனை உனக்கு...?"

"இல்லை... நீங்க டென்சனா இருக்கிற மாதிரி இருக்குதே..."

அவளின் வருத்தத்தைக் கண்டு பளிச்சென்று சிரித்தவன், "இல்லையே... நான் நார்மலாகத் தான் இருக்கிறேன்..." என்று அவன் கூறும் போதே அவனது அலைப்பேசி அழைத்தது...

அது வரதனின் அழைப்பு என்றதும் சித்தார்த்தின் முகம் மாறியது... மனைவியிடம்,

"நீ சாப்பிடு பேபி..." என்றவன் கையைக் கழுவி விட்டு அறைக்குச் சென்றான்...

அறைக்கு வந்ததும் அலைப்பேசியை உயிர்ப்பித்தவன் எடுத்தவுடன், "வரதா... யார் மேல் கை வைக்கிறேன்னு தெரிஞ்சு தான் செய்றியா...?" என்று எகிறினான்...

"நான் என் நண்பன் சித்துக் கிட்ட பேச தான் ஃபோன் பண்ணினேன்... பிசினஸ்மேன் சித்தார்த் கிட்ட இல்லை..." என்றான் வரதன் தெளிவாக...

"ஓஹோ... நட்பு வேறு, தொழில் வேறுன்னு என் கிட்டேயே சொல்கிறாயா...?"

"ஆமாம் சித்து... அப்போ நீ ஃபோன் பண்ணிய போது முக்கியமான மீட்டிங்கில் இருந்தேன்... இப்போ தான் லன்ச்க்காக ப்ரீயானேன்... சொல்லுடா... என்ன விசயமா கூப்பிட்ட...?" வரதன் சாதாரணமாகக் கேட்டான்...

"என்ன விசயம்ன்னு உனக்குத் தெரியாதா வரதா...?"

"தெரியும்... உன்னோட கம்பெனிக்கு மட்டுமில்லை... அத்தோடு நிறையக் கம்பெனிகளுக்கும் தடை போட்டு இருக்கேன் சித்து..."

"நான் எந்தளவுக்கு நல்ல நண்பனோ... அது போல் கெட்ட எதிரியும் கூட..."

"எதிரி என்றாலே கெட்டவன் தான்... இதில் கெட்ட எதிரி என்று ஒன்று உண்டோ..." என்று கேட்டு லேசாகச் சிரித்த வரதன்,

"இது கூட உன் மனைவி கொடுத்த புகாரின் பேரில் தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது... உன் கம்பெனியோடு சேர்த்து இன்னும் வேறு சில நிறுவனங்களும் இதில் அடக்கம்..."

"ஒரு கலெக்டரா உன் வேலையை நீ செய்துட்ட... இனி நான் என் வேலையைக் காட்டிட வேண்டியது தான்... இந்தச் சித்தார்த்தை நீ அவ்வளவு லேசாக எண்ணி விடாதே வரதா... நான் நினைத்தால் உன்னை ஒரே தூக்காகத் தூக்கி விடுவேன்... பார்க்கிறியா...? எண்ணி ஒரே ஒரு வாரம் தான்... நான் உன்னைத் தூக்கி அடிக்கலை... என் பெயர் சித்தார்த் இல்லைடா..."

அதைக் கேட்டு வாய் விட்டுச் சிரித்தான் வரதன்... சித்தார்த் போன்று எத்தனை பேரை அவன் பார்த்திருப்பான்...

"அது உன் சாமர்த்தியம் சித்து... என் கடமையை நான் செய்து விட்டேன்... இனி எல்லாம் அந்த ஆண்டவன்

செயல்..." என்று கூறியதோடு வரதன் அலைப்பேசியை அணைத்து விட்டான்...

"ச்சே..." ஆத்திரத்தில் காற்றில் கையை வீசிய சித்தார்த் அடுத்து அமைச்சர் ஒருவருக்கு அழைத்தான்...

"யோவ்... அவன் ஆக்சன் எடுக்கிற வரை நீ என்ன பண்ணிக்கிட்டு இருந்த... அடுத்தத் தடவை எலெக்சன்னு என் கிட்ட பணத்துக்கு வந்து நின்னு பாரு... அப்போ இந்தச் சித்தார்த் யார்ன்னு உனக்கு நான் காட்டறேன்... கை நீட்டி பணம் வாங்கும் போது உனக்குத் தெரியாதா...? எல்லாம் எனக்குச் சாதகமாக நடக்க வேண்டும் என்று... இப்போ என்ன கலெக்டர் வச்சு என் கிட்ட படம் காட்டுறியா...?" என்று கோபமாய்ப் படபடத்தான் அவன்...

மறுமுனையில் என்ன கூறினார்களோ பதிலுக்குத் தலையை மறுப்பாய் அசைத்து, "உன்னால் முடிஞ்சா ஒரே வாரத்தில் அவனைத் தூக்கு... இல்லாட்டி நான் பார்த்துக்கிறேன்..."

"....."

"என்னது ஒரு வாரத்தில் முடியாதா...? அப்போ சரி இதை நானே டீல் பண்ணிக்கிறேன்..." என்று கோபமாய் அலைப்பேசியை அணைத்தான்...

"ச்சே... படுத்தி எடுக்கிறாங்க..." என்று கோபத்துடன் நெற்றியை நீவி விட்டபடி திரும்பி பார்த்த சித்தார்த் அங்கு விழிகளில் பயத்தைத் தேக்கி தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த மனைவியைக் கண்டு திகைத்தவன் மறுநொடி சமாளித்துக் கொண்டு அவளை விழிகளால் அருகே அழைத்தான்...

அவனது இத்தனை பிரச்சினைகளுக்கும் காரணம் அவள் தான்... எல்லோரிடமும் கோபம் கொள்ளும் அவனால் அவள் மீது கோபம் கொள்ள முடியவில்லை... எந்த நிலையிலும் அவனால் அவளை வெறுக்க முடியவில்லை...

"என்ன பிரச்சினை...?" என்று தயக்கத்துடன் கேட்டவளிடம் நேராய் பார்த்து 'நீ தான் பிரச்சினை' என்று அவனால் தைரியமாகக் கூற முடியவில்லை...

"ஒண்ணும் இல்லை பேபி... பிசினசில் சின்ன ப்ராப்ளம்..."

"கலெக்டரை ஒண்ணும் பண்ணிடாதீங்க..."

மனைவியவளின் தவிப்பான வார்த்தையில் அவள் எல்லாவற்றையும் கேட்டு விட்டாள் என்று அவனுக்குப் புரிந்து போனது...

"பின்னே நான் எப்படி எனக்காகப் போராடுவது...? ஊருக்காகப் போராட நீ, அவன் எல்லாம் இருக்கீங்க...? ஆனால் எனக்காக யார் போராடுவது...? எனக்கு நானே தான் போராடணும்... அதை நான் பார்த்துக்கிறேன்..." என்றவன் அவளது அருகில் வந்து அவளது தோள் மீது தனது இரு கைகளை வைத்து,

"நான் உன்னிடத்தில் சொல்லியது அப்படியே தான் இருக்கிறது... நம் கொள்கைகள் வேறு... நம் காதல் வேறு... இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொள்ளாதே..."

தன்னைப் பார்த்து கூறியவனைக் கண்டு அவள் சரியென்பது போல் தலையசைத்தாள்... ஆனாலும் அவள் மனதில் இருந்த குழப்பம் அப்படியே இருந்தது...

****

அன்று வேலையில் மிகவும் பரபரப்பாக இருந்தாள் ஸ்வேதா... இன்னொரு மாடலிங் ஷோ நடக்கவிருக்கிறது... அதற்கான வேலைகளில் அவள் மூழ்கியிருந்தாள்... அதில் சரவணனும் ஒரு மாடல்... எல்லோருக்கும் உடை வடிவமைப்பது போல் அவனுக்கும் உடை வடிவமைக்கும் பொறுப்பு ஸ்வேதா வசம் வந்தது...

ஏனோ அவனது உடையை ஏனோ தானோவென்று வடிவமைக்க அவளால் முடியவில்லை... அவனது உருவத்தைக் கருத்தில் கொண்டு அந்த உடையைக்

கனகச்சிதமாகச் சிறப்பாக வடிவமைத்தாள்... வட இந்திய, தென்னிந்திய இரண்டு கலாச்சாரத்தையும் கலந்து அழகுற அமைந்து இருந்தது அந்த உடை... வேட்டி, சட்டை என்றும் சொல்ல முடியாது... ஷெர்வானி என்றும் சொல்ல முடியாது... இரண்டும் கலந்த கலவையாக இருந்தது அந்த உடை...

அந்த உடையின் நேர்த்தியை கண்ட ஜாஸ்மின் அவளிடம், "இதை வருண் போட்டால் நல்லா இருக்கும்... வருணுக்கு இதைக் கொடுத்து விட்டு, சரணுக்கு வருணுக்கு கொடுக்கும் உடையைக் கொடுத்து விடு..." என்க...

அவரது கையில் இருந்து அந்த உடையை வேகமாய்ப் பறித்த ஸ்வேதா, "ம்ஹூம், அது முடியாது மேம்... இது சரணுக்காக உருவாக்கியது..." என்றாள் சற்று கோபத்துடன்...

"ஏன்...? சரண் மட்டும் என்ன ஸ்பெசல்...?" அவர் புரியாதது போல் கேட்டார்...

"அது வந்து... ஆங், அவரவர் உடல் அமைப்புக்கு ஏற்றப்படி வடிமைச்சேன்..." என்றவளின் குரல் சுருதி இறங்கி ஒலித்தது...

"சரணுக்கும், வருணுக்கும் உடல் அமைப்பில் பெரிதாக வித்தியாசம் இல்லை என்றே நினைக்கிறேன்..."

"அது எப்படி மேம் நீங்க சொல்ல போச்சு...? சரணின் கம்பீரம் வருணுக்கு வராது..." என்றவள் அந்த உடையை எடுத்துக் கொண்டு உள்ளே சென்று விட்டாள்...

இருவரும் பேசுவதைக் கேட்டபடி அங்கு வந்த சரணின் முகம் மலர்ந்திருந்தது...

"ஸ்வேக்கு உன் மேல் எத்தனை ப்ரியம் பார்த்தியா சரண்..."

அதற்கு ஆமோதிப்பாய் தலையாட்டியவனுக்குச் சந்தோசத்தில் பேச்சு வரவில்லை...

"நீ ரொம்ப நாள் காத்திருக்க வேண்டியது இல்லைன்னு நினைக்கிறேன்..." என்று ஜாஸ்மின் அவனது தோளை தட்டி விட்டு சென்று விட்டார்...

அவனோ தன்னவளை நினைத்துக் கனவில் டூயட் பாடி கொண்டிருந்தான்...

அன்று மாலை பேசன் ஷோ நடந்து முடிந்த பிறகு சரண் ஸ்வேதாவிடம் வந்து, "இந்த ட்ரெஸ் ரொம்ப நல்லா டிசைன் பண்ணியிருக்க... எனக்காகவே டிசைன் பண்ணின மாதிரி பெர்பெக்ட்டா இருக்கு..." என்றவனை முறைத்து பார்த்தாள் ஸ்வேதா...

அப்போது அங்கே வந்த இன்னொரு மாடலான சோனாலி நேரே சரணிடம் வந்து, "சரண்..." என்று கொஞ்சலாக அழைத்தாள்...

அவளது கொஞ்சலான அழைப்பை கண்டு ஸ்வேதாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது... ஏனெனில் சரவணனுடன் மேடையில் ஜோடி சேர்ந்து பூனை நடை நடந்தவள் இந்தச் சோனாலி... வேண்டுமென்றே அவனிடம் இழைந்து உரசி கொண்டு இருந்தவளை கண்டு மேடையின் கீழிருந்து டென்சனில் நகத்தைக் கடித்துக் கொண்டிருந்தாள் ஸ்வேதா...

அவளது டென்சனை அதிகப்படுத்துவது போல் இப்போதும் சரவணனிடம் ஈயென்று பல்லை காட்டினாள் சோனாலி...

"இந்த ட்ரெஸ் உன்னோட கலருக்குக் கொஞ்சம் மட்டமாகத் தான் தெரிகிறது சரண்... இன்னும் நல்லா டிசைன் பண்ணியிருக்கலாம்... இதோ இங்கே இன்னும் கொஞ்சம் எம்பிராய்டரி பண்ணி இருக்கலாம்... இங்கே கலர் ஸ்டோன்ஸ் வச்சு ஸ்டிச் பண்ணியிருக்கலாம்..." என்று உடையைக் குறை கூறுவது போல் அவனின் உடலை தொட்டு தொட்டு பேசி கொண்டிருந்தாள் சோனாலி...

அதைக் கண்டு ஸ்வேதாவின் மனதில் பூகம்பம் வெடித்தது... அது அவளது கண்களிலும் வெடித்தது...

"அப்படியா சொல்ற சோனு... நீ சொன்னா சரி தான்... உனக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை... இந்த ட்ரசை டிசைன் பண்ணியவங்க ரசனை மகா மட்டமா இருந்திருக்கும் போலிருக்கு..." என்ற சரவணன் வேண்டுமென்றே அவளிடம் இழைந்து கொண்டிருந்தான்...

"சரண்... நாம ஒரு நாள் டேட்டிங் போகலாமா...?" என்று கொஞ்சியவளை கண்டு,

"ஷ்யூர் டாலி... டேட் பிக்ஸ் பண்ணிட்டு சொல்றேன்..." என்று கண்சிமிட்டி அவன் சிரித்தான்...

சோனாலி விடை பெற்றுச் சென்றதும் அவனை முறைத்து பார்த்தாள் ஸ்வேதா... சரவணனோ அவளைக் கண்டு கொள்ளாது அங்கிருந்து நகரப் போனான்... அவனது சட்டையைப் பிடித்து இழுத்தபடி மறைவான இடத்திற்கு அழைத்துச் சென்றவள்,

"என் கிட்ட என்ன சொன்ன...? அவளைப் பார்த்ததும் உனக்குச் சொன்னது எல்லாம் மறந்து போச்சா...? அந்தளவுக்கு அவளிடம் மதி மயங்கி போயிருக்கியா...?" என்று கேட்டவளின் வார்த்தையில் அடக்கப்பட்ட கோபம் இருந்தது...

அவளது கைகளில் இருந்து தனது சட்டையை விடுவித்துக் கொண்டவன், "உண்மையில் மதி மயங்கி தான் போச்சு..." என்று மனைவியவளின் அழகினை கண்டு மனம் மயங்கியவனாய் கூறியவன்,

"சோனு என்ன ஒரு அழகு இல்லையா...?"

அதற்கு முறைத்து பார்த்தவள் கோபத்தில் புஸ்புஸென்று மூச்சு விட்டுக் கொண்டு ஆற்றாமையுடன் நின்றிருந்தாள்...

"ஆனாலும் நீ டிசைன் பண்ணியது அழகு தான்..." என்றான் நமட்டு சிரிப்புடன்...

அதில் கையிலிருந்த கைக்குட்டையை எடுத்து அவன் மீது விசிறியடித்தவள், "போடா..." என்றாள் கோபமாய்...

அவளது கைக்குட்டை அழகாய் கைப்பற்றியவன், "அப்படியா... அப்போ நாளைக்கே சோனு கூட டேட்டிங் போகிறேன்..." என்று கூறியவன் அவளின் பதிலை எதிர்பாராது சென்று விட்டான்...

மறுநாள் காலை அலுவலகம் வந்த ஸ்வேதா தவிப்புடன் அமர்ந்திருந்தாள்... ஏனெனில் அவளுக்கு முன் அலுவலகம் வந்து விடும் சரவணன் இன்னமும் வந்து சேரவில்லை... உண்மையில் அவன் சோனாலியுடன் டேட்டிங் போய் விட்டானோ என்று அவள் மனதிற்குள் பயந்தாள்... அந்தப் பயத்திற்கான காரணம் அவளுக்கு விளங்கவில்லை...

பன்னிரெண்டு மணி வரை அவளைத் தவிக்க விட்ட சரவணன் அதன் பிறகே வேலைக்கு வந்தான்... இவன் உண்மையில் டேட்டிங் போய் விட்டு தான் வந்திருப்பானோ என்று அவள் சந்தேகமாய் அவனைப் பார்த்தாள்...

"இன்னைக்கு என்னாச்சு உனக்கு...? வேலையில் ரொம்பவும் சொதப்பினதா மேம் சொன்னாங்க..."

"லேட்டா வந்ததும் இல்லாமல் என்னைக் கேள்வி வேறு கேட்கிறியா...? முதலில் உன் வேலையைப் பார்..." என்று கோபமாய் உரைத்தவள் வேலை செய்வது போல் தலையைக் குனிந்து கொண்டாள்...

அவளது செயலை பார்த்தவன் தோளை குலுக்கியபடி தனது வேலையில் ஆழ்ந்தான்... ஆனால் இருவரும் உள்ளுக்குள் மற்றவரை ஆராய்ச்சியாய் பார்த்து கொண்டிருந்தனர்...

கடைசியில் வேலை முடிந்து எழுந்து வெளியில் போன சரவணன் நின்று, "காலையில் மேம் ஒரு வேலை சொல்லியிருந்தாங்க... அது விசயமாகத் தான் நான் வெளியில் போயிருந்தேன்..." என்றான் மனையாளின் மனதினை குளிர்விக்கும் பொருட்டு...

அதில் அவள் என்ன மாதிரியாக உணர்ந்தாள் என்று அவளுக்கே தெரியாது... விழிகளில் நிம்மதி பரவ அவனை

ஏறிட்டு பார்த்தவளின் விழி வீச்சில் அவனது இதயம் அவளின் பால் சரிந்தது மடமடவென்று...

****

மறுநாள் காலையில் செமினார் வகுப்பிற்காகப் பிரகதீஸ்வரி கிளம்பி கொண்டிருந்தாள்... அப்போது அவளது அலைப்பேசிக்கு ஒரு அழைப்பு வந்தது... எடுத்து பேசியவள் மறுமுனையில் கிடைத்த தகவலில் திகைத்து போய் விழித்தாள்...

"என்ன பேபி இன்னும் கிளம்பலையா...? உன்னைக் கொண்டு விட்டுட்டு நானும் என்னோட வேலையை முடித்துக் கொண்டு வரணும்... அதுவும் உன் செமினார் முடிவதற்குள்..." என்று சித்தார்த் அவளை அவசரப்படுத்தினான்...

தனக்குப் பதில் பேசாது விழித்த மனையாளை கண்டு அவன், "என்னடா...?" ஒற்றை விரல் கொண்டு அவளது நாடியில் கை வைத்து அவளது முகத்தை நிமிர்த்தியவன் அவளது விழிகளுக்குள் விழி கலந்தான்...

அன்றைய அவனது பேச்சில் பயந்து போயிருந்தவளை தனது நேசத்தால் கொஞ்சம் கொஞ்சமாய் அவன் மாற்றியிருந்தான்...

"கலெக்டர் ஆபிசில் வர சொல்லியிருக்காங்க... ஏதோ சைன் போடணுமாம்...?" என்று தயங்கி கொண்டே சொன்னவள் பயத்தில் எச்சில் விழுங்கினாள்...

"அதுக்கென்ன கூட்டிட்டு போகிறேன்..." என்று அசால்ட்டாய் கூறியவனைத் திகைப்புடன் அவள் பார்த்த்தாள்...

"கணவனாக நான் உன்னை அழைச்சிக்கிட்டுப் போறது என் கடமை... அதே போல் தொழிலதிபனாய் என் தொழிலை தக்க வைத்துக் கொள்வதும் என்னோட கடமை..." என்றவன் சொன்னது போல் முதலில் அவளை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றான்...

"நீங்களும் வாங்களேன்..." என்று அழைத்தவளை கண்டு மறுப்பாய் தலையசைத்தவன்,

"இன்னும் ஒரு வார காலம் தான் அவன் இருக்கப் போகிறான்... அவனுக்கு மரியாதை கொடுத்து அவனைப் பார்க்க நான் ஏன் வர வேண்டும்...? நான் வரலை..." என்று அவன் மறுத்து விட்டுக் காரில் அமர்ந்து கொண்டான்...

பிரகதீஸ்வரி மட்டும் உள்ளே சென்று கையெழுத்து போட்டு விட்டு வெளியில் வந்தாள்... அவள் கொடுத்த புகார் சம்பந்தமாகத் தான் அந்தக் கையெழுத்துக் கேட்டிருந்தார்கள்...

அவளை வகுப்பு நடக்கும் கல்லூரியில் இறக்கி விட்டவன், "வகுப்பு முடிந்ததும் ஃபோன் பண்ணு..." என்றபடி காரை கிளப்பிக் கொண்டு சென்று விட்டான்...

கணவனைப் புரிந்து கொள்ள அவளால் முடியவில்லை... புரிந்து கொள்ள முடியாத புதிராக, மர்மமாக அவன் இருந்தான்... கணவன் நல்லவனா...? கெட்டவனா...? என்று அவளது மனதில் பெரிய கேள்விக்குறி எழுந்தது...

அடுத்து வந்த ஒரு வாரமும் அமைதியாகக் கழிந்தது... அன்று காலையில் வழக்கம் போல் எழுந்து கணவனுக்குக் காபி கலந்து கொடுத்து விட்டு வந்த பிரகதீஸ்வரி அப்போது தான் வந்திருந்த செய்தித்தாளை எடுத்துப் பிரித்துக் கொண்டு படிக்க ஆரம்பித்தாள்...

முதல் பக்கத்தில் முக்கியச் செய்தியாக வந்திருந்த அந்தப் பெட்டி செய்தியில் அவளது விழிகள் நிலை குத்தி நின்றது...

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் திரு. வரதன் மதுரையில் ஒரு கூட்டத்தினை முடித்துக் கொண்டு நேற்றிரவு பன்னிரெண்டு மணிக்கு தனது ஜீப்பில் திருநெல்வேலி திரும்பி கொண்டிருந்த போது மணல் லாரி மோதி அந்த இடத்திலேயே அகால மரணம் அடைந்தார்...

அந்தக் கணம் அவளது காதுகளில் கணவனது குரல்களே மாறி மாறி ஒலித்தது...

'நான் நினைத்தால் உன்னை ஒரே தூக்காகத் தூக்கி விடுவேன்... பார்க்கிறியா...? எண்ணி ஒரே ஒரு வாரம் தான்... நான் உன்னைத் தூக்கி அடிக்கலை... என் பெயர் சித்தார்த் இல்லைடா...'

‘இன்னும் ஒரு வார காலம் தான் அவன் இருக்கப் போகிறான்... அவனுக்கு மரியாதை கொடுத்து அவனைப் பார்க்க நான் ஏன் வர வேண்டும்...? நான் வரலை...’

அடுத்த நொடி அவளது விழிகள் கண்ணீர் மழையைப் பொழிந்தது...

அந்நேரம் அங்கு வந்த சித்தார்த் மனைவியின் பிரக்ஞையற்ற நிலையைக் கண்டு அவள் அருகில் வந்தவன் என்னவென்று செய்தித்தாளை எட்டி பார்த்தான்... அதிலிருந்த செய்தியை கண்டு அவனும் அதிர்ந்து போனான்... கணவனின் வருகை உணர்ந்து பிரகதீஸ்வரி அவனை ஏறிட்டு பார்த்தாள்... அவனும் அவளைத் தான் பார்த்தான்...

மனைவியின் விழியில் தெரிந்த அச்சத்தில், கண்களில் வழிந்த கண்ணீரில் சித்தார்த் அசைவற்று போனான்...!!!

"கொள்கை இரண்டு, காதல் ஒன்று,
ஒரு உறைக்குள் இரு வாள்கள்,
ஒன்றுடன் ஒன்று உரசி
காதல் தீ பற்றிக் கொள்ளுமோ,
ஒன்றை ஒன்று துண்டாடி
உயிர் கொல்லுமோ,
காதல் மாயம் பல செய்தாலும்,
சில காயம் மறையாது மன்னவா...
காயம் ஆற்றும் மருந்தாய் என்னை
நீ காத்து கொள் காதலனாய் அல்ல,
மனிதம் போற்றும் மனிதனாய்...!!!"

நனவாகும்...!!!

"பேபி... அப்படிப் பார்க்காதேடி..."

சித்தார்த் மனமுடைந்தவனாய் மனைவியை அணைத்துக் கொண்டான்... கணவனை மனைவி காதலாகப் பார்க்க வேண்டும்... இப்படி அச்சத்தோடு மனைவி பார்ப்பதை எந்தக் காதல் கணவன் தான் விரும்புவான்...

அவனது நெஞ்சில் இருந்தபடியே அவனை அண்ணாந்து பார்த்த பிரகதீஸ்வரி, "நீங்க இதைச் செய்யலையே...?"

அவனை என்னமோ கொலைகாரன் மாதிரி அவள் பார்த்ததைக் கண்டு அவனால் தாங்கி கொள்ள முடியவில்லை... இருந்தாலும் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு,

"நான் இதைச் செஞ்சு இருப்பேன்னு நீ நினைக்கிறியா...?" என்று கேட்டவனின் பார்வை மனைவியவளின் விழிகளை ஊடுருவி சென்று அவளது மனதினை படிக்க முயன்றது...

"இல்லை..." என்று மறுப்பாய் தலையாட்டியவள்,

"என்னோட கணவனா உங்களை, உங்கள் காதலை என்னால் சந்தேகப்பட முடியலை... ஆனால்..." என்று நிறுத்தியவள் தவிப்புடன் அவனைப் பார்த்தாள்... தான் சொல்ல வருவதை அவன் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமே என்று...

"ஆனால் என்ன...?" முகத்தில் எந்தவித மாறுதலையும் காட்டாது கேட்டவனைக் கண்டு அவளது தயக்கம் அதிகரித்தது...

"நீங்க ஏன் அப்படிச் சொன்னீங்க...? அவங்களைத் தூக்கி அடிச்சிருவேன்னு... அதுக்கு என்ன அர்த்தம்...? இப்போ இதைப் பார்க்கும் போது எனக்கு ரொம்பப் பயமா இருக்கு..." என்றவள் அவனது நெஞ்சில் அச்சத்துடன் முகம் புதைத்து கொண்டாள்...

அவனிடம் அச்சம் கொண்டு அவனிடமே அடைக்கலமாகும் மனைவியவளின் விந்தையான மனநிலை அவனுக்கு அப்படி ஒரு ஆறுதலை தந்தது என்றால் மிகையில்லை... மனைவியவளின் அந்தச் சிறு செயலில் கூடக் காதலை கண்டான் அந்தக் காதல் கிறுக்கன்...

அவனைக் கொலை செய்து இருப்பாயோ என்று கேட்காமல் கேட்கிறாள் அவனது காதல் மனைவி... 'நீ ஒரு கொலைகாரன்' என்று முகத்துக்கு நேரே சொல்லவில்லை... அவ்வளவு தான் இங்கு வேறுபாடு... மற்றபடி அவள் கூறியதன் அர்த்தம் ஒன்றே ஒன்று தான்... அப்போதும் அவள் மீது அவனுக்குக் கோபம் வரவில்லை... மாறாகக் காதல் தான் அதிகரித்தது...

அவளது உச்சந்தலையில் அழுத்தமாய் இதழ் பதித்தவன், "அதுக்கு என்ன அர்த்தம்ன்னா அவனை வேறு ஊருக்கு, அதுவும் தண்ணியில்லாத காட்டுக்கு மாத்திருவேன்னு அர்த்தம்..." என்றவனைத் திகைப்பாய் பார்த்தாள் அவள்...

அவளது நெற்றியில் விளையாட்டாய் முட்டியபடி சித்தார்த், "பேபிம்மா... உன் கணவன் தொழில் பண்ணுகிறவன்... கொலை பண்ணுகிறவன் இல்லை... ஒரு தொழிலதிபனை போய்க் கொலைகாரன் ரேன்ஜ்க்கு பேசுகிறாயே...? இது நியாயமா...?"

"அது வந்து..." என்று இழுத்தவளை கண்டு...

"வராததை விட்டு விடு பேபி... வரதன் போன்றவர்களைத் தொழிலில் நான் தினமும் சந்திக்க வேண்டி வரும்... என் வழியில் குறுக்கிடுபவர்களை எல்லாம் நான் கொல்ல வேண்டும் என்றால் இந்த ஊரிலுள்ள எல்லோரையும் போட்டு தள்ளி விட்டு நான் மட்டுமே உயிர் வாழ வேண்டும்... இது எல்லாம் சாத்தியமா...? நீயே சொல்லு... தொழில் என்று இருந்தால் மேடு பள்ளங்கள் இருக்கத் தான் செய்யும்... எத்தகைய சவாலையும் நேரே நின்று தைரியமாக அதை எதிர் கொள்ள வேண்டும்... அதை விட்டு விட்டு இப்படிக் கோழை போல் யாராவது கொலை பண்ணுவாங்களா...?"

கணவனது பேச்சில் அவளது மனம் கொஞ்சம் தெளிந்தது...

"உனக்கு ஒண்ணு தெரியுமா...? வரதன் என்னுடைய நண்பன்... அவனைப் போய் நான் எப்படிக் கொல்வேன்...?" இதைச் சொல்லும் போதே அவனது குரல் வருத்தத்துடன் ஒலித்தது...

"என்னது அவர் உங்க நண்பனா...?" என்றாள் அவள் ஆச்சிரியத்துடன்...

"ஆம்... அவன் என் நண்பன் தான்... பின்னே அன்று எப்படி உனக்கு வரதனை பார்க்க அனுமதி கிடைத்தது...? நான் தான் சொன்னேன் 'நீ என் மனைவி' என்று..."

சித்தார்த் கூறியது போல் அன்று அவன் வரதனை பார்த்த பின்னர்த் தானே அவளுக்கு அவனைச் சந்திக்க அனுமதி கிடைத்தது...

"அப்போ இதை யார் செய்தது...?"

"உண்மையில் இது விபத்தாக இருக்கலாம்... இல்லை அவனால் பாதிக்கப்பட்ட யாராவது இப்படிக் கொலை செய்து விட்டு விபத்து மாதிரி மாற்ற முயற்சித்து இருக்கலாம்... எது என்று உறுதியாகச் சொல்ல முடியாது..." என்றவன்,

"நீ கிளம்பி தயாராக இரு... அவனது வீட்டுக்கு போயிட்டு வரலாம்..." என்றவன் தான் கிளம்புவதற்காக உள்ளே சென்றான்...

அடுத்தப் பத்து நிமிடங்களில் இருவரும் காரில் ஏறியிருந்தனர்... ஓட்டுநர் உடன் வந்ததால் இருவரும் அநாவசியமாகப் பேசி கொள்ளவில்லை... வரதனின் வீட்டிற்கு வந்த போது அவனது உடல் ஏற்கெனவே மருத்துவமனையில் இருந்து வந்து விட்டது...

ஓட்டுநர் மாலையை எடுத்துக் கொண்டு வந்து கொடுக்கச் சித்தார்த் வரதனின் உடலுக்கு மரியாதை செலுத்தினான்... பிரகதீஸ்வரி ஒருவித பயத்துடன் கணவனை ஒட்டி

கொண்டு இருந்தாள்... அப்போது வரதனின் உடல் அருகே அழுது கொண்டிருந்த அவனது மனைவி ஆவேசத்துடன் எழுந்து சித்தார்த்தின் அருகில் வந்தாள்...

"படுபாவி... அவரைக் கொன்னுட்டு ஒண்ணும் தெரியாத மாதிரி இங்கே வந்திருக்கியா...? உனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம்டா..."

பெரும் குரல் எடுத்து கத்தியவள் சித்தார்த்தின் சட்டையைப் பிடிப்பதற்குள் அங்கிருந்தவர்கள் அவளைக் கட்டுப்படுத்தினர்... பிரகதீஸ்வரி இப்போது இன்னமும் அதிகமாய்ப் பயந்து போய்க் கணவனது முதுகின் பின்புறம் மறைந்து கொண்டாள்... அத்தனை களேபரத்திலும் அவனின் கை மனைவியின் கையை ஆறுதலாய் பற்றியிருப்பதை விடவில்லை...

வரதன் நடவடிக்கை எடுத்ததில் மிகப் பெரிய நிறுவனம் சித்தார்த்தினுடையது... அதனால் சித்தார்த் தான் இந்தக் கொலையைச் செய்திருக்க வேண்டும் என்று வரதனின் மனைவி உறுதியாக நம்பினாள்... ஆள் பலம், பணபலம் மிக்கவன் அவன் ஒருவனே...

"எப்படிடா உன்னால் இதைச் செய்ய முடிந்தது...? உன்னை அவர் தன்னோட உயிர் நண்பனாக நினைச்சாரே... அப்படிப்பட்டவரோட உயிரை எடுக்க உன்னால் எப்படி முடிஞ்சது...? நீ மனுசன் தானா...? இல்லை இரக்கமே இல்லாத ராட்சசனா...? உனக்கு உன் மனைவின்னா ரொம்பப் பிடிக்குமாமே... அவர் என் கிட்ட சொல்லியிருக்கிறார்... நான் என் கணவனை இழந்து தவிக்கிற மாதிரி நீ உன் மனைவியை இழந்து தவிக்கணும்... அப்போ புரியும் என்னோட தவிப்பு..." என்று கண்ணீருடன் சாபம் விட்டவளை கண்டு அவன் இறுக்கத்துடன் நின்றிருந்தான்...

வரதனின் இரண்டு வயது குழந்தை தாயின் கதறலை கண்டு அவளது கால்களைக் கட்டி கொண்டு அதுவும் உடன் சேர்ந்து அழுதது... அந்தக் காட்சியைப் பார்த்த பிரகதீஸ்வரி

உறைந்து போய் நின்று விட்டாள்... அவளது நெஞ்சம் பதைபதைத்துப் போனது...

"சார்... நீங்க இங்கே இருக்க வேண்டாம்... நிலைமை விபரீதமா போகிறதுக்குள் நீங்க கிளம்புங்க..." அங்கு நின்றிருந்த காவல்துறையினர் அவனை அப்புறப்படுத்தினர்...

சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு சித்தார்த் மனைவியுடன் கிளம்பி சென்று விட்டான்... திரும்பி வரும் போது இருவரிடையே கனத்த அமைதி நிலவியது... சித்தார்த்தும் ஏதோ யோசனையில் வந்தவன் மனைவியை வீட்டில் இறக்கி விட்டு விட்டு தனது வேலையைப் பார்க்க சென்று விட்டான்...

இரவு வீடு திரும்பியவன் உண்டு விட்டு உறங்க வரும் போது தான் மனைவியிடம் தென்பட்ட மாற்றத்தை உணர்ந்தான்... எப்போதும் போல் மனைவியை அணைத்துக் கொண்டு படுத்தவனின் கைகளை விலக்கி விட்டு அவள் தள்ளி படுத்தாள்...

"ஏன்...? என்னாச்சு பேபி...?"

"ப்ளீஸ் வேண்டாம்..." என்று இறைஞ்சுதலுடன் கெஞ்சியவளை கண்டு அவனது உதடுகளில் புன்னகை அரும்பியது...

"நீ பேசுறது ரொம்ப அநியாயம் பேபி... நான் உன்னை எதுவுமே பண்ணலையேம்மா... சும்மா கட்டி பிடிச்சிக்கிட்டுப் படுக்கிறது கூடக் குத்தம்ன்னு சொன்னால் நான் என்ன பண்ணுவேன்...?" பொங்கிய சிரிப்பை அடக்கியபடி கூறிய கணவனை வெறுமையாய் பார்த்தவள்,

"அந்தப் பெண்ணோட வார்த்தைகளே என் காதுகளில் கேட்டுட்டு இருக்கு... அந்தப் பெண் அப்படித் தவிச்சிக்கிட்டு இருக்கும் போது இங்கே நான் மட்டும் சந்தோசமாக, பாதுகாப்பாக உங்களுடன் இருப்பது எனக்கு ரொம்பக் குற்றவுணர்ச்சியா இருக்கு..."

மனைவி பேசிய வார்த்தைகளில் அவனுக்கு லேசாகக் கோபம் வந்தது... இருந்தாலும் அடக்கி கொண்டான்...

"லூசுத்தனமா பேசாதே பேபி... யாரோ எதையோ சொன்னாங்க என்பதற்காக நாம நம்ம சந்தோசத்தை இழக்க முடியாது... யாரும் யாருக்காகவும் வாழ முடியாது... நாம நமக்காக மட்டுமே வாழணும்... அவங்க இதைச் சொன்னாங்க, அதைச் சொன்னாங்க என்பதற்காக எல்லாம் நாம வாழ முடியாது..."

"அந்தக் குழந்தையைப் பார்க்கும் போது ரொம்பப் பாவமா இருந்ததுங்க... அந்தக் குழந்தைக்கு ஏன் இந்த நிலைமை...? எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு... அவங்க கொடுத்த சாபம் பலிச்சுடுமோன்னு..." என்று முகத்தை மூடி கொண்டு அழுதவளை கண்டு என்ன சொல்லி சமாதானம் செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை...

"நீ இப்போ என்ன சொல்ல வர்ற...? வரதனை நான் தான் கொன்னேன்னா...?" அதைச் சொல்லும் போது அவனது வார்த்தையில் அத்தனை வேதனை இருந்தது... இன்னமும் இவள் தன்னைப் புரிந்து கொள்ளவில்லையே என்கிற தவிப்பு இருந்தது...

"அச்சோ... நான் அப்படிச் சொல்லலை..." என்று அவசரமாய் மறுத்தவளை கண்டு அவனது மனம் சிறிது சமாதானமாகியது...

"அப்புறம் எதுக்கும்மா இப்படி நடந்துக்கிற...?"

"எனக்கு என்னவோ போலிருக்கு... எனக்கு... நான் தனியா இருக்கணும் போலிருக்கு..." என்றவளை கண்டு அவன் ஒன்றும் பேசாது எழுந்தான்...

கணவன் அறை கதவை நோக்கி செல்வதைக் கண்டு அவள் கலவரமாய், "எங்கே போறீங்க...?" என்று கேட்க, அதைக் கேட்டு திரும்பி பார்த்த சித்தார்த்,

"உன்னைப் பக்கத்தில் வச்சிக்கிட்டு என் உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதே ரொம்பக் கஷ்டம்... இதில் உன்னைக்

கட்டி பிடிச்சிட்டு கூடப் படுக்கக் கூடாதுன்னு தடை போட்டால் எப்படி...? நிச்சயம் அப்படியிருக்க என்னால் முடியாது பேபி..." என்று தாபமும், விரக்தியுமாய்க் கூறியவன் அவளது அறையை விட்டு வெளியில் சென்று விட்டான்...

சித்தார்த் சென்றதும் தனியே படுத்த பிரகதீஸ்வரியின் விழிகளில் கண்ணீர் வழிந்தது... தூக்கம் தள்ளி போனது... வரதனின் மனைவியின் வார்த்தைகள் அவளது நெஞ்சை வாள் கொண்டு அறுத்தது... இப்படி எத்தனை பேரின் சாபத்தோடு அவர்களது காலம் கழிய போகிறதோ... எத்தனை பேரின் இரத்தத்தில் அவர்களது வாழ்க்கை படகு செல்ல போகிறதோ...

அத்தனை பேரின் சாபமும் ஒன்று சேர்ந்து ஒரு நாள் பலித்து விட்டால்...? அதை நினைத்தவளுக்கு உடல் தூக்கிவாரி போட்டது...

'அப்போ உன் கணவன் இதைச் செஞ்சிருப்பான்னு நீ உறுதியா நம்புறீயா...?' அவளது மனசாட்சியின் கேள்விக்கு 'இல்லை' என்று அவள் உடனே பதில் அளித்தாள்...

ஆனாலும் அவளால் கணவனோடு இயல்பாக ஒன்ற முடியவில்லை... ஏனோ அவனுடன் சந்தோசமாக இருக்க முடியவில்லை... அடுத்தவர்களின் கண்ணீருக்கு நாமும் ஒரு காரணமாக இருக்கிறோமோ என்கிற தவிப்பே அவளுக்கு அதிகமாக இருந்தது...

அடுத்து வந்த நாட்கள் அமைதியாகச் சென்றது... சித்தார்த்தும் அவளின் மௌனம் உணர்ந்து அவனும் அமைதியாகி போனான்... இடையில் பானுமதி மகனுடன் வசிப்பதற்காகச் சென்று விட்டார்... சோலையம்மாள் இவர்களுடன் வந்து இருந்து விட்டார்...

ஒரு வாரத்தில் வரதனை கொன்றவனைப் பிடித்து விட்டனர் காவல்துறையினர்... அதற்குச் சித்தார்த்தின் மறைமுகத் தூண்டுதலும் ஒரு காரணம்... அமைச்சரை பிடித்து வரதனின் கொலை வழக்கை விரைவாகத் துப்பறிய செய்யச் சொன்னதே அவன் தான்...

வரதன் அவன் நண்பனாக இருந்த போதும் அவன் இதைச் செய்தது தனது மனைவிக்காக... எந்நேரமும் சோக சித்திரமாய் உலா வரும் அவளைக் காண பொறுக்க மாட்டாதவனாய் தான் அவன் இதைச் செய்தது... சித்தார்த்தின் நிறுவனம் போன்று வரதன் மூடிய இன்னொரு நிறுவனத்தின் சொந்தக்காரன் தான் ஆத்திரத்தில் இதைச் செய்தது... மறுநாள் செய்தித்தாளில் இந்தச் செய்தி வந்த போது,

"இப்போது உனக்குச் சந்தோசமா...?" என்று மட்டும் கேட்டான்... அவள் மௌனமாகத் தலையை ஆட்டினாள்...

"இப்போ என் மீது கோபமில்லையே..." என்றவனைப் பார்த்து,

"நான் எப்போது உங்க மேல் கோபப்பட்டேன்..." என்றவளை கண்டு வியப்பாய் புருவங்களை உயர்த்தியவன்,

"அடேங்கப்பா... என் கூடப் பேசுறது கிடையாது... ஒரு அணைப்பு, ஒரு முத்தம் இப்படி எதுவுமே இல்லாது போய் விட்டது... இது எல்லாத்துக்கும் மேல் ஒரு புன்னகைக்குக் கூடப் பஞ்சமாகி போய் விட்டது..." என்றவனைத் தவிப்புடன் பார்த்தாள் அவள்...

"அந்தளவுக்கு நான் உனக்கு வில்லனாகப் போய் விட்டேன் இல்லையா...?" என்ன முயன்றும் அவனது மனவேதனையை அவனது குரல் காட்டி கொடுத்து விட்டது...

"மாமூ..." என்றபடி அவனது நெஞ்சில் அவள் சாய்ந்து அழுதாள்...

"என்ன தான்டி உனக்குப் பிரச்சினை...? ஏன் இப்படி இருக்க...?"

"எனக்கு அவங்க சொன்ன வார்த்தைகளை மறக்க முடியலை... ரொம்பப் பயமாயிருக்கு மாமூ..."

"ப்ச்... எல்லோருக்கும் எல்லோரும் நல்லவங்களா இருக்க முடியாது பேபி... நாம நமக்கு மட்டும் நல்லவங்களா இருந்தால் போதும்..."

இதற்கு மேல் சித்தார்த்திற்கும் அவளை என்ன சொல்லி தேற்றுவது என்று தெரியவில்லை... அவனைப் போல் தான் இன்று எல்லோரும் இருக்கின்றனர்... இதில் தன்னை மட்டும் அவள் ஏன் தவறு என்று சொல்கிறாள் என்று அவனுக்குப் புரியவில்லை... ஊரோடு ஒத்து வாழ் என்பது அவளுக்குப் புரியவில்லையா...? இல்லை தெரியவில்லையா...? அவளைப் போன்று வித்தியாசமாகச் சிந்தித்து உலகிற்குப் பைத்தியக்காரனாக அவன் விரும்பவில்லை...

"இன்னைக்கு எங்கேயாவது வெளியில் போகலாமா பேபி...?"

"எங்கே...?" கேள்வியோடு பார்த்தவளின் விழிகள் மீது இதழ் பதித்தவன்,

"உனக்கு ரொம்பப் பிடித்தமான இடத்துக்கு..."

"ம்... சரி..." என்று தலையாட்டிவளை கண்டு அவனுக்குச் சந்தோசமாக இருந்தது...

காரில் அழைத்துச் செல்லாமல் நடத்தி அழைத்துச் செல்பவனை அவள் கேள்வியாகப் பார்த்தாள்... அவளது கேள்வி புரிந்தவனாய்,

"அருவி இருக்கும் இடத்திற்கு..."

அவன் கூறியதும் அவள் முகம் ஒரு மாதிரியாக மாறிப் போனது... ஏனெனில் எப்போது அவன் க்ரானைட் கற்களுக்காக மலையை உடைக்க ஆரம்பித்தானோ அன்றோடு அவள் அந்தப் பக்கம் மறந்தும் செல்வது கிடையாது... அவளது எண்ணம் புரிந்தார் போன்று அவளது தோளில் ஆதரவாய் கை போட்டு கொண்டவன்,

"அங்கு வந்து பார்த்து விட்டு சொல்..." என்று மட்டும் சொன்னான்...

அங்குச் சென்று பார்த்த போது அவளுக்கு மிகவும் மலைப்பாக இருந்தது... ஏனெனில் அங்கிருந்த சிற்பங்கள் எதையும் அவன் சிதைக்கவில்லை... முன்பு கூடக் கேட்பாரற்று தான் அவை கிடந்தன... ஆனால் இப்போது முறைப்படி பராமரிக்கப்பட்டு, பாதுகாப்பாக வேலி போடப்பட்டு இருந்தது...

"மாமூ..." என்று ஆச்சிரியத்துடன் அவள் அவனைப் பார்த்தாள்...

"நீ சொன்ன மாதிரி நான் எதையும் மாத்தவில்லை... அதே சமயம் அதன் விலை மதிப்பை உணர்ந்தவனாய் அதைப் பணமாக்கவும் தவறவில்லை..." என்றவனைக் கண்டு விழிகளைச் சுருக்கினாலும் அவளது மலர்ந்த முகம் வாடவில்லை...

"இங்கே வா..." என்றவன் அடிவாரத்தில் இருந்த அந்தச் சிறிய பிள்ளையார் கோவிலுக்கு அவளை அழைத்துச் சென்றான்...

"அந்தப் பிள்ளையாரா...?" வியப்புடன் கேட்டவளை கண்டு ஆமோதித்தவன்,

"நம்மாளுக்குப் பிடிச்ச பிள்ளையார் வெயிலிலும், மழையிலும் கிடந்து கஷ்டப்படுறாரேன்னு நான் சின்னதா கூரை மாதிரி போட்டு வச்சேன்... அதுக்கு அப்புறம் பார்த்தால் பிள்ளையார் ஒரே நாளில் சூப்பர் ஸ்டார் ஆகிவிட்டார்... இந்தக் கோவில் கூட அவருக்கு வந்த உண்டியல் பணத்தில் இருந்து கட்டியது தான்ம்மா... இதற்கு என்று நான் ஐஞ்சு காசு செலவழிக்கவில்லை..." என்று புன்சிரிப்புடன் கூறியவனைக் கண்டு,

"நீங்க ஒரு கஞ்ச பிசினாறி மாமூ..." என்று வேண்டுமென்றே உரைத்தவளை கண்டு,

"நான் பக்கா பிசினஸ்மேன்ம்மா... ஒரு ரூபாய் என்றாலும் யோசிக்காது செலவளிக்க மாட்டேன்... அதற்கு விதிவிலக்கு நீ மட்டுமே..." என்றான் காதலாய் அவளைப் பார்த்தபடி...

இதுநாள் வரை மனச்சுணக்கத்துடன் இருந்தவளின் மனதினை அவனது காதல் பார்வை சற்றுச் சமனாக்கியது... வரதனின் மனைவியின் வார்த்தையில் சற்று புதையுண்டு போயிருந்த அவளது காதல் மெல்ல மேல் எழும்பலானது...

கணவனது பார்வையைச் சந்திக்க முடியாது கடவுளிடம் தனது பார்வையைத் திருப்பியவள் கண் மூடி, கை கூப்பி நின்றாள் பயபக்தியுடன்... அப்போது அவளது காதருகில்,

"அன்னைக்கு நான் என்ன வேண்டினேன்னு நீ கேட்கவே இல்லையே பேபி..." என்று ஒலித்த கணவனது குரலில் கண்களைத் திறந்து அவனைப் பார்த்தாள் கேள்வியாய்...

"உன்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு வேண்டினேன்... வாழ்க்கையில் விரும்பியது எல்லாம் நான் கேட்காமல் எனக்கு கிடைத்தது... ஆனால் நான் விரும்பிய நீ எனக்குக் கிடைக்காமல் போய் விடுவியோன்னு எனக்கு ரொம்பப் பயமாயிருந்தது... ஆனால் இந்தப் பிள்ளையார் ரொம்ப சக்தி வாய்ந்தவர் தான்... நான் விரும்பிய உன்னை எனக்குக் கல்யாணம் பண்ணி வச்சிட்டாரே..." என்றவன் அங்கிருந்த திருநீறை எடுத்து அவளது நெற்றியில் வைத்து விட்டு அன்று அவள் ஊதியது போல் அவனும் திருநீறை ஊதி விட்டான்...

அவனது வார்த்தையில், நேசத்தில் அவளது மனம் உருகி போனது... என்ன தவம் செய்தாளோ இத்தகைய காதலுடைய கணவனை அவள் அடைய...

"மாமூ..." என்று கண்கள் கலங்கியவளின் நெற்றி மீது தனது நெற்றியை முட்டி அவளது திருநீறை தனது நெற்றியில் பூசி கொண்டவன் அவளைப் பார்த்து கண்சிமிட்டி சிரித்து,

"உன் மாமூவே தான்... என்னைக் கொஞ்சமாவது புரிந்து கொள்ள முயற்சி செய்யேன் பேபி..." என்றவனின் குரலில் மகிழ்ச்சியையும் மீறி ஏக்கம் இழையோடியது...

"ம்... ம்... புரிஞ்சிக்கிட்டேன்..." என்றவளை அவன் அணைத்துக் கொள்ள...

"ஐயோ கடவுள் முன்னாடி போய்..." என்றவளை கண்டு வாய் விட்டு சிரித்தவன்,

"அதற்காகத் தான் கடவுள் உன்னை என்னிடம் கொடுத்து இருக்கிறார்... நீ இது கூடத் தெரியாத மக்கு பேபியா இருக்கியே..." என்று அவன் கிண்டலடிக்க...

"ம்... ம்... போங்க மாமூ..." என்று சிணுங்கியவள் ஒரே ஓட்டமாகக் கோவிலை விட்டு வெளியில் வந்தாள்...

இருவரும் மலை மீது ஏறி அதன் உச்சிக்கு வந்தனர்... அடிவாரத்தில் கோர்த்த அவளது கையை அவன் மேலே வந்தும் விடவில்லை... அவளது தோளில் கை வைத்து தோள்பட்டையின் நாடி வைத்து அவளோடு சேர்ந்து இயற்கையைத் தானும் ரசித்தவன்,

"ரொம்ப அழகாயிருக்கு இல்லையா...?" என்றவனைக் கவலையுடன் பார்த்தாள் அவள்...

"இந்த அழகை தானே கொஞ்சம் கொஞ்சமா சிதைச்சிக்கிட்டு இருக்கீங்க...?"

"என்ன உளர்ற...?" அவனுள் கோபம் எட்டி பார்த்த போதும் அதை அடக்கி கொண்டான்...

"அன்னைக்குச் சொன்ன மாதிரியே... இந்த ஆத்து தண்ணியைப் பாட்டில் போட்டு விற்கிறீங்களே... இது நியாயமா மாமூ...? குடிக்கிற நீர், சுவாசிக்கிற காத்து இதுக்கு எல்லாம் நாம் பணம் வசூலிக்கிறது தப்பு இல்லையா...? இப்படி நிலத்தடி நீரை உறிஞ்சிய பிறகு கடைசியில் நாம எதைக் குடிப்போம்...? எதைப் பாட்டிலில் அடைத்து விற்பீங்க...? இயற்கை அழியும் போது

இயற்கையாய் கிடைக்க வேண்டிய வளங்களும் நம்மை விட்டு அழிந்து போகுதேன்னு உங்களுக்கு ஏன் தோணலை...? இன்னைக்குப் பாட்டிலில் தண்ணி அடைச்சு விற்கிறீங்க... நாளைக்குச் சுவாசிக்கிற காற்றையும் பிடிச்சு விற்பீங்களா...? அப்போ நம்ம குழந்தைங்க நிலைமை என்னவாகும் மாமு...? கொஞ்சம் வருங்காலத்தைப் பத்தியும் சிந்தியுங்கள்..."

அவளது பேச்சு அவனுக்குச் சிரிப்பை வரவழைத்தது போலும்... அவன் வாய் விட்டு, மனம் விட்டுச் சிரித்தான்... அவனது சிரிப்பு மலைகளில் இடிமுழக்கம் போன்று எதிரொலித்தது...

"குட் ஐடியா... இவ்வளவு நாளாய் எனக்கு இந்த ஐடியா தோணாம போச்சு பார்... இனி நீ சொன்னது போல் ஆக்சிஜனையும் விற்கலாம்ன்னு நினைக்கிறேன்... நீ என்ன நினைக்கிற பேபி...?" என்று சிரிப்புடன் கேட்டவனைக் கண்டு அவளது தனது விழிகளைக் கோபமாய்த் திருப்பிக் கொண்டாள்...

அன்று போல் அவள் பின்னே வந்து அவளை அணைத்து கொண்டவன், "நீ சொல்றது வெறும் வார்த்தைக்கு வேணும்ன்னா சரி வரும் பேபி... இப்போ நான் இதைச் செய்யலைன்னா வேறு ஒருத்தன் இதைச் செய்யப் போகிறான்... நாம ஒழுங்கா இருந்தால் மட்டும் போதாது... ஒட்டு மொத்த சமுதாயமும் திருந்த வேண்டும்... அப்போ நானும் திருந்தறேன்... இப்போ திருந்தி பைத்தியக்காரன் பட்டம் வாங்க நான் தயாராக இல்லை..." என்றவன்,

"நாம எல்லாத்தையும் மறந்து சந்தோசமா இருக்கணும்ன்னு தான் இங்கே வந்தது... இப்போ இந்தப் பேச்சு தேவை தானா...?"

அவனது வார்த்தையில் இருந்த உண்மையில் அவள் வாயை மூடி கொண்டாள்... பின் மலையை விட்டு இறங்கி ஆற்றோரமாய் நடந்து வந்த போது இருவருள்ளும் பழைய ஞாபகம்...

"அன்னைக்கு நீ இதில் விழுந்தப்போ என் உயிரே போயிருச்சுத் தெரியுமா பேபி..."

அவளை அணைத்திருந்த அவனது கைகள் அவனது மனதினை போல் நடுங்கியது... அவனது வார்த்தையில் இருந்த தவிப்பை அவனது தொடுகையில் அவள் உணர்ந்தாள்...

"உனக்கு ஏதாவது ஒண்ணு ஆச்சுன்னா அந்தக் கணம் நானும் உயிரோடு இருப்பதில் அர்த்தம் இல்லைன்னு நான் நினைச்சேன்... எனக்கே என்னை நினைச்சு வியப்பா இருந்தது... எதற்கும் இத்தனை உணர்ச்சிவசப்படுகிறவன் நானில்லை... ஆனால் உன்னிடத்தில் மட்டும் அன்றிலிருந்து இன்று வரை நான் இப்படித்தான் இருக்கிறேன்... அன்று தான் உணர்ந்தேன் நீ எந்தளவுக்கு என் மனதில் உறைந்திருக்கிறாய் என்று..." என்றவன் அவளது கையை எடுத்து தனது நெஞ்சின் மீது வைத்து,

"கல் போன்ற என் இதயத்தில் கல்வெட்டாய் பதிந்தவள் நீ மட்டும் தான்டி..." என்றவனை அவள் இமைக்க மறந்து பார்த்திருந்தாள்...

"ஹலோ மேடம்... இதுக்கே இப்படி ப்ரீஸாகிட்டீங்கன்னா எப்படி...? இன்னும் நான் என் காதலை காட்டினால் என்னாகுவாயோ..." என்று கூறி சிரித்தவனின் சிரிப்பு அவளின் மனதினை கொள்ளை கொண்டது...

"நானும் அன்னைக்குத் தான்..." எப்படிச் சொல்வது என்று தெரியாது நிறுத்தியவளை கண்டு,

"நீயும்..." என்று புன்னகையுடன் அவன் அவளை ஊக்குவித்தான்...

"அன்னைக்கு நான் தாவணி இல்லாமல் இருப்பதைப் பார்த்து நீங்க உங்க சட்டையைக் கழட்டி கொடுத்துட்டு திரும்பி நின்னீங்களே... அப்போ தான் நீங்க என் மனசில் ஆழமாய் நுழைஞ்சீங்க..." என்றவள் அவன் முகம் காண

நாணி அவனது நெஞ்சில் முகத்தைப் புதைத்து கொண்டாள்...

இருவருமே ஒரே நேரத்தில் தங்களது காதலை உணர்ந்ததை எண்ணி சந்தோசம் அடைந்தவன் அவளை அணைத்துக் கொண்டு,

"இது மட்டும் பப்ளிக் ப்ளேசஸா இல்லாமல் இருந்தால் நடந்திருப்பதே வேறு..."

"இல்லைன்னா மட்டும் என்ன செஞ்சு இருப்பீங்களாம்..." என்று கண்சிமிட்டியபடி கேட்டவளை அழைத்துக் கொண்டு யாருமில்லாத தனித் தீவிற்குச் சென்று விட வேண்டும் என்று அவனது மனம் தாபமாய்த் தவித்தது...

"வா என் கூட..." என்றவன் நேரே அவளை அழைத்துக் கொண்டு சென்ற இடம் தோப்பு வீடு...

பத்தடியில் இருந்த அந்த வீடு வரை அவளை நடத்தி செல்வதற்குக் கூடப் பொறுமை இல்லாதவனாக அவளைத் தனது கைகளில் தூக்கி கொண்டவன் அந்த வீட்டை நோக்கி நடந்தான்...

"மாமூ... யாராவது பார்க்க போறாங்க..." என்று அவளது வாய் அப்படிச் சொன்னாலும் விழிகளில் மயக்கத்தைத் தேக்கி, மையலுடன் தனது கைகளை அவனது கழுத்தில் மாலையாகக் கோர்த்திருந்தாள்...

"நீ சொல்றதை பார்த்தால் பயப்படுற மாதிரி தெரியலையே..." அவளது மூக்கோடு மூக்கு உரசியபடி கேட்டவனின் கன்னத்தை வாஞ்சையுடன் வருடியவள்,

"என் புருசன் கூட இருக்கிறதுக்கு நான் ஏன் பயப்படணும்...?"

"அடேங்கப்பா... பேபி நல்ல முன்னேற்றம் தான்..." என்றவன் அவளை வீட்டினுள் வந்து இறக்கி விட்டு கதவை சாத்தி விட்டு மீண்டும் அவளை விட்டு பிரிய

முடியாதவனாய் அவளை இறுக்கமாய் அணைத்துக் கொண்டான்...

"ஐ லவ் யூ பேபி..." என்று வார்த்தையால் அர்சித்துக் கொண்டே முத்த மழையில் அவளைக் குளிப்பாட்டினான் அந்தக் காதல் கணவன்...

அவளும் கண்களை மூடி கிறங்கி போய் அவனிடத்தில் தன்னை ஒப்பு கொடுத்து நின்றிருந்தாள்... ஒரு கட்டத்திற்கு மேல் எல்லை மீறாது கண்ணியம் காத்து விலகியவனைக் கண்டு அவளுள் ஏமாற்றம் எழவில்லை... மாறாக 'இவன் என்னவன்' என்கிற நேசமே அதிகரித்தது...

"இதற்கு மேல் இங்கிருந்தால் தவறு... வா, வெளியில் திண்ணையில் போய் உட்காரலாம்..." என்று அவளை அழைத்துக் கொண்டு வந்து திண்ணையில் அமர்ந்தான்...

அவளுக்கு அருகில் கால் நீட்டி அமர்ந்து கொண்டு தென்னை மரத்தில் இருந்து இசைத்துக் கொண்டிருந்த குருவியை வேடிக்கை பார்த்தான் சித்தார்த்... பிரகதீஸ்வரியோ அவனைப் பார்த்திருந்தாள்...

"உங்க கிட்ட நிறைய மாற்றங்கள் மாமூ... முதன் முதலா உங்களைப் பார்த்த போது இருந்தவருக்கும் இப்போது இருக்கிறவருக்கும் எத்தனை வித்தியாசங்கள்..." என்று அவள் ஆச்சிரியமாகக் கேட்டாள்...

அதில் அவனது முகம் மாறிப் போனது... தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"ஏன் அதே சித்தார்த் தான்... என்ன ஒன்று அப்போ இருந்ததை விட இப்போ இன்னும் ஸ்மார்ட்டாகி இருக்கிறேன்... எல்லாம் என் காதல் தேவதையைக் காதலித்ததன் பலன்..." என்று அவளது இரு கன்னம் பற்றிக் கிள்ளி கொஞ்சி விளையாடியபடி கூறியவனைக் கண்டு,

"பொய் சொல்லாம சொல்லுங்க... முதல்ல உங்களுக்கு என்னைப் பிடிக்காது தானே... ஏன் மாமூ...? அம்மாவுக்கும் உங்களுக்கும் மட்டும் என்னைப் பிடிக்காம போச்சு..."

"ச்சு... லூசு மாதிரி பேசாதே... நான் எப்போ அப்படிச் சொன்னேன்..."

"அப்போ உங்களுக்கு முன்னமே என்னைப் பிடிக்குமா...?"

"ம்... பிடிக்கும்... என் கனவில் நித்தமும் நான் காணும் முகம் உன்னது... உன்னை நான் எப்படி மறப்பேன்... உன்னை எப்படி எனக்குப் பிடிக்காது போகும்..."

விழிகளில் காதல் சொட்ட, சொட்ட கூறியவனைக் கண்டு அவள் மலைத்து நின்றாள்... இந்தளவிற்கா கணவன் தன்னைக் காதலிக்கிறான் என்று...

"அப்போ ஏன் என்னை அடிச்சீங்க...?"

அதற்கு அவனால் பதில் கூற முடியவில்லை... கனவில் கண்ட முகத்தை நேரில் கண்ட அதிர்ச்சியா...? இல்லை அந்த முகத்தைத் தேடி தேடி தவித்திருந்த ஆழ்மனதின் ஏமாற்றத்தினால் விளைந்த கோபத்தின் வெளிப்பாடா...? எதுவென்று அவனால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை...

"அது வந்து..."

"அம்மா என்னைப் பத்தி உங்க கிட்ட தவறா சொல்லி இருந்தாங்களா...?"

அவன் யார் கூறுவதையும் ஆராயாமல் ஏற்பவன் அல்ல... அவனது கோபத்திற்கான காரணம் விமலாராணி அல்ல... அது வேறு... அதே காரணம் தான் விமலாராணி பிரகதீஸ்வரியை வெறுப்பதற்கும் காரணம்... இவை எல்லாவற்றின் ஆரம்பப் புள்ளி அவளது பிறப்பு...

அவன் எல்லாவற்றையும் முதலில் இருந்து சொல்வதாக இருந்தால் அவளது பிறப்பு பற்றிய ரகசியத்தைச் சொல்ல வேண்டும்... அதைச் சொன்னால் அவள் தாங்குவாளா...? நிச்சயம் மனைவி தாங்க மாட்டாள் என்றே அவனுக்குத் தோன்றியது...

"யார் என்ன சொன்னாலும் நான் இந்தக் காதில் வாங்கி விட்டு அந்தக் காதில் விட்டிருவேன்... என் குணம் அப்படிப்பட்டது... எனக்கா தோன்றினால் மட்டுமே மனசை மாத்திப்பேன்... உன் விசயத்தில் அது தான் நடந்தது... உன்னை அடிச்சதுக்கு, உன் கிட்ட எரிஞ்சு விழுந்ததுக்கு எல்லாம் காரணம் வேறு... அந்தக் காரணத்தைப் பத்தி இப்போ கேட்காதே... அதுக்குன்னு நேரம் வரும் போது நானே உன்னிடம் சொல்கிறேன்... இது எல்லாத்தையும் விட இந்தச் சின்னப் பொண்ணை நான் உயிருக்கு உயிரா நேசிச்சேன்... அது தான் உண்மை... எத்தனை நாள் வேதனைப்பட்டு இருப்பேன் தெரியுமா...? ஏன்டா போயும் போயும் இந்தச் சின்னப் பெண்ணின் மீது உனக்குக் காதல் வந்ததுன்னு... ஆனால் அலைபாயும் என் மனசை கட்டுப்படுத்த என்னால் முடியாது போனது..."

"ஓ... அன்னைக்கு நான் பார்க்கும் போது தோட்டத்தில் அப்படி ஒரு வேதனையோடு உட்கார்ந்து இருந்தது... இதுக்காகத் தானா...?"

"ம்... என்னை விட வயதில் ரொம்பச் சின்னப் பெண்... என் தங்கையை விடவும் சின்னப் பெண் நீன்னு என் மனசு உறுத்திக்கிட்டே இருந்தது... ஆனா என்னால் உன் மீதான மயக்கத்தில் இருந்து மீள முடியவில்லை... நாளுக்கு நாள் உன்னை விட்டுக் கொடுக்கக் கூடாதுங்கிற வெறி தான் அதிகமாகிட்டு போச்சே தவிர, அது கொஞ்சமும் குறையவில்லை... உன்னை என்னுடையவள் ஆக்கணும்ன்னு நினைச்சு தான் அவசரமா உனக்குப் பதினெட்டு வயசு ஆனதும் உன்னை நான் கல்யாணம் பண்ண நினைச்சது... எல்லோரையும் சரி கட்டி கல்யாண மணமேடை வரை கொண்டு வந்த நம் திருமணத்தை நீ பாதியில் நிறுத்திட்ட..." என்று வேதனையுடன் அவன் நிறுத்தினான்...

அவனது வேதனையைப் போக்கும் பொருட்டு அவனது முகத்தை வருடி, புருவத்தை நீவி விட்டவள், "சாரி... சாரி... சாரி... நான் ரொம்பத் தப்பு பண்ணிட்டேன்..." என்றாள் கண்கள் கலங்க...

"த்ச்சு... விடு பேபி... இப்போ சந்தோசமா இருக்கும் போது இது எதுக்கு...?" என்றவன் அவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்... சிறிது நேரம் அவனது அணைப்பில் கட்டுண்டு இருந்தவள் பின் அவனை நிமிர்ந்து பார்த்து,

"அம்மா பத்தி ஏதாவது தகவல் கிடைச்சதா...?" என்றவளை பார்த்தவன் பார்வை கூர்மையானது...

"இல்லை... நீலேஷ், அண்ணா பத்தி எல்லாம் தெரிஞ்சு வச்சியிருக்கிறீங்க... அதான் கேட்டேன்..."

விமலாராணியின் நிலை என்ன...? என்று அவனுக்குத் தெரியும்... அதைச் சொன்னால் அதற்கும் 'நீ தான் காரணம்' என்று மனைவி தன்னைக் குற்றம் சாட்டுவாளோ என்று பயந்து அவன் வாயை இறுக மூடி கொண்டான்... இப்போது தான் ஒரு பஞ்சாயத்தை முடித்து இருக்கிறான்... அதற்குள் அடுத்து இன்னொன்றா...? நிச்சயம் அவனால் தாங்க முடியாது என்றே அவன் நினைத்தான்...

“தெரியவில்லை... தேடி கொண்டே இருக்கிறேன்...” என்று கூறி உண்மையை மறைத்தவன்,

"பேபி... எல்லாம் சரி தான்... உன் வீண் கொள்கைகளைப் பிடித்துக் கொண்டு தொங்கி கொண்டு இருக்காமல் என் பக்கத்து நியாயத்தையும் கொஞ்சம் யோசித்துப் பாரம்மா..."

"அப்போ நீங்க செய்றது தப்பு இல்லையா...?"

"போச்சுடா திரும்பவுமா...? நான் மட்டுமா செய்கிறேன்... ஊரில் எல்லோரும் தான் செய்கிறாங்க... இயற்கையை அழிக்கிறோம்ன்னு நீ சொல்ற... நாங்க தூய்மையான நீர், வீடு கட்டுவதற்குத் தேவையான ஆற்று மணல், அப்புறம் புறம்போக்கு நிலங்களா கேட்பாரற்று கிடக்கும் நிலத்தில் குடியிருக்க வீடும், தொழிற்சாலைகளும் அமைத்து மக்களுக்கு நல்லது தானே பண்றோம்..."

"ஆமாம், ஆமாம் ரொம்ப நல்லது பண்றீங்க...? இது எல்லாம் அரசாங்கம் பார்த்துக்காதா...?"

"அரசாங்கம் தான்டி எங்களை மாதிரி ஆளுங்களைச் செய்யச் சொல்லிட்டு எங்க கிட்ட பணம் வாங்குது... நாங்க கொடுத்த பணத்தை நாங்க எங்கே இருந்து எடுக்க... மக்கள் உங்க கிட்ட இருந்து தான் எடுக்கணும்..."

"மாமூ..." என்று ஆதங்கமாய்ப் பார்த்தவளை கண்டு,

"எல்லாமே பக்கா பிசினஸ்டி என் மக்கு பொண்டாட்டி... இது எல்லாம் சொன்னால் உனக்குப் புரியாது... அதனால் அமைதியாக இரு... நீ என்னை எதிர்த்தாலும் பரவாயில்லை பேபி... ஆனால் வெறுத்து மட்டும் விடாதேடி... இத்தனை நாள் நீ பேசாம இருந்தது எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருந்தது..."

கடைசி வரியை கூறும் போது அவனது விழிகள் தொலைவில் வெறித்தது... அவனது மன கஷ்டத்தை அவனது விழிகளில் கண்டாளோ என்னவோ...

"சாரி மாமூ... இனி நான் இப்படி நடந்துக்க மாட்டேன்..." என்றவள் அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்...

அவளை அணைத்து கொண்டவன் அவளது காதில், "எப்போடா நீ படிச்சு முடிப்பன்னு இருக்கு பேபி... உன்னைப் போல் நிறையப் பெண் குழந்தைகளைப் பெத்துக்கணும்ன்னு ஆசையா இருக்கு..." என்று கூறியவனின் வார்த்தையில் வழிந்த தாபத்துடன் கூடிய காதலை உணர்ந்தவளாய் அவளும் அவனை இறுக அணைத்துக் கொண்டு,

"எனக்கு நிறைய எல்லாம் வேண்டாம் மாமூ... உங்களை மாதிரி ஒரே ஒரு பையன் மட்டும் போதும்..."

"அது என்ன ஒண்ணு மட்டும்..."

"ஒரு சித்தார்த்தையே தாங்க முடியலை... இதில் நிறையச் சித்தார்த்தா...? வேண்டாம்..." என்று அலறியவளின் கன்னத்தைப் பற்கள் பதிய கடித்தவன்,

"என்னைப் பார்த்தால் உனக்கு அலறுவது போல் பயங்கரமா இருக்கா...? உன்னை..." மீண்டும் அவன் அவளது மறு கன்னத்தைக் கடிக்க...

"உங்களைப் பார்த்தால் மயக்கம் தான் வருகிறது... அதுவும் வெறும் மயக்கம் அல்ல... காதல் மயக்கம்..." என்றவளை அணைத்து இருந்தவனின் அணைப்பு இன்னமும் இறுகியது...

இருவரது விழிகளிலும் வருங்காலம் பற்றிய கனவு விரிந்தது...!!!

****

அதே நேரம் நீலேஷ் மும்பைக்குக் கிளம்பி கொண்டிருந்தான்... அவனது தங்கை நேத்ரா அவனுடன் சண்டை பிடித்துக் கொண்டிருந்தாள்...

"நீ மட்டும் ஸ்வேதாவை கல்யாணம் பண்ணிக்கணும்... ஆனால் நான் சித்துவை மறக்கணுமா...? இது எந்த ஊர் நியாயம்...?" என்று பொருமினாள் அவள்...

"இங்கே பார் சித்து விசயத்தில் நீ வீணாய் அடம்பிடிக்காதே... அவன் மனசை மாற்றுவது என்பது அவ்வளவு எளிது கிடையாது... இப்போ அவன் அவனது மனைவியோடு சேர்ந்து வாழ்றான்... இப்போ நீயும், நானும் அவங்களைப் பிரிக்க நினைச்சா அவன் நம்மைப் பிரிச்சு மேய்ஞ்சிருவான்... ஜாக்கிரதை... அதனால் நமக்கு இருக்கும் ஒரே சாய்ஸ் ஸ்வேதா மட்டும் தான்..."

"நமக்குன்னு ஏன் சொல்ற...? உனக்குன்னு சொல்லு..." எரிச்சலுடன் மொழிந்தாள் அவள்...

"ஆமாம் எனக்குத் தான்... இந்த ஸ்வேதா மூலம் தான் நான் இந்த ஃபார்மாவை என் கைவசம் கொண்டு வர போகிறேன்... அதன் பிறகு..." என்று கனவில் மிதந்தான் நீலேஷ்...

வாழ்க்கை என்ன வைத்துக் காத்திருக்கிறது என்று தெரியாமல் மனிதன் தன்னுடைய கனவின் எல்லையை விரிவுப்படுத்திக் கொண்டே போகிறான்...

எல்லோரின் கனவுகளும் நனவாவது இல்லை... நனவாகிய கனவுகள் நிரந்தரமாய் இருப்பது இல்லை...!!!

"மலரினும் மெல்லியாள் அவள்...
கல்லினும் கடினமானவன் அவன்...
மலர் கல்லினை நாடுவது ஏனோ...???
கல்லுக்குள் ஈரமாய் அவனுள்
காதலிருப்பதால் தானோ...???
காதல் புரியாத புதிர்... இவர்களது
காதலும் புரியாத புதிர் தான்,
இவர்களால் மட்டுமே
விடுபடும் புதிர்...!!!"

நனவாகும்...!!!

அதிகாலையில் எழுந்து குளித்து விட்டு வந்த பிரகதீஸ்வரி கண்ணாடி முன் நின்று நெற்றிக்கு திலகமிட்டுக் கொண்டிருக்கும் போது பின்னால் இருந்து அணைத்தான் அவளது காதல் கணவன் சித்தார்த்... அவனது செயலில் முகம் மலர்ந்தவளாய் அவள் அவனைத் திரும்பி பார்த்தாள்...

"ஹேப்பி வேலன்டைன்ஸ் டே பேபி..."

மனைவியின் முகம் பார்த்து புன்னகையுடன் கூறியவன் அடுத்த நொடி அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்து அவளது மேனியில் கமழ்ந்த நறுமணத்தை மூச்சிழுத்துச் சுவாசித்துத் தன்னுள் நிரப்பிக் கொண்டான் சுகமாய்... மனைவியவளின் அருகாமை, அவளது பிரத்யேக நறுமணம் எல்லாம் சேர்ந்து அவனது உணர்வுகளை எங்கெங்கோ தறி கெட்டு பறக்க செய்தது...

கணவன் வாழ்த்து கூறியதும் தான் அவளுக்குமே அந்தத் தினம் ஞாபகத்தில் வந்தது... ஆனாலும் சிரித்துக் கொண்டே,

"நாம என்ன காதலர்களா...?" என்று கேட்க...

"என்ன இப்படிக் கேட்டுட்ட...? நரை விழுந்து கிழவன், கிழவியானாலும் நாம ரெண்டு பேரும் காதலர்கள் தான்... வாழ்நாள் முழுவதும் காதலிச்சிக்கிட்டே தான் இருப்போம்..."

"அப்படின்னா சரி... வாழ்த்து சொல்ல வேண்டியது தான்..." என்றவளை அவன் கிறக்கமாய்ப் பார்க்க...

அவள் அவனது கன்னத்தில் முத்தமிட்டு, "ஹேப்பி வேலன்டைன்ஸ் டே..." என்க...

அதற்கு மேலும் ஆசையைக் கட்டுப்படுத்த இயலாது அவளது இதழில் ஆழமாய் ஒரு முத்தம் ஒன்று வைத்தான் அந்தக் காதல் கணவன்... எவ்வளவு நேரம் மூழ்கினாலும் மீண்டும் மீண்டு எழ தோன்றாத சுழலில் சிக்கி கொண்டது

போன்றதொரு மயக்கம் இருவருள்ளும்... மயக்கத்தில் இருந்து விடுபட விரும்பாது அவர்கள் தங்களுக்குள் திளைத்திருந்த போது சுவர் கடிகாரம் இன்னிசையாய் இசைத்து அவர்களை நிகழ்காலத்திற்கு அழைத்து வந்தது...

நாண புன்னகையுடன் கணவனிடம் இருந்து விலகிய பிரகதீஸ்வரியை தடுத்த சித்தார்த் அவளை அழைத்து வந்து கட்டிலில் அமர வைத்து விட்டு அங்கிருந்த அலமாரியை திறந்தான்... மனைவியோ புன்சிரிப்புடன் அவனைப் பார்த்திருந்தாள்... அலமாரியில் இருந்து எதையோ கைகளில் மறைத்தபடி எடுத்து வந்தவன் அவள் முன் மண்டியிட்டு அமர்ந்தான்...

"என்ன மாமூ இது...? எழுந்திரிங்க..."

அவனது செயலில் சிறிது பதட்டத்துடன் கூறியவளை கண்டு கொள்ளாது அவளது வலது காலை எடுத்து தன் மடி மீது வைத்து கையிலிருந்ததை அவளது காலில் அணிவித்தான்... பிறகு அவளை நிமிர்ந்து பார்த்து,

"பிடிச்சியிருக்கா...?" என்று கேட்டவனைக் கண்டு வியப்புடன் அகன்ற விழிகளில் விழிநீர் தேங்கி நிற்க,

"ம்... ம்..." என்றவளுக்கு உணர்ச்சி பெருக்கில் வார்த்தைகள் வரவில்லை...

கணவன் அணிவித்த தங்க கொலுசில் இருந்து அவளால் தனது கண்களை வேறு எங்கும் திருப்ப முடியவில்லை... சாதாரணக் கால் கொலுசாக இருந்த போதும் அது அவ்வளவு நேர்த்தியான வேலைப்பாடுடன் அழகாக இருந்தது... இடது காலிலும் கொலுசை அணிவித்த சித்தார்த் அதன் சலங்கையை மெல்ல வருடியபடி,

"ஏன் இப்போது எல்லாம் நீ கொலுசு போடுறது இல்லை...?"

"எதுவுமே பிடிக்கலை..." என்று சோகம் கலந்து கூறியவளை நிமிர்ந்து பார்த்தவனின் விழிகளில் அதை விட அதிகமாய்ச் சோகம் எட்டி பார்த்தது... ஏனெனில் அவளது இந்தச் சோகத்திற்கு அவனும் ஒரு காரணம் அல்லவா...

"எல்லாம் என்னால் தான் இல்லையா பேபி..." என்று வருத்தத்துடன் கூறியவன் அவளது மடியில் தலை சாய்ந்து கொண்டான் தனது துயரம் தீர்க்கும் பொருட்டு...

"நீங்க மட்டும் காரணம் இல்லையே... நானும் சேர்ந்து தானே..." என்று கூறியவளின் கை விரல்கள் அவனது தலையை ஆதரவாய் வருடி விட்டது...

சில நிமிடங்கள் பேச்சற்ற மௌனம் இருவரையும் ஆக்கிரமித்துக் கொண்டது... சித்தார்த் தான் முதலில் சுதாரித்தது...

"இந்தக் கொலுசு எப்போது வாங்கியது தெரியுமா...?" அவனது விழிகளில் தெரிந்த ஆர்வத்தில் அவளுள்ளும் ஆர்வம் பெருகியது...

"எப்போ...?" கண்கள் மின்ன ஆர்வமாய்க் கேட்டவளை கண்டு காதல் பெருக்கெடுக்க அவன்,

"நம்ம கல்யாணத்துக்கு முன்னே வந்த காதலர் தினம் அன்னைக்கு..."

அவன் கூறியதை கேட்டு இன்ப அதிர்ச்சி அடைந்தவள் அவனது கன்னத்தை மெல்ல வருடியபடி, "அப்பவே கொடுத்து இருக்கலாமே..."

"அப்போ கொடுக்கலாம்ன்னு தான் நினைச்சேன்... ஆனால்..." என்று நிறுத்தியவன் மனைவியின் மடி மீது நாடி வைத்து அவளை ஏறிட்டு பார்த்தவன்,

"சொன்னா அடிக்கக் கூடாது..."

"ச்சு... நான் போய் உங்களை அடிப்பேனா...?" என்று சிணுங்கியவளின் கால்களை எடுத்து தனது கைகளில் தாங்கியவன் தனது உதடு கொண்டு அவளது கால் விரல்களின் நுனியில் அழுத்தமாய் முத்தமிட... அவனது செய்கையில் அவள் உறைந்து போய் அவனை இமைக்காது பார்த்தாள்... அவனது காதல் அவள்

மனதினை நாய்க்குட்டியாய் மாற்றி அவன் பின்னால் விருப்பமாய்ச் சுற்ற வைத்தது...

"நம்ம முதலிரவு அன்னைக்கு உன் காலில் இதைப் போட்டு விடணும்ன்னு நினைச்சேன்... இப்போ கொடுத்த மாதிரி முத்தம் கொடுக்கணும்ன்னு நினைச்சேன்... ஆனால் எல்லாமே..." என்று வேதனையுடன் நிறுத்தியவன் அதை எண்ணி பார்த்தவனாய் கண்களை மூடி கொண்டான்...

அவனது வேதனை அவளையும் வாட்டியது என்னவோ உண்மை தான்... ஆனால் இப்படியே இருவரும் மாறி மாறி வேதனைப்பட்டுக் கொண்டிருப்பதால் எதுவும் மாறப் போவது இல்லையே... அதனால் அவனது மனதினை மாற்றும் பொருட்டு,

"அது மட்டும் தான் நினைச்சீங்களா...? வேறு எதுவும் நினைக்கலையா...?" என்று குறும்பு குரலில் கேட்ட மனைவியைக் கண்டு தனது மன வருத்தம் மறைந்தவனாய் விழி திறந்து பார்த்தவன்,

"கொழுப்புடி உனக்கு..." என்றான் அதே குறும்பு குரலில்...

"ஒருத்தன் நல்லவனா இருந்தா இப்படித் தான்ம்மா நினைக்கத் தோணும்..."

"பேச்சு மாத்தாதீங்க... பதில் சொல்லுங்க..." என்று கண்டிப்புடன் கேட்டாலும் அவளது விழிகளில் விசமம் வழிந்தது...

"ஹா... ஹா... இப்போ மாதிரியே அப்போதும் விரதம் தான் காத்து இருப்பேன்..." என்று வாய் விட்டு சிரித்தவனை வாஞ்சையுடன் பார்த்தாள் அவள்...

எல்லாவற்றிலுமே கணவனின் பரிமாணம் அவளைப் பிரமிக்க வைத்தது... தொழிலிலும் சரி, காதலிலும் சரி அவனின் நிலையே வேறு... எல்லாமே சற்று அதிகப்படி தான்... ஆனாலும் காதலில் அவனது இந்த அதிகப்படியான நிலை ஏனோ அவளுக்குப் பிடித்துத் தான் இருந்தது...

"கொஞ்சம் இரு..." என்றவன் எழுந்து சென்று மீண்டும் அலமாரியில் இருந்து எதையோ எடுத்துக் கொண்டு திரும்பினான்...

அதைப் பார்த்ததும் தெரிந்து போனது அது ஒரு நகைப்பெட்டி என்று... அதை அவளது கைகளில் வைத்தவன்,

"திறந்து பார்..." என்க...

விழிகளில் வியப்பை தேக்கியபடி அதைத் திறந்து பார்த்தவளின் விழிகள் அகல விரிந்தது... உயர்சாதி வைரங்களைக் கொண்டு அழகுற உருவாக்கப்பட்டு இருந்த கழுத்தணி, காதணி, வளையல், மோதிரம் அடங்கிய அந்த நகைகள் அவனைப் போன்றே அவளது மனதினை மயக்கியது... அவனது நேசம் அவளது மனதினை உருக்கியது...

"நான் உங்களுக்கு எதுவுமே வாங்கலையே..." கண்கள் கலங்க கூறியவளை அணைத்து கொண்டவன்,

"உன்னோட காதலை விடவா வேறு பரிசு எனக்கு வேண்டும்... எனக்குக் கிடைத்த பரிசுகளில் சிறந்தது நீ தான்டி... உன்னை விட மதிப்புள்ள பரிசு இந்த உலகத்தில் வேறு எதுவும் இல்லை... உன் அன்பு, காதல் எல்லாம் ஒட்டு மொத்தமாய் எனக்கு வேண்டும்... எனக்கு மட்டுமே வேண்டும்... நம் பிள்ளைங்களுக்குக் கூடப் பங்கு போட நான் விட மாட்டேன்..." என்றவனைக் கண்டு உணர்ச்சி பெருக்கில் கண்ணீர் வடித்தவள் அவனின் நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்...

"உன்னோட அன்புக்கு முன் இது எல்லாம் தூசி... இன்னும் பெருசா ஏதாவது செய்யணும் பேபி..." என்று அவளை உச்சி முகர்ந்தவன் அவளது முகத்தை நிமிர்த்தி,

"ஏதாவது கேள் பேபி... இந்தக் காதலர் தின பரிசா உனக்கு நான் அதைக் கொடுக்கிறேன்..." என்றவனை இமைக்காது பார்த்தாள் அவள்...

"நான் என்ன கேட்டாலும் கொடுப்பீங்களா...?"

"என் பேபி மீது சத்தியமா..."

"சத்தியம் செய்த தசரதனின் நிலை தெரியும் தானே..." என்று நமட்டு சிரிப்புடன் வினவிய மனைவியவளின் கூர் மூக்கை பிடித்து ஆட்டியவன்,

"உனக்காக உயிரையும் கொடுக்க நினைக்கிறவன் நான்... நீ கேட்பதை நான் செய்ய மாட்டேனா..." என்று அவன் வாய் சவடால் பேச...

அதற்கு மனைவியவள் கூறிய வார்த்தையில் திகைத்து போய் அவளைப் பார்த்தான் அவன்... அவனது திகைப்பை கண்டு சிரித்தபடி எழுந்தவள் அவனது சிகையைக் கலைத்து விட்டபடி கலகலவெனச் சிரித்தவள்,

"இதுக்குத் தான் மாமூ யோசிக்காம வார்த்தையை விடக் கூடாது..." என்றவள் அறையை விட்டு வெளியில் சென்றாள்...

அவள் கூறிய வார்த்தைகளைச் சிந்தித்தபடி அப்படியே அமர்ந்திருந்தான் அவன்...

****

"டேய் ஆகாஷ்... இங்கே வாடா..." என்று அண்ணன் மகனை அழைத்தான் அர்ஜூன்...

"என்ன சித்தப்பா...?" என்று கேட்டபடி அங்கு வந்தான் அர்ஜூனின் அண்ணன் மகன்...

"சித்தி கிச்சன்ல இருக்காங்க... நான் கூப்பிட்டேன்னு சொல்லி கூட்டிட்டு வா..." சித்தப்பா கூறியதை கேட்டு சிறுவன் சமையலறையை நோக்கி ஓடினான்...

காதலர் தினம் அதுவுமாகக் காலையில் எழுந்ததும் அவசரமாக மனைவியைத் தேடிய அர்ஜூன் அவள் அறையில் இல்லாததைக் கண்டு கடுப்பாகியவன் குளித்துத் தயாராகி வெளியில் வந்து அவளை மீண்டும்

தேடியவன் அவள் சமையலறையில் எல்லோருடனும் அரட்டை அடித்துக் கொண்டு இருப்பதைக் கண்டு எரிச்சலுற்றான்...

'இங்கே ஒரு மனுசன் இவளுக்காகத் தவிக்கிறது இவளுக்குக் கொஞ்சமாவது புரியுதா...?' என்று தவிப்புடன் காத்திருந்தான் அவன்...

"எதுக்குடா மித்ராவை கூப்பிட்ட...?" என்று கேட்டபடி அவனது அன்னை அங்கு வந்தார்...

அதற்குப் பதில் சொல்லாது அண்ணன் மகனை முறைத்து பார்த்தவன், "நான் உன் கிட்ட என்னடா சொன்னேன்...?"

"நான் சித்தியை தான் கூப்பிட்டேன் சித்தப்பா..." என்று கூறியவன் அங்கிருந்து நைசாக நழுவி விட்டான்...

"அவள் சமையல்கட்டில் வேலையா இருக்கிறாள்... உனக்கு என்னடா வேணும்...?"

"ம்... ஒரு முத்தம் வேணும்... நீங்க கொடுக்கிறீங்களா...?"

அவனுக்கு இருந்த கடுப்பில் அவன் அன்னையிடம் எரிந்து விழுந்து விட்டு அறைக்குச் சென்று விட்டான்... ஒரு நொடி திகைத்து விழித்த அவனது அன்னை பிறகு சிரித்தபடி சமையலறைக்குச் சென்று மருமகளை அழைத்து மகன் அழைப்பதாய் கூறியவரின் முகத்தில் புன்னகை மறையவில்லை...

"கூப்பிட்டீங்களா அர்ஜூன்..."

கண்கள் மீது கை வைத்தபடி படுக்கையில் சாய்ந்திருந்த கணவன் அருகில் வந்து சங்கமித்ரா கேட்டதும் தான் தாமதம் அடுத்த நொடி அவள் கணவனின் மடி மீது விழுந்திருந்தாள்... திருமணமாகி இத்தனை நாளில் அவன் இது போன்று எல்லாம் செய்தது கிடையாது... அதனால் அவள் பயத்துடன் கணவனைப் பார்த்திருந்தாள்...

"ஹேப்பி வேலன்டைன்ஸ் டே மித்தும்மா..." என்றான் அவன் காதலாக...

அவன் அவளைத் தொடவில்லை... முத்தமிடவில்லை... ஆனாலும் அவன் தனது பார்வையால் அவளை வன்மையாய் காதல் செய்து கொண்டிருந்தான்...

"பதிலுக்கு என்னை வாழ்த்த மாட்டியா மித்து...?"

அவனது காதல் கலந்து ஒலித்த வார்த்தையில் சுரணை அடைந்தவள் அவன் மடியில் இருந்து எழுந்து பக்கத்தில் அமர்ந்தவள் தயக்கத்துடன் அவனைப் பார்த்தாள்...

"ஐ லவ் யூ சொல்ல தான் உனக்குக் கஷ்டமா இருக்கும்... வாழ்த்துச் சொல்வதற்குக் கூடவா கஷ்டமாயிருக்கு..."

அவளது முகத்தில் படிந்திருந்த முடிக் கற்றையை எடுத்து மெல்ல அவளது காதுக்குப் பின்னால் சொருகி விட்ட கணவனின் மெல்லிய ஸ்பரிசம் அவளுள் ஏதேதோ செய்தது... அவனின் அருகாமையில், அவனது மென்மையான தொடுகையில், அவனது காதல் பார்வைகளில் இப்போது எல்லாம் அவளது மனம் பெரிதும் சலனம் அடைந்து கொண்டு இருக்கிறது...

"ஹேப்பி வேலன்டைன்ஸ் டே..." என்று தயங்கி தயங்கி சொன்னவளை கண்டு,

"ஹேய்..." என்று மகிழ்ச்சியில் கூவியபடி ஆர்ப்பரித்த கணவனைக் கண்டு அவளது முகம் சிவந்து போனது வெட்கத்தில்...

தனது சட்டை பையில் இருந்து ஒற்றைப் பருமனான வைரம் பதித்த பதக்கம் கொண்ட தங்க சங்கிலியை எடுத்த அர்ஜூன் அதை மனைவியின் கழுத்தில் போட்டு விட்டான்... அப்போது மனைவியின் மேனியின் மென்மையை உணர்ந்தவனால் தனது கைகளை எடுக்க மனம் வரவில்லை... அங்கேயே தேங்கி விட முடியாது வேறுவழியின்றிப் பெருமூச்சு விட்டபடி மனமில்லாது தனது கைகளை எடுத்தான்...

"நான் எதுவுமே வாங்கலையே..." என்று குற்ற மனப்பான்மையுடன் தலை குனிந்தவளை கண்டு,

"வாங்கலைன்னா என்ன மித்தும்மா... உன்னிடம் இருப்பதை நீ கொடுக்கலாம்..." என்று கூறியவனை அவள் யோசனையாய் பார்க்க...

அவன் தனது கன்னத்தினைக் காட்டி, "இங்கே ஒண்ணு கொடுக்கலாம்..." என்று தாபத்தோடு கூற...

அதில் அவள் குறும்பு மீண்டவளாய், "ஒண்ணு என்ன பத்து கூடக் கொடுக்கிறேன்..." என்று அவள் தனது கையை அடிப்பது போல் ஓங்கி கொண்டு அவன் அருகில் வர... அவனோ அசையாது அப்படியே அவளைப் பார்த்திருந்தான்...

அதில் திகைத்து போனவளாய் அவனைப் பார்த்தவள் அவனின் விழிகளில் வழிந்த நேசத்தில் மனம் தடுமாறியவளாய் விழித்து நின்றாள்... பின் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவனது கையைப் பிடித்து அதன் புறங்கையில் மென்மையாய் தனது இதழ்களைப் பதித்தாள்... மனைவின் இதழொற்றலை ஒரு நொடி கண் மூடி ரசித்தவன் பின் கண் திறந்து,

"தேங்க்ஸ் மித்து..." என்றவனின் பார்வையில், வார்த்தையில் அத்தனை நேசம் வழிந்தது...

அவனது பார்வையின் வீரியத்தைத் தாங்க முடியாதவளாய் அவள் வெட்கம் கொண்டு அறையை விட்டு ஓடி விட்டாள்... அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டு இருந்தவனின் மனதில் தாப தீ பற்றி எரிந்தது... ஓடி செல்லும் மனைவியைச் சிறை எடுத்து முத்தத்தால் குளிப்பாட்டி தண்டனை கொடுக்க வேண்டும் என்று காதலில் வன்மையாய் நினைத்தது அவனது மனம்... ஆனால் அதற்கான நேரம் இதுவல்ல என்பதை உணர்ந்தவனாய் அவன் அமைதி காத்தான்...

அவனுக்கு என்று ஒரு நேரம் வரும்... அந்த நேரம் அவன் தனது காதலை முழுவதும் அவளிடம் காட்டுவான்... அப்போது அவனின் மனதில் இருக்கும் காதலின் அளவு மனைவியவளுக்குப் புரியும்...

****

"ரொம்பக் கஷ்டமா இருக்கா சந்து குட்டி..."

மூன்று மாதங்கள் ஆகியும் இன்னமும் மனைவியை மசக்கை போட்டு படுத்துவதைக் கண்டு ஹரிப்ரசாத் கவலையுடன் வினவினான்...

"குழந்தை உண்டாகினா இப்படித் தான் இருக்கும் ஹரி... இன்னும் கொஞ்ச நாட்களில் சரியாகிரும்..." என்று பானுமதி மகனிடம் கூற...

"மூணு மாசம் முடிய போகுது... இப்பவும் இப்படி வாந்தி இருந்தால் எப்படிம்மா...? பாருங்க... எப்படி இருந்தவள் இப்படிப் பாதியா மெலிஞ்சு போயிட்டாள்..."

கணவனது அக்கறை சந்தியாவின் மனதின் ஆழம் வரை சென்று தித்தித்தது...

"எனக்கு ஒண்ணும் இல்லை அத்தான்..." என்று அவள் அவனைச் சமாதானப்படுத்தியதில் அவன் அரை மனதுடன் அலுவலகத்திற்குக் கிளம்பி சென்றான்...

அடுத்தச் சில மணி துளிகளில் வீடு திரும்பியவனின் கைகளில் அந்த ஊரில் தயாரிக்கப்படும் பிரத்யேக இனிப்புப் பண்டங்கள் அனைத்தும் இருந்தது... அதைக் கண்டு ஆச்சிரியத்தில் விழிகளை விரித்தாள் அவனது மனையாட்டி...

சிரித்தபடி சிறியவர்களுக்குத் தனிமை கொடுத்து விட்டு பானுமதி விலகி சென்று விட்டார்...

கையிலிருந்த இனிப்பை எடுத்து மனைவிக்கு ஊட்டி விட்ட ஹரி, "இன்னைக்கு என்ன நாள் தெரியுமா...?"

"தெரியாதே..." என்று விழி விரித்த மனைவியின் நெற்றியில் முத்தமிட்டவன்,

"இன்னைக்குக் காதலர் தினமாம்..."

"ஓ..." என்றவள் அமைதியாகி போனாள்...

அவர்களது திருமணம் காதல் திருமணம் அல்ல... ஆனாலும் அவர்களிடையே அந்தக் காதல் சற்றும் குறைவில்லாது இருந்தது...

மனைவியின் அமைதியை பார்த்தவன் ஒன்றும் பேசாது தன்னிடம் இருந்த கவரை பிரித்து அதில் இருந்ததை எடுத்து அவளது கரத்தில் அணிவித்தான்... அதைக் கண்டவளின் விழிகளில் பெருத்த ஆச்சிரியம் வந்தது...

"அத்தான், இங்கே எப்படி நம்ம ஊர் கண்ணாடி வளையல்கள் கிடைத்தது...?"

"கடையில் சொல்லி வச்சு வாங்கினேன்..." என்றவன்,

"பிடிச்சிருக்கா...?" என்க...

சந்தியா கணவனை ஏறிட்டு பார்த்தாள்... வார்த்தைகளால் காதலை சொல்லா விட்டாலும் தனது ஒவ்வொரு செயலிலும் காதலை உணர்த்தும் கணவன் அமைவது வரம்... அப்படிப்பட்ட ஒரு வரம் தனக்குக் கிடைத்து இருப்பதை உணர்ந்தவளாய்,

"பிடிச்சிருக்கு... ரொம்ப ரொம்பப் பிடிச்சிருக்கு..." என்றவள் எம்பி கணவனது கன்னத்தில் முத்தமிட்டாள்...

அவளது செய்கையில் ஆச்சிரியத்தில் உறைந்தான் ஹரி... இத்தனை நாளில் அவனாய் தான் அவளைத் தொட்டு இருக்கிறான்... அணைத்து இருக்கிறான்... முத்தமிட்டு இருக்கிறான்... முதன் முறையாக மனைவி கொடுத்த இதழொற்றல் அவன் உயிர் வரை தீண்டி சென்றது...

"அவ்வளவு பிடிச்சியிருக்கா...?" விழிகளில் காதல் வழிய கேட்டவனைக் கண்டு தலை குனிந்து கொண்டே அவள் 'ஆம்' என்க...

"உனக்குப் பிடிச்ச ஸ்வீட்டை விடவா...?"

கணவனது குரலில் திகைத்து போய் நிமிர்ந்தவள் அவனது கண்ணில் வழிந்த குறும்பில்,

"அத்தான்..." என்று சிணுங்கியபடி அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்...

"ஹா... ஹா..." என்று வாய் விட்டு சிரித்தபடி அவளை அணைத்துக் கொண்டான் அவன்...

காதலை வாய் விட்டு சொல்லவில்லை என்றாலும் இவர்களது காதலும் உண்மை தான்... அளவுகோல் கொண்டு அளவிட முடியாது தான்...

****

அன்று ஸ்வேதா சற்று நேரத்தோடு வேலைக்கு வந்து விட்டிருந்தாள்... இன்னமும் சரவணன் வேலைக்கு வந்து சேரவில்லை...

'தினமும் அப்படி என்ன தான் வெட்டி முறிப்பானோ...?' என்று மனதில் அவனைத் திட்டி கொண்டே வேலை செய்தாள் அவள்...

அப்போது இண்டர்காம் ஒலித்தது... எடுத்து பேசியவளின் புருவங்கள் சுருங்கியது யோசனையில்... தன்னைப் பார்க்க நீலேஷ் வந்திருப்பதை உணர்ந்து அவளுக்குக் குழப்பமாக இருந்தது...

"வர சொல்லுங்க..." என்றுரைத்து விட்டு அழைப்பை துண்டித்தாள்...

"ஹாய் ஸ்வேதா..." என்று அட்டகாசமான சிரிப்புடன் ஆர்ப்பட்டமாய் உள்ளே நுழைந்தான் நீலேஷ்... அவன் கைகளில் சிவப்பு ரோஜா பூக்கள் அடங்கிய பூங்கொத்து ஒன்று இருந்தது... அதைக் கண்டு ஸ்வேதாவின் விழிகள் இடுங்கியது...

"வாங்க கார்த்திக்..." என்று அவனைப் புன்னகையுடன் வரவேற்றவள் வெகு ஜாக்கிரதையாகத் தன் முன்னிருந்த நாற்காலியை சுட்டி காட்டி,

"உட்காருங்க..." என்றாள்...

அதை நீலேஷ் கருத்தில் கொள்ளாது அவள் அருகில் வந்து அவள் முன் மண்டியிட்டு அமர்ந்து பூங்கொத்தை அவள் புறம் நீட்டி,

"ஐ லவ் யூ ஸ்வேதா... வில் யூ மேரி மீ...?" என்று காதலை சொல்லிவிட்டு அதன் அடுத்தக் கட்டமான திருமணத்திற்கும் அவன் அச்சாரத்தை விதைத்தான்...

என்ன பதில் சொல்லுவது என்று தெரியாது அவள் விழிக்கும் போது ஆபத்பாந்தவனாய் சரவணன் அங்கு வந்து சேர்ந்தான்... அவனைக் கண்டதும் ஸ்வேதாவின் விழிகளில் சிறு நிம்மதி படர்ந்தது...

"என்ன ஸ்வேதா பதில் சொல்ல மாட்டேங்கிற...? இந்த மூணு வருசமா நான் உன்னை லவ் பண்றேன்... என்னை உனக்குப் பிடிச்சியிருக்கா...? நாம கல்யாணம் பண்ணிக்கலாமா...?" என்று நீலேஷ் மீண்டும் கேட்டான்...

'எவ்வளவு நேரம் தான்டி மண்டி போடுறது... இருடி, நம்ம கல்யாணத்துக்குப் பிறகு உன்னைக் காலம் முழுவதும் என் காலை பிடிக்க வைக்கிறேன்...' என்று மனதிற்குள் அவளைக் கடுப்புடன் திட்டியபடி இருந்தான் அவன்...

நீலேஷின் வார்த்தைகளில் ஸ்வேதா கர்வமாய்ச் சரவணனை பார்த்தாள்... சரவணன் அதைச் சிறிதும் கண்டு கொள்ளாது 'ஓ... இவன் தானா அந்தக் கார்த்திக்...' என்று மனதில் நினைத்தபடி கண்களில் சுவாரஸ்யம் பொங்க, கைகளைக் கட்டி கொண்டு இருவரையும் வேடிக்கை பார்க்கலானான்...

சரவணன் வேடிக்கை பார்ப்பது கண்டு அவளுள் ஏதோ ஒன்று புசுபுசுவென்று பொங்கியது... கோபத்துடன் நீலேஷின் கைகளில் இருந்த பூங்கொத்தை பிடுங்கியவள் அதை எடுத்துக் கொண்டு சரவணன் அருகே வந்தவள் அதை அவனிடம் நீட்டினாள்...

அதைக் கைகளில் வாங்காது சரவணன் அவளை வைத்த கண் வாங்காது பார்த்தான்...

"ஒழுங்கு மரியாதையா இதை வாங்கு... இல்லை நடப்பது வேறு..." என்று அவள் பல்லை கடித்தாள்...

"இதை உன் காதலன் உனக்குக் கொடுத்து இருக்கிறான்... இது உனக்கானது... எனக்கானது இல்லை ஸ்வேதா..." என்றான் அவன் அழுத்தம் திருத்தமாய்...

சரவணனை முறைத்து பார்த்தவள், "உன்னால் ஒழுங்கா நடிக்கக் கூட முடியாதாடா...?" என்று கடுகடுத்தவள் பின் அவனைக் கண்டு கொள்ளாது அவனது கரத்தோடு கரம் கோர்த்தபடி நீலேஷ் புறம் திரும்பியவள்,

"சாரி மிஸ்டர். கார்த்திக்... இவர் என்னோட கணவர்... நான் இவரைத் தான் காதலிக்கிறேன்..." என்க...

அதைக் கேட்டு சரவணன் முகம் மலர்ந்தது என்றால், நீலேஷின் முகம் அவமானத்தில் விகாரமாய் மாறியது... ஆனாலும் சித்தார்த்திடம் உள்ள பயத்தில் சற்று அடக்கி வாசிக்க எண்ணினான்...

"அப்போ நாம பழகியது எல்லாம் பொய்யா ஸ்வேதா...?"

அறியா பிள்ளை போல் அவன் கூறியதை கேட்டு வேறு ஆண் யாராக இருந்தாலும் மனைவி மீது சந்தேகம் கொண்டு இருப்பார்கள்... ஆனால் சரவணன் அது போல் சந்தேகம் கொள்ளாது மனைவியவளின் கைகளில் இருந்த பூங்கொத்தை வாங்கியபடி,

"ஐ லவ் யூ ஸ்வீட் ஹார்ட்..." என்று காதலில் கசிந்து உருகினான்...

அவனது காதலில் ஸ்வேதா மட்டும் அல்லாது நீலேஷும் அதிர்ந்து போய் விட்டான்...

தனது சட்டை பையில் இருந்து மோதிரம் ஒன்றை எடுத்து அவளது கையில் போட்டு விட்ட சரவணன், "இந்தக் காதலர் தினத்திற்கு உனக்கான என்னுடைய பரிசு இது... அது

போல் உன்னுடைய பரிசு எங்கே ஸ்வீட்டி...?" என்று கொஞ்சியவன் மனைவியின் இதழ்களைத் தாபமாய் வருடி கொண்டே நீலேஷை 'இன்னமுமாய் நீ இங்கே நிற்கிறாய்...' என்பது போல் துச்சமாகப் பார்த்து வைத்தான்...

அதற்கும் அசையாது நீலேஷ் நிற்பதை கண்டு வேறுவழி இல்லாது சரவணன் மனைவியின் தாடையைப் பற்றி அவளது முகம் நோக்கி குனிய, அந்தக் காட்சியைக் காண சகிக்காது ஆத்திரம் அடைந்த நீலேஷ் அங்கிருந்து வேகமாய் வெளியேறி விட்டான்...

தற்பொழுது நீலேஷால் எதுவும் செய்ய முடியாத நிலை... ஏனெனில் சித்தார்த்திடம் அவனுக்கு அப்படி ஒரு பயம் உண்டு... அதனால் தானே இந்த மூன்று வருடங்களாக ஸ்வேதா மனம் மாறக் காத்திருந்தான்... இல்லை என்றால் அவனது வீட்டில் சொல்லி ஸ்வேதா வீட்டில் திருமணம் பற்றிப் பேச செய்து இருப்பானே... ஆனால் தங்கையின் விருப்பம் இல்லாது சித்தார்த் இதற்குச் சம்மதிக்க மாட்டான்... நிச்சயம் அதைத் தடை செய்திருப்பான்... அதனால் தான் அவன் ஸ்வேதா மனம் கனியும் வரை அமைதி காத்தது...

கடைசியில் காத்து இருந்தவன் பொண்டாட்டியை நேற்று வந்தவன் தள்ளி கொண்டு போன கதையாக அவன் சரவணனிடம் ஏமாந்து போய் நிற்கிறான்... அவனுக்கு வந்த ஆந்திரத்தில் சித்தார்த்தை ஏதாவது செய்ய வேண்டும் என்று கோபமாக வந்தது... எல்லாம் கிடைக்கப் பெற்ற அவனைக் கண்டு இவனுக்குப் பொறாமையாக இருந்தது...

அரசன் அன்றே கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்... இந்த நீலேஷும் நின்று கொல்ல முடிவு செய்தான்... மனிதன் கடவுளாக மாறுவதற்குப் பதில் மிருகமாக மாற எண்ணினான்...!

"ச்சீ... என்ன பண்ற...?"

நீலேஷ் சென்றதும் தைரியம் வர பெற்றவளாய் ஸ்வேதா ஒரு கையால் சரவணனது கைகளைத் தட்டி விட்டவள்,

மறுகையால் அவனது முகத்தைப் பிடித்துத் தள்ளினாள்... அதைக் கண்டு சிரித்தபடி விலகிய சரவணன் அவளைப் பார்த்து கண்சிமிட்டியபடி,

"நான் நன்றாக நடித்தேனா ஸ்வேதா..."

புன்னகையுடன் கேட்டவனைக் கண்டு அவளுள் பெரும் ஏமாற்றம் கவிழ்ந்தது... அவனையே இமைக்காது பார்த்து கொண்டிருந்தாள்...

"சரி, சரி நேரமாகுது... அந்த மோதிரத்தை கழட்டி கொடு..." என்று அவன் அவளை அவசரப்படுத்தினான்...

கணவனது வார்த்தைகள் கேட்டு மனம் துணுக்குற்றவள் அதைச் செய்யாது, அசையாது நின்றாள்...

"சோனு வர்ற நேரமாச்சு ஸ்வேதா..."

அதில் அவளது ஒற்றைப் புருவம் கேள்வியாய் ஏறியது...

"இன்னைக்கு லவ்வர்ஸ் டே இல்லையா... அதனால் அவளுக்கு என் காதலை சொல்லி இந்த மோதிரத்தை பரிசளித்து..." என்று கூறிக் கொண்டே வந்தவன் திடுமென நாணி கோணினான்...

அதைக் கண்டு எரிச்சலுற்று, "பார்க்க சகிக்கலை..."என்று வெடுவெடுத்தாள் அவள்...

மனைவியவளின் வார்த்தையில் கம்பீரமாக நிமிர்ந்தவன் அவளது விழியோடு விழி நோக்கியபடி, "அவள் கூட டேட்டிங் போகலாம்ன்னு இருக்கேன்... சீக்கிரம், க்விக்கா மோதிரத்தை கழட்டி கொடு..."

அவனது வார்த்தைகளில் கோபம் தலைக்கேற அவனது சட்டை காலரை பிடித்து இழுத்து, "கொடுக்க முடியாது போடா... உன்னால் என்ன செய்ய முடியும்...?" என்றாள் தெனாவெட்டாய்...

"என்ன செய்ய முடியும்...? உன் விரலை அறுத்தா மோதிரத்தை எடுக்க முடியும்... பரவாயில்லை இந்த

மோதிரத்தை நீயே வச்சுக்கோ... இந்த மோதிரம் இல்லைன்னா என்ன...? என் மனதில் காதல் இருக்கிறது அல்லவா... அவளுக்கு என் மனசு மட்டும் போதுமாம்..." என்று கனவில் மிதந்தபடி கூறியவன் பின் மனையாட்டியை கண்டு முகத்தைச் சுளித்துக் கொண்டு,

"ஒரு பவுனுக்கு உண்டான பணம் வேஸ்ட்..." என்று புலம்பியபடி நகர்ந்தவன் போகும் முன் தனது கைகளில் இருந்த பூங்கொத்தை குப்பை தொட்டியில் போட்டு விட்டே சென்றான்... அதைக் கண்டவள் மனதில் ஏதோ ஒரு இனம் புரியா உணர்வு சூழ்ந்து அவளை வாட்டி வதைத்தது...

அவன் சென்றதும் கதவின் அருகில் சென்றவள் அதன் கண்ணாடி வழியே வெளியே பார்த்தாள்... அவன் சொன்னது போல் நேரே அந்தச் சோனாலியை தேடி தான் சென்றான்... இருவரும் சிரித்துப் பேசுவது கண்டு அவளது மனம் பொறாமையில் பொங்கியது... பின் தனது இருக்கையில் அமர்ந்தவள் தனது வலக்கை விரலில் இருந்த மோதிரத்தை எடுத்து பார்த்தாள்...

'S' என்ற ஆங்கில எழுத்துடன் இருந்த அந்த மோதிரத்தை கண்டு அவளுக்கு ஆத்திரம் தலைக்கேற பல்லை கடித்தாள்...

'உன்னை இப்படியே விட்டு வச்சா நீ சரிப்பட்டு வர மாட்ட சரவணன்... உன்னை எங்கே லாக் பண்ணணுமோ அங்கே லாக் பண்றேன்...' என்று கோபத்துடன் மனதிற்குள் கூறி கொண்டவளுக்கு ஒன்று மட்டும் தெரியவில்லை... அது அவளது பெயரும் 'S' என்கிற ஆங்கில எழுத்தில் தான் தொடங்கும் என்று...

தனது நினைவை செயல்படுத்துவதற்குத் தான் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று அவள் யோசிக்க ஆரம்பித்தாள்...

****

"எங்கே போகிறோம்...?" என்று ஆர்வமாய்க் கேட்ட மனையாளை கண்டு மந்தகாச புன்னகை புரிந்தான் சித்தார்த்...

"ப்ச்... இப்படியே சிரிச்சு சிரிச்சு மழுப்பாதீங்க... பதில் சொல்லுங்க..." என்று சிணுங்கலாய் கேட்டவளை கண்டு அவனது உதடுகளில் விசம புன்னகை எட்டி பார்த்தது...

"என்ன சிணுங்கல் எல்லாம் பலமா இருக்கு...? நான் ஒண்ணும் பண்ண மாட்டேன்ங்கிற தைரியமா...?"

"ம்... அதுவும் தான்..." என்றவள்,

"பேச்சை மாத்தாம பதில் சொல்லுங்க..."

அவள் கேட்டுக் கொண்டு இருக்கும் போதே வர வேண்டிய இடத்திற்கு அவர்கள் வந்து சேர்ந்து இருந்தனர்... காரை நிறுத்தியவன்,

"இறங்கி வந்து பாரு தெரியும்..." என்று கூறிவிட்டு முதலில் தான் இறங்கியவன் அவள் இறங்கும் முன் மறு பக்கம் வந்து நின்று திறந்திருந்த கதவை பிடித்துக் கொண்டு நின்றான்... அதில் மனைவியவளின் மனம் கர்வம் கொண்டது காதலாய்... அதைக் கண்டு அவனிலும் பெருமிதம் தோன்றியது...

"என்னைச் சைட் அடிச்சது போதும்... சுற்றிலும் பார்..."

கணவன் சொன்னதும் அவள் தனது விழிகளைச் சுற்றிலும் ஓட்டியவள் அப்படியே சந்தோசத்தில் திக்குமுக்காடி போய் நின்று விட்டாள்... இதைச் செய்தது தனது கணவன் தானா என்று அவளால் இன்னமும் நம்ப முடியவில்லை... ஆனந்தத்தில் அவளது விழிகளில் கண்ணீர் மழை போல் பொழிந்தது... அதே மகிழ்ச்சியோடு அவள் சுற்றுப்புறம் மறந்தவளாய் கணவனை இறுக அணைத்து கொண்டாள்...

காலையில் மனைவி தன்னிடம் கேட்டதை மாலையில் உடனே செயலாற்றி இருந்தான் அந்தக் காதல் கணவன்...

எப்போதுமே சித்தார்த்தின் காதலின் பரிமாணமே வேறு அல்லவா...!!!

"பகலவன் மேற்கில் உதிக்கும் அதிசயம்,
பகலவனின் மேற்கு மீதான காதல்...
புலி புல்லை உண்ணும் அதிசயம்,
புலியின் புல் மீதான காதல்...
கல்லில் விதை முளைக்கும் அதிசயம்,
கல்லின் விதை மீதான காதல்...
என்னில் உன் மீதான காதல்,
என்னை நீயாக மாற்றும் காதல்...
நான் நானில்லாது நீயாகி போனதன்
மாயம் தானென்னவோ...!!!"

நனவாகும்...!!!

"மாமூ..."

பிரகதீஸ்வரி மனம் நெகிழ கணவனின் நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்... அவளது விழிகள் சுற்றுப்புறத்தை பிரம்மிப்புடன் பார்த்தது... காலையில் தனது விருப்பத்தைத் தெரிவித்த போது கூட அவள் நம்பவில்லை... கணவன் தான் விரும்பியதை செய்வான் என்று... ஆனால் இப்போது அவள் முழுமனதாய் அவனை நம்பினாள்...

நிச்சயம் கணவனின் மனதில் ஈரம் இருக்கிறது... அதனால் தான் பூமி தாயை இப்படிக் குளிர செய்திருக்கிறான்...

"நீ கேட்ட பரிசு... உனக்குப் பிடிச்சியிருக்கா பேபி...?" என்று கேட்ட சித்தார்த்தை நிமிர்ந்து பார்த்தவள்,

"இப்போ தான் உங்களை ரொம்ப ரொம்பப் பிடிச்சியிருக்கு..." என்றாள் விழிகளிலும், நெஞ்சிலும் நேசத்தினைத் தேக்கி...

"உனக்கு என்னைப் பிடிக்கும்ன்னு எனக்கு எப்போவோ தெரியும்... இப்போ நான் கேட்டது இதை..." என்றவன் தன் முன் இருந்ததைச் சுட்டி காட்டினான்...

காலையில் கணவனிடம் அவள் கேட்ட பரிசு இது தான்...

"நீங்க ரியல் எஸ்டேட் பண்ணுவதற்காக மரங்களை வெட்டியிருக்கிற அந்தப் பத்து ஏக்கர் நிலத்திலும் மீண்டும் நீங்க மரம் வைக்கணும்... வறண்டு இருக்கிற பூமி தாயை மறுபடியும் நீங்க குளிர வைச்சிங்கன்னா... என் மனசும் குளிர்ந்து போகும்... இது தான் நீங்க கொடுக்கும் எனக்கான காதலர் தின பரிசு..."

முதலில் அதைக் கேட்டு அவனுக்குச் சிறிது கோபம் வந்தது... அதை நிலத்தை விற்றால் எத்தனை கோடிகள் லாபம் வரும் என்று தெரியாத முட்டாளாக மனைவி பேசுவதைக் கேட்டு எரிச்சலும் வந்தது... ஆனால் மனைவியவள் கேட்டு அவனால் மறுக்க முடியவில்லை...

அவன் அடுத்தவர்களுக்குத் தானமாகக் கொடுப்பதற்குத் தான் ஆயிரம் தடவை யோசிப்பான்... அதை வீண், தண்டச்செலவு என்பான்... ஆனால் தன்னவளுக்குக் கொடுப்பதற்கு அவன் நொடி நேரமே யோசித்தான்... பின் முடிவு செய்தவனாய் மரம் வைப்பது பற்றி விசாரித்து மாலையில் உடனே அதைச் செயலாற்றி விட்டான்...

எல்லாவற்றிலும் லாபம் மட்டுமே பார்ப்பவன் இப்போது தன்னவளுக்காகப் பொதுநலத்தோடு இதைச் செய்த போதும் இதில் இருந்ததும் அவனுக்குக் கிடைத்தது பெரும் லாபமே... தன்னவளின் மனதினை முழுமையாய் கொள்ளை கொண்டு விட்டானே... இதை விட அவனுக்கு வேறு என்ன வேண்டும்... காதல் கொடுக்கல், வாங்கலிலும் சித்தார்த் ஒரு நல்ல தொழிலதிபனாய் தன்னை நிலை நிறுத்தி கொண்டான்...

பிரகதீஸ்வரி அங்கு நடப்பட்டு இருந்த செடிகளின் அருகே சென்றவள் குனிந்து அதை மெல்ல வருடி கொடுத்தாள்... அந்தச் செடிகள் காற்றில் தலையாட்டியது பார்ப்பதற்கு அவளை வரவேற்பது போல் தோன்ற அதைக் கண்டு அவளது முகம் மலர்ந்து விகசித்தது... அவளது மலர்ச்சி அவனையும் தொற்றிக் கொள்ள அவன் உற்சாகமாக அவள் அருகில் வந்து நின்றான்... குனிந்த வாக்கில் கணவனை ஏறிட்டு பார்த்தவளின் விழிகள் அவனின் உருவத்தை முழுதாய் மனதில் வாங்கிக் கொண்டது...

இரு கைகளையும் பேண்ட் பாக்கெட்டில் விட்டபடி, கால்களை அகற்றிக் கொண்டு புன்னகையுடன் அவன் நின்றிருந்த விதம் அவள் மனதினை மயக்குவதாய்... அதிலும் அவளை அள்ளி பருகுவது போல் அவன் பார்த்த பார்வையில் பாவையவளின் மேனி சிவந்து போனது... நாணத்தில் அவள் மீண்டும் செடிகளின் பக்கம் தனது பார்வையைத் திருப்பினாள்...

அப்போது தான் செடிகள் நடப்பட்டு இருக்கும் விதத்தில் இருந்த வித்தியாசத்தை உணர்ந்தாள்...

"இது என்ன இவ்வளவு நெருக்கமா செடிகளை நட்டு வச்சியிருக்கீங்க...? இப்படி இருந்தால் எப்படி வளரும்...?"

அவளது குரலில் சிறிது கவலை எட்டி பார்த்தது... வாடிய பயிரை கண்ட போது எல்லாம் வாடிய வள்ளலார் போன்று மெல்லிய மனம் படைத்த பெண் அல்லவா அவள்...

"பத்து வருசமாய் மெதுவே வளரும் மரம் இரண்டே வருசத்தில் அதே வளர்ச்சியை அடைய வேண்டுமா இல்லையா...? அதற்காகத் தான் இந்த முறை..."

"அது எப்படிச் சாத்தியம்...?" அவள் திருதிருவென முழித்தாள்....

இது என்ன தொழிலா பணத்தை முதலீடு செய்தவுடன் மறுநாளே பணத்தைக் கையில் அள்ளி எடுப்பதற்கு... இது விவசாயம்... பூமி தாய் மனம் குளிர்ந்து அவளாய் வாரி வழங்கினால் மட்டுமே இது சாத்தியம்... அதுவும் பத்து வருட வளர்ச்சியை இரண்டு வருடங்களில் கொண்டு வருவது என்பது சாத்தியமே இல்லை... அசாத்தியமான ஒன்று...

"இதற்குப் பெயர் மியாவாக்கி முறை... இந்த முறையில் செடிகள் வளர்த்தால் இரண்டே வருடங்களில் பூமி முழுவதும் பசுமையாக மாறி விடும்..."

அவளுக்கு உயிர் மூச்சு விவசாயம் தான்... அவள் கூட இது பற்றி எல்லாம் தெரிந்து வைத்து இருக்கவில்லை... ஆனால் கணவனுக்கு இது எல்லாம் பிடிக்காது... அப்படி இருந்தும் இது பற்றி எல்லாம் அவன் தெரிந்து வைத்து இருக்கிறான் என்றால்...? அத்தனை காதலா தன் மீது...? என்று அவள் திகைப்பாய் அவனைப் பார்த்தாள்... அதை உணர்ந்தார் போன்று அவன் பேச ஆரம்பித்தான்...

"எல்லாம் உனக்காகத் தான் பெண்ணே... உனக்காக மட்டும் தான்... எனக்கு இதில் எல்லாம் பெருசா விருப்பம் இருந்தது இல்லை... நீ கேட்டதும் உடனே நான் மூலிகை தோட்டம் வச்சியிருக்கிற நண்பர் கிட்ட பேசினேன்... அவர் தான் இந்த முறையில் மரம் நட்டு காடுகளை உருவாக்கலாம்ன்னு

சொன்னார்... இந்த முறையைக் கோயம்புத்தூரில் செயல்படுத்துவதாய்ச் சொன்னவர் அவரது ஃபோன் நம்பரை கொடுத்தார்... அதற்கு அடுத்து நடந்த வேலைகள் எல்லாம் ஜெட் வேகம் தான்... இதோ இப்போது உன் கண் முன்னே உன் கனவு நனவாய் காட்சி அளிக்கிறது..." என்ற கணவனைப் பெருமிதத்தோடு பார்த்தவளின் கண்கள் கலங்கியது...

அவனின் காதல் அவளை மேலும் மேலும் அவனிடத்தில் மண்டியிட செய்தது... அந்தளவிற்கு அவனை மிகவும் பிடித்திருந்தது அவளுக்கு... அவனுடன் ஒட்டி கொண்டு நின்றவள் அவனது கரத்தோடு கரம் கோர்த்து அவனது தோளில் சாய்ந்து கொண்டாள் நெகிழ்வாய்... அவனது கரம் உள்ளார்ந்த அன்புடன் அவளைச் சுற்றி அணைத்துக் கொண்டது...

"தேங்க்ஸ் மாமூ..."

"நமக்குள் தேங்க்ஸ் தேவை தானா பேபி..."

"ஏனோ எனக்குச் சொல்லணும் தோணுது... சொல்லும் போது ஏத்துக்கணும்..."

"மேலிடம் சொன்னால் கேட்டு தானே ஆகணும்... உன் நன்றியை ஏத்துக்கிட்டேன் ஓகேவா..."

"ம்... ம்..." என்றவள்,

"மியாவாக்கி முறைன்னா என்ன...?"

அது பற்றித் தெரிந்து கொள்ளும் ஆர்வம் அவளுள்... அவளது ஆர்வம் அறிந்து அவனும் அது பற்றி விளக்க ஆரம்பித்தான்...

"இதைக் கண்டுபிடிச்சவங்க ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 'அகிரா மியாவாக்கி'... 'இடைவெளி இல்லா அடர் காடுகள்'ங்கிற இவரோட தத்துவத்தின் படி, குறைஞ்ச இடத்தில் அதிக எண்ணிக்கையில் மரங்களை நடலாம்...

அதாவது 1000 சதுர அடி நிலத்தில் 300 முதல் 400 மரங்கள் வரை வளர்க்கலாம்..."

"அம்மாடியோவ்... அப்போ பத்து ஏக்கரில் எவ்வளவு மரங்கள் நட்டு இருப்பீங்க...?"

அதைச் சொல்லும் போதே அவளது விழிகள் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே அகல விரிந்தது ஆச்சிரியத்தில்... அவளது விழிகள் மீது மென்மையாய் இதழ் பதித்தவன் சிரித்தபடி,

"உன்னோட சந்தோசத்திற்காகவே இன்னும் ஒரு பத்து ஏக்கரில் மரம் நடணும் போல் தோணுதே பேபி..."

தனக்காக, தனது காதலுக்காகத் தன்னைக் கொஞ்சம் கொஞ்சம் மாற்றிக் கொள்ளும் கணவன் மீது அத்தனை ஆசை வந்தது அவளுக்கு...

"ஐ லவ் யூ மாமூ..." என்று கண்சிமிட்டியவளை கண்டு அவன்,

"ஹேய்..." வியப்பில் கத்தியபடி அணைக்க வர,

"மாமூ... பப்ளிக், பப்ளிக்..." என்றவளிடம்,

"அது நீ பப்ளிக் ப்ளேசில் 'ஐ லவ் யூ' சொல்றதுக்கு முன்னாடி யோசிச்சு இருக்கணும்..." என்றவன் போனால் போகிறது என்பது போல் மனைவியவளின் தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்...

"ம்... சொல்லுங்க..." என்று அவள் கேட்க...

"நான் என்ன கதையா சொல்லிக்கிட்டு இருக்கேன்... அடேய் சித்து, உன் நிலைமை இப்படியாடா மாறணும்... கோட், சூட் போட்டுக்கிட்டு வெளிநாட்டில் பிசினஸ் பேசிக்கிட்டு இருக்க வேண்டிய நீ, இப்படிப் பட்டிக்காட்டில் மரம் வளர்க்கிறதை பத்தி லெக்சர் கொடுத்துட்டு இருக்கியே... என்ன கொடுமை சித்து..." என்று வேண்டும் என்றே அவன் புலம்ப...

"மாமூ..." என்று மனைவி சிணுங்கியதை கண்டு அவனது காதல் மனம் தாங்குமா...? உடனே கைகள் இரண்டையும் உயர்த்திச் சரணடைந்தவன்,

"வேறுவழி... சொல்கிறேன் கேள்..." என்றவன் மேலே சொல்ல ஆரம்பித்தான்...

"இந்த மாதிரி வெற்று இடத்தில் மூணு அடி ஆழத்துக்குக் குழி தோண்டி அதுக்குள்ள முதலில் குப்பைகளைக் கொட்டி குழிகளை நிரப்பணும்... பின்பு அதுக்கு மேலே அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, வேம் இது எல்லாத்தையும் போட்டு அதில் செடிகளை நெருக்கமாய் நட்டு வைக்கணும்... இந்த முறையில் தான் இங்கே இருக்கும் இந்தச் செடிகள் எல்லாம் நடப்பட்டு இருக்கு..." என்றவனின் கண்கள் பெருமையுடன் அந்த இடத்தை வலம் வந்தது...

"இப்படிப் பக்கத்தில், பக்கத்தில் இருப்பதால் செடிகளுக்கு ஒண்ணுமாகாதா...?"

"ம்ஹூம், ஒண்ணும் ஆகாது... இப்படி நடுவதால் ஒளிச்சேர்க்கைக்காகச் சூரிய ஒளியை தேடி ஒண்ணுக்கு ஒண்ணு போட்டி போட்டுக்கிட்டு வேகமா வளரும்... அது போல் ஆழமான குழியில் இதை நடுவதால் வேகமா வேர் உள்ளே இறங்கி பிடித்துக் கொள்ளும்..." என்றவன்,

"இதில் சிலது நமக்குப் பயன் தரும் மரங்களும் இருக்கு... அதிலிருந்து வரும் பழங்களை விற்றால் அதுவே மிகப் பெரிய லாபத்தைத் தரும்..."

"மாமூ..." சிறு கண்டிப்புடன் ஒலித்த மனைவியின் குரலில் அவளைத் திரும்பி பார்த்தவன்,

"நான் பக்கா பிசினஸ்மேன் பேபி... எதிலும் ஒரு லாபம் இருக்கணும் இல்லையா... இதில் எனக்கு இரட்டிப்பு லாபம் தான்... முதல் லாபம் உன்னோட சந்தோசம், மற்றொரு லாபம் இதன் மூலம் வரும் வருமானம்... இந்தப் பழங்களை

எல்லாம் 'ஆர்கானிக் ப்ரூட்ஸ்'ன்னு விளம்பர படுத்தி நல்ல விலைக்கு விற்று விடுவேன்..."

"உங்களை எல்லாம் திருத்த முடியாது..." என்று சலித்த குரலில் இருபுறமும் தலையாட்டியபடி கூறியவளின் தலை மீது கை வைத்து அதைத் தடுத்தவன்,

"நான் மட்டும் திருந்தினால் எனக்கு என்ன சிலையா வைக்கப் போறாங்க... சும்மா ஜோக் அடிக்காதே பேபி... நீ சொன்னதை நான் செஞ்சிட்டேன்ல்ல... அதை மட்டும் நீ பார்... மத்ததை நான் பார்த்துக்கிறேன்..."

"உங்களை வச்சிக்கிட்டு... வாங்க போகலாம்..." என்று அவள் கூற...

"அடிப்பாவி... புருசனை போய் யாராவது வச்சுக்கிறேன்னு சொல்வாங்களா...?" அவன் போலியாய் அங்கலாய்க்க...

"இந்தப் புருசனை வச்சுக்கலாம்... வச்சுக்கிறது மட்டுமல்ல கட்டி பிடிச்சிக்கலாம், கொஞ்சிக்கலாம் இப்படி என்ன வேணும்ன்னாலும் செஞ்சிக்கலாம்... எனக்கு ஃபுல் ரைட்ஸ் இருக்கு..." என்றவள் கழுத்தில் இருந்த மஞ்சள் கயிற்றைத் தூக்கி காண்பிக்க...

"ஆஹா... என்னோட ரைட்ஸையும் சேர்த்து நீ அப்பப்போ ஞாபகப்படுத்துற பேபி..."

"புரிந்தால் சரி..." என்றாள் அவள் அமர்த்தலான குரலில்...

"இன்னும் இரண்டே இரண்டு மாதங்கள் தான்... அதுக்கு அப்புறம் வாயடிக்கும் இந்த வாயை..." என்றவனின் பார்வை கணவன் பார்வையாய் மாறியது... அவன் ஆர்வமாய் அவள் முகம் நோக்கி குனிய... அதில் அவளது ஆர்வமும் அதிகரித்தது...

அந்நேரம் அவனது அலைப்பேசி அழைத்தது...

"ப்ச்..." ஆட்சேபனை குரலுடன் எண்ணை பார்க்காது அவன் அதை உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்...

"அண்ணா..." என்று ஸ்வேதா அழைக்கவும் அவனது உணர்வுகள் மொத்தமாய் வடிந்து போனது...

"சொல்லு ஸ்வேதா..."

மறுபக்கம் அவள் கூறியதை கேட்டு அவனது முகம் யோசனையில் ஆழ்ந்தது...

"நல்லா யோசிச்சு தான் சொல்றியா... பின்னால் இதற்காக நீ வருந்த கூடாது..."

அதற்கு அவள் என்ன பதில் கூறினாளோ... சித்தார்த் யோசனையாக,

"இதைப் பத்தி அப்பா, அம்மா கிட்ட பேசினியா...?"

"இல்லை..." என்றாள் ஸ்வேதா...

"சரி நான் எல்லாத்தையும் பார்த்துக்கிறேன்... நீ கவலைப்படாதே..." என்றவன் அழைப்பை துண்டித்தான்...

"ஸ்வேதாவுக்கு என்னங்க ஆச்சு...?" பிரகதீஸ்வரியின் குரல் கவலையோடு கேட்டது...

"ஸ்வேதா கல்யாணம் பண்ண முடிவு பண்ணியிருக்கா..."

கணவனது வார்த்தை கேட்டு அவளுக்குச் சந்தோசம் தான் என்றாலும், அவளது மனம் சகோதரனுக்காக வருத்தம் கொள்ளத் தவறவில்லை...

"மாப்பிள்ளை யார்...?"

"எல்லாம் வீணா போன உன் அண்ணன் தான்..."

கணவனது குரலில் பயந்து போய் அவனைப் பார்த்தவள் அவனது புன்னகை முகத்தைக் கண்டு குழம்பி போய் நின்றாள்...

"என்ன நடந்ததுன்னு எனக்குத் தெரியலை... இப்போ திடீர்ன்னு சரவணனை கல்யாணம் பண்ணணும்ன்னு சொல்கிறாள்..." என்றான் அவன் யோசனையாய்...

"ஏன்னு கேட்டீங்களா...?"

"ம்... கேட்டேன்... அவனைத் தான் கல்யாணம் பண்ணுவேன்னு உறுதியாய் சொல்கிறாள்..." என்று கூறியவன் தனது குழப்பத்தில் இருந்து வெளியில் வந்தவனாய்,

"நல்லதே நடக்கும் என்று நம்புவோம்..."

"நிச்சயம் நல்லதே நடக்கும்... பார்த்தீங்களா, நீங்க செஞ்ச ஒரு நல்ல காரியம்... பதிலுக்கு எவ்வளவு பெரிய நல்லது செஞ்சியிருக்கு..." என்று மகிழ்ச்சியுடன் கூறிய மனைவியைக் கனிவுடன் பார்த்தவன்,

"ம்ஹூம், இல்லையடி பெண்ணே... இது உனக்கு நான் பண்ணிய நல்ல காரியம்... உன் சந்தோசத்தின் காரணமாக விளைந்த நன்மை இது... இதுவும் உன்னால் தான் பேபி..."

எங்குச் சுற்றினாலும் தன்னில், தன் காதலில் நிலைத்து இருக்கும் அவனது காதல் வழக்கம் போல் அவளைப் பிரமிக்க வைத்தது...

"சரி கிளம்பு... வீட்டுக்கு போய் அம்மா, அப்பா கிட்ட இதைப் பத்தி பேசணும்..." என்று அவளை அவசரப்படுத்தி வீட்டிற்கு அழைத்து வந்தான்...

விசயம் கேள்விப்பட்ட சித்தார்த்தின் பெற்றோர்கள் மனம் மகிழ்ந்தனர்... எப்படியோ ஸ்வேதா திருமணம் செய்து கொண்டால் போதும் என்றே அவர்கள் எண்ணினார்கள்...

சந்தியாவிற்கும் விசயம் தெரிவிக்கப்பட்டது... அவளும் மிகவும் சந்தோசம் அடைந்தாள்... ஆனாலும் இதை எல்லாம் காண தங்களது அன்னை உடன் இல்லாதது அவளுக்குச் சற்று வருத்தமாக இருந்தது... ஆனால் அவள் அதை வெளியில் காட்டி கொள்ளவில்லை...

****

எல்லோரும் இந்தத் திருமணத்திற்குச் சம்மதித்த போதும் சரவணன் அதற்குச் சம்மதிக்கவில்லை... அவன் அப்படி

எதிர்மறையாகச் சொன்னது கேட்டு ஸ்வேதா ஆத்திரத்துடன்,

"என்ன கொழுப்பா உனக்கு...? பழிக்கு பழி வாங்கிறியா...? நீ விருப்பம் இல்லாம தாலி கட்டுவ... அதை மட்டும் நான் தலை குனிஞ்சு வாங்கிக்கணுமா...? அப்போ எனக்குன்னு ஒரு மனசு இருக்கக் கூடாது... அப்படித் தானே...?"

"இப்போ மட்டும் நீ விரும்பியா என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிக்கிற...?" என்று அவன் நிதானமாக அவளைப் பார்த்து கேட்டான்...

அதில் திகைத்து நின்றவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "இப்போ அது எதுக்கு உனக்கு...?" என்றாள் அலட்சியமாய்...

"எனக்கு அது தெரிஞ்சாகணும்... அந்தக் கார்த்திக்குக்குப் பயந்து நீ என்னைக் கல்யாணம் பண்ண நினைக்கிறியா...? இல்லை நான் சோனுவை காதலிப்பதை தடுப்பதற்காக என்னைக் கல்யாணம் பண்ண நினைக்கிறியா...?"

அவன் கூறிய இரண்டு காரணத்திற்காகவும் தான் அவள் இந்தத் திருமணத்திற்கு அவசரப்படுவது... அதை வெளியில் சொல்ல முடியாது தவித்தாள் அவள்...

"அப்போ அது தான் உண்மை இல்லையா..." என்றவன் நாற்காலியில் இருந்து எழுந்து அவள் அருகில் வந்தான்...

அவனது அருகாமையில் அவள் விலகி நின்றாள்... அதைக் கண்டு அவன் விரக்தியாய் சிரித்தான்...

"இது தான் நமக்குள் இருக்கும் பொருத்தம்..." என்று அவன் சுட்டி காட்டினான் இருவருக்கும் இடையில் இருக்கும் இடைவெளியை...

அதில் அவள் அவமானம் அடைந்தவளாய் தலையைக் குனிந்து கொண்டாள்...

"உன் மனசில் அவன் தானே இருக்கிறான் ஸ்வேதா... நீ அவனைத் தானே காதலிக்கிற... பிறகு என்ன தயக்கம்

உனக்கு..."

அவனது வார்த்தைகள் கேட்டு அதிர்ச்சியுற்றவளாய் அவனை நிமிர்ந்து பார்த்தவள், "அன்னைக்கும் கார்த்திக் பத்தி கேட்ட... இதோ இப்போதும் என் மனசில் உள்ளதை அப்படியே சொல்ற... இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்...?"

"அன்னைக்குப் பார்ட்டியில் குடிச்சப்போ உன் வீட்டில் கொண்டு போய் விட்டேன்ல்ல அப்போ நீ மது போதையில் உளறியது தான் இது..."

"ஓ..." என்றவள் ஓய்ந்து போய் நாற்காலியில் அமர்ந்தாள்...

"இங்கே பார் ஸ்வேதா... நீ உன் மனசை போட்டு குழப்பிக்காதே... அப்போ நான் ஏதோ தெரியாம..." என்று மேலே சொல்ல முடியாது தடுமாறியவன்,

"நான் பண்ணியது தப்பு தான்... அது சரின்னு எல்லாம் சொல்ல மாட்டேன்... அதுக்காகக் காலம் முழுவதும் என்னைச் சகிச்சுக்கணும்ன்னு உனக்குத் தலையெழுத்து இல்லை... உனக்கு விருப்பமான வாழ்க்கையை நீ வாழ உனக்கு முழுச் சுதந்திரம் உண்டு..."

"ஓஹோ... அப்போ தானே நீ உன் இஷ்டத்துக்குச் சோனாலி கூட டேட்டிங் போக முடியும்..."

அந்தச் சூழ்நிலையிலும் அவளது வார்த்தைகளில் தெறித்த பொறாமையைக் கண்டு அவனது உள்ளம் குளிர்ந்தது... அவனது முகத்தில் புன்னகை மலர்ந்தது...

"சத்தம் போட்டு சொல்லி விடாதே ஸ்வேதா... இது அவளது காதலன் காதில் விழுந்து விடப் போகிறது..."

"என்ன சொன்ன...?" அவள் திகைப்பாய் அவனைப் பார்த்தாள்...

மீண்டும் தான் கூறியதை கூறியவன், "அவனும் ஒரு மாடல் தான்..." என்றான்...

அதைக் கேட்டதும் அவளுக்கு அத்தனை நிம்மதியாய் இருந்தது... ஆனாலும் தனது கை விரல் மோதிரத்தை காட்டி,

"இது அவளுக்காகத் தானே வாங்கிட்டு வந்த..." என்றாள் கோபமாக...

"இல்லையே... 'S' ஃபார் ஸ்வேதா... என் காதல் மனைவிக்கு வாங்கியது..."

"அப்போ எதுக்குடா இதைக் கேட்ட...? நான் கொடுத்த பூங்கொத்தை ஏன் குப்பை தொட்டியில் போட்ட...?"

"உன் மனசாட்சியைத் தொட்டு சொல்லு... நீ என் காதல் மனைவியா...?" என்றவனைப் பார்க்க முடியாது அவள் தனது பார்வையை வேறு பக்கம் திருப்பினாள்...

"அந்தப் பூங்கொத்து நீ வாங்கியதா...? அது அந்த வீணாய் போனவன் வாங்கி வந்த பூங்கொத்து... அது எனக்கு எதுக்கு...?" என்று கொஞ்சம் ரோசத்துடன் வந்து விழுந்தது அவனது வார்த்தைகள்...

"சரி எல்லாத்தையும் மறந்து விடு... உனக்குப் பிடிச்ச வாழ்க்கையை நீ வாழ உனக்கு முழு உரிமை இருக்கு... உனக்குக் கார்த்திக்கை தான் பிடிக்கும்ன்னா நீ அவனைக் கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தானே... இதில் எனக்கும் முழுச் சம்மதம்..." என்றான் தனது மனதின் வலியை மறைத்துக் கொண்டு...

அவனது வார்த்தைகளில் அவள் வெடித்துச் சிதறினாள்...

"ஆமாம்டா... இங்கே உன்னைப் பார்க்கிறதுக்கு முன்னே எனக்கு அவன் மேல் ஒரு சின்ன ஈர்ப்பு இருந்தது என்னவோ உண்மை தான்... ஆனால் இங்கு மீண்டும் உன்னைப் பார்த்துக்கு அப்புறம் தான் என் மனசு ரெண்டுங் கெட்டான் மனநிலையில் ஊஞ்சலாடுது... என் மனசு சொல்லுது 'கார்த்திக் தான் உனக்குப் பெஸ்ட் சாய்ஸ்'ன்னு... ஆனா நீ என் கழுத்தில் கட்டிய தாலி அதைக்

கேட்க மறுக்குது... கார்த்திக்கை அவாய்ட் பண்ண சொல்லுது..."

பெண்ணவளின் மனதில் இருப்பது அறிந்து வேதனையுற்றவனாய், "ஸ்வேதா.." என்று அவளது தோளில் ஆறுதலாய் கை வைத்தவனின் கையை வெடுக்கென்று தட்டியவள்,

"என்னைத் தொடாதே..." என்றாள் கோபமாய்...

அவளின் உரிமையான கோபம் கண்டு அவனது வேதனை மறைந்தது...

"சரி தொடலை... அப்போ எதுக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு நினைக்கிற..." என்று கேட்டு உல்லாசமாய்ப் புன்னகைத்தான்...

அவளின் மனம் அவனுக்குக் கொஞ்சம் புரிந்தது... அதனால் வந்த உற்சாகம் இது...

"அது வந்து..." என்று திணறியவளை கண்டு வாய் விட்டு சிரித்தவன்,

"சோனாலியை கூட்டிட்டு ஓடி போயிருவேனோங்கிற பயத்தில் தானே..." என்றவனைக் கண்டு முறைத்து பார்த்தாள் அவள்...

"அதுவும் இல்லையா அப்போ வேறு என்ன காரணமாக இருக்கும்..." என்று வேண்டுமென்றே அவன் நெற்றியை தட்டி யோசிக்க,

"என்ன காரணம்ன்னா எனக்குக் கணவனாக நீ மட்டும் தான் இருக்க முடியும்... வேறு யாரும் வர முடியாதுன்னு அர்த்தம்..." என்றாள் அவள் அழுத்தம் திருத்தமாய்...

"ஸ்வீட்டி..." அவளது வார்த்தைகளில் அவன் அகமகிழ்ந்து போனான்...

"அப்படிக் கூப்பிடாதே..." என்று கையுயர்த்தி அவனைத் தடுத்தவள்,

"தெரிந்தோ தெரியாமலோ என் கழுத்தில் நீ தாலி கட்டிட்ட... அதோட விளைவுகள் எப்படி இருக்கும்ன்னு நீ பார்க்க வேண்டாமா...?"

"ஓ... அதுக்காகக் கல்யாணம் பண்ணி பழிவாங்க போறியா...?"

"எக்ஸாக்ட்லி..." என்றாள் அவள் மிதப்பாய்...

"பிடிக்காத பெண்ணோட கழுத்தில் தாலி கட்டிய உனக்கும் இது தான் தண்டனை... பிடிக்காத ஒருத்தன் கட்டிய தாலியை மறக்க முடியாமல் தவிக்கிற என்னை மாதிரி முட்டாள் பெண்ணுக்கும் இது தான் தண்டனை..."

"ஸ்வேதா... நான் தான் தப்பு பண்ணியவன்... எந்தத் தண்டனைன்னாலும் எனக்குக் கொடு... உனக்கு நீயே தண்டனை கொடுக்கத் தேவையில்லை... உன் விருப்பம் இல்லாமல் இந்தக் கல்யாணம் நடக்க வேண்டாம்..." என்றவனை இமைக்காது பார்த்தாள் அவள்...

'அன்னைக்கு ஏன் என்னோட விருப்பத்தை நீ கேட்கலை சரவணன்... அப்படிக் கேட்டிருந்தால் ஒருவேளை நான் உன் காதலை ஏத்துக்கிட்டு இருந்திருக்கலாம்... எல்லாத்தையும் இப்படிச் சிக்கலாக்கி விட்டுட்டியே...' என்று மனதில் நினைத்தவள் அதை வெளியில் சொல்ல முடியாது கண்கள் கலங்க, இதழ்கள் துடிக்க அவனைப் பார்த்தாள்...

"சரி இது தான் உன் விருப்பம்ன்னா எனக்கு ஒண்ணும் ஆட்சேபனை இல்லை... ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்... இப்போ என்னைப் பிடிக்கலைன்னு சொல்ற நீ, ஒருநாள் இல்லை ஒருநாள் என் கிட்ட வந்து 'உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சியிருக்கு'ன்னு சொல்லத்தான் போற... என்னோட காதல் மீது எனக்கு நம்பிக்கை இருக்கு... என்னோட அன்பு உன் மனசை நிச்சயம் மாத்தும்..."

அவனது வார்த்தையில் இருந்த காதல், உறுதி அவளைச் சிறிது அசைத்துப் பார்த்தது... இந்தளவிற்கு இவன் தன்னைக் காதலிக்கிறானா என்று...

"ஆனால் கல்யாணத்தை மட்டும் இன்னும் கொஞ்ச நாள் தள்ளி போடு..."

"எதுக்கு...?" மீண்டும் அவளிடத்தில் கோபம் வந்து ஒட்டி கொண்டது...

"நான் சம்பாதிக்க வேண்டும்..." என்றவனைக் கண்டு அவளுக்கு ஆத்திரம் வந்தது...

"அன்னைக்கு என் கழுத்தில் தாலி கட்டும் போது மட்டும் கோடி கோடியாய் சம்பாதிச்சுக்கிட்டு இருந்தியாக்கும்..."

"அப்போ அறிவில்லை... இப்போ தானே அறிவு வந்திருக்கு..."

அவனது வார்த்தையில் அவளது இதழ்கள் சற்று விரிந்தது புன்னகையில்...

"இப்பவாவது உண்மையை ஒத்துக்கிட்டியே..." என்றாள் கேலியாய்...

"உண்மையை ஒத்துக்கிறதில் எனக்கு எந்தவித தயக்கமும் இல்லை... அப்படி என்றால் வருங்காலத்தில் என் வருமானத்தில் தான் நீ வாழ வேண்டும்..."

"அந்தத் தலையெழுத்து எனக்கு எதுக்கு...? நான் உனக்கு என் புருசன் பதவி மட்டுமே கொடுக்க இருக்கிறேன்... உனக்கு அடங்கி வாழ இல்லை... அதுவும் உன் பிச்சைக்கார சம்பளத்தில் எல்லாம் என்னால் வாழ முடியாது... நான் போடும் மேக்கப்புக்கு ஈடாகுமா உன் சம்பளம்..."

அவளது ஒவ்வொரு வார்த்தையிலும் அத்தனை நக்கல் தெறித்தது... ஆனால் அது அவனது மனதினை காயப்படுத்தவில்லை... அவன் அவள் மனதை வலிக்கச் செய்ததை விடவா அவள் அவனுக்கு வலிக்கச் செய்து விட்டாள்...

"ஹலோ மேடம்... நான் பிச்சைக்காரன்னு உனக்கு யார் சொன்னது...? ஐயா கம்ப்யூட்டர் கம்பெனி

முதலாளியாக்கும்..." என்றவனை அவள் ஆச்சிரியமாய்ப் பார்த்தாள்...

"ஸ்வீட்டி... அத்தானை அம்பானி ரேன்ஜ்க்கு யோசிக்காதே... இப்போது தான் ஆரம்பிச்சு இருக்கேன்... ரொம்பச் சின்னக் கம்பெனி..."

ஹரிப்ரசாத்தின் ஆலோசனையின் பேரில் அவன் இப்போது தான் கணினி நிறுவனம் ஒன்றை வங்கி கடன் மூலம் ஆரம்பித்து இருக்கிறான்... இப்போது தான் உழைப்பின் அருமையை அவன் உணர்ந்து இருக்கிறான்...

"ஸ்வீட்டி... நீ கவலைப்படாதே... அத்தான் பிச்சை எடுத்தாலும் உன்னைக் கண் கலங்காம பார்த்துக்கிறேன்... உன்னைக் கை விட்டுர மாட்டேன்..." என்றவனைக் கண்கள் மின்ன பார்த்தாள் அவள்...

அதைக் கண்டு அவனது கண்களும் மின்னியது... அவளின் மனதில் தான் நுழைவது சுலபம் என்று அவனுக்குப் புரிந்தது... ஆனாலும் வெளியில் கிண்டலாக,

"வேறுவழியில்லாம இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிக்கிறேன்... கல்யாணத்துக்கு மறுத்தால் உன் அண்ணன் அதாவது என் அத்தான் என்னைக் கொலை பண்ணிர மாட்டாங்க... இப்போ வேற உன் அண்ணன் என்னோட தங்கையைக் கட்டின எங்க வீட்டு மாப்பிள்ளை வேறு... என் தங்கை வாழ்க்கைக்காகவும் நான் இதுக்குச் சம்மதிக்கிறேன்..." என்றவனைக் கண்டு,

"டேய் உன்னை..." என்று கோபத்தில் முகம் சிவந்தவளை கண்டு,

"கல்யாணத்துக்கு அப்புறம் அத்தானை வெங்காயம் உறிக்கச் சொல்லாம, கண் கலங்காம பார்த்துக்கோ ஸ்வீட்டி... அது போதும்..." என்று சோகமாய் உரைத்தவனைக் கண்டு அவளது கோபம் மறைந்து புன்னகை எட்டி பார்த்தது...

"பிறகு எதுக்கு இங்கே வேலைக்கு வந்த...?"

"எல்லாம் உன்னைக் கரெக்ட் பண்ண தான்..." என்று கண்சிமிட்டி சிரித்தவனைக் கண்டு அவளது இதயம் தாறுமாறாய்த் துடித்தது... இமைக்க மறந்து தன்னைப் பார்த்திருந்தவளை கண்டு அவனது மனம் மென்மையுற்றது... அவளது தோள் தொட்டு அவளை நிகழ்காலத்திற்கு அழைத்து வந்தவன்,

"சரி நான் வேறு வேலையாய் வெளியில் கிளம்பறேன்... பை..." என்று விடைப்பெற்றவனைச் சொடக்கு போட்டு நிறுத்தியவள்,

"வெளியில் எவளையாவது சைட் அடிச்சிக்கிட்டு, வழிஞ்சிக்கிட்டு நீ நிற்பதை பார்த்தேன்... மவனே, உடனே மர்டர் தான்..." என்று கழுத்தின் குறுக்கே வலக்கை கட்டை விரலை கொண்டு சென்று வெட்டுவது போல் சைகை செய்தவளை கண்டு அவனுள் காதல் பொங்கியது...

'அடச்சீ... உன்னை மர்டர் பண்ணிருவேன்னு சொல்கிறாள்... அவளைக் கண்டு ஜொள்ளு விட்டுக்கிட்டு இருக்கியே...' அவனது மனசாட்சி கூட அவனைக் காறி துப்பியது... வழக்கம் போல் அதைப் புறம் தள்ளியவன்,

"ஏன் ஸ்வீட்டி...?"

திடுமென அவன் அப்படிக் கேட்டதும் அவள் விழித்துக் கொண்டு நின்றாள்...

"அதுக்கான காரணத்தை யோசிச்சு பார்... அது புரிந்தால் ஒருவேளை இந்த அத்தானை உனக்குப் பிடித்தாலும் பிடிக்கும்..." என்றவன் அவளின் பதிலை எதிர்பாராது வெளியில் சென்று விட்டான்...

மஞ்சள் கயிறு மாயாஜாலத்தையும் மீறிய ஒரு உணர்வு அவளது மனதினை போட்டு பிசைந்தது...!!!

"வன்மையாளன் வஞ்சியின் தேகத்தினைச் சிதைப்பான்..
மென்மையாளன் மங்கையவளின் மனதினை சிதைப்பான்...
இரண்டுமே சிதைப்பது தான், சேதாரம் தான்...

சுத்தியல் கொண்டு கல்லை உடைப்பதும் சேதாரம் தான்...
உளி கொண்டு கல்லை செதுக்குவதும் சேதாரம் தான்...
கொடூரம் எனும் சுத்தியல் கொண்டு பெண்ணவள்
உடலினை தூள் தூளாகச் சிதற செய்வதும்,
காதல் எனும் உளி கொண்டு பெண்ணவள்
மனதினை கனிய செய்வதும் வேறு வேறு...
காமம் வேறு, காதல் வேறு... இது தெரியாத
மூடர் கூடமாய் வீணாய் போன எதிர்பாலினம்...!!!"

நனவாகும்...!!!

சகோதரனின் திருமணத்திற்காகக் கணவன் ஹரிப்ரசாத்துடன் சந்தியா திருநெல்வேலிக்கு வருகை தந்திருந்தாள்... வெகு வருடங்களுக்குப் பிறகு அவள் அந்த வீட்டில் காலடி எடுத்து வைக்கிறாள்... அவளது மனதில் அன்று அன்னையுடன் தானும் அநாதையாய் வெளியேறிய காட்சி தோன்றி அவளை வதைத்தது... அன்னை செய்தது சிறிதும் நியாயம் இல்லை தான்... அதை விடச் சித்தார்த் செய்தது அநியாயம்... அந்தளவிற்கு இரக்கம் இல்லாது நடந்து கொண்டிருக்க வேண்டியது இல்லை...

சித்தார்த் நினைத்து இருந்தால் பிரகதீஸ்வரியையும் இங்கு இருக்கச் செய்து இருக்கலாம்... அதே போல் அவளது குடும்பத்தையும்... அந்த இரண்டையும் செய்யாது அவன் கைகளைக் கட்டி கொண்டு வேடிக்கை பார்த்ததை அவளால் மறக்க முடியவில்லை...

ஹரிப்ரசாத்தின் மனதில் அப்படி ஒரு எண்ணம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை... அவன் சித்தார்த்தை பிரகதீஸ்வரியின் வாயிலாகவே பார்த்தான்... அவள் கணவனைப் பிரிந்திருந்த போது கோபம் கொண்டும், இதோ இப்போது இணைந்து இருக்கும் போது சந்தோசம் கொண்டும் அத்தை மகளின் பார்வையில் அவன் சித்தார்த்தை பார்த்ததால் அவனுக்குச் சித்தார்த் மீது துளியும் கோபம் வரவில்லை...

"வாங்க அத்தான்... வாங்கக்கா..."

வீட்டினராய் வந்தவர்களை முகம் மலர வரவேற்றாள் பிரகதீஸ்வரி... அதில் சந்தியா மன சுணக்கம் மறைந்து அவளைப் பார்த்து புன்னகைத்தாள்...

"அம்மு... எப்படி இருக்கிறாய்...?" ஹரிப்ரசாத் விரிந்த புன்முறுவலுடன் அவளைப் பார்த்து கேட்க...

"என்னைப் பார்த்தால் எப்படித் தெரிகிறது...?"

அத்தை மகளை மேலும் கீழும் பார்த்தவன், "முன்னை இருந்ததை விடக் கொஞ்சம் பூசின மாதிரி இருக்க... இப்படியே இரும்மா... இதற்கு மேல் பூசினார் போலானால் பூசணி ஆகிவிடுவாய்... அதன் பிறகு சித்தார்த் நிலை திண்டாட்டமாகி விடும்..." என்று அத்தை மகள் என்கிற உரிமையில் அவன் பிரகதீஸ்வரியிடம் வம்பிழுத்தான்...

சந்தியா இவர்களைப் புன்னகையுடன் பார்த்து கொண்டிருந்தாள்...

"என் மனைவி எப்படி இருந்தாலும் எனக்கு அழகு தான்... என் நிலை எப்போதும் கொண்டாட்டம் தானே தவிரத் திண்டாட்டம் ஆகாது..." என்று அமர்த்தலான குரலில் கூறியபடி மனைவி தோள் மீது கை போட்டு அவளை அணைத்துக் கொண்டான் சித்தார்த்...

"வந்தவங்களை வாங்கன்னு கேட்காம இது என்ன பேச்சு...?" என்று கணவனுக்கு மட்டும் கேட்கும் படி முணுமுணுத்தாள் பிரகதீஸ்வரி...

"வாங்க ஹரி... வா சந்தியா..." மனைவி சொல்லை தட்டாத கணவனாக அவன் உடனே வந்தவர்களை வரவேற்றான்...

வெளியில் புலியாக உறுமி கொண்டு வலம் வரும் சித்தார்த் வீட்டில் பூனையாகப் பம்மியதை கண்டு ஹரியும், சந்தியாவும் ஒருவரை ஒருவர் அர்த்தத்துடன் பார்த்து நமட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டனர்...

"அத்தை வரலையா அத்தான்...?"

"இல்லை அம்மு... இப்போது தான் பிரயாணம் செய்து அங்கு வந்திருப்பதால் திரும்பவும் ஒரு பிரயாணம் பண்ண முடியாதுன்னு மறுத்துட்டாங்க..."

"அதுவும் சரி தான்..." என்ற பிரகதீஸ்வரி இருவரையும் அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்...

மூவரும் செல்வதைப் பார்த்துக் கொண்டு இருந்த சித்தார்த்திற்கு ஏனோ ஹரி தனது மனைவியை 'அம்மு' என்று அழைப்பது பிடிக்கவில்லை... சற்று கடுப்பாக இருந்தது...

திருமணம் திருநெல்வேலியில் வைத்து தான் நடக்க வேண்டும் என்று சொல்லி விட்டான் சரவணன்... அதனால் இங்குத் தான் திருமணம் நடைபெற இருக்கிறது... அதைக் கேட்டு முதலில் ஸ்வேதா தாம்தூம் என்று குதித்தாள்...

"தொலைந்த இடத்தில் தான் தேட வேண்டும்ன்னு சொல்வாங்க... நான் அதைத் தான் செய்ய நினைக்கிறேன்... என்னைப் புரிந்து கொள் ஸ்வேதா..." என்று வருந்தும் குரலில் கூறிய சரவணனின் வார்த்தையை ஏனோ அவளால் எதிர்க்க முடியவில்லை... வேறுவழியின்றி அவள் அதை ஏற்றுக் கொண்டாள்...

திருமணத்திற்காகச் சித்தார்த்தின் பெற்றோர்கள், ஸ்வேதா, ஹரி, சந்தியா எல்லோரும் வந்து விட்டனர்... ஆனால் மணமகன் சரவணன் மட்டும் இன்னமும் வந்து சேரவில்லை... அதைக் கேள்வியுற்ற ஸ்வேதாவிற்குக் கோபம் வந்தது... அதே கோபத்துடன் அவள் சரவணனுக்கு அழைத்தாள்...

"எதிலும் உனக்குப் பொறுப்பு கிடையாதா...?"

"அப்படி இல்லை ஸ்வீட்டி..."

"ஸ்வீட்டின்னு சொல்லாதேடா..."

"ஸ்வீட் மாதிரி ஸ்வீட்டா இருப்பவளை வேறு எப்படிக் கூப்பிடுவதாம்...?" என்று கூறி அவன் மென்னகை

புரிந்தான்...

அதைக் கேட்டு அவள் இதழ் கடித்து அமைதியாகி விட்டாள்...

"சொல்லு... எதுக்குக் கூப்பிட்ட...?"

"இன்னும் ரெண்டு நாளில் நமக்குக் கல்யாணம்... அதாவது உனக்கு ஞாபகத்தில் இருக்கா...?"

"ஏன் இல்லாம...? நல்லாவே ஞாபகம் இருக்கு...? அன்னைக்கு நைட் நமக்கு ஃபர்ஸ்ட் நைட்ன்னும் ஞாபகம் இருக்கு..."

'இவனை...?' மனதிற்குள் கடிந்தபடி அவள் பல்லை கடித்தாள்...

"எது ஞாபகம் இருக்கணுமோ அது இருக்காது... மத்தது எல்லாம் உனக்கு ஞாபகம் இருக்கும்..." என்று அவனைக் கடிந்தவள்,

"நீ ஏன் இன்னும் கிளம்பலை...?" என்று அதிகாரமாய்க் கேட்டவளிடம்,

"ஒரு ப்ராஜெக்ட் வொர்க்டா..." என்றான் பணிந்தவனாய்...

அப்போது தான் அவளும் உணர்ந்தாள் அவனது குரலில் இருந்த சோர்வை... மனதிற்குள் ஏதோ ஒரு இனம் புரியாத உணர்வு அவளை மிகவும் வருத்தியது...

"சரி... எப்போ வருவ...?"

"நாளைக்கு நைட் வந்திருவேன்..."

"என்னமோ பண்ணி தொலை... ஆனா ஒண்ணு மட்டும் நினைவில் வச்சுக்கோ... நீ மட்டும் கல்யாணத்துக்கு வரலைன்னா நான் அந்த இடத்திலேயே வேறு மாப்பிள்ளையைச் செலக்ட் பண்ணிருவேன்..."

"அப்படியா...? முடிந்தால் செலக்ட் பண்ணி தான் பாரேன்..." என்றான் தெனாவெட்டாய்...

"ஏன் என்னால் முடியாதா...?"

"நிச்சயம் உன்னால் முடியாது..." என்றான் அவன் சவாலாக...

"போடா... நீ அப்படியே எங்கேயாவது ஒழிஞ்சு போ... என்னை இம்சிக்காதே... நான் வேறு யாருக்காவது கழுத்தை நீட்டிக்கிறேன்..."

கோபத்தில் படபடத்தவளை அவன் மிகவும் ரசித்தான்... அவளது இந்தக் கோபம் அவன் மீதான அவளது தேடலுக்கானது என்பதால் அவன் மிகவும் சந்தோசம் அடைந்தான்...

இணையின் கோபத்தில் நிதானம் காட்டும் போது தான் அங்குப் புரிதலுக்கான அச்சாரம் அழுத்தமாய் விதைக்கப்படுகிறது... புரிதல் உள்ள காதல் என்றும் தோற்று போகாது...

"நிச்சயம் நீ அதைச் செய்ய மாட்டாய் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு..." என்றவன் மேலே ஒன்றும் பேசாது அழைப்பை துண்டித்து விட்டான்...

அவனது வார்த்தையில் அவள் செயலற்று போய் அமர்ந்திருந்தாள்... ஏனோ அவனிடம் தான் தோற்றுக் கொண்டிருப்பது போல் ஒரு தோற்றம் அவளுள்...

"அர்ஜூன்... கல்யாணம் என்னுடைய அத்தை மகளுக்கு... இரண்டு நாளுக்கு முன் போனால் தானே நல்லா இருக்கும்... இப்படி முகூர்த்தம் அன்னைக்குப் போனால் நல்லாவா இருக்கும்..."

சங்கமித்ரா எவ்வளவோ கெஞ்சியும் அர்ஜூன் அசைய மறுத்து விட்டான்...

"இங்கே எனக்கு ஒரு முக்கியமான ஆபரேசன் இருக்கு... அதனால் வர முடியாது மித்து... சொன்னால் புரிஞ்சிக்கோ... கல்யாணத்துக்கு முதல் நாள் கூட்டிட்டு போறேன்...

முகூர்த்தத்துக்குத் தலையைக் காட்டிட்டு வந்துரலாம்... என்ன சரியா...?"

"ம்... சரி..." அரை மனதாய் தலையாட்டினாள் அவள்...

அவளின் முகத்தைப் பார்த்து கொண்டிருந்தவனுக்கு ஏனோ தெரியவில்லை அந்தத் திருமணத்திற்குப் போகவே பிடிக்கவில்லை... ஒருவேளை அதற்குக் காரணம் மணமகனின் உறவினன் ஹரி என்பது தானோ... திருமணத்தில் ஹரியை பார்த்தால் சங்கமித்ரா வேதனைப்படுவது நிச்சயம்... அதற்காக இந்தத் திருமணத்தைத் தவிர்க்கவும் முடியாது... அதனால் அங்கு இருக்கும் நேரத்தை குறைக்க எண்ணினான்...

சரவணன் சொன்னது போல் அல்லாது மறுநாள் மதியம் வீடு வந்து சேர்ந்தான்... அவனது வருகையை உணர்ந்து பிரகதீஸ்வரி படபடப்புடன் வாயிலில் நின்றிருந்தாள்... அங்குமிங்கும் நடந்து கொண்டிருக்கும் மனைவியை ஓரக்கண்ணால் பார்த்த சித்தார்த் கையிலிருந்த கோப்பை கீழே வைத்து விட்டு எழுந்தான்...

மனைவி அருகில் வந்து, "எதுக்கு இவ்வளவு டென்சன் உனக்கு...? கல்யாண வேலைகள் எல்லாம் அது பாட்டுக்கு நடந்துக்கிட்டு இருக்கு... உனக்கு எந்த வேலையும் இல்லை... அழகா அலங்காரம் பண்ணிக்கிட்டு தேவதை மாதிரி அங்கு வந்து நின்னால் போதும்..." என்றவனின் பார்வை மையலுடன் அவளை மொய்த்தது...

ஆனால் பிரகதீஸ்வரியின் கவலையே வேறு... சித்தார்த்தும், சரவணனும் சண்டையிட்டு கொண்டதற்குப் பிறகு இன்று தான் முதன்முறையாக நேருக்கு நேர் சந்திக்கப் போகிறார்கள்... இவர்களது சந்திப்பு இனிமையானதாய் இருக்குமா...? இல்லை கலவரமாக வெடிக்குமா...? என்று அவள் மனதிற்குள் பயந்தாள்...

"இப்போ எதுக்கு இந்தப் பயம்...?" மனைவியின் பயந்த பார்வை கண்டு அவனது விழிகள் யோசனையாய்ச் சுருங்கியது...

"அது வந்து..."

அதற்குள் சரவணனை அழைத்து வர சென்றிருந்த கார் வந்து விட்டது... அதில் பிரகதீஸ்வரி தனது பேச்சை நிறுத்தி விட்டு வாயிலை நோக்கினாள்... அவளைத் தொடர்ந்து சித்தார்த்தும் வாயிலை பார்த்தான்... காரில் இருந்து இறங்கிய சரவணனின் தோற்றத்தை அவனது விழிகள் அழுத்தமாய் எடையிட்டது...

மூன்று வருடங்களுக்கு முன் இருந்த விடலை பையன் தோற்றம் முற்றிலும் மாறி போய் இப்போது ஒரு பக்குவப்பட்ட மனிதன் போன்று காட்சியளித்த அவனது தோற்றம் இவனுள் பெரும் திருப்தியை அளித்தது... சரவணனின் மனம் போல் அவனது தோற்றமும் மாறியிருந்தது கண்டு சித்தார்த்திற்குச் சந்தோசமாக இருந்தது...

பிரகதீஸ்வரியோ இருவரையும் அச்சத்துடன் மாறி மாறி பார்த்து கொண்டிருந்தாள்... அன்று இருவரும் ஒருவரின் சட்டையை மற்றவர் பிடித்துக் கொண்டிருந்த ஆக்ரோசமான காட்சியே அவளது கண்ணில் நின்று அவளைப் பெரிதும் அச்சுறுத்தியது...

சரவணன் முன்பு இருந்தவன் அல்லவே... இப்போது அவன் சித்தார்த் வீட்டினருக்கு மாப்பிள்ளையாகப் போகிறவன்... அதற்குரிய மரியாதையைக் கொடுக்க வேண்டும் அல்லவா...

அவளது நினைவிற்கு எதிர்மறையாக, "வாங்க மாப்பிள்ளை..." என்று வாயெல்லாம் பல்லாக வரவேற்றான் சித்தார்த்...

மாமன் மகனை கண்டு பெருத்த தயக்கத்துடன் நின்றிருந்த சரவணன் அவனின் வரவேற்பில் உற்சாகம் அடைந்தவனாய்,

"அத்தான்..." என்று மகிழ்ச்சியுடன் கூவி கொண்டு அவனை அணைத்துக் கொண்டான்...

இருவரும் பறக்க விட்ட பாச பறவைகளைக் கண்டு வாய் பிளந்து நின்றிருந்தாள் பிரகதீஸ்வரி...

"என்னை மன்னித்து விடுங்கள் அத்தான்..." தனது எல்லாத் தவறுகளுக்கும் சேர்த்து அவன் சித்தார்த்திடம் மன்னிப்பு கேட்டான்...

"அதை விடு... அது ஏதோ போதாத காலம்..." என்று சித்தார்த்தும் அதை ஒதுக்கி விட்டான்... ஏனெனில் அவனின் தவறும் அதில் அடங்கி இருக்கிறதே...

சித்தார்த்தின் பெற்றோர் மனஸ்தாபம் மறைந்து சரவணனை வரவேற்றனர்... என்ன இருந்தாலும் சரவணன் மார்த்தாண்டத்திற்குத் தங்கை மகன் அல்லவா... அந்த அன்பு எப்போதும் அவரிடத்தில் இருக்கத் தான் செய்தது... அது அவனது தவறுகளை மன்னிக்கச் சொல்லியது...

அது போல் ஹரியும், சந்தியாவும் அவனை வரவேற்க வந்தனர்... தங்கையிடம் அவளின் நலம் விசாரித்த சரவணன் ஹரியை கண்டதும் உற்சாகமாகத் தனது வேலைகளைப் பற்றிப் பேசி கொண்டிருந்தான்... எல்லோரிடமும் அவன் பேசி கொண்டிருந்தாலும் அவனது கண்கள் தன்னவளை தான் தேடியது... அவன் வருவது தெரிந்தும் அவள் வரவில்லை என்றால் ஒருவேளை கோபமாக இருக்கிறாளோ...?

"பிரகதி... ஸ்வேதா எங்கே...?" மெல்ல தயக்கத்துடன் தங்கையிடம் கேட்டான்...

அதைக் கண்டு நமட்டு சிரிப்புடன் அவள், "அண்ணி ரூமில் இருக்காங்க..." என்றாள்...

"நான் போய்ப் பார்க்கவா...?"

"அண்ணா... இதுக்கு எல்லாமா பெர்மிசன் கேட்பது... நீங்க போய்ப் பாருங்க..."

தங்கை சொன்ன அடுத்த நொடி சரவணன் காற்றாகத் தன்னவளை தேடி அவளது அறைக்குச் சென்றான்...

கதவை தட்டி விட்டு அவன் காத்திருந்த ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு யுகமாக நகர்ந்தது... கதவை திறந்த ஸ்வேதா இவனைக் கண்டதும் ஒரு வெற்று பார்வை பார்த்து விட்டு திரும்பி கொண்டாள்... அதைக் கண்டு கொள்ளாது அவளை இடித்துக் கொண்டு அவன் உள்ளே நுழைய முயல, அவள் பதறி போய் விலகி நின்றாள்...

"எப்படி இருக்க ஸ்வீட்டி...?"

"ஒரு வாரத்திற்குள் எனக்கு ஒன்றுமாகி விடவில்லை... நல்லா தான் இருக்கிறேன்..."

"அத்தானை காணாது ஏக்கத்தில் மெலிஞ்சு போயிருப்பியோன்னு நினைச்சேன்..." என்றவனின் பார்வை அவளது மேனியில் நிதானமாய் ஊர்ந்தது...

"இப்படி எல்லாம் பார்த்த உன் கண்ணை நோண்டிருவேன்..."

"ஹா... ஹா..." என்று வாய் விட்டு சிரித்தவன்,

"இப்படிப் பார்ப்பதற்குத் தானேம்மா நாளைக்கு லைசென்ஸ் கொடுக்கப் போறாங்க... ஆனா எனக்கு அது தேவையில்லை... நான் தான் ஏற்கெனவே லைசென்ஸ் வாங்கிட்டனே..." என்று பெருமை பீற்றி கொண்டவனைக் கண்டு அவள் தலையில் அடித்துக் கொண்டாள்...

"இப்போ எதுக்கு இங்கே வந்த...? அதைச் சொல்லு..."

"இதைக் கொடுத்துட்டு போகலாம்ன்னு வந்தேன்..." என்றவன் கையிலிருந்த கவரை அவளிடம் நீட்டினான்...

அதை வாங்காது அசையாது அவள் நின்றிருந்தாள்...

"நம்ம கல்யாணத்துக்காக உனக்குப் பட்டு புடவையும், நகையும் நான் வாங்கி வந்தேன்..."

"என் அப்பா, அம்மா இதை விட விலையுயர்ந்த பட்டு புடவை வாங்கி வச்சியிருக்காங்க... அதே போல் தான் நகைகளும்... எல்லாமே வைரங்கள்..." என்றாள் பெருமிதமாக...

"நிச்சயம் உன் அப்பா, அம்மா, அண்ணா அளவுக்கு என்னால் எல்லாம் அவ்வளவு விலை உயர்ந்ததா வாங்கிக் கொடுக்க முடியாது தான்... ஆனால் அவங்க வாங்கிக் கொடுத்ததில் இல்லாத ஒன்று நான் வாங்கிக் கொடுத்த பொருள்களில் இருக்கும்..."

அவள் புரியாது அவனைப் பார்த்தாள்...

"அது தான்ம்மா காதல்... இந்தச் சரவணனால் மட்டும் தான் இந்த ஸ்வேதாவுக்குக் காதலை அள்ளி அள்ளி கொடுக்க முடியும்... வேறு எந்த உறவாலும் அதைக் கொடுக்க முடியாது..."

"உன் காதல் ஒண்ணும் எனக்கு வேண்டாம்..." என்று அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்... அவனது வார்த்தையில் கலவரம் கொள்ளும் தனது மனதினை நினைத்து அவளுக்குப் பெரும் கலவரமாக இருந்தது...

"ஆனால் எனக்கு உன் காதல் வேணுமே..." என்று கூறியவனின் வார்த்தைகள் அத்தனை மென்மையுடன் ஒலித்தது...

அதில் அவள் அவனைத் திரும்பி பார்க்க, அவனோ ஒன்றும் பேசாது கையிலிருந்த கவரை அவளது கைகளில் திணித்து விட்டு சென்று விட்டான்...

சரவணன் சென்றதும் அவளையும் அறியாது ஆவல் மனதினை உந்தி தள்ள அந்தக் கவரை பிரித்துப் பார்த்தாள் அவள்... அழகிய சரிகை வேலைப்பாடுடன் அருமையாக இருந்தது அந்தப் பட்டு புடவை... புடவை அதிக விலை உயர்ந்தது என்றும் சொல்ல முடியாது... அதே சமயம் குறைந்த விலை என்றும் சொல்ல முடியாது... அது போல் தான் நகைகளும்... அதிக எடை இல்லாது இருந்தாலும் அதன் நுணுக்கமான வடிவமைப்பு அவளது கண்களையும், மனதினையும் பறித்தது...

மெல்ல அதை வருடி கொடுத்தவளின் விழிகள் ஏன் கலங்குகிறது என்று தெரியாது கலங்கியது...

"ஸ்வீட்டி... பிடிச்சிருக்கா...?" திடுமெனக் காதுக்கு அருகில் ஒலித்த குரலில் திடுக்கிட்டு திரும்பியவள் சரவணனை கண்டு முறைத்தாள்...

"சொல்லு ஸ்வீட்டி..."

அவன் கேட்டதிற்கு அவள் மௌனம் சாதித்தாள்... அவன் அதைக் கண்டு கொள்ளாது,

"ஆனா எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு..." என்றவன் அவள் எதிர்பார்க்காத தருணத்தில் அவளது கன்னத்தில் முத்தமிட்டான்...

அடுத்தக் கணம் அவள் கோபம் கொண்டு அவனைப் பிடித்துத் தள்ளி விட்டாள்...

"தொட்டேன்னா கொன்னுருவேன் ராஸ்கல்..." என்று அவனை மிரட்ட வேறு செய்தாள்...

"என்னம்மா இது...? யாரையும் சைட் அடிக்கக் கூடாதுன்னு சொல்ற... அதே சமயம் உன்னையும் தொட கூடாதுன்னு சொல்ற... நான் பாவம் இல்லையா... ஒரு கன்னி பையனின் பாவம் உன்னைச் சும்மா விடாது..." என்று நாடக பாணியில் கூறியவன் போலியாக இல்லாத கண்ணீரை துடைப்பது போல் பாவனைச் செய்ய...

அதில் அவளது முகத்தில் புன்னகை தோன்றியது...

"நீ பாவமா...? போடா..." என்று வாயிலை நோக்கி கையைக் காட்டினாள் அவள்...

"இப்போ நான் போறேன்... ஆனா நாளைக்கு நைட் இங்கே நான் வருவேன்..."

"எதுக்கு...?" என்று அவள் வெடுக்கென்று கேட்டாள்...

"என்னம்மா இது கேள்வி...? நீ இருப்பது என்னுடைய ரூம்... இன்று ஒரு நாள் போனால் போகிறதுன்னு விடறேன்... நாளை எனக்கு என்னுடைய ரூம் வேண்டும்...

இல்லைன்னா போனால் போகுதுன்னு உன்னை வேணும்ன்னா என் கூடத் தங்க வச்சிக்கிறேன்..."

"டேய்... உன்னை..." என்றவள் கையிலிருந்ததை அருகில் இருந்த மேசை மீது வைத்து விட்டு அவனைத் துரத்தினாள்...

"ஐயோ... மாமா, அத்தை, அத்தான்ஸ், தங்கச்சிஸ் எல்லோரும் என்னைக் காப்பாத்துங்க..." என்று அவன் அலறியபடி வீடு முழுவதும் ஓடினான்... அவளும் அவனை விடாது துரத்தினாள்...

இருவரையும் கண்டு எல்லோரின் சலனம் அடைந்த மனதும் பெருத்த நிம்மதி அடைந்தது...

மாலையில் திருமணத்திற்கு வாங்கிய புது உடைகள், நகைகள் வைத்து சாமிக்கு படையல் வைத்து கும்பிட்டனர்... கடவுளின் புகைப்படத்தோடு பிரகதீஸ்வரியின் பெற்றோர் மற்றும் சரவணன், சந்தியாவின் தந்தை ஜெயசிம்மனின் புகைப்படமும் இருந்தது...

அப்போது சித்தார்த்தின் விழிகள் வரவேற்பறையில் மாட்டியிருந்த ஜெயசிம்மன் மற்றும் விமலாராணி புகைப்படத்தைப் பார்த்தது... அப்போது அவனது பார்வையில் அளவு கடந்த வெறுப்பு இருந்தது...

"இப்போது விமலா இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்..." என்று மார்த்தாண்டம் தங்கை பாசத்தில் கண் கலங்கினார்...

"சந்தோசமான நேரத்தில் இப்போ எதுக்கு இந்தப் பேச்சு...?"

பிரபாவதி கணவனைக் கடிந்தார்... ஏனோ நாத்தனாரின் பேச்சு அவருக்கு அவ்வளவாக ரசிக்கவில்லை... சரவணன் ஆண் பிள்ளையாதலால் அன்னையின் பிரிவை நினைத்துக் கவலையில் மூழ்காது தன்னைத் தேற்றிக் கொண்டான்... ஆனால் சந்தியாவால் விம்மலை அடக்க முடியவில்லை... அவளது கேவலில் ஹரியின் கை அழுத்தமாய் அவளது கையைப் பற்றியது...

"சந்தியா..." என்று அவன் கோபமாய் அதட்டினான்... அவனுக்கு விமலாராணி மீது அப்படி ஒரு கோபம் இருந்தது...

கணவனது கோபத்தில் சந்தியா தனது அழுகையை அடக்கி கொண்டாள்... பிரகதீஸ்வரி எந்த உணர்வினையும் காட்டி கொள்ளாது அமைதியாக இருந்தாள்...

****

மறுநாள் பொழுது யாருக்கும் காத்துக் கொண்டு இருக்கவில்லை... திருமணநாள் இனிதாக விடிந்தது... திருநெல்வேலியில் இருந்த நட்சத்திர விடுதியில் தங்கியிருந்து விட்டுக் காலையில் தான் அங்கிருந்து கிளம்பினான் அர்ஜூன்...

"என்ன அர்ஜூன்... கொஞ்சம் நேரமே போனால் எல்லோர் கூடவும் பேசி கிட்டு இருந்திருப்பேன்ல்ல..." என்று மன தாங்கலுடன் கூறிய மனைவியின் முகத்தினை உற்று பார்த்த அர்ஜூன் ஒன்றும் பேசவில்லை...

காரில் இருந்து இறங்கி திருமணம் நடக்கும் இடத்திற்குச் செல்லும் வரை அவனது மனம் ஒரு நிலையில் இல்லை... அவன் எதிர்பார்த்தது போல் ஹரிப்ரசாத் தனது மனைவி சந்தியாவுடன் வரவேற்பில் நின்று கொண்டிருந்தான்... அர்ஜூனுக்கு ஹரிப்ரதாத் யார் என்று தெரியாது... ஆனால் ஹரிப்ரசாத் அவனை அடையாளம் கண்டு கொண்டான்... ஏனெனில் அவன் அருகில் சங்கமித்ரா வந்து கொண்டிருந்தாளே...

முகம் மலர அர்ஜூனிடம் பேசி கொண்டு வந்த சங்கமித்ராவின் முகம் ஹரிப்ரசாத்தை கண்டதும் வெளிறிப் போனது... அவன் இங்கு வந்திருப்பான் என்று அவள் கொஞ்சமும் நினைத்து பார்க்கவில்லை... ஏனெனில் பிரகதீஸ்வரியின் திருமணத்திற்கு அவன் வரவில்லை... அவனது வேலை அப்படி... அதனால் தான் அவள் அப்படி நினைத்தது...

மனைவியின் முகத்தை வைத்து அர்ஜூன் ஹரியை அடையாளம் கண்டு கொண்டான்...

"மித்தும்மா..." என்றழைத்தபடி அவன் மனைவியின் கையில் அழுத்தம் கொடுக்க, அதில் சுதாரித்தவள் தன்னை மலர்ச்சியாக வைத்து கொண்டாள்...

"வாங்க மித்ரா... வாங்க அர்ஜூன்..." என்று ஹரிப்ரசாத் அவர்களை வரவேற்க...

"மித்ராக்கா..." என்றபடி சந்தியா அவளை மகிழ்ச்சியோடு அணைத்து கொண்டாள்... அவளுக்கு நடந்தது எதுவுமே தெரியாது அல்லவா...

தன்னை வெகு சாதாரணமாக வரவேற்ற ஹரியை கண்டு சங்கமித்ராவிற்கு வருத்தமாக இருந்தது... ஹரியோ அவளைப் புன்னகையுடன் பார்த்திருந்தான்...

"மித்து... உள்ளே போகலாமா..." அர்ஜூன் கேட்கவும் தான் சங்கமித்ரா அவனைத் திரும்பி பார்த்தாள்...

"வா..." தனது வலக்கையை நீட்டிய கணவனின் கையை இறுக பற்றிக் கொண்டாள் அவள்... ஆதரவு தேடும் சிறு மழலையின் செயலை ஒத்திருந்தது அவளது செயல்... அதை உணர்ந்த அர்ஜூனும் தாயாய் அவளுக்கு ஆதரவு அளிக்கத் தவறவில்லை...

மனைவி தோள் மீது கை போட்டபடி உள்ளே அழைத்துச் சென்றவனின் பார்வை ஹரியை அழுத்தமாய் அளவிட்டது... அப்போதும் புன்னகை முகம் மாறாது தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த ஹரிப்ரசாத்தை கண்டு அவன் சிறிது அசந்து தான் போனான்...

பின் அவன் ஹரியின் அருகில் இருந்த சந்தியாவைப் பார்த்தான்... சங்கமித்ராவை காட்டிலும் அவள் ஒன்றும் அத்தனை பேரழகி இல்லை... எதனால் அவன் சங்கமித்ராவின் காதலை நிராகரித்து விட்டு சந்தியாவைத் திருமணம் செய்து கொண்டான்...? அந்தக் கேள்வி அவனின் மனதினை போட்டு அரித்தது... அதே சமயம்

ஹரியின் கம்பீரமான அழகிற்குச் சந்தியா சற்றுக் குறைவு தான்...

மனைவி என்கிற சொல் மாயம் செய்கின்றதோ...!

யோசனையுடன் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தவன் அப்போது தான் தனது மனைவியைக் கவனித்தான்... ஏதோ ஒரு யோசனையில் அவள் தலையைக் குனிந்து கொண்டு அமர்ந்திருந்தாள்... அவளைக் காண காண அவனுக்குச் சிரிப்புப் பொங்கியது...

"ஹா... ஹா..." என்று வாய் விட்டு சிரித்து விட்டான்...

"இப்போ எதுக்கு இப்படிச் சிரிக்கிறீங்க...?" புரியாது பார்த்தாள் அவனின் மனைவியவள்...

"இல்லை... உன் டேஸ்ட் இத்தனை மட்டமாக இருக்கிறதேன்னு தான்..."

இப்போது அவள் உண்மையில் புரியாது 'ங்ஙே' என்று விழித்தாள்...

"அந்த ஹரியை தான் சொன்னேன்..." என்று கூறியவனின் இதழில் நமட்டுச் சிரிப்புத் தவழ்ந்தது...

"அர்ஜூன்..." என்று சிணுங்கியவளை கண்டு,

"இதே இது என்னுடைய செலக்சனை பார்... எவ்வளவு சூப்பரா இருக்கு... என் மனைவி அத்தனை அழகு..." என்க...

இதற்கு அவள் என்ன பதில் கூறுவது... அவனின் ரசனையை மட்டம் தட்டினால் அது அவளையே மட்டம் தட்டுவது போல் அல்லவா... இருந்தாலும் கெத்து விடாது,

"என்னுடைய செலக்சனும் சூப்பர் தான்... அதாவது என் கணவரை சொன்னேன்..."

சமயோஜிதமாகப் பதிலளித்த மனைவியைக் கண்டு அர்ஜூன் கைகள் இரண்டையும் தூக்கி, "அம்பேல்..." என்று

சிரித்தவன் அவள் எதிர்பாரா தருணத்தில் அவளது கன்னத்தில் முத்தமிட்டான்...

"அர்ஜூன்..." என்று நாணத்துடன் சிணுங்கியவள் அவனது செயலை கண்டு கோபம் கொள்ளவில்லை... அதில் அவனது மனம் மகிழ்ந்து போனது...

"யாராவது பார்க்க போறாங்க...?"

"உன் கண்களைச் சுற்றிலும் ஓட்டி பார்... நாம தான் முதல் ஆளாய் வந்திருக்கிறோம்..." என்றவனைத் தொடர்ந்து பார்த்தவள் அங்கு அவ்வளவாக யாரும் இல்லாததைக் கண்டு நிம்மதியுற்றாள்...

"ஜோடி பொருத்தம் சூப்பரா இருக்கில்ல அத்தான்..."

சந்தியா கணவனிடம் கூற... அவனோ அவர்களைக் கவனித்தாலும் மனைவி தோள் மீது கை போட்டு அணைத்து,

"நம்மை விடவா...?" என்று கூற...

"உண்மையா...?"

"சத்தியமாடி சந்து குட்டி..."

"என்னை உங்களுக்குப் பிடிக்குமா அத்தான்..." ஆச்சிரியமாய்க் கேட்டவளை கனிவுடன் பார்த்தவன்,

"நமக்குப் பேரன், பேத்தி பிறந்த பிறகு இதைக் கேட்காமல் போனாயே... அடி மக்கு, உன்னைப் பிடிக்காமல் தான் உன் கூடச் சந்தோசமாக வாழ்கிறேனா..."

"இருந்தாலும் நாம காதலிச்சுக் கல்யாணம் பண்ணவங்க இல்லையே..."

"இருந்தாலும் அந்தக் காதல் நம்மிடையே இல்லாமல் போய் விட்டதா என்ன...?"

இல்லை என்று எப்படி அவளால் கூற முடியும்... உளமார்ந்த திருப்தியுடன் அவனது தோள் சாய்ந்து கொண்டாள்...

****

"பேபி... இங்கே வா..."

திருமண வேலையாக அலைந்து கொண்டிருந்த மனைவியின் கைப்பற்றி உணவு இருக்கும் கூடத்திற்கு அழைத்துச் சென்றான் சித்தார்த்...

"மாமூ... அங்கே வேலைகள் எல்லாம் போட்டது போட்ட படி இருக்கு..."

"நீ இல்லாமலும் எல்லாம் நடக்கும்... முதலில் சாப்பிடு..." என்று அவளை அமர வைத்து உணவை பரிமாறச் சொன்னான்...

"ப்ளீஸ் மாமூ..."

"மூச்..." என்றான் சின்னக் குழந்தைகளை அரட்டுவது போல் கண்களை உருட்டி கொண்டு...

அவன் சொன்னதைக் கேட்டவள், "நீங்க சாப்பிடலையா...?"

"ஏன் நீ ஊட்டி விட மாட்டியா...?" என்று அவன் விசமமாய்க் கண்சிமிட்ட...

"யாராவது வர போறாங்க..."

"யார் வந்தால் நமக்கு என்ன...?" என்று கூறியவன் மனைவியை ஊட்டி விடச் சொல்லி அப்படியே தனது வயிற்றையும் நிரப்பிக் கொண்டான்...

உணவு முடித்து வெளியில் வரும் போது தான் பிரகதீஸ்வரி சங்கமித்ராவை பார்த்தாள்... உற்சாகமாக அவள் அருகே ஓடி சென்றாள்...

"அத்தான் வாங்க..." என்று அர்ஜூனை வரவேற்றவள்,

"அக்கா... உள்ளே வந்திருக்கக் கூடாதா...? அண்ணி கூட யாருமில்லை... நீங்களாவது வந்து இருங்க..." என்று அவளை அழைத்துக் கொண்டு சென்றாள்...

சித்தார்த்தும் அவர்களை வரவேற்றவன் வேறு வேலையைப் பார்க்கலானான்...

சுபயோக முகூர்த்த நேரத்தில் சரவணன் ஸ்வேதா கழுத்தில் மங்கல நாண் அணிவிக்க வந்தான்... ஏனோ அன்று அவளது விருப்பம் இல்லாது தான் கட்டிய தாலி அவனின் நினைவில் எழுந்தது... தயக்கத்துடன் தன்னவளை பார்த்தான்... அவளுக்கும் அந்த நினைவுகளின் தாக்கம் தானோ... கண்களில் கனல் பறக்க அவனைப் பார்த்தாள்... அந்தக் கனலில் அவனுக்குத் தெரிந்து போனது அவள் தனது செயலை அவ்வளவு எளிதில் மன்னிக்கப் போவதில்லை என்று...

"ஸ்வேதா..." கலக்கத்துடன் தன்னை அழைத்தவனைக் கண்டு அவளுக்குச் சுற்றுப் புறம் உறைக்க... தனது கோபத்தினைக் கட்டுப்படுத்திக் கொண்டு முகத்தில் புன்னகையைத் தவழ விட்டாள்...

"அதான் ஏற்கெனவே தாலி கட்டி விட்டாயே... இப்போது என்ன புதுசா தயக்கம்...?" என்று அவனைப் பார்த்து கோபமாய் முணுமுணுத்தவளின் செயல் பார்ப்பவர்களுக்கு ஏதோ இணக்கமாய் ரகசியம் பேசி கொள்வது போல் தோன்றியது...

அதைக் கண்ட சித்தார்த்திற்குப் பெருத்த நிம்மதியாக இருந்தது... ஏனெனில் அவன் விசாரித்த வரை நீலேஷ் அவளைச் சந்தித்து விட்டு போன பின்பு தான் அவள் அப்படி ஒரு முடிவு எடுத்து இருக்கிறாள் என்று தெரிய வந்தது... அதனால் தங்கையவள் அவசரப்பட்டு முடிவு செய்து விட்டாளோ என்று எண்ணி மனம் வருந்தி கொண்டிருந்தவனுக்கு இப்போது சந்தோசமாக இருந்தது...

"இதையும் நீ கழட்டி எறிந்து விட்டால்...?" விளையாட்டு போல் கூறினாலும் சரவணனின் வார்த்தையில் அத்தனை வேதனை இருந்தது...

"அது நீ நிச்சயித்த கல்யாணம்... இது நான் நிச்சயித்த கல்யாணம்... நீ தோற்றுப் போகலாம்... நான் தோற்று போக

மாட்டேன்..." என்றாள் கர்வமாய்...

"நிச்சயமாய் நீ தோற்று போக நானும் விட மாட்டேன் ஸ்வீட்டி..." என்றவனது வார்த்தையில் மட்டும் அல்லாது விழிகளிலும் அத்தனை காதல் சொட்டியது... தான் வாங்கிக் கொடுத்த புடவை, நகைகளில் தேவதை போல் ஜொலித்த தன்னவளை அவனது விழிகள் விழுங்கி விடுவது போல் பார்த்தது...

ஸ்வேதா திகைத்துப் போய்ச் சரவணனை பார்த்தாள்... அந்தக் கணத்தைத் தனக்குச் சாதகமாக்கி கொண்டு அவன் அவளது கழுத்தில் மஞ்சள் கயிறை கொண்டு சென்று மூன்று முடிச்சு போட்டான்...

அதன் பின்னர் நடந்த சடங்குகளில் எல்லாம் ஸ்வேதா சரவணனுடன் இணக்க நிலையைக் கடைப்பிடித்தாள்... ஒருவழியாகத் திருமணம் சிறப்பாக நடைப்பெற்றதில் எல்லோரும் நிம்மதி அடைந்தனர்...

திருமணம் முடிந்து அர்ஜூன், சங்கமித்ரா உடனே கிளம்பி சென்று விட்டனர்... எஞ்சியிருந்தவர்கள் வீட்டினர் மட்டுமே...

"டயர்டா இருந்தால் கொஞ்சம் ரெஸ்ட் எடும்மா..." ஹரி சந்தியாவை வரவேற்பறை சோபாவில் அமர செய்தான்...

"அதெல்லாம் ஒண்ணும் இல்லைங்க..."

"கொஞ்சம் இரு... உனக்கு ஜூஸ் எடுத்துட்டு வர்றேன்..." என்றவன் சமையலறைக்குச் சென்றான்...

அங்கிருந்த பிரகதீஸ்வரியிடம், "ரதிம்மா... சந்தியாவுக்கு ஜூஸ் போட்டு கொடுக்க முடியுமா...?"

"போட்டு கொடுன்னு உரிமைக்குக் கேட்கிறதை விட்டுட்டு... என்ன அத்தான் இது இப்படிக் கேட்டுக்கிட்டு... நீங்க போய் ஹாலில் உட்காருங்க... நான் கொண்டு வர்றேன்..." என்று அவனை அனுப்பி வைத்தவள் பழச்சாறு தயாரிக்கத் தயாரானாள்...

அந்நேரம் அவளைத் தேடி அங்கு வந்த சித்தார்த், "உனக்கு எத்தனை தடவை சொல்றது இப்படி வேலையை இழுத்து போட்டுக்கிட்டு செய்யாதேன்னு..." என்று கடிந்தபடி அவளை வேலை செய்ய விடாது தடுத்தான்...

"சந்தியா அக்காவுக்கு ஜூஸ் போட்டு கொடுத்துட்டு வர்றேன்..."

"ஏன் மகாராணி போட்டு குடிக்க மாட்டாளாக்கும்...?"

"ச்சு... அவங்க குழந்தை உண்டாகி இருக்காங்க..."

"இப்போ தான் குனிஞ்சு, நிமிர்ந்து நல்லா வேலை செய்யணும்... அவளை வந்து வேலை பார்க்க சொல்லு..."

“அது எழு மாசத்துக்கு அப்புறம்... இப்போ இல்லை...” என்று விளக்கியவள், "ஹரி அத்தான் கிட்ட சொல்லிட்டேனே..." என்று பரிதாபமாய் இழுத்தாள்...

"அவனா கேட்டான்... அப்போ அவன் பொண்டாட்டிக்கு அவனை வந்து போட்டுக் கொடுக்கச் சொல்லு..." என்று காட்டமாய்ப் பதில் கூறினான் சித்தார்த்...

"இதோ நீங்க பேசிக்கிட்டு இருக்கிற நேரத்தில் நான் ஜூஸ் போட்டு முடிச்சிட்டேன்..." என்றவள் அவனது கரத்தில் ஒரு குவளையைக் கொடுத்து,

"முதல்ல நீங்க இதைக் குடிச்சு கூலாகுங்க... ரொம்பச் சூடா இருக்கீங்க..." என்க...

அதில் அவனது முகம் மலர்ந்தது... அவளது இடையில் கை கொடுத்து தனது அருகில் இழுத்தவன்,

"இன்னைக்கு உன் அலங்காரம் பார்த்து நான் ரொம்பச் சூடாகத் தான் இருக்கேன்..." என்றான் கிறக்கத்துடன்...

"ஆத்தாடி... இந்த ஆட்டத்துக்கு நான் வரலை..." என்றவள் சிரித்துக் கொண்டு அங்கிருந்து நழுவி ஓடி விட்டாள்... சித்தார்த்தும் சிரித்தபடி மனைவியைப் பின் தொடர்ந்தான்...

அங்கு எல்லோருக்கும் பழச்சாறு கொடுத்த பிரகதீஸ்வரி ஹரி, சந்தியாவுடன் உரையாடி கொண்டிருந்தாள்... அதைக் கண்டு அவனும் அங்கு வந்து அமர்ந்தான்... சிறிது நேரம் பேசி கொண்டிருந்து விட்டு எழுந்த பிரகதீஸ்வரி,

"அக்கா வாங்க... சாயங்காலம் அண்ணா, அண்ணியைக் கோவிலுக்குக் கிளம்பச் சொல்லிட்டு வரலாம்..."

பெண்கள் இருவரும் எழுந்து உள்ளே சென்று விட, சித்தார்த்தும் அங்கிருந்து நகர்ந்தான்...

"கொஞ்சம் இருங்க சித்தார்த்..." ஹரி சொன்னதும் நின்றான் அவன்...

"என்னை ஏன் ரதிம்மா கூடப் பேச விட மாட்டேங்கிறீங்க... அப்படியே நான் பேசினாலும் நீங்க கூடவே வந்து நிற்கிறீங்க...? என்ன காரணம் சித்தார்த்...?"

அதற்குப் பதில் பேசாது ஹரியை வெறித்துப் பார்த்தான் சித்தார்த்...

"ஒருவேளை அந்த உயில் மேட்டரை ரதி கிட்ட சொல்லிருவேன்னு பயப்படுறீங்களா...?"

"ஹ... பயமா...? எனக்கா...? அதுக்கு வேறு ஆளை பார்..." என்றான் சித்தார்த் அலட்சியமாய்...

"அது தெரிந்தால் ரதி உங்களை வெறுத்து விடுவாளோங்கிற பயம் தானே..."

"நிச்சயம் என் பேபி என்னை வெறுக்க மாட்டாள்..." மனைவி மீதிருந்த நம்பிக்கை அவனை அப்படிப் பேச சொல்லியது...

"ரொம்பச் சந்தோசம் சித்தார்த்... நீங்க நினைக்கிற மாதிரி நான் ரதிம்மா கிட்ட எதுவும் சொல்ல மாட்டேன்... ஏன்னா எனக்கு என் ரதிம்மாவோட வாழ்க்கை தான் முக்கியம்..."

"அவள் என் மனைவி... என் ரதி பேபி... இன்னொரு முறை அவளை ரதிம்மா, அம்முன்னு கூப்பிடாதே... எனக்குச் சுத்தமாய்ப் பிடிக்கவில்லை..." என்று முகத்தில் அடித்தார்

போன்று கூறியவன், ஹரியின் முகத்தைப் பார்க்க பிடிக்காதவனாக அங்கிருந்து சென்று விட்டான்...!!!

"அவள் நெற்றி திலகம் சொல்லும்,
அவள் உனக்கானவள் என்று...
அவள் கழுத்து தாலி சொல்லும்,
அவள் உனக்கானவள் என்று...
அவள் இதயத்தில் பதிந்திருக்கும்
உன் உருவம் சொல்லும்,
அவள் உனக்கானவள் என்று...
அவளது உயிர் துடிப்பில் கலந்திருக்கும்
உன் உயிர் மூச்சு சொல்லும்,
அவள் உனக்கானவள் என்று...
இத்தனை ஆதாரமிருந்தும்
தவிப்பு ஏன் மன்னவனே...?
உயிரில் கலந்தவனை விட, உயிர்
கொடுத்தவனுக்கே முதலிடம்
என்பதால் வந்த கலக்கமோ...?
தவிப்பும், கலக்கமும் தேவையில்லை...
அவள் உனக்கானவள் தான்...
உனக்கு மட்டுமேயானவள் தான்...!!!"

நனவாகும்...!!!

தோட்டத்தில் நின்றிருந்த சித்தார்த் அலைப்பேசியில் தொழில் சம்பந்தமாய்ப் பேசி கொண்டிருந்தவன் பேச்சு முடிந்து அழைப்பை துண்டித்து விட்டுத் திரும்பிய போது சந்தியா அவனைத் தேடி அங்கு வந்தாள்... அவன் அவளைக் கண்டு கொள்ளாமல் அங்கிருந்து நகரப் போனான்...

"அத்தான்..."

அவளது அழைப்பில் அவன் நின்றாலும் திரும்பி பார்க்கவில்லை... அவள் தான் அவன் முன் வந்து நின்றாள்...

"ஏன் அத்தான் இப்படிப் பண்ணினீங்க...? நீங்க நினைச்சிருந்தா எல்லாப் பிரச்சினைகளையும் ஒரு நொடியில் தீர்த்து இருக்கலாமே... அதே போல் பிரகதியையும், அம்மாவையும் சமாளிச்சு இருக்கலாமே... நீங்க அதை எல்லாம் செய்யாமல் இப்படி ஒரு குடும்பத்தைச் சிதற அடிச்சிட்டீங்களே..."

"ரதி விசயம் என்னுடைய பெர்சனல்... அது எனக்கும் அவளுக்குமானது அதைப் பத்தி நீ கேட்க தேவையில்லை..." என்றான் பட்டென்று முகத்தில் அடித்தார் போன்று...

"சரி, எனக்கு அது வேண்டாம்... ஆனால் நீங்க அம்மாவை வீட்டை விட்டுத் துரத்தியது தப்பு தானே..."

"உன் அம்மாவே தவறு... இதில் நான் அவங்களை வீட்டை விட்டுத் துரத்தியது தான் தவறா...?" என்றான் அவன் காட்டமாய்...

"அப்படி அவங்க என்ன தவறு செஞ்சாங்க...? பெரியப்பா மட்டும் பிரகதி ஒருத்தி பெயரில் அத்தனை சொத்துக்களையும் எழுதி வைக்கலாமா...? அது தவறு தானே... அவரோட தம்பி பிள்ளைங்க எங்களுக்கு அதில் உரிமை இல்லையா...? நான் பெண் பிள்ளை... எனக்கு ஒண்ணும் வேண்டாம்... ஆனால் அண்ணா பாவம்

இல்லையா... இப்போ அவனுக்கு ஒண்ணுமே இல்லையே..."

"உன் அம்மா தவறே செய்யலையா...? உலகம் அறியா ஒரு சின்னப் பொண்ணை மிரட்டி அத்தனை சொத்துக்களையும் எழுதி வாங்கியது தப்பில்லையா...?"

அதற்கு அவளால் பதில் பேச முடியவில்லை... ஆனாலும் அன்னையை விட்டு கொடுக்க மனம் இல்லாது,

"நீங்களும் அதே தப்பை தான் செய்து இருக்கீங்க..."

"இந்தக் கேள்வியை என் மனைவி என்னைப் பார்த்து கேட்கட்டும்... இதற்கான பதிலை அவளிடம் நான் சொல்லி கொள்கிறேன்... அதுக்கான முழு உரிமை அவளுக்கு மட்டும் தான் இருக்கிறது..." என்றான் அவனும் தன் நிலையில் இருந்து சிறிதும் கீழிறங்காமல்...

"இன்னொன்றும் சொல்கிறேன் கேட்டு கொள்... தவறு எல்லாம் உன் பெற்றோரிடம் தான்... உன் பெரியப்பாவிடம் கிடையாது... அது போல் அவரின் பெண்ணிடமும் கிடையாது..." என்று நிறுத்தியவன் அவளை உறுத்து விழித்தபடி,

"இன்னைக்கு இவ்வளவு பேசுற நீ, அன்னைக்கு உன் அம்மா உன் தங்கையைக் கொடுமைப்படுத்திய போது எங்கே போயிருந்த...?"

"என் அம்மா பிரகதியை கொடுமைப்படுத்தினாங்களா...? ச்சேச்சே, அப்படி எல்லாம் இல்லை..." அவள் உறுதியாக மறுத்தாள்...

"நீ எல்லாம் சொகுசா காலை ஆட்டிக்கிட்டு சாப்பிட்டு, சாப்பிட்டு சும்மா உட்கார்ந்து இருந்தப்போ அந்தச் சின்னப் பெண் வீட்டு வேலை, வயல் வேலைன்னு மாங்கு மாங்குன்னு ஓடி ஓடி வேலை பார்த்தாளே, அப்போ எங்கே போயிருந்தது உன்னோட இந்த வாய்...?"

சாட்டையாய் சுழன்ற சித்தார்த்தின் வார்த்தைகள் அவளது மனதில் சுளீரென்று விழுந்து வலிக்கச் செய்தது...

"அது வந்து அத்தான்..."

"உன்னைச் சுத்தி என்ன நடக்கிறதுன்னு தெரியாம நீயா ஏதாவது பேச கூடாது சந்தியா... இப்போ உனக்குக் கல்யாணமாகி விட்டது... இன்னும் கொஞ்ச நாளில் அம்மாவாகப் போகிறாய்... இன்னும் இப்படி விளையாட்டுத்தனமாய் இல்லாமல் கொஞ்சம் பொறுப்போடு நடந்து கொள்..." என்றான் தனது குரலில் கடுமையை ஏற்றி...

"அத்தான்..."

"அப்புறம் இங்குள்ள எல்லாச் சொத்துக்களுக்கும் உரிமைக்காரி என் மனைவி மட்டுமே... ஏன்னா இத்தனை சொத்துக்களுக்கும் சொந்தக்காரர் அவளுடைய அப்பா... உன் அப்பா இல்லை... என்ன புரிந்ததா...? நீ இவ்வளவு பேசியும் நான் உன் கிட்ட இத்தனை பொறுமையாய் பேசிக்கிட்டு இருக்கேன்னா... அதுக்கு ஒரே காரணம்... நீ எதற்கும் ஆசைப்படாதவள்... வெகுளி என்பதால் தான்... உன் அண்ணனுக்காக மட்டும் தான் நீ சொத்துக்கள் கேட்டுச் சண்டை போட்டாய்... உனக்காக இல்லை... அந்த ஒரு காரணம் தான் என்னை இந்தளவுக்குப் பொறுமையாகப் பேச வைக்கிறது..."

சித்தார்த் பேச்சு முடிந்தது போல் அங்கிருந்து நகரப் போனான்...

"அத்தான், அம்மா பத்தி ஏதும் தகவல் கிடைச்சதா...? நீங்க அவங்களைத் தேடுனீங்களா...?" என்றவளை கூர்ந்து பார்த்தவன்,

"அதற்கான அவசியம் எனக்கு இல்லை..." என்று விட்டேற்றியாய் சொல்லிவிட்டு அவன் செல்ல... அவனைப் பின்தொடர்ந்து அவளும் வந்தாள்...

அப்போது அங்கு வந்த மனைவியைக் கண்டு சித்தார்த் திகைத்து நின்று விட்டான்... சந்தியா பிரகதீஸ்வரியை கண்டு புன்னகைத்தபடி சென்று விட்டாள்...

"பேபி... சந்தியா... அது வந்து..."

என்ன விளக்கம் சொல்வது என்று தெரியாது அவன் தடுமாறினான்... அன்று அன்னை அவனது வாழ்க்கையில் கும்மி அடித்து விட்டு போய் விட்டார்... இன்று மகளா...? அவன் மனதிற்குள் மிகவும் நொந்து போய் விட்டான்...

"அக்காவுக்கு என்ன...?" புரியாமல் கேட்டாள் அவள்...

அதில் நிம்மதி பெருமூச்சு விட்டவன், "அவளுக்கு என்ன நல்லா தான் இருக்கிறாள்... பொழுது போகாது என் கழுத்தை அறுத்து விட்டு போகிறாள்..." என்றான் அவன் சலிப்புடன்...

"அக்காவை பார்த்து என்ன வார்த்தை சொல்றீங்க...?" என்று இரு கைகளையும் இடுப்பில் வைத்தபடி முறைத்த மனைவியைக் கண்டு அவனுக்குச் சிரிப்புப் பொங்கியது...

"நீயே ஒரு குழந்தை... நீ என்னை அதட்டுகிறாயா...?"

"மாமூ..." என்று சிணுங்கியவளின் தோளோடு அணைத்து கொண்டவன்,

"ஆனால் என்னை அதட்ட, திட்ட இவ்வளவு ஏன் அடிக்கக் கூட உனக்கு மட்டுமே உரிமை இருக்கு..."

"சொல்லிட்டீங்கல்ல இனி ஞாபகம் வச்சிக்கிறேன்..." என்று குறும்பு புன்னகையுடன் கூறியவளை கண்டு அவனுக்குப் பொறாமையாக இருந்தது...

இவளை போன்று தெளிந்த மனதுடன் தன்னால் ஏன் இருக்க முடியவில்லை? என்று... சந்தியாவைக் கண்டு பொறாமை படாது இருக்கும் பிரகதீஸ்வரி போன்று, தன்னால் ஏன் ஹரியை கண்டு பொறாமைப்படாமல் இருக்க முடியவில்லை...?

அவனது குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்ததோ... அதிலும் அவள் மட்டுமே வேண்டும் என்று விடாது துடிக்கும் மனதினை அடக்க அவனால் முடியவில்லை... அவளுக்காக, அவளது காதலுக்காக எதையும் செய்ய அவன் தயாராக இருந்தான்... எந்த எல்லைக்கும் போகத் தயாராக இருந்தான் அந்தக் காதல் தீவிரவாதி....

****

அந்த அறை முதலிரவிற்கு என்று இருக்கும் சகல லட்சணங்களுடன் அழகாய் அலங்கரிக்கப்பட்டு இருந்தது... ஸ்வேதா அதை எல்லாம் ரசிக்கும் மனநிலையில் இல்லை... கோபமாக நடந்து வந்தவள் கட்டிலில் அமர்ந்திருந்த சரவணன் அருகில் தொப்பென்று அமர்ந்தாள்...

அவனும் வந்ததில் இருந்து அவளைத் தான் பார்த்திருந்தான்... நிச்சயம் ஒரு பூகம்பம் வெடிக்கும் என்று எதிர்பார்த்தவனாய் அருகில் மேசை மீதிருந்த ஆப்பிளை எடுத்துக் கடித்துக் கொண்டு அவளை வேடிக்கை பார்த்தான்...

அவனது செய்கை அவளை மேலும் ஆத்திரமூட்டியது...

"கழுத்தில் தாலி கட்டியாச்சு அப்படியே ஃபர்ஸ்ட் நைட்டும் கொண்டாடலாம்ன்னு நினைச்சே உன்னைக் கொன்னுருவேன்டா..."

அவள் கத்தியதை கேட்டுச் சாவகாசமாய்க் கைகளை மேலே தூக்கி சோம்பல் முறித்தவன், "நான் அப்படி எதுவும் சொல்லலையே ஸ்வீட்டி... ஒருவேளை உனக்கு அப்படி எதுவும் ஆசை இருந்தால்..." என்று நிறுத்தி விட்டு அவளைப் பார்த்துக் கண் சிமிட்டியவன்,

"உனக்கு அப்படி ஒரு ஆசை இருந்தால் சொல்லு... அத்தான் அதை நிறைவேத்தி வைக்கிறேன்..."

"யூ... யூ..." ஆத்திரத்தில் வார்த்தை கிடைக்காது அவள் தடுமாற...

"நான் நானே தான் ஸ்வீட்டி..." என்று கேலி குரலில் கூறி சிரித்தவன் பின் தனது விளையாட்டுத்தனத்தைக் கைவிட்டவனாய் தீவிரமான குரலில்,

"இப்போ நாம நம்ம வாழ்க்கையைப் பத்தி பேசலாமா...?"

அதில் கூர்ந்து தன்னைப் பார்த்தவளை கண்டு அவன், "சீரியசா சொல்கிறேன்..." என்க... அவள் புரியாது அவனைப் பார்த்திருந்தாள்...

"தேங்க்ஸ்..." என்றவனைக் குழப்பமாய்ப் பார்த்தவள்,

"எதுக்கு...?"

"வேறு எதுக்குத் தேங்க்ஸ் சொல்வாங்க... என்னை மாதிரி ஒருத்தனை கல்யாணம் பண்ணிக்கிட்டதுக்குத் தான்..."

அவன் கூறியதை கேட்டு அவளது விழிகளில் சிறு திடுக்கிடல் தென்பட்டது...

"அப்போ உன்னைப் புரிஞ்சிக்காம நான் உன் கழுத்தில் தாலி கட்டியிருக்கலாம்... ஆனா இப்போ உன்னை முழுசா புரிஞ்சிக்கிட்டு தான் தாலி கட்டியிருக்கிறேன்... யாரோ ஒருத்தன் அதுவும் மனசுக்கு விருப்பம் இல்லாத ஒருத்தன் கட்டிய தாலிக்கு இத்தனை வருசம் கழிச்சு முக்கியத்துவம் கொடுத்து அவனையே கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு எந்தச் சட்டமும் சொல்லலை... ஆனால் நீ அதைச் செஞ்சியிருக்க... இதிலிருந்து என்ன தெரியுதுன்னா...?" என்று நிறுத்தியவன் அவளை ஆழ்ந்து பார்க்க...

அவளோ திகைத்து போய் அமர்ந்திருந்தாள்...

"எத்தனையோ பெண்கள் தனக்குப் பிடிக்காத திருமணத்தில் இருந்து வெளிவந்து வேறு கல்யாணம் பண்ணியிருக்காங்க... இவ்வளவு ஏன் பிடிச்சுப் போய்க் கல்யாணம் பண்ணினவங்க கூட அதை விட்டு வெளியில் வந்து வேறு வாழ்க்கையைத் தேடி இருக்காங்க... நீயும் இதையே செய்திருக்கலாம்... ஆனா நீ இது எதையும்

செய்யலை... மீண்டும் என்னைத் தேடி தான் வந்திருக்க... என் கையால் தான் தாலி வாங்கியிருக்க..."

அவன் பேச பேச அவள் அதிர்ந்து போனாள்...

"இதுக்கு எல்லாம் என்ன காரணம் ஸ்வீட்டி...?" என்று கேட்டவனை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை அவளால்...

"உன் வசதிக்கு, அழகுக்கு என்னை விட நல்ல நிலையில் இருக்கும் ஒருவனைக் கல்யாணம் பண்ணியிருக்க முடியும்... ஆனால் நீ அதைச் செய்யலை... அப்படின்னா உன்னோட மனசில் ஏதோ ஒரு மூலையில் எனக்கான இடம் இருக்கு இல்லையா...? நான் செஞ்ச செயலை தான் வெறுத்திருக்க... என்னை இல்லை... அப்படித் தானே ஸ்வீட்டி...?"

தனது மனதில் இருப்பதை அப்படியே ஒப்புவித்தவனைக் கண்டு அவளுக்குப் பெருத்த ஆச்சிரியமாக இருந்தது...

"இனி உனக்குப் பிடிச்ச மாதிரி நடந்துக்கிறேன்... உனக்கு ஏத்த மாதிரி என்னை மாத்திக்கிறேன்... நீயா மனசு மாறி வரும் வரை நான் காத்திருப்பேன்... இல்லைன்னாலும் நான் காத்திருப்பேன் என் ஆயுள் முழுமைக்கும்..." என்றவன் அவளின் பதிலை எதிர்பாராது தரையில் போர்வை விரித்துப் படுத்துக் கொண்டான்...

ஸ்வேதா கட்டிலில் சாய்ந்தமர்ந்து கொண்டு படுத்திருந்த கணவனை இமைக்காது பார்த்து கொண்டிருந்தாள்... அவன் கூறியது அத்தனையும் உண்மை தான் என்றே அவளுக்குத் தோன்றியது...

"ஸ்வீட்டி... அத்தானை சைட் அடிச்சது போதும்... தூங்குடா..." என்று திடுமென ஒலித்த சரவணனின் குரலில் அவளது அடங்கிய கோபம் மீண்டும் பொங்க ஆரம்பித்தது...

கட்டிலில் இருந்த தலையணையை எடுத்து அவன் மீது வீசியவள், "கொஞ்சம் அமைதியாயிருந்தா உன் சேட்டையைக் காண்பிக்கிறியா...?"

அவள் வீசியெறிந்த தலையணையை எடுத்து அணைத்து கொண்டவன், "இன்னைக்கு நீ தான் எனக்குத் துணை..." என்று ஏக்கத்துடன் கூறியவன் அவளைப் பார்த்து குறும்பாய் கண் சிமிட்டினான்...

"போடா குரங்கே..." என்று அவனைக் கண்டு பழிப்பு காட்டியவள் அவனுக்கு முதுகு காட்டி படுத்து கொண்டாள்...

"குரங்கு கையில் பூ மாலை கிடைத்தால் என்ன செய்யும் தெரியுமா...? இப்போ என் கையில் கிடைத்த பூ மாலை நீ தான்..." என்றவனைக் கண்டு,

"நான் தூங்கிட்டேன்..." என்று அவள் கத்த...

"அது அந்தப் பயம் இருக்கணும்..." என்று கூறியவனின் மனம் அத்தனை லேசாக இருந்தது... அது போல் தான் ஸ்வேதாவிற்கும்...

வருங்காலத்தில் மண வாழ்க்கை மிகவும் சுவாரஸ்யமாகச் செல்லும் என்கிற நம்பிக்கை இருவருள்ளும் எழுந்தது...

மறுநாள் புதுமணத் தம்பதிகள் நேரே மும்பைக்குக் கிளம்பி சென்றனர்... வேலை இருப்பதால் அவர்களது தனிக்குடித்தனம் மறுநாளே தொடங்கி விட்டது... புலம்பிய பிரபாவதியை சித்தார்த்தும், மார்த்தாண்டமும் அமைதிப்படுத்தி விட்டனர்...

சித்தார்த் தங்கைக்காக அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கத் தயாராக இருந்த போதும் சரவணன் எல்லாவற்றையும் மறுத்து விட்டான்... அதற்கு ஸ்வேதாவும் துணை நின்றது தான் பெருத்த ஆச்சிரியமாக இருந்தது...

"கல்யாணம் பண்ணணும்ன்னு மட்டும் ஆசை இருந்தால் போதுமா...? கட்டிய மனைவியை வைத்துக் குடித்தனம் பண்ணி பார்க்கட்டும்... அப்போ தான் தெரியும் கஷ்டம், நஷ்டம் எல்லாம்..." என்று வெடுக்கென்று அவள் கூற... அதையும் புன்னகை மாறாது கேட்ட சரவணன்,

"நான் கஷ்டப்பட்டா என் கூடச் சேர்ந்து கஷ்டப்படப் போறது நீயும் தான்..."

அதில் அவள் அவனை முறைத்து பார்க்க, "சரி சரி முறைக்காதே... உன்னை எந்தக் கஷ்டமும் அணுகாமல் நான் பார்த்துக்கிறேன்..." என்று கூறியவன் தனது குரலை தணித்துக் கொண்டு அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில்,

"நீ என்னோட தேவதை... இத்தனை நாள் உன்னைக் கஷ்டப்படுத்தியது போதும்... இனி நீ கஷ்டப்பட நான் விட மாட்டேன்..." என்று காதலாகக் கூறியவன் காரில் தங்களது உடமைகளை எடுத்து வைப்பதை சரிபார்க்க சென்று விட்டான்...

பிடிவாதமாய்க் கணவன் மீது வெறுப்பைத் தக்க வைத்து கொண்டிருப்பவளின் மன உறுதியை அவன் தனது அன்பால் கொஞ்சம் கொஞ்சமாய்த் தகர்த்துக் கொண்டிருந்தான்...

அடுத்து ஹரிப்ரசாத்தும், சந்தியாவும் ஊருக்கு கிளம்பினர்... பிரகதீஸ்வரி சந்தியாவிடம் பேசி கொண்டிருக்க, ஹரி சித்தார்த்தின் அருகில் வந்தான்... சித்தார்த் 'என்ன' என்பது போல் அவனை அலட்சியமாய்ப் பார்த்து வைத்தான்...

"மிஸ்டர். சித்தார்த்... நேரில் தான் நீங்க என்னை என் அத்தை மகளோடு பேச விடாது செய்ய முடியும்... ஆனால் நான் ஃபோனில் அவள் கூடப் பேசுவதை உங்களால் தடை சொல்லவோ, கண்காணிக்கவோ முடியாதே..."

அவன் கூறியதை கேட்டு சித்தார்த்தின் முகம் பயங்கரமாய் மாறியது...

"நான் உயில் பத்தி சொல்ல நினைத்திருந்தால் இடைப்பட்ட இந்த மூன்று வருடங்களில் எப்போதோ சொல்லி இருக்கலாம்... ஆனால் நான் அதைச் செய்யவில்லை... ஏன்னா நீங்க அவளோட கணவர்... என்றாவது ஒரு நாள் அவள் உங்க கூட வாழ போவது நிச்சயம்... அதனால் தான்

அது பற்றி அவளிடம் பேசாது இருந்தேன்... மத்தபடி உங்க கிட்ட பயந்துக்கிட்டு இல்லை..."

"இடையில் வந்த உங்களுக்கே அவள் மீது இவ்வளவு உரிமை இருக்கும் போது, ஒன்பது வயதில் அவளை என் கையில் சிறு குழந்தையாய் வாங்கிய எனக்கு எவ்வளவு உரிமை இருக்கும்...? அவள் என் அத்தை மகள்... அதே மாதிரி நான் அவளுடைய மாமன் மகன்... அது நீங்கன்னு இல்லை வேறு எந்தக் கொம்பன் வந்தாலும் மாற்ற முடியாது... அவள் எனக்கு ரதிம்மா தான்... என்னுடைய செல்ல அம்மு தான்... உங்களுக்குப் பிடிக்கலைன்னாலும் நான் அப்படித் தான் கூப்பிடுவேன்... எங்க உறவை நீங்களே நினைச்சாலும் கூடப் பிரிக்க முடியாது..." என்று திமிராய் பேசியவனின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டால் தான் என்ன என்று சித்தார்த்திற்குத் தோன்றியது...

மனைவி முன் அதைச் செய்ய இயலாது கைகளை இறுக கட்டி கொண்டு அவன் அமைதியாய் ஹரியை பார்த்தான்...

"ஏன்னா அம்முவை நீங்க அளவுக்கு அதிகமா காதலிக்கிறீங்க... அவளுக்குப் பிடித்தமானது எல்லாம் உங்களுக்குப் பிடிக்கலைன்னாலும் கூட அவளுக்காக அதை எல்லாம் உங்களுக்குப் பிடித்தமானதாய் மாத்திக்கிறீங்க... இது தான் சித்தார்த் நீங்க... இந்த ஒரு குணத்துக்காவே உங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சியிருக்கு... ஐ லைக் யூ மேன்..."

சித்தார்த் எதிர்பார்க்காத நேரத்தில் அவனைக் கட்டியணைத்துக் கொண்டான் ஹரி...

'அடப்பாவி... இவனைப் பாம்புன்னும் நினைக்க முடியலை... கயிறுன்னு ஒதுக்கவும் முடியலையே...' மனதிற்குள் எரிச்சலோடு முனங்கினான் சித்தார்த்...

****

திருமணத்திற்கு வந்தவர்கள் எல்லோரும் கிளம்பி சென்றதும் சித்தார்த் மற்றும் பிரகதீஸ்வரி மட்டுமே அந்த

வீட்டில் எஞ்சியிருந்தனர்... அடுத்து வந்த நாட்கள் அமைதியாகச் சென்றது...

இப்போது பிரகதீஸ்வரிக்குத் தேர்வுகள் ஆரம்பமானது... இரவில் முழித்துப் படித்துக் கொண்டிருந்த மனைவிக்கு அவன் பால் காய்ச்சி கொண்டு வந்து கொடுத்து அவளை அக்கறையுடன் கவனித்துக் கொண்டான்...

"எனக்குக் காபி, டீ பிடிக்காதுன்னு சொன்னதை இன்னமும் ஞாபகம் வச்சியிருக்கீங்களா...?"

"உன் சம்பந்தப்பட்ட எதையும் நான் மறக்கவில்லை..." ஆழ்ந்து ஒலித்தது அவனது குரல்...

"ம்... தெரியும்..." என்றாள் அவனின் காதலின் ஆழம் உணர்ந்தவளாய்...

"இன்னும் இரண்டு வாரம் தான்... அதன் பிறகு...?"

கணவன் கண் சிமிட்டியதை கண்டு அவளது முகம் வெட்கத்தில் சிவந்து போனது... ஆனாலும் குறும்பை கை விடாது,

"அதுக்கு அப்புறமும் நான் படிக்கணுமே..." என்றவளை பார்த்தவன்,

"படி... இன்னும் எவ்வளவு படிக்கணுமோ அவ்வளவு படி... அதுக்கு முன்னே என்னுடைய மகளைப் பெத்து கொடுத்துட்டு நீ படி... நான் அவளை வளர்த்துக் கொள்கிறேன்... நீ உன் படிப்பில் முழுக் கவனத்தையும் செலுத்து..."

"ஓஹோ... மகள் வந்ததும் மனைவியைக் கழட்டி விடும் உத்தேசம் இருக்கிறதோ..." என்று போலியாக அவள் அவனை மிரட்ட...

"இப்போதைக்கு இதற்கான பதில் தெரியலை... மகள் பிறந்த பிறகு யோசித்துச் சொல்கிறேன்..." என்றான் அவன் நமட்டு சிரிப்புடன்...

"என் அன்பு மட்டும் உங்களுக்கு முழுதாக வேண்டும்... ஆனால் உங்க அன்பு மட்டும் அப்படிக் கிடையாதா...?" என்று அவள் முறுக்கி கொள்ள...

"என்னைப் பொருத்தவரையில் நீ அப்படித் தான் இருக்க வேண்டும்... என்னை மட்டும் பார்த்துக் கொண்டு, என்னை மட்டும் கவனித்துக் கொண்டு... ஆனால் நான் உங்க இரண்டு பேரையும் சேர்த்துக் கவனித்துக் கொள்வேன்..."

"ம்... பார்க்கலாம், பார்க்கலாம் எப்படிக் கவனிக்கிறீங்கன்னு..."

"பார்க்க தானே போகிறாய்..."

புருவம் உயர்த்தியபடி புன்னகையுடன் சொன்ன கணவனைக் கண்டு அவளது இதயம் தடம் புரண்டது...

காலையில் பரீட்சைக்குத் தயாராகி வந்த மனைவியைச் சித்தார்த் நேரே அழைத்துச் சென்ற இடம் மலை அடிவாரத்தில் இருந்த பிள்ளையார் கோவிலுக்கு...

விழி விரித்து வியப்பாய் பார்த்தவளிடம், "இவர் கிட்ட நாம வேண்டுகிற விசயம் எல்லாம் அப்படியே நடக்குது இல்லையா...? அதனால் தான்..."

கணவனது அன்பு மனதை தாக்க மன நெகிழ்வுடன் கடவுளை கும்பிட்டு விட்டு வந்தவளுடன் அவனும் அமைதியாக வந்தான்... அவர்களது மனதில் இருந்த மகிழ்ச்சி அந்த மௌனத்தை மிகவும் ரசித்தது...

காரில் ஏறிய பிறகு அவனிடம் ஏதோ பேச திரும்பிய பிரகதீஸ்வரி அப்போது தான் கவனித்தாள்... அவனது நெற்றியில் திருநீறு இல்லாததை... சட்டென்று அவனது கழுத்தை வளைத்து அவனது முகத்தை அருகில் இழுத்தவள் தனது நெற்றியில் இருந்த திருநீறை அவனது நெற்றியில் ஒட்ட வைத்தாள்...

"ஒழுங்கா எக்ஸாம் எழுதும் எண்ணம் இருக்கிறதா...? இல்லையா...?" என்றவனது குரல் உணர்ச்சிவசப்பட்டதில்

கரகரத்து ஒலித்தது...

அவனது குரலில் அவள் சற்று தடுமாறி தான் போனாள்...

"சாரி மாமூ... நான் ஏதோ தெரியாம..." என்று வருந்தியவளை கண்டு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன் அவளைக் கனிவுடன் பார்த்தான்...

"மாமூ பத்தி யோசிக்காம படிச்சதை மட்டும் நினைவில் வச்சிட்டு ஒழுங்கா போய் எக்ஸாம் எழுது..."

அதைக் கேட்டு நிம்மதி புன்னகை பூத்தவள் தனது தலையைச் சுட்டி காட்டி, "எக்ஸாமுக்கு உண்டானது இங்கே இருக்கு..."என்று கூறியவள்,

"மாமூக்கு சொந்தமானது இங்கே இருக்கு..." என்று தனது இதயத்தைச் சுட்டி காட்டினாள்...

"அது மூளையில் பத்திரமா இருக்கு... அது மாதிரி என் மாமூ இங்கே பத்திரமா இருக்காங்க..." என்று கூறி சிரித்தவளின் சிரிப்பு அவனையும் தொற்றி கொண்டது...

முக மலர்ச்சியுடன் அவளைக் கல்லூரியில் இறக்கி விட்டவன் அதே மலர்ச்சியுடன் தனது வேலையைப் பார்க்க சென்றான்...

கடைசித் தேர்வு அன்று சித்தார்த் அவளுக்காகக் காரில் காத்துக் கொண்டிருந்தான்... தேர்வு முடிந்து வந்தவளிடம்,

"எப்படி எழுதியிருக்கிறாய்..." என்று அவன் கேட்க...

"நல்லா எழுதியிருக்கிறேன்..." என்று கூறியவள் அப்போது தான் கவனித்தாள் கணவனின் முகம் சரியில்லாததை...

"என்னாச்சுங்க...?"

"என்னாச்சு... ஒண்ணுமில்லையே..." என்றான் அவன் சாதாரணமாய்க் காட்டி கொண்டு...

அவன் அப்படிக் கூறினாலும் அவளுக்கு ஏதோ ஒன்று சரியில்லை என்றே தோன்றியது... ஆனாலும் அவள்

எதுவும் கேட்காது அமைதி காத்தாள்... சிறிது தூரம் சென்றதும் தான் கார் செல்லும் பாதையைக் கவனித்தாள்...

"நாம வீட்டுக்கு போகலையா...?"

"இல்லை..."

"அப்போ எங்கே போகிறோம்...?"

"ஹனிமூனுக்கு..." என்று அவன் இமை சிமிட்டி வசீகரமாய்ப் புன்னகைத்தான்...

"இப்போவேவா... அதுக்கு இன்னும் ஒரு வாரம் இருக்கிறதே..."

"எனக்கு நீ இப்பவே வேணும் பேபி..." என்று கிறக்கமாய்க் கூறியவனைக் கண்டு பாவையவள் மனம் மொத்தமாய் மயங்கியது...

அவனது தோளில் காதலாய் சாய்ந்து கொண்டாள்... அவளது உச்சந்தலையில் இதழ் பதித்தவன் காரை வேகமாய் விரட்டினான் யாரோ துரத்துவது போல்...

நேரே மதுரை விமான நிலையத்திற்கு வந்தவர்கள் அங்குக் காத்திருந்த ஓட்டுநரிடம் காரை கொடுத்து விட்டு தங்களது பயணப் பொதிகளை எடுத்துக் கொண்டு விமான நிலையத்திற்குள் நுழைந்தனர்... அப்போது தான் அவளுக்கு அது உறுத்தியது...

"நாம வந்தது நம்ம கார் மாதிரி இல்லையே..."

அவள் சொன்னது கேட்டது அவள் புறம் திரும்பியவன், "இல்லை... அது என்னோட பிரெண்ட்டோட கார்..." என்றவன் அதற்கு மேல் எதுவும் பேசவில்லை...

மதுரையில் இருந்து கொழும்பு வந்து அங்கிருந்து மொரிசியஸ் போகும் விமானத்தில் ஏறியமர்ந்து அது வானில் பறக்க துவங்கியதும் தான் சித்தார்த்திடம் பழைய கலகலப்பு மீண்டது... அவன் மகிழ்ச்சியாய் மனைவியின் கையோடு தனது கரத்தினைக் கோர்த்துக் கொண்டான்...

"என்னங்க இது விடுங்க..." என்று அவள் தனது கரத்தினை விடுவிக்க முயல...

"உன் மாமூவை கெட்டியாகப் பிடித்துக் கொள் பேபி... இல்லை என்றால் அந்த ஏர்ஹோஸ்டஸ் கொத்தி கொண்டு போய் விடுவாள்..."

அவன் கூறியதை கேட்டுப் பொறாமை படாது காதலாய் பார்த்தவள், "யார் கொத்திக்கிட்டு போனாலும் என் மாமூ போக மாட்டார்... அவராகப் போனால் தான் உண்டு... ஆனால் அது இந்த ஜென்மத்தில் நடப்பதாய் தெரியவில்லை..."

மனைவியின் நம்பிக்கையில் அவனது காதலும் அதிகரித்தது...

"இந்த ஜென்மத்தில் மட்டும் இல்லையடி பெண்ணே... அடுத்த ஜென்மத்திலும் அது நடப்பதற்கான சாத்தியம் இல்லை... எல்லா ஜென்மத்திலும் இந்தப் பெண் மட்டும் தான் எனக்கு மனைவியாக வர வேண்டும்..."

"தலைவிதி அது தான் என்றால் யார் மாத்த முடியும்..." என்று கூறி குறும்பாய் சிரித்தவளை அவன் சந்தோசமாய் அணைத்துக் கொண்டான்...

****

மொரிசியஸ் வந்து இறங்கியதும் சித்தார்த்தின் மனநிலை முற்றிலும் மாறிப் போனது... தொழிலை மறந்தவனாய் பிரகதீஸ்வரியின் காதல் கணவனாக அவன் முற்றிலும் மாறிப் போனான்...

அன்று பகல் முழுவதும் அலுப்பு தீர ஓய்வு எடுத்தவர்கள் மாலையில் வெளியில் கிளம்பினர்... நேரே கடற்கரைக்கு மனைவியை அழைத்து வந்தவன் அங்கிருந்த சிறு படகில் அவளை ஏற செய்தான்... கணவன் செய்யும் சிறு சிறு செயல்களும் அவளைப் பெருத்த ஆச்சிரியத்தில் வீழ்த்தியது... அவர்கள் இருவர் மட்டும் ஏறியதும் சித்தார்த் படகை செலுத்த அவள் இன்னமும் ஆச்சிரியமுற்றாள்...

"நீங்களா இதை ஓட்ட போவது...?" என்றவளை ஒரு மாதிரியாய் பார்த்தவன்,

"ஹனிமூன் நம்ம இரண்டு பேருக்கு மட்டும் தானே..."

கணவனது வார்த்தையில் அவள் செங்கொழுந்தாய் சிவந்து போனாள்... அவனது முகம் பார்க்க முடியாது தொலைவில் தெரிந்த தொடுவானத்தைப் பார்த்தாள்... மாலை மயங்கி கொண்டிருந்தது அவளைப் போல்... கணவன் அருகில் இருக்கச் சங்கோஜம் கொண்டவளாய் அவள் எழுந்து படகின் ஓரத்திற்கு வந்து நின்றாள்...

கத்தி போல் படகு கிழித்துக் கொண்டு சென்ற கடல் நீரின் பூஞ்சிதறல்களைக் குனிந்து ரசித்துப் பார்த்து கொண்டிருந்தாள்... ஆனால் அவளது மனமோ கணவனிடத்தில்... இதுநாள் வரை நல்ல காதலனாக நடந்து கொண்ட கணவன் இப்போது முழுமையாய் காதல் கணவனாக மாறப் போவதை நினைத்து அவளது நெஞ்சம் புரியா உணர்வில் படபடவென அடித்துக் கொண்டது...

சித்தார்த்தும் மனைவியவளை பார்த்து மனதிற்குள் சிரித்துக் கொண்டான்... சிறிது தூரம் சென்றதும் படகை அணைத்து விட்டு மனைவியை நோக்கி வந்தான்... தனது யோசனையில் மூழ்கியிருந்தவள் கணவனின் வருகையை உணரவில்லை...

பின்னால் இருந்து மெல்ல மனைவியை அணைத்தவன் அவளது காதோரமாய், "உனது ஒட்டுமொத்த காதலையும் எனக்கே எனக்குக் கொடுப்பாயா பேபி..." என்று தாபத்துடன் முணுமுணுத்தான்...

கணவனது உதடுகள் காதோரம் உரசியதில் மங்கையவள் மனம் மயங்கி அவனது நெஞ்சில் சாய்ந்தாள் கிறக்கமாய்...

"ஐ லவ் யூ பேபி..." என்று கூறியபடி அவளது வைர மூக்குத்தி மீது முத்தமிட்டவன் அவளை இறுக அணைத்துக் கொண்டான்...

சித்தார்த் மனைவியிடம் காதலை கூறி அவளது காதல் நாயகனாய் மாறிய அதே கணம் அவன் ஊரார்க்கு வில்லனாகி போயிருந்தான்...

அனைத்துத் தமிழ் தொலைக்காட்சிகளிலும் அன்றைய தலைப்புச் செய்தியில் பெரிதாய் அடிப்பட்ட பெயர் தொழிலதிபன் சித்தார்த்...!!!

"நீ வேறு, நான் வேறு
நாமாகினோம் காதலில்...
நீ வேறு, நான் வேறு
நாமாவோமா கொள்கையில்...?
இடர் எனை அணைக்கையில்
காதல் கொண்டு எனை
அணைப்பாயா...? இல்லை
கொள்கை கொண்டு எனை
துறப்பாயா...???"

நனவாகும்...!!!

வானில் ஒளி வீசிய பால்நிலாவின் தன்னொளியை கிரகித்த கடல் நீரானது வெள்ளி பாளங்களாய் பளபளத்து ஜொலித்தது... அந்த ஏகாந்த வேளையில் சுற்றிலும் வீசிய தென்றல் காற்று இருவரின் மனதிலும் தாபத்தினையும், கிறக்கத்தினையும் அதிகரித்தது...

"மாமூ..." என்றபடி பிரகதீஸ்வரி கணவனின் நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்...

அவளது அந்தச் செயலில் சித்தார்த்தின் உணர்வுகள் ஆழி பேரலையாய் எழுந்ததி
ல் அவன் வலுக்கட்டாயமாகத் தனது நெஞ்சில் இருந்து அவளது முகத்தினைப் பிரித்து எடுத்தான்... பௌர்ணமி நிலவின் மெல்லிய வெளிச்சத்தில் அவளது மதி முகத்தில் தென்பட்ட உணர்வுகளின் தாக்கத்தில் அவனது மனம் அப்படியே அவளிடத்தில் சரணடைந்தது... அவனது பார்வை மனைவியவளை அள்ளி பருகுவது போல் பார்த்தது...

கணவனது பார்வையின் வீரியத்தைத் தாங்க முடியாதவளாய் அவள் அவஸ்தையுடன் தனது இமைகளை மூடி கொள்ள அதற்கு மேல் தாங்க முடியாதவனாய் அவன் அவளின் முகம் நோக்கி குனிந்தான்... பூவை போன்று மென்மையாய் இருந்த அவளின் இதழோடு இதழ் பதித்தவனுக்கு அதனை மென்மையாகக் கையாள தெரியாது போனது... இதுநாள் வரை மனதில் அடக்கி வைத்திருந்த அவனது ஒட்டு மொத்த காதலையும் அந்த ஒற்றை இதழொற்றலில் காட்டி விட நினைத்தவன் மென்மையை விடுத்து வன்மையைக் கையில் எடுத்துக் கொண்டான்...

கணவனது வன்மையில் அவளுக்கு வலித்த போதும் அவனது காதலை அறிந்தவளாய் மௌனமாய் அவனின் செயலை தாங்கி நின்றாள்... அவள் அவனுக்கு ஏற்படுத்திய காயத்திற்கு இப்போது அவள் வலியை தாங்கி கொள்ளத் தயாரானாள்...

சித்தார்த் மனதின் தாபம் இன்னமும் அடங்குவதாய் இல்லை... தன்னை மறந்தவனாய் மேலும் மேலும் அவளின் இதழின் புதைந்து போனவன் அவளின் இதழில் துளிர்த்த இரத்தத்தில் அவனது ஒட்டுமொத்த உணர்வுகளும் அப்படியே அடங்கிப் போனது... அவளது இதழின் இரத்த சுவை உணர்ந்தவன் அதிர்ந்து போய் அவளை விட்டு விலகினான்... கணவனது விலகலில் விழி திறந்தவள் அவனைப் புரியாமல் பார்த்தாள்...

"ஐம் சாரி பேபி..."

அதற்கு மேல் என்ன சொல்வது என்று அவனுக்குத் தெரியவில்லை... அவளது முகம் பார்க்க வெட்கியவனாய் அவன் தள்ளி சென்று நின்று கொண்டான்... அவள் மீது அவன் பைத்தியமாக இருக்கிறான் என்று அவனுக்குத் தெரியும்... அவள் மீது அவன் தீவிரமான காதல் வைத்திருக்கிறான் என்றும் அவனுக்குத் தெரியும்...

ஆனால் இந்தளவிற்குத் தான் ஒரு காதல் தீவிரவாதியாக இருப்போம் என்று அவன் ஒருபோதும் அறிந்திருக்கவில்லை... அவள் அருகாமையில் மட்டும் அவனது மூளை செயலிழந்து போகும் அதிசயம் தான் என்ன என்று அவனுக்கு இன்னமும் விளங்கவில்லை...

அவனது மனதிற்குள் அப்படி ஒரு பயம் எழுந்தது... எங்கே மனைவி தனது வன்மையில் தன்னை வெறுத்து விடுவாளோ என்று... அவனின் மனதினை போல் காற்றில் அலைப்பாய்ந்த அவனது சிகையை இயலாமையில் கோதியபடி அவன் தவிப்புடன் நின்றிருந்தான்...

கணவனின் தவிப்பை புரிந்தவளாய் பிரகதீஸ்வரி அவனை நோக்கி சென்றாள்... அவனால் ஒரு போதும் தன்னைக் காயப்படுத்த முடியாது என்று நன்கு அறிந்தவளாய் அவன் முன் வந்து நின்றாள்... மனைவியவளை கண்டு தலை குனிந்தவன்,

"சாரி பேபி..." அவனது முகமும், குரலும் வேதனையில் கசங்கியது...

அதைக் கண்டு மனம் தாங்காதவளாய் அவனது கழுத்தில் கரம் கோர்த்து அவனது முகத்தினை வளைத்தவள் தனது மனதின் காதலை முத்தத்தின் மூலம் வன்மையாய் அவனிடத்தில் காட்டினாள்... காதலில் தானும் ஒரு தீவிரவாதி தான் என்பதினை அவனிடத்தில் சொல்லாமல் சொன்னாள் அவள்...

"பேபி..." வியப்புடன் அவளைப் பார்த்தவனைக் கண்டு அவள் நாணத்துடன் வழிகளை மூடி கொண்டாள்...

விழி மூடி, இதழ் துடிக்க நின்றிருந்தவளை நொடி நேரம் கூடத் தாமதிக்காது அவன் தனது கைகளில் அள்ளி கொண்டான்... படகின் மேற்பரப்பில் விரித்திருந்த மலர் படுக்கையில் மனைவியவளை கிடத்தியவன் தானும் உடன் சரிந்தான்...

"பேபி..." என்றபடி அவளுள் புதைந்தவன் அதன் பிறகு எழவில்லை... எழ முடியாத பெரும் சுழல் ஒன்றில் அவன் விரும்பியே சிக்கி கொண்டான்... மீள்வதற்கும் அவன் விரும்பவில்லை...

என்ன முயன்றும் அவனால் மென்மையைக் கையாள முடியவில்லை... அவள் வேண்டும், வேண்டும் என்கிற தாப தீ கொழுந்து விட்டு எரிந்ததில் அவன் தீப்பிழம்பாய் மாறியிருந்தான்... அவனது அக்னி ஜூவாலை பாவையவளை பெரிதாய் சுட்டுப் பொசுக்கியது... அவளின் உடல் நடுங்கியதில் இருந்து அவளின் அச்சத்தினை அவன் உணர்ந்தாலும் அவனால் அவனைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை...

எத்தனை வருட காதல், எத்தனை வருட ஏக்கம்... அது எல்லாவற்றையும் அந்த ஒரு கூடலில் அவளிடத்தில் காட்டிட அவன் எண்ணினான்... பாவையவள் முதலில் பயந்தாலும் மனதிற்கினிய காதல் கணவனின் வன்முறையான காதலில் அவளும் தனது மென்மையினைத் துறந்து மெல்ல மெல்ல வலியவளாய் மாறி போனாள்... அவனின் ஆக்ரோசம் பூவையவளை புயலாக மாற்றிக் கொண்டிருந்தது...

வானம் சாட்சியாய், நிலவு சாட்சியாய், கடல் சாட்சியாய் ஒட்டுமொத்த இயற்கையின் சாட்சியாய் அவர்கள் ஈருடல் ஓருயிராய் கலந்த போது அந்த மலர் படுக்கை பெரும் போர்க்களமாய் மாறிப் போயிருந்தது...

"தேங்க்ஸ் பேபி..." என்று களைத்திருந்த மனைவியின் நெற்றியில் மகிழ்ச்சியோடு முத்தமிட்டு விலகியவன் அவளை அள்ளி எடுத்து தனது நெஞ்சில் படுக்க வைத்துக் கொண்டான்...

இருவரது நெஞ்சிலும் அவர்களின் இனிய சங்கமமே தித்திப்பாய்த் தித்தித்தது... அவர்களது ஒவ்வொரு அணுவிலும், நாடி நரம்பிலும் மகிழ்ச்சி, மகிழ்ச்சி மட்டுமே... பேச்சற்ற மௌனம் இருவரையும் சூழ்ந்து கொண்டது... தனிமையான அமைதியின் பின்னணியில் தங்களது இனிமையை இருவரும் மிகவும் ரசித்தனர்...

"சந்தோசமா பேபி..."

மனைவியின் தலையை வருடியபடி கேட்டவனின் வார்த்தைகளில் அவள் மௌனமாய்த் தலையாட்டினாள்...

"ஆனால் நான் சந்தோசமா இல்லையே பேபி..." என்றவனைத் திடுக்கிடலோடு நிமிர்ந்து பார்த்தாள் அவள்...

"என்னோட காதல் ஒரு தடவையில் திருப்தி அடையாது பேபி... இன்னும், இன்னும் நீ வேண்டும்..." என்று தாபமாய்க் கூறியவன் அடுத்தக் கணம் அவளது இதழை சிறை எடுத்திருந்தான்...

அவன் கூறியதன் அர்த்தம் அவளுக்கு முழுவதும் புரிவதற்குள் அவன் அவளைப் புயலாய் ஆக்கிரமித்து இருந்தான்... அவளும் அவனது செயல்களுக்கு உடன்பட்டு அவனுடன் ஒன்றினாள்...

****

காலையில் எழுந்த சரவணன் முகத்தைக் கழுவி கொண்டு மனைவியைத் தேடி சமையலறைக்கு வந்தான்... இரு

ஆட்கள் மட்டுமே நிற்கும் படியான சின்னச் சமையலறை அது... ஆனாலும் முகம் சுளிக்காது வேலை செய்து கொண்டிருந்த ஸ்வேதா அவனுக்குப் பெருத்த ஆச்சிரியக்குறியாய் இருந்தாள்... பணக்கார வீட்டுப் பெண், சொடக்கு போட்டால் ஓடி வந்து வேலை செய்யும் வேலையாட்கள் என்று பந்தாவாய் இருந்தவள் எப்படி அவனது மத்திய தர வாழ்க்கையை ஏற்றுக் கொண்டாள் என்பதற்கான விடை அவனுக்கு இன்னமும் விளங்கவில்லை...

ஆனாலும் அவள் தனது வாடகை வீட்டில் பாந்தமாய்ப் பொருந்தி கொண்டது அவனுக்கு மிக்க மகிழ்ச்சியே... ஆனால் கணவனாய் அவனது மனம் அவளுக்காக வருந்தியது... அவளை வசதியாய் வாழ வைப்பதற்காக இன்னமும் அதிகமாய் உழைக்க வேண்டும் என்று தோன்றியது அவனுக்கு... அவன் தனது கணினி நிறுவன வேலைகளோடு, இடையிடையில் மாடலிங்கும் செய்து வருகிறான்... அதனால் வருமானம் போதுமான அளவிற்கு இருந்த போதும் சற்று வளமான வாழ்விற்கு அது போதுமானதாய் இல்லை...

கணவனின் வருகை உணர்ந்து திரும்பி பார்த்த ஸ்வேதா அவனிடம், "சும்மா நின்னுக்கிட்டு இருந்தால் காபி கை, கால் முளைச்சு உன் கிட்ட வருமா...? நீயே காபி போட்டு குடி..." என்று சிடுசிடுத்தாள்...

அவளது சிடுசிடுப்பை கண்டு கொள்ளாதவனாய் உள்ளே வந்தவன் காபி கலக்க ஆரம்பித்தான்... அப்போது அருகில் இருந்த மனைவி மீது அவனது முழங்கை உரசியது... அவன் வேண்டுமென்றே அதைச் செய்யவில்லை... அங்கு அவ்வளவு தான் இடம்... அவன் வேறு என்ன செய்ய முடியும்...

தனது இடையில் உரசிய அவனது முழங்கை மீது கையிலிருந்த கரண்டி வைத்து ஒரு போடு போட்டவள், "எப்போடா சாக்கு கிடைக்கும்ன்னு நீ சுத்திக்கிட்டு

இருக்கியா... பிச்சிருவேன் பிச்சி..." என்று கடுகாய் பொரிந்தாள்...

எப்போதும் அவர்களுக்கு இடையில் நடக்கும் வாக்குவாதம் தான் இது... ஆனால் இன்று அவள் சற்று ஓங்கி அடித்ததில் அவனுக்கு மிகவும் வலித்தது... அந்த எரிச்சலில் அவனும் பதிலுக்கு அவளிடத்தில் கத்தி விட்டான்...

"நான் இப்படி உரசணும்ன்னு தானே நீ என்னைக் காபி போட சொல்ற மாதிரி இங்கே வர சொல்ற... நான் காபி போட வர்றேன்னு தெரியுதுல்ல... அப்போ நீ வெளியில் போக வேண்டியது தானே...? பக்கத்தில் நின்னு மனுசனை உசுப்பேத்திட்டு அப்புறம் கை படுது, கால் படுதுன்னு கடுப்பாக வேண்டியது... உன்னை எல்லாம்... போடி..." என்று எரிச்சலுடன் மொழிந்தவன் அங்கிருந்த வரவேற்பறையில் வந்தமர்ந்தான்...

கையிலிருந்த காபியை பருகியவனுக்கு மெல்ல கோபம் வடியலானது...

இது போன்று தான் இங்கு வந்த மறுநாள் பழக்க தோசத்தில் கதவை தட்டாமல் அறைக்குள் சென்று விட்டான்... அவள் உடை மாற்றிக் கொண்டிருந்ததை அவன் அறிந்திருக்க வில்லை... அரைக் குறை உடையில் தரிசனம் தந்த மனைவியவளின் அழகு கண்டு அவன் உறைந்து போய் நின்று விட்டான்... அவன் கனவிலும் காணாத அழகு கண்முன் காட்சி அளித்ததில் அவன் சித்தம் கலங்கி பிரம்மை பிடித்தார் போன்று சிலையாகி விட்டான்...

"சரவணா..." மனைவி அலறியதில் தான் அவனுக்குச் சுற்றுப்புறம் நினைவுக்கு வந்தது... அவன் மன்னிப்பு கேட்கும் முன் கையில் கிடைத்ததைத் தூக்கி அவன் மீது எறிந்தவள்,

"வெளியே போடா ராஸ்கல்..." என்று கத்த...

அதில் பயந்து போய் அவன் வெளியில் ஓடி வந்து விட்டான்... அதற்காக மட்டும் அவன் பயப்படவில்லை...

தான் செய்தது தவறு என்று குத்தி காட்டிய மனசாட்சிக்கு பயந்து வந்து விட்டான்...

இரண்டு நிமிடத்தில் உடை மாற்றிக் கொண்டு அறையை விட்டு வெளியில் வந்த ஸ்வேதா நேரே அவன் முன் வந்து,

"எதுக்குடா உள்ளே வந்த...? நீ எப்படி உள்ளே வரலாம்...? அதுவும் என் அனுமதி இல்லாமல்..." என்று தனது இரு கை கொண்டு அவனை அடிக்க ஆரம்பித்தாள்...

சரவணன் குற்றவுணர்வில் இருந்ததால் அவள் கொடுத்த அடிகளை மௌனமாய் வாங்கிக் கொண்டான்... ஸ்வேதா அவளே ஓய்ந்து போய் நாற்காலியில் அமர்ந்தவள் முகத்தை மூடி கொண்டு அழ ஆரம்பித்தாள்... அவளது அழுகை கண்டு அவன் தான் பதறிப் போனான்...

ஸ்வேதா அழுது அவன் இதுவரை பார்த்தது இல்லை... அவள் கண் கலங்கி அவன் பார்த்து இருக்கிறான் தான்... ஆனால் இது போல் அவள் கரைந்து அவன் பார்த்தது இல்லை...

"ஸ்வேதா... நான் என்ன அடுத்தவனா...? உன் கணவன் தானே... என்ன நடந்து போச்சுன்னு இப்படி அழுற...? ப்ளீஸ் அழாதே..." என்று தன்மையாக எடுத்துச் சொன்னான்...

"யார் கணவன்...? நீயா...? தாலி கட்டியதால் மட்டும் தான் நீ என் கணவன்... ஆனால் என் மனசில் நீ இல்லை... அப்படி இருக்கும் போது நீ எப்படி என்னைப் பார்க்கலாம்..." என்று மீண்டும் கண்ணீர் விட்டவளை கண்டு அவனுக்கு ஆற்றாமையாக இருந்தது...

"சரி, நான் பண்ணியது தப்பு தான்... இப்போ அதுக்கு என்ன பண்ணணும்ன்னு சொல்ற...? உன் காலில் விழுந்து மன்னிப்பு கேட்கணுமா...? அதுக்கும் நான் தயாரா இருக்கேன்..." என்றவன் அவளது கால் அருகில் வர...

அவள் தனது அழுகையை நிறுத்தி விட்டு அவனை முறைத்து பார்த்தவள் ஒன்றும் பேசாது எழுந்து சென்று விட்டாள்... அன்று அலுவலகம் செல்லும் போதும் அவள்

அவனுடன் பேசவில்லை... அவனும் ஒன்றும் பேசாது அவளுடன் வர அதற்கும் அவள் வெடுவெடுத்தாள்...

"அதான் நீ வந்த காரியம் முடிஞ்சிருச்சு இல்லையா...? பிறகும் ஏன் இங்கே வந்து என் உயிரை எடுக்கிற...?"

அதற்கு மேல் அவனாலும் அவளிடம் ஒன்றும் பேச முடியவில்லை... மௌனமாய் விலகி சென்று விட்டான்... அதற்கு அடுத்து வந்த ஒரு வாரமும் அவள் இப்படித்தான் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு கோபமாய் அலைந்தாள்... அதைக் கண்டு அவனுக்கு ஆண் மகனாய் அப்படி ஒரு ஆத்திரம் வரும்...

என்ன தவறு செய்து விட்டான் என்று தன்னைப் போட்டு இப்படிப் படுத்தி எடுக்கிறாள் என்று அவனுக்குக் கோபம் கோபமாய் வந்தது... ஆனால் அவன் செய்த தவறுகள் அவனது நினைவில் எழுந்து அவனைக் கட்டுப்படுத்தியது...

ஒரு வாரம் சென்ற பின் ஒரு நாள் ஸ்வேதா அவன் முன் வந்து நின்றாள்... அதிலேயே அவன் முகம் மலர்ந்து போய் அவளைப் பார்த்தான்... அவனது முக மலர்ச்சியை அவள் உணர்ந்தாலும் கண்டு கொள்ளாது,

"எனக்கு ஹோட்டல் சாப்பாடு பிடிக்கலை..." என்றாள் மொட்டையாக... அதைக் கேட்டு அவன் அதிர்ந்தான்...

"சமையலுக்கு ஆள் வைக்கிற அளவுக்கு எனக்கு வசதி இல்லைம்மா... வேணும்ன்னா நான் சமைக்கப் பழகட்டுமா...?"

"அது எதுக்கு...?" என்று அவனை முறைத்தவள்,

"சமைக்கிறதுக்குத் தேவையான சாமான்களை வாங்கிப் போடு... நான் சமைக்கிறேன்..."

"நீயா...?" அதிர்ச்சியில் அவன் வாயை பிளந்தான்...

"பார்த்து ஈ போயிர போகுது..." என்று அவனைக் கிண்டலடித்தவள்,

"எங்கம்மா எல்லாம் சொல்லி கொடுத்து தான் என்னை வளர்த்து இருக்கிறாங்க... அந்த வளர்ப்பு தான் இதோ இப்போ உன்னைக் கல்யாணம் பண்ணியிருக்குது..."

அதில் அவனது மனம் நிறைந்து போனது... அவன் மனதார பிரபாவதிக்கு நன்றி கூறினான்...

"அன்னைக்கு ஏன் நான் கட்டிய தாலியை தூக்கி எறிஞ்ச ஸ்வீட்டி...?" அவன் மென்மையாய் வினவினான்...

"ம்... அன்னைக்கு உன்னைக் கொலை பண்ணி இருக்கணும்... அது செய்யாதது என் தப்புன்னு இப்போ புரியுது..."

அதற்கு மேல் அவன் வாய் திறக்க ஆசைப்படுவான்...? ஆனால் அவள் கேட்டது எல்லாம் தேவைக்கு ஏற்றார் போல் வாங்கிக் கொடுத்தான்... அன்றிலிருந்து ஸ்வேதா சமைக்கிறாள்... பிரமாதமாய்ச் சமைக்கிறாள் என்று சொல்லிவிட முடியாது... ஆனால் எளிமையாய், சாப்பிட கூடிய அளவில் அவள் சமைத்தாள்... அதுவே அவனுக்கு அமிர்தமாக இருந்தது...

பழையதை நினைத்து பார்த்தவன் நிகழ்காலத்திற்குத் திரும்பியவனாய் சமையலறையில் இருந்த மனைவியை எட்டி பார்த்தான்... சுவரில் சாய்ந்து நின்றபடி எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தவளை கண்டு அவனுக்குப் பாவமாக இருந்தது... எழுந்து அவளை நோக்கி சென்றான்...

"சாரி ஸ்வீட்டி..." என்று அவளிடம் மனதார மன்னிப்பு கேட்டான்...

அவள் வெறுமையாய் பார்த்தாள் அவனை... அவளது பார்வையை வைத்து அவனால் எதையும் ஊகிக்க முடியவில்லை...

"சத்தியமா சொல்றேன் ஸ்வீட்டி... உன் மனசில் என்ன நினைக்கிறன்னு என்னால் புரிஞ்சிக்க முடியலை... என்னைத் தான் கல்யாணம் பண்ணிக்குவேன்னு

கல்யாணம் பண்ணிக்கிட்ட... நான் உன் கூடவே இருக்கணும்ன்னு நினைக்கிற... அது உனக்கும் பிடிச்சியிருக்கு... ஆனா நானா உன் பக்கத்தில் வந்தால் கோபப்படுற... இப்போ உன்னை எப்படிக் கையாளுறதுன்னு எனக்குத் தெரியலை ஸ்வீட்டி..."

கவலையும் வருத்தமாய்க் கூறியவனைப் புரியாத பார்வை பார்த்தவளின் பார்வை வெளியில் பார்த்தது... அங்கிருந்து பார்த்தால் பக்கத்து வீட்டு பால்கனி தெரியும்... அங்கு ஒரு பெண்ணும் அவளுடைய குழந்தையும் நின்றிருந்தனர்...

"அம்மா... அடிச்சது தப்பு தான் கண்ணா... அம்மாவை மன்னிச்சுக்கோடா குட்டி... அம்மா கிட்ட வாடா செல்லம்..." என்று அவள் இந்தியில் குழந்தையிடம் கெஞ்சி கொண்டிருந்தாள்...

அதுவோ அவளிடம் வர மறுத்தது...

"நீ என்னை அடிச்சிட்ட... எனக்கு ரொம்ப வலிக்குது..." என்று தனது கையைக் காட்டிய குழந்தை, "நான் கோபமா இருக்கேன்... உன் கிட்ட வர மாட்டேன்..." என்று பிடிவாதம் பிடித்தது...

அதைக் கண்டு சரவணனுக்குச் சிரிப்பு வந்தது... 'இந்த வயசில் இதுக்கு இருக்கிற பிடிவாதத்தைப் பாரேன்...' என்று மனதில் நினைத்தவனுக்கு அப்போது தான் ஒன்று உறைத்தது... மீண்டும் அந்தக் குழந்தையை உற்றுக் கவனித்தான்...

குழந்தையின் கண்ணில் தனது தாய் வந்து தன்னைத் தூக்கி கொள்ள மாட்டாளா என்கிற ஏக்கம் அப்பட்டமாய்த் தெரிந்தது... வாய் தான் மறுத்து பேசியதே ஒழிய, அதன் கண்கள் அதன் மனதின் எண்ணத்தைக் காட்டி கொடுத்தது... அதை அந்தத் தாய் உணர்ந்து கொண்டவளாய் குழந்தையைத் தூக்கி கொண்டாள்...

"வேண்டாம் போ..." என்று குழந்தை தாயின் பிடியில் இருந்து திமிறியபடி அவளது முடியை பிடித்துப் பிய்த்து

இழுத்தது... தாய்க்கு வலித்த போதும் அவள் தனது குழந்தையைச் சமாதானப்படுத்த துவங்கினாள்... என்னே அதிசயம், சில நிமிடங்களில் குழந்தை தேம்பலுடன் தாயை அணைத்துக் கொண்டு அவளது தோளில் சாய்ந்து கொண்டது...

இந்தக் காட்சியைப் பார்த்தவனுக்கு அந்தக் குழந்தைக்கும் தனது மனைவிக்கும் அதிக வித்தியாசம் இல்லை என்றே தோன்றியது...

"ஸ்வீட்டி..." அவனது குரலில் இருந்த மென்மையில் அவள் அவனைத் திரும்பி பார்த்தாள்...

"சாரிடி..." என்று மன்னிப்பு கேட்டவன் அவளை இறுக அணைத்துக் கொண்டான்... அவனுக்கு மனதிற்குள் சற்று உதறலாகத் தான் இருந்தது... ஆனாலும் தான் போகும் பாதை சரியாக வரும் என்றே அவனுக்குத் தோன்றியது...

அவன் நினைத்தது போல் அவள் அவனது அணைப்பில் இருந்து திமிறினாள்...

"இடியட்... விடுடா என்னை..." என்று அவனது தலை முடியை பிய்த்து எடுத்து அவனைத் தன்னிடம் இருந்து விலக்க முயன்றாள்...

அவள் விலக்க, விலக்க அவனது அணைப்பு இன்னமும் இறுகியது... அவளைக் கோழிக்குஞ்சாய் தன்னுள் பாதுகாப்பாய் பொத்தி வைத்து கொண்டவன் வாய் விடாது மன்னிப்பு வேண்டியது... அதில் அவள் கோபம் குறைந்து கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கிப் போனாள்...

"ஏன்டா இப்படிப் பண்ணின...?" என்று ஆதங்கத்துடன் கேட்ட மனைவியிடத்தில் பதில் பேச அவனிடத்தில் வார்த்தை இல்லை... மன்னிப்பை தவிர...

அடுத்துக் கண்ணீர் உகுத்தவளை எப்படிச் சமாதானப்படுத்துவது என்று தெரியாது விழித்தவன் அவளது முகத்தினைக் கைகளில் தாங்கி அவளது கலங்கிய விழிகளுக்குள் தனது விழிகளைக் கலந்தான்...

அந்தக் குழந்தையின் கண்களில் வழிந்த ஏக்கத்திற்குக் கொஞ்சமும் குறையாது இருந்தது அவளது கண்ணில் வழிந்த ஏக்கம்... அடுத்து நொடி நேரம் தாமதியாது அவளது ஏக்கத்தினைத் தனது இதழொற்றலில் மூலம் கரைத்திட எண்ணி அவளது முகம் நோக்கி குனிந்தான்...

அதிசயமாய் அவனது அருகாமையில் ஸ்வேதா விழி மூடி அவனது செயலை அமைதியாய் ஏற்று நின்றாள்... காயம் கொடுத்தவனிடமே அதற்கான மருந்தினை தேடினாளோ... அதை உணர்ந்தவனாய் அவனும் அவளது நெற்றியில் மென்மையாய் தனது முத்தத்தினைப் பதித்தான்... அடுத்து விழிகள், நாசி, கன்னங்கள் என்று முத்தமிட்டுக் கொண்டே வந்தவன் அவளது இதழ் கண்டு தயங்கி நின்றான்...

அவனிடம் இருந்து சத்தம் வராது போகவும் மெல்ல கண் திறந்தவள் என்னவென்று அவனைப் பார்க்க... அவனோ குறும்பாய் கண் சிமிட்டியபடி,

"இன்னைக்கு இது போதும்..." என்றான்...

"போடா..." நாணம் மிகுந்தவளாய் அவள் அவனைத் தள்ளி விட்டு செல்ல, அவனோ புன்னகையுடன் அவளைப் பார்த்திருந்தான்...

அந்தக் கணம் இந்த இனிமையான வாழ்க்கை நிலைத்திருந்தால் போதும் என்றே அவனுக்குத் தோன்றியது...

****

"ஹலோ அத்தான்... அத்தான்..." கையிலிருந்த அலைப்பேசியோடு போராடி கொண்டிருந்தாள் பிரகதீஸ்வரி... ஹரி எடுத்த அழைப்பில் அவளால் தெளிவாகப் பேச முடியவில்லை...

அப்போது பின்னால் இருந்து ஒரு கரம் அவளிடம் இருந்த அலைப்பேசியைப் பிடுங்கி அதை அணைத்து போட்டது...

"ப்ச்... என்னங்க நீங்க...?" என்று அவள் சலித்துக் கொள்ள...

"அத்தானிடம் அப்புறம் பேசலாம்... முதலில் உன் மாமூவை கவனிம்மா..." என்றவன் சோபாவில் அவளுக்கு அருகில் சரிந்து அமர்ந்தான்...

"அதான் நேரம் காலம் தெரியாமல் கவனித்து ஆகிறதே..." சொல்லும் போதே அவளது முகம் நாணத்தில் சிவந்து போனது...

அவர்கள் தேனிலவு வந்து இன்றோடு பத்துத் தினங்களுக்கு மேலாகி விட்டது... இரவு, பகல் என்று பாராது எந்நேரமும் மனைவி வேண்டும் என்று அடம்பிடித்த கணவனைக் கண்டு செய்வதறியாது திகைத்தாள் பிரகதீஸ்வரி... சில சமயங்களில் அந்தச் சிறு பெண்ணிற்கு அவனின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாது போகும்... அவளுக்கான அவனது தேடல் அந்தளவிற்கு மூர்க்கத்தனமாக இருக்கும்...

அதைக் காதல் என்பதா இல்லை காமம் என்பதா என்று பிரித்தறிய தெரியாத அளவிற்கு அவனது செயல்பாடுகள் இருக்கும்... மற்ற நேரங்களில் மனைவியவளை அவன் சிறு குழந்தை போல் கவனித்துக் கொண்டான்... இப்போது எல்லாம் அவனின் தேவைகளை அவனின் கண் பார்த்து புரிந்து கொண்டு நடக்கும் அளவிற்கு அவள் தேறி இருந்தாள்...

கணவனின் காதல் அவளை நாளுக்கு நாள் பிரமிக்க வைத்தது... அவன் மீது பைத்தியமாக்கியது... இப்போது எல்லாம் அவன் என்ன சொன்னாலும் கேட்கும் மனநிலைக்கு அவள் வந்திருந்தாள்...

"அது எல்லாம் போதாதே பேபி..." என்றவனின் கரங்கள் மனைவியவளை இழுத்து தன் மீது போட்டுக் கொண்டது...

அருகில் தெரிந்த கணவனது முகத்தினை ரசித்துப் பார்த்தவள், "வெளியில் பந்தாவாய் இருக்கிற சித்தார்த் நீங்க தானான்னு என்னால் நம்ப முடியலை..."

"அது உலகிற்காக நடிப்பது... ஆனால் உன்னிடம் மட்டும் என்னால் அப்படி எல்லாம் நடிக்க முடியாது பெண்ணே..."

"ஏன்...?" அவனது முகத்தோடு முகம் உரசி அவள் கேட்டதில் அவன் மயங்கினானோ இல்லையோ அவள் தான் அதிகம் மயங்கி போனாள்...

"ஏன்னா... நீ தான் நான்... நான் தான் நீ... என்னிடத்தில் நான் எப்படி நடிக்க முடியும் பேபி... என்னோட பலம், பலவீனம் எல்லாம் தெரிந்தவள் நீ ஒருத்தி தான்..."

"அப்படி எல்லாம் இல்லை... எனக்கு உங்களைப் பத்தி இன்னும் சரியா தெரியலை..."

"அப்படியா...?" என்று கேள்வியாய் அவளைப் பார்த்தவன் அவளது காதருகில் சென்று,

"அது ரொம்பத் தப்பாச்சே... தெரிய வச்சிடலாமா...?" என்றவனது கரங்கள் ஆக்டோபஸாய் அவளை வளைத்துக் கொண்டது...

கணவன் காட்டிய புது உலகத்தில் அவள் தனது உறவுகளை மறந்தவளாய் தன்னை மறந்தவளாய் அவனுடன் ஐக்கியமானாள்... திரும்பி செல்ல விரும்பாத புது உலகம் அவளை ஆர்ப்பாட்டமாய் வரவேற்று தன்னுள் அடக்கி கொண்டது...

சித்தார்த் அணைத்து போட்ட அலைப்பேசி சோபாவின் மெத்திருக்கையில் அநாதையாய்க் கிடந்தது... அதன் பிறகு அந்த அலைப்பேசி காணாமல் போனது... அதை அவள் தேடாதவாறு அவனின் காதல் அவளை மயக்கி வைத்திருந்தது...

அவளது உறவினரை தனது தந்தை மூலம் சமாதானப்படுத்தி இருந்தான் சித்தார்த், இனி வர போவதை அறிந்தவனாய்...

****

அர்ஜூனுக்கு அன்று மருத்துவமனையில் இதயமாற்று சத்திர சிகிச்சை இருந்ததால் இரவு மிகவும் தாமதமாக வந்தான்... என்றும் அவனுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் மனைவியை இன்று காணவில்லை... அது அவனுக்கு வியப்பாக இருந்த போதும், அவளுக்கு என்னவானதோ என்று கவலையில் அறைக்குச் செல்வதற்காக மாடிப்படியில் வேக வேகமாக ஏறினான்...

மனைவியும் மருத்துவர் தான் என்பதைக் கணவனான மருத்துவன் அர்ஜூன் மறந்து போனான்... அறைக்கு வந்தவன் அங்கு மின்விளக்கு கூடப் போடாமல் இருப்பதைக் கண்டு அவசரமாய் மின்விளக்கினை உயிர்ப்பித்தவன் படுக்கையைப் பார்த்தான்... மனைவி சுருண்டு படுத்திருந்த விதம் அவனுள் பதற்றத்தை விதைக்க அவளை நோக்கி விரைந்தான்...

"மித்தும்மா... என்ன செய்யுது...?" அவளது நெற்றியில் கை வைத்து அவன் பதறி போனவனாய் கேட்க...

"வந்துட்டீங்களா...? சாப்பாடு எடுத்து வைக்கவா...?" என்று எழுந்தவள் சோர்வில் தடுமாற, அவள் அருகில் அமர்ந்த அர்ஜூன் அவளைத் தனது தோளில் சாய்த்துக் கொண்டான்...

"என்னடா பண்ணுது...? உடம்பு சரியில்லையா...?"

"நீங்க டாக்டர் தானே நீங்களே கண்டுபிடிங்க..."

அந்தச் சோர்விலும் குறும்பாய் கேட்டவளை கண்டு அவன் சிரித்தான்...

"உன்னைப் பார்த்தால் நான் என்னையே மறந்து விடுகிறேன் மித்தும்மா..." என்றவன் அவளது கழுத்தில் கை வைத்து பார்த்து,

"பீவர் மாதிரியும் தெரியலையேடா..."

"இன்னைக்குக் கோவிலில் நேர்த்திக் கடன் ஒண்ணு செலுத்தினேன்... அதான் இந்தச் சோர்வு..."

"நேர்த்திக் கடனா...?" என்று அவன் முகத்தினைச் சுளித்தான்...

"ம்... அத்தை உங்களுக்குக் கல்யாணம் ஆகணும்ன்னு வேண்டி இருந்தாங்களாம்... அதை நிறைவேத்தணும்ன்னு சொன்னாங்க... ஆனால் அவங்களோட உடல்நிலை ஒத்துக்கலை... பிபி கொஞ்சம் ஹையா இருக்கு... அதான் நான் அதைப் பண்றேன்னு சொன்னேன்..."

அதைக் கேட்டு அவனுக்கு அப்படி ஒரு கோபம் வந்தது...

"நீ படிச்சவள் தானே... அதுவும் டாக்டர் வேறு... இப்படிப் பட்டிக்காடு மாதிரி பேச உனக்கு வெட்கமா இல்லை... நேர்த்திக் கடனாம்... நேர்த்திக் கடன்... எந்தச் சாமி வந்து லஞ்சம் கேட்டுச்சாம்... நீங்களா ஏதாவது நினைச்சிக்கிட்டு..." மேலே பேச போனவனின் வாய் மீது கை வைத்து பொத்தியவள்,

"கடவுள் விசயம்... இப்படித் தவறா பேச வேண்டாமே..."

"பேசினால் என்னாகும்...? இந்த நேர்த்திக் கடன் செய்யலைன்னா என்ன நடந்திருமாம்...?"

"உங்களுக்கு ஏதாவது ஒண்ணுன்னா என்னால் தாங்க முடியாது அர்ஜூன்... அதுக்காகத் தான் அத்தைக்குப் பதிலா இதை நான் செய்தது..."

மனைவியவளின் வார்த்தையில் அவன் வாயடைத்துப் போனான்...

"மித்தும்மா... எனக்காகவா...?"

"ம்... ம்..."

"எப்படி இந்த மாற்றம்...?"

"தெரியலை... ஆனால் உங்களுக்கு ஒண்ணுன்னா என் மனம் பதறுது... இது சத்தியமான உண்மை..."

"ச்சு அசடு... இதுக்கு எதுக்குச் சத்தியம் எல்லாம்... நான் உன்னை நம்பறேன்..." என்று அவளை அணைத்து கொண்டவன்,

"இந்தளவுக்குச் சோர்ந்து போகும்படி அப்படி என்னம்மா நேர்த்திக் கடன்...?"

"அங்க பிரதட்சணம்... அதுவும் நூத்தியெட்டு தடவை..."

"வாட்...?" என்று முதலில் அதிர்ந்தவன் பின் கண்கள் கலங்க...

"லூசாடி நீ...?" என்று சொன்னவனால் மேலே பேச முடியவில்லை...

"ம்... கொஞ்ச நாளா லூசாகிட்ட மாதிரி தான் இருக்கேன்..." என்று கண் சிமிட்டியவளை அள்ளி அணைக்க அவனது கைகள் பரபரத்தது...

ஆனால் ஒரு மருத்துவனாய் முதலில் அவளது துயரை போக்க எண்ணினான்... அவளது உடல் வலிக்கு மருந்து கொடுத்து அவளைப் படுக்கச் செய்தவன் அவளது கால்களை மெதுவே பிடித்து விட்டான்...

"நான் கால் பிரதட்சணம் செய்யலை டாக்டர் அர்ஜூன்... அங்க பிரதட்சணம் செய்தேன்..." என்று நமட்டுச் சிரிப்பு சிரித்தவளை கண்டு அவன் தனது கவலை மறந்து சிரித்து விட்டான்...

"நான் பிடித்து விடத் தயார் மித்தும்மா... அதற்கு நீ தயாரா...?" என்று அவன் கைகளைச் சிறிது மேலேற்ற...

"ஐயோ வேண்டாம்..." என்று பதறியவள் அவனது கைகளை விலக்கி விட்டாள்...

"ஹா... ஹா..."

மனைவியவளின் பயம் கண்டு அந்தக் காதல் கணவன் வாய் விட்டுச் சிரித்தான்... அதைச் சங்கமித்ரா ஆசையுடன் பார்த்து கொண்டிருந்தாள்...

****

"அப்பா... இன்னும் எத்தனை நாள் தான் நான் இங்கே மறைந்திருப்பது...? என் வாழ்க்கையில் இது போல் எல்லாம் நான் பயந்து ஓடி ஒளிந்தது இல்லை... எல்லாம் ரதிக்காகத் தான்... இதை எல்லாம் அவள் பார்த்தால் பயந்து விடுவாளேன்னு தான் இப்படி அவசரமா கிளம்பி வந்தது... இல்லை என்றால் அங்கேயே இருந்து எதையும் நேருக்கு நேர் ஒரு கை பார்த்திருப்பேன்..."

பேசும் போதே சித்தார்த்தின் நரம்புகள் ஆத்திரத்தில் புடைத்தது... அத்தனை கோபத்திலும் பால்கனி கண்ணாடி கதவு வழியே அறையில் தூங்கும் மனைவியின் மீது ஒரு கண் வைத்திருந்தான்...

"சித்து... நீ கோபப்படுற மாதிரி இது சாதாரண விசயம் இல்லை... ரொம்பச் சென்சிட்டிவான விசயம்... ரொம்ப ஜாக்கிரதையாகத் தான் இதைக் கையாளணும்... கொஞ்சம் பொறு நான் எல்லா வேலைகளையும் முடித்த பின்னர் நீயும், மருமகளும் இங்கே வந்தால் போதும்... அவசரப்பட்டு அதுக்கு முன் கிளம்பி வந்து அந்தச் சின்னப் பெண்ணைச் சிக்கலில் ஆழ்த்தி விடாதே சித்து... இப்போது நீ வெறும் தொழிலதிபன் சித்தார்த் இல்லை... அவளின் கணவன் சித்தார்த்தும் கூட... உன்னைச் சுற்றி இருக்கும் பிரச்சினைகள் அவளைப் பாதிக்காத வண்ணம் பார்த்து கொள்..." என்று மார்த்தாண்டம் கண்டிப்புடன் கூறிவிட்டு அலைப்பேசியை அணைத்து விட்டார்...

அடுத்து வந்த நாட்களில் மனைவியின் அருகாமையில் தொழிலை மறந்தவனாய் சித்தார்த் அவளுள் மூழ்கி போனான்... ஒரு மாதம் நீடித்த அவர்களது தேனிலவு ஒருவழியாய் முடிவுக்கு வந்தது...

'ஊருக்குக் கிளம்பலாம்' என்று கூறியவனை மகிழ்ச்சியுடன் பார்த்தாள் பிரகதீஸ்வரி... எல்லோருக்காகவும் அவள் பார்த்து பார்த்து பரிசு பொருட்கள் வாங்கிக் குவித்ததைக் கண்டு அவன் ஒன்றும் பேசாது அவளின் செயலுக்கு எல்லாம் துணை நின்றான்...

நள்ளிரவில் சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கிய இருவரையும் சுற்றி கையில் மைக்குடன் செய்தியாளர்கள் சூழ்ந்து கொண்டனர்... இந்தத் திடீர் முற்றுகையை எதிர்பார்க்காத பிரகதீஸ்வரி பயந்து போனவளாய் கணவனின் பின்னால் சென்று மறைந்து கொண்டாள்...

அந்தக் கணம் சித்தார்த்தின் கரம் என்றும் போல் இன்றும் அவளது கரத்தினை ஆதரவாக பற்றிக் கொண்டது...!!!

"உயிர் கொல்லும் போர்க்களத்தில்
கூர்முனை வாட்கள் சூழ்ந்த போதும்,
உன்னுயிர் காப்பேன், என்றும்
மறவாதே என் காதல் கண்மணி...
உலகிற்குக் கெட்டவன் நான்,
உனக்கு உயிர் காதலனன்றோ, என்றும்
மறவாதே என் காதல் கண்மணி..."

நனவாகும்...!!!

"நீங்க கட்டிக்கிட்டு இருந்த ஷாப்பிங் மால் இடிஞ்சு விழுந்ததைப் பத்தி நீங்க என்ன சொல்ல விரும்புறீங்க...?"

"அங்கு வேலை செஞ்சுக்கிட்டு இருந்த தொழிலாளர்களுக்குப் பலத்த காயங்கள் ஏற்பட்டு மருத்துவமனையில் இருக்காங்க... பத்து பேர் இறந்து போயிட்டாங்க... இப்படி ஒரு சூழ்நிலையில் நீங்க தேனிலவு கொண்டாடிட்டு வந்திருப்பது சரின்னு நீங்க நினைக்கிறீங்களா மிஸ்டர். சித்தார்த்..."

"உங்களை அரெஸ்ட் பண்ணிருவாங்களோன்னு பயந்து தான் நீங்க ஊரை விட்டு ஓடி போனீங்களா...? இப்போது நீங்க முன் ஜாமீன் வாங்கிய பிறகு இங்குத் திரும்பியிருப்பதைப் பார்த்தால் அப்படித் தான் நினைக்கத் தோன்றுகிறது...?"

"நீங்க பில்டிங் கட்டுறதுக்கு முறையான அங்கீகாரம் வாங்கலைன்னு சொல்றாங்களே... அது உண்மையா...?"

"உங்க பில்டிங் இடிஞ்சு விழுந்ததில் பக்கத்தில் இருந்தவர்களுக்கும் பெரும் பாதிப்பு... அப்பாவி மக்களும் இதில் பலியாகி இருக்காங்க.. இதற்கு எல்லாம் உங்களது பதில் என்ன மிஸ்டர். சித்தார்த்...?"

தன்னைச் சுற்றி சுற்றி வளைத்த எந்தக் கேள்விகளும் சித்தார்த்தை பாதிக்கவில்லை... அவனது முழுக் கவனமும் மனைவியை அங்கிருந்து எப்படி அப்புறப்படுத்துவது என்பதிலேயே இருந்தது... சற்று தள்ளி திகைத்து நின்றிருந்த மார்த்தாண்டத்தைக் கண்களால் அழைத்தவன் அவர் அருகில் வந்ததும்,

"ரதியை கூட்டிட்டுப் போய்க் காரில் உட்கார வைங்க... நான் பிறகு வர்றேன்..." என்க...

மகன் கூறியதை உடனடியாகச் செய்தார் மார்த்தாண்டம்... காரில் அமர்ந்த பிறகும் பிரகதீஸ்வரியின் பயம் சிறிதும்

குறையவில்லை... நிருபர்கள் கேட்ட கேள்விகள் அனைத்தும் அவளது பூ மனதினை சூறாவளியாய் சுழற்றி அடித்துக் கொண்டிருந்தது... மழையில் நனைந்த கோழிக்குஞ்சாய் அவள் பயத்தில் வெடவெடவென நடுங்கி கொண்டு இருந்தாள்...

அங்குச் சித்தார்த்தோ புன்னகையுடன் கூலாக, "இந்த நள்ளிரவு நேரத்தில் இப்படிக் கேள்விகள் கேட்டால் எப்படி...? நாளை பிரஸ்மீட் வைத்து உங்க எல்லோரது கேள்விகளுக்கும் பதில் சொல்கிறேன்..." என்றவன் லேசான தலையசைப்புடன் அங்கிருந்து விறுவிறுவெனக் கிளம்பி வந்து விட்டான்...

அவன் காரில் ஏறிய பின்னரும் விடாது துரத்திய நிருபர்களை அலட்சியப்படுத்தியவாறு உள்ளே ஏறியவன் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் அளிக்காது கதவை மூடி கொண்டான்... இத்தனை பரபரப்பையும் பார்த்திருந்த பிரகதீஸ்வரி இன்னமும் பயந்து போய்க் கதவோரம் ஒண்டி கொண்டாள்...

காரில் ஏறிய சித்தார்த் முதலில் பார்த்தது தனது மனைவியைத் தான்... அவளது விழிகளில் தெரிந்த பயத்தைக் கண்டு தனது கையை அவள் புறம் நீட்டி விழிகளால் 'அருகில் வா' என்று அவன் அழைக்க... அவளோ பயத்துடன் 'வேண்டாம்' என்பது போல் தலையசைத்தவள் கண்களை மூடி கொண்டு இருக்கையில் சாய்ந்து விட்டாள்... அவளது விழியோரம் வழிந்த கண்ணீர் துளிகளில் சித்தார்த்தின் மனம் ஆடி போனது...

தந்தை, ஓட்டுநர் முன் அவளைச் சமாதானப்படுத்தும் வழி தெரியாது அமைதி காத்தவன் ஜன்னல் வழியே வெளிப்புறம் வேடிக்கை பார்க்கலானான்... ஆனால் அவனது மனம் ஒரு நிலையில் இல்லை... மனைவியை நினைத்து அது பரிதவித்தது... மலரினும் மெல்லிய மனம் கொண்ட மங்கையவளால் இதைத் தாங்கி கொள்ள முடியாது என்று...

"சித்து..." தந்தை அழைத்ததும் அவரைப் பார்த்தவன்,

"சொல்லுங்கப்பா..."

"நீ வர்றதை நான் யார் கிட்டேயும் சொல்லலை... ஆனா ரிப்போர்ட்டர்ஸ்க்கு எப்படித் தெரியும்ன்னு தெரியலை...?"

"அவங்களோட வேலையே துப்பறியறது தானே... விடுங்கப்பா..." என்றவன் மேலே பேசவில்லை...

வீடு வந்ததும் காரில் இருந்து இறங்கிய மகனை கண்டு கலவரத்துடன் பேச வந்த பிரபாவதியை மார்த்தாண்டம் கண்ணைசைவில் அடக்கி விட்டார்...

"முதல்ல அவங்க ரெஸ்ட் எடுக்கட்டும்... எதுவாக இருந்தாலும் பிறகு பேசலாம்..." என்று அவர் கூறி விட்டார்...

சித்தார்த் மனைவியை அழைத்துக் கொண்டு தங்களது அறைக்கு வந்தான்... எதுவுமே பேசாது முடிக்கி விட்ட பொம்மை போல் அங்கு வந்த பிரகதீஸ்வரியை கண்டு அவனுக்கு ஆற்றாமையாக இருந்தது... அவளது அருகில் வந்தவன் அவளது தோளில் கை வைத்து,

"ஏதாவது வாய் திறந்து பேசு பேபி... ஏன் இப்படி இருக்க...?" என்று அவன் அவளை உலுக்க...

அதில் அவள் திடுக்கிட்டவளாய் அவனைப் பார்த்தவளின் விழிகளில் கண்ணீர் தேங்கியது...

"இப்போ எதுக்கு இந்த அழுகை...?" என்றவனை வெறுமையாகப் பார்த்தவள் அவனது கைகளை விலக்கி விட்டுக் கட்டிலில் அமர்ந்தாள்...

அவனும் அவள் அருகில் வந்து அமர்ந்தான்...

"ஏதாவது பேசுடி..." என்றவனை நிமிர்ந்து பார்த்தவள் ஒன்றும் பேசவில்லை...

உடையைக் கூட மாற்றாது அப்படியே படுத்து கொண்டாள்... அவளைச் சிறிதும் நேரம் பார்த்து கொண்டிருந்தவன் பின்பு குளியலறைக்குச் சென்று தன்னைச் சுத்தப்படுத்திக்

கொண்டு உடை மாற்றி வந்து அவளது அருகில் படுத்தான்...

எப்போதும் போல் மனைவியின் மீது அவன் கை போட... அதில் அவளது உடல் நடுங்கியது அவளின் மனதினை போன்று... அவளோடு உறவாடும் போது ஏற்படும் உடல் நடுக்கத்திற்கும் இதற்கும் இருந்த வித்தியாசத்தை உணர்ந்தவனாய் அவளது முகத்தைத் திருப்பிப் பார்த்தவன்,

"என்ன பேபி...?"

"எனக்கு வேண்டாம்..."

"எது வேண்டாம்...?"

அவள் கூற வருவது அவனுக்குச் சுத்தமாய்ப் புரியவில்லை...

"நீங்க கிட்டே வர்றது..."

அவளது வார்த்தையில் தீச்சுட்டது போல் உடனே தனது கையை எடுத்தான் அவன்... இந்த ஒரு மாத காலமாகத் தனது தொடுகையில் உருகி கரைந்து கனிந்த மனைவியவள் இவள் இல்லை என்பது அவனுக்கு நன்கு புரிந்தது...

"சரி தூங்கு..." என்றவன் எழுந்து அலுவலக அறைக்குச் சென்று விட்டான்...

கணவன் தன்னை விட்டு நீங்கி செல்வதும் அவளுக்கு வருத்தமாக இருந்தது... அதே சமயம் அவன் தன்னைத் தொடுவதும் ஏனோ அவளது மனதிற்கு ஒப்பவில்லை... அவள் கண்களில் நீர் வழிய படுத்திருந்தாள்... அவளுக்கு நிறைய யோசிக்க வேண்டியிருந்தது...

அலுவலக அறையில் சோபாவில் அமர்ந்த சித்தார்த்தும் பலத்த யோசனையில் அமர்ந்திருந்தான்... காலையில் எழுந்ததும் மனைவியிடம் விளக்கமாகப் பேச வேண்டும் என்று நினைத்தான்... என்ன விளக்கி சொன்னாலும் தன்

பக்க நியாயத்தை அவள் புரிந்து கொள்வாளா என்று அவனுக்குத் தெரியவில்லை... திரும்பவும் அவளை இழந்து விடுவோமோ என்று அவனுக்கு அத்தனை பயமாக இருந்தது...

மறுநாள் விடியலில் சித்தார்த்திற்கு மனைவியிடம் பேச முடியாதபடி வேலைகள் வந்து கழுத்தை நெறித்தது... அதனால் அவன் அவள் எழும் முன் அலுவலகத்திற்குக் கிளம்பி சென்று விட்டான்... அவன் தனது வேலையில் மூழ்கியிருந்த போது அவனது அலைப்பேசி அழைத்தது... அதை உயிர்ப்பித்தவன்,

"சொல்லுங்கப்பா..." என்றான்...

"நியூஸ் சேனலை போட்டு பாரு..." என்று அவர் குறிப்பிட்ட தனியார் தொலைக்காட்சியைக் கூறினார்...

அவர் கூறியதை கேட்டு அவன் குழப்பத்துடன் அறையில் இருந்த தொலைக்காட்சி பெட்டியை உயிர்ப்பித்தான்... தந்தை சொன்னதைப் போட்டவன் திரையில் தெரிந்த மனைவியின் முகத்தினைக் கண்டு அதிர்ந்து போய் விட்டான்...

"அப்பா... இந்த மாதிரி நேரத்தில் இவளை எங்கேப்பா வெளியில் அனுப்பினீங்க...?"

"அவள் வெளியில் கிளம்பி போனது எங்களுக்கே தெரியாது சித்து..."

"என்னப்பா இது பொறுப்பு இல்லாம சின்னப் பிள்ளை மாதிரி..." என்று தந்தையைக் கடிந்தபடி தலையில் கை வைத்தான்...

அந்நேரம் பிரகதீஸ்வரி அந்தத் தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்துக் கொண்டிருந்த கணீர் குரல் அவனது காதுகளில் ஒலித்தது...

"என் கணவராக இருந்தாலும் தவறு தவறு தான்... அவர் தவறு செய்திருந்தால் அவர் தண்டனை அனுபவித்துத்

தான் ஆகவேண்டும்... இதில் எனக்கு எந்த மாற்று கருத்தும் இல்லை... ஆனால் அதை முடிவு செய்ய வேண்டியது சட்டம்... நீங்களோ, நானோ இல்லை..." என்றாள் தெளிவான குரலில்...

நேற்று அவனைப் பயந்து போய்ப் பார்த்த அவனது மனைவி அல்ல இவள்... கடந்த மூன்று வருடங்களாக அவன் பார்த்து வந்த இரும்பு மனுசி இவள்... அவளது உறுதி கண்டு அவனுக்கு உள்ளுக்குள் குளிரெடுத்தது...

"உங்கள் கணவர் எல்லாவற்றையும் பணத்தால் விலைக்கு வாங்கி விட்டார்ன்னு சொல்றாங்களே... அது உண்மையா..."

"எல்லாவற்றையும் பணத்தால் விலைக்கு வாங்க முடியாது... விலை போகா பொருளும் உலகில் இருக்கிறது... அது கடவுளின் நீதி... யாராக இருந்தாலும் அவனது நீதிமன்றத்தில் தண்டனை நிச்சயம் உண்டு..."

புன்னகையுடன் பதிலளித்தவள் நின்றிருந்த இடத்தைக் கண்டு அவனது விழிகள் இடுங்கியது... அவ்வளவு தான் அவனுக்குக் கோபம் பொங்கியது... படாரென்று நாற்காலியில் இருந்து அவன் எழுந்த வேகத்தில் அந்தச் சுழல் நாற்காலி கிறீச் என்று அலறிக் கொண்டு தள்ளி போனது...

காரிலேறி மனைவி இருக்கும் இடம் நோக்கி பறந்தவனுக்கு மனதில் அத்தனை கோபம்...

மருத்துவமனையில் காயங்களுடன் படுத்திருந்தவர்களைக் காண காண பிரகதீஸ்வரி இதயத்தில் இரத்தம் வடிந்தது... எல்லோருமே ஏழை, எளிய மக்கள்... தினக்கூலி வாங்குபவர்கள்... விபத்து நடந்து ஒரு மாத காலமாகியும் அவர்களது காயங்கள் ஆறவில்லை... அவர்களது குடும்பத்தினரை பார்த்து ஆறுதல் கூற அவள் முயன்ற போது அங்கிருந்த ஒருத்தன் கத்தினான்...

"டேய்... இவள் தான்டா அந்தக் கம்பெனி ஓனரோட பொண்டாட்டி..." என்று ஆக்ரோசமாய்க் குரல் கொடுத்தான்...

அடிப்பட்டவர்களின் உறவினர் கூட்டம் ஆங்காரத்துடன் அவளைச் சூழ்ந்து கொண்டதும் பிரகதீஸ்வரி என்ன செய்வது என்று தெரியாது விழித்தாள்... அவர்களது கைகளில் மாட்டினால் அவளை அடித்தே கொன்று விடப் போவது உறுதி... அந்நேரம் ஒரு கரம் அவளைப் பின்னால் இருந்து பாதுகாப்பாய் அணைத்துப் பிடித்துக் கொண்டது... யாரோ என்று பயத்தில் திமிறியவளின் காதில்,

"ஷ்... நான் தான் பேபி..." என்ற குரல் அவளுக்குப் பெருத்த நிம்மதி அளித்தது...

"வாடா... இத்தனை நாளா உன்னைத் தான் தேடிக்கிட்டு இருந்தோம்... இப்போ நீயே வந்து வசமா மாட்டிக்கிட்ட... எங்க அப்பாவை இந்தக் கதிக்கு ஆளாக்கிய உன்னைச் சும்மா விடக் கூடாதுடா..." என்று விபத்தில் பாதிக்கப்பட்டவரின் மகன் குமுறியபடி சித்தார்த்தை அடிக்கக் கையை ஓங்கி கொண்டு வந்தான்...

அப்போது திடீரெனச் சித்தார்த்தின் கையில் துப்பாக்கி முளைத்தது... அதைக் கண்டு மற்றவர்கள் பயந்தார்களோ இல்லையோ பிரகதீஸ்வரி அச்சத்தில் உறைந்தாள்...

"இப்போ பக்கத்தில் வாடா பார்க்கலாம்..." என்று சித்தார்த் கர்ஜிக்க...

எல்லோரும் துப்பாக்கி கண்டு பயந்து பின்வாங்கினர்... அந்த நேரத்தை தனக்குச் சாதகமாக்கி கொண்டு சித்தார்த் மனைவியை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தான்... காரின் முன்பக்க கதவை திறந்து விட்டவன் மனைவியிடம்,

"ஏறுடி..." என்று உறும... அவள் பயத்தில் ஏறியமர்ந்தாள்... கதவை சாத்திவிட்டு மறுபக்கம் அவன் வந்த போது கடைநிலை காவலர் ஒருவர் அங்கு ஓடி வந்தார்...

"சார்... எதுக்கு சார் துப்பாக்கி எல்லாம் காட்டி மிரட்டினீங்க...? இப்போ இந்தக் கேசும் உங்க மேல் பாயும் சார்..."

"அதுக்காக அவன் என்னை, என் மனைவியை அடிக்கும் வரை நான் வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கணுமா...?" என்று ஆத்திரத்துடன் கத்தியவன் தனது பர்சை திறந்து கற்றைப் பணத்தை அள்ளி எடுத்து அவர் கையில் கொடுத்து,

"அவன் மேல் ஏதாவது ஒரு பொய் கேஸ் போட்டு உள்ளே தள்ளி முட்டிக்கு முட்டி தட்டுங்க... அப்போ தான் அவனுக்குப் புத்தி வரும்..." என்று அவன் கோபத்தில் உறுமினான்...

அவர் சுற்றும் முற்றும் யாராவது பார்க்கிறார்களா என்று பார்த்துக் கொண்டே பணத்தை வாங்கிக் கொண்டார்...

"எதுக்குப் பயப்படுறீங்க...? எவனாவது பார்த்து டிவியில் நியூசா போட்டுருவான்னா...?"

"ஹி... ஹி... ஆமா சார்..."

"என்னோட ஆட்கள் யாரையும் உள்ளே விடலை... அங்கே பாருங்க..."

சித்தார்த் சுட்டி காட்டிய இடத்தில் சித்தார்த்தின் ஆட்கள் பத்திரிக்கையாளர்கள் யாரையும் உள்ளே விடாது அரண் போல் காத்து நின்றனர்...

"நான் கிளம்பி போகும் வரை இப்படித் தான் இருக்கும்..." என்றவன் ஞாபகமாய் அவரிடம்,

"நான் சொன்னதைச் செய்ய மறந்திராதீங்க..." என்றுரைத்து விட்டுக் காரில் ஏறினான்...

"அவருக்கு எதுக்குப் பணம் கொடுத்தீங்க...?" என்று கேட்ட மனைவியை முறைத்து பார்த்தவன் பதில் பேசாது காரை கிளப்பினான்...

நல்லவேளை காரின் கண்ணாடி ஏற்றி விடப்பட்டு இருந்ததால் அவன் காவலரிடம் பேசியது அவளது காதுகளில் விழவில்லை... இல்லையென்றால் அவள் அதற்கும் ஏதாவது சொல்லி இருப்பாள்...

வீடு வந்ததும் மனைவியின் கையைத் தரதரவெனப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தவன் நேரே தங்களது அறைக்கு வந்ததும் தான் விட்டான்...

"அறிவிருக்கா உனக்கு...? அவங்களே நம்மளை கொலைவெறியுடன் தேடிக்கிட்டு இருக்காங்க... இதில் நீ வேற அவங்க முன்னாடி போய்த் தரிசனம் கொடுக்கிற... உன்னை எல்லாம் என்ன சொல்லி திருத்துவது..." என்று கடிந்த கணவனைப் பார்த்து அவள் அமைதி காத்தாள்...

"இந்த லட்சணத்தில் என்னைப் பத்தி வேறு பேட்டி கொடுக்கிற... விட்டால் நான் தான் எல்லாத்துக்கும் காரணகர்த்தான்னு சொல்லி என் கையில் விலங்கு மாட்ட வச்சிட்டு தான் மறுவேலை பார்ப்ப போலிருக்கு..."

"அதில் என்ன தவறு இருக்கு...?"

அழுத்தமாய்க் கேட்ட மனைவியைக் கண்டு அவன் உள்ளுக்குள் அதிர்ந்து தான் போனான்... ஈருடல் ஓருயிராய் வாழ்ந்த மனைவியின் வாயில் இருந்து இந்த வார்த்தைகளை அவன் சத்தியமாக எதிர்பார்க்கவில்லை...

"முட்டாளா நீ..." அவன் ஆத்திரத்தில் வெடித்தான்...

அவனது ஆத்திரத்தை கண்டு கொள்ளாது, "இதுக்காகத் தான் என்னை அவசர அவசரமா ஹனிமூன் கூட்டிட்டு போனீங்களா...? போனீங்கன்னு சொல்ல கூடாது ஓடி ஒளிஞ்சிங்கன்னு சொல்றது தான் சரி..."

"பேபி..." எல்லோரையும் அதிர வைக்கும் சித்தார்த்தையே அவனது மனைவி அதிர வைத்தாள்

"அத்தனை உயிர் இங்கே பரிதவிச்சிக்கிட்டு இருக்கிறப்போ நாம அங்கே... ச்சே சொல்லவே என் நாக்கு கூசுது...

மத்தவங்களோட இரத்தத்தைக் கொண்டு நாம நம்ம வாழ்க்கையை எழுதியிருக்கிறோம்... ஏன் மாமூ இப்படிச் செஞ்சீங்க...? உங்க மனசில் மனிதாபிமானம் இருக்கா...? இல்லை அது செத்து போச்சா...?"

"தேவையில்லாம பேசாதே ரதி... நம்ம ஹனிமூன் ஏற்கெனவே திட்டமிட பட்டது..."

"அதை ஏன் ஒரு வாரத்துக்கு முன்னே கூட்டிட்டு போனீங்க... பிரச்சினைகள் வந்தா தைரியமா நேருக்கு நேர் நின்னு சமாளிக்கப் பார்க்கணும்... இப்படிக் கோழை மாதிரி பயந்து ஓடி ஒளிய கூடாது... உங்களோட செயல்களைப் பார்க்கும் போது தப்பு எல்லாம் உங்க மேல் தான் இருக்கோன்னு எனக்குச் சந்தேகமா இருக்கு..."

அவள் சொல்லி முடிக்கும் அவன் கோபத்துடன் அவளது கழுத்தை பிடித்திருந்தான்...

"என்னடி சொன்ன...? நான் கோழையா...? நான் பயந்துக்கிட்டு ஓடி ஒளிஞ்சேனா... இன்னொரு தடவை இதைச் சொன்ன கொன்னுருவேன் கொன்னு... எல்லாம் உனக்காகத் தான்டி பாவி... நீ பயப்படக் கூடாதேன்னு தான் நான் உன்னைக் கூட்டிட்டு போனேன்... எல்லாம் உனக்காகத் தான்டி செஞ்சேன்... ஆமாம்டி, நான் கோழை தான்... உன் விசயத்தில் மட்டும்... அதுக்காக எல்லோர் கிட்டேயும் அப்படி இருக்க என்னால் முடியாது..."

"அப்போ தப்பு உங்க பேரில் இல்லை... அப்படித் தானே..."

அப்போதும் அடங்காது பேசியவளை கண்டு ஆதங்கமுற்றவனாய் தனது கையை விலக்கியவன் பின் தணிந்த குரலில்,

"இங்கே பார்... தொழில் என்றால் இது போல் நடப்பது சகஜம்... இது மாதிரி முன்னே பின்னே இருக்கத் தான் செய்யும்... இது எல்லாத்தையும் தாண்டி தான் வெற்றி பெறணும்... இதை எல்லாம் நீ கண்டுக்காதே... இதை நான் பார்த்துக்கிறேன்... நான் எப்படிப்பட்டவனாக இருந்தாலும்

உன் மேல் உயிரையே வைச்சிருக்கிறேன் பேபி... அந்தளவுக்கு நான் உன்னைக் காதலிக்கிறேன்... நீ கண்டதையும் நினைச்சு மனசை போட்டு குழப்பிக்காதே... என்னால் உனக்கு எந்தப் பாதிப்பும் வராமல் நான் பார்த்துக்கிறேன்..."

"எல்லாம் சரி... உங்களால் போன உயிர்களைத் திரும்பக் கொடுக்க முடியுமா...? இல்லை அடிப்பட்டு இருப்பவர்களின் வலி, வேதனைகளைத் தான் உங்களால் தாங்கிக்க முடியுமா...?"

"அதுக்கு இப்போ என்னை என்ன பண்ண சொல்ற...? என்னை அரெஸ்ட் பண்ணுங்கன்னு சொல்லி என் கையை நீட்டிட்டு நிற்க சொல்லுறியா...?"

அவன் கூறியதை கேட்டு அவள் அதிர்வுடன் பார்த்தாள்... ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"தவறு செய்தால் தண்டனை அனுபவித்துத் தானே ஆகவேண்டும்..." என்றாள் வறண்ட குரலில்...

"இங்கே பார்... இந்தச் சமூகத்தில் எனக்குன்னு ஒரு அந்தஸ்து இருக்கு... அதைக் கெடுக்கிற மாதிரி நானும் நடந்துக்க முடியாது... நீயும் நடந்துக்கக் கூடாது... இந்தச் சித்தார்த்தின் மனைவியா அதுக்கு ஏத்த மாதிரி கொஞ்சம் முதிர்ச்சியோடு நடந்து கொள்... சும்மா உன் இஷ்டத்துக்கு நடந்துக்கிட்டு என் கோபத்தை மேலும் மேலும் கிளறாதே..." என்றவன்,

"நீ எனக்கு முக்கியம் தான்... அது போல் எனக்கு இந்தச் சமூக அந்தஸ்தும் முக்கியம்... இந்த நாலு சுவற்றுக்குள் என்னை உன் காலடியில் மண்டியிட சொல்... நான் மறுக்காது அதைச் செய்கிறேன்... அதுவும் உனக்காக மட்டுமே... ஆனால் எதற்காகவும், யாருக்காகவும் மற்றவர் முன் எல்லாம் என்னால் மண்டியிட முடியாது... அது நீயே சொன்னாலும் கூட..."

ஆத்திரத்தில் படபடவெனப் பொரிந்தவன் பின் நிதானித்து, "இங்கே பார் பேபி... நான் ஏற்கெனவே உன்னிடம் சொல்லியிருக்கேன்... உன் கொள்கையை நீ விட வேண்டாம்... என்னை எதிர்க்கணும்ன்னா எதிர்த்து போராடு... நான் வேண்டாம் சொல்லலை... அதை எப்படிச் சமாளிக்கணும்ன்னு எனக்குத் தெரியும்... அதை விட்டுட்டு நானே வலிய போய்த் தண்டனை அனுபவிக்கணும்ன்னு நீ சொல்றது அபத்தம்... எதையும் என்னால் சமாளிக்க முடியும்... சமாளிப்பேன்..."

"எப்படி...? இப்போ அந்தக் கான்ஸ்டபிள் கையில் பணத்தை அள்ளி கொடுத்தீங்களே... அப்படியா...?" என்றவளை கண்டு அவனுக்கு எரிச்சல் வந்தது...

"என்னடி இது, ஊர் உலகத்தில் யாருமே செய்யாத தப்பை நான் செஞ்சிட்ட மாதிரி ஒப்பாரி வைக்கிற...?" என்றவன் தவறு செய்த பெரிய பெரிய அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் பலரின் பெயரை பட்டியல் போட்டு சொல்லியவன்,

"இவங்க மனைவி கிட்ட எல்லாம் போய்க் கேட்டு பார்... உங்க கணவர் தவறு செஞ்சாரான்னு...? அவங்க மனசாட்சிக்கு தெரியும் அவங்க கணவர் செய்தது தவறுன்னு... ஆனால் வெளியில் யாரும் உன்னைப் போல் காட்டி கொடுக்க மாட்டாங்க... அவங்க கணவர் நல்லவர், தவறு செய்யலைன்னு தான் வாதாடுவாங்க... ஆனா நீ ஏன்டி இப்படியிருக்க...?"

மனைவியை நினைத்து அவனுக்கு அப்படி ஒரு ஆற்றாமையாக இருந்தது...

"நீங்க சொன்ன மாதிரி மத்த பொண்ணுங்க மாதிரி கணவன் எது செஞ்சாலும் சப்போர்ட் பண்ணி பேச என்னால் முடியாது... அப்படிப்பட்ட ஆண்களை அந்தப் பெண்கள் கொன்று இருக்கணும்... அப்படிச் செஞ்சிருந்தா இத்தனை தவறுகள் நடக்காது குறைந்திருக்கும்..."

எந்தவொரு உணர்ச்சியும் இல்லாது கூறியவளை வெறித்துப் பார்த்தவன், "அதை முதல்ல செய்டி... என்னை விசத்தை வச்சு கொன்னுரு... நான் நிம்மதியா போய்ச் சேர்றேன்..." என்றவனைத் தீர்க்கமாகப் பார்த்தவள்,

"என்னால் அதைச் செய்ய முடியாது... அதே சமயம் என்னால் மத்த பொண்ணுங்க மாதிரி எல்லாத்தையும் பொறுத்துக்கிட்டு வாழவும் முடியாது... அப்படி நீங்க செய்றதுக்கு எல்லாம் சரி சரின்னு வாழ்றதுக்கு நீங்க என்னைக் கல்யாணம் பண்ணியிருக்கக் கூடாது... வேறு பெண்ணைப் பண்ணியிருக்கணும்..."

அவளது கூற்றில் அவனது ஆத்திரம் அதிகரிக்க அவளது கூந்தலை இறுக பற்றியவன், "என்னடி சொன்ன...?"

அவனது உறுமலான வார்த்தைகளில் கோபம் தெரியவில்லை... மாறாக அவனது அளவுக்கு அதிகமான காதலே தெரிந்தது... அதை அவளும் உணர்ந்தாள்... அவனது காதலில் அவளது கண்கள் உடைப்பெடுத்தது... அடுத்தக் கணம் அவள் கதறி அழுதாள்...

"உங்களை எதிர்த்து போராடிய அந்தப் பிரகதீஸ்வரி இப்போ எங்கே போனாள்ன்னு எனக்குத் தெரியலை...? உங்க மேலுள்ள காதல் என்னை மேலும் மேலும் கோழையாக்குது... இதில் நான் என்னை இழந்து, என் சுயத்தை இழந்து நான் நானாக இல்லாது போயிருவேனோன்னு எனக்குப் பயமாயிருக்கு... இப்படி மனப் போராட்டத்தோடு வாழ்ந்தேன்னா கடைசியில் நான் தற்கொலை தான் பண்ணிக்குவேன்... நீங்க சொன்ன மாதிரி உங்களை என்னால் கொல்ல முடியாது... கடைசியில் நான் தான் செத்து போவேன்..." என்றவளை கண்டு அவளது கூந்தலை பிடித்திருந்த அவனது கை தளர்ந்தது அவனது மனதினை போல்...

பிரகதீஸ்வரி கணவனது சட்டையைப் பிடித்துக் கொண்டு, "ஏன் மாமூ இத்தனை காதலை என் மேல் வைக்கிறீங்க...? இந்தக் காதல் தான் என்னை வாழவும் விட மாட்டேங்குது... சாகவும் விட மாட்டேங்குது... உங்க கூட நூறு வருசம்

வாழணும்ன்னு ஆசையாகவும் இருக்கு, அதே சமயம் இந்தக் கொடுமைகளை எல்லாம் பார்த்துட்டு என்னால் உயிர் வாழவும் முடியலை... இப்போ நான் என்ன பண்றது மாமூ...?" என்று கதறியவளை இறுக்கமாய் அணைத்துக் கொண்டான் அவளது வேதனையைப் போக்கும் படி...

தேம்பியபடி நெஞ்சில் சாய்ந்திருந்தவளை ஆதரவாய் வருடி கொடுத்தவன் மனதிற்குள் பல யோசனைகள்... அப்போது பிரகதீஸ்வரி அந்த வார்த்தைகளைக் கூறினாள் அதைக் கேட்டு அவனது மனமும், தேகமும் நடுங்கியது... ஆண்மகன் அவனே சற்று அதிர்ந்து தான் போனான்...

"பேபி..." அவன் அதிர்வு குறையாது அவளைப் பார்த்தான்...

"ஆமா மாமூ... நாம பிரிஞ்சிரலாம்... உங்க கூட இருக்கும் வரை என்னால் உங்களோட கொள்கைளை ஏத்துக்கவும் முடியாது... அதை எதிர்க்கவும் முடியாது... நான் நானாக இருக்கவும் முடியாது... நான் உயிர்ப்புடன் வாழணும்ன்னா நீங்க என்னை விட்டு விலகி போயிருங்க... நான் வாழ்றதும், சாகறதும் உங்க கையில் தான் இருக்கு..."

அவளது வார்த்தைகளில் திகைத்து போனவன் அவளை விட்டு விலகி கட்டிலில் அமர்ந்தான்... அன்றும் அவள் தான் அவனை வேண்டாம் என்று போனாள்... இதோ இப்போதும் அவள் தான் அவனை வேண்டாம் என்கிறாள்... அன்று இருந்த சித்தார்த்திற்கு அவள் மீது காதல் இருந்த போதும் அதிகக் கோபம் இருந்தது... ஆனால் இன்று இருக்கும் சித்தார்த்திற்கு அவள் மீது கோபம் வர மறுத்தது... மாறாகக் காதல் தான் அதிகரித்தது... அந்தக் காதல் தனது மனைவி கூறியதை அப்படியே நிறைவேற்ற எண்ணியது...

"உன் விருப்பம் அது தான் என்றால்... நீ தாராளமா பிரிந்து போகலாம்..." என்றான் தனது மனதினை கல்லாக்கி கொண்டு...

கணவனது வார்த்தையில் அவளது உள்ளமும் அதிர தான் செய்தது... இருவருக்குள்ளும் எத்தனை காதல் இருக்கிறது என்பது இருவருக்கும் தெரியும்... ஒருவரின் காதல்

மற்றவரை வாழ வைக்க வேண்டும்... மாறாக மரணிக்க வைக்கக் கூடாது...

அவளது கொள்கைள் வாழ்ந்தால் அவன் வாழாது போவான்... அவனது கொள்கைள் வாழ்ந்தால் அவள் மரணித்துப் போவாள்... இருவரும் துக்கத்துடன் சேர்ந்து இருப்பதற்குச் சந்தோசமாய்ப் பிரிவது சால சிறந்தது என்றே தோன்றியது...

கணவன் காதலனாக அல்லாது மனிதனாக வேண்டும் என்று அவள் விரும்பினாள்... மனைவி பொதுநலம் கருதி ஊருக்காக உழைக்காமல் தன் காதல் மனைவியாகத் தனக்கு மட்டுமே இருக்க வேண்டும் என்று அவன் சுயநலமாய் நினைத்தான்... அத்தனை காதல் இருந்த போதும் இருவரும் தங்களது நிலையை விட்டு சிறிதும் கீழிறங்க விரும்பவில்லை...

"இதில் எந்த மாற்றமும் இல்லையே..."

"இல்லை..." என்று உறுதியாய் சொன்னவளை கண்டு அவன் ஒரு நொடி ஒன்றும் பேசாது இருந்தான்...

"எங்கே போவதாய் உத்தேசம்...?" என்று கேட்டவனைப் பார்த்தவளின் விழிகளில் கண்ணீர் நிரம்பியது...

"வேறு எங்கே ஹரி அத்தானிடம் தான்..."

அதைக் கேட்டு அவனது உடல் விறைத்தது...

"நீ எதுக்கு அவனிடம் போகணும்...? உனக்கு வீடு, சொத்துக்கள் எல்லாம் இருக்கிறது... நீ ஊரில் போய் இரு..." என்றான் அவசரமாக...

"அதைத் தான் நீங்க எழுதி வாங்கிட்டீங்களே... இப்போ அது உங்களோடது... என்னோடது இல்லை..." என்று கூறியவளின் வார்த்தையில் அத்தனை விரக்தி இருந்தது...

அதைக் கேட்டு அவன் ஏதோ சொல்ல வாய் திறந்தவன் அப்படியே சொல்லாது விட்டான்... இப்போது அதைச் சொல்வதால் எதுவும் மாறப் போவதில்லை... மாறாக

அவளது வேதனை தான் அதிகரிக்கும்... அதனால் அவன் அமைதி காத்தான்...

"சரி நீ சொல்றபடியே வச்சுக்குவோம்... ஆனால் என்னுடையது எல்லாம் உன்னுடையது தானே பேபி..." என்று கனிவுடன் ஒலித்தது அவனது குரல்...

"எனக்கு இந்தப் பணம், பகட்டு எதுவும் வேண்டாம்... நீங்க மட்டும் தான் வேண்டும்... உங்க காதல் மட்டும் தான் வேண்டும்... நல்ல மனிதாபிமானமுள்ள மனிதனாக நீங்க வேண்டும்... அது தான் எனக்கு வேண்டும்..."

மனைவி கூறுவதைக் கேட்டால் அவன் இத்தனை நாள் கட்டி காத்து வந்த பெயர் என்னவாகும்... அவனுக்குப் பெருத்த கவலையாக இருந்தது... அதே சமயம் அவள் மீது கோபமும் வந்தது...

அன்பில் சரணாகதி அடைவது என்று ஒரு நிலை இருக்கிறது... மனம் அந்த நிலைக்குச் செல்லும் போது இது அத்தனையும் தூக்கி எறிய தோன்றும்... அதை அவன் இன்னமும் உணரவில்லை...

"இந்தப் பணத்தையும், பகட்டையும் தக்க வைத்துக் கொள்ளத் தான் எத்தனை போராட்டங்கள்... இப்படிப் பல மனிதர்களின் உயிர்களைக் காவு வாங்கும் இந்தப் பணம், பகட்டு எனக்கு வேண்டாம்... நீங்களே வைச்சுக்கோங்க..."

நேற்று முன் தினம் வரை காதல் வானில் சிறகடித்துப் பறந்த ஜோடி பறவைகள் ஒரு நொடியில் தங்களது பிரிவினை முடிவு செய்தது... நாளை என்ன நடக்கும் என்பது நம் கைகளில் கிடையாது...

முடிவு எடுத்த பின் அதைச் செயலாற்ற சிறிதும் தாமதிக்கவில்லை பிரகதீஸ்வரி... அவளின் எண்ணத்தைச் சித்தார்த் உடனே நிறைவேற்றினான்... மீண்டும் அவர்களது பிரிவை எண்ணி மருகிய அன்னையைச் சித்தார்த் அடக்கி விட்டான்...

"உன் மருமகள் சந்தோசம் முக்கியம் என்றால் அவளை அப்படியே விட்டு விடுங்கம்மா..." மகனது வார்த்தையில் அவனது பெற்றோர் கனத்த மனதுடன் விலகி கொண்டனர்...

ஹரிப்ரசாத்தின் வீட்டிற்குச் சித்தார்த்தே அவளை அழைத்துச் சென்றான்... அவனுக்கு அத்தனை வேலைகள் இருந்த போதும் மனைவிக்காக அவன் அதைச் செய்தான்... போகும் வழி எல்லாம் இருவரும் எதுவும் பேசி கொள்ளவில்லை... மௌனமே அங்கு ஆட்சி செய்தது...

நள்ளிரவில் வந்து நின்ற தம்பதியினரை கண்டு ஹரிப்ரசாத் குடும்பத்தினர் திகைத்தனர்... அதிலும் இருவரது முகத்திலும் சந்தோசத்தின் சாயல் சிறிதும் இல்லாது இருந்ததைக் கண்டு எல்லோருக்கும் கலவரமாக இருந்தது...

"அம்மா... ரதியை உள்ளே அழைச்சிட்டு போங்க..."

சித்தார்த் சொன்னதும் பானுமதி அவளை உள்ளே அழைத்துச் செல்ல சந்தியாவும் உடன் சென்றாள்... அவர்கள் சென்றதும் சித்தார்த் அமைதியாக ஹரியை பார்த்தான்... ஹரியும் அவனே பேசட்டும் என்று அமைதியாக இருந்தான்...

"ரதி என்னை விட்டு பிரிந்து இருக்கணும்ன்னு இங்கு வந்திருக்கிறாள்..."

சித்தார்த் கூறியதை கேட்டு ஹரி அதிர்ச்சி அடைந்தான்...

"ஏன்...?"

"நான் போகும் வழி அவளுக்குப் பிடிக்கலை... அவளுக்குப் பிடிக்காததைச் செய்யாமல் என்னால் இருக்கவும் முடியலை... நான் என்ன பண்றது...?" என்று தோளை குலுக்கினான் சித்தார்த்...

ஏற்கெனவே அவர்களது முதல் பிரிவு பற்றி ஹரிக்குத் தெரியுமாதலால் அவன்,

"நீங்க கொஞ்சம் உங்களது கொள்கைகளை விட்டு இறங்கி வர கூடாதா...?" என்றவனைத் தீர்க்கமாய்ப் பார்த்த சித்தார்த்,

"அப்படி இறங்கி வந்தால் இந்தச் சித்தார்த் பிணத்துக்குச் சமம்... அதற்குப் பின் ரதியின் காதலால் கூட என்னை உயிர்ப்பிக்க முடியாது..." தெளிவாக, அழகாகத் தனது நிலையை அவன் சொல்லிவிட்டான்...

"அத்தனை சொத்துக்களையும் வேண்டாம்ன்னு விட்டு விட்டு அவள் உன்னைத் தேடி வந்திருக்கிறாள்... அவளைப் பத்திரமாகப் பார்த்துக்கோ..."

"இதை நீங்க சொல்லவும் வேண்டுமா...? கட்டாயம்... அதே சமயம் முடிந்தளவு அவளிடமும் அறிவுரை சொல்ல பார்க்கிறேன்..." என்றவனை இடைமறித்த சித்தார்த்,

"வேண்டாம்... நாங்கள் புரிந்து கொள்ளாமல் சண்டை போட்டு பிரியலை... எங்களை நாங்க நல்லா புரிஞ்சிக்கிட்டதால் தான் பிரிய முடிவு செய்திருக்கிறோம்..."

"இனி உனக்குத் தமிழ்நாட்டுக்கு மாற்றல் கிடைத்தாலும் கிடைக்கும்..." என்றான் சித்தார்த் திடுமெனச் சம்பந்தமே இல்லாது...

அதில் ஹரியின் விழிகள் யோசனையாய்ச் சுருங்கியது...

"நீ தமிழ்நாட்டுப் பக்கம் வராமல் பார்த்து கொண்டதற்கு முழுக் காரணமும் நான் தான்..." என்றவனைக் கண்டு ஹரி அசந்து போனான்... இவன் என்ன என்ன வேலைகள் எல்லாம் பார்த்து வைத்திருக்கிறான் என்று...

"ஏன்...?" அப்படிக் கேட்டவனுக்கு ஏனோ கோபம் வரவில்லை... மாறாக ஆர்வம் மட்டுமே இருந்தது...

"என் ரதிக்கு நான் மட்டுமே நெருக்கமாக இருக்க வேண்டும் என்கிற சுயநலம் தான் காரணம்... இப்போது எனக்கு நல்லா தெரியும்... அவளது மனதிற்கு நான் மட்டுமே நெருக்கம் என்று... இனி நீ அந்த உயில் பற்றிச் சொன்னால்

கூட எனக்குக் கவலை இல்லை... அவள் என்னைப் பற்றித் தவறாக நினைக்க மாட்டாள்... அப்படியே தவறாக நினைத்தாலும் பரவாயில்லை... ஏனெனில் அவள் என்னை விட்டு பிரிந்து விடுவாளோ என்று பயந்து தான் நான் அதைச் சொல்லாது இருந்தேன்... இப்போது..."

ஏனோ அவனால் மேலே பேச முடியவில்லை தொண்டை அடைத்தது... தொண்டையைச் செருமி சரி செய்து கொண்டவன்,

"இப்போது எங்கள் பிரிவு நிரந்தரமாகி விட்டது..."

"சித்தார்த்..." ஆறுதல் ஏதோ சொல்ல வந்த ஹரியை கையமர்த்தித் தடுத்து விட்டு எழுந்தவன்,

"ரதியிடம் பேச வேண்டும்..."

அடுத்து பானுமதியும், சந்தியாவும் அறையை விட்டு வெளியில் வர, சித்தார்த் மனைவி இருந்த அறைக்குள் நுழைந்தான்... கணவனது வரவை உணர்ந்து பிரகதீஸ்வரி அவனைப் பார்த்தாள்...

"இந்த முறையாவது உன் லட்சியத்தை நீ அடைய வேண்டும்... உனது குறி இலக்கு மாறி விடக் கூடாது..."

"நிச்சயமாய்... இந்த முறை எனது குறிக்கோளை நான் கட்டாயம் அடைவேன்... ஆனால் அதன் இலக்கு நீங்களாக இருந்தால்...?" தலையைச் சரித்துப் புன்னகையுடன் கேட்டவளை கண்டு அவனது உதடுகளில் புன்னகை விரிந்தது...

"ஐம் வெய்ட்டிங் பேபி..." என்றான் புன்னகையுடன் அவளது கன்னம் தட்டி...

அவனது தொடுகையில் அவளது உள்ளம் உருகியது... அதை அவள் வெளிக்காட்டி கொள்ளாது மனதிடத்துடன் நின்றாள்... ஆனால் அவன் அதைக் கண்டு கொண்டான்... அடுத்த நொடி எலும்புகள் நொறுங்கி விடுவது போல்

அவளை இறுக அணைத்தவன் மறுநொடி அவளை விடுவித்தான்... அவளை இமைக்காது பார்த்தவன்,

"நான் போறேன்..." என்றவனின் வாய் மீது கை வைத்து தடுத்தவள்,

"வர்றேன்னு சொல்லணும்..."

"நீ என் கூட வாழ வர்றேன்னா சொல்லு... நான் அப்படிச் சொல்கிறேன்..." என்று நிராசையுடன் சொன்னவன்,

"நடக்காத ஒன்றை பற்றி இந்தச் சித்தார்த் பேச மாட்டான்..." என்றவன் அவளின் பதிலை எதிர்பாராது அறையை விட்டு வெளியேறி விட்டான்...

அவ்வளவு தான் இனி அவன் அவளைக் காண வர மாட்டான்... அவளுடன் பேச வர மாட்டான்... அவளுடன் வாழ வர மாட்டேன்... நிதர்சனம் அவளைச் சுட்டெரித்ததில் அவள் அனல் மேல் விழுந்த புழு போல் துடியாய் துடித்துப் போனாள்...

"மாமூ..." என்று அரற்றியபடி அவள் அப்படியே சரிந்து அமர்ந்து அழ ஆரம்பித்தாள்...

அவளது அழுகை சத்தம் கேட்டு விரைந்து வந்த பானுமதி அவளை ஆதரவாய் அணைத்துக் கொண்டார்... மறுபக்கம் சந்தியாவும் அவளை அணைத்து கொண்டாள்... ஹரி இந்தக் காட்சியை வேதனையுடன் பார்த்திருந்தான்...

****

"ரதிம்மா... அடுத்த வாரம் சந்தியாவுக்கு வளைகாப்பு நடத்தலாம்ன்னு இருக்கேன்..." என்று பானுமதி சொல்லவும் அத்தனை நேரம் இருந்த மன சோர்வு போய்ப் பிரகதீஸ்வரி மகிழ்ச்சியுடன் அவரைப் பார்த்தாள்...

"அதுக்குள் ஏழாவது மாசம் வந்திருச்சா அத்தை... ரொம்பச் சந்தோசமாயிருக்கு..." என்று மகிழ்ந்த நாத்தனார் மகளை ஆதூரத்துடன் பார்த்தார் அவர்...

என்ன இல்லை என்று இந்தச் சின்னப் பெண்ணைக் கடவுள் இந்தளவிற்குச் சோதிக்கிறான் என்று அவருக்கு அத்தனை ஆற்றாமையாக இருந்தது...

சிறிது நேரம் எல்லோரிடமும் வளைகாப்பு விசயமாகப் பேசியிருந்து விட்டு அறைக்கு வந்த பிரகதீஸ்வரி தனது வயிற்றினைத் தொட்டு பார்த்தாள்... தன்னுள்ளும் கணவனது வித்து முளைத்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று ஏக்கமாக நினைத்தாள்...

அப்போது தான் அவளுக்கு அது உறைத்தது... எப்போதும் வரும் மாதாந்திர பிரச்சினை இந்த மாதம் வரவில்லை என்று... அப்படி என்றால்...? மனதில் எழுந்த சந்தோசத்துடன் வயிற்றினை அழுந்த பிடித்துக் கொண்டாள்... அந்தச் சந்தோசமான செய்தியினை எல்லோரிடமும் சொல்லிவிடச் சொல்லி மனம் பரபரத்தது... அதற்குப் பின்னர் எல்லோரும் அவளைக் கணவனுடன் சேர்ந்து வாழ சொல்வார்கள்... அது அவளால் முடியுமா...? நிச்சயம் அவளால் அது முடியாது என்றே தோன்றியது...

இதோ இந்த நொடி வரை அவள் அவனுடன் மனதில் காதலுடன் வாழ்ந்து வருகிறாள் தான்... ஆனால் அவன் மாறாத வரை அவள் அவனுடன் வாழ்வது என்பது சாத்தியம் இல்லை... அவளைப் பார்த்தால் எல்லோருக்கும் பைத்தியக்காரி போல் தான் தோன்றும்... ஆனால் அவளால் அப்படி மனசாட்சியைக் கொன்று விட்டு வாழ முடியவில்லை...

அவளது மனக்கண்ணில் வரதனின் இறந்த முகம், அவனின் மனைவியின் சாபம், அதன் பின் இப்போது கண்ணுக்கு தெரியாத சிலர் உயிரை எடுத்த சாபங்கள், பலரை முடமாக்கிய பாவங்கள் என்று கணவனின் குற்றம் ஏறிக் கொண்டே போனது... அவளுக்குத் தெரிந்து இது எல்லாம்... தெரியாதது இன்னும் எத்தனையோ...?

வாழ்க்கைக்குக் காதல் மட்டும் போதாதே... எல்லோரையும் தன்னைப் போல் நேசிக்கும் மனிதாபிமானமும் வேண்டுமே...

அதே நேரம் சித்தார்த்தும் மனைவியின் நினைவில் தான் இருந்தான்... அவளைப் பிரிந்த இத்தனை நாட்களில் அவன் வெளியில் இயல்பு போல் காட்டி கொண்டாலும் அவனது அடிநெஞ்சில் அவளைப் பிரிந்திருக்கும் வலி சுருக் சுருக்கென்று வலித்துக் கொண்டு தான் இருக்கிறது... அவனது வேதனைக்கு அந்த வலி தேவையானதாக இருந்தது... அதனால் அதைச் சுகமானதாய் தாங்கி கொண்டான்...

இதோ இப்போதும் தொழிலில் தனது இடத்தினைத் தக்க வைத்து கொள்வதற்காக அவன் ஓடி கொண்டு தான் இருக்கிறான்... யாருக்காகவும், எதற்காகவும் அவனது இந்த ஓட்டம் தடை படாது... அது அவனது மனைவியாக இருந்த போதும் கூட... அவன் அப்படித் தான்... எத்தனை காதல் மனதில் இருந்த போதும் அவளைப் பார்க்காமல் இருக்க அவனால் முடிகிறது என்றால் இந்தத் திட மனது தான் காரணம்...

ஆனால் மனதிற்குள் காதலில் கரைய தான் செய்கிறான்... மனைவியவளின் அன்பிற்கு ஏங்க தான் செய்கிறான்... இனி அது அவனுக்குக் கிட்டாது போலும்... அவன் வாங்கி வந்த வரம் அப்படி...

அவன் நினைத்திருந்தால் அவளை வலுக்கட்டாயமாக இங்கிருக்கச் செய்திருக்க முடியும்... ஆனால் 'உன் கூட இருந்தால் நான் சுயத்தை இழந்து தற்கொலை செய்து கொள்வேன்' என்று கூறுபவளை அவன் எப்படித் தன்னுடன் கட்டுப்படுத்தி வைத்திருக்க முடியும்... எங்கிருந்தாலும் அவள் நன்றாக இருக்க வேண்டும் என்றே நினைத்தான்... அதனால் தான் அவளை விட்டு விலகி இருக்கிறான்...

பொங்கி ஆர்ப்பரித்த மனைவியின் எண்ணங்களில் சுகமாய் மூழ்கியபடி அவன் தனது வேலைகளைப் பார்க்கலானான்... அவளது நினைவுகள் மட்டுமே அவனுக்கு ஊக்கம் தரும் ஊக்க மருந்து...

****

சந்தியாவின் வளைகாப்பிற்குச் சரவணன், ஸ்வேதா இருவரும் மும்பையில் இருந்து வந்திருந்தனர்... இப்போதும் இருவருக்குள்ளும் சின்னச் சின்னச் சண்டைகள் இருந்த போதும் செல்ல செல்ல சீண்டல்களும் அதே போல் இருந்தது... நாத்தனாரின் வளைகாப்பிற்கு என்று ஸ்வேதா வைரத்தில் வளையல்கள் வாங்கிய போது சரவணன் வேண்டாம் என்று தடுத்தான்...

"என்னோட அண்ணிக்கு நான் வாங்கறேன்... நீ உன் வேலையைப் பார்..." என்று அவள் அவனது வாயை அடைத்து விட்டாள்...

சந்தியாவிற்குப் பட்டு புடவை கட்டி அலங்காரம் செய்து மனையில் அமர வைத்த போது கணவனாய் ஹரிக்குப் பெருமையாக இருந்தது... கணவன் என்கிற ஸ்தானத்தில் இருந்து தந்தை என்கிற பெரிய பதவியைத் தனக்கு அளிக்கப் போகும் மனைவியை அவன் காதலாய்ப் பார்த்திருந்தான்... கணவனது பார்வை உணர்ந்து அவள் வெட்கத்துடன் அமர்ந்திருந்தாள்...

பிரகதீஸ்வரி வழக்கம் போல் வேலைகளில் தன்னைத் தொலைத்து கொண்டாள்... சித்தார்த்தின் பெற்றோர் இந்த விழாவிற்கு வருவார்கள் என்று எதிர்பார்த்தாள்... ஆனால் அவர்கள் வரவில்லை... அவர்களது கவலை அவர்களை எங்கும் கிளம்பி வர செய்யவில்லை...

சந்தியாவிற்குத் தான் வாங்கி வந்திருந்த வைர வளையல்களைக் கணவனிடம் கொடுத்து அணிவிக்கச் சொன்னாள் ஸ்வேதா...

"இது நீ வாங்கியது ஸ்வீட்டி..." என்ற கணவனை முறைத்து பார்த்தாள் அவள்...

"அப்போ நீ வேற, நான் வேறன்னு சொல்லாமல் சொல்ற அப்படித் தானே...?"

"ஐயோ நான் எங்கே அப்படிச் சொன்னேன்...?"

"இப்போ நீ சொன்னதுக்கு என்ன அர்த்தம்...?"

"அது வந்து... இது உன் பணத்தில்..." என்று இழுத்தவனின் கையில் நறுக்கென்று கிள்ளியவள்,

"இப்போ தானே சொன்னேன்... நீ வேறு நான் வேறு இல்லைன்னு... நீ சொன்ன பேச்சு கேட்க மாட்ட..."

மனைவி கிள்ளியது கூட அவனுக்கு வலிக்கவில்லை... அவளது வார்த்தையில் அவன் ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்தான்...

"என்ன...?" மனைவி அவனைக் கேள்வியாய் பார்த்தாள்...

"அப்போ நீயும் நானும் ஒண்ணு அப்படித் தானே..."

"நானும் வேறு வேறுன்னு சொல்லலையே..."

"அப்போ சரி தான்..." என்றவனது பார்வை கணவனது பார்வையாக மாற ஆரம்பித்தது...

"என்ன சரி தான்..."

"சந்தியா மாதிரி உன்னையும் இப்படிப் பார்க்கணும்ன்னு எனக்கு ஆசையா இருக்கு..."

கணவனது வார்த்தையில் அவளது முகம் வெட்கத்தில் சிவந்தது...

"ச்சீ போடா..." என்றவளை ஆனந்தமாய்ப் பார்த்தான் அவன்...

"அண்ணி..." பிரகதீஸ்வரி குரலில் அவர்கள் இருவரும் சபைக்கு விரைந்தனர்...

விழா சிறப்பாக நடந்து முடிந்தது குறித்து எல்லோருக்கும் மிக்க மகிழ்ச்சி... ஊருக்கு கிளம்பும் முன் சரவணன் பிரகதீஸ்வரியிடம் வந்தான்...

"பிரகதி... நீ ஏன் அத்தானை பிரிஞ்சு வந்திருக்கன்னு நான் கேட்க மாட்டேன்... ஆனா அத்தான் கூட நீ சேர்ந்து வாழ்ந்தால் எனக்குச் சந்தோசம்..." என்ற சகோதரனுக்குப் புன்னகையைப் பதிலாகக் கொடுத்தாள்...

"அண்ணி... அண்ணாவை பத்தி எனக்கு நல்லா தெரியும்... அவங்க உங்க மனசை காயப்படுத்தி இருந்தால் அவங்க சார்பா நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன்... அண்ணா கொஞ்சம் ஈகோ பார்ப்பாங்க... ஆனா நீங்க இல்லாம அவங்களால இருக்க முடியாது... அந்தளவுக்கு அவங்க உங்களைக் காதலிக்கிறாங்க..."

ஸ்வேதா கூறும் போது பிரகதீஸ்வரியின் கண்கள் கலங்கியது...

"உங்க அண்ணா என் கிட்ட ஈகோ எல்லாம் பார்க்க மாட்டார்..." என்று கூறியவளின் வார்த்தையில் அத்தனை பெருமிதம் இருந்தது...

அதைக் கேட்டு ஸ்வேதா குழப்பத்துடன் ஊருக்கு கிளம்பி சென்றாள்... மறக்காது அதைத் தனது சகோதரனிடம் சொல்லவும் செய்தாள்...

"நாங்க புரியாமல் பிரியவில்லை... நன்கு புரிந்து வைத்திருப்பதால் தான் இந்தப் பிரிவு..." என்றதோடு சித்தார்த் முடித்துக் கொண்டான்... மனதில் மனைவி பற்றிய பெருமிதம் வேறு...

அடுத்த ஒரு மாதம் கடந்து சென்ற போது பானுமதி பிரகதீஸ்வரி குழந்தை உண்டாகி இருப்பதை எப்படியோ கண்டுபிடித்து விட்டார்...

"இந்த அத்தை கிட்ட கூட உன்னால் சொல்ல முடியலை இல்லையா...? அந்தளவுக்கு நான் அந்நியமாகி விட்டேனா ரதிம்மா..." ஆற்றாமையுடன் புலம்பியவரை கண்டு அவள் அணைத்துக் கொண்டு அழுதாள்...

"குழந்தை உண்டாகி இருப்பதைச் சொன்னால் நீங்க என்னை அவரோட சேர்ந்து வாழ போன்னு சொல்லி விட்டால்...? அதனால் தான் மறைச்சிட்டேன்..." என்றவளை தாயும், மகனும் அதிர்வுடன் பார்த்தனர்...

அன்றே அவளை மருத்துவமனையில் காட்டி பரிசோதனை செய்து குழந்தை நன்றாக இருப்பதை உறுதி செய்த

பின்னரே பானுமதி, ஹரி இருவருக்கும் நிம்மதியாக இருந்தது... அதன் பின்னர் அவர்கள் மறந்தும் சித்தார்த் பற்றிய பேச்சை அவளிடம் எடுக்கவில்லை...

ஆனால் ஹரி மட்டும் சித்தார்த்திடம் அவன் தந்தையாகப் போகும் விசயத்தைக் கூறினான்...

அதைக் கேட்ட சித்தார்த் அடைந்த உவகைக்கு அளவே இல்லை... நிறுவனத்தில் வேலை செய்பவர்கள் அனைவருக்கும் ஒரு மாத சம்பளத்தை ஊக்க ஊதியமாகக் கொடுக்கச் செய்தான்... வீட்டில் பெற்றோரிடம் விசயத்தைக் கூறி மகிழ்ந்தான்...

"இப்பவாவது மருமகளை இங்கே கூட்டிட்டு வாயேன் சித்து..."

"இல்லைம்மா... வேண்டாம்... என்னைப் பிரிந்திருப்பது தான் அவளுக்கு நல்லது என்றால் அப்படியே இருக்கட்டும்... அவளும், குழந்தையும் நன்றாக இருந்தால் அதுவே எனக்குப் போதும்..." என்றதோடு அவன் முடித்துக் கொண்டான்...

ஆனால் தனிமையில் அத்தனை வேதனைப்பட்டான்... தாய்மை அடைந்தவளை தங்க தட்டில் வைத்து தாங்க வேண்டும் என்று அவன் நினைத்தது அனைத்தும் வீணாகி போனது... எல்லாவற்றையும் மாற்றி எழுதிய சித்தார்த்தனால் மனைவியவளின் மனதினை மாற்ற முடியவில்லை...

இடையில் சந்தியாவிற்கு ஆண் குழந்தை பிறந்தது... அவனுக்குக் கண்ணன் என்று பெயரிட்டனர்... அந்தச் சின்னக் கண்ணன் மாயக் கண்ணனாய் மாறி பிரகதீஸ்வரியின் மனக்காயத்திற்கு அரும் மருந்தாக இருந்தான்... அவன் இருந்ததால் பிரகதீஸ்வரி தனது கவலைகளை மறந்தாள்... கண்ணனை வளர்க்கும் பணியை அவளே பார்த்து கொண்டாள்... ஹரி, சந்தியா இதற்கு எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை...

நாட்கள் மெதுவே நகர்ந்தது... பிரகதீஸ்வரி சிப்பி வயிற்றில் அவள் பொக்கிசமாய்ப் போற்றிப் பாதுகாத்து வந்த அவளது முத்துவும் மெல்ல வளர்ந்தது... அது கை, கால்களை அசைக்கும் போது அதைக் கணவனிடம் கூற அவளது மனம் ஆசை கொள்ளும்... ஆனால் அவளால் அது முடியாதே... அதனால் உணர்வுகளைத் தனக்குள் போட்டு புதைத்து கொள்வாள்...

ஏழாவது மாதம் தொடங்கிய போது அவளுக்கு எந்தக் குறையும் இல்லாது வளைகாப்பு செய்தனர்... அதை அப்படியே புகைப்படமாக எடுத்துச் சித்தார்த்திற்கு அனுப்பி வைத்தான் ஹரி...

பட்டு புடவையில், கன்னங்களில் சந்தனம் பூசி சர்வ அலங்காரத்துடன் இருந்த மனைவியின் தாய்மை அழகு கண்டு சித்தார்த்தின் விழிகள் கலங்கியது... மேடிட்ட இருந்த அவளது வயிற்றைப் பார்க்கும் போது அவனுக்கு எந்தளவிற்குச் சந்தோசமாக இருந்ததோ... அதே அளவிற்குத் துக்கமாக இருந்தது... தான் அவளுடன் இருக்க முடியவில்லையே என்று...

அலைப்பேசி திரையில் தெரிந்த மனைவியின் முகத்தினை வருடி கொடுத்தவன் பின் அவளது மேடிட்ட வயிற்றினை மெல்ல வருடி கொடுத்தான்... அவளை நேரில் தொட்டது போல் ஒரு சிலிர்ப்பு அவனுள் எழுந்தது... தந்தையாகப் போகும் ஆணால் மட்டுமே உணர கூடிய சிலிர்ப்பு அது... அத்தனை பரவசமாக இருந்தது அவனுக்கு...

சித்தார்த்தை போல் அவனது மகவும் அதீத சுறுசுறுப்பு போலும்... சொன்ன தேதிக்கு முன்னரே வெளிவர துடித்தது... சாதாரண வலியாக இருக்கும் என்று எண்ணி பிரகதீஸ்வரியை பரிசோதித்த மருத்துவர்களுக்குப் பெருத்த ஆச்சிரியமாக இருந்தது... அது பிரசவ வலி என்று தெரிந்து...

அடுத்தச் சில மணி துளிகளில் சித்தார்த், பிரகதீஸ்வரியின் பெண் மகவு தனது தந்தை பிறந்த அதே தினத்தில் தானும்

அவதரித்தாள்... ஒருவேளை தாய் தனது தந்தையை மறக்காது இருப்பதற்குத் தானோ...

"அப்படியே நம்ம ரதி மாதிரியே இருக்கிறாள்..." என்று கூறிச் சந்தோசப்பட்டார் பானுமதி...

பிரகதீஸ்வரி குழந்தையைக் கண்டு மகிழ்ந்த போதும் உள்ளுக்குள் கணவனைக் காண வேண்டும் என்று ஏக்கமாக இருந்தது... ஆனால் எதையும் வெளிக்காட்டி கொள்ளாதவாறு ஒரு புன்னகையில் தனது வேதனையை மறைத்தாள்...

ஹரி குழந்தையின் புகைப்படத்தைச் சித்தார்த்திற்கு அனுப்பி வைத்தான்... மனைவிக்குப் பிரசவ நேரம் இப்போது இல்லை என்பதால் இந்நேரம் சித்தார்த் வெளிநாட்டில் இருந்தான்...

மகளைப் பார்த்த சித்தார்த் என்ன மாதிரி உணர்ந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை... கண்களில் நீர் திரள அலைப்பேசி திரையைப் பார்த்தான்... சந்தோசத்துடன் அதில் தெரிந்த மகளின் பிம்பத்தின் மீது தனது உதடுகளைக் குவித்து முத்தமிட்டான்... பின்பு மகளின் உருவத்தைப் பெரிதாக்கி பார்த்தவன் அப்படியே அதிர்ச்சியில் உறைந்தான்...

உதட்டின் இடது பக்கத்தின் மேல் பகுதியில் இருந்த அந்தப் பெரிய மச்சத்தைக் கண்டு அவன் அதிர்ந்து போனான்... அவனது உள்ளமும், உடலும் சந்தோசத்தில் நடுங்கியது... அந்நேரம் அவனது கண்களில் திரண்டு இருந்த கண்ணீர் துளிகள் அலைப்பேசி திரை மீது விழுந்தது... அப்போது அவனது உதடுகள் அந்த வார்த்தைகளை மெதுவே முணுமுணுத்தது...

"ஜிக்கி... நீ சொன்ன மாதிரி எனக்கு மகளாய் வந்து பிறந்திருக்கிறியா...?"

"அறியா வயதில் மனதில் மலர்ந்தவளே...
உனை என்னுயிராய் எண்ணினேன்...

எனை பாதியில் தவிக்க விட்டு சென்றாய்...
இல்லை இல்லை இதோ என் மகளாய்
என்னில் மலர்ந்திருக்கிறாய்...
கனவில் கண்ட தேவதையே...
என் செல்ல இளவரசியாய்
அவதரித்து இருக்கிறாய்...
அன்றும் இன்றும் என்றும்
நீ கனவு மட்டும் தானோ...?
கிட்டா கானல் நீர் தானோ...?
தவறிய காட்சிப்பிழை தானோ...?
என் கனவே! என்று என் கை சேர்வாயோ...?"

இரண்டாம் பாகம் முற்றும்...!!!!

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்,
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து,
ஓங்கு பெருஞ் செந்நெல் ஊடுகயல் உகள,
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப,
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோரெம்பாவாய்!"

மழலை மாறாத குரல் தான் என்ற போதிலும் ஜெகதீஸ்வரியின் குரல் கணீரென்று ஒலித்தது... அதே மார்கழி மாதம்... அதே குளிர் காலை பொழுது... பூஜையறையில் தனக்கு முன் அமர்ந்து கண் மூடி, கரம் கூப்பித் திருப்பாவையைப் பாடி கொண்டிருந்த மகளைக் கண்டு பிரகதீஸ்வரியின் மனம் பெருமையில் பூரித்தது...

அந்தக் கணம் மகளின் தந்தையைப் பற்றி அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை... எட்டு வருடங்களுக்கு முன் இதே போன்றதொரு மார்கழி மாத காலை பொழுதினில் தான் அவள் அவனைச் சந்தித்தாள்... அன்று முதன் முதலில் சந்தித்த போது துன்பத்தைக் கொடுத்தவன் அதன் பின் அவளுக்கு அளித்தது எல்லாம் இன்பம் மட்டுமே...

முன்பு எல்லாம் கணவனை நினைத்து தவிக்கும் அவளது மனது இப்போது எல்லாம் ஆழ்கடல் போல் அமைதியாகி போனது... பரஸ்பர புரிதலுடன் பிரிந்ததால் கூட இந்தத் தவிப்புக் குறைந்திருக்கலாம்... எத்தனை காதல் இருவரிடத்திலும்... அத்தனை காதலும் துளி குறையாது இப்போதும் இருவரது மனதில் இருக்கிறது... வெளியில்

யாரிடத்திலும் சொல்லாமல் அவளுக்கு மட்டும் இன்பம் தரும் இனிய நினைவுகளாய்...

அவனுடன் அவள் வாழ்ந்தது என்னவோ ஒரு மாதம் தான்... அந்த ஒரு மாத காலத்தில் ஓராயிரம் ஆண்டுகள் வாழ்ந்தது போல் அப்படி ஒரு திருப்தி, ஒரு நிறைவு அவளிடத்தில்... கணவனுடன் இருந்த ஒவ்வொரு கணமும் அவன் தன்னை மகாராணியாய் உணர செய்ததை நினைத்து அவளது விழிகள் கசிந்தது... உணர்வலைகளின் தாக்கத்தில் அவள் கண்களை இறுக மூடி கொண்டாள்...

அவனைப் பிரிந்த இந்த ஐந்து வருடங்களில் அவனது வளர்ச்சி அபாரமானது... இரண்டு முறை சிறந்த தொழிலதிபருக்கான விருது வாங்கி விட்டான்... இது எல்லாம் செவி வழி வந்த செய்தி... ஆனால் யாரும் இதுநாள் வரை அவனைப் பற்றி நேரிடையாய் அவளிடத்தில் ஒரு வார்த்தை பேசியது இல்லை...

தொழிலில் வெற்றி மீது வெற்றி பெற்றுக் கொண்டு செல்லும் கணவனை நினைத்து அவளுக்குச் சந்தோசம் தான்... ஆனால் அவனது வாழ்க்கை...??? ஆரம்பித்த இடத்தில் அப்படியே ஸ்தம்பித்து அல்லவா நிற்கிறது... ஒரு மனைவியாய் அவளது இதயம் கசிந்தது அவனுக்காக...

ஒருவேளை வேறு ஒரு பெண் அவனது வாழ்வில் வந்திருந்தால் அவனது வாழ்க்கை சிறப்பாக இருந்திருக்குமோ... தினமும் ஒரு முறையாவது அவளால் அப்படி நினைக்காமல் இருக்க முடியவில்லை... இதோ இந்த நொடி வரை அவன் வேறு எந்தப் பெண்ணையும் திரும்பி பாராது அவளுக்காக மட்டுமே தவ வாழ்க்கை வாழ்ந்து வருகிறான்... ஒரு ஆணால் இது எப்படிச் சாத்தியம்...? இந்த விசயத்தில் எப்போதும் கணவனை நினைத்து அவளுக்குப் பெருத்த ஆச்சிரியமாக இருக்கும்...

அவனது அழகிற்கு, அந்தஸ்திற்கு இப்போதும் அவனைச் சுற்றும் பெண்கள் இருக்கத் தான் செய்கிறார்கள்... ஆனால் அவர்களை எல்லாம் அவன் திரும்பி பார்ப்பானா என்று கேட்டால், இல்லை என்பது தான் உண்மையான பதில்...

அந்த ஒரு உணர்வு தானே அவளின் மனதினை எந்த ஒரு தவிப்பும் இல்லாது அமைதியாக வைத்திருக்கிறது... ஆனால் அவனுக்கு...? மீண்டும் கணவனிடத்தில் வந்து நின்ற நினைவுகளை அடக்க இயலாது மீண்டும் அவளது விழிகள் கசிந்தது...

"ம்மா..."

மகளது அழைப்பில் அவள் விழிகளைத் திறந்தாள்... அன்னை விழி திறந்ததும் சின்னச் சிட்டு தனது முகத்தை அன்னை முகத்தோடு உரசி தனது நெற்றியில் இருந்த திருநீறை அன்னையின் நெற்றியின் மீது பூசி விட்டது... தான் கணவனுக்குச் செய்யும் அதே அன்பான செயல்... மீண்டும் விழி நிறைந்தது அவளுக்கு...

"ஐ லவ் யூம்மா..." என்று கூறியபடி பிரகதீஸ்வரியின் கன்னத்தில் முத்தமிட்டாள் ஜெகதீஸ்வரி...

"மீ டூடா ஜிக்கி..." மகளின் கொழுகொழு கன்னத்தில் முத்தமிட்டு சின்னவளை அணைத்து கொண்டாள் பெரியவள்...

"ம்மா... கண்ணனுக்குக் குட்மார்னிங் சொல்லிட்டு, ஸ்வேதா அத்தையோட பேபிக்கும் குட்மார்னிங் சொல்லிட்டு வந்திர்றேன்..."

"இவ்வளவு காலை நேரத்திலா...?" என்று பிரகதீஸ்வரி தடுக்கும் முன் சிட்டாகப் பறந்து விட்டது அந்தச் சின்னச் சிட்டு...

நேரே கண்ணனது அறைக்குச் சென்று உறங்கி கொண்டிருந்தவனை எழுப்பினாள்... அவனுக்கும் அவளுக்கும் சில மாதங்களே வித்தியாசம்...

"கண்ணா... எழுந்திரு..."

"ஜிக்கி..." என்று கண்ணைக் கசக்கியபடி அவன் எழுந்தான்...

"குட்மார்னிங்..." நெற்றியில் பிஞ்சு கை வைத்து வணக்கம் சொன்னவளை கண்டு அவனது புன்னகை மலர்ந்தது...

"குட்மார்னிங்..."

"கண்ணா... வா, வா... நாம போய்ப் பேபிக்குக் குட்மார்னிங் சொல்லிட்டு வரலாம்..."

அவள் கூறியதும் தான் தாமதம் கண்ணன் சுறுசுறுப்பாய் எழுந்து அவளுடன் அறையை விட்டு வெளியில் வந்தான்...

"பால் குடிச்சிட்டு போங்க..." சந்தியா கூறியதை கவனத்தில் கொள்ளாது இருவரும் வெளியில் ஓடி விட்டனர்...

அந்த அடுக்கு மாடி குடியிருப்பில் இவர்களது எதிர் வீட்டில் தான் சரவணன், ஸ்வேதா குடியிருந்தனர்... அவர்களுக்கு இது சொந்த வீடு... பிரகதீஸ்வரி, சந்தியா வாடகைக்கு வந்திருக்கின்றனர்... இப்போது பிரகதீஸ்வரிக்குச் சென்னை மாற்றல் கிடைத்ததால் இங்கு வந்திருந்தனர்... அவளுக்கான அலுவலகக் குடியிருப்பு கிடைக்கும் வரை இங்கே தான் வாசம்...

இப்போது ஹரிப்ரசாத் தமிழ்நாட்டில் தான் வேலை செய்கிறான்... அதனால் அவன் விடுமுறை கிடைக்கும் போது எல்லாம் வீட்டிற்கு வந்துவிடுவான்... தனது குடும்பத்தைத் தனியே அவனுடன் அழைத்துச் செல்லாது எல்லோருடனும் இருக்கச் செய்து விட்டான்... சந்தியாவும் அதைத் தான் விரும்பினாள்... அவர்களது வாழ்க்கை எப்போதும் போல் மகிழ்ச்சியாகச் சென்றது...

மருமக்களின் வரவிற்காகத் தனது வீட்டின் கதவை திறந்தே வைத்திருந்தான் சரவணன்... அதனால் கதவை தட்டாது உள்ளே நுழைந்த சிறியவர்கள் நேரே அறைக்குச் சென்று அத்தை முன் வந்து நின்றனர்... அப்போது தான் ஸ்வேதா எழுந்திருந்தாள்...

"குட்மார்னிங் பேபி..."

சிறியவர்கள் இருவரும் ஒன்று போல் கூறியபடி ஸ்வேதாவின் வயிற்றில் முத்தமிட்டனர்... ஆம், இப்போது ஸ்வேதா கர்ப்பமாக இருக்கிறாள்... ஏழாவது மாதம் பிறந்திருக்கிறது... நல்ல நாள் பார்த்து வளைகாப்பு நடத்த வேண்டும் என்று நினைத்து இருக்கின்றனர்...

நாத்தனார் இருவரின் பிள்ளைகளையும் அணைத்து அவர்களது கன்னத்தில் முத்தமிட்ட ஸ்வேதா அவர்களிடம்,

"பேபி என்ன சொல்லுது...?" என்று ரகசியமாக வினவினாள்...

"எங்க கூட விளையாடணும்ன்னு சொல்லுது..." இருவரும் கிளுக்கி சிரித்தனர்...

"இன்னும் மூன்றே மாதம் தான்... அதுக்கு அப்புறம் உங்க கூட விளையாட வந்துரும்..."

"என்னை மாதிரி கேர்ள் பேபி தானே அத்தை..."

"இல்லை... இது ஃபாய் பேபி தானே அத்தை..."

கண்ணனும், ஜெகதீஸ்வரியும் போட்டி போட்டுக் கொண்டு கேட்ட போது அங்கே கைகளில் கோப்பைகள் அடங்கிய தட்டுடன் வந்த சரவணன்,

"இரண்டும் வந்தால் எனக்கு ரொம்பச் சந்தோசம் தான்... ஆனால் என்ன செய்ய...? உங்கத்தை இந்தச் சப்ஜெக்ட்டில் கொஞ்சம் வீக்... அதனால் இரண்டில் ஒரு பேபி தான்... எதுவாக இருந்தாலும் சந்தோசம் தான்..."

அவனை முறைத்து பார்த்த ஸ்வேதாவை அவன் காதல் பார்வையால் குளிர்வித்துக் கொண்டிருந்தான்... இப்போது இவர்கள் இருவரும் சென்னைவாசிகளாகி விட்டனர்... சரவணன் தனது தொழிலில் ஓரளவிற்குப் பெயர் சொல்லும்படி வளர்ந்து விட்டான்... அது போல் ஸ்வேதாவும்...

அவ்வப்போது ஸ்வேதா தயாரிக்கும் உடைகளுக்கு மட்டும் மாடலிங் செய்வான்... அப்போது ஸ்வேதா அவனைத்

தனியே தான் மாடலிங் செய்ய அனுமதிப்பாள்... அப்படி ஜோடி வேண்டும் என்கிற பட்சத்தில் அவளே அவனுக்கு ஜோடியாக மாறுவாளே தவிர வேறு யாரையும் அவன் அருகில் விட மாட்டாள்... அந்தளவிற்கு அவன் மீது அவளுக்குப் 'பொசசிவ்னஸ்' அதிகம்... அது அவனுக்குப் புரியத்தான் செய்தது... அதுவே பெருமையாகவும் இருந்தது... ஆனாலும் வெளியில் வேண்டுமென்றே அலுத்து கொள்வான்...

"ரியல்ல தான் ராட்சசி கிட்ட மாட்டிக்கிட்டேன்... ரீல்லயாவது ஒரு நல்ல ஃபிகர் கிடைக்கும்ன்னு பார்த்தால் அங்கேயும் இந்த ராட்சசி வந்து உயிரை எடுக்கிறாளே..." என்று புலம்புவான்...

"உனக்கு ரியல், ரீல் ஜோடி எல்லாம் இந்த ஸ்வேதா மட்டும் தான்டா..." என்று அலட்சியம் போல் அவள் கூறினாலும் அவளின் மனதின் காதலை சொல்லும் அந்த வார்த்தைகள் அவனுக்கு ரொம்பப் பிடிக்கும்... அதற்காகவே அவளை வேண்டும் என்றே சீண்டுவான்... இதோ இப்போதும் கூட அப்படியே...

"ஓ..." சிறியவர்கள் முகம் சுருங்கி போய் விட்டது...

"எதுவாக இருந்தாலும் உங்க ரெண்டு பேர் கூடவும் பேபி விளையாட வரும்..." என்ற மாமனது வார்த்தையில் சின்னவர்கள் முகம் மலர்ந்தது...

கையிலிருந்த தட்டில் இருந்த பால் கோப்பைகளைச் சின்னவர்கள் மற்றும் மனைவிக்குக் கொடுத்து விட்டு தானும் ஒன்றை எடுத்தான்...

"அம்மா பால் குடிக்கச் சொன்னாங்க..."

"பெரியம்மாவும் பால் கொடுப்பாங்களே..."

இருவரும் மாமனது முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தனர்...

"அதெல்லாம் நான் சொல்லிக்கிறேன்... நீங்க இதைக் குடிங்க..."

சிறியவர்கள் சிறிது நேரம் இருந்து விட்டு பள்ளி செல்வதற்காகக் கிளம்பி சென்று விட்டனர்... ஸ்வேதா எழுந்து சமையலறைக்கு வந்தாள்... அது இருந்த நிலை கண்டு அவளது கோபம் கண்டபடி எகிறியது...

"சரவணா..." மனைவி அலறியதில் உடனே அவன் அங்கு வந்து ஆஜரானான்...

"என்ன ஸ்வீட்டி...?" அறியா பிள்ளை போல் முகத்தை வைத்துக் கொண்டு கேட்ட சரவணனை கண்டு அவளது முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது...

"என்ன பண்ணி வச்சியிருக்க...?" அடுப்பை சுட்டி காட்டினாள்...

"அது வந்து ஸ்வீட்டி... பால் பொங்குறதுக்குள்ள நான் ஃப்ரெஷ் பண்ணிட்டு வரலாம்ன்னு போனேனா... அதுக்குள்ள பால் பொங்கிருச்சு..." என்று அசடு வழிந்தவனைக் கண்டு,

"ஒரு வேலை உருப்படியா செய்யத் துப்பில்லை... இதில் உனக்கு வாய் வேற... நான் உன் கிட்ட கேட்டேனா...? எனக்குப் பால் காய்ச்சி கொடுன்னு... பாரு, எல்லாத்தையும் சுத்தம் பண்ணிட்டு நான் ஆபிஸ் கிளம்பணும்..."

"ஐயோ பாவமேன்னு வேலை செஞ்சா நீ இப்படித் தான் பேசுவியா...? போடி உன் வேலையைப் பார்த்துக்கிட்டு... இனி நான் கிச்சன் பக்கம் எட்டி பார்த்தா நீ என்னைய என்னன்னு கேளு..." என்று பதிலுக்கு அவனும் அவளைத் திட்டி விட்டு சென்று விட்டான்...

ஸ்வேதா பதிலுக்குக் கத்தி பேசாவிட்டாலும் அவளது வாய் கோபமாய் எதையோ முணுமுணுத்தது... சிறிது நேரம் கழித்துச் சமையலறை வாயிலில் நிழலாடியது... அவளது கணவன் தான்... வேறு யார் வருவார்கள்... மேடிட்ட வயிற்றுடன் கஷ்டப்பட்டுச் சுத்தம் செய்து கொண்டிருந்த மனைவியைக் கண்டு மனம் வருந்தியவனாய் சரவணன்

அவள் அருகில் சென்று பின்னால் இருந்து அவளை அணைத்தான்...

"சாரிடி ஸ்வீட்டி..."

"உன் சாரியை கொண்டு குப்பையில் தூக்கி போடு..." என்றாள் அவள் காட்டமாய்...

"வேலை செய்றவங்க வருவாங்க தானே... இப்போ நீ எதுக்கு இதைக் கஷ்டப்பட்டுச் செய்ற...?"

"அதுவரைக்கும் அடுப்பு நாறிக்கிட்டு கிடக்கணுமா...?"

ஸ்வேதா எப்போதும் எதிலும் சுத்தம் பார்ப்பவள்... அவனோ அதற்கு நேர் எதிர்ப்பதம்... அவன் என்றில்லை முக்கால்வாசி ஆண்கள் அவனைப் போல் தான்...

"சரி சரி நான் செஞ்சது தப்பு தான்... இனி நான் இப்படிப் பண்ண மாட்டேன்டி... நீ கஷ்டப்படுறதை பார்க்கும் போது எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு ஸ்வீட்டி..."

கணவனது வார்த்தைகளில் வழிந்த காதல், வருத்தம் கண்டு ஸ்வேதா தனது கோபம் மறைந்து அவனோடு இழைந்து நின்றாள்...

"நீ பண்றது எல்லாமே தப்பு தான்டா... ஆனாலும் உன்னைத் தான் எனக்கு ரொம்பப் பிடிச்சியிருக்கு..."

"ஹா ஹா..." என்று அவன் வாய் விட்டுச் சிரித்தான் மனைவியின் காதல் வார்த்தைகளில்...

"நான் பண்ணிய தவறுகளில் அழகிய தவறு இது தான் ஸ்வீட்டி..." குனிந்து அவளது வயிற்றில் முத்தமிட்ட அவனது சிகையைக் காதலோடு கலைத்து விட்டாள் ஸ்வேதா...

அவர்களது வாழ்வு இப்படித் தான் ஒரு நாள் ஊடலில் ஆரம்பித்துச் சீண்டி பின்பு கூடலில் ஒன்றிணைந்தது... அவர்களது வாழ்க்கையில் இது போல் ஊடலும், கூடலும் சகஜம்...

"கண்ணா, ஜிக்கி ரெண்டு பேரும் சாப்பிட வாங்க..." பிரகதீஸ்வரி அறையை நோக்கி குரல் கொடுக்க...

இருவரும் பள்ளி சீருடையுடன் ஓடி வந்தனர்... அவர்கள் உணவு மேசையில் அமர்ந்ததும் பிரகதீஸ்வரி உணவை பரிமாறினாள்...

"அம்மா நீங்களும் சாப்பிடுங்க..."

அன்னையைப் பக்கத்து நாற்காலியில் அமர்த்தி அவளுக்குத் தட்டு வைத்து உணவை வைத்த மகளின் பாசத்தில் அவளது தந்தையைக் கண்டாள் பிரகதீஸ்வரி... அவனும் அப்படித் தானே அவளை நன்கு அக்கறையாய் கவனித்துக் கொள்வான்... கணவனது அக்கறையை மகளிடத்தில் பார்த்தவளின் விழிகள் கலங்கியது...

கணவன் தனது ஒட்டுமொத்த அன்பையும் மகளிடத்தில் ஊற்றி அவளுக்கான பரிசாய் கொடுத்து விட்டானோ...!

ஜெகதீஸ்வரி உருவம் தான் அவளைப் போல்... ஆனால் செயல்கள் எல்லாம் அவனைப் போல்... அந்தக் கணம் அவளுக்கு அது தோன்றும்... கணவன் பாலகனாகத் தன்னிடம் வந்திருந்தால் அவனது கருத்தினை மாற்றியமைத்து ஒரு மனிதனாக வளர்த்து இருப்போமோ என்று... எந்தப் புள்ளியில் அவன் இப்படி மாறிப் போனான்... அது அவளுக்கு விளங்கவில்லை...

கணவனை நினைத்ததும் அவளுக்குப் புரையேறியதில் மகள் அன்னைக்கு அன்னையாய் மாறி அவளது தலையில் தட்டி அருந்த தண்ணீர் கொடுத்தாள்... மகளின் தாயன்பு கண்டு மீண்டும் மனம் கவர்ந்தவனின் ஞாபகம் அவளுள்...

"பாட்டி..." ஜெகதீஸ்வரி திடுமென அலறியதில் பானுமதி, சோலையம்மாள் இருவரும் அங்கு விரைந்து வந்தனர்...

"பானு பாட்டி உங்களை இல்லை... சோலை பாட்டி, சட்னியில் ஏன் இவ்வளவு காரம் போட்டு இருக்கீங்க...? பாவம் அம்மா... அவங்களுக்குக் காரம் சாப்பிட்டதில் புரையேறியிருச்சு பாருங்க..."

"சரி கண்ணு... இனி பார்த்து செய்கிறேன்..." என்று பணிவுடன் சோலையம்மாள் சொல்ல...

"குட் பாட்டி..." என்று லேசாகத் தலை சாய்த்து, புருவம் தூக்கி கெத்தாய் மெச்சிய மகளின் செயலில் மன்னவனின் சாயல் அப்பட்டமாய்...

தனக்காவது ஆறுதலுக்கு மகள் இருக்கிறாள்... ஆனால் கணவனுக்கு...??? அவளது மனம் பாரமானது அவனை நினைத்து...

மகளைப் பள்ளிக்கு அனுப்பி வைத்து விட்டு பிரகதீஸ்வரி தனது அலுவலகத்திற்குக் கிளம்பினாள்... அவள் சென்னைக்கு வந்து ஒரு வார காலமாகி விட்டது... அதிலும் இன்று நகரத்தில் உள்ள எல்லாத் தொழிலதிபர்களையும் தனியே சந்திப்பதற்கான கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தாள்... ஆம், இப்போது பிரகதீஸ்வரி சென்னை மாவட்ட ஆட்சியர்...

இன்று கணவன் கட்டாயம் அந்தக் கூட்டத்திற்கு வருவான் என்கிற நினைவில் தான் அவளுக்குக் காலையில் இருந்து அவனின் ஞாபகமாகவே இருக்கிறதோ...?

'இல்லைன்னாலும் நீ அவனை நினைக்காம தான் இருக்கியா...?' என்று அவளது மனசாட்சி அவளைக் கேலி செய்தது... உண்மை தானே அவள் சுவாசிக்கும் காற்றே அவன் தானே...

****

அதே நேரம் சித்தார்த் தனது அலுவலக அறையில் அமர்ந்திருந்தான்... அவனது செயலாளர் அங்குப் பரபரப்பாக வந்தான்...

"சார்... டென் ஓ க்ளாக் கலெக்டரை பார்க்க போகணும்..."

"போகலாம்... போகலாம்..." என்று அலட்சியமாகச் சொன்ன சித்தார்த் அவனுக்கு வேறு வேலை கொடுத்து அனுப்பி வைத்தான்...

பின்பு நாற்காலியில் சாய்ந்தமர்ந்தவன் மனதில் தன்னவளின் நினைவுகள்... இந்த ஐந்து வருடங்களில் எத்தனையோ மாறி போய் விட்டது... ஆனால் அவனது காதல் மட்டும் நிறம் மாறாது அப்படியே இருக்கிறது... அவள் சென்னைக்கு வந்தது அவனுக்குத் தெரியும்... ஆனால் இன்று தான் அவளைச் சந்திக்க இருக்கிறான்...

வெகு வருடங்களுக்குப் பிறகு இன்று தான் மனைவியை நேரில் பார்க்க இருக்கிறான்... இப்படிக் கூட்டத்தோடு சென்று கோவிந்தா போடுவது அவனுக்குப் பிடிக்கவில்லை... அவளைத் தனியே சந்திக்க வேண்டும்... அவளுடன் பேசுகிறானோ இல்லையோ அவளை ஆசை தீர பார்த்து ரசிக்க வேண்டும்... அதற்கு இந்தக் கும்பலோடு போய் உட்கார்ந்தால் முடியுமா...? அதனால் முடிந்தவரை நேரத்தை கடத்தினான்...

சரியாகக் கூட்டம் முடியும் நேரத்தை கணித்து அங்குக் கிளம்பினான் சித்தார்த்... அவன் சென்ற போது அங்கு யாரும் இல்லை... அதனால் அவன் மகிழ்ச்சியுடன் அவளைச் சந்திக்க அனுமதி கேட்டான்...

வந்திருப்பது கணவன் என்று தெரிந்தும், அவனைக் காணும் ஆவல் மனதில் மலையளவு இருந்த போதும் நேரம் கடந்து வந்திருந்தவனைச் சந்திக்கப் பிரகதீஸ்வரி ஆர்வம் காட்டவில்லை... பிறகு சந்திக்கலாம் என்று பதில் கூறி அனுப்பினாள்...

அவள் கூறியதை அங்குப் பணி புரியும் கடைநிலை ஊழியன் அப்படியே வந்து அவனிடத்தில் சொன்னான்... சொல் பேச்சு கேட்பது தான் சித்தார்த் அகராதியில் கிடையாதே... அவன் அனுமதி வேண்டி நின்றதே அவளுக்காகத் தான்... இல்லை என்றால் அவனுக்கு அனுமதி அளிக்காதிருக்க அனுமதிக்கே அனுமதி இல்லை... அடுத்த நொடி வேகமாய் அவளது அறை கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்...

"ஏன் வருடா வருடம் குழந்தைகளின் இறப்பு கூடி கொண்டே போகிறது... அதுவும் குறிப்பிட்ட வயது குழந்தைகள்..."

பிரகதீஸ்வரி தனது செயலாளரிடம் வினவி கொண்டிருக்கும் போது சித்தார்த் புயல் போல் உள்ளே நுழைந்தான்... அவனது வருகையைக் கண்டு அவளது மனம் மகிழ்ந்தாலும் வெளியில் முகத்தை இறுக்கமாய் வைத்துக் கொண்டு,

"இப்போ உங்களுக்கு நான் அப்பாயிண்ட்மென்ட் கொடுக்கலையே..." என்று கேட்டாள் மிடுக்காய்...

மனைவியின் பேச்சை ரசித்தபடி அவள் அனுமதி கொடுக்கும் முன் அங்கிருந்த நாற்காலியில் கால் மேல் கால் போட்டு அமர்ந்த சித்தார்த் அந்தச் செயலாளரை ஒரு பார்வை பார்த்தான்... அதில் அவன் அரண்டு போய் வெளியில் ஓடி விட்டான்... அவனுக்குச் சித்தார்த்தை பற்றி நன்கு தெரியும்...

பிரகதீஸ்வரி பேசும் முன் அவன் சென்றுவிட இப்போது சித்தார்த்தின் பார்வை மனைவி மீது திரும்பியது... நிதானமாய் ஆளை கொல்லும் ரசனையான பார்வையாக அவனது பார்வை இருந்தது... கணவனது பார்வையில் அவள் லஜ்ஜையுற்ற போதும் அவனை நிமிர்ந்து பார்க்க தான் செய்தாள்... மனைவியாய் அவள் மனமுருகிய போதும் பதவி அவளது எண்ண ஓட்டத்தைத் தடை செய்தது...

எப்போதும் போல் கணவனது தோற்றம் அவளைக் கவர தான் செய்தது... வயது ஏற ஏற இன்னும் அழகாகி இருந்தான் சித்தார்த்... அது போல் தான் அவனும் மனைவியைப் பற்றி எண்ணினான்...

'சும்மாவே ஆளை அசத்துவாள்... இப்போ இன்னும் அழகாயிருந்து என்னை ஒரேடியா கொல்லுறாளே மை ஸ்வீட் பேபி...' மனதிற்குள் மயக்கமாய் முனங்கினான்...

அவன் தனது கையிலிருந்த பூங்கொத்தை அவளிடம் நீட்டினான்... வேறுவழியின்றி அதை வாங்கியவளின் விழிகள் அதிலிருந்த சிவப்பு வண்ண ரோஜாக்களைக் கண்டு கலங்கியது... அன்று அவன் தோட்டத்தில் இருந்து

பறித்துக் கொடுத்த ஒற்றைச் சிவப்பு ரோஜாப்பூ அவளது மனக்கண்ணில் நிழலாடியது... அது மட்டுமா...? அவளது தலையில் சூடியிருந்த அந்தப் பூவை அவன் வருடிய போது அவனது கை விரல் அவளது காது மடலை தீண்டிய மெல்லிய ஸ்பரிசமும் சேர்ந்து நினைவில் நின்று அவளை வதைத்தது...

அவளது முகத்திலிருந்து அவளது மனவோட்டத்தை அறிந்தவனாய் சித்தார்த் வேறு பேச்சு பேச எண்ணினான்...

"சோ... நம்ம இரண்டு பேருக்கும் இடையில் பரமபத விளையாட்டு ஆரம்பமாகப் போகிறது..."

அவன் நினைத்தது போல் அவள் தனது உணர்வுகளைச் சடுதியில் மறைத்துக் கொண்டு நிமிர்ந்து அவனை அசராது பார்த்தவள்,

"அப்படி ஒரு விளையாட்டு விளையாடணும்ன்னு விதி இருந்தால் விளையாடி தான் ஆகவேண்டும்..." அமர்த்தலாகப் பதில் கூறியவளை அவன் மனதிற்குள் மெச்சி கொண்டான்...

"உங்களுக்குக் கொடுத்த நேரம் முடிந்தது... எனக்கு வேறு வேலைகள் இருக்கிறது..." என்று கூறியபடி அவள் நாற்காலியில் இருந்து எழுந்தாள்...

"நீ எனக்கு நேரம் கொடுக்கவில்லை... நானாக உன் நேரத்தை எடுத்து கொண்டேன்..." என்று கூறியபடி அசையாது அவன் அமர்ந்திருக்க...

அதைக் கண்டு அவள் செய்வதறியாது உதடு கடித்தாள்... அவளது நிலை உணர்ந்தவனாய் மேலும் அவளைக் கஷ்டப்படுத்த விரும்பாது நாற்காலியில் இருந்து எழுந்தவன்,

"வெளியில் போன்னு சொல்லாமல் சொல்கிறாயா...?"

"நான் அப்படிச் சொல்லலை... உங்களுக்குக் கொடுத்த நேரம் முடிந்ததுன்னு தான் சொன்னேன்... உங்களுக்கு

ஒதுக்கிய நேரத்தில் நீங்க வந்திருக்கணும்..."

"எல்லோரும் நானும் ஒண்ணா...?"

கணவனது நிதானமான கேள்வியில் அவளது மனம் தடுமாறியது... இருந்தாலும் அவள் சமாளித்துக் கொண்டாள்...

"எல்லோரும் தொழிலதிபர்கள்... நீங்களும் அது போல் தான்... இதில் என்ன வித்தியாசம் இருக்கிறது...?"

"அவ்வளவே தானா...?" அவனும் அசராது கேள்வி கேட்டான்...

"ஒரு கலெக்டரா, தொழிலதிபரா நம்மிடையே அவ்வளவு தான் உறவு..."

"ஒரு பெண்ணாய்..." என்று கிடுக்கிப்பிடி போட்ட கணவனை ஏறிட்டு பார்த்தவள்,

"இங்கு நான் கலெக்டர் மட்டுமே..."

"ம்ஹூம்... அப்படியா... இன்னும் ஒரு வாரத்தில் ஸ்வேதாவுக்கு வளைகாப்பு விழா வருகிறது... அப்போ நான் உன் வீட்டில் உன் கணவனா உன்னை வந்து சந்திக்கிறேன்..."

சித்தார்த் 'கணவன்' என்ற வார்த்தையில் கொடுத்த அழுத்தத்தைக் கண்டு அவளுள் ஏதோ ஒரு உணர்வு சிலீரென்று பரவியது...

"வரட்டுமா கலெக்டர் மேடம்..." என்று கூறி வசீகரப் புன்னகையுடன் விடை பெற்று சென்றவனைக் கண்டு அவள் பார்த்தபடி அப்படியே நின்றிருந்தாள் தன் நிலை மறந்து...

அவன் ஏன் வந்தான்...? எதற்கு வந்தான்...? என்று தெரியாது அவள் விழித்தாள்...

****

அந்தப் பள்ளியில் அன்று விளையாட்டு தினம் அனுசரிக்கப்பட்டது... அதற்குத் தலைமை தாங்க சித்தார்த்தை அழைத்திருந்தனர்... பொதுவாக இது போன்ற நிகழ்ச்சிகளைத் தவிர்த்து விடும் சித்தார்த் அங்குப் படிக்கும் மகளைக் காண்பதற்காக வேண்டியே அங்கு விருப்பமாய்ச் சென்றிருந்தான்... நிழல் உருவாய் பார்த்து ரசித்தவளை நிஜத்தில் காண ஆவல் கொண்டு அந்த விழாவிற்குச் செல்ல சம்மதித்து இருந்தான்...

மேடையில் நடுநாயகமாய்க் கம்பீரமாக அமர்ந்திருந்தவனின் விழிகள் அங்குக் கூடியிருந்த ஆயிரக்கணக்கான பிள்ளைகளில் தனது மகளைத் தேடி தேடி சலித்துப் போனது... ஆனாலும் அவன் மனம் சளைக்காது தேடினான்... அந்தக் கணம் அவனது மகள் ஜெகதீஸ்வரி மேடையில் தோன்றி கடவுள் வாழ்த்து பாடி அந்த விழாவை மங்களகரமாய்த் தொடங்கி வைத்தாள்... ஐந்து வயதில் அவளது குரல் அவ்வளவு அருமையாக, இனிமையாக ஒலித்தது... அதில் அங்குக் கனத்த அமைதி நிலவியது...

சித்தார்த் தனது மகள் பாடுவதைப் பெருமையாகப் பார்த்திருந்தான்... மனைவியின் வளர்ப்பு நிச்சயம் சோடை போகாது என்று அவனுக்கு நன்கு தெரியும்... அதிலும் தனது 'ஜிக்கி'யின் மறு பிரதிபலிப்பாய் இருந்த மகளைக் கலங்கிய விழிகளுடன் அவன் பார்த்துக் கொண்டிருந்தான்...

பாடி முடித்து மேடையை விட்டு இறங்கி செல்ல முனைந்த மகளை அவன் அருகே வருமாறு அழைத்தான்... அவன் அழைத்ததும் தலைமை ஆசிரியரே அவளை அழைத்து வந்து அவன் முன் நிறுத்தினார்...

மகளை வாஞ்சையுடன் பார்த்த சித்தார்த் அவளது கன்னத்தைப் பாசத்துடன் வருடியபடி, "ரொம்ப நல்லா பாடின..." என்க...

"தேங்க்ஸ் அங்கிள்..." என்று புன்னகையுடன் கூறிய மகளின் வார்த்தையில் அவனது நெஞ்சில் பெரும்

பிரளயமே வெடித்தது...!!!

"தந்தை நானிருந்தும்
இறந்து போனவனானேன்...
பிள்ளை நீயிருந்தும் காணாத
கொடும்பாவியானேன்...
'அப்பா' என்ற ஒற்றைச் சொல்லில்
என் உலகம் சுழலுமடி...
'அங்கிள்' என்ற ஒற்றை
வார்த்தையில் என்னாவி துடிக்குதடி...
என்னை அறிமுகம் செய்ய
உன் தாய் மறுப்பதேனோ,
என்னை மறைப்பதேனோ...
நீயும் கனவாய் ஆனதேனோ...
உன் தாய் போல் நீயும்
என் கனவில் நனவாய் நீ...!!!"

நனவாகும்...!!!

மகளின் 'அங்கிள்' என்ற விளிப்பில் மரணித்துப் போனவனாய் அமர்ந்திருந்த சித்தார்த் மனதில் தன்னவளின் மதி முகம் தோன்றியது... அவளா அப்படிச் செய்யக் கூடியவள்...? ம்ஹூம், இல்லவே இல்லை... மனைவியவளின் காதலில் அவன் மீண்டும் உயிர்த்து எழுந்தான்... நிச்சயம் மனைவி மீது அவனுக்கு நம்பிக்கை இருக்கிறது... அவனை உயிராய் நினைத்து வாழ்பவள் அவனை மகளுக்குத் தந்தையாய் அடையாளம் காட்டிட தவறியிருக்க மாட்டாள்...

எங்கோ தவறு நடந்திருக்கிறது... அது எங்கே என்று அவனுக்குப் புரியவில்லை... எந்த நிலையிலும் மனைவியின் காதலை அவனால் சந்தேகிக்க முடியவில்லை... அப்படிச் சந்தேகப்பட்டால் அதற்குப் பெயர் காதலும் இல்லை... அன்பு என்றாலே களங்கம் இல்லாதது... அப்படிப்பட்ட அன்பில் களங்கத்தை அவன் ஒரு போதும் கலக்க நினைக்கவில்லை...

மனதினை தேற்றிக் கொண்டு மகளைப் பார்த்து புன்னகைத்தவன், "ஸ்வீட் ஜிக்கி..." என்றான் அவளது கன்னம் தட்டி...

"என்னோட பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்...?"

"எப்படியோ தெரியும்..."

சித்தார்த் இரு தோள்களையும் குலுக்கி, புருவத்தை உயர்த்தியபடி செய்த பாவனைப் போல் ஜெகதீஸ்வரியும் அப்படியே அட்சரம் பிசகாது செய்தாள்... அதைக் கண்டு அவனது புன்னகை மேலும் விரிந்தது... அவனைப் போல் அவனது மகள்... அவனுக்கு மிகவும் பெருமையாக இருந்தது...

"ஜெகதீஸ்வரி... நீ போம்மா..." என்று தலைமை ஆசிரியர் அவளை விளையாட்டு போட்டிக்கு அனுப்பி வைத்தார்...

வெளியில் அமைதியாகக் காட்டி கொண்டாலும் சித்தார்த்தின் மனம் பரபரப்பாக இருந்தது... தான் யார் என்று மகளிடம் தன்னை அடையாளம் காட்ட சொன்னது... ஆனாலும் அதையும் மீறி அவனிடத்தில் சிறு வீம்பு பிறந்தது...

'பேபி... ஒரு தாய் தான் குழந்தைக்கு அப்பாவை அடையாளம் காட்டணும்... அது போல் நீ தான் என்னை நம் மகளுக்கு அடையாளம் காட்டணும்... உன் வீட்டில் நீயும், நானும் சந்திக்கும் போது நீ என்ன செய்யப் போகின்றாய், என்னை எப்படி நம் மகளுக்கு அடையாளம் காட்ட போகின்றாய் என்று நானும் பார்க்க தானே போகிறேன்...' என்று மனதில் வீம்புடன் நினைத்துக் கொண்டான்...

என்ன தான் மனதினை சமாதானப்படுத்திய போதும் அவனால் தாங்க முடியவில்லை... இத்தனை வருட வாழ்வில் அவன் இழந்த வலி முழுவதும் ஒட்டுமொத்தமாய் அவனை ஆக்கிரமித்தது... அவன் மனம் துடித்துப் போனான்... தனது நினைவில் உழன்றவனுக்கு நிகழ்காலம் சற்றும் உரைக்கவில்லை...

அந்நேரம் தலைமை ஆசிரியர் அவனைப் பரிசு பொருட்கள் கொடுப்பதற்காக அழைத்தார்... 'அதற்குள் போட்டிகள் முடிந்து விட்டதா...?' மனதில் தன்னை நினைத்து வெட்கியவனாய் நிகழ்காலத்திற்கு அவன் திரும்பினான்...

வரிசையாகப் பிள்ளைகளுக்குப் பரிசுகள் கொடுத்துக் கொண்டிருந்த போது அந்த வார்த்தைகள் அவனது காதில் தேனாகப் பாய்ந்தது...

"ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கான ஓட்ட பந்தயத்தில் முதலிடம் யூகேஜி ஏ செக்சனை சேர்ந்த ஜெகதீஸ்வரி சித்தார்த்..."

அந்த ஒற்றை வார்த்தையில் சித்தார்த் உயிர்த்து எழுந்தான்... தன் இரத்தத்திற்கு, தனது வாரிசுக்கு தான் தான் தந்தை என்று அறியப்படுவது அவ்வளவு மகிழ்ச்சியான விசயம் அல்லவா... மகளுக்குப் பரிசு

கொடுத்தவன் அவளைக் கண்ணீர் மல்க அணைத்துக் கொண்டான்...

மகளின் மென்மையான ஸ்பரிசம் அந்த முரட்டு தந்தையின் மனதில் பலவிதமான வர்ணஜாலங்களை அள்ளி வீசியது... பின் அவன் மகளது நெற்றியில் முத்தமிட்டு விலகினான்... நன்றி கூறிவிட்டுச் செல்லும் மகளைக் கண்டு அவனது மனம் கனத்துப் போனது... தான் தான் அவளது தந்தை என்று அறியும் போது 'அன்று ஏன் என்னிடம் சொல்லவில்லை...?' என்று அவள் தன்னிடம் சண்டையிடுவாளோ என்று அவனுக்கு அத்தனை வருத்தமாக இருந்தது...

இத்தனை நாளாய் மனைவி பற்றி மட்டுமே நினைத்தவனுக்கு இப்போது மகளின் மனநிலை பற்றிப் பெருத்த கவலையாக இருந்தது...

விழா முடிந்து காரிலேறிய சித்தார்த்திற்குத் தனிமை தேவைப்பட்டது... அதனால் நேரே வீட்டிற்குச் சென்று விட்டான்...

"என்ன சித்து இந்த நேரத்தில்...?" என்று கேட்ட அன்னையிடம்,

"ஃபைல் எடுக்க வந்தேன்ம்மா..." என்று கூறிவிட்டு தனது அறைக்குச் சென்றான்...

அறைக்குள் நுழைந்தவனுக்கு அன்று மனைவி கதறிய கதறலே நினைவில் நின்றது... 'உங்க காதல் என்னைக் கொன்றுவிடும்...' எந்தக் காதல் கணவனும் கேட்க விரும்பாத வார்த்தை, கேட்க கூடாத வார்த்தை... அதையும் கேட்டு தாங்கி கொண்டு அவன் இரும்பு மனிதனாய் வாழ்ந்து கொண்டு இருக்கிறான் என்றால் அதற்குக் காரணம் அவளது காதல்...

அவனது காதல் வேண்டும் என்றால் அவளது உயிரை எடுக்கலாம்... ஆனால் அவளது காதல் அவனை உயிர்ப்புடன் நடமாட வைக்கிறது... அது தான் உண்மை...

'டேய் சித்து... வந்த விசயத்தை மறந்துட்டு என்னடா புலம்பிக்கிட்டு இருக்க...' என்று தனக்குத் தானே குட்டு வைத்தவன் தனது அலைப்பேசியில் இருந்து அழைப்பை எடுத்தான்...

ஹரிப்ரசாத் அலுவலகத்தில் வேலையாய் இருந்த போதும் சித்தார்த்தின் அழைப்பை உடனே எடுத்தான்...

"என்ன சித்து...?"

ஹரிக்கு சிறிது பதற்றமாக இருந்தது... ஏனெனில் பிரிந்திருந்த கணவன், மனைவி இருவரும் ஒரே ஊரில் இருப்பதால் என்றாவது ஒரு நாள் சந்திக்க நேரிடும் என்று அவனுக்குத் தெரியும்... அந்த நாள் இன்று தானோ...?

"ஏன்டா... என் மகளுக்கு என்னை அடையாளம் காட்ட மாட்டீங்களா...? வெறுமனே அவளது பெயரில் மட்டுமே நான் இருக்கிறேன்... ஆனால் அவளுக்கு என்னை அடையாளம் கூடத் தெரியவில்லை..." என்று சித்தார்த் கோபமாய்ப் படபடவெனப் பொரிந்தான்...

அதைக் கேட்டு ஹரி வாய் விட்டுச் சிரித்தான்...

"டேய்... என் பிழைப்பு உனக்குச் சிரிப்பா இருக்கா...? இன்னைக்கு ஜிக்கி என்னைப் பார்த்து..." என்றவனது குரல் கமறியது... முயன்று தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"அங்கிள்ன்னு சொல்லி விட்டாள்..."

சித்தார்த்தின் குரலில் இருந்த வேதனையை ஹரியால் உணர முடிந்தது... ஏனெனில் இப்போது அவனும் ஒரு குழந்தைக்குத் தகப்பன்... கண்ணனை பிரிந்து இருப்பது எவ்வளவு கஷ்டம் என்று அவனுக்கும் தெரியும்...

"இதுக்குத் தான் ஜிக்கி பிறந்த அன்னைக்கே நான் உன் கிட்ட சொன்னேன்... இரண்டு பேரையும் உன்னுடன் கூட்டிட்டு போன்னு... நீ தான் கேட்கலை... அப்படி என்ன

பெத்த மகளை விட உங்களுக்கு உங்க கொள்கைகள் பெரிசா போச்சு..." ஹரி கோபத்தில் படபடத்தான்...

"ப்ச்... பழசை விடு... இப்போ நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு..."

முதலில் இருந்த சித்தார்த்தாய் இருந்து இருந்தால் இதற்கு அலட்சியமாய்ப் பதில் அளித்து இருப்பான்... ஆனால் இப்போது இருக்கும் சித்தார்த் ஹரியின் நட்பை உணர்ந்த நல்ல நண்பன்...

"நீ சொன்னதால் தான் நாங்க யாரும் ஜிக்கியிடம் எதையும் சொல்லவில்லை..."

"நானா...?"

இது சித்தார்த்திற்குப் பெருத்த அதிர்ச்சியாக இருந்தது... அவன் எப்போது அப்படிச் சொன்னான் என்று அவனுக்கு ஞாபகம் இல்லை...

"அம்மு ட்ரைனிங்கில் இருந்த சமயம் இங்கே ஜிக்கி உன் ஃபோட்டோவை பார்த்துட்டு ஒரே அடம்... உன்னைப் பார்க்கணும்ன்னு... ஜிக்கி அழுவதைக் கேள்விப்பட்டு அம்முவும் அழுதாள்... அதை நான் உன் கிட்ட சொன்னப்போ நீ என்ன சொன்ன...?"

சித்தார்த்திற்கு இப்போது தான் அது நினைவில் வந்தது... அவனது உதடுகளில் மெல்லிய சிரிப்பு வந்தது...

"என் பேபி அவள் பேபி அழுறதை பார்த்து அழுவதை என்னால் தாங்கிக்க முடியலை... அதனால் ஜிக்கிக்கு என்னை ஞாபகப்படுத்தாதேன்னு..."

"ஹப்பாடா... இப்போதாவது உனக்கு நினைவுக்கு வந்ததே... அதிலிருந்து அவளிடம் உன்னைப் பற்றிப் பேசுவது இல்லை... இப்போ புரிந்ததா...?"

"ம்... புரிந்தது..."

"ஜிக்கி வேணும்ன்னு சொல்லியிருக்க மாட்டாள்... உன்னை அடையாளம் தெரிந்து கொண்டால் புரிந்து கொள்வாள்..."

"அதுவும் சரி தான்..."

அழைப்பை துண்டிக்கும் முன் ஹரிப்ரசாத் அவனிடம், "ஆமாம்... உன் கிட்ட ஒண்ணு கேட்கணும்... எத்தனையோ மாடர்ன் பெயர் இருக்க நீ ஏன் ஜெகதீஸ்வரின்னு பெயர் வைக்கச் சொன்ன... அது கூடப் பரவாயில்லை... ஜெகதீஸ்வரியை அழகா ஜெகா, ஈஸ்வரி இப்படிக் கூப்பிடலாமே... அது என்ன ஜிக்கின்னு கூப்பிட சொன்ன..."

"அவளுக்கு அப்படிக் கூப்பிடறது தானே பிடிக்கும்..."

"அட பார்றா... பார்க்காத மகளின் விருப்பத்தை எல்லாம் நீ தெரிஞ்சு வச்சியிருக்க..."

"ஜிக்கியை பற்றி உன்னை விட எனக்குத் தான் நல்லா தெரியும்..."

"இல்லையா பின்னே... அவள் உன் மகள் அல்லவா..."

"அவள் என் மகள் மட்டுமல்ல... அதுக்கும் மேல்..." என்ற சித்தார்த்தின் முகத்தில் மகிழ்ச்சியும், துக்கமும் சரிபாதியாய்க் கலந்திருந்தது...

"நான் ஜிக்கியை சந்திச்சதை நீ பேபி கிட்ட சொல்ல வேண்டாம்..." அவனது கூற்றை ஏற்றுக் கொண்ட ஹரி சிரித்தபடி அழைப்பை துண்டித்து விட்டான்...

சித்தார்த்தின் மனதில் அவனது 'ஜிக்கி'யின் நினைவுகள்... சில உறவுகளை அன்பு, நேசம், காதல், தாய்மை இப்படி ஒற்றை வார்த்தையில் அடக்கி விட முடியாது... கடவுளை கண்ட பக்தனை போல் சில உறவுகள் மனதினை பரவசப்படுத்தும்... அத்தகையைப் பரவசம் அவனுக்கும் ஜிக்கிக்குமான உறவில் இருந்தது...

அப்படிப்பட்ட ஜிக்கியின் முடிவு மிகவும் கொடூரமானது... மரணிக்கும் வயதா அவளுக்கு...? பதினைந்து வயதில் அவளது வாழ்வே முடிந்து போய் விட்டது... எத்தனை

வேதனைப்பட்டு, எத்தனை துடிதுடித்து அவள் இறந்தாளோ...? இரும்பு மனிதனான சித்தார்த்தை இளக்க வைக்கும் ஆற்றல் இருவருக்கு மட்டுமே இருந்தது... ஒருத்தி ஜெகதீஸ்வரி, அடுத்து அவனது மனைவி பிரகதீஸ்வரி...

ஏனோ அவனால் இருவரையும் வேறு வேறு என்று பிரித்துப் பார்க்க முடியவில்லை... அவளே தான் இவள்... இவளே தான் அவள்... இப்போது அவனது மகள் அப்படியே அச்சில் வார்த்தது போல் ஜெகதீஸ்வரி பிம்பமாய் இருக்கிறாள்... இடது உதட்டின் மேலிருக்கும் மச்சம் முதற்கொண்டு...

"ஜிக்கி... நீ என் கூடவே இருக்கணும்ன்னா நாம ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கணுமாம்..." என்ற சித்தார்த்தை புன்னகையுடன் பார்த்தாள் ஜிக்கி...

"அப்படின்னு உனக்கு யார் சொன்னது சித்து...?"

"என் பிரெண்ட் சொன்னான்..."

"நாம ரெண்டு பேரும் கல்யாணம் எல்லாம் பண்ணிக்க முடியாது சித்து..."

"அதெல்லாம் முடியும்..."

"ம்ஹூம் அது முடியாதே சித்து..." என்று உறுதியாக மறுத்தவள்,

"எனக்கு ஒரே ஒரு ஆசை தான் சித்து..."

"எதுவா இருந்தாலும் சொல்லு ஜிக்கி... உனக்காக நான் எதையும் செய்வேன்..."

"அடுத்த ஜென்மம்ன்னு ஒண்ணு இருந்தா நான் உனக்கு மகளா பிறக்கணும் சித்து..." கண்ணீர் வழிய கூறிய ஜிக்கியின் கண்ணீருக்கான காரணம் அப்போது அவனுக்குப் புரியவில்லை... இப்போது தான் அவனுக்கு அது புரிகிறது... ஆனால் இப்போது புரிந்து எந்தப் பயனும் இல்லை...

ஜிக்கியின் ஞாபகத்தில் மனம் கனக்க அமர்ந்து இருந்தவனின் அலைப்பேசி அழைத்து அவனை நிகழ்காலத்திற்கு வரவழைத்தது... அடுத்து நொடி அவனது வேலைகள் அவனை ஆக்கிரமித்துக் கொண்டது...

****

அடுத்து வந்த நாட்களில் மாவட்ட ஆட்சியராய் பிரகதீஸ்வரியின் செயல்கள் விஸ்வரூபம் எடுத்தது... அதன் விளைவு அடுத்தடுத்து பல தொழிற்சாலைகள் இழுத்து மூடப்பட்டது... தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு முறைகள் முறைப்படுத்த படவில்லை, கழிவுகளை முறையாக அகற்றாது, தொழிற்சாலைகளுக்கு என்று இருக்கும் அடிப்படை விதிமுறைகளைச் செயல்படுத்தாது என்று நிறையப் பட்டியல்கள் போட்டு அதற்குள் அடங்கிய அத்தனை தொழிற்சாலைகளும் ஒரே நேரத்தில் மூடப்பட்டது...

சித்தார்த்தின் தொழிற்சாலைகளும் இதில் அடக்கம்... ஒரே நேரத்தில் தொழிலை ஸ்தம்பித்த நிலைக்குத் தள்ளி விட்டாள் அவனது மனையாட்டி... பெருங்கோபம் வந்தது அவனுக்கு... அவன் நேரே அவளது அலுவலகத்திற்கு வந்து அவளைச் சந்தித்தான்... அன்று போல் இன்றும் அனுமதி வேண்டாது உள்ளே நுழைந்தவனை ஒன்றும் பேசாது அவள் நிமிர்ந்து பார்த்தாள்...

அவனும் அவளைக் கேட்காது நாற்காலியை இழுத்து போட்டுக் கொண்டு அமர்ந்தான்... அதை அவன் இழுத்த வேகத்திலேயே தெரிந்து போனது அவனது கோபத்தின் அளவு...

"விளையாட்டை ஆரம்பிச்சிட்ட போலிருக்கு..."

"அப்படின்னு நீங்க நினைச்சா... அதற்கு என்னுடைய பதில் ஆமாம் என்பது தான்..."

"ஏன் என்னால் ஒண்ணும் செய்ய முடியாதுங்கிற தைரியமா... பார்க்கிறியா நாளைக்கே எல்லாப்

பேக்டரியையும் திறந்து காட்டட்டுமா...?" என்று சவால் விட்டவனை அஞ்சாது அவள் பார்த்தாள்...

"என்ன சவால் விடுறீங்களா மிஸ்டர். சித்தார்த்...? உங்களுக்கு எதிரான ஆதாரங்கள் இங்கே நிறைய இருக்கு... எங்க சார்பா நாங்க கோர்ட்டுக்கு போவோம்..."

"போ... போய் வருசக்கணக்கா கேசை நடத்து... அதற்குள் நான் பேக்டரியை திறந்து சம்பாதித்து விடுவேன்..."

"அதற்குத் தான் முதலில் நான் தடை வாங்குவது..."

"நான் தொழிலாளர்களின் நலனை முன்னிட்டு அதைத் திறக்க கேட்பேன்..."

"நானும் அதே தொழிலாளர்கள் நலனை முன்னிட்டு தான் இதை எல்லாம் செய்யச் சொல்கிறேன் என்று சொல்வேன்..."

அதைக் கேட்டு எதற்கும் அசராத சித்தார்த் அசந்து போய் விட்டான்... பின் புன்னகை புரிந்தவனாய்,

"இதை எல்லாம் உன்னைச் செய்யாதிருக்கச் செய்ய என்னால் முடியும்..."

"என்ன மிரட்டுறீங்களா...? உங்க பாசையில் சொல்வதானால் தூக்கி அடிச்சிருவீங்களோ..."

அதைக் கேட்டு அவன் வாய் விட்டுச் சிரித்தான்...

"உன்னைத் தூக்கி அடிக்கவா கோடி கணக்கில் பணம் கொடுத்து உன்னை இங்கே சென்னைக்கு வரவழைச்சு இருக்கேன்..." என்றவனைக் கண்டு அசருவது இப்போது அவளது முறையாயிற்று...

"இப்போ நீ வடக்கே ஏதோ ஒரு பின் தங்கிய மாவட்டத்தில் கலெக்டரா இருந்திருக்க வேண்டியது... என்னோட ஆள்பலம், பணபலத்தை வச்சு நான் உன்னை இங்கே கடத்திட்டு வந்திருக்கேன்..." என்று சிரித்தவனைக் கண்டு மனைவியாய் அவளது மனம் மயங்கி தான் போனது...

"என்ன இது கடத்திக்கிட்டு அது இதுன்னு வில்லன் மாதிரி..." என்று முணுமுணுத்தவளை கண்டு அவனது மனம் உல்லாசம் அடைந்தது...

"பின்னே என்னை நீ வில்லன் ரேன்ஜ்க்கு பார்த்தால் நானும் வில்லனா தான் மாற வேண்டியிருக்கு..."

"எதுக்கு இதை எல்லாம் செய்யணும்...?"

பிரகதீஸ்வரி கூறியதை கேட்டு அவனது முகம் இறுகி போனது... நாற்காலியில் இருந்து நன்றாக நிமிர்ந்து அமர்ந்தவன்,

"உனக்கும் எனக்குமான கண்ணாமூச்சி விளையாட்டை முடிவுக்குக் கொண்டு வர தான்..." என்று உணர்ச்சி இல்லாது கூறியவனைப் புரியாது பார்த்தாள் அவள்...

"எது என்னிடத்தில் பிடிக்கலைன்னு நீ நினைச்சியோ அது தான் இந்த உலகம்ன்னு உனக்கு நான் காட்ட வேண்டும்... அதை நீயும் உணரணும்... உணர்ந்து நீயா என் கிட்ட வரணும்..."

சித்தார்த்தின் குரலில் காத்திருந்ததற்கான வலி அப்பட்டமாய்த் தெரிந்தது...

"அதே இது நானும் நினைத்தால்...?"

"அதற்காகத் தான்டி இத்தனை வருசம் காத்துக்கிட்டு இருந்தேன்... இப்போ நீயும், நானும் சரி சமமான பலத்தில் இருக்கிறோம்... இருவரில் யாருடைய கொள்கை ஜெயிக்குதுன்னு பார்ப்போம்..."

"பார்க்கலாம்..." என்றாள் அவளும்...

"நீ பார்க்க தானே போகிறாய்... நாளை என்ன நடக்கப் போகிறது என்று...?"

"ஐயம் வெய்ட்டிங்..."

அன்று கணவன் கூறிய வார்த்தைகளைக் கூறிய பிரகதீஸ்வரி அவனைப் புன்சிரிப்புடன் பார்த்திருந்தாள்... அவளது தைரியம் கண்டு அவன் மனதிற்குள் மெச்சி கொண்டான்...

"இப்போ தான்டி உன்னை இன்னும் அதிகமா பிடிக்குது... இன்னும் அதிகமா வெறித்தனமா காதலிக்கணும்ன்னு தோணுது..." என்றவன் எழுந்து நின்று மேசை மீது இரு கைகளையும் ஊன்றி அவளது முகம் நோக்கி குனிந்தான்... அவனது செயல் கண்டு பயந்து போனவளாய் அவள் தன்னிச்சையாகப் பின்னால் சாய்ந்தாள்...

அதைக் கண்டு அவனது இதழ்களில் புன்னகை மலர்ந்தது...

"ஐ லவ் யூ பேபி..." என்று காதலில் உருகியவன் அடுத்தக் கணம் அவளின் பதிலை எதிர்பாராது கதவை திறந்து கொண்டு புயல் போல் வெளியேறி விட்டான்...

உண்மையில் புயலடித்து ஓய்ந்தது போலிருந்தது அவளுக்கு... அவசரமாகச் சுற்றும் முற்றும் பார்த்தாள்... நல்லவேளையாக மதிய உணவு இடைவெளி என்பதால் யாரும் அங்கு இல்லை... நல்ல நேரம் பார்த்து தான் வந்திருக்கிறான் என்று நினைத்தவளுக்குக் கணவனின் ஆளுமையான குணம் கண்டு ஒரே நேரத்தில் புன்னகையும், பெருமையும் தோன்றியது...

"ஐ லவ் யூ மாமூ..." மெதுவே அவளது இதழ்கள் முணுமுணுத்தது மகிழ்ச்சியாக...

அன்று மாலையே பிரகதீஸ்வரிக்கு அமைச்சரிடம் இருந்து உத்தரவு வந்தது அவரை வந்து சந்திக்கும் படி... அவளால் மறுக்க முடியாத சூழ்நிலை... என்ன தான் கஷ்டப்பட்டுப் படித்து இந்தப் பதவிக்கு வந்த போதும் படிக்காத அரசியல்வாதிகளிடம் அவர்கள் கை கட்டி நிற்கும் அவல நிலை நம் நாட்டில் மட்டுமே...

அவள் அங்குச் சென்ற போது அமைச்சருடன் சித்தார்த்தும் அமர்ந்திருந்தான்... அந்தக் கணம் அவளுக்குப் புரிந்து

போனது அந்தச் சந்திப்பு எதற்கு என்று... வெளியில் எதையும் காட்டி கொள்ளாது இருந்தாள்...

"உட்காருங்க மேடம்..."

சித்தார்த் தான் அவளை அமர சொன்னான்... அமைச்சரின் இடத்தில் இருந்து கொண்டு அதிகாரம் பண்ணும் அவனைக் கண்டு அவளுக்கு உள்ளுக்குள் அத்தனை சிரிப்பாக இருந்தது...

'நீங்க பண்ற லொள்ளுக்கு அளவே இல்லையா...' என்பது போல் அவனைப் பார்த்தாள் அவள்...

அதை உணர்ந்தவனாய் அவனது முகத்திலும் புன்னகை அரும்பியது...

"ஏன்ம்மா... இப்போ எதுக்கு இவரோட பேக்டரி அத்தனையையும் மூடின...?" என்று அமைச்சர் ஆரம்பித்தார்...

"இவரோடது மட்டும் இல்லை சார்... இன்னும் நிறையப் பேரோடதையும் சேர்த்து தான்..."

"அதான் எதுக்கு...?"

"அதற்கான காரணங்களை அவங்க கிட்ட நோட்டீஸா கொடுத்தாச்சு..."

"யோவ்... இதை விசாரிக்கவா உன் கிட்ட வந்தேன்... அதை எல்லாம் திரும்பவும் திறக்க சொல்லு..."

மெதுவாக விளக்கம் கேட்டுக் கொண்டிருந்த அமைச்சரிடம் காய்ந்தான் சித்தார்த்...

'இவங்க அடங்கவே மாட்டாங்களா...?' மனதிற்குள் பயத்துடன் அமைச்சரை பார்த்தாள் பிரகதீஸ்வரி... பின்னே நாடறிந்த அமைச்சரை கணவன் பகைத்து கொண்டால்...?

அவரோ கூலாகச் சித்தார்த்திடம், "சரிய்யா... இதோ கேட்கிறேன்..." என்றவர் அவளிடம் அவன் கூறியதை

கேட்க...

"என்னால் அதைச் செய்ய முடியாது சார்..." என்று அவள் நிர்தாட்சண்யமாய் மறுத்தாள்...

"என்னய்யா... ரொம்பத் தான் துள்ளுது... தூக்கிரலாமா...?" அமைச்சர் சித்தார்த்தின் காதில் ரகசியம் பேசினார்...

"அதைச் செய்ய என்னால் முடியாதா...? உன்னைக் கூப்பிட்டு சும்மா மிரட்ட தான் சொன்னேன்... ஆக்சனில் இறங்க சொல்லலை... என்ன புரிந்ததா...?"

"அப்புறம் என்ன...? அதை நீயே செய்ய வேண்டியது தானே..."

"அதைச் செய்ய முடியாம தானே நான் உன்னைத் தேடி வந்திருக்கிறேன்... நீ என் கழுத்தை அறுக்காம சொன்ன வேலையை மட்டும் பார்..."

தணிந்த குரலில் இருவரும் பேசிய போதும் அது அவளுக்கு நன்கு கேட்டது...

"முடிவா என்ன தான்ம்மா சொல்ற...?"

"அவங்க எல்லாம் முறைப்படி செஞ்சாங்கன்னா பேக்டரி எல்லாத்தையும் திறக்கலாம்... இல்லைன்னா, அதுவரை அவை எல்லாம் மூடி தான் இருக்கும்..." என்றாள் முடிவாக அஞ்சாது...

"இது வேலைக்கு ஆகாதுய்யா... ஒரு கை பார்த்தா தான் சரி வரும்..."

அமைச்சருக்குக் கோபம் வந்து விட்டது... எந்த ஆட்சியரும் இப்படி நடந்து கொண்டது இல்லை... புதுசாக வந்திருக்கும் பிரகதீஸ்வரி இப்படி நிமிர்வாய் இருந்தது கண்டு அவருக்கு அப்படி ஒரு கோபம் வந்தது...

"யோவ்... அவங்களை ஒரு கை பார்த்தேன்னா அதுக்கு அப்புறம் உன்னோட ரெண்டு கைகளும் இருக்காது..." என்று அவரிடம் சித்தார்த் பதிலுக்கு எகிறினான்... அதில்

அவர் அரண்டு போய் விட்டார்... இப்போது அவன் அவளைப் பார்த்து நேரிடையாகக் கேட்டான்...

"சொன்னதைச் செய்ய முடியுமா...? முடியாதா...?"

அவனது குரலில் அப்படி ஒரு கடுமை இருந்தது... அவனது குரல் அவளுள் குளிரெடுக்கச் செய்த போதும் அஞ்சாது அவனைப் பார்த்தவள்,

"முதலில் நான் சொன்னதைச் செய்ங்க... அதுக்கு அப்புறம் நீங்க சொல்றதை நான் செய்யறேன்..."

முதன்முறையாக மனைவியான ஆட்சியரின் வார்த்தை கேட்டு சித்தார்த் ஸ்தம்பித்தான்... இதே இது வேறு யாராவது இந்த இடத்தில் இருந்து இருந்தால் நடந்து இருப்பதே வேறு... ஆனால் அவளிடம் அவனால் அப்படி கோபத்தினை காண்பிக்க முடியவில்லை...

அவளிடம் பணபலத்தின் வலிமையைக் காட்ட நினைத்தவன் அவளின் பதவி பலத்தின் முன்னே தோற்றுப் போனது போல் ஒரு தோற்றம் அவனுள்... அவன் தோற்காமல் இருக்க வேண்டுமானால் அவளைத் தோற்கடிக்க வேண்டும்...

யுத்தகளத்தில் அவளைத் தோற்கடிக்க அவனால் முடியுமோ... இது வெறும் கொள்கைகள் மட்டும் மோதி கொள்ளும் யுத்தகளம் அல்லவே... கொள்கைகளுக்காக உயிரும் உயிரும் மோதி கொள்ளும் உயிர்கொல்லும் களம் அல்லவா இது...

சித்தார்த் மனைவியவளின் உயிர் எடுப்பானா...! இல்லை அவளுக்காகத் தன்னுயிரையும் கொடுப்பானா...!

"யுத்தத்தில் வெற்றி பெற
மண்டியிட செய்ய வேண்டும்...
காதலில் வெற்றி பெற
மண்டியிட வேண்டும்...
கொள்கையை எதிர்ப்பவனே,
காதலுக்காக மரணத்தை

தழுவ நினைக்கும் மன்னவனே...
அந்தக் காதலும், கொள்கையும்
ஒன்றென்று நிமிர்ந்த மங்கையை
காதலாய் மண்டியிட செய்வாயா...?
இல்லை காதலாய் மண்டியிடுவாயா...?"

நனவாகும்...!!!

"சித்து..." இரவு உணவு உண்பதற்காக அமர்ந்த மகனை தயக்கத்துடன் அழைத்தார் பிரபாவதி...

"சொல்லுங்கம்மா..." தட்டில் சப்பாத்தியை எடுத்து வைத்தபடி அவன் என்னவென்று கேட்டான்...

"நாளைக்கு ஸ்வேதா வீட்டுக்கு நானும், அப்பாவும் போறோம்..."

"அதுக்கு என்ன...? போயிட்டு வாங்க..." சாதாரணமாக உரைத்தபடி அவன் உணவு உட்கொள்ள ஆரம்பித்தான்...

"சித்து அது வந்து..." அவர் தயங்கியதில் அவன் அவரை ஏறிட்டுப் பார்த்தான்...

"அப்படியே பேத்தியையும் பார்த்துட்டு வரலாம்ன்னு இருக்கோம்..."

"இதுக்கு முன்னாடி பார்க்க போறப்போ எல்லாம் என் கிட்ட பெர்மிசன் கேட்டுட்டுப் போய்ப் பார்த்த மாதிரி இப்போ எதுக்கு என் கிட்ட பெர்மிசன் கேட்கிறீங்க...?"

அவன் கூறியதை கேட்டு உண்டு கொண்டிருந்த மார்த்தாண்டத்திற்குப் புரையேறியது... அவர் முன் தண்ணீர் தம்பளரை எடுத்து நீட்டிய சித்தார்த்,

"எல்லாம் எனக்குத் தெரியும்... ஸ்வேதாவை பார்க்க போறேன்னு நீங்க என் கிட்ட பொய் சொல்லிட்டு மும்பைக்குப் போகாம ஜிக்கியை பார்க்க போறது எனக்குத் தெரியாதுன்னு நினைச்சீங்களா...? இப்போ கூட நாலு நாளுக்கு முன்னாடி அவளைப் போய்ப் பார்த்துட்டு வந்திருக்கீங்க..."

"அதானே என் மகனின் கண் பார்வையில் இருந்து ஒரு விசயம் தப்ப முடியுமா...?" என்றார் மார்த்தாண்டம் பெருமையாக...

"ம்க்கும்... மகன் பெருமையைப் பேசாட்டி உங்களுக்குத் தூக்கம் வராதே..." என்று கணவனிடம் நொடித்துக் கொண்ட பிரபாவதி மகனிடம்,

"எனக்கு இருக்கிறது ஒரே ஒரு மருமகள், ஒரே ஒரு பேத்தி... அவங்களை நான் பார்க்க போகாம வேறு யார் பார்க்க போவாங்க சித்து..."

"ஓஹோ... உங்களுக்கு அப்படி வேறு ஆசை இருக்கிறதா..." என்று கேட்ட மகனின் உணர்வில்லாத குரலில் திடுக்கிட்டு அவனைப் பார்த்த பிரபாவதி அடுத்தக் கணம் அவன் வாய் விட்டு சிரித்ததில் நிம்மதியானார்...

"உண்மையைத் தானேடா சொன்னேன்... என் மகனை என்ன குறை வேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் சொல்லலாம்... ஆனால் இந்த விசயத்தில் ஒருத்தர் உன்னைக் கை நீட்டி குறை சொல்லி விட முடியுமா என்ன...?"

இப்போது மகனின் புகழ் பாடுவது அவரது முறையாயிற்று...

"என்னைச் சொல்லிட்டு நீயும் அதைத் தானே செய்ற...?"

"இது நான் இல்லைங்க... எந்தப் பெண்ணும் பெருமை படும் விசயம்... ஏக பத்தினி விரதன் ராமனும் என் மகனும் ஒன்று..."

"அம்மா... போதும், போதும் ஐஸ் வைச்சது... நீங்க உங்க பேத்தியை பார்க்க போறதுக்குப் பெர்மிசன் கிராண்ட்டட்..." என்றான் சித்தார்த் சிரித்தபடி...

"நீயும் எங்களோடு வாயேன் சித்து..."

அவனுக்கும் ஆசையாகத் தான் இருந்தது... ஆனால்...???

"இல்லைம்மா... நீங்க போயிட்டு வாங்க..." என்று அழகாய் அவன் மறுத்து விட்டான்...

மகன் சம்மதித்ததே அவர்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது... மறுநாள் பேத்தியை காண புறப்பட்டு விட்டனர்...

அன்று விடுமுறை என்பதால் பிரகதீஸ்வரி, ஜெகதீஸ்வரி இருவருமே வீட்டில் இருந்தனர்... தாத்தா, பாட்டியை கண்டதும் சின்னவள்,

"தாத்தா, பாட்டி..." என்று மகிழ்ச்சியோடு ஓடி வந்து கட்டி கொண்டாள்...

அவர்களும் அவளை ஆரத்தழுவி முத்தமிட்டு அணைத்து கொண்டனர்... தாங்கள் வாங்கி வந்திருந்த விளையாட்டுப் பொருட்கள், இனிப்பு வகைகளைச் சின்னவர்கள் இருவருக்கும் பங்கிட்டு கொடுத்தனர்... நன்றி கூறி பெற்றுக் கொண்ட சின்னவர்களின் நற்பண்பு கண்டு பெரியவர்களுக்குப் பெருமையாக இருந்தது...

"இன்னைக்கும் அப்பா வரலையா பாட்டி...?" என்று கேட்ட பேத்தியை கண்டு கண் கலங்கியது பிரபாவதிக்கு... மருமகளைக் குற்றம் சாட்டும் பார்வை ஒன்றை பார்த்தார்...

அதைத் தாங்க இயலாது பிரகதீஸ்வரி தலை குனிந்து அமர்ந்திருந்தாள்... சில விசயங்களில் அமைதி தான் சிறந்த பதிலாக இருக்கிறது... பிறகு கிடைத்த தனிமையில் பிரபாவதி மருமகளிடம்,

"பிரகதி... நீ எப்போ நம்ம வீட்டுக்கு வர போற...? சித்து எதையும் வெளிக்காட்டிக்கலைன்னாலும் அவன் மனசுக்குள் எவ்வளவு வேதனைப்படுறான்னு எனக்குத் தான் தெரியும்..."

"அத்தை..." கண்கள் கலங்கியபடி அவள் வேதனையுடன் அவரைப் பார்த்ததில் அவரால் மேலே பேச முடியவில்லை...

"உன்னைப் பார்த்தாலும் பாவமா தான் இருக்கு... சித்துவை பார்த்தாலும் பாவமா தான் இருக்கு... எங்க எல்லோருடைய ஒரே ஆசை நீங்க ரெண்டு பேரும் ஒண்ணு சேரணும்ங்கிறது தான்..." என்றவர் கலங்கிய தனது விழிகளைத் துடைத்துக் கொண்டு,

"ஸ்வேதா வளைகாப்புக்கு புடவை எடுக்கத் தான் இங்கே வந்தோம்... நீயும் கிளம்பி எங்களோடு வா... அப்படியே சந்தியா, பானுமதியையும் கூடக் கூட்டிட்டு போகலாம்..."

அவர் சொன்னது கேட்டு அவளால் மறுக்கத் தோணவில்லை... மறுப்பு சொல்லாது கிளம்பினாள்... தாத்தா, பாட்டியுடன் ஒட்டி கொண்டு திரிந்த மகளைக் காணும் போது அவளுக்கு வேதனையாக இருந்தது... தந்தையின் பெற்றோரிடமே அவள் இப்படிப் பாசத்தைப் பொழிந்தால் நேரில் தந்தையைக் கண்டால் எந்தளவிற்குப் பாசத்தைப் பொழிவாள்...?

அந்தக் கணம் அவளது மனக்கண்ணில் சித்தார்த் மகளைத் தூக்கி கொஞ்சும் காட்சி படமாய் விரிந்தது... அவனது பரந்த தோள்களில் புறா குஞ்சாய் பாதுகாப்பாய் மகள் வீற்றிருக்கும் காட்சியை நினைக்க நினைக்க அவளுக்குத் தெவிட்டவில்லை...

ஒருவழியாய் உடைகளை எடுத்து விட்டு எல்லோரும் வீட்டிற்குக் கிளம்பும் போது பேத்தியிடம் விடை பெற்ற பெரியவர்களின் விழிகள் மீண்டும் கலங்க ஆரம்பித்தது...

"சீக்கிரமே நல்ல முடிவா எடும்மா..." என்றபடி அவர்கள் விடை பெற்று சென்றனர்...

அன்று முழுவதும் பிரகதீஸ்வரி மனதில் சித்தார்த்தின் நினைவுகள் எழுந்து அவளை வதைத்துக் கொன்றது...

மறுநாள் அலுவலகத்திற்கு வந்த பிரகதீஸ்வரி சித்தார்த் தனது தொழிற்சாலைகளில் செய்யும் மாற்றங்களைக் கேள்வியுற்றுச் சந்தோசம் அடைந்தாள்... அன்று அவளிடத்தில் அவன் சவால் விட்ட போது அவளது மனதில் சிறு உறுத்தல் இருந்து கொண்டே தான் இருந்தது... ஆனால் இப்போது மிகவும் சந்தோசமாக உணர்ந்தாள்...

அவனைப் பற்றி அவளுக்கு நன்கு தெரியும்... தன் இடத்தில் வேறு யாராக இருந்தாலும் அவனின் நடவடிக்கையே வேறு என்று... ஆனால் அவனால் அவளை ஒன்றும் செய்ய

முடியாது... அதனால் அவன் தன்னைத் தானே மாற்றிக் கொள்கிறான்... இதுவே நல்லதொரு தொடக்கமாக இருந்ததில் அவளுக்கு அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது...

அன்றிரவு வீட்டிற்கு வந்ததும் கணவனை அலைப்பேசியில் அழைத்தாள்... ஒரே அழைப்பில் உடனே எடுத்தவனைக் கண்டு அவளது விழிகள் கரித்துக் கொண்டு வந்தது... எத்தனை எதிர்பார்ப்போடு அவன் காத்திருந்தால் அவளது அழைப்பை சட்டென்று எடுத்திருப்பான்...

"பேபி..." ஒற்றை வார்த்தையில் அத்தனை அன்பையும் தேக்கி வைத்து அழைத்த கணவன் அவளது விழிகளை மேலும் கலங்க செய்தான்...

"ம்..."

"இப்போவாவது என்னிடம் பேசணும்ன்னு உனக்குத் தோணியதே..."

அவனது வார்த்தையில் அவள் உதடு கடித்தபடி அமைதி காத்தாள்... இரு பக்கமும் கனத்த அமைதி நிலவியது... சித்தார்த் தான் அந்த மௌனத்தை முதலில் கலைத்தது...

"எதுக்காகக் கூப்பிட்ட பேபி...?"

"நான் சொன்னபடி தொழிலாளர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கிறீங்க போலிருக்கு..."

"ஓஹோ... அம்மணி கலெக்டர் மேடமா ஃபோன் பண்ணியிருக்கீங்களோ..." என்று கேலி குரலில் கேட்டவன்,

"நீ சொல்லும் வசதிகளைச் செய்து கொடுப்பதற்குச் செலவிடும் தொகையை விட அதிகத் தொகையை நான் தினமும் இழந்து கொண்டிருக்கிறேன்... அதனால் தான் இதைச் செய்கிறேன்... நீ சொன்னதற்காக இல்லை..."

கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று கெத்து விடாது கூறும் கணவனைக் கண்டு அவள் களுக்கென்று சிரித்தாள்...

"என் பிழைப்பு உனக்குச் சிரிப்பா இருக்கா... உன்னை என்ன பண்ணலாம்டி..." என்று போலியாகத் தன்னிடம் காய்ந்தவனிடம்,

"அப்படியே அங்கு வேலை செய்பவர்களின் குழந்தைகளுக்கு என்று பால்வாடி ஒண்ணு அமைச்சு கொடுக்கலாமே... அங்கு வேலை செய்யும் தாய்மார்களும் நிம்மதியா வேலை செய்வாங்க இல்லையா..."

"அப்படியே அவங்க பிள்ளைங்க படிக்கிறதுக்கு ஸ்கூல், காலேஜ் இப்படின்னு எல்லாத்தையும் இலவசமா செய்யச் சொல்லுவ போலிருக்கே..."

"செஞ்சால் என்ன தவறு...? அவங்க உழைப்பில் தானே நாம் வாழ்கிறோம்... அதில் கொஞ்சமே கொஞ்சம் அவங்களுக்கும் கொடுக்கலாமே..."

அவள் 'நாம்' என்று கூறியதில் அவனது மனம் கனிந்தது...

"கொடுத்துவிட்டு நாம வயித்தில் ஈரத்துணியைக் கட்டிக்கிட்டு படுப்போமா...?"

"கொஞ்சம் செய்வதில் நீங்க ஒண்ணும் குறைந்து போய் விட மாட்டீங்க மிஸ்டர். சித்தார்த்..."

அவனது பெயரை சொன்னதில் அவனுக்கு உல்லாசம் பொங்கியது... ஆனால் அதைக் காட்டி கொள்ளாது,

"என் பெயரையா சொல்கிற... சொல்கிற உன் வாயை ஒரு நாள் இல்லை ஒரு நாள் கடிக்கத் தான் போகிறேன் பார்..."

"ஐயம் வெய்ட்டிங் மிஸ்டர். சித்தார்த்..." என்று கூறி கலகலவென்று சிரித்தவளின் குரல் அவனுள் அத்தனை நிறைவை தந்தது...

"எனக்கு ஒரு சந்தர்ப்பம் வராமலா போயிரும்... அப்போ வச்சிக்கிறேன்டி என் கச்சேரியை..."

கணவனது வார்த்தையில் அவனது ஆளுமையான அணைப்பு, இதழொற்றல் எல்லாம் அவளது மனதில் வலம்

வந்தது... அதில் அவளது முகம் சிவந்து போனது வெட்கத்தில்...

"என்ன பதிலை காணோம்...?" மனைவியின் மனதினை அறிந்த கணவனாய் கர்வமாய் ஒலித்தது அவனது குரல்...

"ப்ளீஸ் மாமு... வேலைக்குப் போகும் பெண்ணாய் மற்ற பெண்களின் கஷ்டம் எனக்குத் தான் தெரியும்... நான் சொன்னதையும் கொஞ்சம் யோசிச்சு பாருங்களேன்..."

அவனுக்கா மனைவி பட்ட கஷ்டங்கள் புரியாது... அவளுக்காகத் தானே அவன் தந்தை என்கிற பதவியைக் கூடத் துறந்து இருக்கிறான்... தன்னை மகளுக்கு அடையாளம் காட்டாது தனித்து இருந்து விட்டான்...

"உன்னை விட நீ பட்ட கஷ்டம் எனக்குத் தான் நல்லா தெரியும் பேபி..." என்றவனது விழிகளும், குரலும் கலங்கி ஒலித்தது...

அவனது காதலில் அவளும் கரைந்தவளாய் மௌனத்தையே பதிலாகக் கொடுத்தபடி இருந்தாள்...

"சரி, உனக்காக நான் இதைச் செய்றேன்... நிச்சயம் மத்தவங்களுக்காக இல்லை... இந்தச் சித்து இறங்கி போகிறான் என்றால் ஒன்று உன்னிடத்தில், இன்னொன்று என் மகளிடத்தில்..." என்றவனது வார்த்தைகள் அவளது மனதில் பனிச்சாரலாய்க் குளிர்வித்தது...

"ஜிக்கி என்ன செய்கிறாள்...? தூங்கிட்டாளா...?"

"மணி எத்தனை தெரியுமா...? பன்னிரெண்டு... இன்னுமா தூங்காது இருப்பாள்..."

"நீ ஏன் தூங்கலை பேபி...?"

"தூக்கம் வரலை..."

"அதான் ஏன்...?"

"உங்களை நினைச்சு தான்..."

"என்னைப் பத்தி நீ நினைப்பது எப்போதும் நடக்கும் விசயம் தானே... இன்னைக்கு என்ன புதுசா...?" அவனது குரல் அத்தனை குதூகலமாக ஒலித்தது...

"இன்னைக்குத் தான் எனக்கு எல்லாமே புதுசு புதுசா தெரியுது... என் மாமூ ரொம்ப நல்லவங்களா மாறிட்டு வர்றது எனக்குச் சந்தோசம் இல்லையா...?"

மனைவியின் 'மாமூ' என்ற விளிப்பில் அவன் கள்ளுண்ட வண்டானான்...

"ஏய்..." என்று கத்தி அழைத்து விட்டவன் சட்டென்று ஏகாந்த சூழ்நிலையைக் கருதி அமைதியானான்...

"அதே உன் மாமூ தான்டி... நான் எப்பவும் நல்லவன் தான்... நீ தான் என்னைப் புரிஞ்சிக்கலை..."

"இப்போ புரிஞ்சிக்கிட்டேன்ல..."

"புரிஞ்சு என்ன யூஸ்...?"

"என்ன யூஸ்ன்னு பிறகு சொல்றேன்... இப்போ நான் சந்தோசமா இருக்கேன்... அதனால்..." என்றவள் அலைப்பேசியில் அவனுக்குப் பரிசாக முத்தத்தை அடுத்தடுத்து அனுப்பி வைத்தாள்...

அவளது கொடுத்த முத்தத்தின் சத்தத்தில் இச்சை கொண்டவனாய் கண் மூடி அதை உள்வாங்கி ரசித்தான் சித்தார்த்...

"உன்னுடைய இந்தச் சந்தோசத்திற்காகவே உனக்குப் பிடிச்சதா நான் பண்ணிக்கிட்டே இருக்கணும் போலிருக்கே பேபி..." என்றவனைக் கண்டு அவளது விழிகள் கசிந்தது...

"உண்மையில் நான் பாவி தான் மாமூ... உங்களை நான் சரியா புரிஞ்சிக்கலைன்னு நினைக்கிறப்போ எனக்கு ரொம்ப வருத்தமா இருக்கு..." என்று அழுதவளை கண்டு அவன் கலங்கி போனான்...

"ஹேய் பேபி... நீ நினைக்கிற அளவுக்கு நான் அப்படி ஒண்ணும் நல்லவன் கிடையாது... ஆனால் உனக்கு மட்டுமே கொஞ்சமே கொஞ்சம் நல்லவன்..." என்றவனைக் கண்டு அவளது இதழ்களில் புன்னகை மலர்ந்தது...

சிறிது நேரம் அவளிடம் பேசி இருந்து விட்டு அலைப்பேசியை அணைத்தவனுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது... அது போல் தான் அவளுக்கும்... வெகு நாட்களுக்குப் பிறகு இருவரும் நிம்மதியான மனநிலையில் உறங்க சென்றனர்...

****

"மித்து... ஏன்டா இன்னும் முழிச்சிக்கிட்டு இருக்க...? தூங்க வேண்டியது தானே..."

மாரடைப்பு வந்து ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு அழைத்து வந்தவருக்குச் சிகிச்சை அளித்து விட்டு இரவு தாமதமாக வீட்டிற்கு வந்தான் அர்ஜூன்...

"என் அஜூக்காக எவ்வளவு நேரம்ன்னாலும் நான் முழிச்சிக்கிட்டு இருக்கத் தயார்..." என்று கொஞ்சல் மொழியில் கூறிய மனைவியைக் கண்டு காதல் பெருக்கெடுத்தது அவனுக்கு...

"நீ இப்படி முழிச்சிக்கிட்டு இருந்தால் எனக்குத் தான் வருத்தமா இருக்கு மித்து..." என்று அவளிடம் பேசியபடி தங்களது அறைக்கு வந்திருந்தான் அவன்...

"என் மேல் அவ்வளவு காதலா அஜூ..." கணவனின் காதலில் மனம் கிறங்கி நின்றிருந்தாள் சங்கமித்ரா...

"காதலும் தான்... ஆனால் இது வேறு..." என்றவனை அவள் புரியாமல் பார்த்தாள்...

அர்ஜூன் சிரித்தபடி தூங்கும் தனது மகனின் அருகில் வந்தவன் அவனைத் தொடாது கைகளைக் கட்டி கொண்டு பார்த்து ரசித்தான்... அவனது பொறுமையான காதலுக்கும்,

அவளது அளவில்லாத காதலுக்கும் சாட்சியாய் ஆர்ப்பாட்டமாய் இந்த உலகிற்கு வந்தவன்... அவர்களது மகனது பெயர் சந்தோஷ்... இரண்டு வயதாகிறது...

"பகல் எல்லாம் என் மகனை கட்டி மேய்க்கிறாய்..."

"அது என்னவோ உண்மை தான் அஜூ... இன்னைக்கு உங்க மகன் என்னைப் படுத்தி எடுத்து விட்டான்... நான் ஹாஸ்பிட்டலில் இருந்து வந்ததும் நான்ஸ்டாப்பா பேச ஆரம்பித்தவன் இப்போது தூங்கும் போது தான் வாயை மூடியிருக்கிறான்... அத்தையும், அக்காவும் எப்படித் தான் இவனைக் கட்டி மேய்க்கிறாங்களோ...?"

"இவனோட அப்பனையே கட்டி மேய்ச்சவங்க உங்கத்தை... இவனை மேய்க்க தெரியாதாக்கும்..."

"ஹா ஹா... அது என்னவோ உண்மை தான்... டாக்டராச்சே ரொம்ப அமைதியானவரா இருப்பாருன்னு நினைச்சால்...? நீங்க செய்றது எல்லாம் வம்பு..."

"நான் அப்படி என்னம்மா உன்னிடம் வம்பு செய்தேன்...?"

கணவனது கேள்வியில் அவளது முகம் சிவந்தது...

"போடா முரடா..." என்று அவள் சிணுங்க...

"என் காதலில் ஒரு துளி தான் நீ பார்த்திருக்க... இன்னும் இருக்குதடி பெண்ணே... வாழ்நாள் முழுவதும் என் காதலில் நான் உன்னை நனைத்துக் கொண்டே இருப்பேன்..."

அதை அவள் உணர்ந்தே இருந்தாள்... உள்ளம் லஜ்ஜையுற அவள் பேச்சை மாற்றினாள்...

"முதல்ல சொல்ல வந்ததைச் சொல்லுங்க..."

"பகல் எல்லாம் என் மகனுக்கு ட்யூட்டி பார்ப்பது போல் இரவு அவனின் அப்பாவிற்கு நீ ட்யூட்டி பார்க்க வேண்டாமோ..." என்று கண் சிமிட்டி சிரித்தவனைக் கண்டு,

"அஜூ..." என்றபடி அருகில் இருந்த தலையணையை எடுத்து அவன் மீது வீசி எறிந்தாள்...

"ஏய் மித்து... நான் இன்னும் குளிக்கலை... குளிச்சிட்டு ப்ரெஷா வந்து உன்னை வச்சிக்கிறேன்..."

"வச்சுக்கோங்க, வச்சுக்கோங்க யார் வேண்டாம்ன்னா...?" என்று அவள் பாவனையாய் நொடித்தாள்...

"அடியேய் பொண்டாட்டி... இதுக்கு நீ கோபப்படணும்..."

"அது எதுக்கு...? என் புருசன் தானே என்னை வச்சிக்கப் போறது... அதனால் எனக்கு முழுச் சம்மதமே..." என்றவளை காதல் பார்வை பார்த்தவனாய் அவன் குளியலறைக்குள் புகுந்தான்...

சங்கமித்ரா முகத்தில் உறைந்த புன்னகையுடன் கட்டிலில் வந்து அமர்ந்தாள்... உறங்கும் மகனை பார்த்த போது அவளது புன்னகை இன்னமும் விரிந்தது... அவர்களது காதல் வாழ்க்கைக்குக் கிடைத்த அரிய வரம் அல்லவா அவன்... அவனைப் பிரசவித்த போது அவளை விட அர்ஜூன் தான் அதிக வேதனை அடைந்தான் தான் ஒரு மருத்துவர் என்பதை மறந்தவனாய்... அதன் பிறகு அவர்களுக்கு இடையிலான பந்தம் இன்னமும் இறுகி போனது...

குளித்து முடித்து வந்த கணவனை ஏறிட்டு பார்க்க முடியாது விழிகளைத் தாழ்த்தி கொண்டாள் அவள்... அதைக் கண்டு அர்ஜூனின் முகத்தில் புன்னகை மலர்ந்தது...

"சாப்பாடு எடுத்து வைக்கும் உத்தேசம் இருக்கிறதா...?"

"ஆங்... போகலாம் வாங்க..."

தன்னைச் சமாளித்துக் கொண்டு எழுந்த மனைவியவளை கண்டு அவன் உல்லாசம் பொங்க பின் தொடர்ந்தான்... உணவு உண்டு விட்டு வரும் வரை அவர்களிடையே கனத்த மௌனம் நிலவியது... அறைக்கு வந்ததும் அவள்,

"நாளான்னைக்கு ஸ்வேதாவுக்கு வளைகாப்பு இருக்கு... நாம போகணும் அஜூ..."

"கட்டாயம் போகணுமா...?" என்றவனின் பார்வை மனைவியவளை பாராது மகனை பார்த்தது...

"என்ன அஜூ இது... சின்னப் பிள்ளை மாதிரி கேள்வி கேட்கிறீங்க...? அவள் என்னோட அத்தை பொண்ணு... நாம போகலைன்னா நல்லா இருக்குமா...?"

"எனக்கு அங்கே போகப் பிடிக்கலை..." என்ற கணவன் அவளுக்கு வித்தியாசமாகத் தெரிந்தான்...

அர்ஜூன் இப்படி எல்லாம் தனது பிடித்தமின்மையை வெளிப்படையாய்க் காட்டியது இல்லை... பிடிக்கிறது, பிடிக்காதது என்று அனைத்தையும் ஒரு புன்னகையுடன் கடந்து செல்லும் ஆற்றல் கொண்டவன் அவன்... அவனா இப்படிப் பேசுகிறான்...? அவளுக்குத் திகைப்பாக இருந்தது...

"ஏன் அஜூ...?"

"ஏன்னா... அங்கே அவன் இருப்பான்... அவனைப் பார்த்து நீ வருத்தப்படுவ... நீ வருத்தப்படுறதை பார்க்கிற சக்தி எனக்கு இல்லை மித்து..."

இது தானா அவனது மனதினை அரித்துக் கொண்டிருக்கும் விசயம்... அவனது காதல் அவளைச் சுகமாய்த் தாலாட்டியது... அதே நேரம் அவளுக்குச் சிரிப்பும் வந்தது... அவன் அருகே வந்து அவனது விழியோடு தனது விழிகளைக் கலந்து,

"அஜூ... நான் உங்க மகனுக்கு அம்மா... இன்னும் நீங்க என்னை நம்பலையா...?"

"இது நம்பிக்கை சார்ந்த விசயம் இல்லை மித்து... நீ என் மகனுக்கு மட்டும் அம்மா இல்லை... எனக்கும் நீ ஒரு தாய் தான்..."

எவ்வளவு அழகாக அவளது காதலை, அவளை அவளது கணவன் கௌரவப்படுத்தி விட்டான்... அவளது விழிகள் கலங்கியது...

"அப்புறம் ஏன் அஜூ...?"

"நீ ஸ்வேதா கல்யாணம் அன்னைக்கு அவனைப் பார்த்து வருத்தியது இப்போதும் என் கண்ணுக்குள் இருக்கு... அதையே என்னால் மறக்க முடியலை... இப்போ மீண்டும் அவனைப் பார்த்து, நீ கண் கலங்கி... ப்ச், என்னால் இதை எல்லாம் தாங்கிக்க முடியாது மித்தும்மா..."

"அப்போ இருந்த மித்து இப்ப இல்லை... இப்போ இருக்கிற மித்துவுக்கு அவளோட கணவன் மட்டும் தான் உயிர்... அவனுக்கு ஏதாவது ஒண்ணுன்னா மட்டும் தான் கண் கலங்குவாள்... ஏன்னா அவனைத் தான் அவள் உயிருக்கு உயிரா காதலிக்கிறாள்..."

"மித்தும்மா..."

காதல் மிகுதியில் அவளை இறுக அணைத்துக் கொண்டான் அவன்...

"ஐயோ... உங்க மகன் எழுந்திரிக்கப் போறான்..."

"அப்போ வா, நம்ம ரூமுக்கு போகலாம்..."

என்றபடி அவன் தனது மனைவியைக் கைகளில் ஏந்தி கொண்டு அவர்களுக்கு என்று தனியே இருக்கும் பிரத்யேக அறைக்குள் சென்றான்... இருவருமே ஒருவரின் காதலை மற்றவருக்கு உணர்த்திக் கொண்டிருந்தனர் தங்களது அணைப்பால், இதழொற்றலால்...

****

ஸ்வேதாவின் வளைகாப்பிற்கு ஹரிப்ரசாத்தும் விடுமுறை எடுத்து விட்டு வந்து விட்டான்... ஏனெனில் அடுத்து ஜெகதீஸ்வரியின் பிறந்தாள் வேறு வருகிறது... அதனால் இரண்டு விழாவிற்கும் சேர்த்து விடுமுறை எடுத்து விட்டான்...

அத்தானின் வருகை உணர்ந்து பிள்ளைகளைத் தன்னுடன் படுக்க அழைத்துச் சென்று விட்டாள் பிரகதீஸ்வரி... ஹரியும், சந்தியாவும் எவ்வளவோ வேண்டாம் என்று தடுத்த போதும் அவள் கேட்கவில்லை...

"அக்கா... அத்தான் கூடச் சந்தோசமா இருங்க... பிள்ளைங்களை நான் பார்த்துக்கிறேன்..." என்று அவள் சந்தியாவிடம் கட்டளையாகக் கூறி விட்டாள்...

"இந்தப் பிரகதியை பாருங்களேன்... பெரிய மனுசி மாதிரி பேசுவதை..." என்று சிரித்தபடி உள்ளே நுழைந்த மனைவியைக் கட்டிலில் அமர்ந்திருந்த ஹரி கண்களால் 'வா'வென அழைத்தான்...

"என்ன அத்தான்...?" என்று நாய்க்குட்டி போன்று தன்னருகில் அமர்ந்த மனைவியின் தன்னலமில்லா அன்பை கண்டு அவனது மனம் அவளிடத்தில் நாய்க்குட்டியாய் மாறிப் போனது தான் விந்தையிலும் விந்தை...

அவளை அணைத்து தனது நெஞ்சில் சாய்த்து கொண்டவன் அவளது உச்சந்தலையில் முத்தமிட்டு,

"தேங்க்ஸ் சந்து குட்டி..."

"எதுக்கு...?" அவனது நெஞ்சில் சாய்ந்தபடி அவள் அவனை ஏறிட்டு பார்த்தாள்...

"எல்லாத்துக்கும்..." என்று புன்னகை புரிந்தவனைக் கண்டு அவளது புன்னகை விரிந்தது...

"நீங்க என்ன சொன்னாலும் நான் கேட்பேன்... இதை நான் கேட்க மாட்டேனா...?" என்றவளை காதலோடு அணைத்து கொண்டவன் மெல்ல அவளது தலையை வருடி கொடுக்க அவள் சுகமாய்க் கண்ணயர்ந்து விட்டாள்...

உறங்கும் மனைவியைப் பார்க்க பார்க்க அவனுக்கு அத்தனை பெருமிதமாக இருந்தது... ஏனெனில் அவள் அவனுக்காக விட்டுக் கொடுத்திருக்கும் விசயம் அப்படி...

ஐந்து வருடங்களுக்கு முன்பு பிரகதீஸ்வரி கணவனைப் பிரிந்து இங்கு வந்த போது சந்தியாவைக் கூப்பிட்டு அவன் தீர்மானமாகச் சொல்லி விட்டான்...

"அம்மா பல தடவை சொன்ன போது கூட நான் கல்யாணத்துக்குச் சரின்னு சொல்லாம தள்ளி போட்டுக்கிட்டே இருந்தேன்... ஏன்னா மாமா ஒரு நாள் என் கிட்ட வாக்கு ஒண்ணு கேட்டார்... 'அம்முவை பத்திரமாகப் பார்த்து கொள்'ன்னு என் கிட்ட உறுதி வாங்கிட்டார்... அதனால் அவளுக்கு ஒரு நல்லது நடக்காம நான் என்னைப் பத்தி கொஞ்சமும் யோசிக்கவில்லை..."

"ஒருவேளை பெரியப்பா மனசில் உங்களுக்குப் பிரகதியை மணம் முடிக்க நினைச்சிருந்து அப்படிக் கேட்டு இருக்கலாம் இல்லையா...?"

அன்று ஹரிக்கும் அப்படித் தான் தோன்றியது... அதனால் தான் அன்று சங்கமித்ரா அவனிடம் காதலை கூறிய போது பிரகதீஸ்வரியை மனதில் வைத்துக் கொண்டு தான் அவன் அப்படிக் கூறியது... அதனால் தான் அன்று அவன் காதலிக்கிறேன் என்று கூறாது, தனது மனதில் வேறு ஒரு பெண் இருப்பதாய் கூறியது... ஏனெனில் அப்போது அவனின் மனதில் பிரகதீஸ்வரி பற்றிய கவலை அரித்துக் கொண்டிருந்தது என்னவோ உண்மை...

"ம்... அப்படி நினைச்சு தான் நானும் அமைதியா இருந்தேன்..."

"அப்போ பிரகதியை கல்யாணம் பண்ண சொல்லி கேட்டிருந்தால் பண்ணியிருப்பீங்களா..." என்ன தான் இருந்தாலும் அவளது மனமும், முகமும் வாடி போனது... அவனை உயிருக்கு உயிராய் நேசிக்கும் காதல் மனைவி அல்லவா அவள்...

"அன்றைய நிலையில் அது தான் நடந்திருக்கக் கூடும்... ஆனால் அம்முவின் பிடித்தம் சித்தார்த் என்னும் போது நாம் இதைப் பற்றிப் பேசுவதே அபத்தம் சந்து குட்டி..."

அவனது செல்ல அழைப்பில் அவளது அலைப்புற்றிருந்த மனம் சமாதானமாகியது...

"இப்போ அம்மு இப்படிக் கணவன் வேண்டாம்ன்னு வந்திருப்பது ரொம்பக் கஷ்டமாயிருக்கு... அதனால் நான் என்ன சொல்ல வர்றேன்னா..."

மேலே சொல்ல தயங்கிய கணவனைக் கண்டு ஆறுதலாய் புன்னகை புரிந்தவள், "எனக்குப் புரியுதுங்க... அவள் எனக்கும் தங்கை தான்..."

"தேங்க்ஸ் சந்து குட்டி..." என்று மனதார மனைவிக்கு நன்றி கூறியவன்,

"இதே இது அப்போ நான் ஏன் விலகி இருக்கவில்லைன்னு உனக்குள் கேள்வி ஒண்ணு வரும்... ஏன்னா அப்போதும் அம்மு கணவனைப் பிரிந்து தான் இருந்தாள்... ஆனால் நம்முடைய கல்யாணம் அவசர திருமணம்... அப்போது தான் நீ உன் அம்மாவை இழந்து இருந்தாய்... அன்புக்கு ஏங்கி கொண்டிருக்கும் சிறு குழந்தையாகத் தான் என் கண்ணுக்கு தோன்றினாய்... முதலில் உனது வருத்தத்தைப் போக்க வேண்டும் என்று நான் நினைத்தேன்... ஏனெனில் எனக்கு ஆயிரம் சொந்தங்கள் இருக்கலாம்... ஆனால் என் மனைவி நீ எனக்கு எப்போதுமே சம்திங் ஸ்பெசல் தான்..."

இப்போது அவளது மனம் அவனிடத்தில் முழுவதுமாய்ச் சரணடைந்தது...

"அம்முவை விட என் மனைவியான உனக்குத் தான் என் அன்பும், அக்கறையும் அதிகம் தேவைப்படுகிறது என்பதை உணர்ந்து தான் நான் உன்னுடன் வாழ ஆரம்பித்தது... ஆம் உனக்காகத் தான் நான் உன்னுடன் வாழ்ந்தது... உன்னுடன் வாழ்ந்த காதல் வாழ்க்கை மேல் நம்பிக்கை கொண்டு கேட்கிறேன்... எப்போது அம்மு வாழ்க்கை சரியாகிறதோ அப்போது தான் நாம் சந்தோசமாக இருக்க முடியும்... எனக்காக நீ இதைச் செய்வாயா...?"

அவளுக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கும் கணவனுக்காக இதைக் கூட அவள் செய்ய மாட்டாளா என்ன...? அன்று சம்மதமாய் அவனது கரத்தின் மீது தனது கரத்தினை வைத்து உறுதி கூறியவள் அந்த உறுதியை இந்த ஐந்து வருடங்களாகக் காப்பாற்றி வருகிறாள்... மனைவியை நினைத்து அவனுக்கு அத்தனை பெருமையாக இருந்தது...

பணம் அதிகம் இல்லாது இருந்த போதும் நிம்மதியான, மகிழ்ச்சியான, ஒற்றுமையான ஒரு வாழ்க்கை அவர்களிடையே இருகிறது...

****

வளைகாப்பு விழா அன்று வழக்கம் போல் தாமதமாக வந்தான் சித்தார்த்... அங்கு வீட்டு வாயிலில் நின்றிருந்த ஹரிப்ரசாத் இவனைக் கண்டு கேலியாய் சிரித்தான்...

"இதில் கூடவா உங்க ரெண்டு பேருக்கும் பொருத்தம்...?"

மனைவியுடன் தன்னை ஒப்பிட்டு ஹரி பேசவும் அவனது முகம் சூரியகாந்தியாய் மலர்ந்தது...

"என் பேபி எங்கே...?"

"பேபி என்று யாரை கேட்கிறாய் சித்து...? கட்டியவளையா...? பெத்தவளையா...?" கேலியாய் கேட்டான் ஹரி...

"என்னுடைய பேபி என் ரதி மட்டுமே..." என்றவனது கர்வ குரலில் காதலே அதிகமாய் இருந்தது...

"அம்முவும் இப்போது தான் ஆபிசில் இருந்து வந்து ட்ரெஸ் மாத்த போயிருக்கிறாள்..." என்று அவன் எதிர் வீட்டினை சுட்டி காட்டினான்...

"அங்கே கூட யாரும் இருக்காங்களா...?" தயக்கத்துடன் கேட்டான் சித்தார்த்...

அதிரடி சித்தார்த் தயங்குவதைக் கண்டு ஹரிக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது...

"அவள் மட்டுமே அங்குத் தனியே இருக்கிறாள்... நீ போய் அவளைப் பார்... யாரும் தொந்தரவு செய்யாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்... ஆனால் சீக்கிரம் வந்துவிடு..."

"தேங்க்ஸ் ப்ரோ..." என்று அவனைக் கட்டிப் பிடித்தான் சித்தார்த்...

"நான் அம்மு இல்லை..." என்று அவனது இறுகிய அணைப்பில் ஹரி அலற...

"என் பேபியை இப்படியா கட்டிப் பிடிப்பேன்... அது வேறு மாதிரி..." என்று கண் சிமிட்டி சிரித்த சித்தார்த் எதிர் வீட்டிற்குள் நுழைய போனான்...

"சித்து... எங்க அம்மு பூ மாதிரி... நீ புயலாய் அவளைச் சாய்த்து விடாதே... பாவம்டா..." என்று கத்திய ஹரி,

"அம்மு ரூம் ரைட் சைட்ல இருக்கு... நீ பாட்டுக்கு லெப்ட்டில் போயிராதே..."

"சித்து ஆல்வேஸ் ரைட் தான்டா..." என்று சிரித்தபடி கூறிய சித்தார்த் எதிர் வீட்டிற்குள் நுழைந்து அதன் கதவை இறுக மூடி தாழ்ப்பாள் போட்டு விட்டு ஹரி கூறிய அறைக்குச் சென்றான்...

மூடியிருந்த அறை கதவை கண்டதும் அவன் ஒரு நொடி தயங்கினான்... பின்பு 'என் மனைவி அறைக்குச் செல்ல நான் யார் கிட்ட பெர்மிசன் கேட்கணும்...?' என்று அலட்சியப் படுத்தியவனாய் கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்...

அப்போது தான் புடவை மாற்றுவதற்காகத் தயாராகிக் கொண்டிருந்த பிரகதீஸ்வரி அறை கதவு திடுமெனத் திறந்ததைக் கண்டு திடுக்கிட்டு திரும்பியவள் அங்கு எதிர்பாராது நின்றிருந்த கணவனைக் கண்டு திகைத்து போய் நின்றாள்...

அத்தகையைத் திகைப்பு அவனுக்கு இல்லை போலும்... வேக நடையுடன் அவள் அருகே வந்தவன் அடுத்தக் கணம்

அதை விட வேகமாய் அவளை அணைத்துக் கொண்டான்...

"ஐ மிஸ் யூ பேபி... ஐ ரியலி மிஸ் யூ... ஐ பேட்லி மிஸ் யூ..." என்று கூறியபடி ஆவேசமாய் அவளது முகம் முழுவதும் முத்தமிட துவங்கினான்...

இத்தனை வருடம் அடக்கப்பட்டிருந்த அவனது காதல் பீறிட்டுக் கொண்டு வெளிவந்தது... கணவனது இதழ் தாக்குதலை கண்டு முதலில் அதிர்ச்சி அடைந்தாலும் பிறகு அவனுக்கு ஒத்துழைப்பு கொடுத்தபடி அவள் கட்டிலில் மல்லாந்து விழ, அவளோடு சேர்ந்து அவனும் அவள் மீது விழுந்தான்...

எலும்புகள் நொறுங்கி விடும் அளவுக்கு இருந்த அவனது ஆவேச இறுகிய அணைப்பு, வலியுடன் கூடிய அவன் கொடுத்த இன்பமான இதழொற்றல் எல்லாம் சேர்ந்து அவளுள் அவர்களது தேனிலவு காதலை ஞாபகப்படுத்தியது... அவனுள்ளும் அதே எண்ணம் தான் போலும்...

"ஆளில்லாத தீவுக்கு உன்னைக் கடத்திட்டு போகணும்ன்னு தோணுதுடி பேபி... நீயும், நானும் மட்டுமாய்க் காதலாய் களித்திருக்கணும்ன்னு மனம் பேராசை கொள்ளுதடி ரதிம்மா..."

காதலில் கசிந்துருகிய கணவனைக் கண்டு அவளது விழிகளும் கசிந்துருகியது... அப்போது அவள் அவனது காதில் அந்த வார்த்தைகளைக் கூறினாள்... அவன் முத்தமிடுவதை விடுத்து அவளது முகம் பற்றி அவளை ஆச்சிரியமாகப் பார்த்தான்... அத்தனை சந்தோசம் அவனது முகத்தில்...

"ஆளில்லாத தீவு எல்லாம் வேண்டாம் மாமு... நம்ம வீட்டுக்கு எப்போ கூட்டிட்டு போறீங்க...?"

"துரோகத்திற்குத் துரோகம்
பகைக்குப் பகை
குரோதத்திற்குக் குரோதம்

கைக்குக் கை
காலுக்குக் கால்
பழிக்கு பழி
என் அகராதியை
மாற்றியமைத்த அகராதியே...
அகராதிக்கே அர்த்தம்
சொன்ன புது அகராதியே...
அன்பே சிவமாம்...
இல்லையடி பெண்ணே,
அன்பே நீயடி...!!!"

நனவாகும்...!!!

மனைவியின் வார்த்தைகளில் அகமும், முகமும் மலர்ந்திருந்த சித்தார்த் அடுத்த நொடி உற்சாகம் குறைந்தவனாய் பிரகதீஸ்வரியை விட்டு விலக முயன்றான்... அவளோ அவனை விலக முடியாதபடி அவனைத் தடுத்தாள்... இரும்பு பிடியாய் அவள் அவனை இறுக்கி பிடிக்கவில்லை என்றாலும் அவளது மென்மையான பிடியை விலக்க மனமில்லாது அவன் அப்படியே இருந்தான்...

வலியவனைத் தன் மீது சுமந்து கொண்டிருந்த மெல்லியாளுக்கு அவனது உடல் பாரம் தெரியவில்லை போலும்... அவள் மனதில் சுமந்து கொண்டிருந்த அவன் மீதான அளவுக்கு அதிகமான காதலினால் அவனது பாரம் அவளுக்கு உறைக்கவில்லையோ...

"மாமூ...?"

கணவனது முகத்தில் தெரிந்த உணர்வற்ற நிலையைப் படித்தவாறு அவள் அவனைக் கலக்கத்துடன் பார்த்தாள்...

"மகளுக்காக என்னைச் சகித்துக் கொள்கிறாயா பேபி...?" என்ன முயன்றும் அவனது வருத்தம் அவனது வார்த்தைகளில் இழையோட தான் செய்தது...

"என்ன பேசுறீங்க மாமூ...? ஜிக்கிக்காக என்றால் அவள் பிறந்த போதே நான் உங்களிடம் வந்திருக்கணுமே..."

அதை அவள் சொல்லும் போது அவனது விழிகளில் அத்தனை வேதனை தெரிந்தது... அதற்கு மேல் அவனால் முடியவில்லை... வலுக்கட்டாயமாக அவளை விட்டு விலகி கட்டிலில் அமர்ந்தான்...

அவளும் எழுந்து அவன் அருகில் அமர்ந்து அவனது தோளில் தலை சாய்ந்து கொண்டாள்... அவனது வருத்தமான அந்த நேரத்திலும் அவனது கை அவளை ஆறுதலாய் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டது...

"நீ உண்மையாகத் தான் சொல்கிறாயா பேபி...?" அவனது குரலில் தெரிந்த கலக்கத்தில் அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்...

"நான் பொய் சொல்ல மாட்டேன்னு உங்களுக்குத் தெரியாதா...?"

அவளது கூற்றைத் தலையசைத்து ஆமோதித்தவன், "திரும்ப நீ என்னை விட்டு போயிட்டால்...? இன்னொரு பிரிவை தாங்கிக்கிற சக்தி எனக்கு இல்லை..."

வேதனையுடன் கூறியவனின் முகத்தைத் தனது கைகளில் தாங்கியவள் அவனது விழிகளை நேருக்கு நேர் நோக்கியபடி,

"இனிமேல் நான் உங்களைப் பிரிந்தால் அது எனது உயிர் என் உடலில் இருந்து பிரியும் போது தான்..." என்றவளை அடுத்த நொடி இறுக அணைத்துக் கொண்டான் அவன்...

"லூசாடி நீ... அந்த மரணம் கூட இந்தச் சித்தார்த்தை தாண்டி தான் உன் கிட்ட வர முடியும்..." என்று அவன் அவளைச் செல்லமாய்க் கடிந்தான்...

"நான் லூசு தான்... உங்க மேல் லூசாகி எட்டு வருசத்துக்கு மேலாகிறது..." என்று கண் சிமிட்டி சிரித்தவள்,

"நீங்க ஒரு டெரர்ன்னு அந்த எமதர்மனுக்கே தெரிந்திருக்கும்..." என்று கூறி கலகலவெனச் சிரித்தவளை ஆசையுடன் பார்த்திருந்தவன்,

"ஆனால் எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு பேபி... இன்னொரு தடவை நீ என்னை விட்டு பிரிந்தால் நான் செத்து போவேன்டி..." என்ற கணவனைக் கண்டு சிரிப்பை மறந்தவளாய் இமைக்க மறந்து பார்த்திருந்தாள் அவள்...

எதையும் வெளியில் காட்டி கொள்ளாது கம்பீரமாகப் புன்னகையுடன் வலம் வரும் கணவனின் வேதனையை உணர்ந்தவளாய் அவள் திகைத்து போய் அமர்ந்திருந்தாள்...

"அன்னைக்கு நீ சொன்ன வார்த்தைகள் இன்னமும் என் காதுகளில் ஒலிச்சு கிட்டு இருக்கு... நீ சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் என்னை உயிரோடு கொல்லுது பேபி... காதல் ஒருத்தரை வாழ வைக்கணும்... ஆனால் என் காதல் உன்னைக் கொன்னுரும்ன்னு நீ சொன்னப்போ அதைக் கேட்டு நான் உள்ளுக்குள் செத்து போயிட்டேன்டி... இப்போ சின்னப் பிள்ளைக்கு மிட்டாய் காட்டி ஏமாத்தின மாதிரி திரும்பவும் நீ என்னை ஏமாத்திறாதே... இன்னொரு ஏமாற்றத்தை என்னால் தாங்கிக்க முடியாது..."

அவனது இத்தனை நாள் வேதனையை, வருத்தத்தை வார்த்தைகளில் வடித்துக் கொண்டிருந்தவனைக் கண்டு அவளது விழிகள் கலங்கியது...

"மாமூ... நான் என்ன செய்தால் நீங்க நான் சொல்றதை நம்புவீங்க..." என்றவள் அடுத்த நொடி தன் தலை மீது கை வைத்து,

"என் மேல்..." மேலே கூறும் முன் அவளது வாயை ஒரு கை கொண்டு மூடியவன் மறு கை கொண்டு அவளது கரத்தினை எடுத்து தனது தலை மீது வைத்தான்...

"என் மீது சத்தியம் பண்ணு..." என்றவனது புன்னகை மீண்டது... அதைக் கண்டு அவளும் உள்ளம் மகிழ்ந்தாள்...

"இன்னும் நீங்க என்னை நம்பலையா...?" என்று சிணுங்கியவளை கண்டு வாய் விட்டு சிரித்தவன்,

"நம்பிக்கை இல்லாமலா இத்தனை வருசம் உனக்காக நான் காத்துக்கிட்டு இருக்கேன்... எந்தவொரு துன்பமும் என்னைத் தாண்டி தான் உன் கிட்ட வரணும்... என்ன புரிந்ததா...?"

அவள் புரிந்தார் போன்று தலையை ஆட்டினாள்...

"உன் மீது எனக்கு அதிக நம்பிக்கை இருக்கிறது... என் நம்பிக்கையே நீ தான்டி..." என்றவனைக் கண்டு மீண்டும் அவளது விழிகள் கலங்கியது... அவனது நம்பிக்கை

ஒன்றை கூட அவள் காப்பாற்றினாளா என்று கேட்டால் அதற்குப் பதில் இல்லை மட்டுமே...

"என்னோட சுயலாபத்துக்காக உன்னைக் காதலிச்சுக் கல்யாணம் பண்ணி உன்னை ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேனோ என்று நினைக்கும் போது எனக்கு ரொம்பக் கஷ்டமாயிருக்கு பேபி... உன் வாழ்க்கையை நான் அழிச்சிட்டேனோன்னு எனக்கு ஒரே குற்றவுணர்ச்சியா இருக்கு... நீ என்னைக் கல்யாணம் பண்ணாது வேறு யாரையாவது பண்ணியிருந்தால் நிம்மதியா இருந்திருப்ப இல்லையா...?"

கணவன் கூறியதை கேட்டு அவள் அருவருப்புடன் முகத்தைச் சுளித்தாள்...

"ச்சீ, ச்சீ... ஏன் இப்படி எல்லாம் பேசுறீங்க...? நான் போய் வேறு யாரையோ கல்யாணம் பண்ணிக்கிறதா...? இனி இப்படி எல்லாம் நீங்க பேசினீங்கன்னா நான் உங்களுக்கு உதை தான் கொடுக்கப் போறேன்... நீங்க சுயலாபத்துக்காக என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்களா...? இது என்ன புதுக் கதை...? நீங்க என்னை எனக்காகத் தான் கல்யாணம் பண்ணிக்கிட்டீங்க... இது எனக்கு நல்லா தெரியும்..." என்றவள் அவனைக் குறும்பாகப் பார்த்துக் கொண்டு,

"மாமூ... என் புருசன் கூட நான் சேராம இருக்கணும்ங்கிறதுக்காக நீங்க திட்டம் போடுறீங்களா...? உங்க திட்டம் வெற்றி அடையாது மாமூ..."

மனைவியின் குறும்பில் அவனது கலக்கம் மறைந்து அவன் வாய் விட்டுச் சிரித்தான்...

"ஹா... ஹா... மனைவி கிட்ட அடி வாங்காத கணவன் உலகில் கிடையாது... அதனால் உன் உதையை விருப்பமாய் வாங்கிக் கொள்கிறேன்..." என்றவனைக் கண்டு காதல் பெருக்கெடுக்க அவள் எம்பி அவனது கன்னத்தில் முத்தமிட்டாள்... அதில் மகிழ்ந்தவனாய் அவளை இறுக்கமாய் அணைத்து கொண்டவன்,

"உண்மையாவா சொல்ற பேபி... நீ என்னுடன் நம் வீட்டிற்கு வருகிறாயா...?" என்றவனைக் கண்டு அவள் சிரித்தபடி,

"ப்ராமிசா மாமூ.." என்றாள் அவன் தலை மீது கை வைத்து... அதைக் கண்டு அவனது புன்னகை மீண்டது...

"வரம் கொடுத்த இறைவன் தலை மீது கை வைத்த கதையாக இருக்கிறதே..." என்று அவன் சிரித்தபடி கூறிய போது அவனது அலைப்பேசி அழைத்தது... ஹரி தான் அழைத்திருந்தான்... புன்னகையுடன் அதை உயிர்ப்பித்துக் காதில் வைத்தவன்,

"இன்னும் கொஞ்சம் நேரம்டா..." என்றான் சித்தார்த் கெஞ்சும் குரலில்... அதற்கு ஹரி என்ன பதில் கூறினானோ ஆயிரம் வாட்ஸ் பல்ப் போட்டது போல் அவனது முகம் ஒளிர்ந்தது... அவன் உல்லாசமாய் விசிலடித்தபடி அலைப்பேசியை அணைத்தான்...

"அத்தான் என்ன சொல்றார்...?" என்ற மனைவியின் இடை மீது கை வைத்து அவளை அலேக்காகத் தூக்கி தனது மடி மீது வைத்து கொண்டவன் அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்தபடி,

"என் மனைவியை நல்லா கொஞ்ச சொன்னான்..." என்றவன்,

"பேபி... ஒரு ஷார்ட் ஃபிலிம் ஓட்டலாமா...?" என்று தாபத்துடன் கேட்க...

"அச்சோ வேண்டாம்..." என்று அவள் அலறியடித்துக் கொண்டு அவன் மடியில் இருந்து எழுந்தாள்...

"த்ச்சு... என்னடி இது...?" அவள் கைப்பிடித்து அவன் தடுத்தான்...

"மாமூ... உங்க ஷார்ட்க்கு என்ன மீனிங்ன்னு எனக்குத் தெரியும்... முதல்ல இடத்தைக் காலி பண்ணுங்க..." கையை ஆட்டி ஆட்டி பேசிய மனைவியின் மற்றொரு கரத்தையும் தனது பிடியில் அடக்கி கொண்டவன்,

"போக முடியாது போ..." என்று சிறு குழந்தையாய் அவன் அடம்பிடிக்க... அதைக் கண்டு முதலில் விழித்தவள் பின் புன்னகையுடன்,

"மாமூவுக்கு ஷார்ட் ஃபிலிம் வேணுமா...? இல்லை லாங் ஃபிலிம் வேணுமா...?" என்று அவள் 'லாங்' என்ற வார்த்தையை இழுத்து சொன்ன விதத்தில் அவன் கள்ளுண்ட வண்டாய் அவளது பேச்சிற்கு மயக்கத்துடன் தலையாட்டியபடி எழுந்தான்...

அவசரமாய் அவளது இதழ் மீது முத்தம் ஒன்றை வைத்தவன், "இதை நீ எப்போதும் மறக்க கூடாது..." என்று கூறியவன் விரிந்த புன்னகையுடன் அறையை விட்டு வெளியேறினான்...

கணவனது வார்த்தையில் அவளது மனம் நாண, வெட்கத்துடன் அறை கதவை தாளிட்டவள் உடையை மாற்ற துவங்கினாள்... அவளது மனம் முழுவதும் மனம் கவர்ந்தவனின் இனிமையான எண்ணங்களே கரும்பாய் தித்தித்து வியாபித்து இருந்தது...

மிதமான ஒப்பனை செய்தவள் கண்ணாடி பார்த்து நெற்றியில் குங்குமம் இடும் போது இத்தனை நாள் அவளது மனதில் இருந்த அலைப்புறுதல் அகன்று தனது சொந்த இடம் வந்து சேர்ந்த நிம்மதி, சந்தோசம் நிறைந்திருந்தது...

அறை கதவு திறக்கும் சத்தம் கேட்டு தான் படித்துக் கொண்டிருந்த செய்தித்தாளில் இருந்து கண்களை விலக்கியச் சித்தார்த் நிமிர்ந்து பார்த்தான்... தேவதை போல் வந்து நின்ற மனைவியைக் கண்டு இமைக்க மறந்து, மூச்சு விட மறந்தவனாய் கைகளில் இருந்த செய்தித்தாள் நழுவி கீழே விழ அவன் அப்படியே எழுந்து நின்றான்...

கணவனது பார்வை கண்டு வெட்கத்தில் முகம் சிவக்க புன்சிரிப்புடன் அவன் அருகில் வந்து நின்றவளை கண்டு அவன்,

"வாவ்... சூப்பர் பேபி" என்றான் வியந்தபடி...

"உண்மையாவா...?"

"உண்மையா தான்டி... அன்னைக்குப் பார்த்த மாதிரி அதே அழகோடு நீ இருக்கிற..." என்றவன் அவளை அணைக்க அருகில் வர,

"உங்க முரட்டுத்தனத்தை நான் தாங்கிக்குவேன்... ஆனால் பட்டு புடவை தாங்காது மாமூ... சோ கீப் டிஸ்டன்ஸ்..." என்றாள் அதிகார குரலில்...

"கலெக்டர் மேடம் சொன்னால் கேட்டு தான் ஆகணுங்க..." கை கட்டி, வாய் பொத்தி நின்ற கணவனைக் கண்டு அவளுக்குச் சிரிப்புப் பொங்கியது...

"சரி வா போகலாம்... ஹரி ஃபோன் பண்ணிக்கிட்டே இருக்கான்..." என்று நகரப் போனவனைப் பிடித்துத் தடுத்து நிறுத்தினாள்...

"என்ன பேபி ஃபங்கசனுக்குப் போக வேண்டாமா...?" அவனது குரலில் அப்படி ஒரு ஆர்வம் வழிந்தது...

"எப்போ பாரு அதே நினைப்பு தானா உங்களுக்கு...?" என்று அவனது கையில் செல்லமாய் அடித்தவள் அவனது சட்டையைச் சுட்டி காட்டி,

"இப்படியேவா போகப் போறீங்க...?"

அப்போது தான் அவனும் தனது சட்டையைப் பார்த்தான்... அவள் அணைத்ததில் அது ஆங்காங்கே கசங்கியிருந்தது பரிதாபமாக... அதை ரசனையுடன் பார்த்தது அவனது விழிகள்...

"நீ பார்க்க தான் பூ மாதிரி... ஆனால் எனக்கு மட்டும் தான்டி தெரியும் நீ ஒரு புயல்ன்னு..." என்று கண் சிமிட்டியவனை முறைக்க முயன்று தோற்று அவனது தோள் வளைவில் முகம் புதைத்தாள் அவள்...

"இப்போ என்ன செய்றது பேபி...?" என்றவனை நோக்கி அபயம் அளிப்பது போல் கையை உயர்த்தியவள்,

"யாம் இருக்கப் பயமேன்..." அதைக் கேட்டு அவனது புன்னகை விரிந்தது...

அவனை அழைத்துக் கொண்டு அறைக்குள் சென்றவள் அங்கிருந்த அலமாரியை திறந்து உடைகளைக் காட்டி,

"இது எல்லாம் இந்த ஐந்து வருசத்தில் உங்களுக்காக நான் வாங்கிய உடைகள்... உங்களுக்குப் பிடிச்சதை எடுத்து போட்டுக்கோங்க..."

இத்தனை வருடங்கள் ஒருவரை ஒருவர் பிரிந்திருந்த போதும் மனதால் இருவரும் ஒன்று போல் வாழ்ந்திருப்பதை உணர்ந்தவனாய் அவனது விழிகள் கலங்கியது...

"நீயே எடுத்து கொடு பேபி..."

அவள் சிரித்தபடி அவனுக்கான உடையைத் தேர்ந்தெடுத்து கொடுத்தாள்... அவன் உடை மாற்றியதும் இருவரும் சேர்ந்து விழாவிற்குச் சென்றனர்...

சரவணன் வீட்டிற்குள் நுழைய போன இருவரையும் வாயிலிலேயே மடக்கி விட்டாள் அவர்களது செல்ல மகள்... மகளைக் கண்டதும் சித்தார்த்தின் முகத்தில் பதற்றம் வந்து ஒட்டி கொண்டது... எதற்கும் கலங்காதவன் அடுத்து என்ன நடக்கக் கூடுமோ என்கிற அச்சத்தில் மனைவியை அணைத்திருந்த தோளை இறுக பற்றினான்...

அவனது கை இறுக்கத்திலும், அதன் நடுக்கத்திலும் அவனது மனநிலையை உணர்ந்தவளாய் பிரகதீஸ்வரி தவிப்புடன் இருவரையும் மாறி மாறி பார்த்தாள்... கணவனது கலக்கம் கண்டு அவள் பெரிதும் தவித்துப் போனாள்...

பெற்றோரின் இந்தத் தவிப்பு அநாவசியம் என்பது போல் ஜெகதீஸ்வரி சித்தார்த்தை கண்டு, "அப்பா..." என்று

கூவியபடி ஓடி வந்து அவனது கால்களைக் கட்டி கொண்டாள்... அந்தக் கணம் சித்தார்த் என்ன மாதிரி உணர்ந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை...

"ஜிக்கி... மை லவ்..." கண்கள் பனிக்க மகளைத் தூக்கி அணைத்து கொண்டவன் அடுத்த நொடி அவளைத் தனது முத்தத்தால் குளிப்பாட்டி தனது அன்பினை முழுவதுமாய் அவளுக்கு உணர்த்தினான்... மகளும் அவனது கரத்தில் பாந்தமாய் அடங்கிக் கொண்டாள்...

இருவரது பாச பிணைப்பிணை கண்டு அங்கிருந்தவர்களின் விழிகள் கலங்கியது... இதற்குத் தானே அவர்கள் எல்லோரும் ஆசைப்பட்டது...

பிரகதீஸ்வரி கணவனையும் மகளையும் பார்த்தபடி விழிகளில் விழிநீர் துளிர்க்க, மனம் நெகிழ நின்றிருந்தாள்...

"மீ ஆல்சோ அப்பா... ஐ லவ் யூ..." என்றபடி ஜெகதீஸ்வரியும் பதிலுக்குத் தனது தந்தைக்கு முத்தம் கொடுக்க அதில் சித்தார்த்தின் விழிகள் கசிந்துருகி விட்டது...

"மாமூ..." என்றபடி மனைவி அவனது கை பற்றி உலுக்க... அவன் சுதாரிப்பதற்குள் மகள் தந்தையின் கண்ணீரை பார்த்து விட்டாள்...

"பேட் பாய் தான் அழுவாங்க... குட் பாய் அழ கூடாது... நீங்க குட் பாய் தானே..." என்றபடி அவனது கண்ணீரை அவள் துடைத்து விட... அதில் மேலும் கண்ணீர் மல்க நின்ற சித்தார்த்,

"நான் பேட் பாயா...? குட் பாயா...? நீயே சொல்லு..." அதற்கு ஒரு நொடி கூடத் தாமதிக்கவில்லை சின்னச் சிட்டு...

"அம்மா சொல்லியிருக்காங்க... நீங்க ரொம்ப நல்லவங்கன்னு... சோ மை டாடி இஸ் ஆல்வேஸ் குட்..." என்று அவனது கழுத்தை கட்டி கொண்டாள் மகள்...

"ஆமாம் உங்கப்பாவை உனக்கு எப்படித் தெரியும் ஜிக்கி...?" என்று கண்ணன் வெகுளியாய் கேட்டான்...

ஏனெனில் அவனுமே இதுநாள் வரை சித்தார்த்தை நேரிலோ, புகைப்படத்திலோ பார்த்தது கூட இல்லை... அதனால் தான் அவன் அப்படிக் கேட்டான்... கண்ணனின் கேள்வியில் எல்லோருமே திகைத்து போய் நின்று விட்டனர்...

சித்தார்த்தின் மனம் பயத்தில் படபடவென அடித்துக் கொண்டது... அவனது பயத்தை அவனது மகள் தனது சிரிப்பால் ஒன்றும் இல்லாததாக்கி விட்டாள்...

"அய்யே கண்ணா... உனக்கு ஒண்ணுமே தெரியலை... அம்மா யார் கூட க்ளோசா இருப்பாங்க...? அப்பா கூட மட்டும் தானே... அதான் எங்க அம்மா கூட க்ளோசா இருந்தது என் அப்பா தான்னு நான் கண்டுபிடிச்சிட்டேன்..." என்று அவள் கிளுக்கி சிரிக்க...

அவர்களது மகள் தந்தையின் அறிவு கூர்மையையும், தாயின் மன பக்குவத்தையும் கொண்டு பிறந்திருந்தாள்... மகள் கூறியதை கேட்டுச் சித்தார்த்திற்கு அப்படி ஒரு சிரிப்பு பீறிட்டது...

"அம்மா கூட நான் க்ளோசா இருந்தேனோ...? எப்படி...?" என்று மகளிடம் அறியாதவன் போல் கேட்க...

"இப்படி..." என்று மகள் அவனது தோள் மீது கை போட்டு அணைத்துக் காண்பித்தது... அவன் தனது மனைவியை அணைந்திருந்தது போல்...

அதைக் கண்டு அவன் சிரித்தபடி மனைவியைப் பார்த்துக் கண் சிமிட்டினான்... அவனது செய்கை கண்டு பிரகதீஸ்வரி அவனை முறைத்து பார்த்தாள்...

"இனி ஜிக்கி முன்னாடி க்ளோசா இருங்க நான் உங்களை க்ளோஸ் பண்றேன்..." என்று பல்லை கடித்துக் கோபம் கொண்டவளை கண்டு கோபம் கொள்ளாது அவன் காதலாகப் பார்த்து வைத்தான்...

"ஆஹா... என் மனைவிக்குக் கோபப்படத் தெரியும்ன்னு இன்னைக்குத் தான் எனக்குத் தெரியும்..." என்றவனது குரலில் அத்தனை உல்லாசம் இருந்தது...

"அப்பா மேல கோபமா ஜிக்கி...?" என்று அவன் மகளிடத்தில் கேட்க...

"எதுக்கு...?" மகள் பாவனையாய் கேட்டதில் அவனது மனம் மயங்கியது...

"அன்னைக்கு ஸ்கூலில் உன்னை அடையாளம் காட்டிக்காம இருந்தேன்ல அதுக்கு..."

"நீங்க சொல்லியிருந்தாலும் எல்லோர் முன்னாடி நான் உங்களை அப்பான்னு கூப்பிட்டு இருக்க மாட்டேன்... பெரியப்பா சொல்லி கொடுத்து இருக்காங்க... அம்மா கலெக்டராகி இருக்காங்க... பப்ளிக் ப்ளேசில் அம்மாவை பார்க்கும் போது அம்மாவை சொந்தம் கொண்டாட கூடாதுன்னு... நீங்க அன்னைக்கு ஸ்கூலுக்குச் சீஃப் கெஸ்ட்டா தானே வந்திருந்தீங்க... சோ நான் உங்களை அப்பான்னு கூப்பிட்டு இருக்க மாட்டேன்..."

மகள் சொன்னதும் சித்தார்த்தின் விழிகள் அங்கு மகிழ்ச்சியோடு நின்றிருந்த ஹரியை பார்த்து தனது நன்றியை தெரிவித்தது... அதையும் ஹரி புன்னகையுடன் ஏற்றுக் கொண்டான்... தனது கோபத்தினையும் இதே மாதிரி புன்னகையுடன் தான் ஹரி ஏற்றுக் கொண்டான்... அவனை நினைத்து இவனுக்குத் தான் ஒரே குற்றவுணர்வாகப் போய் விட்டது...

“இது எப்போ நடந்தது...?” பிரகதீஸ்வரி கணவனிடம் தாழ்ந்த குரலில் கேட்டாள்... அதில் அவனது கவனம் ஹரியிடம் இருந்து மனைவியிடம் தாவியது...

“ஜிக்கியோட ஸ்கூல் ஸ்போர்ட்ஸ் டேக்கு ஐயா தான் சீஃப் கெஸ்ட்...” என்றான் பெருமையாக...

“என் கிட்ட நீங்க சொல்லவே இல்லையே...” மனத் தாங்கலுடன் உரைத்த மனைவியைப் பார்த்தவன் ஒன்றும்

பேசாதிருந்தான்...

மகள் தன்னை 'அங்கிள்' என்று அழைத்த கதையைக் கூறி அவளைக் கஷ்டப்பட வைக்க அவனால் என்றும் முடியாது... அதனால் அவன் பேச்சை மாற்றினான்...

"இது எனக்கும், என் மகளுக்குமான ரகசியம்... நீ இடையில் வராதே..." என்றான் கேலியாய்...

"ம்க்கும்... நடத்துங்க நடத்துங்க..." என்று முறுக்கி கொண்டு நகர முனைந்த மனையாளின் கை பிடித்துத் தடுத்தவன்,

"பேபி... ஆனால் நம்ம ரெண்டு பேருக்கும் பொதுவான ரகசியம் நம் மகள்..." என்று அவன் குறும்பாய் கண் சிமிட்டினான்...

அதைக் கண்டு அவள் நாணம் கொள்ள, மன்னவன் விழிகளால் மனைவியை ரசித்துப் பார்த்தான்...

"ஹலோ... இன்னைக்கு ஹீரோ, ஹீரோயின் நாங்க ரெண்டு பேரும்... எங்களை யாராவது கவனிங்க..." என்று சரவணன் குரல் கொடுக்க... எல்லோரது கவனமும் அவனிடம் திரும்பியது...

"அடேய்... நீங்க ரெண்டு பேரும் ஹீரோ, ஹீரோயின் இல்லைடா... தங்கச்சி வயித்தில் இருக்கிற என் மருமகளோ, மருமகனோ தான் இன்னைக்கு விழா நாயகர்கள்..." என்று சரவணனை ஹரி கிண்டலடித்தான்...

"ஏதோ ஒண்ணு... முதல்ல எங்களைக் கவனிங்க... பாவம் ஸ்வீட்டி எவ்வளவு நேரம் தான் இந்தக் கனமான பட்டு புடவையைத் தூக்கி சுமந்துட்டு இருப்பாள்..." என்று மனைவியிடம் அவன் காதலில் உருக... அதைக் கண்டு ஸ்வேதா முகத்தில் வெட்கம் எட்டி பார்த்தது...

"சரவணா... கொஞ்ச நேரம் வாயை மூடிட்டு இருடா..." என்று அவள் தனது வெட்கத்தைக் கூட அவனிடம் காட்டாது மிரட்டியபடி மறைத்தாள்...

"உன் இதழ் கொண்டு மூடினால் என் வாய் தானாக மூடி விடும்..." என்று கவிதை போல் வசனம் பேசியவனைக் கண்டு திட்ட முடியாது அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள் ஸ்வேதா...

விழாவிற்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கச் சித்தார்த் மனைவியை மறந்தவனாய் மகளிடம் ஐக்கியமாகி போனான்... அவளது மழலை பேச்சில் மனம் மயங்கி போனவன் மனைவியை மட்டுமல்லாது சுற்றுப்புறத்தையும் சேர்த்து மறந்து போனான் என்று தான் சொல்ல வேண்டும்...

"கண்ணா... நீயும் வா..." மகள் அழைக்கவும் தான் சித்தார்த் கண்ணனை பார்த்தான்...

"வா கண்ணா..." என்று அவனும் சின்னவனை அழைத்தான்...

சித்தார்த் அழைத்ததும் கண்ணன் அவன் அருகில் மெதுவே வந்தான்... உடனே சித்தார்த் அவனைத் தனது மடியில் தூக்கி வைத்துக் கொண்டான்... அவனது இரு புறமும் இரு மக்கட் செல்வங்கள்...

"கண்ணா எழுந்திரு... சித்தப்பா பாவம்..." என்று சந்தியா அவனைச் சத்தம் போட...

"இருக்கட்டும் சந்தியா..."

"உங்களுக்குக் கால் வலிக்கப் போகுது அத்தான்..."

"இது எல்லாம் சுகமான சுமைகள் சந்தியா..." என்றவன் இரு பிள்ளைகளுக்கும் கன்னத்தில் முத்தம் கொடுத்தான்...

சந்தியாவைத் தள்ளி அழைத்துக் கொண்டு போன ஹரி அவளிடம், "கொஞ்ச நாள் அவங்க ரெண்டு பேரும் பிள்ளைங்களைப் பார்த்துக்கிடட்டும்... நாம ஜாலியா இருக்கலாம்... எத்தனை வருசமாச்சு நாம ஜாலியா இருந்து...?" என்று அவன் மனைவியிடம் சரசமாய்

வழிந்தபடி அவர்களுக்கான இரவு விருந்திற்காக இப்போதே அச்சாரம் போட...

"ம்... ம்... சரி அத்தான்..." என்று வெட்கத்துடன் பதிலளித்த சந்தியா கணவன் முகம் பார்க்க நாணி அங்கிருந்து ஓடி விட்டாள்...

விழா ஆரம்பிக்கும் போது அர்ஜூன், சங்கமித்ரா வந்தனர் தங்களது மகனுடன்... எல்லோரும் வரவேற்றது போல் ஹரியும் அவர்களைப் புன்னகையுடன் வரவேற்றான்...

"பெரியப்பா கிட்ட வா சந்தோஷ்..." என்று அவன் சின்னவனைப் பாசத்தோடு தூக்கி கொண்டான்...

ஹரி இதுவரை சந்தோஷை பார்த்தது கூடக் கிடையாது... ஆனாலும் அவன் அன்போடு தங்களது மகனை தூக்கி கொண்டது கண்டு அர்ஜூன் அவனை ஆச்சிரியமாகப் பார்த்தான்... அர்ஜூன் தன்னைப் பார்ப்பதை கண்டு ஹரி அவனைப் பார்த்துப் புன்னகைத்தான்...

"அப்புறம் எப்படி இருக்கீங்க அர்ஜூன்...?" என்று பேச ஆரம்பித்த ஹரியை கண்டு அவன் இன்னமும் வியந்து போனான்...

ஹரி எந்த நிலையிலும் அவனைக் கேவலமாய்ப் பார்க்கவில்லை... 'என்னிடம் காதல் சொன்ன பெண்ணைத் தானே நீ கல்யாணம் பண்ணியிருக்க...?' என்று கர்வமாய் அவனைத் துச்சமாய் நோக்கவில்லை...

ஹரியின் ஒவ்வொரு செயலிலும் இகழ்ச்சி இல்லாது தோழமையுடன் கூடிய நட்பு இருந்தது... அவனது நட்புக்கு தோள் கொடுத்திட நினைத்து அர்ஜூனும் அவனிடம் சாதாரணமாகப் பேச ஆரம்பித்தான்... ஹரியுடன் பேசியபடி அவனது கண்கள் தனது மனையாளை தேடியது... அந்நேரம் சங்கமித்ராவும் அவனைத் தான் பார்த்து கொண்டிருந்தாள் பெருமையாக... அவளது கர்வத்தில், காதலில் அந்தக் காதல் கணவன் உயிர்த்து எழுந்தான் தனது மன கசப்பில் இருந்து...

ஸ்வேதாவிற்கு நலுங்கு செய்து அவளது கைகளில் வளையல்கள் அடுக்கிய போது ஒரு பெண்ணாய் பெண்ணவள் வெட்கம் கொள்ள, ஆணாய் சரவணன் கர்வம் கொண்டு சந்தோசமாய் அந்தக் காட்சியைப் பார்த்திருந்தான்...

அதைக் கண்டு எல்லா ஜோடிகளுக்கும் தங்களது நினைவுகள் பின்னோக்கி சென்றதில் தங்களுக்குள் அர்த்தம் பொதிந்த பார்வையைப் பரிமாறி கொண்டனர்... சித்தார்த் மட்டும் தனக்குள் இறுகி போய் அமர்ந்திருந்தான்... அவன் இத்தகைய சந்தோசத்தை இழந்து விட்டானே... இப்போது அவன் அதை வேண்டி நின்றாலும் அவனுக்குக் கிட்டாதே...

கணவனின் கலக்கம் உணர்ந்து பிரகதீஸ்வரி ஆறுதலாய் அவனது கரத்தோடு தனது கரத்தை கோர்த்துக் கொண்டு,

"இப்படியே கவலைப்பட்டுக் கிட்டு இருந்தா எப்படி மாமு...? இன்னும் ஏழு மாசத்தில் இப்படி ஒரு ஃபங்கசனுக்கு நீங்க ஏற்பாடு பண்ண வேண்டாமா...?"

தனக்குள் மூழ்கியிருந்தவன் மனைவியின் பேச்சை சரியாகக் கவனிக்கவில்லை...

"என்ன சொன்ன பேபி...?" என்று அவன் புரியாது கேட்க...

"ஜிக்கி..." கணவனை முறைத்துக் கொண்டே மகளை அழைத்தவள்,

"உனக்குத் தம்பி வேணுமா...? தங்கச்சி வேணுமா...?" என்று கேட்க...

அதில் அவன் அர்த்தம் புரிந்தவனாய் வாயெல்லாம் பல்லாக மனைவியை ஜொள்ளிட்டவாறு பார்த்தான்...

"எனக்கு ரெண்டும் வேணும்..." என்று சின்னவள் குதூகலமாய்க் கூற...

"அதை உங்கப்பா கிட்ட சொல்லு... அப்பவாவது அவருக்குப் புரியுதான்னு பார்ப்போம்..." என்று நொடித்தபடி உள்ளே

சென்ற மனைவியைக் காண காண அவனுக்குக் காதல் பெருக்கெடுத்தது...

விழா முடிந்து எல்லோரும் கிளம்பியதும் சித்தார்த் மனைவியை வெளியில் கிளம்பச் சொல்லி அவசரப்படுத்தினான்...

"கிளம்பு... கிளம்பு..."

"எங்கே...?" என்று கேட்டவள்,

"இங்கே இத்தனை வேலைகள் இருக்கே..." என்று தயங்க...

"அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன் நீ அத்தான் கூடப் போயிட்டு வா பிரகதி..." என்று சந்தியாவும் சொல்லவும் பிரகதீஸ்வரி கணவனுடன் கிளம்பினாள்...

"சித்து... மருமகளையும், பேத்தியையும் நம்ம வீட்டுக்கு தானே கூட்டிட்டு வருவ...?" பிரபாவதி சந்தேகமாகக் கேட்டார்...

"இனி நாங்க ரெண்டு பேரும் நம்ம வீட்டில் தான் இருப்போம் அத்தை..." கணவனை முந்தி கொண்டு சொன்ன பிரகதீஸ்வரியை கண்டு அவருக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது...

சித்தார்த், பிரகதீஸ்வரி தங்களது மகளுடன் கண்ணனையும் அழைத்துக் கொண்டு வெளியில் கிளம்பினர்...

"கண்ணன் எதுக்குச் சித்து...?" ஹரி மகனை உடன் அனுப்ப மறுத்தான்...

"நீ கண்ணனையும், ஜிக்கியையும் பிரிச்சு பார்ப்பியா... அது போல் தான் எனக்கும்... எனக்கு ஜிக்கி வேறு கண்ணன் வேறில்லை..."

அதற்கு மேல் ஹரியால் மறுக்க முடியவில்லை... சிறிது தூரம் சென்ற சித்தார்த் தான் மட்டும் திரும்பி வந்து ஹரியிடம் ரகசியமாக,

"இன்றிரவு கண்ணனை என்னுடன் அழைத்துச் செல்கிறேன்... என் அத்தை மகளை நீ சந்தோசமாக வைச்சிரு..." என்றான் கண் சிமிட்டியபடி...

"அது வந்து..." ஹரி பதில் சொல்ல முடியாது திணறினான்...

"நீங்க ரெண்டு பேரும் பேசியது எல்லாத்தையும் நான் கேட்டுட்டேன்... எங்களால் எங்களது சந்தோசம் தான் போச்சு என்றால் உங்களது சந்தோசத்தையும் நான் குலைத்து இருக்கிறேன்... இனி இப்படி ஒரு நிலை ஏற்பட நான் விட மாட்டேன்..." என்றான் உறுதியான குரலில்...

"சித்து... இதை அம்மு கிட்ட சொல்ல வேண்டாம்..."

"இல்லை சொல்ல மாட்டேன்..." என்று புன்னகைத்த சித்தார்த்தை கண்டு ஹரி,

"நீ என் அத்தை மகளைச் சந்தோசமா வைத்து கொள்..." என்க...

"நிச்சயமாய்..." என்று கம்பீரமாக உரைத்து விட்டு சென்ற சித்தார்த்தை பார்த்தபடி நின்ற ஹரியின் மனதில் இன்னமும் பிரமிப்பு நீங்கவில்லை...

"சும்மாவா இவன் சமுதாயத்தில் இவ்வளவு பெரிய ஆளாக இருக்கிறான்..." என்று அவன் தனக்குள் சித்தார்த்தை எண்ணி வியந்தான்...

சித்தார்த் மனைவியை நேரே அழைத்துச் சென்ற இடம் ஒரு நகை கடைக்கு... அங்கு அழைத்துச் சென்று அவளது இரு கைகள் நிறையத் தங்க வளையல்களை வாங்கி அடுக்கிய கணவனைக் கண்டு அவள் பிரமித்துப் போனாள்...

"எதற்கு மாமூ இதெல்லாம்...? நான் இத்தனை வளையல்கள் போட போறது இல்லையே..." அவள் சங்கடமாய் அதை மறுத்தாள்...

"மூச்... கழட்ட கூடாது... உன் வளைகாப்பிற்கு இப்படி வாங்கி அடுக்க நினைத்து இருந்தேன்... என்னுடைய நினைவு ஒன்று கூட நடக்கவில்லை... இப்போதாவது நீ அமைதியாக

இரு..." என்று அவன் அவளை அதட்டி அடக்கி விட்டான்... அவனின் ஆசை அறிந்து அவள் அமைதியாகி விட்டாள்...

அடுத்து மகளுக்கும் கண்ணனுக்கும் பொருட்கள் வாங்கிக் குவிக்க நினைத்து அவன் வேறு ஒரு கடைக்கு அழைத்துச் செல்ல... பிரகதீஸ்வரி கணவனைப் பரிதாபமாக அழைத்தாள்...

"மாமூ..."

'என்ன' என்பது போல் அவளைப் பார்த்தான் அவன்...

அவள் தனது இருகைளையும் தூக்கி காட்டி, "இப்படியே வரவா...?" என்று பாவம் போல் கேட்க... அதைப் பார்த்து அவன் சிரித்து விட்டான்...

"சரி, சரி... உன் விருப்பம் போல் செய்..."

பெயருக்கு ஒற்றை ஜோடி வளையலை மட்டும் எடுத்து இரு கரத்திலும் அணிந்து கொண்டவள் மற்றவற்றைக் கழற்றி வைத்து விட்டாள்...

அன்று முழுவதும் சித்தார்த் தனது அந்தஸ்தை மறந்தவனாய் ஒரு தகப்பனாய் ஜெகதீஸ்வரி மற்றும் கண்ணன் கூறியதை கேட்டு அவர்களுக்கு இசைந்து நடக்க... சிறியவர்கள் உற்சாகம் கொண்டு அவனைப் போட்டு படுத்தி எடுத்து விட்டனர்... அவனும் சுகமாய் அவர்களது போக்கிற்கு வளைந்து கொடுத்தான்...

இரவு வீட்டிற்கு வந்தவர்களுக்கு அந்த நேரத்திலும் ஆரத்தி சுற்றி உள்ளே அழைத்துச் சென்றார் பிரபாவதி...

உறங்கும் போது சின்னவர்கள் படுக்கையில் குதித்து ஆட்டம் போட சித்தார்த் சிரித்தபடி அவர்களை வேடிக்கை பார்த்தான்... பிரகதீஸ்வரி வந்து தான் அவர்களைச் சத்தம் போட வேண்டியதாய் போயிற்று...

"விடும்மா... குழந்தைகள் தானே..." என்று அவன் மனைவியை அடக்கி விட்டான்... அதன் பின் அவளும் ஒன்றும் சொல்லவில்லை...

ஒரு வழியாய் இருவரும் அவர்களாக ஓய்ந்து போய் உறங்க ஆரம்பித்தனர்... தூங்கும் முன் ஜெகதீஸ்வரி,

"அப்பா... இத்தனை நாளா எங்கே போயிருந்தீங்க...?" என்று கேட்க...

"ஃபாரினில் இருந்தேன் ஜிக்கி... இப்போ தான் இங்கே வந்தேன்..." மகளது கேள்விக்குச் சாமர்த்தியமாகப் பதில் சொன்ன சித்தார்த் அவளது மலர் கரத்தில் மென்மையாய் முத்தமிட்டான்...

"அடுத்தத் தடவை போகும் போது என்னையும் கூட்டிட்டு போகணும்..." என்று ஜெகதீஸ்வரி கட்டளையாய் சொல்ல...

"என்னையும் சித்தப்பா..." என்றான் கண்ணனும் உடன் சேர்ந்து...

"கட்டாயம் ரெண்டு பேரையும் கூட்டிட்டுப் போகிறேன்... இப்போ சமத்தா தூங்குங்க..."

சிறிது நேரத்தில் சின்னவர்கள் உறங்கி விட அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த சித்தார்த் அருகில் வந்தமர்ந்தாள் பிரகதீஸ்வரி... அதில் அவளைத் திரும்பி பார்த்தவன்,

"ஜிக்கி பிறக்கும் போது ரொம்பக் கஷ்டப்பட்டியா பேபி...?" என்று கேட்டவனது குரலில் அப்படி ஒரு வருத்தம் இருந்தது...

"எல்லாப் பெண்களும் அனுபவிக்கும் கஷ்டம் தான்... ஆனால் அம்மா இறந்த அன்னைக்கு, இன்னொரு அம்மாவா இருந்த உங்க பிறந்தநாள் அன்னைக்கு ஜிக்கி பிறந்தது எனக்கு ரொம்பச் சந்தோசமா இருந்தது..." என்றவள் மகளின் தலையைக் கோதி கொடுத்து,

"எங்கம்மாவே நம் மகளாய் வந்து பிறந்திருக்காங்க மாமூ..." என்றாள் நெகிழ்ச்சியான குரலில்...

"உண்மை தான் பேபி... உன் அம்மா தான் நம் மகளா வந்து பிறந்திருக்காங்க..." கமறிய குரலில் கூறியவனின் கை

விரல் மகளின் உதட்டிற்கு மேலிருந்த மச்சத்தை மென்மையாக வருடி விட்டது...

அவள் கூறியது வேறு... அது போல் அவன் கூறியதும் வேறு... ஆனால் இது இரண்டையும் இணைக்கும் மையப்புள்ளியாய் அவனது மனைவி பிரகதீஸ்வரி...!

காரணம் இல்லாமல் ஒருவருடன் நமது சந்திப்பு நிகழாது... அப்படி ஒரு சந்திப்பு, அப்படி ஒரு பந்தம் தான் அவனுக்கும் அவளுக்கும் இடையிலானது...!!!

"நீயும் நானுமாய் ஒரு உலகம்
பாதியில் பாராது சென்றவளே...
மீண்டும் சந்தித்தேன்
உன் பிரதியாய்...
நிழலுக்கும் நிஜத்துக்கும்
பெரும் யுத்தம் என்னுள்...
நிஜம் கை நழுவி விட
நிழலை தவற விட
மனமில்லாது,
துரோகம் கொண்டு
கை பிடித்தேன்...
என் துரோகம் கண்டு
நிழலும் என்னை விட்டு
விலகி விடுமோ...???
விடை பகிர்வாய்
என் நிஜமாகி
போன நிழலே!!!"

நனவாகும்...!!!

சித்தார்த்தின் கைகளில் கார் காற்றை விட வேகமாகச் சென்று கொண்டிருந்தது... அதற்குக் காரணம் அவனுக்கு அருகில் அமர்ந்திருந்த அவனது மகள் ஜெகதீஸ்வரியும், கண்ணனும் என்றால் மிகையில்லை... கார் சாலையில் பறப்பது குறித்துப் பிள்ளைகள் உற்சாகத்தில் பொங்கி குதூகலிக்க அதில் அவனது உற்சாகமும் அதிகரித்தது... பின் இருக்கையில் அமர்ந்து கொண்டு அவர்களின் உற்சாகத்தைப் புன்னகையுடன் வேடிக்கை பார்த்தபடி வந்தாள் பிரகதீஸ்வரி...

"அப்பா... இப்படியே போய்க்கிட்டே இருக்கணும்..." என்று கண்களையும், கைகளையும் அகல விரித்துக் கூறிய மகளின் பாவனையில் அவனது மனம் அப்படியே உருகி விட்டது...

மகளின் பட்டு கையை எடுத்து முத்தமிட்டவன், "ஜிக்கி விருப்பம் தான் இந்த அப்பாவோட விருப்பமும்... இப்படியே போய்க்கிட்டே இருக்கலாம்..." என்றான் விரிந்த புன்னகையுடன்...

"சித்தப்பா... இன்னும் வேகம்..." என்று கண்ணன் குரல் கொடுக்கச் சித்தார்த் இன்னும் வேகம் எடுத்ததில் பிரகதீஸ்வரி பயந்து போனாள்...

"ப்ச்... பிள்ளைங்க தான் சொல்றாங்கன்னா நீங்களும் அவங்க கூடச் சேர்ந்துக்கிட்டு... உங்களை என்ன பண்ணலாம்...?"

அவள் கணவனின் தோளில் செல்லமாய் அடி கொடுக்க, அந்தக் கள்வனோ அவளது கையைத் தனது இடது கையால் பிடித்துக் கொண்டு வல கையால் லாவகமாய்க் காரை ஓட்டினான்... அவனது செயலில் அவள் தான் அரண்டு போனாள்...

"மாமூ என்ன பண்றிங்க...?"

"அப்போ சத்தம் போடாம உட்கார்..." என்று அவன் அவளை அதட்ட...

"என்னம்மோ போங்க... சொல் பேச்சு கேட்பது இல்லை..." என்று அவள் கோபத்துடன் கைகளைக் கட்டி கொண்டு அமர்ந்து விட்டாள்...

முன்னிருந்த கண்ணாடி வழியே அவளைப் பார்த்த சித்தார்த், "மனைவியா, மகளான்னு வரும் போது எனக்கு மகள் தான் முக்கியம்... அவளது சொல் பேச்சு தான் நான் கேட்கணும் ரதி..."

மகளின் முன்னால் 'பேபி' என்றழைக்கக் கூடாது என்று அவள் அவனுக்குக் கட்டளை விதித்திருக்கிறாள்... ஏனெனில் அவர்களது மகள் பெற்றோரின் ஒவ்வொரு நடவடிக்கையையும் கூர்ந்து கவனிக்கிறாளே...

"ஆனால்..." என்று இழுத்தவனின் விழிகளில் சுவாரஸ்யம் பொங்கியது... கண்ணாடி வழியே கணவனைப் பார்த்தவளின் விழிகளில் ஆர்வம் பொங்கியது...

"பகலில் மகளின் பேச்சு கேட்க வேண்டும்..." என்றவன் பின் தனது உதடுகளைச் சத்தம் செய்யாது அசைத்தான்...

சத்தம் வரவில்லை என்றால் என்ன...? அவளுக்கு அவனது மௌன மொழி புரியாதா என்ன...?

'இரவு மனைவியின் பேச்சு கேட்க வேண்டும்...' என்று அவன் மௌனமாய்க் கூறியது கேட்டு அவளது முகம் வெட்கத்தில் சிவக்க, அதைக் கண்டவன் அவளைப் பார்த்து உல்லாசமாய்க் கண் சிமிட்டியபடி வாய் விட்டுச் சிரித்தான்... அதில் பாவையவள் முகம் மேலும் சிவந்து போனது... கள்வனான கணவனது பார்வையைச் சந்திக்க இயலாது அவள் வெளிப்பக்கம் தனது பார்வையைத் திருப்பினாள்... அவளது நாணம் அவனுள் கர்வத்தை விதைக்க உல்லாச மனநிலையில் உற்சாகமாய்க் காரை ஓட்டினான்...

நாளை பொங்கல் விழாவிற்கு இன்று குடும்பத்துடன் எல்லோரும் ஊருக்கு செல்கின்றனர்... அர்ஜூன்,

சங்கமித்ரா கூட இந்தப் பொங்கல் விழாவிற்கு வர சம்மதித்து அவர்களும் இவர்களுடன் இணைந்து கொண்டனர்... மற்றவர்கள் அனைவரையும் விமானத்தில் பயணிக்க ஏற்பாடு செய்த சித்தார்த் தான் மட்டும் குடும்பத்துடன் காரில் வருவதாகக் கூறி விட்டான்... கண்ணனும் இவர்களுடன் வந்து விட்டான்...

இரவு உணவு முடிந்ததும் சின்னவர்கள் பின் இருக்கையில் அமர்ந்து பிரகதீஸ்வரியின் மடியில் தலை வைத்து தூங்கி விட்டனர்... அவர்கள் ஆழ்ந்து தூங்கியதும் காரை நிறுத்தி கீழே இறங்கிய சித்தார்த் பின் இருக்கையை நன்றாகச் சாய்த்து அதில் பிள்ளைகளைப் படுக்க வைக்க முயல பிரகதீஸ்வரி அவனைத் தடுத்தாள்...

"இருக்கட்டுமே... இப்போ எதற்கு...?"

"நீ எவ்வளவு நேரம் மடியில் வைச்சிக்கிட்டு வருவ...? உனக்குக் கால் வலிக்கப் போகுது..."

கணவனின் கரிசனத்தில் அவளது மனம் நெகிழ்ந்தது... சித்தார்த் மகளை இருக்கையில் சாய்த்து படுக்க வைத்தவன் ஆசன பட்டியை அவளது இடுப்பில் மாட்டியவாறு,

"இரவாகி விட்டது அல்லவா, அதனால் மனைவி மட்டுமே முக்கியம்..." என்றான் மனைவியைப் பார்த்துக் கண் சிமிட்டியபடி...

"மாமூ... உங்களை என்ன செய்யலாம்...?" என்று சிணுங்கியபடி அவனது கையில் ஒரு அடி வைக்க...

"என்ன வேணும்ன்னாலும் செய்யலாம்..." என்று கேலியாய் கூறியவன் கண்ணனையும் அவ்வாறு படுக்க வைத்து விட்டு அவளிடம்,

"நீ முன்னால் வந்து உட்கார்..." என்க...

"மாமூ இதுக்குத் தானா...?" என்று கிண்டலாய் கேட்டபடி அவள் முன்னால் வந்தமர...

"என் பேபி பெரியவங்க ஆகிட்டாங்களோ... இப்போ எல்லா விசயமும் புரியுது..." என்று அவனும் அவளைப் பதிலுக்குக் கிண்டல் பண்ண...

"பேபி எப்போதும் பேபி இல்லை... அப்பப்ப கொஞ்சம் பெரிய பொண்ணாவும் நடந்துக்குவாள்..." என்று உரைத்தவள் அவன் புறம் நெருங்கி அமர்ந்து அவனது கையோடு கை கோர்த்து அவனது தோளில் தலை சாய்ந்து கொண்டாள்...

மனைவியின் செயலில் விளைந்த மன திருப்தியுடன் அவளது உச்சந்தலையில் இதழ் பதித்தவன்,

"உண்மை தான், பேபி ரொம்பவே வளர்ந்துட்டாங்க..." என்றவனின் குரலில் அத்தனை உல்லாசம் நிறைந்திருந்தது...

அதன் பிறகு அவர்கள் என்ன பேசினார்கள் என்று அவர்களுக்கே தெரியாது... ஆனால் ஒருவரது அருகாமையை மற்றவர் மிகவும் விரும்பினர்... அவனது கைகளில் கார் பறந்தது அவனது மனதின் உற்சாகத்தினைப் போல்...

இவர்கள் நால்வரும் வீட்டிற்கு வந்து சேர்ந்த போது மற்றவர்கள் அங்கு வந்து சேர்ந்திருந்தினர்... அர்ஜூன், சங்கமித்ரா தங்களது மகனை உறங்க வைப்பதற்காகச் சீக்கிரமே உறங்க சென்று விட்டனர்... மற்றவர்கள் இவர்களுக்காகக் காத்திருந்தனர்...

ஹரி, சந்தியா உறங்கும் தங்களது மகனை தூக்கி கொண்டு தங்களது அறைக்குச் சென்று விட... சித்தார்த், பிரகதீஸ்வரி தங்களது மகளுடன் அவர்களது அறைக்கு வந்தனர்...

வீடு என்பது வெறும் செங்கற்களால் ஆனதல்ல... அது உணர்வுகளோடு கலந்த ஒன்று... அங்கிருந்த ஒவ்வொன்றும் பிரகதீஸ்வரியிடம் பல கதைகளைப்

பேசியதில் அவளது கண்கள் பனித்தது... கணவனுக்காகத் தனது மனதினை மறைத்து கொண்டாள்...

சரியாகப் பன்னிரெண்டு மணிக்கு சித்தார்த் உறங்கும் மகளின் நெற்றியில் முத்தம் வைத்து,

"ஹேப்பிப் பேர்த்டே..." என்று சொல்ல...

அதே நேரம் அவனது மனையாள் அவனது நெற்றியில் இதழ் பதித்து,

"இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்..." என்க...

அதில் கண்கள் கலங்க அவளை நிமிர்ந்து பார்த்து சிரித்தவன், "முதலில் நம் மகள்... அதுக்கு அப்புறம் தான் நான்..." என்றான் குறும்பு குரலில்...

"ஜிக்கிக்கு நீங்க இருக்கீங்க... உங்களுக்கு நான் இருக்கேன்..."

மனைவியாக மட்டும் அல்லாது தாயாகவும் மாறிய தனது இணையைக் கண்டு அவனது மனம் நெகிழ்ந்தது... அவளைத் தனது மடியில் அமர்த்தி அணைத்து கொண்டவன் சில நிமிடங்கள் அப்படியே அமைதியாக இருந்தான்...

"என்னாச்சு என் மாமூவுக்கு...?" அவள் அவனது தலை கோதி அவன் முகம் பார்க்க...

"தெரியலை... ஆனால் மனசுக்கு ரொம்பச் சந்தோசமாயிருக்கு..." என்றவன் தனது மோனநிலையைக் கலைக்கவில்லை... அவளும் அப்படியே அமர்ந்து இருந்தாள்...

"பேபி, உன் மடியில் படுக்கவா...?"

கணவனது வார்த்தையில் ஆச்சிரியமுற்றவளாய் அவனைப் பார்த்தவள், "இதை எல்லாமா கேட்டுக்கிட்டு..." என்று அவனைக் கடிந்தவள் அவனைத் தாயாய் மடி தாங்கி கொண்டாள்...

மனைவியின் வருடலில் சித்தார்த் மெல்ல மெல்ல கண்ணயர்ந்தான்... அவன் மனதில் அத்தனை நிம்மதி... கோடி ரூபாய் கொட்டி கொடுத்தாலும் கிடைக்காத நிம்மதி... அதை அவன் உணர்ந்தே இருந்தான்...

சிறு குழந்தை போல் தனது இடையை அணைத்துக் கொண்டு மடியில் முகம் புதைத்து உறங்கும் கணவனைக் கண்டு அவளுக்குப் பெருத்த ஆச்சிரியமாக இருந்தது... வெளியில் கம்பீரமாக இருக்கும் சித்தார்த்தா இவன் என்று நினைக்கும் அளவுக்குச் சிறு குழந்தை போலிருந்தது அவனது செய்கை...

****

"ஹேப்பிப் பேர்த்டேப்பா..."

மறுநாள் காலை பொழுது சித்தார்த்திற்கு மகளின் உற்சாக வாழ்த்தோடு அழகாக, சந்தோசமாகப் புலர்ந்தது... ஏனெனில் பிரகதீஸ்வரி ஏற்கெனவே அவளிடம் தந்தையின் பிறந்தநாள் பற்றிக் கூறியிருந்தாள்...

"விஷ் யூ த சேம் ஜிக்கி..." என்று அவன் மகளின் கன்னத்தில் முத்தமிட்டு அவளை வாரி அள்ளி தன் மீது போட்டுக் கொண்டான்...

மகளும் தந்தையின் கன்னத்தில் முத்தமிட்டு அப்படியே அவனது கன்னத்தோடு கன்னம் பதித்து அணைத்து படுத்து கொண்டாள்...

"ஜிக்கிக்கு என்ன கிப்ட் வேணும்...?"

"ஜிக்கிக்கு..." மகள் நாடியில் ஒற்றை விரல் வைத்துக் கொண்டு யோசிக்க ஆரம்பித்தாள்...

அவளது பாவனையில் அவனுக்குச் சிரிப்புப் பொங்கியது...

"யோசனை எல்லாம் ரொம்பப் பலமாயிருக்கு..." மகளின் தலையை வருடியவாறு அவன் சிரிக்க... அதில் முகம் மலர்ந்த சின்னச் சிட்டு,

"ஜிக்கி கூட நீங்க எப்பவும் இருக்கணும்... இருப்பீங்களாப்பா...?"

மகளின் ஏக்கம் அவனது மனதினை கொல்லாமல் கொன்றது... கண்கள் கலங்க அவளை அணைத்து கொண்டவன்,

"இனி அப்பா எப்போதும் உன் கூடத் தான் இருப்பேன்டா... உன்னை விட்டுட்டு போக மாட்டேன்..."

"நானும் தான்..." என்று மகளும் தந்தையை அணைத்து கொண்டாள்...

மகளுக்காக அவன் வாங்கி வைத்திருந்த பரிசு பொருட்களை அவளிடம் எடுத்துக் காட்டினான்... மகள் மகிழ்ச்சியுடன் அதை வாங்கியவள் அதைப் பிரித்துப் பார்ப்பதில் ஆர்வம் காட்டினாள்... அவளது செய்கையைத் தந்தையானவன் ரசித்துப் பார்த்துக் கொண்டு இருந்தான் கண்களில் கனிவுடன்...

அந்நேரம் குளியலறை கதவு திறந்து பிரகதீஸ்வரி வெளியில் வந்தாள்... குளித்து முடித்துப் புடவையைச் சுற்றிக் கொண்டு வந்தவளை கணவனது விழிகள் ஆசையுடன் ரசித்துப் பார்த்தது... அவனது பார்வையை உணர்ந்தவளாய் அவள் கண்களால் கண்டிப்புடன் மகளைச் சுட்டி காட்டி விட்டு உடை மாற்றும் அறைக்குள் புகுந்து கொண்டாள்... பத்து நிமிடங்களில் புடவையைக் கட்டி கொண்டு அவர்கள் அருகில் வந்தவள்,

"என்ன அதுக்குள்ள எழுந்தாச்சா...?" என்று கேட்டபடி மகளின் கன்னத்தில் முத்தமிட்டு,

"இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள் ஜிக்கி..." என்க...

"தேங்க்யூம்மா..." என்று கூறிய சின்னச் சிட்டு,

"அம்மா... அப்பாவுக்கு விஷ் பண்ணலையா...?" என்று கேட்க...

கணவனுக்கு வாழ்த்து மட்டும் அவள் கூற, மகளோ தந்தைக்கும் முத்தம் கொடுக்கச் சொல்ல, அன்னையோ முகம் சிவக்க மறுத்தாள்...

"உங்கம்மா எனக்கு நைட்டே முத்தம் கொடுத்துட்டாங்க..."

"குழந்தை கிட்ட என்ன பேச்சு பேசுறீங்க...? கொஞ்சமும் விவஸ்தை இல்லாம..." முகம் சிவந்தவள் மகளின் தலைமுடியை கோதுவது போல் தலை குனிந்து கொண்டாள் நாணத்தில்...

"விவஸ்தை இருப்பதால் தான்ம்மா இத்துடன் உன்னை விடுகிறேன்..." என்று நமட்டு சிரிப்புடன் கூறியவன் எழுந்து குளியலறைக்குள் புகுந்து கொண்டான்...

கண்ணன் வந்து ஜெகதீஸ்வரிக்கு பிறந்தநாள் வாழ்த்து கூறி அவளைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்று விடப் பிரகதீஸ்வரி படுக்கையைச் சுத்தம் செய்ய ஆரம்பித்தாள்...

அப்போது பின்னால் இருந்து இரு கைகள் அவளை அணைத்தது... கணவன் தான் என்று அறிந்தவள்,

"ஜிக்கி வர போகிறாள்..." என்றவளது விழிகள் அறை கதவை பார்த்தது...

"கதவை லாக் பண்ணிட்டேன் பேபி..."

கணவன் கூறியதில் தைரியம் வர பெற்றவள் அவன் புறம் திரும்பி அவனது முகம் பற்றிப் பிறந்தநாள் வாழ்த்துக் கூறிக் கொண்டே முத்தமிட அவனோ மகிழ்வோடு அவளுக்கு இசைந்து கொடுத்தபடி நின்றிருந்தான்...

"போதும்மா...?" என்று கேட்டவளின் முகத்தோடு முகம் வைத்தவன்,

"போதாது தான்... இருந்தாலும் இப்போதைக்கு ஓகே..." என்றவன் மனைவியின் விழிகளுக்குள் எதையோ தேடினான்...

"என்ன மாமூ...?"

அவனது இமைக்காத பார்வை கண்டு அவள் என்னவென்று கேட்க, அவன் ஒன்றும் இல்லை என்பது போல் தலையசைத்தான்...

அவனுக்காகத் தான் வாங்கி வைத்திருந்த உடை மற்றும் கை கடிகாரத்தை எடுத்து அவனிடம் கொடுத்தவள்,

"பிடிச்சிருக்கா மாமூ..."

"ரொம்ப, ரொம்ப..." என்றவனது விழிகள் அவள் கொடுத்த பரிசை பார்க்காது அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தது...

"மாமூ..." அவள் அவனை மிரட்டல் தொனியில் அழைக்கவும்,

"ஹா... ஹா..." என்று வாய் விட்டு சிரித்தவன்,

"நீ எது கொடுத்தாலும் எனக்குப் பிடிக்கும்..." என்று காதலோடு அவன் சொல்ல...

அதைக் கேட்டு பெண்ணவள் முகம் மலர்ந்து விகசித்தது...

"ட்ரெஸ் மாத்திட்டு வாங்க..." என்றவள் அறையை விட்டு வெளியேற, அவனது மனதில் அவளைக் குறித்த கவலை தான் அரித்துக் கொண்டிருந்தது...

இன்று பிரகதீஸ்வரியின் அன்னை இறந்த நாள்... அவள் மற்றவர்களுக்காக வெளியில் எதையும் காட்டி கொள்ளவில்லை என்றாலும் மனதிற்குள் ஊமையாக அழுது கொண்டிருப்பாள் என்று அவனுக்குத் தெரியும்... அவளது துயரை போக்க அவனது மனம் விழைந்த போதும் இப்போது அது பற்றிப் பேசி அவளது மனதினை வருத்தப்பட வைக்க அவனால் இயலவில்லை...

அதன் பிறகு பிறந்தநாள் விழாவுடன் பொங்கல் விழாவும் சேர்ந்து கொண்டதில் அங்கு உற்சாகம் கரை புரண்டு

ஓடியது... எப்போதும் போல் பிரகதீஸ்வரி காலில் சக்கரம் கட்டி கொண்டு வேலையில் ஈடுபட்டிருந்தாள்...

சமையலறையில் பொங்கல் வைப்பதற்காகப் பானை எடுக்க வந்தவள் சித்தார்த்திடம் தனியே அகப்பட்டுக் கொண்டாள்...

"எப்போதும் வேலை தானா...? உன்னை யார் இப்படி ஓடி ஓடி வேலை செய்யச் சொன்னது...?" என்று அவன் அவளைக் கடிய...

"நம்ம வீட்டு வேலைகளை நாம் தானே செய்யணும் மாமூ..."

மனைவியின் கூற்று உண்மை தான்... இப்போது அவனால் யாரையும் பிரித்துப் பார்க்க முடியவில்லை... எல்லோருமே ஒரு குடும்பம் போன்று அத்தனை அன்பாக இருந்தனர்...

"எல்லாம் சரி தான்... ஆனால் நீ இப்படி வியர்வை வழிய வேலை செய்வதைப் பார்க்கும் போது எனக்குத் தான் கஷ்டமா இருக்கு..." என்றவனின் கை விரல் அவளது நெற்றி வியர்வையை துடைத்து விட்டது... அவனது உதடுகள் குவிந்து மெல்லிய காற்றை அவளது முகத்தில் ஊதியது...

அதை அனுபவித்தவளாய் கண் மூடி அவள் நின்றிருக்க அவனோ அவளை ரசனையுடன் பார்த்தபடி தனது வேலையைச் செவ்வனே செய்து கொண்டிருந்தான்...

"அத்தான், பிரகதி நாங்க எல்லாம் இங்கே தான் இருக்கோம்..." என்றபடி சந்தியா, சங்கமித்ரா இருவரும் அங்கு வந்தனர்...

"அக்கா..." என்று திகைத்தபடி பிரகதீஸ்வரி அவசரமாய்க் கணவனை விட்டு விலகி நிற்க...

சித்தார்த்தோ அவளை விலக விடாது இடையில் கை போட்டு அணைத்துக் கொண்டு, "நீங்க இருந்தால் எங்களுக்கு என்ன...? நாங்க எப்போதும் இப்படித் தான்..." என்று அவன் இருவரையும் பார்த்து கூற...

"ஆஹான்... அப்படியா...? அத்தான் முன்பு எல்லாம் நீங்க ஏன் அடிக்கடி கிச்சன் பக்கம் வந்தீங்கன்னு இப்போ தானே புரியுது..." என்று சங்கமித்ரா கேலி செய்து சிரிக்க...

அதில் பிரகதீஸ்வரி நாணம் கொண்டு கணவனது தோள் வளைவில் முகம் புதைத்து கொண்டாள்... சித்தார்த் மனதிற்குள் அசடு வழிந்தாலும் வெளியில் கெத்தாக,

"இதைப் புரிஞ்சிக்கிறதுக்கு உனக்கு இத்தனை வருசமாகிருக்கு... பாவம் அர்ஜூன்..." என்க...

"சித்து... நீங்க சொன்னது நூற்றுக்கு நூறு சரி..." என்றான் அங்கு வந்த அர்ஜூன்...

சங்கமித்ரா கணவனை முறைக்க அதைக் கண்டு எல்லோரும் சிரித்ததில் அவளது முகத்திலும் புன்னகை நிறைந்தது...

பொங்கல் வைக்கும் பணியில் மூன்று பெண்களும் மும்முரமாக ஈடுபட்டு இருந்தனர்... ஸ்வேதா கர்ப்பிணி என்பதால் பெரியவர்களுடன் நாற்காலியில் அமர்ந்து இருந்தாள்... ஆண்கள் அனைவரும் அங்கு நின்று கொண்டு தத்தம் இணைகளை ரசித்துக் கொண்டிருந்தனர்...

பொங்கல் வைத்து முடித்ததும் அனைவருக்கும் அந்தப் பொங்கலை இலையில் வைத்து கொடுத்தனர்... மனைவி கொடுத்ததைக் கையில் வாங்கிய சித்தார்த் அதைப் பார்த்தபடி நின்றிருந்தான்... அன்றைய நாள் நினைவு அவனைத் தாக்கியதோ...

"மாமூ..."

அப்போது அவனது மனைவியின் குரல் கிசுகிசுப்பாக ஒலித்தது... அதில் தன்னினைவு கலைந்து அவன் அவளைப் பார்த்தான்...

"ம்... ஊட்டுங்க..." என்றபடி அவள் தனது வாயை மெல்ல திறக்க...

"பேபி..." அவன் திகைத்து நிற்க...

அவளே அவனது கை பிடித்துப் பொங்கலை எடுத்து தனது வாயில் வைத்து கொண்டாள்...

"அப்பா எனக்கு...?" இருவருக்கும் இடையில் வந்து நின்றாள் அவர்களது அருமை மகள்...

"எப்போ பாரு எனக்குப் போட்டிக்கு வந்துக்கிட்டு இருக்கா..."

மகளைக் கண்டு மனைவி முகம் திருப்பிக் கொள்ள... அதைக் கண்டு அவனது முகம் புன்னகையில் விரிந்தது...

"அட இதுக்கு எல்லாமா கோபப்படுறது...?" என்றபடி அவன் மகளைக் கையில் தூக்கி வைத்துக் கொண்டு அவளுக்குப் பொங்கலை ஊட்டி விட...

"உங்க பையன் பிறந்து இது மாதிரி உங்க கிட்ட போட்டி போடும் போதும் நீங்க இதே டயலாக் தான் சொல்லணும் மிஸ்டர். சித்தார்த்..." என்று அவள் முறுக்கி கொள்ள...

அவளது வார்த்தையில் அவன் கண்கள் மின்ன அவளைப் பார்த்தவன், "அந்த நாள் எப்போதோ...?"

அதில் முகம் சிவக்க வேறு பக்கம் பார்த்தவள், "அது உங்க கையில் தான் இருக்கு..." என்றவள் கணவன் முகம் பார்க்க நாணி அங்கிருந்து சென்று விட்டாள்... அவன் அவளது நாணத்தை ரசித்தபடி நின்றிருந்தான்...

பொங்கல் விழா கொண்டாட்டம் முடிந்து பரபரப்புக் கொஞ்சம் ஓய்ந்ததும் சித்தார்த் மனைவியிடம்,

"கிளம்பு பேபி..." என்க...

"எங்கே...?"

"சொன்னால் தான் வருவியா..."

அதற்கு மேல் அவள் எதிர் கேள்வி கேட்காது அவனுடன் சென்றாள்... அவன் அவளை அழைத்துச் சென்ற இடம் அவளது அன்னையின் நினைவிடம்... அது ஏற்கெனவே

சுத்தம் செய்யப்பட்டு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு இருந்தது...

அன்னையின் நினைவில் அவளது விழிகள் கலங்கியது... பதினேழு வயதில் அவளிடத்தில் இருந்த தனிமை துயர் இப்போது இல்லை என்றாலும் அவளது வருத்தம் சற்றும் குறையவில்லை... அந்நேரம் சித்தார்த்தின் கரம் அவளை ஆறுதலாக அணைத்துக் கொண்டது...

அதில் அவனைத் திரும்பி பார்த்தவள் அவனைக் கண்டு புன்னகைத்தாள்...

"பேபி... கஷ்டமாயிருக்கா...?"

"ம்ஹூம் இல்லை... இப்போ தான் எனக்கு இன்னொரு அம்மாவா நீங்க இருக்கீங்க, ஜிக்கி இருக்கிறாள்... அதனால் இப்போது எந்த வருத்தமும் இல்லை..." என்று கூறியவள் நிம்மதியுடன் கணவனது தோளில் சாய்ந்து கொண்டாள்...

தன்னைப் போல் தன் மகளைச் சீராட்டும் ஒருவன் அவளுக்குக் கணவனாகக் கிடைத்ததில் காற்றில் கலந்திருக்கும் கார்த்திகாயினியின் ஆன்மா இதைக் கண்டு நிம்மதியுற்று இருக்கும்...

அதன் பின்னர் மகளின் பிறந்தநாளை கேக் வெட்டி கோலாகலமாகக் கொண்டாடிய சித்தார்த் தன்னுடைய பிறந்தநாளை மட்டும் கொண்டாடவில்லை... மனைவி ஏன் என்று கேட்டதற்கு அவன்,

"உன் துன்பத்தில் நான் மகிழ்வேனா..." என்றுரைக்க... அவனது காதலில் அவள் தான் வாயடைத்து போனாள்...

அன்று மாலை அருவிக்குச் சென்று சின்னவர்கள் ஆட்டம் போட பெரியவர்கள் அதைப் பார்த்து ரசித்திருந்தனர்... அருவி, மலை, தோட்டம் என்று எல்லாம் சுற்றி விட்டு அவர்கள் வீடு திரும்பிய போது இரவாகி போனது...

அன்றிரவு சித்தார்த் மனைவியைத் தாயாய் மடி தாங்கி கொண்டான் அவளது துயரம் அறிந்து... மனம் இணைந்தவர்களுக்கு உடல் இணைவது குறித்துப் பெரிதாக வருத்தம் இல்லை... அவனுக்காக அவள் விட்டு கொடுத்தாள்... அவளுக்காக அவன் விட்டுக் கொடுத்தான்...

இனிய இல்லறம் என்பது இது போன்றதொரு புரிதலான வாழ்க்கையே அன்றி உடல் தேவை சார்ந்தது அல்ல...

மறுநாள் மாட்டு பொங்கல் இனிதாக விடிந்தது... வேட்டி கட்டி கம்பீரமாகக் கிளம்பிய சித்தார்த்தை கண்டு மனைவியும், மகளும் ரகசியமாகச் சிரித்துக் கொண்டனர்... அதில் ஏதோ அர்த்தம் பொதிந்து இருப்பதைப் புரிந்து கொண்ட சித்தார்த் மகளிடம்,

"ஜிக்கி... நீயும் அம்மாவும் எதுக்குச் சிரிக்கிறீங்க...? என்னன்னு சொன்னால் நானும் சேர்ந்து சிரிப்பேன் இல்லையா...?"

"அது வந்து..." சின்னவள் பதில் கூறாது அன்னையைப் பார்க்க...

பிரகதீஸ்வரியோ 'சொல்லாதே' என்பது போல் மகளைப் பார்த்துக் கண் ஜாடை செய்தாள்... அதை உணர்ந்து சித்தார்த் அவளைத் திரும்பி பார்க்க, அவளோ அவனைப் பாராது வேறு எங்கோ பார்த்துக் கொண்டிருப்பது போல் பாவனைச் செய்தாள்...

'என்னவாக இருக்கும்...?' என்று அவன் குழம்பி கொண்டே செல்ல... அம்மாவும், மகளும் தங்களுக்குள் 'ஹைபை' கொடுத்து கொண்டனர்...

"அத்தான் நில்லுங்க..." என்று கூவியபடி சந்தியா கையில் மஞ்சள் நீரோடு ஹரியை துரத்தினாள்...

"அடியேய் பொண்டாட்டி... இது சின்னப் பொண்ணுங்க விளையாட்டுடி... உன்னை, என்னை மாதிரி கிழவன், கிழவி விளையாடுறதுக்கு இல்லை..." என்று அவன்

மனைவியைக் கிண்டலடித்தபடி வீட்டை சுற்றி ஓடி கொண்டிருந்தான்...

அதே நேரம் சங்கமித்ராவை அர்ஜூன் துரத்தி கொண்டிருந்தான்...

"அஜூ... பெண்கள் தான் ஆண்கள் மீது ஊத்தணும்... ஆண்கள் இல்லை... கேவலப்படுத்தாதீங்க அஜூ..." என்று அவள் மெல்லிய குரலில் கெஞ்சியபடி ஓடினாள்...

"எத்தனை தலைமுறைக்குத் தான் இதையே சொல்வீங்க... நாம புதிதாய் சரித்திரம் படைப்போம் மித்தும்மா..." என்று சிரித்துக் கொண்டே கூறியவன் விடாது அவளைத் துரத்தினான்...

சந்தியாவைப் பின்னால் திரும்பி பார்த்துக் கொண்டே ஓடிய ஹரியும், அர்ஜூனிடம் கெஞ்சி கொண்டு ஓடிய சங்கமித்ராவும் நேருக்கு நேர் மோதி நின்றனர்... இருவரும் திகைத்து போய் நிற்க... சந்தியா தனது கையிலிருந்த நீரை கணவன் மீது ஊற்றி,

"அத்தான்... நீங்க நல்லா மாட்டிக்கிட்டீங்க..." என்று உற்சாகக் குரல் கொடுக்க...

அதில் சிரித்தபடி திரும்பி பார்த்த ஹரி மனைவியின் கையைப் பற்றி இழுத்து தன்னுடன் அணைத்து தன் மேலிருந்த நீரை எல்லாம் அவள் மீது ஒட்ட வைத்தான்...

"இப்போ நீ தான் என் கிட்ட வசமா மாட்டிக்கிட்ட..." என்று கூறி அவன் சிரிக்க... அவனது செயலில் எல்லோருக்கும் சிரிப்பு வந்து விட்டது...

இது தான் சாக்கு என்று மனைவி அருகில் வந்த அர்ஜூன் அவளோடு ஒட்டி நின்று இருவருக்கும் சேர்த்து நீரை ஊற்றிக் கொள்ள, அதில் அவனை முறைக்க முயன்று தோற்று அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள் சங்கமித்ரா... அவனும் அவளைப் புன்னகையுடன் அணைத்துக் கொண்டான்...

அன்றைய நாள் போன்றே அண்டா நிறைய மஞ்சள் நீர்... அதே போல் தெரு நாய்... அதே போல் ஸ்வேதா தண்ணீரில் கையை அலைய விட்டு விளையாடி கொண்டிருந்தாள்... அதைக் கண்டு சரவணன் கடுப்புடன் நின்றிருந்தான்... அன்றிலிருந்து இன்று வரை அவனது வாழ்க்கையில் மட்டும் ஏன் இந்தச் சூழ்நிலை எதுவும் மாறவில்லை...

அன்று போல் இன்றும் மனைவியிடம் ஏதாவது கூறி மூக்கறுபட அவன் தயாராக இல்லை...

"எவ்வளவு நேரம் தான் வெய்ட் பண்றது...?"

கணவனது வார்த்தையின் அர்த்தம் புரியாது அவனை நிமிர்ந்து பார்த்தாள் ஸ்வேதா...

"இல்லை, நீ மஞ்ச தண்ணீ ஊத்துவன்னு எவ்வளவு நேரம் தான் அந்த நாய் வெய்ட் பண்ணிக்கிட்டு இருக்கும்... பாவம்..." என்று அவன் வெளியில் நாய்க்காகப் பரிதாபப்பட்டாலும் உண்மையில் உள்ளுக்குள் தனக்காகத் தான் பரிதாபப்பட்டான்...

அவனை முறைத்து பார்த்துக் கொண்டே ஸ்வேதா அங்கிருந்த சொம்பில் நீரை நிரப்பினாள்...

'உண்மையில் நாய் மேல் தான் ஊத்த போகிறாளோ...?' அவன் திகிலாய் மனைவியைப் பார்த்தான்...

அடுத்தக் கணம் அவள் அவன் மீது மஞ்சள் நீரை ஊற்றி விட்டுக் கலகலவெனச் சிரித்தாள்... மனைவியின் செய்கையில் சரவணனின் மனதில் இருந்த வெம்மை அப்படியே குளிர்ந்து போனது...

"என் பின்னாடி சுத்த இந்த நாய் இருக்கும் போது வேறு நாய் எதற்கு...?"

மனைவியின் வார்த்தையில் வெகுண்டவனாய், "நானாடி நாய்...? உன்னை என்ன பண்றேன் பாருடி...?" என்று அவன் அவளை அடிக்கக் கையை ஓங்கி கொண்டு வர...

அவன் கையில் அகப்படாமல் இருப்பதற்காக அவள் அங்கிருந்து ஓட முயன்றாள்... அதற்குள் அவன் வந்து அவளைத் தனது கைகளில் அள்ளி கொண்டான் பத்திரமாக...

"குழந்தை உண்டாகி இருக்கேன்னு கொஞ்சமாவது உனக்குப் பொறுப்பு இருக்கா...?" என்று அவன் அவளைக் கடிய...

"அதான் என் நாய்க்குட்டிக்குப் பொறுப்பு இருக்கே..." என்று அவள் அவனது கழுத்தில் கரங்களை மாலையாகக் கோர்த்து அவனது மூக்கோடு மூக்கு உரசியபடி கொஞ்சி கொண்டு கூற... அதில் அந்தக் காதல் கணவன் மதி மயங்கி தான் போனான்...

"உன் காதலுக்கு முன்னாடி நான் நாய்க்குட்டி தான்டி..."

வெற்று களிமண்ணாய் இருந்தவனைச் சிலையாய் சமைத்தவள் அவள் தானே... அவனது வாழ்வின் உயர்வில் அவளுக்குத் தான் பெரும் பங்கு இருக்கிறது... நல்ல மனைவி நல்ல மதி மந்திரியும் கூட...

சித்தார்த் அலைப்பேசியில் பேசி கொண்டிருந்த போது அம்மாவும், மகளும் அவனுக்குப் பின்னால் பதுங்கி பதுங்கி வந்தனர்... அவன் பேசி முடித்து அலைப்பேசியை அணைத்ததும் இருவரும் ஒரே நேரத்தில் 'பே' என்று கத்தினர்... அந்தச் சத்தத்தில் அவன் திடுக்கிட்டுப் போய்த் திரும்பி பார்க்க, இருவரும் தங்களது கையிலிருந்த மஞ்சள் நீரால் அவனை அபிசேகம் செய்தனர்...

"த்ச்சு... அம்மாவும், மகளும் என்ன பண்றீங்க...?" என்று அவன் அலுத்துக் கொண்ட போதும் அது சந்தோச அலுப்பாக மட்டுமே இருந்தது...

மாட்டு பொங்கல் முடிந்து எல்லோரும் ஜல்லிக்கட்டு நடக்கும் இடத்திற்குச் சென்றனர்... இந்தத் தடவை களம் இறங்க போன சித்தார்த்தை கண்டு ஜெகதீஸ்வரி அவனின் கழுத்தை கட்டி கொண்டு பயத்தில் அழுது விட்டாள்...

இப்போது தான் தன்னிடம் சேர்ந்து இருக்கும் தந்தையை மீண்டும் பிரிந்து விடுவோமோ என்கிற பயம் அவளுக்கு... மகளின் பயம் புரிந்தவனாய் அவனும் களம் இறங்காது வேடிக்கை பார்த்தான்... அதைக் கண்டு மனைவியவளுக்கு மனதிற்குள் புசுபுசுவென்று எதுவோ ஒன்று பொங்கியது...

இந்த முறை ஹரி களம் இறங்கினான்... சந்தியாவும், கண்ணனும் அவனுக்காக உற்சாகக் குரல் எழுப்பினர்... மனைவியவளின் காதலில் இன்று அவன் காளையை அடக்கி விட்டான்... அவளின் காதலில் அவனும் வீரனாக மாறி விட்டான்...

இதை எல்லாம் அர்ஜூன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்... அவனுக்கு இது எல்லாம் புதிது...

அன்று மதியம் வீட்டிற்கு வந்ததும் மகளை உறங்க வைத்த பிரகதீஸ்வரி கணவனிடம் பேசாது அமைதியாகத் தனது வேலைகளைப் பார்க்க அப்போது தான் அவளது அமைதியை சித்தார்த் கவனித்தான்...

"என் பேபிக்கு என் மேல் ஏதும் கோபமா...?" என்று அவன் அவளுடன் இழைந்து கொண்டு சரசமாகக் கேட்க...

"கோபமா...? கொலைவெறியில் இருக்கேன்..." என்றவள்,

"ஏன் மாமூ அப்படிப் பண்ணினீங்க...?" என்று கேட்டுக் கொண்டே அவனைச் சராமாரியாக அடிக்க...

"ஏய்... நான் என்னடி பண்ணினேன்... எதுவா இருந்தாலும் சொல்லிட்டு அடி..." என்று அவன் அவளது கைப்பிடித்துத் தடுத்தான்...

"நான் எத்தனை தடவை கெஞ்சியிருப்பேன்... ஜல்லிக்கட்டுக்கு போகாதீங்கன்னு... ஒரு தடவையாவது என் பேச்சு கேட்டீங்களா...? இப்போ மகள் சொன்னதும் பாசம் பொத்துக்கிட்டு வருதோ...? அப்போ நான் யார் உங்களுக்கு...?"

கோபத்தில் படபடத்தவளை அணைத்து கொண்டவன், "என் மகள் மாதிரி நீ எப்போ என் கிட்ட சொன்ன...?"

"மாமூ... நான் எத்தனை தடவை கண்ணால் கெஞ்சியிருப்பேன்... காளையை அடக்க வேண்டாம்ன்னு... அது உங்களுக்குப் புரியலையா...?"

"அது மாதிரி நானும் எத்தனை தடவை உன்னிடம் சொல்லியிருப்பேன்... காளையை அடக்குவது உன் மீதான காதலுக்காகத் தான்... எங்கே என் மலர் மாலை என்று...?" என்று ராகம் போட்டு இழுத்து கூறியவனை அவள் திகைப்பாய் பார்த்தாள்...

"நீ ஹரியிடம் கூறியது இப்போதும் என் நினைவில் இருக்கு... அதுக்காகத் தான் அன்னைக்கு என் உயிரை கூடப் பொருட்படுத்தாமல் தைரியமா காளையை அடக்கினேன்... அதன் பிறகு தொடர்ந்த வருடங்களும் அப்படியே... எல்லாமே உனக்காகத் தான் பேபி... நீ தான் என்னையும், என் காதலையும் புரிஞ்சிக்கலை... மலர் மாலையோடு காத்திருப்பேன்னு சொன்னவள் நீயா என்னைத் தேடி வரவே இல்லை..."

அவனது குரலில் அப்படி ஒரு வேதனை நிறைந்திருந்தது...

"சாரி மாமூ..." என்றவள் அவனது முகத்தைக் கைகளில் தாங்கி அடுத்தடுத்து வேகமாக முத்தமிட்டாள் காதலால்...

"ஆனாலும் மாமூ நீங்க செஞ்சது தப்பு தான்... உங்களுக்கு ஏதாவது ஒண்ணுன்னா எனக்கு யாரிருக்கா...? இதேது மகள் சொன்னதும் உங்க புத்திக்கு உறைச்சிருச்சு... என்ன இருந்தாலும் உங்களுக்கு உங்க மகள் தான் உசத்தி... நானில்லை..."

சற்று நேரத்திற்கு முன் காதலை மழை போல் பொழிந்தவள் இப்போது கோபமாய் முறுக்கி கொள்ளவும் அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"நீ எந்தளவுக்கு உசத்தின்னு இன்னைக்கு நைட் நிரூபிக்கிறேன்..." என்று கண் சிமிட்டியவனைக் கண்டு

அவள் 'ங்கே' என்று விழிக்க... அவனோ சிரித்தபடி அறையை விட்டு வெளியேறி விட்டான்...

****

அன்று மாலை சித்தார்த் மனைவியை மட்டும் தனியே வெளியில் அழைத்துக் கொண்டு சென்றான்... ஹரி ஜெகதீஸ்வரியை தான் பார்த்துக் கொள்வதாகக் கூறி விட்டான்...

"இப்போ புரிஞ்சதா ஹரி... இந்தச் சித்தார்த் பக்கா பிசினஸ்மேன் என்று... எதையும் ஆதாயத்தோடு தான் செய்வேன்..." என்று கூறி அவன் சிரிக்க... அன்று கண்ணனை தாங்கள் பார்த்து கொண்டதை நினைவு படுத்தினான் அவன்...

"அப்பனே சித்து... நீ ஒரு பக்கா பிசினஸ்மேன் தான்னு நான் ஒத்துக்கிறேன்... ஆனாலும் உன் தொழில் திறமையைக் காட்டிய விதம் இருக்கே... ஆஹா... ஓஹோ..." என்று ஹரி அவனைப் போலியாய் சிலாகிக்க...

சித்தார்த் விரிந்த புன்னகையுடன் அவனிடம் இருந்து விடை பெற்றான்... ஜெகதீஸ்வரியும் புன்னகை முகத்துடன் பெற்றோருக்கு விடை கொடுத்தாள்... அவள் பெரியப்பா குடும்பத்துடன் வெளியில் போகும் உற்சாகத்தில் இருந்தாள்...

"எங்கே போகிறோம்...?"

"நீ தானே கேட்ட, நம் மகளை விட நீ உசத்தியா இல்லையான்னு... அதுக்குத் தான்..." என்றவன் நேரே காரை சென்று நிறுத்திய இடம் அந்தப் பெரிய தோப்பின் முன்...

அந்த இடத்தைப் பார்த்ததும் அவளுக்குப் புரிந்து போனது... காதலர் தினத்திற்காக அவள் கேட்ட பரிசு... இன்று விண்ணைத் தொடும் அளவிற்கு ஓங்கி வளர்ந்து நின்றது அவளவனைப் போல் கம்பீரமாக... பச்சை பசேலென்று சிறு காடு போல் இருந்தது அந்தத் தோப்பு...

"அதுக்குள்ள எப்படி வளர்ந்திருச்சு...?" என்று கூறியபடி ஆச்சிரியமாய் ஒரு மரத்தை கீழிருந்து மேலாக அண்ணாந்து பார்த்தவள் தடுமாறி கீழே சரிய போக அவன் அவளைத் தாங்கி அணைத்துப் பிடித்துக் கொண்டு,

"நம் காதலை போல்..." என்றான் கிசுகிசுப்பாய் அவள் காதருகில்...

அதில் நேசம் மேலோங்க அவள் அவனின் நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்... அதைச் சுற்றி பார்த்து விட்டு அவர்கள் தோப்பு வீட்டிற்கு வரும் போது இரவாகி இருந்தது... அந்தச் சிறு தோப்பு வீட்டை சித்தார்த் இப்போது சற்று பெரிதாக்கி கட்டியிருந்தான்...

"மாமூ இதுக்குத் தானா...?" என்றவள் முகத்தில் சிரிப்பையும் மீறி சிறு வெட்கத்தின் சாயல்...

"எத்தனை வருச காத்திருப்பு பேபி..." என்றபடி காரை விட்டு இறங்கிய மனைவியைத் தனது கைகளில் ஏந்தி கொண்டான்...

வீட்டிற்குள் நுழைந்தவன் கதவை காலால் சாத்திவிட்டு மனைவியிடம், "தாள் போட்டு விடு..." என்க... அவள் அவனது தோளில் சாய்ந்து கொண்டே எட்டி கதவின் தாழ்ப்பாளை போட்டு விட்டாள்...

அதே பௌர்ணமி இரவு... முற்றத்தில் பகல் போன்று வெளிச்சத்தை வாரியிறைத்த நிலவு ஒளியில் விரிக்கப் பட்டிருந்த படுக்கையில் மனைவியைக் கிடத்தி தானும் உடன் சரிந்தான் சித்தார்த்... அன்றைய நாளின் அவசரம் போல் இன்று அவன் எந்தவொரு அவசரமும் காட்டவில்லை...

தனது வலக்கை ஆள்காட்டி விரலால் அவளது முக வடிவை மெல்ல அளக்க ஆரம்பித்தான்... அவளது இதழ் மீது அவன் விரல் வரும் போது அவள் வெடுக்கென்று அதைக் கடித்து வைத்தாள்... அதன் வலியை கூட உணராது அவன் அவளது

முகத்தினைப் பார்த்துக் கொண்டிருந்தான்... கடித்த அவள் தான் பதறி போனாள்...

"மாமூ ரொம்ப வலிக்குதா...? சாரி, சாரி..." என்று அவன் கைப்பற்றி அவனது விரலில் அவள் முத்தமிட...

அவளது மதி போன்ற அழகு முகத்தைப் பால் நிலா வெளிச்சத்தில் பார்த்தபடி ஒரு கணம் இருந்த சித்தார்த் அடுத்த நொடி அவளை விட்டு விலகி எழுந்தான்... அவனது செயலை புரியாது பார்த்தாள் அவள்...

வீட்டில் இருந்த அறைக்குள் சென்றவன் சற்று நேரத்தில் திரும்பி வந்தான்... மின் விளக்கை உயிர்ப்பித்து விட்டு அவள் அருகில் வந்தமர்ந்தான் அவன்...

"என்ன மாமூ...?" என்று கேள்வி கேட்டவளிடம் பதில் பேசாது அவன் அந்தக் காகித கட்டை நீட்டினான்...

"என்னதிது...?" அவள் புரியாது அவனைப் பார்த்தாள்...

"உங்கப்பாவோட உயில்..." என்றவனது முகம் உணர்ச்சியைத் தொலைத்து இருந்தது...

கணவன் கூறியதை கேட்டுக் கைகள் நடுங்க அதைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தவள் அதன் சாராம்சம் புரிந்தவளாய் அதிர்ந்தவளாய் அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

அடுத்த நொடி அவள் முன்னே மண்டியிட்டு அமர்ந்து அவளது இரு கைகளையும் இறுக்கமாய்ப் பிடித்துக் கொண்ட சித்தார்த்,

"பேபி... நீ என் துரோகத்தை மன்னிப்பாயா...?" என்று மனைவியிடத்தில் மன்னிப்பை வேண்டி நின்றான்...

தொழிலில் எத்தனையோ தவறுகள் செய்த போதும் அதை எல்லாம் தைரியமாக, கம்பீரமாகச் செய்து விட்டு எதிராளியை 'வந்து பார்' என்று சவால் விடக் கூடியவன் அவன்... ஆனால் வாழ்க்கையில் முதன்முறையாகத் தவறு செய்து விட்டு மனைவியவளின் காதலின் முன் தலை

குனிந்து மனமுருக மன்னிப்பை வேண்டி நின்றான் எதையும் அஞ்சா நெஞ்சுடன் எதிர் கொள்ளும் அந்த அசகாயச் சூரன்...!!!

"நிழலென்று அறியாது துரோகம் புரிந்தேன்,
நிழலென்று அறியாது காதல் கொண்டேன்,
துரோகம் கொண்ட போதோ காதலில்லை,
காதல் கொண்ட போதோ துரோகமில்லை,
காதலுக்கும் துரோகத்திற்கும் அச்சாரம்,
நீ என்னுயிரில் கலந்தவள்,
நீ எனக்கானவள்...!!!"

நனவாகும்...!!!

மனைவியின் அதிர்ந்த தோற்றம் கண்டு சித்தார்த் மனதிற்குள் மிகவும் வேதனை அடைந்தான்... இதுநாள் வரை அவன் ஒரு போதும் அடுத்தவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு செயலாற்றியது இல்லை... அவன் மனதிற்கு எது சரியென்று தோன்றுகிறதோ அதை அந்தக் கணம் செய்து முடித்துப் பழக்க பட்டவன்... அதுவும் எந்தவித தோல்வியும் இல்லாது வெற்றிகரமாக...

இதோ இப்போதும் அவனது செயல் வெற்றி பெற்று விட்டது தான்... ஆனால் இந்த நொடி மனைவியின் அதிர்வில் அவன் மிகப் பெரிய தோல்வியைச் சந்தித்தான்... அவளது மன்னிப்பை வேண்டி நின்றவன் தனது தரப்பு வாதத்தை அவள் முன் வைக்க விரும்பினான்...

"உங்க ஊருக்கு வந்த சில நாட்களிலேயே எனக்கு உங்கப்பாவோட உயிலின் சாராம்சம் தெரிந்து போய் விட்டது... அப்போது நமக்கிடையே சுமூக உறவு இல்லாது இருந்த நேரம்... அதைப் படிச்சு பார்த்துட்டு எனக்கு அடுத்து என்ன செய்றதுன்னு ஒரே குழப்பம்... அந்தக் குழப்பத்தோடு வீட்டுக்கு வந்தப்போ தான் நீ ஏணியில் இருந்து கீழே விழுந்த... அப்போது உன்னை என் கையில் தாங்கி பிடிச்ச அந்தக் கணம் ஒண்ணு மட்டும் எனக்கு நல்லா புரிஞ்சது... உன்னை யாருக்கும், எதுக்காகவும் என்னால் விட்டு கொடுக்க முடியாதுன்னு... அதே சமயம் உனக்குத் துரோகம் பண்ணுகிறேனோன்னு என் மனசுக்குள் அத்தனை பாரம்... அப்போ நான் அடைந்த வேதனையை என்னால் மறக்க இயலாது..." என்றவன் அதை இப்போதும் உணர்ந்தார் போன்று தனது விழிகளை வேதனையுடன் மூடி கொண்டான்...

அவனது மனக்கண்ணில் நரசிம்மனின் உயிலின் சாராம்சம் காட்சியாய் ஓடியது...

அவர் தனது அத்தனை சொத்துக்களையும் தனது மகள் பிரகதீஸ்வரிக்கும், அவளுக்கு வர போகும் கணவனுக்கும் எழுதி வைத்திருந்தார்... அது கூட அவனைப் பெரிதாகப் பாதிக்கவில்லை... ஆனால் கடைசியாக அவர் கூறிய ஒரு விசயம் மட்டுமே அவனது மனதினை வாள் கொண்டு அறுத்தது... இதோ இந்த நொடி கூட அந்த விசயம் அவனைக் கொல்லாமல் கொன்று கொண்டிருக்கிறது...

அது... நரசிம்மன் தனது இறுதி ஆசையாகத் தனது மகளுக்கும், ஹரிப்ரசாத்திற்கும் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று கூறியிருந்தது தான்... அவளுக்குப் பதினெட்டு வயது முடியும் போது இந்தத் திருமணத்தை நடத்தி விட வேண்டும் என்று அவர் கூறி இருந்ததோடு, அதை நடத்தும் பொறுப்பை வக்கீல் குருமூர்த்தியிடம் ஒப்படைத்து இருந்தார்... ஏனெனில் நரசிம்மனுக்கு ஹரிப்ரசாத் மீது அத்தனை நம்பிக்கை... ஹரி தனது மகளையும், தனது சொத்துக்களையும் நன்றாகப் பார்த்து கொள்வான் என்று என்று அவர் உறுதியாக எண்ணினார்...

பிற்காலத்தில் அவரது இறுதி ஆசையையும், நம்பிக்கையையும் சித்தார்த் என்னும் தொழிலதிபன் மாற்றியமைக்கப் போகிறான் என்று அப்போது அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லையே...

நிச்சயம் இது நம்பிக்கை துரோகம் தான்... அதுவும் தன்னுடைய மனைவிக்குச் சித்தார்த் செய்த மிகப் பெரிய துரோகம் இது... அதை நினைத்து அவனுள் அத்தனை வேதனை எழுந்தது... ஏதோ ஒரு வேகத்தில் துணிந்து துரோகம் செய்து விட்டான்... ஆனால் அதை வெளியில் சொல்ல முடியாது இத்தனை வருடங்களாக அவன் மனதிற்குள் குமைந்து கொண்டிருப்பது அவனுக்கு மட்டும் தெரிந்த ஒன்று...

"மாமூ..." என்றழைத்தபடி பிரகதீஸ்வரி கணவனது இரு கன்னங்களையும் தனது கைகளில் தாங்கி கொண்டாள் நேசத்தோடு... அதில் அவன் விழிகளைத் திறந்தான்...

அவனது வேதனை மனைவியவளின் மனதினை மிகவும் பாதித்தது...

"நீங்க எதுவும் சொல்ல வேண்டாம்... இப்படி வேதனை அடையவும் வேண்டாம்..." என்றாள் கணவனின் காதலை நன்கு உணர்ந்தவளாய்...

"என்னை மன்னிச்சிட்டியா பேபி..." என்றவனது விழிகள் பளபளத்தது அதில் நிறைந்த விழிநீரில்...

அவன் தன் மீது வைத்திருக்கும் அளவில்லாத காதல் அவனை மன்னிக்கத் தூண்டியது... அவன் தன்னிடத்தில் காட்டும் தாய்மை உணர்வு அவனது செயலை மறக்க சொல்லியது... மொத்தத்தில் தன்னவனுக்காக உயிரையும் விடச் சொல்லியது அவளது காதல் மனம்...

"மன்னிப்புங்கிறது பெரிய வார்த்தை மாமூ... நீங்க எந்தத் தப்பும் பண்ணலையே... அப்படி இருக்கும் போது இதில் மன்னிப்புங்கிற வார்த்தைக்கே இடம் இல்லை..."

அவன் எத்தனை தவறுகள் செய்த போதும் தாய்மையுடன் மன்னிக்கும் அவளைக் கண்டு அவனது காதல் இன்னமும் பெருக்கெடுத்தது... அதே போல் அவனது குற்றவுணர்வும்... அடுத்த நொடி அவளது கைகளில் முகத்தைப் புதைத்து கொண்டவனின் முதுகு குலுங்கியது அடக்கப்பட்ட அழுகையில்...

"மாமூ..."

கம்பீரமான அந்த ஆண்மகனின் அழுகையில் அவள் மனம் பதறி போனவளாய் அவன் அருகே கீழ அமர முனைந்த போது அதைத் தடுத்தவனாய் அவன் அவளது மடியில் தலை சாய்ந்து கொண்டான்... அவனுக்கு அவளிடம் நிறையப் பேச வேண்டும்... ஆதி முதல் அந்தம் வரை தனது மனதில் இருப்பதை எல்லாம் அவளிடத்தில் அப்படியே உரைக்க வேண்டும்... அது ஒன்றே அவனது ஒரே எண்ணமாக இருந்தது...

அதை உணர்ந்தவளாய் அவளும் அவனது தலையை மெல்ல வருடி கொடுத்தாள்... அவளது மனம் இரு நிலையில் தவித்துக் கொண்டிருந்தது... தந்தையின் கடைசி ஆசையை நிறைவற்ற முடியாது போனது குறித்து அவளுள் சிறு வருத்தம் இருக்கத் தான் செய்கிறது... ஆனால் கணவன் மீது அவள் வைத்த காதல் இந்த வருத்தத்தை எல்லாம் நொடியில் தூக்கி எறிய செய்தது...

இறந்து போன தந்தையின் வார்த்தையை விட இதோ தன் கண் முன் தவறு செய்து விட்டு மண்டியிட்டு மன்னிப்பை யாசிக்கும் கணவன் அவளுக்கு மிக முக்கியமாகத் தெரிந்தான்... இந்த உலகத்தில் உள்ள எல்லா உறவுகளையும் விட அவன் அவளுக்கு முக்கியம் அல்லவா... அவள் பெற்ற மகளையும் விட...

"இந்த உயில் படிச்சப்போ என் மனசில் உன் மீதான காதல் இருந்தது இல்லை... ஆனாலும் உன்னைக் கை விட எனக்கு மனம் இல்லை..."

அதற்கான காரணம் என்ன என்பதை அவளிடம் கூறாது அவன் மறைத்து விட்டான்... இப்போது மட்டுமில்லை... இனி வரும் காலங்களிலும் அவன் இது பற்றி அவளிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்ல போவதில்லை... ஏனெனில் இதை அவள் அறிந்து கொண்டால் அவளது நிம்மதி பறி போய் விடும்... அதனால் அவன் தன் நிம்மதியை பணயம் வைத்தான் தன் காதல் மனைவிக்காக... அவளாவது மகிழ்ச்சியாக இருக்கட்டும் என்று நினைத்தான் அந்தக் காதல் கணவன்...

அந்த ரகசியத்தைச் சொல்லாது அவன் சொல்லும் இந்தக் கதையை அவள் எந்தளவிற்கு நம்புவாள் என்று அவனுக்குத் தெரியவில்லை... ஆனால் இது கதையாக இருந்து போதும் அத்தனையும் நிஜம்... துளி கூடப் பொய் இல்லை...

"நீ எனக்கு வேண்டும்... அதுவும் என் மனைவியாக வேண்டும் என்று உறுதியாய் நினைத்தேன்... ஆனால் எனக்கு இந்தக் காதல், அன்பு, பாசம் எல்லாம் சுட்டுப்

போட்டாலும் வராது... அதனால் உன்னிடம் பொய்யாக நடிக்க நான் விரும்பினேன்... நடிப்பு என்பதை விட அது துரோகம் என்று தான் சொல்ல வேண்டும்..." என்றவனது வாயை தனது கைகளால் பொத்தியவள்,

"துரோகம்ன்னா என்னை ஏமாத்திட்டுக் கை கழுவிட்டுப் போறது மாமு..."

"ச்சீச்சீ... அப்படி எல்லாம் நான் நினைக்கலை..." என்றான் அவன் அருவருப்புடன்...

அவன் சாகும் வரை அவள் அவனுக்கு மனைவியாக இருக்க வேண்டும் என்று தானே அவன் விரும்பினான்... அவளை விடுத்து வேறு எந்தப் பெண்ணையும் அவன் ஏறெடுத்துப் பார்த்தது இல்லையே...

"அப்போ இதுக்குப் பெயர் காதல் தான் மாமு... நீங்க தான் புரியாம குழம்பி இருக்கீங்க..."

மனைவி கூறுவது அத்தனையும் உண்மை தான்... முதன்முதலில் நிஜத்தை நிழலாய் பார்த்த கணம் அவன் அடைந்த உவகைக்கு அளவே இல்லை... கனவு நனவாய் கை சேர்ந்த மகிழ்ச்சியில் அவன் காரை விட்டு இறங்கிய போது நிழல் அவனைப் பார்த்து கேலி செய்து சிரித்த கணம் அவனது மயக்கம், கனவு எல்லாம் மார்கழி மாத பனி மூட்டமாய்க் கலைந்து போனது...

நிஜம் இது போல் அவனை ஒரு போதும் கேலி செய்யாதே... அன்போடு அரவணைத்து கொள்ளுமே... மனதில் படிந்த ஏமாற்றம் அவளிடம் தனது கோபத்தினைக் காட்ட சொல்லியது... அதன் பிறகும் அவளிடம் முறைத்து நிற்க சொல்லியது... அலைபாயும் மனதினை 'இவள் வேறு' என்று உரு போட்டு அடக்கி வைக்கச் செய்தது...

ஆனால் அந்த உயில் படித்த போது அவனது மனம் மீண்டும் அலைபாயத் தொடங்கியது... நிழலுக்காக ஏங்க தொடங்கியது... முடிவில் அவளை இழக்க முடியாது

எத்தகைய துரோகத்தைச் செய்தாவது அவளை அடைய தூண்டியது...

"அது உன் பெருந்தன்மை பேபி... ஆனால் நான் செய்தது பச்சை துரோகம் தான்... உன் அப்பாவுக்கு, உனக்கு, ஹரிக்கு மூன்று பேருக்குமே நான் துரோகம் பண்ணி விட்டேன்..."

"ப்ச்... விடுங்க மாமூ... உங்களை இந்தளவுக்கு வருந்த வைக்குதுன்னா நீங்க எதையும் சொல்லவே வேண்டாம்..."

"சொல்லலைன்னா என்னால் நிம்மதியா இருக்க முடியாது..." என்றவன் மேலே சொல்ல ஆரம்பித்தான்...

"தைரியமா உன்னை அடைந்தே தீரணும்ன்னு நினைச்ச எனக்கு உன்னோட வயசு பெரிய தடையாக இருந்தது... அதை நினைச்சு எப்போதும் வேதனை இருந்து கொண்டே இருக்கும்... ஒரு சின்னப் பொண்ணைப் போய்க் கல்யாணம் பண்ணிக்க நினைக்கிறியேடா மடையான்னு என்னோட மனசாட்சி என்னைக் காறி துப்பும்... அப்போ எல்லாம் எனக்கு அத்தனை வருத்தமாக இருக்கும்... ஆனா எந்தவொரு காரணத்துக்காவும் உன்னை இழக்க என்னால் முடியாது... அந்த ஒரு காரணமே எல்லாத் தடைகளையும் எளிதாகத் தாண்ட வச்சது... உன்னைத் தீவிரமாய்க் கைப்பிடிக்க வைச்சது..." என்றவன் அவளை நிமிர்ந்து பார்த்து,

"உன்னை மனைவி ஆக்கிக்கணும்ன்னு நினைச்சப்போ என் மனசில் காதல் இல்லை... ஆனால் உன் கழுத்தில் நான் தாலி கட்டினப்போ என் மனசில் உன் மீதான காதல் அளவுக்கு அதிகமா இருந்தது..." என்றவனை அவள் விழி விரிய பார்த்தாள்...

இந்தக் காதல் இல்லை என்று தானே அன்று அவள் அவனை விட்டு பிரிந்தாள்...

"ப்ராமிசா பேபி... அன்னைக்கு ஆத்து நீரில் நீ அடிச்சிட்டு போனப்போ தான் உன் மீதான என் காதலை நான்

உணர்ந்தேன்... நீ இல்லைன்னா செத்து போகணும்ன்னு போல் ஒரு உணர்வு அந்த நொடி தோன்றியது... அந்தக் கணம் என் காதலை புரிந்து கொண்டேன்..."

ஏற்கெனவே கணவன் அவளிடத்தில் இதைச் சொல்லியிருக்கிறான் தான்... புன்னகை விரிய அவனைப் பார்த்து கொண்டிருந்தாள் அவனது மனையாள்...

"நீயும் அப்போ தான் உன் காதலை உணர்ந்ததா சொன்ன இல்லையா...?"

அதற்கு ஆமென்பது போல் அவள் தலையசைத்தாள்...

"அதற்குப் பிறகு தான் நான் தைரியமாக உன்னிடம் உரிமை கொண்டாட ஆரம்பித்தேன்... அதிலும் உன்னை யாருக்கும் விட்டுக் கொடுக்கக் கூடாதுன்னு தான் உன் வயசை கூடப் பொருட்படுத்தாது உன்னை முத்தமிட்டேன்..." என்றவனது குரலில் அத்தனை குற்றவுணர்ச்சி... அவனது முகம் கன்றி கறுத்துப் போனது...

"இப்போ ஜிக்கியோட அப்பாவா நான் செஞ்சதை நினைச்சு பார்க்கும் போது ரொம்பக் குற்றவுணர்ச்சியா இருக்கு பேபி..."

ஒரு பெண் குழந்தையின் தந்தையாய் அவன் மிகவும் மனம் வருந்தினான்...

"தவறு என் மீதும் இருக்கிறது மாமூ..." அவளும் அவனுடன் சேர்ந்து வருந்தினாள்...

அவளது வருத்தத்தில் அவன் தனது வருத்தத்தை ஒதுக்கி வைத்தவன், "ஆனாலும் உன் உணர்வுகளைத் தூண்டுவது போல் நான் நடந்து கொண்டது என் தப்பு தான்... நீயாக என்னிடம் அப்படி நடந்து இருப்பாயா...? இல்லை தானே...?"

அவனது கூற்று உண்மை தான்... அதனால் இல்லை என்பது போல் மறுப்பாய் தலையசைத்தாள்...

"உனக்கு ஹரியை ரொம்பப் பிடிக்குமா...?"

திடுமெனக் கணவன் கேட்டதில் அவள் திடுக்கிட்டு போனவளாய் அவனைக் கூர்ந்து பார்த்தாள்... அவனது கண்கள் தெரிந்த அலைப்புறுதலில் அவள் சற்று நிதானித்தாள்...

குனிந்து அவனது நெற்றியில் இதழ் பதித்தவள், "உங்களை விட இல்லை... இந்த உலகத்தில் எனக்கு ரொம்பப் பிடிச்சது நீங்க ஒருத்தர் தான்..."

அவளது அந்த வார்த்தையில் அந்தக் காதல் கணவன் சுகமாய் உயிர்த்தான்... மகள் வந்த பின்னும் கூட அவனுக்கு இந்த மன சுணக்கம் இருந்து கொண்டே இருந்தது...

"அப்போ உங்கப்பாவோட உயில் பத்தி உனக்குத் தெரிஞ்சு நானா, ஹரியா யார் மணமகன்னு உன்னைத் தேர்ந்தெடுக்கச் சொன்னால் நீ யாரை தேர்ந்து எடுத்திருப்ப பேபி...?"

மிகவும் கடினமான கேள்வி... நிச்சயம் இதற்கு உண்மையான பதிலை அவள் கூறினால் அவனது மனம் காயப்படத் தான் செய்யும்... ஆனாலும் உண்மையை மறைத்து பொய்யுரைக்க அவளுக்கு மனம் வரவில்லை...

"அப்பாவோட உயில் படி அத்தானை தான் நான் தேர்ந்து எடுத்திருப்பேன்..." என்றாள் தனது உள்ளத்தினை மறைக்காது...

அதில் அவனது முகம் வாடி போனது... இப்படி ஒன்று நடந்து விடக் கூடாது என்று தானே அவன் அத்தனை வில்லத்தனம் செய்து அவளைக் கைப்பிடித்தது... அவனது வருத்தம் அவளைப் பாதித்ததோ... அவனது முகத்தைக் கைகளில் தாங்கி அவனது விழிகளுக்குள் விழி கலந்தபடி,

"அப்போதும் உங்களை நான் காதலித்து இருந்தால் நிச்சயம் அப்பாவின் உயிலையும் மீறி உங்களைத் தான் நான் கல்யாணம் பண்ணி இருப்பேன்... அத்தானை கல்யாணம் பண்ண நினைப்பது அப்பாவுக்காக... ஆனால்

உங்களைக் கல்யாணம் பண்ண நினைப்பது உங்களுக்காக, உங்க காதலுக்காக மட்டுமே..."

இதை விடக் காதலை யாரும் கௌரவப்படுத்தி விட முடியாது... துரோகம் செய்தவனையும் அவனது மனைவி காதலால் கௌரவப்படுத்தி விட்டாள்...

"தேங்க்ஸ் பேபி..." அவளது கையைக் கன்னத்தோடு அழுத்தியபடி சொன்னவனின் கை அழுத்தத்திலேயே தெரிந்து போனது அவனது மனம் எந்தளவிற்கு நெகிழ்ந்து இருக்கிறது என்று...

"உன்னை இழந்து விடுவேனோ என்கிற பயத்தில் தான் அவசரமாக உன் பதினெட்டாவது பிறந்தநாள் அன்று நம் கல்யாணத்தை வைத்தது... வேறு எந்தக் கெட்ட எண்ணத்திலும் இல்லை பேபி..." தவிப்புடன் வந்தது அவனது வார்த்தைகள்...

அவன் எதற்காக இந்த வார்த்தைகளைச் சொல்கிறான் என்பதைப் புரிந்தவளாய் அவள் அவனைக் கண்டு ஆறுதலாகப் புன்னகைத்தாள்... அந்தக் கணம் அன்று அவனது அன்னை கூறிய வார்த்தைகள் அவளது காதுகளில் ஒலித்தது...

'இங்கே பாரும்மா... எங்க கிட்டேயும் நிறையச் சொத்துக்கள் இருக்கு... போயும் போயும் சொத்துக்காக உன்னைக் கல்யாணம் பண்ணணும்ங்கிற நிர்பந்தம் என் மகனுக்கு இல்லை...'

"உங்களைப் பத்தி எனக்குத் தெரியாதா மாமூ..." அவளது வார்த்தைகளில் அவனது முகம் மலர்ந்தது...

"என்னைப் பத்தி அப்படி என்னம்மா உனக்குத் தெரியும்...?"

அத்தனை நேர கலக்கம் மறைந்து அவன் குறும்பாய் அவளைப் பார்த்துக் கண் சிமிட்டினான்...

"ஏன் தெரியாது...? தொழிலில் அசகாயச் சூரன்... காதலில் ஒரு கர்ம வீரன்... மகளிடத்தில் ஒரு அன்பான தந்தை..."

"உன்னிடத்தில்...?" என்று கேட்டவனின் குரலில் அத்தனை விசமம் வழிந்தது...

"என்னிடம் மட்டுமே குழந்தையாகி போன என் காதல் கணவன்..." என்றாள் பெருமையாக அவனது கணிப்பை பொய்யாக்கி...

"நீ சொல்வது உண்மை தான்... ஆனால் வேறு ஒன்றை உன்னிடம் இருந்து எதிர்பார்த்தேன்..." என்றான் ஏமாற்றமான குரலில்...

அவனது ஏமாற்றத்தை கண்டு மனதிற்குள் சிரித்துக் கொண்டவள் அவனது காதுக்கருகில் குனிந்து, "பகலில் எல்லாம் இந்தக் குழந்தை சமத்து குழந்தை தான்... ஆனால் இரவில் மட்டுமே கொஞ்சம் முரட்டு குழந்தை... கட்டுப்படுத்த முடியாத பிடிவாத குழந்தை..." என்றவள் இதழ்களில் நமட்டுச் சிரிப்புத் தொற்றிக் கொண்டது...

"ஹா... ஹா..."

மனைவியின் வார்த்தையில் வாய் விட்டு சிரித்தவன் முரட்டு குழந்தை என்ன என்ன பிடிவாதம் பிடிக்கும் என்பதைச் செயல்முறை விளக்கமாய் அவளிடத்தில் காண்பித்த போது அவளுமே அவனது முரட்டுத்தனத்தில் பெரிதும் கவரப்பட்டாள்... அவளது அத்தனை வருட காத்திருந்த காதலுக்கு அவனது வன்மையான காதல் அந்தக் கணம் தேவையாக இருந்தது... அவளும் ஆர்ப்பாட்டமாய் அவனை அரவணைத்து கொண்டாள்...

நிலா வெளிச்சத்தில் உறங்கி கொண்டிருந்த மனைவியின் பால் முகத்தை பார்த்தபடி உறங்காது விழித்திருந்தான் சித்தார்த்... கடந்த கால நினைவுகள் அவனை சிறிதும் துயில் கொள்ள விடவில்லை... மனைவியிடத்தில் பல விசயங்களை அவன் பகிர்ந்து கொண்ட போதும் சில விசயங்கள் இன்னமும் பகிர படாமல் அப்படியே இருக்கிறது... அவன் சாகும் போது அவனது உடலோடு அந்த உண்மையும் எரிந்து சாம்பலாகி போகும்...

பிரகதீஸ்வரியை நிழல் என்று அறியாது அவன் அவளை உயிருக்கு உயிராய் காதலிக்க ஆரம்பித்த போது தான் அவன் அந்த உண்மையை கண்டறிய நேர்ந்தது... கண்ட உண்மையோ அத்தனை கசப்பாக இருந்த போதும் ஒரே ஒரு இனிப்பான, ஆறுதலான விசயம் நிஜத்திற்கும், நிழலுக்குமான தொடர்பு... அதை அறிந்த பிறகு அவளுடனான அவனது பிணைப்பு இன்னமும் இறுகி போனது...

நிஜத்திற்கும், நிழலுக்கும் இடையேயான உறவினால் தான் அவன் அவளை காதலித்தானா...? நிறைய தடவை இதை பற்றி அவன் யோசித்து இருக்கிறான்... இல்லை என்று தான் அவனுக்கு தோன்றியது...

அத்தனை காதலை அவளிடத்தில் வைத்திருந்த போதும் அவள் அவனை சபையில் உதாசீனப்படுத்திய போது சாதாரண ஆண்மகனாய் அவன் கொதித்து எழுந்து விட்டான்... நிச்சயம் நிஜத்திற்காக என்றால் அந்த இடத்தில் அவன் அவளிடம் சமரசமாக போயிருக்க வேண்டும்... இல்லையே அந்த கணம் அவள் மீதான கோபம் தானே அவனது கண்களை மறைத்தது... அதனால் தான் அவளை வேண்டாம் என்று அகம்பாவமாய் புறம் தள்ளினான்...

அப்போது அவனிடத்தில் இருந்த ஆணவம், அகம்பாவம் எல்லாம் இப்போது சுத்தமாய் அவனிடத்தில் இல்லை... ஆம், அதனால் தான் ஐந்து வருடங்களுக்கு முன் அவள் பிரிவை யாசித்த போது அவன் முழு மனதுடன் சம்மதித்தான்... கௌரவம் பார்ப்பவனாக இருந்திருந்தால் அதற்கு சம்மதித்து இருக்க மாட்டானே...

இந்த சித்தார்த்தின் முழு காதலையும் பெற்றவள் அவனது மனைவி மட்டுமே... அவளை அவளுக்காக மட்டுமே நேசித்து திருமணம் செய்து கொண்டவன்... அதனால் தான் அவளிடம் அவன் கோபமும் கொண்டான்... காதலும் கொண்டான்...

நிஜம் அவனது ஆழ்மனதில் மீளா துயில் துயின்று கொண்டிருந்த போதும் இப்போது இந்த நிழலே அவனது

நிஜமாகி அவனது வாழ்வின் கலங்கரை விளக்காக ஒளி வீசி அவனுக்கு மகிழ்ச்சியை வாரியிறைக்கிறது... மனதில் எழுந்த காதலுடன் அவளை அணைத்திருந்த அவனது கைகள் இன்னமும் இறுக்கமாய் அவளை அணைத்ததில் அவள் தூக்க கலக்கத்தில் கண் விழித்து பார்த்தாள்...

"என்ன மாமூ...?"

"ஒண்ணும் இல்லை... தூங்கு..." என்றபடி அவன் அவளை தனது நெஞ்சில் சாய்த்து கொள்ள...

"நீங்க ஏன் தூங்கலை...?"

"நானும் தூங்க போகிறேன்... நீயும் தூங்கு..." என்றவன் அவளை வருடி கொடுக்க அவள் இதழ்களில் உறைந்த புன்னகையுடன் உறங்கி போனாள்... அதை கண்டு அவனும் புன்னகையுடன் தூங்கி போனான்...

மறுநாள் காலையில் கண் விழித்த சித்தார்த்தின் முன் கையில் காபியுடன் தரிசனம் தந்தாள் அவனது செல்ல மனையாட்டி...

குளித்து முடித்து தலையில் ஈர துண்டுடன் உயர் ரக பருத்தி புடவையில் தேவதை போல் நின்றிருந்த மனைவியை கண்டதும் அவனது மையல் அதிகரித்தது... அவளது கையிலிருந்த காபியை வாங்கி அருகிலிருந்த மேசை மீது வைத்தவன் அவளது கையை பிடித்து இழுத்து அவளை தன் மீது வீழ செய்தான்...

"மாமூ..." என்று அவள் சிணுங்கிய போதும் கணவனது கைகளில் பாந்தமாய் அடங்க தவறவில்லை...

"மாமூவுக்கு என்னடி வச்சியிருக்க...?" என்று தாபத்துடன் கேட்டவன் அவளது நாசியில் ஓய்யாரமாய் வீற்றிருந்த வைர மூக்குத்தி மீது முத்தமிட்டான்... அவனது செயலில் அவள் கண் மூடி கிறங்கி போனாள்...

"நான் கொடுத்த கொலுசு போட்டிருக்கியான்னு நேத்து செக் பண்ண மறந்துட்டேன்... இப்ப செக் பண்ணி

பார்க்கவா பேபி...?"

அவனது குரலில் வழிந்த உணர்வு அது கொலுசுக்கான தேடல் மட்டும் இல்லை என்று சொல்லாமல் சொன்னது... அதில் விழிகளை திறந்தவள் களுக்கென்று சிரித்தாள்...

"என்ன பேபி செக் பண்ணவா...?"

ஒற்றை புருவத்தை தூக்கி நமட்டு சிரிப்புடன் கேட்டவனை கண்டு சிரித்தபடி தனது கால் பகுதி புடவையை லேசாக விலக்கி காண்பித்தவள்,

"நீங்க கொடுத்த தங்க கொலுசை நான் எப்போதுமே போட்டு இருக்கேன்..."

"சத்தமே வரலையேடி..." என்று அவன் கொலுசை மென்மையாய் வருடியபடி கேட்க...

"நான் என்ன உங்க மகளா...? ஜல் ஜல்ன்னு சத்தம் போடுற மாதிரி கொலுசு போடுறதுக்கு... உங்க பேபிக்கு வயசாகிருச்சு மாமூ..."

"உனக்கு வயசாகிருச்சுன்னு யாருடி சொன்னது...? அன்னைக்கு பதினேழு வயசில் பார்த்த மாதிரி நீ இன்னைக்கும் என் கண்ணுக்கு அப்படியே இளமையா தெரியற..."

கணவன் கூறியது கேட்டு அவளுக்கு சிரிப்பு பொங்கியது...

"போதும், போதும் அப்படியே உங்க வயசையும் சேர்த்து குறைக்கலாம்ன்னு நினைக்காதீங்க..."

"உண்மையை ஒத்துக்க மாட்டியே..." என்று சலித்தவன்,

"இப்போ உண்மைய ஒத்துக்குவ பாரு..." என்றவன் ஆவேசமாய் அவளை தனது ஆளுகையின் கீழ் கொண்டு வந்தான்...

அவனுள் அவள் அடங்கிய போதும், "மாமூ... ஜிக்கி நமக்காக காத்திக்கிட்டு இருப்பாள்... நேரத்தோடு

போகலைன்னா ரொம்ப வருத்தப்படுவாள்..." என்று மகளை நினைவு படுத்தினாள் ஒரு தாயாய்...

'மகள்' என்னும் மந்திர சொல் தந்தை அவனுள் மாயாஜாலத்தை ஏற்படுத்தியது... அடுத்த நொடி மனைவியை விட்டு விலகியவன் குளியலறையை நோக்கி ஓடினான்...

"மாமூ... நீங்க இன்னும் சரியா செக் பண்ணலையே..." அவளது கேலி குரல் அவனை துரத்தியது...

"பகல் முழுவதும் எனது மகளுக்கு... இன்று இரவு சரியா இருக்கான்னு செக் பண்றேன்..." என்று கூறியவன் முகத்தில் உறைந்த புன்னகையுடன் குளியலறை கதவை சாத்தி கொண்டான்...

குளிர்ந்த நீரில் குளிக்கும் போது அவனிடத்தில் இத்தனை நாளாய் இருந்த ஒருவித தவிப்பு காணாது போய் நிம்மதி மட்டுமே நிறைந்திருந்தது... அது தானே அவன் இத்தனை நாளாய் வேண்டி இருந்தது... அவனது நிம்மதி அவனுடைய மனைவியிடத்தில் என்பதை அவன் உணர்ந்தே இருந்தான்...

அடுத்த சில மணி துளிகளில் இருவரும் கிளம்பி வீடு வந்து சேர்ந்தனர்... அவர்களின் வரவிற்காக காத்திருந்தார் போன்று அர்ஜூன், சங்கமித்ரா இருவரும் அவர்களிடம் விடை பெற்று ஊருக்கு கிளம்பினர்... அவர்கள் கிளம்பி சென்றதும் சித்தார்த் மகளுடன் இணைந்து பேசியபடி காலை உணவில் மூழ்கி போனான்... அவன் மனைவியை சிறிதும் கண்டு கொள்ளவில்லை...

'திரும்ப ஆரம்பிச்சாச்சு... மாமூ உங்களை...' என்று மனதிற்குள் கோபமாய் கனன்றாள் பிரகதீஸ்வரி...

மற்ற பெண்களுடன் இணைந்து அவள் உணவு உண்ண அமர்ந்த போதும் அவளது மனம் அவளது மன்னவனிடத்தில் மையம் கொண்டு இருந்தது... அப்போது ஒரு குரல் அவள் அருகில் ஒலித்தது...

"பேபி... இப்படி சாப்பிட்டால் இந்த ஜென்மத்தில் உன் உடம்பு தேறாது..." என்று கூறியபடி சித்தார்த் இன்னமும் இரண்டு தோசையை எடுத்து அவளது தட்டில் வைத்தான்...

அவனது வார்த்தையில் முகம் மலர திரும்பியவள் அவனது செயலில் 'ங்கே' என்று விழித்தாள்...

"ஒழுங்கு மரியாதையா எல்லாத்தையும் சாப்பிடணும்..."

அத்தனை பேர் சுற்றியிருக்கும் போதே அவன் தனது மனைவியை செல்லமாய் மிரட்டினான்... அதை கண்டு எல்லோரும் புன்னகைத்தனர்... அவளுக்கும் புன்னகை வந்தது... ஆனாலும் வெளியில் அவனை பார்த்து முறைத்து வைத்தாள்...

உணவு உண்டு விட்டு வந்தவளிடம், "பேபி, எப்படி இருந்தது என் கவனிப்பு...?" என்று கொஞ்சலாக கேட்டவனை முறைத்து கொண்டே அவள்,

"ஜிக்கி..." என்று மகளை அழைக்க போக...

அவசரமாக அவளது வாயை பொத்தியவன், "ஏன்டி இப்படி கத்துற...? கவனிச்ச மாமனுக்கு தனி கவனிப்பு கிடைக்குமான்னு கேட்டேன்..." என்று ஏக்கத்துடன் கேட்டவனை கண்டு அவளுக்கு பாவமாக இருக்க...

அக்கம் பக்கம் பார்த்து கொண்டே அவனது கன்னத்தில் அவசரமாக ஒரு அச்சாரத்தை பதித்து விட்டு அவள் உள்ளே ஓடி விட்டாள்... அவன் சிரித்தபடி அங்கிருந்து சென்றான்...

****

சிறிது நேரம் கழித்து மகளை வீட்டில் விட்டு விட்டு இருவர் மட்டுமே நிறுவனத்திற்கு சென்றனர்... அங்கு சென்றதும் எல்லோரும் அவளை அடையாளம் கண்டு கொண்டு அதே மதிப்புடன், மரியாதையுடன் வணக்கம் தெரிவித்தனர்...

கணவன், மனைவி இருவர் மனதிலும் அன்றைய நாளின் நினைவுகளின் தடம்... அன்று அவன் மனதில் இருந்த

கோபம் இன்றில்லை... மாறாக மனைவி குறித்து அவனுக்கு அத்தனை பெருமையாக இருந்தது...

அலுவலக அறைக்குள் நுழைந்து அங்கிருந்த நாற்காலியில் அவளை அமர செய்து, "வணக்கம் முதலாளியம்மா..." என்று அவன் தொழிலாளி போல் பணிவாக வணக்கம் தெரிவித்ததை கண்டு அவளது கண்கள் கலங்கியது...

"மாமு..." என்று அவனது இடுப்பை கட்டி கொண்டு அவனது வயிற்றில் முகம் புதைத்து கொண்டாள்...

"என்றுமே நான் உனக்கு தொழிலாளி தான்... என்றுமே நீ எனக்கு முதலாளி தான்..." என்றவனை அவள் வியப்பாய் பார்த்தாள்...

அவளை விட்டு விலகியவன் அங்கிருந்த அலமாரியை திறந்து சில கோப்புகளை எடுத்து வந்து அவள் முன் வைத்தான்...

"உன் அப்பா உன் பெயரில் எழுதி வைத்த அனைத்து சொத்துக்களும் அப்படியே தான் இருக்கிறது... இதில் இருந்து ஒரு பைசா கூட நான் எடுக்கலை..." என்றவனை காண காண அவளுக்கு அழுகை பீறிட்டு கொண்டு வந்தது...

"இந்த சொத்துக்களுக்காக தான் நான் உன்னை கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னு நீ என்னை பார்த்து கேட்டியே பேபி... அது உனக்கு ஞாபகம் இருக்கிறதா...?"

அதை எப்படி அவளால் மறக்க முடியும்...? கடந்த ஐந்து வருடங்களாக அதை நினைத்து அவள் மருகாத நாளில்லையே... செய்யாத ஒன்றிற்காக பழியை ஏற்று கொண்டு தன் மீது காதல் கொண்டு காத்திருந்த கணவனை கண்டு அவளது உள்ளம் கசிந்தது...

"என்னை மன்னிச்சிருங்க மாமு... அது ஏதோ தெரியாம பேசிட்டேன்... இப்போ நான் உங்களை நல்லா புரிஞ்சிக்கிட்டேன்..."

அவளது புரிதல் மீது அவனுக்கு எந்தவித சந்தேகமும் இல்லை... ஆனால் அவன் மீதான அவளது சந்தேகத்தினை களைய வேண்டியது அவனது கடமை அல்லவா...

"உன்னை பத்தி எனக்கு தெரியாதா பேபி..." என்று அவளது தலையை வருடி கொடுத்தவனின் செயலில் அவளது மனம் அப்படியே அமைதியுற்றது...

அவனது வயிற்றில் அவள் தலை சாய்ந்து கொள்ள அவன் வாகாய் மேசை மீது சாய்ந்து அவளது தலையை தாங்கி நின்றான்...

"நிச்சயம் இந்த சொத்துக்களுக்காக தான் நான் உன்னை கல்யாணம் பண்ணியது..." என்றவனை கண்டு அவள் திகைத்து போகவில்லை... மாறாக அவனது கூற்றுக்காக அமைதியாக செவி சாய்த்தாள்...

"அன்று இதற்காக நான் போராடவில்லை என்றால் இந்த சொத்துக்கள் எல்லாம் என் அத்தை வசம் போயிருக்கும்..."

அது கேட்டு அவளது உடல் விறைத்தது அன்றைய நாளின் நினைவில்... தனது சின்ன அன்னை தனது தந்தையை பற்றி கேவலமாக கூறிய செய்தி கேட்டு இப்போதும் அவளது மனம் அருவருத்து போனது... அதே சமயம் அவளது மனதிற்கு அத்தனை வேதனையாக இருந்தது... கணவனை நிமிர்ந்து பார்த்து எதையோ சொல்ல துடித்தவளுக்கு அதை எப்படி அவனிடத்தில் சொல்வது என்று தெரியாது விழித்தாள்...

"பேபி... நீ இத்தனை வேதனை படும் அளவுக்கு இதில் ஒன்றுமில்லை... நான் இருக்கும் வரை எதுவும் உன்னை பாதிக்காது... உன்னை காக்கும் அரணாய் என்றும் நான் இருப்பேன்... அதனால் தான் அத்தையை மிரட்டி நீ எழுதி கொடுத்த சொத்துக்களை திரும்ப மீட்டு விட்டேன்..."

"என்ன சொல்லி மிரட்டினீங்க...?"

அத்தனை ஆவல் அவளது குரலில் நிரம்பி வழிந்தது... ஏனெனில் ஊரையே மிரட்டும் விமலாராணியை சித்தார்த்

அப்படி என்ன சொல்லி மிரட்டி இருப்பான் என்று தெரிந்து கொள்ள அவளுக்கு அத்தனை ஆர்வமாக இருந்தது...

"உண்மையை சொன்னேன்..." என்றான் அவன் சூப்பர் ஸ்டார் போன்று ஸ்டைலாக... அதை கண்டு அவளுக்கு சிரிப்பு வந்தது...

"ஆனால் அந்த உண்மை கசக்கும்... அதனால் அது உனக்கு வேண்டாம்..." என்று மேலே அவள் கேள்வி கேட்கும் முன் சாமர்த்தியமாக அதை அவன் தடுத்து விட்டான்...

"அம்மா எங்கே இருக்காங்கன்னு உங்களுக்கு தெரியுமா...?"

விமலாராணியின் நிலை என்ன என்பது அவனுக்கு தெரியும்... ஆனாலும் அதை மனைவியிடத்தில் சொல்ல மனம் இல்லாது அவன் மறைத்து விட்டான்...

"தெரியலை பேபி... தேடி கொண்டே இருக்கிறேன்... அத்தையை கண்டுபிடித்ததும் உன் கண் முன் நிறுத்தி விடுகிறேன்..." என்றவனை கண்டு அவள் சிறிது சமாதானமானாள்...

இனி வரும் காலங்களில் அவன் அதை ஒரு போதும் செய்ய போவதில்லை என்பதை அவள் அறிந்திருக்க வில்லை...

"மேடம்... கணக்கு எல்லாம் சரியா இருக்கான்னு பாருங்க..." அவளது மனதினை மாற்றிட எண்ணி அவன் அப்படி கூற...

"அப்போதும் அப்படி தான் முதலாளின்னு ஏதோ சொன்னீங்க... இப்பவும் மேடம்ன்னு சொல்றீங்க...? நான் உங்களுக்கு முதலாளியா...? நீங்க எனக்கு தொழிலாளியா...?" என்று மிரட்டும் பாவனையுடன் அவள் கேட்க...

"இரவு நேர கணக்கை கூட்டி கழித்து பார்... விடை சரியாக இருக்கும்..." என்று விசமமாக சிரித்த கணவனை கண்டு அவளது முகம் செவ்வானமாய் சிவந்து போனது...

அதை ரசித்து பார்த்து கொண்டிருந்த சித்தார்த் அத்தனை நிறைவாக, நிம்மதியாக உணர்ந்தான்...

இனி பெண்ணவளின் சந்தோசம் மன்னவனின் கைகளில்...!!!

"கதிரவன் ஆண், கமலம் பெண்...
தொன்று தொட்டு தொடரும் உவமை...
நம் காதலில் உவமை மாறுகிறதடி...
கதிரவன் நீ, கமலம் நான்...
உன் மலர் முகம் கண்டு நான் மலர்வேன்...
பூவினும் மெல்லிய மனம் வலிய
ஆணுக்குள்ளும் உண்டு... அது,
வலிய காதலில் மட்டுமே சாத்தியம்...
வன்மையான காதலே மென்மையான
தாயுமானவனாய் ஆணை பிரசவிக்கிறது...
நான் மெல்லினம், நீ வல்லினம்
இடையில் இடையினமாய் நம் காதல்..."

நனவாகும்...!!!

"மாமூ..."

என்றழைத்த மனைவியைக் குனிந்து பார்த்த சித்தார்த் 'என்ன' என்பது போல் அவளைக் கேள்வியாய் நோக்கினான்...

"உங்களுக்கு இந்தச் சொத்துக்கள் முக்கியமா...? இல்லை நானா...?"

பிரகதீஸ்வரி தனக்குள் யோசித்தபடி கணவனிடம் கேள்வி கேட்டாள்...

"இது என்ன அபத்தமான கேள்வி பேபி...?" என்றவனுக்குச் சிறிது கோபம் எட்டி பார்த்தது... ஆனாலும் அவள் சளைக்காது அவனது பதிலுக்காகக் காத்திருந்தாள்...

"எப்போதும் எனக்கு நீ மட்டும் தான் முக்கியம்... உன்னுடைய சொத்துக்கள் எல்லாம் இரண்டாம் பட்சம் தான்... அப்புறம் எதுக்காக உன் சொத்துக்களைக் கையில் எடுத்தேன்னு உன் மனசில் பல கேள்விகள் இருக்கும்... அதுக்கான என்னுடைய ஒரே பதில் பணத்தின் அருமை உனக்குத் தெரிய வைக்கணும்ங்கிறதுக்காகத் தான்... உன்னுடைய சொத்தை அடிப்படையாக வச்சு தொழிலை மேலும் மேலும் பெருக்கி கிட்டு தான் நான் போனேன்... அதில் கிரானைட் பிசினஸ், ரியல் எஸ்டேட் பிசினஸ் இது எல்லாம் அடக்கம்..." என்றவன் மனைவியை ஆழ்ந்து பார்த்துக் கொண்டு,

"இதில் இருந்து வந்த வருமானம் எதையும் நான் தொடலை... எல்லாமே உன்னோட பெயரில் தான் சேமித்து இருக்கிறேன்..."

"அது எனக்கும் தெரியும் மாமூ... ஆனால் இயற்கையை அழிக்கிறது தவறு இல்லையா...?" என்றவளை கண்டு அவன் தோளை குலுக்கினான்...

"சரியோ, தவறோ அது எனக்குத் தெரியாது... எல்லோரும் பணம் சம்பாதிக்க என்ன செய்றாங்களோ அதைத் தான் நானும் செய்கிறேன்... இன்னைக்கு நான் இதைச் செய்யலைன்னா நாளை வேறு ஒருத்தன் செய்து பணம் பார்க்க போகிறான்... அதை நாம் ஏன் அடுத்தவங்களுக்கு விட்டு கொடுக்கணும்...? கிடைத்த வாய்ப்பை விட்டு கொடுக்க நான் ஒண்ணும் முட்டாளில்லை... நான் செஞ்சது தவறுன்னு நான் ஒரு போதும் ஒத்துக்க மாட்டேன்..." என்று ஆணித்தரமாகக் கூறியவனைக் கண்டு அவளது முகம் வாடி போனது...

கூம்பி போயிருந்த அவளது மதி முகத்தைத் தனது கைகளில் ஏந்தியவன், "இது எல்லாம் அப்போ இருந்த சித்தார்த்தோட நிலை... ஆனால் ஐஞ்சு வருசத்துக்கு முன்னாடி என்னோட செயல் பிடிக்காம நீ பிரிஞ்சு போனியோ அன்னைக்கே நான் என்னைக் கொஞ்சம் கொஞ்சமா மாத்திக்க ஆரம்பிச்சேன்..." என்றவனைக் கண்டு அவளது முகம் மலர்ந்தது...

"அன்னைக்குக் கட்டிடம் இடிஞ்சு விழுந்ததில் என்னோட தவறு எதுவும் இல்லை... அதற்கு என்று நியமிக்கப்பட்டு இருந்த என்ஜினியர் செஞ்ச தவறு தான் இதற்கு எல்லாம் காரணம்... அவன் எங்க கிட்ட காட்டிய ரிப்போர்ட் ஒண்ணு... ஆனால் அவன் செஞ்சது ஒண்ணு... அவன் கமிசனுக்கு ஆசைப்பட்டுத் தரம் குறைஞ்ச பொருட்களைப் பயன்படுத்தியது பிறகு தான் விசாரணையில் தெரிய வந்தது... எப்போதுமே ஒரு தவறு நடந்து முடிஞ்சதுக்கு அப்புறம் வாதாடி பிரயோஜனம் இல்லை... செஞ்ச தவறை திருத்திக்கத் தான் பார்க்கணும்... அதைத் தான் நான் அடுத்து வந்த நாட்களில் செய்தேன்... உயிரிழந்த தொழிலாளர்கள் குடும்பத்துக்கு இன்னைக்கு வரைக்கும் உதவிகள் போய்க் கொண்டு தான் இருக்கு... அடுத்தவங்களை வாழ வைத்தால் என் குடும்பம் நல்லா இருக்குமேங்கிற ஒரு சுயநலம் தான்... பாதிக்கப்பட்டவங்களுக்கு மருத்துவச் செலவு

முதற்கொண்டு எல்லாமே நம் நிறுவனம் ஏற்றுக் கொண்டது..."

கல்லுக்குள் ஈரம் என்பது இது தானோ... பிரகதீஸ்வரி கணவனை நெகிழ்வுடன் பார்த்தாள்...

“ஆனால் அன்னைக்கு அவ்வளவு பிரச்னையிலும் உன்னை ஹனிமூன் கூட்டிட்டுப் போனது தவறு தான்... என்னோட தவறுகள் உன்னைப் பாதிக்கக் கூடாதேங்கிற ஒரே காரணம் தான்... இப்போது நினைத்து பார்க்கும் உனக்குச் சொல்லி புரிய வச்சிருக்கலாமோன்னு தோணுது...”

"ஒரு காலத்தில் நான் பணத்தைப் பெருசா நினைச்சவன் தான்... நீ என்னைப் பிரிஞ்சி போன போது இந்தப் பணம் கூட எனக்கு வெறுமையைத் தான் கொடுத்தது... உன்னை விட எதுவுமே பெரிசில்லைன்னு நினைக்க வச்சது... சொத்து, சுகம், அந்தஸ்து எல்லாத்தையும் விட நீ தான் எனக்கு முக்கியம்ன்னு உணர வச்சது... இப்போ என்னால் தைரியமா நீ கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல முடியும்... உன் சொத்துக்களை விட எனக்கு நீ மட்டும் தான் முக்கியம் பேபி..."

"மாமூ..."

விழிகள் கசிய ஏறிட்ட மனையாளின் நெற்றியில் முத்தமிட்டவன், "பணத்தால் வாங்க முடியாத சில விசயங்கள் இருக்குங்கிறதை தெரிஞ்சுக்கிட்டதே நம் பிரிவில் தான்... கடந்து போன நம் வாழ்க்கையை, நம் சந்தோசங்களை, ஜிக்கி பிறப்பை... இது எதையும் என்னால் திரும்பப் பெற முடியாது... அந்தக் கணம் தான் எனக்குப் பணம் மீது வெறுப்பு வந்தது..."

அவளும் அதை உணர்ந்தே இருந்தாள்... விதி கடுமையாக அவர்களது வாழ்க்கையில் விளையாடி விட்டதோ... இல்லை கணவனுக்குப் பாடம் புகட்ட எண்ணியதா...?

"திரும்ப உன்னிடம் வந்து மன்னிப்பு கேட்டு இருப்பேன்... ஆனால் திரும்ப என்னோட செயல் ஏதாவது உன்னைக்

காயப்படுத்தி விடுமோன்னு பயந்து தான் நான் வரவே இல்லை..." என்றவனைப் புரியாது பார்த்தாள் அவள்...

"நாம் மட்டும் திருந்தினால் போதாது பேபி... நம்மைச் சுத்தி இருக்கிறவங்களும் திருந்த வேண்டும்... இல்லைன்னா மனசுக்கு ஒவ்வாத சில விசயங்களை நாம் செய்ய வேண்டியிருக்கு... சில விசயங்களில் நாம் காம்ப்ரமைஸ் பண்ணி தான் போக வேண்டியிருக்கு... வேறுவழியில்லை..." என்று அவன் தனது கைகளை விரித்தான் இயலாமையுடன்... அவளுக்கு அது புரிய தான் செய்தது...

"எல்லாம் சரி தான் மாமூ... பின்னே எதுக்கு மினிஸ்டரை கூப்பிட்டு வச்சு என்னை மிரட்டினீங்க..." அதைக் கேட்டு அவன் வாய் விட்டுச் சிரித்தான்...

"எங்கே அந்தாளு உன்னை மிரட்டினானா...? அவரே என்னைக் கண்டு மிரண்டு போயிருந்தார்... அவரை வச்சு உன் கிட்ட பேச வச்சதுக்குக் காரணம் எனக்காக இல்லையடி பெண்ணே... இதனால் பாதிக்கப்பட்ட மத்தவங்க மூலம் உன் உயிருக்கு ஆபத்து வந்து விடக் கூடாதேங்கிற பயத்தில் தான்... நீ என்னடான்னா முறுக்கிட்டு இருக்க... நான் மட்டுமே இதைச் சரி செய்து இருக்கேன்... மத்தவங்க எல்லாம் உன் மேல் கொலைவெறியில் இருக்காங்க... அது தான் எனக்குப் பயம்..."

"அட... என் மாமூ பயப்படுவாங்களா...?" என்று கேலியாய் கேட்டவளை ஆழ்ந்து பார்த்தவன் பின் பெருமூச்சு விட்டபடி,

"என் விசயத்தில் நான் பயப்பட மாட்டேன்... ஆனால் உன் விசயம், ஜிக்கி விசயத்தில் இந்தச் சித்தார்த் ரொம்ப ரொம்பப் பயந்தவன் தான்... என்னுடைய உயிர் நீங்க ரெண்டு பேரும் தான்..." என்றவனைக் கண்டு அவளுக்குக் காதல் பெருக்கெடுத்தது...

"மாமூ... நான் ஒண்ணு சொன்னா கோவிச்சுக்குவீங்களா...?"

"நீ ஒண்ணு என்ன ஓராயிரம் சொல்லலாம்... எனக்குக் கோபமே வராது..." அவளது கூர்மூக்கை பிடித்து விளையாட்டாய் ஆட்டியபடி கூறியவனைக் கண்டு,

"வலிக்குது மாமூ..." என்று அவள் சிணுங்க... அவன் சிரித்தபடி தனது கையை எடுத்தான்...

"என்ன விசயம் சொல்லு...?"

"இந்தச் சொத்துக்கள் எல்லாத்தையும் அண்ணா, அக்காவுக்குக் கொடுத்தால் என்ன...?"

சித்தார்த் இதை எதிர் பார்க்காதவனாய் திகைத்து போய் அவளைப் பார்த்தான்...

"எனக்கு நீங்க இருக்கீங்க... நீங்க மட்டும் போதும்... இந்தச் சொத்துக்கள் எதுவும் வேண்டாம்..."

உயர்ந்த படிப்பு படித்து உயர் பதவி வகிக்கும் மனைவியின் வார்த்தையில் இருந்த காதல் அவனைச் சந்தோசப்படுத்தியது தான்... ஆனால் அவள் இப்படிச் சொன்னது அவனுக்கு மிகுந்த வருத்தத்தை அளித்தது... இது அவளுக்கு மட்டுமே கிடைக்க வேண்டிய நியாயமான சொத்துக்கள்...

"பேபி... உங்கப்பாவை பத்தி உனக்கே தெரியும்... அவரோட தம்பி பிள்ளைங்க மேல் அவர் எந்தளவுக்குப் பாசத்தை வச்சிருந்தார்ன்னு... அப்படிப்பட்டவர் ஏன் இத்தனை சொத்துக்களை உன் பெயரில் எழுதி வைத்தார்...? ஏன்னா இது அனைத்தும் உனக்குத் தான் போய்ச் சேரணும்ன்னு அவர் விரும்பி இருக்கிறார்..."

இதைச் சொல்லும் போது சித்தார்த்தின் வார்த்தைகளில் அத்தனை நடுக்கம் இருந்தது... ஏனெனில் இதன் பின்னணியில் இருக்கும் உண்மையான காரணம் அவனுக்கு மட்டும் தானே தெரியும்... அதை நினைத்து அப்படி ஒரு வேதனை அவனுள்... அவளிடத்தில் அந்த உண்மையைச் சொல்லவும் முடியாது, சொல்லாது இருக்கவும் முடியாது அவன் மிகவும் தவித்துப் போனான்...

"அவங்க பெயரில் எழுதினால் அம்மா அத்தனையையும் ஆசைப்பட்டு எடுத்துக்குவாங்கன்னு அப்பா பயந்து இருக்கலாம்... இதே இது என்னிடம் கொடுத்தால் நான் பாரபட்சம் பார்க்காம பிரிச்சு கொடுப்பேன்னு அவர் நினைச்சு இருக்கலாம்... என் மேலுள்ள நம்பிக்கையில் இதை அவர் செஞ்சு இருக்கலாம் இல்லையா...?"

இப்படி ஒரு கோணத்தில் அவன் இதுவரை யோசித்தது இல்லை... இப்படியும் இருக்கலாமோ என்று அவன் முதன்முறையாகச் சிந்தித்தான்...

"சரி பேபி... உன் விருப்பம் தான் என் விருப்பமும் கூட..." என்று அவன் உடனே அதற்குச் சம்மதித்தான்...

"வருத்தமா மாமூ..."

இல்லை என்பது போல் தலையசைத்தவன், "உன்னை விட எனக்கு எதுவும் முக்கியம் இல்லை..." என்று கூறி மீண்டும் தனது காதலை மனைவியிடம் நிரூபித்தான்...

"பேபி..." என்று இழுத்த கணவனை என்னவென்று அவள் பார்த்தாள்...

"இந்த உயில் விசயம் ஹரிக்கும் தெரியும்..."

அவள் திகைப்பும், ஆச்சிரியமுமாய்க் கணவனை ஏறிட்டாள்...

"தெரிஞ்சு இருந்தும் அவன் உன்னை எனக்கு விட்டு கொடுத்து இருக்கான்னா அதுக்குக் காரணம் உன் மேல் அவன் வைத்த பாசம் தான்... அவனை மாதிரி ஒருத்தனை உலகில் எங்குத் தேடினாலும் கிடைக்க மாட்டாங்க... லட்டு மாதிரி பொண்ணு இத்தனை சொத்துக்களோடு கிடைக்குதுன்னா யார் தான் விட்டு கொடுப்பாங்க... ஆனால் அவன் விட்டுக் கொடுத்தான்... நீ என் மேல் வச்ச காதலுக்காக விட்டுக் கொடுத்தான்... அது கூடப் புரிஞ்சிக்காம நான் அவன் கிட்ட பொறாமையில் கோபப்பட்டு இருக்கேன்..." என்று கூறிய சித்தார்த் மனதிற்குள் தன்னைக் குறித்து வெட்கினான்...

"ஓ... அதனால் தான் நீங்க எப்போதும் அத்தானை பிடிக்குமான்னு என் கிட்ட கேட்டுக்கிட்டே இருந்தீங்களா..."

"ம்..." என்றவன் அவள் முதன்முதலில் ஹரியிடம் தொலைப்பேசியில் பேசிய போது தான் அடைந்த பொறாமையை அப்படியே அவளிடத்தில் கூறினான்...

"ஏனோ தெரியலை அப்போ ஹரி என்கிற பெயரை கேட்டாலே எனக்கு அவ்வளவு அலர்ஜியா இருந்தது... அவனா, நானான்னு வரும் போது உன்னோட சாய்ஸ் அவனாகத் தான் இருக்கும்ன்னு எனக்குள் நான் மருகிட்டு உன்னையும் சேர்த்து ரொம்பப் படுத்தி எடுத்துட்டேன்... இப்போ அதை எல்லாம் நினைச்சா எனக்குச் சிரிப்பு தான் வருது... இப்போ உங்க ரெண்டு பேரையும் நான் நல்லா புரிஞ்சிக்கிட்டேன்..."

"அது தான் எனக்குத் தெரியுமே..." என்று புரிதலுடன் கூறியவளை கண்டு அவனுக்கு அத்தனை பெருமையாக, நிம்மதியாக இருந்தது...

சிறிது நேரம் அலுவலகத்தில் இருந்து விட்டு இருவரும் வீடு வந்து சேர்ந்தனர்... வந்ததும் சரவணன், சந்தியா இருவரிடமும் விசயம் சொல்லப்பட்டது...

அப்போது சந்தியா கணவனைக் கேள்வியாகப் பார்த்தாள்... அவன் சம்மதம் இல்லாது அவள் இத்தனை சொத்துக்களைப் பெற்றுக் கொள்வது சரியில்லையே... ஹரியோ புன்னகையுடன்,

"இது உன் பிறந்த வீட்டுச் சொத்துக்கள்... இதற்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை..." என்று கூற...

"உங்களுக்கு விருப்பம் இல்லை என்றால் எனக்கும் இது எல்லாம் வேண்டாம்... எனக்கு நீங்க மட்டும் போதும்..." என்று அவள் கூற...

மனைவியின் நேசம் கணவன் அவனைச் சுகமாய்த் தாலாட்டியதோ... மகிழ்வோடு அவள் தோள் சுற்றி கை போட்டு அணைத்து கொண்டவன்,

"அப்படி என்றால் எனக்கு என் மனைவியோடு அவளது சொத்துக்களும் வேண்டும்..." என்றான் சிரிப்புடன்...

சரவணன் ஒன்றும் பேச தோணாது வாயடைத்துப் போயிருந்தான்... இத்தனை சொத்துக்களைக் கட்டி ஆளும் திறமை அவனுக்கு இல்லை... அவனே இப்போது தான் அவனது தொழிலில் கொஞ்சம் கொஞ்சமாய் அடிப்பட்டு முன்னேறி வந்து கொண்டிருக்கிறான்... இப்போது பூர்வீக சொத்துக்களைத் தன்னால் முறையாகப் பராமரிக்க முடியுமோ என்கிற பயம் அவனுள் எழுந்தது...

"இல்லை அத்தான் இது சரிப்பட்டு வராது... பிரகதியிடமே எல்லாம் இருக்கட்டும்..."

"உனக்கு என்னடா பிரச்சினை...?" நேரிடையாகக் கேட்டான் சித்தார்த்...

"அது வந்து..." என்று இழுத்தவன் உண்மையான காரணத்தைக் கூற...

அதைக் கேட்டு எல்லோரும் சிரித்து விட்டனர்... இதற்காக எல்லாம் யாரும் சொத்துக்களை வேண்டாம் என்று சொல்வார்களா என்று... அப்போது ஹரி வாய்த் திறந்தான்...

"சித்து... இது இப்படியே முன்பு போல் நீங்களே பாருங்களேன்... ஏனென்றால் எங்களுக்கு இதில் எல்லாம் அவ்வளவு அறிவோ, அனுபவமோ கிடையாது..."

சித்தார்த்தின் திறமை பற்றி அவனுக்கு நன்கு தெரியும் ஆதலால் அப்படிக் கூறினான்... கடைசியில் ஏக மனதாய் சித்தார்த் எப்போதும் போல் தொழிலை பார்ப்பது என்று முடிவு செய்யப்பட்டது... அதே போல் சொத்துக்கள் அனைத்தும் பிரகதீஸ்வரி, சரவணன், சந்தியா மூவரின் பெயருக்கும் சரி சமமாய்ப் பிரிக்கப்பட்டது...

பிறகு சித்தார்த் தனியே சந்தியாவைச் சந்தித்துப் பேசினான்...

"சந்தியா... இப்போது உனக்குச் சந்தோசமா...?" என்றான் அவன், அன்று அவள் பேசிய வார்த்தைகளை ஞாபகம் வைத்துக் கொண்டு... அதில் அவள் வெட்கி தலை குனிந்தாள்...

"சாரி அத்தான்..."

"நீ சாரி சொல்ல வேண்டிய அவசியமே இல்லை... ஆனால் அன்று நீ பேசிய வார்த்தைகள் ரொம்பத் தப்பு... நீ நினைப்பது போல் உன் பெரியப்பா எந்தத் தவறும் செய்யவில்லை... எல்லாத் தவறும் உன் அப்பா மீது தான்... உன் அப்பாவுக்குக் கொடுத்த அத்தனை சொத்துக்களையும் உன் அப்பா ஆடம்பர வாழ்க்கைக்காகவும், தீய பழக்கங்களுக்காகவும் விற்றுத் தீர்த்தது உனக்குத் தெரியுமா...? அதை எல்லாம் உன் பெரியப்பா தன்னோட தம்பிக்குத் தெரியாமல் வாங்கிப் போட்ட கதை உனக்குத் தெரியுமா...?"

"அத்தான்..." அதிர்ச்சியுடன் அவள் அவனைப் பார்த்தாள்...

"சில உண்மைகள் கசக்கும் சிந்தியா... ஆனால் அது தான் நிஜம்... தாங்கி தானாக வேண்டும்..." என்று வேதனையுடன் கூறியவன்,

"இப்போ சொல்லு... உன் பெரியப்பா அவரோட சொத்துக்களை அவரது மகள் பெயரில் எழுதி வைத்தது தவறா...?"

'தவறே இல்லை' என்பது போல் மறுப்பாய் தலையாட்டியவளின் விழிகளில் கண்ணீர் வழிந்தது...

"அழாதே சந்தியா... உனக்கு என்று அழகான குடும்பம் இருக்கிறது... இனி உன்னோட சந்தோசம் அவங்க மட்டும் தான்... உன் பெற்றோர் இறந்த காலம்ன்னு நினைச்சுக்கோ..." என்ற சித்தார்த் அங்கிருந்து சென்று விட்டான்...

அவனது வார்த்தையில் மனதை தேற்றி கொண்டாள் சந்தியா... இன்னமும் பல ரகசியங்களைச் சித்தார்த்

அவளிடம் சொல்லவில்லை... சொன்னால் அதை எல்லாம் அவளால் தாங்கி கொள்ள முடியாது... பிரகதீஸ்வரி போன்று அவளும் சிறு பெண் என்றெண்ணி அவன் சொல்லாமல் விட்டு விட்டான்... இனி வரும் காலங்களிலும் அவன் அதைச் சொல்ல போவதில்லை...

****

"மாமூ... நீங்க என்ன சின்னப் பிள்ளையா...? குழந்தைங்களோட சேர்ந்து மழையில் நனைஞ்சு விளையாடிக்கிட்டு இருக்கீங்க... இந்த லட்சணத்தில் வீசிங் வேற உங்களுக்கு இருக்கு..."

மாலை மழையில் நனைந்தபடி கணவன் ஜெகதீஸ்வரி, கண்ணனுடன் பந்து விளையாடி கொண்டு இருப்பதைக் கண்டு பிரகதீஸ்வரி சத்தம் போட்டாள்...

"விடு அம்மு... சித்துவை இப்படிப் பார்க்கும் எவ்வளவு சந்தோசமா இருக்கு தெரியுமா...? அவ்வளவு பெரிய தொழிலதிபன் சின்னக் குழந்தை மாதிரி விளையாடுகிறான்னா அவன் மனசில் எத்தனை ஏக்கம் இருந்திருக்கணும்..."

மகளைப் பிரிந்திருந்த தகப்பனின் வேதனையை உணர்ந்தவனாய் ஹரி கூறினான்... அவனது கூற்றை ஏற்றவளாய் அமைதியாக இருந்தாள் பிரகதீஸ்வரி...

"அத்தான்... உங்களுக்கு உயில் விசயம் ஏற்கெனவே தெரியுமா...?"

மூவரும் விளையாடுவதை ரசித்துப் பார்த்து கொண்டிருந்தவன் திடுக்கிட்டவாறு அத்தை மகளைத் திரும்பி பார்த்தான்... பின் சுதாரித்துக் கொண்டு,

"சித்துச் சொன்னானா...?"

"ம்... ம்..."

"உன் கல்யாணத்துக்கு நீ என்னிடம் சம்மதம் வாங்கிய பிறகு தான் எனக்கு இந்த விசயம் தெரியும்... ஆனால் நீ

சித்துவை காதலிக்கும் போது இதில் நான் செய்ய ஒன்றும் இல்லை... அதனால் தான் லாயரிடம் கூட உன்னிடம் இந்த விசயத்தைச் சொல்ல கூடாதுன்னு சொல்லிவிட்டேன்..." என்று கூறியவன் பரிவுடன் அவளைப் பார்த்து,

"ஏற்கெனவே நான் சொல்லியிருக்கேனே... நான் எப்போதுமே உன் பார்வையில் தான் சித்துவை பார்ப்பேன் என்று... உனக்கு அவனைப் பிடித்தால் எனக்கும் அவனைப் பிடிக்கும்... நீ அவனை வெறுத்தால் நானும் அவனை வெறுப்பேன்... எந்தவொரு விசயத்தையும் உன்னைத் தாண்டி நான் யோசித்தது இல்லை அம்மு..."

"அத்தான்..."

அவளுக்குக் கண்கள் கலங்கியது... இத்தகைய அன்பான, உயிரான உறவுகள் அமைந்தது அவள் செய்த புண்ணியம் அல்லவா...

"இனி நீ கண் கலங்கவே கூடாது அம்மு... அப்படிக் கலங்க சித்துவும் விட மாட்டான்... அவன் உன் மேல் உயிரையே வச்சியிருக்கான்... சில தவறுகள் அவனிடம் இருக்கலாம்... அதை எடுத்து சொல்லி புரிய வை... நிச்சயம் உனக்காக அவன் தன்னை மாத்தி கொள்வான்... இந்த அறிவுரையை முன்னமே சொல்லணும்ன்னு நினைப்பேன்... ஆனால் அதுக்கும் உன் மாமூ தடை போட்டுட்டான்... உன்னை வருத்துர மாதிரி நாங்க யாரும் பேச கூடாதுன்னு... இதிலேயே தெரியலையா அவன் உன்னை எந்தளவுக்குக் காதலிக்கிறான்னு..."

ஹரி பேச பேச அவளது விழிகள் கணவனைக் காதலுடன் நோக்கியது... மழை நீர் சகதியாய் தேங்கி இருந்ததில் பந்தை கைப்பற்றுவதற்காக மகளோடு அதில் உருண்டு புரண்டு கொண்டிருந்தவனை உள்ளம் நெகிழ பார்த்து கொண்டிருந்தாள்...

எட்டு வருடங்களுக்கு முன் சந்தித்த சித்தார்த்திற்கும், இப்போது இருக்கும் சித்தார்த்திற்கும் மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசம் நன்கு தெரிந்தது...

இரவு படுக்கும் போது தான் சித்தார்த்தை மூச்சிரைப்பு நன்கு படுத்தி எடுத்தது... தந்தை படும் அவஸ்தையைக் கண்டு மகள் பயந்து போய் விட்டாள்... அவனது நெஞ்சை நீவி விட்டுக் கொண்டு அவன் அருகிலேயே இருந்தவள் எங்கும் செல்ல மறுத்து விட்டாள்...

"இதுக்குத் தான் சொன்ன பேச்சு கேட்கணும்ன்னு சொல்றது..." தான் தயாரித்து வந்த கசாயத்தைக் கணவனிடம் கொடுத்தபடி அவனைச் சத்தம் போட்டாள் பிரகதீஸ்வரி...

"அம்மா... அப்பா பாவம்..." மகள் தகப்பனுக்குப் பரிந்து பேசி அவனைக் கட்டி கொண்டாள்...

"உங்கப்பாவை சொன்னால் உனக்குக் கோபம் வருதா...?" கண்களை உருட்டி மகளை மிரட்டினாள் அவள்...

"அப்பா..." என்றபடி மகள் தந்தையிடம் அடைக்கலமாகினாள்...

"கசாயமா...?" என்று முகத்தைச் சுளித்த கணவனை ஏறிட்டு பார்த்த பிரகதீஸ்வரிக்குள் அன்றைய நாளின் தாக்கங்கள்...

கணவனை நம்பி தான் கொடுத்த சித்த மருத்துவக் குறிப்புகள் அவளது நினைவிலாடியது... ஆனால் அதை அவனிடத்தில் கேட்க அவள் விரும்பவில்லை... எல்லாவற்றிற்கும் அவனிடத்தில் சரியான காரண, காரியம் இருக்கும் என்று இப்போது அவள் முழு மனதாக நம்பினாள்...

அவனுக்கும் அந்த நினைவு தான் தோன்றியதோ... அமைதியாக இருந்தான்...

"அப்பா... மூக்கை பிடிச்சிட்டு குடிங்க... நான் அப்படித் தான் செய்வேன்..." என்ற மகளின் குரலில் இருவரும் தன்னினைவு கலைந்து மகளைப் பார்த்தனர்...

"ஜிக்கி... நான் போடுற கசாயம் உனக்கு அந்தளவுக்கு மோசமா இருக்கா...?" இடுப்பில் இரு கைகளை வைத்துக்

கொண்டு மகளை முறைத்தாள் அன்னையவள்...

"ஹி... ஹி..." என்று சிரித்தபடி மகள் தந்தையுடன் ஒட்டி கொண்டது... அதைக் கண்டு அவன் வாய் விட்டுச் சிரித்தான்...

"ஹா ஹா... என்னைத் தான் உன் அம்மா படுத்தி எடுத்தாள் என்றால் உன்னையும் போட்டு படுத்தியிருக்காளா...?" என்று அவன் மனைவியை வாரினான்...

"உடம்புக்கு நல்லதுன்னு குடிக்கச் சொன்னால் உங்க ரெண்டு பேருக்கும் கிண்டலா இருக்கா..." என்று கோபம் கொண்டு முறைத்த மனைவியைக் கண்டு சமத்தாகக் கசாயத்தை ஒரே மூச்சில் குடித்த சித்தார்த் தனது இரு கைகளையும் தூக்கி,

"சரண்டர்..." என்றான்...

"அம்மா... நானும் சரண்டர்..." என்றாள் சின்னவளும் தனது பிஞ்சு கைகளைத் தூக்கியபடி...

இருவரையும் கண்டு சிரிப்பு வந்த போதும் பிரகதீஸ்வரி சிரிப்பை அடக்கி கொண்டு போலியாக முறைத்தாள்... சித்தார்த் மனைவியின் கைப்பிடித்து இழுத்துக் கட்டிலில் அமர வைத்தவன்,

"சிரிப்பு வந்தா சிரிச்சிரணும் ரதிம்மா..." அவன் கூறிய பாவனையில் அவளது இதழ்களில் லேசாகப் புன்னகை எட்டி பார்த்தது...

அதில் தைரியம் வர பெற்றவளாய் மகள் அன்னைக்குக் கிச்சு கிச்சு மூட்ட, பிரகதீஸ்வரி வாய் விட்டு சிரிக்க ஆரம்பித்தாள்... அதைக் கண்டு அப்பா, மகளும் சிரிக்கத் துவங்க அங்கே ஆனந்தம் தாண்டவமாடியது...

****

எல்லோரும் சென்னை வந்து இரண்டு வாரமாகி விட்டது... ஹரி வேலைக்குச் சென்று விட்டான்... அவனது

வேலையைச் சென்னைக்கு மாற்றுவதற்குச் சித்தார்த் உறுதி கூறியிருந்தான்...

"ஏதாவது அன்டர்ப்ளே பண்ண போறீங்களா...?" என்று முறைத்த மனைவியிடம் காது பிடித்து மன்னிப்பு வேண்டியவன்,

"நமக்கு நன்மைன்னா என்ன வேணும்ன்னாலும் செய்யலாம் பேபி... தப்பேயில்லை"

"என்னமோ போங்க..." என்று கணவன் போக்கில் அவள் விட்டு விட்டாள்...

அன்று பிரகதீஸ்வரிக்கு முதலமைச்சர் அலுவலகத்தில் இருந்து அழைப்பு வந்தது... ஏனென்று அவளுக்குப் புரியவில்லை... போய்ப் பார்த்த போது தான் விசயம் புரிந்தது...

இரு நாட்களுக்கு முன் நகரில் பிரதான இடங்களில் அனுமதியில்லாது கட்டிய கட்டிடங்களை எல்லாம் சீல் வைக்கச் சொல்லி அவள் உத்தரவிட்டு இருந்தாள்... அது சம்பந்தமாகத் தான் இந்த அழைப்பு... அவள் மீது புகார் கொடுத்த அனைவருமே பெரிய பெரிய வணிகர்கள்... நகரத்தின் முக்கியப் புள்ளிகள் வேறு... அவர்களது பேச்சை அரசாங்கம் கேட்க வேண்டிய அளவிற்குச் செல்வாக்குப் பெற்றவர்கள்...

அதனால் அவளை இதிலிருந்து வாபஸ் வாங்க சொல்லி அமைச்சகம் உத்தரவிட்டது... முதன்முறையாக அவளுக்கு ஒரு தோல்வி... ஆனாலும் முதலமைச்சரே உத்தரவிட்ட பின் அவளால் மறுக்க முடியவில்லை... உடனே தனது உத்தரவை அவள் திரும்பப் பெற்று கொண்டாள்...

இரவு வீட்டிற்கு வந்த சித்தார்த் மனைவியின் வாடிய முகத்தைப் பார்த்தான்... அவனால் உடனே என்னவென்று கேட்க முடியவில்லை... மகள் சந்தோசமாகப் பள்ளியில் அன்று நடந்ததைக் கதையாகக் கூறி கொண்டிருந்தாள்...

மகள் உறங்கும் வரை பொறுமை காத்தவன் அதன் பின் மனைவி அருகில் வந்தான்...

"இதுக்கு எல்லாமா வருத்தப்படுறது..." என்று செல்லமாக அவளைக் கடிந்தபடி ஆறுதலாக அணைத்துக் கொண்டான்...

"கஷ்டப்பட்டுப் படிச்ச படிக்கு மரியாதை இல்லை... பதவிக்கு மதிப்பில்லை... இங்கே எல்லாமே பணம் தான் இல்லையா மாமூ... பணம் மட்டும் தான் எல்லாவற்றிற்கும் அளவுகோலா...? மனிதாபிமானம் எதுவும் இல்லையா..."

"த்ச்சு பேபி... நான் ஏற்கெனவே உன் கிட்ட சொன்னது தான்... நாம நேர்மையா இருந்து எந்தப் பிரயோஜனம் இல்லை... நம்மைச் சுத்தி இருக்கிறவங்களும் அப்படி இருக்கணும்... இல்லைன்னா இது தான் நிலைமை... எனக்கு இது எல்லாம் கவலை இல்லை பேபி... நீ வேலைக்குப் போகணும்ன்னு எந்த அவசியமும் எனக்கு இல்லை... ஆனால் இதனால் உனக்கு ஏதாவது ஆபத்து வந்திருமோன்னு தான் எனக்குப் பயமாயிருக்கு..."

அவனது பயத்தைத் தன்னை அணைத்திருந்த அவனது கைகளின் நடுக்கத்தில் இருந்து அவள் உணர்ந்தாள்...

"அந்தளவுக்கு இந்த உலகம் மோசமானது..." என்றவனது கூற்றை அவள் மௌனமாய் ஆமோதித்தாள்...

"உனக்குச் சந்தோசமான விசயம் ஒண்ணு சொல்லவா...?" என்றவனைக் கேள்வியாய் ஏறிட்டு பார்த்தாள் அவள்...

"நீ உத்தரவு போட்டதன் பேரில் மூடப்பட்ட கட்டிடங்களில் சிலது நம்மதும் இருக்கு..."

"மாமூ..." அவள் ஆயாசமாக அவனைப் பார்த்தாள்...

"ஆனால் அதை எல்லாம் முறைப்படுத்த நான் முடிவு பண்ணிட்டேன்... நாளையில் இருந்து அதுக்கான வேலைகளில் இறங்க போகிறேன்..."

"உண்மையாவா மாமூ..." அவள் வியப்பாய் சந்தோசத்துடன் கேட்டாள்...

"ஆமாம்டி பொண்டாட்டி... நீ இப்படி அழுமூஞ்சியா இருக்கிறது பார்க்க சகிக்கலை... அதனால் தான்..." என்று கூறியபடி விளையாட்டாய் அவளது நெற்றியில் முட்டினான் அவன்...

"ம்... ம்..." என்று சிணுங்கி கொண்டே தனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டவளை கண்டு அவன் சிரித்தான்...

"பேபி..."

"ம்... ம்..."

"எனக்குச் சில டவுட்ஸ் இருக்கு... கொஞ்சம் செக் பண்ணி பார்க்கவா...?" மனைவி காதில் ரகசியமாய்க் கிசுகிசுத்தான் அந்தக் கள்வன்...

"ம்... பெர்மிசன் கிராண்ட்டட்..." என்று அவள் கண் சிமிட்டி 'க்ரீன் சிக்னல்' காட்ட... சித்தார்த் புன்னகைத்தபடி அவளைக் கைகளில் அள்ளி கொண்டு தங்களுக்கு என்று இருந்த தனியறைக்குச் சென்றான்...

மறுநாள் காலையில் பிரகதீஸ்வரி மகளுடன் போராடி கொண்டிருந்தாள்...

"ஜிக்கி... இன்னைக்கு ஹாஸ்பிட்டல் கட்டாயம் போயாகணும்..." அவள் கண்டிப்புடன் கூறிக் கொண்டிருக்கும் போது சித்தார்த் அங்கு வந்தான்...

"என்ன அம்மாக்கும், மகளுக்கும் சண்டை...?" பஞ்சாயத்து நாட்டாமையாய் மாறி தீர்ப்பு சொல்ல அவன் தயாரானான்...

"வஃக்சின் இன்ஜெக்சன் போடணும்... ஹாஸ்பிட்டலுக்குக் கூப்பிட்டால் வர மாட்டேங்கிறாள்... இவளால் கண்ணனுக்கும் இன்னும் வஃக்சின் போடலை... அவன் இவளுக்காக வெய்ட் பண்றான்..."

"அவ்வளவு தானே ரதிம்மா..." என்ற தகப்பனை மகள் பயத்துடன் பார்த்தாள்...

மகளின் அச்சம் கண்டு கண் சிமிட்டி, நாக்கை துருத்தி விசமமாய்ச் சிரித்த சித்து மனைவியிடம், "லேட்டானது ஆகி போச்சு... அடுத்த வாரம் போட்டுக்கலாமே..." என்று கூற...

"அப்பான்னா அப்பா தான்..." மகள் சந்தோச மிகுதியில் ஓடி வந்து அவனைக் கட்டி கொண்டது...

"ஜிக்கிக்கு அப்பா இருக்கேன்... டோன்ட் வொர்ரி..." என்று அவனும் மகளை ஆசையாகத் தூக்கி கொண்டான்...

"அடுத்த வாரம் எப்படியும் போட்டு தானே ஆகணும்..." என்று மிரட்டியவளை கண்டு நமட்டுச் சிரிப்பு சிரித்தனர் தந்தையும், மகளும்... அதைக் கண்டு வேறுவழியின்றி அவளும் சிரித்து விட்டாள்...

அன்று அலுவலகம் வந்த பிரகதீஸ்வரி தனது உதவியாளரை அழைத்தாள்...

"அன்னைக்குச் சொன்னேனே... குழந்தைகளின் இறப்புக்கு என்ன காரணம் என்று விசாரிக்கச் சொல்லி... விசாரிச்சீங்களா...?"

"டீடெயில்ஸ் கலெக்ட் பண்ணிக்கிட்டு இருக்காங்க மேடம்... சீக்கிரம் முடிஞ்சிரும்..."

பணிவாக உரைத்தவரை போகச் சொல்லி விட்டு அந்தக் கோப்பை கையில் எடுத்து பார்த்தாள்... அதில் இருந்த எழுத்துக்களில் கண்களை ஓட்டி கொண்டு வந்தவளின் விழிகள் ஓரிடத்தில் நிலைக்குத்தி நின்றது... ஏனெனில் இறந்து போன எல்லாக் குழந்தைகளின் வயதும் ஐந்து...

காலத் தேவன் தனது பழைய கணக்கை தீர்க்கும் பொருட்டுத் தனது விளையாட்டை ஆரம்பித்து விட்டான்...!!!

"காதல் துரோகத்தை மன்னிக்கும், மறக்கும்...
காலம் துரோகத்தை மன்னிக்காது, மறக்காது...
உனக்கான துரோக கணக்கின் முடிவு

உன்னை நெருங்கி கொண்டிருக்கிறது...
உப்பை தின்றவன் தண்ணி குடித்து
தானாக வேண்டும்...
உனது செயலுக்கான எதிர்வினையை
நீ தாங்கி தானாக வேண்டும்... அது,
உயிர் போகும் வலியென்றாலும்...!!!"

நனவாகும்...!!!

"ஜிக்கி... இன்னும் ஒரே ஒரு வாய் தான்..." என்று தட்டில் இருந்த கடைசித் துண்டு இட்லியை மகளுக்கு ஊட்டி விட்டாள் பிரகதீஸ்வரி...

நேற்று தடுப்பூசி போட்டதால் ஜெகதீஸ்வரிக்கு காய்ச்சல் அடித்தது... மகள் சோர்ந்து இருப்பதைக் கண்டு சித்தார்த்திற்கு எந்த வேலையும் ஓடவில்லை... ஞாயிறு என்றும் பாராது அலுவலகம் செல்பவன் ஞாயிறாகிய இன்றும் மகளுக்காக அவள் கூடவே இருந்தான்... அதைப் போல் பிரகதீஸ்வரியும் மகளுடன் கூடவே இருந்தாள்...

அந்நேரம் அவளது அலைப்பேசி சிணுங்கியது... சந்தியா தான் அழைத்து இருந்தாள்...

"நானே பேசணும்ன்னு நினைச்சேன்க்கா... கண்ணன் எப்படி இருக்கான்...?"

"கொஞ்சம் பீவர் இருக்கு... ஆனால் அவன் சாதாரணமா தான் இருக்கான்... அங்கே ஜிக்கி என்ன செய்கிறாள்...? அவளுக்குக் காய்ச்சல்ன்னு நீ அழுதுக்கிட்டு இருப்பியே..."

சந்தியா சொன்னது கேட்டு பிரகதீஸ்வரி இதழ்களில் புன்னகை நெளிந்தது...

"இந்தத் தடவை நான் அழலை... எனக்குப் பதிலா அவளோட அப்பா அழுறாங்க..." என்று கூறியவள் கணவனைப் பார்த்துக் கண் சிமிட்டினாள்...

சித்தார்த் மனைவியைக் கண்டு 'உதை வாங்க போகிற' என்று சைகையால் மிரட்டினான்...

"எப்படித் தான் ரெண்டு பேரும் ஒரே மாதிரி சேர்ந்தீங்களோ...? ஜிக்கி கிட்ட ஃபோனை கொடு பிரகதி... கண்ணா அவள் கிட்ட பேசணும்ன்னு சொல்றான்..."

அவள் மகளிடம் அலைப்பேசியைக் கொடுத்தாள்... மகள் தந்தை மடியில் அமர்ந்து அவனது நெஞ்சில் சுகமாய்ச்

சாய்ந்து கொண்டு கண்ணனிடம் பேசி கொண்டிருந்தாள்...

"நான் அழுததை இப்படித் தம்பட்டம் அடிச்சு சொல்லணுமா...? சந்தியா என்ன நினைச்சு இருப்பாள்...?" ஆண்மகனாய் அவனுக்கு அத்தனை கூச்சமாய் இருந்தது...

"பெண்களோட மௌனம் எந்தளவுக்கு சக்தி வாய்ந்ததோ... அது போல் ஆணின் கண்ணீரும் சக்தி வாய்ந்தது... விலை மதிப்பில்லாதது..." என்று அவள் பெருமையாகச் சொன்னாள்...

"என்னமோ போ ரதி... நீ சொல்ற... நானும் நம்பறேன்..."

அதற்குள் மகள் பேசிவிட்டு அலைப்பேசி அணைத்து அன்னையிடம் நீட்டி விட்டு தந்தையின் நெஞ்சில் முகம் புதைத்து படுத்து கொண்டாள்...

"ஜிக்கி... ஏன் டல்லா இருக்கா...?" மகளின் தலையைப் பரிவுடன் வருடி விட்டு அவன் கேட்க...

"இன்ஜெக்சன் போட்டது வலிக்குது..." முகத்தைச் சுருக்கி கொண்டு சிணுங்கினாள் மகள்...

"அப்பா உனக்கு ஒண்ணு காண்பிக்கவா...?"

"என்னது...?" மகள் ஆர்வத்துடன் தலையை நிமிர்த்தினாள்...

"கொஞ்சம் இரு..."

மகளை மனைவியிடம் விட்டு விட்டு எழுந்த சித்தார்த் அங்கிருந்த அலமாரியை நோக்கி சென்றான்... அலமாரியை திறந்து அதன் ஓரமாய் இருந்த அடுக்கின் கீழ் பகுதியில் இருந்த ஒரு சிறு பெட்டியை எடுத்துக் கொண்டு வந்து மகள் முன் வைத்தான்...

பழைய காலத்து மரப்பட்டி போலிருந்ததைக் கண்டு அம்மா, மகள் இருவரின் கண்களிலும் ஆர்வம் பொங்கி வழிந்தது...

"ஜிக்கி... இதை நீயே திறந்து பார்..."

மகள் ஆவலுடன் அதைத் திறந்து பார்த்தாள்... சிறு பிள்ளைகள் விளையாடும் பொருட்கள் அதில் நிறைய இருந்தது... எல்லாமே கைவினை பொருட்கள்... நல்ல கை தேர்ந்த கைவினை கலைஞர் கொண்டு உருவாக்கப்பட்டது போல் அவ்வளவு நேர்த்தியாக, அழகாக இருந்தது அத்தனையும்...

அதில் இருந்த களிமண்ணாலான புத்தர் சிலை மகளின் மனதினை கவர அவள் ஆசையுடன் அதைத் தனது கைகளில் எடுத்தாள்...

"அழகா இருக்குப்பா..." என்று கூறிய சின்னவள் அதை ஆசையோடு அணைத்து கொண்டாள்...

அந்தப் புத்தர் சிலையைப் பார்த்த பிரகதீஸ்வரிக்கு ஆச்சிரியம் தாங்கவில்லை... அதை அப்படியே கணவனிடம் பகிர்ந்து கொண்டாள்...

"உங்க பிறந்தநாளுக்கு நான் கொடுத்த புத்தர் சிலை மாதிரியே இது இருக்குது தானே மாமு..."

"ஆமாம்..." என்றவனது விழிகள் மனைவியையும், புத்தர் சிலையையும் பெருமையாகப் பார்த்தது...

அன்னையின் திறமை மகளுக்கு இல்லாது போகுமா...? பிறப்பின் ரகசியத்தை யார் மறைந்தாலும் இரத்தத்தில் ஊறியிருக்கும் மரபணுவை மாற்ற யாராலும் முடியாதே... நிஜத்தில் இருந்து உதித்த நிழல் தானே அவனது மனைவியவள்... நிஜம் இல்லை என்றால் நிழல் இல்லையே...

அவனது பிறந்தநாள் அன்று மனைவி இது மாதிரி ஒரு புத்தர் சிலையைக் கொடுத்த போது அவன் அப்படித் தான் பெருமையாக நினைத்தான்... நிஜத்தை போன்று நிழலும் ஒரு கலையைக் கூட விட்டு வைப்பது இல்லை என்பதில் விளைந்த பெருமை அது...

ஒன்றுக்கு இரண்டு அன்னைகளை அவளுக்குக் கொடுத்த அந்தக் கடவுள் ஒருவரின் ஆயுளை கூட நீட்டிக்காது

போனது விதி பயனோ... அதனால் தான் அன்று அவள் அன்னையின் மறைவுக்காக அழுத போது அவளுக்கு அன்னையாகத் தான் இருப்பேன் என்று அவன் ஆறுதல் கூறினான்...

இனிவரும் காலங்களிலும் அவன் அவளுக்குத் தாயாகத் தான் இருப்பான்...

அப்போது பிரபாவதி அறை கதவை தட்டி விட்டு உள்ளே நுழைந்தார்... பேத்தியின் உடல்நலம் எப்படி இருக்கிறது என்று பார்ப்பதற்காக அவர் அங்கு வந்தார்...

"வாங்க அத்தை..." என்று அவரை வரவேற்ற பிரகதீஸ்வரி,

"ஜிக்கி கூடக் கொஞ்சம் இருங்கத்தை... என்னை எங்கேயும் போக விட மாட்டேங்கிறாள்... நான் போய் இந்தத் தட்டை வச்சிட்டு வர்றேன்..." என்று உரைத்தவள் மகள் சாப்பிட்ட தட்டை எடுத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறினாள்...

"ஜிக்கி... பாட்டி கூட வர்றியா...?" என்றபடி பேத்தியை தூக்கியவர் அப்போது தான் அவள் கையிலிருப்பதைக் கண்டு யோசனையாய் புருவங்களைச் சுருக்கினார்...

"இது ஜெகதா செய்தது மாதிரி இருக்கே... இன்னமுமா இதைப் பத்திரமாக வைத்திருக்கிறாய் சித்து...?"

"ஆமாம்மா... ஜிக்கி செய்தது தான்..." மகன் உரைத்தது கண்டு அவர் திகைத்து போனவராய் அவனைத் திரும்பி பார்த்தார்...

ஜெகதீஸ்வரி என்கிற ஜெகதாவின் செல்ல சுருக்கமாய் மகன் அழைக்கும் 'ஜிக்கி' என்கிற அழைப்பு இப்போது தான் அவரது ஞபகத்திற்கு வந்தது...

"ஜெகதாவை இன்னுமா நீ மறக்கலை...?"

"உங்களைப் போல் என்னால் அவ்வளவு சாதாரணமாய் அவளை மறக்க முடியாதும்மா... சில உறவுகளைச் சாகும் வரை மறக்க முடியாது..."

மகன் சொன்னது போல் சாதாரண வேலைக்கார சிறுமியான ஜெகதீஸ்வரியின் உருவம் கூட அவருள் புகை படலமாய்த் தான் தெரிந்தது... அத்தனை தூரம் அவருக்கு அவளைப் பற்றிய நினைவு அவ்வளவு தெளிவாக இல்லை... ஏனெனில் இருபத்தியாறு வருசத்துக்கு முன் வேலை செய்த பெண்ணை ஞாபகம் வைத்துக் கொள்ளும் அளவிற்கு அவருக்கு அவள் முக்கியமானவள் இல்லை...

இப்போதும் கூட அவரால் ஜெகதீஸ்வரிக்கும், பிரகதீஸ்வரிக்கும் உள்ள உருவ ஒற்றுமையை ஒப்பிட்டு பார்க்க முடியவில்லை... அந்தளவிற்கு அந்த அநாதை சிறுமி அவரது மனதில் மிகவும் பின்தங்கி இருந்தாள்...

"அதிசயம் தான்டா சித்து... பெண்களையே பிடிக்காத நீ எப்படி ஜிக்கியை மறக்காமல் இருக்க...?"

"அவளை மறக்காமல் இருப்பதால் தான் எனக்கு எந்தப் பெண்ணையும் பிடிக்கவில்லை..." என்றவனைத் திகைத்துப் போய்ப் பார்த்தவர் அடுத்தக் கணம் சிரித்து விட்டார்...

"அப்போ உன் மனைவி...?"

அன்னை கூறியதை கேட்டதும் அவனது உதடுகளிலும் புன்னகை தோன்றியது...

"அவள் விதிவிலக்கு..."

"அடேய்... தொபக்கடீர்ன்னு என் மருமகளிடம் காதலில் விழுந்துட்டு இப்படிக் கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டலைன்னு பேச உன்னால் மட்டும் தான் முடியும்..."

அன்னையின் வார்த்தையில் அவனது புன்னகை இன்னமும் விரிந்தது... அப்போதும் அவன் ஜெகதீஸ்வரிக்கும், பிரகதீஸ்வரிக்கும் உள்ள உறவை அன்னையிடத்தில் சொல்லவில்லை... சொல்ல கூடாது என்பதில்லை அவனுக்குச் சொல்ல விருப்பமில்லை...

"அத்தை கிட்ட போகலாம் வா ஜிக்கி..." என்று பேத்தியை தூக்கி கொண்டு சென்று விட்டார் பிரபாவதி... ஸ்வேதா பிரசவத்திற்காக அங்குத் தான் இருந்தாள்...

அன்னை சென்றதும் சோர்ந்து போனவனாய் சித்தார்த் கட்டிலில் சாய்ந்தமர்ந்து கண்களை மூடி கொண்டான்... அவன் மனதிற்குள் பெரியவள் ஜிக்கி அடைந்த துன்பமே தோன்றியது... குழந்தை பெறும் வயதா அவளுக்கு...? அவளே ஒரு குழந்தை தானே...

"மாமூ..."

மனைவியின் குளிர்ச்சியான கை விரல் நெற்றியை இதமாய்த் தடவி விட்டதில் அவன் கண் விழித்துப் பார்த்தான்... அன்று மனைவியைக் காணும் போது எல்லாம் வயது காரணமாக அவனது மனதில் எழுந்த குற்றவுணர்ச்சிக்கான காரணம் இப்போது அவனுக்கு நன்கு புரிந்தது... அன்று இவளும் அதே பதின்பருவ வயதில் தானே இருந்தாள்...

"என்ன மாமூ ஒரு மாதிரியா இருக்கீங்க...? தலை வலிக்குதா இல்லை உடம்பு எதுவும் சரியில்லையா..."

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை... நீ இங்கே உட்கார்..." என்றவன் அவளைத் தனது அருகில் அமர்த்திக் கொண்டு அவளது மடியில் தலை சாய்ந்து கொண்டான்...

அவள் ஆறுதலாய் அவனது தலை கோதி கொடுக்க அதில் அலைப்புற்றிருந்த அவனது மனம் கொஞ்சம் கொஞ்சமாய் அமைதி அடைய ஆரம்பித்தது...

****

ஆட்சியர் பிரகதீஸ்வரி உத்தரவின் பேரில் பல ஏரிகள், ஆறுகள் தூர்வார பட்டது... ஏனெனில் சென்னையில் ஏற்பட்ட வெள்ளத்தின் பாதிப்பாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது... அதே போல் பல ஆறுகள், ஏரிகளை ஆக்கிரமித்து 'ப்ளாட்' போட்டு விற்றுக் கொண்டிருந்த 'ரியல் எஸ்டேட்' அதிபர்களின் ஆக்கிரமிப்பை அகற்றியதோடு

மட்டும் இல்லாது அதில் மழை நீர் சேகரிப்பதற்கு ஏதுவாய் பல வழி வகைகள் முன்னெடுக்கப் பட்டது...

அதைக் கண்டு கோபம் அடைந்த அந்த அதிபர்கள் ஆட்சியில் இருந்தவர்களிடம் முறையிட்டனர்... இந்த முறை அவள் தைரியமாக இதை எதிர் கொண்டாள்...

"இது மக்கள் கண் முன்பு நடக்கும் நல்ல விசயம்... இதைத் தடுத்து நிறுத்துவதால் வீணே உங்களது ஆட்சிக்கு தான் கெட்ட பெயர் வரும்... அப்படித் தடுத்து நிறுத்தினால் பொது மக்கள் ஒன்று கூடி போராட்டம் செய்வதற்காகச் சாலையில் ஒன்று கூடுவார்கள்... இப்போ எல்லாம் மக்கள் முன்னே மாதிரியில்லை... நல்ல விழிப்புணர்வோடு இருக்காங்க..." என்றவள்,

"நாங்க உங்களுக்கு நல்லது தான் செய்கிறோம்... நீங்க எங்களுக்கு உதவி பண்ணலைன்னாலும் பரவாயில்லை... உபத்திரம் பண்ணாம இருந்தால் நல்லது..." என்று நிமிர்வாய், தைரியமாய்ப் பதில் கூறி விட்டு அவள் வந்து விட்டாள்... குட்ட குட்ட குனிய அவள் என்ன அவர்களது எடுபிடியா...?

அன்றிரவு வீட்டிற்கு வந்த சித்தார்த்திற்கு மனைவியைக் காண காண சிரிப்பு தாங்கவில்லை... இருந்தாலும் மகள் அருகில் இருந்ததால் சிரிப்பை அடக்கி கொண்டான்... பிரகதீஸ்வரி கணவனின் சிரிப்பை கண்டு புரியாது பார்த்தாலும் அவனது முகத்தில் இருந்த கேலி பாவனையில் அவனைக் கண்டு முறைத்தாள்...

மகள் உறங்கியதும் கணவன் அருகில் வந்தவள், "என்னைப் பார்த்து உங்களுக்கு அப்படி என்ன சிரிப்பு...?" என்று மிரட்ட துவங்க...

"ஹா ஹா..." என்று வாய் விட்டு சிரித்தவன்,

"அடேங்கப்பா... என் பேபி ரொம்பப் பெரிய பொண்ணு ஆகிட்டாங்க போலிருக்கே... வெளியில் மிரட்டுற மாதிரி

வீட்டிலும் மிரட்டுறாங்க..." என்றவனைச் சந்தேகமாய்ப் பார்த்தவள்,

"உங்களுக்கு எப்படித் தெரியும்...?"

"உன் பாசையில் சொன்னால் என்னோட எடுபிடி ஒருத்தன் அங்கே இருந்தான்... அவன் தான் இந்த விசயத்தை என்னிடம் போட்டு கொடுத்தது..."

"ஆள் வச்சு என்னைக் கண்காணிக்கிறீங்களா...?" என்று சிணுங்கிய மனைவியை அணைத்து கொண்டவன்,

"உன்னை வேவு பார்க்க இல்லை பேபி... உன்னைப் பாதுகாப்பதற்காகத் தான்..."

கணவனது வார்த்தையில் சமாதானமாகியவள், "அப்படி எல்லாம் ஒண்ணும் நடக்காது மாமு..." என்று அவனைச் சமாதானம் செய்தாள்...

"நடக்காது இருந்தால் நல்லது... அப்படி இல்லாது எதுவும் நடந்து விட்டால்...?"

அஞ்சாத ஆண்மகனின் குரல் மனைவியைக் குறித்து அப்படி அஞ்சியது...

"நீங்க என் கூட இருக்கும் போது பயமே பயப்படும் மாமு..." என்றவள் அவனது கவலையைப் போக்கும் விதமாய் ஆதரவாய் தழுவி கொண்டாள்...

மனைவியவளின் ஆறுதலில் அவன் சிறு குழந்தையாய் சமாதானம் ஆகியவன் அப்படியே உறங்கி விட்டான்... அந்நேரம் உறக்க கலக்கத்தில் அசைந்த மகள் அன்னையின் கையைத் தேடினாள்... பிரகதீஸ்வரி தனது கையை நீட்டி மகளது கையைப் பாதுகாப்பாய் பிடித்துக் கொண்டாள்...

ஒரு பக்கம் கணவன், மறுபக்கம் மகள் என்று இருவரும் அவளது கையைப் பிடித்து உறங்கிய காட்சியைக் காண காண அவளுக்குத் தெவிட்டவில்லை... நிறைவான

மனநிலையில் உறக்கம் வந்து அவளைத் தழுவி கொண்டது...

****

'போச்சு போ... இன்னைக்கு என்னை என்ன பாடு படுத்தி எடுக்கப் போகிறாளோ தெரியலையே... ஏன்டா இந்த நேரம் பார்த்து தானாடா உனக்குச் சந்தேகம் வந்து தொலைக்கணும்... உன் சந்தேகத்தில் தீயை வைக்க... உன்னால் என் பொண்டாட்டி என்னை டைவர்ஸ் பண்ணி விடுவாள் போலிருக்கே... அப்பனே முருகா, என்னை அந்த ராட்சசி கிட்ட இருந்து காப்பாத்துப்பா...'

தவறான நேரத்தில் சரியாக வந்து தொல்லை கொடுத்த வெளிநாட்டு வாடிக்கையாளரை மனதிற்குள் திட்டியபடி சரவணன் தனது காரை விரட்டி கொண்டிருந்தான்...

இன்று ஸ்வேதாவிற்கு மருத்துவ மனையில் பரிசோதனை இருந்தது... அவளுடன் செல்வதற்காகக் கிளம்பியவனைக் கடமை அழைத்து விட மனைவியை மறந்தவனாய் அவன் கடமையில் மூழ்கி விட்டான்... வேலை கடமை முடிந்ததும் உறவிற்கான கடமை ஞாபகத்தில் வர அடித்துப் பிடித்துக் கொண்டு கிளம்பினான்...

அந்நேரம் அவனது அலைப்பேசியில் குறுஞ்செய்தி வந்தது... 'நான் செக்கப் முடிஞ்சு வீட்டுக்கு வந்துட்டேன்' என்று... அதைக் கண்டு அவன்,

"செத்தேடா சரவணா..." என்று வாய் விட்டு புலம்பி விட்டான்...

நேரே மாமியார் வீட்டிற்குக் காரை திருப்பினான்... அங்குச் சென்ற போது வரவேற்பறையில் பிரபாவதி மட்டுமே இருந்தார்...

"அத்தை... உங்க செல்ல மகள் எங்கே...?"

"உன்னோட செல்ல பொண்டாட்டி எங்கேன்னு கேளு சரவணா..." என்று கேலி செய்து சிரித்த அத்தையைக்

கண்டு அவன் வாய் விட்டு சிரித்து விட்டான்...

"நீ ரொம்பச் செல்லம் கொடுப்பதால் தான் அவளுக்கு முன்பை விடப் பிடிவாதமும், கோபமும் இன்னமும் அதிகமாகிருக்கு..."

"யாமிருக்கப் பயமேன்..." என்று அபயம் அளித்தவன்,

"நான் கேட்டதுக்கு நீங்க இன்னும் பதில் சொல்லலையே..."

"அவளோட ரூமில் இருக்கிறாள்..."

"சரி நான் போய் அவளைப் பார்க்கிறேன்..."

"ஏதாவது சாப்பிட்டுட்டு போப்பா..."

"என் ஸ்வீட்டியை சமாதானம் செய்யாமல் என் தொண்டைக்குள் பச்சை தண்ணி இறங்காது..." என்று கத்தியபடி மனைவியின் அறையை நோக்கி அவன் ஓடினான்...

சரவணனின் செயலால் முன்பு புண்பட்டு இருந்த அவரது மனம் இப்போது நிம்மதி அடைந்திருந்தது... மகள் மீது அவன் வைத்திருக்கும் அன்பு கண்டு அவரது மனமும் சரவணனை முழு மனதாய் மருமகனாய் ஏற்றுக் கொண்டது...

"ஹாய் ஸ்வீட்டி..."

புன்னகை மன்னனாய் தன் முன் வந்து நின்ற கணவனைக் கண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள் ஸ்வேதா...

'போச்சுடா... ஒவ்வொருத்தரை மாதிரி மனம் விட்டுச் சண்டை போட்டா தானே நானும் பதிலுக்குச் சண்டை போட முடியும்... இவள் இப்படியே அமைதியா இருந்து என்னைக் கொல்லுறாளே...' மனதிற்குள் நொந்தபடி மனைவி அருகில் அமர்ந்தான் அவன்...

ஆனாலும் மௌனமாய்க் காதல் மொழி பேசும் மனைவியவளை கண்டு அவனது காதல் அதிகரிக்கத் தான்

செய்தது...

"கோபமாடா...?" என்றவனைத் திரும்பி பார்த்து முறைத்தவள் ஒன்று பேசவில்லை...

"எனக்கு மட்டும் ஆசையில்லைன்னா நினைக்கிற... நம்ம குழந்தையோட வளர்ச்சி எப்படி இருக்குதுன்னு பார்க்கணும்ன்னு எனக்கு ஆசை தான்... ஆனால் கடைசி நிமிசத்தில் ஒரு கிளையண்ட் வந்து என் உயிரை வாங்கிட்டான்... நான் என்ன செய்ய ஸ்வீட்டி...?"

கணவனது வார்த்தையில் இருந்த உண்மை அவளின் மனதினை சுட்டதோ என்னமோ... தனது அலைப்பேசியை எடுத்து அவனிடம் நீட்டினாள்...

"என்னது...?" அவன் புரியாது பார்த்தான்...

அவள் சலிப்பாய் ஒரு பார்வையை அவன் மீது வீசியவள் அதில் இருந்த காணொளியை எடுத்து அவனிடத்தில் காட்டினாள்... குழந்தையை 'ஸ்கேன்' செய்யும் போது அவள் அதைக் காணொளியாக எடுத்திருந்தாள் செவிலிப்பெண்ணின் உதவியுடன்... கணவனைப் பற்றித் தான் அவளுக்குத் தெரியுமே...

மனம் நெகிழ, விழிகள் கலங்க அந்தக் காணொளியை பரவசத்துடன் பார்த்திருந்தான் சரவணன்... மிருகமாய் இருந்தவனை மனிதனாக்கியது அவனது மனைவி என்றால், இப்போது அவனை மாமனிதனாக்கி இருப்பது அவனது மகவு அல்லவா...

அலைப்பேசி திரையை நெகிழ்வுடன் வருடி கொடுத்தவன், "என் மகன் என்னை மாதிரியே ஆக்ட்டிவ்வா இருக்கான்..." தந்தையாய் அவன் நெகிழ்வுடன் கூற...

"ஏன் மகளா இருந்தால் ஏத்துக்க மாட்டியா...? அதுவும் என்னை மாதிரி இருந்தால்..." என்று கேட்டு அவள் அவனை அடிக்க...

"அச்சோ ஸ்வீட்டி... நான் அப்படிச் சொல்லலைடா... எதுவாக இருந்தாலும் எனக்குச் சந்தோசம் தான்... கண்ணா ரெண்டு லட்டு தின்ன ஆசையா... அது மாதிரி உன்னைப் போல் நம் மகள் இருந்தால் உன்னை விட அவளை அதிகமாய்க் கொஞ்சுவேன்..."

"ஓஹோ... என்னை விட அதிகமாவா...? அப்போ நான் உனக்கு வேண்டாமா...?" என்று அவள் அதற்கும் சேர்த்து அடி கொடுக்க...

"அடியேய் ராட்சசி... வலிக்குதுடி... உன்னை எப்படி டீல் பண்றதுன்னு தனியே ஒரு டிக்சனரி போட்டு கொடு... இப்படித் தினமும் அடி வாங்கிச் சாக முடியலையடி..." என்று பரிதாபமாய் அலறினான் அந்த அப்பாவி கணவன்...

"ரொம்ப வலிக்குதாடா..." அவன் அலறியதை பார்த்து அவள் அடிப்பதை நிறுத்தி விட்டு இரக்கத்துடன் கேட்க...

"வலிக்குதாவா...? ரொம்ப..." என்று அவன் பாவமாய் முகத்தை வைத்துக் கொண்டான்...

"சாரி..." என்றபடி அவன் முதுகை வருடி கொடுத்தவளை கண்டு,

"நீ இப்படித் தடவி கொடுப்பதாக இருந்தால் எத்தனை அடி வேண்டுமானாலும் அடிச்சுக்கலாம்..." என்று மனைவியின் தொடுகையைக் கண்மூடி ரசித்தபடி அவன் கூற...

"டேய் ப்ராடு..." என்று கூறியவளுக்குக் கணவனைக் கண்டு சிரிப்பு வந்தது...

"கண்டுபிடிச்சிட்டியா..." என்றவன் கொட்டாவி விட்டான்...

"இந்நேரம் என்ன தூக்கம்...?"

"நைட் எல்லாம் வொர்க் ஸ்வீட்டி... இப்போ தான் வேலை முடிஞ்சது... அதனால் நான் தூங்க போறேன்... நானா எழுந்திருக்கும் வரை நீ என்னை எழுப்பாதே..." என்று கூறி விட்டு படுத்தவன் அடுத்தக் கணம் ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்று விட்டான்...

உறங்கும் கணவனைப் பார்த்தபடி இருந்தவளின் மனதில் ஆழ்கடல் போன்று அமைதி நிறைந்திருந்தது... கடந்த காலக் கசப்புகள் கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்து இப்போது ஒன்றுமே இல்லாது போயிருந்தது... அவன் அவளது விருப்பம் இல்லாது தாலி கட்டியவன் தான்... இருந்தாலும் இப்போது அவளது மனம் மிகவும் விரும்புவது அவனை மட்டும் தான்...

மெல்ல அவன் அருகில் நகர்ந்து அமர்ந்தவள் மென்மையாய் அவனது தலையைக் கோதி கொடுத்து அவனது நெற்றியில் முத்தமிட்டாள் காதலாக...

"ஐ லவ் யூ சரவணா..." என்று முணுமுணுத்தவள் முகத்தில் வெட்கத்தின் சாயல்கள்...

****

"கலெக்டர் மேடம்... ரெடிங்களா...?"

மகளைக் கையில் பிடித்தபடி அறை கதவை திறந்த சித்தார்த் உற்சாகமாய்க் கேட்டான்... அவனது முகத்தில் அத்தனை புன்னகை...

"எங்கே போகிறோம்ன்னு சொல்ல மாட்டேங்கிறீங்களே...?" என்று அலுத்துக் கொண்டே பிரகதீஸ்வரி தயாராகி வந்தாள்...

"அது சஸ்பென்ஸ்..." என்றான் அந்த மாயக் கண்ணன் கண் சிமிட்டியபடி...

"நான் அத்தை கிட்டயே கேட்டுக்கிறேன்..." என்று முறுக்கி கொண்டவள் அறையை விட்டு வெளியில் வந்தாள்...

வரவேற்பறையில் சித்தார்த்தின் பெற்றோர் கிளம்பி தயாராக இருந்தனர்...

"அத்தை... நீங்களாவது சொல்லுங்க... நாம எங்கே போகிறோம்..."

"அது வந்து..." என்று மகனை பார்த்த பிரபாவதி,

"நீ அதை அவன் கிட்டேயே கேட்டு தெரிஞ்சுக்கோ பிரகதி..." என்றவர் பேத்தியை அழைத்துக் கொண்டு முன்னே சென்று விட்டார்...

"ப்ச்..." இயலாமையுடன் அவள் கணவனைப் பார்த்தாள்...

"நான் சொல்லாம யாரும் சொல்ல மாட்டாங்க பேபி..."

"ப்ளீஸ் மாமு..."

"நோ..." என்று பிடிவாதமாய் மறுத்தவனைக் கண்டு,

"கத்திரிக்காய் முத்தினால் கடை தெருவுக்கு வந்து தானே ஆகணும்..." என்றவளை கண்டு அவன் வாய் விட்டுச் சிரித்தான்...

"அப்போ சொன்ன அதே டயலாக்... கலெக்டரானாலும் நீ மாறவே இல்லைடி... என்னருமை பட்டிக்காடு..." அன்றைய நாள் நினைவில் அவனுக்கு அப்படி ஒரு சிரிப்பு பீறிட்டது...

"ம்க்கும்..." என்று நொடித்துக் கொண்டவளை அவன் சிரித்தபடி அழைத்துச் சென்றான்...

அங்கே போன பிறகு தான் தெரிந்தது அது ஒரு போலியோ சொட்டு மருந்து முகாம் என்று... சித்தார்த்தின் நிறுவனத்தின் சார்பில் அது நடைப்பெற்றது...

"இதுக்குத் தான் இவ்வளவு பில்டப்பா..." என்றவளை கண்டு அவன் மர்மமாகச் சிரித்தான்...

"என்னமோ சொல்ல வர்றீங்க... அது என்னன்னு தான் எனக்குப் புரியலை..." என்றவள் அவனுடன் இணைந்து நடந்தாள்...

"கலெக்டர் மேடம் உங்க கையால் மருந்து கொடுங்க..." என்று சித்தார்த் மனைவியை அழைத்தான்...

"நானா...? அதுவும் மாமா, அத்தை எல்லாம் இருக்கும் போது..."

"இத்தனை காலம் நாங்க தான்ம்மா இதைச் செய்தோம்... இப்போ நீ செய்..." என்று மருமகளுக்காக விட்டு கொடுத்தனர் பெரியவர்கள் இருவரும்...

குழந்தைகளுக்கு மருந்து கொடுத்த போதும் அவளுக்கு எதுவும் புரியவில்லை... எல்லாம் முடிந்து நாற்காலியில் அமர்ந்தவள் ஏதேச்சையாக அங்கு ஓரமாய் அடுக்கி வைக்கப்பட்டு இருந்த அட்டை பெட்டிகளைப் பார்த்து யோசனையாய் புருவங்களைச் சுருக்கினாள்...

"அது யார் பெயர் என்று தெரிகிறதா...?"

கணவனது குரல் அவளது காதருகில் கிசுகிசுப்பாய் உரைத்தது... அதில் அவள் திகைப்பாய் அவனைத் திரும்பி பார்த்தாள்...

"உன் பெயர் தான்..." என்றவனைக் கண்டு அவளது விழிகள் கலங்கியது...

அவளது உள்ளமும், மனமும் ஒரு சேர நடுங்கியது... ஓவென்று கத்தி அழ வேண்டும் போல் அவளது உணர்வுகள் கட்டுக்கடங்காது அலை கடல் போல் ஆர்ப்பரித்தது...

"ப்ரஹா ஃபார்மசி..."

கணவனது வார்த்தைகள் அவளது காதில் தேனினும் இனிமையாய் ஒலித்தது...!!!

"துரோகம் துறந்தது...
களவு கடந்தது...
அன்பு கனிந்தது...
நீ மறைந்தது...
நான் அழிந்தது...
நாம் மலர்ந்தது...
நம் காதலில்...!!!"

நனவாகும்...!!!

தன்னைச் சுற்றியிருக்கும் சூழ்நிலையை மறந்து கணவனை இறுக அணைத்துக் கொண்டு கதறியழ வேண்டும் போலிருந்த உணர்வை பிரகதீஸ்வரியால் கட்டுப்படுத்த முடியவில்லை... துரோகம் புரிந்தவன் என்று கீழாய் தூற்றப்பட்டவன் இன்று இமயமாய் உயர்ந்து நின்றான் அவனது தன்னலமற்ற செயலால்...

மனைவியின் உணர்வுகளை அவதானித்தவனாய் அவளது கையில் அழுத்தம் கொடுத்து ஆறுதல் அளித்த சித்தார்த், "எதுக்கு இத்தனை திகைப்பு பேபி...? இது தெரியாதா உனக்கு...?"

"ம்ஹூம்..." விழிநீர் பளபளக்க தலையசைத்தவளை கண்டு அவன் இரக்கமாய்ப் பார்த்தான்...

"பெயர் தெரியாமல் தானா என் மீது வழக்கு தொடர்ந்தியா...?" என்றவனைக் கண்டு திகைத்துப் போய்ப் பார்த்தாள் அவள்...

"கலெக்டர் மேடம் இவ்வளவு மக்காக இருக்கக் கூடாது..." என்று கூறி விட்டு அவன் வாய் விட்டுச் சிரித்தான்...

"மாமூ..." சத்தம் வராது சிணுங்கியவளை கண்டு அவள் வாய் அருகே குனிந்து,

"என்ன சொன்ன...?" என்று கிண்டலடித்தவனைக் கண்டு அவளுக்குக் கோபம் வராது வெட்கம் வந்து தொலைத்தது...

"போங்க மாமூ..." என்று அவள் எழுந்து சென்று விட்டாள்...

அவள் மனதில் கணவனைக் குறித்து அத்தனை பெருமிதமாக இருந்தது... அதே போல் தான் அவனும்... இதுநாள் வரை அவள் எதுவும் அவனிடத்தில் கேட்காது இருந்ததற்குக் காரணம் அவள் அவன் மீது வைத்த நம்பிக்கையே... அந்த நம்பிக்கையை அவன் காப்பாற்ற வேண்டாமா...? அதற்காகத் தான் இன்று அவன் அவளை இங்கு அழைத்து வந்தது...

முகாம் வேலைகள் முடிந்து சித்தார்த்தின் பெற்றோர்கள் கிளம்பி விட்டனர்... இவர்கள் மூவர் மட்டும் தனியே காரில் கிளம்பினர்... வீட்டிற்குச் செல்லாது கார் வேறு பக்கம் செல்வது கண்டு அவள் புரியாது கணவனைப் பார்த்தாள்...

"இன்னும் எங்கே...?"

"இதுவும் சஸ்பென்ஸ்..." என்றான் நமட்டு சிரிப்புடன் அந்தக் கள்வன்...

அரை மணி நேர பயணத்திற்குப் பின் அந்தப் பிரமாண்ட நுழைவாயிலில் முன் கார் நின்ற போது தான் அவளுக்குப் புரிந்தது தான் எங்கே வந்திருக்கிறோம் என்று... கறுப்பு நிற இரும்பு கதவில் 'ப்ரஹா ஃபார்மசி' என்று தங்க எழுத்துக்களால் எழுதப்பட்டு இருப்பதைக் கண்டு அவள் மனம் நெகிழ கணவனைப் பார்த்தாள்... அவனோ காரை உள்ளே செலுத்துவதில் மும்முரமாக இருந்தான்...

உள்ளே சென்று அலுவலகக் கட்டிடத்தின் முன் காரை நிறுத்தி விட்டு முதலில் தான் இறங்கியவன் பிறகு மனைவி பக்கம் வந்து கதவை திறந்து விட்டு,

"வெல்கம் மேடம் அன்ட் குட்டி மேடம்..." என்று அம்மாவையும், பெண்ணையும் ஒரு சேர வரவேற்க...

"ஐய், நான் குட்டி மேடம்..." என்று குதூகலமாய்க் குதித்த சின்னவளை கண்டு பெரியவர்கள் இருவரின் முகத்திலும் அத்தனை பூரிப்பு...

நேரே அலுவலக அறைக்கு அழைத்துச் சென்றான் சித்தார்த்... அங்கே அமர்ந்திருந்த நீலேஷை கண்டு புன்னகைத்த சித்தார்த் மனைவியிடம் அவனைக் காட்டி,

"நீலேஷை தான் உனக்கு ஏற்கெனவே தெரியுமே... இவன் தான் இதைப் பார்த்துக் கொள்கிறான்... இவங்களோட கம்பெனி தான் மருந்துகள் தயாரிப்பதில் இந்தியாவில் முன்னணி கம்பெனி... இந்தக் கம்பெனியை பொருத்தவரை நமக்குத் தான் அதிகப் பங்குகள்..." என்று சித்தார்த் விளக்கமாக எடுத்துரைக்க...

பிரகதீஸ்வரி மரியாதை நிமித்தமாய் நீலேஷிடம் வணக்கம் தெரிவிக்க எண்ணி அவன் புறம் திரும்பியவள் அவனது கண்கள் தங்களது மகளைக் குரூரத்துடன் பார்ப்பதை கண்டு திடுக்கிட்டு போனாள்... அதன் வன்மத்தில் பயந்தவளாய் அவள் அவசரமாக மகளைக் கைகளில் தூக்கி கொண்டாள்...

"என்னாச்சு ரதி...?"

"ஒண்ணும் இல்லைங்க... இங்கே ஒரே புழுக்கமா இருக்கு... வெளியில் போகலாம்..." என்றவளிடம்,

"சரி, நீ போ ரதி... இதோ நான் வருகிறேன்..." என்று மனைவியை அனுப்பி வைத்து விட்டு சித்தார்த் நண்பன் புறம் திரும்பினான்...

"நீலேஷ் இன்றோடு நம்ம பிசினஸ் டீலிங்கை முடிச்சிக்கலாம்..." என்றான் இறுகிய முகத்துடன்...

"ஏன் சித்து...? நான் எதுவும் தவறு செய்து விட்டேனா...?" ஒன்றும் தெரியாதவன் போல் போலியாக நடித்தான் அந்த நயவஞ்சகன்...

"தொழிலுக்குள் குடும்பத்தை இழுப்பது நல்ல ஆண்மகனுக்கு அழகல்ல..."

"சித்து..." உண்மையில் திகைத்து போய் விட்டான் நீலேஷ்...

"தொழிலை தொழிலாகப் பார்க்கணும்... நீ தேவையில்லாமல் சொந்த விசயங்களை மனசில் வச்சிக்கிட்டு என் மனைவி கிட்ட முறைச்சுக்கிட்டு இருக்கிறது எனக்குப் பிடிக்கலை... அதுவும் நீ என் மகளைப் பார்த்த பார்வை சுத்தமாய் எனக்குப் பிடிக்கலை... உன்னை விட எனக்கு என் குடும்பம் முக்கியம்... அதை விட அவர்களோட மரியாதை ரொம்ப ரொம்ப முக்கியம்..."

சித்தார்த்தின் நீளமான விளக்கம் கேட்ட நீலேஷ் இப்போது திமிராய், தெனாவெட்டாய் நண்பனை பார்த்தான்...

ஆனால் வெளியில் பவ்யமாய், பாவமாய், "நான் அப்படி எல்லாம் நினைக்கலை சித்து... ஆனால் நீ அப்படி நினைச்சா அதுக்கு நான் பொறுப்பில்லை... நீ எப்போதும் என் நண்பன் தான்... உனக்காக, உன் வார்த்தைக்காக நான் இந்தக் கம்பெனி பொறுப்பில் இருந்து விலகிக்கிறேன்..." என்றுரைத்து விட்டு அவன் வெளியில் சென்று விட்டான்...

செல்லும் நண்பனை பார்த்தவாறு சித்தார்த் யோசனையுடன் நின்றிருந்தான்... அவனது மனதிற்குள் எதுவோ சரியில்லை என்றே தோன்றியது... அது எது என்று தான் அவனுக்கு விளங்கவில்லை...

வெளியில் சென்ற நீலேஷ் அங்கு நின்றிருந்த பிரகதீஸ்வரியை முறைத்துக் கொண்டு சென்றான்... அதில் பயந்தவளாய் அவள் கணவனைத் தேடி சென்றாள்...

"என்னங்க...?"

மனைவி அழைக்கவும் தன்னினைவு கலைந்தவன் மகளைத் தனது கைகளில் தூக்கி கொண்டு,

"கம்பெனியை சுத்தி பார்க்கலாம்... வா..." என்று மனைவியை அழைத்துக் கொண்டு அறையை விட்டு வெளியில் வந்தான்...

அந்த நிறுவனம் முழுவதையும் சித்தார்த் சுற்றி காட்டிய போது அவள் பிரமித்துப் போனாள்... எந்தக் குறையும் சொல்ல முடியாதபடி அந்த நிறுவனம் நல்ல முறையில் இயங்கி கொண்டிருந்தது... எது எப்படி இருந்த போதும் சித்தார்த்தின் முழுகவனமும் நேரடியாக இதன் மீது இருந்ததால் இது சிறப்பாக இயங்கி வந்தது...

நிறுவனத்தைப் பார்த்து விட்டு காரிலேறி அமர்ந்தவளுக்கு இன்னமும் பிரமிப்பு குறையவில்லை... காரை கிளப்பிய சித்தார்த் மனைவியைப் பார்த்தான்...

"ரதி... இந்த நிறுவனத்தின் வருமானம் முழுவதும்..." என்று மேலே சொல்ல போனவனின் வாயை மூடியவள்,

"எல்லாம் எனக்குத் தெரியும் மாமு... என் பெயரில் சேமித்து இருப்பேன்னு சொல்வீங்க..."

மனைவி கூற்று கேட்டு அவனது இதழ்களில் மர்ம புன்னகை வந்தமர்ந்தது...

"தேங்க்ஸ் மாமு... எல்லாத்துக்கும்..." என்றவள் மனம் நெகிழ்ந்தவளாய் கணவனது தோளில் சாய்ந்து கொள்ள...

"நானும், நானும்..." என்று மகள் போட்டி போட்டுக் கொண்டு தந்தையின் கழுத்தை கட்டி கொண்டு அவனது தோளில் சாய்ந்து கொண்டாள்...

"என் கூடப் போட்டி போடுறதே உனக்கு வேலையா போச்சு..." என்று முணுமுணுத்துக் கொண்டே அன்னையவள் தள்ளியமர எத்தனித்த போது கணவனது கரம் மகளுக்குத் தெரியாமல் அவளைத் தடுத்தது...

"எனது தோளில் உங்க இரண்டு பேருக்கும் இடமிருக்கு..." என்றான் விரிந்த புன்னகையுடன்...

"ஆமாம், ஆமாம்... ரொம்பப் பெருசு..." என்றாள் சின்னவள் தனது கைகளை அகல விரித்து...

அதைக் கண்டு பெற்றோர் இருவருக்கும் சிரிப்பு வந்தது... அடுத்து சித்தார்த் மனைவியைக் கூட்டி கொண்டு சென்ற இடம் ஒரு மருத்துவமனை...

"அடுத்தச் சர்ப்ரைசா...?" என்று கேட்டபடி புன்னகையுடன் இறங்கினாள் பிரகதீஸ்வரி...

"ஆம்..." என்று ஆமோதித்தவன்,

"நம் கம்பெனியில் இருந்து தயாரிக்கப்படும் மருந்துகள் ஏழை, எளியவர்களைச் சென்றடைய வேண்டும் என்பதற்காகத் தான் இந்த மருத்துவமனை... சிகிச்சையும் அப்படித் தான்... ஆனால் மத்த மருத்துவ மனைகளில் வாங்கும் பணத்தில் கால்வாசிக்கும் குறைவான தொகையே இங்கு வாங்கப்படுகிறது... அந்தத் தொகையும் இங்கு வருபவர்களுக்கு மூன்று நேரமும் இலவசமாக

உணவு வழங்குவதில் செலவிடப்படுகிறது..." என்றவனைக் கண்டு பிரமிப்பையும் தாண்டிய வேறு ஒரு உணர்வு இருக்குமானால் அப்படி ஒரு உணர்வுடன் மெய் மறந்து பார்த்து கொண்டிருந்தாள் அவள்...

அதாவது கடவுளை கண்ட பக்தன் போன்று...!!!

"எதுவுமே இலவசமாகக் கொடுத்தால் அதற்கு மதிப்புக் கிடையாது ரதி..."

அன்று நீதிமன்ற வளாகத்தில் கணவன் கூறிய கூற்று இப்போது அவளது காதுகளில் ஒலித்தது... அத்தோடு அதில் இருந்த மென்மையும், கனிவும்... அப்போது அவளுக்குப் புரியவில்லை... இப்போது அவளுக்குப் புரிந்தது அதிலிருந்த காதலும், நேர்மையும்...

"உண்மை தான்ங்க..." மனதார ஏற்றுக் கொண்டாள் அவள்...

"ஆனால் அன்னதானத்திற்குப் பணம் வாங்க கூடாது... அதனால் அது மட்டும் இலவசம்..."

உண்மை தான்... பசித்த வயிறு புசிப்பதற்கு உணவிடுவதற்குப் பணம் பெறுவது பெரும் பாவம் இல்லையா...?

"மிகப் பெரிய சேவை செய்றீங்க மாமு... எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு..." என்றவளை புன்னகையுடன் பார்த்தான் அவன்...

"சின்னம்மா..." பழக்கப்பட்ட குரல் கேட்கவும் யோசனையாய் திரும்பி பார்த்தவள் அங்கு அவளது நண்பன் கதிரேசன் நின்று கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சிரியமாய்ப் பார்த்தாள்... ஒரு மருத்துவனுக்கு உரிய அத்தனை லட்சணங்களுடன் முழுமையான ஆண்மகனாய் அவன் நின்றிருந்தான்...

"கதிர் நீ இப்படி இங்கே...?"

"சார் தான் என்னை எங்கேயும் போக வேண்டாம்ன்னு சொல்லி இங்கேயே வேலை போட்டு கொடுத்து விட்டார்..."

அதைக் கேட்டு அவள் கணவனை நன்றியுடன் பார்த்தாள்... அவனோ புன்னகையுடன் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தான்... இதே சித்தார்த் தான் அன்று அவள் கதிரேசனுடன் பேசியதற்காக அத்தனை கோபப்பட்டான்... அப்போதே கணவனுக்குத் தன் மீது ஒரு ஈர்ப்பு இருந்திருக்க வேண்டும் என்றே அவளுக்குத் தோன்றியது...

"அட... சின்னம்மாவோட குட்டி சின்னம்மாங்களா...?" என்றபடி கதிரேசன் ஜெகதீஸ்வரியை ஆசையாய் தூக்கி கொஞ்சினான்...

பிறகு கதிரேசனிடம் விடை பெற்று மூவரும் வெளியில் வந்தனர்... அடுத்து சித்தார்த் மனைவியை அழைத்துச் சென்ற இடம் ஒரு ஆதரவற்ற இல்லத்துக்கு...

அவர்களது நிறுவனம் சார்பாக அந்த இல்லம் நடத்தப்பட்டு வருகிறது... விழி விரிய அவனைப் பார்த்தவள்,

"மாமூ... இது தான் கல்லுக்குள் ஈரம் என்பதா...?" என்று கேலி போல் கேட்டாலும் அவளது குரலில் அத்தனை பெருமை இருந்தது...

"இது இன்று நேற்று ஆரம்பித்தது இல்லை... நான் படித்து முடித்துத் தொழிலை கையில் எடுத்த போது ஆரம்பித்தது... கிட்டத்தட்ட பதினாலு வருடங்களுக்கு மேலாகிறது..."

'அப்போதேவா...?' என்று அவளுக்கு மனதிற்குள் பிரமிப்பு எழுந்த போதும் அதைக் கேட்க முடியாதபடி சூழ்நிலை தடுக்க அமைதியாகி விட்டாள்...

"இப்போது மருந்து கம்பெனியில் இருந்து வரும் வருமானம் முழுவதும் இதற்குத் தான் பயன்படுகிறது..." என்று அவன் கூற, அதில் அவளுக்கு அத்தனை ஆத்மதிருப்தி...

அங்கேயே ஆதரவற்றவர்களோடு மதிய உணவு முடித்துக் கொண்டு வீட்டிற்கு வந்த போது அத்தனை நிறைவு

இருவரின் மனதிலும்...

அன்றிரவு மகள் உறங்கியதும் தானாகவே கணவன் அருகில் சென்றாள் பிரகதீஸ்வரி... சித்தார்த் விரிந்த புன்னகையுடன் இரு கரம் நீட்டி அவளை வரவேற்று தன்னுள் அடக்கி கொண்டான்...

"மாமூ... எனக்கு உங்களை மாதிரி ஒரு மகன் வேண்டும்..." என்று விழிகளில் காதல் மயக்கத்துடன் கூறியவளை அவன் ஆச்சிரியமாய்ப் பார்த்தான்...

"ஒரு சித்தார்த்தனையே உன்னால் சமாளிக்க முடியலை... இதில் இன்னொன்னா...?"

"மூச்... பேச கூடாது... எனக்கு வேணும்ன்னா வேணும்..." என்றவள் அவனது இதழோடு இதழ் சேர்க்க முனைந்த போது தடுத்தவனாய் அவளைத் தனது கைகளில் ஏந்தி கொண்டு,

"ஜிக்கி இருப்பது கூட மறந்து போகும் அளவுக்கு இன்னைக்கு அப்படி என்ன மயக்கம் என் பேபிக்கு..." என்று கேலி செய்தவன் தங்களுக்கு என்றிருக்கும் தனியறைக்கு வந்திருந்தான்...

"மாமூவோட காதல் பார்த்து பேபியோட காதல் கன்னாபின்னான்னு ஏறி போச்சு..." தாப குரலில் கூறியவள் அதற்கு மேல் அவனைப் பேச விடவில்லை...

இதுநாள் வரை அவன் தான் தனது காதலை அவளிடத்தில் விதவிதமாய்க் காட்டி இருக்கிறான்... இன்று அவள் தனது வேறு பரிமாணத்தை அவனிடத்தில் காட்டிய போது அவன் மதிமயங்கி கிறங்கி போனான்... சும்மாவே அவளிடத்தில் பைத்தியமாக இருப்பவன் இப்போது இன்னமும் பைத்தியமாகி போனான்...

"மனுசனை கொல்லுறடி..." என்று கிறக்கத்துடன் தன்னுள் புதைந்தவனை என்றுமில்லாத ஆர்ப்பாட்டத்துடன் அவள் கிரகித்துக் கொண்டாள்...

கூடல் முடிந்து விலகிய போது இருவரின் மனதும் ஆழ்கடல் போன்று அமைதியில் ஆழ்ந்திருந்தது... சித்தார்த் மனைவியின் காது மடலை வருடியபடி விளையாடியவன் அவளது காதருகில் குனிந்து,

"என்னுடைய காதலர் தின பரிசு பிடித்திருந்ததா...?" என்று கிசுகிசுக்க... கணவனது குரலில் அவள் இனிய அதிர்ச்சியாய் அவனை ஏறிட்டு பார்த்தாள்...

"இன்னைக்குக் காதலர் தினமா...?"

"இன்று இல்லை... நேற்று..." என்று சிரித்தபடி அவன் கடிகாரத்தைச் சுட்டி காட்டினான்... அதிகாலை மணி ஒன்றாகி இருந்தது...

"சரி நேத்து தான்... முதலிலேயே சொல்லியிருந்தா நானும் ஏதாவது பரிசு வாங்கி இருந்திருப்பேனே மாமூ..." கவலை குரலில் கூறியவளை கண்டு,

"ஆத்மார்த்தமான உன் அன்பை விடச் சிறந்த பரிசு உலகில் இருக்கா பேபி...?" என்று கூறியவனை ஏறிட்டவள் விழிகள் கலங்கியது...

"உங்களை நான் புரிஞ்சிக்கவே இல்லை மாமூ... ரொம்பப் படுத்தி எடுத்துட்டேன்..." என்றவள் அழுகையுடன் அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்...

"நானும் கொஞ்சம்... இல்லை இல்லை அதிகம் ஈகோ பிடிச்சவன் தான்... அதனால் இரண்டுக்கும் சரியா போச்சு..."

அவன் பக்கம் அதிகத் தவறு இல்லாத போதும் அவளுக்காக அவன் தன்னைத் தவறாகச் சித்தரித்துக் கொண்டான்...

"எனக்காகப் பொய் சொல்றீங்க மாமூ..." என்று சிணுங்கியவளை கண்டு,

"ப்ராமிசா பேபி... நீ தான் சின்னப் பெண்... யோசிக்காம செய்தேன்னா நானும் அதே தவறு தானே செய்தேன்... நான்

கொஞ்சம் விட்டு கொடுத்து இருக்கணுமோன்னு இப்ப தோணுது... ஆனாலும் தி க்ரேட் சித்தார்த் யார் கிட்டேயும் தலை குனிஞ்சு பழக்கம் இல்லையே... அதனால் வந்த விளைவு தான் இது..." என்று அவளைச் சமாதானப்படுத்தியவன்,

"எல்லாவற்றையும் உன் கிட்ட விளக்கி சொல்லியிருக்கணும் பேபி... முக்கியமா உங்கப்பாவோட சித்த மருத்துவம் பற்றி... உனக்குச் சர்ப்ரைஸ் கொடுக்கிறதா நினைச்சு நான் செஞ்சது கடைசியில் ஒரு திருடன் போல் என்னைச் சித்தரித்து விட்டது... அதை உன் கிட்ட ஒத்துக்க மனம் இல்லாமல் நான் அப்படித் தான்னு நானும் ரொம்ப அழுத்தமா இருந்துட்டேன்... புரியாதவள் கிட்ட எதுக்கு விளக்கம் கொடுக்கணும்ங்கிற ஒரு அகங்காரம்..."

"உன் கிட்ட இந்த மருத்துவக் குறிப்புகள் இருந்தால் நிச்சயம் நல்ல காரியத்துக்குப் பயன்பட்டு இருக்கும் தான்... இல்லைன்னு சொல்லலை... அந்தக் கிராமத்திற்குள் முடிந்து போயிருக்கும்... ஆனால் இப்போது தென்னிந்தியா முழுவதும் நம்ம மருந்துக்களைப் பிரபலப்படுத்திக்கிட்டு இருக்கேன்... இன்னும் கொஞ்ச நாளில் இந்தியா மற்றும் உலகம் முழுவதும் பேமஸ் ஆக்கணும்ங்கிறது தான் என்னோட எண்ணம்... இப்போ சொல்லு நான் செஞ்சது தப்பா...? எல்லாமே உனக்காக, உனக்காக மட்டுமே ஒவ்வொன்றையும் யோசிச்சு யோசிச்சு செய்தேன்..."

இல்லை என்பது போல் மறுப்பாய் தலையசைத்தாள் மனைவியவள்... அதில் அவனது மனம் நிம்மதி அடைந்தது... அவனது அத்தனை தவறுகளையும் மன்னித்தது அவளது பெருந்தன்மையாக இருக்கலாம்... அவன் மீது அவள் வைத்த அளவற்ற காதலாக இருக்கலாம்... தவறு எல்லாவற்றையும் அவன் மாற்றி அமைத்து விட்ட போதும் அவனால் மாற்ற முடியாதது ஒன்று இருக்குமேயானால் அது அவளது வாழ்நாள் லட்சியம்... இன்றும் அதை அவள் அடைய முடியாது போனது குறித்து அவனுள் ஒரு வலி இருந்து கொண்டே இருக்கிறது...

"எல்லாம் மாத்த முடிஞ்ச என்னால் உன் லட்சியத்தை மாத்த முடியலை... உன்னைச் சித்த மருத்துவம் படிக்க வைக்க எத்தனையோ தொண்டு நிறுவனம் மூலம் போராடினேன்... ம்ஹூம் அம்மணி பிடிவாதமாய் அசைஞ்சு கொடுக்கலை..." என்று கேலி போல் அவன் கூறிய போதும் அதில் மிதமிஞ்சிய வருத்தமே இருந்தது...

"அப்பாவோட சித்த மருத்துவத்தைப் பேமஸ் ஆக்கணும்னு நினைச்சேன்... அது ஏழை, எளிய மக்களுக்குப் போய்ச் சேரணும்னு நினைச்சேன்... அந்த இரண்டையும் நீங்க செஞ்சிட்டீங்களே... தொண்டு செய்றது எனக்குப் பிடிக்கும்... அது டாக்டரா இருந்து செய்தால் என்ன...? கலெக்டரா இருந்து செய்தால் என்ன...? என்னால் முடிந்த உதவிகளை மக்களுக்குச் செய்ய வேண்டும்... அது தான் எனக்கு வேண்டும்..." என்று புரிதலுடன் கூறியவளை அவன் பெருமையாகப் பார்த்தான்...

"மாமூ... அப்போதே இவ்வளவு மனிதாபிமானம் இருந்த நீங்க ஏன் என் கிட்ட அப்படி நடந்துக்கிட்டீங்க...? எல்லாமே பணத்தை அளவுகோலாகக் கொண்டு ஏன் பார்த்தீங்க...?" மனைவி கூறியதை கேட்டு அவனது முகத்தில் வேதனையின் சாயல் படிந்தது...

அவன் ஆதரவற்ற இல்லம் நடத்துவது அவனது ஜிக்கி மாதிரி யாரும் துன்பப்படக் கூடாது என்பதற்காகத் தான்... அதை மனைவியிடத்தில் சொல்ல முடியாது தவித்தான் அவன்... இது ஒன்று மட்டுமே அவனில் காணப்பட்ட முரணான குணம்... முயன்று தன்னைச் சமாளித்துக் கொண்டவன்,

"நாம் உதவி செய்வதற்கும் நம்மிடம் பணம் இருக்க வேண்டும் பேபி... அது நம்மிடம் இருந்தால் தான் நாம் அடுத்தவர்களுக்குச் செய்ய முடியும்... இல்லை என்றால் நாம் அடுத்தவர்களிடம் கையேந்தி நிற்க வேண்டும்... பணமில்லாது இந்த உலகு இல்லை..."

எத்தனை இரக்க சுபாவம் அவன் மனதில் இருந்த போதும் சில கொள்கைகளை அவனால் விட்டு விட முடியவில்லை...

அதில் ஒன்று தான் பணத்தின் பின்னே ஓடுவது... அதன் மூலம் தனது அந்தஸ்தை நிலை நிறுத்தி கொள்வது...

"சரி போகுது விடுங்க... உங்களுக்காக விட்டு கொடுக்கிறேன்..." என்று சிரித்தவளை ஆசையுடன் பார்த்தவன்,

"என்னால் அப்படி எல்லாம் விட்டு கொடுக்க முடியாது..." என்று கூறியவன் அவளது முகம் நோக்கி ஆசையுடன் குனிந்தான்...

கணவனின் பிடிவாதம் அறிந்தவளாய் அவள் நல்ல மனைவியாய் இசைந்து கொடுத்தாள்...

****

அடுத்து வந்த நாட்கள் அமைதியாகச் சென்றது... ஒரு நாள் திடுமென நீலேஷ் சித்தார்த்திற்கு அலைப்பேசியில் அழைத்துப் பேசினான்...

"சித்து... எப்போ என்னோட பங்கை பிரிச்சுக் கொடுக்கப் போகிற... நான் கம்பெனியில் இருந்து வெளியில் வந்து நிறைய நாட்களாகி விட்டது..."

நீலேஷின் குரலில் இருந்த பதற்றம், அவசரம் சித்தார்த்தை யோசிக்க வைத்தது... என்ன சொன்ன போதும் விலகி போகாத நண்பன் இப்போது விலகி போனதுடன் பங்கை பிரித்து வாங்குவதற்கு ஏன் இப்படித் துடிக்கிறான் என்று அவனுக்குக் காரணம் புரியவில்லை... ஆனால் நண்பனது அவசரத்தில் ஏதோ ஒன்று இருப்பதாக அவனுக்குத் தோன்றியது...

"லீகல் ப்ராசஸ் இன்னும் முடியலை நீலேஷ்... முடிந்ததும் நானே உன்னை அழைக்கிறேன்..." என்று அலைப்பேசியைத் துண்டித்து யோசனையுடன் அலுவலக நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தான்...

என்ன யோசித்தும் அவனுக்கு ஒன்றும் புலப்படவில்லை... ஆனால் புலப்படாத அந்த ஒன்றை கண்டு பிடிக்காது

அவனும் ஓய போவதில்லை...

அதே நேரம் பிரகதீஸ்வரி ஆற்றைத் தூர்வாரும் இடத்திற்கு நேரடியாகச் சென்றிருந்தாள்... அவளுக்குத் தெரியாமல் அவளைக் கண்காணிக்கச் சித்தார்த் ஏற்படுத்தி இருந்த பாதுகாவலன் சற்று தள்ளி நின்று பார்த்துக் கொண்டிருந்தான்... அப்போது தூர்வாரி கொண்டிருந்த இயந்திரம் திடுமென அவளை நோக்கி வந்தது... பாதுகாவலன் சுதாரித்துக் கொண்டு அவளை நோக்கி ஓடி வந்தவன் அவளை வேகமாகத் தள்ளி விட்டான்...

அவன் தள்ளி விட்டதில் அவள் தடுமாறி கீழே விழ... அடுத்த நொடி அந்த இயந்திரம் அந்தப் பாதுகாவலன் தலையில் நேராய்த் தாக்கியது... தலையில் அடிப்பட்டு இரத்தம் சொட்ட அவன் கீழே விழுந்தான்... அடுத்தக் கணம் அந்த இடம் கலவர பூமியானது...

சிலர் அந்த இயந்திரத்தின் ஓட்டுநரை பிடித்து அடித்தனர்... சிலர் அடிப்பட்டவனை மருத்துவமனையில் சேர்ப்பதற்கு ஆயத்தமானர்... பிரகதீஸ்வரி அவனை நோக்கி ஓடி வந்தாள்...

"சீக்கிரம் அவரை என்னோட காரில் ஏத்துங்க..." என்று கூடியிருந்தவர்களை அவள் துரிதப்படுத்தினாள்...

"மேடம்... சார்க்கு ஃபோன் போட்டு விசயத்தைச் சொல்லிருங்க..." அந்த அடிப்பட்ட நிலையிலும் அவன் சித்தார்த்திடம் விசயத்தைச் சொல்ல சொன்னான்... அவன் தனது கணவன் ஏற்பாடு செய்த ஆள் என்பது அப்போது தான் அவளுக்குத் தெரிந்தது...

"சரி..." என்றவள் அவனைக் காரில் ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தாள்...

விசயம் கேள்விப்பட்டு அத்தனை வேலைகளையும் விட்டு விட்டு சித்தார்த் பதற்றமாய் மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தான்... அவள் அவனது உயிரல்லவா...

உயிர் ஆபத்தில் இருந்து தப்பித்த பாதுகாவலனுக்குச் சிறப்புச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்த சித்தார்த் மனைவிக்கும் முதலுதவி செய்து அவளை வீட்டிற்கு அழைத்து வந்தான்... அன்னையிடம் விசயத்தைக் கூறி விட்டு மகளை அன்னையிடம் ஒப்படைத்து விட்டு தங்களது அறைக்கு மனைவியை அழைத்துக் கொண்டு வந்தவன் அறைக்குள் நுழைந்ததும் காற்று கூட இடையில் புகாதபடி அவளை இறுக்கமாய் அணைத்துக் கொண்டான்...

"உனக்கு ஏதாவது ஒண்ணு ஆகியிருந்தால்...?" அவனது குரலும், மேனியும் நடுங்கியது நடந்து முடிந்த பயங்கரத்தை எண்ணி...

"அதான் எனக்கு ஒண்ணும் ஆகலையே மாமு..."

மனைவியவள் அவனின் பயம் அறிந்தவளாய் அவனைச் சமாதானப்படுத்தினாள்...

'என்னைப் பொருத்தவரைக்கும் இது சாதாரண விசயம் இல்லை... என் மனைவிக்கு மரணப் பயத்தைக் காட்டியவர்களுக்கு நான் அதைத் திரும்பக் காட்ட வேண்டாமா...? அதுவும் அதிபயங்கரமாய்... இந்தச் சித்தார்த்தை என்ன நினைத்தார்கள் அவர்கள்...'

அப்போதே அவன் தீர்மானித்து விட்டான் அவர்களது முடிவினை... மனைவிக்கு எமனாக முனைந்தவர்களுக்கு அவன் எமனாக மாறிட துணிந்தான்...

இந்தச் சித்தார்த் அகராதியில் என்றுமே மன்னிப்பிற்கு இடமில்லை...!!!

"துரோகத்திற்குத் துரோகம்...
பகைக்குப் பகை...
மரணத்திற்கு மரணம்...
சித்தார்த்தனின் அகராதி தனி...
காதலுக்காகத் தடம் மாறிய அகராதி...
அதே காதலுக்காகக் களம் புகும்...
வேட்டையாடி கொல்லும்...

சித்தார்த் எனும் சிறுத்தை
தனது புள்ளிகளை என்றும்
மாற்றிக் கொள்ளாது..."

நனவாகும்...!!!

அந்தி சாயும் மாலை நேரம், சிலுசிலுவென்று வீசும் தென்றல் காற்று, மனம் மயக்கும் இயற்கை அழகு என்று ஒரு விருந்தினர் விடுதிக்கு தேவையான அத்தனை அம்சங்களுடன் அந்தப் பங்களா அழகுற அமைந்து இருந்தது... அதனுள் 'ரியல் எஸ்டேட்' அதிபர்கள் எல்லோரும் கூடியிருந்தனர்... எல்லோருமே புதிதாக வந்திருக்கும் மாவட்ட ஆட்சியர் பிரகதீஸ்வரியை எப்படிச் சமாளிப்பது என்பது பற்றிப் பேச வந்திருந்தனர்... இதில் கலந்தது கொள்ளச் சொல்லி சித்தார்த்திற்கும் அழைப்பு உண்டு... ஆனால் அவன் அங்கு வரவில்லை...

"பார்த்தீங்களா மிஸ்டர். சித்தார்த் இதுக்கு வரலை... எப்போதும் இந்த மாதிரி விசயத்திற்கு முன்னே நிற்பவர்... தன்னோட மனைவின்னதும் ஒதுங்கிக்கிட்டார்..." என்று ஒருவர் பேச்சை ஆரம்பித்து வைத்தார்...

"ஹா ஹா... வெளியில் புலியாய் உறுமினாலும் வீட்டில் பூனையாய் பம்மி தானே ஆகணும்... இதில் சித்தார்த் மட்டும் என்ன விதிவிலக்கா...?" என்று மற்றொருவர் கேலியாய் சிரித்தார்...

"நீங்க சொல்றது உண்மை தான்... இப்போ அவர் முன்பு மாதிரி இல்லை... முன்னே எல்லாம் எந்தக் கலெக்டர் வந்தாலும் அதிரடியா எதிர்த்து நின்றவர் இப்போது மனைவியை எதிர்க்க ரொம்ப யோசிக்கிறார்... அவங்க என்ன உத்தரவு போட்டாலும் சத்தமில்லாம அவருடைய கம்பெனியில் அதை நிறைவேற்றி வைக்கிறார்... இதனால் நமக்குத் தான் பாதிப்பு அதிகமா இருக்கு... இதுக்கு ஏதாவது முடிவு கட்டியே ஆகணும்..."

"முடிவு கட்ட எண்ணி தானே அந்த வேலையைச் செய்தோம்... எப்படியோ தப்பிச்சிட்டாள்... அடுத்த முறை நம்ம குறி தப்ப கூடாது..."

அவர் கூறியதை கேட்டு மற்றவர்கள் எல்லோரும் ஆமோதித்தனர்... ஆற்றுப் பகுதியில் தூர்வாரும் போது

பிரகதீஸ்வரிக்கு நிகழ்ந்த விபத்து இவர்களால் அரங்கேற்றப்பட்டது தான்...

இவர்கள் இப்படிப் பேசி கொண்டிருக்கும் போதே எங்கிருந்தோ கிளம்பிய தீ மளமளவென்று பரவ ஆரம்பித்தது... எல்லோரும் தப்பித்துப் பிழைத்ததே பெரும்பாடாகப் போயிற்று... சரியான நேரத்தில் தீயணைப்பு வண்டி வந்து தீயை அணைத்து எல்லோரையும் காப்பாற்றியது... இல்லை என்றால் அனைவரும் ஏசி அறையில் தீயில் பொசுங்கி அடையாளம் தெரியாது சாம்பலாகி போயிருப்பர்... தப்பித்தவர்களின் கண்களில் மரணப் பயம் தெரிந்தது...

மறுநாள் காலையில் செய்தித்தாளில் வந்த இந்தச் செய்தியை பார்த்து விட்டு பிரகதீஸ்வரி கணவனிடம்,

"நல்லவேளை நீங்க அங்கே போகலை..." என்றாள் நிம்மதியுடன்...

"எல்லாம் உன் தாலி பாக்கியம் தான்..." என்று கண் சிமிட்டி சிரித்த கணவனைக் கண்டு முகம் சிவந்தவள்,

"ஜிக்கி முன் இது என்ன பேச்சு...?" என்று அவள் அவனது விலாவில் இடிக்க...

"நீ மட்டும் ஜிக்கி முன் என்னைக் கட்டி பிடிக்கலையா... அது மாதிரி தான் இதுவும்..." என்றான் அவன் நமட்டு சிரிப்புடன்...

"நான் எப்போ...?" என்று சட்டென்று கேட்டவள் பின் ஞாபகம் வந்தவளாய்,

"அப்போ ஜிக்கி தூங்கிட்டு இருந்தாள்..." என்று அவள் சமாளிக்க...

"இப்போ ஜிக்கி தூங்கலையே..." என்று கத்தியபடி மகள் இருவருக்கும் இடையில் நுழைந்தாள்...

மகளின் பேச்சு, செய்கை தகப்பனுக்குச் சிரிப்பை வரவழைத்தது... அவன் வாய் விட்டுச் சிரித்தான்...

"சிரிக்கிறீங்களா...? இன்னைக்கு நைட் ஜிக்கி தூங்கட்டும்... அப்போ இருக்கு உங்களுக்கு..." கணவனுக்கு மட்டும் கேட்கும் குரலில் அவள் முணுமுணுக்க...

"ஹா ஹா... ஆல்வேஸ் வெல்கம் பேபி..." என்றான் அவனும் ரகசியமாக விரிந்த புன்னகையுடன்...

அன்றைய தினம் சந்தோசமாகச் சென்றது... சித்தார்த்திற்கு என்ன வேலை எப்படி இருந்த போதும் அவனது முழுக் கவனமும் அவனது மனைவி, மகளிடத்தில் இருந்தது... அவர்கள் மேல் சிறு துரும்பு கூடப் படாமல் பாதுகாப்பாய் பார்த்துக் கொண்டான்...

****

இரவு நன்கு தூங்கி கொண்டிருந்த ஸ்வேதாவிற்குத் திடீரென்று சுளீரென்று வலி எடுத்ததில் எழுந்து அமர்ந்தாள்... சரவணன் எப்போதாவது தான் அவளது வீட்டில் தங்குவான்... இப்போது பிரசவ நேரம் என்பதால் இங்குத் தான் தங்கி இருந்தான்... ஆனால் இன்று பார்த்து வேலை இருக்கிறது என்று கூறி அவன் இரவு முழுவதும் நிறுவனத்தில் இருந்து விட்டான்...

அதனால் ஸ்வேதா தனது அன்னையை எழுப்பி விசயத்தைக் கூற... அடுத்த நொடி முழு வீடும் பரபரப்பானது... ஜெகதீஸ்வரியும் வீட்டிலிருக்கப் பயந்து பெற்றோருடன் மருத்துவமனை கிளம்பி வந்து விட்டாள்...

சரவணனுக்குத் தகவல் கொடுக்க அவனும் அரை மணி நேரத்தில் அங்கு வந்து சேர்ந்து விட்டான்... மனைவி படும் அவஸ்தையைப் பார்த்து அவனது விழிகளில் நீர் நிரம்பியது... ஆண்மகன் அழ கூடாது என்பதைச் சொல்லி சொல்லி வளர்த்ததாலோ என்னமோ அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு மனைவிக்குத் தைரியமூட்டி கொண்டிருந்தான்...

அந்தக் கணம் தான் சித்தார்த் தனது இழப்பின் வலியை அதிகம் உணர்ந்தான்... யாரிடமும் பேச மனமற்று

அமைதியாக வெளியில் இருந்த இருக்கையில் வந்து அமர்ந்தான்... அவனது வேதனையை உணர்ந்தவளாய் பிரகதீஸ்வரி அவன் அருகில் மகளுடன் வந்தமர்ந்தாள்...

"ஜிக்கி... அப்பாவை கட்டி பிடிச்சு முத்தம் கொடு..." என்று அவள் மகளின் காதில் ரகசியமாய்க் கிசுகிசுத்தாள்...

அன்னை தனக்குப் பிடித்த விசயத்தைக் கூறியதும் மகள் சந்தோசத்துடன் தலையாட்டியவள் அடுத்தக் கணம் அன்னை சொன்னதை அப்படியே நிறைவேற்றினாள்... அதில் தனது வேதனை கலைந்து நிமிர்ந்த சித்தார்த்தின் முகத்தில் புன்னகை எட்டி பார்த்தது... அவன் சந்தோசத்துடன் மகளை அணைத்துக் கொண்டான்...

அவளுக்குத் தெரியும் அவனது இந்தத் துன்பத்தைத் தன்னால் போக்க முடியாது என்று... ஆனாலும் அவனது துன்பத்தைப் போக்க அவளது மனம் ஆசை கொண்டது...

"ஜிக்கியை கொஞ்ச நேரம் பார்த்துக்கோங்க..." என்றுரைத்து விட்டு அவள் எழுந்த செல்ல முனைந்த போது அவன் அவளைத் தடுத்து நிறுத்தினான்...

"தனியா எங்கே போகிற...? நானும் கூட வர்றேன்..."

"பாத்ரூம் போறதுக்கும் கூட வருவீங்களா மாமூ... மானத்தை வாங்காம பேசாம உட்காருங்க..." என்று செல்லமாய்க் கணவனைக் கடிந்து விட்டு அவள் செல்ல...

அவளது வார்த்தையில் அவன் தனக்குள் புன்னகைத்தபடி தலையைக் கோதி கொண்டான் சிறு வெட்கத்துடன்...

"அம்மா உங்களை ரொம்பத் திட்டுறாங்களாப்பா..." மகள் கேட்டதும் அவனது புன்னகை விரிந்தது...

"அம்மா உன்னை எதுக்குத் திட்டுவாங்க...?"

"நான் சேட்டை பண்ணினால்...?"

"அது மாதிரி தான் இதுவும்... அப்பா சேட்டை பண்ண கூடாதுன்னு திட்டுறாங்க... எல்லாம் நம்ம நல்லதுக்குத்

தான் ஜிக்கி..."

"அப்போ நல்லா திட்டட்டும்..." என்றாள் மகளும் புன்னகையுடன்...

"ஹா ஹா, திட்டு வாங்காம இருக்கத் தான் முயற்சிக்கிறேன்... ம்ஹூம், முடிய மாட்டேங்குதே ஜிக்கி..."

"அப்போ என்னை மாதிரி அம்மாவுக்குக் கிஸ் கொடுத்துருங்க... ப்ராப்ளம் சால்வ்டு..."

"சூப்பர் ஐடியா ஜிக்கி... இனி இதையே நான் ஃபாலோ பண்றேன்..." என்றவனது முகத்தில் இன்னமும் அதிகமாய்ப் புன்னகை விரிந்தது...

அடுத்தச் சில நிமிடங்களில் பிரகதீஸ்வரி அங்கு வந்து அமர்ந்தாள்... சித்தார்த் மகளைக் கண்டு சிரித்தபடி,

"நீ சொன்னதைச் செய்யவா ஜிக்கி...?"

"ம்... ம்..." என்று தலையசைத்தாள் மகள் உற்சாகமாய்...

மின்னல் வேகத்தில் மனைவியின் நெற்றியில் இதழ் பதித்து விலகினான் அந்தக் காதல் கணவன்...

"த்ச்சு... எங்கே இருந்துட்டு என்ன பண்றீங்க...?"

"நீ என்னைத் திட்டாம இருக்கிறதுக்காக..." என்றவன் மகளும், தானுமாகப் பேசியதை அவளிடம் கூற...

"போங்க மாமூ... உங்க ரெண்டு பேருக்கும் வேறு வேலை இல்லை..." என்றவள் கணவனது தோளில் சாய்ந்து கொண்டாள்...

மகளும் சிறிது நேரத்தில் உறக்கத்தில் ஆழ்ந்து போக, இரு பெண்களையும் தனது இரு தோள்களில் சுமந்தான் அந்தப் பாசக்கார ஆண்மகன்...

சிறிது நேரத்தில் ஸ்வேதாவிற்கு ஆண் குழந்தை பிறந்தது... தனது தந்தையே வந்து பிறந்தது போல் சரவணனுக்கு அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது...

"ஜெய்சிம்மன்..." என்று தந்தையின் பெயர் சொல்லி அவன் தனது மகனை கொண்டாட...

அதைக் கண்டு சித்தார்த்தின் முகம் இருண்டு போனது... ஆனாலும் சட்டென்று தனது முகபாவத்தை மாற்றிக் கொண்டான்... அவன் உள்ளுக்குள் இறுகி போனாலும் வெளியில் எதையும் காட்டி கொள்ளாது இருந்தான்...

பிரபாவதிக்கும், மார்த்தாண்டத்திற்கும் மிகவும் சந்தோசமாக இருந்தது... பேத்தி, பேரன் என இரண்டுமே அவர்களுக்குக் கிட்டி விட்டதில் மிகவும் மகிழ்ந்து போனார்கள்...

பிரபாவதி, சரவணன் இருவரும் மருத்துவமனையில் ஸ்வேதாவுக்குத் துணையிருக்க மற்ற நால்வரும் வீட்டிற்குக் கிளம்பினர்... வீட்டிற்கு வந்ததும் ஜிக்கி தூக்க கலக்கத்தில் பள்ளிக்கு செல்ல மறுத்து அடம்பிடித்தாள்...

"ஜிக்கி... ஒழுங்கா சொன்ன பேச்சு கேட்கணும்..." என்று பிரகதீஸ்வரி மகளை மிரட்ட...

"ஒரு நாள் போகலைன்னா ஒண்ணுமாகி விடாது ரதி... இன்று ஒரு நாள் ஜிக்கி லீவு எடுக்கட்டும்... அவள் நைட் எல்லாம் தூங்கலை... பாவம்..." என்று அவன் மகளுக்குப் பரிந்து பேச...

வேறுவழியின்றி அதற்குச் சம்மதித்த பிரகதீஸ்வரி மகளைக் குளிப்பாட்டி, உணவூட்டியவள் பின் மகளைத் தூங்க வைக்கும் பொறுப்பை மட்டும் கணவனிடம் கொடுத்தவள்,

"லீவு போட சொன்னால் மட்டும் போதாது... கூடயிருந்தும் கவனிச்சுக்கணும்..." என்க...

"இன்று நானும் லீவு போட்டால் போச்சு..." என்று அசால்ட்டாகக் கூறியவனைக் கண்டு வியப்பாய் பார்த்தவள் ஜன்னல் வழியே வெளியே பார்த்தாள்...

"அங்கே என்ன பார்க்கிற...? இங்கேயாவது நானிருக்கிறேன்... என்னைப் பார்த்தாலாவது நான் சந்தோசப்படுவேன்..." என்று குறும்பாய் கூறியவனைக் கண்டு,

"இல்லை... அதிசயமா இன்னைக்கு நீங்க லீவு போடுறதா சொன்னீங்களா... அதான் மழை வருதான்னு பார்த்தேன்..."

"நான் எல்லாம் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கிறவன் பேபி... மகளைக் கவனிப்பதோடு மகளின் அம்மாவையும் தனியே கவனிப்பதற்குத் தான் இந்த லீவு..." உறங்கும் மகளை ஒரு பார்வை பார்த்து விட்டு மனைவியைக் கண்டு கண் சிமிட்டினான் அந்தக் கள்வன்...

"உங்களை..." என்று போலியாக அவனை முறைத்தவள்,

"ஸ்வேதாவுக்குச் சாப்பாடு கொடுத்து விடணும்... நான் இந்த ஆட்டத்துக்கு வரலைப்பா..." என்று அங்கிருந்து அவள் விரைந்து விட்டாள்...

முகத்தில் உறைந்த புன்னகையுடன் சித்தார்த் மகளை அணைத்துக் கொண்டு உறங்க முற்பட்டான்... ஏனோ உறக்கம் வரவில்லை... மகிழ்ச்சியும், துன்பமும் கலந்த கலவையாக இருந்தது அவனது மனம்...

அரை மணி நேரத்தில் திரும்பி வந்த பிரகதீஸ்வரி "மாமூ..." என்று அவனது காதுக்கருகில் குனிந்து அழைக்க...

"ஆட்டத்துக்கு வர மாட்டேன்னு சொன்ன... இப்ப வலிய வந்திருக்க..." சிரிப்புடன் அவன் மனைவியை இழுத்து மேலே போட்டுக் கொண்டான்...

அப்போது அவள் அவனிடம் ஒரு காகிதத்தைக் காட்டினாள்...

"என்ன இது...?" என்று புரியாது அதை வாங்கிப் பார்த்தவன் முகம் அடுத்த நொடி மலர்ந்தது...

"உண்மையாவா...?"

"ம்... ம்..." என்று நாணத்துடன் தலையசைத்தவளை சந்தோசத்துடன் அணைத்து கொண்டவன்,

"என்னை மாதிரி பையன் வேணும்ன்னு நீ கேட்டு இருபது நாள் கூட ஆகலையே பேபி... அதுக்குள்ள எப்படி...?" அதிமுக்கிய சந்தேகத்தை அவன் கேட்க..

"அதுக்கு முன்னாடி மட்டும் கையை, காலை வச்சிக்கிட்டு சும்மா இருந்தீங்களாக்கும்... பேச்சை பார் பேச்சை..." என்று அவள் அவனது தோளில் விளையாட்டாய் இரண்டடி வைக்க...

"மாமனோட பவர் அந்த மாதிரியோன்னு லைட்டா ஒரு டவுட்..." என்று கண் சிமிட்டி சிரித்தவனைக் கண்டு அவளது விழிகளில் நீர் நிரம்பியது...

"மாமூ... இப்போ சந்தோசமா...? நான் உங்களை ரொம்பப் படுத்திட்டேன் இல்லையா...?"

"உண்மையில் இப்போ நான் ரொம்ப ரொம்பச் சந்தோசமா இருக்கேன்... இந்த உலகத்தில் சந்தோசமான மனிதன் யார்ன்னு கேட்டால் அது நான் தான்... அந்தளவுக்குச் சந்தோசம் எனக்கு... அதுவும் என்னைப் போல் ஒரு மகன் வந்து உன்னைப் படுத்தி எடுப்பதை நான் பார்க்க வேண்டும்..."

"அதுக்காக நான் காத்திருக்கிறேன் மாமூ..." என்று காதலாய் சொன்னவளை அணைத்து முத்தமிட்டு தனது சந்தோசத்தை வெளிப்படுத்தியவன்,

"எப்போ கன்பார்ம் பண்ணின...?"

"காலையில் ஹாஸ்பிட்டலில் வச்சு..." என்று அப்போது தான் சென்ற விவரத்தை கூற...

"ஓ... அதுக்குத் தான் எழுந்திருச்சு போனியா... அது தெரியாம நான் கேள்வி கேட்டுக் கிட்டு இருந்திருக்கிறேன்..."

"எனக்குக் கொஞ்ச நாளா சந்தேகமா தான் இருந்தது... உங்க கவலை பார்த்து தான் எதுக்கும் செக் பண்ணி பார்ப்போம்ன்னு பார்த்தேன்... நான் உங்களைப் படுத்தி எடுக்கலைன்னு தானே கவலைப்பட்டீங்க... இனி பாருங்க எப்படிப் படுத்தி எடுக்கிறேன்னு..."

"ஐம் வெய்ட்டிங் பேபி..." என்றான் முகம் கொள்ளா புன்னகையுடன்...

அலைப்பேசியில் பெற்றோருக்கு அழைத்து விசயத்தைக் கூறியவனின் முகத்தில் இருந்த மகிழ்ச்சியைப் பார்க்கும் போது அவளுக்கு இன்னமும் நிறையக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் போலிருந்தது... அதை அவனிடத்தில் மறையாது அவள் கூற... அவனோ விரிந்த புன்னகையுடன் அவளை அணைத்து கொண்டவன்,

"ஐம் வெய்ட்டிங் பேபி..." என்று வாய் விட்டு சிரித்தவன்,

"இந்தச் சந்தோசத்தைக் கொண்டாட வேண்டாமா...?" என்று மனைவியின் காதருகில் அவன் ரகசியம் பேச...

"ம்ஹூம் முடியாது..." என்று மறுத்தவள்,

"உங்களுக்கு என்ன நீங்க கம்பெனி முதலாளி... ஆனா நான் லீவு எடுத்தால் என் முதலாளிக்கு விளக்கம் கொடுக்கணுமே..."

"பேசாம வேலையை விட்டு விடேன் பேபி... இந்த மாதிரி நேரத்தில் நீ வேலைக்கு அவசியம் போய்த் தான் ஆகணுமா...?" அவளுக்கு இருந்த ஆபத்தைக் கருத்தில் கொண்டு அவன் கூற...

"ஆபத்து வர்றதா இருந்தால் எங்கே இருந்தாலும் வரும் மாமு... நீங்க பயப்பட வேண்டாம்..." கணவனது கூற்றைச் சரியாகப் புரிந்து கொண்டு அவள் பதிலளித்தாள்...

"பயப்படுறதை பத்தி நீ எனக்குச் சொல்லுகிறாயா...? உன்னை..." என்றவனது வார்த்தையில் இருந்த கோபம்

கொஞ்சமும் அவனது செயலில் இல்லை... அவன் அவளை அந்தளவிற்குக் கொஞ்சி கொஞ்சி மகிழ்ந்தான்...

அரை மணி நேரம் கழித்துப் பிரகதீஸ்வரி வேலைக்குக் கிளம்பி செல்ல சித்தார்த் மகளுடன் இருந்தான்... அவள் எழுந்ததும் அவளை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்குச் சென்றான்... அங்குச் சந்தியா, பானுமதி இருவரும் குழந்தையைப் பார்க்க வந்திருந்தனர்...

"அப்பா... எனக்கும் இப்படி ஒரு தம்பி பாப்பா வேணும்..." என்று மகள் ஆசையுடன் கேட்க...

"நமக்கும் தம்பி பாப்பா வர போகுது..." என்று அவன் பதிலளிக்க...

"ஐய்..." என்று துள்ளி குதித்தவளின் உற்சாகம் அங்கிருந்த எல்லோரையும் தொற்றிக் கொண்டது...

****

அதே போன்றதொரு 'ரியல் எஸ்டேட் அதிபர்களின் கூட்டம் கூடியிருந்தது... இந்த முறை கூடியதற்குக் காரணம் அன்று நடந்த விபத்திற்குக் காரணம் யார் என்று அலசி ஆராயத் தான்... ஏனெனில் அப்படித் திடீரென்று தீப்பற்றுவதற்கு வாய்ப்பில்லை என்று அவர்களுக்குச் சந்தேகமாக இருந்தது... எல்லோரும் ஏதேதோ காரணம் கூறிக் கொண்டிருந்த போது அந்தக் குரல் கம்பீரமாக ஒலித்தது...

"நான் தான் அதைச் செய்தேன்..." என்று...

யாரது என்று எல்லோரும் திரும்பி பார்க்க... அங்கே தனது பிரத்யேக வேக நடையுடன் வந்த சித்தார்த் அங்கிருந்த நாற்காலியில் கால் மேல் கால் போட்டுக் கொண்டு கம்பீரமாக அமர்ந்தான்...

"சித்தார்த் நீங்களா...?" எல்லோரது குரலும் ஒருசேர கோபத்துடன் ஒலித்தது...

"ஆம் நானே தான்... என் மனைவிக்கு மரணப் பயத்தைக் காட்டிய உங்களுக்கும் அதே மரணப் பயத்தைக் காட்ட நினைத்தேன்... அதை வெற்றிகரமாகச் செய்தும் முடித்து விட்டேன்... நான் நினைத்திருந்தால் உங்க எல்லோரையும் கூண்டோடு கைலாசத்துக்கு அனுப்பி வைத்திருக்க முடியும்... ஆனால் அது எனது நோக்கமல்ல என்பதை விட அப்படிச் செய்வது என் மனைவிக்குப் பிடிக்காது... அதனால் தான் தீயும் வைத்து விட்டு அதை அணைக்கத் தீயணைக்கும் வண்டிக்கும் அழைத்துச் சொன்னேன்... அவளால் தான் நீங்க எல்லோரும் இன்று உயிரோடு இருக்கீங்க... இல்லை என்றால் இந்நேரம்..." என்று மேலே நோக்கி கை காண்பித்தவன் பின்பு,

"என்னை அவ்வளவு லேசாக எண்ணி விடாதீங்க... இனியொரு தடவை இது போலானது அதுக்கு அப்புறம் நான் இது போல் பேசி கொண்டிருக்க மாட்டேன்... என்னோட செயல் பேசும்... என்னைப் பத்தி உங்களுக்கு எல்லாம் நல்லா தெரியும்... நான் எந்தளவுக்குப் பயங்கரமானவன் என்று... உங்களது உயிர் இனி உங்களது கைகளில்..."

அழுத்தம் திருத்தமாய்க் கூறியவன் அவர்களது பதிலை எதிர்பாராது அங்கிருந்து எழுந்து சென்று விட்டான்... அவனைத் தடுத்து நிறுத்தும் வகையறியாது எல்லோரும் வாயடைத்து போயிருந்தனர்... சித்தார்த்தை பற்றி அவர்களுக்கு நன்கு தெரியும்... அரசியல், காவல்துறை என்று எதற்கும் அஞ்சாதவன், அடங்காதவன்... அது போல் அவனது வழி என்றுமே தனி வழி... தொழிலும் அவன் சிம்ம சொப்பனம் தான்... அதனால் பயந்து போனவர்களாய் அவர்கள் தங்களது எண்ணத்தைக் கை விட்டனர்...

அன்றே அதை அவனிடம் அவர்கள் தெரிவிக்க... அவர்கள் அடங்கியதில் அவனும் சற்று அமைதியானான்... அவர்கள் அடைந்த நஷ்டத்திற்கு ஈடாக அவன் பணம் கொடுத்து அனுப்பி விட்டான்... நிச்சயம் அவன் இப்படிச் செய்வது அவர்களுக்குப் பயந்து அல்ல... மனைவியவளின் பாதுகாப்பிற்காகத் தான்...

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குழந்தைகள் இறந்தது தொடர்பாக அறிக்கை தயார் செய்த அந்தக் கடைநிலை ஊழியன் இறப்பிற்கான காரணத்தை அறிந்து திடுக்கிட்டவனாய் அதன் ஒரு பிரதியை எடுத்துச் சித்தார்த்திற்கு அனுப்பி வைத்தான்... அவன் வாங்கும் கையூட்டுப் பணத்திற்கு விசுவாசமாகவும் அவன் நடந்து கொண்டான்... அதே போல் ஆட்சியரின் செயலரிடமும் ஒரு பிரதியை கொடுத்தான்... வாங்கும் சம்பளத்திற்கும் விசுவாசமாக அவன் இருந்தான்...

பிரகதீஸ்வரி தனக்கு இருந்த வேலையில் அந்தக் கோப்பை வாங்கி வைத்தவள் அதைக் கவனிக்காது விட்டு விட்டாள்... ஆனால் சித்தார்த் அதை உடனே பார்த்து விட்டான்... அதிலிருந்த விசயங்கள் கண்டு அவன் அதிர்ந்து போனான்... இது எப்படிச் சாத்தியம் என்று அவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது...

ஏனெனில் இறந்து போன குழந்தைகள் எல்லாமே தடுப்பூசி போட்ட இரண்டு அல்லது மூன்று மாதங்களில் பயங்கரக் காய்ச்சல் வந்து இறந்திருக்கிறது... சாதாரணக் காய்ச்சல் என்று பெற்றோர் அதைக் கவனிக்காது விட்டதில் அது அதிகரித்து உயிரை காவு வாங்கியிருந்தது... ஆனால் இது எதுவும் தீர்மானமாய்ச் சொல்லப்படவில்லை... ஏனெனில் இது போல் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் இரத்தத்தைப் பரிசோதனை செய்து பார்த்தால் தான் என்ன விவரம் என்று தெரிய வரும்...

சித்தார்த் அடுத்து என்ன செய்வது என்று தெரியாது தலையில் கை வைத்துக் கொண்டு அமர்ந்து விட்டான்... அவனது வாழ்நாளில் இப்படி ஒரு பிரச்சினையை எதிர் கொண்டது இல்லை... இப்படி ஒரு சிக்கல் வரும் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை... அந்த இடரான நேரத்திலும் அவன் நிதானத்தைக் கைவிட வில்லை... நிதானமாய் யோசித்துப் பார்த்தான்...

மருந்து தயாரிப்பதில் எந்த முறைக்கேடும் நடப்பதாய் அவனுக்குத் தெரியவில்லை... அப்படி ஒரு தவறு நடந்தால்

அது அவனுக்குத் தெரியாமல் நடக்க வாய்ப்பில்லை... அப்படி என்றால் இந்தத் தவறு எங்கு இருந்து ஆரம்பித்திருக்கக் கூடும் என்று அவன் யோசிக்க ஆரம்பித்தான்... அந்தக் கணம் அவனது மனதில் நீலேஷின் முகம் மின்னி மறைந்தது... அவனது அவசரமான விலகல் ஏற்கெனவே இவனது மனதில் இருந்த சந்தேகத்தினை உறுதியாய் ஊர்ஜிதப்படுத்தியது... ஆனால் ஆதாரம் இல்லாது நீலேஷை நெருங்க முடியாது... அதை விட இவனும் ஆதாரம் இல்லாது இதில் இருந்து தப்ப முடியாது...

அடுத்து என்ன செய்வது என்று அவசரமாய் யோசிக்க ஆரம்பித்தான்... பிரச்சினையைக் கண்டு பயந்து ஓடுவது அவனை மாதிரியான தொழிலதிபனுக்கு அழகல்ல... அதற்கான தீர்வை நாடுவது தான் அவனுக்கு அழகு...

அதே நேரம் பிரகதீஸ்வரியும் அந்தக் கோப்பை எடுத்து படித்திருந்தாள்... அதைப் படிக்கப் படிக்க அவளது முகமும் யோசனையைத் தத்தெடுக்க ஆரம்பித்தது...

அன்றிரவே அவள் கணவன் முன் அந்தக் கோப்பை தூக்கி போட்டாள்...

"இதுக்கு என்ன அர்த்தம்...?" அவளது குரல் இறுகி போய் ஒலித்தது...

"நீ என்னைச் சந்தேகப்படுறியா பேபி...?"

"இது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது என்பது உங்களுக்கு நல்லாவே தெரியும்..." என்றவள் அவனை நிமிர்ந்து பார்த்து,

"இது உண்மை என்று நிரூபிக்கப்படும் பட்சத்தில் நான் எனது நடவடிக்கையைத் தைரியமாக எடுப்பேன்... இந்தக் கணவன் என்கிற உறவு எல்லாம் அப்போது செல்லுபடியாகாது..."

அதைக் கேட்டு அவனது முகத்தில் விரக்தி புன்னகை வந்தது...

"நிச்சயமாய்... ஆனால் அதற்கு அவசியம் இருக்காது என்றே நினைக்கிறேன்..." என்றான் அவன்... தவறு செய்யாததால் அவனது குரல் சற்று ஓங்கி ஒலித்தது... அதில் அவள் யோசனையாய் கணவனைப் பார்த்தாலும் ஒன்றும் பேசாது படுத்து விட்டாள்...

இருவரின் மனதிலும் சொல்லொண்ணா துயரம் மண்டியிருந்தது... அது இறந்து போன குழந்தைகளை நினைத்து என்றால் மிகையில்லை...

அதற்கு அடுத்து வந்த நாட்கள் அமைதியாகக் கழிந்தது... பிரகதீஸ்வரி அமைதியாக இருந்தாள்... பேச்சு என்பது மிகவும் குறைந்து விட்டது... சதா சர்வகாலமும் ஏதோ ஒரு சிந்தனையில் இருந்தாள்... அவனுக்கும் உள்ளுக்குள் பல யோசனைகள் ஓடி கொண்டிருந்தது தான்... ஆனால் அவளைப் போல் சுற்றுப்புறம் உறைக்காது இருக்கவில்லை...

“பேபி... என் மேல் கோபமா...? கோபம் இருந்தால் ரெண்டு அடி அடித்து விடு... அல்லது தவறுக்குத் தண்டனை கொடுத்து விடு... இப்படிப் பேசாது இருந்து தண்டிக்காதே...” என்று கெஞ்சியவனின் குரலில் அவனை நிமிர்ந்து பார்த்தவளின் நிமிர்வு மறு கணம் காணாது போனது...

கணவனை இறுக அணைத்துக் கொண்டு அவனது நெஞ்சில் முகம் புதைத்தவள் அடுத்த நொடி அவனை விட்டு விலகினாள்... அவன் அவளைத் தடுத்து நிறுத்தவில்லை என்றாலும் அவனது விழிகள் அப்பட்டமாய் மனதின் தவிப்பினை வெளிப்படுத்தியது...

அதில் மனமுருக அவனது கன்னத்தில் ஆறுதலாய் கை வைத்தவள், “எனக்குக் கொஞ்சம் யோசிக்க அவகாசம் கொடுங்க மாமு... இதற்கு ஒரு தீர்வு கிடைக்கும் வரை...” அவளது வார்த்தைகளில் அவனது முகம் கூம்பி போனது...

“நீங்க தவறு செய்யவில்லை என்றால் அதை விடச் சந்தோசம் எனக்கு வேறில்லை... அதே சமயம் உங்க மேல்

தவறு இருந்தால்...?" என்று கேள்வியாய் நிறுத்தியவளை கண்டு அவனது இதயம் மத்தளமாய்ச் சத்தமிட்டது...

மீண்டும் சரித்திரம் திரும்பப் போகிறதோ என்று அச்சம் கொண்டு...

"அப்படியே தவறு உங்க மேலிருந்தால் அடுத்தக் கணம் இந்த வேலையைத் தூக்கி போட்டுட்டு நான் உங்களுக்குத் துணையாக இருப்பேன்... ஆனால் எனக்காக நீங்க ஒண்ணே ஒண்ணு செய்யணும்..." என்று கெஞ்சும் குரலில் கேட்டவளை கண்டு அவனுக்குக் கண்கள் கலங்கியது...

அவன் மீது கொண்ட காதலுக்காகத் தனது கொள்கையை விட்டு கொடுக்கும் மனைவி மீது அவனது காதல் அதிகரித்தது... அதே சமயம் அவள் கேட்பது எதுவாக இருந்தாலும் அதைச் செய்து முடிக்க வேண்டும் என்று அவனது மனம் துடித்தது...

"எதுவாக இருந்தாலும் சொல்லு பேபி... என் கிட்ட என்ன தயக்கம்...?"

"இந்த முறை நீங்க செய்யும் தவறுக்குத் தண்டனையை ஏத்துக்கணும்..."

அதாவது அவன் சிறை செல்ல வேண்டும் என்று அவனது மனைவியவள் கூறுகிறாள்...

"நிச்சயமாய்ப் பேபி... உனக்காக நான் இதைச் செய்கிறேன்..." என்று உறுதியான குரலில் கூறியவன் தன் தலை மீது கை வைத்துச் சத்தியம் செய்யப் போகும் போது அவள் தடுத்தாள்...

"என் மீது..."

"அது மட்டும் என்னால் செய்ய முடியாது பேபி... எனக்கு நீ முக்கியம்... அதை விட இப்போது உன் வயிற்றில் வளரும் நம் மகன் மிக மிக முக்கியம்... ஒருவேளை நான் இல்லாது போனாலும் உனக்கு நம் மகன் துணை இருப்பான்..."

“மாமூ...” மனம் கலங்கியவளாய் அவனது வாய் மீது கை வைத்து தடுத்தவள் அடுத்த நொடி அவனை இறுக்கமாய் அணைத்து கொண்டாள்...

மனம் புரிந்த காதல் தடை தாண்டிட முனைந்தாலும், விடை அறியா புதிர்கள் தடை உடைக்க முனையவில்லை...

அன்றிரவே ஜெகதீஸ்வரிக்குப் பயங்கரக் காய்ச்சல் கொதித்தது... அதில் இருவருமே சற்று ஆடி தான் போயினர்... சித்தார்த் மகளைத் தூக்கி கொண்டு தனியார் மருத்துவமனை செல்ல முயன்ற போது அவள் அதைத் தடுத்தாள்...

"எல்லாக் குழந்தைகள் மாதிரி தான் நம் குழந்தையும்... அரசாங்க மருத்துவமனையில் தான் காண்பிக்க வேண்டும்..." என்று கூற...

அவளது வார்த்தையில் இருந்த நேர்மை அவனது கணவன் அறிவுக்கு எட்டினாலும் அவனது தந்தை மனதிற்கு அது எட்டவில்லை...

"என் மகளை எங்கே, யார் கிட்ட காட்டணும்ன்னு எனக்குத் தெரியும்... நீ உன் வாயை மூடிக்கிட்டு தள்ளி போ..." என்று அவளைப் பார்த்து கத்தியவன் மகளைக் கைகளில் ஏந்தி கொண்டு காரை நோக்கி ஓடினான்...

கணவனது கோபத்தில் அவள் விக்கித்துப் போய் ஒரு நொடி நின்றாலும் பின் சுதாரித்துக் கொண்டு அவனது பின்னே ஓடினாள்... அவள் காரிலேறியதும் அவன் புயல் போன்று காரை வேகமாகக் கிளப்பிக் கொண்டு சென்றான்... அசுர வேகத்தில் கார் மருத்துவமனையைச் சென்றடைந்தது...

மகளை மருத்துவமனையில் சேர்த்தவன் அங்கிருந்த வராண்டாவில் பதட்டத்துடன் அங்குமிங்கும் நடந்தான்... மகளின் காய்ச்சல் அவளுள்ளும் பலவித பதற்றத்தை ஏற்படுத்தி இருந்தது... ஆனாலும் கணவனிடத்தில் கேள்வி கேட்காமல் இருக்க முடியவில்லை...

"உங்க மகள் உயிர் மட்டும் உங்களுக்கு முக்கியம் அப்படித் தானே...? அப்போ இதுவரை பலியான குழந்தைகளின் உயிருக்கு நீங்க என்ன பதில் சொல்ல போறீங்க...?"

அவள் கூறியது எதுவும் அவனது காதில் விழவில்லை... 'உங்க மகள் உயிர் மட்டும் உங்களுக்கு முக்கியம் அப்படித் தானே...?' என்ற வார்த்தைகள் மட்டுமே அவனது காதுகளில் விழுந்தது...

"ஆமாம்டி... எனக்கு என் மகளின் உயிர் மட்டுமே முக்கியம்... அவள் என் உயிர்... இல்லை இல்லை அதுக்கும் மேல்..." என்றவன் நிற்க தெம்பின்றி அங்கிருந்த நாற்காலியில் ஓய்ந்து போய் அமர்ந்தான்...

அவன் கண் முன்னே கடந்த காலம் கடந்து சென்றது... நினைக்கப் பிடிக்காதவனாய் அவன் கண்களை இறுக மூடி கொண்ட போதும் 'விடுவேனா' என்பது போல் கடந்த காலம் மனதில் காட்சியாய் விரிந்தது...

"கனவும் நனவும் நிலைக்காது
போவது என் சாபமோ...
நான் வாங்கி வந்த வரமோ...
கனவே கலையாது நனவாய்
என் கை சேர வா...
காத்திருப்பேனடி கண்ணம்மா...
என் உயிரை கையில் பிடித்தபடி...
தேவையிருப்பின் என்னுயிர் நீத்து
உன்னுயிர் காப்பேனடி கண்ணம்மா...!!!"

நனவாகும்...!!!

"சித்து... ஓடாதே... நில்லு..."

பாட்டி தெய்வநாயகியின் குரலுக்கு எல்லாம் அஞ்சாது இரண்டு வயது சித்தார்த் அங்குமிங்கும் ஓடி போக்கு காட்டியவன் இறுதியில் பெரிதாகப் போடப்பட்டு இருந்த உணவு மேசையின் கீழே சென்று நடுவில் அமர்ந்து கொண்டு வெளியில் வர மறுத்தான்...

"அடேய்... இப்போ நீ ஒழுங்கா வெளியில் வர போறியா இல்லையா...?"

தன் வயதை மறந்து கீழே குனிந்து பேரனை பார்த்து கத்தியவர் பின் எழுந்து நின்று இடுப்பை பிடித்தபடி,

"ஷ்... ஷப்பா... இப்படிப் படுத்துகிறானே... ஸ்வர்ணாவும் தான் இருக்கா... உன்னை மாதிரியாடா படுத்துகிறாள்... சொன்ன பேச்சு கேட்டு சமத்தா இருக்கிறாள்... இந்தத் தடவை உன் அப்பன் வரட்டும்... உன்னைய கையோடு கூட்டிட்டுப் போகச் சொல்றேன்... உன்னை வச்சு மேய்க்க என்னால் முடியாது..." என்று வாய் விட்டு புலம்பினார்...

மகன் மார்த்தாண்டமும், மருமகள் பிரபாவதியும் தொழில் நிமித்தம் பொருட்டு ஒவ்வொரு ஊராக, நாடாகச் சுற்றுவதால் வீடு மற்றும் பிள்ளைகள் பொறுப்பை அவரது அன்னை தெய்வநாயகியிடம் ஒப்படைத்து இருந்தனர்... சமத்து பெண்ணான பேத்தி ஸ்வர்ணாவை சமாளித்தவரால், சுட்டி பையனான பேரன் சித்தார்த்தை சமாளிக்க முடியவில்லை...

"அம்மா..." அந்நேரம் வாயிலில் இருந்து ஒரு குரல் ஒலித்தது...

தெய்வநாயகி அங்குச் சென்று பார்த்த போது அவருடைய கிராமத்துப் பண்ணையில் வேலை செய்யும் மாரியும், அவரது கையைப் பிடித்தபடி எட்டு வயது சிறுமி ஒருத்தியும் நின்றிருந்தனர்...

"யாரு மாரி இது...?" தான் அணிந்திருந்த கண்ணாடியை தூக்கி பிடித்தபடி அந்தச் சிறுமியை கழுகு பார்வை கொண்டு ஆராய்ந்தவாறு கேட்டார் தெய்வநாயகி...

"நம்ம தங்கவேலு ஐயா மவங்கம்மா..."

ஒரு காலத்தில் இவர்களைப் போன்று ஓஹோ என்று வாழ்ந்தவர்கள் இப்போது எல்லாம் இழந்து ஒரு வேளை உணவிற்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தனர்... அத்தகைய வறிய நிலையில் இருந்தது அந்தக் குடும்பம்...

"ஓ... அப்படியா...?" என்றவர் இன்னமும் தனது ஆராய்ச்சியை விடவில்லை...

"இதுக்குத் துணையா இருந்த ஐயா செத்து போய் ஒரு மாசமாகுது... இப்போ தாய்மாமன் பொஞ்சாதி கிட்ட ரொம்பக் கஷ்டப்பட்டுக்கிட்டு இருந்தது... நீங்க வீட்டு வேலைக்கு ஆள் வேணும்ன்னு கேட்டதும் உடனே இங்கே கூட்டிட்டு வந்துட்டேன்..."

"ஏய்... உனக்கு வீட்டு வேலை செஞ்சு பழக்கம் இருக்கா...?"

அதிகாரமாய்க் கேட்ட தெய்வநாயகியை கண்டு அந்தச் சிறுமி பயந்தாள்... பட்டு புடவை உடுத்தி, வைரங்கள் அணிந்து கண்டிப்புமாய், கறாரும் இருந்த அவரைக் கண்டு சிறுமிக்கு இயல்பாகவே ஒரு பயம் வந்தது...

"ம்..." என்று பயத்துடன் தலையாட்டினாள்...

"உன் பெயர் என்ன...?"

"ஜெகதா..." என்று மெல்லிய குரலில் கூறினாள் அவள்...

"ஜெகதீஸ்வரிங்கம்மா..." என்றான் மாரி...

"சரி... விட்டுட்டு போ மாரி... நான் பார்த்துக்கிறேன்..."

"உங்களை நம்பி தான்ம்மா விட்டுட்டு போறேன்... தாய், தகப்பன் இல்லாத அநாதைம்மா... பத்திரமா

பார்த்துக்கோங்க..." என்றவன் கை கூப்பி நன்றி தெரிவித்து விட்டு ஊருக்கு சென்று விட்டான்...

பணக்கார களையுடன் பந்தாவாக இருந்த அந்தப் பங்களா ஜெகதீஸ்வரிக்கு சற்றுப் பயத்தைக் கொடுத்தது... மலங்க மலங்க விழித்தபடி நின்றிருந்தாள்...

"என் கூட வா..." அவர் அழைக்கவும் நாய்க்குட்டி போல் அவரின் பின்னே சென்றாள் அவள்...

"அங்கே மேசை கீழே இருக்கான் பாரு என் பேரன்... அவனுக்கு இந்தச் சாதத்தை ஊட்டு... இன்னையில் இருந்து நீ தான் அவனைப் பார்த்துக்கணும்... அவனைப் பார்த்துக்கிறது மட்டும் தான் உன் வேலை..." என்று கூறிவிட்டு அவர் சென்று விட்டார்...

அவர் சென்றதும் சின்னவள் கீழே குனிந்து பார்த்தாள்... கொழு கொழுவென்று திராட்சை கண்களை உருட்டியபடி மாயக் கண்ணனாய் அமர்ந்திருந்த சித்தார்த்தை அவளுக்குப் பார்த்தவுடன் பிடித்துப் போயிற்று...

"உன் பெயர் என்ன...?"

தன்னைப் பார்த்து புன்னகையுடன் கேட்டவளை சித்தார்த் கூர்ந்து பார்த்தான்... அவளின் புன்னகை முகம் அவனுள் நேசத்தை விதைத்ததோ என்னவோ உடனே பதில் கூறினான்...

"சித்து..."

"இங்கே வந்து ஏன் ஒளிஞ்சிருக்க...?"

"வெளியில் வந்தா பப்பு புவ்வா ஊட்டுவாங்க... உவ்வே..." என்று முகத்தைச் சுளித்தான் சிறுவன்...

"அதெல்லாம் ஊட்ட மாட்டாங்க... நீ வெளியில் வா..." அவளது வார்த்தைகளை நம்பி அவன் வெளியில் வந்தான்...

"ஐயோ சமத்து சித்து..." என்று சின்னவனைப் பாராட்டியவள் அவனை அணைத்து அவனது குண்டு கன்னத்தில் முத்தமிட்டாள்...

அன்று முதல் அந்த எட்டு வயது சிறுமி இரண்டு வயது சித்தார்த்திற்குத் தாயானாள்... அந்தக் கணம் இருவருக்குமான உறவு பாலம் பலமாய்ப் போடப்பட்டது அந்த ஆண்டவனால்...

"உன் பெயர் என்ன...?"

"ஜெகதீஸ்வரி... ஆனா ஜெகதான்னு கூப்பிடுவாங்க..."

"ஜீக... ஈசு... ரி..." என்று அவளது நீளமான பெயரை சொல்ல தெரியாது அவன் குழம்பி போனான்...

"உனக்கு எப்படி விருப்பமோ அப்படிக் கூப்பிடு..."

சின்னவன் தாடையில் கை வைத்து வெகுநேரம் யோசித்துப் பின் முடிவு செய்தவனாய்,

"ஜிக்கி..." என்றான் முகம் மலர...

"சரி அப்படியே கூப்பிடு..." என்றாள் அவளும் மலர்ச்சியுடன்...

"ஜிக்கி, வா போகலாம்..." சித்து அவளது கரத்தினைப் பிடித்து இழுத்தான்...

"எங்கே...?"

"கார்டனுக்கு..." அவன் கூறிய ஆங்கில வார்த்தைக்கு அர்த்தம் அவளுக்குப் புரியவில்லை...

"கார்டனா...? அது எங்கே இருக்கு...?"

"அதோ அங்கே..." அவன் தோட்டத்தைச் சுட்டி காட்ட...

"ஓ... தோட்டத்துக்கா..."

"ம்... வா போகலாம்... பாட்டி வந்தா திட்டும்..." என்று அவன் அவசரமாய் அவளை அழைக்க...

"சரி..." என்று அவனுடன் சென்றவள் மறக்காது உணவு கிண்ணத்தையும் கைகளில் எடுத்து கொண்டாள்...

தோட்டம் வந்த பின்னரே சித்தார்த் அவளது கைகளில் இருந்த உணவு கிண்ணத்தைக் கண்டான்... அடுத்த நொடி தோட்டமே அதிரும்படி வீறிட்டான்...

"நோ பப்பு புவ்வா..."

"இது உனக்கு இல்லை சித்து... எனக்கு..." என்று சமாதானம் செய்தவளை கண்டு நிம்மதி அடைந்தவனாய் அவன் அங்கு இருந்த பட்டாம்பூச்சி பின் துரத்தி செல்ல... அவள் அவன் பின்னேயே சென்று அவனையும் அறியாது உணவினை ஊட்டி முடித்தாள்...

அவனின் குறும்புத்தனத்திற்கு அவள் ஈடு கொடுத்து விளையாடினாள்... அவனுடனே இருந்து அவனைப் பத்திரமாகப் பார்த்து கொண்டாள்... தாய்மாமன் குழந்தைகளைக் கவனித்த பழக்கம் இப்போது அவளுக்குக் கை கொடுத்தது...

மதிய உணவு உண்ண அமர்ந்தவளுக்கு மீதமிருந்த பழைய சோறை கொடுத்த போது அவள் அதை அமிர்தமாக எண்ணி உண்ண துவங்கினாள்... பல நாட்களாகப் பட்டினி கிடந்தவளுக்குப் பழைய சோறு கூடப் பொக்கிசமாகத் தான் தெரிந்தது...

முதலில் தெரியாத இடம் என்று பயத்துடன் வந்தவள் இப்போது சற்றுப் பயம் தெளிந்தாள்... அன்றிரவு சித்தார்த்தை உறங்க வைத்தவள் தன்னையும் அறியாது களைப்பில் மெத்தையில் படுத்து உறங்கி விட்டாள்... திடுமென அவளது முதுகில் யாரோ எட்டி உதைத்தில் அவள் கீழே போய் விழுந்தாள்... விழுந்ததில் அடிப்பட்டு வலித்ததில் அழுது கொண்டே எழுந்து நின்றவள் அங்கு ஆக்ரோசமாய் நின்று கொண்டிருந்த தெய்வநாயகியை கண்டு பயத்துடன் விழித்தாள்...

"வேலைக்கார நாயி... உனக்கு மெத்தை கேட்குதோ..." என்று அவளை வார்த்தையால் சாடியவர் தன் கையிலிருந்த பழைய பாயை கீழே வீசியெறிந்து,

"இதை விரிச்சு கீழே படுத்துக்கோ... என் பேரனை பார்க்க தான் வந்திருக்க... அவனை மாதிரி சொகுசா வாழ இல்லை... அநாதை கழுதைக்கு ஆசையைப் பார்..."

மேலும் பல வார்த்தைகளால் அந்தச் சின்ன இதயத்தைச் சுக்கு நூறாகக் கிழித்து விட்டு அங்கிருந்து அகன்றார்... ஜெகதீஸ்வரி அழுது கொண்டே கீழே பாய் விரித்துப் படுத்தாள்... தன்னைத் தனியே தவிக்க விட்டு சென்ற பெற்றோரை நினைத்து வெகு நேரம் அழுதவள் ஆறுதல் சொல்வாரற்று விசும்பியபடி அப்படியே உறங்கி விட்டாள்...

மறுநாள் அதிகாலை பொழுதில் அவளை எழுப்பி விட்டார் தெய்வநாயகி... வாசலை தெளித்துக் கோலம் போட்டு ஆரம்பித்தது அவளது அன்றைய வேலை... அதன் பின் வீட்டு வேலைகள் சிறிது செய்தவள் சித்தார்த் எழுந்ததும் அவளது முழு நேர வேலை அவனைக் கவனிப்பது மட்டுமே என்றாகி போனது... அந்தளவிற்கு அவன் சுட்டியாய் இருந்தான்...

அது போல் அவளது அத்தனை துன்பத்தையும் சித்தார்த் தனது அன்பான செயலால் துடைத்து எறிந்தான்... அவன் உண்ணும் போது அவளுக்கும் உண்ண கொடுப்பான்... தன்னிடம் இருக்கும் விளையாட்டுப் பொருட்களை அவளிடம் கொடுத்து விளையாட சொல்வான்...

என்ன தான் பெரிய மனுசி போல் சின்னவனைக் கவனித்துக் கொண்டாலும் அவளும் மனதளவில் சின்னவள் தானே... அதனால் சந்தோசமாய் அவனுடன் சேர்ந்து விளையாடுவாள்... தனது சகோதரிக்கு கூட எதுவும் பகிர்ந்து கொடுக்காதவன் அவளிடம் எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்டான்... இப்போது எல்லாம் சித்தார்த்தின் உலகம் வண்ணமயமாய் மாறிப் போனது அவனது தேவதை வரவால்... அவனது பிடிவாதம் கூடச் சிறிது தளர்ந்திருந்தது...

அன்று பிரபாவதி ஊரில் இருந்து வந்திருந்தார்... வந்தவுடன் அவர் முதலில் மகனை தான் தேடினார்...

"ஜெகதா கூட இருப்பான் போய்ப் பாரு..."

மாமியார் கூறியதை கேட்டு ஆச்சிரியமானவராய், "ஜெகதா யார்...?"

"சித்துவை என்னால் பார்த்துக்க முடியலை... அதான் ஊரில் இருந்து வேலையாளை வரவழைச்சேன்... அவள் தான் இந்த ஜெகதா..."

மாமியார் கூறியதும் அவர் தனது மகனை தேடி சென்றார்... சமையலறையில் ஜெகதீஸ்வரியுடன் கீழே அமர்ந்து சமத்தாய் விளையாடி கொண்டிருந்தான் சித்தார்த்... அவள் அவன் அருகே அமர்ந்து காய்கறிகள் வெட்டி கொண்டிருந்தாள்...

"சித்து..." என்று அவர் அழைத்ததும் திரும்பி பார்த்தவன்,

"அம்மா..." என்று முகம் மலர்ந்தவனாய் உடனே எழுந்து சென்று அவரைக் கட்டி அணைத்துக் கொண்டான்...

அவர் அவனைத் தூக்கி கொஞ்சியவர், "நீ தான் ஜெகதாவாம்மா...?" என்று அவளைப் பார்த்து கேட்க...

"ஆமாம்மா..." எழுந்து நின்று பணிவாகக் கூறிய அந்தச் சிறு பெண்ணைப் பிரபாவதிக்கு மிகவும் பிடித்துப் போனது...

"சித்து... அப்பாவை பார்க்க போகலாமா...?" என்று மகனை தன்னுடன் அழைத்துச் செல்ல பிரபாவதி முயன்ற போது அவன் அவரது பிடியில் இருந்து திமிறிக் கொண்டு கீழே இறங்கியவன்,

"நான் ஜிக்கி கூட விளையாட போறேன்..." என்றுரைத்து விட்டு தனது விளையாட்டில் கவனமானான்...

"சித்து... அப்பா உனக்காக நிறையச் சாக்லேட் வாங்கிட்டு வந்திருக்காங்க..."

'சாக்லேட்' என்றதும் சிறுவனின் வாயில் எச்சில் ஊறியது... அப்போதும் அவன் ஜெகதீஸ்வரியின் சம்மதம் வேண்டி அவளைப் பார்த்தான்...

"நீ போய் அப்பாவை பார்த்து விட்டு வா சித்து... நீ வர்ற வரைக்கும் நான் இங்கே தான் இருப்பேன்..." என்று கூறி சமாதானம் செய்து அவனை அனுப்பி வைத்தாள் சின்னவள்...

போன சிறிது நேரத்தில் திரும்பி வந்தவன் அங்கு ஜெகதீஸ்வரியை காணாது முகத்தை அழுவது போல் வைத்து கொண்டவன் சமையல் வேலை செய்யும் பெண்மணியிடம்,

"ஜிக்கி எங்கே...?" விட்டால் அழுது விடுவான் போலும்... கண்களில் கண்ணீர் துருத்தி கொண்டிருந்தது...

"பாட்டிம்மா செடிக்கு தண்ணி ஊத்த சொன்னாங்க... தோட்டத்தில் இருப்பாள்..." என்று கூற...

அடுத்த நொடி அவன் சிட்டாகத் தோட்டத்திற்கு ஓடினான்... அங்குச் செடிகளுக்கு நீர் பாய்ச்சி கொண்டிருந்த ஜெகதீஸ்வரியின் முதுகில் பட்டென்று ஒரு அடி வைத்தான்... அதில் திரும்பி பார்த்தவள் முகம் மலர்ந்தது...

"சித்து அதுக்குள்ள அப்பாவை பார்த்துட்டு வந்துட்டானா...?" என்றவள் தண்ணீர் குழாயை மூடி விட்டு திரும்புவதற்குள் அவன் பட்பட் என்று நாலைந்து அடி அவளை அடித்து விட்டான்...

அவளோ கோபம் கொள்ளாது அவன் முன் மண்டியிட்டு அமர்ந்தவள் அவன் கன்னத்தை வாஞ்சையுடன் தடவியபடி,

"சித்துவுக்கு என் மேல் என்ன கோபம்...?" என்று புன்னகையுடன் கேட்க...

அடுத்த நொடி அவன் அவளை அணைத்துக் கொண்டான்...

"என்னை விட்டு போவியா...? போவியா...?"

இதையே அவன் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தான்...

"நான் சித்துவை விட்டு எங்கேயும் போக மாட்டேன்... நான் இந்த வீட்டை சுத்தி தான் எங்கேயாவது இருப்பேன்... நீ ஜிக்கின்னு ஒரு குரல் கொடுத்தா போதும் நான் உன் கிட்ட ஓடி வந்திருவேன்..."

"உண்மையா...?"

"சத்தியமா..."

தனது சத்தியத்தை அவள் காப்பாற்றாது போனதால் தானோ அவளது உயிர் அவளை விட்டு பிரிந்து போனதோ... அதனால் தான் இன்றும் சித்தார்த் மனைவியவளை அவள் மீது சத்தியம் வைக்க விட மாட்டான்... அதற்கு அவன் தன் மீதே சத்தியம் செய்து கொள்வான்... அவன் எங்கே இருந்தாலும் அவனது உயிர் அவளைத் தான் சுற்றும்... எந்தக் காரணம் கொண்டும் அவன் ஒரு போதும் தன் மனைவியை விட்டு பிரிய மாட்டான்...

"ம்... சரி... சரி..." என்றவனின் அழுத விழிகளைத் துடைத்தவாறு,

"என்னை எதுக்குத் தேடின சித்து...?"

அவள் கேட்கவும் அவன் தனது கால் சட்டை பையில் இருந்து சாக்லேட்டை எடுத்து நீட்டினான்...

"இந்தா சாப்பிடு..."

"வேணாம்... பாட்டிம்மா திட்டுவாங்க..." என்றவளது கண்கள் சுற்றும் முற்றும் பயத்துடன் பார்த்தது...

"திட்டினா நான் அடிச்சிருவேன்..." என்று வீராதிவீரனை போன்று நிமிர்வாய் கூறியவனைக் கண்டு சிரிப்பு வந்தது அவளுக்கு...

சித்தார்த் சாக்லேட்டை சுற்றியிருந்த காகிதத்தைக் கழட்டி விட்டுச் சாக்லேட்டை மட்டும் எடுத்து,

"ஆ காட்டு..." என்று ஜெகதீஸ்வரியிடம் கூறியவன் அவள் வாய்த் திறந்ததும் சாக்லேட்டை வாய்க்குள் திணித்தான்...

"துப்பாம சாப்பிடணும்..." என்று மிரட்ட வேறு செய்தான்...

"அடேய் சித்துப் பையா... நீ என்னையவே மிரட்டுறியா...?" என்று அவள் அவனுக்குக் கிச்சு கிச்சு காண்பிக்க அதில் அவன் கலகலவெனச் சிரிக்க... அவளும் அவனுடன் சேர்ந்து சிரித்தாள்...

அநாதை சிறுமிக்கும், எல்லாம் இருந்தும் ஆதரவற்று போன பணக்கார சிறுவனுக்கும் இடையில் அழகிய உறவு மலர்ந்தது... பாசம், அன்பு, நேசம், காதல், நட்பு, தாய்மை என்று குறிப்பிட்ட வார்த்தைகளில் அடக்கி விடும் உறவல்ல அந்த உறவு... இது எல்லாவற்றிற்கும் மேலானது... அப்படிப்பட்ட உறவுக்கு ஒரு பெயர் இருக்குமானால் அது தான் அவர்களது உறவாக இருக்க முடியும்...

அன்றும் எப்போதும் போல் ஜெகதீஸ்வரி உண்ணும் போது வந்து விட்டான் சித்தார்த்... அவள் உண்ணும் பழைய சாதத்தை உண்ணுவது என்றால் அவனுக்கு அத்தனை பிடித்தம்...

"ஆ கொடு..." என்று கேட்டபடி அவள் அருகில் அவன் உட்கார்ந்து கொண்டான்...

"சித்து... இது ரொம்பச் சாப்பிட கூடாது... சளி பிடிச்சிக்கும்..." என்று கூறியபடி அவள் அவனுக்கு ஒரு வாய் ஊட்டினாள்...

"நீ மட்டும் சாப்பிடற..."

"நான் உன்னை விடப் பெரிய பொண்ணு..." என்றாள் எட்டு வயது சிறுமி பெரிய மனுசி போல்...

தன்னை விட உயரமாக இருக்கும் அவளைக் கண்டு அவன் உண்மை என்று நம்பி சரியென்று தலையாட்டினான்...

அந்நேரம் அங்கு வந்த தெய்வநாயகி இதைப் பார்த்து விட்டார்... சின்னவள் பயத்துடன் எழுந்து நிற்க,

சித்தார்த்தோ அங்கிருந்த கரண்டியை கையில் எடுத்துக் கொண்டு தைரியமாகப் பாட்டியை எதிர் கொண்டான்...

"ஜிக்கியை திட்டினீங்க... அடிச்சிருவேன்..." என்று அவன் அவரைக் கோபத்துடன் முறைத்தான்...

"அடேங்கப்பா... வாண்டு பையலுக்கு என்னமா கோபம் வருது..." என்று சிரித்தபடி அவன் கையிலிருந்த கரண்டியை பிடுங்கி அவனைச் செல்லமாய் அடித்தவர் பின் சின்னவளிடம்,

"நாளைக்கு என் மகள் ஊரில் இருந்து வருகிறாள்... அவளோட அறையைச் சுத்தம் பண்ணி வச்சிரு..." என்றுரைத்தவர் சமையல்க்கார பெண்மணியிடம் நாளைய விருந்து பற்றிப் பேச ஆரம்பித்தார்...

மறுநாள் ஜெய்சிம்மன், விமலாராணி இருவரும் அங்கு வருகை தந்தனர்... வீட்டிற்கு வந்த மகளையும், மருமகனையும் பலமாய் வரவேற்றார் தெய்வநாயகி... இதற்காகவே அவர் மகனையும், மருமகளையும் எங்கேயும் போக விடாது இங்கேயே இருக்கச் செய்து விட்டார்...

"எப்படியிருக்க விமலா...?"

அன்னையும், சகோதரனும் கேட்டதும் தான் தாமதம் விமலாராணி ஓவென்று ஒப்பாரி வைத்து விட்டார்...

"இவர் ரொம்ப நல்லவர் தான்... ஆனா இவரோட அண்ணன் சரியில்லை... எல்லாச் சொத்துக்களையும் தானே வச்சக்கணும்ன்னு நினைக்கிறார்... கல்யாணமாகாத அவருக்கு எதுக்கு இத்தனை ஆசை...? இன்னும் ஊருக்குள்ள அவருக்குத் தான் மதிப்பு இருக்கு... இவருக்கு இல்லை... எல்லாம் அவர் பண்ற சதி தான் காரணம்... பாவம் இவர் பச்சை மண்... அண்ணன் ஏமாத்துறது கூடத் தெரியாது அவரை முழுசா நம்புகிறார்... நீங்க தான் இவருக்கு எடுத்து சொல்லணும்... என்ன தான் அண்ணனா இருந்தாலும் வாயும், வயிறும் வேறு வேறு இல்லையா...?"

மனைவி தனது சகோதரனை பற்றி அவதூறு சொல்வது கேட்டும் ஜெய்சிம்மன் அமைதி காத்தார்... ஏனெனில் சகோதரனை வில்லனாக்கி தன்னை நாயகனாக மனைவியிடத்திலும், அவளது தாய் வீட்டிலும் காட்டி கொள்ள நினைத்தார்...

நாத்தனார் வைத்த ஒப்பாரி கண்டு பிரபாவதி முகத்தைச் சுளித்தார்... விமலாராணி இங்கே வரும் போது எல்லாம் இப்படி அழுது புலம்பி அம்மா வீட்டில் இருந்து எதையாவது சுருட்டி கொண்டு போவது வழக்கம்... அது வெறும் பணமாகவோ, நகையாகவோ இருக்காது... அது பெரும் மதிப்பு வாய்ந்த நிலமாகவோ, வீடாகவோ இருக்கும்... எது தேவையோ அதைக் கேட்டு வாங்க வேண்டும்... இப்படி அடுத்தவரை பற்றி அவதூறு பேசி வாங்கிக் கொண்டு போவது பிரபாவதிக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை...

இதைப் பற்றி ஏற்கெனவே கணவனிடம் ஜாடைமாடையாகச் சொல்லி இருக்கிறார்... அவரோ மனைவியை நம்பாது தங்கையை நம்பினார்... அதனால் பிரபாவதியை அடக்கி விட்டார்...

"உனக்குச் செய்ய வேண்டியதை நான் செய்கிறேன்... வீணே என் தங்கையைப் பார்த்துப் பொறாமை படாதே..." அதற்கு மேல் பிரபாவதியும் பேசாது வாய் மூடி கொண்டார்...

"கொஞ்சம் பொறுமையாயிரு விமலா... நாளைக்குச் சொத்து பிரிக்கும் போது உங்களுக்குப் பங்கு வரலைன்னா என்னன்னு கேட்போம்... இப்போதைக்கு அவர் தனிக்கட்டை... நாளைக்கே அவர் இறந்து போனாலும் உங்களுக்குத் தான் அத்தனை சொத்துக்களும் வந்து சேரும்... அதனால் இப்பவே சண்டை போட்டு விசயத்தைப் பெரிசாக்கிறது வீண் வேலை..."

தாயும், மகனும் விமலாராணியைச் சமாதான படுத்தினார்கள்... அந்நேரம் ஜெகதீஸ்வரி எல்லோருக்கும் பழச்சாறு எடுத்துக் கொண்டு வந்தாள்... முதலில் ஜெய்சிம்மனிடம் கொடுக்க நினைத்து அவர் அருகில் அவள் சென்ற நேரம் பார்த்து அவர் எழுந்தார்... எழுந்தவர்

கை பட்டு சின்னவள் கையில் இருந்த தட்டு கீழே நழுவி விழ அதிலிருந்த பழச்சாறு ஜெய்சிம்மனின் உடையைக் கறையாக்கியது...

அவ்வளவு தான் அவர் கோபத்தில் சின்னவள் கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டார்... அந்தளவிற்கு மூர்க்கத்தனமாய் அவருக்குக் கோபம் வந்தது... மார்த்தாண்டம், பிரபாவதிக்கு அவரது செய்கை பிடிக்கவில்லை... ஆனால் வீட்டு மாப்பிள்ளையிடம் பேச பயந்து அமைதியாகி விட்டனர்...

"ஒழுங்கா ஒரு வேலை செய்யத் துப்பில்லை..." என்று தெய்வநாயகி சின்னவளை திட்ட அவள் கண்ணீர் மல்க நின்றிருந்தாள்... அவமானத்தில் அந்தப் பிஞ்சு உள்ளம் துடி துடித்துப் போனது...

"என்ன மசமசன்னு நின்னுக்கிட்டு இருக்க... போ போய்த் துணியை எடுத்துட்டு வந்து இதைச் சுத்தம் பண்ணு..." என்று விமலாராணியும் அவளை அதட்டினார்...

சின்னவள் பயத்தில் ஓடி சென்று துணி எடுத்து வந்து தான் சிந்திய பழச்சாற்றைத் துடைத்தாள்... ஏழையின் சொல் அம்பலத்தில் ஏறாது... அது போல் ஏழை சிறுமிக்கான நியாயம் அப்போதே அந்தப் பணக்கார வீட்டில் கிடைக்கவில்லை...

****

"அம்மா..." சமையல்க்கார அம்மாள் தெய்வநாயகி முன் தயங்கி நின்றார்...

"என்ன சொல்...?"

"ஜெகதா பெரிய பெண்ணாகிட்டாள்..." என்று அவர் சந்தோசத்துடன் கூற...

"அதுக்குப் பத்திரிக்கை அடிச்சு, பந்தல் போட்டு, ஊரை கூட்டி விருந்து வைக்கணுமா...? மூணாவது நாள் தலைக்குத் தண்ணி ஊத்திட்டு வேலைக்கு வர சொல்..." சிறிதும் இரக்கமின்றிக் கூறி விட்டு அவர் சென்று விட்டார்...

அந்தப் பெண்மணிக்கு பெரியவர் அப்படிக் கூறியது கஷ்டமாக இருந்தது... வேறுவழியின்றித் தன்னிடம் இருந்த புதுச் சேலையைக் கிழித்துத் தாவணியாக்கி சின்னவளுக்கு உடுத்தி விட்டார்... அவளது நீண்ட தலைமுடியை சடை பின்னி பூ வைத்து அழகு பார்த்தார்... தாயில்லாத அந்தச் சிறு பெண்ணிற்கு அவர் தாயானார்...

அந்தச் சாதாரணப் பருத்தி தாவணியிலும் ஜெகதீஸ்வரி துலக்கி வைத்த குத்து விளக்கு போல் சுடர் விட்டு பிரகாசித்தாள்... அத்தனை அழகாக அவள் இருந்தாள்... ஒல்லியான உடல்வாகு உடையவள் தான் என்றாலும் அவளது உயரம் அவளைப் பெரிய பெண்ணாகக் காட்டியது... வாழ்க்கையில் ஏற்பட்ட அடி, அதைப் பக்குவமாக அவள் கையாளும் விதம், மன முதிர்ச்சி எல்லாம் சேர்த்து அவளை இந்தப் பதினான்கு வயதில் ஒரு இளம் பெண்ணாகவே காட்டியது... அவளுக்குப் பதினைந்து வயது பிறக்க இன்னும் சில மாதங்களே இருந்தது...

மாலை பள்ளி விட்டு வந்த எட்டு வயது சித்தார்த் முதல் வேலையாக அவளைத் தேடி அங்கு வந்தான்... அவள் தாவணி போட்டு இருப்பது கண்டு ஆச்சிரியமுற்றவனாய்,

"இது என்ன புதுக் காஸ்ட்யூம்...?"

"இதுக்குப் பெயர் தாவணி, சித்துப் பையா..." என்று கூறிய சின்னவள் கலகலவெனச் சிரித்தாள்...

"என்னமோ போ... இது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கலை..." என்றான் அவன்...

அவனுக்கு எப்போதும் இருக்கும் அவனது ஜிக்கியாய் அவள் வேண்டும்...

"நான் எப்படி இருந்தாலும் உன்னோட ஜிக்கி தான்... என்ன சரியா...?"

அவளது வார்த்தையில் அவன் முகம் மலர்ந்தான்...

"சரி வா ஜிக்கி... இன்னைக்குப் பாடம் படிக்கலாம்..."

ஆம், அவளுக்கு அவன் தான் தினமும் ஆங்கிலப் பாடம் சொல்லி கொடுக்கின்றான்... இப்போது அவள் தனது பெயரை ஆங்கிலத்தில் எழுதுவதோடு, கொஞ்சம் கொஞ்சம் பேசவும் செய்வாள்... இது எல்லாம் சித்தார்த்தால் மட்டுமே சாத்தியம்...

நல்லவேளையாக அடுத்த ஐந்தாவது நாள் பிரபாவதி ஊரில் இருந்து வந்தார்... சமையல்க்கார பெண்மணி அவரிடம் விசயத்தைக் கூற... அவர் உடனே பணம் கொடுத்து சின்னவளுக்குப் புது உடை வாங்கிக் கொடுக்கச் செய்து வீட்டளவில் சிறு பூஜைக்கும் ஏற்பாடு செய்தார்...

தெய்வநாயகி விசயம் தெரிந்து மனம் கொதித்த போதும் இதை மகனிடம் சொல்ல முடியாது தவித்தார்... ஏனெனில் மகன் இது மாதிரி விசயங்களைப் பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டான்... அதை விட ஒரு நல்லது செய்து மருமகள் மகன் மனதில் நல்ல விதமாய் இடம் பிடிப்பதை அவர் கொஞ்சமும் விரும்பவில்லை...

ஜெகதீஸ்வரிக்கு சடங்கு செய்யும் போது ஜெய்சிம்மன், விமலாராணி எதேச்சையாக அங்கு வருகை தந்தனர்... அப்போது பெரியவர்களிடம் ஆசிர்வாதம் வாங்குவதற்காக ஜெகதீஸ்வரி வீட்டினுள் வந்தாள்... அவளைக் கண்டதும் ஜெய்சிம்மனின் விழிகள் வியப்பில் விரிந்தது... அவர் அவளை அடிக்கடி பார்த்து இருக்கிறார் தான்... ஆனால் இன்று அவளுக்குச் செய்திருந்த அலங்காரத்தில் அவள் அவரது கண்களுக்கு வித்தியாசமாகத் தெரிந்தாள்...

பதின்வயதிற்குரிய அழகுடன் புத்தம் புது மலராய் நின்றிருந்தவளை அவரது வக்கிரம் பிடித்த மனம் வேறு மாதிரியாக ரசிக்க ஆரம்பித்தது... அது தெரியாது சின்னவள் அவரிடம் ஆசிர்வாதம் வாங்க வந்தாள்...

"நல்லாயிரு..." என்று வாழ்த்தியவர் விழிகள் குனிந்திருந்த அந்தச் சிறுமியின் இளமை அழகினை அணு அணுவாய் பார்த்து ரசித்தது...

இரு குழந்தைகளுக்கு அதிலும் ஒரு பெண் குழந்தையின் தகப்பன் பார்வையாக அது இல்லை... ஒரு வக்கிரமாக நிறைந்த காமூகனின் பார்வையாக அது இருந்தது...

கீழே குனிந்திருந்தவளை வேண்டுமென்றே தொட்டு தூக்கியவரின் கைகள் அவளது தோளை அழுத்தமாய் அழுத்தி பிடித்தது... அதில் சின்னவள் மிரண்டு போனவளாய் தனது தோள்களை விடுவிக்க நினைத்து அவஸ்தையுடன் நெளிய ஆரம்பித்தாள்... உடனே அவர் நல்லவர் போல் தனது கைகளை எடுத்துக் கொண்டார்... சின்னவளுக்கு ஏதோ ஒன்று புரிய துவங்கியதில் அவள் அவரை விட்டு விலகி நின்றாள்...

வேட்டையாடும் வெறியுடன் அவர் அந்தச் சின்னஞ்சிறு புள்ளி மானை வெறித்துப் பார்த்தார்... புள்ளி மானோ தனது பயத்தினை யாரிடம் சொல்வது என்று தெரியாது விழித்து நின்றது அச்சத்துடன்...!!!

"இறைவன் என்னை
அநாதை ஆக்கினான்...
அது என் தவறன்று...
மனிதனே என்னை மானமிழக்க
செய்து விடாதே...
அது என் தவறாய் மாற்றப்படும்...
உன் பாவத்தை நான் சுமக்க
நான் வேசியாக வேண்டுமா...?
நான் நானாக வாழ விடு...
நானே வாழ்ந்து கொள்கிறேன்...
யார் துணையுமின்றி...
இப்படிக்கு,
ஏழை அபலை பெண்...!!!"

நனவாகும்...!!!

அய்யனார் கோவிலில் கூடியிருந்த பஞ்சாயத்தில் தீர்ப்பு சொல்லும் நாட்டாமையாக முறுக்கேறிய புஜங்களும், வலிமையான தோள்களும், உறுதியான உடலுமாய்க் கம்பீரமாய் வந்தமர்ந்த நரசிம்மன் தனது மீசையை முறுக்கி விட்டபடி அனைவரையும் கூர்மையாய் அளவிடுவது போல் பார்த்தார்... அவரது ஒற்றைப் பார்வையில் ஒவ்வொருவராய் பேச துவங்கினர்...

"ஐயா... இவன் என் பொண்ணு கையைப் பிடிச்சு இழுத்துட்டான்..." என்று அங்கிருந்த தூணில் கட்டி வைக்கப்பட்டு இருந்த ஒருவனைச் சுட்டி காட்டி ஒருவர் கூறினார்...

"ஆமாங்கய்யா... இரண்டு நாளைக்கு முன்னாடி இவன் என் தங்கச்சி கிட்ட தகாத முறையில் நடக்கப் பார்த்தான்... நல்லவேளை நான் அந்தப் பக்கம் போனதால் என் தங்கச்சியைக் காப்பாத்த முடிஞ்சது... இல்லைன்னா நினைக்கவே பயங்கரமா இருக்குது..."

இப்படி ஆளாளுக்கு அவன் மீது குற்றம் சுமத்த அவனது தவறுகள் அதிகரித்துக் கொண்டே போனது... இதை எல்லாம் மௌனமாய்க் கேட்டுக் கொண்டிருந்த நரசிம்மனின் விழிகள் ஆத்திரத்தில் சிவந்தது... அடுத்து நொடி நேரம் தாமதியாது ஆவேசமாய் எழுந்தவர் அய்யனார் சிலையின் கையிலிருந்த அரிவாளை எடுத்து அந்தக் கயவனின் இரு கைகளையும் வெட்டி எறிந்தார்...

"இந்த ஊருக்குள் எவனாவது இது மாதிரி தப்பு செஞ்சால் அடுத்த நொடி இது தான் தண்டனை... இதையும் மீறி பெண்கள் மீது கை வச்சால் அவங்க உடம்பில் உசிர் தங்காது..." என்று ஆவேசத்துடன் முழங்கியவரை கண்டு அங்கிருந்த யாரும் பயப்படவில்லை... மாறாகக் கடவுளை கொண்டாடும் பக்தர்கள் போன்று பரவசத்துடன் நின்றிருந்தனர்...

இதைப் பின்பற்றித் தான் சித்தார்த் பிரகதீஸ்வரி கையைப் பிடித்து இழுத்த கயவனுக்குத் தண்டனை அளித்தான்... சட்டம் நம்மைப் பாதுகாக்கும் வரை நாம் நம் உயிரை பணயம் வைக்க முடியாதே...

பஞ்சாயத்து முடிந்து நரசிம்மன் வீட்டிற்கு வந்த போது கணக்கு பிள்ளை அவருக்காகக் காத்திருந்தார்... அதே வரவேற்பறையில் அமர்ந்திருந்த ஜெய்சிம்மனிடம் பணத்தைக் கொடுக்க அவருக்கு விருப்பம் இல்லை... ஏனெனில் ஜெய்சிம்மனின் ஆடம்பரம் பற்றி அவருக்குத் தெரியும்...

நரசிம்மன் வந்ததும் எழுந்து நின்று மரியாதையாய் கை கூப்பி வணங்கியவர், "தேங்காய் பறிச்சதில் வந்த பணம்ங்கய்யா..." என்று கட்டுப் பணத்தை அவரிடம் கொடுத்தார்...

பணத்தை வாங்கியபடி நாற்காலியில் அமர்ந்த நரசிம்மன், "உட்காருங்க கணக்கு பிள்ளை..." என்று அவரை அமர வைத்து மேலும் தங்களது வருவாயை பற்றிப் பேசி கொண்டிருந்தவர்,

"இந்த மாச கணக்கை நம்ம ஆடிட்டர் கிட்ட கொடுத்துட்டு வந்திருங்க... அப்புறம் எல்லாத்துக்கும் சம்பளம் கொடுக்கப் பேங்க்கில் இருந்து பணம் எடுத்துட்டு வந்திருங்க..." என்று காசோலையில் கையெழுத்திட்டு கொடுத்தார்...

"சரிங்கய்யா..." என்று பணிவுடன் கூறியவர் எழுந்து சென்று விட்டார்...

அவர் சென்றதும் அடுத்த நொடி ஜெய்சிம்மன் தனது அண்ணன் முன் வந்து நின்றார்...

"எனக்கு இரண்டு லட்சம் பணம் வேண்டும்..."

எதுக்கு என்பது போல் மூத்தவர் சகோதரனை உறுத்து விழித்தார்...

"எல்லாத்தையும் உன் கிட்ட சொல்ல முடியாது... என் மனைவி, பிள்ளைங்களுக்குப் பரிசு வாங்கிக் கொடுக்கணும்... இப்படி எத்தனையோ... அதை எல்லாம் லிஸ்ட் போட்டு உன் கிட்ட விளக்கி சொல்ல முடியாது..." என்று விறைப்பாய் நின்று கொண்டு முகத்தை முறைத்துக் கொண்டு கூறிய தம்பியை ஆழ்ந்து பார்த்தவர் ஒன்றும் பேசாது அவர் கேட்ட பணத்தை எடுத்து கொடுத்தார்...

பணத்தை வாங்கிக் கொண்டு சென்ற தம்பியை பார்த்தவர் மனதில் துயரம் நிரம்பி வழிந்தது...

இருவரும் ஒட்டி பிறந்த இரட்டையர்கள்... உருவம் ஒரே மாதிரியாக இருந்த போதும் குணம் இருவருக்கும் மாறுபட்டு இருந்தது... நரசிம்மன் முறுக்கேறிய மீசையுடன் வெள்ளை வேட்டி, சட்டையில் கம்பீரமாய் இருப்பார்... ஜெய்சிம்மன் பேண்ட், சட்டையில் நறுவிசாய் நறுக்கி விடப்பட்ட மீசையுடன் நவநாகரீகமாய் இருப்பார்...

தோற்றத்தில் இருக்கும் நாகரீகம் ஜெய்சிம்மனின் குணத்தில் இல்லாது போனது தான் பெரும் கவலை... தம்பியின் குணம் நரசிம்மனுக்குத் தெரிந்து தான் இருந்தது... ஊர் ஊராகச் சுற்றுவது, மது, மாது என்று அத்தனை கெட்ட பழக்கமும் ஜெய்சிம்மனுக்கு இருந்தது... கல்லூரி படிக்கும் போது படிப்பு ஏறியதோ இல்லையோ இது மாதிரி விசயங்கள் அவரிடம் நன்கு ஏறியது...

நல்லவேளையாக அவரது இந்தப் பழக்கம் குடும்பப் பெண்கள் வரை வரவில்லை... அதனால் தான் நரசிம்மனின் தண்டனையில் இருந்து தப்பித்து வருகிறார்... இல்லை என்றால் வெளியில் குற்றவாளிக்கு கொடுக்கும் தண்டனை தான் அவரது தம்பிக்கும்... அது தெரிந்ததாலோ என்னமோ ஜெய்சிம்மனும் சற்று அடக்கி வாசித்தார்...

திருமணம் செய்து வைத்தால் திருந்துவார் என்று எண்ணிய நரசிம்மன் தம்பிக்கு விமலாராணியைத் திருமணம் செய்து வைத்தார்... வந்த மகாராசியோ கணவனைத் திருத்த முயலாது அவர் கூறும் பொய்கள் அத்தனையையும் உண்மை என்று நம்பி நரசிம்மனை

விரோதி போல் பார்த்து வைத்தார்... அதன் மூலம் தனது தவறுகளை மனைவிக்குத் தெரியாமல் சாமர்த்தியமாக மறைத்து விட்டார் ஜெய்சிம்மன்...

விமலாராணி குணத்தில் எப்படியோ... ஆனால் கணவன் மீது அவர் கொண்ட காதல் உண்மையானது... அவர் கணவர் மீது உயிரையே வைத்திருக்கிறார்... அதனால் தான் கணவர் கூறும் பொய்களை நம்பி நரசிம்மனை அறவே வெறுத்தது... இதிலும் ஜெய்சிம்மனின் தந்திரம் வென்றது... இல்லை என்றால் மனைவி சகோதரனிடம் நன்றாகப் பேசி பழகினால் அவரைப் பற்றிய ரகசியங்கள் தெரிந்து விடும் அல்லவா... அதனால் சாணக்கியத்தனமாக மனைவியை அவர் கையாண்டார்... அவரை மீறி அவரது மனைவியும் செல்ல விரும்பவில்லை...

அதனால் விமலாராணி கணவரை பற்றிய பல ரகசியங்களை அறிந்திருக்கவில்லை... அதில் ஒன்று தான் அவர்கள் திருமணம் முடிந்த கையோடு தம்பியின் சொத்துக்களை நரசிம்மன் பிரித்துக் கொடுத்ததை... இத்தனை வருடங்களில் அதை ஒவ்வொன்றாக விற்று தனது அவசியமில்லா ஆடம்பர தேவைகளை நிறைவேற்றிக் கொண்ட ஜெய்சிம்மனின் ஊதாரித்தனத்தை விமலாராணி அறிந்திருக்கவில்லை... அது போல் தான் கணவரது மறுபக்கத்தையும்...

தம்பி விற்கும் சொத்துக்களைச் சத்தம் காட்டாது வாங்கியவர்களிடம் இருந்து திரும்ப வாங்கினார் நரசிம்மன்... ஆக்கும் தொழிலை அவர் செய்து வர, தம்பி இப்படி அழிப்பது அவருக்கு அத்தனை வருத்தமாக இருந்தது...

பெற்றோரை இழந்து பதினான்கு வயதில் தனி மரமான போது நரசிம்மன் தான் தைரியமாகத் தன்னந்தனியாக அத்தனை சொத்துக்களையும் கையில் எடுத்தார்... அவர் சேற்றில் கால் வைத்து உழைக்கத் தம்பி புத்தகத்தைச் சுமந்து கொண்டு பள்ளிக்கு சென்றார்... அதனால் தான்

கஷ்டம் என்பது ஜெய்சிம்மனுக்குப் புரியாமல் போனதோ என்று அவருக்குச் சில சமயம் தோன்றும்...

தம்பியை கண்டிக்க முடியாமல் அவர் பெற்ற மக்கள் இருவரின் முகமும் கண்கள் முன் வந்து நின்றது... தன்னைப் பாசத்துடன் 'அப்பா' என்றழைக்கும் அவர்களின் அன்பிற்காக அவர் அனைத்தையும் பொறுத்துக் கொண்டார்...

"ஐயா..."

வாசலில் சத்தம் கேட்கவும் அவர் அங்கு விரைந்தார்...

பாம்பு கடித்திருந்த ஒருவனை ஆபத்தான நிலையில் தூக்கிட்டுக் கொண்டு வந்திருந்தனர்... உடனே அவசரமாக அவர் அவனுக்குச் சிகிச்சை அளிக்க ஆரம்பித்தார்... அடுத்தச் சில மணித்துளிகளில் அவன் முழுவதும் விசம் நீங்கி உயிர் பிழைத்துக் கொண்டான்... அவனது உறவினர்கள் நன்றி கூற அதை அவர் புன்னகை முகத்துடன் ஏற்றுக் கொண்டார்...

சித்த மருத்துவம் அவரது பரம்பரையில் தொடர்ந்து வருவது... அவருக்குப் பின் இதை யார் கற்றுக் கொண்டு சிறப்பிக்கப் போகிறார்களோ என்று அவருக்கு மிகவும் கவலையாக இருந்தது... கௌரவம், சொத்துக்கள் மாதிரி சில விசயங்கள் பரம்பரையாகத் தொடர்ந்து வருவது... அதைக் காப்பாற்ற வேண்டியது அதன் அடுத்தத் தலைமுறைகளின் கடமை...

அந்தக் கணம் அவரது மனதில் இங்கு மருத்துவராக வந்திருக்கும் கார்த்திகாயினியின் முகம் மின்னியது... கார்த்திகாயினி இந்த ஊருக்கு வந்து ஒரு வருடமாகப் போகிறது... தைரியம், நேர்கொண்ட பார்வை, தன்னம்பிக்கை என்று பாரதி கண்ட புதுமை பெண்ணாக இருந்த அவரை நரசிம்மனுக்கு முதல் பார்வையில் பிடித்துப் போனது... அவரைப் பற்றி எல்லாம் விசாரித்து விட்டார்...

சகோதரன் இல்லாத குடும்பத்தைத் தனது குடும்பமாகப் பாவித்து அவர்களை இவர் தான் பாதுகாத்து வருகிறார்... அதனால் தான் இருபத்தியாறு வயதாகியும் திருமணத்தைத் தவிர்த்து வருகிறார்... கார்த்திகாயினியை பற்றி அறிந்ததும் இன்னமும் மதிப்பு அதிகரித்துப் போனது நரசிம்மனின் மனதில்...

இன்று எப்படியாவது கார்த்திகாயினியிடம் தனது மனதில் இருப்பதைக் கூறி விட வேண்டும் என்று நினைத்துக் கொண்டார்...

அன்று மதிய பொழுதில் கூட்டம் அதிகம் இல்லாத நேரமாகப் பார்த்து அவர் கார்த்திகாயினியை மருத்துவமனையில் சந்தித்துப் பேசினார்...

"வாங்க சார்... கூப்பிட்டு விட்டிருந்தா நானே வீட்டுக்கு வந்திருப்பேனே..."

இந்த ஊரில் நரசிம்மனின் உயரம் பற்றிக் கார்த்திகாயினிக்கு நன்கு தெரியும்... அதனால் தான் அப்படிக் கேட்டார்...

"இப்போதும் என் வீட்டிற்கு உங்களைக் கூட்டிட்டுப் போகத் தான் வந்திருக்கிறேன்..." என்றவரை கண்டு விகல்பம் இல்லாது,

"யாருக்கு உடம்பு முடியலை...?" என்று கேட்டபடி எழுந்த கார்த்திகாயினியை கையமர்த்தித் தடுத்த நரசிம்மன்,

"எங்க வீட்டு மருமகளா... என் மனைவியாக..."

அவரது வார்த்தைகள் கேட்டு கார்த்திகாயினி அசைவற்றுப் போனார்...

"இது சரியா வரும்ன்னு தோணலை..."

நரசிம்மனின் அந்தஸ்து எங்கே... தான் எங்கே...?

"எல்லாம் சரியா வரும்... நீங்க மட்டும் சரின்னு சொன்னால்... ஒருவேளை உங்க அண்ணா

குடும்பத்துக்காக நீங்க யோசிச்சா இனி அவங்களைப் பார்த்துக்க வேண்டியது நம் கடமை..."

பிரித்துப் பேசாது 'நம்' என்ற ஒற்றை வார்த்தையில் 'நீயும் நானும் ஒன்று' என்பதை அவர் உணர்த்தியது கண்டு கார்த்திகாயினி பிரமித்துப் போனார்...

"எனக்கு என்ன பதில் சொல்றதுன்னு தெரியலை... என்னைக் கஷ்டப்பட்டுப் படிக்க வச்ச அண்ணன் குடும்பத்தைக் காலம் முழுவதும் பார்த்துக்கணும்... அது மட்டும் தான் என் மனசில் இருக்கு... இந்தக் காதல் எதுவும் என் மனசில் இல்லை.."

பொறுப்பாய் பேசியவரை கண்டு இன்னமும் பிடித்துப் போனது நரசிம்மனுக்கு...

"உங்க விருப்பப்படி உங்க அண்ணா குடும்பத்தை நாம் நம் காலம் முழுவதும் பார்த்துக்கலாம்... அதே சமயம் நம் கல்யாணத்தில் நான் காதலை இழுக்கலை... இரு வீட்டு சம்மதத்துடன் பெரியவர்கள் நிச்சயித்த திருமணம் போன்று தான் இது நடக்கும்... அதில் எந்தச் சந்தேகமும் வேண்டாம்..." என்றவர் ஒரு நொடி தயங்கி விட்டு,

"உங்களுக்கு என்னைப் பிடித்திருக்கிறது தானே..." ஏனெனில் இருவருக்கும் கிட்டத்தட்ட ஒன்பது வயது வித்தியாசங்கள்...

நரசிம்மன் கேட்டதும் கார்த்திகாயினிக்கு வியர்த்து வழிந்தது... என்ன பதில் சொல்வது என்று தெரியாது கைகளைப் பிசைந்தார்... கல்லூரி படிக்கும் காலத்தில் கூட அவர் யாரையும் ஏறெடுத்துப் பார்த்தது இல்லை... இப்போது புதிதாக நரசிம்மன் இப்படிக் கேட்கவும் என்ன பதில் சொல்வது என்று அவருக்குத் தெரியவில்லை...

"எனக்கு முப்பத்தைந்து வயதாகிறது... இன்று வரை எந்தப் பெண்ணும் என் மனசில் சலனத்தை ஏற்படுத்தியது இல்லை... ஆனால் என்னைப் பாதிச்ச முதல் பெண் நீங்க தான்... அது போல் கடைசிப் பெண்ணாகவும் நீங்களா தான்

இருப்பீங்க... நான் கேட்ட கேள்விக்கு உங்களுக்குப் பதில் தெரியாம இருக்கலாம்... ஆனால் என்னுடைய ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்க... நம் கல்யாணத்துக்குச் சம்மதம் தானே...?"

"அண்ணா குடும்பம்..." என்று இழுத்தவரை கண்டு அதுவரை மனதில் இருந்து சஞ்சலங்கள் மறைய நரசிம்மனின் முகத்தில் புன்னகை மலர்ந்தது...

"கல்யாணத்துக்குத் தயாராக இருங்கள்..." என்று கூறி விட்டு நரசிம்மன் எழுந்து சென்று விட்டார்...

கார்த்திகாயினியிடம் சொன்னது போல் அவரது அண்ணி பானுமதியை சந்தித்துத் திருமணத்திற்குச் சம்மதம் வாங்கி விட்டார்... அவர்களது மகன் ஹரிப்ரசாத்தின் எதிர்காலம் தங்களது பொறுப்பு என்று உறுதி அளித்தார்...

அண்ணனின் திருமண விசயம் கேள்விப்பட்டு ஜெய்சிம்மனின் முகம் மாறியது... நேரே அண்ணனிடம் வந்து நின்றார்...

"என்ன நரசிம்மா திடீர்ன்னு கல்யாணம் பண்ணிக்கிற முடிவு எடுத்து இருக்கப் போலிருக்கு...?"

"ஆமாம்..." என்றார் நரசிம்மன் புன்னகையுடன்...

"இத்தனை நாள் கழிச்சு நீ கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னா எனக்குச் சந்தேகமா இருக்கே... எதுவும் தப்புத் தண்டா பண்ணிட்டியா...?"

அடுத்த நொடி ஜெய்சிம்மனின் கன்னத்தில் இடியாய் இறங்கியது நரசிம்மனின் கரம்... அவர் அடித்ததில் ஜெய்சிம்மனின் பல் ஒன்று உடைந்து கீழே தெறித்து விழுந்தது...

"என்னை என்ன வேணும்ன்னாலும் பேசு... ஆனால் உன் அண்ணியைப் பத்தி எதாவது தப்பா பேசின கொன்னுருவேன் கொன்னு... யாரை பார்த்து என்ன வார்த்தை பேசுற...? எங்களை என்ன உன்னை மாதிரி

அலையறவன்னு நினைச்சியா...? அண்ணி என்பவள் அன்னைக்குச் சமம்... இனியொரு முறை இப்படிப் பேசி பாரு... அதுக்கு அப்புறம் தெரியும் இந்த நரசிம்மன் யாருன்னு..."

அண்ணனை பற்றித் தான் ஊருக்கே தெரியுமே... அவருடைய தம்பிக்கு தெரியாதா என்ன...? வாய் மூடி மௌனியாகி விட்டார் ஜெய்சிம்மன்...

"இப்படித் தேவையில்லாத பேச்சுக்கள் இனி உன் வாயில் இருந்து வந்தது அடுத்த நொடி நீ இந்த வீட்டை விட்டு போக வேண்டி வரும்... என்ன பார்க்கிற...? நீ வாங்கிய கடனை எல்லாம் நான் அடைச்சிக்கிட்டு இருக்கேன்... அந்த அசலுக்கே இந்த வீட்டின் மதிப்பு போதாது... அப்புறம் வட்டிக்கு எங்கே போவது...?"

"நரசிம்மா... நான் உன் தம்பி... என்னிடம் போய் நீ கணக்கு பேசலாமா...?"

"சரி, நீ சொல்லும் பாயிண்ட்டிற்கே வருகிறேன்... அண்ணன், தம்பியிடம் பணக் கணக்கு பேச வேண்டாம்... ஆனால் நியாயக் கணக்குப் பேசலாம் இல்லையா... என்றாவது ஒரு நாள் நீ செய்யும் அநியாயம் அம்பலத்துக்கு வர தான் போகிறது... அப்போது இந்த அண்ணன், தம்பி உறவு எல்லாம் செல்லாது... எல்லோருக்கும் தண்டனை ஒன்று தான்... அதை நன்றாக ஞாபகம் வைத்து கொள்..." என்று இறுகிய குரலில் எச்சரித்தவர் பேச்சு வார்த்தை முடிந்தது போல் அங்கிருந்து சென்று விட்டார்...

நரசிம்மன் எச்சரித்ததில் இருந்து ஜெய்சிம்மன் சற்று அடக்கி வாசித்தார்... ஏனெனில் இந்த வீட்டில் இருந்தால் தான் அவருக்குப் பெருமை... இங்கிருந்து வெளியேறினால் அவர் நாயை விடக் கேவலமாய் மதிக்கப்படுவார்... அதை விட மனைவியிடத்தில் மதிப்பு இறங்கி போக அவருக்கு விருப்பம் இல்லை...

"ஒரு அன்றாடங்காய்ச்சி இந்த வீட்டு மூத்த மருமகளாக வருவது எனக்குப் பிடிக்கலை... இனிமேல் நான் இங்கே

இருக்க மாட்டேன்..." என்று கோபத்தில் குதித்த விமலாராணியிடம்,

"விமலா... புரியாமல் பேசாதே... வேறு யார் வந்தாலும் நமக்கு இடைஞ்சல் தான்... இந்த மாதிரி பிச்சைக்கார குடும்பத்தில் இருந்து வந்தால் தான் அவள் நமக்கு அடங்கி நடப்பாள்... வீட்டில் உன் ராஜ்ஜியம் கொடி கட்டி பறக்கணும்ன்னா இந்த விசயத்தில் கொஞ்சம் அடக்கி வாசி..."

கணவர் கூறுவது தான் வேதவாக்கு என்று நம்பும் அபலை பெண் தானே விமலாராணி... அதனால் கண்ணை மூடி கொண்டு கணவர் கூறியதை நம்பினார்...

அதன் பிறகு மிக வேகமாகத் திருமண வேலைகள் நடைப்பெற்றது... இன்னும் இரண்டு நாளில் திருமணம் என்று இருக்கும் போது மார்த்தாண்டம் தனது குடும்பத்துடன் அங்கு வந்தார்... கூடவே ஜெகதீஸ்வரியும்... அவள் இல்லாது வர மறுத்த சித்தார்த்திற்காக வேறுவழியின்றி அவளும் உடன் வந்தாள்...

இந்தத் திருமணத்திற்கு என்று புதிதாய் வாங்கிக் கொடுத்த தாவணி பாவாடையில் மிகவும் அழகாக இருந்தாள் அந்தச் சின்னஞ்சிறு சிட்டு... அவர்கள் வந்த போது நரசிம்மன் திருநெல்வேலி வரை போயிருந்தார்... ஜெய்சிம்மன் மட்டுமே வீட்டில் இருந்தார்... அவரைக் கண்டதும் ஜெகதீஸ்வரி பிரபாவதி பின்னே சென்று மறைந்து கொண்டாள்... ஏனெனில் ஜெய்சிம்மனின் விரசமான பார்வை கண்டு அவளது மேனி கூசி போனது...

எல்லோரும் சென்றதும் அவள் பயணப் பொதிகளை எடுத்துக் கொண்டு உள்ளே வர வாயிலிலேயே ஜெய்சிம்மன் அவளை வழி மறித்தார்...

"என்ன குட்டி எப்படியிருக்க...?" என்று கை நீட்டி அவளைத் தடுத்து நிறுத்தி அவர் நலம் விசாரிக்க...

தனியே மாட்டி கொண்டவளுக்குக் கண்களில் கண்ணீர் நிரம்பியது...

"நான் போகணும்... வழியை விடுங்க..."

"பதில் சொல்லிட்டு போ..."

அதற்குள் பிரபாவதி அவளை அழைத்ததும் அவள் வேகமாய் நகர முயன்ற போது அவளது கைப்பற்றித் தடுத்த ஜெய்சிம்மன் அவளது கன்னத்தை வருடியபடி,

"நல்லா தான் இருக்க..." என்றவரின் பார்வை அவளது மேனியை அங்குலம் அங்குலமாக ஊர்ந்து சென்றது...

மனம் அருவருத்த போதும் அதை வாய் விட்டு சொல்ல முடியாதவளாய் தனது கையை உருவி கொண்டு வேகமாய் அங்கிருந்து ஓடி விட்டாள் அவள்... உள்ளே சென்ற பிறகும் அவளால் மனதின் படபடப்பை கட்டுப்படுத்த முடியவில்லை...

திருமண வீடு என்பதால் வேலைகள் இருந்து கொண்டே இருந்தது... ஜெகதீஸ்வரியும் தன்னால் முடிந்த வேலைகளைச் செய்தாள்... பொருட்கள் இருக்கும் அறையில் தாம்பாள தட்டு எடுக்க வந்தவளை பின்னால் இருந்து இரு கரம் இறுக்கமாய் அணைத்தது... அவள் பயத்தில் கத்த முயன்ற போது அவளது வாயில் கை வைத்து பொத்தி அவளைத் தன் புறமாய்த் திருப்பிய அந்த உருவத்தைக் கண்டு அவள் அதிர்ந்து போனாள்... ஏனெனில் அது ஜெய்சிம்மன்...

"ஐயா என்னை விடுங்கய்யா..." பலகீனமாய் முனங்கியபடி திமிறியவளின் இதழ் மீது தனது இதழை அழுத்தமாய்ப் பதித்தான் அந்த வக்கிரம் பிடித்தவன்...

சிறுமி அவளால் அவனது செயலை ஜீரணிக்க முடியவில்லை... அவனைத் தள்ளி விட்டுக் கொண்டு செல்லவும் முடியவில்லை... உடல் வலிமை கொண்டவனை அசைக்க அவளால் இயலவில்லை... நேரம் செல்ல செல்ல

தான் மூச்சடைத்து செத்து விடுவோமோ என்று அவள் பயந்த போது தான் ஜெய்சிம்மன் அவளை விட்டார்...

அடுத்த நொடி அவள் அழுது கொண்டே வெளியில் ஓடினாள்... அப்போது அங்கு வந்த நரசிம்மனின் மீது மோதி நின்றவள் ஜெய்சிம்மன் போன்றிருந்த அவரது தோற்றம் கண்டு இன்னமும் பயந்து போனவளாய் யாரோ துரத்துவது போல் அங்கிருந்து ஓடி போனாள்...

'யார் இந்தப் பெண்...? ஏன் இப்படி ஓடுது...?' என்று யோசித்தபடி நரசிம்மன் அங்கிருந்து சென்று விட்டார்...

சற்று திரும்பி பார்த்து இருந்தால் அறையில் இருந்து கள்ளத்தனமாய் வெளிவரும் தம்பியை பார்த்து இருப்பார்... விதி வலியது... அது எழுதிய தலையெழுத்தை மாற்ற சாதாரண மனிதனால் முடியுமா...!

நரசிம்மன், கார்த்திகாயினி திருமணம் முடிவதற்குள் ஜெகதீஸ்வரி ஒவ்வொரு நிமிடமும் செத்து பிழைத்தாள்... எப்போதடா இங்கிருந்து போவோம் என்று அந்தச் சிறுமியின் உள்ளம் தவித்தது... ஏனெனில் அங்கிருந்த பொழுது ஜெய்சிம்மனின் நடவடிக்கை அப்படி இருந்தது... அதனால் அவள் எந்நேரமும் சித்தார்த்தை உடன் வைத்து கொண்டாள்... சித்தார்த்தை தாண்டி ஜெய்சிம்மனால் அவள் அருகே செல்ல முடியவில்லை... ஏனெனில் அந்த வயதிற்குச் சித்தார்த் நிரம்ப அறிவு கூர்மை உடையவன்... எங்கே தனது தவறினை மனைவியிடம் போட்டு கொடுத்து விடுவானோ என்று அவர் பயந்தார்...

நல்லவேளையாகத் திருமணம் முடிந்த அன்றிரவே அவர்கள் ஊருக்கு கிளம்பி விட்டனர்... அப்போது தான் அந்தப் பிஞ்சு நிம்மதி பெருமூச்சு விட்டது... ஆனால் எங்கே சென்றாலும் ஜெய்சிம்மன் அவளை நிம்மதியாய் விடப் போவதில்லை என்பதினை அவள் அறிந்திருக்கவில்லை... அதற்கான நாளை அவர் குறித்து விட்டதையும் அவள் தெரிந்திருக்கவில்லை...

இதைப் பற்றி அவள் யாரிடமும் சொல்லவில்லை... ஏனெனில் ஜெய்சிம்மன் இந்தக் குடும்பத்திற்கு எவ்வளவு முக்கியமானவர் என்பது அவளுக்கு நன்கு தெரியும்... தான் சொன்னாலும் அதை அவர்கள் நம்புவார்களா என்று அவள் பயந்தாள்... நம்பாது அவளை அடித்து விரட்டி விட்டால்...? இவர்களை விட்டால் அவளுக்கு வேறு போக்கிடமும் கிடையாது... அதனால் வேறுவழி இல்லாது தன் மன பாரத்தைத் தானே சுமந்து கொண்டது அந்தச் சின்னச் சிட்டு...

நரசிம்மன், கார்த்திகாயினி வாழ்க்கை தெளிந்த நீரோடை போல் சென்றது... நரசிம்மன் வார்த்தையில் இருக்கும் மரியாதையான விளிப்பு மனைவியைத் தனக்குச் சரி சமமாக நடத்துவதிலும் இருந்தது...

"இன்னும் ஏன் வாங்க போங்கன்னு பேசுறீங்க...? இப்போது நான் உங்க மனைவி..."

கார்த்திகாயினி கூறிய போதும் நரசிம்மன் அப்படிக் கூப்பிடுவதை மறுத்து விட்டார்...

"உங்களை முதன்முதலில் பார்த்த போது இருந்த பிரமிப்பு இன்னமும் என் மனசில் அப்படியே இருக்கு... அதை மாத்திக்க நான் விரும்பலை..."

கணவனின் இந்த அன்பிற்காகக் கார்த்திகாயினி விமலாராணியின் கடும் வார்த்தைகளைப் புன்னகை முகமாய்த் தாங்கி கொண்டார்...

"ஏழை வீட்டில் பிறந்த உனக்கு எப்படிப் பெரிய வீட்டை நிர்வாகம் பண்ண தெரியும்...? அதனால் நானே இதன் நிர்வாகத்தைப் பார்த்துக் கொள்கிறேன்... நீ ஒதுங்கி நில்..." என்று விமலாராணி கட்டளையாய் கூறி விட...

அதைக் கண்டு கொள்ளாது புன்னகையுடன் சென்று விட்டார் கார்த்திகாயினி...

"இதுக்கு என்ன அர்த்தம் தெரியுமா விமலா...? எப்படியும் வீட்டு அதிகாரத்தைக் கைப்பற்றியே தீருவேன் என்று

அர்த்தம்... இது கேலி புன்னகை..."

மனைவியின் மனதை கார்த்திகாயினி பக்கம் திருப்பி விட்டு விட்டு ஜெய்சிம்மன் சென்னைக்குத் தனியே கிளம்ப எண்ணினார்... ஏனெனில் தனித்துச் சென்றால் தானே அவரது எண்ணம் நிறைவேறும்... உடன் கிளம்பிய மனைவியைத் தடுத்தவர்,

"நான் போறது பிசினஸ் விசயமா விமலா... அங்கே நீ வந்து என்ன பண்ண போகிற...? நீ என்னுடன் வந்திருக்கும் சமயம் பார்த்து இங்கே நிலைமை தலைகீழாய் மாறிவிட்டால்...? சும்மாவே என் அண்ணன் பொண்டாட்டி முந்தானையைப் பிடித்துக் கொண்டு சுற்றுகின்றான்... இதில் வீட்டு அதிகாரத்தைக் கொடுத்தால் நம்மை வீட்டை விட்டு விரட்டிருவாங்க..."

"அது எப்படி முடியும்...? நீங்களும் உங்கப்பா, அம்மாவுக்கு மகன் தான்..."

"என் அண்ணன் நினைத்தால் எதுவும் செய்வான்... அதனால் நாம் தான் ஜாக்கிரதையாக இருக்கணும்..."

இப்போதும் விமலாராணி தனது கணவனை முழுமையாக நம்பினார்... அதனால் கணவனைத் தனியே சென்னைக்கு அனுப்பி வைத்து ஒரு சின்ன மலர் கருகுவதற்கு அவர் காரணமாகி போனார் அவரையும் அறியாமல்...

****

சித்தார்த்திற்குக் காய்ச்சல் அதிகமாக இருந்தது... ஜெகதீஸ்வரி தான் அவன் பக்கத்தில் இருந்து பார்த்து கொண்டாள்... அவனது அறையிலேயே அவள் தங்கி கொண்டாள்... வழக்கம் போல் பிரபாவதி கணவருடன் வெளியூர் சென்றிருந்தார்... சின்ன மகள் ஸ்வேதாவை மட்டும் உடன் அழைத்துச் சென்றிருந்தார்...

திடுமென வருகை தந்த ஜெய்சிம்மனை கண்டு அந்தச் சின்னஞ்சிறு சிட்டுப் பயந்தது... அது பயந்தது போல் அன்றிரவு சித்தார்த்தின் அறைக்குள் நுழைந்தான் அந்தக்

கயவன்... இது நாள் வரை அறையைப் பூட்ட வேண்டியதன் அவசியம் வந்தது இல்லை... ஆனால் அப்படிச் செய்ய வேண்டும் என்பதை அறிவுறுத்தியது அந்தக் கொடூரனின் வருகை...

கீழே படுத்து உறங்கி கொண்டிருந்த அந்தச் சின்ன மலரினை வசப்படுத்துவது அந்தக் காம கொடூரனுக்கு மிகவும் எளிதாகி போனது...

மருந்தின் வீரியத்தில் சித்தார்த் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்... அதனால் அவனது ஜிக்கிக்கு அவன் முன்னே நடந்த அநியாயத்தை அவன் உணராது போனான்...

"ஐயா பயமாயிருக்குங்க... என்னை விட்டிருங்க... வலிக்கிறதே..." என்று கதறி துடித்துக் கெஞ்சிய அந்தச் சிறுமியின் கதறலை சிறிதும் சட்டை செய்யாது தனது தேவையைத் தீர்த்துக் கொண்டு எழுந்தது அந்த மனித மிருகம்...

அடி வயிற்றிற்குக் கீழ் எழுந்த பயங்கர வலியை தாங்க முடியாது துடித்துக் கண்ணீர் விட்டு அழுத சின்னவளை சிறிதும் இரக்கமின்றிப் பார்த்தான் அந்த நயவஞ்சகன்...

"இங்கே நடந்ததை யார் கிட்டேயாவது சொன்ன உன்னைக் கொன்னு புதைச்சிருவேன்..." என்று அவளை மிரட்டி விட்டு வேறு சென்றது அந்த மனித மிருகம்...

தவறு செய்து விட்டு இப்படி மிரட்ட இந்த மாதிரி வக்கிரம் நிறைந்த ஆண்களால் மட்டுமே முடியும்...

ஜெகதீஸ்வரியின் உடலின் ஒவ்வொரு அணுவிலும் அப்படி ஒரு வலி வலி வலி... ஏதோ நடக்கக் கூடாத ஒன்று நடந்து விட்டது என்பது அவளுக்குப் புரிந்தது... ஆனால் அது என்னவென்று அவளுக்குப் புரியவில்லை... அதனால் ஏற்படும் விளைவுகளும் அவளுக்குத் தெரியவில்லை... தன் நிலை குறித்து அவளுக்கு அப்படி ஒரு அச்சமாக இருந்தது...

அந்தக் கணம் இந்த வீட்டை விட்டு எங்காவது ஓடி போக வேண்டும் போலிருந்தது... ஆனால் அப்படிப் போவதற்குக்

கூட அவளுக்கு வழி தெரியாதே... எட்டு வயதில் இங்கு வேலைக்கு வந்தவள் கிட்டத்தட்ட ஏழு வருடங்களாக இங்குத் தான் இருக்கிறாள்... அதுவும் நிம்மதியாக... ஆனால் வெளியில் போனால் இதே நிம்மதி இருக்குமோ... இல்லை இது போன்ற அரக்கர்கள் மேலும் தன்னைக் கபளீகரம் செய்து விடுவார்களோ என்ற பயத்தில் அந்தச் சின்னப் புறா தனக்குள் தவித்துப் போனது...

"ஜிக்கி..."

அப்போது சித்தார்த்தின் பலகீனமான குரல் கேட்கவும் அவள் எழுந்து அவன் அருகே செல்ல போனாள்... பிறகு உடைகள் கலைந்து கிடப்பதை கண்டு பதறி போய்க் கண்ணீர் வழிய அதைச் சரி செய்து கொண்டு தனது வலி, வேதனையை மறந்து அவள் அவன் அருகே விரைந்தாள்... தனது துயரத்தை விட அவனின் துன்பமே அவளுக்குப் பெரிதாகத் தோன்றியது...

"என்ன வேணும் சித்து...?"

"அழுதியா ஜிக்கி..."

காய்ச்சல் கொதித்துக் கொண்டிருந்த அந்த வேளையிலும் சித்தார்த் அவளின் குரலில் இருந்த பேதத்தை நன்கு உணர்ந்தான்... அதில் அவசரமாய்க் கண்களைத் துடைத்து கொண்டவள்,

"இல்லையே சித்து... தூக்கத்தில் எழுந்ததால் அப்படி இருக்கும்... உனக்கு என்ன வேணும் சித்து...?"

"பசிக்குது..."

மருந்தின் வீரியத்தால் அவனுக்குப் பசித்தது போலும்... உடனே ஜெகதீஸ்வரி ப்ளாஸ்க்கில் இருந்த வெந்நீரில் ஹார்லிக்ஸ் கலக்கி அவனுக்கு மெதுவே புகட்டி விட்டாள்... பின்பு அவன் தூங்கும் வரை காத்திருந்தவள் அதன் பிறகே தனது துக்கத்தினைக் கவனித்தாள்...

ஏனோ அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது... வாய் விட்டு கதறியழ முடியாது வாயை மூடி கொண்டு கதறியழுதாள் யாருமற்ற அந்த அநாதை சிறுமி...

வெளியில் விடியல் ஏற்பட்ட போதும் சின்னஞ்சிறு பட்டாம்பூச்சியின் வாழ்வு நேற்றைய இரவோடு அஸ்தமித்துப் போனது...!!!

"ஜனனத்தின் போது அழுதேன்...
இடறி விழுந்த போது அழுதேன்...
பிடிவாதம் பிடித்து அழுதேன்...
அடிப்பட்ட போது அழுதேன்...
ஆனால் அசிங்கப்பட்டதற்காக அழுவது
இதுவே முதன்முறை...
சாக்கடையில் குளித்தது போல்
மனம் அருவருக்கிறதே...
தீக்குள் பிரவேசிக்க மனம் பரபரக்கிறதே...
தீக்குளித்தால் சீதை என்று போற்றுமோ...
பயந்தால் பரத்தை என்று தூற்றுமோ...
அம்மா பயமாயிருக்கிறதே...
என் யோனி வழியே அடிவயிற்றுக்குள்
உட்புகும் வலி என் இதயத்தைச் சல்லடையாக்கிறதே...
என் இரத்த அணு ஒவ்வொன்றும் வலிக்கிறதே...
உயிர் போகும் வலியை உணர்கின்றேன்...
உயிர் நீக்க பயமாயிருக்கிறதே...
என்னைக் கொன்று கொண்டு வான் செல்...
மீண்டும் ஒரு இழி பிறப்பு வேண்டாம்...
என்றும் உன் கருப்பையில் கதகதப்பாய்
பத்திரமாக, பாதுகாப்பாக, நிம்மதியாக
துஞ்சுகிறேன் நான்...!!!"

நனவாகும்...!!!

"ஜெகதா... பிறந்தநாள் அதுவுமா எதுக்கு இப்படிச் சோம்பி இருக்க...? சுறுசுறுப்பா குளிச்சிட்டு புது உடை உடுத்திட்டு வா... பாட்டிம்மா எழும்புறதுக்குள்ள நாம கோவிலுக்குப் போயிட்டு வந்திரலாம்..."

சமையல்க்கார அம்மாள் ஜெகதாவை அவசரப்படுத்தினார்... வாசல் தெளித்துக் கோலம் போட்ட ஜெகதீஸ்வரி பின்வாசலில் அமர்ந்து இருள் பிரியாத வானத்தை வெறித்துப் பார்த்து கொண்டிருந்ததைக் கண்டு தான் அவர் அப்படிச் சத்தம் போட்டது...

தனது துயரத்தை வெளிக்காட்டி கொள்ளாது எழுந்த ஜெகதீஸ்வரி குளிக்கச் சென்றாள்... குளிக்கும் போது தனது உடலை கண்டதும் அவளுள் அழுகை பொங்கியது... அங்கேயே மடங்கித் தரையில் அமர்ந்து சத்தமில்லாது கண்ணீர் வடித்தாள்...

ஜெய்சிம்மன் அன்று அவளை வன்கொடுமை செய்ததோடு மட்டும் அல்லாது அடுத்து வந்த பத்து தினங்களும் அவளை மிரட்டி தனது ஆசைக்கு இணங்க செய்தார்... மனமும், உடலும் ரணமாய் வலித்த போதும் அந்தக் கயவனின் ஆசைக்கு இணங்குவதைத் தவிர அவளுக்கு வேறுவழி இருக்கவில்லை...

அநாதை சிறுமியின் ஆதரவற்ற நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது அந்த மனித மிருகம்...

இதை எல்லாம் விட அதற்காக அவளை அவர் செய்யச் சொன்ன காரியம் தான் வேதனையின் உச்ச கட்டம்... தனக்கு எந்த வேதனை என்றாலும் தாங்கி கொண்ட அந்தப் பிஞ்சு இதயம் அந்தக் காரியத்தை மட்டும் செய்ய மறுத்தது...

"தினமும் ராத்திரி பாலில் தூக்க மாத்திரை கலந்து சித்துவுக்குக் கொடுத்து விடு..." என்று அவர் கூறிய போது

தான் அவள் அதைச் செய்ய மறுத்தாள்...

"ஐயா... வேண்டாம்ங்கய்யா... என்னால் இந்தக் கொடுமையைச் செய்ய முடியாது... சித்துச் சின்னப் பையன்... அவன் தூக்க மாத்திரை சாப்பிட்டால் அவனுடைய உடம்புக்கு கேடு... அவனுக்குக் காய்ச்சல் வேறு தாங்க மாட்டான்... அவன் பாவம்ங்கய்யா..." என்று மறுத்து கதறியவளை கண்டு மனம் பதறாது,

"நீ இதைப் பண்ணலைன்னா நீ என்னோட பணத்தைத் திருடிட்டேன்னு நான் போலீசில் கம்ப்ளைண்ட் பண்ணுவேன்... அவங்க வந்து உன்னை அரெஸ்ட் பண்ணி கூட்டிட்டு போய் உன்னை ஜெயிலில் தூக்கி போட்டுருவாங்க..."

சிறை என்றதும் அந்தச் சிறுமி பயந்து போனாள்... அதன் பின் வெளி உலகம் தெரியாத அந்தச் சிறுமியை அடக்குவது அந்தக் கயவனுக்கு வெகு சுலபமாகப் போய் விட்டது...

ஜெய்சிம்மன் பத்துத் தினங்கள் கழித்து ஊருக்கு சென்று விட்டார்... ஆனால் அவர் ஏற்படுத்திய காயம் அந்தச் சிறுமியின் மனதில் ஆறாத ரணமாய்... எப்போதும் புன்னகை முகத்துடன் பட்டாம்பூச்சியாய் மகிழ்ச்சியுடன் பறந்து திரிந்த அவளின் சிறகுகளைச் சிறிதும் இரக்கமின்றி வெட்டி எறிந்து விட்டு சென்று விட்டான் அந்தக் காமுகன்... சிறகுகள் வலுக்கட்டாயமாய் வெட்டப்பட்டதன் வலியை பட்டாம்பூச்சியால் மட்டுமே உணர முடியும்...

"ஜெகதா... சீக்கிரம் குளிச்சிட்டு வா..."

சமையல்க்கார அம்மாள் குளியலறை கதவை தட்டியதும் சுயவுணர்வு பெற்றவளாய் விழிகளைத் துடைத்துக் கொண்டு அவசரமாய்க் குளித்து முடித்து வெளியில் வந்தாள்... அந்த அம்மாள் ஏற்கெனவே அவளுக்காகப் புதுத் துணி எடுத்து வைத்திருந்தார்... அதை உடுத்தி கொள்ளச் சொல்லி அவளை வற்புறுத்தியவர் அவளுக்குச் சடை

பின்னி அலங்காரம் செய்து விட்டார்... எதையும் மறுக்கும் மனநிலையிலோ அல்லது ஏற்கும் மனநிலையிலோ அவள் இல்லை... எதிலும் பற்றற்ற மனநிலையில் அவள் இருந்தாள்...

அந்நேரம் சித்தார்த் கையில் சிவப்பு ரோஜா பூவுடன் தனது தேவதையைப் பார்க்க முதல் ஆளாய் எழுந்து வந்து விட்டான்...

"ஹேப்பிப் பேர்த்டே ஜிக்கி..." அவளை அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டு வாழ்த்து கூறியவனைக் கண்டு அவளது இதழ்களில் சிறு புன்னகை எட்டி பார்த்தது...

"ஜிக்கி... இன்னைக்கு என்ன ஸ்பெசல்...?"

தனது பிறந்தநாள் போன்று அவளின் பிறந்தநாளை எண்ணி கொண்டு அவன் கேட்டான்... அவனுக்குத் தெரியாதே அநாதை பெண்ணிற்குப் பிறந்தநாள் சிறப்பு விருந்து எதுவும் கிடையாது என்று...

"உனக்கு என்ன வேணும் சித்து...?"

"எனக்கு நீ தான் வேணும்... நீ எப்பவும் என் கூடவே இருக்கணும் ஜிக்கி..."

தேவைக்கு அதிகமாய் எல்லாம் பெற்றிருக்கும் அந்தச் சிறுவனுக்கு அவளின் அன்பு மட்டுமே தேவையாய் இருந்தது...

"சித்துத் தம்பி... ஜெகதா கல்யாணமாகி போய் விட்டால் நீங்க என்ன பண்ணுவீங்க...?" என்று சமையல்க்கார அம்மாள் அவனைக் கேலி செய்து சிரிக்க... அதைக் கேட்டு சித்தார்த்தின் முகம் வாடி போயிற்று...

"அப்படியா ஜிக்கி...? நீ என்னை விட்டு போய் விடுவியா...?"

"இல்லை சித்து... உன்னை விட்டு நான் எங்கேயும் போக மாட்டேன்... அவங்க பொய் சொல்றாங்க..." என்று ஆறுதல் வார்த்தை கூறி அவனை அணைத்து கொண்டாள் சின்னவள்...

திருமணம் என்பது பற்றி எல்லாம் அவள் யோசிக்கக் கூட இல்லை... திருமணத்திற்கும், தனது வேதனைக்கும் சம்பந்தம் உண்டு என்று கூட அந்தச் சிறுமியால் சிந்திக்க முடியவில்லை... அப்படிச் சொல்வதை விட அது பற்றி அவளுக்குச் சிந்திக்கத் தெரியவில்லை... திருமணம் பற்றித் தெரியும்... ஆனால் தாம்பத்திய வாழ்க்கை என்றால் என்ன என்று அவளுக்குத் தெரியாது...

அன்று மாலை பள்ளிக்கு போய் விட்டு வந்த சித்தார்த் முதல் வேலையாக ஜெகதீஸ்வரியை தேடி வந்தான்...

"ஜிக்கி... வா நாம கல்யாணம் பண்ணிக்கலாம்..." திடுமென அவன் கூறியது கேட்டு அவள் புரியாது விழித்தாள்...

"இந்த வயசில் இப்படி எல்லாம் பேச கூடாது சித்துப் பையா..." என்று சோகையாய் சிரித்தவளை கண்டு,

"அப்போ நீ என்னை விட்டு போன பிறகு பேச சொல்லுறியா...? ம்ஹூம் அதெல்லாம் முடியாது..." என்று நிர்தாட்சண்யமாய் மறுத்தவன்,

"ஜிக்கி... நீ என் கூடவே இருக்கணும்ன்னா நாம ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கணுமாம்..." என்ற சித்தார்த்தை புன்னகையுடன் பார்த்தவள்,

"அப்படின்னு உனக்கு யார் சொன்னது சித்து...?"

"என் பிரெண்ட் சொன்னான்..." என்று விகல்பம் இல்லாது கூறினான் சிறுவன்... அவளைத் தன்னுடன் தக்க வைத்துக் கொள்ள வேண்டி அவன் எதையும் செய்யத் தயாராக இருந்தான்...

அவனது வார்த்தையில் அவளுக்குச் சிரிப்பு வந்தது... அவனின் வயது என்ன...? அவளின் வயது என்ன...? வாண்டு பையனின் ஆசையைப் பார் என்று மனதிற்குள் செல்லமாய் அவனை வைது கொண்டாள்...

"நாம ரெண்டு பேரும் கல்யாணம் எல்லாம் பண்ணிக்க முடியாது சித்து..."

"அதெல்லாம் முடியும்..."

"ம்ஹூம் அது முடியாதே சித்து..." என்று உறுதியாக மறுத்தவள்,

"எனக்கு ஒரே ஒரு ஆசை தான் சித்து..."

"எதுவா இருந்தாலும் சொல்லு ஜிக்கி... உனக்காக நான் எதையும் செய்வேன்..." என்றான் அவன் பெரிய மனித தோரணையுடன்...

"அடுத்த ஜென்மம்ன்னு ஒண்ணு இருந்தா நான் உனக்கு மகளாய் வந்து பிறக்கணும் சித்து..." கண்ணீர் வழிய கூறியவளின் கண்ணீருக்கான காரணம் சின்னவனுக்குப் புரியவில்லை...

தன் மீது மாசற்ற அன்பை பொழியும் சித்தார்த் மட்டுமே தனக்கு அடுத்த ஜென்மத்தில் தந்தையாக வர வேண்டும் என்று எண்ணியது அந்தச் சின்னஞ்சிறு உள்ளம்... தன்னை அன்பாக, பாசமாக, பாதுகாப்பாகப் பார்த்துக் கொள்ள அவன் தனக்குத் தந்தையாக வேண்டும் என்று அவளது மனம் பேராசை கொண்டது...

அநாதை சிறுமி வேண்டியது எல்லாம் அன்பு மற்றும் பாதுகாப்பு... இப்போதைக்கு அவளுக்கு அதைக் கொடுப்பவன் சித்தார்த் மட்டுமே... அதனால் தான் வயதில் இளையவனாய் அவன் இருந்த போதும் அவள் அவனைத் தனது தந்தை ஸ்தானத்தில் வைத்து பார்த்தாள்...

"எப்படியோ நீ என் கூடவே இருந்தா போதும்..." என்றான் சின்னவன் நிம்மதியாய்...

மாதங்கள் உருண்டோடியது... நேற்று முன் தினம் தான் சித்தார்த்தின் ஒன்பதாவது பிறந்த நாளை விமர்சையாகக் கொண்டாடி இருந்தனர்... ஜெகதீஸ்வரிக்கு ஏனோ உடல் சோர்ந்திருந்த போதும் சித்தார்த்திற்காக ஓடியாடி வேலை செய்தாள்... அவனது மகிழ்ச்சிக்காக அவள் தனது துன்பத்தைப் பொறுத்து கொண்டாள்...

இதோ இப்போதும் உடல் சோர்வினை தந்தது... உணவு உண்ண பிடிக்காது அப்படியே எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்... அப்போது அவளது வயிற்றில் திடுமென ஒரு அசைவு... உருள்வது போல்... சிறு பெண்ணிற்கு அது வலிப்பது போல் பெரும் அவஸ்தையாக இருந்தது... அதனால் பயத்துடன் தனது வயிற்றைப் பார்த்தாள்... அடுத்தடுத்து அந்த அசைவுகள் தொடரவும் தனக்கு ஏதோ ஆகிவிட்டது என்று எண்ணி அவள் பயந்து போனாள்...

அன்று பார்த்து சமையல்க்கார அம்மாள் ஊருக்குச் சென்றிருந்தார்... அவர் இருந்தாலாவது அவள் தனது அவஸ்தையை அவரிடம் கூறியிருப்பாள்... இப்போது யாரிடம் இதைப் பற்றிக் கூறி பயம் தெளிவது என்று தெரியாது அவள் தவித்தாள்... நேரமாக நேரமாக அவளுக்குப் பயம் கூடி கொண்டே போனது... அதனால் வேறுவழியின்றி தெய்வநாயகியிடம் சென்று அவள் விசயத்தைக் கூறினாள்...

விசயம் கேள்விப்பட்ட அவர் அவள் கூறியதை கேட்டு அதிர்ச்சி அடைந்து முதலில் வயிற்றில் கை வைத்து பார்த்தவர் திகைத்து போனவராய் வேகமாய் அவளது நாடியை பிடித்துப் பார்த்தார்... நாடி துடிப்புச் சொன்னது சிறுமி கர்ப்பமாக இருப்பதை... அவ்வளவு தான் ஆத்திரத்தில் அவளை அடித்து நொறுக்கி விட்டார்...

"அநாதை சிறுக்கி உனக்கு வீட்டில் இருக்க இடம் கொடுத்து, வயித்துக்குச் சாப்பாடு போட்டு சொகுசா வச்சிருந்தால் சும்மா இருக்க முடியலையா...? கடைசியில் ஊர் மேயுற நாய் அது புத்தியை காட்டிருச்சு... எங்கே போய் இப்படிக் கெட்டு போன...? வயசுக்கு வந்து ஒரு வருசம் கூட ஆகலை... அதுக்குள்ள உனக்கு ஆம்பிளை சுகம் கேட்குதா..." என்று தனது கைத்தடி வைத்து அவளை அடி பின்னி எடுத்து விட்டார்...

"பாட்டிம்மா... நான் எந்தத் தப்பும் பண்ணலை..." என்று அடி தாங்க முடியாது அவரது காலில் விழுந்து கெஞ்சி

கதறியழுதவளை கண்டு அவர் கொஞ்சமும் இரக்கம் காட்டவில்லை...

"இந்தக் குழந்தைக்குத் தகப்பன் யாருடி...?"

"குழந்தையா...?" என்று பேந்த பேந்த விழித்தாள் அந்த அறியா சிறுமி...

"செய்யறது எல்லாம் செஞ்சிட்டு இப்படி ஒண்ணும் தெரியாத மாதிரி முழிச்சா நான் நம்பிருவேனா...? உன் வயித்தில் வளரும் குழந்தைக்குத் தகப்பன் யாருடி...?"

அவர் கூறியதும் அவள் அதிர்ச்சியுடன் தனது வயிற்றைப் பிடித்துக் கொண்டாள்... குழந்தையா...? அதுவும் தனது வயிற்றிலா...? அவளால் அதை ஜீரணிக்க முடியவில்லை... அப்படியொரு பயம் எழுந்தது அவளுக்கு... இயற்கை தவறியதை கூட உணர தவறியவளுக்கு இதை மட்டும் எப்படி உணர்ந்திருக்க முடியும்...?

"தெரியலை பாட்டிம்மா..." என்று பயத்துடன் கூறியவளை கண்டு திகைத்துப் போய்ப் பார்த்தார் அவர்...

"குழந்தை உண்டானது உனக்குத் தெரியலை... சரி... ஆனா குழந்தையைக் கொடுத்தவனையும் தெரியாதுன்னு சொல்ற பார்த்தியா... உனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருக்கணும்..." என்று கூறி அதற்கும் அவர் அடிக்க...

"இப்பவும் சொல்றேன் பாட்டிம்மா... எனக்கு இந்தக் குழந்தை எப்படி வந்ததுன்னு தெரியலை... யாரோ நான் தூங்கும் போது என் வயித்தை கிழிச்சு வச்சிட்டாங்க போலிருக்கு..." என்று வெகுளியாய் கூறியபடி அழுதவளை கண்டு கல்மனம் கொண்ட தெய்வநாயகி கூட ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனார்...

வெளியுலகம் தெரியாது வளர்ந்தவளுக்கு எந்தவொரு கெட்டதும் தெரியவில்லை... அவள் வாழ்க்கையில் அடிப்பட்டு இருந்தாலும் இது மாதிரி இழிநிலையை இதுநாள் வரை அவள் கண்டது இல்லையே...

கண்டிருந்தால் ஜெய்சிம்மனிடம் இருந்து தன்னைக் காத்திருப்பாளோ...

"உன்னை யாரும் தப்பா தொட்டாங்களா...?" பாட்டிம்மாவின் வார்த்தை சற்று இறங்கி போய் ஒலித்தது...

அதைக் கேட்டதும் அவள் ஓவென்று அழ துவங்கினாள்... ஆனால் தனக்கு நேர்ந்த அவலத்தை அவரிடம் சொல்ல பயந்தாள்... ஏனெனில் ஜெய்சிம்மன் அவரது மருமகனன்றோ...

"உண்மையைச் சொல்ல போறியா...? இல்லையா...?" என்று அவர் அதட்டி மிரட்டவும் வேறுவழியின்றிச் சின்னவள் பயத்துடன் தன்னைப் பலவந்தப்படுத்திய ஜெய்சிம்மனின் கொடூரத்தை எடுத்துரைக்க... பெரியவர் அதிர்ந்து போய்ச் சிலையாய்ச் சமைந்தார்...

ஜெகீஸ்வரியின் கூற்றை அவரால் நம்பாது இருக்க முடியவில்லை... ஏனெனில் அவள் ஒரு வெகுளி பெண், நல்ல பெண், பொய் சொல்ல மாட்டாள் என்று அவருக்கு நன்கு தெரியும்...

அரசல் புரசலாய் மருமகனின் தவறான பழக்கங்கள் ஏற்கெனவே அவருக்குத் தெரிந்து தான் இருந்தது... இது குறித்து அவர் மருமகனிடத்தில் எச்சரிக்கை விடுத்து இருக்கிறார்... ஜெய்சிம்மன் அதை எல்லாம் மறுத்து பேசி விட்டார்... இருந்தாலும் தெய்வநாயகி அதை எல்லாம் நம்பத் தயாராக இல்லை...

அதனால் தான் தனது மகளை மருமகன் நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் மகள் வரும் போது எல்லாம் பெரும் சொத்துக் கொடுப்பது... அதற்காகவாவது மருமகன் சற்று அடங்கி நடக்க மாட்டானா என்கிற நப்பாசை தான் அதற்குக் காரணம்... இந்த விசயத்தை மகன் மற்றும் மகளுக்குத் தெரியாமல் பார்த்துக் கொண்டார் அவர்...

ஆனால் சொந்த வீட்டில் ஒரு சிறு பெண்ணிடம் இத்தகைய கொடூரத்தை அரங்கேற்றிய மருமகனின் செயலை அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை... இப்போதும் அவரது மனம் சின்னவளுக்காகத் தவிக்காது அவரது மகளின் வாழ்க்கையை எண்ணி தவித்தது... அவருக்கு அவரது மகள் முக்கியம்... அவர்களது கௌரவம் முக்கியம்... அதில் அந்த அநாதை சிறுமியின் நலன் பின்னுக்குப் போய் விட்டது...

"வீட்டை விட்டு வெளியில் போ நாயே... எங்கோ போய்க் கெட்டு விட்டு நீ என் மருமகன் மீதா குற்றம் சுமத்துற... ஓடுகாலி நாயே..." என்று அடக்கப்பட்ட குரலில் சீறியவர் அடுத்த நொடி சின்னவளின் முடியை பற்றித் தரதரவென இழுத்துக் கொண்டு வெளியில் சென்றார்...

"பாட்டிம்மா வலிக்குது..." என்று கதறியபடி உடன் நடந்தவளின் கதறல் அவரது மனதினில் இரக்கத்தினை அளிக்கவில்லை... மாறாக அவர் மனதினை கடினப்படுத்திக் கொண்டார்... அவருக்கும் வேறுவழியில்லை வாழாவெட்டியாக இருக்கும் மகளின் தோற்றமே அவரது மனதில் நின்று கொன்றது...

"இத்தோடு இந்த வீட்டுக்கும் உனக்குமான உறவு முடிந்தது... போ..." என்றவரின் காலில் விழுந்து அழுதாள் அவள்...

"எனக்கு எங்கே போகணும்ன்னு கூடத் தெரியாது பாட்டிம்மா... எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு..." என்று கெஞ்சியவளை அவர் காலால் எட்டி உதைத்தார்...

அப்போது தான் அங்கு வந்து நின்ற காரில் இருந்து இறங்கிய நரசிம்மனை கண்டதும் ஜெகதீஸ்வரி ஓடி சென்று அவரது காலில் வந்து விழுந்தாள்... அவரை ஜெய்சிம்மன் என்று நினைத்துக் கொண்டு அவரிடம் அவள் கெஞ்சினாள்...

"ஐயா... என்னை வீட்டை விட்டு துரத்த வேண்டாம்ன்னு பாட்டிம்மா கிட்ட சொல்லுங்க... நீங்க சொன்னா அவங்க கேட்பாங்க..." என்று அவள் கதற...

அதற்குள் தெய்வநாயகி காவலாளியை அழைத்து அவளை வீட்டை விட்டு வெளியில் தள்ள சொன்னார்... காவலாளி ஜெகதீஸ்வரியை இழுத்துக் கொண்டு செல்ல, அந்தச் சின்னப் பெண்ணைக் கண்டு நரசிம்மனுக்குப் பாவமாக இருந்தது...

"என்ன தப்புச் செய்திருந்தாலும் சின்னப் பெண் அவளை வீட்டை விட்டுப் போகச் சொல்றது சரியில்லை அத்தை..."

அதைக் கேட்டுப் பேயறைந்தது போல் தெய்வநாயகியின் முகம் மாறியது... நொடியில் சமாளித்துக் கொண்டவர்,

"நீங்க உள்ளே வாங்க மருமகனே... அது ஒரு திருட்டு கழுதை... கையும் களவுமா பிடிச்சும் திருட்டை ஒத்துக்க மாட்டேங்கிறாள்... இவளை எல்லாம் வீட்டை விட்டு வெளியில் அனுப்பினால் தான் புத்தி வரும்... நீங்க உட்காருங்க... அப்புறம் ஊரில் எல்லோரும் நல்லா இருக்காங்களா...? உங்க பொஞ்சாதியை கூட்டிட்டு வரலையா...?"

தனது தவறினை மறைக்க அவர் கேள்விகளை அடுக்கி கொண்டே போனார்...

நரசிம்மனும், கார்த்திகாயினியும் சேர்ந்து தான் சென்னை வந்தது... முக்கியமான மருத்துவக் கூட்டம் ஒன்றிற்காக மனைவியை அழைத்து வந்தவர் அப்படியே நிலத்தில் விளைவித்த பொருட்களைக் கொடுப்பதற்காக இங்கு வந்திருந்தார்... உடன் வருவதாகச் சொன்ன மனைவியை வேண்டாம் என்று தடுத்து விட்டு தான் மட்டும் இங்கே வந்தார்... விமலாராணியும் தெய்வநாயகியும் குணத்தில் ஒரே மாதிரி என்பதால் நரசிம்மன் மனைவியை அழைத்து வரவில்லை...

தெய்வநாயகி கேட்ட கேள்விகளுக்குப் பதில் கூறிவிட்டு பத்து நிமிடத்தில் அங்கிருந்து கிளம்பி விட்டார் நரசிம்மன்...

காரில் செல்லும் போது தான் அவர் அந்தக் காட்சியைக் கண்டது... வீட்டில் இருந்து சற்றுத் தொலைவில் இருந்த

பேருந்து நிலையத்தில் அழுது கொண்டு நின்றிருந்த ஜெகதீஸ்வரியை கண்டு அவரது மனம் இரங்கியது... அதற்கு அவளது சிறு வயது ஒரு காரணம்... சென்னை நகரத்தில் நடக்கும் கொடுமைகளை அவர் தான் தினந்தோறும் செய்தித்தாள்களில் படிக்கிறாரே... அதனால் காரை நிறுத்த சொல்லிவிட்டு இறங்கியவர் அவள் அருகே சென்றார்...

"என் கூட வர்றியாம்மா...?"

ஏனோ அறியாமையுடன் இருக்கும் அந்தச் சிறு பெண் தவறு செய்திருக்க மாட்டாள் என்றே அவருக்குத் தோன்றியது... ஊருக்கே தீர்ப்புச் சொல்பவர் அவர்... ஒருவரின் முகத்தை வைத்து அவர் நல்லவரா, கெட்டவரா என்பதை அவர் சரியாகக் கணித்து விடுவார்... அது தான் அவளது விசயத்திலும் நடந்தது... தெய்வநாயகியின் தடுமாற்றம்... சின்னவளின் அப்பாவி தோற்றம், நெஞ்சுருக்கும் கதறல் எல்லாம் அவருக்கு உண்மை வேறு என்று சொல்லாமல் சொல்லியது... அதனால் தான் அவர் அப்படிக் கேட்டது...

அவர் கூறியதை கேட்டு அவள் அச்சத்துடன் அங்கிருந்த தூணுடன் ஒட்டி கொண்டாள்... அவரை ஜெய்சிம்மன் என்று கருதி அவருடன் செல்ல அவள் பயந்தாள்...

நரசிம்மனை பொருத்தவரையில் அவள் யாரோ ஒரு பெண் தான்... ஆனாலும் அவளைத் தனியே விட்டு செல்ல மனம் இல்லாது கார் ஓட்டுநரிடம் விடுதியில் தங்கியிருக்கும் தனது மனைவியை அழைத்து வர சொன்னார்...

முக்கால் மணி நேரம் கழித்து அங்கு வந்து சேர்ந்தார் கார்த்திகாயினி... அவரைக் கண்டதும் தான் ஜெகதீஸ்வரி அவர்களுடன் வர சம்மதித்தாள்... நரசிம்மன் வேறு, ஜெய்சிம்மன் வேறு என்று அப்போது தான் அவளுக்குப் புரிந்தது... ஏனெனில் அவள் அவர்கள் இருவரையும் அவர்களது திருமணத்தில் பார்த்திருக்கிறாளே... அதனால் அவர்களுடன் நம்பிக்கையாய் சென்றாள்...

விடுதிக்கு வந்து அவளுக்கு உணவு வாங்கிக் கொடுத்து மெதுவே என்ன விசயம் என்று விசாரித்த கார்த்திகாயினி அவள் கூறிய விசயம் கேள்விப்பட்டு அதிர்ச்சியாகி போனார்... அதை அப்படியே அவர் தனது கணவரிடமும் கூறினார்... நரசிம்மன் ஆத்திரத்தில் நரசிம்மனாகவே மாறிப் போனார்...

"எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால் ஒரு சின்னப் பெண் என்று கூடப் பார்க்காமல்...? இவனை..." என்று கோபமாய்க் கத்தியவரை சமாதானப்படுத்திய கார்த்திகாயினி,

"முதலில் இந்தப் பெண்ணுக்கு என்ன செய்ய வேண்டும் என்று யோசிப்போம்... அதன் பிறகு உங்க தம்பியை கவனிக்கலாம்..."

"இது அவள் செஞ்ச பாவமல்ல கார்த்திகா... இது அவனுடைய பாவம்... முதலில் இதை அழித்து விடுங்க... இந்தச் சின்னப் பெண்ணிற்கு இவ்வளவு பெரிய பாரம் வேண்டாம்... நாம் அவளை நன்றாகப் படிக்க வைத்து நல்ல பையனா பார்த்துக் கல்யாணம் பண்ணி வைப்போம்... அவள் செய்யாத தவறுக்கு அவள் சிலுவை சுமக்க வேண்டாம்... குழந்தையை அழித்து விடுங்க..." என்று கூறிய கணவனைப் பெருமையுடன் பார்த்தார் கார்த்திகாயினி...

அங்கேயே அவரது தோழி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று ஜெகதீஸ்வரிக்குப் பரிசோதனை செய்த போது கர்ப்பம் கலைக்கும் நிலையைத் தாண்டி இருந்தது... அதாவது ஐந்தாவது மாதம் முடிந்திருந்தது... ஆனால் வயிறு பெரிதாகக் காட்டி கொடுக்காததால் யாரும் அவளைச் சந்தேகிக்கவில்லை... கார்த்திகாயினிக்கு மிகவும் வருத்தமாக இருந்தது...

அடுத்து என்ன செய்வது என்று தெரியாது விழித்தார் அவர்... கணவரிடம் அதைக் கூறிய போது நரசிம்மன் ஒரு நொடி கூட யோசிக்கவில்லை...

"அவளது உயிருக்கு ஆபத்து என்றால் குழந்தையைப் பெற்று கொள்ளட்டும்... அந்தக் குழந்தை பூமிக்கு வந்தது முதல் அது நம் குழந்தை... ஜெகதாவுக்கும் அதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை... அதன் பின் அவள் ஒரு சுதந்திர பறவை... அவளுக்கான வாழ்வை அவள் சந்தோசமாக வாழ வேண்டும்..." என்றவர் மனைவியிடம்,

"எனக்காக இதைச் செய்வீங்களா கார்த்திகா...?" என்று அவர் கண்கள் கலங்க கேட்ட போது கார்த்திகாயினி அழுது விட்டார்...

கம்பீரமான ஆண்மகன் தனது தம்பி செய்த தவறுக்காகக் கண் கலங்குவது கண்டு அவரால் பொறுக்க முடியவில்லை...

"உங்களுக்காக நான் இதைச் செய்ய மாட்டேனா... இனி அது நம் குழந்தைங்க..." என்று கூற... அதைக் கேட்டு நரசிம்மன் மனதில் அத்தனை நிம்மதி...

ஜெகதீஸ்வரியை நிம்மதியாக உறங்க சொன்ன போது அவள், "இப்போ சித்து ஸ்கூலில் இருந்து வந்திருப்பான்... வந்ததும் முதலில் என்னைத் தான் தேடுவான்..." என்று தான் வளர்த்த குழந்தையை நினைத்துக் கவலைப்பட்டது அந்தக் குழந்தை...

"இனி நீ அங்கே போக முடியாது ஜெகதா... சித்துக் கொஞ்ச நாள் உன்னைத் தேடுவான்... அதுக்குப் பிறகு சரியாகி விடுவான்..." என்று கார்த்திகாயினி அவளைச் சமாதானம் செய்தார்...

அதைக் கேட்டு அரைக் குறை மனதுடன் சமாதானமானவள் உறங்கி போனாள்...

ஜெகதீஸ்வரி நினைத்தது தான் அங்கே நடந்தது... அவளைக் காணாது சித்தார்த் வீட்டை இரண்டு படுத்திக் கொண்டிருந்தான்...

"ஜிக்கி... ஜிக்கி..." என்று வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் அவளைத் தேடியபடி பைத்தியக்காரன் போல் கத்தி

கொண்டு ஓடினான்...

அவனது ஜிக்கி சொன்னது போல் அவனது ஒரு குரலுக்கு மட்டுமல்ல பல குரலுக்கும் அவள் ஓடி வரவில்லை... மாறாக அவன் தான் கத்தி கத்தி ஓய்ந்து போனான்... சத்தியம் செய்த அவள் அதன் பின் அவனைப் பார்க்க வரவே இல்லை...

"எனக்கு ஜிக்கி வேணும்..." என்று நாள் முழுவதும் அழுது அடம் பிடித்தவனைக் கண்டு,

"இப்படியே அழுதுக்கிட்டு இருந்த உன்னை ஹாஸ்டலில் சேர்த்து விடச் சொல்லிருவேன்..." என்று தெய்வநாயகி மிரட்டினார்...

அந்த வார்த்தையில் அவன் சற்று அடங்கினான்... ஆனாலும் ஜிக்கி மீதான அவனது நினைப்பை அழிக்க யாராலும் முடியவில்லை... நீறு பூத்த நெருப்பாக அவளது நினைவு அவனது அடி நெஞ்சில் கனன்று கொண்டிருந்தது... ஏனெனில் அவளுக்கும் அவனுக்குமான ஆத்மார்த்த பந்தம் அப்படிப்பட்டது...

****

ஜெகதீஸ்வரியை பாதுகாப்பாய் தங்க வைப்பதற்காக நரசிம்மன் யோசித்த போது கார்த்திகாயினி தனது அண்ணன் வீட்டில் தங்க வைக்கலாம் என்று ஆலோசனை கூறினார்...

"ம்ஹூம்... அது சரி வராது... இந்த விசயம் நம் இருவர் சம்பந்தப்பட்டவங்களுக்குத் தெரியாமல் இருப்பது தான் நல்லது..."

கணவர் கூறியதும் சிறிதும் நேரம் யோசித்தவர், "என்னோட சீனியர் திருச்சூரில் ஹாஸ்பிட்டல் வைத்திருக்கிறாங்க... ஜெகதாவை அங்கே கூட்டிட்டு போகலாமா...?"

"அடுத்தவங்க வீட்டில் எப்படி...?"

"நான் ஏற்கெனவே அங்கே வேலை பார்த்திருக்கிறேன்... அப்போது நான் அவங்க வீட்டில் தங்கி இருந்து தான் ஹாஸ்பிட்டல் போவேன்... இரண்டும் அருகே அருகே தான்... அவங்க ரொம்ப நல்ல மாதிரி... நீங்க கவலைப்படத் தேவையே இல்லை... அதும் போக ஜெகதாவை தனியே விடப் போவதாய் யார் சொன்னது...? நான் அவள் கூடவே இருந்து கவனமாய்ப் பார்த்துக்கிறேன்... இனி அவள் என் பொறுப்பு... நம் மகள் போல் நான் அவளைப் பத்திரமா பார்த்து கொள்கிறேன்..."

கார்த்திகாயினி கூறுவது போல் சின்னவள் அவர்களுக்கு மகள் போன்றவள் தான்...

"ரொம்ப நன்றி கார்த்திகா..." மனம் நெகிழ்ந்து நன்றி உரைத்தவரை கண்டு சிரித்தவர்,

"நமக்குள் நன்றி எல்லாம் தேவையில்லைங்க..."

அடுத்த இரு நாட்களில் ஜெகதீஸ்வரி மற்றும் கார்த்திகாயினியை திருச்சூரில் கொண்டு போய் விட்ட நரசிம்மன் அவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து விட்டு கிளம்பினார்...

தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்று கூடத் தெரியாமல் ஜெகதீஸ்வரி தனக்குள் கவலையில் உழன்று கொண்டு இருந்தாள்... அது நிச்சயம் அவளைப் பற்றிய கவலை இல்லை... அது சித்தார்த்தை பற்றிய கவலை மட்டுமே... சித்தார்த் தான் இல்லாது நொடி நேரம் கூட இருக்க மாட்டானே என்று அவள் உள்ளுக்குள் தவித்துப் போனாள்... இனி அவனைப் பார்க்க முடியாதே என்று மனம் மருகி போனாள்...

அவளது உணர்வை அவனும் உணர்ந்தானோ என்னவோ... அவனும் அது போல் தான் அவளின் வருகைக்காக, அன்பிற்காக ஏங்கி கொண்டிருந்தான்... ஏனெனில் அவன் மீண்டும் பணக்கார அநாதையாகி போனான்...

இதற்குள் தெய்வநாயகி தனது மருமகனை தொலைப்பேசியில் அழைத்து எச்சரித்தார்...

"இந்த விசயத்தை யாருக்கும் தெரியாமல் மூடி மறைத்து விட்டேன்... அந்த அநாதை கழுதையையும் விரட்டி அடித்து விட்டேன்... அதனால் இது யாருக்கும் தெரியாது... விமலா கிட்ட நானா எதுவும் சொல்ல போவதில்லை... நீங்களும் எதுவும் சொல்லாதீங்க... இது அத்தனையும் நான் செய்வது என் பொண்ணு வாழ்க்கைக்காகத் தான்... அவளை நீங்க சந்தோசமா வச்சிக்கோங்க... உங்களுக்கு என்ன குறை இருந்தாலும் உடனே சொல்லுங்க... நான் செய்யறேன்... ஆனா நீங்க எனக்குச் செய்ய வேண்டியது ஒண்ணே ஒண்ணு தான்... என் மகளைச் சந்தோசமா வச்சிக்கிறது மட்டும் தான்..."

அந்தக் கணம் கூட அவரது மனம் மருமகன் அதைப் பொய்யென்று கூற மாட்டானா என்று ஆசை கொண்டது... அவரது ஆசையை நிராசையாக்கினான் அந்தக் கொடூரன்...

"அது ஏதோ தெரியாம சபலத்தில் நடந்தது அத்தை... இனி இது மாதிரி தவறை நான் செய்ய மாட்டேன்..." என்று பொய்யாய் வாக்குறுதி கொடுத்தான் அந்தக் கயவன்...

அதன் பிறகு ஜெய்சிம்மன் எந்தவித உறுத்தலும் இல்லாது உல்லாசமாக இருந்தார்... சின்னப் பெண்ணை இந்தக் கதிக்கு ஆளாக்கிய குற்றவுணர்வு அவருக்குக் கொஞ்சமும் இல்லை... விமலாராணி அந்த அயோக்கிய கணவனை முழுதாய் நம்பியது அவரது தூரதிர்ஷ்டமே... ஜெய்சிம்மனின் அதிர்ஷ்டமே...

ஊருக்கு திரும்பிய நரசிம்மன் தனது தம்பி அவனது மாமியாரிடம் பேசியது அனைத்தையும் கேட்டு விட்டார்... அதைக் கேட்டு அவர் மனம் மருகி நின்றது ஒரு கணம் தான் மறு கணம் தனது நரசிம்ம அவதாரத்திற்கு நாள் குறித்தார்... இரணியனின் வயிற்றைக் கிழித்துக் குடலை உருவி மாலையாகப் போடுவதற்காக அவர் சரியான சமயம் பார்த்துக் காத்திருந்தார்...

அதற்கான நாளும் வந்தது... நண்பர்களுடன் தோட்டத்து வீட்டில் மது அருந்தி விட்டு அங்கேயே படுத்து உறங்கி விட்ட ஜெய்சிம்மனின் கையை, காலை கட்டி தூக்குவது ஒன்றும் கஷ்டமான வேலையாக இல்லை... நரசிம்மன் தனி ஒரு ஆளாக இதைச் செய்தார்...

அங்குத் தோட்டத்திற்குக் காவல் காப்பதற்காக வளர்த்து வரும் வேட்டை நாய்கள் இருக்கும் இடத்திற்குத் தம்பியை தூக்கி வந்தவர் அந்தப் பெரிய தோட்டத்தில் தம்பியை படுக்க வைத்துக் கை கட்டினை மட்டும் அவிழ்த்து விட்டு கால் கட்டினை அவிழ்க்காது விட்டு விட்டார்... பின்னர்க் கட்டி வைக்கப்பட்டிருந்த வேட்டை நாய்களை அவிழ்த்து விட்டார்... நரசிம்மனை மட்டுமே பழகி இருந்த அந்த நாய்களுக்கு ஜெய்சிம்மன் யார் என்று தெரியாது போனது...

சுமார் பதினைந்து நாய்கள் ஒன்று சேர்ந்தார் போன்று அவர் மீது பாய்ந்தது... அதில் மது போதை தெளிந்த ஜெய்சிம்மன் ஆவென்று அலறியபடி தப்பித்துச் செல்ல முயன்றார்... அந்தோ பரிதாபம் அப்படிச் செல்ல முடியாதபடி அவரது கால்கள் கட்டப்பட்டு இருந்தது... கட்டப்படாத கைகளைக் கொண்டு நாய்களை விரட்டியடிக்க முனைந்தார்... அவர் நீட்டிய கைகளை ஆளுக்கொரு பக்கமாய் இரு நாய்கள் கடித்துக் குதறியது... மீதமிருந்த நாய்கள் அவரது உடலை சல்லடையாக்கியது... அதில் ஒரு நாய் அவரது உயிர்நாடியை கடித்துக் குதறிய போது அவர் உயிர் போகும் வலியில் துடித்து அலறினார்...

அதைக் கண்டு சிறிதும் அசைந்து கொடுக்காது கண்கள் சிவக்க ஆக்ரோசமாய் நின்றிருந்தார் நரசிம்மன்... அந்தக் கணம் அவரது மனதில் தம்பி என்கிற சொந்தம், அவர் பெற்ற மக்களின் பூ முகம் இது எதுவும் தோன்றவில்லை... அவரது மனக்கண்ணில் சோக சித்திரமாய்க் குழந்தையைச் சுமந்து கொண்டிருக்கும் அந்த அப்பாவி சிறுமியின் முகமே தோன்றி அவரை வதைத்தது... ஊருக்கே தீர்ப்பு சொல்லும் குடும்பத்தில் பிறந்தவரின் இரத்தம் துடித்தது அந்த அபலை சின்னஞ்சிறு பெண்ணிற்கான நீதி வேண்டி...

அந்தக் கணம் நரசிம்ம அவதாரம் எடுத்து இரணியனை வதம் செய்த திருப்தி மட்டுமே அவரது நெஞ்சு முழுவதும் வியாபித்து இருந்தது...

குற்றுயிராய் கிடந்த தம்பியை பார்த்தவரின் விழிகளில் திருப்தி வந்தது... மெல்லிய சீட்டிகை ஒலி எழுப்பினார்... என்னே அதிசயம்...! வேட்டை நாய்கள் நாய்க்குட்டியாய் மாறி அமைதியாகத் தங்களது இடத்திற்கு ஓடி சென்றது...

"நரசிம்மா... நான் உனக்கு என்ன கெடுதல் செஞ்சேன்... ஏன் என்னை இப்படிப் பண்ணின...? இதற்கு என்னை ஒரேடியாய் கொன்று விடு... வலிக்கிறது ரொம்ப வலிக்கிறது... என்னைக் கொன்று விடு நரசிம்மா..."

கையெடுத்து கும்பிட்டு கெஞ்ச முடியாதபடி ஜெய்சிம்மனின் கைகள் இரண்டும் சிதைந்து போயிருந்தது... வலியில் அரை மயக்கத்துடன் அவர் முனங்கினார்...

"நீ எனக்கு எந்தக் கெடுதலும் பண்ணவில்லை... அப்படியே நீ பண்ணி இருந்தாலும் நான் பொறுத்து போவேன்... ஆனால் நீ கெடுதல் செஞ்சது ஒரு சிறு பெண்ணிற்கு... அதுவும் மகள் வயதில் இருக்கும் சின்னப் பூவிற்கு... இத்தனை மூர்க்கத்தனம் உன்னுள் எப்படி வந்தது ஜெய்...? என்னை வளர்த்த அதே பெற்றோர் தானே உன்னையும் வளர்த்தாங்க... உன் புத்தி மட்டும் ஏன் இப்படிப் புல் மேய போனது...? உன்னை இன்னும் உயிரோடு விட்டு வைத்திருந்தால் ஜெகதாவை போன்று எத்தனை அப்பாவி பெண்களின் வாழ்க்கையைச் சீரழிப்பாயோ...? எனக்குத் தெரிந்து ஒரு ஜெகதா... தெரியாதது எத்தனை ஜெகதாக்களோ...? நீ எல்லாம் உயிருடன் இருப்பதே அவமானம்..."

"உனக்கு வலிப்பது போல் தானே அந்தச் சின்னப் பெண்ணிற்கும் வலித்திருக்கும்... அவளும் இப்படித் தானே கதறி துடித்திருப்பாள்... உன்னிடம் கெஞ்சியிருப்பாள்... நீ அவளுக்காக இரங்கினாயா...? சொல்...? அப்படி என்றால் நான் உனக்காக இரங்குகிறேன்... இந்த வேட்டை நாய்கள் போன்று தானே நீ அந்தப் பிஞ்சை குதறி எடுத்தாய்... நீ

செய்த பாவத்தின் கணக்கை அவள் சுமக்கிறாள்... அதற்கு உன்னிடத்தில் பதில் இருக்கிறதா...? இப்படிப்பட்ட கொடூரன் உனக்கு எல்லாம் மன்னிப்பே கிடையாது... இப்படி நீ வலியில் துடிக்கத் துடிக்கச் சாவது தான் உனக்கான தண்டனை... அடுத்த ஜென்மத்தில் கூட நீ பெண்களைத் தவறாக நினைக்கக் கூடாது, பார்க்க கூடாது... அதற்காகத் தான் இந்தத் தண்டனை..." என்று ஆக்ரோசமாய்க் கர்ஜித்த நரசிம்மன் தம்பியை திரும்பியும் பாராது சென்று விட்டார்...

"என்னைக் கொன்று விடு நரசிம்மா..."

வேதனையில் அரற்றி துடித்த ஜெய்சிம்மனின் குரல் காற்றோடு கலந்து போயிற்று... வேதனையில், வலியில் அனலிலிட்ட புழுவை போல் துடி துடித்து இறந்து போனான் புழுவிற்குச் சமமான அந்த அற்பன்...

தெய்வம் நின்று கொல்லும்... அரசன் அன்றே கொல்வான்... இது அந்தக் காலம்...

இன்றோ நம் அரசாங்கம் இது மாதிரியான குற்றவாளிகளுக்குச் சொகுசாய் இடம் அளித்து, மூன்று வேளை மூக்குப் பிடிக்கச் சோறு போட்டு அவன் உடலில் இன்னமும் திண்ணக்கத்தை வளர்த்து மேலும் பல பெண்களின் வாழ்க்கையை அவன் சீரழிக்கக் காரணமாக இருக்கிறது...

வேறுவழியின்றித் தனி நபர் சட்டத்தைக் கையில் எடுக்க வேண்டி வருகிறது... குற்றவாளிகளுக்குக் கண்களில் மரணப் பயத்தைக் காட்டினால் தானே தவறுகள் குறையும்... பிறகு அதை ஏன் செய்ய மறுக்கிறது நம் அரசாங்கம்...? முதல் தவறே அதன் பக்கம் இருந்து தான் ஆரம்பிக்கிறதோ... யார் கண்டது...???

"கேளுங்கள் கொடுக்கப்படும்...
தட்டுங்கள் திறக்கப்படும்...
காவல்நிலையத்தில் நியாயம் கேட்டோம்...
நீதிமன்றத்தின் கதவை தட்டினோம்...

நியாயம் அநியாயமாய் மாறிப் போனது...
நீதி அநீதியாய் மாறிப் போனது...
கேட்காது எடுக்க வேண்டும்...
தட்டாது உடைக்க வேண்டும்...
தீவிரவாதி தானாய் உருவாவதில்லை...
உருவாகப்படுகிறான் புறக்கணிப்பில் இருந்து...
மங்கையவளும் அத்தகைய நிலைக்கு
தள்ளப்பட வேண்டுமோ...
பெண் புரட்சியை வீடு தாங்குமோ,
நாடு தாங்குமோ, உலகம் தாங்குமோ...
விழித்தெழு மனிதா! உன் சக ஜீவராசியை
மதித்திடு...
இன்னொரு பூலான் தேவியை
நீ தாங்கிடுவாயோ...???"

நனவாகும்...!!!

"உங்க கிட்ட கொஞ்சம் பேசணும்...?"

நரசிம்மன் முன் இறுக்கமான முகத்துடன் வந்து அமர்ந்தார் மார்த்தாண்டம்... அவருடன் தெய்வநாயகியும்... நரசிம்மன் அதை விட இறுக்கமாய் அமர்ந்திருந்தார்...

இன்றோடு ஜெய்சிம்மன் இறந்து பதினாறு நாட்கள் ஆகிவிட்டது... அதற்கு வந்தவர்கள் தான் இப்போது அவரிடம் பேச வந்திருப்பது...

நாய்கள் கடித்து இறந்து போன ஜெய்சிம்மனின் மரணத்தை ஊர் மக்கள் யாரும் தவறாக நினைக்கவில்லை... ஏனெனில் அதற்கு முன் தினம் தான் அவர் மது அருந்தி விட்டு முழுப் போதையில் இருந்தது அவரது நண்பர்கள் வாயிலாக எல்லோருக்கும் தெரிய வந்தது... அதனால் போதையில் தவறி போய் அங்குச் சென்று நாய்கள் கடிப்பட்டு அவர் இறந்து விட்டார் என்றே அனைவரும் நினைத்தனர்...

நரசிம்மனும் தம்பியின் இன்னொரு பக்கத்தை எல்லோரிடமும் காட்டி கொடுக்க விரும்பவில்லை... அது பரம்பரை மானத்திற்கு அஞ்சி அல்ல... தம்பி மீது அன்பு வைத்திருக்கும் விமலாராணி மற்றும் தம்பி மக்களுக்காக அதைச் சொல்லாது அவர் மறைத்து விட்டார்...

நரசிம்மனை மீறி காவல்துறை அந்த ஊரில் கால் பதிக்கப் பயப்படும்... அதனால் ஜெய்சிம்மனின் மரணம் ஏதேச்சையாக நடந்தது என்றே கருதப்பட்டது...

விமலாராணிக்கு அப்போது தான் தெரியும் தனது கணவருக்குக் குடி பழக்கம் உண்டு என்று... ஆனால் அதை அவர் நம்ப மறுத்தார்... தனது கணவரை அவரது அண்ணன் தான் சொத்துக்களுக்கு ஆசைப்பட்டுக் கொன்று விட்டார் என்று அவர் அழுது புலம்பினார்... தனக்காக நரசிம்மனிடம் நியாயம் கேட்டு செல்ல வேண்டும் என்று தாயையும், அண்ணனையும் தூண்டி விட்டார்...

நரசிம்மன் இதைச் செய்திருப்பாரா என்று மார்த்தாண்டத்திற்குத் தெரியாது... ஆனால் கணவன் இறந்த பிறகு தங்கை இங்கே தனியாக இருப்பது அவருக்குச் சரியாகத் தோன்றவில்லை... அதனால் சொத்துக்களைப் பிரித்துக் கேட்க வேண்டி அவர் நரசிம்மனிடம் பேச வந்தார்...

"எங்க வீட்டு மாப்பிள்ளைக்கான சொத்துக்களைப் பிரிச்சு கொடுத்துட்டீங்கன்னா நாங்க எங்க வீட்டுப் பொண்ணை எங்க கூடக் கூட்டிட்டு போயிருவோம்..." மெதுவே பேச்சை ஆரம்பித்தார் மார்த்தாண்டம்...

"நாளை இதைப் பத்தி பேசலாமா...?" என்று கூறியபடி இருக்கையில் இருந்து எழுந்த நரசிம்மனிடம் அவரால் மேலே பேச முடியவில்லை... வேறுவழியின்றி அமைதியாக எழுந்து சென்று விட்டார்...

அன்று கிடைத்த தனிமையில் நரசிம்மன் தெய்வநாயகியிடம் பேசினார்...

"உங்க மருமகனை பத்தி உங்களுக்கு நல்லா தெரியும்... அந்தச் சின்னப் பெண் ஜெகதாவை நீங்க ரெண்டு பேரும் ஏமாத்தியதை நான் உங்க மகன் கிட்ட சொன்னால் அவர் உங்க முகத்தில் கூட விழிக்க மாட்டார்... அந்தளவுக்கு அவர் நியாயவான்னு எனக்குத் தெரியும்..." என்ற நரசிம்மனை கண்டு வியர்த்து வழிந்தார் தெய்வநாயகி...

"உங்க மகளை உங்களுடன் கூட்டிட்டு போவது என்றால் கூட்டிட்டு போங்க... அதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை... அதே சமயம் இங்கே இருந்தாலும் இருக்கட்டும்... இந்தக் குடும்பத்துக்கு உரிய மரியாதையுடன் உங்க பேர பிள்ளைகள் வளர்வாங்க... இனி சொத்துக்களைப் பற்றிய பேச்சு நீங்களோ, உங்க மகனோ, மகளோ பேசினால் நான் உண்மை முழுவதையும் கூற நேரிடும்... அதற்குப் பின் உங்கள் விருப்பம்..."

‘ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்... இந்தச் சொத்துக்களில் ஒரு பங்கு கூட இந்த வீட்டு வாரிசு, அது என் வாரிசாக

இருந்தாலும் சரி என் தம்பியின் வாரிசாக இருந்தாலும் சரி யாருக்கும் ஒரு துளி கூடப் பங்கு கிடையாது... எல்லாம் ஜெகதா குழந்தைக்கு மட்டுமே போய்ச் சேரணும்... ஜெய் செய்த பாவத்திற்கு நான் பிராயசித்தம் தேட விழைகிறேன்... எங்கள் தலைமுறை பெண் சாபத்தில் இருந்து விடுபட நான் போராடுகிறேன்... சின்னப் பெண்ணின் பாவம் வேண்டாம் என்றே நான் துடிக்கிறேன்...'

வேதனையுடன் மனதில் நினைத்த நரசிம்மன் தெய்வநாயகி முகம் பாராது சென்று விட்டார்... தெய்வநாயகி உண்மையில் பதறி தான் போனார்...

மகள் இங்கே இருந்தாலாவது குல பெருமையுடன் கௌரவமாக வாழலாம்... அங்கே மகன் வீட்டிற்கு வந்து தன் காலத்திற்குப் பிறகு இடிசோறு உண்ண வேண்டிய நிலை வந்து விட்டால்...? அதனால் அன்றே மகளிடம் அவசர ஆலோசனை நடத்தினார்...

"உன் அண்ணியைப் பத்தி உனக்கு நல்லாவே தெரியும் விமலா... என் காலத்துக்கு அப்புறம் உன் அண்ணனை தன் கையில் போட்டுக்கிட்டு உன்னைக் கொடுமை படுத்தினால்...? அதனால் நல்லா யோசிச்சு முடிவு எடு... என்னைக் கேட்டால் நீ இங்கே இருப்பது தான் சரின்னு தோணுது... இவங்க ரெண்டு பேரும் உன் அண்ணி மாதிரி உன் பேச்சை எதிர்த்து பேச மாட்டாங்க... உனக்குக் கிடைச்ச அருமையான அடிமைகள் இவர்கள் ரெண்டு பேரும்... இவர்களை அடக்கி ஆளுவதை விட்டு விட்டு நீ அங்கே வந்து அடங்கிப் போய்க் கஷ்டப்படணுமா...? அதை விடப் பிள்ளையில்லாத அவர்கள் காலத்திற்குப் பிறகு சொத்துக்கள் உன் வசம் தானாக வந்து விடும்..." நரசிம்மன் மனக்கணக்கு அறியாது அவர் ஒரு கணக்கு போட்டார்...

அன்னை கூறியதும் விமலராணி சற்று யோசிக்கத் துவங்கினார்... அன்னை கூறுவதும் சரியென்றே தோன்றியது...

"உன் பேரில் கொஞ்சம் சொத்துக்கள் இருக்கு தானே... அதை எல்லாம் என்ன செஞ்ச...?"

"எல்லாம் அவர் பெயருக்கு மாத்தி கொடுத்துட்டேன்ம்மா..."

'இப்படியுமா இருப்ப முட்டாள் மகளே... அதை எல்லாம் இந்நேரம் வித்துத் தின்னு இருப்பானே உன் புருசன்...' மனதிற்குள் புலம்பியபடி,

"சரி இப்போ அதன் பத்திரங்கள் எங்கே...?"

"அது வந்தும்மா தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்திற்காக அதை எல்லாம் அவர் வித்துட்டார்..."

'எந்தத் தொழில்...?' நாவு வரை வந்த வார்த்தைகளைக் கஷ்டப்பட்டு அடக்கி கொண்டார் தெய்வநாயகி...

"சரி விடு... இனியாவது புத்தியோடு பிழைத்து கொள்..." என்று கூறிவிட்டு மகனை அழைத்துக் கொண்டு சென்னை வந்து விட்டார்...

அவர் உயிரோடு இருந்தவரை மகளுக்கு வேண்டியதை பார்த்து பார்த்துச் செய்தார்... அதன் பிறகும் மார்த்தாண்டம் தங்கைக்கு எல்லாம் செய்யத் தான் செய்தார் என்றாலும் முன்பு போல் அடிக்கடி தங்கையைப் போய்ப் பார்க்க முடியவில்லை... ஏனெனில் அவரது தொழில் அப்படி...

நரசிம்மன் தனது தம்பி துடிக்கத் துடிக்க இறந்ததைக் காணொளியாக எடுத்து வந்து ஜெகதீஸ்வரியிடம் காண்பித்து,

"உன்னை வேட்டை நாய் போல் வேட்டை ஆடியவனை நாய்கள் வேட்டையாடி விட்டது... இப்போது உனக்கு நிம்மதி தானே ஜெகதா...?" என்று அவர் கேட்ட போது...

அவள் அந்தக் காணொளி கண்டு அதிர்ந்து போனவளாய் பயத்தில் அருகில் இருந்த கார்த்திகாயினியை அணைத்துக் கொண்டு அழ ஆரம்பித்தாள்...

"ஜெகதா... ஏன் அழுற...?" என்று கார்த்திகாயினி கேட்ட போது,

"அவங்க ரொம்பப் பாவம்... ரொம்ப வலித்து இருக்கும் இல்லையா...?" என்று கூறியவளை கண்டு இருவருமே திகைத்து போயினர்...

தனக்கு வலிக்கச் செய்தவனைக் கண்டு பாவப்பட்டு அழும் அவளைக் கண்டு வேதனையுடன் கண்களை மூடி கொண்டார் நரசிம்மன்... தனக்குக் கொடூரம் இழைத்தவனைக் கண்டு இரங்கும் அவளது குழந்தை மனம் கண்டு அவரது விழிகளில் கண்ணீர் துளிகள் எட்டி பார்த்தது... இப்படிப்பட்ட சிறு குழந்தைக்குப் பாதகம் செய்யத் தனது தம்பிக்கு எப்படி மனம் வந்தது...? என்று ஜெய்சிம்மனை நினைத்து ஆத்திரம் வந்தது அவருக்கு...

"உனக்கு வலித்ததை விடக் குறைவு தான்..." என்று சின்னவளை தேற்றினார் கார்த்திகாயினி...

கார்த்திகாயினியின் அன்பில் ஜெகதீஸ்வரி மெல்ல மெல்ல தனது சோகத்தில் இருந்து வெளியில் வந்தாள்... விரக்தி மனப்பான்மை ஒழிந்து வாழ வேண்டும் என்கிற ஆசை அவளுள் உதயமானது... ஆனாலும் மனதின் ஓரத்தில் சித்தார்த்தின் நினைவுகள் இருந்து கொண்டே இருந்தது... அடிக்கடி அவனைப் பற்றிச் சொல்லி தன்னைக் காப்பவர்களின் மனதினை சங்கடப்படுத்த அவள் விரும்பவில்லை...

தமிழ் மாத பிறப்பன்று அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள் ஜெகதீஸ்வரி... ஆனால் பெற்றெடுப்பதற்குள் அத்தனை கஷ்டப்பட்டுப் போனாள் அந்தச் சிறுமி... ஏனெனில் அதற்குக் காரணம் அவளின் சிறு வயது... குழந்தை பெற்றெடுக்கும் அளவுக்கு அவளது உடம்பில் வலிமை இல்லை... மிகவும் சோர்ந்து போனாள்...

அன்னையை உரித்து வைத்துப் பிறந்திருந்த மகவை கண்டு நரசிம்மன் நிம்மதி பெருமூச்சு விட்டார்... கயமை

கொண்ட தம்பியின் சாயல் அந்தக் கள்ளமில்லா குழந்தைக்கு வருவதை அவர் சிறிதும் விரும்பவில்லை...

ஜெகதீஸ்வரிக்குப் பொருத்தமாய்ப் பிரகதீஸ்வரி என்று மகளுக்குப் பெயர் வைத்த போது அந்தச் சிறுமியான தாய் மகிழ்ந்து தான் போனாள்... தனக்காக இல்லை என்றாலும் தனது குழந்தைக்காக வாழ்ந்து காட்ட வேண்டும் என்று அவள் எண்ணினாள்... தன்னை மாதிரி மகளும் அநாதை ஆகிவிடக் கூடாது என்று அவள் மனம் தவித்தாள்... அந்தக் கணம் வாழ வேண்டும் என்கிற ஆசை அவளுள் எழுந்தது இன்னமும் அதிகமாய்...

ஆனால் விதி வலியது... பிரகதீஸ்வரி பிறந்த ஒரு வாரத்தில் உடல் பலகீனம் அடைந்து ஜன்னி கண்டு ஜெகதீஸ்வரி இறந்து போனாள்... இறக்கும் போது அவள் நரசிம்மன், கார்த்திகாயினியிடம்,

"என் குழந்தையை அநாதை ஆக்கிடாதீங்க..." என்று மட்டும் வேண்டி கேட்டு கொண்டாள்...

"அவள் எங்க குழந்தை ஜெகதா... நீ பிழைத்து வா... வந்து நல்லா படித்து முன்னேறு..."

நரசிம்மன் கூறியதை கேட்டு அந்தச் சின்னச் சிட்டின் கண்களில் நம்பிக்கை எழுந்தது... ஆனால் காலனுக்குச் சின்னப் பூவின் மீது இரக்கம் வரவில்லை போலும்... சரியான நேரம் பார்த்து அதன் உயிரை பறித்துக் கொண்டான்... இறக்கும் தருவாயில் ஜெகதீஸ்வரி மனதில் சித்தார்த்தின் நினைவுகளே... தனது மகள் நினைவு கூட அவளுக்குப் பின்னுக்குப் போய் விட்டது...

'அடுத்த ஜென்மத்திலாவது உன் மகளாய் நான் பிறக்க வேண்டும் சித்து...' என்று எண்ணி கொண்டே அவளது உயிர் பிரிந்தது...

வாழும் போது அவளது எந்தக் கோரிக்கையையும் தான் நிறைவற்றவில்லை என்பதால் தானோ அந்த இறைவன் இறக்கும் போது அவள் விடுத்த கோரிக்கையை

நிறைவேற்றி வைத்தானோ... அதுவும் இருபத்தியொரு ஆண்டுகள் கழித்து... ஜெகதீஸ்வரியின் மகளைச் சித்தார்த்தின் மனைவியாக்கி அதன் மூலம் மீண்டும் ஜெகதீஸ்வரியை உயிர்ப்பித்தானோ அந்தக் கடவுள்... இது தான் இறைவனின் திருவிளையாடலோ... இது தான் இறைவனின் விதி கணக்கோ...!!!

வேலை விசயமாக வெளியூர் சென்ற கார்த்திகாயினி திரும்பி வரும் போது ஒரு குழந்தையுடன் வந்ததைக் கண்டு விமலாராணி முகத்தைச் சுளித்தார்... ஆதரவற்ற குழந்தை என்றாலும் இனி பிரகதீஸ்வரி எங்கள் குழந்தை என்று இருவரும் தெளிவாக அவரிடம் கூறி விட்டனர்...

அன்று முதல் விமலாராணி பிரகதீஸ்வரியை கரித்துக் கொட்ட ஆரம்பித்தார்... அநாதை என்கிற சொல்லை அடிக்கடி பயன்படுத்தினார்... ஆனால் நரசிம்மன் முன்னிலையில் மட்டும் சற்று அடக்கி வாசித்தார்... கார்த்திகாயினி கணவருக்காக இதைப் பொறுத்துப் போனார்... ஒரு நாள் நரசிம்மன் ஏதேச்சையாக இதைக் கேட்டு விட்டார்...

"இன்னொரு முறை இப்படிச் சொன்னால் நடப்பதே வேறு..." என்று தம்பி மனைவியிடம் அவர் கர்ஜிக்க... அவரது ருத்ரதாண்டவத்தில் அதற்கு மேல் விமலாராணி வாய் திறக்கவில்லை என்றாலும் பிரகதீஸ்வரியின் மீதான வன்மம் ஏறிக் கொண்டே போனது...

ஆனால் பிள்ளைகளுக்குள் எந்த வேறுபாடும் வந்தது இல்லை... சரவணன், சந்தியா சின்னவளை தங்களது உடன்பிறப்பாக எண்ணி கொண்டாடினார்கள்... அது போல் கார்த்திகாயினியை அம்மா என்று கொண்டாடினர்... பிள்ளைகளின் அன்பில் பெரியவரின் தவறுகள் மன்னிக்கப்பட்டது...

பிரகதீஸ்வரிக்கு ஐந்து வயதாக இருக்கும் போது கார்த்திக்காயினி குழந்தை உண்டாகினார்... அதைக் கண்டு நரசிம்மன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை... பிரகதீஸ்வரியிடம்,

"உனக்குத் தம்பி வர போகிறான்..." என்று கூறி மகிழ்ந்தார்... அதே போல் சரவணன், சந்தியாவிடமும்...

விமலாராணி மட்டும் முகத்தைச் சுளித்துக் கொண்டு கழுத்தை நொடித்தபடி கண்டு கொள்ளாது சென்று விட்டார்... அதைக் கண்டு நரசிம்மன் முகம் வருத்தத்தில் ஆழ்ந்தது...

"விடுங்க... அவங்க குணம் தெரிந்து தானே..." என்று கார்த்திகாயினி கணவனைச் சமாதானப்படுத்தினார்...

கார்த்திகாயினிக்கு நிறை மாத பொழுது... அன்று பொங்கல் விழா ஊர் முழுவதும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது... வீட்டின் முன் பொங்கல் வைக்கும் விழாவில் கலந்து கொண்ட கார்த்திகாயினி அதற்கு மேல் அங்கிருக்க முடியாமல் எழுந்து வீட்டினுள் சென்றார்... அவரைப் பின் தொடர்ந்து கவலையுடன் வந்த நரசிம்மன்,

"என்ன செய்யுது கார்த்திகா...?"

"ஒண்ணும் இல்லை... டயர்டாக இருக்கு... நீங்க போய் மத்த வேலைகளைப் பாருங்க..." என்று கூறி அவர் கணவரை அனுப்பி வைத்தார்...

ஏனெனில் ஊர் மக்களுக்கு அங்குத் தானே உணவு வழங்குவார்கள்... அந்த வேலை இருந்தது... சிறியவர்களும் உற்சாகமாய்த் தந்தையுடன் இணைந்து பந்தி நடக்கும் இடத்திற்குச் சென்று எல்லோருக்கும் உணவு பரிமாறினர்...

சரவணன் வடை, சந்தியா அப்பளம், பிரகதீஸ்வரி லட்டு என்று ஆளுக்கொரு பதார்த்தத்தை எடுத்துக் கொண்டு இலையில் பரிமாறினர்... அதைக் கண்டு ஊர் மக்கள் நரசிம்மனை பாராட்டினர்...

"உங்களை மாதிரியே உங்க வீட்டு பிள்ளைகளுக்கும் நல்ல குணம் ஐயா..." என்று...

அவர் மக்கள் மூவரையும் பெருமையாகப் பார்த்தார்...

அந்நேரம் கார்த்திகாயினிக்கு பிரசவ வலி வந்தது... அவர் எழும்பி அறையை விட்டு வெளியில் வருவதற்குள் வலி அடுத்தடுத்து அதிகரித்துக் கொண்டே போனது... அந்தப் பக்கமாய் வந்த விமலாராணியிடம்,

"அத்தானை கூட்டிட்டு வாங்களேன்..." என்க...

"சரி..." என்று அவரிடம் நல்ல பிள்ளையாய் உரைத்து விட்டு வெளியில் வந்த விமலாராணி நரசிம்மனிடம் அந்த விசயத்தைச் சொல்லாது நேரே அருகில் இருந்த கோவிலில் சென்று அமர்ந்து கொண்டார்...

அவரது கொடூர மனம் கொடூரமாகச் சிந்தித்தது... நரசிம்மனின் வாரிசை பூவுலகத்திற்கு வராது தடுத்து விட்டால் இத்தனை சொத்துக்களும் அவரது பிள்ளைகளுக்கு மட்டும் தானே... அநாதை பிரகதீஸ்வரியை மீண்டும் அநாதையாக்கி விட எண்ணியது... அந்தளவிற்குச் சுயநலமாய்ச் சிந்தித்தாள் அந்த இரக்கமற்ற அரக்கி... அந்தச் சிசுவை வயிற்றிலேயே அழித்திருக்கலாம் தான்... ஆனால் அதைச் செய்ய முடியாதபடி நரசிம்மனின் பாதுகாப்புத் தடுத்தது... அதனால் தான் சமயம் கிடைத்ததும் விமலாராணி பழிவாங்கி விட்டார்...

ஏதேச்சையாக அங்கு வந்த சோலையம்மாள் கார்த்திகாயினியை கண்டு அலறியதில் எல்லோரும் அங்கு ஓடி வந்தனர்... நரசிம்மன் உடனே மனைவியை மருத்துவமனையில் சேர்த்தார்... மருத்துவரான கார்த்திகாயினியால் தன்னைப் பாதுகாக்க முடியவில்லை... குழந்தை இறந்து பிறந்ததுடன் கார்த்திகாயினியும் மரணத்தைத் தழுவினார்...

மனைவி மரணம் கண்டு நரசிம்மன் திக்பிரம்மை பிடித்தார் போன்று அமர்ந்து விட்டார்... ஆறு வருடங்கள் மட்டுமே அவர் தனது மனைவியுடன் வாழ்ந்தது... ஆனால் ஆயிரம் வருடங்கள் வாழ்ந்த திருப்தி, நிம்மதி அவருள்... அதனால் தான் அவரால் மனைவியின் இறப்பை ஜீரணிக்க முடியவில்லை... ஆனால் மகளுக்காக அதைத் தாங்கி கொண்டு மீண்டு வந்தார்...

அதன் பின் வந்த நாட்களில் தந்தை, மகள் பிணைப்பு இன்னமும் அதிகமாய் இறுகி போனது... அவர் வயல்வெளி, நிறுவனம் என்று எங்குச் சென்றாலும் பிரகதீஸ்வரி உடன் செல்வாள்... அவர் சித்த மருந்து தயாரிக்கும் போது அவளும் உடனிருந்து உதவி செய்வாள்... அதனால் தான் அவளுக்குத் தந்தையின் மருத்துவ அறிவு அந்தச் சின்ன வயதிலேயே வந்திருந்தது... அவருடன் எப்போதும் இருக்கும் பிரகதீஸ்வரிக்கு ஊர் மக்கள் மரியாதை கொடுக்க ஆரம்பித்தனர்... அதற்கு ஏற்றார் போன்று சின்னவளின் நடத்தையும், அறிவும் இருந்தது...

சரவணன், சந்தியா இதற்கு எல்லாம் உடன் வர மாட்டார்கள்... சரியான சோம்பேறிகள்... இதில் மட்டும் பெற்றோரின் மரபணுக்கள் அவர்களிடையே நன்றாக வேலை செய்தது... பிரகதீஸ்வரிக்கு பதினாறு வயதான போது நரசிம்மன் தனது சொத்துக்களை நினைத்தது போல் அவளது பெயரில் மாற்ற விரும்பினார்... அது பற்றி அவர் வக்கீலிடம் ஆலோசனை கேட்டுக் கொண்டு இருக்கும் போது விமலாராணி அதை ஒட்டு கேட்டு விட்டார்...

அன்றே அவர் தனது சுயரூபத்தைக் காட்டிய போது யாருக்கும் அஞ்சாத நரசிம்மனே அவரைக் கண்டு அஞ்சினார்...
"யாருமில்லாத அநாதை கழுதைக்கு இத்தனை சொத்துக்களையும் தாரைவார்த்து கொடுப்பதற்கு நீ யார்...? இப்படி அள்ளி கொடுப்பதற்காகவா உனக்கு ஒரு வாரிசு வர கூடாது என்று அன்று உன் மனைவிக்குப் பிரசவ வலி வந்ததைக் கூட உன்னிடம் சொல்லாது கோவிலில் போய் உட்கார்ந்து இருந்தேன்... இங்குள்ள அத்தனை சொத்துக்களுக்கும் நானும், என் பிள்ளைகளும் மட்டும் தான் ஏகபோக வாரிசுகள்... உன் மகளைப் போன்று அநாதையான உனக்கு எதற்கு இத்தனை சொத்துக்கள்...?"

திடுமென 'வா போ' என்று ஏக வசனத்தில் பேசிய விமலாராணியின் பேச்சை அவர் சிறிதும் எதிர்பார்க்கவில்லை... அதே போல் விமலாராணியின் கருணையற்ற இத்தகைய செயலையும் அவர்

எதிர்பார்க்கவில்லை... அவர் ஸ்தம்பித்துப் போனார்... காதல் மனைவியின் கனிவான முகம் அவரது மனக்கண்ணில் தோன்றியது... அந்தக் கனிவான முகத்தைக் கண்டுமா விமலாராணியின் மனம் இரங்கவில்லை என்று உள்ளம் குமைந்து போனார்...

"ஒழுங்கு மரியாதையாக இந்தச் சொத்துக்கள் முழுவதையும் எனது பெயருக்கு எழுதி கொடு..." என்று மிரட்டியவரை கண்டு தன்னுணர்வு பெற்றவர் தனது முழு உயரத்திற்கும் நிமிர்ந்து நின்றார்...

"எழுதி கொடுக்கவில்லை என்றால் உங்களால் என்ன பண்ண முடியும்...?"

"என்ன வேணும்ன்னாலும் பண்ணுவேன்..." என்று திமிராய் கூறியவரை கண்டு நரசிம்மனின் விழிகள் இடுங்கியது...

"உனக்கும் எனக்குமாய்க் கள்ள தொடர்பு இருப்பதாக இந்த ஊரார் முன் கூறுவேன்... அதனால் தான் நீ என் கணவனைக் கொன்று விட்டதாய் கூறுவேன்... அதே போல் சமயம் சந்தர்ப்பம் பார்த்து உன் மனைவியையும் நீ கொன்று விட்டதாகக் கூறுவேன்... என்னை மிரட்டி என்னுடன் உறவு வைத்திருப்பதாய் கூறுவேன்... இப்படி எத்தனையோ இதில் இருக்கு... இப்படி எல்லாம் நீ அசிங்கப்பட வேண்டுமா...? இல்லை சத்தம் இல்லாது என் பெயருக்குச் சொத்துக்களை எழுதி கொடுத்து விட்டு உன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளப் போகிறாயா...?"

மானமுள்ள அந்தப் பெரிய மனிதர் விமலாராணி வார்த்தையில் சிலையாய்ச் சமைந்தார்... அந்தக் கணம் மனதளவில் மரணித்துப் போனார்... இதுவரை ஊரார் முன் கண்ணியமாய் வாழ்ந்து வந்தவருக்குத் தம்பி மனைவியின் வார்த்தைகளை ஜீரணிக்க முடியவில்லை... இப்போது கூட அவரால் உண்மையைக் கூற முடியும்... ஆனால் ஏனோ அதை அவரிடத்தில் சொல்லாது மறைத்து விட்டார்...

ஏனெனில் கணவரின் மறுபக்கம் தெரிந்தால் விமலாராணி தற்கொலை செய்து கொள்வது உறுதி... உயிருக்கு சமமான மானம் போகும் அந்த வேளையிலும் அவர் எதிரியின் உயிர் பற்றிக் கவலைப்பட்டார்... அதே சமயம் தனது தம்பியை அவர் கொன்றது உண்மை தானே... அது வேறு அவரது மனதினை அரித்து எடுத்தது...

அன்றே விமலாராணி பெயருக்கு அத்தனையும் சொத்துக்களை மாற்றிக் கொடுத்தார் பழி சொல்லிற்கு அஞ்சி... ஊரார் விமலாராணி கூறுவதை நம்ப மாட்டார்கள் என்றாலும் தனது குடும்ப மானம் காற்றில் பறக்க அவருக்கு விருப்பம் இல்லை...

சொத்துக்களைக் கைப்பற்றிய விமலாராணி அத்தனை சந்தோசம் அடைந்தார்... உறவுகளை விடப் பணம் கடைசி வரை கூட வரும் என்று அவர் நம்பினார்... அதே போல் பிரகதீஸ்வரியை ஒரு வேலைக்காரி போல் தன்னுடன் வைத்துக் கொண்டார்... ஏனெனில் ஊரார் அவளுடைய பேச்சை தான் கேட்பர்... அவள் மூலம் அவருக்கு வர வேண்டிய மரியாதைக்காக அவளை வீட்டில் இருக்க அனுமதித்தார்... அவளை உடன் வைத்திருந்து வதைத்தார்... இதைத் தான் அவர் பின்னாளில் பிரகதீஸ்வரியிடம் கூறி சொத்துக்களைப் பறித்தார்... பழி பாவத்திற்கு அஞ்சிய அந்தப் பேதையவளும் அதற்குச் சம்மதித்து எழுதி கொடுத்தாள்...

அன்றிரவே பலவற்றையும் மனதில் போட்டுக் குழப்பிக் கொண்ட நரசிம்மனுக்கு இரத்த அழுத்தம் அதிகரித்துக் கை, கால்கள் செயலிழந்து படுக்கையில் விழுந்தார்... அதன் பின் அவரது உடல்நலம் நலிந்து கொண்டே போனது... மானமுள்ள மனிதனின் மனநிலை இது தான்... தனக்குள் மருகி மருகி அவர் தனது உடலை வருத்தி கொண்டார்... பிரகதீஸ்வரி தான் அவரை இறுதி வரை பார்த்து கொண்டாள்...

மரணம் தழுவும் தறுவாயில் விமலாராணி இல்லாத சமயம் பார்த்து வந்த வக்கீல் குருமூர்த்தியிடம் இறுதி உயில்

தயாரிக்கச் சொன்னார்... அதில் சொத்துக்கள் முழுவதையும் பிரகதீஸ்வரி பெயரில் எழுதி வைத்தார்... அது போல் தனது கடைசி ஆசையாக ஹரிப்ரசாத்தும், பிரகதீஸ்வரியும் திருமணம் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டு இருந்தார்... எல்லாம் எழுதி முடித்து அதில் வக்கீல் உதவியுடன் தனது கட்டை விரல் அச்சினை அவர் பதித்த போது அவரது மனதில் அது வரை இருந்த சஞ்சலம் எல்லாம் மறைந்து போனது...

தனக்குப் பின் விமலாராணி பிரகதீஸ்வரியை மிரட்டி சொத்துக்களை வாங்காது இருப்பதற்காகத் தான் அவர் பிரகதீஸ்வரியின் பதினெட்டாவது வயதில் ஹரிப்ரசாத் அவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று வேண்டி கேட்டிருந்தார்...

எந்தவொரு இடத்திலும் விமலாராணிக்கு சாதகமாய் அவர் இடம் கொடுக்கவில்லை... அத்தனை கச்சிதமாக எல்லாவற்றையும் எழுதி வைத்தார்... தனது குலத்தைப் பெண் பாவத்தில் இருந்து காப்பாற்றி விட்டார்... அவர்களது வம்சம் தளைக்க வேண்டி நியாய, தர்மத்தை நிலைக்கச் செய்தவர் உயிர் அன்றிரவு தூக்கத்தில் நிம்மதியாய் பிரிந்து சென்றது...

****

சித்தார்த்தின் மனதில் ஜெகதீஸ்வரியை காணாது ஏற்பட்ட தவிப்பு ஏமாற்றமாக மாறி பிறகு மெல்ல மெல்ல கோபமாக உருமாறிப் போனது... தன்னைக் காண வராத ஜிக்கி மீது இப்போது எல்லாம் அவனுக்குக் கோபம் தான் வந்தது... ஆனாலும் அப்போதும் அவளுக்காக அவனது மனம் தேடி தவித்தது என்னவோ உண்மை... அவனது மனதில் அவளுக்கான இடம் அப்படியே வெற்றிடமாக இருந்தது...

அதன் பிறகு சித்தார்த் தனது படிப்பில் முழுக் கவனத்தைச் செலுத்தினான்... படிப்பு முடிந்து தொழிலை கையில் எடுத்தவனை இந்தச் சமுதாயம் முற்றிலுமாய் வேறு விதமாய் ஆக்கிரமித்துக் கொண்டது... அது போல் இந்தச் சமுதாயத்திற்கு ஏற்ற மாதிரி அவனும் இரும்பு மனிதனாய்

மாறிப் போனான்... ஒருவேளை அவனது ஜிக்கி உடனிருந்தால் அவனது கொள்கைகள் மாறியிருக்குமோ என்னவோ...

இப்போது அன்பு, பாசம் இதைத் தவிர்த்து அவனது மனம் பணத்தைத் தேடி ஓடியது... ஏனெனில் இன்னொரு முறை ஏமாந்து போக அவன் தயாராக இல்லை... அது போல் அவன் பார்க்கும் பெண்களில் எல்லாம் ஜெகதீஸ்வரியின் அன்பை தேடி ஏமாந்து போனான்... அவனுடைய பணத்திற்காக, அந்தஸ்திற்காக அவனைச் சுற்றிய பெண்களே ஏராளம்... அதனால் இயல்பாகவே பெண்களைக் கண்டு ஒதுங்கி போக ஆரம்பித்தான்... அதிலும் அவனிடம் எப்போதும் குடியிருக்கும் கர்வம் பெண்களிடத்தில் அவனை மயங்க செய்ய விடவில்லை...

ஜெகதீஸ்வரியின் மகளான பிரகதீஸ்வரிக்கு அவன் உண்மையான காதல் கணவனாக வர வேண்டும் என்று காலம் அவனைப் பெண்களை நாடாது வைத்திருந்ததோ...!!!

நரசிம்மன் இறந்த பின் தொழிலை கவனிக்க முடியாது விமலாராணி தடுமாறுவதாகக் கூறிய மார்த்தாண்டம் மகனை தங்கைக்கு உதவி செய்யப் போகும் படி பணித்தார்... தந்தையின் சொல்லுக்காகத் தான் அவன் இங்கே வந்தது... வந்த இடத்தில் தான் பிரகதீஸ்வரியை முதன்முதலில் சந்தித்தது...

அவன் அத்தை வீட்டை நெருங்கும் போதே பிரகதீஸ்வரியை பார்த்து விட்டான்... அச்சு அசலாய் அவனது ஜிக்கி போன்று இருந்தவளை கண்டு அவன் பிரமித்துப் போனான்... மனம் மகிழ்ந்து போனான்... அதே சந்தோசத்துடன் இறங்கியவனைக் கண்டு பிரகதீஸ்வரி கேலியாய்ச் சிரித்ததும் அவனது கோபம் அதிகரித்தது...

ஜெகதீஸ்வரியாக இருந்தால் இப்படிச் சிரிக்க மாட்டாளே... பதறிக் கொண்டு அவன் அருகில் வந்திருப்பாளே... இவள் வேறு என்று அவனது மனம் உறுதியாக நம்பியது... ஏமாற்றம் ஆத்திரமாக மாறி அவளை அடிக்க வைத்தது...

அப்போதும் மனம் கேளாது சந்தியாவிடம் அவளைப் பற்றி விசாரிப்பது போல் அவளை மேலிருந்து கீழாக நன்றாக ஊன்றி கவனித்துப் பார்த்தான்... உதட்டின் மேல் மச்சம் இல்லாது இருந்தவளை கண்டு இவள் வேறு, தனது ஜிக்கி வேறு என்று அவன் உறுதியாக நம்பினான்... அதன் பின் விமலாராணி கூறிய கதைகள் அவனைப் பிரகதீஸ்வரி மேல் துவேசம் கொள்ள வைத்தது... அவளை நம்ப மறுத்தது... இயல்பாகவே அவனிடம் குடியிருக்கும் தன்னகங்காரம் எல்லாம் சேர்த்து பிரகதீஸ்வரியை படுத்தி எடுத்தான்...

ஆனாலும் அவனையும் அறியாது அவன் மனதில் அவள் மீதான ஈர்ப்பு இருந்து கொண்டே தான் இருந்தது... அவள் அருகில் இருந்து பார்க்கும் போது விமலராணி கூறியதற்கு நேர்மாறாய் அவளது குணம் இருந்தது... அவனது ஜிக்கி மாதிரி உருவம் மட்டுமல்லாது குணமும் அவளிடத்தில் இருந்தது கண்டு அவனது மனம் தானாக அவளிடம் சாயத் துவங்கியது... அது தான் தோட்ட வீட்டில் இருந்த போது நடந்தது... அங்கு இருந்து ஆரம்பித்தது தான் அவனது அந்த ஈர்ப்பு... அதன் பிறகு அவளிடம் இணக்கமாக நடக்க ஆரம்பித்தான்...

அவனது இணக்க நிலையை மாற்றி அவனைத் தவியாய் தவிக்க வைத்தது ஹரிப்ரசாத்தின் தொலைப்பேசி அழைப்பு... அதிலிருந்து அவனது மனம் பழையபடி மாறிப் போனது... அப்போது தான் அவனுக்கு உயில் பற்றிய விசயம் தெரிய வந்தது... எதையாவது செய்து பிரகதீஸ்வரி கரம் பிடிக்க அவன் துடித்தான்... அன்பிற்கு மட்டுமே அடங்கும் அவளை அன்பால் வீழ்த்த எண்ணியவன் ஒரு கட்டத்தில் அவளின் அன்பில் வீழ்ந்து போனது தான் அதிசயம்...

அன்னையில்லாத சிறு பெண்ணைத் தானும் ஏமாற்றுகிறோமோ என்று அவனது உள்ளம் சில சமயம் வேதனையில் துடிக்கும்... அவளது வயதினை எண்ணி வருத்தம் கொள்ளும்... இதை எல்லாம் மீறி அவள்

வேண்டும் என்று தவிக்கும் மனதினை கட்டுப்படுத்த அவனால் இயலாது போனது...

மீண்டும் எல்லோரும் தோட்ட வீட்டுக்குப் போன போது அவளது இடை பற்றி அருகில் இழுத்த போது அவனது மனம் முழுமையாய் அவளது வசம் சென்று விட்டது... அவளது இதழில் முத்தமிட துடித்த தனது மனதினை அடக்க முடியாதவனாய் அவன் அவளை விட்டு விலகி நின்ற போது தான் அவன் தன் மனதினை முழுமையாய் அறிந்தான்...

அப்போது தான் ஜெகதீஸ்வரியின் சாயலில் இருந்த அவளின் தோற்றம் பிரகதீஸ்வரியாய் அவனுள் ஆழ பதிந்தது... அதன் பின்னர் ஆற்று வெள்ளத்தில் அவள் அடித்துக் கொண்டு போன போது அவள் தான் தனது உயிர் என்பதை முழுமையாய் புரிந்து கொண்டு அவளை உண்மையாகக் காதலிக்கத் துவங்கினான் சித்தார்த்...

இதற்கிடையில் நிறுவனத்தில் அலுவலக அறையைச் சுத்தம் செய்த போது அவன் நரசிம்மனின் நாட்குறிப்பை படிக்க நேர்ந்தது... ஜெகதீஸ்வரியின் மகள் தான் பிரகதீஸ்வரி என்று அவன் அறிந்த போது அவன் அடைந்த உவகைக்கு அளவே இல்லை... தனது ஜிக்கியின் மகள் தனது மனைவியாக... அந்த நினைவே அவனுக்குத் தித்திப்பாய் இனித்தது...

அதே நேரம் ஜிக்கிக்கு நேர்ந்த கொடுமை அவனது மனதில் ஆறாத வடுவாய்... ஜெய்சிம்மன் மட்டும் இப்போது உயிரோடு இருந்திருந்தால் அவருக்கான மரணம் சித்தார்த்தின் கைகளில் மிகவும் கொடூரமாக நிகழ்ந்திருக்கும்... அதற்கு முன்பே அதை நிறைவேற்றி விட்ட நரசிம்மன் மீது அவனுக்கு மரியாதை வந்தது... அவனைப் பொருத்தவரையில் அவர் தெய்வமாக மாறிப் போனார்... அதனால் தான் அவரது வார்த்தைகளை மீறி பிரகதீஸ்வரியை கைப்பிடிக்க அவனுக்கு அத்தனை கலக்கமாக இருந்தது...

ஆனாலும் எந்தக் காரணம் கொண்டும் அவளை இழக்க அவனுக்கு விருப்பம் இல்லை... அவள் வேண்டும் என்றே

அவன் நினைத்தான்... அதை அந்தச் சிறு பெண்ணிடம் வாய் விட்டு சொல்ல முடியாது அவன் தவித்துப் போனான்... அதற்கு வலு சேர்ப்பது போல் ஹரிப்ரசாத்தின் வருகை இருந்தது... அந்த இடத்தில் சித்தார்த்தின் தவிப்பு இன்னமும் அதிகமாகி எதைச் செய்தாவது அவளைத் தன்னுடையவள் ஆக்கி கொள்ள வேண்டும் என்கிற வெறி அவனுள் எழுந்தது... அவனது தவிப்பை அறியாது பேசியவளிடம் தனது ஒற்றை இதழ் முத்தம் மூலம் அவன் தனது மனதினை உணர்த்தினான்...

ஆனாலும் ஹரிப்ரசாத்தை காணும் போது எல்லாம் அவனது மனம் தவிக்கத் தான் செய்தது... அது போல் தான் பிரகதீஸ்வரியின் செயலும் இருக்கும்... அவளின் வயதினை முன்னிட்டு வாய் விட்டு சொல்லாது சித்தார்த் தனது செயல் மூலம் அவளுக்கு உணர்த்திக் கொண்டே இருந்தான்... இறுதியாக அவளுக்காக ஜல்லிக்கட்டில் அடிப்பட்டு அவன் தனது காதலை நிரூபித்த போதும் அவள் அவனது காதலை உணரவில்லை...

மாறாக அவள் அவனைக் காதலிப்பதை உறுதி செய்தாள்... தன்னைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்லி அவனை வற்புறுத்தினாள்... அவள் ஆசைப்பட்டதை உடனே நிறைவேற்றா விட்டால் அவனது காதல் மனம் தாங்குமா...? அவளது பதினெட்டு வயது பிறக்கும் போது தங்களது திருமணத்தை நடத்திட நினைத்தான்... திருமணமான அன்றிரவே தனது காதலை அவளிடம் சொல்ல திட்டமிட்டான்... ஆனால் அவனது திட்டம் எல்லாவற்றையும் அவள் தவிடு பொடியாக்கி விட்டாள்...

விசயம் கேள்வியுற்றுச் சண்டை போட்ட விமலாராணியிடம் திருமணத்திற்குப் பிறகு சொத்துக்களைக் கொடுப்பதாய் அவரை அடக்கி விட்டான்... அது போல் சந்தியாவைத் திருமணம் செய்து கொள்வதற்கும் பதில் சொல்லாது நழுவி விட்டான்... தனது மாமனார் போன்று சாணக்கியத்தனமாய் விமலாராணியைக் கையாள நினைத்தான்... இதை உணராது பிரகதீஸ்வரி அவனைச்

சந்தேகப்பட்டுத் திருமணத்தை நிறுத்தியது அவனைக் கோபம் கொள்ளச் செய்தது...

அவளுக்காக ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செய்தவனை அவள் ஏமாற்றுக்காரன் என்று முத்திரை குத்தியதை அவனால் ஜீரணிக்க முடியவில்லை... மனதளவில் அவன் மிகவும் அடிப்பட்டுப் போனான்...

அந்தக் கணம் அவள் ஜிக்கியின் மகள் என்பது கூட அவனுக்குப் பின்னுக்குப் போய் விட்டது... ஏனெனில் அத்தனை பெரிய மனிதர்கள் நிறைந்த சபையில் அவள் அவனை அவமானப்படுத்தியது அவனைப் பெரும் கோபம் கொள்ளச் செய்தது... அது அவனுக்குப் பெரிய தலையிறக்கம் அல்லவா... அந்தக் கோபம் தான் அவனை அவளது கழுத்தில் தாலி கட்ட வைத்தது... அந்த ஒரு செயலில் அவன் தனது காதல் முழுவதையும் அவளுக்கு உணர்த்தி விட்டான்... அத்தோடு இந்த ஜென்மம் மட்டுமல்லாது இனிவரும் ஜென்மத்திலும் 'நீ தான் என் மனைவி' என்பதையும்...

புரிய வேண்டியவளுக்கோ அது புரியவில்லை... புரியாது அவனை விட்டு விலகி சொத்துக்களை இழந்து அநாதையாய் அவள் சென்ற போது அவன் மனம் இறுகி நின்றான்... எது நடந்து விடக் கூடாது என்று பயந்தானோ இறுதியில் அது நடந்தே விட்டது... ஆனாலும் எதையும் அவளிடம் விளக்கி சொல்ல மனமில்லாது அவன் கோபத்துடன் நிமிர்ந்து நின்றான்... அவனது காதல் மனதினை புரிந்து கொண்டு அவளாக வர வேண்டும் என்றே அவன் விரும்பினான்... அதனால் வளைந்து கொடுக்காது வெளியில் இரும்பாய் நின்றான்... ஆனால் உள்ளுக்குள் அவனது காதல் மனம் உருகி தவித்தது அவனுக்கு மட்டும் தான் தெரியும்...

வீட்டினுள் சென்ற சித்தார்த் உண்மை முழுவதையும் கூறி விமலாராணியிடம் இருந்து மனைவியின் சொத்துக்களை மீட்டெடுத்தான்... அதை அவர் செய்யாது போனால் மாமாவின் அயோக்கியத்தனத்தை எல்லோரிடமும் கூறி

விடுவேன் என்று அவன் மிரட்டிய போது விமலாராணியால் ஒன்றும் செய்ய முடியாது போனது... அவரது அஸ்திரம் பூமராங்காய் திருப்பி அவரையே பதம் பார்த்தது... சித்தார்த்தின் வலிமை உணர்ந்தவராய் அவர் எல்லாவற்றையும் எழுதி கொடுத்து விட்டு வெளியில் வந்தார்...

இது எல்லாத்தையும் விடக் கணவன் தனக்குத் துரோகம் இழைத்ததைத் தான் அவரால் தாங்கி கொள்ள முடியவில்லை... அநாதை என்று தூற்றிய பிரகதீஸ்வரி தனது கணவனின் வாரிசு என்பது அறிந்து மனதளவில் அவர் மரணித்துப் போனார்... கணவனின் இழி செயல் அவரது மனதினை கொன்றது... மகளைக் கோவிலில் விட்டு விட்டு பிரிந்தவர் கால் போன போக்கில் சென்றார்... உறக்கம் மறந்து, உணவு மறந்து காலம் நேரம் பாராது நடந்து சென்றவர் ஒரு கட்டத்தில் மயங்கி விழுந்தார்... அதன் பிறகு அவர் எழவே இல்லை... எல்லோரையும் அநாதை என்று தூற்றியவர் இப்போது யாருமற்ற அநாதையாய் இறந்து போனார்...

இந்த விசயம் சித்தார்த்திற்கு ஒரு மாதம் கழித்துத் தான் தெரியும்... ஆள் வைத்து விசாரித்த போது கிடைத்த தகவல் இது... அதுவும் மனைவிக்காகத் தான் அவன் இதைச் செய்தது... ஆனால் அவன் இதை அவளுக்குத் தெரியாது மறைத்து விட்டான்... ஏனெனில் இது தெரிந்தால் அவனது மனைவி இன்னமும் அதிகமாய் அவன் மீது கோபம் கொள்வாள்... அது போல் அப்போது தான் ஹரி, சந்தியா திருமணம் நடந்த புதிது... அவர்களது வாழ்க்கைக்காகவும் அவன் அதை மறைத்து விட்டான்...

அதன் பிறகு கடந்த ஒவ்வொரு மணித்துளியும் அவன் தனது மனைவியின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தான்... கொள்கை வேறுபட்ட அவளோ அவனிடத்தில் வரவே இல்லை... மூன்று வருடங்கள் கழித்து வந்தவள் அதன் பின் அதே கொள்கை முரண்பாட்டால் மீண்டும் அவனைப் பிரிந்து சென்றாள்... பின் இதோ இப்போது ஐந்து வருடங்கள் கழித்து மீண்டும்

அவனிடத்தில் வந்து சேர்ந்திருக்கிறாள்... அதுவும் அவனது ஜிக்கியோடு...

அவனது இந்தச் சிறு சந்தோசம் கூட ஆண்டவனுக்குப் பிடிக்கவில்லை போலும்... மகளை உடல்நலன் இல்லாது படுக்க வைத்து விட்டான்...

அடுத்து என்ன செய்வது என்று தெரியாது கலங்கி போய் அமர்ந்திருந்தான் சர்வ வல்லமை படைத்த தந்தை சித்தார்த்...!!!

"தொப்புள்கொடி அறுக்கும் முன்
உன்னைக் கையில் ஏந்திட துடித்தேன்...
உன் பட்டுப் பாதங்கள் என் நெஞ்சினில்
நர்த்தனமாட ஆசை கொண்டேன்...
நீ என் தோள் சாய்ந்துறங்க
நான் பேராசை கொண்டேன்...
உன் மழலை மொழி கேட்க
ஒவ்வொரு மணித்துளியும் தவமிருந்தேன்...
ஆணுக்கும் கருவறை இருந்திருந்தால் உன்னை
வரப்பிரசாதமாய் நான் சுமந்திருப்பேனடி...
என் உள்ளத்து ஒட்டுமொத்த அன்பையும்
உன்னிடத்தில் கொட்டியிருப்பேனடி...
மீண்டும் நான் பிறப்பெடுக்க வேண்டும்
உன் தந்தையாய் அல்லாது அன்னையாய்...
எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
நீயே என் செல்ல மகளாய்...!!!"

நனவாகும்...!!!

கடந்த காலம் கடந்து போக, நிகழ்காலம் நிஜத்தில் உறைக்கப் பட்டென்று வேகமாய் விழிகளைத் திறந்தான் சித்தார்த்... முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டு தன்னைச் சமன்படுத்திக் கொண்டவன் மனைவி எங்கே என்று திரும்பி பார்த்தான்... இரு இருக்கை தள்ளி அமர்ந்து இருந்தவளின் விழிகளில் இருந்து வழியும் நீர் கன்னத்தில் இறங்கி அவளது புடவையை நனைத்துக் கொண்டிருந்தது... அந்த உணர்வு கூட இல்லாது அவள் தனக்குள் கரைந்து கொண்டு இருந்தாள்...

மனைவியைக் காண காண அவனுள் ஏதோ ஒரு பாரம் ஏறியது... தன்னைத் திருமணம் செய்யாது இருந்து இருந்தால் இவள் நிம்மதியாக இருந்திருப்பாளோ என்று எப்போதும் அவனுக்குத் தோன்றும் எண்ணம் இப்போதும் தோன்றி அவனை வதைத்தது... அதுவும் இப்போது குழந்தை உண்டாகி இருக்கும் இந்த நேரத்தில் தான் அவளைத் திட்டியது சற்று அதிகப்படி தானோ என்று உள்ளம் குமைய சித்தார்த் அவள் அருகில் சென்று அமர்ந்தான்... அவனது வருகையைக் கூட உணராது அவள் தனக்குள் கவலையில் மூழ்கி போயிருந்தாள்...

"பேபி..."

சித்தார்த் பிரகதீஸ்வரியின் தோளை தொட்டதும் தான் தாமதம் அடுத்த நொடி அவள் அவனது சட்டை காலரை பிடித்துக் கொண்டு அதில் முகம் புதைத்து தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தாள்...

"அழாதே பேபி... ஜிக்கிக்கு ஒண்ணுமாகாது..." என்று அவன் அவளைத் தேற்றிய போதும் அவளின் அழுகை நின்றபாடில்லை...

"த்ச்சு... சொன்னா கேட்கணும் பேபி... இப்போ நீ தனி ஆளு இல்லை... இரண்டு உயிரா இருக்கும் போது நீ இப்படி அழுறது சரியில்லைம்மா..."

கணவனது வார்த்தையில் மெல்ல தலை நிமிர்ந்து அவனைப் பார்த்தவள், "நான் ஜிக்கிக்காக அழலை... அவளுக்குத் தான் நீங்க இருக்கீங்களே... நீங்க அவள் கூட இருக்கும் வரை அவளுக்கு எந்தப் பாதிப்பும் வராது..."

அவளது நம்பிக்கை வார்த்தையில் அவனது முகம் மலர்ந்தது...

"இது போதும் பேபி... இந்த நம்பிக்கை போதும்..." என்று அவன் அவளை அணைத்துக் கொண்டான்...

"எனக்கு உங்களை நினைச்சு தான் பயமாயிருக்கு... உங்களுக்கு ஏதாவது ஆகிருமோன்னு... இத்தனை நாளா எனக்குள் இது தான் கவலை... சரியா சாப்பிட முடியலை, தூங்க முடியலை... ஒண்ணும் செய்ய முடியலை... நம்ம கம்பெனி மேல் நடவடிக்கை எடுப்பதற்கான நாளை நான் முயன்ற வரை தள்ளி போட்டுக்கிட்டு இருக்கேன்... இனியும் தள்ளி போட முடியாது... ஜிக்கியின் இரத்த பரிசோதனை உங்களுக்கு எதிராக வந்தால் நாளைக்கே நான் நடவடிக்கை எடுத்தாக வேண்டும்... வலுவான ஆதாரத்திற்காகத் தான் நான் இத்தனை நாட்களாய் காத்துக் கொண்டிருக்கிறேன்... அதனால் எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு மாமு... என்ன பண்றதுன்னு எனக்குத் தெரியலை...?"

இத்தனை நாளாய் தன் மீது நம்பிக்கை இல்லாது பேசாது இருந்தாளோ என்று அவன் வருந்தியது வீண் என்று அவள் சொல்ல கேட்ட போது சித்தார்த் மீண்டும் புதிதாய்ப் பிறந்தான்... மனைவியைப் பற்றி, அவளது கொள்கைகள் பற்றி அவனுக்கு நன்கு தெரியும்... அதையும் மீறி அவள் அவனுக்காக யோசிக்கிறாள் என்றால் அவனை முழுவதும் நம்புகிறாள் என்று தானே அர்த்தம்...

"நான் இதைச் செஞ்சிருப்பேன்னு நினைக்கிறியா பேபி...?" என்று கேட்கும் போதே அவனது குரல் சிறிது தளர்ந்து ஒலித்தது...

"ம்ஹூம் இல்லை... நீங்க பணத்தின் பின்னாடி ஓடுபவர் தான்... அதற்காக மனிதாபிமானம் இல்லாதவர் இல்லை... நீங்க இதைச் செஞ்சிருக்க வாய்ப்பில்லை..." என்று உறுதியாக அவள் மறுத்தாள்...

"இது போதும் பேபி... உன்னோட இந்த நம்பிக்கை எனக்கு யானை பலம் கொடுக்குது... இந்த உலகமே என்னை நம்பாது போனாலும் பரவாயில்லை... நீ மட்டும் என்னை நம்பினால் போதும்... உனது நம்பிக்கை என்னை உயிர்ப்புடன் வாழ செய்யும்..." என்றான் அவன் சற்றே உணர்ச்சிவசப்பட்டவனாய்...

"அது எப்படி மாமூ நான் உங்களை நம்பாம இருப்பேன்... நான் உங்களைச் சந்தேகப்பட்டா என்னை நானே சந்தேகப்படற மாதிரி... ஆனால் சட்டம் வெறும் காகித சாட்சியைத் தான் நம்பும்... மனசாட்சியை நம்பாது மாமூ... நீங்க இதில் இருந்து எப்படி வெளியில் வர போறீங்க...? இத்தனை நாளாய் என் மனதை குடையும் கேள்வி இது தான்...? என்ன செய்யப் போறீங்க மாமூ...?"

தன்னை ஏறிட்டு பார்த்த அவளது கலங்கிய விழிகள் இரண்டிலும் அவளது மனதின் கலக்கத்தைப் படித்தவனாய்,

"இப்போ நான் என்ன செய்யணும்ன்னு நீ நினைக்கிற பேபி... சட்டப்படி பார்த்தால் நான் தான் குற்றவாளி... நீ சொல்வது போல் உண்மையை ஒத்துக்கிட்டு நான் ஜெயிலுக்குப் போகவா...? இல்லை தர்மத்தை நிலை நாட்ட அதர்மத்தை கையில் எடுக்கவா...? நான் என்ன செய்யணும்ன்னு நீயே சொல்...? உன் கொள்கைக்காக நான் என்னை மாத்திக்கிட்டேன்... எனக்கு எல்லாத்தையும் விட நீ தான் முக்கியம்... உனக்காக நான் ஜெயிலுக்குப் போகக் கூடத் தயாராக இருக்கேன்..."

ஒவ்வொரு விசயத்திலும், ஒவ்வொரு செயலிலும் கணவன் தன் மீதான காதலை பறை சாற்றிக் கொண்டிருப்பதைக் கண்டு அவளது மனம் காதலாய் நெகிழ்ந்தது... அவளுக்காக ஒவ்வொன்றையும் பார்த்து பார்த்து செய்யும்

கணவனுக்கு இதுவரை அவள் என்ன செய்தாள்...? அதனால் தனக்காக அவனது கொள்கையை, அந்தஸ்தை விட்டு கொடுப்பவனுக்காக அவள் தனது கொள்கையைத் தளர்த்த முடிவு செய்தாள்...

கணவனது காதலின் முன் அவள் கொண்ட கொள்கை தூசாக மாறிப் போனது அவளுக்கு... அவனுக்காக உயிரையும் துறக்க நினைப்பவள் அவனுக்காகத் தனது கொள்கையைத் துறக்க முடிவு செய்தாள்...

"தர்மம் வெற்றி பெற அதர்மத்தை கையில் எடுக்கணும்ன்னா அதையே செய்யுங்க மாமூ... இந்தக் காலத்தில் நியாயம், தர்மம் எல்லாமே வெறும் பேச்சு மட்டுமே... செயலில் அது கிடையாது... இன்று அது எல்லாம் செயல் வடிவம் பெற நிறையத் தடைகள் இருக்கு... அதனால் நீங்க போகும் பாதை, உங்க முடிவு தான் சரி... எப்போதும் என்னுடைய சப்போர்ட் உங்களுக்கு உண்டு... கட்டாயம் நீங்க இதில் வெற்றி பெறுவீங்கன்னு எனக்கு நம்பிக்கை இருக்கிறது..."

இருவருமே தங்களது கொள்கைளை விட்டு கொடுத்தனர் தங்களது இணை மீதான காதலால்... மனைவியின் காதலில், நம்பிக்கையில் சித்தார்த் காதலாய் உயிர்த்து எழுந்தான்...

"நிச்சயம் பேபி... உன்னுடைய இந்த நம்பிக்கையை நான் காப்பாற்றுவேன்..."

அதற்குள் ஜெகதீஸ்வரியின் இரத்த பரிசோதனை முடிவு வந்தது... அதில் அவர்கள் நினைத்தது போல் தடுப்பூசி போட்டதால் தான் இந்தப் பாதிப்பு என்பது தெள்ள தெளிவாக நிரூபிக்கப்பட்டு இருந்தது... ஆனால் சின்னவளுக்கு இதன் பாதிப்பு மிகவும் குறைவு என்றும் கூறியிருந்தது...

ஏனெனில் இதற்கு முன் அவளுக்குத் தடுப்பூசி போடப்பட்டது எல்லாம் வேறு மாநிலத்தில், வேறு நிறுவனத்தின் மருந்தில்... அதனால் இந்த மட்டும்

காய்ச்சலோடு போனது... இல்லை என்றால் இந்நேரம் காய்ச்சல் அதிகரித்து அவளது உயிர் போயிருக்கும் என்று மருத்துவர் கூறினார்... அப்படி என்றால் பிறந்தது முதல் சிறுக சிறுக உயிர் கொல்லும் வேதியல் பொருளை குழந்தைகள் உடலில் தடுப்பூசி மூலம் செலுத்தப்பட்டு இருக்கிறது... ஐந்து வயதாகும் போது அது தனது வேலையைக் காட்ட ஆரம்பிக்கிறது...

அதைக் கேட்டு சித்தார்த் மற்றும் பிரகதீஸ்வரியின் உள்ளமும், உடலும் நடுநடுங்கி போனது... அந்தக் கணம் இறந்து போன மற்ற குழந்தைகளின் பெற்றோர்களின் துயர நிலையைச் சித்தார்த்தால் உணர்ந்து கொள்ள முடிந்தது... அதே போல் மனைவி அவனிடத்தில் கேட்ட கேள்வியும் நியாயம் என்றே தோன்றியது...

இதற்கு எல்லாம் அவன் நியாயம் செய்ய வேண்டும்... அதற்கு முன் மகளின் உடல்நிலையைக் கவனிக்க வேண்டும்... அது தான் இப்போது முக்கியம் என்று கருதியவனாய் மனைவியிடம்,

"பேபி... என் மீது நம்பிக்கை இருக்கிறதா...?" என்று கேட்க...

"ஏன் மாமூ இப்படி ஒரு கேள்வி...?" என்றவளுக்கு ஆயாசமாக வந்தது... அதே சமயம் கவலையாகவும் இருந்தது...

"அப்போ என்ன, ஏதுன்னு கேள்வி கேட்காம நான் சொல்ற மருந்தை நம்ம மகளுக்குக் கொடுக்க நீ சம்மதிக்கணும்..." என்றவனை அவள் புரியாது பார்த்தாள்...

"இதற்கான மாற்று மருந்து கண்டுபிடித்தாகி விட்டது..." என்றவனைத் திகைப்பும், வியப்புமாய்ப் பார்த்தவளின் விழிகளில் மெல்ல மெல்ல விழிநீர் சேர ஆரம்பித்தது... அவள் என்ன மாதிரியாக உணர்ந்தாள் என்றால் அது அவளுக்கே தெரியாது... அப்படி ஒரு நிம்மதி, மகிழ்ச்சி அவளது மனதில்...

"ஆனால் அதற்கு முறையான அனுமதி இன்னும் பெறவில்லை... இன்னும் சில நாட்களில் கிடைத்து விடும்... அதற்கான ஏற்பாடுகளை நான் செய்து விட்டேன்... இப்போது என் மீது நம்பிக்கை வைத்து அந்த மருந்தை ஜிக்கிக்கு கொடுக்க நீ சம்மதிக்க வேண்டும்... எனக்காக இதைச் செய்வாயா...?" என்று தன்மையுடன் வேண்டுகோள் விடுத்த கணவனைக் கண்டு அவளது உள்ளம் உருகி போனது...

"இதை நீங்க என்னிடம் கேட்கவும் வேண்டுமா மாமூ...? ஜிக்கி என் மகள் மட்டுமல்ல... அவள் உங்க மகளும் கூட... உங்களை விட வேறு யார் அவளுக்கு நல்லது நினைத்து விட முடியும்...?" என்று புரிதலுடன் கூறிய மனையாளின் கைகளை அவன் நன்றியுடன் பிடித்துக் கொண்டான்...

அதன் பிறகு மளமளவென்று வேலை நடந்தது... குடும்ப மருத்துவர் என்பதால் இதற்கு முழு மனதுடன் சம்மதித்தார்... அப்படி இருந்தும் அவர் அந்த மருந்து பற்றி நன்றாக அலசி ஆராய்ந்து விட்டே அதற்கு ஒப்புதல் அளித்தார்... மாற்று மருந்தை வரவழைத்து மகளுக்குக் கொடுக்கச் சொன்ன பிறகே இருவரும் நிம்மதியாய் நாற்காலியில் அமர்ந்தனர்...

அடுத்தச் சில மணி நேரத்தில் ஜெகதீஸ்வரி ஆபத்துக் கட்டத்தைத் தாண்டி விட்டதை உணர்ந்து இருவரின் கண்களிலும் ஆனந்த கண்ணீர் தேங்கியது... சந்தோசம் என்றால் அப்படி ஒரு சந்தோசம்... மகள் காய்ச்சல் குறைந்து கண் விழிக்க இருபத்தி நான்கு மணி நேரமாகும் என்று மருத்துவர்கள் கூறியதும் சித்தார்த் நிம்மதி அடைந்தான்...

அப்போது தான் அவனுக்குக் கண்ணன் மற்றும் சந்தோஷின் ஞாபகம் வந்தது... இத்தனை நேரம் மகளின் கவலையில் அவனால் யாரை பற்றியும் சிந்திக்க முடியவில்லை...

"பேபி... முதலில் சந்தியாவுக்கு ஃபோன் போட்டுக் கண்ணனை இங்கே அழைத்து வந்து காட்ட சொல்... அவனுக்கு இது போல் ஏற்படுவதற்கு முன் தடுத்து

விடலாம்... அதே மாதிரி மித்ராவிடம் சந்தோஷை அழைத்து வர சொல்கிறேன்..."

கணவன் கூறியதும் தான் அவளுக்கும் கண்ணனின் ஆபத்து மூளையில் உறைக்க அவசரமாகச் சந்தியாவிற்கு அழைத்தாள்... அது போல் சித்தார்த் சங்கமித்ராவிற்கு அழைத்து உடனே சந்தோஷை தூக்கி கொண்டு மருத்துவமனைக்கு வர சொன்னான்...

பிறகு தனது பெற்றோருக்கு அழைத்து மகளின் நிலையைப் பற்றிக் கூறி மருத்துவமனைக்கு வர சொன்னான்... ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவர்கள் மகன் பேத்தியை தூக்கி கொண்டு மருத்துவமனைக்குச் சென்றதை அறிந்திருக்கவில்லை... திடுமென ஞாபகம் வந்தவனாய் சித்தார்த் அன்னையிடம் ஸ்வேதாவின் குழந்தைக்குத் தடுப்பூசி போட்டு விட்டதா...? என்று கேட்டான்...

“இல்லை சித்து... குழந்தைக்குச் சளி பிடித்து இருப்பதால் இன்னமும் தடுப்பூசி போடலை...” பிரபாவதி கூறவும் நிம்மதி பெருமூச்சு விட்டவன்,

“தேங்க் காட்... இப்போதைக்கு எந்த இன்ஜெக்சனும் போட வேண்டாம்மா...” என்று கூறி அவர்களை வரவழைத்தான்...

அதன் பிறகு மனைவியிடம் வந்தவன், "சொல்லிட்டியா பேபி..."

"ம்... ம்..." என்று தலையசைத்தவளுக்குப் பேச்சே வரவில்லை... மறுபடியும் பயம் மனதினை கவ்வியது...

"கண்ணன், சந்தோஷ்க்கு ஒன்றும் ஆகாது..." என்று அவளைத் தேற்றியவன்,

"நான் கிளம்புகிறேன் பேபி..." என்றவனை 'எங்கே...?' என்பது போல் பார்த்தாள் அவள்...

"இதற்கு யார் காரணம் என்று ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டாமா...?"

"ம்... வேண்டும்..." என்றவளை கண்டு ஆதூரத்துடன் புன்னகைத்தவன்,

"அதற்காகத் தான் நான் போகிறேன்..." என்று கிளம்பியவனைத் தடுத்து நிறுத்தியவள்,

"மாமூ... என்னோட நடவடிக்கையை இன்னும் ரெண்டு நாள் கழித்துத் தள்ளி போடவா...?" என்றவளை இமைக்காது பார்த்தான் சித்தார்த்...

அவளைப் பற்றி அவனுக்கு நன்கு தெரியும்... அவளின் நேர்மையைப் பற்றியும் நன்கு தெரியும்... அப்படிப்பட்டவள் அவன் மீது கொண்ட நம்பிக்கையின் பேரில் தனது கொள்கையைத் தளர்த்துவது கண்டு அவனுக்கு அத்தனை பெருமையாக இருந்தது...

"இப்போ மணி ஐந்து... நீ நடவடிக்கை எடுப்பதற்கு எப்படியும் பதினொரு மணியாகி விடும்... இந்த ஆறு மணி நேரத்தில் எல்லாவற்றையும் மாத்தி எழுத கூடிய சக்தி உன் மாமூவுக்கு இருக்கிறது பேபி... நீ தைரியமாக நடவடிக்கை எடு..."

"மாமூ..." என்று கண் கலங்கியவளை கண்டு,

"ச்சீ இது என்ன அசடு மாதிரி கண் கலங்கிக்கிட்டு... உன் மாமூ கோழையல்ல... வீரனடி பெண்ணே... எப்போதும் வெற்றி என் பக்கமே... நீ முதலில் நடவடிக்கையை எடு... அதன் பிறகு நடப்பதை வேடிக்கை பார்..." என்று இறுமாப்புடன் மீசையை முறுக்கி விட்டுக் கொண்ட கணவனைக் கண்டு பிரகதீஸ்வரி முகத்தில் கவலையையும் மீறி சிறு புன்னகை எட்டி பார்த்தது...

"நீ இந்தளவுக்குக் கலங்க தேவையில்லை பேபி... ஜிக்கி கண் விழித்துப் பார்க்கும் போது நான் இங்கு இருப்பேன்..." என்று அவளைத் தைரியப்படுத்தியவன்,

"இன்னும் கொஞ்ச நேரத்தில் அம்மா, அப்பா வந்திருவாங்க... உனக்குத் துணையா இருப்பாங்க... நீ தைரியமா இருக்கணும்... அது தான் எனக்கு வேணும்... நீ

தனியா எல்லாத்தையும் தைரியமா சமாளிக்கணும்... சமாளிப்பியா பேபி...?"

அவளைக் கலங்க வேண்டாம் என்று கூறியவன் மனைவி மீதான அன்பில் கலங்கி நின்றான்... இனி அவள் அடுத்துச் செய்யப் போகும் காரியம் அவளுக்கு எத்தனை வேதனை கொடுக்கும் என்று அவனுக்குத் தெரியும்... மருத்துவமனையில் மகள் உடல்நிலை சரியில்லாமல் படுத்திருக்கும் இந்த நேரத்தில் கணவன் மீது நடவடிக்கை எடுப்பது என்பது எந்தவொரு மனைவிக்கும் மிகவும் கொடுமையான விசயம்...

"ம்... ம்... ம்..." பேச்சற்று தலையசைத்த மனைவியைக் கண்டு மனம் கலங்கிய போதும் தன்னைத் திடப்படுத்திக் கொண்டு,

"இது தான் எனக்கு வேண்டும்... நான் எங்கே இருந்தாலும் என்னோட கவனம் முழுவதும் உன் மீதும், நம் மகள் மீதும் தான் இருக்கும்... அது போல் தான் நீ எந்தவொரு காரியம் செய்தாலும் நான் உன் கூடவே தான் இருப்பேன்... உன்னைக் கண்காணித்துக் கொண்டு உனக்குப் பாதுகாப்பாக உடன் இருப்பேன்..."

கணவனைப் பற்றித் தான் அவளுக்கு நன்கு தெரியுமே... அதை உணர்ந்தவளாய் அவள் மெல்ல தலையசைத்தாள்...

"மாமூ... நீங்க எது செஞ்சாலும் நான் உங்களை நம்பறேன்... என்னோட நம்பிக்கை நீங்க மட்டும் தான்..."

மனைவியின் வார்த்தையில் நம்பிக்கை வர பெற்றவனாய் சித்தார்த் அவளிடம் விடைப்பெற்றுச் சென்றான்...

சித்தார்த் சென்றதும் அவனது பெற்றோரும், சந்தியா, பானுமதி கண்ணனுடன் வருகை தந்தனர்... நல்லவேளையாகக் கண்ணனுக்குக் காய்ச்சல் எதுவும் இல்லை... இருந்தாலும் அவனின் இரத்தம் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது... பரிசோதனையின்

முடிவில் அவனுக்கு ஒன்றும் இல்லை என்று முடிவு வந்ததில் எல்லோரும் நிம்மதி உற்றனர்...

அதே மாதிரி அங்கு வந்து சேர்ந்த சந்தோஷின் இரத்தமும் பரிசோதனை செய்யப்பட்டது... அவனின் உடலில் பாதிப்பு அப்போது தான் ஆரம்பித்திருந்தது... மருத்துவர் அவனுக்கு மாற்று மருந்தை இப்போதே கொடுத்து விட்டால் சரியாகி விடும் என்று கூறினார்... அர்ஜுன், சங்கமித்ரா இருவருமே மருத்துவர்கள் என்பதால் மாற்று மருந்தை நம்பிக்கையுடன் மகனுக்குச் செலுத்த மனமார சம்மதித்தனர்... சந்தோஷிற்குச் சிகிச்சை ஆரம்பமானது...

பெற்றோராய் அர்ஜூன், சங்கமித்ரா இருவரும் மனம் தளர்ந்து போயினர்... அந்த நேரத்திலும் சித்தார்த்தை அவர்கள் பழிக்கவில்லை... ஏனெனில் அவனது மகளும் பாதிக்கப்பட்டுப் படுத்திருக்கிறாளே...

பிரகதீஸ்வரி உடனே கணவனுக்கு அழைத்து இந்த விசயத்தைக் கூற... அவனோ,

"இது நான் எதிர்பார்த்தது தான்..." என்றான் புதிராக...

"இதுக்கு என்ன அர்த்தம்...?" என்று கேட்டவளுக்கு அவன் விடை பகிரவில்லை...

"இதற்கான அர்த்தம் இன்னும் சில மணி துளிகளில் உனக்குப் புரியும்..." என்று கணவன் கூறியதை கேட்டு மர்ம கதை போல் தோன்றியது அவளுக்கு... ஆனாலும் அமைதி காத்தாள்...

"மூவருக்கும் இரத்த பரிசோதனை செய்தது மற்றும் தடுப்பூசி போட்ட அத்தாட்சி எல்லாத்தையும் எனக்கு வாட்ஸ் அப் பண்ணி விடு... இனி நான் இதைப் பார்த்துக்கிறேன்..." என்று கூறிய சித்தார்த் அழைப்பை துண்டித்து விட்டான்...

ஹரிக்கு விசயத்தைச் சந்தியா தெரியப்படுத்தி விட்டாள்... அவன் பதற்றத்துடன் தான் அங்கு வருவதாகக் கூறிய போது பிரகதீஸ்வரி தாங்கள் பார்த்துக் கொள்வதாகக் கூறி அவனைத் தடுத்து விட்டாள்...

சந்தோஷிற்கு ஒன்றும் இல்லை என்று கேள்விப்பட்ட பிறகே பிரகதீஸ்வரியால் நிம்மதி பெருமூச்சு விட முடிந்தது... அடுத்து கணவன் கேட்டதை அவனுக்கு அனுப்பி வைத்து விட்டு மகளை மாமியார் வசம் ஒப்படைத்து விட்டு அவள் தனது அலுவலகத்திற்குக் கிளம்பினாள்... என்ன துன்பம் மனதில் இருந்த போதும் அவள் தன் கடமையை மறக்கவில்லை... அவளின் மனதில் இப்போதும் கணவன் மீதான கவலை அரித்துக் கொண்டு தான் இருந்தது...

அலுவலகத்திற்கு நுழைந்தவள் மனதில் அப்படி ஒரு நடுக்கம்... தனது நடவடிக்கையை உடனே எடுக்காது முடிந்த வரை நேரத்தை கடத்தினாள்... கணவன் மீது நம்பிக்கை இருந்தது... ஏதாவது மாயம் செய்து கணவன் அவனைக் காத்து கொள்வான் என்று அவள் நம்பிக்கையோடு காத்திருந்தாள்...

அதே நேரம் சித்தார்த் சுகாதார அமைச்சரை சந்தித்துத் தடுப்பூசி மருந்தில் கலப்படம் செய்தது தொடர்பாக ஆதாரத்துடன் விளக்கி எடுத்துரைத்தான்... அதற்கும் தனது நிறுவனத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று உறுதிபடக் கூறினான்... தனது நிறுவன பெயரில் நடந்த மோசடி என்றாலும் அதற்குக் காரணம் தனது நிறுவனம் அல்ல என்று அதற்கான ஆதாரத்தைச் சுட்டி காட்டியவன், தான் கொடுத்த ஆதாரத்தின் அடிப்படையில் சம்பந்தப்பட்டவர்களின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்...

ஏனெனில் அவன் அந்த அறிக்கையை ஓய்வு பெற்ற முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதியை வைத்து பக்காவாகத் தயாரித்து இருந்தான்... அந்த அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் போதும் குற்றவாளிக்கான தண்டனை நிச்சயம்... அது போல் தான் கைது செய்யும் நடவடிக்கையும்... யாரும் எதிர்த்து ஒரு கேள்வி கேட்க முடியாது...

இதற்கான மாற்று மருந்தை தனது நிறுவனம் தயாரித்து விட்டதாகவும், முறையான அனுமதி கிடைத்ததும் அதை

எல்லோருக்கும் இலவசமாகத் தர தாங்கள் முன் வந்திருப்பதாகவும் அவன் கூறிய போது அந்த அமைச்சர் மகிழ்ந்து போய் மனமுவந்து அவனைப் பாராட்டினார்... உடனே நடவடிக்கை எடுப்பதாய் அவனிடத்தில் உறுதி கூறினார்...

நேரம் கடந்து கொண்டே சென்றது... வேறுவழியின்றிப் பிரகதீஸ்வரி தனது உதவியாளரை அழைத்து 'ப்ரஹா ஃபார்மசி'க்கு எதிரான நடவடிக்கையை மேற்கொள்ளச் சொல்லி உத்தரவிட்ட போது அவளது அலுவலகத் தொலைப்பேசி அழைத்தது... எடுத்து பேசியவள் மறுமுனையில் கிடைத்த செய்தியில் முகம் மலர்ந்தவளாய் பேசி விட்டு அதை வைத்தாள்...

அடுத்தக் கணம் பிரகதீஸ்வரி கம்பீரமாக மாவட்ட ஆட்சியராய் மாறி தனது உதவியாளருக்கு உத்தரவிட்டாள்... தவறு செய்த நிறவனத்தின் மீது அவள் நடவடிக்கை எடுப்பது உறுதி... ஆனால் நிறுவனம் தான் மாறிப் போனது... ஆம், அவள் உத்தரவு கொடுத்தது நீலேஷின் தந்தை நிறுவனத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டி...

இது எப்படிச் சாத்தியம் என்று அவளுக்குத் தெரியாது... ஆனால் திடீரென்று காட்சி மாறிய இந்த மாயாஜால வித்தையில் கணவனின் பங்கு அதிகம் இருப்பதாக அவளுக்குத் தோன்றியது... இப்போது அவளது மனதில் கணவன் 'சூப்பர் ஹீரோ'வாகப் பதிந்து போனான்...

அடுத்தச் சில மணித்துளிகளில் நீலேஷின் குடும்ப மருந்து தயாரிப்பு நிறுவனம் போலி மருந்துகள் தயாரித்த குற்றத்திற்காக மூடப்பட்டது... நீலேஷின் தந்தை அதை முற்றிலும் மறுத்தவராய் இதில் தனது மகன் நீலேஷ் மட்டுமே குற்றவாளி என்றும், இதில் மற்ற குடும்ப உறுப்பினர்களுக்கும் மற்றும் தங்களது நிறுவனத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று அவர் உறுதிபடத் தெரிவித்து விட்டார்...

தந்தையால் கை விடப்பட்ட நீலேஷ் தலைமறைவாகத் திட்டமிட்டு விமான நிலையத்திற்குச் சென்ற போது அங்கு வைத்து காவல்துறையினரால் அவன் கைது செய்யப்பட்டான்... சித்தார்த்திற்கு அவன் என்ன செய்ய நினைத்தானோ அதுவே அவனுக்குத் திரும்பக் கிடைத்தது... கெடுவான் கேடு நினைப்பான் என்பது இது தான் போலும்...

பிரகதீஸ்வரிக்கு ஏனோ கணவனிடம் பேச வேண்டும் போலிருந்தது... அத்தனை சந்தோசம் அவள் மனதில்... அவளது அழைப்பை உடனே ஏற்ற சித்தார்த்,

"சொல்லுங்க கலெக்டர் மேடம்..." என்றான் வேண்டும் என்றே விறைப்பான கேலி குரலில்...

"ஐ லவ் யூ மாமூ..." என்றவளின் வார்த்தையில் மட்டுமல்லாது விழிகளிலும் அத்தனை காதல் கசிந்து வழிந்தது...

"இப்போ மேடமுக்கு ட்யூட்டி இல்லையா...?"

"என் மாமூ கூடப் பேசுறது மட்டுமே இப்போதைக்கு என் ட்யூட்டி..." என்று கிறக்க குரலில் கூறியவளின் வார்த்தையில் அவனது மனமும் சேர்ந்து கிறங்கி போனது...

"ம்ஹூம்... அப்படியா பொண்டாட்டி மேடம்..."

"ம்... அப்படியே தான்..."

"மீ டூ பொண்டாட்டி..." என்றவனது வார்த்தை கேட்டு,

"எதுக்கு மீ டூ...?" என்று புரியாது அவள் விழிக்க...

"ஐ லவ் யூ பேபி..." என்றவனது வார்த்தையில் அவனது ஒட்டு மொத்த காதலின் அளவை அவள் உணர்ந்தாள்...

"எப்படி மாமூ இதைச் சாதிச்சீங்க...? காலையில் இருந்து என் மனசு ஒரு நிலையில் இல்லை..."

"இத்தனை நாளாய் எனக்கு வேறு என்ன வேலை...? இது மட்டுமே என் வேலையாக இருந்தது..." என்றவனைக் கண்டு அவளது விழிகள் கலங்கியது...

"எல்லாம் உனக்காகத் தான்... உன் பெயரில் இருக்கும் கம்பெனி இது... அதை விட உன் அப்பா மாதிரி நேர்மையான மனிதரின் மருந்து தயாரிப்புகளுக்குக் களங்கம் வருவதைத் தடுப்பது என் கடமை... அவர் எனக்கு உறவு முறையில் மாமாவாக இருந்தாலும் எனக்கு அவர் தெய்வம்..."

அவனது ஜிக்கியை காத்த தெய்வம் அல்லவா அவர்... சித்தார்த் மிகுந்த உணர்ச்சி பெருக்கில் இருந்தான்...

"மாமூ..." மனைவியின் கலக்க குரலில் தன்னுணர்வு அடைந்தவன் பின் மெல்ல சிரித்து,

"என் தேவதைக்கு உயிர் கொடுத்த தெய்வம் அல்லவா அவர்..."

அது உண்மையும் கூட... ஜெகதீஸ்வரியை அவர் காத்து பிரகதீஸ்வரி மண்ணில் அவதரிக்கக் காரணமாக இருந்தது நரசிம்மன் தானே... அவளோ தன் தந்தை என்பதால் கணவன் அப்படிக் கூறுகிறான் என்று நினைத்து கொண்டாள்... அவளது முகத்தில் புன்னகை அரும்பியது...

"நான் தேவதையான்னு எனக்குத் தெரியாது... ஆனால் என் மாமூ சூப்பர் ஹீரோன்னு எனக்குத் தெரியும்..." என்றவள் வார்த்தைகளில் அப்படி ஒரு பெருமை, கர்வம் இருந்தது...

"ஹா ஹா..." என்று வாய் விட்டு சிரித்தவன்,

"ஊரே இதைச் சொல்லும் போது இருக்கும் கிக்கை விட இப்போது நீ சொல்லி நான் கேட்கும் போது அப்படியே ஜிவ்வுன்னு வானத்தில் பறப்பது போல் ஒரே கிக்காக இருக்கு பேபி..."

"மாமூ... கிக் பத்தி எல்லாம் பேசுறீங்க... என்ன விசயம்...?" மனைவியாய் கறார் குரலில் கண்டிப்பாய் கேட்டவளை

கண்டு மீண்டும் வாய் விட்டு சிரித்தவன்,

"ஹா ஹா... எல்லாம் என் மனைவி கொடுத்த காதல் போதை தான் காரணம்..." என்க...

அவனது காதலில் இப்போது அவள் போதை உண்டது போல் ஒருவித மயக்கத்தில், மோனநிலையில் ஆழ்ந்தாள்...

"சரி பேபி... நீ வேலையை முடித்துக் கொண்டு சீக்கிரம் வா... நான் ஜிக்கியை பார்ப்பதற்காக ஹாஸ்பிட்டலில் போகிறேன்..."

அவனது வார்த்தையில் மயக்கம் தெளிந்தவள், "இதோ மாமூ... லீவு போட்டுட்டு வர்றேன்..." என்று அழைப்பை துண்டித்தவள் விடுமுறை எடுத்து விட்டு மருத்துவமனைக்கு விரைந்தாள்...

தன்னை விடக் கணவனது மகள் மீதான அக்கறை அவள் மனதினில் பொறாமையைக் கிளப்பவில்லை... மாறாக அவனது அக்கறை அவளது அடி நெஞ்சு வரை சென்று தித்தித்தது...

மருத்துவமனைக்கு வந்து சேர்ந்த சித்தார்த் முதலில் செய்த காரியம் எல்லாவற்றையும் எடுத்து கூறி அர்ஜூன், சங்கமித்ராவிடம் மன்னிப்பு கேட்டது தான்... ஏனெனில் ஜெகதீஸ்வரி போன்று சந்தோஷும் அதிகமாய்ப் பாதிக்கப்பட்டு விட்டானே... சித்தார்த் நிலையைப் புரிந்து கொண்டு அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை... தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று என்று நிம்மதி அடைந்து அவனைத் தேற்றினர்...

சிறிது நேரத்தில் பிரகதீஸ்வரியும் வந்து விட்டாள்... எல்லோரும் அங்கிருப்பதாய் சொன்ன போது சித்தார்த் அவர்களை எல்லாம் காலையில் வந்து பார்த்துக் கொள்ளச் சொல்லி வீட்டிற்கு அனுப்பி வைத்தான்... சந்தோஷையும் வீட்டிற்கு அழைத்துச் செல்ல சொல்லி மருத்துவர் கூறி விட்டார்...

எல்லாம் சுமூகமாக முடிந்து விட்டது... ஒரே ஒரு விசயத்தைத் தவிர... அவர்களது செல்ல மகள் மட்டும் இன்னமும் கண் விழிக்கவில்லை... சித்தார்த் மகளின் அருகிலேயே அமர்ந்து கண்கள் கலங்க அவளின் தலையை வருடி கொண்டு அமர்ந்திருந்தான்...

"மாமூ..." என்று ஆறுதலாக அவனது தோளில் கை வைத்தாள் பிரகதீஸ்வரி...

அடுத்த நொடி சித்தார்த் என்னும் கம்பீரமான ஆண்மகன் சிறு பிள்ளை போல் மனைவியை இடையோடு அணைத்துக் கொண்டு அவளது வயிற்றில் முகம் புதைத்தான்... அவனது முதுகு குலுங்கியதில் இருந்து அவன் அழுகிறான் என்பது அவளுக்கு நன்கு புரிந்தது...

"மாமூ... இப்போ தான் ஜிக்கிக்கு ஆபத்து ஒண்ணும் இல்லையே..."

"இல்லை தான்... ஆனால் எதாவது ஒண்ணு ஆகியிருந்தால்..." அதை நினைக்கவே பயந்தவன் போல் அவன் வேதனையுடன் கண்களை மூடி கொண்டான்...

இத்தனை நேரம் பிரச்சினைக்கான தீர்வு தேடி ஓடிய தொழிலதிபன் சித்தார்த் இவன் இல்லை... இவன் மகள் மீது அன்பு கொண்ட சாதாரணப் பாசக்கார தந்தை... அவன் இப்படிக் கண் கலங்கி கதறுவது என்றால் அவனுள் எத்தனை துக்கம் இருந்திருக்க வேண்டும்... அத்தனை துக்கத்தையும் தன்னுள் போட்டு புதைத்துக் கொண்டு அவளையும் தேற்றி, மகளின் நோய்க்கான மாற்று ஏற்பாடு செய்து, குற்றவாளியை பிடிப்பதற்காக ஆதாரங்களைத் திரட்டி என்று கணவனது ஒவ்வொரு செய்கையையும் நினைத்து அவளுள் பிரமிப்பு எழுந்தது...

இது அத்தனையும் விட அவள் மகிழ்வாய் பேசிய போது அதற்கு ஈடு கொடுத்து அவனும் மகிழ்வாய் பேசியது என்று எல்லாம் அவளது நினைவுக்கு வந்து கணவன் என்கிற ஆணின் மீதான மதிப்பு அவளிடத்தில் வானுயர்ந்து போனது... ஆணாய்ப் பிறப்பதும் கடினமே என்பதை அவள்

முதல்முறையாக உணர்ந்தாள்... பெண் கருவறையில் மகவை சுமந்தால் ஆண் தனது மன கருவறையில் தன் மகவை சுமக்கின்றான்... மகவை மட்டுமா அவனது சரி பாதியையும் சேர்த்து அல்லவா சுமக்கின்றான்...

அதனால் தான் ஆண்களைத் தாயுமானவன் என்கிறார்களோ... மனதளவில் பெண்களின் வேதனையை அறிந்து துடித்து அதை நீக்க பாடுபடும் ஒவ்வொரு ஆணும் இங்குத் தாயுமானவனே...!!!

"தாயின் கருவறையில் நனவாய் மகவு...
தந்தையின் மனவறையில் கனவாய் மகவு...
மகவின் ஆரோக்கியத்திற்காக
தீயதை ஒழிக்கும் பண்பு,
மகவு உண்பதற்காகப் பட்டினி
கிடக்கும் மாண்பு,
தனது தேகத்தைச் செருப்பாக்கி,
குருதியை குறுக்கி காசாக்கி,
உழைக்கும் தந்தையின் வியர்வை
தாயூட்டும் தாய்ப்பாலிற்குச் சமம்...
தாயன்பிற்குக் குறைந்ததல்ல
தந்தையின் தியாகம்...
தந்தையும் தாயுமானவன் தான்...
தாய்க்கு நிகரானவன் தான்..."

நனவாகும்...!!!

"மாமூ... அதான் ஜிக்கிக்கு ஒண்ணும் ஆகலையே..." என்று கணவனைத் தேற்றிய பிரகதீஸ்வரி அவனது கண்களைத் துடைத்து விட்டு,

"இது என்ன சின்னப் பிள்ளை மாதிரி... இது என் மாமூவுக்கு அழகு இல்லையே..." என்று அவனது முகத்தைக் கைகளில் தாங்கியபடி புன்னகையுடன் கூற...

மனைவியின் வார்த்தைகளில் சித்தார்த்தின் இதழ்களில் மெல்ல புன்னகை எட்டி பார்த்தது...

"அது என்னமோ தெரியலை...? உனக்கும், ஜிக்கிக்கும் ஏதாவது ஒண்ணுன்னா என்னோட தைரியம் என்னை விட்டு போயிருது..." என்று பாவம் போல் கூறியவனைப் பார்க்கும் போது அவளுக்குமே பாவமாக இருந்தது...

"ஜிக்கி கண் முழிக்க இன்னும் நேரம் இருக்கு... உங்களைப் பார்த்தா ரொம்ப டயர்டா இருக்கிற மாதிரி இருக்கு... நீங்க படுங்க..."

"இல்லை... நீ ரெஸ்ட் எடு..." என்று அவன் மறுத்து கூற...

மொத்தத்தில் இருவரும் உறங்காது மகளின் இருபுறமும் அமர்ந்து அவள் கண் விழிப்பதற்காகக் காத்து இருந்தனர்... அவர்களை ஏமாற்றாது அதிகாலையில் ஜெகதீஸ்வரி கண் விழித்துப் பார்த்தாள்... முதலில் அவள் பார்த்தது தனது தந்தையைத் தான்...

"அப்பா..." என்று மெல்லிய குரலில் முனங்கியவளை கண்டு சித்தார்த் விழிகள் கலங்க பார்த்தவன் அடுத்தக் கணம் அவளை அள்ளி எடுத்து தனது மடியில் போட்டுக் கொண்டு அவளது தலையை வருடி கொடுத்தான்...

"ஜிக்கி... இப்போ எப்படி இருக்கும்மா...?"

தகப்பனது தவிப்பை உணர்ந்தாளோ அந்தச் சின்னச் சிட்டு... மெல்ல அவனைக் கண்டு புன்னகைத்தவள், "நௌ

ஐயம் ஆல்ரைட்ப்பா..." என்றாள் அவனைத் தேற்றும் விதமாய்...

"ஜிக்கி மை லவ்..." என்று கண்ணீர் மல்க மகளின் நெற்றியில் முத்தமிட்டு அவளை அணைத்துக் கொண்டான் அந்த அன்பு மிக்க அப்பா...

பிரகதீஸ்வரி குறுக்கே புகாமல் இருவரது பாச பிணைப்பை கண்டு கண்களில் ஆனந்த கண்ணீர் தேங்க மகிழ்ச்சியுடன் பார்த்தபடி இருந்தாள்... சிறிது நேரம் தந்தையும் மகளுமாய்த் தனி உலகில் சஞ்சரித்துக் கொண்டு இருந்தனர்... ஏதேச்சையாய் நிமிர்ந்து பார்த்த சித்தார்த் தங்களை மனைவி பார்த்துக் கொண்டு இருப்பதைக் கண்டு ஒற்றைப் புருவத்தைத் தூக்கி 'என்ன?' என்று அவளைப் பார்த்துச் சைகை செய்தவன் மகளிடம்,

"நீயும், நானும் பேசுறது பார்த்து உன் அம்மாவுக்குப் பொறாமையா இருக்கு ஜிக்கி..." என்று அவன் மனைவியைக் கேலி செய்து சிரிக்க...

"நீங்களும் வாங்கம்மா..." என்று மகள் அன்னையை நோக்கி கை நீட்டினாள்...

அதைப் பற்றியபடி அருகில் வந்த பிரகதீஸ்வரி, "பொறாமை எல்லாம் இல்லை ஜிக்கி... உங்கப்பா உன் மேல் வைச்சிருக்கும் பாசம் பார்த்து திகைப்பா இருக்கு... ஒரு ஆணால் இப்படி அன்பு காட்ட முடியுமான்னு பிரமிப்பா இருக்கு... உனக்கு ஒரு நல்ல அப்பா கிடைச்சிருக்காங்க ஜிக்கி... நீ எப்போதுமே அப்பா மனசு நோகும்படி நடக்கக் கூடாது... நீ எப்போதும் அப்பா சொல் பேச்சு கேட்டு நடக்கணும்..." என்று மகளுக்கு எடுத்து கூறினாள்...

எதிர்பார்ப்பு இல்லாது பாசம் வைத்திருக்கும் தந்தைக்கு மகள் செய்ய வேண்டிய கடமை அல்லவா இது...

"ஷ்யூர்ம்மா... அப்பா பேச்சு மட்டும் இல்லை... நான் உங்க பேச்சும் கேட்டு சமத்து பொண்ணா இருப்பேன்..." என்று கூறிய சின்னவள் இருவரையும் அணைத்து கொண்டாள்...

பெற்றோர் மனதில் மகளை நினைத்து பெருமிதத்துடன் கூடிய மகிழ்ச்சி நிறைந்திருந்தது...

மறுநாளே ஜெகதீஸ்வரியை வீட்டிற்கு அழைத்து வந்து விட்டனர்... அதன் பின்னர்ச் சித்தார்த் வேலையில் பரபரப்பாகி விட்டான்... தன் மகளைப் போன்று எல்லாக் குழந்தைகளையும் காப்பாற்ற வேண்டுமே... ஒரு தந்தையாய் அதற்கான வேலைகளில் அவன் முனைப்பாய் இறங்கினான்...

ஒருவழியாய் கண்டுபிடித்த மருந்திற்கு முறையான அங்கீகாரம் வாங்கியவன் அடுத்த நொடி சுகாதார அமைச்சகம் மூலம் அனைத்து மக்களுக்கும் அந்த மருந்து இலவசமாகக் கிடைக்க ஏற்பாடு செய்தான்... எல்லாம் துரித வேகத்தில் செய்து முடித்தான்... அவனது பணப் பலம், ஆள் பலம் அனைத்தையும் சாதிக்க வைத்தது...

அதன் பிறகே சித்தார்த் சிறையில் இருக்கும் நீலேஷை சந்திக்கச் சென்றான்... அவனைக் கண்டதும் நீலேஷ் முகத்தைத் திருப்பிக் கொண்டான்... தன்னைச் சந்திக்க மறுத்தவனைத் தனது செல்வாக்கால் வலுக்கட்டாயமாகச் சந்தித்தான் சித்தார்த்... அதிலேயே தனது பலத்தை அவனுக்கு நிரூபித்துக் காட்டி விட்டான் அவன்...

"என்ன நீலேஷ் எப்படி இருக்க...?"

அதற்குப் பதில் கூறாது அமைதியாக இருந்தவனைக் கண்டு சித்தார்த்தின் உதட்டில் புன்னகை வந்தமர்ந்தது...

"நீ அமைதியா இருப்பதால் மட்டும் நீ செஞ்சது எல்லாம் சரின்னு ஆகிவிடாது... இது போல் கொடூரமா பிஞ்சு குழந்தைகளைக் கொல்லும் அளவுக்கு உனக்குள் அப்படி என்ன வெறி...?"

சித்தார்த்தின் வார்த்தையில் நீலேஷ் அவனைத் திரும்பி பார்த்தான்...

"நீலேஷ்... நீ எனக்கு ஒரு நல்ல நண்பன்... உனக்கும் எனக்கும் அப்படி என்ன பிரச்சினை இருக்கப் போகுது...?

ஒருவேளை ஸ்வேதாவை கல்யாணம் பண்ணாம போனதால் உனக்கு என் மீது கோபமா...? அப்படி என்றால் அதுக்கு நான் ஒண்ணும் பண்ண முடியாது... யார் மனசில் யார் இருக்காங்கன்னு யாருக்கு தெரியும்...? ஸ்வேதா மனசில் சரவணன் இருக்கும் போது நான் உனக்கு எந்த உதவியும் செய்ய முடியாது... இது எல்லாத்தையும் விட என் மனைவியை எதிரியா பார்க்கும் நீ எங்க வீட்டு மாப்பிள்ளையா வர முடியாது நீலேஷ்..."

முதலில் நண்பனாய் உருக்கமாய்ப் பேசிய சித்தார்த்தின் குரல் கடைசி வார்த்தைகளைக் கூறும் போது காதல் கணவனாய் இறுக்கமாய் ஒலித்தது...

சித்தார்த் பேசியது கேட்டு நீலேஷ் வாய் விட்டுச் சிரித்தான்... பெருங்குரலெடுத்து அவன் சிரித்தது நிசப்தமாய் இருந்த அந்த அறை முழுவதும் நாராசமாய் எதிரொலித்தது... சித்தார்த் கண்கள் இடுங்க அவனைக் கூர்மையாய் பார்த்தான்...

"ஸ்வேதாவுக்காகவோ இல்லை உன்னைக் காதலித்த என் தங்கைக்காகவோ நான் இதைச் செய்தேன் என்று நினைத்தால்... நீ தான் பைத்தியக்காரன்..."

நேத்ரா தன்னைக் காதலித்தது இப்போது தான் சித்தார்த்திற்குத் தெரியும்... அவளின் அதிகப்படியான உரிமை பேச்சு எதனால் என்பது இப்போது அவனுக்கு நன்கு புரிந்தது... நல்லவேளை இப்போது நேத்ரா திருமணமாகி வெளிநாட்டில் இருக்கிறாள்...

"வெறும் காதலுக்காக எவனாவது இதைச் செய்வானா...? அப்படிப் பார்த்தால் உன் தங்கை மீது எனக்குக் காதலே கிடையாது... என் காதல் எல்லாம் இந்த மருந்து கம்பெனி மீது தான்... அதை அடைய தான் நான் ஸ்வேதா பின்னால் சுற்றினேன்... எனக்கு வேண்டியது மருந்து கம்பெனியின் மொத்த பங்குகளும்... ஆனால் நீ அதை எனக்கு விட்டு கொடுக்கவில்லை... அதற்காகத் தான் நான் இப்படிச் செய்தேன்... எனக்குக் கிடைக்காத பேர், புகழ் உனக்குக் கிடைக்கக் கூடாது என்பதற்காகத் தான் நான் இதைச்

செய்தேன்... அப்படி என்னை விட நீ என்ன உசத்தி...?" என்று ஆங்காரமாய், ஆக்ரோசமாய் வந்தது நீலேஷின் வார்த்தைகள்...

கடைசியில் பணத்திற்கு ஆசைப்பட்டுத் தானா நண்பன் இத்தகைய இழி செயலை செய்தது... சித்தார்த்திற்கு அத்தனை வேதனையாக இருந்தது... அப்போது மனைவி கூறியது ஞாபகத்தில் வந்து அவனைப் பெரிதும் இம்சித்தது... 'பணத்தால் விலைக்கு வாங்க முடியாததும் உலகத்தில் உண்டு' என்பது... அவை எத்தனை சத்தியமான வார்த்தைகள்...

அன்பை பணத்தைக் கொடுத்து விலைக்கு வாங்க முடியாதது போல் உயிரிழந்த குழந்தைகளின் உயிர்களைத் தன்னிடம் உள்ள பணத்தால் வாங்க முடியாதே... அதை நினைத்து அவனது உள்ளத்தில் அப்படி ஒரு வலி... தந்தையாய் அவன் மிகவும் வேதனை அடைந்தான்... இத்தனை வேதனைக்கும் பதிலடி கொடுக்கா விட்டால் அவன் நல்ல தந்தை அல்லவே...

"நிச்சயம் உன்னை விட நான் உசத்தி தான் நீலேஷ்... உண்மையாய் காதலிப்பதில், அந்தக் காதலால் எல்லாம் கிடைக்கப் பெற்று நல்லதொரு வாழ்க்கை வாழ்வதில் இப்படி எல்லாத்திலும் நான் உன்னை விட உசத்தி தான்... என்னிடம் இருக்கும் நிம்மதி இப்போது உன்னிடத்தில் இருக்கிறதா...? சொல் நீலேஷ்... நீ வேறு எது கேட்டு இருந்தாலும் நான் சந்தோசமாய்க் கொடுத்து இருப்பேன் நம் நட்புக்காக... ஆனால் நீ ஆசைப்பட்டது சித்த மருத்துவம் மீது... உனக்கே தெரியும் அது என் மாமனாரோடது என்று... என் மனைவியின் லட்சியமும் அது தான்... அதை எப்படி நான் உன்னிடம் கொடுக்க முடியும்...?"

"தேவைக்கு அதிகமாய் ஆசைப்பட்டு நல்ல நட்பை இழந்து விட்டாய் நீலேஷ்... அது போல் தேவையில்லாது அமைதியாய் இருந்த என்னைச் சீண்டி விட்டு விட்டாய்... என்ன பார்க்கிற...? என் மனைவி விருப்பப்படி தான் உனக்கு இந்தச் சட்டப்படி தண்டனை... ஆனால் இந்தச்

சித்தார்த்தனின் கோர்ட்டில் உனக்கான தண்டனை காத்துக் கொண்டிருக்கிறது... எப்போது இந்தத் தண்டனை முடிந்து நீ வெளியில் வருகிறாயோ... அப்போது உனக்கான எனது தண்டனை தொடங்குகிறது..."

"நீ என்னமோ பெரிய உத்தமன் போல் பேசுகிறாய்...?" என்று எகிறிய நீலேஷை கண்டு வறண்ட புன்னகை சிந்திய சித்தார்த்,

"நிச்சயம் நான் உத்தமன் இல்லை தான்... ஆனால் செய்த தவறினை திருத்திக்கத் தெரிந்தவன்... இனி தவறு செய்யாது வாழ முயற்சிப்பவன்... ஆனால் நீ...? சின்னஞ்சிறு தளிர்களை மொட்டிலேயே கருக செய்தவன்... உனக்கு இந்தத் தண்டனை எல்லாம் போதாது... இன்னமும் அதிகமான தண்டனையை நீ அனுபவிக்க வேண்டும்... ஏன்டா உயிர் வாழ்றோம்ன்னு நீ கதறியழுது துடித்துச் சாகணும்... அப்படி ஒரு சாவை நான் உன் கண்ணில் காட்டுவேன்..." என்று ஆவேசமாய்க் கூறினான் சித்தார்த்...

மழலைகளின் மறைவில் தந்தையாய் வேதனை கொண்ட சித்தார்த் பழிவாங்குவதில் தொழிலதிபனாய் நிமிர்ந்து நின்றான்...

அன்றிரவு சித்தார்த் வீட்டிற்கு வரும் போது மிகவும் தாமதமானது... அவன் வரும் போது மகள் நல்ல உறக்கத்தில் இருந்தாள்... அவன் ஒன்றும் பேசாது மனைவியின் மடியில் படுத்துக் கண்களை மூடி கொண்டான்...

"வேலை அதிகமா மாமூ..." என்று கேட்ட மனைவியிடம் இல்லை என்பது போல் தலையசைத்தான்...

மேலே ஒன்றும் பேசாது பிரகதீஸ்வரி அவனது நெற்றியை மெல்ல வருடி கொடுக்க அது அவனுக்கு இதமாக இருந்தது போலும்... அவனது மனம் சற்றே அமைதி அடைந்ததும் மனைவியிடம் நீலேஷை பற்றிக் கூற துவங்கினான்...

"மருந்து கம்பெனி முழுவதும் அவனுக்கு வேணும்ன்னு ஆசைப்பட்டு இருக்கான்... அது ஸ்வேதாவை கல்யாணம் பண்ணுவதன் மூலம் சாதிக்க நினைச்சு இருக்கான்... அது நடக்கலைன்னு தெரிஞ்சதும் இந்த மாதிரி கேவலமான காரியத்தில் அவன் இறங்கி இருக்கான்... அவனுக்குக் கிடைக்காதது எனக்கும் கிடைக்கக் கூடாதுங்கிற கோபம்..."

"அதுக்காகச் சின்னக் குழந்தைகளைப் போய்... எப்படி மாமூ இதைச் செய்ய மனசு வந்தது...?"

"அது தான் எனக்கும் புரியலை... அவனுக்கும் இதே வயதில் ஒரு மகன் இருக்கிறான்... இப்போது இன்னொரு குழந்தை வேறு பிறக்க இருக்கிறது... அப்படி இருந்தும் இந்தத் தவறை செய்து இருக்கிறான் என்றால்...? அவனுக்கு எந்தளவுக்குப் பணத்தின் மீது ஆசையிருக்க வேண்டும்... 'பணத்தால் விலைக்கு வாங்க முடியாதது உலகத்தில் உண்டு'ன்னு நீ சொன்னப்போ எனக்குப் புரியலை... ஆனால் இப்போ புரியுது பேபி..." என்றவன் மனைவியின் கரத்தினைத் தன் கன்னத்தோடு வைத்து அழுத்தி கொண்டான்...

"ஆனாலும் நேர்மை சாதிக்காத சில விசயங்களைப் பணம் கொண்டு தானே சாதிக்க வேண்டியிருக்கிறது... அதனால் எது எந்த நேரத்தில் தேவைப்படுகிறதோ அதை அந்தந்த நேரத்தில் பயன்படுத்துவது சரியே..." என்று புரிதலுடன் கூறிய மனைவியைக் காதலாய் பார்த்தான் சித்தார்த்...

"ஆமாம் நீலேஷால் எப்படிப் போலி மருந்துகளைத் தயாரித்து நம் மருந்துகளோடு கலக்க முடிந்தது...?"

"நம்ம கம்பெனியின் உள்ளே தயாரித்தால் எனக்குத் தெரிந்து விடும்ன்னு அவனோட கம்பெனியில் தயாரிச்சு இருக்கான்... மற்ற நகரங்களில் உள்ளதை இவனோட அண்ணன், தம்பிகள் பார்த்துக்கிறாங்க... இங்கே சென்னை பொறுப்புகள் மொத்தமும் இவன் தான் பார்த்துக் கொள்கிறான்... அதனால் தான் போலி மருந்து தயாரிப்பது அவனுக்குச் சுலபமா போயிருச்சு... அதையும் இங்கே கம்பெனிக்குள் கொண்டு வந்து கலந்தால் எனக்குத்

தெரிஞ்சிரும்ன்னு மருந்துகள் லாரிகளில் போகும் போது நடு வழியில் நிறுத்தி அதன் டிரைவருக்குப் பணம் கொடுத்து போலி மருந்துகளை நம் மருந்தோடு கலந்திருக்கிறான்... அப்படி அவன் ஆட்கள் வைத்து இதைச் செய்த போது தான் என்னிடம் கையும் களவுமாய்ப் பிடிப்பட்டது..."

கணவன் கூறியதை கேட்டு பிரகதீஸ்வரிக்கு வருத்தமாக இருந்தது... ஒருவனது சுயநலத்தால் எத்தனை உயிர்கள் பலியாகி விட்டது...

"எல்லா மருந்துகளிலும் கலந்து கொடுத்தால் இதன் பாதிப்பு அதிகமாகி நான் சுதாரித்து விடுவேன்னு தெரிந்து சில மருந்துகளில் அதுவும் கொஞ்சம் கொஞ்சமாகக் கலந்து இருக்கிறான்... அதனால் தான் ஜிக்கி, சந்தோஷ் மாதிரி கண்ணனுக்கு பாதிப்பு ஏற்படலை... நல்லவேளை முதலில் அவன் போட்ட தடுப்பூசி எல்லாம் வெளியூரில் போட்டதால் எந்தவொரு பிரச்சினையும் இல்லாது அவன் மட்டும் தப்பித்து விட்டான்...”

“பிறந்தது முதல் ஐந்து வயது வரை போடும் தடுப்பூசிகளில் கலந்து அத்தனை குழந்தைகளையும் சிறுக சிறுக கொன்று இருக்கிறான்... அப்போது தானே இதன் பாதிப்பை மெதுவே கண்டுபிடிக்க முடியும்... அதே சமயம் இதைக் கண்டுபிடித்து உறுதி செய்தால் தண்டனையில் இருந்து தப்ப முடியாது... என்னைப் பழிவாங்க எத்தனை உயிர்களைக் காவு வாங்கி விட்டான்... இரக்கமற்ற இராட்சசன்..." என்று மனம் குமுறிய கணவனின் தலை கோதி ஆறுதல் அளித்தாள் பிரகதீஸ்வரி...

மனைவியின் ஆறுதலில் உள்ள குமுறல் குறைந்து மெதுவே கண் அசந்தான் சித்தார்த்... சிறு குழந்தை போல் உறங்கும் கணவனைப் பார்த்தபடி வெகுநேரம் முழித்திருந்தாள் பிரகதீஸ்வரி... கணவனைச் சந்தித்தது முதல் இப்போது வரை அவனது ஒவ்வொரு பரிமாணமும் அவளது மனக்கண்ணில் பிரமாண்டமான படமாய் ஓடியது...

"அப்பா..." தூக்க கலக்கத்தில் மகள் விழிக்கவும் பிரகதீஸ்வரி அவளைத் தட்டி கொடுத்து தூங்க வைக்கும் முன் உறக்கம் கலைந்து சித்தார்த் எழுந்தான்...

"அப்பா கிட்ட வா ஜிக்கி..." என்று மகளைத் தன் நெஞ்சில் படுக்க வைத்து கொண்டவன் மனைவியைக் கண்டு,

"இன்னுமா நீ தூங்கலை..."

"இல்லை..." என்றவளிடம்,

"வா பேபி..." என்று தனது இடது கையை மனைவி புறம் நீட்டினான்...

"வேண்டாம் மாமூ... நீங்க நல்லா ரெஸ்ட் எடுங்க..." என்றவள் இருவருக்கும் போர்வையைப் போர்த்தி விட்டு மகளின் மறுபக்கம் வந்து படுத்தாள்...

மனைவியின் வார்த்தையில் உதட்டில் புன்னகை உறைய அப்படியே உறங்க துவங்கினான் சித்தார்த்... அத்தனை நிம்மதி, நிறைவு அவனிடத்தில்...

****

சரவணன், ஸ்வேதா குழந்தைக்குப் பெயர் சூட்டும் நாள் நெருங்கி கொண்டு வந்தது... சரவணன் தனது தந்தை பெயரை மகனுக்குச் சூட்டுவதில் உறுதியாக இருப்பது தெரிந்து அதுவரை பொறுமையாக இருந்த சித்தார்த்தால் அதற்கு மேல் பொறுமையாக இருக்க முடியவில்லை...

சரவணன், சந்தியாவைத் தனியே விருந்தினர் மாளிகைக்கு அழைத்து வந்து அவர்கள் முன் நரசிம்மன் எழுதிய நாட்குறிப்பை வைத்தான்... அத்தான் எதற்காக வர சொன்னார்? என்று புரியாது குழம்பி கொண்டு இருந்தவர்கள் இப்போது நாட்குறிப்பை பார்த்ததும் இன்னமும் அதிகமாய்க் குழம்பி போயினர்...

"என்னதிது அத்தான்...?"

"ரதியோட அப்பாவின் டைரி... பிரிச்சு படிச்சு பாருங்க..." என்றான் சித்தார்த் உணர்வற்ற குரலில்...

அவனது குரலில் இருவரும் அதைப் பிரித்துப் படித்தனர்... பக்கங்கள் செல்ல, செல்ல சந்தியா மனம் தாங்காது கதறியழுது விட்டாள்... சரவணனோ கண்கள் சிவக்க கலங்கி போய் இறுக்கமாய் அமர்ந்திருந்தான்...

"முழுவதும் படித்துப் பாருங்கள்... உங்கள் பெற்றோர் எந்த மாதிரின்னு உங்களுக்குப் புரியும்..."

சித்தார்த் கூறியதும் இருவரும் மேலே படிக்க ஆரம்பித்தனர்... சந்தியா வெளிப்படையாக அழுது கொண்டே வாசித்தாள்... சரவணன் வெளியில் எதையும் காட்டி கொள்ளாது இறுக்கமாய் இருந்தாலும் மனதினுள் துடி துடித்துப் போனான்... அபலை பெண்ணான பதினைந்து வயது சிறுமி ஜெகதீஸ்வரியை நினைத்து இருவரது மனமும் பாரமாய்க் கனத்துப் போனது...

இறுதியில் தனது தாய் பெரியம்மாவின் இறப்பிற்கு அதுவும் ஒரு கர்ப்பிணியின் இறப்பிற்குக் காரணமாக இருந்ததை அறிந்து அவர்கள் ஆத்திரம் அடைந்தனர்... மனம் வெறுத்து போயினர்... அதிலும் பெரியப்பாவிடம் சொத்துக்களைக் கைப்பற்றுவதற்காக அன்னை கூறிய கேவலமான வார்த்தைகளைப் படித்ததும் அவர்களது மனம் அருவருத்துப் போனது...

அவர்கள் இருவரை பொருத்தவரை பெரியப்பா, பெரியம்மா இருவரும் தெய்வங்கள்... அந்தத் தெய்வங்களை இத்தனை சோதனைக்கு உள்ளாக்கிய தங்களது பெற்றோரை நினைத்து அப்படி ஒரு ஆத்திரம் வந்தது அவர்களுக்கு... சந்தியா அழுது கொண்டிருக்க, சரவணனோ இறுக்கமாய்ப் பேச்சற்று அமர்ந்திருந்தான்...

"இப்போ சொல்லு சரவணா... உன் குழந்தைக்கு உன் அப்பா பெயரை நீ வைக்க வேண்டுமா...?"

"ச்சீச்சீ..." அவனது அருவருப்பான வார்த்தையில் தெரிந்து விட்டது அவன் இனி மறந்தும் அந்தச் செயலை செய்ய மாட்டான் என்று...

"சந்தியா உன் அம்மா மீதான பாசத்தை நான் அறிவேன்..." என்ற சித்தார்த்திடம்,

"அவள் என் அம்மா இல்லை... ராட்சசி... கொலைக்காரி..." என்று கத்திய சந்தியா தாங்க மாட்டாது தேம்பி தேம்பி அழுதாள்...

"சந்தியா... கண்ட்ரோல் யுவர்செல்ஃப்..." சரவணன் தங்கையைத் தேற்றினான்...

"உங்க அம்மாவின் முடிவு உங்க கிட்ட சொல்ல வேண்டியது என் கடமை..." என்ற சித்தார்த் விமலாராணியின் முடிவை அவர்களிடம் விளக்கி கூறியவன்,

"இதை அப்பவே உங்க கிட்ட சொல்லி இருக்கலாம் தான்... ஆனால் அப்போது தான் சந்தியா திருமணம் முடிந்த புதிது... அவள் தனது கவலையை மறந்து ஹரியுடன் சந்தோசமாய் வாழ்ந்து கொண்டிருந்த பொழுது... அதனால் தான் நான் இதைச் சொல்லாது மறைத்து விட்டேன்..."

சித்தார்த்தின் கூற்றை இருவரும் ஆமோதித்து ஏற்றுக் கொண்டனர்...

"அத்தான்... நீங்க பிரகதியை காதலித்துத் தான் கல்யாணம் பண்ணியிருக்கீங்க... ஆனா நான் தான் அதை எல்லாம் புரிஞ்சிக்காம தேவையில்லாது ஸ்வேதா கழுத்தில் தாலி கட்டி பிரச்சினையைப் பெரிசு பண்ணிட்டேன்... சாரி அத்தான்..." என்று கூறிய சரவணன் குற்றவுணர்ச்சியில் தலை கவிழ்ந்தான்...

"இந்த மன்னிப்பை என்னிடம் கேட்க தேவையில்லை சரவணா... உன் மனைவியிடம் கேள்... உனக்கான மன்னிப்பை அவள் தான் வழங்க வேண்டும்..."

மனைவி என்றதும் சரவணன் முகத்தில் புன்னகை வந்தது...

"அவள் என்னை மன்னிக்காமலா எங்களுக்கு மகன் பிறந்து இருக்கிறான்..." என்று கூறி சிரிக்க...

அதைக் கேட்டு மற்ற இருவரின் முகத்திலும் புன்னகையின் சாயல்...

சரவணன் எழுந்து வந்து சித்தார்த்தை அணைத்து, "யூ ஆர் க்ரேட் அத்தான்... இத்தனை கஷ்டங்களைத் தாங்கிக்கிட்டு பிரகதிக்காக ஒவ்வொன்றையும் யோசித்துச் செய்து அவளுக்காகவே வாழ்றீங்களே... உங்க காதல் என்னைப் பிரமிக்க வைக்குது..." என்றான் மன நெகிழ்வுடன்...

"ரதிக்காகத் தான் நான்... அவளுக்காக எதையும் நான் செய்வேன்..." என்று உணர்ச்சிவசப்பட்டான் சித்தார்த்...

"அத்தான்... எங்களிடம் இருக்கும் சொத்துக்கள் பிரகதிக்கு சேர வேண்டியவை... அதை நாங்கள் அவளுக்கே திருப்பிக் கொடுக்கிறோம்..." என்று ஒருமித்த குரலில் கூறிய இருவரையும் பார்த்த சித்தார்த்...

"வேண்டாம்... ரதி உங்களுக்குக் கொடுத்தது கொடுத்ததாகவே இருக்கட்டும்... இப்போது நீங்க இதைச் செய்யப் போனால் என்ன, ஏது என்று கேள்வி வரும்... பிறகு ரதியிடம் எல்லாம் சொல்ல வேண்டி வரும்..."

"பிரகதிக்கு இந்த விசயத்தை இன்னமும் நீங்க சொல்லவில்லையா...?"

"ம்ஹூம் இல்லை... இந்த விசயம் எந்தக் காரணம் கொண்டும் ரதிக்கு தெரிய கூடாது... நீங்க ரெண்டு பேரும் சொல்ல மாட்டீங்கன்னு நம்பறேன்..."

"ஏன் பிரகதி கிட்ட சொல்ல வேண்டாம்ன்னு சொல்றீங்க...? அவளோட பிறப்பின் ரகசியத்தை அவளும் தெரிஞ்சிக்கணும் தானே..." என்று கேட்ட சரவணனை வேதனையுடன் பார்த்தான் சித்தார்த்...

"உன்னோ அப்பா, அம்மாவை பத்தி இனி உன்னால் பெருமையாய் நினைக்க முடியுமா...? இல்லை வெளியில் தான் சொல்ல முடியுமா சரவணா...?"

"அது எப்படி முடியும் அத்தான்...? அவங்களை நினைச்சாலே கோபம் தான் வருது... அவங்க ரெண்டு பேரும் மனித பிறவிகளே கிடையாது..." என்றான் அவன் வெறுப்பான குரலில்...

"இதே காரணத்துக்காகத் தான் நான் ரதியிடம் இந்த விசயத்தைச் சொல்லாது மறைப்பது... என்ன வித்தியாசம் என்றால் நீங்க உங்க பெற்றோரை வெறுக்கிறீங்க... ஆனால் அவள் தன்னோட அம்மாவை நினைத்துக் காலம் முழுவதும் வருந்தி கொண்டு, தன்னையும் வருத்தி கொள்வாள்... அவளோட மனசு பூ மாதிரி... அத்தனை கொடுமை செய்த உங்கம்மாவையே மறக்க முடியாம 'அம்மாவை கண்டு பிடிச்சிட்டீங்களான்னு' என் கிட்ட தினமும் கேட்கிறவள் இந்த விசயத்தைக் கேள்விப்பட்டா மனசுக்குள் சிதைந்து போவாள்... என் காதலால் கூட அவளைத் தேற்ற முடியாது... அவளை வருத்தப்பட வைக்கிற எந்தவொரு வேலையையும் என்னால் செய்ய முடியாது... அவளைப் பொருத்தவரையில் அவள் நரசிம்மன், கார்த்திகாயினியின் மகள்... அது அப்படியே இருந்திட்டு போகட்டும்..."

வருத்தத்துடன் கூறிய சித்தார்த்தின் வேதனையை இருவரும் புரிந்து கொண்டனர்...

"நீங்க பிரகதி கிட்ட சொல்லாமல் இருப்பதே நல்லது..." என்று இருவரும் ஏக மனதாய் கூறி விட்டனர்...

"என்னால் என் அத்தானிடம் சொல்லாமல் மறைக்க முடியாது... எனக்கு அப்பா, அம்மா எல்லாம் அவர் தான்... அவரிடம் உண்மையை மறைத்து வாழ என்னால் முடியாது..." என்று கூறிய சந்தியாவின் புரிதலான வாழ்க்கை சித்தார்த்திற்குப் புரிய தான் செய்தது...

"ஹரி பத்தி எனக்கு நல்லா தெரியும்... அவனுக்குத் தெரிஞ்ச ரகசியத்தை அவன் உயிர் போகும் நிலை வந்தாலும் வெளியில் சொல்ல மாட்டான்... அதுவும் ரதியின் நல்லதுக்கு என்றால் அப்படியே மறைத்து விடுவான்..."

இதைக் கூறும் போதே சித்தார்த்தின் முகத்தில் அப்படி ஒரு புன்னகை... ஏனெனில் பிரகதீஸ்வரி நன்மைக்காக ஹரி உயில் பத்தின ரகசியத்தைக் கடைசி வரை அவளிடம் சொல்லவே இல்லையே... அவள் தன்னைப் பிரிந்திருந்த அந்தச் சமயத்தில் கூட ஹரி அதைச் சொல்லாது இருவரையும் இணைக்கும் வழியைத் தானே அவன் கையாண்டான்... சித்தார்த்தின் மனதில் ஹரியின் மதிப்பு உயர்ந்து கொண்டே போனது...

வீட்டிற்கு வந்ததும் சரவணன் நேரே தனது மனைவியைத் தேடி சென்றான்... ஸ்வேதா அப்போது தான் குழந்தையைத் தூங்க வைத்துக் கொண்டு இருந்தாள்... அவளின் பின்புறமாய்ச் சென்று அணைத்துக் கொண்டு அமைதியாக அமர்ந்தான் சரவணன்...

"என்னாச்சு சரவணா...? நீ இப்படி எல்லாம் அமைதியா இருக்க மாட்டியே..." அவள் சந்தேகத்துடன் கணவனைத் திரும்பி பார்த்தாள்...

"என்னைப் பத்தி உனக்கு என்னடி தெரியும்...?" என்று மன தாங்கலுடன் அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்துக் கொண்டான் அவன்...

"நீ ஒரு அறுந்தவாலுன்னு தெரியும்... உன்னை மாதிரியே ஒரு அறுந்தவாலை எனக்குப் பரிசாகக் கொடுத்து இருக்கேன்னு தெரியும்..."

"த்ச்சு... அது தான் ஊருக்கே தெரியுமே... நான் கேட்டது வேறு..." என்றவனின் முகத்தை நிமிர்த்தியவள் முகம் சீரியசாய் மாறியது...

"இப்போ எதுக்கு இப்படி ஒரு கேள்வி...?"

"பதில் சொல்லுடி என் பொண்டாட்டி..." என்று கூறியவன் அவளது விழிகளைச் சந்திக்க முடியாதவனாய் மீண்டும் அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்துக் கொண்டான்... கணவனது செய்கையில் அவளது மேனி சிலிர்த்தது...

"நீ எதையோ மனசில் வச்சிக்கிட்டு இந்தக் கேள்வியைக் கேட்கிறேன்னு எனக்குப் புரியுது... ஆனா அது என்னன்னு தான் எனக்குத் தெரியலை..." என்றவள் அவன் காதில் ரகசியமாக,

"நீ தொடும் போது சிலிர்க்கும் என் மனசும், என் மேனியும் சொல்லாததையா என்னுடைய வாய் சொல்லி விடப் போகுது..." கிசுகிசுப்பாய் ஒலித்த மனைவியின் குரலில் அவன் திகைப்புற்றவனாய் நிமிர்ந்து பார்த்தான்...

"என் மீதான உன்னோட காதல் எனக்குத் தெரியும்... உன் மனசில் நான் மட்டும் தான் இருக்கேன்னும் எனக்கு நல்லா தெரியும்... நீ என்னை உயிருக்கு உயிரா காதலிச்சு தான் என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்னும் எனக்குத் தெரியும்... அண்ணனை பழிவாங்கன்னு நீ சொன்னது எல்லாம் பொய்ன்னும் எனக்குத் தெரியும்... நான் உன் கை விட்டு போயிருவேனோன்னு பயந்து போய்த் தான் நீ என் கழுத்தில் தாலி கட்டினேன்னும் எனக்குத் தெரியும்... இதோ இப்போ கூட நான் உன்னைப் புரிஞ்சிக்கிட்டேனா இல்லையான்னு தவிப்புடன் பார்க்கிற உன் காதல் மனசும் எனக்குத் தெரியும்..."

மனைவி சொல்ல சொல்ல பிரமிப்புடன் விழியகல அவன் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்... அவனது இதழ் மீது மென்மையாய் இதழ் பதித்து விலகிய ஸ்வேதா,

"ஆனால் மனசில் உள்ள காதலை எடுத்து சொல்லி புரிய வைக்கத் தெரியாத அவசரக்காரன் என் அத்தான்னும் எனக்கு நல்லா தெரியும்..."

"ஹேய் ஸ்வீட்டி... என்ன சொன்ன...? திரும்பச் சொல்லு..." சந்தோசத்தில் ஆர்ப்பரித்த கணவன் தலை மீது செல்லமாய்

வலிக்காது குட்டியவள்,

"உன்னோட வால் பையன் இவ்வளவு நேரம் படுத்தி எடுத்துட்டு இப்போ தான் தூங்க ஆரம்பிச்சு இருக்கான்... மறுபடியும் அவனை எழுப்பி விட்டுறாதே..." என்றவள் பின் மெல்லமாய்,

"அத்தான், என் அன்பு அத்தான்டா நீ..." என்று அவனைக் கொஞ்சியவளை கண்டு கிறங்கி போனான் சரவணன்...

"உண்மையாவா ஸ்வீட்டி...?"

"ஜல்லிக்கட்டில் அண்ணா அடிப்பட்டு ஹாஸ்பிட்டலில் இருந்தாங்களே அப்பவே உன் மேல் ஒரு சாஃப்ட் கார்னர் வந்திருச்சு... நீ கொஞ்சம் எடுத்து சொல்லி புரிய வச்சிருந்தா நான் உன் காதலை புரிஞ்சிருப்பேன்..."

"எங்கே புரிய வைக்கிறது...? நீ என்னை அடிச்சதை பார்த்து எங்கே நீ என்னை வெறுத்துருவியோன்னு நான் பயந்து போயிட்டேன்... அதான் அதிரடியா ஆக்சனில் இறங்கிட்டேன்..."

"உன் ஆக்சன் தான் என்னுள் இன்னும் கோபத்தை அதிகப்படுத்திச்சு... கார்த்திக்கை காதலிக்கலாமான்னு ஒரு யோசனையைக் கூடக் கொடுத்துச்சு..."

"அதான் ஃபுல்லா சரக்கடிச்சுட்டு அவனைக் காதலிக்கிறேன்னு என் கிட்டேயே புலம்பினியே..." மன தாங்கலுடன் சொன்னவனை அணைத்து கொண்டவள்,

"உன்னை வெறுக்கணும்ன்னு நினைச்சு நினைச்சு அவனைக் காதலிக்கிறேன்னு என் மனசுக்குள் சொல்லிக்குவேன்... உன்னை நேரில் பார்த்ததுக்கு அப்புறம் எல்லாமே மாறி போச்சு... நீ தான் எனக்கு எல்லாம்ன்னு புரிஞ்சு போச்சு... இப்போ சொல்லு உன்னைப் பத்தி எனக்கா தெரியாது...?"

எந்த நிலையிலும் தன் தவறினை மன்னித்து மறந்து காதல் கொள்ளும் மனைவி கிடைத்தது அவனது வரமன்றோ...!

"இல்லைடி ஸ்வீட்டி... என்னை விட என்னை நல்லா புரிஞ்சு வச்சியிருக்கிறவள் நீ தான்..." என்று அவளை அணைத்து கொண்டவன் மனதில் இன்னமும் மனைவியை நன்றாக வைத்துக் கொள்ள வேண்டும் என்கிற எண்ணம் உறுதியாய் வலு பெற துவங்கியது...

சரவணன், ஸ்வேதா குழந்தைக்குப் பெயர் வைப்பதற்கு ஹரி விடுமுறை எடுத்துக் கொண்டு சென்னை வந்திருந்தான்... வெகு நாட்களுக்குப் பின் அங்கு எல்லோரும் கூடியதில் மகிழ்ச்சி கரை புரண்டு ஓடியது...

சரவணன், ஸ்வேதா மகனுக்குச் சஞ்சய் என்று பெயர் வைத்தனர்... சித்தார்த்திற்கு இப்போது தான் நிம்மதியாக இருந்தது... அன்று முழுவதும் ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்த சந்தியா திடுமென மயங்கி கீழே சரிந்ததில் எல்லோரும் பயந்து போய் விட்டனர்... உடனே மருத்துவரை அழைத்துப் பரிசோதனை செய்து பார்த்த போது அவள் குழந்தை உண்டாகி இருப்பதாய் மகிழ்ச்சியான செய்தி கிடைத்தது... எல்லோரும் ஹரி, சந்தியா இருவரையும் ஓட்டி எடுத்தனர்...

"எங்களை எல்லாம் விடச் சீனியர் சித்து, அம்மு தான்... முதலில் அவங்களை ஓட்டுங்கப்பா... அதுக்கு அப்புறம் எங்க கிட்ட வாங்க..." என்று ஹரி அவர்கள் இருவரையும் பார்த்துக் கை காட்டி விட்டான்...

ஆம், பிரகதீஸ்வரி, சந்தியா இருவருக்கும் இடையில் கர்ப்ப காலத்தின் இடைவெளி ஒரு மாதம் மட்டுமே... எல்லோரின் பார்வையும் சித்தார்த், பிரகதீஸ்வரி மேல் விழுந்தது... இளையவர்கள் அனைவரும் அவர்களைக் கிண்டல் செய்ய ஆரம்பித்தனர்... அன்றைய நாள் மிகவும் சந்தோசமாகச் சென்றது...

வீட்டிற்கு வந்ததும் தனிமையில் ஹரி மனைவியிடம், "உனக்கு உன் அம்மா மீது பாசம் அதிகம்ன்னு எனக்குத் தெரியும் சந்து... நமக்குப் பெண் குழந்தை பிறந்தால் உங்கம்மா பெயரை வைக்கலாம்..." என்று கூற...

அதைக் கேட்டு அவள் அருவருப்புடன், "ச்சீச்சீ..." என்று முகத்தைச் சுளித்தாள்...

"என்னாச்சு...?"

அவன் புரியாது கேட்டதும் தான் தாமதம் அவள் ஓவென்று கதறிக் கொண்டு தனது அத்தனை துக்கத்தினையும் கணவனிடத்தில் அப்படியே கொட்டினாள்... என்று விமலாராணி சொத்துக்களைப் பறித்துக் கொண்டு பிரகதீஸ்வரியை வீட்டை விட்டு விரட்டி அடித்தாரோ அன்றே ஹரிக்கு அவரைச் சுத்தமாய்ப் பிடிக்காது போனது... இப்போது மனைவி சொன்னதைக் கேட்டதும் அவன் முற்றிலும் மனம் வெறுத்துப் போனான்...

"ச்சே... என்ன மனிதர்கள் இவர்கள்...?" என்று வெறுப்புடன் வந்தது அவனது வார்த்தைகள்... ஆத்திரத்தில் அவனது கண்கள் சிவந்து போனது...

"அத்தான்... அவங்க செஞ்ச தப்புக்கு என்னை வெறுத்துறாதீங்க..." என்று கண்ணீர் மல்க மன்றாடிய மனைவியைப் பார்த்தவன் அடுத்த நொடி அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்...

"சேற்றில் செந்தாமரை பூப்பது இல்லையா...? அது போல் தான் நீயும், சரவணனும்... உன்னை வெறுக்க என்னால் எப்படி முடியும்...? நீ என்னுடைய உயிர்..." என்று புரிதலுடன் கூறிய கணவனை இன்னமும் அதிகமாய் நேசிக்கத் துவங்கினாள் சந்தியா...

சித்தார்த் மீதான மதிப்பு உயர்ந்து கொண்டே போனது ஹரி மனதில்...

****

"சித்து... இன்னைக்கு ஒரு நாள் ஜிக்கி எங்க கூடப் படுக்கட்டுமே..." என்று பிரபாவதி மகனிடம் சொன்னார்...

பிரகதீஸ்வரி இரவு உணவு முடிந்து அலுவலகக் கோப்பு பார்ப்பதற்காக அறைக்குச் சென்று விட்டாள்... அப்பாவும்,

மகளும் அரட்டை அடித்துக் கொண்டு வரவேற்பறை சோபாவில் படுத்தபடி தொலைக்காட்சி பார்த்து கொண்டிருந்தனர்... அப்போது அங்கு வந்த பிரபாவதி அப்படிச் சொல்லியதும் துள்ளி குதித்து எழுந்த சித்தார்த்,

"ம்ஹூம்... ஜிக்கி எங்க கூடத் தான் படுப்பாள்..." என்று மறுத்தான் வேகமாய்...

"அவள் உன்னோட மகள் தான்... அதில் எந்த மாற்று கருத்தும் இல்லை... ஆனால் எங்க பேத்தியை எங்களுக்கு ஒரு நாள் விட்டுக் கொடுக்கக் கூடாதா சித்து...?" என்று மகனிடம் மன தாங்கலுடன் உரைத்தவர் பேத்தியிடம்,

"ஜிக்கி, நீ எங்களுக்கும் வேணும் தானே... தாத்தாவும், பாட்டியும் பாவம் இல்லையா... உங்கப்பா கிட்ட எடுத்து சொல்லு..."

உடனே சின்னவளும் தந்தையிடம், "ஆமாம்ப்பா... தாத்தா, பாட்டி பாவமில்ல..." என்று சிரத்தையுடன் கூற...

வேறுவழி இல்லாது அதற்குச் சம்மதித்த சித்தார்த் முகம் இன்னமும் தெளியவில்லை... ஏனோ தன்னைப் போல் தன் மகள் அன்பில்லாது வளர கூடாது என்பதில் அவன் மிகவும் கவனமாக இருந்தான்... அதனால் தான் எந்த வேலை இருந்த போதும் மகளுக்கு என்று அவன் தனியே நேரம் ஒதுக்குவது...

"ஜிக்கி... நீ போய்த் தாத்தா கிட்ட மாத்திரை சாப்பிட்டீங்களான்னு கேளு..." சின்னவளை அனுப்பி வைத்து விட்டு பிரபாவதி மகன் அருகில் அமர்ந்தார்...

"மகளை மட்டும் கவனித்துக் கொண்டு இருந்தால் போதுமா சித்து... அவளின் அம்மாவையும் நீ கவனிக்க வேண்டாமா...? நாளை பிரகதிக்கு பிறந்தநாள்... அத்தோடு உங்க கல்யாண நாளும் கூட... இத்தனை வருசங்கள் கழித்துச் சேர்ந்து இருக்கீங்க... இப்பவாவது அவளைச் சந்தோசமா வச்சிக்கோப்பா..."

அன்னை கூறியதில் அவனது முகம் மலர்ந்தது... இதழ்களில் புன்னகையும் விரிந்தது...

"நாங்க சந்தோசமா இல்லைன்னு யார் சொன்னது...? ஜிக்கி எங்க கூட இருந்தால் தான் இன்னமும் அதிகச் சந்தோசம்..." அப்போதும் மகளை விட்டு கொடுக்காத தகப்பனாய் அவன் கூறினான்...

"டேய் போதும்டா... ரொம்பத் தான் பண்ற... இன்னைக்கு எங்க பேத்தி எங்க கூடத் தான் படுப்பாள்... நீ உன் மனைவி கூடச் சந்தோசமாயிரு... இல்லை என்னமோ போ... எனக்கு என்ன வந்தது..." என்று கறாராய் கூறியபடி பிரபாவதி சென்று விட்டார்...

சித்தார்த் முகத்தில் புன்னகை உறைய தனது அறைக்குச் சென்றான்... விசிலடித்தபடி உள்ளே நுழைந்த கணவனைக் கண்டு திரும்பி பார்த்த பிரகதீஸ்வரி அவன் பின்னால் எட்டி பார்த்தபடி,

"ஜிக்கி எங்கே...?"

அவள் அருகே வந்தவன் அவளது கையிலிருந்த கோப்பை எடுத்து மூடி வைத்து விட்டு அவளைத் தனது கைகளில் அள்ளி கொண்டவன்,

"அம்மா கிட்ட படுக்கப் போகிறாளாம்..."

"ஏனாம்...?"

அவளது மனம் சுணங்கியது... மகளுடன் போட்டி போட்ட போதும் அவள் இல்லாது இவளுக்கு உறக்கம் வராது...

"ஏன்னா... என் பேபிக்கு நாளைக்குப் பிறந்தநாளாம்... அத்தோடு நம்ம கல்யாண நாளும் கூட... அதனால் மேடத்தை ஸ்பெசலா கவனிக்கச் சொல்லி உங்க மாமியார் உத்தரவு..." என்று கூறியபடி அவளைப் படுக்கையில் கிடத்தி தானும் உடன் சரிந்தான் அந்த நல்லவன்...

"ஐயோ... அத்தையா அப்படிச் சொன்னது...?"

"ஆமாம்டி என் பொண்டாட்டி..." என்று கூறியபடி அவளுள் மூழ்க துவங்கினான் அவன்...

"அச்சோ மாமூ... உங்க முரட்டுத்தனத்தை உங்க பேபி தாங்கிக்குவாள்... ஆனா பேபியோட பேபி தாங்காது... பாவம்..." மூச்சு திணற மனைவியவள் அலறினாள்...

"இது என்னோட பேபிடி... என்னைப் போல் வீரமான, தைரியமானவன் என் மகன்... என்னைப் போல் அதிரடியாவே இருப்பான்..." என்றவன் அதிரடியாய் மனைவியைத் தன் ஆளுகையின் கீழ் கொண்டு வந்தான்... அவளும் அவனை உணர்ந்தவளாய் அவனது செயல்களுக்கு இசைந்து கொடுத்தாள்...

கூடல் முடிந்து அப்போது தான் உறக்கத்தில் ஆழ்ந்தாள் பிரகதீஸ்வரி... கனவில் கூடக் கணவனின் செல்ல தீண்டல்கள் நினைவுக்கு வந்து அவளது முகத்தில் புன்னகையை உறைய செய்தது... திடுமென அவளது கன்னத்தில் என்னமோ ஊர்வது போல் ஒரு உணர்வு... அதைத் தட்டி விட்டு விட்டு உறங்க முற்பட்டவளின் காது மடல்களை ஏதோ ஒன்று குறுகுறுப்பாய் உரசியது... அதையும் தட்டி விடப் போனவள் அடுத்து ஒலித்த கணவனது குரலில் முற்றிலும் உறக்கம் கலைந்து கண்களைத் திறந்து அவனைப் பார்த்தாள்...

மீசை ரோமம் குறுகுறுக்கச் சித்தார்த் அவளது காதருகில் குனிந்து, "ஹேப்பிப் பேர்த்டே பேபி..." என்று காதலோடு கூறிக் கொண்டிருந்தான்...

"ஹேப்பி வெட்டிங் அனிவர்சரி மாமூ..." என்று புன்னகையுடன் கூறியவள் அவனை இழுத்து அணைத்து கொண்டாள்...

மனைவிக்குப் பல பரிசுகளை வாரியிறைத்து அவளை மகிழ்வித்தான் அவன்... அதிலேயே அவள் மனம் சொக்கி போய் அவனிடத்தில் மொத்தமாய்ச் சரணடைந்து போனாள்...

"என்னடி இது... இதுக்கே இப்படிச் சரண்டர் ஆகிட்டே... வேறு எதாவது பெரிய கிப்ட் கேளுடி என் பொண்டாட்டி..."

"என் வாழ்நாள் பரிசா நீங்க இருக்கும் போது எனக்கு வேறு என்ன வேண்டும்... நீங்க மட்டும் போதும்... உங்க காதல் மட்டும் போதும்..." என்றவளை உணர்ச்சிவசப்பட்டு அணைத்துக் கொண்டு கொஞ்சி கொஞ்சி கொண்டாடியவன்,

"ஆனா நான் உனக்குப் பெருசா செய்ய ஆசைப்படுகிறேன்..." என்றவனை அவள் இமைக்காது பார்த்தாள்...

"இதுக்கு நீ என்னன்னு கேள்வி கேட்கணும் பேபி... நீ ரொம்பப் பேபியாவே இருக்க..." என்று சிணுங்கியவனைக் கண்டு சிரித்தபடி,

"என்ன கிப்ட் சொல்லுங்க...?" என்றாள் ஆர்வமாய்...

"சென்னை மற்றும் சுற்றிலும் இருக்கிற ஊர்களில் குளம், ஏரி, ஆறு எல்லாத்தையும் தூர்வாரும் பொறுப்பை நம்ம கம்பெனி எடுத்திருக்கு..." அவளுக்குப் பிடித்த மாதிரியான பரிசினை அவன் கூறியதும்,

"உண்மையாவா...?" என்றவளது கண்கள் அகன்றது வியப்பில்...

"எல்லாம் உனக்காகத் தான் பேபி... இனி வருங்காலத்தில் குடிநீர் பிரச்சினை தான் பெரிய பிரச்சினையாக வர போகுது... அதற்கான முன்னேற்பாடு தான் இது..."

"ச்சோ ஸ்வீட் மாமூ..." என்றவள் அவனைக் கொஞ்சி கொஞ்சி மகிழ...

"அப்புறம் ஒரு விசயம் பேபி..." அவன் இழுத்து சொன்ன விதத்திலேயே தெரிந்து போனது அடுத்து ஏதோ வில்லங்கம் வர போகிறது என்று...

"அப்படியே அந்த ஊர்களில் ஒவ்வொரு வீட்டிலும் மழை நீரை சேகரிப்பதற்கான அமைப்பை குறைந்த செலவில்

செஞ்சு கொடுக்கலாம்ன்னு முடிவு பண்ணியிருக்கேன்... சேவைக்குச் சேவையும் ஆச்சு... பிசினஸ்க்கு பிசினசும் ஆச்சு..." என்றவனைக் கண்டு முறைக்க முயன்றவள் பின் சிரித்து விட்டாள்...

"மாமூ... உங்களை மாதிரி ஒரு ஆளை நான் பார்த்ததே இல்லை..."

"ஹா ஹா... இந்தச் சித்தார்த் ஒன்லி மாஸ்டர் பீஸ்டி... நோ சப்ஸ்ட்டிட்யூட்..."

"ஆமாம், ஆமாம்... இல்லையா பின்னே... என் மாமூ எனக்கு மட்டுமேயான செல்ல மாமூ..." என்று கூறியவள் காதல் பெருக்கெடுக்க அவனது இதழை அதிரடியாய் சிறை செய்தாள்...

"இப்போ மட்டும் உன் பேபி பயப்பட மாட்டானாக்கும்..." என்று சிரித்தபடி கூறிய சித்தார்த்தும் அதிரடியாய் மனைவியை அணைத்துக் கொண்டான்...

மூன்றாவது திருமண நாளை சேர்ந்து கொண்டாடியவர்கள் அதன் பிறகு இத்தனை ஆண்டுகள் கழித்து எட்டாவது திருமண நாளை சந்தோசமாய்ச் சேர்ந்து கொண்டாடினார்கள்...

பிரிந்து இருந்து ஒன்று சேர்வதாலோ என்னமோ அவர்களது காத்திருந்த காதல் எப்போதுமே தங்களது இணையை ஆர்ப்பாட்டமாய் அரவணைத்துக் கொள்ளும்... இப்போதும் அப்படியே ஆர்ப்பாட்டமாய் அரவணைத்து கொண்டது...!!!

"கனவே காதலாய்,
காதலே காதலியாய்,
காதலியே தாரமாய்,
தாரமே தாயாய்,
எல்லாமும் நீயாய்...
கனவில் நனவாய்
இல்லையடி பெண்ணே...

என் நனவின் நிஜம்
நீயடி பெண்ணே...!!!"

நனவாகும்...!!!

"பேபி..."

முகம் முழுவதும் கலக்கத்தைச் சுமந்தபடி நின்று கொண்டிருந்த கணவனைக் கண்டு சோர்வாய் புன்னகைத்த பிரகதீஸ்வரி அவனிடம்,

"எனக்கு ஒண்ணும் இல்லை மாமூ... நீங்க ஜிக்கி கூட இருங்க..."

"அவளை அம்மா கிட்ட விட்டுட்டு வந்திருக்கிறேன்..." என்ற சித்தார்த் மனைவியைக் கவலையுடன் பார்த்தான்...

பிரசவ வலி வந்து அவள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தாள்... அவளது வேதனை கண்டு கலங்கி போனவனாய் சித்தார்த் அவளை விட்டு விலக மறுத்தான்...

"ஜிக்கியை எப்படிப் பெற்று எடுத்தேனோ அப்படியே நம் மகனையும் பெற்று எடுக்கப் போகிறேன்... நீங்க போய் அவளைப் பாருங்க... என்னன்னு புரியாம குழம்பி போயிருப்பாள்..."

"சொல்லி காட்டுறியா பேபி...?" கண்கள் கலங்க கேட்டவனைக் கண்டு அவளுக்கு ஆயாசமாக வந்தது...

"இங்கே வாங்க மாமூ..." என்று அவனை அருகில் அழைத்தவள்,

"என்னைப் பார்த்துக்க எனக்குத் தெரியும்ன்னு சொன்னேன்... நீங்களும் இல்லாது, நானும் இல்லாது ஜிக்கி தனியே தவித்துப் போய் விட மாட்டாளா...? அவளுக்காகத் தான் நான் இதைச் சொல்வது..."

அவனுக்கும் அது புரிய தான் செய்தது... ஆனாலும் வலியில் வேதனைப்படும் அவளை விட்டு விலக அவனால் முடியவில்லை...

"இல்லை பரவாயில்லை... இன்னும் கொஞ்ச நேரம் தான்... நான் உன் கூடவே இருக்கிறேன்..." என்று மறுத்து கூறியவன் குழந்தை பிறக்கும் வரை அவளை விட்டு அகலவில்லை...

இருவரும் எதிர்பார்த்தது போல் அவர்களுக்கு மகன் பிறந்தான்... அவன் பிறப்பதற்குள் எல்லோரையும் படுத்தி எடுத்து விட்டே வெளியில் வந்தான்... பிறந்தவுடன் மகனை கையில் ஏந்திய சித்தார்த்திற்கு அப்படி ஒரு மகிழ்ச்சி... உருவத்தில் அவனையே உரித்து வைத்துப் பிறந்திருந்தான் மகன்...

"அப்படியே உங்களை மாதிரி இருக்கான் மாமூ..."

கணவனைப் போன்று மகனை கண்டதும் பிரகதீஸ்வரியின் வார்த்தையில் அப்படி ஒரு பெருமை... எந்த மனைவிக்கும் உண்டான பெருமை அது... அதுவும் சித்தார்த் போன்று ஒருவனின் மகன் எனும் போது அந்தக் கர்வம் இன்னமும் அதிகமாய் அதிகரித்தது...

மகிழ்வுடன் மகனை தூக்கி கொண்டு மகளிடம் காட்ட சென்றான்... ஜெகதீஸ்வரி தம்பியை கண்டு சந்தோசத்தில் ஆர்ப்பரித்தாள்...

"தம்பியை நான் தான் குளிப்பாட்டுவேன்... தம்பிக்கு நான் தான் சாப்பாடு ஊட்டுவேன்... அவன் கூட நான் மட்டும் தான் விளையாடுவேன்..." என்று அவள் அடுக்கி கொண்டே போக...

"எனக்கும் தங்கச்சி பாப்பா வந்ததும் நானும் அவள் கூட விளையாடுவேனே..." கண்ணனும் உற்சாகமாய்க் கூற... அங்கே குதூகலம் நிரம்பியது...

நல்லதொரு பொன்னாளில் சித்தார்த், பிரகதீஸ்வரி தங்களது மகனுக்கு 'இந்திரஜித்' என்று பெயர் சூட்டினர்... அழைப்பது இந்தர் என்று...

இப்போது சித்தார்த்தின் பெரும்பான்மை நேரத்தினை அவன் பெற்ற மக்களே எடுத்து கொள்கின்றனர்... அவனும்

தனது குடும்பத்திற்குக் குறிப்பாகப் பிள்ளைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தான்... அவர்களது அழகிய குடும்பம் சிறந்த பல்கலை கழகமாகத் திகழ்ந்தது...

அடுத்த ஒரு மாதத்தில் சந்தியாவிற்குப் பெண் குழந்தை பிறந்தது... ஹரிப்ரசாத்திற்கு அப்படி ஒரு சந்தோசம் மகளின் வரவினை கண்டு... சித்தார்த், ஜிக்கி உறவை கண்டு அவனுக்குமே மகள் வேண்டும் என்கிற ஆசை அதிகமாய் இருந்தது... மகளுக்குக் 'காவ்யா' என்று பெயர் சூட்டி அவன் மகிழ்ந்தான்...

****

ஐந்து வருடங்கள் கழித்து...

தீபாவளிக்காக எல்லோரும் சித்தார்த்தின் வீட்டில் கூடி இருந்தனர்... இது போன்ற விசேச தினங்கள் மட்டுமே எல்லோரும் ஓரிடத்தில் கூடினர்... இப்போது பிரகதீஸ்வரி கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியராய் பணி புரிகிறாள்... அவள் எங்குச் சென்றாலும் சித்தார்த்தும் பிள்ளைகளும் உடன் சென்று விடுவர்... பிரபாவதி கூட அவனைத் தடுத்து பார்த்தார்...

"நீ வேணும்ன்னா உன் பொண்டாட்டி கூடப் போ... ஆனா எங்க பேர பிள்ளைகளை எங்க கிட்ட விட்டுட்டு போடா..." என்று...

"ம்ஹூம்... அது முடியாதும்மா... பிள்ளைகள் பெற்றோரின் அன்பில், கண்டிப்பில் தான் வளரணும்..." என்று உறுதியாய் மறுத்தவன்,

"நீங்க எப்போ நினைத்தாலும் எங்களைப் பார்க்க வரலாம்... அது போல் நாங்களும் நினைத்த பொழுது உங்களைப் பார்க்க வருகிறோம்..." என்ன கூறியும் இந்த ஒரு விசயத்தில் அவனின் மனதினை யாராலும் மாற்ற முடியவில்லை...

இதோ தீபாவளிக்காக எல்லோரும் வந்திருந்தனர்... ஹரியும், சந்தியாவும் கூட வந்ததிருந்தனர்... காலையில்

சங்கமித்ரா, அர்ஜூன் வருவதாகக் கூறி விட்டனர்... அவர்களுக்குச் சந்தோஷ் மட்டுமே... சரவணன், ஸ்வேதாவிற்குச் சாத்விகா என்கிற ஒரு மகளும் இருந்தாள்... ஆறு பேரும் சேர்ந்து வீட்டை இரண்டாக்கி கொண்டு இருந்தனர்...

இரவு அன்னையுடன் ஒட்டி கொண்டு கதை கேட்டபடி படுத்திருந்த மகனை கண்டு சித்தார்த்திற்குப் பொறாமையாக இருந்தது...

'எப்போது தூங்குவான்...?' என்று கண்ணால் மனைவியிடம் கேள்வி கேட்டான்...

அதைக் கண்டு அவளது விழிகளில் விசமம் வழிந்தது... தெரியவில்லை என்று உதட்டை பிதுக்கி சொன்னவள் கதையைத் தொடர்ந்தாள்... மகன் தூங்கினானோ இல்லையோ கதை கேட்டுக் கொண்டே தந்தை நன்கு உறங்கி விட்டான்...

நடு இரவில் எழுப்பிய மனைவியைக் கண்டு, "என்ன பேபி...?" என்று கொட்டாவி விட்டபடி எழுந்து அமர்ந்தான் சித்தார்த்...

"அச்சோ சத்தம் போடாதீங்க... இப்போ தான் இந்தர் தூங்கினான்..." என்று அவன் வாய் மீது கை வைத்து அவள் கிசுகிசுக்க...

அடுத்த நொடி கப்சிப் என்று வாயை இறுக மூடி கொண்ட சித்தார்த் சந்தோசத்துடன் மனைவியைக் கைகளில் ஏந்தி கொண்டு தங்களது தனியறைக்கு வந்தான்...

"சொந்த பொண்டாட்டியை இப்படித் திருடன் மாதிரி கொஞ்ச வேண்டி இருக்கிறது... எல்லாம் என் நேரம்..." என்று முணுமுணுத்தபடி வந்தவனைக் கண்டு அவள் களுக்கென்று சிரித்தாள்...

"என் பொழைப்பு உனக்குச் சிரிப்பா இருக்கா...?" என்று போலியாக மிரட்டியவனைக் கண்டு பயம் கொள்ளாது,

"அப்போ நான் சொல்லும் போது என்ன சொல்வீங்க...? என் மகள் தான் எனக்கு முக்கியம்ன்னு சொல்வீங்கல்ல... அதைத் தான் நானும் இப்போ சொல்கிறேன்... எனக்கு என் மகன் தான் முக்கியம்... பகல், ராத்திரி எல்லாம் அவனுக்கே..." என்று கூறியவளை படுக்கையில் கிடத்தி,

"ஐயோ... அப்படி எல்லாம் சொல்லி விடாதே பேபி... நான் ரொம்பப் பாவம்..." பாவம் என்று கூறியவனின் செயல் எதுவும் பாவம் போல் தெரியவில்லை...

"டேய் முரடா... விடுடா... மூச்சு முட்டுது..." என்றவளை நிமிர்ந்து பார்த்தவன்,

"யாரை பார்த்து டா போட்டு பேசற...? இப்படிக் கூப்பிடறதுக்கு யார் உனக்குப் பெர்மிசன் கொடுத்தது...?" என்று கேட்டவனின் குரலில் சிறிதும் கோபம் இல்லை மாறாகக் கிறக்கமே அதிகம் இருந்தது...

"எல்லாம் என் புருசன் தான்... இந்த மாதிரி நேரத்தில் டா போட்டு பேச பெர்மிசன் கொடுத்து இருக்கிறார்..." என்றாள் அவளும் நமட்டு சிரிப்புடன்...

"அட, உன் புருசன் சரியான லூசா இருப்பான் போலிருக்கே..." என்றவனைக் கண்டு நமட்டுச் சிரிப்பு சிரித்தவள்,

"உண்மையில் கொஞ்சம் லூசு தான்... கிடைத்த நேரத்தை பயன்படுத்திக்காம பேசியே கொல்றாங்க... இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்தர் எழுந்து அலற போகிறான்..."

"அச்சோ போச்சே..." என்று அலறியபடி அவன் மனைவியினுள் வேகமாய்ப் புதைந்தான்...

"இப்போ புரியுது இந்தருக்கு எங்கே இருந்து இந்த அலறல் வந்துச்சுன்னு..." என்றவளின் வாயை மேலே பேசாதபடி சிறை செய்தான் அந்தக் கள்வன்...

மறுநாள் தீபாவளி பொழுது நன்றாக விடிந்தது... எல்லோரும் குதூகலமாக மகிழ்ச்சியாக இருந்தனர்...

சின்னவர்கள் ஏழு பேரும் வீட்டினை சந்தோசத்தில் ஆழ்த்தினர்...

தீபாவளிக்கு முதல் நாள் தான் நீலேஷ் ஐந்தாண்டு சிறை வாசம் முடிந்து ஜாமீனில் வெளிவந்து இருந்தான்... இன்னமும் அவன் மீதான குற்றம் அப்படியே இருந்தது... வக்கீல் திறமையாக வாதாடி குற்றவாளி அவனை வெளியில் கொண்டு வந்து விட்டார்... மருமகள் மற்றும் பேர குழந்தைகளுக்காக நீலேஷின் தந்தை அவனுக்காக வாதாட வக்கீலை நியமித்தார்...

தீபாவளி என்பதால் குடும்பத்துடன் கோவிலுக்குச் சென்று விட்டு நீலேஷின் குடும்பம் திரும்பியது... நீலேஷ் மனம் சரியில்லாதவனாய் கடற்கரையில் நடந்து விட்டு வருவதாக மனைவியிடம் கூறி விட்டு வெளியில் சென்றான்... வீட்டின் அருகில் தான் கடற்கரை இருந்தது...

வெகுநேரம் கழித்தும் அவன் திரும்பி வராததால் அவனைத் தேடி வந்த அவனது மனைவி கடற்கரையில் அடிப்பட்டு மயங்கி கிடந்த அவனைக் கண்டு பதறி போய் அலறினாள்... அடுத்தச் சில மணி துளிகளில் அவனை மருத்துவமனையில் சேர்த்தனர்...

அவனால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோரில் யாராவது ஒருவர் இதைச் செய்திருக்கலாம் என்று காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது... ஆனால் குற்றவாளி என்று குறிப்பிட்டு யாரையும் கைது செய்யவில்லை...

உடல் தேறி வீட்டுக்கு வந்த நீலேஷ் அடுத்து சில மாதங்களில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டான்... என்ன காரணம் என்று யாருக்கும் தெரியவில்லை... அவமானம் தாங்காது தற்கொலை செய்து கொண்டதாய் எல்லோரும் ஏக மனதாய் முடிவு செய்தனர்...

நீலேஷின் இறப்பிற்குத் துக்கம் விசாரிக்க என்று சித்தார்த் தனது மனைவியுடன் நீலேஷின் வீட்டிற்குச் சென்றிருந்தான்... ஒரு காலத்தில் நீலேஷ் அவனது

நண்பன் ஆயிற்றே... நேத்ரா சகோதரனின் மரணத்திற்குக் கூட வரவில்லை...

சித்தார்த்தை கண்டதும் நீலேஷின் மனைவி ஆத்திரத்துடன் எழுந்து வந்தாள்... அவளது கால்களைக் கட்டி கொண்டு அவளது பெண் குழந்தை அழுது கொண்டு இருந்தது... இரண்டாவது பிறந்த குழந்தை போலும்... மூத்தவன் அமைதியாகத் தாத்தாவின் அருகில் நின்று கொண்டு இருந்தான்...

"என் கணவரின் சாவுக்கு நீ தான் காரணம்... உன்னால் தான் அவர் அவமானம் தாங்காம தூக்கு போட்டு தற்கொலை பண்ணிக்கிட்டார்... என் குடும்பத்தைச் சீரழிச்ச உன்னோட குடும்பமும் சீரழிஞ்சு போயிரும்... நீயும் என்னை மாதிரி கஷ்டப்படுவ பாரு... பெண் பாவம் பொல்லாதது... என்னுடைய சாபம் பலிக்கும் பார்..." என்று கூக்குரலிட்டவளை கண்டு சித்தார்த் ஒரு நொடி அதிர்ந்து போய் நின்று விட்டான்....

ஆனால் முன்பு போல் பிரகதீஸ்வரி பயந்து கணவன் பின் ஒளியவில்லை... மாறாகத் தைரியமாக அந்தப் பெண்ணைப் பார்த்தாள்...

"உன் புருசனால் எத்தனை குழந்தைகள் உயிர் பறிப் போயிருக்கு... அதற்கு உன்னுடைய பதில் என்ன...? உன் கணவனால் சீரழிஞ்சு போன குடும்பத்தின் சாபம் தான் இப்போ உன் கணவன் உயிரை காவு வாங்கி இருக்கிறது... இதற்கு என் கணவர் காரணம் இல்லை... அப்படி அவர் உன் கணவனுக்குத் தண்டனை கொடுப்பதாக இருந்தால் இவ்வளவு எளிதாக இவனைச் சாக விட்டிருக்க மாட்டார்... புழு போல் துடி துடிக்க வைத்து சாகடித்து இருப்பார்... உன் கணவன் செய்த பாவத்திற்கு இது குறைந்தபட்ச தண்டனை தான்... இதே இது என் கணவர் கொடுத்திருந்தால் அது அதிகபட்ச தண்டனையாக இருக்கும்... செய்வது எல்லாம் கிரிமினல் வேலை... ஆனால் பேச்சு மட்டும் பெரிய தியாகி போல்... இனியாவது வார்த்தைகளை அளந்து பேசு... தவறு செய்து விட்டு எவ்வளவு தைரியம் இருந்தால் இப்படித்

துணிச்சலாய் அவர் முன் நின்று கை நீட்டி பேசுவ... இதுக்கு மேல் ஒரு வார்த்தை பேசின நானே உன்னை அறைந்து தள்ளிருவேன்... ஜாக்கிரதை..." என்று அந்தப் பெண்ணை எச்சரித்தவள் கணவனின் கையைப் பிடித்துக் கொண்டு,

"வாங்க போகலாம்..." என்று நிமிர்வாய் அவனை அழைத்துக் கொண்டு வெளியேறினாள்...

சித்தார்த் வியப்பு மாறாதவனாய் மனைவி இழுத்த இழுப்பிற்கு உடன் சென்றான்... மனைவியின் புரிதல் கண்டு அவனுக்கு அத்தனை ஆச்சிரியமாக இருந்தது... காரில் செல்லும் போது அவளையே திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டு வந்தான் அவன்...

"ரோட்டை பார்த்து காரை ஓட்டுங்க மிஸ்டர். சித்தார்த்... என் முகத்தில் வழி எழுதி இருக்கவில்லை..." என்று அமர்த்தலாகக் கூறியவளை கண்டு அவன் வாய் விட்டு சிரித்து விட்டான்...

"இப்போ எதுக்கு இந்தச் சிரிப்பு...?" என்று முறைத்தவளை கண்டு சிரிப்பு மாறாது,

"என் பேபிம்மா வளர்ந்துட்டாங்க போலிருக்கே..."

"எல்லாம் யார் டிரையினிங்காக்கும்... என் புருசனோட டிரையினிங்காக்கும்..." என்றாள் பெருமையாக...

"ம்ஹூம்... அப்படியா...? ஆனால் ஒரு விசயத்தில் டிரையினிங் போதாது போல் தோன்றுகிறதே..." என்று தாடையைத் தடவியபடி யோசனையாய் அவளைப் பார்த்தவனின் கேலி அவளுக்குப் புரிந்ததும்,

"மாமூ..." என்றபடி அவனது தோள் வளைவில் முகம் புதைத்து கொண்டாள்...

"ஹா ஹா..." என்று சந்தோச மிகுதியில் வாய் விட்டு சிரித்தவனை வாஞ்சையுடன் பார்த்தவள்,

"உங்க பிரெண்ட் பொண்டாட்டி அந்தப் பேச்சு பேசுகிறாள்... நீங்க ஏன் பதில் பேசவில்லை...?"

"அதான் எனக்கும் சேர்த்து நீ பேசிட்டு வந்துட்டியே..."

"ம்க்கும்... இதுக்கும் ஒண்ணும் குறைச்சல் இல்லை..." என்று நொடித்தவள்,

"அவளுக்கு என்ன வாய்...? எப்படிப் பேசுகிறாள்ன்னு பாருங்க...? அவன் செத்ததுக்குக் காரணம் நீங்க தானாம்... நீங்க தண்டனை கொடுத்தால் எப்படி இருக்கும்ன்னு எனக்குத் தெரியாதா...? அந்த அயோக்கனின் கையை வெட்டிய மாதிரி இவனையும் துடிக்கத் துடிக்கக் கண்டந் துண்டமாய் வெட்டி போட்டு இருப்பீங்களே... உங்களோட ஆக்சனை அவள் நேரில் பார்க்கலை... அதான் இப்படிப் பேசுகிறாள்..." என்றவளுக்கு இன்னமும் மனம் ஆறவில்லை...

"சின்னப் பொண்ணு பேபி மாமூ கூடச் சேர்ந்து வயலண்ட்டா மாறிட்டு வருதே..." என்று கிண்டலடித்தவனைக் கண்டு முறைத்தவள்,

"நீங்க தண்டனை கொடுத்து இருக்கணும் மாமூ... என் மனசு கொஞ்சமும் ஆறலை... எத்தனை ஈசியா தூக்கு போட்டு செத்து போயிட்டான்..."

"நமக்கு எதுக்கு ஊர் வம்பு பேபி... யார் எப்படிப் போனால் நமக்கு என்ன...?" என்றவனைக் கண்டு,

"போங்க மாமூ... வர வர நீங்க என்னை மாதிரி மாறிக்கிட்டு வர்றீங்க... நான் உங்களை மாதிரி மாறிக்கிட்டு இருக்கேன்..."

"அது என்னமோ உண்மை தான்..." என்று கண்ணடித்துச் சிரித்தவனைக் கண்டு அர்த்தம் புரிந்தவளாய் அவனது தோளில் இரண்டு அடி வைத்து விட்டு அதே தோளில்,

"மாமூ..." என்று சிணுங்கி கொண்டே சாய்ந்து கொண்டாள்...

ஒரு கையால் மனைவியை அணைத்தபடி சாலையைப் பார்த்து காரை ஓட்டி கொண்டிருந்த சித்தார்த் மனதிற்குள்

எதையோ நினைத்தவனாய் மர்மமாய்த் தனக்குள் சிரித்துக் கொண்டான்...

****

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியராய் பொறுப்பேற்று தன்னுடைய சொந்த கிராமத்திற்கு வந்தாள் பிரகதீஸ்வரி... பெயரும், புகழுமாய்த் தனது சொந்த வீட்டில் காலடி எடுத்து வைத்த போது அவளது நெஞ்சம் சிலிர்த்துப் போனது... உணர்ச்சிவச பட்டவளாய் அவள் வீட்டினை சுற்றும் முற்றும் பார்த்தாள்... மனைவியின் மனநிலை புரிந்தவனாய் அவளது தோளில் ஆறுதலாய் கை போட்டு அணைத்துக் கொண்டான் சித்தார்த்...

ஜெகதீஸ்வரி, இந்திரஜித் இருவரும் வந்ததும் ஸ்கைப்பில் மற்றவர்களுடன் 'க்ரூப் சாட்'டில் ஈடுபட்டனர்... கண்ணன் காவ்யா ஒரு புறம், சஞ்சய் சாத்விகா இன்னொரு புறம், சந்தோஷ் மறுபுறமாக அரட்டை கச்சேரி களை கட்டியது... அதைப் புன்னகையுடன் பெற்றோர் இருவரும் பார்த்து கொண்டிருந்தனர்...

ஊர் ஊராகச் சென்ற போதும் தொழில்நுட்ப வளர்ச்சி சின்னவர்களின் பாசத்தினை உரம் போட்டு வளர்த்தது...

பிரகதீஸ்வரி வந்த முதல் நாளே பல அதிரடி உத்தரவுகள் போட்டு தான் அதிரடிக்காரனின் மனைவி என்பதினை நிரூபித்தாள்... அது போல் விவசாயத்திற்கும் முன்னுரிமை அளித்தாள்... பயிர் விளைச்சல் போட்டி வைத்து விவசாயிகளை ஊக்கப்படுத்திப் பயிர்களை விளைவிக்கச் செய்து, யார் அதிக மகசூலை காட்டிகிறார்களோ அவர்களுக்குச் சிறப்புப் பரிசு கொடுப்பதாக அறிவிக்கப்பட்டது...

கடன் மற்றும் ஊக்க தொகை கிடைப்பதால் எல்லா விவசாயிகளும் உற்சாகமாய்க் கலந்து கொண்டனர்... அத்தோடு பரிசு தொகை வேறு... பின்னர்ப் போட்டி களை கட்ட சொல்லவும் வேண்டுமா...?

அது போல் தான் செய்தித்தாளில் வந்த ஒரு முதியவரின் வறுமையைப் போக்கி அவரது மகனுக்கு வேலை வாய்ப்பை அளித்து அவள் உதவி செய்தது... பன்னிரெண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் மாவட்டத்தில் முதலாவதாய் வந்த ஏழை மாணவியின் மேற்படிப்புக்கு உதவியது... இப்படி நிறைய அவள் செய்த நல்ல விசயங்களைப் பாராட்டி செய்தித்தாளில் செய்தி வரும் போது கணவனாய் சித்தார்த்தின் மனம் பெருமிதம் கொண்டது...

அன்று ஞாயிறு என்பதால் வீட்டில் இருந்த மனைவியிடம், "கலெக்டர் மேடம் இன்னைக்கு ஃப்ரீயா...?" என்று சித்தார்த் கேட்க...

"மாமூவுக்காகக் கலெக்டர் மேடம் ஞாயிற்றுக் கிழமை ஃப்ரீன்னு தெரியாதா...?" என்று அவனைக் கொஞ்சியவளை கண்டு கள்ளுண்ட வண்டாய் அவன் அவள் முகம் நோக்கி குனியும் போது,

"அம்மா..." என்றபடி அங்கு வந்து நின்றான் ஏழு வயது இந்திரஜித்...

"போச்சுடா..." என்று அசடு வழிந்து கொண்டே தலையைக் கோதியபடி சித்தார்த் மனைவியை விட்டு விலகினான்...

"என்ன இந்தர்...?"

"எங்கேயாவது வெளியில் போகலாமாம்மா...?"

"அதைச் சொல்ல தான் நானும் வந்தேன்..." என்ற சித்தார்த் மகனிடம்,

"இந்தர்... மலை மீது ஏறலாமா...?" என்று கேட்க...

"ஓ... ஏறலாமே..." என்று ஆர்வத்துடன் மகன் வேகமாய்த் தலையசைத்தான்...

"மலை மேலேறி இன்னைக்கு நைட் இந்தர் டயர்டா தூங்குவான்... அதனால் அவனோட அப்பாவை இன்னைக்கு நைட் நல்லா கவனிக்கணும்... ஊரெல்லாம்

கவனிக்கிற கலெக்டரம்மா வர வர புருசனை ஒழுங்கா கவனிக்கிறது இல்லை..." என்று மகனை அழைத்துக் கொண்டு போகும் முன் சித்தார்த் மனைவி காதில் முணுமுணுத்தான்...

"கவனிக்கிறது தானே... நல்லா கவனிச்சிட்டா போச்சு..." என்றவள் அடிப்பது போல் சைகை செய்ய...

"உன் புருசனோடு சேர்ந்து நீ ரொம்பக் கெட்டு போயிட்ட பேபி... நோ வன்முறை... ஒன்லி கொஞ்சல்ஸ் மட்டுமே..." என்றவன் கண்ணடித்து விட்டு மகனை அழைத்துச் சென்றான்...

குடும்பமாக நால்வரும் மலை அடிவாரத்திற்கு வந்தனர்... அங்கிருந்த பிள்ளையார் கோவிலில் நால்வரும் சாமி கும்பிட்டனர்... பெரியவர்கள் இருவர் மனதிலும் பழைய நினைவுகளே... அது போல் ஒரே மாதிரியான வேண்டுகோளே...

'இந்தச் சந்தோசத்தை, மகிழ்ச்சியை என்றும் நிலைக்கச் செய் கடவுளே...' என்ற வேண்டுகோள் மட்டுமே...

மக்கள் இருவருக்கும் பிரகதீஸ்வரி திருநீறு பூசி விட்டதும் சித்தார்த் எதிர்பார்ப்புடன் மனைவியைப் பார்த்தான்... அன்னையை முந்தி கொண்டு ஜெகதீஸ்வரி தந்தையின் கழுத்தை வளைத்து தனது நெற்றியில் இருந்த திருநீறை அவனது நெற்றியில் ஒட்டி பூசி விட்டாள்...

"நான் அம்மாவுக்கு..." அக்காவுடன் போட்டி போட்டுக் கொண்டு சின்னவன் தாயின் நெற்றியில் தனது நெற்றியில் இருந்த திருநீறை ஒட்ட வைத்து ஆர்ப்பரித்துச் சிரித்தான்...

"நான் தான் ஃபர்ஸ்ட்... இல்லையாப்பா..." என்று கேட்டு மகள் ஆர்ப்பரிக்க... சித்தார்த் புன்னகையுடன் மகள் கூறியதை கேட்டு ஆமோதித்துத் தலையசைத்தான்...

"அம்மா... நான் தானே..." என்று கேட்ட இந்திரஜித் தாயை ஆவலுடன் பார்த்தான்...

"ஆமாம்டா கண்ணா... எனக்கு வச்சு விட்டதில் நீ ஃபர்ஸ்ட்... அப்பாவுக்கு வச்சு விட்டதில் ஜிக்கி ஃபர்ஸ்ட்... ஆக மொத்தம் இரண்டுமே பேருமே ஃபர்ஸ்ட் தான்..." என்று அவள் இருவரையும் சமாதானம் செய்தாள்...

சிறியவர்கள் உற்சாகமாய் மலை மீதேற சித்தார்த் மனைவியுடன் பின்தங்கி நடந்தான்...

"அது எப்படிப் பேபி ரெண்டு பேரையும் ஒரே மாதிரி சமாளிக்க உன்னால் முடியுது..." என்று ஆச்சிரியமாகக் கேட்டான்...

"இது என்ன பிரமாதம்...? இவர்களை விடச் சின்னக் குழந்தை ஒன்றை சமாளித்த அனுபவம் எனக்கு ஏற்கெனவே இருக்கிறது..." என்றாள் பெருமையாக...

"யாருடி அது எனக்குத் தெரியாத சின்னக் குழந்தை...?"

"நீங்க தான் மாமூ..." என்று கூறியவள் கலகலவெனச் சிரித்தபடி முன்னே ஓட...

"உன்னை என்ன பண்ணுகிறேன் பார் பேபி..." என்று கூறியபடி அவன் அவளைத் துரத்தினான்...

பிள்ளைகள் அருகில் வந்ததும் மூச்சு வாங்க நின்றவளை கண்டு துரத்தி கொண்டு வந்தவன் அப்படியே தேங்கி நின்று விட்டான்... பிள்ளைகளின் முன் மனைவியை எதுவும் செய்ய இயலாதவனாய்,

'நைட் இருக்குடி உனக்கு...' என்று சத்தம் இல்லாது வாய் அசைத்தவன் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு முன்னே சென்றான்...

மலை உச்சி மீது அவர்கள் வந்து நின்ற போது மாலை மயங்கி கொண்டு இருந்தது... சின்னவர்கள் இருவரும் ஆற்றைக் கண்டதும் உற்சாகமாக அதை நோக்கி ஓட துவங்கினர்...

"ரொம்ப உள்ளே இறங்காதீங்க... ஓரமா நின்னு காலை நனைச்சிட்டு வந்திரணும்..." என்று அன்னையாய்

பிள்ளைகள் இருவரையும் எச்சரித்த பிரகதீஸ்வரி சிவந்திருந்த அந்தி வானத்தை ரசித்துப் பார்த்துக் கொண்டு இருந்தாள்...

பின்பு ஏதோ உள்ளுணர்வு உந்த திரும்பி பார்த்தவள் அங்குக் கணவன் அலைப்பேசியில் தன்னைப் புகைப்படம் எடுத்துக் கொண்டு இருப்பதைக் கண்டு அவள் அங்கிருந்தபடி அவனை முறைத்து பார்த்தாள்...

"நான் உன்னை ஃபோட்டோ எடுக்கலை பேபி... இயற்கையை எடுத்தேன்..." என்று கூறியபடி அருகில் வந்தவனின் அலைப்பேசியைப் பிடுங்கியவள் அதில் இருந்த தனது புகைப்படத்தைப் பார்த்தவள் முகத்தில் அப்படி ஒரு வர்ணஜாலம் வந்து போனது...

ஏனெனில் அன்று எடுத்த புகைப்படத்தைப் போன்று இன்றும் சூரிய ஒளியின் பின்னணியில் அவளை அழகுற எடுத்திருந்தான் அவளது கணவன்... அன்றைய காதல் கொஞ்சமும் குறையாது இன்றும் அவனிடத்தில் மறையாது இருப்பதற்குச் சாட்சியாக இருந்தது இந்தப் புகைப்படம்... அவளது மனம் விரும்பியே மயங்கியது தன் மன்னவனிடத்தில்... ஆனாலும் மயக்கத்தை வெளிக்காட்டி கொள்ளாது அவள்,

"இது என்ன மாமூ...?" என்று மிரட்டும் தொனியில் கேட்க...

"இது தான்டி இயற்கை காட்சின்னு சொன்னேன்... சுத்தியிருக்கிற இயற்கையை விட நீ தான்டி அப்படி ஒரு அழகா இருக்க... அப்போ பதினேழு வயசில் பார்த்த மாதிரி இப்போதும் அப்படியே இருக்கிறடி..." என்று கிறக்கத்துடன் கூறியவன் தனது மக்களைத் திரும்பி பார்த்து அவர்கள் தங்களைப் பார்க்காததை ஊர்ஜிதம் செய்து கொண்டு அவளது மூக்குத்தி மீது மென்மையாய் இதழ் பதித்தவன்,

"ஐ லவ் யூ பேபி..." என்று காதலாகக் கூறியவனின் காதலில் அவள் கிறங்கி நின்றாள்...

"அம்மா, அப்பா..." என்று கத்தியபடி ஓடி வந்த பிள்ளைகளின் குரலில் இருவரும் அவசரமாய் விலகி நின்றனர்...

மகனும், மகளும் இருவரின் கைகளைப் பிடித்துக் கொண்டு ஆளுக்கொரு பக்கமாய் வந்து நின்றனர்... மனம் நிறைய மகிழ்வுடன் நால்வரும் இயற்கையை ரசித்தபடி நின்றிருந்தனர்... தன்னைத் தன்னவளோடு இணைத்த இயற்கைக்கு மனதார நன்றி கூறினான் சித்தார்த்...

இரவு உணவு முடிந்ததும் இந்திரஜித் களைப்பில் உடனே உறங்கி விட்டான்... ஆனால் ஜெகதீஸ்வரி மட்டும் உறங்க முடியாது வயிற்று வலியில் துடித்தாள்... மகளின் வலி கண்டு சித்தார்த் தான் அதிகம் துடித்துப் போனான்...

"வெயிலில் அலைந்தது ஜிக்கிக்கு ஒத்துக்கலையோ ரதிம்மா..." என்று கவலையுடன் கேட்டவனைக் கண்டு அவளுக்கும் கவலை தொற்றிக் கொண்டது...

கை வைத்தியம் செய்தும் மகளின் வலி குறையவில்லை என்றதும் ஒரு பெண்ணாய் சந்தேகம் கொண்டவள் மகளை அழைத்துக் கொண்டு தனியே சென்றாள்... அடுத்தச் சில நிமிடங்களில் திரும்பி வந்தவள் கணவனது காதில் ரகசியமாய் ஏதோ கூறினாள்... அதைக் கேட்டு முகம் மலர்ந்தவனாய் சித்தார்த்,

"உண்மையாவா பேபி...?" என்று கேட்டவன் எழுந்தபடி,

"ஜிக்கி எங்கே...?" என்று ஆர்வமாய்க் கேட்டான்...

"இப்போ வந்திருவாள்..." என்று கூறியவளை கண்டு மறுநொடி அவனது முகம் கவலையில் ஆழ்ந்தது...

"பதிமூணு வயசு ரொம்பச் சின்ன வயசு இல்லையா பேபி... எப்படிச் சமாளிப்பாள்...?" தந்தையாய் அவனது மனம் கவலை கொண்டது...

"இது இயற்கை மாமூ... பெண்ணுக்கு இதைச் சமாளிக்கும் பொறுப்பு இயற்கையாகவே வந்திரும்... ஜிக்கி பத்தி நீங்க

கவலை கொள்ளத் தேவையில்லை... நான் எதுக்கு இருக்கேன்...? நான் அவளைப் பத்திரமா பார்த்துக்கிறேன்..." என்று கூறியவள் ஆறுதலாக அவனின் கையைப் பிடித்துக் கொண்டாள்...

"உன் மீது நம்பிக்கை இருக்கு பேபி..." என்று சொல்லும் போதே அவனின் குரலும், கரமும் நடுங்கியது...

"மாமூ..." என்று அவள் அழைக்கும் போதே மகள் அங்கு வந்து விட்டாள்...

தந்தையைக் கண்டதும் ஜெகதீஸ்வரி, "அப்பா..." என்று அழுது கொண்டே அவனை அணைத்து கொண்டாள்...

"ஜிக்கிம்மா... இதுக்கு எல்லாம் அழ கூடாது..." என்று கூறியவன் மேற்கொண்டு என்ன சொல்வது என்று தெரியாது மனைவியைப் பரிதாபமாய் ஏறிட்டான்...

"ஜிக்கி... ஏற்கெனவே அம்மா உன் கிட்ட சொல்லி இருக்கேன் தானே... அழாம வந்து படு..."

"நான் அப்பா கூடப் படுக்கப் போறேன்..." என்று தேம்பிய மகளைப் பார்த்து,

"அப்பா கிட்டே வா ஜிக்கி..." என்று மகளை அன்னையாய் மடி தாங்கியவன் அவளின் தலை கோதி கொடுத்து அவளை உறங்க செய்தான்...

தந்தையின் பாதுகாப்பில், அரவணைப்பில் அவள் நிம்மதியாகத் தூங்கினாள்... மகள் உறங்கியதும் மனைவியிடம்,

"இன்னும் சின்னப் பிள்ளையாவே இருக்காளேடி..." என்று அவன் சிறு பிள்ளை போல் கண் கலங்கினான்...

"என்னைப் பார்த்தும் என் அப்பா இப்படித் தான் கண் கலங்கினார்... நான் வளர்ந்து வரலையா...? அது போல் தான் நம் ஜிக்கியும்..."

மகளை விடக் கணவனுக்கு அதிக ஆறுதல் கொடுத்து அவனைத் தூங்க செய்தவள் கடைசியாக அவள் உறங்கும் போது நேரம் நள்ளிரவை கடந்து இருந்தது... கணவனோடு சேர்த்து மூன்று குழந்தைகளுக்குத் தாயாய் தனது பொறுப்பு அதிகரித்து இருப்பதை அவள் உணர்ந்தாள்... அதிலும் கணவனான குழந்தையை நினைத்து அவளது இதழ்களில் புன்னகை தோன்றியது...

****

பதினாறாம் நாள் சடங்கினை வீட்டு ஆட்களை மட்டும் அழைத்துச் சிறிய அளவில் செய்தனர்... பட்டுப் பாவாடை தாவணியில் பிரத்யேக அலங்காரத்தில் அழகுற நாற்காலியில் அமர்ந்திருந்த மகளைக் காண காண சித்தார்த்திற்குத் தனது ஜிக்கியின் ஞாபகங்கள்...

"சித்து... நீ வந்து உன் மகளுக்கு நலுங்கு வை..." என்று பிரபாவதி அழைக்கவும் தன் சிந்தனை கலைந்த சித்தார்த் மகளின் அருகில் வந்தான்...

சந்தோசத்துடன் சந்தனத்தை இரு கைகளில் அள்ளி எடுத்து மகளது இரு கன்னங்களிலும் பூசி விட்டவன் அவளது நெற்றியில் முத்தமிட்டு,

"இந்தச் சந்தோசத்துடன் நீ எப்போதும் இருக்கணும் ஜிக்கி... உன்னோட சந்தோசத்துக்காகவே இந்த அப்பா இருக்கேன்..." என்று மனம் நெகிழ்ந்து கூறியவனை,

"அப்பா..." என்று கூவியபடி சந்தோசத்துடன் அணைத்து கொண்டாள் மகள்...

அப்பா, மகள் பிணைப்பை அனைவரும் மனம் நெகிழ பார்த்து கொண்டிருந்தனர்... மகளுக்கு நலுங்கு வைத்து விட்டு மீண்டும் தள்ளி வந்து நின்ற சித்தார்த் மகளை நிறைவோடு பார்த்துக் கொண்டு இருந்தான்... அவன் அருகில் வந்த பிரகதீஸ்வரி,

"ரொம்பச் சந்தோசமா இருக்கு மாமு..." என்று கூறியபடி அவனது தோளில் தலை சாய்ந்து கொண்டாள்...

"நானும் தான்... நீ என் வாழ்க்கையில் வந்த பிறகு என் சந்தோசத்திற்கு அளவே இல்லை... என் சந்தோசத்தை, வாழ்க்கையை நீ மீட்டுக் கொடுத்திருக்கப் பேபி..." என்றவனின் விழிகள் மகளையும், மகனையும் மகிழ்வுடன் பார்த்தது...

அதுவும் மகள் அருகில் நின்றிருக்கும் மகனை காணும் போது அச்சு அசல் அவனே தான்...

அவனைப் போன்றே இவனும் சகோதரியிடம், "ஜிக்கி என்ன வேணும்...?" என்று கேட்டுக் கொண்டு பெரிய மனிதன் போன்று பாதுகாவலாய் அக்கா அருகிலேயே நின்றிருந்தான்...

மீண்டும் ஒரு நேசமிகு உறவு மலர்வதைக் கண்டு முகம் மலர நின்றிருந்தான் சித்தார்த் என்னும் இரும்பு மனிதன்... மனைவியின் காதலுக்கு மட்டுமே வளைந்து கொடுக்கும் அன்பு மனிதன் அவன்...!!!

"அன்பில் அன்னையாய்,
கண்டிப்பில் தந்தையாய்,
அரவணைப்பில் உடன்பிறப்பாய்,
பாசத்தில் ப்ரியசகியாய்,
மன்னிப்பில் தெய்வமாய்,
மாண்பில் மனிதமாய்,
அத்தனையும் ஒன்றாய்,
என் ஜிக்கியாய்...
கனவில் நனவாய் நீ...
நான் கண்ட கனவு
நிஜமாய்க் கண் முன்னே
என் சேயாய்...!!!"

****

நள்ளிரவு நேரத்திலும் அந்தப் பஃப் இளமை துள்ளலுடன் இளசுகளால் நிரம்பப்பட்டு அதிரடி ஆங்கிலப் பாடல்களுக்கு ஏற்றவாறு அதிர்ந்து கொண்டு இருந்தது... கூட்டம் கூட்டமாக ஆண்களும், பெண்களும் ஆடி கொண்டு

இருந்தனர்... அதில் நடுநாயகமாய் ஆடி கொண்டு இருந்தான் இந்திரஜித்...

ஆட்டம் என்றால் அப்படி ஒரு ஆட்டம்... உடலில் உள்ள அத்தனை பாகங்களும் அத்துப் போய்க் கீழே விழுந்து விடும் அளவிற்கு ஒரு வெறித்தனமான ஆட்டமாக இருந்தது அவனது நடனம்... அவனுடன் ஆடி கொண்டு இருந்த பெண்கள் இத்தோடு பத்து பேர் மாறி விட்டனர்... யாராலும் அவனது வேகத்திற்கு ஈடு கொடுத்து ஆட முடியவில்லை...

இறுதியில் அவன் தானாகக் களைத்து போனவனாய் அங்கிருந்த மேசையை நோக்கி சென்றான்... நாற்காலியில் அமர்ந்தவன் மது பானத்திற்கு ஆர்டர் கொடுத்து விட்டுக் காத்திருந்தான்... பேரர் மது கொண்டு வந்து கொடுக்க எடுத்துக் கொண்ட அந்தச் சிறு நேர தாமதத்தைக் கூடத் தாங்க முடியாதவனாய் அவன் தனது கைகளால் தலையைத் தாங்கி பிடித்துக் கொண்டு அவஸ்தையாய் அமர்ந்து இருந்தான்...

மது வந்ததும் வேகமாய் அதை எடுத்து பாட்டிலோடு தனது தொண்டையில் சரித்தான்... அடுத்தடுத்து இன்னும், இன்னும் என்று மது அளவிற்கு அதிகமாய் அவனுள் சென்றது... ஒரு கட்டத்தில் போதை தலைக்கேறியவன் தன்னை மறந்தவனாய் அங்கிருந்த மேசை மீது அப்படியே கவிழ்ந்து படுத்து விட்டான்... அவனது உடலும், மூளையும் தான் போதைக்கு அடிமையாகி இருந்தது...

ஆனால் அவனது மனதில் அலை கடல் போல் ஆர்ப்பரிக்கும் நினைவுகளை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை... அது எப்போதும் விழித்திருந்து அவனை வதைத்துக் கொன்றது... கனவில் காணும் அந்த நினைவுகள் அவனுக்குச் சுகமாய் இருந்தது போலும்... அந்தப் போதையிலும் அவனது உதடுகளில் புன்னகை உறைந்திருந்தது... அதையும் மீறி அவனது உள்ளம் ஊமையாய் அழுது கொண்டு இருப்பது அவனுக்கு மட்டுமே தெரியும்...

கனவில் காணும் நனவுகளுக்கு முடிவு கிடையாது... நம் ஆழ்மனதில் ரகசியங்கள் புதைந்து இருக்கும் வரை அது தொடரும்... அன்று சித்தார்த்... இன்று இந்திரஜித்... நாளை யாரோ...???

முற்றும்